ஸ்ரீமத்

[illegible]வேகானந்த சுவாமிகள்

விரிவான திவ்ய சரித்திரம்.

சென்னை "ஆனந்தபோதினி" பத்திராதிபர்

நா. முனிசாமி முதலியார்

அவர்களால் வெளியிடப்பட்டது.

ஸ்ரீமத்

விவேகானந்த சுவாமிகள்

விரிவான திவ்ய சரித்திரம்

(2-ம் பதிப்பு)

THE MADURA TAMIL SAN

திரிசிரபுரம்
தேசியக் கலாசாலைத் தமிழாசிரியர்
உறையூர். எஸ். வி. வரதராஜையங்கார்
எழுதியது

சென்னை "ஆனந்தபோதினி" பத்திராதிபர்
நா. முனிசாமி முதலியார் அவர்களால்
வெளியிடப்பெற்றது.

1935

காபிரைட் ரிஜிஸ்டர்ட்] [விலை ரூபா 4]

THE MADURA TAMIL SA

மகா வாக்கியம்.

“ உத்திஷ்டத ! ஜாக்ரத ! ப்ராப்யவராந்
நிபோதத !”

எழுமின் ! விழிமின் ! கருதிய கருமம்
கைகூடும்வரை உழைமின் ! உணர்மின் !

“Arise ! Awake ! Stop not till the
Goal is reached ”

(கடோப நிஷத் 3-ம் வல்லி. 14-ம் வாக்.)

ஸ்ரீ

நான்முகம்.

பாரதபூமியின் பூர்வகால சரித்திரம் முழுவதும் தர்ம சம்மத மானது. பொருள் இன்பம் வீடு ஆகிய மூன்றையும் அடைவிக்க வல்லது அத்தர்மம். எந்த நெறி இம்மூன்றையும் மனிதனது கர்மா வென்னும் படியால் அளந்து தருமோ அதுவே மதம். எதொன்று ஆத்மாவிற்கு நல்வழி காட்டிச் சாந்தியை அளிக்குமோ அதுதான் தர்மம். பிறவியென்னும் நதிப்பெருக்கி லகப்பட்டு மறுகுறும் மனிதனுக்குப் பெரும் புணையாக எது உதவுமோ அதுவே சமயம். இவ்விதமாகத் திகழும் பல சமயங்களுள்ளும் ஹிந்துமதம் விசாலமான கொள்கைகளுடையது ; உலகிலுள்ள எல்லாச் சமயங்களின் உயரிய கொள்கைகளனைத்தையும் தன்னிடம் கொண்டு விளங்குவது. சதாசாரமென்னும் பலமான அஸ்திவாரத்தின்பேரில் கட்டப்பட்ட கோட்டையாகும் ஹிந்துமதம். இந்தத் தர்மங்களை அனாதியாய் நின்று அற்புதமாய் உணர்த்துவன 'எல்லையில் மறைகள்' ளென நமது கம்பர் புகழ்ந்துள்ள வேதங்கள் ஆதலால் வேதங்களில் அடங்காத மதம் இவ்வுலகில் எதுவுமில்லை.

மக்கள் உலகப் போராட்டத்தில் சிக்குண்டு, மதி மயங்கித் தவறான வழிகளிற் சென்று துன்புறும்போது, அவர்களைக் கை தூக்கி விட்டுச் சத்தியமான மார்க்கத்தை உணர்த்தித் தர்மத்தை நிலை நாட்டப் பகவான் தாமே அவதரிக்கின்றார். பெருங்கலக மென்றால் போலீஸ் தலைவரே அவ்விடத்திற்கு வந்து சேருகின்றார். கலகம் சிறிதாயின் ஒரு ஜவான் மட்டில் அனுப்பப்படுகின்றான். அதுபோல, மக்களுக்கு மதக்கொள்கைகளிடத்து நம்பிக்கைக் குறைந்து, பாபகிருத்யங்கள் வளர்ந்து தேசநன்மைகள் தேய்வுற்று மயக்கம் தலையெடுக்கும் காலங்களிலெல்லாம் அவசியத்திற் கேற்ப பகவான் தாமே திருவவதரித்தோ, தமதருளால் மகான்களை உலகில் தோற்றுவித்தோ தர்மஸ்தாபனம் செய்கின்றார். ஆனால் மகான்களைப் பகவான் இடைவிடாமல் அனுப்பிக்கொண் டிருக்கின்றாரென்பது பெரியோர் துணிபு. திருட்டு நடக்காத தெருவிலும் போலீஸ்காரன் இரவில் 'உஷார்'

கூறிக்கொண்டே செல்லுகின்றான். சண்டையில்லாத காலத்திலும் படை அரசாங்கத்தாரால் கண்போலக் காப்பாற்றப் படுகின்றது. ஆதலின் பெரியார்களின் தோற்றம் எப்பொழுதும் உலகிற் கின்றி யமையாதது. இவர்களே நமது ஆன்மார்த்தத்தைக் காக்கும் வீரர்கள். இவர்களை உலகம் கைகூப்பித் தொழும். "திருவுடை மன்னரைக் காணில் திருமாலைக் கண்டேன் என்னும்" என்பது திருவாய் மொழி. அதுபோல அவதார புருஷர்களைப் பகவானென்றே உலகம் கொண்டாடிக் கும்பிடும். இன்னோர் தங்கள் வழுவற்ற ஒழுக்கத் தாலும் தெய்வீக வல்லமையாலும் தர்மோபதேசம் செய்து "எழு மின்! விழிமின்! கருதிய கருமம் கைகூடும்வரை உழைமின் உணர் மின்" என்று மக்களைத் தட்டி யெழுப்பி வழிகாட்டுகின்றனர். காலத் திற்கேற்ப மத சீர்திருத்தங்கள் நிகழ்கின்றன. இத்தகைய மகான் களின் சரித்திரமும் உபதேசங்களும் அழியாமல் சாஸ்வதமாக நின்று மதப்பிரபாவ கிரந்தங்களாய் மக்களுள்ளத்தில் அன்பு வெள்ளத் தைப் பாய்ச்சுகின்றன.

இத்தகைய அவதார புருஷர்களில் பகவான் ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சரைப் பற்றியும் ஸ்ரீமத் விவேகானந்த சுவாமிகளைப் பற்றி யும் கேள்விப் படாதவர் இலரென்றே சொல்லலாம். இவர்கள் முறையே குரு சிஷ்யர்கள் என்பதும் மலையிலக்கு. ஸ்ரீராம கிருஷ்ணரின் திவ்யானுக்கிரஹத்தால், அதிபால்யத்தில் அனைத்தையும் துறந்து வெளியேறி பூப்பிரதக்ஷணஞ் செய்து ஹிந்து மதத்தின் பிரபாவத்தை "பரிதியின் ஒளியும் சென்றிடா" அயல் நாடுகளில், நவீனவிக்ஞான தத்துவக்கிரந்த ஆதாரங்களுடன் நானா தேசத்தாரும் நவின்றேத்த வெளியிட்ட ஸ்ரீமத் விவேகானந்த சுவாமிகளின் வாழ்க் கையே ஒரு பெரிய கருவூலமாகும். அவரது ஒவ்வொரு சிறு அனு பவமும் உயரிய மணிக்கு ஒப்பானது. அவ்வனுபவ மணிகளின் ஒளியே பேருண்மைகளாகும். அவருடைய திருவுருவத்தை ஒரு முறை பார்த்தால் எந்தத்துக்கியும் அக்கணமே தன்னை மறந்து துக்கம் நீங்கி ஆனந்த மடைவான்.

சில ஆண்டுகளுக்குமுன், இம்மகானுபாவரின் விரிவான சரித்திரத் தையும் உபந்நியாச உபதேசங்களையும் படிக்க வேண்டுமென்ற ஆவல் எனக்கேற்பட்டிருந்தது. இவ்வெண்ணம் சுவாமிகளின் படத்தைக் காண நேரும் போதெல்லாம் எழும்; பத்தடி அப்பாற் செல்வதற் குள் விழும்; படங்கண்ட போதெல்லாம் எழுந்த இப்பாழ்மனம்

காலச் சக்கரத்தில்-வாழ்க்கைப் போரில் அகப்பட்டு உழலும் வரை எவ்விதப் புனித கார்யத்திலும் இறங்க மனிதனைச் சாமான்யமாக விடுகிறதில்லை. ஆனால் மன ஆவலின் அளவைப் பொறுத்திருக்கிறது பலாபலன் என்று பெரியோர் கூறுவர். அதன்படி மனமானது சுவாமிகளின் உபதேசங்களைக் கற்க வேண்டுமென்று அவாவி நின்ற போது எனது நண்பர் **ஸ்ரீமான், நா. முனிசாமி முதலியாரவர்கள்,** சுவாமிகளின் திவ்யச் சரித்திரத்தை விரிவாகத் தமிழில் எழுதித்தர வேண்ட, அதையே ஓர் நல்ல சகுனமாகக் கொண்டு இப்பணி தலை மேற் கொண்டேன்.

இந்நூலைப் பூர்த்தியாக எழுதி முடிக்க மூன்றாண்டுகளாயின. இதற்கு அத்யாவசியமான நூல்கள் பலவற்றை என் சிற்றறிவிற் கெட்டியவரை படித்துவிட்டு இதனை எழுதியுள்ளேன். இயன்றவரை தமிழ் நூல்களினின்றும் நேர்மொழி பெயர்ப்பான கவிகள் இதில் மேற்கோளாகக் காட்டப்பட்டிருக்கின்றன. அவசியமான சில விடங்களில் குறிப்புரையும் விளக்கங்களும் தரப் பெற்றிருக்கின்றன. பாரதியார் சுவாமிகளைப் புகழ்ந்து பாடியுள்ள பாட்டுகளையும் ஆங்காங்கு எடுத் தாண்டிருக்கின்றேன். கேவலம் ஒரு பூனை பாற்கடலைப் பருகி விடுவமென்று துணிந்தால் அது முடியுமா? ஆனால் துணிவது ஆசை யால்; அது குற்றமாகாது. அதுபோல, பெரிய வேதாந்த சமுத்திர மாய் விளங்கும் சுவாமிகளின் சரித்திரத்தை ஆசைபற்றி எழுதலுற் றேன். மாசிருப்பின் பெரியோர் மன்னித்தருளுவாராக.

எங்ஙனம் ஸ்ரீமத் விவேகானந்த சுவாமிகள் அவதரித்து மத சேவை புரிய அவருடைய தந்தையாரான விஸ்வநாததத்த ரவர்கள் காரணரா யிருந்தாரோ, அதுபோல அப்பெரியார் பெயரே அமையப் பெற்ற எனது நண்பர் திருச்சி, "மணிவாசகத் தமிழகம்" **ஸ்ரீமான், கி. ஆ. பெ. விஸ்வநாத பிள்ளை அவர்கள்** இந்நூலை நான் எழுதுவ தற்குக் காரண கர்த்தராவர். அவர் மாட்டு நான் எங்ஙனம் நன்றி செலுத்தவல்லேன்?

இந்நூலை நான் எழுதி வந்தபோது இன்றியமையாத உதவிகள் பல புரிந்த அன்பர் **ஸ்ரீமான். பி. நாராயணராவ்** அவர்கட்கும், கண் ணுங் கருத்துமாய் இப்புத்தகம் முழுவதையும் புரூப்பார்த்துதவிய **ஸ்ரீமான், ஏ. வி. ஸ்ரீநிவாசாசாரி** அவர்கட்கும் என் மனமார்ந்த நன்றி உரியதாகும். திரிசிரபுரம், தேசீயக் கலாசாலையில் தமிழ்ப் புலமை நடத்தி வந்தவரும் எனது நண்பருமான காலஞ்சென்ற

ஸ்ரீமான், எம். **கோபாலகிருஷ்ண ஐயர்** அவர்கள், நான் இதனை எழுதத் தொடங்கியபோது, தாம் மொழி பெயர்த்த **'சந்நியாசி கீத'**த்தையும் சேர்த்துக் கொள்ளும்படி அனுமதி யளித்தார்; என்னைப் பல காலும் ஊக்கி வந்தார். இப்புத்தகம் பூர்த்தியாகி வெளிவரும் இச்சமயம் என்னை ஆசிர்வதிக்க அவர் இல்லையே என்னும் ஏக்கத்தால் மனம் துயருறுகின்றது.

இந்நூலின் பிரசுரகர்த்தரான **ஜனோபகாரி ஸ்ரீமான்** நா. **முனிசுவாமி முதலியாரவர்கள்** இத்தகைய நூல்களை வெளியிடுவதில் உண்மையான ஊக்கமும் ஆவலும் உடையவர். அவர் தமது "ஆனந்தபோதினி" என்னும் அருமை பெருமை வாய்ந்த மாதாந்த வாரப் பத்திரிகைகளின் வாயிலாகச் செய்துவரும் தொண்டினை அறியாதார் இலர். இந்நூல் வெளிவருவதால் ஏற்படும் நற்பயனனைத்திற்கும் அவரே பாத்யஸ்தராவர். அவர்கட்கு நான் மனப்பூர்வமாக நன்றி செலுத்துவதுடன் நீடிய ஆயுளையும் செல்வப் பெருக்கையும், நலங்கள் பலவற்றையும் அளித்து இதுபோன்ற லோகோபகாரமான கைங்கரியத்தைச் செய்துவர அருள் புரியுமாறு இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

"சரஸ்வதி நிலையம்"
உறையூர். 12-11-29

இங்ஙனம்,
எஸ். வி. வரதராஜையங்கார்.

ஸ்ரீமத்

விவேகானந்த சுவாமிகள்

திவ்ய சரித்திரம்.

1-ம் அத்தியாயம்.

அவதாரிகை

அகிலம் சர்வேஸ்வரனுடைய உத்தியான வனம்! இவ்வுத்தியான வனத்தின் அமைப்பே இறைவனுடைய ஒப்பற்ற தன்மையைப் புலனாக்கும் இயற்கை. உயர்ந்த மலைகளும், அடர்ந்த வனங்களும், தொடர்ந்தோடும் அருவிகளும் இவ்வியற்கையின் அம்சங்கள். சகல ஜீவராசிகளையும் படைத்து, காத்து, சங்கரிக்கும் செயலும் இவ்வியற்கையின் மற்றோர் உயர்ந்த செய்கை. இயற்கையின் வடிவானவனே இறைவன்! உயிருள்ள பிராணிகளைத் தோன்றச் செய்வது அக் கடவுளின் படைப்புநிலை. அவற்றிற்கு உணவளித்து இயற்கையின் உதவியாலேயே அவற்றின் வாழ்வை நடைபெறச் செய்தல் அன்னவனுடைய காக்கு நிலை. அவற்றை மாயாரூபமான சடலத்தினின்று வேறு படுத்துதல் அவனுடைய சங்காரநிலை. இம் மூன்று தொழில்களையும் புரிகின்றவன் அனைத்தையும் கடந்து நிற்கும் கடவுள். அவனுடைய செய்கைகள் யாவும் அவன் திருவிளையாடல்கள். இத் திருவிளையாடல்களைப் புரியும் அவனும் இயற்கை வடிவானவன். இதனாலேயே உலக பந்தங்களினின்றும் விடுபட்ட பிரம்மரிஷிகள்

இயற்கையின் ரம்யம்

அவனைத் துதித்தேத்த இயற்கை இன்பம் நிறைந்த ஆரண்யங்களில் வசித்து, காய் கிழங்கு கனிவர்க்கங்களை ருசியைக் கருதி யுண்ணாது, இச்சையற்றுப் பசிவந்தபோது புசித்து, சூரியன் உதயமாகும் பொழுதும் அவன் அஸ்தமிக்கும் பொழுதும் இயற்கை இன்பத்தால் பரவசமாகி, அவனுக்கு அர்க்கியங்களைக் கொடுத்து இடைவிடாது அவனுடைய நாமஸ்மரணை செய்து கொண்டு காலங்கழித்தனர். காலையில் சூரியன் கீழ்த்திசையில் உதயமாகும்பொழுது ஓர் மலையடிவாரத்தினின்று

விரைந்து வெளிக்கிளம்பும் ஜெகஜ்யோதியான அவனது சொரூபமும், அவனது கிரணங்கள் அருவிகளிலோடும் புனலிற் படுங்கால் அப்புனல் பளீர் பளீரென்ற பிரகாசத்தை வீசி, 'பொன்னி' எனப் பெயர் புனையும் வனப்பும் இயற்கையின் உன்னத நிலையை விளக்கும் இயல்புடையனவன்றோ! வனங்களில் கண்ணைக் கவரத்தக்க விதமாய் மலர்ந்த மலர்களும், ஓடியலையும் மிருகங்களும், பசுமையான புற்களும், அதன் பரப்பில் பந்தமற்ற யோகியைப் போன்று துள்ளியோடும் மான்களும், மற்றவையும் இயற்கையின் அமைப்பினாலன்றோ காணப்படுகின்றன! இயற்கைக்கும் செயற்கைக்கும் நெருங்கிய சம்பந்தத்தை ஏற்படுத்தி, இப்புவனத்தில் நடைபெறுவனவெல்லாம் இயற்கையின் ஆதரவிலேயே இயங்குமாறு செய்த அவ்வியற்கைக் கடவுளின் பெருமையை நாம் என்னென்று கூறுவோம்! இயற்கையான கடல் பொங்குவது போன்று அப்பெருமிதம் பொங்கி வழியுமன்றோ!

இப்புவனத்தைச் சிருஷ்டித்ததும் இயற்கை! அதனிடத்து எண்ணரிய அறிவுகளைக் கொண்டு இது செய்யத் தகுந்தது, இது செய்யத் தகாதது, இவை பாபச் செயல்கள், இவை புண்ணியச் செய்கைகள், இது சற்சங்கம், இது துஷ்ட சகவாசம் என்ற பேதத்தை யறியும் மனித சமூகம் தோன்றியதும் அவ்வியற்கையின் செயலாலேயே! அம்மனித சமூகத்தில் ஆண், பெண்ணென்னும் பேத சரீரங்களைத் தோன்றச் செய்ததும் அவ்வியற்கையே! அவற்றிற்குக் காதல், கவர்ச்சி, பாசை முதலியவற்றையும் இயற்கையே தந்தது. இம்மனிதப் பிறவிக்குப் பசி, நித்திரை, தியானமென்ற

இயற்கையின் இனிய வேலை

ஜாக்கிர சொப்பன, சுஷுப்தி அவஸ்தைகளையும், மண், பெண், பொன் என்ற மூவாசைகளையும், உயர்வுதாழ்வான பேதங்களையும் இவ்வியற்கையே கற்பித்தது. இயற்கையாகவே இம்மனித வாழ்வில் தர்ம, அர்த்த, காம, மோக்ஷமென்னும் நான்குவித புருஷார்த்தங்களும் திகழ்வனவாயின! மனித சமூகத்தில், ஏழை, செல்வன், அரசன், ஆண்டி ஆகிய அனைவரையும் அன்னவர் நிலைகளையும் உண்டாக்கியது இயற்கையே! அரசாங்கம் நடைபெறுவதும், மனிதன் ஓடியாடித் திரிந்து பொருள்தேடி உய்வதும், ஆடவர் பெண்கள்மீது காதல்கொள்வதும், காதிற் கினிமையைத்தரும் இன்பகானங்களைக் கேட்டு இன்புறுவதும் ஆகிய அனைத்தும் இறைவனின் இயற்கைக் குணத்தின் பிரிவு

களே! இவை கேளாதே வந்து கூறாதே போகும் இயற்கைக் குண முடையன.

இயற்கை வடிவான இறைவனின் மற்றோர் அம்சமே அறம்! அதற்குத்தான் அறிவைப் புகட்டும் அபாரசக்தி உண்டு! இவ்வறிவினைப் புகட்டும் நூல்களே வேதம், உபநிடதம், சாத்திரம், குர் ஆன், பைபிள், பௌத்த தர்மம், வேதாந்தம் முதலியன! இவற்றின் ஆசிரியன் கடவுளே! இந்நூல்கள் யாவும் ஆனந்த சொரூபியான அவன் அருள் வெள்ளத்தின் துளிகளே! அவை யாவும் சர்வேஸ்வரனுடைய தன்மையையே ஆரம்பித்து அவனது நிலையையே கூறி முடிக்கின்றன. இறைவனே இயற்கை வடிவினனாதலின் அவைகளும் இயற்கை ஸ்வரூபங்களாம். இயற்கையின் இன்பத்தைப் படித்துணர்ந்த பாமரன், செயற்கை இன்பங்களை வெறுத்து, இயற்கையின் பேரின்பத்தை இன்புற நாடுகின்றான். இவனே மஹானாகின்றான். இயற்கையின் இன்ப அமுதத்தைப் பருகுகின்ற மஹான்களைக் கண்டு செயற்கையிற் சார்ந்த மனிதர்கள் போற்றுகின்றனர்; வணங்கித் துதிக்கின்றனர். இவை யாவும் இயற்கையின் அம்சமான அறத்தின் செயல்களேயாம்.

இயற்கையின் செயல்கள்

இயற்கையின் இயல்பாக மாநிலத்தில் பற்பலபாஷைகளும், மதங்களும் தோன்றின. கிறிஸ்துநாதர் கிறிஸ்தவ சமயத்தையும், முகம்மதுநபி இஸ்லாமிய மார்க்கத்தையும் உலகிற் களித்தனர்; தியாகத்தையும், சத்தியத்தையும் தர்மத்தையும் நிலைநாட்டினர்; அன்பும் பரம்பொருளான இயற்கையும் ஒன்றென உணர்த்தினர்; அவ்வழி தாமே நின்று போதித்தனர். தற்கால ராஜஸ எதிர்ப்பு இம்மதங்கள் தோன்றிய காலத்து அந் நாடுகளிலில்லை; அம்மதாசாரியர்கள் சாத்வீக எதிர்ப்பின் சத்தியத்தைக் கடைப்பிடித்து நின்றனர்; பிறர் குற்றங்களுக்காகத் தாம் பல இன்னல்களுக் காளாயினர்; அறவழி நின்றனர். அவர்கள் வாயிலாக வந்த கிறிஸ்தவ வேதமும், குர்ஆனும் மேல் நாடுகளில் ஞானவிளக்கேற்றின. அம்மதங்களும் சமய ஸ்தாபனங்களாக நின்ற தீர்க்க தரிசிகளின் நாமங்களும் இன்றளவும் மேல்நாட்டாரிடத்தில் மறையவில்லை. அந்தோ! அக்கொள்கைகளே மங்கின. இயேசுநாதரின் ஆத்ம பலம் வேறிடங்களில் குடியேறி விட்டது; மிருக

சமயங்களின் பெருமிதம்

பலம் தலைவிரித்தாடி, இயற்கை இன்ப நுகர்ச்சியை அழித்துப் பேராசையால் இரத்த வெறிபிடித் தலைகின்றது.

நிற்க, இயற்கை இன்பம் நிறைந்த இந்திய நாடோ இறைவனின் திருநந்தவனம். இதில் பல்வேறு சமயங்களாகும் புஷ்பச் செடிகள் அன்பு என்னும் புனலால் வளர்ந்து வருகின்றன. அச் சமயங்களின் உன்னத அறக்கடவுள், மலர்களாக அச்செடிகளின் உச்சியிலமர்ந்து, தண்மணத்தைவீசி ஆனந்தத்தை யுண்டு பண்ணுகின்றார். அம்மலர்களாகிய கடவுளிடத்தி லிருந்து அவற்றின் இதழ்களான வேதங்களும், உபநிடதங்களும், புத்த தர்மங்களும் விரிந்தன. 'புவனமிதிற் கலைமகளே ஆணுருவங் கொளநினைந்து போந்தா' ளெனச் சங்கரரும், மத்வர், இராமாநுஜர், தேசிகர், புத்தர் முதலான தீர்க்க தரிசிகளும் இயற்கையாக உலகிற்றோன்றி, அறக்கடவுளின் மணத்தா லாட்கொள்ளப்பட்டு, ஆனந்த பரவசர்களாகிச் சமயப்பிரசாரம் செய்ய வாரம்பித்தனர்; அறமென்ற இயற்கைத் தெய்வத்தை ஆராதித்தனர்; 'அன்பு' என்னும் ஆத்மாராமனின் அறப்பெருமை மனித சமூகத்திற் குன்றிய காலங்களில், அடியார்களும், ஆழ்வார்களும், ஆனந்தர்களும், பரமஹம்சர்களும் தோன்றினர்; தோன்றுகின்றனர். சமயாசாரக் கொள்கைகளை எடுத்தோதுவதே அவர்களின் அறம்! இப்பாரத பூமியாகிய நந்தவனத்திலுள்ள மனித சமூகத்தில் மிருகபலம் ஓங்கி, ஆத்மபலம் குன்றி, துஷ்டர்கள் நிறைந்து, சிஷ்டர்கள் குறைந்து, ராஜசம் பெருகி, சாத்வீகம் குறுகி நின்ற காலங்களில் மிருக பலத்தை ஒடுக்கவும், துஷ்டர்களை முடிக்கவும், ராஜசத்தை அடக்கவும் அவ்வறக் கடவுளே மாயா சம்பந்தராகி உலகிற் றோன்றித் தமது அறநிலையின் சத்தியத்தைப் பரப்பினர். இனியும் வந்துறுவேனென்று கீதாரஹஸ்யத்திலும் பகவான் கூறிப்போந்தனர்.

பாரத பூமியின் தொலசீர்

இயற்கைத் தெய்வத்தின் வல்லமையால் மனிதன் உய்யும் வழி தேடலுக்குச் சாதகமான தர்மநூல்கள் பல அவனருளாற் றோன்றின. அவை இயல்பாகவே மனித உள்ளத்தில் கருணை வெள்ளத்தைப் பாய்ச்சுவன; மனிதன் மனத்தில் கற்பூரமலை படுதீப்பட்டாற் போன்ற ஞானச் சுடர் ஏற்றுவன; அவ்விளக்கிற்கு 'அஹிம்சை' என்பதே அகலாகின்றது. அதனை யுணர்த்தினன் பிரகலாதாழ்வான். அவ்வஹிம்சா தர்மத்தின் ஓர் சுடரான 'பற்றற்றான்' பற்றினைப் பற்று

அறத்தின் முறையீடு

விடுவதற்காகப் பற்றுமாறு கீதை உணர்த்தியது; அதன் தாமரை மலரிற்பட்ட நீர் போன்ற நிலையைப் புத்தர் காட்டினர்; 'பொறுமை கடலினும் பெரிது' என்பதைத் தருமர் காட்டினர். இத்தருமத்தின் முடிவற்ற சப்தம் உலகில் என்றும் ஒலித்து நிற்கின்றது. அது "மனிதனே! நீ உலகிற் ருேன்றிய காரணத்தை இப்போதாகிலும் உணர்! நீ உலகத்தில் தொண்டு புரியவே தோன்றியவன்! நீ அத்தொண்டையியற்றுமாறு உன்னை ஆட்டுவிக்க ஆத்மா எனனும் கடவுள் உன்னுள்ளேயே ஒளிர்கின்ருன்! நீ ஜனித்த உலகம் அந்த இறைவனது ஆலயம். உன்னைச் சூழ்ந்திருக்கும் ஜீவன்க ளெல்லாம் உன்னைப் போன்றே சர்வேஸ்வரன் சந்நிதிக்கு வந்தவர்கள். நீ உனக்காகப் பிறக்கவில்லை! வாழ்வதில்லை! 'என் கடன் பணி செய்துகிடப்பதே' என்ற வாக்கை மெய்ப்பிக்கவே நீ பிறந்தாய்! ஆகையால், உன்னைச் சுற்றியுள்ளவர்களிடம் நீ அன்புகாட்டு; உன் அன்பு பெருகி அருட் பணியாகட்டும்! நீ உன் சமூகத்திற்காகவே தோன்றியவ னென்பதை அறி! உன் வாழ்வினின்று ஓர் உண்மையைத் தோன்றச் செய்! உனது சமூகம் அதனுல் ஓர் உணர்ச்சியைப் பெறட்டும்! உனது சேவையால் உலகத்திலுள்ள அஞ்ஞானம் சற்று விலகட்டும்! துன்பங்கள் சற்று தணியட்டும்" என்று முறையிட்டுக்கொண் டிருக்கின்றது; அவ்வறவழியை ஒழுங்கு படுத்தவே நம்மை அழைக்கின்றது. உலகில் மனிதர் படும் கஷ்டநிவாரணக் கருத்தைக்கொண்டே அந்த சப்தம் நம்மைச் சிருஷ்டித்திருக்கிறது. இயற்கையின் அறப் பணி யிதுவே யன்ருே!

அந்தோ! அவ்வியற்கை அன்பாலெழுந்த ஒலியை மனித சமூகத்தின் செவிகள் ஏற்பன வல்லவாயின. மனித சமூகம் தனது சக்தியை மறந்தது. அதனிடத்து 'பரமாத்மா தன்னுள்ளே ஒளிர்கின்ருர்' என்பதை அறியும் ஆற்றல் குன்றியது. தன்னையே அறியாது வீண் மதங்கொண்டது. தனக்கு உபதேசஞ் செய்யவந்த

மானிடர் நிலை

பெரியார்களின் பெருமையை மறந்தது. தனது மனச் சாட்சியையே மனிதன் நம்புவதில்லை. அதன் உத்தரவுப்படி நடப்பதை விட்டான்! உண்பதும், உறங்குவதும், பொருளீட்டுவதும், பிறரைத் துன்பப் படுத்துவதுமே தன்னுடைய இயற்கைப் பிறவியின் நோக்கமென்று எண்ணினன். சத்தியமும், அன்பும், பொறுமையும் நேசமும் இவனை

விட்டகன்றன. சுயநலப் பேய் இவனைப்பிடித்தாட்ட, பொறாமையும் பேராசையும் இவனிடம் குடிபுகுந்தன. அவை காரணமாக, நெறியினின்றும் வழுவி அதிகப் பொருளீட்டவும், மெலியாரை வாட்டவும், பிறர் பொருளை அபகரிக்கவும் இவன் முற்பட்டான். உலகில் அன்பு வெள்ளம் வற்றிப்போய் இரத்தவெள்ளம் ஓடுவதாயிற்று.

சங்கரர் போதித்த அறவழி யெங்கே! ஹிந்து மதத்தின் தம்பங்களாகநின்ற, வசிஷ்டர், விசுவாமித்திரர், பராசரர், வியாசர், வான்மீகி ஆகிய முனிவர்கள் திகழ்ந்த நாட்டின் வளப்பம் எங்கே! இயேசுநாதர் குன்றின் மீதேறிப் போதித்த தர்மமெங்கே! கொந்தளிக்கும் கடலும் ஏற்றுக்கொண்ட சாந்தத்தை உபதேசித்த அவருடைய உயர்ந்த கருத்துகளெங்கே சென்றன! அனைத்தையும் இயற்கைப் பெருமையற்ற செயற்கை வெள்ளம் அடித்துக்கொண்டு போயிற்று. ஒவ்வொரு சமூகமும் மற்ற சமூகங்களை ஒடுக்கவும், ஒவ்வொரு மதமும் மற்றைய மதங்களைக் கெடுக்கவும் முற்படுகின்றன. உலகத்தைப் பொருள்சேர்க்கு மிடமென்றும், போர் தொடுக்கும் களமென்றும் காமக்கடலென்றும் கூறுகின்றது நவீன உலகம்! மாயையான இருளில் மனித சமூகம் அகப்பட்டுக்கொண்டு தத்தளிக்கின்றது. இது இயற்கை வடிவான அறக்கடவுளின் சொரூபமறியும் உணர்ச்சி மனித சமூகத்தில் குறைந்ததா லன்றோ ஏற்பட்டது!

நவீனக்கூற்று

இங்கிலையினின்று நாம் மீள "ஹே! புண்ணிய பாரத பூமியே! உனது இயற்கையின் அழகு எங்கே! உன்னிடத்துச் செறிந்த வீரம் எங்கே! உயர்ந்த வேதங்களின் தாத்பரியங்கள் எங்கே சென்றன! கண்ணன் பிறந்த புனிதநாடே! இராமன் தோன்றிய புனிதவீடே! பாரத மக்களே! இப்புனிதநாட்டை அதர்மத்தின் ஆதிக்கத்திலிருந்து விடுவிக்க விரைந்து வாருங்கள்! அதுதான் உங்களது கடமை!" என்று இயற்கை வடிவான தர்ம தேவதை யாவரையும் அழைக்கின்றாள். இந்த ஒலி மஹான்களின் மனக்காதுகளில் இடைவிடாது ஒலித்துக் கொண்டிருக்கின்றது. இந்த ஒலியிலீடுபட்டுப் பல மஹான்கள் நம் பாரதநாட்டில் அறத்தின் பணியையாற்ற அவதரித்தனர். அவர்கள் இயற்கையான அறத்தின் மணத்தை—பக்தி வாசனையைப் பரப்பினர்; பரப்புகின்றனர். இனியும் அவதரித்து உய்யும் வழியை உணர்த்த வருவார்.

தர்ம தேவதையின் அழைப்பு

ஈசுவரத் தன்மையான இயற்கையின் பெருமையை, தனிப்

பட்ட செயற்கை பாழ்படுத்தி இவ்வுலகை அடிமையாக்கிய பரிதாபம் என்னே! அறக்கடவு ளீந்த இயற்கையின் இன்பம்—விநோதம்—ஆனந்தம்—ஆனந்தபோதம்— ஆகிய இவை இயம்பவும் எளியவையாமோ? இறைவனே இயற்கை சொரூபி என்பதும், அவனுலாக்கப்பெற்ற உலகமும் இயற்கையும் அவனுடைய கடாக்ஷத்தின் வடிவமே யென்பதும், அவ்வுணர்ச்சி குன்றும்பொழுது ஆனந்தர்கள் பலர் தோன்றி மனிதருள்ளத்தில், அறிவு வெள்ளத்தைப் பாய்ச்சுகின்றன ரென்பதும் இந்த '**அவதாரிகை**' யால் விளக்கமாம்.

அவதார புருடர்கள்

2-ம் அத்தியாயம்.

குலப்பெருமை

ஆனந்த சொரூபியின் அருளா லிவ் வவனியில் உதிக்கும் பெரியாரனைவரும் குணத்திலும் ஒழுக்கத்திலும் அன்பிலுஞ் சிறந்த குடும்பத்திலேயே தோன்றுவர். மகான்கள் ஜனிக்கின்ற குலத்தில் இரண்டு மூன்று தலைமுறைக்கு முந்திய ஒருவராவது அல்லது அவர்களது சுற்றத்தாரி லொருவராவது செல்வமுஞ் சீலமுமுடையாராகித் தெய்வ பக்தியில் சிறந்தவரா யிருந்திருத்தல் இயல்பு. இதைத்தான் உலகில் 'இரத்தக்கலப்பு' என்பர். இது மாநில இயற்கை. அதுபோன்றே மனிதருக்குக் கடவுளின் தன்மையாம் விவேகத்தைப் புகட்டி அழிவிலா ஆனந்தத்தை யளித்த ஸ்ரீ விவேகானந்தரின் மூதாதையரும், அநித்ய உலகில் ஆஸ்திக தர்மத்தை அறிவுறுத்த வந்த அற்புத மூர்த்திகளெனத் திகழ்ந்தனர். அப்புனிதரது இரத்தக் கலப்பின் விசேடமே இந்திய நாட்டிலும் மேல் நாடுகளிலும் ஞானவிளக்கேற்றி, உண்மைத் துறவியின் மகிமையை வெளிப்படுத்திய நமது விவேகாநந்தரின் திருவவதாரத்திற்குக் காரணமெனினும் மிகையாகாது.

இரத்தக்கலப்பு

அழகே உருக்கொண்ட மேனியும், அருள்பொலிந்த வதனமும் பாரசீக சம்ஸ்கிருத பாஷைகளில் அளவற்ற பாண்டித்தியமும், ஆங்கிலத்தில் ஓங்கியவன்மையும், கானத்திற் சிறந்த ஞானமும், அருட்கடலைத் தேடி யலையும் நயனங்களும், உண்மையின் செய்தியை உலகிற் பரப்பும் வேட்கையும், அதர்மத்திற் கொண்ட அருவருப்பும்,

அதி பால்யமாம் இருபத்தைந்தா மாண்டிலேயே கமண்டலதாரியாய் வெளிவந்த அற்புதமும் பொருந்திய ஒரு திவ்ய புருஷரின் குலப் பெருமைதான் என்னே! என்னே!

ஒரு குடும்பத்தில் தந்தையோ, மகனோ, மனைவியோ லோக மாயையினின்றும் விடுபட்டுச் சத்தியத்தைச் சாதிக்க அக்குலமே பரிசுத்தமாகி, அதனைச் சார்ந்தோர் விழிபெற்று இகத்தில் புகழையும் பரத்தில் மோட்சத்தையும் அடைகின்றனர். அவ்விதமே இவ்வுத்தம குடும்பத்தைச் சார்ந்த பெரியாரொருவர் தமது இருபத்தைந்தாம் வயதில்,

தந்தைதாய் தமர்தாரம் மகவென்னு மிவையெலாம்
சந்தையிற் கூட்டமிதிலோ சந்தேக மில்லை

எனத் தெளிந்து, அறியத்தக்க உலகிலுள்ள உறவையெல்லாம் வெறுத்து, அழிவிலா முதல்வனின் திருவருளை நாடிக் காவி யணிந்து தர்மோபதேசஞ் செய்யத் தலைப்பட்டனர். **தர்க்க சரண தத்தர்** என்பதே அப்புனிதரின் திருநாமம். இவர் ஸ்ரீ விவேகானந்தரின் பிதாமகர். இவர் அக்காலத்தில் வங்காளத்தில் கல்வி, செல்வம், கீர்த்தி முதலியவற்றில் சிறந்து விளங்கிய காயஸ்த (கணக்கர்) குலத்திற் பிறந்தவர். பெயருக்குக் காவி பூண்டு சிந்தையிலும் செய்கையிலும் விபரீத முடைய பலரைப் போலல்லாது, இவர் திரிகரண சுத்தியாய் இறைவனது திருவடி நிழலையே தேடி யலையு மியல்பினரா யிருந்தார். கனவிலும் நினைவிலும் அவருக்குக் கடவுளின் எண்ணம் பெருகிற்று. நித்திரை கலைந்தவுடன் கனவு, நிலையற்ற தாகிவிடும். ஆனால் தர்க்க சரணதத்தர் கனவை உண்மைப்படுத்துஞ் சக்திவாய்ந்தவரா யிருந்தார். அவருடைய தந்தையான **ராம மோகன தத்தர்** பெரும் புகழ் படைத்த ஒருண்மை நியாயவாதி. இவருடைய பேசுந்தன்மையும் நியாயவாதத் திறமுஞ் சேர்ந்து இவருக்குக் கீர்த்தியையும் அளவற்ற செல்வத்தையு மீட்டிவைத்தன. ராம மோகன தத்தர் **கல்கத்தா** நகரத்தைச் சார்ந்த **சிம்லா** என்னும் பாகத்தில் வசித்து வந்தார். அவரது குமாரரான தர்க்க சரணதத்தரும் சட்டப் பரீக்ஷையிற்றேறி தந்தைக்குச் சமத்வமான நியாய வாதியாக விளங்கினர். அவரும் பிதாவைப்போலப் பொருளீட்ட, செல்வத்தோடு செல்வஞ் சேரத் தத்தர் குடும்பம் தனவந்தர் குடும்ப மாயிற்று.

தத்தர் குடும்பம்

சதாகாலமும் உலக போகபோக்கியங்களை யனுபவித்துக்

கொண்டு பணத்தில் மூழ்கிக்கிடக்கும் பணக்காரருடைய குடும்பத்தில் ஈஸ்வரப் பரிமளம்வீச, தர்க்க சாஸ்த்ரத்தை அனைத்தையுந் துறந்து வெறுக்கையென நிதியை வெறுத்து வெளிவந்த அதிசயம் என்னே! அதற்கு அவனருளே யன்றோ வழிகாட்டியாய் நிற்பது! பரம தரித்திரன் தனக்குப் பணத்தினிடத்தில் விருப்பமில்லையென்று கூறுவது பொருந்துமோ? சரீரம் தளர்ந்த வயோதிகன் தான் அழகான யௌவனப் பெண்ணைக் கண்ணெடுத்துப் பார்ப்பதில்லை எனின் அது புகழப்படுமோ? ஆதரிப்பார் யாருமற்ற அனாதி யொருவன் தான் துறவுபூண்டதாகப் புகலினதைச் சிறப்பித்துக் கூறல் சீரியதாமோ? ஐஸ்வரியவான் தான் தர்மிஷ்டனென்னில் அது வியக்கத்தக்கதாமோ? ரூபலாவண்யமான பெண்கள் எந்தக்கிழவரைக் கண்டாலும் தாத்தா! தாத்தா! என்று பரிகசித்துப் பேசி விளையாடுவது எதனால்? அவ்வயோதிகரால் தம்மைக் கற்பழிக்க வியலாதென்ற தைரியத்தாலல்லவா? இதைக்குறித்தே "இளையான் ஒடுக்கமே ஒடுக்கம். கிளைபொருளில்லாதான் கொடுக்குங் கொடையே கொடை" என்றனர் பெரியோர். உலகில் ஐஸ்வரியத்திற் சிறந்து, தந்தை தாய் தாரம் மகவு முதலானவர் அன்பில் அதிகமாழ்ந்து, பஞ்சணைமீது படுத்துறங்கும் பான்மையுடையோர், நெஞ்சில் உறுதிகொண்டு "மாதாநாஸ்தி; பிதாநாஸ்தி; நாஸ்தி பந்து சகோதராஹ" என்பதுபோலப் பிரபஞ்சத்தி லுள்ள யாவும் அழியுந் தன்மையன வெனத் தெளிந்து வெளிப்பட்டுச் சத்தியத்தையும் தர்மத்தையும் ஸ்தாபிக்க முற்படின் அதுவன்றோ அதிசயம்! அற்புதம்! ஆச்சரியம்! ஆங்கேயன்றோ அவனருள் பொலியும்! குபேர சம்பத்திற் கொப்பான செல்வமுடைய பட்டினத்தாரின் துறவு எத்துணை விசேட முடையது! அரசன் அளவொன்று கூறி, 'அத்துணை செல்வ முடையார் தமது மாளிகையிலோர் பொற் சிகரம் வைத்துக் கொள்ளலா' மென்றான். பட்டினத்தார் தமக்குள்ள வைரக் கற்களி லொன்றைக்கொண்டு வேந்தனைக் கண்டு 'இதற் கெத்தனை சிகரங்கள் வைத்துக் கொள்ள அனுமதி?' யென்று கேட்க, மன்னன் இரண்டென்றான். இதுபோன்ற இரத்தினங்கள் எனது இல்லத்திற் குவிந்து கிடக்கின்றன; எத்தனை சிகரங்களுக் கனுமதி? யென்று அவர் வினவ அரசன் ஆச்சரிய மடைந்தான். அதே மன்னன், அதே அடிகள் சிலகாலத்திற்குப் பின்பு தனது செல்வ மெல்லாவற்றையும் வாரி இறைத்துவிட்டுக் கௌபீனத்துடன்

துறவியின் மாண்பு

பட்டினத்தார் துறவு

தெருத் திண்ணையில் அமர்ந்து ஆனந்த மடைகிறு ரென்ற செய்தி கேட்டு ஆச்சரியப்பட்டு அவர் இருக்கையை யடைந்து, அதிசயித்து நோக்கி 'என்ன ! உமக்கேன் இந்த நிலை வந்தது ?'' என்று ஆச்சரியத் துடன் கேட்க அடிகள் "ஆம் ! நாட்டை யளிக்கும் தாம் நின்று கேட்கவும், ஆண்டியாகிய யானமர்ந்து பதிலளிக்கவும்—இதுதான் நிலை ! நான் துறவு'' என்முர். அவ்வசனத்தி லொளிர்வது அவனருள். அதுதான் துறவு. பிறவெல்லாம் குறைவு. இதுபோன்ற துறவே தர்க்க சரண தத்தரின் துறவு.

மாயா சம்பந்தமான மண்ணுலக இன்பங்களை வெறுத்துத் தர்க்க சரண தத்தர் துறவு பூண்டதற்குக் காரணமாய் நின்றதெது ? ஒரு சிறு விஷயத்திலிருந்து பேருண்மை யொன்றைக்கண்டு துக்க நிவா ரணார்த்தமாக வெளிப்படுவது ஒவ்வொரு மகானுடைய சரித்தி ரத்திலும் வெளிப்படை. குவலய மங்கைக்கே திலகம்போல் விளங் கும் முக்கிய புண்ணியஸ்தலமான காசியே இவருடைய துறவுக்குக் காரணமாய் நின்றதெனப் பின்வரும் சம்பவங்களி னின்றும் சிறிது சிந்தித்துணரலாம்.

புண்ய க்ஷேத்திரங்கள்

சுத்த சைதன்ய நிலையைப்பெற விரும்பி, லோக விவகாரங்களை வெறுத்துக் காவியாடையுடன் உலாவும் மகான்கள் யாத்திரை செய்ய இப்பாரத பூமியிற் பல புண்ணிய க்ஷேத்திரங்களுண்டு. அவற்றுள் பல மகான்கள் அவதரித்த ஸ்தலமாயும், பல பக்தர்கள் பரமேஸ்வரனைக் கண்ட கட்டமாயும் திகழ்வன. புறக்கண் பார்வைக் குப் புலனுகு மொன்றை மனிதன் காணுவதுபோலப் புத்த பகவான் உண்மையறிந்த புத்தகயை என்ன ! யசோதைக்குத் திருமகனுய்த் தோன்றி இனிது விளையாடிப் பலரும் மகிழப் பரமானந்தத்தை யூட் டிய பக்தபராதீனனுன கண்ணன் பிறந்த ஆயர்பாடியான பிருந்தா வனம் என்ன ! இங்கேயன்றோ,

"மருட்டார் மென்குழல் கொண்டு பொழில்புக்கு
வாய்வைத்தவ் வாயர்தம்பாடிச்
சுருட்டார் மென்குழற் கன்னியர் வந்துன்னைச்
சுற்றுந்தொழ நின்றசோதி.'' திருவாய்மொழி.

எனப் பகவான் ஆய்ச்சியருடன் ஆடிப்பாடி கூடி விளையாடி அவர்கள் உள்ளத்தை ஆட்கொண்டு நின்முர். அன்பர் புகழும் ஹரித்துவாரம்— 'ஹரிகேச'த்தின் மகிமை யென்ன ! பாரத நாடெங்குமுள்ள புண்ணி யத் துறைகளாடிய அப்பெரியார்களது பாதங்களின் பெருமையை

எவ்வாறு புகழுவல்லோம்! ஹிமாசலத்திலுள்ள இயற்கை இன்பத்தைப் பருகிய அவர்களுடைய கண்களின் களிப்பை யாம் எங்ஙனம் விரிப்போம். பாலவயதிலே பரிபக்குவமடைந்து ஹிந்து சமயத்திற்கே ஓர் புத்துயிரளித்துச் சாரதாதேவியின் கிருபைக்குப் பாத்திரராகிப் பதினாறாண்டு நிறைவதற்குள் வேதங்களுக்கும் உபநிடதங்களுக்கும் வியாக்கியானம் விரித்த **சங்கராசாரி**யாரது மகிமையென்னே! அவர் நிறுவிய மடங்களின் மான்மிய மென்னே! இவையாவும், தர்க்க சரண தத்தரைப்போன்று பகவந்நாம சங்கீர்த்தனத்தையே தொழிலாகக்கொண்டு கிடைத்தபோதுண்டு தமக்கென்று வீடும் பெண்டு பிள்ளைகளுமற்ற சன்னியாசிகளுக்கு ஆனந்தத்தை யூட்டுவன வன்றோ!

ஆத்மவிசாரம் செய்து ஞானியாகி உலகத்தின் நாஸ்திக சப்தத்தைக்கண்டு, மனோதிடங்கொண்டு, ஆஸ்தியான பரம்பொருளை நாடித் திரியும் நந்தர்கள் 'அவனன்றி அணுவளவு மசையாது' என்ற மெய் வாக்கியத்தை நம்பி, சிங்கத்தின் வாயிற் சிக்கிய போதும் அவனே துணையென ஆரவாரித்து "ஹே ராம! கிருஷ்ணா! கோவிந்தா!" எனக் கதறிக் கண்ணீர்விட்டுப் பிரலாபித்துப் பந்தமென்பதைக் கடந்து பாசமற்றிருப்பர். சில சமயங்களில் சர்வத்தையும் மறந்த தன்மையால் குழந்தை போன்று இடையி லாடையுமின்றி யலைவர். ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சருடைய நிலையும் இது போன்றதே. ஈஷணாத்திரய மென்னுந் திரை கடல் நீரில் அலக்ஷியமாக—கம்பீரமாக நீந்தித் தனது பந்தமற்ற நிலையைப் புலப்படுத்தும் அன்னப் பறவையென ஸ்ரீராமகிருஷ்ணரும் விளங்கா நின்றார்.

நிற்க, சாதுக்களைக் குழந்தைகளெனக் கூறினோம். அவர்களில் சிலர் சிகையைப் பலவாறு வளர விடுகின்றனர். சிலர் அதை வாரி வடுக்கட்டத் தமக்கு நேரமில்லாது வெட்டி விடுகின்றனர். அவை முகத்திலும் முதுகிலும் விழுந்து சங்கடத்தை யுண்டுபண்ண வண்ணம் சிலர் சடையாக முடிந்து விடுகின்றனர்; சிலர் தாடியைத் தாழ வளர விடுகின்றனர். பலர் கேசம் வளரப் பாசம் வளருமெனத் தெளிந்து அவ்வப்போது மொட்டையிட்டு முறுவ லெய்துகின்றனர். பலர் ஒன்றையுங் கருதா தொழிதலும் உண்டு. சிலர் ஆடை யுடுப்பர்; அதுவுமின்றிப் பலர் கானகத்தில் வதிவர். அவர்களுடைய சுயேச்சையான சுத்தவாழ்வின் இன்பத்தை என்

பற்றறுத்த பரமானந்த வாழ்வு

னென்போம். தாழ்வாரமில்லை; தமக்கொரு வீடில்லை. உலகமே அவர்களது பர்ணசாலை. உயர் பொருளைத் தேடியலைவதே அவர்கள் உத்தியோகம்! உணவோ அவனளிப்பான் என்ற உறுதியான எண்ணம். சிலநாள் அன்ன போஜனம். பலநாள் பட்டினி! பகவந் நாமமே அப்போதுள்ள உணவு. ஞானச் சுடரின் காக்ஷியைக் காண்டலே அவர்களது விளையாட்டுக் காலம்!' இவ்வாறன்றோ இயேசுவின் உண்மை வாழ்வு மியம்பப் படுகின்றது.

மேற்கூறிய சாதுக்களி னின்பங்களைத் தர்க்க சரண தத்தர் தமது இருபத்தைந்தாம் பிராயத்திலேயே கண்டார்; பால வயதிலே பதப்பட்டார். குடும்ப விஷயப்பற்று அவருக்குக் கொஞ்சங் கொஞ்சமாக மறைந்து வந்தது. சாது சந்தர்ப்பணையில் அவரதிகப் பிரியங் கொண்டார். அவர் அடிக்கடி அதிதிகளைக் கண்டு, அவர்களைத் தம்மில்லத்திற் கழைத்து அன்னமிட்டு ஆனந்தமடைவர். கமண்டலத்துடன் ஸ்தலயாத்திரை செய்து கொண்டுவரும் சாதுக்கள் நகரங்களையடைவதுண்டு. அங்கு அவர்கள் பிக்ஷை யெடுத்துண்பர். அத்தகையோரை தர்க்க சரணர் வரவேற்க, அவர்களும் இது சற்பாத்திரமென்றுணர்ந்துவந்து அமுது கொள்வர். தமது தர்க்க சரண தத்தரென்ற பெயருக் கேற்ப, அவர்களுடன் தர்க்கித்துத் தத்தர் ஆத்மவிசாரம் செய்வது வழக்கம். சாதுக்களும் மகிழ்ந்து தத்தருக்கு உபதேசஞ் செய்து செல்வர். இதன் பின்பே "இல்லறத்திலிருந்து ஞானமார்க்கத்தை விரும்பும் விவேகி மின்னலைப்போன்ற அளவிலே தான் அதைப்பெற முடியும். சாக்ஷாத்கார பிரம்மத்தை முற்றுங் கண்டு களிக்கச் சகலத்தையும் துறந்து கண்மூடி மௌனியாகித் தனிமையை விரும்புதல் வேண்டும்" என்ற தத்துவத்தைத் தர்க்க சரணதத்தர் உணர்ந்தார்.

தர்க்க சரணர் துறவு பூண்டமை

"சாதுக்கள் எந்த தேசத்தினராயினும், எவ்வகை நாகரீக முடையவராகினும் அனைத்தையும் முதலில் துறந்து காவியணிந்து, தமதியற் பெயரை மறுத்துத் தனது ஆன்மார்த்த வழிக்குரிய பெயருடன் மேனியெலாம் துதிக்கப்படுந் திருநீறு பூசி, அன்னத்தைப் பிராணமயமாகக் கொள்ளாது வலுவில் ஆகார மளிக்கப் பட்டபோது கொள்வர். கானகமே யவர்களது களிப்புக் குகந்த இடம். ஓர் விருக்ஷத்தி னடியில் ஈராறு ஆண்டுகள் தவங்கிடந்த ஓர் மஹான் அப் பன்னிரண்டா மாண்டி னிறுதியில் ஓர் அசரீரி "இம்மரமும் மாயா சம்பந்தமானது. எழுந்து நட" என்றியம்பக் கேட்டுத்

தங்குமிட மெங்குமின்றி மதயானையைப் போலத் திரிந்தார். ஆதலால் மாயையை வெறுக்கவேண்டும். பந்தத்தைக் கண்டு பயப்படவேண்டும்'' என்ற ஓர் துறவியி னுபதேசம் தர்க்க சரணரின் நிவர்த்திக்குப் பெரிதும் ஆஸ்பதமா யிருந்தது.

அவர் சாதுக்களின் உபதேசத்தால் துறவை யேற்றார்; தனது சம்பத்தைக் கண்டு நகைத்தார். அவருடைய துறவு அரசகுமாரரான ஸ்ரீ புத்த பகவானின் துறவை நிகர்த்தது. அவர் மலையிலும், காட்டிலும் அலைவதுபோன்ற ஆனந்தக் கனவுகள் கண்டார். இவ்விதம் ஐந்தாறு ஆண்டுகள் சென்றன. தத்தர் பாசத்தை யறுக்கும் காசி நகரை யடைந்தார். அங்குச் சிலகாலம் வசித்துப் பின் தலயாத்திரை செய்யத் தொடங்கி ஆங்காங்கே கோயில்கொண் டெழுந்தருளி யிருக்கும் பெம்மானைத் தரிசித்துக் கொண்டே வந்தார். இவ்விதமான அவருடைய சரிதை படிக்கவும், கேட்கவும் எத்துணை யானந்தம் பயப்பது! பர்த்தாவிற் கேற்ற பதிவிரதையான அவருடைய மனைவி, கணவன் பிரிந்த நாள்முதல் விரதம் பூண்டு, ஆசையற்ற சந்நியாசினியாக வாழ்வு நடாத்தி வந்தனள். தன் கொழுநனைப் பிரிந்திருப்பதாக அவ்வம்மை நினைத்ததே யில்லை. சர்வேச்சுவரனது சந்நிதானத்தில் லவர்களுடைய மனம் ஒருமைப்பட்டிருந்தது. காசி விஸ்வேஸ்வரரைப் பஜித்தவாறே அப்புனிதை காலங்கழித்து வந்தாள்.

தர்க்க சரணருக்கு ஓர் ஆண் மகவுண்டு. காசியந்தலத்தில் காட்சி தருங் கடவுளி னிடத்துள்ள பக்தியால் தத்தர் அக்குழந்தைக்கு விஸ்வநாதன் எனப் பெயரிட்டனர். தத்தர் சந்நியாசம் பெற்ற பின்னர், அவருடைய மனைவி, தாய்

தாயும் சேயும்

என்ற முறையில் குழந்தை யிடத்துள்ள வாஞ்சையால் தனது கடமையைச் செய்து வந்தாள். தாய்ப்பாலுண்டு வாய்பேசி வளர்ந்து துள்ளி விளையாடித் திரிந்தான் விசுவநாதன்; பாலிய பருவத்தை யடைந்து, கல்வி பயின்று கலாசாலையில் முதன்மை பெற்று விளங்கினன். தாயும் காசிக்கு ஒரு முறை யாத்திரை செய்யவேண்டு மென்னும் ஆசையைப் பூர்த்தி செய்து கொள்ளத் தருணமதுவே யென மதித்தாள்.

காசிக்ஷேத்திரம் வேதகாலத்திருந்தே புவிமங்கையின் பொற்புடை முகம்போன்ற பரதநாட்டிற் கோர் திலகமாப் விளங்குகின்றது. 'காசிக்குச் செல்லவேண்டு' மென் றுஎவ்வொரு ஹிந்துவும் எண்ணுவ

தும், கூறுவதும், போவதும் இந்தியாவில் வழக்கம். 'காசியாத்திரை' யென்று கலியாணச் சடங்கிலும் ஓர் பாகம் அமைக்கப்படுகின்றது. இந்திய நாட்டில் தோன்றிய பல மகாத்மாக்களும், வீரபுருஷர்களும் சாதுக்களும் ஒரு முறையாவது காசிக்குச் சென்றுவருதல் தொன்மை. அன்றுமுத லின்றுவரையில் காசி ஆத்ம விசார அரங்கமாக வும், சதாசார ஸ்தானமாயுமிருந்து வருகின்றது. இப்பதியில் பலர் விஞ்ஞானம் பெற்று தீர்க்க தரிசிகளாயினர். எவ்வாறு கிறிஸ்தவர்களுக்கு ஏருசலே (Jerusalem) மும், முகம்மதியர்கட்கு மக்கா (Mecca) வும் யாத்திரை ஸ்தலமாகுமோ அவ்வாறே இந்துக்களுக்குக் காசியம் பதியாம். எங்குமிருந்து ஜனங்கள் திரள்திரளாக வருகின்றமையால் யாத்திரை செய்வோருக்கான பல சௌகரியங்களும் இங்குண்டு. வயோதிகன் இக்காசியில் இறக்க ஆனந்தத்துடன் வருகின்றான். நோயாளி வியாதியைப் போக்கிக்கொள்ள இந்த க்ஷேத்திரத்தை யடைகிறான். இதுபற்றியே காசிக்ஷேத்திரம் ஹிந்து சமயத்தின் ஹிருதய ஸ்தானமாகக் கருதப் படுகின்றது.

காசிக்ஷேத்திர மகிமை

இப்பதியில் கங்காநதி புனல் நிறைந்து பாய்கின்றது. அதன் கரையோரங்களில் அழகான மதில்கள் பொருந்திய ஆலயங்களமைந் திருக்கின்றன. ஆங்கு தனித்தனி விசாலமான கட்டங்கள் பல வுண்டு. ஆயிரக்கணக்கான யாத்ரிகர்கள் அக்கட்டங்களில் நீராடி ஜபஞ்செய்துகொண் டிருப்பர். ஸ்நானத்தால் சரீர சுத்தியேற்பட, ஆத்ம சுத்தியும் பிராப்தமாகு மென்பது ஹிந்துக்களின் சிறந்த நம்பிக்கை. என்பாலுந் தசையாலுமான இந்தச் சடலத்தைக் காலி செய்து வேறொருடலைத் தேடி ஆன்மா செல்வதால் பிணமான உட லைச்சுடும் கங்கா நதிக்கரையிலுள்ள ருத்திர பூமிக ளிற் பிணங்கள் பல எரிந்துகொண்டே யிருக்கும். இங்கு மயான ருத்திரர் விளங்குவது ஐதீகம். கடைத் தெருக்களிலும் சந்து பொந்துகளிலும் எக்காலமும் ஜன சந்தடியாகத் தேசத்தின் பல பாகங்களிலுமுள்ள பல்வேறு ஜாதி யினர் நடமாடிக்கொண்டிருப்பினும், புறக்கண் பார்வைக்குக் கேவல மாயும் அனுசிதமாயும் காணக்கூடிய சித்த சுத்தமுடைய சாதுக்கள் அங்குமிங்கும் காணப்படுதலே, இக் காசியந்தலத்தில் காணருங் காட்சியாம்.

விசேஷ கட்டங்கள்

தற்காலத்தைப்போல முன்னாளில் காசிக்குச் செல்ல இருப்புப்

பாதை வசதி கிடையாது. ஜனங்கள் வழிப்பிரயாணத்திற்கு வேண்டிய பலவகைச் சாமானங்களையும் மூட்டை கட்டிக்கொண்டு, கால் நடையாக வழி நடந்து யாத்திரை செய்வார்கள். பல குடும்பங்கள் ஒன்றுகூடி யாத்திரை செய்வது முண்டு. இவ்வாறு பல நகரங்களையும் மலைகளையும் நதிகளையுங் கடந்து, அந்தந்தப் பிரதேசத்திலுள்ள மக்களின் பாஷை, நாகரீகம் முதலியவற்றின் வேறுபாட்டால் சிரமப்பட்டு அந்தந்த பாகத்தின் சீதோஷ்ண மாறுபாட்டால் உடல் நலங்குன்றி, மழை காற்று முதலியவற்றால் துன்பப்பட்டு, பவமறுக்குங் காசிக்குச் செல்லவேண்டுமென்ற அவாவினால் தூண்டப்பட்டு, ஆறுமாதமல்லது ஒருவருட காலத்தில் காசியை யடைவர். பிரமதேவனிடத்திலிருந்து கங்கை பரமேஸ்வரனுடைய ஜடாபாரத்திற்கு வந்து, பகீரதனின் பிரயத்தனத்தால் புவிதனிலுற்ற வாலாற்றை வழிப்பிரயாணத்தை எளியதாக்கக் கூறிக்கொண்டே செல்வர் யாத்ரார்த்திகள். புண்ய நதிகளைத் தாயென் றழைப்பது ஹிந்துக்களுடைய புராண சித்தாந்தம்; பிராசீன சம்பிரதாயம். தாயன்பே உலகிற் பெரிதாதலின் நதிகளைத் தாய்க்கொப்பிடுவது ஆரியரின் வழக்கம்.

ஸ்தல யாத்திரை

கல்கத்தாவிலிருந்து நதிமார்க்கமாகச் சுமார் ஆறுவாரம் காசிக்குப் பிரயாணம் செய்யவேண்டும். தர்க்க சரண தத்தருடைய மனைவியும் குழந்தையான விஸ்வநாதனும் நதிமார்க்கமாகக் காசிக்குப் பிரயாணமானார்கள். படகோட்டுபவர் மதுர கானஞ் செய்துகொண்டே நாவாயைச் செலுத்த, பகலில் குளிர்ச்சியான நீர்க்காற்றும் சூரியனும், இரவில் தென்றற் காற்றும் சந்திரனும் தத்தம் முறை வழுவாது கோட்புற, ஆறுவாரப் பிரயாணம் விஸ்வநாதனுக்குக் குதூஹலத்தைத் தருவதா யிருந்தது. யாத்திரையாக அப்படகில் வரும் பெரியோர்கள் இராமாயண பாரதக்கதைகளைக் கூறி விஸ்வநாதனுடைய செவிக்கு விருந்தளித்தனர்.

பிரயாணம் முடியப் படகு காசியை யடைந்தது. யாத்திரார்த்திகள் உள்ளம் பூரித்தனர்; கதையாகக் கேட்டவற்றை யெல்லாம் கண்ணாரக் கண்டு களித்தனர்; யோகிகளுக்கு யோகியாக ஆங்கெழுந்தருளியிருக்கும் விஸ்வநாதர்—வீரேஸ்வரர் முதலான ஆலயங்களின் தூபிகளைக் கண்டு ஆனந்தபாஷ்பஞ் சொரிந்தனர்; ஸ்நான கட்டங்களில் முறைப்படி நீராடி, நித்ய கர்மானுஷ்டானங்களை முடித்துக் கொண்டு சுவாமி தரிசனஞ்செய்து, பாக்கியமுற்ற தினநாளெனப் பண்

பாடினார். துர்க்க சரணருடைய மனைவியாரும் விஸ்வநாதனும் இவ்விதமாகவே சிலநாட்களைக் கழித்தனர். ஒருநாள் காலையில் இருவரும் ஸ்நானஞ் செய்துவிட்டு ஆலயத்தில் நுழையும் பொழுது விஸ்வநாதனுடைய அன்னை, ஒரு உருவத்தைக்கண்டு திடுக்கிட்டு, மூர்ச்சித்துக் கீழே விழுந்தாள். "விழுந்தாள்! விழுந்தாள்!" என்று கூவிக்கொண்டு ஒரு சன்னியாசி விரைந்து வந்து அன்னையைத் தூக்கி விடவே அன்னையின் கண்களினின்றும் நீர் பெருகிவர தான் கண்ட வடிவம் தனது கணவரான துர்க்க சரணருடையதே யன்றி வேறல்லவென்றுணர்ந்தாள். அவரும் சற்று உற்று நோக்கிப் பாசம் மூடச் சிறிது சலனப்பட்டு "மாயை! மாயை!" என்று கூறி விரைந்து சென்றார். "வெம்பவக்கடல் கடந்துளோரும் கடப்பரோ மக்கண்மேற் காதல்" அன்றோ! தனது கணவனின் தீவிர ஒழுக்கத்தைக் கண்டு ஆனந்தித்தாள் அவ்வுத்தமி; சிலதிங்கள் காட்சியில் தங்கிப் பின் குழந்தையுடன் ஊரை யடைந்தாள்.

கண்ட உருவம் கணவன்

கல்கத்தா நகரைச் சமீபித்துள்ள சிம்லா என்ற பாகத்தில் தத்தர்களது மாளிகை அமைந்திருந்தது. பிற்காலத்தில் கல்கத்தா ஓர் பெரும் வியாபார ஸ்தலமாகி ஜனநெருக்க மதிகரித்ததாலும் அக்குடும்பத்தார் பிரிந்து தேசாந்திரிகளா யாயினமையாலும், அவர்களுடைய இல்லம் தற்காலம் சிறு கடைகளாக மாறிவிட்டன. †அவர்கள் வீட்டைச்சுற்றி வெளிச் சுவர்களும் தோட்டங்களும், பூஞ்சோலையும் அமைந்திருந்தன. அம்மாளிகைக்குள் வரவேற்கு மிடங்களும், பூஜை அறையும், ஸ்நானஞ் செய்யத் தனியிடமும், விளையாட்டிற்கான வெவ்வேறிடங்களும் மற்றவையு முண்டு. தத்தர்களுடைய வீட்டைச் சுற்றியுள்ள வளப்பமுள்ள நிலங்களும் அவர்களுக்குச் சொந்தமானவை. இவற்றோடு, நான்கு தனிக்கிராமங்களுக்கும் அவர்கள் உரியவர்கள். ஏனைய வசதிகளும் இனிதே ஆங்கமைந் திருந்தன.

தத்தரின் மாளிகை

விஸ்வநாத தத்தர் பன்னிரண்டாம் வயதையடைந்துப் பள்ளிக்குச் சென்று கொண்டிருக்கும் நாட்களில் ஒருநாள் சந்நியாசி யொருவர் உரிமையுடன் தத்தரில்லத்தில் நுழைந்தார். விசுவநாத தத்தர் விரைந்தோடி அவருடைய திருவடிச் சுவடுகளில் சாஷ்டாங்கமாக

† அவர்களுடைய வீடு இப்பொழுது ஓர் சந்தாகி 'கூரீ மோகன மூகர்ஜி தெரு' என்ற பெயர் கொண்டுளது.

விழுந்து வணங்கினர். துறவியும் மகிழ்ந்து மங்கள மொழிகூறி ஆசி புகன்றனர். அப்பெரியார் தர்க்க சரணதத்தரே யென்று அவருடைய மனைவிமட்டும் தெரிந்து கொண்டாள். அவர் 'பன்னிரண்டு ஆண்டுகள் சந்நியாசியாக வனங்களிலும், ஸ்தலங்களிலும் நிஷ்டையிலும் கழித்த ஒருவன் பின்பு மறுஜன்ம மெடுத்ததற் கொப்பானவனாதலின் அவன் தனது கிரஹத்திற்குப்போய் வரலாம்' என்ற தர்ம சாஸ்திர விதிப்படி, தம் குழந்தையைப் பார்த்துப்போக வந்தார். அவருடைய மனைவி குழந்தையைக் கருதியாவது அவரை அங்கு தங்கும்படி மன்றாடி வேண்டினள். எங்ஙனம் தங்குவது? துறந்தவர் திரும்புதல் மரபோ? அச்சந்நியாசி ஒருவரு மறியாவண்ணம் வெளிப்பட்டார்.

துறவியின் உறுதிப்பாடு

தினங்கள் செல்லச் செல்ல, விஸ்வநாத தத்தர் கல்வி கற்பதிலதிக ஊக்கங்கொண்டார்; பரீக்ஷையில் முதன்மையாகத்தேர்ந்து பட்டங்கள்பெற்று விளங்கினர்; சம்ஸ்கிருத பாஷாஞானம் பெருக, வேதாந்த விசாரத்தில் அவருக்கு மிகுந்த பிரிய மேற்பட்டது; மூதாதையரைப் போல நியாயவாதத் தொழிலை நீதமுடன் ஏற்றார்; சரித்திராராய்ச்சியில் தமது கருத்தைச் செலுத்திச் சிறந்தார்: பெரியோர் கூடி உத்தம குடும்பத்தைச்சார்ந்த **புவனேஸ்வரி** என்ற கட்டழகியை அவருக்குக் கடி மணம் புரிவித்தனர். அவருக்கு வக்கீல் தொழிலில் மிக்க வருமானம்வந்தது. 'அர்த்தம் மிக்க தத்தர்' என வளநிதி படைத்தவரானார்.

விஸ்வநாத தத்தரின் விசேஷ குணங்கள்

ஏழைகளை உபசரித்துக் கைதூக்கிவிடுந் தன்மை விஸ்வநாத தத்தரிடம் குடிகொண் டிருந்தது. பிச்சை யெடுத்துக் கள் குடிக்கும் மாக்களுக்கும் அவர் உதவி புரிந்து வந்தார். "துராசாரமான தாழ்ந்தவற்றிலுள்ள ஆசையை, அவற்றினிடஞ் சிக்கிய மனிதன் பூர்த்தி செய்துகொண்ட பின்னர், துன்பந்தாளாது விவேகியாகி நல்வழிப்படுகின்றான். கெட்டவன் மீண்டபின்பு, திரும்பவும் தாழ்மையுற எண்ணுவதே யில்லை" என்பது அவருடைய கொள்கை. வக்கீல் தொழிலில் அவர் பிரபலராகி அடிக்கடி வெளியூர் மாகாண நீதித்தலங்களுக்கும் சென்று வந்தார். தம் குமாரனுடைய புகழை யறிந்த தாயும்,

> ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்
> சான்றோ னெனக்கேட்ட தாய். —குறள்.

என்றபடி உள்ளம் பூரித்தாள். விஸ்வநாத தத்தருடைய வீட்டிற்கு

அடிக்கடி அவருடைய நண்பர்கள் வந்துகொண்டே யிருப்பர். தினந் தோறும் தேநீர்க் கச்சேரிகள் (**Tea Party**) நடந்து கொண்டே யிருக்கும். ஏழை மக்கள் கூடித் தமது வறுமையை விஸ்வநாத தத்தரின் மூலமாய்ப் போக்கிக் கொள்வர். தத்தரும் அவர்களைத் தேற்றி யனுப்புவர். பொருளீட்டுவதிலும், ஈட்டிய பொருளைப் பரோபகாரார்த்தமாகச் செலவிடுவதிலும் தத்தர் அரசனை ஒத்திருந்தார். ஏழையுடன் ஏழையாயும், அரசருடன் அரசராயும், வித்துவான்களுடன் வித்வானாயும் பழகி, வித்தையும் செல்வமும் அழகும் ஆனந்தமும் இன்பமும் புகழும் ஒருங்கே பொருந்த விஸ்வநாத தத்தர் சிம்லாவில் விளங்கினர். காலம் சிலமுடன் சென்றது. தத்தர் **குலப்பெருமை** தழைத் தோங்கிற்று.

3-ம் அத்தியாயம்

ஆனந்த தரிசனம்

'இல்லற மல்லது நல்லற மன்று' என்பது ஔவையின் அமுத வாக்கியம். துறவறம் எவ்வகையிலும் இல்லறத்தை விடச் சுலபமானதாகக் கருதமுடியாதது. யோக மார்க்கத்திற்கும் பக்தி மார்க்கத்திற்கும் எத்துணை தாரதம்மியமுளதோ அத்துணை ஏற்றத் தாழ்வுடையன இல்லறமுந் துறவறமும். தீவிர மன உறுதியும், விரக்தியு முடையவர்களுக்கே சந்நியாச ஆஸ்ரமத்தில் சரிவர ஒழுகச் சிற்சில சமயங்களில் அசாத்தியமாகி விடும்; மனைவி மக்களின் பாசம் ஆசை பொங்கியெழும். அதனால் கொண்ட நெறி குன்றும். ஆனால், பர்த்தாவிற்கேற்ற பத்தினியுண்டானால் மட்டுமே, இல்லறம் இனிமையுடைத்தாம். 'ஆவதும் பெண்ணால் அழிவதும் பெண்ணால்' என்பது பழமொழி. பிரபஞ்சத்திலுள்ள சகல ஆடவர்களையும் அடக்கியாளுந் தன்மை அந்த ஸ்திரீ நாயகத்தி னிடத்திலேயே குடிகொண் டிருக்கிறது. ஆடவர் சமூகத்தை அவர்களிடத்திற் கெஞ்சும் நிலையில் அமைத்தானிறைவன். மகான்களுக்கும், வீரர்களுக்கும் மற்றோருக்கும் அவர்களே தாயகமாக விளங்குகின்றனர். பதிபக்தியிற் சிறந்த பத்தினியையுடைய கிரஹஸ்தாஸ்ரமம் துறவறத்தைவிடப் பலவகையிலும் மேம்பட்டதென சாஸ்திரங்கள் கூறுகின்றன. 'சற்று ஏறுமாறாக இருப்பாளேயாயாகிற் கூறாமல் சந்நியாசம் கொள்ளலே மேல்' என்றார் பிறரும்.

இல்லறமே நல்லறம்

பல குடும்பங்களில் மாதரால் சதாகாலமும் சச்சரவுஞ் சண்டையு மாக இருப்பதை நாம் எத்தனையோ இடங்களிற் காண்கின்றோம்! ஒரு பெண்ணால் மகா பாரதப்போரும், ஒரு நங்கையால் இராவண யுத்தமும் நிகழ்ந்தன. உற்றுநோக்கின் உலகில் நடைபெறு மனைத் திற்கும் பெண்களே அடிப்படையாகின்றனர். ஆனால், பதிபக்தியிற் சிறந்த பத்தினிப் பெண்டிரும் இல்லாமலில்லை. சாவித்திரி போன்ற பதிவிரதா சிரோன்மணிகள் கொண்டவனைக் காத்த கதை பல நம் நாட்டிலுண்டு.

பதிவிரதா தர்மம்

கணவன் தூங்கியமுன் துயின்று, அவன் எழுமுன் விழித்த லும், எவ்வகையிலும் கொழுநனே தெய்வமெனக் கொண்டாடலும், பர்த்தாவிற்குப் பணிவிடைகள் செய்து எல்லாவித இன்பமும் நயந்து, அவனானந்திக்கத் தான்மகிழ்ந்து, அவன் சொற் கடவாதிருத்தலும், 'கணவன் இருக்குமிடமே புவனம், மற்ற இடமெல்லாம் வனம்' என்ற எண்ணமுட னியங்குவதும் பத்தினிப் பெண்டிரின் தகைமையென விதிக்கப்பட்டது. அக்காலம் மலையேறிப்போய் விட்டது. கொழுன னிடம் கொண்டிமாடுபோல நடித்தலே நவீன தர்மமாம். அவனுக் குரிய உரிமை—சுயேச்சை—யதேச்சாதிகாரம் முதலியன பெண் பாலருக்கு முரியனவாம். அதனைப் பிரசாரஞ்செய்ய அநேக சங்கங் கள்! கொட்டுமுழக்கங்கள். இம்மட்டோ! பசுமஞ்சளை முகத்திற் பூசி ஸ்நானஞ்செய்து மங்களகரமாகப் பொட்டிட்டு லக்ஷ்மீகரமாய் ஒளிர்வது நவீனத்தில் ஈனமாம். கோணல் வகிடிட்டு, பாழும்நெற்றி யுடன், மஞ்சளின்மையால் வதனம் வெளுக்க, புதுப்புது வகை அங்கிகளை இங்கிதமாயணிந்து, பர்த்தாவின் அனுமதி பெறாமலே கடற்கரைக்குக் காற்றுவாங்கப் போதலே புதிய முறையாம். அறமே பறந்தோடியபின்னர் இல்லறமாவது துறவறமாவது? இல்லறம் ஏமாப்புடைத்தாயினும் இத்தகைய பெண்டிருடன் கூடிய இல்வாழ்க்கை யைவிட, துஷ்டமிருகங்கள் வசிக்கும் காடே சிறந்ததாகு மன்றோ! ஆனால்,

> **இல்லதெ னில்லவள் மாண்பானா லுள்ளதெ**
> **னில்லவள் மாணாக் கடை.** —குறள்.

என்ற பொய்யா மொழிக்கிணங்க, மாண்புடைய மனைவியுடன் வாழும் வாழ்க்கை வாய்க்கப்பெறின் அதனைவிடச் சிறந்த பாக்கியம் மனித னுக்கு வேறு ஏதுளது?

விஸ்வநாத தத்தரின் இல்லற வாழ்வைக் குறித்துச் சிறிது கூறுவோம். ஜெகன்மாதாவென்ற பொருள்படும் **புவனேஸ்வரி** என்ற பெயருக்கேற்ப, அவ்வம்மையிடம் குணமும் மணமும் ஒருங் கமைந்திருந்தன. சக்தியினுருவாய் அவ்வம்மை தரணியிற் றோன்றி நமக்கு விவேகானந்தரென்ற சற்குருமூர்த்தியைத்தந்த மாண் பினை நாம் என்னென்று விரிப்போம்? அத்தாய் பதிபக்தியிற் சிறந்த வள்; குணக்குன்றெனவும் கருணைக் கடலென்றும் போற்றத் தகுந் தவள். விசுவநாத தத்தர் இவ்வம்மையாருட னியற்றிய இல் வாழ்வின் பயனாக இவர்களுக்கு இரண்டொரு பெண்குழந்தைகளும் பிறந்தனர். 'புத்திரபாக்கி யாம்'—ஆம்! அதைப் பெறவில்லையே என்று அன்னை—புவனேஸ்வரி வருந்தினள். புத்திரன் இல்லாவாழ்வை ஓர் பெருங் குறையாக நினைப்பது இந்துக்களின் இயல்பல்லவா? அநேகமாக ஒவ்வொருவரும் புத்திர சம்பத்தைக் கருதி, காசி இராமேஸ்வரம் சென்று புனலாடி வருவதில்லையா? இதி காச புராணங்களில் புத்திரனுக் கேங்கும் வரலாற்றை நாம் எத்தனை முறை வாசித்திருப்போம். இப்புதல்வனில்லாப் பெருங்குறை புவ னேஸ்வரியின் மனதை இடையறாது துன்புறுத்தி வந்தது. ஆனால் அவள் அதை வெளியிட்டதில்லை. காசி விஸ்வநாதக் கடவுளை அவள் அடிக்கடி விரதமிருந்து 'கருணாநிதியே! என்குறையைப் போக்க வா இறைவா! விரைந்து வாரும்' என்று வேண்டிவருவாள்; அடிக்கடி தன் முன்பே விளையாடும் பெண்குழந்தைகளைப் பார்த்துச் சிறிது மனந்தேறுவாள். புவனேஸ்வரியம்மை மனைவியா யிருப்பதைவிடத் **தாயாக** விருப்பதற்கே அதிக ஆசைகொண்டாள். அத்தாய் நிலையை என்னென்று விவரிப்போம்! ஒருவீட்டில் தாயே அதிகாலையில் விழித்தெழுந்து நல்லபாக்களைப்பாடிப் பகலை வரவேற்கிறாள்; வீட்டுக் காரியங்களை முடித்துவிட்டு அனைவரையு மெழுப்புகின்றாள். அவள் விழித்தவுடன் முதலாகச்சொல்வது ஈஸ்வர நாமத்தையே யன்றோ? தாயே யன்றோ நமக்கெல்லாம் உணவளித்துக் களித்துப் பகலெல் லாம் நம்மைப்பாராமரித்து இரவு கடைசியாக நித்திரைக்குச் செல்லு கின்றாள்? அப்பொழுதும் அவள் குடும்ப நலத்தைக்கோரிக் குலதெய் வங்களை நினைத்தன்றோ நித்திரைபோகின்றாள்? அவள் பெருமை அகிலத்தினும் பெரிதன்றோ!

புவனேஸ்வரி அம்மையின் அரிய குணங்கள்

புவனேஸ்வரிக்கு அத்தை உறவுள்ள மெத்தவுஞ் சிறந்த உத்தமி

பொருத்தி காசியில் வசித்து வந்தாள். அவளுக்குச் செலவிற்கனுப்பி வீரேஸ்வரருக்கு விமரிசையாக அபிஷேக, நைவேத்யங்களைச் செய்யுமாறு புவனேஸ்வரி ஏற்பாடு செய்தாள். அக்கிழவியும் அவ்வாறே இயற்றிப் புவனேஸ்வரிக்குப் புத்திரப்பேற்றை யருளுமாறு வீரேஸ்வரரை வேண்டி வந்தாள். சில மாதங்களுக்குப் பின் வயதான நடுக்கமுற்ற கையினால் வரையப்பெற்ற கடிதமொன்று புவனேஸ்வரிக்கு வந்தது. அக்கடிதத்தில் வீரேஸ்வரரைப் புவனேஸ்வரிக்குப் புத்திரப்பேற்றை யருளுமாறு தான் தினந்தோறும் வேண்டி வருவதாக வரையப்பெற்றிருந்தது. அந்த லிகிதத்தைப் படித்துப் படித்துப் புவனேஸ்வரி உள்ளம் பூரித்தாள்; உவகை கொண்டாள்; வீரேஸ்வரரைத் த்யானஞ்செய்தாள். தனக்கு வீரேஸ்வரரின் அனுக்கிரஹம் உறுதியாகக் கிடைத்ததென்று நம்பினாள் அன்னை! நம்பிக்கையே நன்மைக்கிடமாயிற்று. விஸ்வநாத தத்தர் நியாயவாதத் தொழிலில் பொருள் குவிக்க, அன்னைக்கென்ன குறை; தான தருமங்களைச் செய்தாளன்னை; செல்வத்திலும், சீலத்திலும், ஒழுக்கத்திலும், குணத்திலும், சிந்தையிலும் இராணியாக விளங்கினாள்; தினந்தோறும் இராமாயணத்தையும், பாகவதத்தையும் பாராயணஞ்செய்து ஸ்ரீ ராமகிருஷ்ண—விபவாவதாரங்களைப் புகழ்ந்து ஆனந்திப்பாள்; தாயென்ற வகையில் தன்னிரு குமாரத்திகளுக்கும் புராணக்கதைகளைக் கூறி, அவர்களை இளம்பிராயத்திலிருந்து நல்வழிப் படுத்துவாள். அன்னையின் நற்போதனையே ஆனந்தரின் பெரும் புகழுக்கும்—குடும்பப் பெருமைக்கும்—இந்தியரடைந்த பெரும் பாக்கியத்திற்கும் ஆஸ்பதமாயிருந்தது.

புவனேஸ்வரி தவங்கிடத்தல்

பாரத பூமியில் ஸ்திரீரத்னங்களே அறிவினிருப்பிடமாக இலங்குகின்றனர். அறிவாளிகளை உலகிற்களிக்கும் சக்தி வாய்ந்தவர்கள் அவர்களே. இல்லறத்திலேயே அவர்கள் பக்தி செய்யப்போதிய வசதிகளுண்டு. அவர்களுடைய ஒழுக்கத்தையும், சித்தத்தையும் சார்ந்தே அவர்களிடம் ஜனிக்கும் குழந்தைகளு மிருப்பர். ஸ்திரீகளே தாயாகவும், மனைவியாகவும் இல்லறத்தை நல்லறமாக்குகின்றனர். அத்தகைய உத்தமப் பெண்பாலரில் நமது புவனேஸ்வரித் தாயும் ஒருத்தி. காசியிலிருந்து வந்த கடிதத்திலிருந்து அவள், தான் புத்திரபாக்யத்தை யடைந்துவிட்டதாகவே நினைத்தாள்; ஆலயங்கள் நிறைந்த காசியம்பதி அவளுள்ளத்திலேயே அமையலாயிற்று. சிவனை அவள் எந்நேரமும் சிந்தியாநின்று அரிய விரதங்களியற்றினாள்;

வீரேஸ்வரர் பக்த பராதீனன் என்ற பெயர் பொருந்த அம்மையின் மனதில் ஆலயங்கொண் டெழுந்தருளி யிருந்தார். அவளுடைய அன்பே சந்தானத்தை அருளுந் தன்மைய தாயிற்று. புவனேஸ்வரி தன் வீட்டுக்காரியங்களைக் கவனிக்கும்போதும், உண்ணும்போதும் மற்ற எல்லா ஓய்வு நேரங்களிலும் இடைவிடாது இறைவனைத் தியானித்து வந்தாள்; ஆடம்பரத்தை வெறுத்து அடக்கங்கொண்டாள். அவளுடைய பக்தி பெருகிற்று. தத்தருடைய மாளிகையில் பக்தி மணங் கமழ வாரம்பித்தது. இதன் காரணத்தை யறியாது பலரும் அதிசயித்தனர். அனைத்தும் அவனுடைய திருவிளையாடலன்றோ! அதன் பெருமையைப் புகல யாரால் முடியும்? இவ்வாறு சில மாதங்கள் சென்றன. காசி விஸ்வேஸ்வரர் சந்நிதானத்தில் பக்தர்கள் கங்கைநீரால் அபிஷேகஞ்செய்து மலரிட்டு வணங்கி 'சிவ! சிவ! ஹர! ஹர! மகாதேவா' என்றோதும் சப்தம் அம்மையின் மனக் காதுகளில் ஒலித்தது.

ஆஹா! அந்த "ஹர! ஹர! மகாதேவா" என்ற பேரொலி எத்துணை ஆனந்தத்தைத் தருவது! அவனன்றோ உலகிற் பிரபு! மனிதனுடைய அகங்கார மமகாரங்களைச் சங்கரித்து, ஆன்மாவிற்குப் பரிசுத்தத்தையருளி, ஸ்தூல சரீரத்தைச் சங்கரித்து, சூக்ஷ்மமான ஆன்மாவிற்கு அமைதியை யளித்துச் சங்காரத் தொழில் புரியும் அவனுடைய உயர்வென்ன! பொய்யான உடலையும் அதனைச் சார்ந்துள்ள வாழ்க்கையையும் சங்கரிக்கும் சங்கரனுடைய தகைமையென்ன! பக்தர்களிடத்தில் அவன் கொள்ளுங் கருணை யென்ன! அழிவற்ற ஆன்மாவிற்கு அவனா லேற்படும் அமைதியென்ன! அறிவுக்கடலும் அன்பினுருவும், அறத்தின் சொரூபமும் அவனேயன்றோ! அவனே உலகி லழிவற்றவன்; அழிக்குந் தன்மையினன்! 'இயன்றவெல்லாம் பயின் றகத்தடக்கிய' அவனது கடந்த நிலையை நாம் என்னென்று புகழ்வோம்!

சிவத்தியானம்

அவனுடைய அடியாரின் பெருமையே பெருமை! அவர்களிடத்தில் கருணாநிதியாகிய சிவபெருமான் காட்டும் தயையை விளக்கச் சிறுகதை யொன்று உண்டு. 'ஒரு வேடன் புலிக்குப் பயந்து புலித் தோலாடைபோர்த்த பொன்னார் மேனியனுக் குகந்த வில்வமரமொன்றின் மேலேறிக்கொண்டான். புலியோ மரத்தடியைவிட்டு அகலவில்லை. மரத்தின் மேலிருந்த அவ்வேடனுக்கு மனைவி மக்களின் ஞாபகம்

வந்தது. அவர்கள் உணவின்றி வருந்துவரே யென்ற மன வருத்தத்தால் அவ்வேடுவன் கண்ணீர்பெருக்க, அது ஓர் வில்வ தளத்தில் விழுந்து வில்வ இதழும் நீருமாக அம்மரத்தடியில் வீற்றிருக்கும் சிவலிங்க மூர்த்தியின்மீது பட, சிவபெருமான் மனமுவந்து, அவ்விருட்சத்தில் வசித்து வந்த ஓர் பாம்பால் அவ்வேடனைத் தீண்டுவித்து, அவனுடைய பொய்யுடலினின்றும் புகழுடம்பை வேறு படுத்திச் சிவபதமடையப் பேரருள் புரிந்தார்' என அச்சரிதம் கூறுகின்றது. நற்றுணையாகும் நமசிவாய வடியை நாளும் போற்றுவார் பெருமைக்கு இணை வேறு இல்லை யன்றோ!

அடியார் பெருமை

புவனேஸ்வரியின் சித்தம் சிவனிடத்தி லாழ்ந்தது. அவள் விரதம்பூண்ட நாள்முதல் சிவபெருமான் அவளுடைய மனக்கோயிலில் நிலைகொண்டிருந்தார். நினைவில் வந்த இறைவன் ஒருநாள் கனவில் அம்மைக்குத் தோன்றினார். அவரது மேனி—இமாசலத்தின் மேற்பரப்பில் பனிபடிந்ததுபோன்றும், கபடமற்றயோகியர் உள்ளத்தைப் போன்றும் வெண்மையாய் இருந்தது. கொன்றை நறும் சடையையவர் கொண்டிருந்தார். ஞான திருஷ்டியை யொத்த நாகம் அவரது விரிசடையை விளக்கி நின்றது. பிறைச் சந்திரன் தந்திரமாக அடியார்களை யாட்கொள்ளும் அப்பெருமானுடைய மகிமையைப் புலனுக்குவது போன்று அவரது புரிசடையி லமர்ந்திருந்தான். யோக நிலையில் அவர் புலித்தோலை அணிந்திருந்தார். உண்மையுமாய் இன்மையுமாய் சத்தியாய், சிவமாய் அனைத்திலும் கலந்திருக்கும் தன்மையை அவர் வதனம் மெய்ப்பித்திருந்தது. அவ்வடிவைக் கண்டு ஆனந்தக் கடலிலாழ்ந்தாள் புவனேஸ்வரி; அவ்வானந்தக் காட்சிக்கு அடிமை பூண்டாள். மெய்ம்மறந்து 'சம்போ! துறவிகளுக் கெல்லாம் துறவியானவனே! அடியார்களுக்கு அவரவர் விரும்பியவா றெல்லாம் தோன்றியருள் சுரக்கும் அண்ணலே!' என்று வாயாரத் துதித்தாள். சொப்பனவஸ்தை மாறிற்று; நினைவடைந்தாள். கண்ட காட்சியை உன்னி உன்னி உளம் மகிழ்ந்தாள் அன்னை!

அன்னையின் ஆத்மானந்தம்

சில மாதங்கள் சென்றன. புவனேஸ்வரித்தாய் வயிறு வாய்ந்து ஓர் ஆண்மகவை யீன்றாள். வீரேஸ்வரரின் அனுக்கிரகத்தால் புத்திரப்பேற்றை யடைந்த அவளுள்ளம் மெத்த மகிழ்ந்தது. விஸ்வநாத தத்தரும் மற்றும் அக்குடும்பத்தைச் சார்ந்தோ ரனைவரும் களிப்

பெய்தி குழந்தையின் சுப ஜனனத்தைக் கொண்டாடி மகிழ்ந்தனர். 'பிரபஞ்சத்தில் அஞ்ஞானத்தைப் போக்கவந்த புனிதன் இவனே!" என்று பலரும் புகழ்ந்தனர், அச்சேயின் முகவதனம் செக்கர்வான ஒளியின் செருக்கை யடக்குவதா யிருந்தது. சுபம் விசாரிக்கப் பலரும் திரள் திரளாக வந்தனர். அவர்களுக் கெல்லாம் கற்கண்டு தாம்பூலம் வழங்கப்பெற்றன. ஏழைகளுக்கு அன்ன மளித்தனர். மரியம்மைக்கு இயேசு கிறிஸ்து பிறந்ததுபோலப் புவனேஸ்வரிக்கு

விவேகானந்தர் ஜனனம்

ஆனந்தர் அவதரித்தார். அவருடைய ஜனனம் உலகிற்கே ஆனந்தத்தை யளிக்க வல்ல ஆனந்த தரிசனமாக 1863ஸு ஜனவரிமீ 12உக்குச் சரி யான தமிழ் ருத்ரோத்காரிஸு மார்கழிமீ 30உ செவ்வாய்க் கிழமை சுக்ல த்ருதியை 2-34 சதுர்த்தி 54-28 அவிட்டம் 8-2 திவி 41-50 கர 2-24 திவா 26-2. முன்னாள் திருவோணம் 12-9 பின்னாள் சதயம் 2-27. இந்த சுப பஞ்சாங்க நிலையில் மீன குரு லக்னத்தில் சிம்ம சூர்ய நவாம்சத்தில் சூரியன் உதயாதி 10-9-க்கு மேல் சாத்வீக வேளையில் சந்திர ஹோரையில் புருஷகாலத்தில், பிருதிவி அம்சத்தில், தத்தர் குலம் விளங்க, ஞாலத்தில் ஞானம் பெருக, அற்புவியில் அறந் தழைக்க ஆனந்தர் ஜனித்தார்.*

---

*ஜாதக கால கிரகநிலை:—உத்திராடம் 1-ல் சூர்யன். சதயம் 1-ல் சந்திரன். கேட்டை 2-ல் செவ்வாய். திருவோணம் 1-ல் வக்ரீ புதன். விசாகம் 4-ல் குரு. அனுஷம் 4—ல் சுக்கிரன். ஹஸ்தம் 2-ல் சனி. அனுஷம் 2-ல் இராகு. கிருத்திகை-4-1-ல் கேது. மேஷ குளிகன்.

ல	மா	கே	
சந்	ராசி		
புத			
சூ	குரு-செ சுக்-ராகு		சனி

கே	பு	சனி	
	நவாம்சம்		குரு
செ			ல
சந் சூ	சு		ரா

ஜன்ம நட்சத்திரம் சதயம் ஆத்யந்த பரநாழிகை 54-25 முதல் பாதத்தில் செல்லுபோக பாக்கி 11-12¼ சுமாராக ராகுதிசையில் கெர்ப்பத்தில் சென்ற 10மீ 17-நாள் 25-நாழிகை போகச் செல்லவேண்டியது வருஷம் 17 மீ-1 நாள் 12. நாழிகை-35. அதாவது ராகு மகாதிசையில் இருப்பு 17 வருஷம் 1 மீ 12-நாள் 35—நாழிகை.

அன்று வங்காளத்தில் சங்கராந்திதின மாதலால் வழக்கம்போல யாவரும் கங்கைக்குச்சென்று, மலரிட்டு வணங்கினர். சோதிடர்கள் வந்து ஆசிகூறி ஜாதகம் கணிக்கச் சனனகாலத்தைக் குறித்துக் கொண்டு சென்றனர். பொதுவாகப் பாரத நாட்டில் சந்திரனுடைய கலைகளைக் கொண்டே பஞ்சாங்கம் கணிக்கப்படுமாதலாலும், அதனால் வருடங்களில் மாறுபாடு காண்டல் இயல்பாதலாலும், திதி, வார, நட்சத்திர, யோக, கரணமாகிய ஐவகை அங்கங்களால் பஞ்சாங்கம் கணிக்கப்படுமாகையாலும், இவற்றில் வல்ல சோதிடர்கள் குழந்தையின் ஜனனகாலத்தைப் புகழ்ந்து பெரிதும் கொண்டாடினர்.

இயேசுநாதர் போதித்த அஹிம்சா தர்மத்தின் சிறந்தகொள்கைகள் மேல்நாட்டில் மங்கவும் ஆன்ம பலம் தாழவும், மிருகபலம் ஓங்கி நிற்கின்ற நிலைமை மாற்றி, ஹிந்து மதத்தின் உண்மையையும், தர்மத்தையும் அமெரிக்கா நாட்டுச் சொக்கபுரத்தில் (Chicago) சர்வ சமய சபை (Parliament of Religions) கூடிய பொழுது நிலை நாட்டிய விவேகானந்த சுவாமிகள் புவனேஸ்வரி யம்மையின் மடியில் சயனித்து, அவள் கையி லெடுத்து மார்போடணைத்துப் பால் கொடுக்க ஒன்றையுமறியாப் பாலனாயிருந்தார். இவர் புவனேஸ்வரி யம்மையிடம் தாய்ப்பாலுண்ட தன்மையை யிங்கு கண்டோம். இனி, ஸ்ரீ இராம கிருஷ்ண பரம ஹம்சரிடத்தில் ஞானப்பாலுண்ட வண்ணம் பிறகு காண்போம்.

தாயின் மகிழ்ச்சி

‘குழந்தையும் தெய்வமும் கொண்டாடு மிடத்திலே’. புவனேஸ்வரித்தாய் மடியில் குழந்தையை வைத்துத் தாலாட்டி, “வீரேஸ்வரா! தாரணியும் அதனைச்சார்ந்த சுகதுக்கங்களும் உன்னாலன்றோ ஊட்டப்பட்டவை! உனது அருளில்லையேல் ‘நீவே கதியநி நிரத நம்மினவாரு’ என்ற **ஸ்ரீ தியாகராஜ சுவாமிகளின்** வாக்கிற் கிணங்க ‘உன்னையே கதியென்று நம்பி யிருக்கும் எம்மனோர் உய்வதெங்ஙனம்! என் வயிற்றிற் பாலை வார்த்த உனக்குப் பல்லாண்டு! பல்லாயிரத்தாண்டு” என்று கூறி தோத்தரித்தாள். கல்கத்தா நகரத்தில் விஸ்வநாத தத்தர் ஓர் பிரபல நியாயவாதி யாதலாலும், பொது ஜன ஊழியத்திற் சிறந்து விளங்கியவ ராதலாலும், குழந்தையைக் காணவேண்டுமென்ற அவாவுடன் அவருடைய நண்பர்களும், வழக்காளர்களுமாகப் பலர், ஆலயத்திற்கும் சேயிருக்கும் செல்வ வீட்டிற்கும் வெறுங் கையாகப்போகும் வீணராகாது, மிட்டாய் பழவகைகளுடன்

அடிக்கொரு முறை வந்துகொண் டிருந்தனர். சிசுவைப் பார்த்த சிலர் 'இவனுக்குத் தர்க்க சரண தத்தரின் முகச்சாடை இருக்கின் றது. இவன் ஒரு பெரிய யோகியாகி, அவனியில் ஆஸ்திக தர்மத் தைப் பெருக்கிப் பெருமையுடன் விளங்குவன்' என விளம்புவராயி னர். இவ்வாறு ஓராண்டு செல்லக் குழந்தைக்குப் பெயரிடும் நன் னாள் வந்தது. இந்துக்களுள் பிறந்த குழந்தைக்குப் பாட்டன் பெயரிடுதல் ஓர் பிராசீன சம்பிர தாயம். அக்குழந்தையின் பாட்டனே இக்குழந் தையாக அக் குடும்பத்தில் பிறந்திருப்பதாகக் கொள்வதும் இந்துக் களின் மற்றொரு வழக்கம். தந்தை, தன் தந்தையின் பெயரைப் புதல்வனுக் கிடுவதால், அடிக்கடி அப்புதல்வனைத் தன் தகப்பன் பெயரா லழைப்பதால், பெரியோர்களின் ஞாபகம் அக் குடும்பத்தி லிருந்துகொண்டே யிருக்கு மென்பதே இதன் கருத்து. தந்தை செய்த நன்றியைப் பாராட்ட அவரை எண்ணி, அவர் பெயரை நாள் தோறும் பலமுறை ஸ்மரித்து வருவது இங்கு புதல்வர் கடமையு மாகின்றது.

குழந்தை பிறந்த குதூகலம்

ஆகவே, பெயரிடும் நாளில் குழந்தைக்குத் **தர்க்க சரண தாஸன்** என்ற நாமதேயத்தைச் சூட்டவேண்டு மென்று உறவினரிற் சிலர் கூறினர். ஆனால் பெற்றவளை விட மற்றவர்களுக் கென்ன அவ் வளவு சுதந்திரம்! குழந்தையின் அன்பிற்கே இருப்பிடமான தாயி னுடைய அபிப்பிராயத்தை அறிந்தன்றோ எதொன்றையும் செய்ய வேண்டும். கட்டிலினும், தொட்டிலினும், கால்மேலும், தோள் மேலும் காதலித்து வளர்க்கின்ற அன்னையான முன்னறி தெய்வத் தின் விருப்பமெதுவோ அதற்கு மாறாக நடத்தல் தர்மமு மாகா தன்றோ! ஆதலால், சுற்றத்தார் தனதெண்ணத் தை வெளியிடுமாறு புவனேஸ்வரியை வேண்டி னர். அவள் குழந்தையின் இரு கண்களையும் சற்று உற்று நோக்கி 'என் கண்ணே!' என வாரியெடுத்து ஒரு முறை முத்தமிட்டு "என் செல்வத்திற்கு வீரேஸ்வரரின் பெயரையே சூட்ட வேண்டு" மெனத் தெரிவித்தனள். ஆனந்தக் கண்ணீர் அன்னையின் கண்களி னின்றும் பெருகிற்று. அங்கு குழுமியிருந்த அனைவரும் 'ஆம்' எனத் தேர்ந்து குழந்தைக்கு **வீரேஸ்வரன்** என்று பெயரிட்டனர். இது பிறந்த இராசி நக்ஷத்திரங்களுக்குப் பொருத் தமா யிருந்ததுகண்டு பின்னும் பேரானந்த மடைந்தனர். இது

நாமகரணம் செய்தல்

வன்றி குழந்தைகளுக்கு யாவரும் அழைக்கத்தக்க பொதுப் பெய ரொன்றிடுவது அவர்கள் குடும்ப வழக்கம் அதற்காக ஒரு சுதினமு முண்டு. அன்று இக்குழந்தைக்கு **நரேந்திரநாதன்** என்று செல்வப் பெயர் சூட்டினர். நரர்களுக் கெல்லாம் இந்திரனென்பதே அப்பெய ரின் பொருள். பின்னர் நரேந்திரனென்ற பெயரைச் சுருக்கி **நரன்** என்றே அனைவரும் அழைத்து வந்தனர்.

கைலயங்கிரியி லமர்ந்திருக்கு மண்ணலே! உமது மகிமையை எங்ஙனம் விரிப்போம்! சகல ஐஸ்வரியங்களுக்கும், இன்பத்திற்கும் அதிபனான நீ, சாம்பரைப் பூசிக்கொண்டு துறவு பூண்டு யோகத்தி லமர்ந்து சிரகிரி விளங்க வரு தெட்சணா மூர்த்தியே! சின்மயானந்த குருவாகி—பல்லுயிரும் பல வுலகும் படைத்தளித்துத் துடைக்கும் உனது பெருமையை சாமகானஞ் செய்த இராவணனே புகன்று இளைத்துப் போயின னென்னில் எம்மனோர் புகழ எம்மாத்திரம்? மறை நான்கும் நீ! மதியும் நீ! அனைத்தும் நீயே யன்றோ! உன்னு டைய பரதேசிக் கோலத்தைக் கண்டு யோகிகள் அகக் கண் பார்வை பெற்று நிலையற்றவற்றை வெறுக்கின்றனர்; நீயே யாகி விடுகின்ற னர்; உன்னுடன் இரண்டற மன்னிக் கலக்கின்றனர். உன்னுடைய தண்ணளியா லன்றோ நவீனத்தின் குறும்பை யடக்க ஆனந்தனை எமக்கருளி **ஆனந்ததரிசனம்** எமக்குப் பிராப்தியாகச் செய்தனை! உனது திருத் தாள்களுக்குப் பல்லாண்டு.

4-ம் அத்தியாயம்.

இளமையின் இன்பம்

அன்னையே உலகில் நாம் நிதரிசனமாகக் காணக்கூடிய முதற் றெய்வம்! அவளுடைய கருணையிலேயே நாம் பிறந்தது முதல் வளருகின்றோம். 'குழந்தை! குழந்தை!' யெனக் கொண் டாடி, நம்மை விட்டு அரை நிமிடம் அகலாது நயந்தவற்றை யெல்லாம் கொடுத்து வளர்க்கும் அவளன்பிற் கொப்பிடக் கூடியது அவனியிற் பிறிதொன்றுமில்லை. உடலை ஒருவழியிலும் உயிரை ஒருவழியிலும் அன்னை வளர்க்கின்றாள். இத் தாயின் பெருமையை, பொருளெல்லாம் சேரக் கூட்டி ஒளவைப் பிராட்டியார் 'தாயிற் சிறந்ததொரு கோயிலு

தாயன்பு

மில்லை' என்று சுருங்க உரைத்தாள். 'தாயிலன்புடையாய்' என்று போற்றினர் கம்பரும்.

நமது குழந்தைப் பிராயத்தில் நாம் அழும்போது நல்ல புண்ணிய கதைகளைக் கூறி நம்மை மகிழ்வித்து நமது புன்சிரிப்பிலேயே தான் மகிழ்ந்து; நம்மை வள்ர்த்து வருகின்ற அத்தாயின் அன்பே இத் தாரணியிற் பெரிதன்றோ! இதனாலேயே பாரத நாட்டில் சிறந்த வற்றையெல்லாம் 'தாய்' என்றழைப்பது ஓர் உயர்ந்த வழக்கம்!

ஸ்ரீ விவேகானந்த சுவாமிகளுக்கு நரேந்திரனென்ற பெயர் தந்தழைக்கப்பட்டதென நாம் முன் அத்தியாயத்திற் கூறினோம். விவேகானந்தர் என்ற பெயரை அவரடைந்த பக்குவகாலம் வரையில் நாமும் அவரை நரேந்திரர் என்றே கூறிச்செல்வோம். நரேந்திரருடைய இரண்டாம் ஆண்டு எல்லாம் வல்ல இறைவனருளால் பூர்த்தியாகி மூன்றும் பிராயம் தொடங்கிற்று. புவனேஸ்வரி தவப்பயனைப் பிறந்த தன் தனயனை வளர்ப்பதிலேயே கண்ணுங் கருத்துமாயிருந்தாள். நரேந்திரர் அதிக துஷ்டராயிருந்தார். குறும்புள்ள இடத்தில் தானே குணமும் மிகுந்திருக்கின்றது! "இளங்கன்று பயமறியாது" என்பதுபோல 'பயமென்பது எப்படி யிருக்கும்?' என்று அவர் தன் தாயைக் கேட்பார். வீட்டிலுள்ள நீர்விழுங் குழாயடியிலேயே அவரதிகம் விளையாடுவார். இளமை முதல் ஸ்நானத்தில் நரேந்திரருக்கு அதிகப் பிரியமுண்டு. தற்காலத்துத் தாய்மார்கள் குழந்தைக்குப் பயத்தைச் சிறு பிராயத்திலிருந்தே வளர்க்கின்றனர். ஒரு நாளில் பல தடவை 'பூச்சாண்டி! பூனை! காட்டேரி!' என்று அவர்கள் கூறிக் குழந்தைகளுக்குப் பீதியை யுண்டுபண்ணுவதை நாம் எவ்வளவோ இடங்களிற் கண்கூடாகக் காண்கின்றோம். புவனேஸ்வரி அவ்வாறில்லாது துணிவை நரேந்திரருக்கு வளர்த்து வந்தாள். பின்னுமிரண்டொரு ஆண்டுகள் செல்ல அவர் மேடான இடங்களிலிருந்து அஞ்சாது குதிப்பதும், மேடுபள்ள மறியாது ஓடுவதுமாகக் குறும்புத்தனஞ் செய்துவருங் காலையிலும், அன்னை 'நீ இவ்வாறு செய்தால் சிவபெருமான் உன்னைத் தண்டிப்பார். இனிக் கதை சொல்லமாட்டேன்' என்று நரேந்திரருக்கு அச்சமேற்படக் கூறுவாள். சிற்சில சமயங்களில் கோபிப்பாள்; அடிப்பாள்; அடிக்க அழும் குழந்தையை 'அப்பா வா' வென்று அணைப்பாள். உலகில் அடிக்கவும் தாய் அணைக்கவும் தாயல்லவா? அவருடைய பால்ய விளையாட்டுகள் சிறி

அன்னையின் அரிய செயல்கள்

தளவும் குறையவில்லை. விளையாட்டு முடிந்தவுடன் நரேந்திரர் தாயிடம் வந்து தனது பிரதாபங்களைச் சொல்லிக் கொள்வார்.

சிறு பிராயம் தொடங்கி நரேந்திரருக்குக் காஷாயந் தரித்த சந்நியாசிகளிடம் அதிக பக்தியும் பிரீதியு முண்டு. அவர்கள் எதை நாரிடமிருந்து பெற விரும்பினும் அக்கணமே பெற்றுப் போவார். ஒரு நாள் ஒரு சாது தத்தருடைய மாளிகை வாயிலில் வந்து 'ஹரி நாராயணு! தர்ம பிக்ஷை!' எனக் கூறி நின்றார். அத்தருணம் நரர் விரைந்தோடிவந்து சாதுவை உபசரிக்க, இவருடைய சுந்தர காந்தி வீசும் முகத் தெளிவைக் கண்ட அச்சாது, 'இது ஓர் தெய்வீகப் பிறவி' என்று நிச்சயித்து 'குழந்தாய்! ஒரு வஸ்திரம் கொடு' என்று கேட்க, நரர் அக்கணமே விரைந்து தாம் உடுத்தி யிருந்த உயர்ந்த பட்டாடையை அளிக்க, அந்தச் சந்நியாசியும் ஆச்சரியத்துடன் அதைப் பெற்றுக்கொண்டு சென்றார். பிரதி தினமும் சாதுக்கள் பலர் தத்தர் வீட்டில் தங்கிச் செல்வதுண்டு. சாதுக்களை வரவேற்பதில் விஸ்வநாத தத்தர் சிறிதளவும் பின்வாங்குவதில்லை. அதற்கேற்றவாறு இறைவனும் மட்டில்லாச் செல்வத்தைத் தட்டில்லாமல் அவருக் கருளி யிருந்தார். சாதுக்களைக் கண்ணுறும் போதெல்லாம் விஸ்வநாத தத்தருக்குத் தன் தந்தையின் ஞாபகம் வரும். இதனாலேயே அவர் சாது சந்தர்ப்பணையில் அதிக உற்சாகங் கொண்டாரெனினும் ஒக்கும்.

சாது சந்தர்ப்பணை

நரேந்திரர் தமது இரண்டு சகோதரிகளுடனும் 'என்னைப் பிடி! உன்னைப் பிடி' என்று ஓடி விளையாடுவார். குழந்தைகள் ஒன்றையொன்று துரத்தி யோடி ஆட்டமாடுவது இளமை யின்பமன்றோ! விளையாட்டு! விநோதம்! வேடிக்கை! முதலானவை குழந்தைப் பருவத்தின் தோற்றங்க ளல்லவா?

நாருக்கு அப்பருவம் முதல் பொதுவில் சகல உயிர்ப்பிராணிகளிடத்தும் கருணை—அன்பு, வளர் பிறைச் சந்திரனைப்போல வளர்ந்து வந்தது. வீட்டுப் பசுவை அவர் அதிகம் ஊட்டி வளர்ப்பார். ஆனந்தர் சரிதையை வரைந்து செல்லுங்கால், ஆங்காங்கே நமது புண்ய பூமியின் பல உயர்ந்த கொள்கைகளைச் சந்தர்ப்பத்திற் கேற்றவாறு எடுத்தெழுதாது செல்ல வியலவில்லை. சகலருக்கும் ஒவ்வொருநாளும் இன்றியமையாத பாலைக் கொடுத்துவரும் பசுவை ஹிந்துக்கள்

கோ சம்ரக்ஷணம்

'காமதேனு' வென்று தெய்வத்துள் வைத்துப் பூசிக்கின்றனர். சுமங் கலிப்பெண்கள் அதி காலையி லெழுந்து வீட்டுப் பசுவை ஒரு முறை வலம் வந்து வணங்கிப் பின்னரே தம் வீட்டு வேலைகளைத் தொடங்கு கின்றனர். ஹிந்துக்கள் பசுவைத் தெய்வமென்றும் **கோ** வென்றும் வணங்குவதன் கூடார்த்தம் அதனிடமிருந்து அவர்கள் பெறும் உத விக்கு நன்றி செலுத்துவதேயாகும். காலையில் நமக்குப் பாலைக் கொடுக்கும் பசுவை, அதன் கருணையில் உய்வோர் சிறிதும் இரக்க மின்றிக் கொலைபுரிதல் சாதாரண—பாமர மனித அறிவிற்கே மிக்க பாபகரமாகத் தோன்றும்போது, அதைக் கன்னெஞ்சினராகிக் கொன் றுழலுவோரின் செயலை நாம் என்னென்று கூறுவோம்.

'பொங்கலோ பொங்கல்' என்று மங்கலம் பொங்கக் கொண்டா டப்படும் கோ பூசையன்று, நரேந்திரர் பசுவைத் தமது சகோதரிக ளுடன் கூடி நீராட்டி அலங்கரித்துப் பொங்கலளித்துப் போற்று வார். பசு, முயல், மணிமாடப்புறா, ஆடு, மயில் முதலிய பிராணிகளை நரர் தம் கைப்பட உணவூட்டி வளர்ப்பார். சிறு பிராயத்தில் சிறு வீட்டிலிருந்து ஆரம்பித்த இப்பழக்கமே, பின்னர் அவர் விவேகா னந்தர் என்று தீர்க்கதரிசியாய் வெளிக்கிளம்பிய காலத்தில் பிரபஞ் சத்தில் பேரன்பை யவருக்களிக்கக் காரணமாய் நின்றது. குதிரை அல்லது மாடு பூட்டிய வண்டிகளிலேறிச் செல்வதில் நரேந்திரருக்கு அதிக விருப்பமுண்டு. அவ்வண்டி யோட்டிகளோடு சம்பாஷிப்பதி லும் அவர்களுடன் 'சவாரி' செய்வதிலும் அவருக்கு அதிகப் பிரிய முண்டு. ஒருநாள் விஸ்வநாத தத்தர் தமது மனைவியுடன்—அவர் மடித்தலத்தில் நரேந்திரர் அணிகலன் பூண்டமர்ந் திருந்தபோது, தமது சொந்த பரிபூட்டிய இரதத் திலேறி உல்லாசமாக நகரைச் சுற்றிவாப் புறப் பட்டனர். வண்டியிற் செல்லும்போதே நரர் தெருக்களிற் றென்படு வனவற்றை யெல்லாம் சுருசுருப்புடன் பார்த்துக்கொண்டும், பரபரப் புடன் தந்தையைப் பல கேள்விகளைக் கேட்டுக்கொண்டும் வருங்கால், விஸ்வநாத தத்தர் 'நரா! நீ பெரியவனானபிறகு என்ன செய்ய உனக்காசை' என்று வினவ, அதற்கு நரர் "நான் வண்டி யோட்டி யாயிருக்க விரும்புகின்றேன்" என்றாராம். அவருடைய வாக்கு பிற்காலத்தில் உண்மையே யாயிற்று. ஜடமாகிய இச்சட்கா வண்டியை ஆன்மார்த்த வழியில் ஓட்டி, இவ்வாழ்வு 'மிருச்சகடி' என்ற நிலை யற்ற மண் வண்டி போன்றதென்னும் பரமாஹஸ்யத்தை உணர்த்

வண்டியோட்டி ஆவேன்

கிறார். திருவல்லிக்கேணியில் திருக்கோயில் கொண் டெழுந்தருளி யிருக்கும் ஸ்ரீ பார்த்தசாரதியாகிய கண்ணபிரானே பார்த்தனுக்கு வண்டிக்காரனாக வந் தமைந்தா ரல்லவா? இதன் உட்பொருளை ஊன்றிக் கூறுகின்றது பாரதம்.

உலகில் எப்பொழுதும் குழந்தைகளும் தெய்வமும் கொண் டாடத்தக்கன. ஏழையின் குடியானாலும், தனவந்தரின் வாழ்க்கை யானாலும், அழகுற்றதாயினும், அழகற்றதாயினும் 'காக்கைக்குத் தன்குஞ்சு பொன்குஞ்சா' வதுபோல, குழந்தையை அனைவரும் கொண்டாடுகின்றனர். தாம் பட்டினி கிடந்தாவது குழந்தையைப் பெற்றோர் காப்பாற்றுகின்றனர். கன்னெஞ்சினரும் ஓர் குழந்தையைப் பெற்றபின் கனிந்த மனமுடையா ராகின்றனர்.

குழந்தைகள் எப்பொழுதும் பெற்றோர்களால் நல்லமார்க்கத்தில் பழக்கப்படவேண்டும். சேய் அசம்பாவிதமான வார்த்தைகளைக் கூறக்கேட்டு ஆனந்திக்கும் அறிவிலிகள் பலருளர். அவர்கள், அற்பசந் தோஷிகளாகி குழந்தைப் பருவம் நீங்க—அந்த அன்பும் இன்பமும் மறைய—குழந்தை கோட்டானாகித் தீச்செயல்களைப் புரியும் அந்த நாளில் துயருழந்து 'இப்பிள்ளையில்லாமல் என்ன குறை யேற்பட்டிருந் தது' என்று நொந்துகொள்வர். இது தொட்டிற்பழக்கம் சுடுகாடு மட்டுந் தொடர்ந்தேகு மென்பதை அவர்கள் உணராததன் குற்றமே யாகும். ஆனந்தருடைய பெற்றோர் அத்தகை யினரல்லர். உலகாசாரியராக நரர் விளங்க அவரது அன்னையே ஆணிவேரா யிருந்தாள். புவனேஸ்வரி யிடத்தில் நரேந்திரர் திண்ணைப் பள்ளிக்கூடத்தில் உபாத்தியாயர் கற் பித்த பாடங்களை ஒப்பிப்பதுண்டு. பாடங்கேட்ட பின்னர் அன்னை நரேந்திரருக்கு இராமாயண, மகாபாரதக் கதைகளை விஸ்தாரமாகக் கூறுவாள்; ஐவரின் அரும்பெருங் குணங்களையும், நூற்றுவரின் கூற்றுவச் செயல்களையும், இராவணனின் ஆணவத்தையும், இராமனின் பாணத்தையும், மற்றை நீதிகளையும் கூறி முடிவாகத் தர்மம் தலைநிற்றலையும் விளங்க வைப்பாள். புவனேஸ்வரித் தாயிடத்தில் இக்கல்விகற்ற நரர் பின்பு ஸ்ரீ காளிமாதேவியி னின்னருளால் ஞானக் கல்விபெற்று புவனநாயகமாக விளங்கினார். ஆதலின், உத்தமத் தாயே உலகிற்குத் தனித்தெய்வமென்பது இதனின்றும் போதரும்.

அன்னையே முன்னறி தெய்வம்

இவ்வாறு நரேந்திரர் இளமை முதல் சன்மார்க்கத்திலேயே ஈடு பட்டுவந்தார். அனுதினமும் அவர் ஹரிபஜனை செய்வார். ஹிந்துக்

களுக்கு அவர்களுடைய தர்மத்திற்கு பூஜை, புனஸ்கார, எக்ய, ஹோமாதிகளே பிரதானமானவை. அவர்களுடைய வீடே அவர்களுக்குக் கோயில்! விசேட தினங்களில் அவர்கள் ஆலயங்கட்குச் சென்று வழிபடுவார்கள், அவர்கள் காலையிலும் மாலையிலும் பகவானை ஸ்மரித்து, திவ்யமான ஸ்லோகங்களால் துதிப்பர்; பரம கருணாநிதியை அருள் புரியுமாறு மனமிளக வழிபடுவர். ஹரா! ஹரா! என்ற வேத கோஷம் வானத்தை எட்டித் தேவர்களைத் தட்டி எழுப்பும். ஆகவே நாரும் பூஜையிற் சிறந்து லோக பூஜ்யராய் விளங்கினமைக்கு அக்குடும்பத்தாரின் ஈஸ்வரபக்தியே காரணமாக இருந்தது.

ஈசுவர பக்தி

'ரகுராமா! ஸ்ரீராமா! ஸ்ரீசீதாராமா!' என்று பக்தர்கள் பகவந்நாம ஸ்மரணை செய்வது வழக்கம். 'ராம' என்ற தாரகமந்திரமே அவர்களுக்கு அமுதபானம்! நீதிதவறாத செங்கோலனாகவும், பிதுர்வாக்கிய பரிபாலன சிரேஷ்டனாகவும், சுத்த வீரபுருடனாகவும், ஏகபத்னி விரத விநோதனாகவும் அவதரித்த ஸ்ரீமந்நாராயணனாகிய சக்ரவர்த்தித் திருமகனின் திவ்ய சரித்திரத்தை சிரவணஞ் செய்வதும் வாசிப்பதும், கூறுவதும் ஹிந்துக்களின் மதாசார தர்மம். ஸ்ரீராம சீதா விக்ரஹங்களைவைத்து இந்துக்கள் நித்ய பூஜைசெய்து ஆனந்த மடைகின்றனர். ஒவ்வொரு இந்திய பதிவ்ரதா ஸ்திரீயும் ஜானகியைப்போன்று தன் கணவனிடம் பக்திசெலுத்த ஆவலுடையவளா யிருக்கின்றாள். ஒவ்வொரு ஆடவனும், 'ஸ்ரீரகுவீரனே புருஷர், அவரே வீரர், தீரர், ஆற்றலின் அவதார சற்குண சம்பன்னர்' என ஸ்மரிக்கின்றான். நாம் 'என் கடன் பணிசெய்து கிடப்பதே' என்றவாறு உலகில் தொண்டு புரியவே பிறந்தோம் என்ற அறனைக் கைக் கொண்டு ஓதநீர் கடற்பரப்பைத் தாண்டி, உயரிலங்கை நகர் போய் புக்கு, இராவணனுக்கு ஞானோபதேசம் செய்தும், ஊழ்வினையின் தூண்டுதலால் சாமகானன் தாமஸகுணம் மிகுந்தவனாதலின், அவ்வுரை 'புல்லோர்க்கு நல்லோர் சொன்ன பொருளெனப் போக,' விரைந்து ஜகன் மாதாவான ஜானகியைக் கண்டு, ரகுநாதனின் செய்தியை விண்ணப்பித்து, கணையாழியைக் கொடுத்து சூடாமணியைப் பெற்று, ஸ்ரீதேவியின் பிரிவால் வாடிய ஸ்ரீராமனை விரைந்தடைந்து **'கண்டேன் அன்னையை'** எனக்கொண்டாடிக் கூறி, இராவணயுத்தத்தில் இராம இலக்குவர்கள் நாகபாசத்தால் கட்டுண்டு கிடக்குந்தருவாயில் சஞ்சீவி மலையைக் கொண்டுவந்துதவி, தனது

ஆஞ்சநேய பராக்கிரமம்

வாழ்நாட்களை அவனடிச் சுவடுகளைப் போற்றித் தொண்டுபுரிவதி லேயே அற்பணஞ்செய்து நித்ய பிரம்மச்சரிய விரதம்பூண்டு ஜிதேந்திரி யனாக, அழிவிலா வரம்பெற்று, இன்றளவும்,

𑌯𑌤𑍍𑌰 𑌯𑌤𑍍𑌰 𑌰𑌘𑍁𑌨𑌾𑌥𑌕𑍀𑌰𑍍𑌤𑌨𑌂 𑌤𑌤𑍍𑌰 𑌤𑌤𑍍𑌰 𑌕𑍃𑌤𑌮𑌸𑍍𑌤𑌕𑌾𑌞𑍍𑌜𑌲𑌿𑌮𑍍।
𑌬𑌾𑌷𑍍𑌪𑌵𑌾𑌰𑌿𑌪𑌰𑌿𑌪𑍂𑌰𑍍𑌣𑌲𑍋𑌚𑌨𑌂 𑌮𑌾𑌰𑍁𑌤𑌿𑌂 𑌨𑌮𑌤 𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑌾𑌨𑍍𑌤𑌕𑌮𑍍॥

'எங்கெங்கு தாரக மந்திரசப்தம் கேட்கப்படுகின்றதோ அங்கங்கு கைகூப்பிக் கண்ணீர் பெருக நின்று கேட்டானந்திக்கின்றார்' என்ற ஸ்லோக தாத்பரியத்திற்குப் பாத்திரரான ஜயவீர ஹனுமானின் தொண்டைப் புகழ்ந்து,

'அஞ்சிலே யொன்றுபெற்றா னஞ்சிலே யொன்றைத்தாவி
அஞ்சிலே யொன்றாறாக வாரியற் காகவேகி
அஞ்சிலே யொன்றுபெற்ற வணங்கைக்கண் டயலாரூரில்
அஞ்சிலே யொன்றைவைத்தா னவனெம்மை யளித்துக்காப்பான்.' (க-ம்)

என்று பக்தர்கள் தோத்திரஞ் செய்வர்; மாருதி, ஹனுமான், ஆஞ்ச நேயன், வாயுபுத்ரன் என்ற பல திருநாமங்களால் அவனைப் போற்று வர். இவ்வித வழக்கம் தத்தர்களுடைய குடும்பத்தில் விசேடமா யுண்டு. ஒவ்வொரு மாதமும் நவமி யன்று விஸ்வநாத தத்தருடைய இல்லத்தில் சீதா, லக்ஷ்மண, பரத, சத்ருக்ன ஹனுமத் சமேதராக விளங்கும் ஸ்ரீராமச்சந்திர மூர்த்திக்கு அபிஷேக, நைவேதனங்கள் நிக ழும். அன்று அனைவரும் விரதமிருந்து பூஜை, ஆராதனங்களைக் கண்டு நேத்ரானந்த மடைந்து வலம் வந்து வழிபடுவதை நரேந்திரர், கண்டு, அவரும் அவ்விதமே நடித்து வந்தார். இயற்கையாகவே இராம பக்தி அவர் இருதயத்திற் குடிகொண்டிருந்தது. புவனேஸ்வரி யம்மை ஸ்ரீமத் ராமாயணத்தைத் தொடங்கி ஒரு மாதத்தில் விரிவாக நரேந்திருக்குக் கூறி முடித்தாள். இராமாயணங் கேட்டதும், தாம் இராமனே யாகவேண்டு மென்றும் அதற்கு அவனையே வழிபட வேண்டுமென்றும் நரேந்திரர் எண்ணினார். அவர் வீட்டிற்குச் சமீ பத்திலிருந்த ஓர் வேதியச் சிறுவனை அழைத்துக்கொண்டு கையில் ஒரு அணாக் காசுடன், குதூஹலமாக இருவரும் கடைக்குச் சென்றார் கள். சிறு குழந்தைகள் கையில் காலணா கிடைத்துவிட்டால், அடை யும் ஆனந்தத்தை நாம் அளவிட்டுக் கூறவியலாது; துள்ளிக் குதித்து, அந்தத் துட்டுக்கு மிட்டாய் வாங்கித் தின்னும்வரையில் அவர்களைக் கண்டுபிடிக் கவும் இயலாது. பல கடைகளையும் கடந்து நார் தம்முடைய நண்ப

நரேந்திரரின்
ராம பக்தி

னுடன், ஒரு மண் பொம்மைக் கடையைக்கிட்டி, எட்டிக்காட்டி, ஸ்ரீரகுராமனின் பொம்மை யொன்றை வாங்கிக்கொண்டு விரைந்து வந்து வீட்டை யடைந்தார். பின்பு இருவருமாக வீட்டின் மேல் மாடியிலுள்ள ஓர் இருட்டறைக்குச் சென்றனர். சற்று நேரத்தில் அந்த வேதியப் பாலன் கொஞ்சம் மிட்டாயும் மலருங் கொண்டுவந்தான். இருவரும் ஏகாந்தமாகப் பூஜைசெய்துவிட்டுத் தியானத்திலாழ்ந்தனர். நிற்க, நாரை அரைக்கணநேரமும் விட்டகலாத அன்னை புவனேஸ்வரி, தம் தாதியரை யனுப்பிக் குழந்தையை அழைத்துவர ஏவினாள். தாதியர் இரண்டுமணி நேரம் வரையில் அங்கு மிங்கு மலைந்து தேடியு மப்பனைக் கண்டிலர். அவர் அந்தரங்க அறையில் ஆனந்த சாகரத்தில் மூழ்கி யிருக்க, ஊரெல்லாம் தேடியும் குழந்தையைக் காணாது வாடினாள் புவனேஸ்வரி! 'நரா! நரேந்திரா! என் கண்ணே!' என்று மனத் திகிலடைந்து பிதற்றினார் விஸ்வநாத தத்தர். கடைசியாக ஒரு வேலைக்காரன் இவ்வந்தரங்க அறையைப் பார்ப்போமென்று எண்ணமிட்டுச் சென்றான்; அவ்வறையின் கதவுகள் உள் தாள் போடப்பட்டிருக்கக் கண்டான்; கதவைப் பலமாகத் தட்டினான்; திறக்கப் படவில்லை. பின்பு சில வேலைக்காரர்கள் கூடி பலாத்காரமாகக் கதவைத் திறந்தனர். அறை திறக்கப்பட்டதும் அங்கிருந்த அந்தணச் சிறுவன் குதித்துப் படிகளின் வழியாக இறங்கிச் சத்தமிட்டுக் கொண்டே ஓடினான். நரர் மனதை நிறுத்தி, இராமனைத் தம்மிருதயத் திருத்தித் தியானஞ் செய்துகொண்டிருந்த சமாதி நிலையைவிட்டு மாறவில்லை. ஏவலாட்கள் தட்டி எழுப்பினர். தந்தையும் தாயும் தனையனின் தவத்தை மெச்சிப் புகழ்ந்தனர்; நரேந்திரரைக் கட்டி யணைத்துத் தழுவிக்கொண்டனர். இளமையில் இந்நிகழ்ச்சியே அவருக்கு முதல் முதலாகத் தெய்வ பக்தியை யூட்டிற்று; இத்துணை இளம் பிராயத்திலேயே அவர் 'ராமபக்தி சாம்ராஜ்யம்' என்ற வாக்கை அந்தர்யாமியாக விளங்கும் ஆத்மாராமன் உணர்த்த உணர்ந்து கொண்டார்.

வண்டியோட்டியிடம் நரேந்திரர் அதிகநேசம் பாராட்டுவது வழக்கம்; ஓய்வு நேரத்தை வண்டிக்காரனோடு வம்பாடிக் கழிப்பார். இவ்விதம் ஒருநாள் அனுபவ ஞானத்தில் முதிர்ந்த ஓர் வயோதிக வண்டிக்காரனிடம் உரையாடிக்கொண் டிருக்கும்போது விஷயங்கள் எவ்விதமாகவோ மாறி விவாகப் போக்கில் திரும்பின. வண்டிக்காரன் இல்லறவாழ்வை மிகவும் இகழ்ந்துரைத்தான். "என்ன குடும்ப வாழ்வு!

அந்தப்புரம் இன்பம்! இந்தப்புறம் நகைப் பேய் பிடித்த நங்கையின் இடி! என்னதான் கஷ்டப்பட்டுக் கடமையை யுணர்ந்து அவர்களைக் காப்பாற்றினாலும் அங்கும் ஒரு சொட்டைச் சொல்! எட்டி உதைத்தாலும் அவளே கதியென்ற காமப்பேய்! அதனால் அவள் இளமை முழுதும் அவளிடம் அத்யந்தப்பிரியம்! போலி—சுகம்! இன்பம்! அவள் பிரியின் அதுவே பெருந்துன்பம்! இன்பத்திற் கிடமென்று ஏழைகள் ஏங்கி நிற்கும் அவளே மாயையின் வடிவானவள். ஆதலால், தந்தை, தாய், தாரம்: மகவு எனுமிவையெலாம் சந்தையிற் கூட்டம்!

சிவத்தியானம்

இதில் சந்தேகமில்லை" என்றான் அவ்வண்டிக் காரன். நரேந்திரருக்கு அவன் கூறிய தெல்லாம் உண்மையென்றே பட்டது. ஏதும் பேசாமல் எழுந்து கண்களில் நீர்பெருக, கண்ணீரைத் துடைத்து 'அழாதே, என்று ஆறுதல் கூறுந் தகைமைசான்ற அன்னையை யடைந்தார். புவனேஸ்வரி, குழந்தையின் மைவண்ணக் கண்ணீரைத் துடைத்து, முத்தாடி, காரணமேதெனக் கேட்டாள்; மறுமொழி புகலாத மகனை மடித்தலத் திருத்தி சிறப்புச் செய்து வினவ, நரேந்திரர் நடந்தவற்றை யெல்லாங் கூறி 'அம்மா! விவாகம் செய்துகொண்ட இராமனை யான் எவ்வாறு வணங்குவது?' என்றார். தாய் தயங்கிப் பின் ஒருவாறு தெளிந்து சன்னியாசி நிலையில் யோகிகளுக்கெல்லாம் ஜோதியா யொளிரும் சிவபெருமானை வழிபடுமாறு சிறக்க உரைத்தாள். நரர் உடனே விரைந்து சென்று ஸ்ரீராம விக்ரஹத்தை—பதுமையை வீசி வீதியிலெறிந்துவிட்டு, காசுகொண்டு கடைக்குப்போய் கண்ணுதலோன் மண் பதுமை யொன்றை மகா பக்தியுடன் வாங்கி வந்தார்; அதை அந்த இராம விக்ரஹ மிருந்த இடத்தில் வைத்து அப்பெரிய யோகியின் முன்பாக பாலயோகியாகத் தாம் அமர்ந்து தியானஞ் செய்யத் தொடங்கினர். அப் பரம யோகியும் இவருக்கு அருள்புரிய இப்பூஜையே ஆரம்பகாலமாயிற்று. இதுமுதற் கொண்டே அவர் **தியான சமாதி** நிலையை அடிக்கடித் தம்மை யறியாத ஓர் பிரத்யேக உணர்ச்சியால் அடைந்துவந்தார்.

தியானத்திற்கு மனம் ஒன்றுபட வேண்டும். மன ஒருமைப்பாட்டுக்கு ஏகாந்த ஸ்தலம் வேண்டும். உலக விஷயங்களை முற்றும் மறந்து தியானிப்பவரே தியானத்தின் பலனைப் பெறுவர். காமக்குரோதாதிகளின் சேட்டைகளால் பிரபஞ்சத்தில் விருத்தியாகும் துர்க்கிருத்தியங்களில் அவர்கள் ஈடுபடலாகாது. மௌனம் யோகத்தின்

முக்கியாம்சமாகு மாதலின் அதனை மறவாது கொள்ளல்வேண்டும். பந்தமென்ற கொடியனைச் சிறையிலிட்டுப் பந்தமற்ற பரமனினடியிணை களைப் பற்றவேண்டும். பாரிலெங்கும் பந்தத்தால் விளையும் பயன் யாவும் நிர்ப்பந்தத்தை யூட்டுந் தன்மையன. பந்தம் வந்த காலத்தில் போலி யின்பங்களை மனிதன் விரும்பி நுகர்கின்றான்; மாயா சால வித்தைகளை யெல்லாம் மாட்சிமைப் படுத்துகின்றான்; சர்வ பரிபூரண னைத் தியானிக்க அசக்தனாகி விடுகின்றான். இக்காரணம் பற்றியே தியானத்திற் குகந்த இடம் வனமென நூல்கள் வகுத்தன. அவை, தாங்கள் வனத்திலே பிறந்து வளர்ந்து வன்மை பெற்றதாகக் கூறுகின் றன. வனங்களில் வதிந்து தன்யர்களான மகரிஷிகளின் சரித் திரத்தை நாம் கேட்கின்றோம். அவர்களுடைய ஆனந்த வாழ்வை "ஹரிகதா சுபோதயம்" என்ற வடமொழிப் பிரபந் தம் விரிக்கின்றது. முனிபுங்கவர்கள் கானகங் களில் ஆனந்த வாழ் வியற்றித் தியானஞ்செய்து நித்யானந்தர்க ளாயினர். வியாஸர், விஸ்வாமித்திரர், பராசரர், வான் மீகி முதலான முனிவர்களின் பெருமையை நாம் என்னெனப் புகலு வது! அரண்யங்களில் துறவிகள் கூட்டங் கூட்டமாகக் கூடி ஆத்ம விசாரஞ் செய்கின்றனர். ஆத்ம சாந்தி பெறவேண்டு மென்பதே அவர்களின் அபிலாஷை. இவ்வித மகாரிஷிகளைப் பேறெனப் பெற்ற பாரத பூமியின் பாக்யமே பாக்யம். அயல் நாடுகளில் இவ்வித இரு டியர்க ளிருந்ததாக நாம் கேட்டதுமில்லை. இந்தியாவில் தியானம் புரா தனமானது; மிக மிகப் புராதனமானது. தியானமென்பது இந்திய ருடைய நித்யவாழ்வில் அனுதினமும் அனுசரிக்கப்படுவது. நான்கு ஆச்சிரமங்களில் அந்தந்த நிலைக்குத் தக்கவாறு வாழ்வில் தியானம் இந்துக்களா லனுசரிக்கப்பட்டு வருகின்றது. சிஷ்யனாகவும் (பிரம்மச் சரியட்) கர்மாவைச் சார்ந்த கிருகஸ்தனாகவும், பற்றுவிட்டும் விடா மலும் வாழும் வானப்பிரஸ்தனாகவும், முற்றுந் துறந்த முனிவனா கவும், இருக்கும் ஒவ்வொரு நிலையிலும் தியானநிலை இந்தியாவில் கைக் கொள்ளப் படுகின்றது. உலக வாழ்வில் தியானம் வெளிப்படையாயும் குறிப்பாயும் ஹிந்துக்களிடம் கலந்து நிற்கின்றது. இஃதொன்றே இந்தியாவின் பெருமையையும் உயர்வையும் விளக்கச் சாலும்!

தியானத்தின் முக்கியாம்சங்கள்

பிரபஞ்சத்தில் மனிதன் பல விஷயங்களைக் கவனிக்கின்றான், பல வற்றைக் காண்கின்றான். அவை நித்யமென்று நம்புகின்றான்; பின்பு அவை அழிதலைக்கண்டு, அச்சங்கொண்டு தானும் அவ்வாறே அழியுந்

தன்மையின னென்பதை அறிந்து மனங்கலங்குகின்ருன். ஆகவே தாரணி யின்பம் தாழ்வுடைத்து என்பது அவன் மனத்திற் பதிகின்றது; நிலையற்றதைக் குறித்துச் சிறிது ஆராய்ச்சி செய்கின்ருன்; அதற்கு அவன் அறிவும் சிறிதுதவி புரிகின்றது. ஆராய்ச்சியால் அறிவு வளர்ச்சி யடைகின்றது. ஈஷணைத்திரயங்கள் கொஞ்சங் கொஞ்சமாக அஞ்சி விலகுகின்றன. இந்நிலையில் அவன் அறிவின் ஆற்றல் சிறிதாயும், சந்தேகத்தின் அளவு பெரிதாயு மிருக்கின்றன. சந்தேகமென்னும் சாகரத்தை நீந்தத் தெரியாது திகைத்து, பின்பு அவன் நீச்சு கற்பிக்கும் ஆசார்யனைத் தேடி யலைகின்ருன்; அவருக்குத் தொண்டுசெய்து பிரியனுகி, அவரது கடாக்ஷத்தால் பேதாபேத தத்துவங்களை யறிந்து நித்யமான வஸ்துவைத் தேடியலையும் பித்தனுகிப் பத்தனுகிச் சித்தனுகி யலைகின்ருன். இங்கு சில பழங்கால விஷயங்கள் நமது ஞாபகத்திற்கு வருகின்றன. வனங்களிலே நூற்றுக் கணக்கான சிஷ்ய, ஆச்சாரிய கோடிகள் கூடி ஆத்மவிசாரஞ் செய்த அழகை இங்கு யாம் குறிப்பிடாது செல்ல வியலவில்லை. அக்காலத்தில் அவர்களுடைய கலாசாலைகள் பெருவனங்களிலுள்ள விருக்ஷங்களி னடியில் அமைந்திருந்தன. அச்சு நூல்கள் அக்காலத்திலில்லை. கடிதத்தி லெழுதியுள்ளவற்றைப் பயின்றுவிடும் எளிய ஞான வாழ்வை அவர்கள் விரும்பவில்லை. கேவலம் வயிற்றுப் பிழைப்பை மட்டுங் கருதியவர்கள் படிக்கவுமில்லை. அக்கால மாணவர்களின் செவிகளே கண்கள்; ஓதுவதே சப்தம்; மனமே எழுதிக்கொள்ளும் காகிதம். அதைக் கிழிக்கவோ அழிக்கவோ இயலாது. இத்தகைய மாணவர்களின் பெயர் பரீக்ஷையில் தேறிவிட்டதாக எந்தப் பத்திரிகையிலும் பிரசுரிக்கப்பட்டதில்லை. அவர்கள் மனச்சாக்ஷியே வெற்றியை யுணர்த்தும் பத்திரிகை. இதன் பெருமையோ பெரிது! அந்தோ! இவ்வொழுக்கங்களை ஏனே நாம் கைவிட்டோம்! ஏனே தான் நாம் நவீனத்தின் வாயிற் பட்டோம். கிராம வாசிகள் பட்டினப் பேய்பிடித்து நகரங்களிற் புகுவதுபோல், கானகங்களிலிருந்த தெய்வீகக் கலாசாலைகளும் பட்டினங்களில் வந்து குடியேறி விட்டன. நம் சொந்த பாஷையிலுள்ள 'ஞானம்' என்ற சொல்லையே நாம் மறந்தோம். எவ்விதத்திலும் நம் தாய்மொழியைவிடத் தகைமை சான்றதெனக் கொள்ள வியலா கொச்சுப் பாடையிலுள்ள வார்த்தையால் வழங்க நம் பாழும் நாவுந் துணிந்தது. கனிவர்க்கங்களை நமது நவீன நா கடிந்து காப்

பிராசீன குரு சிஷ்யத்துவம்

பியே பெரிதென்று கோப்பியப் படுத்துகின்றது. நம் உணவு, உடை, சிகை, இந்திரியங்கள், அறிவு, ஆத்மா யாவும் நவீன நாகரீகத்தி னிடத்தில் ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டன. பல நூற்றாண்டு களாக உபதேசத்தால் வழி வழிவரும் வானுயர்த்தும் வேதங்களை நவீனம் புத்தக ரூபமாக்கி 'இரண்டு ரூபாய் கொடுத்தால் வேதம்' என்ற அலக்ஷிய புத்தியை யூட்டி நம்மை அடிமைப் படுத்திவிட்டது. குரு சிஷ்யபாவம் குவலயத்திலேயே யில்லை.

மேற்கூறிய ஞானசித்தர்கள் சுயநலப் பிரியரா யிருக்கவில்லை. தம் பூர்வ நிலையில் தயங்கினது போலத் தத்தளிக்கும் மனிதர்களைக் கை தூக்கி விட, அவர்கள் சில சமயங்களில் நகரங்களுக்கு வந்து தாம் அனு பவித்ததை உபதேசிப்பதுண்டு. இத்தகையோரின் வருகையை மன் னரும் மக்களும் விரும்பிக் கொண்டாடுவர்; அத்துறவிகளை இருப் பெழுகை, விரைந்து போதல், எதிர் கொள்ளல், தவிசினிடை யிருத் தல், பூசை செய்தல் முதலிய புரிந்து வணங்குவர். இதுவும் நம் நாட் டில் வெகுகாலமாக வழக்கிலிருந்து வரும் ஓர் பெரும் பழக்கம். இந்த சந்நியாசிகளுடைய வாழ்வின் வரலாற்றை நரேந்திரர் தமது தாயின் வாயிலாக அடிக்கடி கதையாகக் கேட்டவராதலின் அவர் துறவிகளைப் பெரிதும் போற்றி வந்தார். சிறு வயதிலேயே அவ் வுணர்ச்சியை யடைந்தவராதலின் அதைவிடச் சிறந்த வாழ்வு வேறில்லையென அபிப்பிராய முடைய

இளமையிலேயே துறவற விருப்பம்

வராகி அக்கூட்டத்தில் தம்மையுங் கூட்டிவைக்குமாறு அப் பது மையை யாராதித்து வந்தார்! சந்நியாசிகளை அடிக்கடி கண்டிருந்த அவர் ஒரு நாள் காவியாடையை யணிந்து கொண்டு, தலையிலிருந்த சிறிய கேசங்களை ஒன்றுகூட்டிச் சடைபோலத் திரித்து முடிந்து கொண்டு தாயிடத்தில் விரைந்தோடி "அம்மா! நான் இப்பொழுது சிவபெருமானைப் போலிருக்கிறேனா?" என்று கேட்டார். அன்னை 'ஆம் கண்ணே!' என அன்புடன் கூறினள். இரண்டொரு நாட்கள் கழிய நரர் பூஜாக் கிரஹத்தில் நடைபெறும் ஆராதனங்களை நினைவிற் கொண்டு தமது பதுமையின் முன்பாகக் குடுமியை உயரமாக முடி யிட்டு, பத்மாசனமிட்டு வீற்றுக் கண்களைமூடி இயன்ற அளவு காற் றைச் சுவாஸித்து, உள்ளிருத்தி, பின்பு மெதுவாக வெளிவிட்டுச் செய் யும் பிராணாயாமத்தைச் சற்று நேரஞ் செய்துவிட்டு எழுந்து விரைந்து அன்னையிடஞ் சென்று 'அம்மா! என்னைப் பார்த்தால் யோகியைப் போலத் தோன்ற வில்லையா!' என்று கேட்டார். புவனேஸ்வரி ஒரு

விதத்தில் தன் குழந்தையின் செய்கையைக் கண்டு மகிழ்ந்தாளாயினும், தன் அருமைப் பாலன் தன் பாட்டனாரைப் போலச் சந்நியாசியாகி விடுவனோ! என்ற பயத்தால் மயங்கி வார்த்தையை வேறு வழிகளில் திருப்பினாள். பின்பும் நரர் விடாமல் 'அம்மா! நான் பூர்வ ஜன்மத்தில் சந்நியாசியா யிருந்திருப்பேன். அதனாற்றான் என் மனம் அந்நிலையையே பற்றுகின்றது. நான் நல்லவனாக நடந்து கொண்டால் பகவான் என்னை ஏற்றுக் கொள்வாரல்லவா?' என்றார். தாய் 'ஆம்! ஆம்!' என அப்பேச்சை மழுப்பி, அங்கோர் தின்பண்டத்தைக் கொடுத்து, கதை யொன்றைச் சொல்லி நரேந்திரரின் மனதை மாற்றுவா ளாயினாள்.

நரேந்திரரின் தியான நிலை நாளுக்குநாள் விருத்தியாகி வந்தது. ஒரு வீட்டிலுள்ள மூத்தவர்கள் செய்வதைக் கண்டு, கண்டதைத் தாமும் செய்து பார்ப்பது குழந்தைகளின் சுபாவமல்லவா? நரரும் தம் பெற்றோர் இயற்றும், அபிஷேகம், பூசை, நிவேதனம், கற்பூர ஹாரத்தி முதலியவற்றைத் தம் மண்பதுமைக்குச் செய்து வந்தார். அப்பதுமையின் முன்பாக யோகாசனமிட்டு உட்காருவார்; விளையாட்டாகத் தியானத்தைத் தொடங்கி ஆனந்த மடைவார்; தாம் பெரிய சந்நியாசியாக அப்பொழுதே ஆகிவிட்டதாக நம்புவார்; துறவியாகத் தமக்கு ஜடாபாரம் முற்றும் வளர்ந் திராததைக் குறித்து வருந்துவார்; 'அம்மா! எனக் கெப்பொழுது சடை வளரும்' என்று அவர் தம் தாயை அடிக்கடி கேட்பதுண்டு. இவ்விதம் இவருடைய சமாதி நிலை விளையாட்டுப் பருவத்திலேயே வேர் விட ஆரம்பித்தது. அடிக்கடி தத்தருடைய இல்லத்திற்கு பிக்ஷார்த்தமாக வரும் சந்நியாசிகளிடமிருந்து நரர் தமக் கேற்பட்ட ஐயப்பாடுகளைக் கேட்டுத் தெளிவார். அத் துறவிகளும் "இச்சிறுவனின் அறிவும் ஆற்றலும் என்னே!" என்று அதிசயித்துச் செல்வர். நரருடைய பரம்பரைப் பெரியோர் அனுஷ்டித்து வந்த ஆத்மார்த்தத் தன்மையும், அதன் தீவிர நிலையும், சாதுத் தன்மையும், பெரும் புகழும், சத்சங்கமும், அவருடைய பெரு முயற்சியில் தக்க உதவிபுரிந்து அவருக்கு '**இளமையின் இன்பங்**'களை யெய்துவித்தன.

5-ம் அத்தியாயம்.

கல்விப் பயிற்சி

உயிர்கள் யாவும் உயர்வடைய முயல்கின்றன. குருடன் இழந்த கண்களை மீண்டும் பெற விரும்புகின்றான். இன்பத்தை வெறுப்பவர் எங்குமேயில்லை. சாதாரண அறிவையுடைய மனிதன் நீர்க்குமிழி போன்று தோன்றி மறையு மியல்புடைய இன்பானுபோகங்களைத் தன் முயற்சிக்குத் தக்கவாறு பெறுகின்றான். தூய அறிவுடையோர் மாய இன்பங்களைக்கண்டு கேலி செய்கின்றனர்; சிற்றின்பத்தை முற்றிலும் வெறுத்துப் பேரின்பத்தைப்பெற வழி தேடுகின்றனர். இவர்களுக்கு ஞான நூல்கள் வழிகாட்டிகளாய் நிலவுகின்றன. அறநூல்கள் விரித்தவாறே அவர்கள் ஒழுகித் தீர்க்க தரிசிகளாகின்றனர். உலக இன்பங்களில் பற்றற்ற தன்மையால் உயர்வு தாழ்வு நீங்கி, சமதிருட்டி பாவம் இவர்களது இயற்கைக் குணமாகி விடுகின்றது. அசேதனப் பொருள்களிடத்தே ஆசையற்றவர்களாகி சேதனக் கடவுளின் பல திருநாமங்களி லொன்றைப் பூண்டு அவனுடைய ஆனந்தக்கடலிலே மூழ்கி விளையாட வேண்டுமென்னும் ஓர் ஆசையை மட்டு மிவர்க ளுடையவ ராகின்றனர்

நரேந்திரருக்கு இரவெல்லாம் இத்தகைய மகாசாதுக்களைத் தியானிப்பதிலேயே கழிந்தன. அவர் நித்திரை செய்வதில்லை. அவ்வாறு துயில் கொண்டாலும் அது தியானசமாதி நிலையாகவே யிருந்தது. நித்திரையென்பது சரீரமானது அமைதியைப்பெற ஆன்மா கொள்ளும் ஓய்வு நேரமேயாம். நித்திரையில் ஸ்வப்பனுவஸ்தை யாவது, சுபாவமாகச் சரீரத்தில் சம்பந்தப்பட்ட ஆத்மாவின் ஓர் அம்சமான அறிவு, தனது விருப்பத்தையடைய முயற்சிக்கும் நிலையேயாகும். ஜாக்கிரத்திலும் சொப்னுவஸ்தை யென்பதுண்டு. அதைத்தான், கனவில் உண்மையாகக் காணக்கூடியவை நினைவில் க்ஷணநேரத்தில் மறைவதுபோல், உலகில் நாம் உண்மை உண்மை யென்று நம்பி, உவகை கொள்ள, அவை மாயா சம்பந்தமானவை யாதலின் மறையக்கண்டு, அகக்கண் விழிப்படைதல் என்பர் கனவு நூலறிஞர்.

நித்திரையும் கனவும்

நரேந்திரர் அயர்ந்து படுக்கைக்குச் செல்லும் போதெல்லாம் ஒரு ஒளிப் பந்துபோன்ற பிரகாசம்—'ஜோதி' அவரது நயனங்களி னடு

வில் வந்து நிற்கும் அறிவானது அச்சோதியினிடத்துத் தன் கருத்தைச் செலுத்த, உடல் அயர்ந்து நித்திரைபோகும். அறிவும் அச்சோதியும் கலந்து ஒன்றேயாகி நிற்கும். இம்மாதிரியாக ஒவ்வொரு இரவும் அவர் அனுபவிப்பதுண்டு. இவ் விஷயத்தைக் குறித்து அவர் கலாசாலையில் கல்வி கற்குங் காலத்தில் தமது நண்ப ரொருவரிடம் 'நீர் நித்திரை செய்யும் பொழுது பிரதிதினமும் ஜோதி யொன்றைக் காண்பதுண்டோ?' என்று கேட்க, நண்பர் 'இல்லையே' யென்று ஆச்சரியத்துடன மறுமொழி புகன்றனராம். இதே கேள்வியை நரேந்திருடைய பால்யத்தில் ஒரு மகான் அவரைக் கேட்க, அவரும் ஆமெனப் பலர் முன்பாக ஒப்புக்கொண்டார். ஆனால் நரர் தமது பத்தாம் பிராயம் வரையில் தமக்கும் பிறருக்குமுள்ள வேறுபாட்டை யறிந்ததேயில்லை.

ஜோதி யென்பதென்ன! அதுதான் உயிரை ஆக்கும் கடவுள் தன்மையது. ஜோதியில்லையேல் ஞானமில்லை: இருளும் குழப்பமுமே சூழ்ந்து நிற்கும். ஜோதி ஆன்மஸ்வரூபமானது. ஆத்ம ஞானத்தை அளிக்கவல்லதே ஜோதி. பைபிளில் முதல் வாக்யத்தில் 'கடவுள் ஒளியுண்டாகட்டும்' என்று கூறியதிலுள்ள உண்மையும் இதுவே. உண்மை, உயர்வு, நன்மை, தூய்மை முதலானவற்றோடு ஜ்யோதி கலந்து நிற்கின்றது. துறவிகளின் ஞானமார்க்கத்தோடு ஜோதி இரண்டறக் கலந்து நிற்கின்றது. பொய்யும், தாழ்வும், தீமையும், இருளும் ஒளியால் நீங்குவன. ஜ்யோதியின் சம்பந்தத்தால் ஒரு துளி நீர் உலகினில் அவதார புருடர்களைத் தோன்றச் செய்து விடுகின்றது. கடவுளை ஜ்யோதி ஸ்வரூபனென்றே வேதங்களும் ஓதுகின்றன. 'கற்பூரமலை படுதீப்பட்ட விந்தை' யென்று தாயுமானவரும் ஜோதியை விளக்கியருளினர்.

ஜ்யோதி

இந்துக்களின் அறநூல்கள், அவனியிலுள்ள அரிய பொருள்களும், ஞான சித்தியும் தியானத்தால் லபிப்பதாக ஓதுகின்றன. தியானத்தின் முதிர்ந்த நிலையில் யோகி சோதியையே காண்கின்றான். நரர் தியானத்தை விளையாட்டாகவே அனுசரித்து வந்தார். அவர் விளையாட்டுகளெல்லாம் தியான சம்பந்தம் பெற்றிருந்தன. இவருடைய பால்ய சிநேகிதர்களும் இவரைப்போன்றே உடல் முழுதும் திருநீறு தரித்து, சிறு அரைக்கச்சையைக் கட்டிக்கொண்டு மூக்கைப் பிடித்துப் பத்மாசனமிட்டுக் கண்களை நன்றாக மூடிக்கொண்டு,

தியான விளையாட்டு விளையாடுவர். ஒருநாள் மாலையில் இவ்விதம் நடைபெறும் சமயத்தில் அவர்களிருந்த இடத்திற்கோர் பாம்பு வந்துற்றது. குழந்தைகளனைவரும் 'பாம்பு! பாம்பு!' என்று கூக்குரலிட்டு விரைந்தோடினர். அவர்கள் உரக்கக் கூவியும் நரர் சமாதி கலைந்தாரில்லை. பாலர்களின் குரலைக்கேட்டுப் பரிவுடன் புவனேஸ்வரியும் விஸ்வநாத தத்தரும் விரைந்தோடிவந்து நரரைத் தட்டியெழுப்பினர். நரேந்திரர் பின்பு உணர்ச்சி பெற்று 'பாம்பென்ன செய்யும்? சாம்பரைப் பூசிப் பாம்பணிபூண்ட ஏகாம்பர நாதனைக்கண்டு ஆனந்தித்தேன் நான்!' எனப் புகன்றார். இவருடைய சிறந்த பத்தியைக் கண்டு பெற்றோர்கள் ஆச்சரிய முற்றனர்.

நரேந்திரரின் சிறந்த பக்தி

இளமை நீரிற் குமிழி யன்றோ? நரருக்கு ஏழாம் பிராயம் எழிலுடன் பிறந்தது. பெற்றோர் அவருக்கு வித்யாரம்பம் செய்வித்தனர். வித்யாரம்பமென்பது மனிதனுடைய ஆயுளின் ஓர் முக்கிய சம்பவம். அன்றே அவன் அறிவிற் காதாரமான எழுத்துகளை எழுதப் பழகுகிறான். அன்றே சகல கலைகளுக்கு முரிய சரஸ்வதி தேவிக்குப் பூஜை யியற்றுவது ஹிந்துக்களின் வழக்கம். அன்றுதான், குடும்ப குரு, ஆசாரியர், பெரியோர் முதலானோர் கூடித் தேவபூஜைகளைச் செய்து, 'ஹரிః ஓம்' என்று தொடங்கி அக்ஷராரம்பஞ் செய்கின்றனர். ஹிந்துக்கள் இந்நாளை ஓர் சுதினமாகக் கருதுவர். நவீனக் கல்விமுறை அனுட்டானத்திற்கு வரவே வித்யாரம்ப முறையே வீழ்ந்துபட்டது. இறைவன் திருநாமத்தை இயம்பும் வழக்கம்போய், நவீனன் நம்மை அக்ஷராரம்பத்தன்று 'ஈ, படபட, டபடப, தடதட, மடமட, கடகட' என்று பேசவைத்தான். 'அறஞ்செய விரும்பு' 'தெய்வ மிகழேல்' 'தந்தைதாய்ப் பேண்' 'சத்யம் வத' 'தர்மம் சர' என்ற அறமொழிகள்போய் 'காலில்லாதவன் நொண்டி, கண்ணில்லாதவன் குருடன், தலையில்லாதவன் முண்டம்' என்ற மறமொழிகள் மாட்சியுற்றன. இதனாற்றான் பால்யர்கள் தெய்வ பக்தியின்றி, மடமடவென்று மடப்புத்தி ஊன்றி கலி புத்திரர்களின் கையிலகப்பட்டு உய்யும் வழியின்றி உழலுகின்றனர். ஆனால், நரேந்திரருக்கும் புராதன முறைப்படியே வித்யாரம்ப விழா நிகழ்த்தப் பெற்றது. கையிற் சுவடியுடனும் ஓர் சிறு பாயுடனும் நரேந்திரர் பாடசாலைக்குச் சென்று வந்தார். ஓர் பட்டுக் கயிற்றில் ஓர் எழுதுகோல் கட்டப்பட்டு அவருடைய அங்கியில்

வித்யாரம்ப விமரிசை

முடிபோட்டுத் தொங்கவிடப் பட்டிருந்தது. இவ்விதம் திண்ணைப் பள்ளிக்கூடத்திற்கு அவர் போய் வந்தார். நரர் துஷ்ட சகவாசத்தால் கெட்டவார்த்தைகளைப் பேசத்தொடங்கி விடுவாரோவென் றஞ்சிய பெற்றோர், அவரைப் பாடசாலைக் கனுப்புவதை நிறுத்தி, ஓர் உபாத்தியாயரை வீட்டிற்கு வந்து பாடங் கற்பிக்குமாறு ஏற்பாடு செய்தனர்.

நரேந்திரர் கல்வி பயின்று வந்த நாட்களில் ஆசிரியரிடம் மரியாதையுடனும் பய பக்தியுடனும் நடந்துவந்தார். ஆசான் மிரட்டி அடித்தால் இவர் உருட்டித் தடுத்து ஓடிவிடுவார். இன் சொல்லுக்கு நரேந்திரர் அதிகம் ஈடுபட்டு வந்தார். இதனின்றும் 'இன்சொல் இனிதீன் றலை' ஆசிரியர் அனுபவத்தி லுணர்ந்தார்; ஆசிரியர்கள் உணவூட்டுந் தாயைப்போன்று, கல்வி யூட்டுங் கன்மமுடையாராகி மாணவர்களை நல்லொழுக்க முடையவராகச் செய்யுந் தகைமையுடையவராதலை அவ்வாசிரியர் நன்கறிந்தார். நரர் தம்மையொத்த மாணவர்களோடு உபாத்யாயருடன் கங்காநதிக்குச் சென்று தோத்திரம்பாடி தேவிக்கு மாலையிட்டு வருவார். இளமைமுதல் நரேந்திரருக்குக் கானத்தி லதிகப் பிரியமுண்டு. இராக்காலங்களில் நரேந்திருடன் ஓர் வயோதிகர் துணையாகத் துயில்போவது வழக்கம். அப்பெரியார் இவருக்கு அமரகோசம் என்னும் வடமொழி நிகண்டை மனப்பாடஞ் செய்துவைத்தார். அமரகோசத்தைப் பாடஞ்செய்யத் தொடங்கியதி லிருந்தே நாருக்கு வடமொழிக் கல்வியில் அதிக ஊக்கமுண்டாயிற்று.

ஆசிரியரின் அனுபவம்

வடமொழியானது பாரத பூமியிலுள்ள தெய்வபாஷை இரண்டினுள் ஒன்று. அறிவுக்கு மெட்டாத பல நூற்றாண்டுகளுக்கு முன்னரிருந்தே இப்பாஷை பாரில் பரிமளம் வீசுகின்றது. பாணினி மகாமுனிக்குப் பரமசிவன் முதல் முதலாக இம்மொழியை உணர்த்தினார். வேதாகம சாத்திரங்கள் இம்மொழியின் எழிலை விளக்கி நிற்கின்றன. வடமொழியே பதினெண் பாஷைகளுக்கும் மூலபாஷை யென்பதும் ஒரு சாரார் ஆராய்ச்சியின் முடிவு. ஹிந்துக்களின் பிரௌட கிரந்தங்களுக்கும், இலக்கண இலக்கியங்களுக்குக் இம்மொழியே ஆதாரமானது. விவேகானந்தர் 'வடமொழி பேசுதற்கு மதுரமானது' என்பதை அவருடைய பல உபந்நியாசங்களிலும் காட்டியுள்ளார். ஆன்மார்த்தமான சகல வழி நூல்களுக்கும் வடமொழிக் கிரந்தங்களே முதல்நூலென்பதும் பொருந்தும். அதன் 'தொடர்புடைய' மொழிகளே மற்

ஆரியமொழியின் பெருமை

றவையென்றும், மேனாட்டில் வழக்கிலுள்ள எல்லாப் பாஷைகளுக்கும் ஆரியமே ஆதாரமானதென்றும் சிலர் பிரமாணப் படுத்துவர்.

நரர் வடமொழியில் வல்லவராக ஆசைப்பட்டார்; அதில் அவருக்கு ஆர்வம் அதிகரித்தது. இலக்கணத்திற்கும் ஞானத்திற்கும் கிட்டிய சம்பந்தமுண்டென்பதை அவருணர்ந்தார். இலக்கண வல்லுநர் ஞானிகளாயிருப்பதையும் அவர் தெரிந்துகொண்டார். இக்கலைகட்கெல்லாம் காப்பிடமாகிய கலைமகளை அவர் இடைவிடாது வழிபட்டு வந்தார். அவர் பிற்காலத்தில் அவனியில் அறிவு விளக்கேற்றி விளங்குவதற்கான அறிகுறிகள் அவரது சிறு பிராயத்திலேயே காணப்பட்டன. ஒருநாள் நரேந்திரர் தமது பால்ய சிநேகிதர்களுடன் விளையாடும் பொழுது, தாம் சக்ரவர்த்தியென்று ஓர் உயர்ந்த ஸ்தானத்தி லமர்ந்து கொண்டார். பல சிற்றரசர்கள் திறைசெலுத்த வந்திருப்பதாகச் சில சிறுவர்களைச் சுற்றி யார்த்திக் கொண்டு கொலுவீற்றிருந்தார். குடிகளின் குறைகளைக் கேட்டு அவற்றைப் போக்குவதாக இதவசனங் கூறிய பின்னர், ஓர் குற்றவாளி விசாரணைக்குக் கொண்டுவரப்பட்டான். அவனைத் தீரவிசாரித்த பின்னர் 'உனக்கு சிரச்சேத தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது!' என்று சக்ரவர்த்தி நிலையிலிருக்கும் நரேந்திரர் கூற, சேவகர்களாய் நின்ற சிறுவர்கள் அக்குற்றவாளியாக நடித்த சிறுவனை உண்மையில் சிரச்சேதம் செய்ய யத்தனித்தனர். சிறுவன் மிரண்டு "ஐயோ! அப்பா" என்று ஓலமிட, அதுகேட்டு வீட்டிலுள்ளோர் விரைந்து வந்தார்கள். இதைக் கண்ட சிறுவர்கள் ஓட்டம் பிடித்தனர். இவ்விதம் அரைமணி நேரத்தில் நரேந்திரர் செங்கோ லோச்சினர். பிற்காலத்தில் சகல சமயச் சக்ரவர்த்தியாகவும் விளங்கினர்.

ஓர் ருசிகரமான விளையாட்டு

விஸ்வநாத தத்தருடைய இல்லத்தில் தினந்தோறும் கக்ஷிக்காரர்கள் பலர் வந்து கூடுவர். ஒவ்வொருவராகத் தத்தரைக் கண்டு தத்தம் வழக்குகளைப்பற்றி ஆலோசித்துச் செல்வர். இவர்களில் வயோதிக முகம்மதியர் ஒருவருண்டு. அவர் நரேந்திரரிடத்தில் அதிகப் பிரீதி காட்டிவந்தார். நரேந்திரரும் அவரைக் கிட்டி அடிக்கடி கதை கேட்பதுண்டு. ஒட்டகங்களின் மீதேறிப் பாலைவனங்களிற் செல்லும் ஆப்கனிஸ்தான முகம்மதியர்களின் பிரயாண வரலாற்றை நரர் கேட்டு 'நானும் அப்பிரயாணிகளுடன் ஏன் செல்லலாகாது?" என வினவுவார். அக்பருடைய குணாதிசயங்களை நரேந்திரர் கேட்டு மகிழ்வார்; அவ்வயோதிக முகம்மதியரை **'மாமா'** என்று அழைப்பார். அப்பெரி

யாரும் அடிக்கடி நரேந்திரருக்குத் தின் பண்டங்கள் வாங்கித் தருவது வழக்கம். ஒரு நாள் விஸ்வநாத தத்தர் நரரை அழைத்து 'அம் முகம்மதிய ரளித்த தின்பண்டத்தை ஏன் வாங்கிப் புசித்தாய்? அது நமது காயஸ்த குலத்திற்கு இழிவான தல்லவா?' என்று கடிந்து கேட்க, "அன்பு உயர்ந்ததே யன்றி ஜாதி உயர்ந்த தன்று. அப்பெரியார் தந்த தின் பண்டத்தைத் தின்றதால் என் சரீரத்திலாவது என் ஜீவனிலாவது என் சுபாவங்களிலாவது எவ்வித மாறுபாட்டையும் நான் அடையவில்லை.'' என்று விநயமாக நயம்படப் பேசினர். இதனால் நரேந்திரர் சிறுபிராயத்திலிருந்தே அதி வர்ணாஸ்ரமியா யிருந்தா ரென்பதும் புலனாம்.

அன்பே பெரிது

வயதாக ஆக நரருடைய குணங்களும் அறிவும் வளர்பிறைச் சந்திரனைப் போன்று விருத்தி யடைந்து வந்தன. பால னென்னும் பருவம் சென்றது. அவர் இளைஞரானார்; கலாசாலைக் கனுப்பப் பட்டார். கலாசாலைக்குச் செல்லுமுன்னரே இராமாயண மகாபாரத காவியங்களை அவருக்குத் துணையாயிருந்த ஓர் வயோதிகர் பாடஞ் செய்து வைத்துவிட்டார். கல்கத்தா நகரத்தில் பாடகர்கள் பலர் கையில் வாத்யத்துடன், தம்படிக்கோ, ஒரு பிடி அரிசிக்கோ வீடுதோறும் நின்று பாடிப் போவதுண்டு. அப்பாடகர்களை நரேந்திரர் உபசரித்துப் பாடச் சொல்லி ஆனந்தித்துப் பைசா கொடுப்பார். நரேந்திரர் சங்கீதத்தில் அதிகப் பிரீதியுள்ளவர். அப்பாடகர்களிற் சிலர் இராமாயணகாவ்ய ஸ்லோகங்களை அற்புதமாக எடுத்து வாத்யத்துடன் பாடுவர். பொதுவாக ஸ்ரீராமனிடத்திலும் அன்னை ஜானகி யிடத்திலும் நரேந்திரர் அளவற்ற பக்தியுடையவர். அவர்களுடைய தூயவாழ்வின் திவ்ய சரிதை இவருக்குப் பெரும் அருள் விளக்கமா யிருந்தது. ரகுவீரனுக்குத் தொண்டு புரிந்த ஆஞ்சநேயரின் ஞாபகம் வரும்போதெல்லாம் நரர் ஆனந்தக் கண்ணீர் பெருக்குவார்; இராமாயணம் வாசிக்கு மிடங்கள்தோறும் நின்று கேட்டுப் பரவசமடைவார்; மெய்ம்மறந்து 'ஸ்ரீராம! ஜெயராம! சிருங்காரராமா!" என்று பிரலாபித்து உடல் களைக்கும்வரையில் நர்த்தனம் புரிவார்.

சங்கீதத்தில் விருப்பம்

விஸ்வநாத தத்தர் நரேந்திரரைக் கல்கத்தா நகரக் கலாசாலைக் கனுப்பினர். அதனாலும் அவருடைய துஷ்டத்தனஞ் சிறிதும் குறையவில்லை. கலாசாலை நேரமாயின பின் மாலையில் பந்தடால் முதலான

விளையாட்டுகளில் கலந்து கொள்வார் நரர். மாணவர்கள் விளையாடும் பொழுது நரேந்திரர் அவர்கள் தலைவராகவும், சச்சரவு நேரும் பொழுது நீதிபதியாகவும் விளங்குவார். இயற்கையாகவே இவரிடத்தில் சகல மாணவர்களுக்கும் ஓர் பிரேமை யேற்பட்டிருந்தது. போதகாசிரியர்களின் அன்பிற்கும் இவர் பாத்திரரா யிருந்தார். பிறருக்கு உடல் பொருளாவி மூன்றாலும் உதவி புரியும் தயாள குணம் நரேந்திரரிடத்திற் குடிகொண் டிருந்தது. பற்பல சமயங்களில் பலரைப் படு ஆபத்திலிருந்து தப்புவித்தும், நோய் வாய்ப்பட்டவரை வைத்ய சாலைக்குத் தூக்கிச் சென்றும், வறுமையில் மெலிந்தாரைப் பொருள் தந் துபகரித்தும் வந்தார் நரேந்திரர். இக்காலத்தில் இவருக்கு ஓர் இளைய சகோதரர் பிறந்தார். நன்னாள் கொண்டாடி பெற்றோர் அவருக்கு **மோகேந்திரன்** என்று நாமகரணஞ் செய்தார்கள்.

தயாள சிந்தை

நரேந்திரநாத தத்தர் கலாசாலையில் அதிக ஊக்கத்துடன் பயின்று தமது பதினாறும் பிராயத்தில் மித நிலை பரீக்ஷையில் (Matriculation Examination) முதலாகத் தேர்ந்தார். விளையாட்டுப் பருவம் அந்தோ! விரைந் தோடிவிட்டது. குழந்தைப் பருவத்தின் இன்பங்களெல்லாம் மறைந்தன. விளையாடுவதில் கொண்ட ஊக்கத்தை வித்தை விஷயத்தில் செலுத்த வேண்டிய நிலை இதுவாயிற்று. இளமையின்பத்தையும் அப்பருவத்தின் விளையாட்டுகளையும் நினைக்க நினைக்க ஆச்சரியமடையும் பாலியரானார் நரேந்திரர்.

விஸ்வநாததத்தர் நியாயவாதி யாதலால் வழக்கு நிமித்தம் அவர் வெளி நகரங்களுக்கு அடிக்கடி போவதுண்டு. சில சமயங்களில் மாதக் கணக்காகவும் சென்ற இடங்களில் தங்கிவிடுவதுமுண்டு. இவ்விதமே விஸ்வநாத தத்தர் மத்யமாகாணத்தி லுள்ள ரெய்ப்பூரில் இரண்டு வருஷகாலம் தங்க நேர்ந்தது. அவர் ரெய்ப்பூருக்குச் சென்ற சில மாதங்களுக்குப் பின்னர் குடும்பத்தை அவ்வூருக்கே வரவழைத்துக் கொண்டார். அலகபாத், ஜபல்பூர் வழியாக நாகப்பூர் வரையிற்றான் அக்காலத்தில் இருப்புப்பாதை சென்றதால், நாகப்பூரிலிருந்து ரெய்ப்பூருக்கு வண்டிப்பாதையாகக் காடுகளையும் குன்றுகளையும் கடந்து செல்லவேண்டி யிருந்தது. முதலில் ரயில்பிரயாணம் நரேந்திரருக்கு அதிக உற்சாகத்தைக் கொடுக்கவில்லை. நாக புரியிலிருந்து வண்டிமார்க்கமாகச் செல்லும் வழிப்பிரயாணத்தை அவர் மிகவும் விரும்பினர்; சர்வேஸ்வர ரூபமான இயற்கை வனங்களி

ணழகைத் தரிசித்துக்கொண்டு பிரயாணஞ் செய்தார்; கானகத்தில் மலர்ந்த மலர்கள் தென்றலில் தம் சுகந்தத்தைக் கலந்து மெதுவாக வீசுவதை சுவாசித்துப் பரவசமடைந்தார்; ஆனந் தம் பொங்க அருமையாக நாம சங்கீர்த்தனஞ் செய்து கொண்டே சென்றார். சமாதி யடைந்து அடிக்கடி அவனருள் வெள்ளத்தில், காட்டு வெள்ளத்தால் அடித்துச் செல்லப்படும் சந்தனமரத்திற் கொப்பானார்; பிரயாணத்தை எளி தாகத் தம்முடன் பிராயணஞ் செய்வோருக்கு ஸ்ரீமத் ராமாயணத்தை யும், பாகவதத்தையும் சொல்லியவாறே வழிகொண்டார்.

யாத்திரையில் உற்சாகம்

ரெய்ப்பூரில் அக்காலத்தில் உயர்தரக் கலாசாலைகளில்லை. இத னால் அவருடைய உயர்தரக் கல்வி சிறிது தடையுற்றது. ஆனால் நரேந் திரர் தாம்கற்ற கல்வியைத் தமது தந்தையுடன் தர்க்கிப்பதிலும் நன் னூல்களைக் கற்பதிலும் விருத்தி செய்துவந்தார். தந்தையுடன் தர்க் கிக்கும் பொழுது தம்முடைய வாதம் நியாயமானதென்று அவர் உணர்ந்தால் தந்தையிடம் பயமின்றி ஜெயமடை வார். புவனேஸ்வரி, தன் மைந்தனின் வெற்றி யைக் கண்டு மகிழ்வாள். விஸ்வநாத தத்தர் இலக் கிய ஆராய்ச்சியில் வல்லவராதலின் அவரிடமிருந்து இந்த இரண்டு வருடகாலத்தில் நரேந்திரர் தமது பின்வேலைக்குச் சாதகமான பல அரிய விஷயங்களைத் தெரிந்துகொள்ள ஏது விருந்தது. பின்பு, விசுவ நாத தத்தர் குடும்ப சகிதம் கல்கத்தாவுக்குத் திரும்பினார். ஒரு ஆண் டுக்குள் நரேந்திரர் கல்கத்தாவில் பிரவேசப் பரீட்சையில் தேர்ந்து, மேல் வகுப்பிற் சேர்ந்தார். வடமொழியிலும், சுதேசச் சரித்திரத் திலும், கணக்கிலும் அவர் அதிக விற்பன்னரா யிருந்தார். இவற்றோடு கூட வானசாஸ்திரம், சர்வதேசச் சரித்திரம், ஆங்கில இலக்கண இலக்கியங்கள், மேல்நாட்டுத் தத்வஞான சாஸ்திரம் முதலியவற்றை ஏற்கனவேயுள்ள இதர பாடங்களுடன் கற்றுத் தேர்ந்தார்.

பல்துறைப் படிப்பு

வித்யாசாலையில் நரேந்திரர் வாசித்துக்கொண் டிருக்கும் பொழுது அவருடைய வகுப்பில் அவலக்ஷணமான முகத்தையுடைய ஓர் மாணவ னுண்டு. மாணவர்களுக்குப் பொழுது போகாவிடில் அப் பையனைக் கேலி செய்வதில் காலங்கழிப்பர். ஒருநாள் அப்பையனை நரேந்திரர் காதைப் பிடித்திழுக்க, இதைக் கவனித்துக்கொண்டிருந்த மற்றொரு மாணவர் நகைப்பை அடக்க முடியாது உரக்கச் சிரிக்க, இவற்றைக் கவனித்த உபாத்தியாயர் நரைப் பிரம்புகொண்டு கோபம் தணியும்

வரை அடிக்க, நரேந்திரர் விம்மி விம்மி யழுதுகொண்டு வீட்டிற்குப் போக யத்தனித்தார். இவற்றை முற்றுங் கவனித்துக்கொண்டிருந்த வித்யாசாகர் மஹாஷயர் நரேந்திரரை யடித்த உபாத்தியாயரைக் கடிந்துபேசி இவரைச் சமாதானப் படுத்தினர்.

வித்யா சாகர மஹாஷயர் என்பார் வங்காளத்திலிருந்த பெரிய அறிவாளிகளுட் சிறந்தவர். அவர் வித்தைக்கடலாக விளங்கியமை யால் அவருக்கு வித்யாசாகர் என்ற பட்டம் விமரிசையாகக் கிடைத் தது. மஹாஷயர் என்பதற்கு மகோபாத்யாயர் என்பதே பொரு ளாகவும் பின்னே யமைந்தது. வங்கநாட்டில் அவ ரால் ஸ்தாபிக்கப் பெற்ற கழகங்கள் அனந்தம். வங்க பாஷையில் மஹாஷயர் பல கிரந்தங்களை யியற்றி யுள்ளார். அவராற்றான் வங்காளி பாஷைக்கே பெருமையும் உயர்வு மேற்பட்டதெனினும் பொருந்தும். இப்பெரியாருக்கு நரேந் திரரிடம் அதிகப் பிரிய முண்டு.

வித்யாசாகர் மஹாஷயர்

விஸ்வநாத தத்தர் ஆழ்ந்த யோசனையுடன் கூர்ந்து நோக்க வேண்டிய பல விஷயங்களைக் குறித்துத் தம் மைந்தனுடன் வாக்கு வாதம் புரிவார்; நரேந்திரருடைய சாதுர்யமான பதிலைக்கேட்டு மகிழ் வார். நரேந்திரருடைய தந்தை பொது நோக்கமும் விசால ஹிருதயமு முடையவர். மானுடப் பிறவியில் 'சிறப்புஞ் சீலமும்' நலந்தருமே யன் றிப் பிறப்பு நலந்தரா தென்பதே அவரது நம்பிக்கை. அக்காலத்திலேயே இந்தியாவில் கிறிஸ்தவ சமயம் பரவி வந்தது. அம்மதக் கொள்கைகளைக் குறித்து விசுவநாத தத்தர் தம் குமாரனுடன் அடிக்கடி தர்க் கிப்பார். தர்க்கத்தின் கருத்து "பிறமத சித்தாந்தங்களை நாம் நன்கு தெரிந்துகொண்டால் மட்டுமே நமக்கு நமது சமயக்கொள்கைகளின் உயர்வு வெள்ளிடை மலைபோல் விளங்கு" மென்பதே. ஹிந்துமதத்தி னுயர்வை நரேந்திரர் மேல் நாட்டில் நிலைநாட்ட இக்கோட்பாடு அவருக் குப் பேருதவி புரிந்தது.

தந்தைக்கும் பிள்ளைக்கும் தர்க்கம்

நரேந்திரநாதர் கல்கத்தா தலைநகரக் கலாசாலையில் வாசித்துவரும் பொழுது ஆங்கிலம், வடமொழி, தேசச் சரித்திரம் ஆகிய மூன்று பாடங்களிலும் நிபுணத்துவ மடைந்திருந்தார்; வருடாந்தர பரீக்ஷை களில் அவர் முதலாக நிற்பார். சமையல் வேலையில் இவருக் கதிகப் பிரியமுண்டு. இவர் சமைத்ததை இவரது சகோதரிகளும், பெற்றோ ரும் மகிழ்ந்து புசிப்பதுண்டு. நரேந்திரர் புதுவகையான விளையாட்டு

களாலும் விநோதமாகப் பேசுந் தன்மையாலும் தமது நண்பர்களை உற்சாகப்படுத்தி வருவார். அவருடன் பழகுவதே ஓர் ஆனந்தம் விளைக்கும். அடிக்கடி சிறந்த பல பண்டிதர்களும், தேசாபிமானிகளும் விஸ்வநாத தத்தரைக் காணவருவார்கள். அவர்களுடன் நரேந்திரநாதர் தர்க்கிக்கப் புகுந்து, புயற்காற்று போன்று அவர்களை எதிர்த்து வாக்குவாதஞ் செய்து வெற்றி பெறுவார். ஒரு சமயம் வங்காள சரஸ்வதி யெனத்தகும் ஒரு பெரிய பாஷாநிபுணர்—சாஸ்திர விற்பன்னர், தத்தரைக் காணவந்தார். அப்பெரியாருடன் நரேந்திரர் உரையாடலுற்று அவரை மயங்கவைத்து ஓர் விரிவுரை நிகழ்த்தினர். அப்பெரியார் இவரைப் புகழ்ந்து 'நீ உன் சொற்பெருக்கால் பிரபஞ்சத்திலுள்ள அறியாமையைப் போக்குங்காலம் சமீபிக்கும்' என்று ஆசி கூறிப்போந்தார். இவற்றையெல்லாம் கவனித்து வந்த விஸ்வநாத தத்தர் 'தன் மகன் சான்றோன்' என உள்ளம் பூரித்தார்.

தன் மகன் சான்றோன்

கல்கத்தா கலாசாலையிற் படிக்கும்போது நரேந்திரருக்குப் பரிசுகள் கிடைத்துக்கொண்டே யிருந்தன. ஓட்டப் பந்தயத்தில் முதற் பரிசு இவருக்கே கிடைத்து வந்தது. 'நானு வஸ்துப் பிரதரிசனக் காக்ஷி' யில் (Exhibition) பட்டில் சரிகை வேலைசெய்து சித்திரிப்பதில் இவருடைய உதவியால் இவரது சகோதரி முதற் பரிசுபெற்றாள். மிகுதியும் மதிக்கப்பெற்ற குடும்பத்தாருக்கு வெகுமதிகளுக் கென்ன குறை!

நரேந்திரர் உயர்தரக் கலாசாலையில் வாசித்து வருங் காலத்தில் கவி இயற்றுவதிலும், அலங்கார சாஸ்திரத்திலும் நிபுணராயிருந்தார்; ஞான தர்க்க சாஸ்திரங்களில் வல்லவராயினர்; அக் கலாசாலைக்கே ஓர் மாணிக்கம்போல் விளங்கினர். அக் கலாசாலைத் தலைவரான ஸ்ரீஜத் சுரேந்திர நாத் பனர்ஜி யவர்கள் ஒரு சமயம் 'இவரை மாணவராகப் பெற்றது அக்கலாசாலையின் பெரும்பாக்கியமே' என்று புகழ்ந்தார் கற்றாரைக் கற்றாரே காமுறுவ ரன்றோ! விஷயங்களை யுணர்த்துவதிலும், அறிவதிலும் நரேந்திரருக்கு அதிக சிரத்தையும் ஆற்றலு முண்டு. பெரிய விஷயங்களை விளங்கக் கூறுவதில் அவருக் கதிகத் திறமையுண்டு. அவர் ஆடம்பரத்தையும், படாடோபத்தையும் வெறுப்பார். தூய வாழ்விலே அவருக்குப் பிரேமை யதிகமிருந்தது. பரிசுத்தமான மனமுடையோருக்கு நன்மை செய்வதில் அவர் சற்றும் பின் வாங்குவதில்லை. எங்குமே மாணவர்களுக்குப் பரீக்ஷை

நாட்களென்பவை ஒரு சோதனைக்காலம். அதிலும் இந்திய மாணவர்கள் பணத்தைக் கொட்டிப் படிப்பதால் அப் பரீக்ஷைக்காலம் அவர்களுக்குப் பெருத்த சோதனைக் காலமாகின்றது. நரேந்திரர் பரீக்ஷை நாட்கள் நெருங்கியவுடன் தனிமையாக வாசிக்க விரும்பித் தமது பாட்டியாரகத்திற்குச் சென்றார். இரவும் பகலுமாகப் படித்து பாடங்களைப் பூர்த்தி செய்தார். சங்கீதத்தில் நரேந்திரருக்கு நல்ல ஞானமுண்டு. அவருடைய இசையைக் கேட்டு மாணவர்களும், ஆசிரியர்களும் வியந்து புகழ்வார்கள். சங்கீத சாஸ்திரத்திலும் அவருக்கு நல்ல ஆராய்ச்சியுண்டு. 'சங்கீத சாஹித்ய சாஸ்த்ரம்' என்ற வங்க பாஷா கிரந்தத்திற்கு இவர் ஓர் முகவுரையுந் தந்துள்ளார். சங்கீதத்தின் பெருமையே பெருமை! அதனைப் போற்றுவார் தும்புரு, நாரதர், சரஸ்வதி முதலியவர்கள். நரேந்திரர் எப்பொழுதும் 'தம்புரு' ஒன்று வைத்திருப்பார்; அதை மீட்டி அதன் நாதத்தில் தமது கம்பீரமான குரலை இசைத்துப் பாடுவார். இவர் தாள ஞானம், ஸ்ருதி ஞானம், ஸ்வர ஞானம், லய ஞானங்களுடன் பாடுவதைக் கேட்ட அவர் பாட்டியாரில்லத்திற்கு எதிர் வீட்டிலிருந்து ஓரிளங் கைம்பெண் அடிக்கடி இவரிருக்கும் அறைக்கு வந்து இவரறியாவண்ணம் ஒதுங்கி யிருந்து இவரது கானத்தைக் கேட்பாள். இவரிடத்தில் அவளுக்கு அதிகப் பிரேமை யேற்பட்டு விட்டது. ஒருநாள் நள்ளிரவில் இவர் பாடிக் கொண்டிருக்கும்போது இவ்விதவை இவருடைய அறைக்குள் வந்தாள். அவளோ இளம்பெண்! நரேந்திரரோ பால்யர்! இவர் மீது காதல்கொண்ட அத்தையல் காதற் புன்னகையுடன் நின்றாள். இவளைக் கண்டதும் நரேந்திர நாதர் "தாயே! என் இங்குற்றனை! வந்த காரிய மென்ன! தாயே" என்று தாய்முறை கொண்டாடிப் பல தடவையும் 'தாயே' என்றழைத்து, விரைந்து எழுந்து அவள் காலில் விழுந்தார். அவளும் நாணமுற்றுச் சென்றாள் தன் வழி. இவர் இதே உணர்ச்சியுடன் "உலகமே தாய் மயம்! சகோதர சகோதரிகள் நிறைந்த வீடு!" என்று அகக் கண்ணால் நோக்கினர். மாமிசக் கண்ணுக்குத்தான் 'அவள் அழகாயிருக்கிறாள்' என்ற பல அசம்பாவித எண்ணங்கள் தோன்றும். நார் தமது அகக்கண் கொண்டு பார்த்தாராதலால் ஆனந்த ராயினர்.

காதல் மங்கையின் காம வலை

> முகத்துக் கண்கொண்டு பார்க்கின்ற மூடர்காள்
> அகத்துக் கண் கொண்டு பார்ப்பதே யானந்தம்

என்பது முதுமொழி யன்றோ!

நரேந்திரர் தூயவாழ்வை விரும்பினார். தூய்மையே சகல சித்திக்கு மாதாரமா யிருப்பதை அவருணர்ந்தார்; தூயோனும் மாயனுமான கண்ணனிடத்தில் அத்யந்த பக்தி செலுத்தினார்; பாபு கேசப் சந்திர சேன் என்னும் பெரியாரியற்றிய 'நவ பிருந்தாவன யோக' என்ற நாடகத்தை நடத்தி, அதில் யோகி வேடந்தாங்கி கண்ணனைக் கனிந்துருகிப் பணிந்தார். வாளைச் சுழற்றி விளையாடும் பயங்கரமான விளையாட்டை நரேந்திரர் அலக்ஷியமாகப் புரிவார். வீரேஸ்வர ரென்று அவருக்குப் புவனேஸ்வரி யம்மை யளித்த பெயர் சாலப் பொருந்துவதா யிருந்தது. அவருடன் பழகியவர்களுக் கெல்லாம் அவரால் மனோவலிமை யேற்பட்டு வந்தது.

பூர்வ காலங்களில் எவ்வித உயர்ந்த நோக்கங்களைக் கொண்டு நாடகங்கள் நம் நாட்டில் நடிக்கப்பட்டனவோ அக்கருத்துகளைக் கொண்டு சிறந்த முறையில் நடிக்கப்பெறும் நாடகங்கள் அக்காலத்தில் கல்கத்தாவில் பல நிகழ்ந்தன. ஒரு நாள் நரேந்திரர் நாடகத்திற்குச் சென்று அதனை யனுபவித்துப் பார்த்துக் கொண் டிருக்கும்போது ஒரு 'போலீஸ்' வீரர் கொட்டகைக்குள் வந்து ஒரு நடிகனை நோக்கி 'நியாய பரிபாலன சட்டத்தின் கட்டளைப்படி உன்னைத் தடுக்கிறேன்' என்றான். நாடகத்தை ஆவலுடன் பார்த்துக் கொண்டிருந்த நரேந்திரர் சரேலென்று மேடைமீதேறி அப்போலீஸ் வீரனை விளித்து "விரைந்து வெளியே செல்! நாடகம் முடியும் வரை நாடாதே இவ்விடத்தை. பின்பு, உன் சட்டப்படி அவனை யிட்டுக்கொண்டு போ! இங்கு நாடகம் பார்க்க வந்தவர்களுக் கெல்லாம் நீ நஷ்டத்தை யுண்டு பண்ண யத்தனிக்கிறாய். ஜாக்கிரதை!" என்று உரக்கச் சொன்னார். இவருடைய வீர மொழிகளைக் கேட்ட அனைவரும் "வெளியே செல்! விரைந்துபோ," என்று பலத்த சப்தஞ் செய்யவே ஜவான் அஞ்சி அகன்றனன். இவ்வித வீரலக்ஷணமே அவரைச் சென்ற இடங்களி லெல்லாம் தலைவராக்கிற்று.

நாடகக் கொட்டகையில் நரேந்திரர்

நரேந்திரர் சித்திரலேகனம், நர்த்தனம், சங்கீத சாஹித்யம் முதலான கலைகளில் விசேஷப் பயிற்சி பெற்று விளங்கினார்; மேற்கூறிய கலைகளில் குருவினுஞ் சிறந்த சீடராயினார். அவர் கற்கப் புகுந்த கலைகளிலெல்லாம் பண்டிதராகிப் புகழுற்றார். அவருடைய கண்டோருள்ளத்தை யிழுக்கும் வசீகர வதனமும், கம்பீர வீரத் தோற்றமும், ஒய்யார நடையும், உயர்ந்த குணமும், நாளுக்கு நாள் நயந்து

தழைத்து வளர்ந்து வந்தன. அனைத்திலும் வித்வத்வம்! விசேஷம்! ஆனந்த வெள்ளம்! ஆகவே இவ் வத்தியாயத்தில் அவருடைய 'கல்விப் பயிற்சி' வரையப் பெற்றது; மாணவப் பருவத்தின் சில மாட்சிமைகளும் கூறப்பெற்றன.

6-ம் அத்தியாயம்.

சில அரிய தோற்றங்கள்

ஊக்கம் ஆக்கந்தரும்! ஒருவனுடைய வாழ்வின் நலமுழுதும் அவனுடைய ஊக்கத்தின் அளவைப் பொருத்ததாகவே யிருக்கின்றது. ஊக்கமின்றி எக்காரியமும் சித்திப்பதில்லை. ஒவ்வொரு மனிதனும் ஒவ்வொரு விதத்தில் ஊக்க முடையவனு யிருக்கின்றான். ஊக்கமே யொருவன் எதிர்கால நிலையை உயர்த்துந் தன்மையது.

நரேந்திர நாதர் கல்கத்தா நகரக் கனுப்பப்பட்டதும் அங்கு, உபாத்தியாயர், முதலில் ஆங்கில பாஷையைக் கற்பிக்கத் தொடங்கியது கண்டு, வெகுண்டு, 'ஏன் முதலில் நான் ஆங்கிலத்தைக் கற்க வேண்டும்? என் தாய் மொழியை யான் முதலிற் கற்க வேண்டியது கடமை யன்றோ?' என்று வருந்தி, தந்தையிடம் 'தான் ஆங்கிலங் கற்க முடியாது' என்று கூறி யழுதார். விஸ்வநாத தத்தர் ஹிதவசனங்களால் நரேந்திரரைச் சமாதானப் படுத்தினர். ஆனாலும் இராமச்சந்திர தத்தர் என்ற பெரியார் நரேந்திரரைத் திருப்தி செய்திராவிடில் நரேந்திரர் ஆங்கிலம் கற்றே யிராரென்பது திண்ணம். சில மாதங்களில் இவர் ஆங்கிலத்தில் அதிக ஊக்கஞ் செலுத்துவதைக்கண்ட பெற்றோரும் மற்றவரும் பேரானந்த மெய்தினர். அவர் ஆங்கிலங் கற்கவேண்டு மென்பது சர்வேஸ்வரனுடைய எண்ணம்! அவர் அம்மொழி பயின்று சர்வமத சபையின் நாயகமாக விளங்கவேண்டு மென்பது ஐயனுடைய கருத்து! ஆங்கில மொழியில் அதி விசேஷ ஞான முடையவராய், அஞ்சாத வீரராய் அமெரிக்காவில் சொற்பொழிவுகள் நிகழ்த்த அப்பனிருக்கின்ற ரென்றுணர்ந்தே கலைமகள் தன் கடைக்கண்ணால் சற்று நரேந்திரரைப் பார்த்தாள். அவள் பரிசுத்தமான பார்வையால் தர்மம் சிறந்தது! அருள் சுரந்தது! அன்பு பெருகிற்று!

தாய்மொழிப் பற்று

அவருடைய இளமையிலேயே அவருடைய எதிர்காலம் நன்கு விளங்கிற்று. அதற்கான அருள்வாக்கும் பிறந்தது. 1869-ம் ஆண்டில் விஸ்வநாத தத்தரின் சிறிய தந்தையாகிய காளிப் பிரசாத தத்தர் பிணிவாய்ப் பட்டு இறக்குந் தருவாயி லிருந்தார். மரண காலத்தில் கருட புராணத்தை வாசிக்கக் கேட்டால் செல்கதி நல்கதியாகு மென்பது ஹிந்துக்களின் நம்பிக்கையல்லவா? அதன்படி பிரசாதர் கருடபுராணத்தை வாசிக்கும்படி வேண்ட, நரேந்திரர் பயபக்தியுடன் அப் பெரியார் பக்கலிலமர்ந்து கருடன் அவனுடைய அன்னை வினதையுடன் பறந்த கட்டத்தைத் தெளிவாகப் படித்தார். பிரசாதருடைய சுவாஸமும் சிறிது சிறிதாக அடங்கிக் கொண்டே வந்தது. அவர் இறக்குந் தருவாயில் 'உன்னுடைய எதிர்காலம் மிகவும் பிரபல்ய மானதா யிருக்கும். நீ லோக பூஜ்யனுவாய்' என்று ஆசி கூறினர். இம்மகானுடைய மொழிகள் பிற்காலத்தில் மெய்ப்பிக்கப்பட்டன. அவருடைய விருப்பமும் நிறைவேறிற்று.

"பெரியாரைப் பேணல்"

நரேந்திரர் பள்ளிப் பிள்ளைகளுடன் கலந்து விளையாடி அவர்களை உற்சாகப் படுத்துவார். "நான் பெரிய சந்நியாசி யாவேன்" என்று அவர் அடிக்கடி தம் நண்பர்களிடங் கூறுவதுண்டு. புதிதாக ஒரு சிறுவன் கலாசாலையிற் சேர்ந்தால், நரர் அவனை நோக்கி, 'உன் பாட்டனுர், அல்லது மூதாதையரில் எவராவது துறவியா யிருந்த துண்டா?' என்று கேட்பது வழக்கம். "ஆம்!" என்ற மறுமொழி கிடைத்தால் அவனிடம் அதிகப் பிரியம் கொள்வார். அவர் எப்பொழுதும் சாதுக்களின் சரித்திரங்களைக் கூறுவதிலும், கூறக்கேட்பதிலும், 'நான் சந்நியாசி யாவேன்; சம்சார பந்தத்தி னின்றும் விலகி விளங்குவேன்' என்று உறுதி பயக்கும் விஷயங்களில் ஊக்கங் கொள்வதுமாக இருந்தார். துறவிக் கெல்லாம் மூலனாய் விளங்கும் பரமேஸ்வரனுக்குப் பிரியமான மலர்களைத் தரும், சண்பக மரத்திற்குத் தண்ணீர் பாய்ச்சுவதும், மலர்கொண்டு பகவானை அர்ச்சிப்பதும், அச் சண்பக மரத்தடியில் விளையாடுவதுமாக அவருடைய சித்தம் சந்நியாஸ ஆச்சிரமத்திலேயே மிக்க ஈடுபாடுடையதா யிருந்தது. ஒருநாள் நரேந்திரர் அச்சண்பக மரக் கிளைகளைப் பிடித்துத் தொங்கி விளையாடிக்கொண் டிருக்கையில், ஓர் வயோதிகர் இவரை நோக்கி 'அம்மரத்தின்மேல் ஏறக்கூடாது' என்றார். இவர் 'ஏன்?' என்று வினவ, அப் பெரியவர் அதில் பிரம்ம

'விளையும் பயிர் முளையிலே'

ராக்ஷசு என்னும் ஒரு பிசாச மிருக்கின்றது' எனப் பகர்ந்தார். இந்திரர் 'அது என்ன செய்யும்?' என, விருத்தர் 'மரத்தில் ஏறுபவரின் கழுத்தை முறித்து விடும்,' எனப் பயமொழி கூற, நரேந்திரர் மறுமுறையும் ஏறி அக்கிளைகளைக் குலுக்கினார். அதைக் கண்ணுற்ற வயோதிகர் 'அவ்விருக்ஷத்தின் மேல் பின்னும் ஏறுவதென்னை?' யென, நரேந்திரர் "நான் அம் மரத்தின் உச்சியை யடைந்து இத்துணை நேரமாகியும் என்னை யப் பிசாசு இன்னும் ஒன்றும் செய்ய வில்லையே. ஏன்?' என்றார். அப் பெரியார் அதிசயித்து இவருடைய அஞ்சாமையை மெச்சிப்போனார். இதை நரேந்திரர் பல இடங்களில் ஓர் உதாரணமாக எடுத்துக்கூறி "நீங்கள் ஒரு விஷயத்தைப் புத்தகத்தில் படித்ததைக் கொண்டு மட்டும் நம்பிவிடலாகாது. ஒருவர் கூறினாரென்றும் ஒப்பவொண்ணாது. எதையும், நீங்களே ஆராய்ந்து பார்க்க வேண்டும். பொய்க் கூற்றை நம்புதலாகாது. இதுதான் சத் விசாரமாகும்" என்று உரைப்பதுண்டு.

நரேந்திரநாதர் ஒவ்வொரு விஷயத்தையுந் தம் தாயிடத்துச் சொல்லி அவளது அன்பான நன்மொழிகளை யேற்று அதன்படி நடப்பார். இதுவன்றோ சிறுவர்களுடைய சுபாவம்! ஒருவன் குழந்தையானாலும், மனையாளையடைந்த மணாளனானாலும், பதவிகளை வகிக்கும் பாக்கியசாலியானாலும் பிள்ளைகளைப்பெற்ற பிதாவானாலும், பெயரோன் பிறக்கப் பாட்டனானாலும், எப்பொழுதும் தாயன்புமட்டும் தனித்த பெருமையுடன் நிற்குமன்றோ! ஏனையோரைவிடப் பெற்றவளுக்கன்றோ தனிப்பட்ட உயர்ந்த பாத்யமுண்டு! பஞ்சபூத சாக்ஷியாய் அவளன்றோ மகனின் நன்மையைக் கருதுகின்றாள். புவனேஸ்வரி எப்பொழுதும் தன் மைந்தனைப் பார்த்து "சத்தியத்தை நிலைநிறுத்து! இன்னல்களைப் பொருட்படுத்தாதே! வருவது வரட்டும்! எதற்கு மஞ்சாதே" என்று கூறித் தேற்றுவாள்! அவளன்றோ அன்னை! ஏனையோர் என்னை? 'மாய்வதாயினும் கைக்கொண்ட தூய கருமத்தைத் தவிராதே' என்று புவனேஸ்வரியம்மை அடிக்கடி நரேந்திரரை ஊக்கி வருவாள். தாரணியில் தந்தையாவார், தனயனுக்குத் தகைமையுடைய கல்வியை யூட்டுவதிலும், தாய், குழந்தையின் உடலையும் அறிவையும் ஒழுக்கத்தையும் வளர்ப்பதிலும் ஊக்கங்கொள்ளுந் தன்மையினர். ஒருவனுடைய வாழ்நாளில் கீர்த்திக்கும் உயர்வுக்கும் தூஷணைக்கும் புஷணைக்கும் அவனுடைய பெற்றோர்களே காரண பூத

'தாயே தெய்வம்'

ராகின்றனர். சிறந்த தாய்மார், தங்கள் குழந்தைகளிடத்துச் சீலம் தயை குணம் அடக்கம் ஆனவற்றைப் பெருக்குந் தன்மையராகின்றனர். "உயிரை யிழப்பதாயினும் சத்தியத்தைக் கைவிடாதே! அனைவரிடத்தும் நீ யன்பு செலுத்து! தன் மதிப்பையும் சுயமரியாதையையும் காப்பாற்றிக் கொள்வதில் நீ கண்ணேட்டமா யிரு! உன் அன்பு மழையால் அனைவருக்கும் ஆனந்தத்தை வழங்கு! உலகமே உன்னால் ஆனந்தமய மாகட்டும்" என்ற மாதுர் வாக்கியங்களை நரேந்திரர் அவரது வாழ்நாட்களில் பன்முறை பாராட்டிப் பேசுவார். 'தாயின் உள்ளத்தைக் குளிரச்செய்யாதவன் எங்குமே புகழுடன் வாழ்ந்த தில்லை. பாரத பூமியில் மனைவி நிலையைவிடத் தாயின் தன்மையே தவச்சிறந்தது. குடும்பத்தார்க்குள் தாய்க்கே அதிக உயர்வு! அவளே குடும்பத்தெய்வம்! அவள் சொல்லுவதே சட்டம்! அதை நிரூபித்தான் ஸ்ரீரகுராமன்! மனைவியோ கணவனைப் பொருத்த மட்டில் விரும்பப் படுபவள். வசிக்கும் பூமியும், வழிபடுந் தெய்வமும், வளந்தோடும் வளநதியும் ஏனை யுயர்ந்தன யாவும் தாயென்று போற்றப் படுதல் இக் கருத்து பற்றியேயாம். நாவலன் தீவினுள் தோன்றும் நானா உயிர்களும் தாயே கதியென்று நம்பி யிருக்கின்றன' என்பது அவருடைய உபதேசம். 'பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் நற்றவவானினும் நனி சிறந் தனவே' என்றார் பாரதியும்.

நரர் பால்யத்திலேயே பக்குவப் பட்டார். கேவலம் வயதால் மட்டும் மனிதன் பெரியவனென்று கருதப் படுவதில்லை. எண்பது வயதான கிழவன்—நடத்தையால் சிறுவனாகவே யிருக்கலாம். சிறுவன் குணநலங்களால் சிறந்தவனாகலாம். அறிவின்—ஆத்மஞானத்தின் வளர்ச்சியே ஒருவனைச் சீரியோனாக்கும். அத்வைத சமய ஸ்தாபகரான ஸ்ரீ சங்கரர் தமது பன்னிரண்டாம் பிராயத்தில் மதஸ்தாபனஞ் செய்து விளங்கினார். அவர் தீர்க்க சமாதியடைந்த முப்பத்திரண்டு ஆண்டுகளுக்குள் அவர் நிறுவிய மதம் ஹிமாசல முதல் கன்னியாகுமரிவரை பரவிற்று. இளைஞராயிருக்கும்போதே ஸ்ரீ சங்கரர் கீதைக்கு பாஷ்யம் வரைந்தார். ஐந்தில் ஆனதுதானே ஐம்பதுக்கும். கிரேக்க வீரரான அலெக்சாந்தரென்ன? அமரிக்கை நாட்டி னதிபதியாக விளங்கிய ஆப்ரகாம் லிங்கனென்ன? செப்பருந் திறலோன் நெப்போலிய னென்ன! இவர்களுடைய இளமையே எதிர்காலத்தைக் காட்டும் கண்ணாடியா யிருந்தனவன்றோ? நல்லொழுக்கமும் தூய மனமும் இவர்களுக்கு இளமையிலேயே பொருந்தி யிருந்தன வல்லவா?

'சிறுவயதில் சிறந்த மேன்மை'

வாய்ப் பேச்சில் வேதாந்தம் பேசுவதை அவர் வெறுப்பார்; 'கற்கக் கசடற, கற்றபின் நிற்க வதற்குத் தக' ஆதலான், பரிசுத்த வாழ்வே வீட்டை நல்குமென்பது அவருடைய கொள்கை. வாலி பர்களை அடிமைப்படுத்தும் தீய ஒழுக்கங்கள் அவரைக்கண்டு அஞ் சின. உறுதியும். மனவலிமையு முடையாரைத் தீயவை எவ்வித மணுகும்? ஆத்மார்த்த சித்திக்குத் தூய்மை அவசியம்! பரிசுத்த மென்பதற்குத் தீச் செயல்களை எதிர்ப்பதென்பதல்ல; நற்கருமங்களை யோம்ப லென்ற பொருளே. அனைத்தையும் சமமாகப் பாவிக்கும் இயற்கையே தூய்மையின் முக்கியாம்ச மாகும். அருள்வெள்ள மதிலே யாதெனன்பதற மூழ்கி யிருத்தலே பரிசுத்த வாழ்வு. பரிசுத்த மானவனே பரப்பிரம்ம ஸ்வரூபி யாகின்றான். இதையே இயேசு கிறிஸ்து நாதர் "பால்போன்ற மனமுடையாரே பாக்கியவான்கள். கர்த்தர் அவர்களையே அன்போடு ஏற்பார்" எனப் புகன்றார்.

நரேந்திரர் சுத்தப் பிரமச்சரிய வாழ்வை அனுஷ்டித்து வந்தார். தமது சக்தி யென்னும் வாள்கொண்டு தீயதை மாய்த்தார். பிரம்மச் சரியமே நல்லாசிரியனை யடுத்துக் கல்வி பயிலும் பாக்யமான காலமாத லின், ஆத்மவித்தை தூயநிலை யற்றார்க்கு லபிப்பதில்லை. கேவலம் அவித்தையையே அன்னோர் அடைகின்றனர். கல்வி மிக்கக் கஷ்டப் பட்டுணர வேண்டிய தென்பது இதனாற் பெறப்பட்டது. பிரமச்சரி யத்தில் மனதை யொன்றுபடுத்தி, ஆகம, சாஸ்திர, புராண, இதிகாச, இலக்கிய, இலக்கணங்களை ஆசானைச் சார்ந்து அமைவரக் கேட்டு உணர்ந்தவர்களுக்கே ஞானமார்க்கம் சுலபமாகப் பிராப்தமாகும். ஏனையோர்க்குக் குளிக்கப்போய் சேற்றைவாரிப் பூசிக்கொண்ட கூற் றாய் வந்துமுடியும் என்பது நரேந்திர நாதரின் பால்யானுபவ தாத்பரிய சந்திரிகை.

கீதை ஹிந்துக்களுடைய முக்கியக் கிரந்தம்! சத் விசாரஞ் செய்து சங்கைகள் நீங்கப் பெறுதார்க்கு அது சாந்தியளிக்க வல்லது. வேத வேதாந்தங்களின் தாத்பரியங்களைச் சுருக்கி, ஐயந்திரிபற, உணர்த்துந் தன்மை கீதைக்கே யுண்டு. கீதை விவேக ஸ்வரூப மானது. அதனை ஒத்ததும் அதனில் மிக்கதுமான நூல் வெறெந்த மொழியிலுங் கிடையா தென்பது, இக்கீதையை ஒவ்வொரு மதத்தி னரும் தேயத்தினரும் தத்தம் பாஷைகளில் மொழிபெயர்த்துப் போற்றுவதி னின்றுமே நன்கு புலனும். இக்கிரந்தம் ஸ்ரீமத் பாரத காவ்யத்தின் ஓர் பிரிவு. ஆரியர்களுடைய பெருமையையும் நாகரீகத்

தையும் அவ்வரசர்களின் ஆட்சி முறைகளையும் மகாபாரதம் ஆரம்பித்துக் கூறுகிறது. பாண்டவர்கள் கபடமான சூதாட்டத்தால் தம் இராஜ்யத்தை யிழக்க, துரியோதனன் பாண்டவர்களின் தர்ம பத்னியான திரௌபதியைத் துகிலுரிய,

ஆறாகி யிருதடங்க ணஞ்சனவெம் புனல்சோர வளகஞ் சோர
வேறான துகிறகைந்த கைசோர மெய்சோர வேறோர் சொல்லுங்
கூறாமற் கோவிந்தா! கோவிந்தா! வென்றரற்றிக் குளிர்ந்து நாவி
லூறாத வமிழ்தூற வுடல்புளகித் துள்ளமெலா முருகி னாளே.

—வில்லி பாரதம்.

என, அவள் 'கோவிந்தா!'' என்றழைக்கப் பகவான் ஆவலுடன் ஓடி வந்து ஆடையளிக்க, பின்பு, தர்மம், வீரம் சத்யம், ஞானம், காருண்யம் ஆனவற்றின் ஸ்வரூபிகளான ஐவரும் சத்தியத்திற்குக் கட்டுப்பட்டு, கானகத்தில் பன்னிரண்டாண்டுகள் வசிக்கவும் பின்பு ஓராண்டு அறியா வாழ்வியற்றவும் உட்பட்டு, நாடிழந்து நலங்களையெல்லாம் துறந்து கொடிய விலங்குகள் உறையுங் கானடைந்து வசிக்க, அவர்களை முடிக்கத் துரியோதனன் செய்த சூழ்ச்சிகளினின்றும் பகவான் அவர்களைத் தப்புவிக்க, சூர்ய பகவானருளிய அட்சய பாத்திரத்தால் துர்வாசருடைய முனிவை வென்று, குறித்தபடி ஈராறாண்டுகள் அடவியில் வதிந்து மாறுவேடம் பூண்டு ஓராண்டு ஒளிந்து திரிந்து, அதன் பின்னரும் அரவக்கொடியோன் அரசளிக்காத அகந்தையைக் கண்டு, பக்தவத்ஸலனான பகவானை யழைத்துத் துரியோதனனிடம் தூதனுப்ப, கன்னெஞ்சினனான அக்கடும்பாவி, ஐவருக்கு ஐந்து வீடுகள் கூட அளிக்க அண்ணல் வேண்டியும் மறுத்து, 'ஈயிருக்கும் இடமெனினும் இப்புவியில் யான் அவர்க்கு அரசு இனிக் கொடேன்' என்று வாய் மதங்கொண்டு அப்பேயன் பேசி, அகிலலோக காரணனாகிய—அஞ்சன வண்ணனுக்கு, மண்ணில் குழிவெட்டி மாயஞ் செய்ய, கெடுவான் கேடு நினைப்பானாகிய அவனுக்கு, கண்ணன், முறுகு சினத்துடன் அடி அதலத்துற முடி ககனத்துற' நெடியனாய் நின்று 'துர்யோதனா! உன்னைப் புதைக்க சின்னக் குழி யொன்றை வெட்டி வைத்திருக்கிறேன்' என்றிகழ்ந்து கூறி, மெய்யன்புடைய ஐவரை யடைந்து யுத்த சன்னத்த மாகும்படிக் கூறி, புரவலர்க்கெல்லாம் போர்த்துணை புரிய வேண்டி யொற்றர்களை யனுப்பிவிட்டுத் தாமும் சித்தமாயினர்.

''கீதையின் உணர்ச்சி''

ரத கஜ துரக பதாதிகளான நால்வகைச் சேனைகளுடனும்

தேசாதிபதிகள் இருவர் சார்பிலும் அணிவகுத்து போர்க்களத்தில் நின்றார்கள். அர்ச்சுனன் தனது காண்டீபத்துடன் ரதத்தில் கம்பீரமாக அமர்ந்தான். ஐவரையு மடக்குவான்போல் அஞ்சனவண்ணன் அஸ்வங்களின் கடிவாளங்களைப் பிடித்து நின்றார். போர் தொடங்குந் தருவாயில், காண்டீபன் தன் முன் னிற்கும் துர்யோதனுதி நூறு சகோதரர்களையும், ஏனைய சுற்றத்தார்களையும், குலக்குரவர் முதலானோரையும் ஒரு முறை உற்று நோக்கினன். அவனுடைய கம்பீரமான பார்வையும், வடிவழகும், வீரலக்ஷணமும், அஞ்சாநெஞ்சமும் போர்வீரர்களுக்கு உற்சாகத்தை யளித்தன. ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா யுத்த பூமியின் மத்ய பாகத்தில் ரதத்தை விட்டு நிறுத்தினர். பார்த்தனைத் திரும்பிப் பார்த்தார். காண்டிபம் நழுவக் காண்டீபன் மூர்ச்சித்துக் கிடப்பதைக் கண்டார். 'இவன் சுத்த வீரனுயிற்றே! ஏனிவ்வாறு பயந்து மயக்கத்தை யடைந்திருக்கின்றான்' என்று சகலத்தையு மறிந்த அவர் சால வார்த்தை கூறி, அர்ச்சுனனண்டையிற் சென்றார். அவன் தோளிற் பொருந்தி யிருந்த கணைப் புட்டிலி லிருந்த அம்புகள் 'தர்மத்தின் உருவான எங்களுக்கு இரை கிடைக்கவில்லையே! எங்களைத் தொடுத்துவிடத் தாமத மேன்?' என்று வினவுவன போன்று, கிளம்பி நின்றன. அமரிலுதவ வந்த அரசர்கள் அர்ச்சுனன் அஞ்சலைக் கண்டு அதிசயித்தனர். மனமுருகிய வசனங்களைப் புகன்றான் மாதவி கொழுநன். பரமாத்மா ஆச்சரிய முற்றார்; 'அர்ஜுனா! ஆரியர்களின் பெருமை யென்ன? நின் சிறுமையைச் சார்ந்த செய்கையென்ன? எழு' என்றார். பகவானுடைய எழு என்ற வார்த்தை பார்த்தனுக்கு மனவெழுச்சியைத் தந்தது. எழுந்த அர்ச்சுனன்,

"ஐயனே! யிவர்மீ தம்பையோ தொடுப்பேன்! வையகத் தரசும் வானகவாட்சியும், போரினு மிவர்தமைப் போரினில் வீழ்த்தேன்! மெய்யினில் நடுக்கம் மேவுகின்றதுவால், கையினில் வில்லும் கழன்று வீழ்கின்றது, வாயுலர்கின்றது; மனம் பதைக்கின்றது; ஓய்ந்தன கால்கள்; உலைந்தது சிரமும்; வெற்றியை விரும்பேன்; மேன்மையை விரும்பேன், சுற்றமிங் கறுத்துச் சுகம்பெறல் விரும்பேன், எனையிவர் கொல்லினும் இவரை யான் தீண்டேன், சினை யறுத்திட்ட பின் செய்வதோர் ஆட்சி?" எனப் பல கூறி யவ் விந்திரன் புதல்வன், கனப்படை வில்லைக் களத்தி லெறிந்து, சோர்வொடு வீழ்ந்தனன். சுருதியின் முடிவாய்த் தேர்வயின் நின்ற நந்தெய்வீகப் பெருமான், வில்லெறிந் திருந்த வீரனை நோக்கி, 'புல்லிய வறிவொடு புலம்புகின்றனையால்,

அறத்தினை மறந்த சுயோதனனியரைச், செறித்தினி மாய்ப்பது, தீமை யென் கின்றாய்! உண்மையை யறியாய் உறவையே கருதிப், பெண்மை கொண் டேதோ பிதற்றி நிற்கின்றாய். வஞ்சகர் தீயர் மனிதரை வருத்துவோர், நெஞ் சகத் தருக்குடை நீசர்கள் இன்னோர், தம்மொடு பிறந்த சகோதா ராயினும், வெம்மையோ டொறுத்தல் வீரர்தஞ் செயலாம், ஆரிய நீதிநீ யறிகிலை போலும், பூரியர் போல் மனம் புழுங்குற லாயினை ; அரும் புகழ் தேய்ப்பதும் அனாரியத் தகைத்தும், பெரும்பதத் தடையுமாம் பெண்மையெங் கெய்தினை? பேடிமை யகற்று ; நின் பெருமையை மறந்திடேல்! ஈடிலாப் புகழினாய் எழு கவோ எழுக!' என்று மெய் ஞானம் நம்மையன் கூறக் குன்றெனும் வயிரக் கொற்றவாள் புயத்தோன், அறமே பெரிதென அறிந்திடு மனத்தனாய், மறமே யுருவுடை மாற்றலர் தம்மைச் சுற்றமும் நோக்கான் தோழமை நோக்கான், பற்றலர் தமையெலாம் பார்க்கிரை யாக்கினன்.''

உலகமே மாயை வடிவானது. அதனால் அர்ச்சுனன் சோர் வடைந்தான். லோக மாயை அவனை அந்தகாரத்தி லாழ்த்திற்று. பகவான் மாயா சொரூபமான உலகி லவதரித்தவராயினும் மாயையின் கர்த்தாவாதலால் பிறரது அஞ்ஞானத்தைப் போக்கடித்து விளங்கினார். ஞானிகள் அவருடைய நிஜஸ்வரூபத்தையும் சுயம்பிரகாசத்தையுங் கண்டு களித்தனர். மாயையென்னும் பெருங்குழியிலாழ்ந்து கிடப் போர் 'இடையன்' என்று இழித்துக் கூறினர்; பின்னர் மெய்யறிவு பெற்று மேன்மை யுற்றனர். 'சகலமும் நானே ! யுத்தம் செய்பவன் யான். போரில் கொல்லுகின்றவனும் யான் ! கொல்லப்படுகின்றவனும் நான். நான் எல்லாவற்றிலும் கலந்து வசிக்கின்றேன்' என்ற பகவா னுடைய உபதேசம் அர்ச்சுனனுடைய மனத்தில் அறிவு விளக்கேற்றி யது. 'கடமையைச் செய்யாதவனுக்கு வீடில்லை; ஆதலின் கர்மா வைப் புரிவாய். அதன் பலனை நீ கருதாதொழிவாய்' என்ற ஹிதோ பதேசங்கள் பார்த்தனின் சூக்ஷ்ம சரீரத்தைத் திடப்படுத்தின. 'சரீ ரமே அழியக்கூடியது. ஆன்மா காற்றாலும், மழையாலும், கன லாலும், கொடிய வாளாயுதத்தாலும் மற்ற எதனாலும் அழிவற்றது ; 'அது நிரந்தரமானது' என்ற உரையைப் பார்த்தன் உற்றுணர்ந்தான் ; பொய்யான நம்பிக்கைகளை வென்றான். கண்ணன் கழலிணை கண்டு பணிந்தான். ஜீவாத்ம பரமாத்ம ஐக்கியத்தைப் பகவான் அவனுக் குபதேசித்தார்.

கீதை பதினெட்டு அத்யாயங்கள் கொண்டது. பாரதப்போரும் பதினெட்டு நாட்களே நடந்தன. பாரத காவியமும் பதினெட்டு பரு

வங்கள் கொண்டது; பாரதப்போரிலும் **பதினெட்டு** அக்ரோணி சேனை. எல்லாம் பதினெட்டாகவே அமைந்தது இதன் மற்றொரு விசேடம். பதினெண் தத்துவங்களும் இப்பாரதத்தி லடங்கி யிருக்கின்றன.

ஸ்ரீமத் பகவத்கீதை இத்துணை மான்மிய முடையது. இக்கீதை யென்னும் ஆனந்த சாகரத்தில் நரேந்திரர் ஆழ்ந்தார். அதனைத் தமது அழிவற்ற செல்வமெனக் கொண்டாடிப் பணிந்தார்.

ஒருநாள் நரேந்திரர் தமது நண்பர்களுடன் மாலையில் உலாவக் கங்கைக் கரைக்குச் செல்லுங்கால், வழியிலோர் பிரசங்கம் நடந்து கொண்டிருப்பதைக் கண்டு அங்கு சென்றார். ஓர் பாதிரியார் பாமர மக்களைக் கூட்டி, அக்கூட்டத்தில் தமது மதப்பிரசாரஞ் செய்து கொண்டிருந்தார். கல்வி யறிவில்லா பாமர ஜனங்களும் அப்பாதிரி யாரைச் சூழ்ந்து அசைவற்றுச் சொற்பொழிவைக் கேட்டுக்கொண் டிருந்தனர். அப்பாதிரியார் அப் பாமரக் கூட்டத்தை நோக்கி, 'விக்ரஹ ஆராதனை செய்யும் ஹே அஞ்ஞானிகளே! எனது கைப்பிரம்பால் உங்கள் சிலையை ஒரு அடி அடித்தால் அது என்ன செய்யும்?" என்று சிலை வணக்கத்தைத் தூஷித்துக் கூறிக்கொண்டிருக்குந் தருவாயில் நரேந்திரர் அவ்விடத்தை யடைந்தார். கூட்டத்தி லிருந்த ஒரு ஹிந்து ஆண்மகனாவது இதை மறுக்க முன்வரவில்லை. நரேந்திரர் பொட்டென முன் வந்து 'உங்கள் தெய்வத்தை யான் இழித்துக் கூறின் அது என்னை என்ன செய்யும்?'' என்று பாதிரியாரை நோக்கிக் கேட்டார். இவ்விதம் வினவும் தைரியமுள்ள ஒருவரை அப்பாதிரியார் அக்கூட்டத்தில் எதிர்பார்க்கவில்லை. ஆதலாற்றான் அவர் பயமற்று மனம் போனவாறு பேசிக்கொண் டிருந்தார். நரேந்திரருடைய கேள்வி அப்பாதிரியாரைத் திடுக்கிடச் செய்தது. ஆயினும் அவர் தைரியத்தைக் கைவிடவில்லை; சிறிது மனதைத் தேற்றிக்கொண்டு 'கர்த்தர் உன்னைத் தண்டிப்பார்' என்றார். நரேந்திரர் 'அதுபோலவே எங்கள் கடவுளும் உம்மை மீளாநரகில் வீழ்த்துவார்' என்று விடை பகர்ந்தார். பாதிரியாருக்குக் கோபம் பொங்கிற்று. சபையார் நரேந்திரருடைய வீர மொழியையும் சமயோஜிதமான விடையையும் மெச்சிக் கரகோஷம் செய்து கலைந்தனர்.

'பாதிரியாரின் பிரசங்கம்'

அக்காலத்தி லிருந்தே கிறிஸ்தவப் பாதிரிமார்கள் தம் கபடமதப் பிரசாரத்தை நடாத்தி வருகின்றனர்; பாமர மக்களைப் பொன்னாலும்

பொருளாலும் ஏமாற்றி, இலங்கைக்குக் கூலிகளைச் சேர்க்குங் கங்காணியர் போன்று மதத்திற்கு ஆள் சேர்க்க முற்பட்டனர். நமது ஹிந்து மதத்தின் உண்மைகளை அவர்கள் அறியார்; ஏழை மக்களை ஏமாற்றி மதத்தொண்டு புரிகின்றனர். அறிவாளிகளை யவர்கள் அணுகுவ தரிது. அன்பர்களே! நரேந்திரநாதர் தோன்றி, அமெரிக்கா நாட்டிற்கூடிய சர்வ தர்ம சபைக்குச் சென்று ஹிந்து மதம் உலகத்திலுள்ள சமயங்களுக்கெல்லாம் தாயகமான தென்பதை நிலைநாட்டி யிராவிடில், நாம் இன்று கிறிஸ்தவர்களாகவே இருப்போம். இதனால் கிறிஸ்தவ மதத்தில் உண்மைக ளில்லையென்று கூற நாம் முன்வரவில்லை. அப் பாதிரிமார்களின் நீதியற்ற செயல்களைக் கண்டே வருந்துகின்றோம்.

'ஆத்ம ஐக்கியத்தை யுணர்த்துவதே வேதாந்தத்தின் நோக்கமாயிருக்க ஆன்மாக்களில் உயர்வு தாழ்வேன்? ஜாதி பேதமேன்? கக்ஷிப் பிரதிகக்ஷிக ளெதற்கு?' என்ற சில சங்கைகள் அந்நிலையில் நரேந்திரருக் கிருந்து வந்தன. பிராம்மணர்களைப் பற்றிக் கூறப்படும் உயர்வுகளிலும் அவர் சந்தேக முடையவரானார். பிராம்மணீயத்தில் அவருக்கு நம்பிக்கை குறையவில்லை. ஆனால் பிராம்மணர்களிடத்தே அவநம்பிக்கை அதிகரித்து வந்தது. பிராம்மணீயமற்ற பிராம்மணரை அவர் வணங்க மறுப்பார். பிராம்மணீயம் தற்காலத்தில் சரிவர அனுஷ்டிக்கப்படவில்லை. கைத்தொழில், வியாபாரம், ராஜீயம் முதலிய பல துறைகளிலும் அவ்வகுப்பினர் பொருளீட்ட முற்பட்டு விட்டனர். குல குருவாயும், நல்லாசிரியராயும், வித்யா சாகரர்களாயு மிருந்து, நாலுவேதம், ஆறு சாஸ்திரம், அறுபத்துநான்கு கலைஞானம், தொண்ணூற்றாறு தத்துவ முதலியவற்றை ஓதியுணர்ந்து,

'சிறுவயதில் சில சங்கை'

அந்தண ரென்போர் அறவோர் மற்றெவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டொழுக லான்.
—திருக்குறள்.

என்றவாறு ஏனைய வருணத்தாரை நல்வழிப் படுத்தும் தர்மமுடையா அவர்களே தீச்செயல் புரியி னென்னாம்? உண்மை வேதியன் போற்றற்குரியவன். அவனே சர்வசக்தன். ஒழுக்கம் குன்றின் பிராம்மணீயம் குன்றும். இதைக் குறித்தே,

மறப்பினும் ஓத்துக் கொளலாகும் பார்ப்பான்
பிறப்பொழுக்கங் குன்றக் கெடும்.
—திருக்குறள்.

என்றார் வள்ளுவனார். 'சிறப்புஞ் சீலமுமன்றி பிறப்பு நலந்தருமோ'

என்றார் கபிலரும். விசேஷ வித்தையும், நல்லொழுக்கமும், நற்குணமும், தூயசிந்தையு முடையவர் எக்குலத்தைச் சார்ந்தவராயிருப்பினும் அவரே சிறந்தவர். சர்வேஸ்வரன் சந்நிதியில் வருணபேதமில்லை. இதனையே புத்தர் புகட்டினார்.

"யான் மரிப்பதில்லை. எனக்கு பயமென்பது கிடையாது. எனக்குத் தந்தையும், தாயும், தாரமும், ஜனனமும், மரணமும், நண்பனும், பகைவனும், ஜாதியும் மதமுமில்லை. ஞானச்சுடரும் நானே! பேரின்பத்தை நானே யனுபவிக்கின்றேன். நான் பேரின்ப மயன். நானென்பது சர்வேஸ்வர சொரூபம்" என்பது ஸ்ரீமத் சங்கருடைய வாக்கியம். வேதாந்தத்தில் சாதிமத பேதமில்லை. ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகளும் "இதர தெய்வ மூல வல்ல இலனு சௌக்கியமா ராமா" என்ற கீர்த்தனாரம்பத்தில் இதை விளக்கினார். இவ்விஷயத்தில் நரேந்திரர் தீவிர ஆராய்ச்சி செய்து வந்தார்.

அனுபவமே வாழ்நாட்களின் நிகழ்ச்சி யெனப்படும். அனுபவத்தில் மனிதன் தேர்ச்சி யடைகிறான். தண்டனை யனுபவித்தவனுடைய அனுபவம் அவனை மேலும் திருடத் தூண்டுவதில்லை. நெருப்பு சுடுமென்று அனுபவத்தா லறிந்த குழந்தை அதன் பின் தீயை அணுகுவதில்லை. 'அனுபவத்தில் சித்தி யடைந்து, உணர்ந்து அதனை உள்ளபடி உபதேசிக்கு மாற்றலுடையவரே ஞானிகள்' என்றார் ஜெகப்பிரியர். இவையனைத்திற்கும் மனமே காரணமாயிருக்கின்றது. அது துட்ட கெட்ட சுபாவமுள்ளது. ஸ்ரீமத் சங்கராசாரியார் சிவானந்தலகரியில்,

"அனுபவ தரிசனம்"

"ஹே சங்கரா! ஆண்டியாயலைகின்ற நீ பிச்சையெடுக்க, கையில் உடுக்கும், மழுவும் தரித்திருக்கின்றாய்! கரத்தில் ஓட்டையேந்தி ஓட்டும் ஆண்டியாக அலைகின்றாய்! மானைக்கூட அழைத்துச் செல்லுகின்றாய்! பெம்மானே! எனது மனமான குரங்கையும் நீ உடன் அழைத்துச் சென்றால் உனக்குப் பிச்சை அதிகம் கிடைக்குமன்றோ! என் மனக்குரங்கை யடக்காயோ! நீ" என்று வெகு அழகாகத் தமது மனதைக் குரங்கிற்கு ஒப்பிடுகின்றார். 'சிந்தையை யடக்கியே சும்மாவிருக்கின்ற திறமரிது சத்தாகியென் சித்தமிசை குடிகொண்ட அறிவான தெய்வமே!' என்றார் தாயுமானவரும்.

சித்தம் லயிக்கவேண்டும்! அது ஓடியலையாது நிற்குமேல் ஞானானந்த மேற்பட்டு விடும். மனதை ஒன்று படுத்தலே தியானத்தின்

முக்கியாம்சமாம். மானஸபூஜை, காயத்ரீ மந்திர உச்சாடனம் முதலியனவே மனோலயத்தின் ஆரம்ப முறைகள். புத்தி சலனமற்று பரம்பொருளையே நாடுமேல், நாடிய பொருள்—சித்தியின் வளர்ச்சியால் கைகூடி விடுகின்றது. மஹரிஷிகளி னனுபவங்களும் இதனையே பின்பற்றியதா யிருக்கின்றன. திரேஹத்திற்குத் தான் அவஸ்தை யுண்டு; நித்திரையுண்டு. நித்திரை புரியுங் காலத்திலும் அந்தர்யாமியான ஆத்மா அதன் அலுவலைப் பொருத்தவரையில் வேலைசெய்துகொண்டேயிருக்கின்றது. ஆன்ம வேலையின் வேகத்தால் அது உடலோடு கூடிப் பிரவர்த்தி செய்துள்ள விஷயங்களைக் கனவில் மெய்போன்று காட்டி விடுகின்றது. துயிலும்போது மனிதன் பேசுவதினின்றும் இதன் உண்மை ஊகிக்கப்படும். காலையில் சீக்கிரமாக எழவேண்டுமென்று எண்ணியிருப்பவனை ஆன்மா அந்த வேகத்தால் எழுப்பி விடுகின்றது. ஆகவே மனம், ஆன்மா, அறிவு இவை ஒன்று கூடி உடலை நடத்துகின்றதென்பது பெறப்படும். திரேகத்தின் பூர்ண நித்திரையே மரண காலமென யோக நூல்கள் கூறும்.

மேல் நாட்டார் எந்த உளநூலைக் (Psychology) கண்டு பிடித்தனரோ அது பழங்காலந் தொட்டே ஹிந்துக்களுடைய நித்யவாழ்வில் அனுஷ்டானத்திற் பொருந்தி யிருக்கிறது. நரேந்திரர் மனோலய விஷயங்களை அனுபவித்தார். அவருடைய மனதிற்கு இல்லறத்தைச் சார்ந்த ஆஸ்தி, சுகம், ஆடம்பரம், இந்திரியபோகம், செல்வச் செருக்கு, அதிகாரம், அருமைக் காதலியி னன்பு முதலியனவும், சந்நியாசத்தை யடுத்த, தனதென்ப தின்மை, பந்த மின்மை, ஈஸ்வரத் தியானம், உணவு கிடைத்தா லுண்ணல் முதலியனவும், குடியிருப்பொன்று இல்லாமல் உலகமே வீடாய், காடோ! மலையோ எந்த இடமோ! எங்கேயோ! எதுவோ! யென்ற விதமாய் யோக சித்தியடைதல், ஆகிய இவை யிரண்டும் கவட்டை நெறிகளாய்த் தோன்றும். அதனை அவர் சீர்தூக்கிப் பார்ப்பார். பின்னர் கூறப்பட்டதிலேயே அதிகப் பிரேமை கொள்வார். இல்லற இன்பத்தைச் சார்ந்த யாவும் நிலையற்றனவென்பதை யவர் கண்ணாரக் கண்டார். அதனை வெறுக்க வைராக்கியங் கொண்டார். 'கருங்கொண்மூ வாய் திறந்த மின்னுப்போற் றோன்றி மருங்கறக் கெட்டுவிடும்' இன்பங்களை அவர் வெறுத்தார். 'கங்குல், பக லறநின்ற எல்லையுள' தெதுவோ அதுவே அவர் கருத்திற் கிசைந்த தாயிற்று.

நரேந்திரர் தியானத்தி லாழும் போதெல்லாம் அவர் மனக்கண்

முன்பாக ஓர் மனித உருவம் தென்படுவ துண்டு. அம் மனிதர் மௌனவிரதாரியாய் நின்றுகொண் டிருப்பார். அவர் திருமேனி யெல்லாம் காடுடைய சுடலைப்பொடியால் அலங்கரிக்கப் பெற்றிருக் கும். அவருக்கு முன்பாக ஒரு ஜாடராக்னி எரிந்து கொண்டிருக்கும் : பின்புறத்தில் அடர்ந்த வனங்கள் பசுமை நிறத்துடன் காணப்படும். அவ்வனங்களுக்குப் பின்னால் உயர்ந்த மலைகள் வானை யளாவிய வண்ணமாக விளங்கும். அம் மேருவின் சரிவு பனிப்படலங்களின் பண்பால் வெண்மையாகத் தோன்றி சாதுக்களின் வெள்ளையான உள்ளத்தை யொத்திலங்கும். விரிசடையோன் "மனோ லய நிலை" விளங்கும் வெள்ளிப் பனிவரை போன்று அம்மலை போற்றற் பாலதா யிருந்தது. விவேகமாகிய கண் களால், இக்கண்கொளாக் காட்சியைக் கண்டானந்தித்தார் நரேந் திரர் ; சமாதிநிலை கலந்த பின்னர் எழுந்து கண்ட காக்ஷியைத் தியா னித்தவாறு சாஷ்டாங்கமாகத் தண்டனிட்டார். நமஸ்காரமென்பது ஓர் சிறந்த ஐதீகத்தைத் தன்னுள் ளடக்கிக்கொண்டிருக்கிறது. ஈஸ் வரார்ப்பணமாகச் சரீரத்தைத் தொண்டுசெய்யத் தூண்டுவதே நமஸ் காரஞ் செய்வதன் நோக்கம். ஆலயத்தை வலம் வருதல் 'பிரதக்ஷ ணம்', நோய்தீரப் புரளுதல் 'அங்கப்பிரதக்ஷணம்', பணிதல் 'நமஸ் காரம்' என்ற இத்தேகாப்பியாசங்கள் பகவத் சந்நிதானத்தில் நிகழ் கின்றன.

'நாம் சந்நியாசி யாவோம்! பந்தமற்றுத் திரிவோம்' என்ற எண் ணங்கள் நரேந்திரருக்குக் குதூஹலத்தை யளித்தன. இந்த நிலையில் அவருக்கு விவாகப்பேச்சு நடந்துகொண் டிருந்தது. சுதந்திரம்பெற விரும்பு மவரைத் தந்திரமாக ஓர் சுந்தரியின் மாயவலையில் சிக்கச் செய்ய நினைத்தனர் பெற்றோர். தேகம் அவருக்குச் சொப்பன சொரூ பமாக இருந்தது. குடும்பப் பற்றும், வேதாந்த அறிவும், உலக மாயையும் இவரை மாறிமாறி மயங்கவைத்தன. அவருடைய சிந்தை குழப்ப முடையதாக எவ்வித முடிவையுமடையாமல் மேலும் மேலும் ஆத்மவிசாரம் செய்துகொண்டே சென்றது. இவ்வித நிலையை ஒப் பிலாமொழிப் புலவரும் (Wordsworth) தேன்மொழியரும் (Tennyson) அனுபவித்தார்களெனக் கூறப்படுவதால் மகாஞானிகள் விஷயத்தில் இவ்விதநிலை முதலிலேற்படுத லியற்கையென்பது பெற லாம். அந்தர்யாமியாக விளங்கும் ஆத்மநாதன் தேகேந்திரியங்களுக் கியல்பான ஈஷணைத்திரயங்களை அழித்து நம்மை யாட்கொள்ளுகின்

ருன்' என்பதே மதங்களின் முறையீடாகும். இவ்விதமாக ஆத்ம விசாரஞ் செய்துகொண் டிருக்கையில் ஞானானந்தமும், ஆத்ம தரிசனமும் ஏற்பட்டவுடனே சாஸ்திரஞ்ஞன் சாத்திரத்தையும், கவிதா தன் இசையையும், சிற்பி தன் கோலையும், சந்நியாசி தவத்தையும் விட்டு மோன நிலையை யடைந்து இறைவனுடைய பேரின்ப வெள்ளத்திலே மூழ்குகின்றனர். இவ்வத்தியாயத்தில் இப்பத்து அங்கங்களும் அவரை மெத்தச் சிறந்தவராக்கும் வகையில் ஒத்துழைத்து இளமையின் "சில அரிய தோற்றங்களை". நல்கின.

7-ம் அத்தியாயம்.

மனக்கிலேசம்

எங்கும் நிறைந்த பரம்பொருளின் ஏகைக் தத்துவத்தை யறிய முற்படுவதே வேதாந்த சாஸ்திரங்களின் முக்கிய கருத்து. உண்மையான ஒன்றைக் கண்டுகொள்ளும் வரையில் சாதுக்களுடைய மனம் சமாதானப் படுவதில்லை. எந்த பரிசுத்த மார்க்கத்தில் ஆராய்ச்சி செய்தால் சத்தை யுணரலா மென்பதே வேதாந்தத்தின் அடக்கம். நரேந்திர நாதர் நித்தியத்தில் நித்யமாயும் சேதனத்தில் சேதனமாயும் பலவற்று ளொன்றாயும் விளங்கும் பரமனை யறிய வேண்டுமென்ற ஆவலால் கல்வியின் வெவ்வேறு பிரிவிலும் ஆராய்ச்சி செய்தார். கணக்கையும் வான சாஸ்திரத்தையும் நன்கு கற்றார். ஆங்கிலத்தில் கடவுள் பாதன் (Godfrey) வரைந்துள்ள வான சாஸ்திரத்தை அவர் கலா குமாரனுவதற் குள்ளாகவே கற்றுத் தேர்ந்தார். சிறுபிராயத்தி லிருந்தே அவர் வடமொழியில் நல்ல பயிற்சி பெற்றிருந்தமையால் பதினேழாம் பிராயத்தில் கவனஞ்செய்யும் ஆற்றலு மமையப் பெற்றார். பன்னிரண்டாம் வயதிலேயே அவர் முக்த போத வியாகர்ண மென்னும் சம்ஸ்கிருத இலக்கண நூலை மனப்பாடஞ்செய்து விட்டார். வங்காள பாஷாஞான மவருக்குப் பொங்கி வழிந்தது. வாசித்தவற்றை வகைப்படுத்தி வல்லமை யுடையவரானார் நரர்.

கல்வியின் பல துறைப் பயிற்சி

ஹிந்துக்களுடைய நித்ய வாழ்விலே வேதாந்த சாத்திரக் கொள்கைகள் மலரும் மணமும்போலக் கலந் திலங்குகின்றன. அவர்களுடைய ஒவ்வொரு வைதீக அனுஷ்டானமும் சாஸ்திர சம்மதமான

தாகவே யிருக்கின்றது. தலயாத்திரை செய்தலும், புண்ணியப் புனலாடலும், ஆலயத்திற்குச் சென்று அங்க வணக்கஞ் செய்தலுமான மதாசார வழக்கங்கள் சுகாதாரத்தைச் சார்ந்தவையாகவே யிருக்கின்றன. 'சாஸ்திராயசா சுகாயசா' என்ற பெரியார் மொழிப்படி பக்தி வாயிலாக சுகாதாரத்தை நமக்கு ஆன்றோர் போதித்தனர். புவனேஸ்வரி மாதா சாஸ்திர விதிப்படி நடப்பவளாதலாலும், அவள் நரேந்திரரை அவ்வழி யொழுக இளமையி லிருந்தே தூண்டினமையாலும், அவர் தாயைப்போலச் சேயாகி வளர்ந்துவர, சமயாசாரங்கள் அவருடைய மனத்தில் வேரூன்றின.

மறைபொருளான ஏகதத்துவச் செல்வரின் (Herbert Spencer) ஞானநூலில் அவருக்கு விசேஷப்பிரிய மேற்பட்டது. நரேந்திரர் அந்நூலிற் கூறப்பெற்றுள்ள தத்துவங்களை ஊக்கத்துடன் கற்றுத் தேர்ச்சி பெற்றார். மேல் நாட்டுப் பிரபல தத்துவஞான நூலாசிரியரான அவருக்கு, நரேந்திரர், அந்நூலிலுள்ள சில அனுபவத்திற்கு முரணான விஷயங்களைக் குறிப்பிட்டு மறுத்து ஓர் கடிதம் விடுத்தார். அப்பெரியார் இவருடைய அறிவின் திறத்தை வியந்து புகழ்ந்து, ஆறுதலாக அடுத்த பதிப்பில் நரேந்திரர் குறிப்பிட்டவற்றைத் திருத்தி யமைப்பதாக வரைந்தார். அந் நூலி னுதவியால் பல வாக்குவாதங்களில் இவர் புகழப்பட்டார். தர்க்கங்களில் நரேந்திரர் மேல் நாட்டு தத்துவ நூல்களிற் காணப்படும் அபிப்பிராயங்களையும், உபநிடதங்களி னுயர்வையும், வேதாந்தத்தின் ரகஸ்யத்தையும் ஒப்பிட்டு பாரதநாட்டின் சிறப்பை யுயர்த்திக் காட்டுவார். ஜர்மானிய ஞானிகளான கண்யர் (Kant) சோபன தத்துவர் (Schopenhauer) ஜனபோத சீலர் (John Stuart Mill) முதலானோருடைய தத்துவஞான நூல்களையும் நரேந்திரர் படித்தறிந்தார். அவர் அறிவு ஆராய்ச்சியிலேயே ஆவல் கொண்டிருந்தது. நாட்டின் பூர்வகால மக்களின் நாகரீகத்தையும், அவர்கள் அறிவின் அணைகடந்த பெருக்கையும் அன்னோர் வரைந்து போந்த வேதாந்த நூல்களையு மறியச்சரித்திரம் அவசியமாகின்ற தாதலின் நரேந்திரர் இந்தியநாட்டு ரிஷிகள் காலத்திய மக்களின் வாழ்வையும், அக்கால வேதாந்த சாஸ்திரங்களையும், மெச்சத்தகுந்த மேனாட்டுப் பச்சைப்புலவர் (Green) இயற்றிய மேல்நாட்டுச் சரித்திரத்தையும் அறிஞர் மலிந்த ஐரோப்பாவின் சரித்திரத்தையும் கற்றார். நெப்போலியனுடைய செப்பரியா வீரத்தையும், நுட்பபுத்தியையும், அவரால் மேல் நாட்டிலுண்டான கிளர்ச்சியையும் கூர்ந்து கண்டார்.

ஆங்கில ஞான நூல் ஆராய்ச்சி

சிலர் கல்வியை ஜீவனார்த்தமாகவும், சிலர் வியாபாரப்பெருக்கை முன்னிட்டும், பலர் சேவகா விருத்தியைக் கருதியும் கற்கின்றனர். வெகுசிலரே, "அறம் பொருளின்பம் வீடடைதல் நூற்பய" னென்பதை அறிந்தொழுகுகின்றனர்.

நமது நரேந்திரர் மேல் நாட்டிலும், ஜன்ம பூமியிலும் நவீனத்தால் நேர்ந்திருக்கும் இருளைத் தணித்து இன்பம் வழங்குவதற்கு அடிப்படையான கல்வியைக் கற்றார்.

கற்றதனாலாய பயன்

கல்வி ஜீவனார்த்தமாகப் போதிக்கப் படுதலும், கற்றலும் அதமமானது. கற்றதனாலாய பயனொன்று வேண்டும்; ஓர் முடிவு வேண்டும்; தெளிவு வேண்டும். ஆகமநூல்களைக் கற்றறிந்தபலர் வீரசமயிகளாய் நாட்டின் நிலைமை யுணராது ஏட்டுப்புலிகளாகி விடுகின்றனர். 'பழயனகழிதலும் புதியன புகுதலும் வழுவல கால வகையினானே' என்பதை அன்னோர் கருதுவதில்லை. 'முன்னோர் காலத்தில்' எனத்தொடங்கி 'முன்னோர் நாளில்' என முடிப்பதையன்றி அவர்கள் வேறறியார், கால மாறுபாட்டிற் கேற்றவாறு சீர்திருத்தங்கள் இன்றியமையாதன வென்றால் அவர்கள் அதை ஆராய்ந்துணராது 'தெய்வ நிந்தை! தேசத்துரோகம்! முன்னோர் இவ்விதஞ் செய்யவில்லை' என்று தூற்ற வந்துவிடுகின்றனர். இதற்குக்காரணம் அவர்கள் தம் பாஷையையும் தம்மதாசாரங்களையும் திரும்பத் திரும்ப வாசித்துக்கொண்டே யிருந்து, பிறபாஷை—சமயங்களின் தத்துவங்களை யறியாது கிணற்றுத் தவளைகளா யிருத்தலேயாகும். அவர்களுடைய சூக்ஷ்ம அறிவின் மங்குதலும் பிறிதொரு காரணமாம். நரேந்திரருடைய அறிவு அவ்வாறான தல்ல. அவருடைய மெய்யறிவு சதாகாலமும் ஒளியிருந்தவாறே இருந்தது. எதையும் அவர் சாமான்யமாய் நம்பிவிடுவதில்லை. அவரைத் திருப்தி செய்வதும் மிக்க கடினமான வேலையாகும். ஒருவிஷயத்தைக் குறித்துத் தர்க்கிப்பதனால்தான் அதன் உண்மை—கூடார்த்தம் வெளிப்படு மென்பது அவருடைய பூர்ண நம்பிக்கை. பிரகாசித்துக் கொண் டிருக்கும் அவருடைய அறிவிற்கு மேம்பட்ட ஓர் பிரகாசத்தைக் கண்டாலன்றி அவர் வணங்கார்; பிறர் அறிந்து கூறினும் ஒப்பார்; தனக்குத் திருப்திகரமான சமாதானம் கிடைத்தால் மட்டுமே சாந்தப்படுவார். அப்பொழுதுதான் அவருடைய வசனங்கள் தென்றலைப்போன் றின்பம் பயப்பதா யிருக்கும். சாந்தியேற்படாத காலத்தில் அவர் சண்டமாருதமாகி அலைந்து திரிவார். அவர் நாஸ்திகக்

கொள்கையை யாதரித்ததும், வேதவேதாந்தங்களில் நம்பிக்கையற்ற வர்போ லிருந்ததும் உண்மையை யறிவதன் பொருட்டேயன்றி வேறல்ல.

அவருடைய மனம் சூரைக்காற்றுபோன்று அடித்துக்கொண்டே யிருந்தது. சத்தியத்தை யறியத் திரைகடல் போன்ற அவாது புத்தி கொந்தளித்துக்கொண்டே யிருந்தது. சகல சமயங்களேயும், அவற்றின் மதக்கிரந்தங்களேயும் யுணர்வதில் தாபமுடையவராகி அவர் மேன் மேலும் ஆராய்ச்சி செய்தவண்ணமாகவே சென்றூர்; பௌத்தம், பாரசீகம் (ஜரதஷ்டிரம்) கிறிஸ்தவம், முகம்மதீய மான சமயங்களின் உட்கருத்துகளே கவனமுடன் கற்றூர். வேதாந்தம் உண்மையில் தத்துவங்களே மட்டும் உணர்த்துவதல்ல உண்மையை உள்ளபடி உணர்த்துவதே வேதாந்த மெனப்படும். உன்னத விஷயங்களே உயர்வுபட உபதேசிப்பதே வேதாந்தத்தின் தாத்பரியம்' என்பது நரேந்திருருடைய கொள்கை. இவ்வாறு அநேகவித சங்கையென்னும் நோயால் அலேயலுற்ற அவர் சித்தம் வெறிகொண்டது; கருதியவை கைகூடும்வரை ஓய்வற்றலேந்தது. இந்த சமயத்தில் கல்கத்தா நகரத்தில் பல பெரிய அறிவாளிகளால் நிறுவப்பெற்ற சபையொன்று இவருடைய மனதைக் கொள்ளே கொண்டது. எவ்விதமாகிலும் மெய்யுணர்வை யளிக்கும் ஆசார்யனே அவர் தேட முயற்சித்தார். சமயசித்தாந்தங்களில் தமக்குள்ள சந்தேகங்களேத் தீர்ப்பவர்களேத் தேடி 'பிரம்ம **சமாஜம்**' என்ற பிரபல சபையின் ஓர் அங்கத்தினராஞர்.

உண்மையைக் காண ஓயா முயற்சி

காலப்போக்கில் பழையனபோதலும் புதியன வருதலுமாக, மதாசார தேசாசார ஜஞசார விஷயங்களில் சீர்திருத்தங்களும், மாறுதல் களும் ஏற்படுதல் இயற்கை. ஒவ்வொரு தேசத்திலும் அவ்வப்போது மகான்கள் தோன்றி ஆசாரசீர்திருத்தங்களே வகுத்துப் புதிய அனுஷ்டானங்களேப் புகட்டாநிற்பர். மேல் நாட்டில் மக்கள் நிலேயற்ற ஆராதனஞ் செய்துகொண் டிருந்தநாளில் கிறிஸ்துநாதர் அவதரித்து சமய உணர்ச்சியளித்துப் பாமரர்களாயிருந்த அவர்களுக்குச் சர்வ வல்லமையுள்ள சர்வேஸ்வரனே வழிபட அறிவூட்டிஞர். கிரேக்க தேசத்தில் ஜஞசார சீர்திருத்த விர்ப்பன்னரான, சோல (Solon) னும், சமூக முன்னேற்றத்திற்கும் பரோபகாரார்த்தத்திற்கும் உண்மைத் தொண்டு செய்து 'யூட்டிலிட்டேரியானிஸம்' என்ற சித்தாந்தத்தை நிலேநிறுத்திய **சத்தி**

உலகத்தின் அரிய அறிஞர்கள்

யாளனும், தத்துவ நூல்களைப்பற்றியும் சமயத்தைக் குறித்தும் அரசியல் விஷயமாகவும் விரிகிரந்த கர்த்தாவான பிங்கல (Plato) னும், அரசியல் அமைப்பின் அறிஞரான அறிஞருக் கரியோ (Aristotle) னும், பரிசுத்தவாழ்விற் சிறந்து நஞ்சை நெஞ்சாரக்குடித்த சத்யசந்த (Socrates) னும் சீர்திருத்தக் காரர்களாகத் தோன்றினர்.

பாரத பூமியில் ஹிந்துமதம் பல்கோடி நூற்றாண்டுகளாக வேரூன்றி யிருக்கிறது. புத்தரும், சங்கரும் இராமாநுஜரும், மத்வரும், தேசிகரும் அவதரித்துக் காலப்போக்கில் மதாசாரங்களில் சீர்திருத்தங்களைச்செய்து ஞானாசாரியர்களாக விளங்கினர். தமிழ் நாட்டில் நாயன்மார்களும் ஆழ்வார்களும் அவதரித்து அப்பன் புகழைச் சமய சீர்திருத்தங்கள் செய்தனர். அதனால் 'ஹிந்து மதம்' ஓர் பெரிய ஆலமரமாயிற்று. சங்கர, வைணவ சமயங்கள் அதன் பருத்த கிளைகளாயின. இவ் வாலவிருக்ஷம் பூமண்டலத்திலுள்ள சகல மதங்களுக்கும் நிழல் தருவதாயிருக்கின்றது. மதஸ்தாபகர்களான மகான்களின் மார்க்கம் மாறுபட்டதே யன்றி அவர்கள் முடிவெல்லாம் பேரின்ப நிலையை நாடியதாகவே விளங்கின. ஏகாக்கிரக சித்தத்துடன் முக்தி யின் பத்தை எய்த முயல்வதே சகலசமயங்களின் எல்லையுமாகும்.

சமயங்களின் தாத்பரியம்

இத்தகைய மகான்கள் தோன்றித் தமது கொள்கையை ஸ்தாபிக்க முயலுகையில் அந்நாடுகளில் பெருங்கிளர்ச்சிக ளேற்படுதலியல்பு. மக்கள் உணர்ச்சிபெற்று நிற்பதும் வழக்கம். அன்னோரைப் புறச்சமயவாதிகள் எதிர்த்து வாதம் செய்தலும், இன்னல் பல விழைத்தலும் கண்கூடு. இவற்றையெல்லாம் இறைவனருளாற் போக்கி இன்பம் வழங்குவர் அவ்வவதார புருடர்கள்.

இவ்வாறே பத்தொன்பதாம் நூற்றாண்டில், நம்நாட்டில், ஓர் பெரிய மதாசாரக் கிளர்ச்சி யேற்பட்டது. அதுதான் பிரம்ம சமாஜம் என்பது. அந்நூற்றாண்டில் பிரம்மசமாஜம் தோன்றி எங்கும் பரவி நின்றது. ஹிந்து சமயப்பிரிவுகளை யொன்றுபடுத்தி அனைவருக்கும் சம்மதமான ஒரு மதத்தை வழங்குவதே இதன் நோக்கம். ஓரே யெல்லையை உணர்ந்து ஒரு பொதுவழியிற் செல்லும் மார்க்கத்தை இந்த சமாஜம் பிரசாரம் செய்தது. இதற்கு அறிவிலும் அருளிலுஞ் சிறந்த ஸ்ரீராஜாராம் மோகன் ராய் என்ற அதி மேதாவி ஸ்தாபகராக விளங்கினார். ஹிந்துக்களின் சிறந்த அறிவாளிக ளென்று மேல்நாட்டில் கியாதி

பிரம்ம சமாஜ ஸ்தாபனம்

யடைந்த **ஸ்ரீமகரிஷி தேவேந்திரநாத தக்கோர், ஸ்ரீகேசப் சந்திர சேன்** முதலியோர் இந்த சமாஜத்தின் தலைவர்களாக விளங்கினர். இவர்களுடைய அபாரக் கல்வி மேனுட்டாருக்கு ஆச்சரியத்தை விளை வித்தது மன்றி ஹிந்து மதத்தின் பெருமையையும் நிலைநாட்டிற்று. இந்தியாவில் மேனுட்டு நாகரீகக் கல்வியும், கிறிஸ்து மதமும் பரவி, ஹிந்து சமயாசாரங்களையும், வைதிக ஒழுக்கத்தையும் ஒடுக்கி, மக்களின் மனதைக்கவர்ந்து வருவதைக்கண்ட பெரியார் பலர் விரைந்து வெளிப்பட்டு மதோத்தாரண காரியத்தில் ஈடுபட்டனர். வைதிக ஹிந்து சமய தாத்பரியங்களை அனுசரித்து, மேல் நாட்டுக் கல்வி முறையில் சில அனுஷ்டானங்களைப் புகுத்தி, உபநிஷதங்களின் வாக்கியங்களையே பிரமாணமாகக் கொண்டு பிரம்ம சமாஜம் நிறுவப்பெற்றது. மேல் நாட்டு நடையுடை பாவனைகளும், பழக்க வழக்கங்களும், இக் குழுவினரால் கொள்ளப்பெற்றபோதிலும் ஹிந்து மத அனுஷ்டானங்களே ஆதியில் இதற் கடிப்படையாக விருந்தன. பிரம்மசமாஜம் அதன்நோக்கப்படி சமயஸ்தாபனஞ்செய்ய ஒருவாறு இயலாமற் போயினும், கிறிஸ்தவ சமயத்திற்கு ஹிந்துக்கள் போகாவாறு தடுத்துப் பேருதவி புரிந்தது. சில ஆண்டுகள் செல்ல கிணறு வெட்டப் பூதம் கிளம்பியதையொத்து, அதன் நோக்கங்களெல்லாம் இயல்பில் சில மாறுதல்களடைந்தன. ஆனல் அதன் ஆரம்பகாலத் தலைவரின் நோக்கமதுவல்ல. இச் சீர்திருத்த சபையின் முடிவென்ன வாகு மென்பதை ஹிந்துசமய சதாசார சம்பன்னர்கள் முன்னரே அறிந்திருந்தனர். மேல்நாட்டு அறிவாளிகளிற் சிலர் சமாஜ அங்கத்தினர்களாகச் சேர்ந்து மெல்ல ஆதிக்கமும்பெற்று, கிறிஸ்தவ சமயாசாரங்களைப் பின்னர் ஒட்டவைத்தனர்.

ஹிந்து சமயத்தின் அதிவைதீகக் கொள்கையை மாற்றுவதே பிரம்ம சமாஜத்தின் முக்கிய நோக்கமென்பர். ஹிந்துக்களின் சில நம்பிக்கைகளையும் கர்மாக்களையும் நீக்க அச்சபையார் பிரசாரம் செய்தனர். அச்சபையார் செய்யவந்த சீர்திருத்தங்கள் யாவும் மேல் நாட்டு நாகரீகத்தை யொட்டியவை யாகும். வெகு சமீபத்தில் சரித்திராராய்ச்சியில் வல்லுநரும் சிலாசாஸன விர்ப்பன்னரும் தோன்றி ஹிந்து மத சாஸனங்களின் உண்மைகளை ஆதாரங்களுடன் எடுத்துங் காட்டிய பிறகு பிரம்ம சமாஜத்தார் தம் செயலின் மோச போக்கை யுணர்ந்தனர்.

பதினறும் நூற்றாண்டி னிறுதியில் மேல் நாடுகளில் **பரிசுத்தக் காரர்கள் (Puritans)** என்ற ஓர் வகுப்பாரின் மதக்கிளர்ச்சி யேற்பட்

டது. அக்கிளர்ச்சியின் ஆரம்பகாலத்தில் அது மதசம்பந்தமானதா யிருந்தாலும், பிற்காலத்தில் தேசீயத்திலும், ராஜீயத்திலுமே சீர் திருத்தங்கள் செய்தது. பரந்த நோக்கத்துடனும் ஆழ்ந்த கல்வி யுடனும் அத்திருத்தக்காரர்கள் பாடுபட்டு வந்தார்கள். மதாசார நிபந்தனைகளையுடைய கத்தோலிய சமயத்தை அவர்கள் எதிர்த்து சுயேச்சை வேண்டுமென்று பிரசாரஞ் செய்தனர். பிரம்ம சமாஜம் இப் பரிசுத்த வாதத்தை யொத்து இந்தியாவில் வேலைசெய்து வந்தது அதன் தலைவர் களும் மேல்நாட்டுக் கல்வி பயின்றவராதலால் அவர்களுடைய எதிர்ப் பும் அவ்விதமேயாயின. மேல்நாட்டுச் சரித்திரத்தில் விரிவாகக் காணப்படும் ஏகைக மதவாதம், ஏகேஸ்வர மதவாதம் போன்ற வழி களில் பிரம்ம சமாஜத்தார் போராடி வந்தனர். ஒப்புயர்வற்ற ஹிந்து சமயத்தின் அவதாரம், விக்கிரஹ ஆராதனம், தேவதா ஸ்வரூபங்கள், குரு நம்பிக்கை முதலியவற்றைப் போக்க இச்சமாஜத்தின் பிற்காலத் தலைவர்கள் முயற்சித்தனர்; இப் புதுமையால் மக்களுக்கு சுயேச்சை யளிக்க எண்ணினர். நமது ஹிந்து சமயத்தை அழிக்க எத்தனையோ வீராவேசத்துடன் தோன்றிய சீர்திருத்த சமயங்களெல்லாம் இன்று பெயரற்று, செயலற்று இருக்கின்றனவென்றால், ஹிந்து சமயத்தின் சீரிளமைத் திறம், அதன் பரந்த ரூபத்தாலும் சர்வ சமய சமரஸ பாவத்தாலும் இன்றளவும் சில சமயங்களைப் போன்று உலக வழக் கழிந்து ஒழியாதிருக்கிற பெருமை, இவற்றை யாம் எங்ஙனம் கூறுவோம்!

சமயக் கிளர்ச்சிகள்

தர்ம விரோதமின்றி நடந்து, பொறுமையைப் பரப்பும் புனித ஹிந்து சமயம் தன்னைத்தானே பாதுகாத்துக் கொண்டது. மேல் நாட்டில், மாதா கோயிலுக்கு அசந்தர்ப்பத்தால் போகத் தவறியவர் கள் தண்டிக்கப்பட்டன ரென்பது அந்நாட்டுச் சரித்திரங்களினின்று போதரும் இந்தியாவில் அவ்விதக் குற்றங்களும் சிக்ஷைகளும் நிகழ்ந்ததாக நாம் கேட்டதும் இல்லை! உலகாயத வாதிகளும் ஆலயங் களைப் பற்றியாவது, குருத்துவத்தைப் பற்றியாவது நிந்தனைசெய்ய முற்படவில்லை. பொதுநல சீர்திருத்தங்களை பிரம்ம சமாஜத்தார் விரும் பினர். ஜாதிப் பிரிவினையை யொழித்துச் சகலருக்கும் சமத்துவ மளிக்கவும், நவீன முறையில் பெண்கள் கற்கவும் சுயேச்சை பெற வும், பெண்கள் வயதடைந்து தாமே கணவர்களைத் தேடி வரிக்கவும், விக்ரஹ ஆராதனையை விலக்கவும் சமாஜத்தார் தர்க்காதாரங்களுடன்

வாதித்து வந்தனர். பரப்பிரம்ம சொரூபத்தைப் பற்றிய வாதங்களும், உபந்நியாசங்களும் இச்சபையாரால் நிகழ்த்தப் படுவதுண்டு.

கலைகளின் பல்வேறு துறைகளிலும் பயின்று, பாண்டித்ய மடைந்து, பரம்பொருளைக் குறித்த நிஷ்கரிஷியைப்பெற வியலாமல், போதிய சமாதானமுங் கிடைக்காமல், சந்தேக மேலீட்டால் நல்லா சிரியரைத் தேடியலையும் நரேந்திரநாதர் இந்த பிரம்ம சமாஜத்தில் தனக்கு ஆத்மசாந்தி யேற்படலாமென்று அங்கத்தினராகச் சேர்ந் தார். மெய்வருத்தம் பாராது, பசிநோக்காது, கண் துஞ்சாது, எவர் நோக்கமும் மேற்கொள்ளாது, கருமமே கண்ணுகி,

விழிமின் ! எழுமின் ! சிரேஷ்டமான ஞானத்தை
யடையும் வரையில் உருகுமின் ! **உழைமின் உணர்மின் !**

(கடோப நிஷத் மூன்றும்; வல்லி 14. வாக்).

என்ற வாக்கா லுந்தப்பட்டு அமலனைத் தேடியலையும் எம்மண்ணல் இப்பிரம்ம சமாஜத்தின் வாயிலாகத் தாம் கிருதார்த்தராக ஆசைப் பட்டு அதனைச் சார்ந்தார் ; அதன் தலைவராக ஸ்ரீராஜாராம் மோகன் ராய் அவர்கள் வரைந்து போந்த வேதாந்த நூல்களை மாசறக் கற்றார்.

நரேந்திர நாதரின் மனோ நிலை

பிரம்ம சமாஜம் வலுக்கக் காரணபூதராயும் பிரபலப் பிரசங்கியென அக்காலத்தில் ஏகோபிதமாகப் போற்றப்பட்டவருமான **ஸ்ரீஜத் கேசப் சந்திர சேன்** அவர்களிடம் இவருக்கு அத்தியந்த பிரேமை யேற்பட்டது. அவர் இவரை உறுமீனென ஓர்ந்து அதிக நட்புரிமை தந்தார். அக்காலத்தில் மேல் நாட்டு முறையில் பயின்ற நரேந்திருக்கு ஜாதி பேதம், அனுஷ்டானங்கள் முதலியவற்றில் பல சந்தேகங்க ளிருந்த தால் இந்த சமாஜத்தினிடத்தில் அவருக்குப் பற்று ஏற்பட்டது. அவர் விசேட நுட்ப அறிவுடையவராதலால் எதையும் விரைவில் ஆரா யும் அபாரசக்தியும் அவருக் கேற்பட்டிருந்தது.

அத்யயனஞ் செய்ததிலிருந்து பூர்வகால மக்களின் துன்பமற்ற இன்பவாழ்வை அவர் தெரிந்துகொண்டவ ராதலால், அவற்றை உத் தாரணஞ் செய்யவேண்டு மென்ற பேரவா அவரிடம் குடிகொண்டிருந் தது. சமய உரிமையும், அரசநீதியும், மகரிஷிகளின் பெருமையும், தியாக மூர்த்திகளின் புகழும் ஓங்கியிருந்த நம் நாட்டில், மதமாறுங் கோலமும், அநீதியும், சிறுமையும், சுயநலமும் புகுந்து மக்களை வருத்தி வாட்டுவதை அவர் எண்ணி யெண்ணி ஏங்கினர் ; ஓங்கினர் ; 'உயர்த்து வேன்' என்றார் ; உவகை கொண்டார் ; உளம் மகிழ்ந்தார். நீண்டா

மையும் சண்டாளத்வமும் இந்த தேசத்தை விட்டொழிய வேண்டு மென்பதே அவர் நோக்கமா யிருந்தது. ஹிந்துக்களின் புராதன சமயாசாரங்களேயும், ஆராதனக் கிரமங்களேயும், அனுஷ்டானங்களே யும், சீர்திருத்த முயன்ற பிரம்மசமாஜத்தா ரிடத்தில் அவருக்கு நாளடைவில் நம்பிக்கை குன்ற வாரம்பித்தது. சமய விஷயத்தில் அவ்வித சீர்திருத்தங்களே அவர் ஒப்பவில்லை; அனுஷ்டானத்தில் மங்கிய அவற்றைப் புனருத்தாரணம் செய்யவே இச்சை கொண்டார்; இதுவே சமாஜத்தாருக்கும் இவருக்குமுள்ள அபிப்பிராய பேதம்.

தூய்மையுடன் உண்மையான பொருளேத் தேடி யலேகின்றவர் முடிவில் பயனடைகின்றனர். ஸ்ரீஜத் கேசப் சந்திர சேனரைப் போலத் தாம் பெரிய பிரசங்கி யாகவேண்டு மென்று அவர் சமாஜத்தின் ஒழுக்கங் குன்றாத தலைவர்களுடன் கூடிப் பழகினார்; தமது மதுரமான கானத்தால் அனைவரையும் பரவசப்படுத்தினார். இங்கு, இக்கானத்தின் பெருமையைச் சிறிது கூறுவோம்:

சங்கீதம் கீதம், **வாத்தியம்**, **நிருத்தியம்** என்று மூன்று வகைப்படும். பாடப்படுவது கீதம். வாத்யமென்பது கருவிகளேக்கொண்டு ஒலியைக் கிளப்புவதாகும். **ததம்**, **ஸுஷிரம்**, **அவனத்தம்**, **கனம்** என்று வாத்தியங்கள் நான்கு பிரிவின. தந்திகள் (கம்பிகள்) அமைக்கப்பட்ட கருவிகள் **தத**மென்றும், துளேயுள்ளவை **ஸுஷிர** மென்றும், தோலால் மூடப்பட்டு ஒலிப்பன **அவனத்த** மென்றும், ஒன்றுக்கொன்று உதவியாக ஒலிப்பது **கன** மென்றும் கூறப்படும். மற்றும் வாத்தியங்களே இரு பெரும் பிரிவாகப் பிரிக்கலாம். அவை **நாத வாத்தியம்** **லய வாத்தியம்** என்பனவாம். கீதத்தை இசைத்து வாசிக்கப்படுவது நாத வாத்யம். அந்நாதத்தைத் தாளாக்ஷரங்களால் அளந்து உடன் ஒலிக்க வாசிப்பதே லய வாத்தியங்கள். மேற்கூறிய அவனத்தத்தால் கீதம் கோபிதமாகின்றது. கனம் கீதத்தின் பிரமாணத்தை அளந்து காட்டுகின்றது.

சங்கீதத்தின் மகிமை

வீணை போன்ற கம்பி வாத்யங்கள் **தத** மெனப்படும். **ஸ்வர வீணை**, **ஸ்ருதி வீணை** என அது இருபிரிவினுட்படும். ஒரு தந்தியுள்ளது **பிரம்மவீணை** யென்றும், இரண்டுள்ளது **நகுல வீணை** யென்றும், மூன்றுள்ளது, **சந்தாரவீணை** யென்றும், சப்த தந்திகளுள்ளது **சித்திர வீணை** யென்றும், ஒன்பதுள்ளது **விபஞ்சித** மெனவும், இருபத்தொன் றுள்ளது **மத்தகோகில** மெனவும், பெயர் பெறும்.

வாத்தியங்கள்

புல்லாங்குழல், முரளீ, சங்கம் முதலியன ஸுஷிர மெனப் படும். கடம், டங்கா, துந்துபி. பேரி, என்ற வாத்தியங்கள் அவனத் தத்தைச் சார்ந்தவை. தாளம், கண்டா, கங்ரா, சுத்தி முதலியவை கன வாத்யங்கள்.

நிருத்யமாவது கீதம், வாத்யங்களை அனுசரித்திருப்பது; கீதத் துக்குத் தக்கவாறு சமிக்ஞைகள் செய்து நர்த்தனம் செய்யப்படுவதே நிருத்யமாம். கீதம், வாத்யம் நிருத்தியமாகின்ற மூன்றும் பிரகா சிக்கும் சங்கீதத்தில் தேவர்களும் மும்மூர்த்திகளும் ஈடுபடுவர். சர் வேஸ்வரனை ஸ்ரீகிருஷ்ணன் குழல் கொண்டுதி பிருந்தாவனத்தில் கோபிகளின் அன்பைப் பெற்றார். சங்கீத லோலனை கண்ணன் ஈடு பாட்டையும் அஷ்டபதி (கீதகோவிந்தம்) என்னும் நூல் சவிஸ்தார மாகக் கூறுகின்றது. பாரத நாட்டிலுள்ள சங்கீத கிரந்தங்களுள் அஷ்ட பதியே மிக்கப் பூர்வீக மானது. சரிரங்க தேவ ரியற்றிய சங்கீத ரத்னாகரமே மிகவும் தொன்மை யான தென்பது ஒரு சாரார் அபிப்பிராயம். கீத கோவிந்தத்தை இயற்றிய ஸ்ரீஜெயதேவ ஸ்வாமிகள் சாரங்கருக்கு முற் பட்டவ ராதலாலும், அவர் வங்காளத்தை அரசாண்டுவந்த இலக்கு மண சேனரின் காலத்தவ ராதலாலும் அஷ்டபதியே புராதனமான தாகின்றது. இந்த நூலும் வங்காளத்திலேயே தோன்றியது.

கீத கோவிந்தம்

அஷ்டபதியில், ஜெயதேவர் தம்மைக் கோபிகா ஸ்திரீகளாகப் பாவித்துக்கொண்டு, ஸ்ரீகிருஷ்ண பரமாத்மாவிடம் பிரேமைகொண்ட விஷயத்தை மிகவும் அழகாக அமைத்திருக்கின்றார். சங்கீத கிரந்தங் களில் நாயகா நாயகி பாவமும் நவரஸமும் பொருந்திய இதைவிடச் சிறந்த கிரந்தம் வேறில்லை

ஆகவே சங்கீதம் பக்தி மார்க்கத்திற்கு வித்தாகின்றது. விலங்கு களும் சங்கீதத்தால் பரவசப் படுகின்றன. சங்கீதத்தால் இன்ப மடையாத மனிதன் பிரபஞ்சத்தில் எங்குமே யிருக்க முடியாது. நரேந்திரர் இவ்வித சாஸ்திரீகமான சங்கீதத்தில் நிபுணராயிருந்தார். பால்யத்தில் இயற்கையாகத் தமக்குள்ள சங்கீத ஞானத்தை விருத்தி செய்ய அவருக்குப் போதிய சாதனங்களிருந்தன. அக்காலத்தில் கல்கத்தா வில் அகமத்கான், பேனி குப்தா என்ற இரண்டு பெரிய இசைப் புல வர்க ளிருந்தார்கள். சங்கீதத்தை சாஸ்திரீகமாகப் பாடக் கற்றுக்

சங்கீத இன்பம்

கொள்ள வேண்டுமென்பது நரேந்திருடைய விருப்பம். 'கானத்தால் சர்வேஸ்வரனைக் கட்டுப்படுத்தலாம். சங்கீதம் ஆனந்த மயமானது' என்று அவர் கூறுவார். இதே கருத்தை ஸ்ரீ தியாகராஜ சுவாமிகளும் 'வீணு வாத்யமுலோ லுடைசிவ மந்திரமு' என்று விளக்கி யருளின ரன்றோ!

நெருங்கிப் பழகியபின், நரேந்திருக்குப் பிரம்ம சமாஜத்தின் வாயிலாகத் தம்முடைய கோரிக்கை நிறைவேறுமென்ற நம்பிக்கை இல்லாமற் போயிற்று. பிரம்மஞானத்தை யடையும் சரியான மார்க்கத்தைப் புகட்டக் கூடிய ஞானசாரியர் ஒருவரையும் அவர் காண வியலவில்லை. எவரைப் பெரியாரென்று நம்பித் தமக்கேற்பட்டிருந்த சந்தேகங்களைக் கேட்டாரோ அவர்கள் வாயிலாக அவருக்குத் தக்க சமாதானம் கிடைக்கவில்லை. அந்நாட்களில் மஹரிஷி தேவேந்திர நாத் தக்கோர் என்பார் சிறந்த ஞானசாரியரெனக் கொண்டாடப் பட்டவர். அப்பெரியார் நிரம்பப் பொருளீட்டிய வரா யிருந்தும் சாந்தியும் ஞானமும் பெறச் சந்நியாச நிலையை விரும்பி யேற்றார். தனியான ஓரிடத்தில் பர்ணசாலையொன்றை வேய்ந்து அதில் யோகாப்பியாசம் செய்துகொண்டிருந்தார். ஸ்ரீஜத் கேசப் சந்திரசென் அவர்கட்கு இம்மஹானே ஞானசாரியராகி அவரை மதசேவையி லீடுபடச் செய்தார். இப்பெரியாரை நரேந்திரர் அடைந்து தம் விருப்பங்களை யெல்லாம் விண்ணப்பித்துக் கொண்டார். மஹரிஷியும் அவரை அன்புடன் ஏற்று அவருடைய விருப்பத்தை யுணர்ந்து முதற்படியாக யோகாப்பியாசம் செய்து பழகுமாறு கூறினார். நரேந்திரர் இளமை முதல் யோகாப்பியாசத்திலேயே பழகி முதிர்ந்தவராதலின் அதில் ஒன்றும் புதுமையாகத் தமக்கு மகரிஷி கூறியதாக எண்ணுவதற் கிடமில்லை. கடவுளை நேரில் தரிசித்தவரை யடையின் மட்டுமே தமக்குச் சித்தி யேற்படுமென்ற அனுமானம் இவ்வனுபவங்களால் அவருக்கு உண்டாயிற்று! தாம் கடவுளைத் தரிசிக்க வேண்டுமென்று விரும்பினார். கடவுளைத் தமக்குக் காட்டக்கூடியவரும் இவ்வுலகில் இக்கலியி லிருப்பரோ? என்ற சந்தேகங்களும் அவருக்கு இடையிடையே தோன்றின. இப்படியிருக்க, ஒருநாள் அவர் விரைந்து மகரிஷியின் ஆச்சிரமத்தை யடைந்தார்; மூடப்பெற்றிருந்த கதவுகளை வேகமாகத் திறந்தார்; தியானத்திலிருந்த தக்கோர் ஜாக்கிரதையடையு முன்னரே அவரை விளித்து "மஹா குருவே!

மஹரிஷி தேவேந்திர நாத் தககோர்

தாம் கடவுளைக் கண்டதுண்டா ?''

என்று அழுத்தமாகக் கேட்டார். நரேந்திருடைய வார்த்தைகளைக் கேட்டதும் தக்கோர் திடுக்கிட்டுப் போனார்; பதிலளிக்க முயன்றார்; ஒருமுறை, இருமுறை, மும்முறை முயன்றும் அவருடைய நா எழவில்லை. சொல்லில் வல்லவரான அவரைச் சொற்கள் மோசஞ்செய்தன; நரேந்திரரைத் தமது மனக்கண்ணின் ஆற்றலுடன் புறக்கண்ணால் ஒருமுறை உற்றுப்பார்த்து "அப்பனே! தெய்வாம்சமுடையவனே! நீயே மஹா ஞானி!'' என்று தன் கண்களினின்றும் ஆனந்தக்கண்ணீர் பெருக்கினர். நரேந்திரர் கண்களி லிருந்தும் நீர் தாரைதாரையாகப் பெருகிற்று. உடனே நரேந்திரர் சமாதியி லாழ்ந்தார். மஹரிஷி ஒருமுறை மார்புற அவரைத் தழுவி ஆசீர்வதித்தார்.

தாம் கடவுளைக் கண்டதுண்டா?

பலரிடமலைந்து திரிந்தும் ஆவல் நிறைந்த அவருடைய ஹிருதயத்திற்கு ஆறுத லுண்டாகவில்லை. எப்பாடுபட்டும் உண்மைப் பொருளைக் கண்டறியத்தான் வேண்டுமென்ற உறுதி அவர் மனதிற் குடிகொள்ளவே, உண்மையை அனுபவத்தா லுணர்ந்து, உபதேசிக்கக்கூடிய நல்லாசிரியரைத் தேடுவதிலேயே அவர் காலத்தைக் கழித்து வந்தார். நாட்கள் செல்லச் செல்ல அவர் தீவிரமாக முயற்சி செய்தார். வேத வேதாந்தங்க ளெல்லாம் நிவர்த்திமார்க்கத்தைக் காட்டுகின்றன. ஆனால் சத்தியமான பொருளைக் காண்டல் சதாசாரியரின் அனுக்கிரமின்றிக் கை கூடுவதில்லை. 'புத்தகங்களைச் சுமந்து பொய்களைப் பிதற்றுவீர் அத்தனை சித்தனை யறிந்து நோக்க வல்லீரேல் உத்தமத் துளாய ஜோதி உணரும் யோக மாகுமே; காணவேணுமென்று நீர் கடல் மலைக ளேறுவீர்! ஆணவம தல்லவோ அறிவிலாத மூடரே! வேணுமென்று ஈசர் பாதம் மெய்யுளே விளங்கினல் காணலாகும் நாதனைக் கடந்து நின்ற ஜோதியை' என்ற பெரியார் வாக்கியங்கள் அவருக்குப் பரமானந்தத்தை யளித்தன.

இனி, கடவுளைக் காண்பிக்கக் கூடிய ஆசார்யன் கிடைப்பது துர்லப மென்று அவர் நிராசை கொள்ளப்போகுந் தருவாயில், அபய மென் றடைந்தோர்க்கு ஆதரவளித்து, தர்மோபதேசஞ் செய்து ஆடம்பரமற்று 'அஹிம்ஸா பரமோ தர்ம:' என்ற மகா வாக்கியத்தைக் கடைப் பிடித்து குழந்தையைப் போன்று தக்ஷிணேஸ்வராலயத்தில் வசிக்கும் சாதுவான ஒரு பரமாசாரியரின் ஞாபகம் அவருக்கு வந்தது. அப்பெரியாரை இவர் முன்னரே அறிவார். அவரைப் பெரிய பித்த



ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர்.

(82-ம் பக்கம்)

றென்று இதுவரை நரேந்திரர் நினைத்திருந்தார். ஆம்! இவர் இன்னும் பித்தராகவில்லை யன்றோ! ஒருகால் அவர் தமக்கு ஏதாவது உபதேசிக்கக் கூடுமோ? என்றும் நினைத்தார். தொட்ட தெல்லாம், கண்ட தெல்லாம், கேட்டதெல்லாம் அவருக்குச் சந்தேகமாகவே யிருந்தன. தமது மனோவேகத்தைத் தணிக்கத் தகுந்தவர் எவரோ? என்ற ஏக்கம் நரேந்திரரை வருத்தியது. அம்மகானை அவர் போய்ப் பார்க்கலாமென்று எண்ணினா ராயினும் 'அங்கு நமக்குச் சாந்தி யேற்படாவிடில்' என்ற கேள்வி அவரை 'நாளையதினம் போவோம்' என்று புறக்கணிக்கச் செய்தது. இம் '**மனக் கிலேசம்**' தணியும் காலமும் சமீபித்தது.

8-ம் அத்தியாயம்

தக்ஷிணேஸ்வர ஆலயம்

[பகவான் ஸ்ரீராம கிருஷ்ண பரமஹம்ஸ தேவர்]

ஏற்றமுடைய கல்கத்தா நகரத்துக்குச் சுமார் ஐந்து மைல் தூரத்தில் தக்ஷிணேஸ்வர ஆலயமென்ற ஓர் திவ்ய ஸ்தலமுளது. அங்கு காளிதேவியின் ஆலயமொன்றை 1853-ம் ஆண்டில் **இராணி** ரஸாமணி அம்மாள் அபரிமிதமாகப் பொருட் செலவு செய்து கட்டினாள். அவ்வம்மைக்குக் காளிகாதேவி யிடத்தில் அதிக பக்தியுண்டு. அவருடைய தந்தை ஓர் பெரிய தனவந்தர். அவருக்கு ரஸாமணியைத் தவிர வேறு மகப்பேறில்லாததால் அவருடைய செல்வத்திற்கு இவ்வம்மையே உரியவளானாள். பலர், பொருளிருந்தும் புன்மை மேலிட்டு, ஈஸ்வரபக்தி யில்லாமல், சுற்றமும் பேணாமல், தாமும் அப்பொருளால் சுகத்தையடையாமல் 'நாய் பெற்ற தெங்கம்பழம்' என்ற கூற்றுக்கு இலக்காகின்றனரே. ரஸமணி அம்மாள் அவ்வாறின்றித் தமது உறவினரிடத்தும் ஜாதியாரிடத்தும் பொதுவில் ஏழைகளிடத்தும் அத்யந்த அன்புடையவளாகி அவர்களுக்கு உதவி புரிந்துவந்தாள்; குணத்திலும், ஒழுக்கத்திலும் ஸ்திரீகளுக்கே ஓர் நாயகமாய் விளங்கினாள். 'மாசித் திங்கள் மாசின சின்னத்துணி முள்ளின், ஊசித்துன்ன மூசியவாடை யுடையாகப் பேசிப் பாவாய் பிச்சையெனக் கையி லகலேந்திக் கூசிக்கூசி நிற்கும்' வறிஞர்களுக்கு

இராணி ரஸாமணி அம்மாள்

வரையாது கொடுக்குந் தன்மையினள் ரஸாமணியம்மாள். அவளுக்கு விசேஷ மதப்பற்றும், தேசாபிமானமு முண்டு.

புவனத்தில் மங்கிய அருளைப் பரிமளிக்கச் செய்த மகானுபாவர்களான பகவான் ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸ தேவருக்கும், ஸ்ரீமத் விவேகானந்த சுவாமிகளுக்கும் ஞாஞேதயமான இத் தக்ஷிணேஸ்வராலயத்தை ஸ்ரீரஸாமணியம்மாள் கங்காநதிக்கரையில் திருப்பணி செய்து ஏராளமான பொருட் செலவில் சமையலறை, பிராகார போபுர விமானங்கள் முதலியவற்றைக் கட்டுவித்து, சரிவா பூஜை, நைவேதனம் முதலியவை நடைபெறப் போதிய மானியங்களை இவ்வம்மை வாங்கி வைத்தனள்.

ஆலயத்தைச் சுற்றிச் சோலைகளும், திரு நந்தவனமும் அமைக்கப்பெற் றிருந்தன. பரிமள கந்தம் வீசும் மலர்கள் ஸ்ரீகாளி தேவியின் திருவருளை விளக்குவன போன்று வாசனை வீசும். கமுகு மரங்கள் தென்றலாலும் கங்கையின் துங்கமான நீர்க் காற்றுலும் அழகுற அசைந்து "அன்பர்களே! வம்மின்!" என்று அழைப்பது போன்றிலங்கும். பரமஹம்ஸர் முதலான மகான்களுக்குப் பிறகு அத்தலம் பெரிய யாத்ரா விசேஷ முடைய தாயிற்று. காளிதேவியின் கோயிலுக்குச் சற்று அப்பால் குளிர்ந்த கங்காநதி தீரத்திற் பல ஆலமரங்கள் நெருங்கிய இடமொன்றுண்டு. அதைப் பஞ்சவடி யென்பர். அவ் விருக்ஷங்களுக்கு நடுவே ஓர் பெரிய ஆல விருக்ஷமொன்று உன்னதமாக நிற்கும். இதனடியில் அழகிய தளவரிசை யிடப்பெற்றிருக்கும்.

ஸ்ரீகாளி ஆலயம்

இம்மரத்தடியிற்றான் பரமஹம்ஸர் பரிசுத்த ஞாஞேதயம் பெற்றூர். ஏன்? சாக்ஷாத் பரமேஸ்வரன் வடவால் அமரும் அண்ணலாரன்றே! 'கல்லாலின் புடை யமர்ந்து' என்று திருவிளையாடற் புராணத்திலும், 'கல்லான் நிழன் மலை' என்று சிவஞான போதத்திலும் போற்றப்பட்டவரன்றே! அதனுற்றான் ஆலமரத்திற் கோர் அபூர்வ விசேஷம். அம்மரத்தடியில் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸருடைய குருவான தோதாபுரி என்ற மகானும் ஞானசித்தி யடைந்தனர். பரிசுத்தனல்லாதவனை, ஆங்குள்ள பைரவர் என்னும் தேவதை அம்மரத்தண்டை செல்லவும் விடாதாம். இவ்விருக்ஷத்திற்குச் சிறிது அப்பால் வில்வமரமொன்று இருந்தது. இம் மரத்தடியில் ஓர் மேடையுண்டு. இதனடியில் சில மண்டையோடுகள் புதைக்கப்பெற்றிருந்தன. இராக்காலங்களில் நிலவு, ஆலமரங்களின் கிளைகளின் வழியாக ஊடுருவிச்சென்று அந்த மகானுபாவர் நிஷ்டை செய்யுமிடத்தைத் தேடியலைவதுபோல் பிரகாசித்தது.

நிற்க, *பகவான் ஸ்ரீராம கிருஷ்ண பரம ஹம்ஸ தேவரின் சரித்திரத்தைச் சற்று கூறுவோம். இப்பெரியார் வங்காளத்தைச் சார்ந்த ஹூக்ளி ஜில்லாவை யடுத்த காமார்புகூர் என்னும் கிராமத்தில் விப்பிர ரென்னும் பிராம்மண குலத்தில் அவதரித் தருளினர். கலியுகாப்தம் ௪௯௩௫-ம் வருஷம் நந்தனஹூ மாசிமீ 11உ (1833ஹூ பிப்ரவரிமீ 20உ இவருடைய ஜென்ம தினமாகக் கொண்டாடப் படுகின்றது. இவரது பிதா ஸ்ரீக்ஷுதிராம் சடோபாத்யாயர் பரம பாகவதோத்தமராயும், சாது சந்தர்ப்பணையில் மிகவும் ஈடுபாடுடையவராயு மிருந்தார். அவரது மூதாதையர்கள் ஸ்ரீராமபக்தர்களாதலின் சடோபாத்யாயரும் முன்னோரைப் போலவே ஸ்ரீரகுநந்தனனைத் தமது உபாசனா மூர்த்தியாகக்கொண்டு பிரபுவை அர்ச்சனை ஆராதனைகளால் மனப்பூர்வமாகப் பூசித்து வந்தார். பக்த பராதீனனை சக்ரவர்த்தித் திருமகனும் ஸ்ரீக்ஷுதி ராமருக்குப் பிரத்யக்ஷ தெய்வமாக விளங்கினர். ஜனங்கள் அவரைப் போற்றித் தங்கள் குருவாகக் கொண்டு பூஜித்தனர்.

பகவான்
ஸ்ரீராமகிருஷ்ண
பரமஹம்ஸ தேவர்

ஒழுக்கம் விழுப்பந் தரலா னொழுக்கம்
உயிரினு மோம்பப் படும். —திருக்குறள்.

என்பதற் கிணங்க மகா தரித்திர தசையிலிருந்தும், அப்பெரியார் புலி பசித்தாலும் புல்லைத் தின்னாதென்பது போல ஜீவனார்த்தமாகத் தமது சுதர்மத்திற்கு முரண்பாடுடைய எத்தொழிலிலும் ஈடுபடாது ஒழுகிவந்தார். அவருடைய தர்ம பத்தினி சந்திரமணி தேவி பரிசுத்த மனதும் உதாரகுணமும், தர்ம சிந்தனையு முடையவள்; கணவன் சொற் கடவாத காரிகை. ஏற்ற மனைவி இசைந்துவிட்டால் அதனைவிட ஒருவன் பெறக்கூடிய பாக்கியம் வேறெதுவு மில்லையன்றோ!

க்ஷுதிராம் பூர்வீகமான டேரி என்னுங் கிராமத்தில் தமக்குள்ள சொற்ப பிதுரார்ஜித பூமியை அனுபவித்துக்கொண்டு வசித்து வந்தார். அவ்வூர் சர்வாதிகாரி (ஜமீன்தார்) இவரைத் தனக்குச் சாதகமான ஓர் வியாஜ்யத்தில் பொய்ச்சான்று கூறவேண்ட, இப்பெரியார் ஒப்பவில்லை. செல்வச் செருக்கினால் தருக்கி அந்த சர்வாதிகாரி சடோபாத்யாயரைத்

* இவரது விரிவான சரித்திரம் எமது ஆபீஸில் வெளியிடப்பெற்றிருக்கிறது. 408 பக்கங்களுடையது. விலை ரூ. 1 12 0

ஸ்ரீ க்ஷுதிராம் சடோபாத்யாயர்

துன்புறுத்த நினைத்து அவருடைய மாசூல்களைக் கொள்ளைகொண்டான். 'துஷ்ட சகவாசம் பிராண சங்கடம்' ஆதலின் அவர் அவ்வூரைவிட்டு நீங்கி **காமர்புகூர்** எனும் ஊரை யடைந்து ஓர் சிறு வீடு அமைத்துக் கொண்டு வாழ்ந்தார். அவ்வூரிலுள்ள பிரபுக்கள் இவருடைய பக்தி யைக் கண்டு விஸ்வாசித்து உதவி புரிந்தனர். மிக்க தரித்திர தசைபி லிருந்த போதிலும்,

விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று. —திருக்குறள்.

என்றவாறு அவர் விருந்தோம்பலைக் கைவிட்ட நாளே யில்லை. ஒரு நாள் அப்பெரியார் சுமார் பதினைந்து மைல் தூரத்திலுள்ள தம் குமா ரத்தியைப் பார்த்துவரச் செல்லும்போது, நடுவழியில் வசந்தகாலத் தால் இலை யுதிர்ந்து புதிய தளிர்விட் டிருந்த வில்வ மர மொன்றைக் கண்டு, தாம் சிவபூஜையில் கொண்ட ஆவலைப் பூர்த்தி செய்துகொள் ளத் தருணம் அதுவென மகிழ்ந்து, தாம் சுமக்கக்கூடிய அத்துணை வில்வ தளங்களைக் கொய்துகொண்டு வீட்டுக்குத் திரும்பினார். பெண் ணைப்பார்க்கவேண்டு மென்ற ஞாபகமே அவருக்கில்லை. அவருக்குச் சொந்தமானநிலத்தில் ஒருகை தாணியத்தைக் கொண்டுபோய் ஸ்ரீராம சந்திர மூர்த்தியின் பெயரைச் சொல்லித் தெளித்து விட்டு வருவார். அப்பழனம் எம்பிரானுடைய கிருபையால் அக்ஷயமாகப் பலன் தந்து வந்தது. எதிலுமே மெய்யன்புடையாருக்கு மேன்மைதான். 'மெய் யர்க்கே மெய்யனாகும், விதியிலா வென்னைப்போல பொய்யர்க்கே பொய்யனாகும் புட்கொடி யுடைய கோமான்' என்றார் தொண்டரடிப் பொடியாரும்.

கதாதரரின் அவதாரம்

க்ஷுதிராம் சடோபாத்யாயர் ஒருசமயம் குடும்பத்துடன் கயா விற்கு யாத்திரையாகச் சென்றிருந்தார். அங்கு கதாதரர் என்ற திருப் பெயருடன் திருக்கோயில் கொண் டெழுந் தருளியிருக்கும் ஸ்ரீமந் நாராயண மூர்த்தியைத் தரி சித்துக் கொண்டிருக்கும் பொழுது 'நான் உமது திருக் குமாரனாக அவதரிக்கத் திருவுள்ளங் கொண்டுளேன்' என்ற அசரீரி பிறந்தது. க்ஷுதிராம் அதுகேட்டு ஆனந்த பரவசராகி ஊருக் குத் திரும்பினார். சிலகாலஞ் செல்லச் சந்திரமணி தேவி கர்ப்பவதி யாகித் திவ்யலட்சணம் பொருந்திய குழந்தை யொன்றைப் பெற்றாள்.

அக்குழந்தைக்கு முன் நிகழ்ச்சிப்படி கதாதரர் என்று பெயர் சூட்டினர் பெற்றோர்.

கதாதரர் இளம்பிராயத்திலேயே விசேட பகவத் பக்தியுடையவராகி, ஈஸ்வர பஜனையில் அதிகப் பிரியங்கொண் டிருந்தார். அவர் மண் பதுமைகளைச் செய்து அவற்றிற்குப் பூஜை, நிவேதனம், விழா முதலியன நிகழ்த்தி விளையாடி வந்தார். ராம நாமத்தில் ஈடுபட்டு அவர் அடிக்கடி நர்த்தனம் செய்து பகவானை வாயாரப் புகழ்ந்து தமது இளமையைக் கழித்துவந்தார். அக் கிராமத்திற் கருகாமையிலுள்ள லாஹா சத்திரத்திற்கு அவர் அடிக்கடி சென்று அங்கு வரும் சிறந்த யாத்ரார்த்திகளுடன் தர்க்கம் செய்வதுண்டு. யாத்திரிகர்கள் தாம் யாத்திரை செய்த ஸ்தலங்களின் மான்மியத்தை உரைக்கக் கேட்டு உளம் மகிழ்வர் கதாதரர். அவருக்குப் படிப்பு வாசனை யில்லை. அவர் தமது ஏழாம் பிராயத்திலேயே இராமாயணம், பாரதம், பாகவதங்களைப் பௌராணிகர் வாயிலாகக் கேட்டு அவற்றிலுள்ள தர்மங்களைக் கண்டறிந்தார். தவிர, மகா புருடர் என்று கூறத்தக்க அறிகுறிகள் இளமையிலேயே இவரிடம் காணப்பட்டன. இவருக்கு இரண்டு தமையன்மாரும், இரு தமக்கையரு மிருந்தனர். கதாதரருடைய மூத்த சகோதரர் ராம குமார சடோபாத்யாயர் வட மொழியில் சிறந்த பண்டிதராய்க் கல்கத்தா நகரிலிருந்த ஒரு சிறு பாடசாலையில் போதகாசிரியராக விருந்தார். அப் பள்ளிக்கூடத்தில் கதாதரர் சேர்க்கப்பட்டும் அவருக்குப் படிப்பதில் பிரிய மேற்படவில்லை. அப் படிப்பில் அவருக்குத் திருப்தியும் ஏற்படவில்லை. எங்கும் வஞ்சனை நிறைந்த நெஞ்சினரையே கண்டு, பரமாத்ம ஸ்வரூபத்தை யறியும் பர வித்தையைத் தாம் அங்கு பெற வியலாதென் றெண்ணி அவ்விடம் விட்டகன்றார் கதாதரர்.

பால்ய பக்தி

இவ்வமயம் இராணி ரஸாமணி யம்மாளால் தக்ஷிணேஸ்வரத்தில் காளிதேவியின் ஆலயத் திருப்பணி பூர்த்தி யடைந்திருந்தது. கதாதரருடைய மற்றொரு சகோதரர் அக் கோயிலுக்கு அர்ச்சகராக நியமிக்கப்பட்டார். கதாதரருக்கு உபநயனமுமாயிற்று. அப்பொழுது கதாதரர், தம்முடைய சகோதரருடன் தக்ஷிணேஸ்வரத்தில் வசித்து வந்தார். சிறிது காலஞ்செல்ல இவருடைய சகோதரர் நோய்வாய்ப்பட்டுத் தமது சொந்த கிராமத்திற்குச் செல்லவே, கதாதரர் அக் கைங்கரியத்

விசேட பக்தியும் விவாகமும்

தைத் தாமே ஏற்ருர். அன்று முதல் அவர் திரிகாண சுத்தியுடன் மூவாசைகளையும் விலக்கி, இம்மை யின்பங்களை வெறுத்து, பேரின்பப் பெரு வாழ்வை விரும்பி, காளிதேவியைத் தமது தாயெனப் போற்றித் தொண்டு புரிந்துவந்தார். அன்புமேலீட்டால் அவர் 'தாயே! சேயாகிய என்னுடன் பேசாது மௌனஞ் சாதிப்பதென்ன?' என்று அனுதினமும் புலம்பி புரண்டழுவார். இவருடைய அதீத பக்தியை அறியாத பலர் இவரைப் பித்தம் பிடித்தவரென்றெண்ணிப் பரிகசித்தனர். அவர்கள் வார்த்தையை நம்பி க்ஷுதிராமர் இவருக்கு விவாகம் செய்து வைத்தால் சித்தம் சுவாதீனப்படுமென்றெண்ணி, ஊருக்கழைத்துக்கொண்டுபோய் ஸ்ரீ ராமசந்திர முகோபாத்யாய ரென்ற பெரியாரின் திருக் குமாரத்தியான சாரதாமணி தேவி என்ற சிறுமியை விவாகம் செய்து வைத்தார்.

தேவியினருளால் கதாதரர், தம்மை ஆஸ்ரயித்தவர்களுக்கு அவரவர்களுடைய திரிகால நிகழ்ச்சிகளையுங் கூறிவந்தார். பூர்வ ஜென்ம விஷயங்களை விளக்கும் அவருடைய ஆற்றலைக் கண்டு பலரும் அதிசயித்தனர். தினந்தோறும் அவரைப் பலர் தரிசித்துக்கொண்டேயிருந்தனர். அவர்களுக்கு கதாதரர் ஹிதோபதேசஞ் செய்து வந்தார். அவரது பக்தி வைராக்கியங்கள் வளர்பிறைச் சந்திரனைப்போல் வளர்ந்து வந்தன.

"ஈமகிலோ நீ மகிம எந்தனி தெலு புதுனம்மா"

என்ற ஸ்ரீ தியாகப் பிரம்மத்தின் வாக்குப்படி அவர் 'தாயே! உன்னையன்றி யான் எவரை நம்புவேன்! ஆராதிப்பேன். உன்னையே நம்பி யடைந்த எளியேனை உன் கடைக்கண்ணால் நோக்கி, பிரத்யக்ஷமாகிக் காட்சி தந்தருளாயோ' என்று கதறிக் கண்கலங்கி அனுதினமும் குழந்தையைப் போல விம்மி விம்மி யழுவார். இராணி ரஸாமணியின் மருகரான மதுரா நாதன் இவர்மீது அதிக விஸ்வாஸ முடையவனாதலால் இவருக்குப் பித்தம் மேலிட்டுளதென் றெண்ணி, வல்ல வைத்தியர்களைக் கொண்டு, சிகிச்சை செய்ய ஏற்பாடு செய்தார். வைத்தியர்கள் இவரது சித்த சுத்தியைக் கண்டஞ்சி 'தேவியினருளாகிய ஔடதமே இவருடைய நோயைப் போக்கும். இவர் அவதார புருஷர்' எனப் பகர்ந்து அகன்றனர்.

கதாதரரின் மகிமை பரவல்

வரவர அவருடைய தியான சாதனம் தீவிர நிலையை யடைந்துகொண்டே வந்தது. சிலகாலம் சத் சங்கத்தை விரும்பியும் சில காலம்

ஏகாந்தத்தில் விருப்பமுற்றும் கதாதரர் காலங்கழித்து வந்தார். அழுக்குற்ற பொன்னை யொத்த அவர் சித்தம், சாதனமென்ற புடம் போடப்பட்டு, மாற்று ஏறி அவருடைய வாழ்வை மாற்றி வந்தது. மனங்குவிய அவர் பல காலமாய்த் தேவியைப் பிரத்யக்ஷமாகத் தரிசிக்க முயன்றும் அன்னை அருள் பாலிக்கத் தாமதித்தலைக் கண்டு தாளாது தற்கொலை புரியத் துணிந்தார். தேவி உடனே கதாதரருக்குக் காட்சி தந்து மறைந்தனள். அன்று முதல் அவர் விரும்பியபோதெல்லாம் தேவி பிரத்யக்ஷ மாவதுண்டு. தேவி இன் அருள் பாலித்தது மட்டு மன்றி யோக நிஷ்டையிலும் அவருக்குச் சித்தி அதிகரித்து வந்தது. மண், பெண், பொன்னாசைகள் இவரை விட்டகன்றன. ஒரு கையில் மண்ணையும் மற்றொரு கையில் பொன்னையும் எடுத்து 'மண்ணும் பொன்னும் பயனற்றவை' யென்று அவற்றை ஒன்றாகக் கலந்து கதாதரர் கங்கையில் எறிவார்.

காளிதேவி காட்சி யளித்தல்

பலகாலும் யோகாப்பியாசம் செய்தமையாலும், காலா காலங்களில் ஆகாரம் உட்கொள்ளாததாலும் உடலில் அவருக்கு ஒருவித எரிச்சல் நோய் உண்டாயிற்று ; தேகமும் மெலிந்தது. இவருடைய தேகநிலையைக் கண்டு மதுரா நாதன் மனங்கலங்கினார். அப்பொழுது ஓர் பிராம்மண ஸ்திரீ இவர் படும் கஷ்டத்தைக் கண்டு சிகிச்சை செய்து குணப் படுத்தினாள். இப் பெண் நாயகம் வங்க நாட்டிற் பிறந்த ஓர் பண்டிதை ; அழகே உருவெடுத்ததென அவதரித்த அணங்கு ; வடமொழிக் கிரந்தங்களில் வல்லவள் ; வல்லவரை வெல்லும் கவித்திறமுடையவள் ; உலக இன்பங்களில் வெறுப்படைந்து, காஷாயம் பூண்டு, செவிக்கின்பம் செழிக்கப் பகவானைப் பாடிக்கொண்டு, பித்தேறியவள்போலச் சஞ்சாரமாகப் புறப்பட்டவள். பாவம் நிறைந்த இப் பாரினிலுள்ள பாமர மக்களைப் பவக்கடலினின்றும் மீட்டுப் பரமானந்தத்தை யளிக்க அற மங்கையே இவ் வுருக்கொண்டன ளெனினும் ஒக்கும். காளிதேவி கதாதரருக்குத் தோன்றி 'அந்த ஸ்திரீ யிடமிருந்து நீ உபதேசம் பெறக்கடவா' யென் றியம்பி மறைந்தனள்.

ஓர் மாது சிரோமணியின் உதவி.

வியாதியால் கதாதரரின் உடல் மெலிந்திருந்தது. ஆனால் அதைக் குறித்து அவர் கவலைப்படவில்லை. "சரீரம் எப்படியானா லென்ன ? அது அழிந்துபோகக் கூடியது தானே!" என்று கூறி, கவலைகொண்ட மதுரா நாதரைத் தேற்றினார். அப் பார்ப்பனப் பெண்மணி கதாதர

ரோடு கூடவே யிருந்து தாம் ஜகன் மாதாவை உபாசனை செய்து அனுபூதி யடைந்த மார்க்கத்தையும் உபதேசித்தாள். இவ்வாறு அவள் சில வருஷங்கள் கதாதரருடன் கூடவேயிருந்து பிரம்மானுபூதி யடைவதற்குள்ள மார்க்கங்களை யெல்லாம் அவருக்குப் புகட்டினாள். கதாதரர் யோக சாஸ்திரங்களிலே கூறியுள்ள முறைகளை அனுஷ்டித்துத் தேர்ந்து, மனதை அடக்கி நிச்சலமாய், நிர்விகற்பமாய், சரீரப் பிரக்ஞையை மறந்து சலன மற்ற நிஷ்டையிலிருப்பதைக் கண்ட அனைவரும் ஆச்சரிய முற்றனர். கதாதரர் நிர்விகல்ப சமாதியில் நிலைத்து நிற்கும் நீர்மை தனைப் பெற்றிருந்தும், அணுவுக்கு அணுவாய், மகத்துக்கு மகத்தாய் விளங்கும் பரப்பிரம்ம வஸ்துவைப் பற்றியுள்ள பேரறிவைப் பெறுதற் பொருட்டு மென்மேலும் முயற்சித்தார். இத்தருணம் தோதாபுரி யென்ற ஒரு மகான் அங்கு வந்து சேர்ந்தார்.

கதாதரரின் பெரும் முயற்சி

தோதாபுரி யென்னும் மகானுபாவர் ஓர் திகம்பரர்; தீர்த்தாடனமாக அவர் பூசஞ்சாரம் செய்து கொண்டு இருந்தவர். அவர் இளமையிலேயே துறவறம் பூண்டு வெளிப்பட்டவர்; சந்நியாச ஆஸ்ரம தர்மப்படி, தேகப்பற்றற்று, எந்த இடத்திலும் ஒரு நாளைக்கு மேல் தங்காது, மழை, வெயில், காற்று முதலியவற்றைப் பொருட்படுத்தாது, யதேச்சையாகக் கிடைத்த ஆகாரத்தை யுண்டு, பாரத தேசத்திலுள்ள பல ஸ்தலங்களைத் தரிசித்தவாறு ஆரண்யங்களையும், குகைகளையும், தீர்த்தங்களையும் கடந்தவண்ணம் வந்தார். அப்பொழுது 'நீ வங்காளம் செல்வாய்! ஆங்கு உன் வரவை ஒரு மகான் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்' என்ற அசரீரி வாக்குப் பிறந்தது. அக்கட்டளையை அவர் சிரமேற்றாங்கி வங்காள பூமியெங்கும் சுற்றி விட்டுக் கடைசியாக தக்ஷிணேஸ்வாத்தை யடைந்தார்; கதாதரரைக் கண்டு, அவருடன் சிறிது உரையாடித் திருப்திப்பட்டு அவருக்கு முக்தி மார்க்கத்தை உபதேசித்தார். அப்பெரியார் கதாதாருக்கு, "ஏகமேவா த்விதீயம் பிரம்மம், பாவா பாவாதீதம் பிரம்மம், பிரபஞ்ச சொரூபம் பிரம்மம், சொரூபாரூ பாவாதீதம் பிரம்மம்" என்று உபநிஷதங்கள் கோஷிக்கின்ற உண்மைப் பொருளாய், சத்தாமாத்திரமாய், சைதன்ய வஸ்துவாய் அநாதியாய், அநந்தமாய், அகண்ட சச்சிதானந்தமாய் விளங்கும் பிரம்ம வஸ்துவைப் பற்றியும் அதுவே தானுயிருக்கும் தத்துவ ஞானத்தைப் பற்றியும், அந்த நிலையை யெய்துதற் குரிய மார்க்கங்களைப் பற்றி

மகான் தோத புரி

யும் எடுத்து போதிக்கவே, சுதாதார் மூன்றே நாட்களுக்குள் இரண்டற்ற ஏகாந்த நிலையை யடைந்து நிர்விகல்ப சமாதியில் நிச்சல சமுத்திரம் போன்று ஆய்ந்து ஓய்ந்து ஆனந்த பதவியை யடைந்து, சமாதியி லாழ்ந்திருந்தார். இதுகண்ட தோதாபுரி ஆச்சரியப்பட்டு, இவரை அவதார புருஷரென அறிந்து 'இனி நீ சிஷ்யனல்லன்; எனக்கு ஆசாரியனாகி விட்டாய்' என்று தழுவிக் கொண்டார்.

ஸ்ரீராம கிருஷ்ணர் எனும் தீக்ஷை யடைதல்

பின்பு அவரே ஸ்ரீராம கிருஷ்ணர் என்ற ஞானப் பெயர் சூட்டினர். அவர் மகா சித்தராக விளங்கினார். "சுத்த பிரம்ம வஸ்துவினிடத்தில் 'நான்' என்பதுமில்லை, 'நீ' யென்பதுமில்லை, ஜீவனுமில்லை, ஈஸ்வரனுமில்லை, தேவனுமில்லை, தேவியுமில்லை, அதன் நிலை மனவாக்குக் கெட்டாதது. ஆதலின், பிரபஞ்சப் பிரக்ஞை யற்று, ஸ்தூல, சூட்சும, காரண சரீரங்கள் அப்படியப்படியே நசித்துவிட, ஞாதுரு, ஞான, ஞேயங்கள் அழிய, நானே தானாகி அகண்டமாய், ஆனந்தமாய், அமர்ந்திருக்கும் அதீத நிலையில் அம்பிகையுமில்லை, அடியானுமில்லை. ஆயினும் பிரபஞ்ச ஞாபகம் சிறிதேனு மிருக்கும் வரை, நானென்ற அகங்காரம் உள்ள வரையில், ஊனக் கண்களினால் உலகைப் பார்க்கும் வரையில், அந்த பிரம்ம வஸ்துவே ஈஸ்வர வடிவமாய் மனிதனுடைய மனதுக்கு விஷயமாகும்" என்று தோதாபுரிக்கு ஸ்ரீராம கிருஷ்ணர் செய்த நிர்க்குணோபாசனை தத்துவத்தைக் கேட்ட தோதாபுரி பிரமித்துப் போய்விட்டார். பின்பு ஸ்ரீராம கிருஷ்ணருக்குச் சகலமத தத்துவங்களையும் ஆராய வேண்டுமென்ற அபிலாஷை யேற்பட்டது. முகம்மதிய சித்தாந்த விற்பன்னரான மௌலிகள் பலரைக்கண்டு அவர்களிடமிருந்து அம்மதமானது கடைசியாகப் போய் உபநிஷதங்களின் முடிவையே யடைகின்றன வென்பதை அனுபவ பூர்வமாக அறிந்துகொண்டார்; இவ்விதமே கிறிஸ்தவ சமயத்தையுங் கண்டறிந்தார். தோதாபுரி ஓராண்டு வரை அங்கு தங்கியிருந்து பின்பு விடை பெற்றுக்கொண்டு யாத்திரையை ஆரம்பித்தனர்.

பின்னர், ஸ்ரீராம கிருஷ்ணர் ஸ்ரீ வைஷ்ணவ பக்தியை அனுஷ்டிக்க வேண்டுமென்று பிரியப்பட்டார். பிரபஞ்சத்தில் எவ்வித அன்பாலும் இறைவனை யடையலா மன்றோ? ஈஸ்வரனை நண்பனாக பாவித்து அன்பு செலுத்தலாம்; அவ்விதம் செய்தார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்! தந்தையாகக் கொள்ளலாம்; அப்படி யொழுகினார் சம்பந்த மூர்த்திகள். அடிமையா யிருந்து ஆராதிக்கலாம்; அதன் பெரு

மையை அப்பர் சரிதையில் ஒப்பக் காணலாம். அழுதழுது முக்தி பெறலாம்; அம் முறையைக் கடைப் பிடித்தார் மாணிக்கவாசகர். ஸ்ரீராமகிருஷ்ணர் கண்ணனிடத்தில் பிரேமை கொண்டு தாமே கோபிகா ஸ்திரீயாகி நாயகா நாயகி பாவத்தில் பகவானைக் கண்ணாரக் கண்டு களித்தார். எல்லா சமயக் கடவுளரையும் அவர் கண்ணாரக் கண்டு களித்தார்; இதனின்றும் சூல்கொண்ட மேகங்கள் பல இடங்களில் மழையாகப் பெய்ய, பல ஆறுகளாக ஓடிவரும் புனலெல்லாம் ஒரே சமுத்திரத்தில் வந்து விழுவது போன்று, எல்லா மதத்தினராலும் துதிக்கப்படும் தெய்வங்களும், மார்க்கங்களும் கடைசியில் ஒரே பரப்பிரம்மத்தையே எய்தவைக்கின்றனவென்னும் உண்மையைத் தம் சுவானுபவத்தா லுணர்ந்தார் ஸ்ரீராம கிருஷ்ணர்.

ஸ்ரீ வைஷ்ணவ பக்தியை அனுஷ்டித்தல்

கல்கத்தா நகரத்திலுள்ள பாஷாஞானிகளும், தார்க்க நிபுணர்களும், வேதாந்திகளும் பரமஹம்சரை வந்து தரிசித்து உபதேசமடையலாயினர். அவருடைய ஆஸ்ரமத்தில் ஆத்மவிசாரம் சதாகாலமும் நடந்துகொண்டே யிருந்தது. வினவிடைகளும் தர்க்கங்களும், குதர்க்கங்களும், யுக்திகளும் குயுக்திகளும், தகாரும் இராமகிருஷ்ணரிடத்தில் சரணாகதி யடைந்தன. தக்ஷிணேஸ்வரமெங்கும் வித்வத் கோஷ்டியா யிருந்தது. எப்பொழுதும் சத்காலக்ஷேபம்! சதாசாரம்! சாக்ஷாத்கார நித்யோத்ஸவ ஸ்தலமாக விளங்கிற்று தக்ஷிணேஸ்வரம்.

ஐந்தாம் பிராயத்தில் கணவன் முகத்தைக்கண்ட சாரதாமணி தேவியைச் சற்று கவனிப்போம். அப்பெண்மணி பதினெட்டாம் பிராயத்தை யடைந்து, தமது கணவர் பித்தம் பிடித்து, சித்த ஸ்வாதீனமற் றிருப்பதாகவும், ஞான நிஷ்டாபரராய்த் தக்ஷிணேஸ்வரத்தில் வசிப்பதாகவும் கேள்வியுற்று, இனித் தான் பெற்றோர்களிடமிருத்தல் தகுதியன்றென நிச்சயித்து, அவர்களிடம் அனுமதி பெற்றுக்கொண்டு கால் நடையாகச் சுமார் எண்பது மைலளவும் நடந்து, தக்ஷிணேஸ்வரத்தை, யடைந்தாள். அவளுடைய வரவைக்கண்ட பரமஹம்ஸர் எளிதில் இன்னரென அறிந்துகொண்டு 'தாயே வருக!' வென்றழைத்து, 'உன்னைப் பாணிக்கிரஹணம் செய்த கதாதரன் இங்கில்லை. அவன் இப்பொழுது உன்னைத் தாயென்று அழைக்கின்றான். நீ தாயாக விளங்கக்கடவை' யென்றுகூறி அஞ்சலி பந்தம் பண்ணினார். அவ்வம்மை பரமஹம்ஸரது பார்வை விசேடத்தால் பரிசுத்தையாகிக்

சாரதாமணி தேவியின் வருகை

ஸ்ரீமதி. சாரதாமணி தேவியார் (ராமகிருஷ்ணர் மனைவியார்)

(92-ம் பக்கம்)

காளிதேவிக்கும், அவருக்கும் தொண்டுபுரிந்த வண்ணம் தக்ஷிணேஸ்வரத்திலேயே அவருடன் வசித்துவந்தாள். **ஸ்ரீ சாரதாமணி தேவியின் பாக்கியமே பாக்கியம் !**

ஸ்ரீராம கிருஷ்ணருக்கு அவ்வம்மையாரிடத்தில் தாயன்பு பெருகி வந்தது. சதாகாலமும் அவ்வம்மையைத் தாயே யென்றழைத்து அன்புடன் நடத்தினர் ; தனியாக ஞானோபதேசம் செய்து அனுதினமும் அவ்வம்மையின் ஆன்மா திடப்படும்படி உபதேசம் செய்தார் ; அவ்வுத்தமியை அவர் 'தாயே' 'ஜெகன்மாதாவே' 'அன்னை'யே யென்றழைப்பார் ; அவர் கண்களுக்குப் பெண்மயமே தாய்மயமாக விளங்கிற்று !

அவர் யோகாப்பியாசத்தால் அணிமா, மகிமாதி அஷ்டமா சித்திகளையும் எளிதிலடைந் திருந்தாரேனும், தமது யோக சித்தியை உலகிற்குக்காட்டி, வினோதங்களைப் புரிந்து, புகழடைய விரும்பவில்லை. பிரம்ம சாக்ஷாத்காரத்தை யறிந்து நித்யானந்தத்தை யடையவே அவர் இச்சித்தார். பிறருடைய மனதிலுள்ள எண்ணங்களை அவர் விரைவிலறிந் துரைப்பார் ; எதிர்கால நிகழ்ச்சிகளை எளிதிற் புகல்வார் ; கண்டநிமிஷத்திலேயே ஒருவருடைய நடத்தை முதலியவற்றை யறிந்து கொள்வார். அவர் அதிகக்கல்வி யறிவற்றவரா யிருந்தும் சுவானுபவத்தாலும், சூக்கும அறிவின் கூர்மையாலும், மன பரிபக்குவத்தாலும், மதக்கிரந்தங்களின் ரஹஸ்யங்களை யறிந்து சற்குண சம்பன்னராக விளங்கினர்.

ஸ்ரீராம கிருஷ்ணரின் சித்திகள்

மதுராநாதன் ஸ்தலயாத்திரை செய்ய நிச்சயித்து இராம கிருஷ்ணரிடத்திற் கூற அவர் புறப்பட்டார். இவர்கள் பிருந்தாவனம், துவாரகை, கோகுலம் முதலிய புண்ணிய க்ஷேத்திரங்கட்குச் சென்று தீர்த்தாடனஞ்செய்து, திவ்யமங்கள மூர்த்திகளைத் தரிசித்து, பின்னர் காசியை யடைந்து விஸ்வேஸ்வரரை வழிபட்டு அங்கு எழுந்தருளி யிருந்த திரைலிங்க சுவாமிகளையும், கங்கா மாதா யோகினியையும் தரிசித்து, ஆத்ம விசாரம் செய்து அவர்களிடமிருந்து பல உண்மைகளை யறிந்து, அவர்களால் அவதார புருஷரென்று புகழப்பட்டு வருங்காலையில், தமது ஆப்த தெய்வமான ஸ்ரீகாளி தேவியின் ஞாபகம்வர அப்பொழுதே பிரயாணப்பட்டு தக்ஷிணேஸ்வரமடைந்தார்.

ஸ்தல யாத்திரை: திரைலிங்கஸ்வாமிகள், கங்கா மாதா

அக்காலத்தில் கல்கத்தாவில் பிரம்மசமாஜம் வலுவடைந்திருந்தது. வரவர கிறிஸ்தவ தர்மம் அதிற் பெருகிவந்தது அகில பாரத பிரம்மசமாஜத் தலைவரும், சொல்வல்லுநருமான **ஸ்ரீஜத் கேசவ சந்திர சேனர்** கல்கத்தாவில் பெரிய பிரம்மஞானியென புகழுடைந் திருந்தார். அவர் பரமஹம்ஸரை மகாத்மா வென்று கொண்டாடிக் கல்கத்தாவிலுள்ள அனைவருக்கும் இவருடைய மகிமையை எடுத்துரைத்தார். அவர் அடிக்கடி தக்ஷிணேஸ்வரம் வந்து பரமஹம்ஸரைத் தரிசித்து, உபதேசம் பெற்று, அம்மகானுடைய பாத தூளிகளைச் சிரசில் வகிப்பார்.

ஸ்ரீராம கிருஷ்ணர் பிரசித்த மாதல்

இவருடைய உபதேசத்தால் மனந்திருந்தி கேசவ சந்திர சேனர் பிரம்ம சமாஜத்தின் கொள்கைகளைச் சீர்திருத்தி 'நவ விதானம்' என்ற புதுப்பெயருடன் சமாஜத்தை வேறாகப் பிரித்து ஸ்தாபித்தார். ஸ்ரீராம கிருஷ்ணருடைய மகிமை நகரத்திற் புகுந்து, நாலுபக்கங்களிலும் பரிமளம் வீசவே மகாமேதாவிகள் முதல் பாமரன் வரையில் பெண்டிருள் பட அனைவரும் தக்ஷிணேஸ்வரத்திற்குத் திரள் திரளாக வந்து அவரைத்தரிசித்து உபதேசம் அடைந்து செல்வது வழக்கமா யிருந்தது. மக்கள் திரள்திரளாகச் செல்வதால் தக்ஷிணேஸ்வரத்தில் நித்யோத்ஸவம் நிகழ்வதுபோன் றிருந்தது. 'பொருளையும், மாதரையும், கீர்த்தியையும் அபேக்ஷிக்கும் குடும்பிக்குத் தம் தாரம் தனயர்களிடம் எத்துணை ஆசையுண்டோ, அவ்வளவு வாஞ்சையுடன் நாம் ஈஸ்வரனை பஜிக்கலாம்' என்று அவர் மொழிவதுண்டு. அவரைக் காண வருவோர்க்கு அவர் ஒரு சிறு விஷயத்தை யெடுத்துக்கொண்டு பெரிய தத்துவங்களை விளக்கி ஆனந்திக்கச் செய்வது வழக்கம்.

நாட்கள் கழியக்கழிய ஜனங்கள் திரள்திரளாகப் பரமஹம்ஸரிடம் வந்து உபதேசம் பெறலாயினர். அல்லும் பகலும் சிறிதும் மனஞ்சலியாது, உவகையுடன் அவர்களுக்கு ஞானோபதேசம் செய்து வந்தார் ஸ்ரீராமகிருஷ்ணர். கர்மயோகம், பக்தியோகம், ராஜயோகம், ஞானயோகமாகிய சதுர்வித யோக சாதனங்களையும் அவர் ஒன்றாகவே பாவித்து உபதேசித்து வந்தமையால் எல்லா சமயத்தினரும் இவரிடம் ஜாதிமத பேதமின்றி ஒரே அன்புடன் உபதேசம் பெற்றுப் போயினர். அவர் 'கண்டென வெலாம் மோன உருவெளிய தாக'க் கருதி அனைத்தையும் அஞ்சலி செய்து வந்தார்.

ஸ்ரீராம கிருஷ்ணருடைய உபாசனதெய்வம் சம்ஹார ரூபமுடைய **ஸ்ரீகாளிதேவி!** அவள் சர்வசம்ஹார ஸ்வரூபியானவள்; கால காலாந்

தகி; திரிலோகங்களையும் உருட்டி விழுங்குகின்றவள்; எவரையும் விடாது தனக்கடிமைப் படுத்தும் மரணத்தை நிகர்த்தவள். நரம்பென்ற நாறில் கோக்கப்பட்ட கபால ஓடுகளே அவளணிந்திருக்கும் முத்தாரம்; வெட்டுண்ட கரங்களே அவள்கட்டும் ஆடை; இரத்தம் சொரியும் சிரத்தை யவள் கரத்தில் தரித்துக் கொண்டிருக்கிறாள்; சம்ஹார ஆவலே அவளுடைய திரு நடனம்; அவள் ஆடுமிடம் சுடுகாடே; இராக் காலமே அவளது உக்ரஹ நேரம். அவளுடைய செயல்கள் எத்துணை உண்மையானவையோ அத்துணை சத்ய சொரூபியே அவளும். அவ்வளவு கொடூரமான ரூபத்துடன் கூடியவளா யிருந்தபோதிலும் அந்த அன்னையைத்தான் மனிதர்கள் மலர் மாலை யிட்டு "தாயே!" என்று அன்புடன் வழிபடுகின்றனர். அதன் அந்தரார்த்த மென்ன? அன்னையின் மாலையும், ஆடையும், காதலத்திற் கொண்ட தலையும் மாம்ச என்புகளாலாகிய சடப் பொருள்கள். அவை அநித்யமானவை; இன்றோ! நாளையோ! என்றோ! எங்கோ! எப்பொழுதோ! அழியக் கூடியவை. அதனைச் சார்ந்த சேட்டைகளும், குறும்புகளும் அவ்வுடம்புடன் அழிந்தே போவன. இப் பொய்யுடலையும் அதனைப்பற்றி நிற்கும் ஆணவாதிக் குறும்புகளையும் அழிக்குந் தன்மை யுடையவள் அன்னை! பரிசுத்தத்தைத் தருபவளே அந்த ஜெகன்மாதா! ஸ்ரீ ராம கிருஷ்ணர் சகுணத் தன்மையில் பரதேவதையை அவளுடைய பயங்கரமான வடிவத்திலேயே தரிசித்தார்; நிர்க்குணோபாசன சம்பன்னரான பின்னர், நிர்க்குணத் தன்மையிலே அவளை ஆனந்த ஸ்வரூபியாகத் தரிசித்தார். சகல ஜீவ ஜனன மரண காரியங்களெல்லாம் காளிதேவியின் கடாக்ஷத்திலேயே பொருந்தி இருக்கின்றன. வித்தைக்கும் அவித்தைக்கும் அவளே தெய்வம்; அவளுடைய கிருபையிலே உலகம் இயங்குகின்றது; ஒடுங்குகின்றது அவளே நித்யானந்த ஸ்வரூபி; விவேகானந்த வெள்ளம். கண்ட பொருள்களிலெல்லாம் பரம ஹம்ஸர் காளியைத் தரிசித்தார். அவளே சிவசக்தியென்று அநுபூதியில் அறிந்தார். மனிதன் மனதாலும் வாக்கினாலும், வியவகரிக்கும் இவ் வுலகத்தேயுள்ள அண்ட பிண்ட சராசரப் பொருள்கள் யாவும் அந்த ஜெகதீஸ்வரியே யென்று அவர் பணிந்தார். அவளே சரீரம்; ஆத்மா; அவளே அனைத்து மன்றோ! அவள் எழுந்தருளியுள்ள 'தக்ஷிணேஸ்வர ஆலயம்' ஓர் முக்தி சோபான கட்டமாகவே விளங்கிற்று

ஸ்ரீ காளி தேவி

9-ம் அத்தியாயம்.

பரமாசாரிய தரிசனம்

ஐயன் திருவருளின்றி உலகில் ஏதொன்றும் கைகூடுவதில்லை. அவனருள் சுரக்கும் நன்னுளை அறிவதற்கு மில்லை. மகா பாதகத்தொழில் புரிந்துகொண்டிருந்தவர்க ளெல்லாம் பரமபாகவ தோத்தமர்களாய் பரமாத்ம சம்பந்திகளாய் பாக்கியசாலிகளாயினர்; "அரும்பொனே! மணியே! என் அன்பே! என் அன்பான அறிவே! அறிவிலூறும் ஆனந்த வெள்ளமே!" என்று பாடிப் பரமபாக்கிய வான்களாயினர். நிஷ்களங்கமான சிந்தையையுடைய பக்தனுக்கு சர்வேஸ்வரன் நித்ய தரிசனம் தருகின்றார். ஆசார்யனைத் தேடி யலை யும் ஆவலுள்ள ஆத்ம விசாரிக்கு தானே குருவாக வந்து தருந்த மரத்தடியில் வீற்றிருந்து உபதேசிக் கின்றார். ஆனால் பகவான் யாருக்கும் எளிதில் வயப்படுவதில்லை. மெய்வருந்தி உன்னுடைய மனம் முறியும் வரையில் அவர் உன்னைப் பல சோதனைகளுக்கு உள்ளாக்குகின்றார். ஆயினும் உன் மனம் உடைய அவர் சகிக்கமாட்டார்! அவர் திருவருட் பெரு மையே பெருமை!

ஈஸ்வரானுக்கிரஹம்

ஏழாம் அத்தியாயத்திற் கூறியவாறு நரேந்திரநாத மஹரிஷி தேவேந்திர நாத தக்கோரைக் கேட்ட கேள்வியையே தாம் சந்தித்த பெரிய அறிவாளிகள் அனைவரையும் கேட்டுக் கொண்டே வந்தார். எவரும் அவருக்கு கடவுளைக் கண்டதாகக் கூறத்துணிந்திலர்; அவர் கள் கண்டதுமில்லை. பரப்பிரம்ம வஸ்துவைக் கண்ட பரமாசாரியனை தரிசித்து உபதேசம்பெற வேண்டுமென்ற அவருடைய ஆவலுக்கு அளவேயில்லை. தீர்க்க தரிசனம் பெற்றவர்களுக்குள்ள பெருமுபற்றி சந்தேகநிலை சித்தியாகிய மூன்றையும் நரேந்திரர் அனுபவித்தார். சகுணோபாசனையில் அவர் இளமை முதல் ஈடுபட்டு சித்தியடைந்து விட்டார். சகுணத்திலிருந்து நிர்க்குணத்தை யடையுந் தருவாயில் தயக்கமேற்பட்டது. நிர்க்குண சொரூபத்தை அவர் அறிய முடிய வில்லை. ஆகவே, அறிவுறுத்தும் ஆசார்யனை அவர் தேடியலைய நேர்ந் தது. அப்பொழுது ஸ்ரீராம கிருஷ்ணரும் தக்க சீடனொருவனைத் தேடிக்கொண்டிருந்தார்.

வேதாந்த விசாரத்தில் மகா ஞானியாய், பரமசாதுவாய், மன பரிபக்குவமுடையவராக விளங்கும் நரேந்திரரைக் கண்ட புவனேஸ்

வரியின் உள்ளம் குளிர்ந்தது. அவள் 'தன் மகனைச் சான்றோனெனக் கேட்ட தாய்' ஆனாள். நாளுக்கு நாள் நரேந்திரருக்கு வைராக்கிய சித்தம் வலுவடைந்து வருவதை அவள் அறிந்து, எங்கு தன் மைந்தன் சந்நியாசியாகிவிடுவனோ என ஐயுற்றுச் சிறிது அஞ்சினாள். நரர் இல்லறத்தை மேற்கொள்ள வேண்டுமென்பது அவள் விருப்பம். விஸ்வநாத தத்தர் நியாயவாதத் தொழிலால் குழந்தைகளைக் குறித்து கவனிக்கப் போதிய அவகாசமில்லாமற் போயிற்று. 'குழந்தைகள் தங்களைத் தாமே கவனித்துக் கொள்ளும், சர்வேஸ்வரன் அவர்களைக் கவனித்துக் கொள்வான்' என்று அவர் தம்முடைய தொழிலையே பெரிதும் கவனித்து வந்தார். ஆண்டில் ஐந்துநாள்கூட அவர் வீட்டில் தங்கியிருப்பது துர்லபமா யிருந்தது. இதனால் நரேந்திரரைப்பற்றி விசேஷமாக அவர் ஒன்றும் தெரிந்து கொள்ள ஏதுவில்லாமற் போயிற்று.

நரேந்திரரின் மனநிலை

நரேந்திர நாதர் கலாசாலையில் மணவரா யிருந்த காலம் முதல் அவருக்கு ஸ்ரீராம கிருஷ்ணரைப் பற்றித் தெரியும். இரண்டொரு முறையும் அவர் தக்ஷிணேஸ்வரத்திற்குச் சென்றிருக்கிறார். ஸ்ரீராம கிருஷ்ணரின் நிலையை இவர் எய்தவில்லையாதலின் அவரைப் பித்தரென்றெண்ணி அலக்ஷிய புத்தியுட னிருந்துவந்தார். எதுவும் பருவத்தாலன்றிப் பழாதன்றோ !

அவர் ஒருநாள் தம் தாய்மாமனான ராம் தாதாவோடு பேசிக் கொண் டிருக்கும்பொழுது, ராம் தாதா "நீ ஏன் பிரம்மசமாஜம் முதலான இடங்களுக்கு ஆத்ம விசாரத்தை முன்னிட்டுச் செல்லுகின்றாய்? மதம் பிடித்து மதவிசாரஞ் செய்வாரை ஏன் நாடியலைகின்றாய்? இதனால் உன் உள்ளத்திற்கு அமைதி யேற்படுமென்று நான் எண்ணவில்லை. உன் எண்ணம் கைகூட வேண்டுமானால் காலந் தாழ்க்காமல் தக்ஷிணேஸ்வரத்திற்குச் செல்! நான் உன்னை அம்மகானிடத்தில் அறிமுகப்படுத்தி வைக்கிறேன்" என்று கூறினார். அப்பொழுது "ஸ்ரீஜத் கேசவப் சந்திர சென் கூட ஸ்ரீராம கிருஷ்ணரிடம் உபதேசம் பெற்று வருகிறாராமே! அவரை அவதார புருஷ ரென்றும் கொண்டாடுகிறாராமே! ஆதலால், தக்ஷிணேஸ்வரம் சென்று நாமும் அப்பெரியாரைத் தரிசித்தால்தான் என்ன?" என்ற எண்ணம் சர்வேஸ்வரனருளால் நரேந்திருக் குண்டாயிற்று. 'ஈஸ்வரோமனுஷ ரூபேண' என்பதுபோல் ஸ்ரீராம் தாதா இச்சந்தர்ப்பத்தில் கடவுட்

நரேந்திரர் தக்ஷிணேஸ்வரத்தை யடைதல்

தன்மையினராக வந்து சேர்ந்தார். அன்று மாலையிலேயே ராம் தாதா வும் நரேந்திரருமாக தக்ஷிணேஸ்வரத்தை யடைந்தார்கள்.

சென்றதும் முன்பின்னறியாத பரமஹம்ஸர், வெகுநாட் பழக்க முடையவர்போலத் தம்மை குசலப் பிரஸ்னம் பண்ணி, உபசரித்து பக்கத்தில் உட்காரும்படி அழைத்ததைப் பார்த்து ஆச்சரியப்பட்டார். ராம் தாதாவினால் நரேந்திரர் சங்கீத லோலன் என்பதை பரமஹம்ஸர் அறிந்துகொண்டு, 'ஹரிகீர்த்தனம்' பாடவேண்டினார். நரேந்திரரும் அவருடைய விருப்பத்திற் கிசைந்து பிரம்மானந்தமாக நாதப் பிரம்மத் தில் லயித்து கொஞ்சநேரம் பாடினார். இப்பாடல்கள் தேவியின் குழந்தையான பரமஹம்ஸருக்குத் தாலாட்டா யிருந்தன ; யோக நித்திரையான சமாதிநிலையை யடைந்தார் ; மனம் கசியக் கண்ணீர் கார் மேகத்தை யொத்துச் சொரிய பரமஹம்ஸர் ஆடிப்பாட வாரம்பித் தார் ; புளகாங்கித மெய்திக் கதறினார். இவருடைய செய்கைகளெல் நரேந்திரருக்கு அருவருப்பையும், அச்சத்தையும், ஆச்சரியத்தையும், ஆனந்தத்தையும் அடைவித்தன. நரேந்திரர் மயிர்க் கூச்சலெய்தினர் ; அவர் உடல் வியர்த்தது. பரமஹம்ஸர் அவரைநோக்கி "வத்ஸா ! உன் வரவை யான் இத்துணைக்காலமாய் எதிர்பார்த்திருந்தேன் ; இன்று தான் நான் பரம பாக்யவானானேன்.

ஸ்ரீராம கிருஷ்ணரை தரிசித்தல்

'இதினமே சுதினமு ஈஸ்வரி (மகாகாளி) நீ கிருபசூட'

(ஸ்ரீதியாகராஜஸ்வாமிகள்). இதுகாறும் வீண் வம்பர்களுடன் வாதாடி என் நாவுலர்ந்தது. உன்னுடன் சம்பாஷிக்கும்போது என் நாவில் அருள் நீர் ஊறுகின்றது" என மொழிந்து ஆலிங்கனம் செய்து கொண்டார்.

பரமஹம்ஸரையே சரணமென் றடைந்த பலரை நரேந்திரர் அங்கு கண்டார். அவர்களிற் சிலர் வயோதிகர்களாயும், சிலர் நடுவயதுள்ள வர்களாயும், சிலர் வாலிபர்களாயும் சுமார் இருபது சிஷ்யர்கள் அவ ரைச் சுற்றி யிருந்தார்கள். இந்த சிஷ்ய வர்க்கத்தில் தாம் கேள்விப் பட்டுள்ள சிலரும், சம்பாஷித்துள்ள சிலரும், அறிந்தவர்கள் சிலரு மிருக்கக்கண்டு, நரேந்திரர் அவர்களுடன் கலந்து பேசினார். படிப்பறி வால் பதறிக்கொண் டிருந்த நரேந்திரருக்கு பர மஹம்ஸரைக் கண்டதால் சமாதானம் ஏதும் ஏற் படவில்லை. இராம கிருஷ்ணரைப் பித்தரென்றும், அவரைச் சூழ்ந்திருப்பாரும் பித்த மேலீட்டால் அவரிடத்துப் பிரேமை

முதல் அறிமுகம்

கொண்ட மூடபக்தி யுடையவர்களென்றும் நினைத்தார். ஆனாலும் தாம் பாடியபோது தமக்குண்டான மட்டற்ற ஆனந்தத்தையும், பரமஹம்ஸர் சமாதி யடைந்ததையும், அம் மகானுடைய தத்துவார்த்த வசனங்களையும் நினைத்து அவர் ஆச்சரிய மடைந்தார். நரேந்திரரிடத்தில் அந்தர்யாமியாக விளங்கும் பரமாத்ம சொரூபம் "இம் மகானிடத்தில் ஓர் விசேஷ மிருக்கின்றது" என்றுணர்த்திற்று. இதுவே, அவர் பரமஹம்ஸரைக் கண்டு வணங்கிய முதற் றடவை.

அன்று அப் பெரியாரைப் பிரிந்து வீடேகுங்கால் அம்மகான் விரும்பியவாறே அடிக்கடி தக்ஷிணேஸ்வரம் வருவதாக நரேந்திரர் ஒப்புக்கொண்டார். சில நாட்கள் சென்றபின் நரேந்திரர் தமது நண்பர்களுடன் தக்ஷிணேஸ்வரத்திற்குப் போனார். ஸ்ரீராம கிருஷ்ணர், அவரை அவருடைய நண்பர்களுடன் வரவேற்றுச் சற்று நேரமானதும் ஒரு பாட்டுப்பாடும்படி வேண்டினார்; பரமஹம்ஸர் நரேந்திரரின் இன்பமான கானத்தாற் பரவச மடைந்து, 'நீ தெய்வீகன்! உன்னை நான் இத்தனை காலமாகத் தேடிக்கொண் டிருந்ததை ஸ்ரீ காளிதேவியே யறிவள்' என்றார். 'சிஷ்யன் குருவைத் தேடுகின்றான்; குரு சீடனைத் தேடுகின்றார்' என்பது சிருஷ்டி நீதி யன்றோ? பிறகு ஸ்ரீராமகிருஷ்ணர் நரேந்திரரை நோக்கி "நீ நித்திரை செய்யும்போது ஓர் ஜோதியை அனுதினமும் காண்பதுண்டா?" என்றார். இவ் வசனங்களைக் கேட்ட நரேந்திரர் 'இவ் விஷயங்களை இப் பெரியார் எப்படி உணர்ந்தார்?' என ஆச்சரியப்பட்டுத் தடுமாறி "ஆம்! நான் சிறு பிராயத்திலிருந்தே அந்த ஜோதியைக் கண்டு தரிசித்து வருகிறேன். அதே என்னைத் தாலாட்டித் துயில்விக்கும்" என்றார்.

இரண்டாம் முறையாகத் தக்ஷிணேஸ்வர மேகல்

"என்ன ஆச்சரியம்! யோகியின் இலக்கணங்கள் உன்னிடத்தில் காணப்படுகின்றன" என்றார் தேவேந்திரநாத் தக்கோர். "இவரும் நம்மைத் தெய்வீக னென்கின்றார். இவரைப் பித்தரென்று நாம் எவ்வாறெண்ணுவது; உண்மையான யோக புருஷராய் இம்மகான் விளங்குகின்றனரே" என்று பற்பலவாறு எண்ணினார் நரேந்திரர். சர்வசங்கப் பரித்தியாகஞ் செய்து சதா நிஷ்டாபரரா யிருந்து ஸ்ரீகாளி தேவியை நேத்திரோத்ஸவமாகக் கண்டு தரிசித்த இம் மகானுபாவருக்கு இந்த முன்பின்னறியாத வாலிபரிடத்தில் ஏன் இவ்வளவு பிரேமை? இதன் காரணத்தை ஸ்ரீராம கிருஷ்ணரும் அறியார். நரேந்திரருக்கும் அது தெரியாது.

பரம ஹம்ஸருடைய உள்ளன்பு அளவு கடந்ததா யிருந்தது; தாயன்பை விட, புவனேஸ்வரியின் பேரன்பைவிடப் பெரிதா யிருந்தது. நரேந்திருக்கு மட்டும் பரம ஹம்ஸருடைய வாஞ்சையில் சந்தேக மிருந்து வந்தது. ஏகைக தத்துவத்தை யறிந்து சிஷ்டர்களான மகான்களும் பரமஹம்சர் பாதமலரைப் பணிவதைக் கண்டு மயங்கினர். அம் மகானுன பங்கஜ மலரில் அவரிடமுள்ள ஈஸ்வரானுபூதியாகின்ற தேனை யருந்தவரும் இசையளிகளாகிப் பக்தர்கள் திரள் திரளாக வந்து கூடினர். தக்ஷிணேஸ்வரம் சதாகாலமும் ஞானசாரியருடன் பக்தர்கள் கூடி ஆத்ம விசாரம் செய்யும் பிரம்ம லோகமா யிருந்தது. அங்கு பக்தர்களுடைய நடனமும் பஜனையுங் கண்கொள்ளாக் காட்சியா யிருந்தன.

இவ்வாறு பல தடவைகள் நரேந்திரர் தக்ஷிணேஸ்வரத்திற்குச் சென்று வந்தார். ஆனால், ஸ்ரீராம கிருஷ்ணரிடத்தில் அவருக்குப் பரிபூரண நம்பிக்கை யேற்படவில்லை; நம்பிக்கை இல்லாமலு மில்லை. பிரபஞ்சத்தைக் கனவேயென்று நிச்சயித்துத் துணிந்த மகா வைராக்கிய முடையவர்களும் இம் மகானுபாவரை வலம் வந்து வணங்குவதால் அவரிடத்தில் சந்தேகப்பட நரேந்திரருக்கு முற்றிலும் இடமுமில்லை.

மூன்றும் முறையாக நரேந்திரர் தக்ஷிணேஸ்வரத்திற்குச் சென்றார். வழக்கம்போல் குருவிடத்திலிருந்து பாடும்படியாக உத்தரவு பிறந்தது. நரேந்திரர் வைராக்யத்தை வலியுறுத்தும் ஓர் கீர்த்தனத்தைப் பாடினர். கானம் நின்றவுடன் அவ்விடத்தில் ஓர் தெய்வீகமான அமைதி யேற்பட்டிருந்தது. ஸ்ரீ ராம கிருஷ்ணர் நரேந்திரரை உற்றுக் கண் கொட்டாது சில நிமிஷங்கள்வரை பார்த்த வண்ணமாகவே யிருந்தார். ஏனைய சிஷ்யர்களும் அவனுடன் பார்த்தவண்ணம் இருந்தார்கள். ஸ்ரீராம கிருஷ்ணர் எழுந்து நரேந்திரரை ஓர் ஏகாந்தமான ஸ்தலத்திற்கிட்டுக்கொண்டுபோய் இரகசியமாக "உன்னிடத்தில் சிவமிருக்கின்றது; என்னிடத்தில் சக்தி யிருக்கின்றது; இவை யிரண்டும் ஒன்றென்பதை நீ யறிவாயாக" என்றுரைத்தார். நரேந்திரர் உவகையுடன் அகன்று 'இவருக்குப் பித்தம் தலைக் கேறிவிட்டது' என்று நினைத்துக் கொண்டார்.

நரேந்திரர் மூன்றும் முறை ஸ்ரீராம கிருஷ்ணரை யடைதல்

வீடேகினர் நரேந்திரர்! இரவும் பகலும் ஸ்ரீராம கிருஷ்ணருடைய ஞாபகம் அவருடைய மனதைவிட் டகலவேயில்லை. கனவில் ஸ்ரீராம

கிருஷ்ணரைக் கண்டு தரிசிப்பார்; அவருடனே சல்லாபிப்பது போலக் கனவு காண்பார். தமக்குள்ள மகா சந்தேகத்தை

நரேந்திரரின் வினா

நிவர்த்திக்கக் கூடியவர் யாரோ? என்ற கவலை அவர் மனதை வாதித்து வந்தது. பரமஹம்ஸ தேவரைக் கண்டு "வீண் வாய் வேதாந்தமும் ஞானமும், உபசரணையும், மயக்கும் வார்த்தைகளும் வேண்டியதில்லை. தாங்கள் நேருக்கு நேராகக் கடவுளைக் கண்டிருக்கிறீர்களா? அப்படியானால் அக் கடவுளைத் தங்களால் எனக்குக் காட்டக் கூடுமா?" என்ற கேள்விகளைக் கேட்க நிச்சயித்தார்.

மறுநாள் மாலையில் நரேந்திரர் தக்ஷிணேஸ்வரத்தை யடைந்தார். அவரை ஸ்ரீராம கிருஷ்ணர் வாவென்றழைக்கு முன்-வாய்திறந்து பேசு முன் 'ஐயனே! தாங்கள் கடவுளை நேரில் கண்டு தரிசித் திருக்கிறீர் களா?' என்று கேட்டார். ஸ்ரீராம கிருஷ்ணர்

பரமாசாரிய தரிசனம்

கணமுந்தாமதியாமல் உறுதியாகவும் விளக்கமாக வும் "ஆம்! நான் கண்டறிந்திருக்கிறேன்" என்று கூறக்கேட்டு, "அக்கடவுளை எனக்குக் காட்டத் தங்களா லிய லுமா?" என்று வினவ "நிச்சயமாகக் காட்டுவேன்" என்ற மறு மொழி கிடைத்தது. நரேந்திரர் ஸ்தம்பித்துப் போனார். சர்வார்த்த சித்தியை அக்கணமே அடைந்து விட்டதாக அவர் மனம் மகிழ்ந்தது.

மாமிசக் கண்ணால் காண்பவற்றை யெல்லாம், மனக் கண்ணாற் கண்டு, அவற்றிலெல்லாம் பிரம்ம வஸ்துவைத் தரிசிப்பவனே ஞானி. ஸ்ரீராம கிருஷ்ண பரமஹம்ஸர் சகல சராசரப் பொருள்களையும் பரப் பிரம்ம ரூபியாகத் தரிசித்தமையின் 'தாம் கடவுளைக் கண்டதுண்டா?' என்ற வினாவிற்கு அவர் 'கண்டிருக்கிறேன்' என்று விடை பகர்ந்தார். அவர் எல்லாவித சகுண ரூபங்களையும் ஒரே பரப்பிரம்ம வஸ்துவென்று பூஜித்தார். அதற்கு அதிகப் பொறுமையும் திடசித்தமும் சகிப்பும் வேண்டியிருந்தது. அமைதியாக அவர் முயன்று சித்தியடைந்தார். அவருடைய சுவானுபவமே நரேந்திரருக்கு ஞானோபதேசம் செய்யும் பெருமையையும் ஆற்றலையும் அளித்தது. அதுவே அவருடைய உப தேசங்களை வீண் மயக்கச் சூழ்ச்சிகளென்று கூறி எதிர் வாதம் புரிந்த நரேந்திரருக்குப் பொறுமையுடன், மகிழ்ச்சியுடன் தத்துவோபதேசஞ் செய்யத் துணை புரிந்தது.

சூர்யன் மேற்கு திசையில் அஸ்தமித்தான். தக்ஷிணேஸ்வராலயத்தின் பிராகாரத்திலுள்ள நறுமண விருக்ஷங்கள் தென்றற் காற்று

லசைந்தன. காளிதேவியி னாலயத்தில் கண்டாமணி பரம ஸாதுக்களை யழைப்பதுபோல் ஒலித்தது. அடியார்கள் கண்டு பிணிவாடினர். சிலர் விரைந்து சென்று ஸ்ரீகாளி யாலயத்தில் திருவிளக்கேற்றினர். புள்ளினங்கள் சப்தித்துக்கொண்டு மரக் கிளைகளில் வந்து கூடின. கூவு மினிய குயில்கள் குதூகலத்துடன் பாடின. வாஞ்சைதரும் பைங்கிளிகள் காஞ்சியிடை ஆர்த்தன. அங்கு கூடியிருந்த பலரும் கங்கைக் கரைக்குச் சென்று அனுஷ்டானம் முடித்து, ஸ்ரீராம கிருஷ்ணர் அமர்ந்திருந்த மண்டபத்தை அடைந்தனர். ஈஸ்வராம்ஸமான மாலைப் பொழுதின் மனோகரத்தில் பரமஹம்ஸர் சற்று தியானபரராகி விழித்தார். அவருடைய நயனங்கள் நரேந்திரரையே இமைக்காது பார்த்துக்கொண் டிருந்தன. நரேந்திரரை ஸ்ரீராம

குரு கடாக்ஷம்

கிருஷ்ணர் அருளுடன் ஒருமுறை பார்த்து விட்டு, ஒருமுறை இறுகத் தழுவி, 'அப்பனே! சாக்ஷாத் பரப் பிரம்மத்தை ஒருமுறை தரிசி' என்று கூறிவிட்டு, தமது பரிபூர்ண கிருபையுடன் அவருடைய மார்பில் தமது வலது கரத்தை வைத்து மனத்துள்ளே வாழ்த்தினர். குரு தேவரின் ஹஸ்த ஸ்பரிச மேற்பட்டவுடனே நரேந்திரரை ஒருவித மயக்கம் ஆட்கொண்டது. அதுவே பிரபஞ்ச மாயையைப் போக்கடிக்கும் மயக்கம் போலும்! "ஹா என்ன இது! என்னை என்ன செய்கிறீர்கள்! என்னை ஒரு தாயும் ஒரு தந்தையும் நம்பிக்கொண் டிருக்கிறார்கள்" என்று கூறிய வண்ணமே சில விநாடியில் நரேந்திரர் மெய் மறந்தார். அன்றே ஆசார்யருடைய கிருபை அவருக்கு பிராப்தமாயது. நரேந்திரர், தாம் இருந்த மண்டபம், ஆலயம், இடம் எல்லாவற்றையும் மறந்து சமாதியாகி விட்டார். அங்கு கூடியிருந்த சீடர்கள் கண்டு வியந்தனர். அவ்விடத்தில் பக்தி பரிமளித்தது. அரை நாழிகை செல்ல அயர்ந்து நித்திரைபோனவன் தூக்கந் தெளிந்து எழுந்திருப்பதுபோல நரேந்திரர் விழித்தெழுந்தார். சமாதியில் தாம் அனுபவித்ததை இயம்பக்கூடிய ஆற்றல் அப்பொழுது அவருக் கேற்படவில்லை.

ஸ்ரீராம கிருஷ்ணர் அவதார புருஷரென்றும், மூவாசைகளையும் முனிந்து வெறுத்தவரென்றும், காளிதேவியி னனுக்கிரஹம் பெற்ற கற்பக விருக்ஷமென்றும், பாமரர்களைக் கைதூக்கி விடும் பக்தவத்ஸலரென்றும் நரேந்திரர் நாளடைவி லுணர்ந்தாரேயன்றி அச்சமயத்தில் அவரிடத்தில் அதிக நம்பிக்கை யேற்படவில்லை; நம்பிக்கை யில்லாமலும் போகவில்லை. ஆனால் குரு தேவரின் கரஸ்பரிசம் என்று ஏற்பட்டதோ அன்று முதல் நரேந்திரர் அவருடைய சிஷ்யரானா ரெனலாம்.

இங்ஙனம் சில நாட்களாயின. நரேந்திருக்குப் பரமஹம்ஸரிடத்தில் அவரை யறியாத ஓர் அத்யந்த பக்தி யேற்பட்டுவிட்டது. ஒவ்வொருநாளும் மாலையில் ஏதோ ஒரு சக்தி அவரை தக்ஷிணேஸ்வரத்தில் ஸ்ரீராம கிருஷ்ணர் சந்நிதானத்தில் கொண்டுபோய்த் தள்ளிவிடும். நரேந்திரர் என்றாவது ஸ்ரீராம கிருஷ்ணரிடம் போகாமல் நின்றுவிட்டால் பரமஹம்ஸருக்குத் துக்கம் பொங்கி யெழும்; காளிதேவியை யடைந்து 'தாயே! நரேந்திரனைக் காணாமையால் என் மெய் வாடுகிறது; உற்சாகமில்லாமல் நான் உன்மத்தம் பிடித்தவனைப்போ லிருக்கிறேன். அவனை என்னிடம் வரும்படி நீ யருள்புரியவேண்டும்' என்று பாலனைப்போல் வாய்விட்டழுவார். பரமஹம்ஸரிடம் போகாவிட்டால் நரேந்திருக்கும் மனக்கலக்க மேற்பட்டு விடும்.

தன்னை யறியாத தனி பக்தி

ஒரு சமயம் நரேந்திரர் சிலநாட்கள் தக்ஷிணேஸ்வரத்திற்கு வரவேயில்லை. அப்பொழுது ஸ்ரீராம கிருஷ்ணருடைய மனம் அடைந்த துக்கத்திற்கு அளவின்று; நரேந்திரரைக் காணாமையால் அவர் புரண்டழுதார். இரண்டு மூன்று சீடர்களை யனுப்பி நரேந்திரரை யழைத்து வரச் சொன்னார். 'ஒருமுறையாவது அவன் முகத்தைப் பார்க்க வேண்டுமென்று விரும்புவதாக நரேந்திரனிடத்தில் கூறுங்கள்' என்று சொல்லி யனுப்பினார். இப்படி யிருக்கும்போது நரேந்திரரும் குருவைக் காணவேண்டுமென்ற அத்யந்த அவாவால் தக்ஷிணேஸ்வரத்தை யடைந்தார். நரேந்திரரைப் பார்த்த அளவில் ஸ்ரீராம கிருஷ்ணர் தாம் எடுத்த பிறவியின் பயனே கைகூடியதென ஆனந்தப்பட்டார்; பிரலாபித்தார். 'என் கண்ணு! என்மீது என்னடா உனக்குக் கோபம்? இத்தனை நாட்களாக நீ வராமலிருந்த காரணமென்னடா அப்பா! நீ இல்லாத நாள் எனக்கு ஒரு யுகத்தைப் போன்றிருக்கிறதே! காளி தேவியின் தரிசனம் கிடைக்காத நாளையொத்து என்னை நமவாதனைக்கு ஆளாக்குகின்றதே' என்று மொழிந்து அவரை மார்புறத் தழுவிக் கொண்டார். பரமஹம்ஸரின் செய்கைகளைக் கண்ட நரேந்திருடைய மனம் உருகிற்று; கண்களினின்று அவர் நித்திலத்தைப்போல நீர் வடித்தார்; சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து பரமஹம்ஸரின் பாதத்தில் விழுந்து வணங்கினார். புத்தகங்களிலும், குடும்பத்திலும், செல்வத்திலும், உற்றார் உறவினரிடத்திலு மிருந்த வாஞ்சையைவிட ராம கிருஷ்ணரிடத்தில் அதிக விஸ்வாசம் நரேந்திருக்கு ஏற்பட்டது. காளிதேவிக்கு நிவேதனங்கள் நடைபெற்றன. பின்பு பரமஹம்ஸர்

தமது சிஷ்ய கோடிகளுடன் முன் மண்டபத்தை யடைந்தார். அப்பொழுது பரமஹம்ஸர் நரேந்திரநாதரைப் பார்த்து "புத்ரா! நீ சில தினங்கள் இங்கு வாரமலிருந்தால் என் பிராணன் மிக்க வாதனை யடைகின்றது! தினம் ஒரு முறை நீ என்னிடம் வந்து செல்லலாகாதா" என்றார். அதற்கு நரேந்திரர் "என்னிடத்தில் தங்களுக்கு ஏன் அத்துணை அபிமானம்! அபிமானமன்றோ பாசபந்தங்களுக்குக் காரணமாகின்றது. பரதர் தமது இளமானிடத்திலே அதிக ஆசைவைத்தமையாலன்றோ அடுத்த ஜன்மத்தில் மானாகப் பிறக்க நேர்ந்தது!" என்றார். ராமகிருஷ்ணர் அதற்குப் புன்னகையுடன் 'புத்ரா! நான் உன்னிடத்தில் வைத்துள்ள உள்ளன்பு ஓர் அளவுடையதல்ல! கேவலம் தேகாபிமான வகையிற் சேர்ந்ததல்ல! எனது தாய்—ஸ்ரீகாளி உன்னிடத்தில் 'நாரணன்' நிவசிக்கின்றான் என்று கூறிவிட்டாள். உன்னிடத்தில் சர்வலோக சரண்யனை நான் தரிசிக்கின்றேன்! ஆதலாற்றான் அந்த அன்பு!" என்று வாஞ்சையுடன் கூறினர்.

பரமஹம்ஸரின் பேரன்பு

நரேந்திரருக்கு வரவர ராம கிருஷ்ணரிடத்தில் பக்தி பெருகிக்கொண்டே வந்தது. அதற்குத் தக்கவாறு லௌகிக விஷயங்களில் அவருக்கிருந்த பற்றும் குறைந்துகொண்டே வந்தது. இவரே பரமாசார்யரென்ற சம்பூர்ண நம்பிக்கை அவருக் கேற்படும் பக்குவகாலமும் நெருங்கிற்று. நரேந்திரர் எவரையும் சில வார்த்தைகளாலோ, நடத்தையாலோ, அன்பாலோ நம்பிவிடு மியல்புடையவ ரல்ல ராகையால் ராம கிருஷ்ணரைப் பலகாலும் சோதித்து அவருடைய மகிமையை யறிய விரும்பினர். கண்டவுடன் காதலித்துச் சுகம் அனுபவிக்கும் கேவலமான காதலும், பார்த்தவுடன் உபதேசம்பெறும் குரு சிஷ்யத்துவமும் முடிவில் நீடிக்காமல் நடுவிற் கசப்புடைத்தாகி விடுமன்றோ! பல நாளும் காதல்வசனங்களைப் பேசி, காதல ரிருவரும் தத்தம் உண்மையான அன்பை அறிந்த பின்னர் கூடும் காதலர் உயிருள்ள வரை ஒன்றுபட் டிருத்தலும், குருவை சிஷ்யனும், சிஷ்யனை ஆசார்யரும் பரிசோதித்துப் பின்னர் ஒருவரை யொருவர் ஆதரிக்கும் பான்மையும் எத்துணை பெருமை யுடையன!

உண்மையான குரு சிஷ்யத்துவ நிலை

நரேந்திருக்கு உறுதியான குரு பக்தி யேற்படவும், ராம கிருஷ்ணருக்கு நரேந்திரரிடத்தில் அத்யந்த அன்பு உண்டாகி நீடித்து

நிற்கவும் பரஸ்பர பரிசோதனை அவஸ்யமா யிருந்தது. நரேந்திருடைய திக்விஜயத்திற்கும் இதுவே முக்கிய காரணமாம்.

ஸ்ரீராம கிருஷ்ணர் நரேந்திரரை முதலில் யோக சாதனங்களிற் பழக்கினர். யோக சித்தி யடைந்தவனைப் பசி, தாகம், நித்திரை, சீதோஷ்ணம் ஆகிய இவை எவ்விதத்திலும் துன்பப்படுத்தா வாதலின் நரேந்திரர் பிற்காலத்தில் பூப்பிரதக்ஷணம் செய்ய யோகாப்பியாசம் முதற்படியாய் நின்றது. நரேந்திரரின் அவதார மர்மங்களை ராம கிருஷ்ணர் காளிதேவியிட மிருந்து அறிந்துகொண்டா ராதலின் தாம் அனுபவத்தாலும் அரிய பெரிய முயற்சிகளாலும் சித்தியடைந்த யோகப் பயிற்சிகளை நரேந்திருக்குப் புகட்டினர்.

நரேந்திரர் நகரத்தில் தங்குவாரானல் அவருக்கு மனநிம்மதி யேற்படுவதில்லை. லௌகிக விஷயங்களில் எப்படியோ விலக்க முடியாமல் கலந்து கொள்ள நேர்ந்து விடுவதை உணர்ந்து அடிக்கடி தக்ஷிணேஸ்வரத்திற்கு வந்து விடுவார். இவ்விதம் சிலகாலஞ் செல்ல இரண்டொரு நாட்கள் வீட்டிற்குச் செல்லாமலே அவர் தக்ஷிணேஸ்வரத்தில் தங்கி விடும் பழக்கம் ராமகிருஷ்ணரிட மிருந்த ஓர் வசீகர சக்தியால் ஏற்பட்டுவிட்டது. இங்ஙனம் ஒருநாள் நரேந்திரர் அதிகாலையி லெழுந்து தக்ஷிணேஸ்வரத்திற்குச் சென்றார்; அன்று முழுவதும் பிரம்மானந்தமாகச் சாதுக்களுடன் கலந்து ராமகிருஷ்ணரின் உபதேச மொழிகளைக் கேட்டுக்கொண் டிருந்தார்.

அந்தமுடன் வந்தது அந்திப்பொழுது. பசுமையான மரங்களும் நறுமணம் வீசும் நன்மலர்ச் செடிகளும் நெருங்கின சோலையின்கண்,

பஞ்சவடியில் ஞானோபதேசம்

சந்திரபிம்பம் ஊடுருவி ஒளி வீசிற்று. பாகீரதி தேவி சந்திரனை வரவேற்பதுபோல் திரைகொண் டெழுந்து 'கல்' என்று ஒலிவீசினள். தக்ஷிணேஸ்வரம் அமைதியுடன் விளங்கிற்று. ஆலமரங்க ளடர்ந்த பஞ்சவடியில் இலைகளுக்கும் கிளைகளுக்கும் இடையில் மறைந்துவிழும் நிலவின் ஒளி தரையில் மாக்கோல மிட்டதை யொத்திருந்தது. அம் மரத்தினடியில் கம்பீரமாய் ஒரு வாலிபர் நின்றுகொண் டிருந்தார். அவ்விளைஞர் ஏதோ ஆலோசித்த வண்ணம் அங்குமிங்கும் உலாவிக்கொண் டிருந்தார். அவருடைய மனம் ஏதோ ஒன்றை நாடி யலைவதை, அவருடைய வதனமும் நடையும் விளக்கா நின்றன. "என்ன ஆச்சரியம்! இந்தக் கிழவரிடத்தில் அபூர்வமான பல அரிய குணங்கள் பொருந்தியிருக்கின்றன! இவரை மீறிச் செல்ல என்னலாகவில்லையே! இவரைச்

சிலர் அவதார புருஷ ரென்றும் சிலர் மகரிஷியென்றும் கூறுகின்றனரே! மகா மேதாவியான ஸ்ரீகேசப் சந்திரசேனர் கூட இவரை வழுத்தி வருகின்றனரே! இவர் யதார்த்தத்தில் மஹானோ! அல்லது போலிச் சந்நியாசியா?'' என்று அவ்வாலிபர் ஆலோசித்த வண்ணம் தலை யசைத்தும் புருவங்களை உயர்த்தியும் உலாவிக்கொண் டிருந்தார். இப்பால்யரான நரேந்திரரைப் பரமஹம்ஸர் சற்று உற்று நோக்கிய வண்ண மிருந்தார். ஏகாந்தமாக நின்றுகொண் டிருந்த நரேந்திரர் அப்பஞ்சவடியிலுள்ள தியான பீடத்தில் அமர்ந்து தமது இரண்டு கண்களையும் மூடி, மனதை நிறுத்தி, தமது குருநாதரின் சரித்திரத்தை ஆரம்ப முதல் முடிவுவரை அறிந்து பூரித்தார். ஸ்ரீராமகிருஷ்ணரும் இவர் தியான சமாதி நிலையினின்று மாறும்வரையில் காத்திருந்து, தமது சரித்திரத்தை, சீடன் தானாகவே அறிந்து கொண்டானபின் அருகே சென்று அவரைத் தட்டி யெழுப்பினார். இதற்குள் இரண்டு யாமப்பொழுது கழிந்தது. கங்கையின் இங்கித ஒலியைத் தவிர வேறு சந்தடியில்லை. ஆலயத்தின் முன் மண்டபத்தில் சிலர் அயர்ந்து நித்திரை செய்துகொண் டிருந்தார். நிலாமட்டும் பட்டுப்பட்டாய்க் காய்ந்துகொண் டிருந்தது. ராமகிருஷ்ணர் நரேந்திரரை அழைத்துக் கொண்டு வேறொரு ஆலவிருக்ஷத்தி னடியிலிடப்பட்டிருக்கும் ஆசனத்தில் நரேந்திரரை உட்காரவைத்து, யோகசாதனத்தில் சிரமமானதும் பரமரஹஸ்ய மானதுமான சில அம்சங்களைப் புகட்டினார். இவ்வடத்தின் கீழ்ச் செய்த யோகசாதனங்களால் நரேந்திரருக்கு அதிக காலம் நிஷ்டையி லிருக்கக் கூடிய ஆற்றல் ஏற்பட்டது. ஒரு அளவற்ற பராக்கிரம முள்ள தெய்வீக மனிதனைத் தயாரிப்பதில் ஆலமரம் செய்த பாக்ய மென்னே! அண்ணல் இராமபிரான் சீதாபிராட்டியுடன் வசித்த பஞ்சவடியின் பாக்கியந்தானென்ன! பணத்தாசை பிடித்து பரமனை மறந்தலையு மிப்பாழ் மனம் பகவத் கைங்கர்யார்த்தமாக அம்மரமாகப் பிறப்பினும் பயனுடைத்தாகு மன்றோ!

ஒரு சிஷ்யத்தவம்
யோக — தியான

மகான்கள்பால் ஒப்பற்ற, உணர்தற்கரிய ஒருவித காந்த—ஆகர்ஷண சக்தி பொருந்தி யிருக்கின்றது. அவ்வல்லமை தெய்வத் திருவருள் கூடினதாகையால் சாதாரண மனித அறிவிற்கும், சித்திக்கும் எட்டாத நிலையதா யிருக்கின்றது. அம் மகான்களின் பார்வையிலும், சொல்லிலும், செய்கையிலும் அத்திருவருள் பிரகாசிக்கின்றது. அவர்கள் சித்தியால் திரிகால ஞானிகளாய்த் திகழ்கின்ற

னர்; வேதங்களைப் பயிலாமலே ஓதுகின்றனர்; பரம சண்டாளனையும் பரிசுத்தனாக்குகின்றனர். இன்ப துன்பங்களை ஏகமாகப் பாவிக்கின்றனர். கனவுக்கும் நினைவிற்கும் மாயையால் கற்பிக்கப்பட்ட பேதம் அபேதப்பட்டு அவர்களை ஆனந்தப்படுத்துகின்றது. ஒவ்வொரு சிறு விஷயத்திலும் உண்மைப் பொருளின் ஆராய்ச்சியே ஊன்றி நிற்கின்றது? அவர்களுரை ஒவ்வொன்றிலும் உயர்வு நிலவுகின்றது! அன்னோர் திறமறிதற் கரியது!

பல ஆண்டுகளாக திருக்கோயிலிலேயே தொண்டு செய்து கொண்டு ராமகிருஷ்ணரையே நம்பிப் பலர் அவரது சீடர்களாயிருந்தும், அவர்கள் எல்லோரையும் விடப் பரமஹம்ஸருக்கு நரேந்திரநாதரிடத்தில் ஒரு விசேஷப் பிரீதி ஏன் ஏற்படவேண்டும்? அதன் காரணத்தைப் பரஸ்பரம் இருவரும் உணரவில்லை. 'தாயே! ஏதோ என்னையறியாமல் ஒன்று,நரேந்திரனிடம் நேசத்தைப் பெருக்கி வருகின்றது' என்று பரமஹம்ஸரும், 'அந்த விருத்தரைக் கண்டால் என் மனம் நிர்மலமாகிப் பரமானந்தத்தையனுபவிக்கின்றதே! இதன் காரணம் என்னவோ?' என்று நரேந்திரரும் அடிக்கடி நினைப்பதும் கூறுவதும் உண்டு. ஒரு நாள் ராமகிருஷ்ணர் தமது சீடரில் ஒருவரைநோக்கி 'காயஸ்த குலத்தில் பிறந்த ஒரு சிறுவனிடம் எனக்கேன் இத்துணைப் பிரேமை?' என்று கேட்க, சிஷ்யர் 'மனமானது சமாதி நிலையில் ஆனந்தத்தை அனுபவித்துத் திரும்ப ஜாக்கிரத்தை யடையும் பொழுது சத்வகுண சம்பன்னர்களையே தேடிச் செல்லும்' என்ற மகா பாரத வாக்கியத்தை எடுத்துக்கூற, குருதேவர் ஆமோதித்துப் புன்னகை புரிந்தார். மற்றொரு சமயம் நரேந்திரரைக் குறித்துப் பரமஹம்ஸர் 'கேசவனிடத்தில் ஒரு பங்கு உயர்வும் நரேந்திரனிடத்தில் பத்தொன்பது மடங்கு மேன்மையும் காணப்படுகின்றன. கேசவனுடைய ஞானச் சுடரைத் தீப ஜ்யோதிக்கும் நரேந்திரருடைய ஞானப்பிரகாசத்தைச் சூர்யனுக்கும் ஒப்பிடலாம்' எனப் புகன்றார்.

பரஸ்பர அன்பு

குரு சிஷ்ய விஷயத்தில் மற்றொன்றும் குறிப்பிடத்தக்கது. ராமகிருஷ்ணரைச்சுற்றி நிற்கும் சீடர்கள் குருவுக்கு விசிறிகொண்டு விசிறல் போன்ற பணிவிடைகளைப் புரிந்துகொண்டிருப்பர். சேவையென்பது ஆத்ம சாந்திக்காக ஏற்பட்டதாதலின் ஆத்ம சுத்தியடைந்தவன் சேவை புரியவேண்டிய அவசியமில்லையாதலால், நரேந்திரர் அவ்விதக் கைங்

சேவை ஆத்ம சாந்திக்கே

கர்ய மெதுவு மியற்றப் பரமஹம்ஸர் சம்மதிப்பதில்லை. தவிர, நரேந்திர ருள்ளத்தில் கோயில்கொண்டு தேஜோமயமாகப் பிரகாசிக்கும் சிவ சொரூபத்தைத் தரிசிக்கவே ராமகிருஷ்ணர் அவரை இடைவிடாது தம்மோடிருக்க விரும்புவதாகத் தமது சிஷ்யர்களிடத்தில் கூறுவார். நரேந்திரர் வலுவில் தொண்டுபுரிய முன்வரினும் 'உனது சேவை தணிப் பட்டது' என்று கூறித் தடுத்து விடுவது வழக்கம்.

பகவான் ஸ்ரீராமகிருஷ்ண தேவருக்கு இவரிடத்தி லிருந்த அத்யந்த பிரீதியை எடுத்தெழுதலு மியலுமோ? குருவே அன்பின் வடிவம்! நரேந்திரரே சிவசொரூபம்! 'அன்பும் சிவமும் இரண்டல்ல' வாதலின் இருவரும் ஒன்றேயாயினர். ராம கிருஷ்ணர் நரேந்திரரை சிஷ்யராக அடையுமுன்பு அவர் தேவியைக் குறித்து 'ஜெகன்மாதா! நான் எப்படி இவ் வுலகத்தில் தனித்து வாழ முடியும்! எனக்குகந்த பக்தனை நீ யருளுவதென்று? பக்தனில்லாத விடத்து ஆசாரியனு மில்லையன்றோ?' என்று பிரலாபித்து வந்தார். அவருக்கு நரேந்திரர் போன்ற சீடன் கிடைத்தமை 'பரிந்து வெப்புழலுவோன் கற்பக மெதிர்' கண்டதை யொத்திருந்தது. நரேந்திரருக்கும் 'பரமாசாரிய தரிசனம்' பிராப்தமாயிற்று.

10-ம் அத்தியாயம்.

எல்லாம் ஈசன் செயல்

'ஒன்றை நினைக்கின் அது ஒழிந்திட் டொன்றாகும்' என்பது பழமொழி. எதிர்பாராத வண்ணம் இன்பமோ துன்பமோ மனிதனை வந்தடைகின்றது. அதனால் அவன் உடலும் உயிரும் குன்றிப் போகின்றன. நாமொன்றை நினைத்திருக்கத் தெய்வமொன்று நினைக்கின்றது. எதிர்பாராது வரும் துன்பத்தைப் பொறுக்க முடியாது கலங்கிப் பதறி பதை பதைத்துப் படாதபாடு படவேண்டி நேருகின்றது. நித்ய அன்னதானம் செய்துவந்த பரம சாதுக்களான தனவான்கள் எத்தனையோ பேர் ஒருப்பிடி சோறுங் கிடைக்காமல் பல காலம் வருந்தித் துயரப்படுகின்றனர். என்ன செய்யலாம்! பிறவி யென்ற கொடியவனுக்கு அடிமைகளான மானுடர் எதுவரினும் அனுபவித்தே தீரவேண்டும். கர்மானுசாரம். நடக்கவேண்டியவை

நடந்தே தீரும். எதையும் வகித்து 'எல்லாம் எனையாளும் ஈசன் செயல்' என்று ஏற்பதைத் தவிர நமது செயலால் நடக்கப்போவ தொன்றில்லை.

நரேந்திரர் அடிக்கடி தக்ஷிணேஸ்வரம் சென்று ஸ்ரீராம கிருஷ்ணரைத் தரிசித்துவருவதை விஸ்வநாத தத்தர் அறிவாராலும் அங்கு நடைபெறும் நிகழ்ச்சிகளை அவர் தெரிந்துகொள்ளச் சந்தர்ப்பமில்லை.

விவாகப் பேச்சு

நரேந்திரரைப் பரமஹம்ஸர் ஆயத்தப் படுத்திக் கொண்டிருக்கிறுரென்று விஸ்வநாத தத்தர் கனவிலும் நினைக்கவில்லை. இவ்விஷயம் புலப்பட்டிருக்குமேல் எவ்விதத்திலும் நரேந்திரரைத் தத்தர் தடுத்திருப்பார்; தமது சீமந்த புத்திரரான நரேந்திரருக்கு அவர் சகல உரிமைகளையும் அளித்திருந்தபோதிலும் நரேந்திரர் துறவியாகும் அறிகுறிகள் காணப்பட்டிருக்குமேல் அக்கணமே கண்டித்து அவ்வழி செல்லாதிருக்கத் தக்க ஏற்பாடுகள் செய்திருப்பார். தமது குமாரன் சட்டப் பரீக்ஷையிற்றேறி நியாயவாதத்தொழிலை மேற்கொள்ள வேண்டுமென்பதுதான் அவருடைய விருப்பம். வாக்சாதுரியம் நரேந்திரரிடம் பரிமளித்தமையால் அவரைச் சீர்மைக்கனுப்பி 'பார்-அட்-லா' (Bar-at-law) சட்டப் பரீக்ஷைக்குப் படிக்கவைக்கலாமென்று விஸ்வநாத தத்தர் எண்ணியிருந்தார். நரேந்திரருக்கும் சீர்மைக்குப்போவதில் விருப்பமிருந்தது. முதலில் இதைச் செவியுற்ற ராமகிருஷ்ணர் புரண்டழுது காளிதேவியைத் தோத்திரஞ்செய்து 'ஜெகதீஸ்வரி! நரேந்திரன் உலகை உயர்த்துவானென்றும், அவன் மூலமாய்த் தர்ம ஸ்தாபனம் செய்யலாமென்றும் நான் எண்ணியிருந்த எண்ணங்களெல்லாம் பகற்கனவாயினவே! என்ன செய்வேன்' என்று பிரலாபிக்க லோகநாயகி அபயமளித்தனள். இஃது இவ்வாருக விஸ்வநாத தத்தரும் நரேந்திரரைச் சீர்மைக்கனுப்ப யத்தனங்கள் செய்தார். இச்சமயத்தில் இரண்டொருவர் நரேந்திரருக்குப் பெண்கொடுப்பதாக வந்தனர். நரேந்திரர் தமது அந்தரங்க எண்ணத்தை வெளியிடாமல் சாக்குப் போக்குச் சொல்லி அவர்களை அனுப்பிவிட்டார். விஸ்வநாத தத்தர் தமது குமாரனுக்கு விவாகம் முடிப்பதாக மும்முறை முடிவுசெய்தார். அம் மூன்று தடவையும் நரேந்திரர் நிராகரித்துவிட்டார். "விவாகமா! விடுதலையை அன்றோ சித்தம் விரும்பி யலைகின்றது. சம்சாரமென்பது ஓர் சிறைச் சாலை யல்லவா! காமக் குரோத லோபமோக மதமாச்சர்யாதி குழந்தைகளைப் பெற்றுவளர்க்கும் இல்லறத்தின் போலியின்பங்களை

இன்றே நான் ஒழிப்பேன்'' என்று விவாக சம்பாஷணை நிகழுங் காலங்களிலெல்லாம் அவர் நினைப்பார். தத்தர் நரேந்திரரைச் சீர்மைக் கனுப்பத் தீர்மானித்தபொழுது நரேந்திரர் சீர்மைக்குச் செல்லமுடியா தென்று கண்டிப்பாய்க் கூறிவிட்டார். விஸ்வநாத தத்தர் கோபித்தும் பலனில்லாமற் போயிற்று. புத்திர வாஞ்சையாலும், வயதுமீறிய புத்திரனானதாலும் மகா மேதாவியானதாலும் நரேந்திரரைத் தத்தர் 'தானாகப் பழுக்காத பழத்தைத் தடிகொண்டடித்தால் பழுக்குமோ? அப்பழந்தான் இனிக்குமோ?'' என்று அவர் போக்கில் விட்டுவிட வேண்டியிருந்தது.

ஏகாங்கியாய், கௌபீனதாரியாய் கிடைத்ததை யுண்டு தரையிற் படுத்துறங்கி யதேச்சையாகத் திரியும் துறவற நிலையை ஏற்க நரேந்திரர் அளவிலா ஆசைகொண்டார். பற்றுகளைக் கொஞ்சங்கொஞ்சமாக உறுதியுடன் அவர் விலக்கிவந்தார். 'நாமார்க்குங் குடியல்லோம்' என்ற மகாவாக்கியத்தைக் கூறுந்தருணத்தை அவர் மனம் நாடிய வண்ணமிருந்தது. சட்டப்பரீக்ஷைக்கு வாசிக்கும்போது அந்தப் பட்டம் என்னை ஜீவனார்த்தவழியில் பந்தப்படுத்து மன்றோ? அதற்காக நான் ஏன் படிக்கவேண்டும்? பொருளீட்டும் வழக்காகக் கற்று, பின்னர் அதை விடுவது விவேகிகளின் செயலல்லவே' என்றெண்ணி அவர் சட்டப் புத்தகங்களை மூடிவைத்துவிட்டு ராமகிருஷ்ணரிடம் செல்லுவார்.

ஆற்றில் ஒருகால் சேற்றில் ஒருகால்

இக் காலங்களில் இவர் நிலை 'ஆற்றி லொருகால் சேற்றி லொருகால்' என் றவா றிருந்தது. துறவறத்திலோ போவா! இல்லறத்தையோ விடவும் முடியவில்லை! இந்நிலை அவரைப் பெரிதும் பாதித்து வந்தது. ராமகிருஷ்ண ரிடத்தும் இன்னும் அவருக்கு பரிபூர்ண நம்பிக்கை யேற்படவில்லை.

'அங்கும் அவா! இங்கும் ஒரு கடைக்கண்' என்ற இந்நிலையில் அக்காலத்தில் கல்கத்தாவில் பெரிய சீமானாக விளங்கிய ஒருவர் நரேந்திரருக்குத் தமது ஏகபுத்திரியை விவாகம் செய்துகொடுத்து, அவர் சீர்மைக்குச் சென்றுவரவேண்டிய பொருளையும், அதையன்றி வரதக்ஷிணையும், சீர்வரிசைகளையும் அளிப்பதாக ஒப்புக் கொண்டார்.

நல்ல வரதக்ஷிணை

வரதக்ஷிணைக்கு ஆசைப்படாத பெற்றோர் யாரே? பணமென்றால் பெண் அவலக்ஷணமாயிருந்தாலும், ஜாதகம் சரியா யில்லாவிட்டாலும், குலங்கோத்திரம் நிஷித்தமானதா யிருந்தாலும் அங்கு பரிகாரங்களும் பாராட்டலும்

தோன்றித் தாண்டவ மாடுகின்றனவன்றே? இந்த வாணை விஸ்வநாத தத்தரும் புவனேஸ்வரி யம்மையும் நரேந்திரருக்கு ஏற்பாடு செய்தனர். 'மேல் நாட்டுக்குச் சென்றால் பெரிய அறிவாளிகளைக் கண்டு கலந்து பேசலாம்! கண்கொள்ளாக் காட்சிகளைக்கண்டு மகிழலாம். தக்ஷிணேஸ்வரத்தில் என்ன இருக்கிறது? அந்தக் கிழவனிடத்தில் தான் என்ன இருக்கிறது?' என்று நரேந்திரரும் ஒருசமயம் நினைத்ததுண்டு. பணத்தாசை பகவானை மறக்கச் செய்துவிடுமல்லவா? அக்காலமுதலே வரதக்ஷிணைக் கொடுமைப் பலரை அடிமைப்படுத்தி வருகின்றதுபோலும்! விவாகநாளும் குறிக்கப்பட்டது.

குடும்ப விஷயங்கள் இவ்வாறிருக்க ஸ்ரீராமகிருஷ்ணர் நரேந்திரருக்கு விவாககாலம் கூடிவருஞ் செய்திகளைச் செவியுற்று இடிமுழக்கங் கேட்ட அசுணமாபோல நெஞ்சம் பதைத்து மனமுருகி, காளி தேவியிடஞ்சென்று 'பராத்பரீ!' இதென்ன சோதனை? நரேந்திரனை என்னிடங் கொண்டுவந்துவிட்டு அவனை நான் ஆயத்தப்படுத்த வேண்டுமென்று கட்டளை யிட்டனையே! உனது மொழியே மறையென எள்ளளவும் வழுவாதுகொண்ட அடியேன், அவனைப் பூர்ண விவேகியாக்குந் தருவாயில் அவன் இல்லறவாழ்வென்னும் படுகுழியில் விழப்போவதாகச் செய்தி கிடைத்திருக்கிறதே! நான் என்ன செய்வேன். தர்ம கைங்கரியத்தைச் சார்ந்து மனிதருள்ளத்தில் அருள்மாரி பெய்யத்தோன்றிய அவன் கேவலம் ஒரு நங்கைக்கு அடிமைப்பட்டு சம்சார சாகரத்தில் மூழ்க யான் எவ்வாறு சகிப்பேன்?' என்று புலம்ப, காளிதேவி 'பக்த! மனிதப்பிரயத்தனம் ஒன்று! தலைவிதி வேறொன்று! தெய்வத்தனம் மற்றொன்று! நீ கவலையொழி! நரேந்திரன் உன்வசமாவான்' என்று அருண்மொழி புகன்று மறைந்தாள்.

காளிதேவியின் அருள் வாக்கு

நரேந்திரர் விடாமல் தக்ஷிணேஸ்வரத்திற்குச் சென்று ஸ்ரீராமகிருஷ்ணரடிபணிந்து காளிதேவியை வழிபட்டுவந்தார். வரவர அவருக்கு மனவுறுதியும் சரீரதிடமு மேற்பட்டு வந்தது. இங்ஙனமிருக்க ஒருநாள் மாலையில் நரேந்திரர் தன் நண்பரின் அழைப்புக்கிணங்கி கல்கத்தாவிற்கு இரண்டுமைல் தூரத்திலுள்ள அந்நண்பரின் வீட்டிற்குச் சென்றிருந்தார். நண்பரிருவரும் உல்லாசமாக வேதாந்த விஷயத்தைக் குறித்து உரையாடிக்கொண்டிருந்தனர். இரவு சுமார் மணி ஏழரையிருக்கும். அந்தோ! நினையாத ஒன்றை நிகழச் செய்வதும், பரம சாதுக்களுக்கு

தந்தையின் மரணம்

இடிவிழுந்ததை யொத்த கொடிய துன்பங்களை யுண்டுபண்ணுவது மான இறைவனது சோதனைகளை நாம் என்னென்போம். ஒரு ஆள் அத்தருணம் ஓடிவந்து நரேந்திரரை நோக்கி "ஐயா! உமது தந்தை இறந்தார். உடனே புறப்படுங்கள்" என்றனன். இச் செய்தி நரேந்திருடைய செவிக்கு இடி முழக்கம்போ லிருந்தது. 'இது கனவா அல்லது நினைவா!' என்று நரேந்திரர் ஆலோசித்தார். நினைவுதான்! நடந்ததும் உண்மைதான். 'இச்செய்தி உண்மையா யிருக்க முடியுமா?' என்றெண்ணி ஸ்தம்பித்தார்; எழுந்து அச் சேவகனுடன் விரைந்து சென்று வீட்டை யடைந்தார்; தந்தையின் சவம் கிடப்பதையும், தாய், தங்கை, தம்பி, தமக்கைமார்கள் அப் பிணத்தின்மீது விழுந்தழுவதையும் கண்ணுற்றார். உறவினர்கள் நின்று புலம்பிக் கொண்டிருந்தார்கள். பலர் துக்கம் விசாரிக்க வந்து கொண்டிருந்தனர். கர்மம் நடத்தவேண்டிய ஜேஷ்டரிவராகையால் இவருடைய வரவை பந்துக்கள் எதிர்பார்த்திருந்தனர். நரேந்திரர் தன்னையே மறந்தார்; ஒன்றுந் தோன்றாது ஸ்தம்பித்தார்: அவர் கண்களினின்றும் நீர் தாரை தாரையாகப் பெருகிற்று. பொழுது புலர்ந்தது. பாடை கட்டி ஆடையுடுத்திக் கூடிப் பலரழச் சவம் நன்காட்டிற் கெடுத்துச் செல்லப்பட்டது. 'ஹரி போலோ! ஹரி போலோ!' என்று பலர் சொல்ல, சிலர் காசைவாரி இறைக்கச் சவம் கங்காநதி தீரத்தை யணுகிற்று. என்ன செய்யலாம்! எல்லாம் ஈசன் செயல் அன்றோ? நரேந்திருக்கு 'நேற்றிருந்தார் தந்தை! வீற்றிருந்தார்! நம்மோடு அன்போடு நேற்றுப் பேசினார். இன்று இங்கு இப்பொழுது இதோ சவமா யிருக்கின்றார்' என்ற தோற்றங்களுண்டாக அவர் கண்களினின்றும் நீர் ஆறாய்ப் பெருகிற்று. அங்கு வந்திருந்தவர்கள் விரைவில் ஜதை யடுக்கிப் பிணத்தை அதன்மீது கிடத்தினார். வேதியர் மந்திரங்களைக் கூறக் கிரியை முடிவடைந்தது. நரேந்திரர் பிணத்தை இடமாகச் சுற்றிவந்து தீவைத்தார். 'பிணங்கொண்டு காட்டுய்ப்பார்க் கண்டு, கணங்கொண்டு சுற்றத்தார் கல்லென் றலறினர்.' பின்பு அனைவரும் கங்கையில் முழுகி வீடு திரும்பினர். ஜதை பிடித்தெரியும் பொழுது 'உடல் அநித்யமானது.' அதன் இயற்கை மரணமெனப்படும். இவ் யாக்கை 'மலையாடு மஞ்சுபோற் றோன்றிமற் றாங்கே, நிலையாது நீத்து விடும்' என்ற படிப்பினை நரேந்திருடைய மனத்தில் சிலாசாஸனம் செய்ததுபோலப் பதிந்தது. அவர் துறவு பூண இக்காட்சி உடந்தையா யிருந்ததெனவும் நிச்சயிக்கலாம். மறு

நாட் காலையில் ஜதையின்மீது தண்ணீர் விடப்பட்டு, எஞ்சிய என்பு களைப் பொறுக்கி கங்கையி லெறியச் சஞ்சயனக் கிரியையும் முடி வடைந்தது.

விஸ்வநாத தத்தர் பொருளதிகம் ஈட்டினாரேனும் அவ்வப் பொழுது, தர்ம விஷயத்திலும் குடும்ப விஷயத்திலும் செலவழித்து வந்தார். அதனால் அவர் இறந்த பொழுது சொற்பப் பொருளே எஞ்சி யிருந்தது. பெருத்த குடும்பபாரம் நரேந்திரரைப் பின்பற் றிற்று. அவர் ஒன்று மறியாது திகைத்தார். வந்த வறுமை அதன் முழு ஆதிக்கத்தையும் செலுத் திற்று. பலநாட்கள் உணவிற்கும் வருந்தும் கால மும் வந்தது. இடரை இடர் எதிர்கொள்வது போல் பெருத்த துக்க சம்பவத்துடன் வறுமையும் கூடிக்கொண்டது.

தாயின் துயரம்

சுகதுக்கங்களை ஒவ்வொரு மனிதனும் அனுபவித்தே தீரவேண் டும். கஷ்டப்பட்டவன் சுகப்படுவான்; சுகப்பட்டவன் கஷ்டப் படுவான்; இது பிரபஞ்ச இயற்கை சுடுகாட்டி லிருந்து திரும்ப வீட்டை யடைந்தவுடன் விஸ்வநாத தத்தரின் பிரிவால் வீடு இரு ளடைந்திருக்கக் கண்ட நரேந்திரர் சற்று விம்மிக் கண்ணீர் பெய் தழுதார். சற்று நேரத்தில் அவருக்கு அன்னை சகோதர சகோதரி களின் ஞாபக முண்டாக விரைந்து தாயின் அறையை அடைந்தார். சிறு குழந்தைகள் முந்தினநாள் இரவெல்லாம் விழித்திருந்தமையின் அயர்ந்து நித்திரை போய்க்கொண்டிருந்தனர். நரேந்திரரைக் கண்ட தும் புவனேஸ்வரி யம்மைக்குத் துக்கம் பொங்கிற்றானாலும் கண்ணீர் பெருக்காது மெதுவாக மேல் நடக்க வேண்டிய விஷயங்களைக் குறித் துப் பேசினாள். துயரத்தினிடையே அன்னைக்குத் துணிவும் சிறிது தோன்றிற்று தர்மசாஸ்திர விதிப்படி ஒரு ஸ்திரீ முதலில் தன் பெற் றோர் ஆதரவிலும், அதன் பிறகு கணவன் ஆதரவிலும், இந்நிலையைக் கடந்து கைம்பெண்ணான பொழுது தனது புதல்வனது பராமரிப்பிலு மிருக்கவேண்டியவ ளாதலால், இனி அவ்வம்மைக்கு நரேந்திரரைத் தவிர வேறு கதியில்லை. நரேந்திர ரிருக்கையில் நமக்கினி எக்குறையும் நேரிடாது என்று மனந்தேறினாள் புவனேஸ்வரி.

கைம்பெண்கள் நடக்க வேண்டிய தர்மசாஸ்திர விதிப்படி புவ னேஸ்வரியம்மை கணவனிறந்த நாள் முதல் தரையில் துயில்வதும், ஒருவேளை அற்ப ஆகாரம் கொள்வதுமாக விரத மியற்றிவந்தாள். கைப்பொருளும் செல்வாக, பொருளீட்டும் புனிதன் போக, உல

கமே யறியாத நரேந்திரர் பதறி நிற்க நாளை உணவிற் கென்ன செய்வது என்ற நிலையையும் எய்த நேர்ந்த பரிதாபநிலை எழுதும் போது துக்கம் பொங்குகின்றது. நரேந்திரர் அப் பொழுது 'லா' கலாசாலையில் வாசித்துக் கொண் டிருந்தார். உயர்ந்த உடுப்புகளெல்லாம் போய்,

குடும்ப நிலை

கிழிந்த ஆடை தரிக்கவும், சொந்த சார்ட்டில் போவதுபோய் காலுக் குப் பாதரக்ஷை கூட இல்லாமல், அறுசுவை யுண்டியை அன்புடன் அன்னையிடப் புசித்த காலஞ்சென்று, பட்டினி கிடக்கும் அக்குடும் பத்தின் பரிதாப நிலையை நாம் எவ்விதம் எழுதுவோம்? 'அறுசுவை யுண்டி யமர்ந்தில்லா ளூட்ட, மறுசிகை நீக்கி யுண்டாருள்—வறிஞ ராய்ச் சென்றிரப்பர் கூழ்' என்ற கூற்றுக்கு இக்குடும்பம் இலக்கயதுதா னென்னே! வறுமை யாவற்றினும் கொடிதன்றோ! அதனினும் கொடி தன்றோ இளமையில் வறுமை!

தத்தர்களுடைய குடும்பம் உன்னத நிலையிலிருந்த காலத்தில் அவரால் ஆதரிக்கப்பெற்ற வாடகை வண்டிக்காரர்கள் இப்பொழுது நரேந்திரரைத் தமது வண்டிகளிலேறிச் செல்லுமாறு வேண்டுவர். அதற் கிணங்கார் நரேந்திரர். பல நண்பர்கள் அவரைத் தமது இல் லத்திற் கிட்டுச்சென்று அன்ன மளிப்பார். அவ் விருந்தையும் நரேந் திரர் புறக்கணிக்காது ஏற்பார். குடும்பத்தில் அனைவருக்கும் போதிய உணவில்லாத சமயங்களில் நரேந்திரர் தாம் விருந்துண்டாய் விட்ட தாகப் பொய்மொழி கூறிப் பட்டினி கிடப்பதுமுண்டு. அக்காலங்களில் அவர் வாயு பக்ஷணஞ் செய்வார். ராம கிருஷ்ணரிடத்தில் புதிதாகக் கற்றுப் பழகிய யோக சாதனங்கள் இப்பொழுது பட்டினி கிடக்கப் பயன்படுவனவா யிருந்தன.

விஸ்வநாத தத்தரின் மரணம் நரேந்திருக்கு எவ்வளவு மனோ வியாகூலத்தை யுண்டு பண்ணியதோ அதைவிடப் பதின் மடங்கு துன்பத்தை மற்றொரு அன்னியர் அனுபவித்தார். அந்த மகானு பாவர் யார்; அவர் தான் ராம கிருஷ்ணர். எப்பொழுதும் எக்கார ணத்தை முன்னிட்டும் தக்ஷிணேஸ்வரத்தை விட்டகலாத அப்பெரி யார் வேகமாக வந்து, அழுதுகொண்டிருந்த நரேந்திரர் கண்ணீரைத் தம் மேலாடையாற் றுடைத்து ஆறுதல் மொழிகளைக் கூறிப் போனார். இந்த சம்பவம் நரேந்திருக்குத் தந்தையின் மரணத்தால் ஏற்பட்ட துக்கத்தை மறைத்துவிட்டது. அம் மகானுபாவரை நினைத்து நினைத்து நரேந்திரர் ஆறுதலடைவார். தத்தர் குடும்பம்

வறுமை வாய்ப்பட்டு வருந்தியதை ராமகிருஷ்ணர் அறிந்து காளிதேவி யிடஞ் சென்று 'அன்னையே! என்குழந்தை மிகவும் கஷ்டப்படுகின் றான். அதனை நீ போக்கியருளவேண்டும்' என்று கெஞ்சினார். ஒரு நாள் தமது சிஷ்யகோடிகளில் மிகவும் தனவந்தரான ஒருவரை நோக்கி 'நரேந்திரன் வறுமையால் பீடிக்கப்பட்டுக் கஷ்டப்படுகிறான், அவன் வீட்டில் உணவுக்கும் வழியில்லை. நீ சென்று அவனுக்கு உதவி செய்' என்று ஏவினார். நரேந்திரர் இதைக்கேட்டு "என்னுடைய கஷ்டங்களைப் பிறரிடம் தாங்கள் கூறுவானேன். 'தோழரோடும் ஏழமை பேசேல்' என்ற பழமொழியைத் தாங்கள் கேட்டதில்லையோ?" என, ராமகிருஷ்ணர் 'குழந்தாய்! வருந்தலொழி! எல்லாம் எமையாளும் ஈசன்செயல்! உனக்காக நான் வீடுவீடாய் உபாதான மெடுத்துவந்தும் உதவுவேன்' என்று கண்ணீருடன் கூறினார். நரேந்திரர் அழுகையை அடக்கமுடியா மல் விம்மி குருதேவரின், பாதாரவிந்தங்களில் சாஷ்டாங்கமாக விழுந்து விம்மினார். இஃதன்றோ குரு சிஷ்யத்வம்! மண், பெண், பொன் என்ற மூவாசைகளையும் அகற்றியவராய், அம்மூன்று சொற் களை நாவிலும் சிந்தையிலும், செய்கையிலு மகற்றியவராகிய அம் மகான், நரேந்திருக்காக காளிதேவியை 'திரவியம்' வேண்டினாரென் னில் அவருக்கு நரேந்திரரிடமுள்ள வாஞ்சையை என்னென்றியம்பு வது! நரேந்திரர் வறுமையை விநாடியிலகற்றுவதாய் அருள் மொழி புகன்ற அக் காளிதேவி—சர்வேஸ்வரி—ஜெகன்மாதா—அகிலாண்ட கோடிப்பிரம்மாண்ட நாயகியின் கிருபையை நாம் எவ்வாறு எடுத் தெழுதுவது!

குருதேவரின் ஆறுதல்மொழிகள்

ஸ்ரீராமகிருஷ்ணருக்கு நரேந்திரரிடத்தில் ஓர் தனி அபிமானம்—அன்பு இருந்துவந்தது. அவர் நரேந்திரர் உணவளித்தால் தான் சில சமயங்களி லுண்பார்; நரேந்திருக்காகத் தகாத ஒன்றையும் தாம் செய்யத் துணிவார்; நரேந்திரர் வாயினின்று வரும் வார்த்தைகளே ராமகிருஷ்ணருக்கு வேதவாக்கு! மனம் ஒன்றுபட்டால் அங்கு பேதா பேதமில்லையன்றோ!

'பட்ட காலிலே படும் கெட்ட குடியே கெடும்' என்ற பழ மொழிக்கிணங்க 'இல்லாரை எல்லாரும் எள்ளுவர்' என்ற தெய்வீக வாக்குப்படி நரேந்திரரிருந்த வீட்டு விஷயமாக வியாஜ்யமொன்றும் தொடரப்பட்டது. அந்த வழக்கில் விஸ்வநாத தத்தரின் முக்கிய நண் பரும் வக்கீலுமான ஸ்ரீஜத் டப்ளியூ-ஸி-பானர்ஜி என்பார் நரேந்திரர்

பால் இரக்கங் காட்டி இலவசமாக அவர் சார்பாக வாதித்து வெற்றி பெறச் செய்தார். பின்பு, நரேந்திரர் குடும்ப சம்ரக்ஷணார்த்தமாக வித்யசாகரக் கலாசாலையில் ஓர் உபாத்தியாயர் பதவி யேற்று வேலை பார்த்து வந்தார். இதனுல் குடும்பக் கஷ்டம் சிறிது குறைந்தது. ஆயினும் வறுமை முற்றிலும் தணியவில்லை. சேவகரால் சூழப்பெற்ற தத்தரில்லம் இப்பொழுது தரித்திரர்களால் சூழப்பட்டிருந்தது கன லிடைப்பட்ட மெழுகென நரேந்திரர் மனம் கரைந்தது. அவர் சட்டப் பரீக்ஷைக்குத் தீவிரமாக வாசிக்க வேண்டியிருந்தது. பிரம்ம சமாஜ நண்பர்களைக் கண்டு பேசவும், தக்ஷிணேஸ்வரஞ் சென்று பரமாசாரியரை வழிபடவும் அவர் கொஞ்ச நேரத்தை ஒதுக்கிவைக்க வேண்டி யிருந்தது. மற் ெறுரு புறம் சோற்றுக் கவலை அவரை மெலிய வைத்தது. அவருடல் மெலிந்ததேயன்றி சக்தி குறையவில்லை. விஸ்வ நாத தத்தரைச் சுற்றிப் பணம் பறித்த நண்பரில் எவரும் இச்சமயத் தில் நரேந்திரருக்கு உதவிபுரிய முன்வரவில்லை. இருபதாவது வயதில்-முருக்கி யலையும் அவ்வாலிபப் பருவத்தில்—சுகமனுபவித்துக்கொண் டிருந்த அவருக்கு நொடிப்பொழுதில் குடும்ப விசாரமும், தந்தையின் மரணத்தால் நேர்ந்த பெருந்துயரும் அனைய பிறவும் ஒன்றுகூடி வருத் தின. அவர் திடசித்தமுடையவ ராதலின் யாவற்றையும் பொறுமை யுடன் சமாளித்தார். துறவியாவதற்குச் சாதகமான வழியில் யோக சாதனத்தையும் ஆத்மவிசாரத்தையும் அடைவதில் அவர் மனம் சிறிதும் தளர்ச்சி யடையவில்லை. துயர் மிகுங்கால் அவர் தக்ஷிணேஸ்வரத்திற் குச் சென்று சிறிது அமைதியாக இருந்து வருவார். சிறந்தபோது இறைவனை மறந்து வருந்தும்போது அவனைப் பாழுந் தெய்வமே! உனக்குக் கண்ணில்லையா! காதில்லையா! என்று நொந்து கொள்வது கீழோர் செயல்! 'பருவரல் இன்ப மென்றிரண்டும் ஒக்க நோக்கிய' மேலோர் சுகதுக்கங்களை ஒன்றெனப் பாவித்து மனந்தளராது தமதற னைக் கடைப்பிடித்து நிற்பாராதலின் வறுமைக் குறித்து அவர் எவ்வித மனத்தளர்ச்சியும் அடையவில்லை. இத்துணை இலம்பாடுகளையுஞ் சகித் துக்கொண்டு அவர் மிகவும் கடினமான யோக சாதனங்களையும் செய்துவந்தார். மிடிமைக் காற்ருது அவர் சொற்பகாலம் 'வக்கீல் குமஸ்தா' வாகவு மிருந்ததுண்டு.

வாழ்வீட்டைப் பற்றிய வழக்கொன்று

இவ்விதத் துன்பங்கள் நரேந்திரருக்கு நன்மை பயப்பனவாகவே யிருந்தன. குற்றமுள்ளவனே விரைவில் ஆத்மஞான மடைகின்ருன்.

நூல்களைக் கற்று நன்மை யடைகின்றவனைவிட, துஷ்டனாயிருந்து, தூர்த்த சகவாசமுடையவனாகி, கஷ்டங்களையும் வேதனைகளையும் அனுபவித்து வாழ்பவன் சுலபத்தில் நன்மையின் மேன்மையைக் கண்டு கரையேறுகின்றான். கெட்ட விஷயங்கள் ஒருவனைச் சீரியோனாக்க மறக்கருணை புரிகின்றன. இன்பானுபவனைவிடத் துன்பங்களை நுகர்வான் பயனே அவனியிற் சிறக்கின்றது. கஷ்டத்தின் எல்லை விரக்தியாகின்றது. விரக்தியாவது மண்ணுலகிற் றோன்றிய மாயப் பொருள்களிடத்தில் வெறுப்புற்றல். அவ் விரக்திக்கு வைராக்கியமே முக்கிய காரணமானது. விரக்தியின் எல்லையே சந்நியாச நிலை. துன்பமென்னும் அலைகடலிற் பட்டோர் துறவென்ற கரையையே காண்கின்றனர். துன்பமாவது ஒன்றை விடா முயற்சி செய்து பெற்ற காலையும் இழக்க நேருதல்! இன்பமாவது, துன்பத்தாலெழுட் அழியாப்பொருளை நாடியலைய வேண்டு மென்ற அரிய அனுபவம்!—அப்பொருள் பரம் பொருளென் றறிதலே பேரின்பம். ஆதலின் இன்பத்தைத் துன்பமே ஆக்குகின்றது. வாய்மையின் பெருமையைப் பொய்யே உணர்த்துகின்றது. பாபமே மனிதனைப் பரிசுத்தனாக்குகின்றது. தண்டிக்கப்பட்டவன் நல்வழிப் படுகின்றான். இப்பரமோத்கிருஷ்டமான பந்தமற்ற சந்நியாசநிலையை யடைந்தவர்கள் 'தேனம் விநா திரணமபி நசலதி' 'அவனன்றி ஓரணுவு மசையாது' என்றவாறு அனைத்தையும் அவனருட் பிரசாதமென அங்கீகரிக்கின்றனர்.

விரக்தி மார்க்கம்

இதுவரை மாய்கை யென்ற திரையால் நரேந்திருடைய ஜீவான்மாவிற்கும் பரமாத்ம ஸ்வரூபத்திற்கும் இடையிலுள்ள பாகம் மூடப்பட்டிருந்தது. அத்திரையை ஸ்ரீராம கிருஷ்ணரென்ற அவதார புருஷர் பல மகாவாக்ய உபதேசங்களால் நீக்கினர். இத் தத்துவத்தை யமைத்தே நமது பாரததேசத்திலுள்ள ஆலயங்களில் பகவானுக்கு முன் திரை அமைக்கப் பெற்றுள்ளன. அதுதான் நமக்கும் பகவானுக்குமிடையிலுள்ள மாயையைக் காட்டுகின்றது. அதனுள்ளே அடங்கியிருப்பதுதான் பரமாத்மா—பரப்பிரம்மம். அதற்கு வெளியில் நிற்பவர்களாகிய நாம் தான் ஜீவாத்மா. இந்நிலையில் மணியடிக்கப்படுகின்றது. இதுதான் தர்மத்தின் அழைப்பு. அச்சமயம் நிவேதனமாவது ஒடுங்கி நிற்கும் இந்த ஜீவான்மா! அவ்வறவொலியின் அழைப்புக்கு அடங்கி நின்று பரமாசாரியனென்ற ஒருவனால் திரை விலக்கப்பட ஜீவாத்மா பரம்பிரம்மத்தை தரிசிக்கின்றது. ஜோதிஸ்வரூபமே கற்பூர ஹாரத்தி!

இதை ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகள் 'திர தீயக ராதா' என்ற கீர்த்தனத்தில் விளக்கமாகக் கூறியுள்ளார். ஆகவே நரேந்திர நாதர் 'எல்லாம் ஈசன் செயல்' என்று ராமகிருஷ்ணர் திருவடிகளையே உறுதியாகப் பற்றிக்கொண்டார்.

11-ம் அத்தியாயம்

ஞானோபதேசம்

ஓதநீர்க் கடலுக்கு ஒப்பானது சம்சாரம். சம்சாரத்திற்குரியன பந்தங்கள் ஆசைகள் முதலியன. இவற்றை நிவர்த்திக்கும் மார்க்கம் ஞானமார்க்க மெனப்படும். ஞானமாகிய மரத்திற்கு தியானம், யோக சாதனம், விரக்தி, அவாவறுத்தல் முதலான பல பருத்த கிளைகளுண்டு. இதுவே முக்தி சாதனம்.

நரேந்திரரை வெகு சீக்கிரத்தில் சித்தப்படுத்த வேண்டுமென்ற கடாக்ஷம் ராமகிருஷ்ணருக் கேற்பட்டுவிட்டது. அதன் வேகத்தால் நரேந்திரர் முன்னிலும் பதின்மடங்கு அதிகமாக தக்ஷிணேஸ்வரத்திற்கிழுத்துச் செல்லப்பட்டார். அவர் அரும்பாடுபட்டும் சகல பூதங்களிலும் மறைந்தும், சர்வ வியாபியாயும், சர்வ பூதங்களுள்ளும் அந்தராத்மாவாகவும், சகல தொழில்களுக் கிறைவனுகவும், சர்வ பூதங்களிலும் உறைந்தும், சாக்ஷியாகவும், சேதனு சேதன ஸ்வரூபியாகவும், குணங்களற்றும், ரூபமற்றும், தொழிலற்ற பலவற்றிலும் தனிமையாக உறைவோனுகவும் ஒரு வித்தினின்றும் விருக்ஷத்தை ஆக்குவோனுகவுமுள்ள சாக்ஷாத் பரமபுருஷனை யறிவது அவருக்குச் சுலபமானதாயில்லை. 'இதுதான் சத்யமானது' என்ற நிர்ணயப் பிரமாணத்தை யடையப் பேரவாவுற்று ராமகிருஷ்ண பரமஹம்ஸ தேவரின் திருத்தாள்களில் நமஸ்கரித்தார்; அவர் அவருடன் தர்க்கித்தார்.

"ஒப்புயர்வற்ற, எல்லையில்லாத, எண்ணுதற்கடங்காத மகிமையை யுடையது நமது ஹிந்துமதம். ஹிந்துமதம் தத்துவார்த்த சமுத்திரமாகும். மலர்தலை யுலகில் மல்கிக்கிடக்கும் மதங்கள் பலவற்றிற்கும் ஹிந்து மதமே தாயகமாக நிற்பது; பரந்த நோக்கமும் சிறந்த உண்மைகளும் பொருந்தித் திகழ்வது, கண்ணுதலால் முதற்குரவராய் வாய்ந்த பெருமையையுடைய புராதன பாஷைகளிரண்டும்

இந்த ஹிந்து சமயத்திற்காகவே தோன்றின. இமயம் முதற் குமரி வரையிலுமுள்ள வளமுடைய பாரதபூமியே இச்சமயத்தின் அரங்கமெனப்படும். பிரம்மாண்டமான உலகத்திற்கு ஜீவகாருண்யத்தையும் 'அஹிம்ஸா பரமோ தர்ம:' என்ற அன்புரையையும் அருளிய சமயமுமிதுவேயாம். ஆதியந்தமற்ற வேதங்களும், ஒப்பற்ற உபநிடதங்களும், ஸ்ருதி ஸ்மிருதி, இதிகாச புராணங்களும், மதஸ்தாபகர்கள், மதோத்தாரணர்களின் பெருமைகள் முதலான யாவும் ஹிந்து சமயத்தினிடத்திலேயே தோன்றி யோங்கின. எம்மதஸ்தரும் சம்மதித்துப் போற்றும் கீதையும் இச்சமயத்திற்கே யுரியது.

ஹிந்து மதம்

"அங்கு, இங்கு எனாதபடி, எங்கும் பிரகாசமாக, ஆனந்தபூர்த்தியாகி அருளொடு நிறைந்து, தன்னருள் வெளிக்குள்ளே அகில அண்டகோடியெல்லாம், தங்கும்படிக்கு இச்சைவைத்து உயிருக்கு உயிராய்த் தழைத்து, மனவாக்குகளுக் கெல்லாம் எட்டாமல் நின்று, சமயகோடிகளெலாம் தத்தம் தெய்வமென்று எங்கும் தொடர்ந்து எதிர் வழக்கிடவும் நின்று, எங்கணும் பெருவழக்காய் யாதினும் வல்ல ஒரு சித்தாகி, இன்பமயமாய் என்றைக்கு முளதாகி, கங்குல் பகல் அறநின்ற எல்லையுளதாய்க் கருத்துக்கு இசைந்து நிற்பதே பரப்பிரம்மம்! அதுதான் உண்மை! சத்தியம்! நித்யம்! நிர்மலம்! நிஷ்களங்கம்! அந்த பிரம்மம் ஆணுமல்ல! பெண்ணுமல்ல! அலியுமன்று! 'அநிர்வசனீயம்' என்று வேதங்கள் முறையிடுகின்றன.

பரப்பிரம்ம விவேகம்

"பிருதிவியின் எப்பிரதேசத்திலுள்ளவ ராயினும், தேகத்தையும் தேகேந்திரியங்களின் சேட்டைகளையும் அழியக்கூடியவையெனத் தெளிந்து, எந்தப்புருஷன் சகலரூபங்களையும் விசேடமாயுண்டாக்கி, பெயர்களைக் கற்பித்து அப்பெயர்களால் வியவஹரித்துக்கொண் டிருக்கின்றானோ அப்படிப்பட்ட மஹானை—சூர்யனைப்போல ஜீவிக்கின்றவனை—அஞ்ஞான மயத்திற்குப் புறம்பாய் அளவுகடந்த ஜோதி ஸ்வரூபமாயுள்ள அப்பரம்பொருளை தியானமார்க்கத்தா லறியவேண்டுமென்பதே உபநிடதங்களின் பிரமாணம். அதுவே விவேகம்."

இவ்வரிய விஷயங்களை ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸர் ஏகாந்தமான இடத்தில் நரேந்திரருக்குப் புகட்டினார்; நரேந்திரரை நோக்கி 'நீ இரவுதோறும் காண்கின்ற ஜோதியே அப்பரப்பிரம்மம்' என்று

விளக்கி யருளினார். "சர்வேஸ்வரன் இல்லாத இடமில்லை; எங்குமிருப்பான். அவன் அகண்டாகார சச்சிதானந்த ஸ்வரூபி. அவன் நமது ஹிருதயத்தில் ஆத்மனாய் ஆவாகித்துள்ளான்; அவன் அழிவற்றவன்; இந்த 'மெய்' என்று கூறப்படும் பொய்யுடலோ படுந்தன்மையது. ஆன்மா களங்கமற்றது; அதுவே பிரம்மசொரூபம் என்பதை நீ யறியக்கடவை; அவவாறு அறிந்தவனே ஞானி; புருடோத்தமன்; பரமஞானி. அவனே பிரம்மத்தை அறிந்தவன். மறைபொருளான வேதங்களெல்லாம் இவற்றையே விரிக்கின்றன." என்று கூறிப் பரமஹம்ஸதேவர் நரேந்திரருக்கு ஜாக்கிரத்தை யுண்டு பண்ணினார்.

எல்லை ஒன்றே

"சத்தியத்தையும் அசத்தியத்தையும் பிரித்துக்காட்டி, சத்தியத்தின் தன்மையை விளக்கி அது பிரம்ம ஸ்வரூபமானதென்று ஹிந்து மதம் கூறுகின்றது. உண்மையான தீவிர ஞான விசாரத்தால் உலக இன்பங்கள் யாவும் பொய் யென்றும், அநித்யமானவை யென்றும் புலப்படும். எது சத்யமோ, சத்தியத்தின் குணங்கள் எங்கெங்கு காணப்படுகின்றனவோ அவை பிரம்மஸ்வரூபமானவை யென்று வேதாந்தம் கூறும். மனித ஜன்மமும் அதற்கு ஒரு படி உயர்ந்ததான தேவப் பிறவியும் தெய்வாம்சம் பெற்றவைகளே. படிப்படியாக ஆத்ம விசாரம் முதிர வெகுதேவ வாதம், ஆஸ்திகம், துவைதம், அத்வைதம், விசிட்டாத்வைதம் முதலான சகல கொள்கைகளும் ஒன்று கூடுகின்றன. பிரம்மமென்பது எவ்விதம் சத்யமானதோ அதே போல தெய்வ ரூபங்களும் சத்யமானவை. பக்த பராதீனனான சர்வேஸ்வரன் பக்தர்களின் பிரேமைக்குத் தக்கபடி சிவனாகவும், கிருஷ்ணனாகவும், காளியாகவும், ராமனாகவும், வாமன, ஸ்ரீதர, ருஷிகேசனாகவும் ஆங்காங்கே திருக்கோயில்கொண் டெழுந்தருளி யிருக்கின்றான். மகாத்மாக்களாகத் தோன்றி மனித சமூகத்தைக் கைதூக்கிவிடும் மகான்களும் இம் மூர்த்திகளை உபாசிக்கின்றனர். தெய்வத்தன்மையுள்ள அனைத்தையும் பிரம்மஸ்வரூபமென்று தர்ம சம்ஹிதமான ஹிந்துமதம் உபதேசிக்கின்றது. 'சர்வம் பிரம்மமயம்' என்பதே அறத்தின் சந்நாஹம்."

"நூற்றுக் கணக்கான நாமதேயங்களும் ரூபங்களுமுடைய மூர்த்திகளை மனிதன் உபாசித்தாலும் முடிவானது ஏகப்பிரம்மமே யென்பதை நீ யறிவாயாக. பல சமயகோடிகளின் மூர்த்திகளும் முடிவில் ஒரே பிரம்மமாவதால், பேதாபேதமன்னியில் யாவற்றையும்

அங்கீகரிக்கவும், அல்லது ஏதாவதொன்றை உபாசனாமூர்த்தியாக ஆஸ்ரயித்து, ஏகாக்கிர சித்தத்துடன் உபாசிக்கவும் ஹிந்து மதம் இடந்தருகின்றது. தூணிலும் துரும்பிலும் பரப்பிரம்ம ரூபத்தையே பக்தன் காண்பான். இதைப் பிரக்லாதாழ்வான் மெய்ப்பித்தான். மனமாகிய ஆன்மாவால் கற்பித்துச் சிற்பிக்கப்பட்டவைகளே இம் மூர்த்திகள். ஆரம்பகாலத்தில் இம்மூர்த்திகளின் வாயிலாகவே சித்தம் லயிக்கின்றது. சித்த சுத்தி மென்மேலும் அதிகரிக்க ஞானி பிரம்மானந்தத்தை அனுபவிக்கின்றான்; ஆன்மா ஜோதி வடிவாகிப் பிரம்மமாகப் பிரகாசிக்கின்றது. பலவித வழிபாட்டிற்கும் பிரம்மமே ஆதாரமென்று ஸ்மிருதிகள் கூறுகின்றன."

"கிறிஸ்துவென்றும், அல்லாவென்றும், அருகனென்றும், புத்தனென்றும் பல திருநாமங்களையுடைய தெய்வ மூர்த்திகளை வணங்கினாலும் பிரம்மமே சம்பூர்ண எல்லையாகக் குறிப்பிடப்படுவதால் ஹிந்து மதம் சகல மதங்களுக்கும் இடந்தருகின்றது.

சர்வ சமய சமரஸம்

மதத்தின் சிறப்பை அதன் ஸ்தாபகர்களின் திறமையைக் கொண்டும், தோற்றங்களைக்கொண்டும், கிரியாம்சமான யக்ஞ ஹோமாதிகளைக் கொண்டும் நிச்சயிப்பது கூடாது. ஆனால் மக்களின் பரிபக்குவ நிலையைக்கொண்டும், வேதாந்த மார்க்கத்தாலும் நிர்ணயிக்கலாம். மதமென்பது ஒருவித முறை. சத்தியமானது எதுவோ அதைக் கண்டுபிடிக்கும் வழியை மதம் காட்டுகின்றது. அவ்வழி சீர்திருத்தவும் புதுப்பிக்கவுங் கூடியது."

இப் பரமோத்கிருஷ்டமான உபதேசங்கள் நரேந்திருடைய ஹிருதயத்தில் பசுமரத் தாணிபோற் பதிந்தன. ஆங்காங்கு குறுக்கு வாதம் செய்து நரேந்திரர் தம்மை ஸ்திரப்படுத்திக் கொண்டார். தம்மைப் பலகாலமாக அல்லற்படுத்திவரும் மகா சந்தேகங்களை யெல்லாம் வெகு சுலபமாகப் போக்கும் ராமகிருஷ்ணரை அவர் வலம் வந்து வணங்கினார். இவ்வித ஞானோபதேசம் சிஷ்ய கோடிகளின் குழாத்தில் பலநாட்கள் நிகழ்ந்தது. பலரும் கூடிய இடத்தில் இத்தகைய ஞானோபதேசம் நிகழ்ந்தமையால், அவ்வப்பொழுது எழும் சங்கைகள் அனைத்திற்கும் பரமஹம்ஸர் உரைக்கும் விடை மறுக்க முடியாத மாண்புடையனவா யிருந்தன. நரேந்திரர் இவ்வுலகிற் செய்யவேண்டிய வேலையை ராமகிருஷ்ணர் மட்டுமே அறிவாராதலால் அதற்குத் தகுந்தவாறு அவர் நரேந்திரரை ஆயத்தம் செய்தார். சர்வ வல்லமையும், தெய்வத்துடன் பேசுந் தன்மையும், பரிசுத்த மனமுமுடைய

ராமகிருஷ்ண பரமஹம்ஸ தேவரை அண்டிய அடியார்கட்குக் குறையேது?

நரேந்திரர் தமக்குண்டான பல சந்தேகங்களையும் ராமகிருஷ்ணரிடங் கேட்டு அவற்றிற்குத் தக்க சமாதானங்களை அடைந்தார். அவற்றிற் சிலவற்றை இங்கு சுருக்கமாகத் தருவோம்.

நரேந்திரர்:—உண்மையான பக்தனுக்கும் கடவுளுக்கு முள்ள சம்பந்தமென்ன?

ராமகிருஷ்ணர்:—ஸ்ரீகிருஷ்ணபகவானை கோபிகா ஸ்திரீகளெல்லாம், ஜகந்நாதனென்று எண்ணவில்லை. கீதையை உபதேசித்த ஞானசாரியரென்றும் எண்ணவில்லை; சகல லோகங்களையும் தமது வாயின் வாயிலாகக் காட்டிய வாசுதேவ னென்றும் வாழ்த்தவில்லை. ஆனால் கோபி நாதராக எண்ணி அவரிடம் பிரேமை கொண்டார்கள். அவர் அதற்கும் வயப்பட்டார். அதுபோல உண்மையான பக்தன் கடவுளைத் தனக்கு நெருங்கிய அன்புள்ள ஒருவனைப் பாவிக்கின்றான்.

நரேந்திரர்:—'தியானம்' என்பதென்ன?

ஸத் விசாரம்

ராமகிருஷ்ணர்:—மனதை நமது சரீரத்திற் குள்ளேயோ அல்லது வெளியிலோ ஏதேனு மொன்றைக் குறித்து நிறுத்தி சலனமற் றிருக்கச் செய்வதே 'தியானம்' எனப்படும். அதனால் அந்த மனம் தானிருக்கின்ற இடத்தி லிருந்து நாடிய பொருளை ஒருவித ஆத்ம பலத்தால் பற்றியிழுக்கும். இதே நிலையில் சில நாழிகை மனம் ஒன்றுபட்டு நிற்பதே தியானமாகும்.

நரேந்திரர்:—'சமாதி' நிலை யென்பதென்ன?

ராமகிருஷ்ணர்:—முன்பு கூறிய தியான நிலையின் முதிர்ந்த ஸ்தானமே சமாதி நிலை யெனப்படும். தியானத்தில் தோன்றும் சகல ரூபங்களையும் மறந்து நிற்றலே சமாதி யென்பது. உதாரணமாக வேதத்தை நாம் படித்துக்கொண் டிருப்பதாக வைத்துக் கொள்வோம்; அது தான் தியானம். சமாதி யென்பது வேதத்தின் அக்ஷரங்கள் மறைந்து அதன் பொருளைக் கண்டு அனுபவிப்பது. அதாவது ரூபங்கள் மறைந்து அதன் அர்த்தம் வெளிப்பட் டிருக்கும் நிலை. இத்தகைய சமாதியில் சித்தி யடைந்த மகான்களுக்கு எதுவும் பெரிதான காரியமல்ல. இந்த சமாதி யென்ற கருவியால் யோகி மகா சக்தனாகின்றான்.

நரேந்திரர்:—உலகம், ஆன்மா, பிரம்மம் இவற்றிற்குள்ள பேதா பேதங்களென்ன ?

ராமகிருஷ்ணர்:—இம் மூன்றில் உலகம் காரியமாகவும், ஆன்மா காரணமாகவும், பிரம்மம் காரிய காரணங்களுக்கு மேம்பட்டும் இருக்கின்றன.. ஆத்மா காரணமானதால் அதற்குக் காரியமில்லை. காரணமதற்கேற்படு மேல் அது காரியமாகி விடும்! ஆகவே ஆன்மா அநாதியான வஸ்து வென்பது பெறப்படும். இதனுல் அவ் வாத்மாவைச் சார்ந்த கர்மாவும் அநாதியான தாகின்றது. இக் கர்மாவைப் போக்கக்கூடும். எவ்வாறெனில், ஒரு சிறு விதையை எடுத்துக் கொண்டால் அதில் முளைக்கும் சக்தியுள்ள பாகம் எந்தக் குறிப்பிட்ட இடத்திலுள்ள தென்று கூறுவது அசாத்யம். ஆனுல் அதற்கு அவ்வித சக்தி யிருப்பது உண்மை. அந்த சக்தி இன்று நேற்று உண்டானதல்ல! அது அனுதியாயுள்ளது. இவ்விதையை அறிந்தோ அறியாமலோ உஷ்ணப்பட வைத்தால் அதனிடத்துள்ள முளைக்கும் சக்தி நீங்கி விடுகின்றது. அதுபோல ஞான சக்தியால் அனுதியான அக்கர்மத்தைப் போக்கிக் கொள்ளலாம். முள்ளை எடுப்பதற்கு மற்றொரு முள் உதவுவதுபோல கர்மாவைக் கர்மாவினுலேயே போக்கிக்கொள்ள வேண்டும். கர்ம யோகத்தால் கர்மாவின் லக்ஷணம் சித்தாந்தப் படுகின்றது. வெளியே யுள்ள வஸ்துக்களை நாடுதலொழித்து உள்ளே விளங்கும் ஆத்மாவைத் தரிசிக்கும்படி கர்மயோகம் வழிகாட்டுகின்றது. மற்றும் விரதங்களை யியற்றுமாறு கர்மயோகம் கூறித் தேகாபிமானத்தைப் போக்கடிக்கின்றது. இவ்விதம் கர்மாக்களைச் செய்வதால் மனதை ஆசைகளினின்று விடுவித்து இறைவன் அடிச் சுவடுகளை நாடும் ஸ்திதியில் நம்மைக் கர்மயோகம் விட்டுச் செல்லுகின்றது. அதன் எல்லையான ஞானத்தால் ஆத்மதரிசனம் லபிக்கக் கடைசியில் பிரம்மமே யாகி விளங்கும் நிலை வந்துறும்.

உலகம்
ஆன்மா பிரம்மம்

இவ்வாறு தினந்தோறும் சத்விசாரம் தக்ஷிணேஸ்வரத்தில் ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸரது சந்நிதானத்தில் அடியார்கள் குழாத்தில் நடைபெற்று வந்தது. நரேந்திரர் பிரம்ம சமாஜத்தாரிடம் சேர்ந்திருந்த பொழுதும் கலாசாலையிற் கற்பிக்கும் பொழுதும் ஹிந்து மத சித்தாந்தங்களைக் கற்ருராஞலும் அவற்றின் ஆழ்ந்த கருத்துகளைப் பரமஹம்ஸரிட மிருந்தே அறிந்தார். பிரம்ம சமாஜத்

ஹிந்துக்களின்
சமயப் பரிதாப
நிலை

தில் சேர்ந்திருந்த காலங்களில் அவருக்கு ஹிந்து மதத்தின் கொள்கைகளில் தீவிர நம்பிக்கை யில்லை. அப்பொழுது ஹிந்து மதத்தை விடச் சிறந்த மதம் வேறில்லை யென்பது அவர் மனத்திற் பதிந்தது. பல பட்டப் பரீக்ஷைகளிற் றேறி ஏராளமாகப் பொருளீட்டி நல்ல நவீன நாகரீகத்தைப் பெற்றுள்ள வித்தியார்த்திகளைக் கண்டு அவர் மனம் இரங்கிற்று. அவர்களை அநாசாரப் படுகுழியி னின்றும் கை தூக்கிவிட வேண்டுமென்று அவர் எண்ணினார். 'முன்னோர் அனுசரித்த சம்பிரதாயம், மதம், ஆசாரம், நிஷ்டை முதலியவற்றை அவர்கள் முற்றிலும் விட்டவர்களாய்த் தங்களுக்கும் தங்கள் சந்ததிக்கும் இழிவைத் தேடி, மேன்மை செறிந்த இந்நாட்டில் புன்மையைப் பெருக வைக்கின்ற அவர்களை நல்வழிப்படுத்த எழுவேன்' என்று கருதுவார் நரேந்திரர். "எத்தனையோ யுகாந்த காலமாக மழையிலும் பனியிலும், காற்றிலும், வெயிலிலும் கஷ்டப்பட்டு வருந்திக் காடுகளில் உதிர்ந்து கிடக்குஞ் சருகுகளைத் தின்று, பரிசுத்த அறிவையடைந்து, தங்கள் ஆராய்ச்சியால் பல சிறந்த வழிகளைக் கண்டு பிடித்து, தர்ம சாஸ்திரங்களையும் ஏனைய விதிகளையும் நிறுவி, தங்கள் சந்ததியாரின் மேன்மைக்காகப் பாடுபட்டு, ஹிந்து மதமென்ற மகா கல்பக விருக்ஷங்களி னடியில் வாழ்ந்த அப் பெரியார்கள் காட்டிய நல்வழிகளை உதாசீனம் பண்ணி, அன்பே வடிவெடுத்த சமயத்தை நவீன புத்தியினால் உருகாக் கருங்கல் வடிவ மாக்கி, மானத்தை விற்று, மனச்சாக்ஷியை வெட்டி வீழ்த்தி, ஆசார ஹீனர்களாய் ஆங்கிலேய முறைகளுக் கடிமைகளாய்ப் போன நமது ஹிந்து சமயிகளை நான் நல்வழிப் படுத்துவேன்" என்று நரேந்திரர் தமக்குத் தாமே ஏகாந்தமாக நினைப்பார்.

இக்காலங்களில் அவர் பல நாட்கள் வீட்டிற்கு வராமலே தக்ஷிணேஸ்வரத்தில் தங்கி விடுவார். ஸ்ரீராம கிருஷ்ணரும் இவருக்கு அவ்வப்போது உண்டாகும் சந்தேகங்களைக் குறைவில்லாமல் போக்கி வந்தார். ஒருநாள் அத்வைதிகளின் சித்தாந்தத்தைப் பற்றி நரேந்திரர் ஸ்ரீராம கிருஷ்ணரைக் கேட்ட பொழுது அவர் ;

"நானே பிரம்மம்" என்பர் அத்வைதிகள். அவ்வாறானால் அவர்கள் விக்ரஹ ஆராதனை புரிவானேன் ? சிவ விஷ்ணுக்களைப் போற்றுவானேன் ? என்ற கேள்விகள் தோன்றும். வேதத்தில் கூறப்படும் ஏழு பூமிகளுக்குச் சரியாக யோகநூல்களில் ஷட்சக்கரத்தைப் பற்றிக் குறிப்பிக்கப்பட்டுள்ளது. மனம் பிரபஞ்ச ஆசையால் கட்டுண்டு

மயங்கிக் கிடக்கும்போது முதலாக ஆஸனத் துவாரத்தையும் பிறகு லிங்கத்தையும் அடுத்தபடியாக நாபியையும் தனது வாஸஸ்தானமாகக் கொள்ளுகிறது. நாலாவது பூமியில் ஹிருதயமே மனதின் வாஸஸ்தானமாகின்றது. இதே காலத்தில் ஜோதி தோன்றுகிறது. இப்பொழுது யோகி சந்தேக நிலையை யடைகின்றான். மனதின் ஐந்தாவது பூமி (இடம்) தான் தொண்டை. இந்நிலையில் தெய்வ சிந்தையைத் தவிர ஏனையவற்றில் அவனுடைய மனதிற்கு ஆசையற்றுப்போம். ஆறாவது ஸ்தானத்தில் மனமானது இரண்டு புருவங்களுக் கிடையிலுள்ள இடத்தையடைய அப்பொழுது அவன் கடவுளைக் கண்டு தரிசிக்கின்றான். கண்ணாடியினுள் காணப்படும் விளக்கேபோல் கடவுளை அம் மனிதன் தரிசிக்கின்றான். இக் கண்ணாடிதான் 'அகம்' என்னும் கர்வம். அகக்கண் நாடி கண்ணாடியாகிய அகப்பற்று நீங்கிய ஏழாவது பூமியில் அவன் சமாதிநிலையை யடைவான். இதன் பின்பு 'அகம் பிரம்மாஸ்மி!—நானே பிரம்மம் என்ற ஞானத்தால்—அந்த ஸ்திதியில் யோகியாகிய அவனுடைய உயிர், இருபத்தோறு நாட்களிருக்கும். இக்காலங்களில் அவன் எவ்விதத்திலும் ஆகாரத்தை ஏற்பதில்லை.''

நானே பிரம்மம்

என்று கூறி நரேந்திருக்குப் பெருமகிழ்ச்சியை யுண்டு பண்ணினார். இவ்விதம் நரேந்திரநாதர் ராமகிருஷ்ண பகவானிடம் பல சந்தேகங்களையும் நிவர்த்தி செய்துகொண்டார். நரேந்திரர் எவ்விதம் மடக்கியும், முறுமுறுத்தும் கேள்விகள் கேட்ட பொழுதிலும் அம் மகானுபாவர் அமைதியாகவும் திருப்தியாகவும் அவற்றிற்கு விடையளிப்பார்.

புவியே புன்மை நிறைந்த சிறைச்சாலை ; மாயைநிறைந்த இடம் ; இருள் சூழ்ந்த இல்லம் ; ஆசையென்னும் பேய்பிடித்துத் தலைசுற்றியாடும் பாதலம். ஆசையால் ஆவல்பொங்கி நாசமாகின்றான் மனிதன். இப்பொய்யுலக மிவற்றால் அலங்கரிக்கப்பட்டுளது. இவ்வலங்காரமான மாயையின் துன்பங்களினின்றும் விடுபட்டு, ஆசையை வெறுத்துப் பாசத்தை அறுத்து வைரக்கல் போன்று பிரகாசிப்பவனே ஞானி ! பரமஹம்ஸர் அவ்வாறு நின்றார். அவ்வழியிலேயே தமது சீடர்களையும் அவர்களுள் முக்கியமாக நரேந்திரரையும் பழக்கினார். 'கற்கக் கசடறக் கற்றபின் நிற்க வதற்குத் தக'

பரமஹம்ஸரிடம் பக்தி யேற்படக் காரணம்

வென்பதே அவருடைய சித்தாந்தம். வாயால் வேதாந்தம் பேசித் தீச் செயல் புரிவோரை அவர் கண்டு வெறுத்துக் கண்டிப்பார். இதுவே நரேந்திரருக்குப் பரமஹம்ஸரிடத்தில் அளவற்ற பக்தியேற்படக் காரணமாய் நின்றது.

சர்வேச்சுவரனைப் பற்றுவதே சமயங்களின் வெற்றியாகும். அவ் வெற்றி வழி நிற்க முதலில் தேகேந்திரியங்களை யடக்க வேண்டும்; இகலோக போகபோக்யங்க ளிடத்துள்ள இச்சையை ஒழித்தல் வேண்டும்; இது கடினமானதுதான். மேகங்களை யொத்த ஈஷணைத் திரயங்கள் (தாரேஷணை, தனேஷணை, புத்ரேஷணை) மனிதனுடைய மனத்திற் பரவி ஞானத்தை மூடி நிற்கின்றன. அவற்றால் விளையுந் துன்பங்களை யனுபவித்த மனிதன் சிறிது மயக்கந் தெளிந்து வேதாந்தம் பேசுகின்றான். இந்த மாயையா மிருளுக்கப்பா லுள்ள தென்ன? மாயாம்ஸமானவற்றைத் திரஸ்கரிப்பதால் கண்டறியக் கூடிய உண்மையென்ன? பக்தி, ஞானமார்க்கங்களின் எல்லைதானென்ன? என்பதுதான் ஆத்மவிசாரம். இதுவே கல்பகோடி காலமாய் குரு சிஷ்ய வாயிலாக வழி வழி யுபதேசிக்கப்பட்டு வருவது. ஆதியில் ஒரு மகான் இவ்வழியைக் கண்டுகொண்டார்; தாம் வெற்றிபெற்ற க்ஷணம் முதல் 'மாயை நிரம்பிய இருளுக்கப்பாலுள்ள பேரொளியை நான் கண்டு கொண்டேன்' என்று அவர் ஆரவாரித்தார்; அவ்வழியை மனித சமூகத்திற் குணர்த்தினார். அவ்வழிப் பிரயாணம் சாலக் கடுமையானது. அவ்வழியின் எல்லை மிகத் தொலையிலுள்ளது; ஆனால் அதன் முடிவுமட்டும் சத்யமானது. அஃதே பிரம்மானந்தமெனப் படும். அதற்கவசியம் வேண்டுவது பரிசுத்தம். இவ்வழியை யறியப் பரமஹம்ஸர் பன்னிரண்டாண்டுகள் அதிகக் கடினமான யோக சாதனங்களைப் புரிந்து, அகோர தவமியற்றினார். மனதை நிறுத்த அவருக்கு ஈராறு வருடங்களாயின. 'மனம் சுற்றியலையுந் தன்மையது; பேராசை வடிவானது; ஆசை வளரப் பாசம் வளர்ந்து மனிதன் அந்தகாரத்தி லாழ்கின்றான். அவன் மீள்வதில்லை' என்ற மகா வாக்யத்தை அவர் மனதிற் கல்விற் றீட்டிய எழுத்தென பதித்தார். பற்று விடவே அவர் பல ஆண்டுகள் பாடுபட்டார். 'அற்றது பற்றெனில் உற்றது வீடே' யாகுமன்றோ?

சமயங்களின் வெற்றி

'பக்தர்களின் பெருமை பகரவும் பெரிதென்று' உபதேசித்தார் பரமஹம்ஸர். "பக்தி மார்க்கத்தை விடச் சுலபமான வேறு மார்க்க

மில்லை. சர்வேஸ்வரனை பக்தர் எவ்விதமாக பாவித்தாலும் அதற்கெல்லாம் அவ்வையன் பாத்திரனாகின்றான். இதுதான் பாரத நாட்டில் பக்தர்க ளதிக மானதற்குக் காரணம். பக்தனுடைய மன பரிபக்குவ பேதத்தை அனுசரித்து பக்திரசம் சாந்தி, தாஸ்யம், ஸக்கியம், வாத்ஸல்யம், மாதுரியம் என ஐந்து விதப்படும். மற்றும் பாகவதத்தில் பிரகலாத ஸ்வாமி பக்திரஸமானது, ஸ்ரவணம், கீர்த்தனம், ஸ்மரணம், பாத சேவனம், அர்ச்சனம், வந்தனம், தாஸ்யம், சக்கியம், ஆத்ம நிவேதனம் ஆக ஒன்பது விதப்படு மென்றும் அருளிச் செய்திருக்கிறார். சாந்திரஸமானது பக்திக்கு முக்கியமான சோபான மாகின்றது. ஏனெனில், சாந்தம் உண்டாகும் வரையில் பக்தி தோன்றாது. கடவுளிடத்து நிஷ்டையும், சம்சாரவாசனை விரக்தியும் சாந்திரஸத்தின் உருப்புக ளாவன.

பக்திரஸம்
பக்தப் பிரபாவம்

சாந்திரஸ சோபானனுக்கு ஈஸ்வரனிடத்தில் மமதை யுண்டாகாது; ஈஸ்வரனுடைய சொரூப அறிவுமட்டு மவனிடத்தில் இலங்கும். தாஸ்ய பக்தனுக்கே அவ்வித மமதை உண்டாகின்றது. பகவானைப் பிரபுவென்றும், தான் அடிமை (தாஸன்) என்றும் உறுதியாக நம்பி அவன் பகவானுக்குச் சேவை புரிவான்; அவரை வாயாரப் புகழ்ந்து பாடுவான். ஸக்கிய மென்பது 'சிநேகம்' அல்லது 'தோழமை' யாகும். அதில் சமதிருஷ்டி உதயமாகுமே யன்றி கௌரவ சம்பிரமங்களேதும் நிகழா. சகல ஜீவாத்மாக்களும் சமமென்னும் ஞானம், பரிபூர்ண ஈஸ்வர விஸ்வாஸம், இறைவனோடு போராட்டம், பிரேமப் பிரபாவ வாதம், அன்பால் அபிமானம், லீலா விபூதியில் களியாட்டுகள் முதலியன சக்யரஸத்தின் அம்சங்கள். இறைவனைவிட ஆப்தமான பொருள் வேறொன்றில்லை யென்னும் பரிபூர்ண நம்பிக்கையே ஸக்கிய ரஸத்தின் முக்கிய அம்சம். வாத்ஸல்யத்தில் பக்தன் சர்வேஸ்வரனைத் தனது திருக்குமாரனாக பாவித்து பிரேமப் பிரபாவனாகின்றான். அவரை மடிமீதமர்த்தி 'மன்னுபுகழ் கௌசலைதன் மணிவயிறு வாய்த்தவனே' என்று தாலாட்டுவான்; அமுதூட்டி, அலங்கரித்து, தாலாட்டி, நித்திரை செய்வித்து, எழுப்பி, உபசரித்து உவகை கொள்வான். மாதுரியம் மதுரமானது. அதுதான் நாயகா நாயகி பாவத்தை யுடையது. எவ்விதம் பதிவிரதா ஸ்திரீயானவள் தன் நாயகனையே யன்றி வேறெவரையும் அறியாளோ அதுபோல மாதுரியன் பகவானை யன்றி வேறெவரையும் அறியான். இவன் தன் ஆத்மாவை பகவா

னுக்கு நிவேதனஞ் செய்கின்றான்.'' என்று ஸ்ரீராம கிருஷ்ணர் நரேந்திருக் குபதேசித்தார்.

அவதாரங்கள் பத்தையும் குருதேவர் நரேந்திருக்கு அதியத்புதமாக விளக்கிக் காட்டினர். நரேந்திருக்கு ஒரு சமயம் 'சர்வேஸ்வரன் மீனாகவும் கூர்மமாகவும், வராகமாகவும் அவதரிப்பதா ? இதென்ன கட்டுக் கதையா யிருக்கின்றது?' என்ற சங்கை யேற்பட்டது. அப்பொழுது பரமாசாரியர் அவரைப்பார்த்து "நரேந்திரா ! தசாவதாரங்களின் ரகசியார்த்த தத்துவங்களைக் கூறுகிறேன் கேள். இவ்வித ஐயப்பாட்டை யானும் எனது இளமையில் அநுபவித்தவன். மச்ச, கூர்ம, வராக, நரசிம்ம, வாமன, பரசுராம, ஸ்ரீராம, பலராம, கிருஷ்ண, கலிக மாவன பத்து அவதாரங்கள். இப்பத்து அவதாரங்களும் மனிதனுடைய தசவித பக்குவ நிலைகளை யுணர்த்துவன. அவற்றுள் முதலாவது **மச்சாவதாரம்.** எவ்விதம் மீன் தண்ணீரை விட்டு அகற்றப்பட்டால் இறந்துவிடுமோ அதுபோல குழந்தை ஜனித்தது முதல் சிலகாலம் தாயின் சமூகத்தி லிருந்து பிரிக்கப்பட்டால் இறந்து போகின்றது. அக்குழந்தை நிலையில் அவனுக்குத் தாயே ஆதாரமாயுள்ளவள். இரண்டாவதாகக் **கூர்மம்**; அதாவது ஆமை. ஆமை வசிப்பது நீர்நிலைகளிலாயினும் அது கரையோரங்களில் வந்து படுத்திருக்கும். எவரேனும் வந்து பயமுறுத்தினால் தண்ணீரில் விழுந்து தன்னைக் காத்துக் கொள்ளும். அதுபோல, குழந்தையின் இரண்டாம் நிலையில், தாயைச் சார்ந்தும் வெளி விளையாட்டுகளி லீடுபட்டுமிருக்கிறது. மூன்றாவது **வராகம்.** எப்படிப் பன்றியானது அசுத்தமான சாக்கடைகளைக் கலக்கி, அதனிடத்தே படுத்துப் புரண்டுழலுகின்றதோ, அதுபோல மூன்றாவது நிலையில் மனிதன் வாலிபப் பருவத்தை யடைந்து 'தாளத்தனத்தைச் சொல்லியரால் வரும் தாழ்மல பாதாளத்தில்' உழலுகின்றான்; அதன் பின் 'தூணிலும் உளன்' என்றுரைத்த பாலனுக் கிரங்கி வெளிப்பட்ட **நரசிம்மத்**தைப் போல மனிதன் தான் செய்தது தவறென்றுணர்ந்து மாயையைக் கோபாவேசத்துடன் எதிர்த்து, பேதாபேதமின்றி அனைவரிடத்தும் அன்பே பூண்டு விளங்குகின்றான். அப்பால், முக்தி சாதனமான பாவித்தையைக் கற்ற பிராம்மணோத்தமனாகி, இரந்துண்டு வாழ வெளிப்படுகின்ற அவனது நிலையைப் போன்றது **வாமன** அவதாரம். முதல் இராமனும் பரசுராமாவதாரத்தில் அஞ்ஞானத்தை எதிர்த்து திக்விஜயம் செய்வ

தசாவதாரங்களின் அந்தரார்த்தம்

தன் அந்தரார்த்தம் விளங்குகின்றது. அஞ்ஞானத்தைக் கடிந்தபின் தசரத ராமனைப்போல் கொண்ட கருமத்தினின்று எள்ளளவும் வழு வாதவனாகி விளங்கும் மனிதனுடைய பக்குவ நிலை ஊகித்தறியப் படு கிறது. மூன்றாவது ராமனான பலராமர் எப்படித் தாமே மூத்தவரா யிருந்தும், சகலத்தையுந் தம்பியான ஸ்ரீகிருஷ்ண பகவானிடம் 'ஸ்ரீ கேசவம் பிரதிகச்சதி' என ஒப்புவித்துவிட்டுத் தாம் நிர் விசாரமா யிருந்தாரோ அதைப்போல, மனிதன் அடுத்த நிலையில் சகலத்தையும் ஈஸ்வரார்ப்பணஞ் செய்து சாந்தி யடைந்திருக்கிறான். அதன் பின் கிருஷ்ணாவதாரம். கிருஷ்ணபரமாத்மா, யாதவர்களின் எச்சில் சோறுண்டார்; வேந்தர்களுடன் விளங்கினார்; கோபிகா ஸ்திரீக ளுடன் லீலைகள் புரிந்தார்; மகரிஷிகளுக் குபதேசங்கள் செய்தார்; பார்த்தனுக்குச் சாரதியாயிருந்து கீதையை உபதேசித்தார்; போரில் வீரனா யிலங்கினார். அவருடைய வாழ்வில் சகலவிதமான நிலைகளிலும் அவர் சகலராலும் கொண்டாடப் பெற்றார். இடையர்கள் முதல் அரசர், முனிபுங்கவர்கள் வரை அனைவரிடத்தும் அவர் கலந்து சம திருஷ்டியுடன் பழகினார். அதுபோல், எல்லாம் ஈஸ்வரமயமென்ற அதீத அத்வைத ஞானம் கைவரப்பெறும் நிலைதான் அடுத்ததாக மனி தன் அடைய விருப்பது. அதனை எய்திய பின் இப்பொய்யுடலை ஆன்மா வெறுத்து அறிவான குதிரையேறி, கலிகாவதாரனாக சர் வேஸ்வரனை யடைந்து பிரம்ம சொரூபியாகிவிடுகிறது. இதுவே தசா வதாரங்களின் உட்கருத்து" என்று விளக்கியருளினார். இதைப் போன்ற சாலச் சிறந்த உபதேசங்களால் நரேந்திரரைக் குருதேவர் பக்குவப்படுத்தினமையாற்றான் சகல மதக் கோட்பாடுகளும் இத் தகைய தத்துவாதாரங்க ளுடையனவென்று ஆராயும் ஆவல் அவருக் குண்டாயிற்று. இவ்வித 'ஞானோபதேசம்' நரேந்திரரை 'சத்விசார' சம்பன்னராக்கிற்று.

12-ம் அத்தியாயம்.

சத் விசாரம்

ஔடதம் நோயைப் போக்கவல்லது. அது இருதிறப் படும். மனநோயையும், உடல் நோயையும் போக்கு வன அவ்விரண்டும். உலகத்தில் பாபத்திற்கும் துக்கத்திற்கும் கார ணமாயுள்ள தெது? ஆசை யென்னும் அக்னியை வளர்க்கு மகிற்

கட்டை யெது? பந்தமாகும் பலவந்தக் கயிறென்பதென்ன? எது அவனியை அறியாமை இருளால் மறைக்கின்றது? இதற்கு ராமகிருஷ்ணர் **காமினி காஞ்சனம்**, அதாவது பெண்ணும் பொன்னுமே காரணமென்பார்; அல்லது **காம காஞ்சனம்,** அதாவது சிற்றின்ப ஆசையும் பொன்னாசையுமே காரணமென்பர். இவை தாம் அகிலமனைத்தையு மளாவி நிற்பன. சிற்றின்பமும் செல்வமும்! பெண்ணும் பொன்னும்"; அஃதாவது தேகேந்திரியங்களை அவற்றின் போக்கில் அட்டூழியஞ் செய்யவிடுவது; காமவெறி பிடித்து நாயைப்போ லலைவது. இவற்றினின்றும் மனிதன் விடுபடுதலியலுமோ? எனில், 'இயலும்! இயலும்! அதற்கேற்ற மனநோயையும் உடல் நோயையும் போக்கும் உத்தமமான மருந்தொன்றுளது' என்பார் அம்மகானுபாவர். 'இந்திரிய சுகங்களுக்கு மேலான இன்பமொன் றுளது; அதுதான் பேரின்பம். அதனையடைய முயற்சிப்பதே பிறவிப்பயன்' என்பது ராமகிருஷ்ணரின் மகாவாக்கியம். அதுவே சுவாமி விவேகானந்தரின் உத்தம உபதேசம். இவ்வித சக்தியுட னெழுந்தவர் மாமேரு மலையையும் அண்டங்களையுமே புரட்டி விடலாம். இந் நிலையை யெய்தப்புகட்டினார் ராமகிருஷ்ணர்.

காம-காஞ்சனம்

நரேந்திருடைய வல்லமையை யறியவேண்டின் ஒருவர் முதலில் ராமகிருஷ்ணருடைய ஆற்றலை யுணரவேண்டும். காமினி காஞ்சனத்தை அவர் வென்றவிதம் மிக்க வியப்பும் விமரிசையுமானதே. சிறிது சிறிதாக அவர் பொருளாசையை வெறுத்து வந்தார். பெண்ணாசையை யொழிக்க ஓர் நல்ல சாதன மவருக்குப் புலப்பட்டது. அதனை யகற்ற, அவர் மனத்தாலும் ஆடையாலும் பெண்ணேயானார்; சேலை யணிந்து மாதுர் பாபுவின் குடும்பத்தில் மாதேபோலபிமானிக்கப்பட்டு ஸ்திரீ சுபாவத்தை அவர் அனுபவத்தா லுணர்ந்தார். இது மிக்க ஆச்சரியகரமானதாகவே யிருந்தது. மனதை வைராக்யத்தால் எவ்வாறு கட்ட முடியுமென்பது அவருக்கு சுவானுபவத்தில் கைகூடிற்று. பெண்மயமே தாய்மயமென்று மனக்கண்ணுற் தரிசிப்பவருக்கு ஆண் பெண்ணென்ற பேதமற்றுப் போமென்பது அவருக்குச் சித்தித்தது. இவற்றால் தூயவற்றை நாடும் சுபாவமவருக்கேற்பட்டது. ஸ்திரீ சமூகத்தையே அவர் தாயகமாகக் கண்டார்; அவ்வாறே 'தாயே' என்று ஸ்திரீக ளனைவரையும் அழைத்து வந்

பெண்ணாசையை வென்றபெருமை

தார். பஞ்சேந்திரியங்களின் சேட்டைகளை அவர் அறிந்து கொண்டார். அதற்கெதிராக 'நான் (ஆன்மா) பரிசுத்தன்' என்ற மறையொலியின் கம்பீர நிலையையும் அவருணர்ந்தார். ஆன்மா பரிசுத்தமானது என்னு முண்மை அவரை ஆட்கொண்டது. ஆனால் அதை ஸ்தாபிக்கக் குறையாத ஒழுக்கமும், முதிர்ந்த வைராக்கியமும், சத் விஷயத்தையே குறிப்பாக நாடுந்தன்மையும் வேண்டுமென்று அவர் சாதித்தார். சர்வேஸ்வரனை நேருக்கு நேராகக்கண்டு களிக்கவேண்டுமென்ற பேரவாவால் அவர் புழுதியிற் கிடந்தழுது புரண்டு புலம்பி சித்தி பெற்றவர். பந்தத்தைக் கடிந்து நிற்க அவர் எதற்கும் அஞ்சியதில்லை.

இனிப் பொன்னாசை யென்பதென்ன? அதனின்றும் விடுபட ஸ்ரீராம கிருஷ்ணர் கங்கைக்கரையி லுட்கார்ந்து ஒரு கையில் பொன்னையும் மற்றொரு கரத்தில் மண்ணையுங் கொண்டு 'இகத்தில் இப் பொன் மனிதனுடைய சௌகரியங்களைத் தேடித்தரும்; இன்ப நுகர்ச்சி யடைவிக்கும். ஆனால் சர்வேஸ்வரனை பிரத்யக்ஷமாக அடையச் செய்ய இதனாலாமோ' என்று சொல்லிக்கொண்டே மண்ணையும் பொன்னையு மொன்றாகக் கலந்து கங்கையில் வீசி எறிவார்; 'பொன்னே மண். மண்ணே பொன்' என்பார்: அப்பால் குதித்தெழுவார். அவருடைய சித்தி அதி யற்புதமானது. இங்ஙனம் அவர் பொருளாசையை யொழித்தமையால் அவரிடத்து தெய்வீகம் திகழ்ந்தது. அவரை பந்தப்படுத்தி மடக்க எத்தனையோ சோதனைகள் நேர்ந்தன. தக்ஷிணேஸ்வராலயத்தில் தர்ம கர்த்தா பதவியை வகித்து, அதன் ஏராளமான வருமானத்தைக் கொண்டு பரிபாலனஞ் செய்து வரும்படி பலர் அவரை வேண்டினர். ஏற்குமாறு வற்புறுத்தியும் அவர் பிடிவாதமாக மறுத்துவிட்டார். அவ்வன்பர்கள் பலவந்தப் படுத்தும்போது அவர் "ஐயோ! தேவி! இந்த வெறுக்கை எனக்கெதற்கு? இந்த மூடாத்மாக்களை என் முன் ஏன் கொண்டுவந்து விட்டாய்!" என்று பிரலாபித்து அவர்களை விரட்டினார்.

பொன்னாசையை வென்றமை.

மற்றும், அவர் நோயுற்றிருக்குங்கால் தனவந்தரான அன்பரொருவர் ஓர் வீடமர்த்தி அதில் அவரை வசிக்கவேண்டி நல்ல வைத்தியர்களைக்கொண்டு சிகிச்சை செய்ய ஏற்பாடு செய்தார். அப்படிச் செய்தவர், 'தாம் செய்த உதவிக்காக தம்மைப் புகழவேண்டு' மென்று எதிர்பார்த்தார். அதற்கு இடமில்லாது போகவே, அவர் முணுமுணுத்து 'வீணர்கள்' என்று

ராமகிருஷ்ணாது சீடர் குழாத்தைத் தூஷிக்கத் தொடங்கினர். இச் செய்தி ஸ்ரீராம கிருஷ்ணருடைய செவிக் கெட்டியது. உடனே அவர் வெகுண்டு 'இனி நாம் ஒருகணமும் இங்கிருத்தலாகாது. போகலாம் புறப்படுங்கள்' என்றுரைத்து நரேந்திரரைப் பார்த்து 'நீ என்னை எங் கழைத்துச் சென்றாலுஞ் சரி; இதோ புறப்பட்டேன்!' என்று தமது காவியாடையைச் சுற்றிக்கொண்டு ஓர் மரத்தடியிலேனும் வசிப்பதே நன்றென்றியம்பி வெளியேகலானார்.

ஸ்திரீ முகத்தை அவர் தாயென்று போற்றித் தெய்வமென்று வழிபடுவார். அவருடைய சிஷ்யர்கள் இளைஞர்களா யிருந்தாலும், அவருடைய சத்சங்கத்தால் சுவானுபவத்தில் சமயாசார விர்ப்பன் னர்களாகி புருஷர்களாகவே விளங்கினர். அவர்களுள் பலர் ஸ்ரீராம கிருஷ்ண மடத்தை நிலைபெறச் செய்து பிற்காலத்தில் மகா சாதுக்க ளாக மதத்தொண்டாற்ற அப்பொழுதே சித்தமாயிருந்தனர். பொது வில் அச்சீடர்க ளனைவரும் அம் மகானுபாவரைப் பலவாண்டுகளா கவே யறிந்து நெருங்கிப் பழகி வந்தவர்கள். சிலர் பரமஹம்ஸதேவ ரைச் சோதித்துப் பார்த்தவர்கள். ஒரு சமயம் சிலர் தமதாசாரிய ரின் சித்தியைச் சோதிக்கவேண்டி அவரை யிட்டுக்கொண்டு போய் அதி ரூபலாவண்யமுள்ள ஒரு தாசியின் வீட்டில் விட்டகன்றனர். ஒரு சாதுவி னில்லமென் றறிவிக்கப்பட்ட அவ்வீட்டினுள்ளே செல்ல, ஓர் ஆடவர் வந்து அவரை ஓரறைக்கழைத்துச் சென்றார்.

சீடர்களின் பரிசீலனை.

அங்கு ஒரு தாசி சகலாபரண பூஷிதையாய் அவர் முன் தோன்றி அவரை உற்சாகப்படுத்தத் தொடங்கினள். அது கண்டு அம் மகானுபாவர் நடுங் கிப்போய், வாதனைப் பட்டவர்போல் 'ஐயோ! தாயே! என்னை நீ ஏன் இங்கு கொண்டுவந்து விட்டாய்?' என்று தமது கண்களை மூடி நிஷ்டை யடைந்தார். அந்த தாசியின் எண்ணம் நிறைவேறவில்லை. அவள் மேனியை ஒருவித எரிச்சல் ஆக்ரமித்தது. அவள் பயந்து போய் அவரைக் கொண்டுவந்து விட்ட அந்த சீடர்களை நோக்கி 'நீங் கள் இங்கு கொண்டுவந்து விட்ட அவர் ஓர் யதீஸ்வா ரன்றோ! அவர் சுகதேவரல்லவா?' என்று சொல்ல அவ்வன்பர்கள் அச்சங் கொண்ட னர். அப்பால், ராம கிருஷ்ணர் சமாதி கலைந்தெழுந்து அம்மாதை ஆசீர்வதித்து வெளியேறினார்.

இங்ஙனமே அவ்வன்பர்கள் நரேந்திரரையும் சோதிக்க விரும் பினர். அதற்கிணங்க அவரை ஓர் நிலாச் சிற்றுண்டிக் கழைத்துச்

சென்றார்கள். அவரும் தமதன்பர்களின் வேண்டுகோளுக் கிணங்கி யே, பல சிறு சந்துகள் வழியாகத் திரும்பி குறிப்பிட்ட அத்தோட் டத்திற்குச் சென்றார். சிற்றுண்டி யருந்தியபின், சில காதலிளமங்கை யர் வந்து பாடத் தொடங்கினர். அன்பர்களுடைய கருத்திற் கிணங்க, தாம் பாடி முடித்த பின் அவர்கள் நரேந் திரரைப் பாட வேண்டினர். அவரும் சற்றுநேரம் பரவசமாம்படிப் பாடினார். அதன் பின் அவர் தமக்குக் களைப்பா யிருப்பதாகக் கூற அன்பர்கள்

நரேந்திரரை ஏமாற்ற யத்தனித்த நண்பர்கள்

அதுவே தக்க சமயமென் றெண்ணி, அச்சந்திலுள்ள ஒருவீட்டின் தனியறை யொன்றில் அவரைச் சற்று களைப்பாறும்படி கொண்டு போய் விட்டனர். அவரும் ஒப்பிச் சென்றார். சென்ற சில நிமிஷங் களுக் கப்பால் ஓர் யுவதி அவர் முன் தோன்றி கொஞ்சிக் கொஞ்சிப் பேசினாள். நரேந்திரரும் அவளுடன் சற்று சகோதரவாஞ்சையுடன் சல்லாபித்துப் பேசி 'ஏனிந்த இழிவான வாழ்வி லீடுபட்டனை? விரை வில் இத்தொழிலை விட்டு நல்வழிப்படு. நீயே உனது குற்றத்தை யுணரும் காலமொன்று வரும்; அப்பொழுது நீ விழித்துக் கொள் வாய்' எனப் புகன்று, சட்டென்று தமதாசாரியரின் ஞாபகம்வர வெளிவந்து விரைந்து தக்ஷிணேஸ்வரத்தை யடைந்தார். அந்த அதி ரூப அமராவதியும் பந்தயத்தில் தான் தோற்றுப்போனதை அவ்வன் பர்களிட முரைத்தாள். மேலும் அவ்வன்பர்கள் நரேந்திரரிடத்தில் ராம கிருஷ்ணருக் கிருந்த அன்பைப் பரிசோதிக்க வேண்டி, குருதேவ ரிடஞ் சென்று, நரேந்திரர் ஓர் தாசியின் மோகவலையி லகப்பட்டு விட்டாரென்று கூறினர். அதற்கு அப்பெரியார், 'நான் இதை நம்ப மாட்டேன். நரேந்திரன் அவ்விதம் நடந்துகொண்டிருக்கவே முடி யாது. எப்பொழுதும் ஜகன்மாதா! காளிதேவி! அவனைக் காத்துக் கொண் டிருக்கிறாளென்பதை யானறிவேன்' என மொழிந்து அவர் களை அனுப்பிவிட்டார்.

இவ்விதம் திகழ்ந்தது குரு சிஷ்யத்துவம். இத்தகைய தூய வழியில் நரேந்திரர் ராமகிருஷ்ணரால் பழக்கப்பட் டிருந்தார். சாதுத் தன்மையான தீ, பரமஹம்ஸரின் உபதேசங்களான விசிறியால் விசி றப்பெற்று விமரிசையாக மூண்டது. தெய்வத்தன்மையற்ற விஷயங் கள் அவ்விடத்தில் பேசவும் சிந்திக்கவும் படுவதில்லை. மாயையைக் கடிந்தவர்கள் சிம்மம்போல் கர்ஜித்து, கடவுளைக் கண்கூடாகத் தரிசித் துள்ள அம்மகானுபாவரது உபதேசத்தால் கிருதார்த்தர்களாயினர்

தாமே பிரம்மமாகவும் பிரம்மமே தாமாகவும் விளங்கிய தயாபரரான பகவான் ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸதேவர் சிஷ்யகோடிகளின் உள்ள வளர்ச்சி யொன்றையே கருதி யுபதேசித்து வந்தார்.

உண்மையாக அச்சிஷ்ய வர்க்கத்தில் நரேந்திர ரொருவரே ராம கிருஷ்ணரின் மகிமைகள் முழுமையு மறிந்தவர். அம்மகானின் அந்த ரங்கங்களை யறிந்தவரு மவரேயாவர். அவரே ஆசாரியரின் உபதே சங்களைச் சிரமேற் றாங்கியவர். தமது குருதேவரின் உபதேசங்களைச் சந்தேகித்து எதிர்த்துத் தெளிவடைந்தவரு மவரேயாவர். இவரைப் போன்ற அந்தரங்க சிஷ்யரை யடையவேண்டிப் பரமஹம்ஸரும் பல காலம் காளிதேவியைக் குறித்துத் "தாயே! எனது சித்தியை எதிர்த் துப் போராடும் வன்மையுள்ள ஒரு சீடனை யருளாயோ" என்று இரந்துவந்தார். அதற்கிணங்கக் காளிதேவியும் இப் பொழுது நரேந்திரரை அவரிடங் கொண்டு வந்து சேர்த்துவிட்டாள். அஞ்சாமையும், ஒழுக்கமும், புத்திவன்மையையு முடைய நரேந்திரரைக் கண்டதுமுதல் ராமகிருஷ் ணர் அதிக உற்சாகமுடனேயே யிருந்துவந்தார்; தாம் கண்டறிந்த பேருண்மைகளை யவருக்குப் புகட்ட ஆவல் கொண்டார். ஆனால் ஏனைய சீடர்கள் இத்தன்மையின ரல்ல? அவர்கள் பக்தர்கள்; தம தாசாரியரின் வசனங்களைச் சிரமேற் றாங்கிக் கொண்டாடு மியல்பினர்; தம்மை யறியாத ஒருவித பிரேமபக்தியால் அவர்கள் பரமஹம்ஸரிடம் இடையறு அன்பு பூண்டவர்கள். நரேந்திரரோ இத்தன்மையரல்ல. அவர் ராமகிருஷ்ணரை எதிர்த்து வாதாடுவார்; ஆசாரிய வசனங்களை யும் ஆராய்ந்த பின்னரே ஒப்புக்கொள்வார். ஒப்பியபின் ஓங்கி யெழுந்து அவர்தம் பாதங்களில் வீழ்வார்; பூசிப்பார்; புகழ்வார்; திருவடி யணைந்து திவ்யானந்த மடைவார்; 'அப்பனே! என்னருட் கடலே' யென்பார். அந்தரங்க பக்தியுடனும் சித்தசுத்தியுடனும் தமதாசாரியரை தீர்க்க தரிசியென்றும் மகா சாதுவென்றும் அறிந்து போற்றி வந்தமையால் நரேந்திரர் ஜகப்பிரசித்தராய், உலக பூஜ்யராய் விளங்க வியன்றது.

நரேந்திரரின் சிஷ்யத்துவம்

நரேந்திரர் தர்க்க முறைப்படி ஆராய்ச்சி மூலமாய் சத்தை ஆராயத் தொடங்குவாராயினர். அப்பொழுது அவர் தமக்குப் பரமஹம்ஸர் உபதேசித்த விஷயங்களை யெல்லாம் அவர் முன்பே தர்க்க வாயிலாகச் சித்தாந்தப் படுத்துவது வழக்கம். இதனால் ஏனைய அன்பர்களும் அவ ரைத் தர்க்க சிம்மமென்று பாராட்டி வந்தார்கள். ஆசாரியர் முன்பு

அவர் சமயவிஷயங்களில் தம்முடன் வாதம்புரிவோரை யெல்லாம் புயற் காற்றைப்போல வேரோடு பிடுங்கி வீழ்த்துவார்; மேல்நாட்டு விஞ்ஞான நூலாதாரங்களுடன் அவர்களுக்குத் தக்க சமாதானம் கூறி அவர்கள் வாயை அடக்குவார். இவற்றையெல்லாம் ஆச்சரியத்துடன் பரமஹம்ஸர் பக்கலி லிருந்துகொண்டே கவனித்து மகிழ்வார். நரேந்திரரின் இனிமையான வசனங்களைக் கேட்குந்தோறும் குருதேவர் நிஷ்டையடைந்து விடுவதுண்டு நரேந்திரருடைய தர்க்கமுறை கேவலம் படிப்பை மட்டும் பொருத்ததாயில்லை. அவர் சுவானுபூதியில் கண்டறிந்த வித்தையின் விமரிசையாகவே யிருந்தது. அவர் 'கற்றதனா லாய பயன், வாலறிவன் நற்றாள் தொழாதலே' என்பதைக் காரணசுத்தியோடு மெய்ப்பித்தவர். ஆன்ம பலத்துடன் அஞ்சாதெழுந்த ஞானி; தூய்மையுடன் துறந்த சந்நியாசி. அவரிடத்தில் பரப்பிம்ம விவேகம் குடிகொண்டிருந்தது. 'நரேந்திரனுடைய அறிவே சிவசொரூபம்' என்று பரமஹம்ஸர் புகலுவதுண்டு. ஒரு சமயம் ஓர் விருக்ஷத்தினடியில் ஸ்ரீராம கிருஷ்ணர், தமது சிஷ்யர்கள் புடைசூழ வீற்றிருந்தார். யாவரும் நிஷ்டையிலிருந்தனர். அப்பொழுது நரேந்திரர் சற்று அப்பாலிருந்து குருதேவரை நோக்கி வந்துகொண்டிருந்தார். இப்படி யிருக்கும்போது பரமஹம்ஸர் திடீரென்று தமது கண்களைத் திறந்து, பேச வாரம்பித்தனர். சீடர்களனைவரும் திடுக்கிட்டு விழித்தனர். பரமஹம்ஸர் "இதோ! நரேந்திரன் வந்தான். பாருங்கள் அவன் வதனத்தை! அவனுடைய முகம் எவ்வளவு ஒளி பொருந்தியதா யிருக்கின்றது? ஓரே ஜோதிமயமாய் அவனது இரு நயனங்களும் பிரகாசிக்கின்றன. சூரியனின் கதிர்கள்போல அவனிரு கண்களினின்றும் கிரணங்கள் பாய்கின்றன. லோகநாயகியான காளிதேவியும் அவனைப் பத்தடித் தூரத்திற்குமேல் நெருங்க வியலாதுபோற் றோன்றுகிறதே. தாய் தன்னருள் முழுதையும் அவனிடத்துப் புகுத்திவிட்டாள் போலும்' என்றியம்பினர்.

நரேந்திரரை குருநாதர் புகழ்தல்

அப்பால், அவர் தியானத்திலாழ்ந்து தேவியைக் குறித்து "சுத்த நிற்குணமான பராதேவி! நரேந்திரன் மதசேவையில் ஈடுபடும்படி சிறிது மாயையை நீ யவனுக்குக் கற்பிக்கவேண்டும். அங்ஙனம் அருளாயேல், அவன் தன்னைத் தானே யறிந்து கண்மூடி மௌனியாய்த் ததேகத்தியான பரனாகி விடுவான். அதனால் எனது எண்ணம் நிறைவேறாதுபோம்" என்று மனங் குழைந்து வேண்டுவாராயினர்

ஸ்ரீராம கிருஷ்ணர் நரேந்திரரிடத்திற் கொண்டிருந்த அபிமானத்திற்கு அளவே யில்லை. அதற்குத் தக்கவாறே அவர் ஏனைய அன்பர்களிடை யில் நாயகமாக விளங்கினர். 'உலகங்கள் யாவும் ஒன்று கூடினாலும் நரேந்திரனுடைய சித்தத்தைத் தீயவழியிற்றிருப்ப வியலாது. அவன் மாயைகளை எரிக்கும் தாபாக்னிபோன்றவன்' என்று பரமஹம்ஸர் கூறுவார். நரேந்திரர் மேல்நாட்டில் செய்த மகத்தான மதசேவை யைக் கண்டு பயந்து, தங்கள் காரியம் இந்தியாவில் நிறைவேறாதென ஓர்ந்த பாதிரிமார்கள் சிலர், 'அவர் சீர்மையில் மாமிச முண்கின்றா ரென்றும், மாதர் வலையில் மயங்குகிறாரெனவும் இந்தியாவில் பொய்க் கதைகள் கட்டிவிட வாரம்பித்தனர். அக்காலங்களில் ராமகிருஷ்ண பரமஹம்ஸரின் திருவடியின் கீழ் வீற்றிருக்கும் பாக்கியம் பெற்ற சிஷ்யர்கள், மேற்கூறிய பரமஹம்ஸரின் மொழிகளைச் சிந்தித்தவர்களாய், அப் பாதிரிமார்களின் வார்த்தைகளிற் சிறிதும் நம்பிக்கை வையாது, அவர் கள் செய்த கிளர்ச்சியை யடக்கிவிட்டனர். அப்படி அவர் மாமிசம் உண்டிருந்தாற்றா னென்ன? ஸ்ரீமத் சங்கராசாரிய சுவாமிகள் மது பானம் செய்தாரென்று அவரைக் குற்றஞ் சாட்டியவர்கள், அவர் உலைக்கூடத்தில் உருகுகின்றன உலோகத்தைக் கையிலேந்திப் பருகினமை கண்டு வெட்கி அடங்கிப் போகவில்லையா? அதைப்போன்றே இங்கும் கொள்வதி லென்ன தடை?

முதற் சீடரின் முதிர்ந்த நிலை

தக்ஷிணேஸ்வரத்திற்குப் பரமஹம்ஸரைத் தரிசிக்க வருபவர்கள் மிட்டாய் முதலியவற்றைக் கொண்டுவருவது வழக்கம். அப்பொழுது அம்மகான் அத் தின்பண்டங்களை யளிப்பவர்களது தன்மையை யாராய்ந்தே யங்கீகரிப்பார். குற்றங்காணில் அவற்றை ஸ்பரிசிக்கவு மாட்டார். அத் தின்பண்டங்களை ஏனைய சீடர்கள் எடுத்துண்ணவும் அனுமதியார். ஆனால் நரேந்திரர் மட்டும் எதையும் உண்ண இசை வார். ஏனெனில் 'நரேந்திரனது தன்மை அக்னிமயமானது; அவன் அவற்றையுண்டால் அளித்தவர்கள் பாபம் போம்' என்பார்.

குருதேவரின் குணதோஷங் காணும் ஆற்றல்

ஸ்ரீராம கிருஷ்ணர் சித்த புருடராகையால் பார்வையால் எவருடைய குணதோஷங்களையும் அவர் கணித்துவிடுவ தியல்பு. அவர் எவரளிக்கும் மிட்டாய்களை ஏற்க வில்லையோ அவர்கள் குற்றமுள்ளவர்களென்பது பொதுவாக அறியப்படும். இதில் நரேந்திரருக்கு ஒரு சந்தேக முண்டாயிற்று. உடனே அவர் ஆராயப் புகுந்தார். தின்

பண்டங்கள் ஏற்கப்படா ஒருவரைப் பின்றொடர்ந்து தமதாசாரியரின் முடிவு உண்மையானதே என்று கண்டு திரும்பினார். இவ்விதசோதனைகளால் அவருடைய குரு பக்தி மென்மேலும் விருத்தியடைந்து வந்தது. இப்படி யிருக்க நரேந்திரர், தம்முடைய முடிவை ஆய்ந்துணர்ந்ததையும் தியானத்திற் கண்டுகொண்ட குருதேவர், அவரை நோக்கி "அம்மனிதன் தோஷமுள்ளவ னென்பது இப்பொழுது உனக்கு உறுதிப்பட்டதா?" என வினவ நரேந்திரர் வெட்கிப்போனார்.

அம்மகாநுபாவருக்குப் பாதசேவை செய்த அப் புண்ய சீலர்களே யன்றி வேறெவரால் அவ்வாழ்வின் பெருமையை எடுத்துரைக்க வியலும்? அருட் கடலி லவர்கள் விளையாடினார்கள்; அதுவே அவர்களுக்குச் சரவணப் பொய்கையா யிருந்தது; திருப்பாற்கடலாகத் திகழ்ந்தது. குருசிஷ்ய பாவமேதும் அம் மகாநுபாவருக்கும் பக்தர்களுக்கும் இடையில் இல்லை. அன்யோன்யம், அன்பு, தெய்வீகம், சாக்ஷாத்காரம், சதாசாரம், ஞானோபதேசம், பிரம்மானுபூதி முதலியன பெருக எப்பொழுதும் அவர்கள் பிரம்மானந்தத்தையே யனுபவித்துக்கொண் டிருந்தனர். கிளைகள் அளாவிய ஆலமர நிழலி லனைவரும் அமர்ந்து வேதாந்த விசாரம் செய்வதும், ஆனந்தமாக வேதோக்தமான விஷயங்களைப் பயிலுவதும், இன்பமாக இறைவன் மீது துதி பாடுவதும், தியானிப்பதுமாக நாட்களை விநாடிகளாகக் கழித்து வந்தனர்.

நல்ல நிலவில் சாதுக்களின் மனதை யொத்துப் பாய்கின்ற பாகீரதியின் கரையோரங்களில், சந்தடியற்ற ஸ்தலத்தில் அவர்கள் ஏகாந்தமாக அமர்ந்து பிரம்மானந்தமாகப் பாடுவதும், பரமான்ம விஷயங்களைப் பற்றி வாதித்து ஆசாரியன் புகலு மருள்மொழிகளைச் செவிமடுத்து ஆனந்திப்பதுமாக இராக்காலங்களைக் கழிப்பார்கள். இராக்காலங்களில் நித்திரை செய்யவேண்டுமென்ற நினைவே யவர்களுக்கு வாராது. கர்மாவையும் மறந்து அவர்கள் அக்காருண்ய சீல ரடியில் வீற்றிருப்பார்கள். இப்படி இருபது முப்பது சீடர்கள் பரமஹம்ஸரை இரவும் பகலு மிடைவிடாது சூழ்ந்திருப்பதுண்டு. அவர்களிடையில் விளங்குவார் நரேந்திர நாதர். இரவு பன்னிரண்டு மணியானதும் சில ரயர்ந்து ஆலயத்தின் வெளி மண்டபத்தில் நித்திரை போவார்கள்; நரேந்திரர் ராமகிருஷ்ணரின் அறையிலேயே

சீடர்கள் இராப்பொழுதைக் கழித்த விதம்

அயர்ந்து துயில்வார். ஸ்ரீராமகிருஷ்ணர் மட்டும் மூன்றுயாமப் பொழுதுவரை தியானத்திலாழ்ந்து சமாதியில் வீற்றிருப்பார்; அப்பால் எழுந்து 'விழிமின் ! எழுமின் ! எம் பெருமான் சீர்பாட இதுவே தருணம்' என்று தமது சீடர்களை எழுப்புவர். அவர்களெழுந்து தோத்திர பாடஞ் சொல்லி வாழ்த்துரை பகருவார்கள். ராமகிருஷ்ணருடன் சகவாஸம் செய்வதே ஒரு தபஸாகவும் யோக சாதனமாகவு மிருக்கும். அழுக்கடைந்த ஆத்மாவாகும் பொன் அவருடைய சத்சங்கத்தால் மாற்றேறி மனதை மாயையின் பழிவழியி னின்றும் திருப்பி வந்தது.

பரமஹம்ஸ தேவருடன் நெருங்கிப் பழகியவர்களில் அதிகப் பலனடைந்தவர் நரேந்திர ரொருவரே. அவருடைய திருமேனி பொன்னையும் வெல்லும் ஒளியோடு பிரகாசித்தது. ராமகிருஷ்ணர் அவருக்கு எதையும் தம் வாயைத்திறந்து உபதேசித்ததே யில்லை. குருதேவரின் உளக் கருத்தை யுணர்ந்து நரேந்திரர் நடப்பர்; அவர் செய்கையில் சிவசேயங் காண்பார். சந்தேகங்களைச் சடுதியில் சாடியடித்து சத் விஷயத்தை ஸ்வீகரித்து நிற்பார். ராமகிருஷ்ணருக்கும் நரேந்திருக் கேதும் புகட்ட வேண்டிய அவசியமிருந்ததாகப் புலப்படவில்லை. அவருக்கு வழிகாட்டியபின், அவர் தாமாகவே முயற்சி செய்து, பிரம்மானுபூதியை யனுபவிக்கக் கூடிய நிலையை யெய்தி விளங்கியது கண்டு குருதேவர் மகிழ்ந்தார். அதனாற்றான் அவருக்கு நரேந்திரரிடம் அத்யந்தப் பிரியமேற்பட் டிருந்தது. ஆனால் அவர் நரேந்திரரைப் பார்த்து 'நான் சொன்னதால் எதையும் நீ நம்பிவிடலாகாது. உன் ஐயப்பாடுகள் நீங்கும் வரை நீ விஷயாராய்ச்சி செய்தல் வேண்டும்' என்பார். நரேந்திரரு மதற்குப் புன்னகையுடன் 'அதுதான் எனது பிறவிக் குணமாயிற்றே !' யென்பதுண்டு. பூமிக்கு வெகு வெகு தொலையில் சூரியன் பிரகாசிப்பதுபோல ஆசார்யர்களுக் கெல்லாம் உயர்ந்த நிலையில் பரமஹம்ஸர் விளங்கினர். சிஷ்யர்களும் சிஷ்யகோடிகளில் சிரேஷ்டராய்த் திகழ்ந்தார்கள்.

அதிகப்பல
னடைந்தவர்
நரேந்திரரே

சிஷ்யர் குழாத்தில் ஒருசமயம் குழப்பமும் பெரிய தர்க்கமுமாயிருந்தது. 'தெய்வ மென்பது வியக்தமானதா ? அல்லது அவ்வியக்தமானதா ? தெய்வமே உலகிலவதரிக்கின்றதா ? அன்றி அவதார மென்பதே கட்டுக் கதையா ?' என்னும் விஷயத்தைக் குறித்து அவர்கள் வாதித்தார்கள் ; மென்மேலும் மகா வாக்கிய ஆதாரங்களை

யெல்லாம் எடுத்துக் கூறிக்கொண்டே தர்க்கித்தவண்ண மிருந்தனர்.

சிஷ்யர் குழாத்தில் ஆத்ம விசாரம்

அப்பொழுது அதிகாலை வேளை. மூடுபனி யெங்கும் பரவியிருந்தது. தூரத்திலிருந்து பார்க்க, ஏதோ நிழல் போலவே யவர்கள் கூட்டம் காணப் பட்டது. எங்கும் நிர்ச்சப்தமா யிருந்தமையால் அவர்கள் ஆர வாரமே எங்கும் வியாபித்திருந்தது. அப்பொழுதுதான் ராமகிருஷ் ணர் நிஷ்டையிலிருந் தெழுந்தார். எழுந்தவர் தமதறையின் வாயிற்படி யில் நின்று சற்று தூரத்தில் அவர்கள் அமர்க்களமாகப் பேசுவதைக் கேட்டார்; அப்பால் மெல்ல அவர்களை நோக்கி நடந்தார். ஒரே கூச்சலாய் அவர்கள் பேசுவதையும், அவர்கள் கூக்குரலுக்குமேல் நரேந்திரன் ஆரவாரம் பலமாயிருப்பதையுங்கேட்டுப் புன்னகை செய்து கொண்டே மெல்ல நடந்து அவர்களை யணுகினார். இப்படியிருக்க அவ்வன்பர் கூட்டத்தில் நரேந்திரர் கூறிய சமாதானமே தக்கதெனக் கொண்டாடப்பட்டு, அனைவரு மடங்கி, அவருடைய அரிய உரை யைக் கேட்டுக்கொண்டிருந்தனர். 'நரேந்திரன்! நமது சிங்கக் குட்டி ஜெயித்தது; ஏனையோரை அவன் அடக்கிவிட்டான்' எனப் பரமஹம் ஸரும் தம் முள்ளே யெண்ணி மகிழ்வாராயினர்.

அப்பால் அவர் மெல்ல நடந்து சென்று அவர்களிடையே அமர்ந் தார். பக்தர்களும் முறைப்படி எழுந்து அவர் இணையடிகளை ஸ்பரி சித்து வணங்கினர். அப்பொழுது அவர்,

"பாழும் மனமே! பயனில்லாப் பாடுபடுவதால் பரமனைக் காண்பதிப் பாரினி லில்லை. நள்ளிருளறையில் ஒலியைத் தேடும் பித்தனை யொத்த பேதை மனனே! ஆறுவித ஞான மார்க்கங்களையும் நீ யனுசரித்தாலும் பரமாத்ம னைக் காண்டலரிது! அரிது! தந்திரத்தாலும், மந்திரங்களாலும் நீ யறி தல் கஷ்டம்! அன்பே யவனை யடைவிக்கும் அருமருந் தென்பதை நீ யறி யக் கடவாய்"

என்று மகா வாக்கியத்தை யருளினர்; மற்றும் 'சுவானுபூதியில் சாக்ஷாத்கார பிரம்ம சொரூபத்தைக் கண்டு தரிசிப்பவனே ஞானி; சித்தியடையும் வரையில் மனிதன் தர்க்கிக்கின்றான்; வீண்வாதம் புரிகின்றான். அது கைவரப்பெற்றபின் சின்முத்திரையே யன்றி வேறில்லை. அப்பொழுது அவன் பிரம்ம ஞானியாகின்றான் என்றும் உபதேசித்தருளினர்.

அம்மகானுபாவர் பிரம்மஞான விஷயத்தையேயன்றி வேறெ திலும் தமது சித்தத்தை நாடவிடுவதில்லை. அவர் தத்துவம் பேசுபவ

ரல்ல ; கண்டறிந்த கார்த்திகேயர். வேதாந்த விஷயங்களை தர்க்க முறையில் இனிய நடையில் ரஸிக்கப் பேசுவதாற் பயனென்ன? காமினி-காஞ்சனத்தை யொழியுங்கள். நீங்கள் உய்வதிற் சிறிதும் ஐயமில்லை' என்பார். மற்றொரு சமயம் 'சாஸ்திரங்கள் உண்மை யானவைகளா? வேதம் சத்யமானதா? தெய்வமென்பது அப்பொழுது என்ன?' என்பது பொருளாகச் சீடர்கள் ஒன்றுகூடித் தர்க்கித்துக் கொண்டிருந்தனர். ராமகிருஷ்ணரும் புன்னகை புரிந்தவண்ணமவர்களுக் கிடையில் வீற்றிருந்தார். விவாதம் வலுக்கக் கூச்சலு மதிகரித்தது. குருதேவர் மெல்ல அவ்விடத்தைவிட் டகன்று கங்கைக் கரையோரத்திற்குப் போய்ச் சற்று நின்றார். எதையோ ஒன்றையவர் உற்றுப்பார்த்து, அதன்பின் தாம் ஏதோ ஒருண்மையைக் கண்டுகொண்டவர்போல ஆங்கிருந்தவாறே தமது சீடர்களைப் பார்த்து தலையசைத்து அழைத்தார். அசைக்கவே, பேசிக் களைத்துப் போயிருந்த அவர்கள் எழுந்து அவரண்டை வந்தார்கள். அவர் முகமலர்ச்சியுடன் திருவாய் மலருவார்போற் றோன்றினார். அப்பால் அவர் ஸ்நான கட்டத்தைச் சுட்டிக்காட்டி, ஆங்கு இரண்டு இடங்களில் நாய்க்கூட்டங்க ளிருப்பதைக் குறிப்பிட்டார். அவற்றில் ஓரிடத்திலுள்ளவை குரைத்துக் கொண்டும் ஊளையிட்டுக்கொண்டு மிருந்தன. மற்றொரு ஸ்தலத்திலுள்ள நாய்கள் மௌனமாய் பிணத்தின் எலும்புகளைக் கடித்துக் கொண் டிருந்தன. இவற்றைக் கண்டதும் சிஷ்யர்களுக்கு ஞானோதயமாயிற்று. நல்ல உவமை! இதைவிடப் பொருத்தமான உபமானம் வேறுண்டோ? 'பிரம்மானந்தத்தை அனுபூதியாலடையும் அந்நிலைவரையில் தர்க்கந்தான். அது சித்தித்த பின்னரோ, மௌனியாய் அதை அனுபவித்தலே' என்ற படிப்பினையை இதன் வாயிலாகப் பரமஹம்ஸர் அன்பர்களுக்குப் புகட்டினர்.

ஓர் பேருபதேசம்

சிஷ்யர்கள் தீவிரமாகத் தர்க்கிக்கின்ற சமயங்களில் ஸ்ரீராம கிருஷ்ணர் அமைதியாயிருப்பது வழக்கம். அவ்விதம் தர்க்கிப்பதால் தக்க பலனடைவார்களென்று அவர் கூறுவதுண்டு. சிலவேளை அவர்கள் செய்யும் விவாதங்களை அவர் உற்றுக்கேட்பார் ; ஞானார்த்த விஷயங்களில் அவர்கள் தத்தம் வன்மையையும் வாசாலத்தையும் வெளிப்படுத்துவது கண்டு மகிழ்வார். அவர்களிடையே நரேந்திரர் சிம்மத்தைப் போல கர்ஜித்து வெற்றியுடன், பரமஹம்ஸர் ஹிருதயத்திலுள்ள விஷயங்களையே வெளியிடுவது மியல்பு. நரேந்திரர் இடையிடையே சில

அரிய கீதங்களை மேற்கோளாக எடுத்துப் பாடக்கேட்டு ராமகிருஷ்ணர் பரவசராகி விடுவார். ஆன்ம பரிபக்குவத்திற் கேற்ற சர்வ கலாசாலை யாகவே ராமகிருஷ்ணருடைய சந்நிதானம் விளங்கிற்று. இவ்விதம் சீடர்கள் விவாதிக்குங் கால் சிற்சில சந்தர்ப்பங்களில் மட்டும் ராமகிருஷ்ணர் குறுக்கிடுவார். 'நம்பிக்கையே விடுதலைக்குக் காரணம்' என்பதை நரேந்திரர் ஒரு சமயம் எதிர்த்து 'அது மூடநம்பிக்கை' என்று வாதித்தார். அப்பொழுது ராமகிருஷ்ணர் நரேந்திரரை விளித்து "மூட நம்பிக்கையென்று லென்ன? நம்பிக்கை யென்பதே கண்ணிழந்ததோ! அல்லது நம்பிக்கைக்கு மூடத்தனமென்பதுண்டோ? ஏன் மூடநம்பிக்கை யென்கிறாய்? நம்பிக்கை, ஞானம் என்று வகுத்துக் கூறினு லென்ன? மூட நம்பிக்கையெனில் நன் நம்பிக்கை யென்பதொன் றுண் டென்பது பெறப்படுவதன்றோ?" என்றியம்பி, 'ஞான தரிசன மடைந்தவனுக்கு ஞான நூல்களிற் கூறப் பெற்றுள்ள யாவும் நம்பிக்கையில்லாதவைபோல் தோன்றுவது இயல்பு' என்றுரைத்தார். அதுமுதல் நரேந்திரர் 'மூட நம்பிக்கை' என்று கூறுவதையே விட்டார்.

நம்பிக்கை-மூட நம்பிக்கை

நாளடைவில் நரேந்திரருக்கு "பிரம்மானுபூதியைச் சமயவாயிலாக அடையவியலுமேயன்றி வித்தையின் பெருக்கால் அடைதற் கேற்ற தன்று" என்பது சுவானுபவத்தில் கைவரப்பெற்றது. மனம் குவிய வேண்டும்; அகங்குழைய வேண்டும். அதுவே கடவுளைக் கண்கூடாகக் கண்டுதரிசிக்கும் வழியைக்காட்டும். அவ்வழியிற்சென்று எல்லையைக் காண அன்போடு கூடிய பொறுமையும் அவகாசமும் வேண்டியிருக்கின்றது. தன் முயற்சியாலேயே நரேந்திரர் ஸ்ரீராமகிருஷ்ணர் மொழிந்தவை யனைத்தையும் நிஷ்களங்க ஆத்மதரிசனமே யென்று கண்டறிந்தார். அவருடைய அதீத நிலையையே நரேந்திரரும் அனுபவித்தார். இதனாற்றான் அவர் உலகத்தில் 'ஹிந்துசமயமே **சகல மதங்களுக்கும் தாயகமானது**' என்று சாற்ற வியன்றது.

ஸ்ரீராமகிருஷ்ணரின் மகாசக்திக்கும், சித்திக்கும் அவரது தூய நெறியே அடிப்படை. அவர் எப்படி உபதேசித்தாரோ அவ்வழி நின்று காட்டினார். சர்வ தர்ம சமரஸத்தைப்புகட்டிய அவர் தாமும் அவ்விதம் ஒழுகிவந்தார். சாதி வித்தியாசத்தை அவர் என்றும் பாராட்டியதில்லை. அவர் பிராம்மணரா யிருந்தபோதிலும் தாழ்த்தப்பட்ட லக்ஷோபி லக்ஷம் மக்களிடத்தில் அளவற்ற அன்புடையவர்; ஈனரும் புரிய இசையா இருதொழிலையும் அவர் தாமேசெய்து சேவகாசித்தி

யடைந்தவர். இதனால் அவர் அஹங்காரத்தை அறவே கடிந்தார். ஆனால் சிலர் அவரைப் பித்தரென்றும், மூட பக்தரென்றும் பரிகாசஞ் செய்து வந்தார்கள். சச்சிதானந்த சொரூபத்தைத் தரிசிக்க மகான்கள் இவை மட்டுமல்ல, இன்னும் இழிவாகவும் நடத்த வியல்பு. இவ்விதம் பரமஹம்ஸர், சாத்வீகமாக, மெய் வருந்தி தெய்வத்துடன் நேருக்குநேர் பேசும் அதீத நிலையை யடைந்தமை யாற்றான், இவ் வகிலமே அவருக்கு அன்பர் நிறைந்த ஆலயமாக விளங்கிற்று. 'இச்சுவைதவிர யான்போய் இந்திர லோகமாளும் அச்சுவை பெறினும் வேண்டேன்' என்றவரியப்புவார். அதனால் அவருக்குச் சீவராசிகளில் உயர்வு தாழ்வு தோன்றவில்லை. அனைத்தும் பிரம்மமயம் என்றவர் ஆழ்ந்து கண்டார். சர்வேஸ்வரனைக் கண்டவர்களுக்குச் சமயமேது?

தூயநெறியே ஸ்ரீராமகிருஷ்ணரின் சித்திகளுக்கு அடிப்படை

சிஷ்யகோடிகள் அம்மகானை யிடைவிடாது கேள்விகள் கேட்டுக் கொண்டே யிருப்பார்கள். அவற்றிற்குப் பரமஹம்ஸர் தக்க சமாதான மளிப்பார். 'ஈஸ்வரபாவனை சித்தியாகிய இவற்றின் இலக்கண மென்னை? எப்படி சர்வேஸ்வரனுக்கு வழிபாடுகள் செய்தல் வேண்டும்?' என்னும் வினாக்களுக்கு "எந்த மூர்த்தியையேனும் வழிபடுங்கள். சர்வேஸ்வரன் ஒரு எறும்பின்கால் சப்தத்தையுங் கேட்கு மியல்பினன்" என்பார். கடவுளை யெப்படிக் கண்டறிவதென்றால் 'காமினி—காஞ்சனத்தை' வென்றே யென்பார்; பாவமென்பது தென்ன? ஒழுக்க மென்பதென்னை? என்ற சந்தேகத்துக்கு 'அவை ஒரு நாராயணனின் முன்பின் புறங்கள்' என்றருள்வார்.

யதார்த்தம் (பாசாங்கின்மை) மட்டுமே அம்மகானுடைய உபதேசங்களின் முக்கிய கருத்து. நேர்மை யின்றி எக்காரியமும் கைகூடுவதில்லை. நேர்மை யிருக்குமேல் கைவாப்பெறுதறொன்றில்லை. தெய்வம் என்பது ரூபியா? அரூபியா? ....'அவன் இரண்டு மானவன்' என்பார் ராமகிருஷ்ணர்.

குரு தேவரின் அரிய உபதேசம்

'அதீதன்; ரூபா ரூபங்களில் வசிப்பவன்; தேவர்களும் அவனே, மூவரு மவனே; பிரம்மமும் அவன் தான். நியமவிதிகளுக் கெட்டாமல் ஆத்மா ராமனாய் விளங்குபவனு மவனே யாவன். அவனே சத்சொரூபன்; அவனே ஆன்மா; அவனே அனந்த கல்யாண குணன்; அவன் எல்லாம் தானேயாகி விளங்குபவன். எவரெவர் எந்தெந்த விதமாய் வழிபட்டா

லும், அப் பக்தர்கட்கு அன்னோர் மனோபீஷ்டப்படி தரிசனந் தருபவன். சர்வேச்சுவரன் தனது பக்தன் மகிழ எந்த ரூபத்தையும் எடுத்துக் கொள்ளுகிறான். அவன் மெய்வாக்குக் கெட்டாதவன். அதனுற்றான் பக்தன் சித்தியடைந்தபின் வாய்பேசாது மௌனியாகி விடுகிறான். புத்தி தெய்வ சொரூபத்தை வருணிக்கும் சக்தியற்றது. அது ஆன்மா ஒன்றினால் மட்டுமே அறியப்படும். எதை மனிதன் வழிபட்டாலும் சரி—சித்த சுத்தியுடன் அவ் வழிபாடுகள் நிகழுமேல் கடவுளைக் காண்டலுறுதி.

என்று ஸ்ரீராமகிருஷ்ணர் தமது சிஷ்யர்களுக்கு உபதேசித்து வந்தார். இவ்விதம் ராமகிருஷ்ணரின் திருவடி நிழலில் நரேந்திரர் தலையிட்ட சீடர்கள் 'சத்விசாரம்' செய்து வந்தனர்.

13-ம் அத்தியாயம்.

குரு சிஷ்யத்துவ விசேஷம்

கருணை நிதியான ஸ்ரீராமகிருஷ்ணருடைய மெய்யுபதேசங்களினுயர்வை உண்மையில் அறிந்து அனுபவித்தவர் நரேந்திரர் ஒருவர்தான். பரமஹம்ஸர் கூறுவதில் எதையும் அவர் உடனே நம்பி விடுவதில்லை. அவற்றை அறிந்து தெளிந்து மகிழ்வது அவருடைய சுபாவமாயிருந்தது. செய்கையிலும் குணத்திலும் நாளடைவில் அவர் பரமஹம்ஸரே யாகிவிட்டார். கனவிலும் நினைவிலும் அவர் பரமஹம்ஸரது ஒளிபொருந்திய திருமேனியைத் தரிசித்துவந்தார்; வைதீக ஹிந்து மதத்தின் ஜீவாதாரக் கொள்கைகளை அம்மகானுபாவர் பின்பற்றி நடந்து வருவதைக் கண்டு அவரைப் போற்றி வந்தார்; அவர் பாதநிழலில் அத்வைத மத சித்தாந்தங்களனைத்தையும் ஐயந்திரிபற ஓதியுணர்ந்தார்.

அத்வைத வேதாந்தத்தின் தொடக்கத்தில் சகலவிதமான கர்மாக்களும், கிரியைகளும் பொய்யென்றும் கட்டுக் கதைகளென்றும் கருதப்படும். அதன்பின், இரண்டாவது நிலையாக சகலவித கொள்கைகளும் தத்துவார்த்தங்களுடன் ஊகிக்கப்படும். அதன் முதிர்ந்த முடிவான நிலையில் 'எல்லாம் அவனே! சகுணந்தான் நிர்க்குணம். நிர்க்குணமே சகுணம்' என்பது புலனாக்கப்படும். இதுவே அத்வைத வேதாந்தத்தின் அதீத நிலை.

நரேந்திரர் பிரம்ம சமாஜத்தாரோடு சேர்ந்து விக்ரஹ ஆராதனையை வெறுத்தார். ஹிந்து மதக்கிரமங்களிற் கூறப்படும் கர்மாக்

களை அலட்சியபாவத்துடன் நோக்கினர். அவருக்கு யுக்தி சாஸ்திர (Science) ஆராய்ச்சியும், வேதாந்த உட்கருத்துகளும் புலப்படா திருந்தமைதான் இவ்விதநிலைக்குக் காரணமாயிருந்தது. அப்பொழுது அவர் மிகவும் பால்யர்; ஹிந்து மதமோ எத்த

நரேந்திரரும் பிரம்ம சமாஜமும்

னையோ பல்லாண்டு, பல்லாயிரத்தாண்டு, பல கோடி நூற்றாண்டு முதியது. மேலும் கலாசாலையிற் படித்துக்கொண்டிருந்த முறுக்கான காலத்தில் நவீன நாகரீகச் செயல்கள் அவரிடம் குடிபுகுந்திருந்தன. அதற்கேற்ப மேல்நாட்டு சமயாசார சாஸ்திரப்படி (Theological) 'பிரம்ம சமாஜம்' ஸ்தாபிக்கப் பட்டிருந்தது. அஸ்திவாரமற்ற சுவாதலின், அவருடைய பரிசுத்த ஆன்மாவிற்கு ஏதோ திருப்தி யளிப்பதுபோல் பிரம்ம சமாஜம் தோற்றுவித்ததேயன்றி ஆராயுங்கால் எதையும் உணர்த்தத் தக்கதா யில்லை. ஆதலின் அவர் அச் சமாஜத்தாரிடம் வெறுப்படைந்து 'தாம் கடவுளை கண்கூடாகத் தரிசித்ததுண்டா? வீண் வாசாஞானம் வேண்டியதில்லை' என்று கேட்கத் தொடங்கினர்.

அவர் ராமகிருஷ்ணரை யடைந்ததும் அவருக்கு ஓர் புதுவித தத்துவ சாஸ்திர உணர்ச்சி உண்டாயிற்று. அவ்வுணர்ச்சி அவரைப் பிறவியிலிருந்தே பின்பற்றிவந்ததாயினும் உணருங்கால் மிதுவாக இருந்தது. அவ்வுணர்ச்சி தோன்றியதும் சந்தேகங்களும் கூடவே எழுந்தன. அவர் அதற்கு முன் கேட்டுமறியாத ஹிந்துமதத்தில் மகோன்னத அனுஷ்டானங்கள் குருதேவரிடத்திற் குடிகொண்டிருந்தன. ராமகிருஷ்ணருடைய ஹிந்துமதம் சுவானுபூதியில், மெய் வருந்த சிரத்தையுடனும் நம்பிக்கையுடனும் முமுக்ஷுத்துவத்தை யருளும் தன்மைத்தா யிருந்தது. அவரும், சமுசார தாபாக்கினியால் தலை பிடித்து எரியத் தண்ணீர் நிறைந்த தடாகத்தைத் தேடியலைகிறவனைப்போல், குருவைத்தேடி யலைந்து குணமுற்றார். நரேந்திருக்கு முதலில் பரமஹம்ஸரிடத்தில் நம்பிக்கை யேற்படவில்லை; தம் குருதேவரைப் பித்தரென்றே எண்ணினர். அப்பால், பிரம்ம சமாஜ தாபகர் ஸ்ரீகேசப் சந்திரசேனர் ராமகிருஷ்ணரை தெய்வமென்று வழிபடுவது கண்டு ஒருவித சந்தேக நிலையை யனுபவித்தார். மூன்றாவது ஸ்திதியாக மெல்ல காளிதேவியைத் தமது

பரம ஹம்ஸரே பரம புருஷர்

ஆசாரியரைப்போலவே உபாசிக்கத் தொடங்கினர். சக்தியின் வடிவான லோக நாயகியைப் பல மூர்த்திகளாகக் கண்டு தரிசிக்கும் பாக்கியம் அவருக்குக் கைவரப்பெற்

றது. சக்தியான அவளே இறப்பும் பிறப்புமாகிய பந்தத்தினின்றும் நம்மை விடுவிப்பாளென்பதை அவர் நன்கறிந்தார். இத்தகைய மகா சக்திகளையெல்லாம் அவர் எளிதிலடைந்ததற்கு ராமகிருஷ்ணர் அவர் ஹிருதயத்திற் பிரவேசித் திருந்தமை யொன்றேதான் காரண மாகும்.

அவரை முதலில் சந்தேக நிலையே அதிகமாகப் பாதித்துவந்தது. பிரம்ம சமாஜத்திற் புகுவதா? அல்லது ஸ்ரீராமகிருஷ்ணரின் பாதச் சுவடுகளை உறுதியாகப் பற்றிக்கொள்வதா? என்ற மன அலைப்பால் அவர் மனமும் உடலும் நோயுற்று பித்தரைப்போலானார். இக்கார ணம்பற்றிச் சில நாட்கள் அவர் தக்ஷிணேஸ்வரத்திற்குச் செல்வதி னின்றும் நீங்கியிருந்தார். இதையறிந்து ராமகிருஷ்ணர் கல்கத்தா விற்கு வந்து, ஒரு சிஷ்யருடைய வீட்டிலிருந்து நரேந்திரரை யழைத்துவரச் செய்தார். அவர் வந்ததும் அவ ருளக் குறிப்பை வாடிய வதனத்தால் அறிந்து தமது காத்தை நீட்டி, அவர் சிரசை யொரு முறை ஸ்பரிசித்தார். அக்கணமே, நரேந்திரர் உடலைப்பற்றிய நோயும், சித்தத்தைப்பற்றிய பித்தமும் அகன்றது. அதுமுதல் பரம ஹம்ஸரிடத்தில் அவருக்கு ஸ்திரமான பக்தி வேரூன்றியது. அவரு டைய தந்தை யிறந்தும், வறுமை வந்துற்றும், துயருற்றதாயும் ஆதரவற்ற சகோதர சகோதரிகளும் இவரையே நம்பியிருக்க அவர் களைக் காக்கவேண்டிய குடும்ப பாரம் அவரை அழுத்தியும், அவர் தக்ஷிணேஸ்வரத்திற்குப் போவதை மறந்திலர். ஏதோ ஒரு தெய்வத் திருவரு ளவரை நெட்டித்தள்ளி அட்டியன்னியில் தக்ஷிணேஸ்வரத் தில் கொண்டுபோய் விட்டுவிடும்.

சந்தேக நிலை நீங்கப் பெற்றமை

ஸ்ரீராமகிருஷ்ணரை யடுத்துப் பழகினமையால் நரேந்திரருக்கு அனுபவத்தில் அத்வைத வேதாந்தம் விளங்கலாயிற்று; தெய்வீகப் பிரவசனங்கள் காணப்பட்டன. அப்பொழுது "தியஜி? துற! மறு, தள்ளு" என்னும் மகா வாக்கியம் அவர் புலன்களை யடக்கி யாட் கொண்டது. ஹிந்துமதத்தின் பிரதமமான அத்வைத வேதாந்தத் தின் கொள்கைகளை பசுமரத்தாணிபோற் பற்று மாறு பகவான் ராமகிருஷ்ண பரமஹம்ஸர் அவ ருக்கு உதவி புரிந்தார்; அன்புடனும் பொறுமை யுடனும் உணர்வித்தார். குருதேவர், "சிவோஹம்? சிவோஹம்; நானே தெய்வம்" என்று நிர்விகல்ப சமாதி நிலையினரா யியம்புவது

அகம் பிரம்மாஸ்மி

கண்டு, நரேந்திரர் "இதெல்லாம் பொய்; வீண் பாசாங்கு" என்று கூறிவந்தார். வெள்ளி யென்ற பிரமை நீங்கி கிளிஞ்சலென்னும் ஞானம் அவருக் கெளிதில் வந்துவிடவில்லை. ஆனால் அந்த ஞானம் வந்தபின்னர் மகாவல்லமையுடன் அழியாமல் நிலவியது. '**அகம் பிரம்மாஸ்மி**' எனும் உண்மையை அவருக்குப் புகட்ட ராமகிருஷ்ணர் அரும்பாடு பட்டார்.

பரமஹம்ஸர், பிரம்மானுபூதியை ஏகம் பிரம்மமென் றுணர்த்திடும் நூல்களை வாசிக்குமாறு நரேந்திரரை ஏவுவார். ஏனைய அடியவர்களை அவர் வாசிக்குமாறு தூண்டுவதில்லை; 'அவர்களுடைய மார்க்கம் வேறு. அவர்கள் பக்தர்கள்' என்பார். அவர் நரேந்திரரை மட்டுமே ஞானமார்க்கத்தில் துரிதமாகப் பழக்கி வேதாந்தத்தின் வெற்றியை யுணர்த்தி வந்தார். அப்பொழுது ஞான நூல்களை நரேந்திரர் வாசிக்க மறுப்பார்; படித்த ஞானம்—புத்தக ஞானம் வேண்டாம். மெஞ்ஞானம் வேண்டும்' என்பார். பரமஹம்ஸர் அவரை விடாமல் 'அப்புத்தகத்தை நீ உனக்காகப் படிக்கவேண்டாம். எனக்காகச் சற்று வாசி. அப்பனுவலிற் கூறப்பெறும் விஷயங்களை நீ கவனிக்க வேண்டிய அவசியமில்லை' என்று கூறி அவரைப் பலவந்தப் படுத்துவார். அப்பால், குருநாதரின் கட்டளைக் கிணங்கி அவர் வாசிப்பதுண்டு. அங்ஙனம் வாசிக்குங்கால் அவர் மனம் அந் நூலிலுள்ள விஷயங்களைத் தானாகவே சிந்தித்துவிடும்; அதன் மெய்ப் பொருளிலேயே அவாழ்ந்து சமாதியாகிவிடுவார். இது கண்டு குரு தேவர் 'அகப்பட்டான் அன்பு வலையில்' என்றகமகிழ்வார். இவ்விதம் யோக வாசிட்ட ராமாயணம், அத்யாத்ம ராமாயணம், உபநிடதங்கள் முதலியவற்றை நரேந்திரருக்குப் புகட்டினர் அம்மகாத்மா.

அகப்பட்டான் அன்பு வலையில்

"எல்லாம் பிரம்மமயம்; கண்டதும் காணப்படாததும் பிரம்மமே. அறிந்து கொண்டதும் அறியப்படாததும், அண்டாண்டங்களும் பிரம்மமே யன்றி வேறில்லை. வாழ்வும் வாழ்வற்றதும், வேதங்களும் வேதங்களல்லனவும், ஆரம்பமும் முடிவுமாகிய யாவும் பிரம்மமயம். ஆன்மாவும் பிரம்மமே. தேவதா மூர்த்திகளும் பிரம்ம மயமானவைகளே. அகிலமே பிரம்மமயம். சத்யம் பிரம்மம். நித்யம் பிரம்மம். சகல சராசரப் பொருள்களும் பிரம்மமே யாம். பிரம்மமல்லாத பொருள் எங்குமில்லை. இதை யனுபவித்தவர்களே சித்த புருஷர்க ளாகின்றனர்; அவர்களே பரமஹம்ஸ

எல்லாம் பிரம்ம மயம்

ரெனப்படுவர். அவர் இப் பிரபஞ்சத்தின் கண்ணுள்ள பொருள்கள் அனைத்தையும் பிரம்மமாகவே தரிசிக்கின்றனர். இம் மெய்ப் பொருளைக் கண்டவுடன் பாம்பு சட்டை யுரிப்பதுபோல் எல்லா பந்தங்களையும் கடிந்து, பரம புருஷனை பரஞ்சோதிச் சுடராகப் பிரகாசிக்கின்றான்; தானே பிரம்மம். பிரம்மமே தானென்றும் அறிகின்றான்." என்னும் உபநிஷதமகா வாக்கியங்கள் குருகடாக்ஷத்தால் நரேந்திருக்குச் சித்தித்தன. இவ்விதம் கொஞ்சங் கொஞ்சமாக அவர் முயன்று உறுதிபெற்று நிர்விகல்ப சமாதியில் நிர்க்குணப் பிரம்மானுபூதியை யடைய முயல்வா ராயினர்.

ஸ்ரீராமகிருஷ்ணரின் உதவி யில்லையேல் நரேந்திரநாதர் ஹிந்துமத உண்மைகளை அவ்வளவு பரிபூர்ணமாக சுவானுபூதியில் அறிந்திருக்க முடியாது. நரேந்திருக்கு நம்பிக்கை யுண்டுபண்ணும் பொருட்டு ராமகிருஷ்ணர் மிக்க பொறுமையுடன் எவ்வளவோகாலம் சிரமப்பட்டார். அவரைத் தம்மைப்போலாக்க குருதேவர் பேரவாக்கொண்டு அவருக்கெழுந்த சிக்கலான பல சந்தேகங்களையும் போக்கி ஆறுதலளித்தார். ஸ்ரீகிருஷ்ண சைதன்யரும் ஸ்ரீமத் சங்கரரும் ஒருருக்கொண்டு உலகில் வந்தனரோ வென்று புகழத்தகும் ராமகிருஷ்ணருடைய மகிமையை நாளடைவில் நரேந்திரர் உணர்வாராயினர். நரேந்திரரின் மன மாகிய

குரு சிஷ்யத்துவத்தில் தனி விசேஷம்

சோதியை மறைக்கும் மாயைத் திரையை பரமஹம்ஸராலேயே நீக்க முடிந்தது. முரட்டுத்தனமாய் நரேந்திரர் பல தடவைகளில் பரமஹம்ஸரை எதிர்த்தபோதிலும் குருதேவர் அவரை மெல்ல சமாதானப்படுத்திக் கடைசியில் வெற்றியுடன் விளங்கினார். அப்பொழுது அவர் தமது பிரதம சிஷ்யரைத் தட்டிக்கொடுத்து ஏனைய அன்பர்களைப் பார்த்து 'இப்பொழுது நரேந்திரன் சகலத்தையும் அறிந்துகொண்டான். எனது சித்திகள் யாவும் அவனுக்கு எளிதாயின. அவன் தேவியின் திருக்குமாரனாகிவிட்டான். அவனே ராதாகிருஷ்ண பக்தன்; சீதாராம சித்தன்; சித்தியடைந்த அத்வைதி. நிர்க்குண பிரம்மோபாஸி' என நவின்றருளினார்.

நரேந்திரர் முரட்டுத்தனமாகத் தமது குருநாதரை எதிர்ப்பார். அப்பொழுது பரமஹம்ஸர் சாந்தமாக அவரை நோக்கி 'பிரிய! எல்லாப் பொருள்களிலும் உண்மை யாராய்ச்சி வேண்டும். அதுதான் என்னுடைய சுவானுபவம். ஆதலின் நான் சொல்வதுபோல் நட; பக்தனும் ஞானியாயு மிரு' என்றுபதேசிப்பார். ஒரு சமயம் நரேந்

திரர் அவரை மிகவும் கொடுமையாகப் பேசிவிட்டார். ராமகிருஷ்ண ரும் எவ்வளவு தூரந்தான் பொறுமையா யிருப்பார்? பாவம்! "ஓடிப் போ! இனி அரைக்கணமும் என்முன் நில்லாதே! சித்த புருஷர்களை அசம்பாவிதமாக நீ எதிர்க்க அருகன்" என்று குருநாதரும் அவரை கடிந் தனுப்பிவிட்டார். சற்று நேரமானபின் நரேந்திரரும் தாம் நடந்து கொண்டது சரியல்லவென் றுணர்ந்தார். பரமஹம்ஸரும் 'அடிக்க ஒருகை; அணைக்க ஒருகை' ஆதலால் அவரை மறுபடியும் ஏற்றுக் கொண்டார். சகுணோபாசனையி னின்றும் அவர் நிர்க்குணோபாசனை செய்யத் தொடங்கியதும், சகுணத்தையும் நிர்க்குணமாய்ப் போற் றுது, நிர்க்குணத்தை மட்டும் நம்பி, சகுண மூர்த்திகளை வெறுக்க வாரம்பித்தார். அதனால் அவருடைய ஆன்ம வளர்ச்சியில் ஒருவித தத்தளிப்பு ஏற்பட்டது. இதனின்றும் அவரை மீட்க ராமகிருஷ்ணர் பட்டபாடு பதினாயிரமாகும்.

சிறிது தத்தளிப்பு

குருதேவரின் சித்திகளை நரேந்திரர் சோதித்த வண்ணமாகவே யிருப்பார். ஸ்ரீராம கிருஷ்ணரும் 'வணிகன் நாணயத்தைத் தட்டிப் பார்த்து வாங்குவதுபோல் நீயும் என்னைப் பரிசோதித்த பின்னரே நிச்சயமாக நம்பலாம்.' என்பார். ஒருசமயம் ஏதோ ஒரு நிகழ்ச்சியி னின்றும் நரேந்திரருக்குத் தமது குருநாதரைச் சோதிக்கவேண்டு மென்ற அவா வுண்டாயிற்று. அவர் விரைந்து ராமகிருஷ்ணரின் அறைக்குப் போனார். அப்பொழுது ராமகிருஷ்ணர் கல்கத்தாவுக்குச் சென் றிருந்தமையால் அவ்வறையி லொருவருமில்லை. அச்சமயம் நரேந் திரரிடம் ஒரு ரூபா யிருந்தது. உடனே அந்த ரூபாயை மெல்ல ராமகிருஷ்ணரின் படுக்கையி னடியிலுள்ள பாய்க்குள் செருகி வைத்து விட்டு, பஞ்சவடியினடியில் தியானம் செய்யப் போய்விட்டார். அப் பால், சற்றுநேரங் கழித்து ராமகிருஷ்ணர் கல்கத்தாவிலிருந்து திரும்பி வந்தார். வந்தவர் தமதறைக்குட் சென்று, அமரும் பொருட்டுப் படுக்கையை யணுக, ஏதோ ஒருவித கானல் வீசுவது போலிருந்தது. உடனே அவர் என்னவோ அபசாரம் நேர்ந்திருக்க வேண்டு மென்றனு மானித்துத் தமது சீடர்களை யழைத்து, அவ்வறையைப் பரிசோதிக்க ஏவினார். இதற்குள் நரேந்திரரும் அங்கு வந்து சேர்ந்தார். வந்தவர் 'என்ன நடக்கின்றது பார்ப்போ' மென்று மௌனமா யிருந்தார். பரி சோதிக்கத் தொடங்கிய சீடர்களி லொருவர் படுக்கையை எடுத்து

நரேந்திரரின் ஒரு விசேஷ சோதனை

உதறினார். உதறவே அதிலிருந்து ஒரு ரூபாய் விழுந்தது. நரேந்திரர் மெல்ல சிரித்தவண்ணம் ஒதுங்கி நின்றார். குருதேவரும் இது நரேந்திருடைய காரியமென்றறிந்து, மகிழ்ச்சியுடன் அவரை இறுகத் தழுவிக்கொண்டார்.

சமாதி நிலையிலே வீற்றிருந்து பழக்கப்பட்டுப் போனமையாலும், நிர்க்குணப் பிரம்மானுபூதி சித்தித்துவிட்டமையாலும் யோகாரம்ப சிஷ்யன், மனதை ஏகமாக்க, எவ்வித சஞ்சலத்தை யடைவானோ அவ்வித சிரமத்தை ஸ்ரீராமகிருஷ்ணர் யோகநிலையி னின்றும் ஜாக்கிரத்தையடைய அனுபவிக்கவேண்டி யிருந்தது. அவர் உபதேசித்துக் கொண்டிருக்கும் பொழுதும், கங்கையில் சந்தியா வந்தன காலத்தில் அர்க்கியம் விடும்பொழுதும் அப்படியே செயலற்று சமாதியாகிவிடுவார். காளி தேவியின் முன் பூஜை நிகழ்த்தும்போது அருச்சிக்க மலரைக் கையிலெடுத்தவண்ணம், அவர் மனமலர் குழைய சமாதியாகி விடுவதுண்டு. கீதையில் பகவான் 'பிரம்மானுபூதியை யடைந்த நிர்க்குணோபாசி-அறிவான தெய்வத்தை யாராதிப்பவன் கர்மாவை பரப்பிரம்ம விவேகத்தி லைக்கியப்படுத்தி விடுகிறான்' என்ற திருவாக்கிற் கிலக்காக ஸ்ரீராமகிருஷ்ணர் தம்முடன் திகழ்வதைக் கண்டு சிஷ்யர்கள் பயபக்தி விநய விஸ்வாசத்துடன் பணிந்தெழுவர்.

யோகத்தி னின்றும் ஜாக்கிரம்

ஒருபகலுக்குள் ராமகிருஷ்ணர் முகம்மதியராயும், வைணவராயும், சைவராயும், புத்தராயும், கிறிஸ்தவராயும், அத்வைதியாயும் அவலம்பிப்பார். சகல சமயங்களி னெல்லையும் வழிபாட்டின் கருத்தும் வணங்கப்படுவதும் ஒன்றெனச் சாற்றுவார். அங்ஙனமே அவர், தாமே வெவ்வேறு சமயஸ்தாபகர்களாய், அவர்கள் வெளியிட்டருளிய சமயக்கோட்பாடுகளின் உயர்ந்த உட்கோள்களை அனுபவிப்பாராயினர். 'எல்லா சமயங்களும் ஒன்றே, அவற்றின் எல்லையும் ஏகப்பிரம்மமே' என்ற அதீத அத்வைதக் கொள்கையை அவர் தன் முயற்சியால் குருநாதரின் பேரன்பால் கண்டறிந்தார். எல்லாவற்றிற்கும் அறிவன்றோ அடிப்படையாயுள்ளது! அதனாற் றானே 'அறிவான தெய்வமே' யென்றார் தாயுமானவர்.

எல்லாம் ஏகப்பிரம்ம மயமே

ஸ்ரீராம கிருஷ்ணருடைய உபதேசங்களிலும், வாழ்விலும் நாளையென்பதே கிடையாது. யதேச்சையாக ஒருசமயம் அவர் வயிற்று

நோயால் மிக்க வருந்தியமை கண்டு வைத்தியரொருவர் மூன்று மாத்திரைகளை தினமொன்றாகக் கொள்ளுமாறு அளித்துப்போனார். அதை அவர் தமது முன்தானையில் முடிந்து வைத்தார். அது முடியப்பெற்றதும் அவருக்குத் தடுமாற்ற மேற்பட்டுவிட்டது. அவருடைய கால்கள் பட்சபாத நோயுற்றாரைப்போல அவரை முட்களில் கொண்டுபோய்த் தள்ளின அதற்குக் காரணமெதுவா யிருக்கலா மென்றவர், ஆலோசித்து தன் முன்தானையில் முடிந்திருந்த முடிப்பை அவிழ்த்து அம்மாத்திரைகளை வீசி எறிந்துவிட்டு மேலும் நடக்கலானார். அப்பொழுது அவர் சரீரம் சுவாதீனமடைந்திருந்தது. 'ஹா! நாளை யொரு மாத்திரையைச் சாப்பிடவேணும்' என்ற ஞாபகமல்லவா நம்மைத் தடுமாற வைத்ததென அவர் ஆச்சரியப்பட்டார். ஜோதி சொரூபனான சூர்ய பகவான் மேகமண்டலத்தில் மேகத்தால் மறைக்கப்படும்போது ஒளி குறைவதுபோலல்லவா யிருக்கின்றது இந்த நிகழ்ச்சி!

நாளை கவலை இன்று ஏன்?

பரமஹம்ஸருடைய சித்திகளெல்லாம் நாளடைவில் நரேந்திரர் உள்ளத்தில் வேரூன்றின. நரேந்திரநாதர் ஜகபூஜ்யாய் விளங்குவாரென்று பரமஹம்ஸர் அடிக்கடி மற்ற சிஷ்யர்களிட முரைப்பதுண்டு. ஒருநாள் குருதேவர் பலராம் பாபுவென்னும் சீடருடைய இல்லத்தில் அடியவர் புடைசூழ வீற்றிருந்தபொழுது ஓரன்பரை நோக்கி "நீங்கள் போய் விரைந்து நரேந்திரனையும் ராஹல்லனையும் அழைத்து வாருங்கள். அவர்களுக்கு அன்னமளிப்பது சாக்ஷாத் நாராயண மூர்த்திக்கே ஆராதனை செய்வதாகும். அவர்கள் சாதாரண மனிதர்களல்ல; தெய்வீகர்கள்'' என நவின்றார். மற்றொரு சமயம் அவர் நரேந்திரரை சப்தரிஷிகளி லொருவரென் றியம்பியுமுள்ளார். பின்னொருசமயம் நரேந்திரர் பிரம்மசமாஜப் பற்று நீங்கப் பெறாதிருந்த ஸ்திதியில், அதிகநேரம் யோகாப்பியாசம் செய்வதாலும், எப்பொழுதும் மெய்ப்பொருளைப் பற்றிய விஷயங்களில் கருத்தாழ்ந்திருத்தலாலும், அவருக்கு அங்க ஊனமும், சித்தப்பிரமையும் உண்டாக, இவற்றால் ஒருவேளை மரணமும் நேரக்கூடுமோவென ஏனைய அன்பர்கள் கலங்கலாயினர். அப்பொழுது ஸ்ரீராமகிருஷ்ணர் நரேந்திரரை யழைப்பித்து 'அப்பா! கடவுளென்பது ஓர் பெரிய பாற்கடல்! அதிலேயே ஆழ்ந்து விளையாட நீ விரும்பாயோ? பிரிய! ஒரு வாயகன்ற பாத்திரத்தில் பானகமிருப்பதாக வைத்துக்கொள். நீ உன்னை ஓர் ஈயாக பாவித்துக்கொள். நீ எப்படி அப்பாகைப்பருக விரும்புவாய்?'' என்றார். அதற்கு நரேந்திரர்

"அப்பாத்திரத்தின் விளிம்பிலுட்கார்ந்து மெல்லப்பருக யத்தனிப்பேன்; மிக்க தற்காப்புடனிருப்பேன். ஏனெனில், கால் தவறி அப்பாத்திரத்தில் யான் விழுந்துவிடில் அப் பாகில் அழுந்தி யிறந்துவிட வன்றோ நேரும்" என்ற குருதேவர் "அந்த அருட்கடலில் நீ யாழ்ந்து விடுவாயானல் அப்பால் உனக்கு தேகாபிமானமேது? உடல் உனக்கோர் துரும்புக்குச் சமானமல்லவா? அதனல் நீ இறந்து விடுவதில்லை. நீ என்றும் இருப்பவன். அதாவது ஆன்மா அழிவற்றது; நித்யமானது. உன் பொய்யுடலன்றே இறந்துபோம்! ஆதலால், எவரேனும் உன்னை அதிகமாக ஈஸ்வர பஜனம் செய்யலாகாதெனக் கூறித் தடுப்பார்களாயின் நீ அவர்களை நம்பி விடலாகாது" என்றுபதேசித்தார். இவ்வுபதேசப்படியே நரேந்திரர் தமது வாழ்நாள் முழுவதும் உபதேசித்தும் ஒழுகியும் வந்ததை நாம் நன்கறியலாம்.

ஆன்மதத்துவ உபதேசம்

நரேந்திருடைய தந்தை காலமாயினபின் அவரை வறுமை தொடர்ந்து துன்புறுத்தி வந்தது. அதனல் அவர் உடல்மெலிந்து வாடினர் என்னசெய்வார் பாவம்; இளமையில் வறுமை! அப்பொழுது அவர் ஸ்ரீராமகிருஷ்ணரிடம் வந்தார். துறவறம் பூண்டு கொள்ள அவருக்கு அக்காலத்திலிருந்த மனேவேகத்தை, அவர் அடக்குதலரிதாயிருந்தாலும், குடும்ப விஷயங்களை ஒருவிதமாக ஒழுங்கு படுத்திவிட்டுக் காவிதரிக்க தக்க யத்தனங்களைச் செய்யலானர். இவற்றை யெல்லாம் தபஸால் அறிந்த ஸ்ரீராமகிருஷ்ணர், அப்பொழுது நரேந்திருக்குத் துறவறத்தின் வெற்றியை விளக்கி, அவருள்ளத்திலிருந்த நானென்ற எண்ணத்தை நசிக்கச் செய்து, பந்தமென்பதைப் பறக்க வடித்து, காஷாயம் பூண்டுகொள்வதன் சிறந்த நோக்கத்தை யெடுத்தோதினர். ஒருவித நிலையான எண்ணமில்லாத நரேந்திரர் அதன்பின் துறவறக்கங்கணம் பூண்டிலங்கினர்.

நரேந்திரர் துறவறக்கங்கணம் பூண்டமை.

அப்பால், காசிப்பூர் தோட்டத்தில் வசிக்கின்றகாலத்தில் அவர் தமது குருநாதர் காட்டியருளிய அருட்பெருமித வழியில் அதிதீவிரமாக முயல்வாராயினர். வைராக்கியம் அவருள்ளத்தில் வலுக்கொண்டு நின்றது. பஞ்சவடியினடியிலும், வில்வ விருக்ஷத்தின் நிழலிலும் அவர் தீவிர விரதம் பூண்டு கடினமான யோகசாதனங்களைச் செய்து வந்தார். நரேந்திரர் வாயடங்கித் தாமே முயற்சி செய்வது கண்டு பரமஹம்ஸரடைந்த பெருமகிழ்ச்சிக் களவின்று. அவ்வமயம் அவரது

உறுதியைச்சோதிக்கப் பரமஹம்ஸர் அவரை நோக்கி "பிரிய! நீ யென்ன கலாசாலைப்படிப்பை விட்டுவிடப் போகின்றனையா?" என்றார். அதற்கு நரேந்திரர் 'ஆம்! அதுமட்டுமன்றி இதுவரையிலும் யான் கற்ற பாமனை யறிதற்கொவ்வாத கல்வியையும் மறக்க ஏதேனும் மருந்துண்டேல் மனோகரமாயிருக்கும்' என்றார்.

நரேந்திரர் பத்மாசனமிட்டுப் பரிசுத்த மனதுடன் வில்வமரத்தடியில் யோகசாதனங்களை இடைவிடாமற் செய்து வருவாரானார்; அதன்பயனாக திரிகோணவடிவமான சோதியைத் தரிசித்தார்; பாவ சமாதியில் வெளி வியாபாரமற்று விளங்கினார். திவ்யநாம சங்கீர்த்தனத்திலீடுபட்டு பகவத் பக்திரஸத்திலாழ்ந்து பரமஹம்ஸரின் பக்த சிரோமணிகளான் கோபாலரும், மனமோகனரும் பரவசமாகி ஆனந்த பாஷ்பஞ்சொரிந்து நிற்கு மியல்பை நினைந்து நினைந்து அவருள்ளம் கனிந்துருகும். அவர்களைப் போல பாவசமாதியில் தாமும் ஆழ்ந்து அகங் குழைவதற்கு-அன்புருகுவதற்கில்லையே யென்று அவர் பேசிப் பெருமூச்செறிவார். அக்காலை குருதேவர் 'அன்ப! அவர்களைப்போலாக வேண்டுமென்று நீ யாசைப்படற்க! அவர்கள் நிலையைவிட உனது அதீதமானது. அவர்களுக்கும் உனக்கும் எத்துணையோ பேதமுண்டு' என்றியம்பித் தேற்றுவார்.

திவ்யநாம சங்கீர்த்தனம்

அத்வைதத்தின் அதிமேன்மையான நிலையை நரேந்திரநாதர் அனுபவித்தபோழ்து 'இவ்வவனியே ஆசையெனும் பேய்பிடித்துத் தாண்டவமாடும் அரங்கம்! எல்லாம் ஈஸ்வரமயம், நானும் என்னால் செய்யப்படும் செயல்களும் இறைவனருள் பொலிந்தவைகளே' என்ற நம்பிக்கையுடன், செய்வன திருந்தச் செய்து, சேரிடமறிந்து சேர்ந்து, கர்மாவைக் கைவிடாது, தெய்வ சொரூப மற்றவை எவையுமில்லை என்ற ஞானமுடையவனே, 'தத்துவமஸி' என்னும் மகா வாக்கியத்தின் மெய்ப்பொருளைக் கண்டுணர்பவனே,—சிறந்தவனென்று தம் குருநாதர் கேட்கக் கூறினார். அதோடு 'நீயே நான், நானே நீ, அதுவே பரப்பிரம்மம்' என்ற ஸ்ரீசங்கராருடைய நிர்வாண ஷட்கத்தை எடுத்திசைத்தார்.

சங்கரர் நிர்வாண ஷட்கம்.

ஸ்ரீராமகிருஷ்ணர் நரேந்திரரை ஏனைய அன்பர்கள் முன்னிலையில் புகழ்ந்தால் அவர் அக்கணமே அவ்விடம் விட்டகன்று செல்

வார். பிறர் துதிக்கு அவர் வயப்படாதவராகவும், உண்மை ஞானத்தைப்பெறும் ஓரேநோக்க முடையவராகவு மிலங்கினர். ஆனால் ராமகிருஷ்ணர் மட்டிலும் 'நரேந்திரனும், ராஹலனும் நித்யசித்தர்கள்; பிறவியிலிருந்து பரிபக்குவமடைந்த அவதாரபுருஷர்கள். அவர்களை நிந்தித்தால் தெய்வநிந்தனையாம்' என்று செப்புவது வழக்கம்.

நரேந்திரநாதர் அம்மகானுபாவரைச் சந்தித்ததுமுதல் வளர்பிறைச் சந்திரனென அறிவு வளரப்பெற்று, அவ்வறிவிலூறும் ஆனந்த வெள்ளத்திலாழ்ந்து 'ராமகிருஷ்ணரே தெய்வம்; அன்பின் அவதாரம்; அவரையன்றி அவனியில் அஞ்ஞானத்தைப்போக்க அருகரெவருமிலர்' எனும் உறுதிப்பாடுடையவராகி அவர் சந்நிதானத்தை விட்டகலாதிருப்பாராயினர். ஒரு வேளை, நரேந்திரர் தம் முன்னே வீற்றிருக்க, நாலாபக்கங்களிலும் பக்தர்கள் அமர்ந்திருக்குங்கால் பரமஹம்ஸர் 'நரேந்திரா! நான் சொல்லுவதைக் கவனி' என்றார்.

நரேந்திரர் 'தேவரீர் பேசுவதைக் கேட்க நானிங்கு வரவில்லை' என்றார். ராமகிருஷ்ணர் 'ஆனால் நீ இங்கு வருவானேன்?' என அவர் 'ஏதோ ஒருவித சக்தி என்னைத் தம்மிடமிழுத்து வந்தமையால்—தங்களை நான் தரிசிக்க வந்தவன்' என்றார். இது கேட்டதும் பரமஹம்ஸ ரெழுந்து அவரை மார்புறத் தழுவிக்கொண்டார். அம்மகானுபாவரை நரேந்திரர் 'அரும்பொனே! மணியே! என்னன்பே! என்னன்பிலூறும் ஆனந்த வெள்ளமே' என்று பாடி, அவர் முன் ஆடி, அவரை நாடி, விரும்பியே கூவி, அலறி, மெய்சிலிர்ப்ப இருகை கூப்பி, விண்மாரியென கண்மாரி பெய்து, அயர்ந்து 'பொல்லாத சேயெனில் தாய் தள்ளல் நீதமோ, புகலிடம் பிறிது முண்டோ?' வென்று போற்றி நிற்பாராயினர்.

பின்னொரு சமயம் குருதேவர் சந்நிதானத்தில் 'பகவந்நாம சங்கீர்த்தனம்' நடைபெற்றது. நரேந்திரர், கைகோத்து நின்று குதித்து பஜனை செய்யும் பக்தர்களிடையில் மிருதங்கத்துடன் நர்த்தனமாட வாரம்பித்தார். திவ்யநாமத்தின் பேருளொளியில் லயித்து குருதேவர் சமாதியாகிவிட்டார். இச்சமயம் நரேந்திரர் இடைகழிக்கு வந்து, சில அன்பர்களுடன் ஆத்மவிசாரஞ் செய்துகொண்டிருக்க, சமாதி நிலை கலைந்த பரமஹம்ஸர், நரேந்திரரை அங்கு காணுமல், விரைந்து இடைகழிக்கு வந்து 'அப்பா நரேந்திரா! இங்கு என்ன பேசிக்கொண்டிருக்கின்றாய்?' என, அவர் 'நாங்கள் சாதா

ரண புத்திக்கெட்டாத பெருத்த விஷயத்தைக் குறித்துத் தர்க்கிக்கின்றோம்' என்றார். அப்பொழுது குருதேவர் புன்னகைபுரிந்து 'சரி! அவ்விதம் தர்க்கிப்பதில் எனக்குத் திருப்தியே! ஆயினும் நிஷ்களங்க பக்தி (அன்பு), தூய களங்கமற்ற ஞானம் (விவேகம்) எல்லாம் ஒன்றென்பதை நீ யுணரவேண்டும். பக்திமார்க்கம் சுலபமும், யதேச்சையானதுமாகும்' என்று பக்திமார்க்கத்திற்கும் ஞானமார்க்கத்திற்குமுள்ள வித்தியாசத்தை யெடுத்தோதி, ஞானமார்க்கத்தை யனுஷ்டிக்கச் சாத்தியப்படாதவர்களுக்கு ஏனைய கர்ம, பக்தி மார்க்கங்கள் ஏற்பட்டுள்ளனவென் றுணர்த்தி யருளினார்.

பக்தி மார்க்கம்
ஞான மார்க்கம்

இவ்வுபதேசம் நரேந்திரருக்குச் சிறந்த உணர்ச்சியை அளித்தது. அப்பொழுது அவர் 'வீண் வேதாந்தம் பேசுவதாற் பயனென்ன? உமதடி யணைந்து ஏழையேன் உறுபவம் ஒழித்தல் வேண்டும்' என்னுங் கருத்துள்ள துதியைப்பாடிப் பரவசமானார். அப்பால் தமதருகே யிருந்த அன்பரொருவரை நோக்கி "நான் ஹாமில்டன் என்னும் ஆங்கிலக்கவி வரைந்துள்ள ஓர் நூலை வாசித்தேன். அதில், 'படித்த முட்டாள்தனமே வேதாந்தத்தின் முடிவென்றும், சமய உணர்ச்சியின் தொடக்கமென்றும்' வரையப்பெற்றுள்ளது. ஆனால் இத்தகைய நூல்களை வாசிப்பதி லெனக்கிருந்த பிரேமை நீங்கி விட்டது. என்ன வேதாந்தம்? எதற்கு வேதாந்தம்? தெய்வமே என் முன்னின்று பகவான் ராமகிருஷ்ண பரமஹம்ஸராய்க் காட்சியளிக்கும்போது வேறெனக்கு வேண்டுவதென்ன?" என்று பலவாறு தமது குருநாதரைப் போற்றி வருவாரானார்.

எதற்கு
வேதாந்தம்

இவ்விதம் ராமகிருஷ்ணரைச் சரணமென்றடைந்தமையாலும், சதாகாலமும் சத்சங்கத்திற் பழகி வந்தமையாலும், தூய்மையும் நிஷ்களங்க பக்தியும் குடிகொண்டிருந்தமையாலும் நரேந்திரர் சகல சாஸ்திர நிபுணராயும், ஞானசித்தராயும் வளர்ந்து வந்தார். அவருடைய செய்கைகள் இளமையைப் பொருத்தே யிருந்தன; மனமோ துறவறத்தையேயன்றி வேறொன்றையும் நாடவில்லை. முன் சோதிடர் பலரும் அவருடைய ஜாதகத்தைப் பார்த்து 'இது புத்தருடைய ஜாதகத்தைப் போன்றுளது. இச்சாதகன் ஜெகத் பிரசித்தனாவான். துறவிகளுக்குத் துறவியாகப் பொலிவான்; சமய ஸ்தாபகனாக விளங்குவான்' எனக் கூறியதை நினைத்து நினைத்து

அவர் மகிழ்வார். துறவு பூண்பதில் அவருக்குறுதி பரிபூர்ணமா யிருந்தது. எத்துணை இடையூறுகள் தோன்றியும் அவரை அந் நெறியினின்றும் மாற்ற வியலவில்லை. ராமகிருஷ்ணரும் தம்மைச் சரண் புகுந்த பக்தர்களுக்கு ஒளிக்காமல் உண்மை யான வழியைக் காட்டினர்; அருட்தொண்டியற் றும் மார்க்கத்தை யவர்களுக்குப் புகட்டினர். ஆனால் அவர் எவரையும் துறவு பூணுமாறு கட்டாயப்படுத்தவில்லை. 'எத்துறையாயினுஞ்சரி. பொறுமையுடனும், விடாமுயற்சியுடனும் பாடுபடுங்கள். பயனைக் கருதாதீர்கள்' என்று அவர் உபதேசித்தார். ஒழுக்கமே விழுப்பந் தருவதாதலின், அதனைக் கைவிடின் எதுவும் பயன்படாதென்றவர் உரைசெய்து வந்தார். 'ஆடம்பரம் வேண் டாம்; வாசாஞானம் வேண்டாம்; உண்மை, வாய்மை, மெய்மை இவைதான் அவசியம். ஞானமார்க்கத்திற்கு எவ்விதபந்தமும் பங்க காரணமாம். அது மனிதனை அந்தகாரத்தி லாழ்த்தும் என்று உப தேசித்து வந்தார்.

அன்பர்களின் உறுதிப்பாடு

அம்மகானுடைய உபதேசங்களால் நரேந்திரர் உற்சாகமடைந்து கடல் மடுப்பினும் மனம் கலங்கா உறுதிப் பாடுடன், ஞானசித்த ராகி, ஆனந்தவெள்ளத்தி லாழ்வாராயினர். அம்மகானுபாவருடைய மெய்யுபதேசங்களை நரேந்திரர் எள்ளளவும் விடாது அனுஷ்டித்து அவருடைய சித்திகளைத் தாமுமனுபவித்து, அக்குருவினருளால் காளிதேவியின் திருத்தாள்களை வணங்கி, அவர் கண்டவாறே காளி தேவியைப் பிரத்யட்சமாகத் தரிசிப்பாராயினர். இவ்வாறு திகழ்ந் தது அவர்கள் 'குரு சிஷ்யத்துவ விசேஷம்.' இதனினும் பாக்கியம் வேறென்ன வேண்டும்?

14-ம் அத்தியாயம்

குருமகராஜின் மகிமைகள்

சார்வ சமய சித்தாந்தியான ஸ்ரீராம கிருஷ்ணரது இடையறு முயற்சியின் பயனாக நரேந்திரர் தம்மைத்தாமே யுணருந் தன்மையராயினர்; தமது வல்லமையையும் குருவின் திருவருளால் கண்டுகொண்டார். அவருக்கு வெகுகாலம் வரைத் தமது குருதேவ ரின் சத்திகளிலும் உபதேசங்களிலும் நம்பிக்கை ஏற்படாதிருந்தது.

ஆனால் அப்பால் கொண்ட நம்பிக்கை அவருள்ளளவும் மாறாத மாண்புடனிலங்கிற்று. தம்மைப்பற்றிக் குருநாதர் கூறும் யாவும் வீண் புகழ்ச்சியென்று தாம் எண்ணியது தவறென்பதை அவருணருங் காலமும் சமீபித்தது. ராமகிருஷ்ணரின் அனுக்ரஹத்தால் தாம் உலகில் ஏதோ மகத்தான ஒரு காரியத்தைச் செய்யப்போவதாக அவர் தீர்க்கதரிசனம் பெற்றார். ஆழ்ந்த பல சமயக்கருத்துகள் அவர் மனத்தின்கண் அமைந்திருந்தன. அவை அவரை மென் மேலும் தூண்டிக்கொண்டே யிருந்தன. திடபுத்தி, நம்பிக்கை, வைராக்யம், சந்தேகமின்மை, சாஸ்திரஞானம் இவையாவும் அவரிடம் பரிபூர்ணமாய் விளங்கலாயின.

அல்லும் பகலும் அவர் பாரமார்த்தீக விஷயங்களிலேயே தமது கருத்தைச் செலுத்தி வந்தார். தெய்வீகமற்ற விஷயங்களை அவர் கேட்கவுமிசையார். அதுமுதல் அவர் முகத்தில் திவ்யமான தேஜஸ் உண்டாயிற்று. அவர் திருமேனி பொன்மயமாய் விளங்கிற்று. அவர் கல்கத்தாவின் தெருக்கள் வழியே வெகு வேகமாக நடந்து செல்லுங்கால் ஆங்காங்குள்ளாரனைவரும், அஞ்சி நின்று அவரை ஆச்சரியத்துடன் பார்ப்பார்கள். அவர் ஓர் யௌவன புருஷர்; பலமும் வன்மையும் ஆற்றலும், அன்பும், அருளுங்கூடிப் பொலியும் அறிஞர். சாதாரண உயரமும், பருத்து உயர்ந்த தோள்களும் அவருடைய உடலை யழகு படுத்தி நின்றன. அவருடைய மார்பு மகரிஷிகளின் மனதைப்போல விசாலமாயிருந்தது. அவருடைய சிரம் முன்னே நீண்டு அருளிலக்கணங்களுடன் விளங்கிற்று. சுபாவமாகவே அவர் அருட்பார்வையுடையவர். இயற்கையான அவர் பார்வையினின்றும் ஒருவித பேரன்பின் பெருமிதம் பொங்கிவழியும். அவரது நயனங்கள் அவரியற்றிய யோகாப்பியாசத்தின் பயனை வெளியிடும். அவரது கம்பீரமான பார்வைக்கு எவரும் தலைகுனிவர். அவருடைய கண்கள் பெருக்கும் பேரொளியைத் தரிசித்துக்கொண்டிருந்தாலே பசி தாகம் நித்திரையாகிய அவஸ்தைகளை யொழித்து விடலாம். குருதேவரைச் சூழ்ந்திருந்த பல அன்பர்களும் அவரிடம் அச்சமும் மரியாதையும், பக்தியும் கொண்டிருந்தனர். நூற்புலவர்கள், அவர், சொற்சுவை பொருட்சுவை தோய்தரப் பேசுவதுகண்டு பேரானந்தமடைவர். குருமகாராஜின் ஒரு வார்த்தையைக்கொண்டு ஒன்பதாயிரம் உண்மை

நரேந்திரநாதரின் சரீர ஆன்ம லக்ஷணம்

களை அபாரவன்மையுடன் புகலுவதும், எத்துணையோ சிரமப்பட்டும் அறிதற்கரிய பல உபநிடதவாக்கிய தாத்பரியங்களை வெகு சுலப மாக எடுத்தோதுவதுமாக அவர் ராமகிருஷ்ணரின் சீடர்களிடையில் வித்வக் களஞ்சியமாக விளங்கலாயினர்.

உயர்ந்த குலத்தில் தோன்றிய உத்தமரென்பதை அவர் திரு மேனி நிரூபிப்பதாயிருந்தது. சிறந்த தேகாப்பியாசத்தின் பயனாக யானையையும் ஒரு சுண்டுவிரலால் தடுத்து வெல்லுவார்போல் அவர் காணப்பட்டார். 'ஜிதேந்திரியர் இவர்!' 'அமிர்தபராக்கிரம ஆஞ்ச னேயரை நிகர்த்தவர் இவர்!' என்று அனைவரும் இவரைப் போற்று வர். அவர் திருமுகமே ஓர் நிகண்டாக விளங்கிற்று. அவர் முகவீக்ஷண்யம் எப்பொழுதும் ஒரு நிலைத்த நிலையில் மகிழ்ச்சி யுடனே காணப்பெற்றது. நித்ய பிரம்மானந்தத்தை அவர் அனு பவித்து வந்ததைப் புலப்படுத்த அவர் முகமொன்றே போதுமென்று சந்தித்தவர்களெல்லாம் வந்தித்துப் போவாராயினர். அவருடைய தாடை, உறுதியை உணர்த்தி மேற்கொண்ட விரதத்தை விசத மாக்குவதாயிருந்தது.

அவர் எவ்விஷயத்தைப் பற்றியாகிலும் ஆழ்ந்து ஆலோசிக்க வாரம்பித்தால் சிலைபோல இமைகொட்டாதிருந்து சிந்திப்பார். வார்த் தைகளிலோ, சிந்தையிலோ செய்கையிலோ அவரொன்றும் ஆடம் பரத்தைக்கொள்ளார். அவர் கௌரவத்தைக் கனவிலும் விரும்பிய தில்லை. 'நாயினுங் கடையேன். நான் எம்மாத்திரன்' என்று அகப் பற்று புறப்பற்றுகளை யொழித்தவராய், குழந்தையைப்போன்று நிஷ்களங்கமாயிருப்பார். ஏனையபக்தர்கள் இவரையும் பரமஹம்ஸ ரென்றே போற்றி வந்தார்கள். நரேந்திரர் கோபித்தாலும் அதில் கருணைபொலியும்; பேசினுலுமதிற் பெருமிதந்தோன்றும்; அதட்டி னுலுமங்கண் அருள்சுரக்கும். இவற்றையெல்லாம் நாம் ஞாபகத்தி லிறுத்தி, இனி அவருடைய திவ்ய சரிதத்தின் பிற்பகுதியில் வரும் பல அரிய நிகழ்ச்சிகளிலும் ஒப்பிட்டுப் பார்ப் போமாக. அவர் தாம் அதிகம் கற்றதாகவோ, அல்லது பரமஹம்ஸர் தம்மிடமே அதிக அன்பு கொண்டுள்ளதாகவோ எண்ணி எவரையும் அலட்சியம் செய்வ தில்லை; நரேந்திரர் ராமகிருஷ்ணரைப்போலவே சகலரிடத்தும் சமாபி மானமுடையவர். மிகைபடப் புகழ்ந்து பிறரைக் கௌரவிக்க வேண்டு மென்னுங் காரணத்தால் அவர் தலைபோவதாயிருப்பினும் வணங்

அமைந்த அரியகுணங்கள்

கார். தாம் உண்மையென்று கண்டறிந்தவற்றை எவர் எதிர்ப்பினும் அவர்களைத் தமது தொனியாலும், வன்மையாலும், விவேகத்தாலு மடக்கி மீள்வார் மகா விவேகியின் இலக்கணங்களெல்லாம் அவரிடம் ஒருங்கே அமைந்திருந்தன. மாயாவாதிகளை அவர் பொறுமையை யிழந்து பழித்துக் கோபிப்பார்; அப்பால், அன்புடனழைத்து அழுதைவெல்லும் அரிய சொற்களாலுபசரிப்பார்; 'என்னையேன் பலரும் சூழ்ந்து அன்பு பாராட்டவேண்டும்?. என்னிடம் குருதேவருக்குக் கிருபை இருப்பின் அதுவே போதும். எல்லாமிருக்க நானெம்மாத்திரன், என் யோக்கியதை ஜெகதீஸ்வரி அகிலாண்டகோடி பிரம்மாண்டநாயகி தேவதேவிக்குத் தெரியும். அவள் கருணைகொண்டால் அடியேனை ஆளாக்கலாம். என்னையொரு பொருளாக நினைக்க நான் யார்?' என்று மகாஞானியாய் எண்ணியெண்ணி ஏங்குவார்.

ஸ்ரீராமகிருஷ்ணரின் ஆப்தசீடராயிருந்தமையே அவர் அத்புதரானமைக்குக் காரணமாகும். அம்மகானுடைய சித்திகள் யாவும் நரேந்திரருக்குப் பலித்தமையால் அவர் தெய்வீகராகத் திகழ்ந்தார். அவரையறிந்த பலரும் அவரைக் கொண்டாடி வந்தனர். அவருடன் கலாசாலையில் வாசித்த அன்பர்கள் எல்லோரும் அவரிடம் மரியாதையும் அன்புமுடையராயிருந்தனர். நரேந்திருடைய வாசாலத்தாலும் துரிதமாகப் பேசுந்தன்மையாலும் அவரிடம் பிரேமை கொள்ளாதாரில்லை. அப்பொழுது கல்கத்தாவில் 'ஜெனரல் அசம்ளி இன்ஸ்டிடியூஷன்' (General Assembly's Institution) என்ற கலாசாலையினுதாவில் ஓர் ஆராய்ச்சிக் கழகம் நடைபெற்று வந்தது. நரேந்திரரே அக்கழகத்தின் முக்கிய அங்கத்தினராயிருந்தார். ஆங்கில மொழிப் புலவர்களும் நரேந்திரரின் வாக்சாதுரியத்தை வியந்து 'இவரைப்போல ஒருவரை யாம் ஜர்மானிய, ஆங்கில சர்வகலாசாலைகளிலும் கண்டதில்லை' என்று புகழ்ந்துவந்தனர். அச்சபையில் அனைவரும் நரேந்திரரிடம் பணிவோடிருந்து வந்தமையின், அச்சபையை அவர் சீர்படுத்தி, நன்னிலைக்குக் கொண்டுவருந்தருவாயில் பரமஹம்ஸர் பயந்து 'நரேந்திரன் பரிபக்குவப்பட்டு, பழுத்த ஞானியாவதற்குள் இத்தகைய விஷயங்களில் தலையிட்டுக்கொண்டால் பற்று வளர்ந்து புத்தியை மாற்றிவிடுமே' என்றெண்ணி அவரைத் தடுத்துவிட்டார்.

சிறந்த வாசாலம்

இக்காலங்களில் நரேந்திருக்கு அவருடைய எதிர்காலசேவை

யின்னதென்பது புலனாகியிருந்தது. அவரொருசமயம் தமது மாணவ நண்பர்களைப்பார்த்து 'நீங்கள் உங்கள் பெருமுயற்சியால் பெரிய நியாய வாதிகளாகவும், வைத்திய நிபுணர்களாகவும், நீதிபதிகளாகவு மாவீர்கள். ஆனால் நான் ஓர் புதிய தனிவழியைக் கண்டு பிடித்திருக்கிறேன்' என்றார். அவர் விவேகானந்தர் என்று பெயர் புனைந்து, ராமகிருஷ்ணரின் சீடரா யிருந்திராவிடில் ஸ்ரீகேசப் சந்திரரைப் போன்று தான் இருக்க நேர்ந்திருக்கும். ஸ்ரீராம கிருஷ்ணரை ஆஸ்ரயித்தமையால் தான் அவர் கேசப் சந்திரரை விடப் பன்மடங்கதிகப் புகழ்பரப்பி, உலகத்தை யொருபடி யுயர்த்த வியன்றது. அவர் பிரம்ம சமாஜத்தார் ஆதரவில் நடைபெற்றுவந்த, கேசப் சந்திர சேனரின் **நவ பிருந்தாவனம்** எனும் நாடகத்தின் நிபுணராயிருந்தமையால், அவரைப் பிரம்ம சமாஜத்தாரும் போற்றி வந்தார்கள். ஒருசமயம் இந்நாடகம் நடைபெறுகையில் ராமகிருஷ்ணர் வந்து பார்த்து, நரேந்திரர், சிவபெருமான் வேடந்தரித்து, காவிபூண்டு, சடைமுடிகொண்டு, திருமேனியெல்லாம் வெண்ணீறிலங்க, யோகியைப்போல வரக்கண்டு பரமானந்தமடைந்து 'நரேந்திரா! காரணப்பொருளே! ஆரணசாரமே! அப்படியே வந்தெனக்கருள் செய்' என்று அழைத்தார்.

நரேந்திரர்
நவபிருந்தாவன
நாடக வேஷதாரி

வறுமையே நரேந்திரர் வாழ்வை நல்வழியில் திருப்பிற்றெனலாம் அதுவே அவரது விடுதலைக்குக் காரணமா யிருந்தது. வறுமைதான் அவரை நொடியில் மாற்றிற்று. அவரை வீரபுருஷராக்குவதில் சால உதவியதும் வறுமையே. தரித்திரம் அவரை ஆலோசனை யுடையவராகவும், இரக்கமுந் தயையும் உடையவராகவும் செய்தது. ராமகிருஷ்ணர், நரேந்திரர் படும் கஷ்ட நிஷ்டூரங்களை அறிந்தும் அவருடைய வறுமையைப் போக்குமாறு அன்னையை வேண்டாதிருந்ததும் இது பற்றியே யாகும். குடும்பக் கவலைகளும் வறுமைப் பிணியும், ஒன்று சேர்ந்து அவரைத் துன்புறுத்தத் தொடங்கிய போது, அவர் அனைத்தையுந் துறந்து அக்கணமே வெளிப்பட வெண்ணினார்; ஒரு சிறு 'லோடா' சிறிய சமுக்காளமொன்று ஆகிய இவ் விரண்டுடன் வெளியேறினார் அப்பொழுது எவரோ ஒருவர் வந்து ராமகிருஷ்ணர் கல்கத்தாவுக்கு வந்து ஓர் நண்பர் அகத்திற் றங்கி யிருப்பதாகக் கூறக் கேட்டார். கேட்டவர் 'சரி! இவர்மட்டும் என்னிடத்தில் சிறிது பிரியங்காட்டுகிறார். நானிப்பொழுது பெருந்தடுமாற்றத்திலுள்ளேனாதலின் கடைசி முறையாக

வறுமையே
சிறந்த காரணம்

அவரைப் பார்த்துவிட்டுப் போகிறேன்' என் றெண்ணிக்கொண்டே அவ்வன்பர் கிருகத்தை நோக்கி நடந்தார். அவர் ராமகிருஷ்ணரை யடைந்ததும், முகத்தைப் பார்த்து அகத்தைக்கணிக்கும் அம் முமுக்ஷு, அவர் உளப்போக்கனைத்தையு முணர்ந்து அவரை தக்ஷி ணேஸ்வரத்திற்கிட்டுச் சென்றார். சென்றதும் மகா வல்லவராகிய அம் மகானுபாவர் அவருக்குச் சில புதிய யோகசாதனங்களைப் புகட்டு வதாக ஆசைகாட்டி அமைதியா யிருக்கச் செய்தார்.

அதுமுதல் நரேந்திரருக்குச் சகல சித்திகளும் கைகூடிவர வாரம் பித்தன. நாளுக்கு நாள் அவர் அறிவிலும், ஆற்றலிலும் பெருகி வந்தார். அவரிடம் ஸ்ரீ ராமகிருஷ்ணர் கொண்டிருந்த அன்பு அவர் மனதையும் அறிவையும் நேர்மைப்படுத்தியது. சுபாவத்தில் அவர் ஞானியாயிருந்தார். அவர் முன்பு கற்ற சாஸ்திரங்க ளெல்லாவற்றி லும் கொண்டிருந்த அலட்சியத்தையும் அவநம்பிக்கையையும் குரு

பக்தர்களும் ஞானிகளும்

தேவர் களைந்து, சகல விஷயங்களையும் அனுபவத் தில் பிரத்யக்ஷமாக்கி சங்கைகளை நீக்கி சங்கரன் புகன்ற மதானந்தராக்கி யருளினார்; அவரைத் தீர்க்க தரிசியென்று பலர்முன் குருதேவரே புகழ்ந்தார். நரேந்திர ரிடம் தீர்க்க தரிசித்துவமும் அருளிலக்கணமும் பக்தலக்ஷணங்களும் பொலிந்தன. "ஞானிகள் பார்வைக்கு அவலமாயிருப்பார்கள்; பக் தர்கள் முகத்திலோ பால் வடியும்" என்பார் பரமஹம்ஸர். இதைக் குறிப்பிட்டு நரேந்திரநாதர் பின்னொருகாலத்தில் தமது அடியாரொரு வரிடம் "எனது குருநாதர் வெளித்தோற்றத்திற்குப் பக்தராயும், உட் தோற்றத்தில் மகா ஞானியாயும் விளங்கினார். ஆனால் நான் வெளிப் பார்வைக்கு ஞானியாயும், அகப்பார்வைக்குப் பக்தனுயு முள்ளேன்" என்றார்.

விவேகானந்தர் என்னும் திருநாமஞ் சூடக்கூடிய நிலையை நரேந்திரநாதர் எய்திவிட்டார். ஓர் சீமானுடைய குமாரராய்த் தோன் றிய அவர் வறுமையால் துன்பப்பட்டிராவிடில் ஒரு பெரிய நியாய வாதியாகவோ, சொற்பெருக்காளராகவோ, அல்லது ஜனுசார சீர்

ஏழ்மையைப் போக்க எழுச்சி

திருத்த விர்ப்பன்னராகவோ திரும்பி யிருப்பா ரென்று ராமகிருஷ்ணர் அடிக்கடி தமது பக்தர்க ளிடம் கூறுவார். வறுமையால் வருந்தினமையாற் றான் ஏழைபங்காளராய் இமயம் முதற் குமரிவரை 'ஏழைகளின் துயரைப் போக்குங்கள். அப்பொழுதுதான் சமய வளர்ச்சியும்

தேச க்ஷேமமும் பெருகும்' என்று அவர் சாற்றினார். அவருடைய வாயினின்று வெளிவந்தவை யாவும் ஏழைகளின் கண்ணீரைப் போக்கும் தண்ணளியோ டிலங்கின.

ஸ்ரீராமகிருஷ்ணர் நரேந்திரரைச் சந்தித்த அம் முகூர்த்தகாலம் முதல், ஒரே அபிமான முடையவராயிருந்து, அவரை ஏகாந்தமாக ராஜ, ஞான, பக்தி, கர்மயோகங்களில் பழக்கினார். நரேந்திரர் அவதார புருஷரென்று தேவியுணர்த்தப் பரமஹம்ஸர் அவரிடம் அளவிலா அன்புகொண்டு "என்னைச்சுற்றி மலர்களையொத்த மனமுடைய பக்தர்கள் பலருளர். அவர்களுள் சிலர் பத்து இதழ்களுள்ள மலர்களாகவும், சிலர் பதினாறு இதழ்களுள்ள மலராகவும், இன்னுஞ் சிலர் நூறு இதழ்களுடைய மலர்களாகவும் பல திறத்தினரா யிருக்கின்றனர். அவர்களுள் சஹஸ்ரதள அரவிந்தனாய் விளங்குகின்றான் நரேந்திரன்" என்று அவரிடத்துத் தமக்குள்ள அன்பை ஒருசமயம் வெளியிட்டார். பின்னும் "நரேந்திரன் என் பக்கத்திலிருந்தால் போதும். நான் பிரம்மானுபூதியை அடைந்த வண்ணமே யிருப்பேன். அவன் பேசினால் நான் பெருமித மடைவேன்; பாடினால் பாவசமாவேன்" என்றார். இன்னும் நரேந்திரரைக் குருதேவர் ஏனைய அன்பர்கள் முன்னிலையில் புகழ்ந்தது எத்தனையோவிதம். ஒரு சமயம் அவர் கிரிஷ்பாபுவினிடம் செல்லுங்கால் 'நரேந்திரன் சகல கலா வல்லவன். அவனுக்கு எல்லா விஷயங்களிலும் நிறைந்த ஞான மிருப்பதுடன், உண்மையும், உழைப்பும் உற்சாகமும் கூடி யிருக்கின்றன' என்றார். மற்றொருவேளை சிஷ்யவர்க்கத்தினிடையே "நரேந்திரனைப்போல நீங்களாகவேண்டும். அவனை யொத்தவர்களே நித்ய சித்தர்கள். அவர்களே பிரம்ம ஞானிகள். இவ்வுலகமாயை அவர்களை யொன்றுஞ் செய்ய வியலாது. அவர்கள் ஈஸ்வராம்ஸம் பெற்றவர்கள்; ஆசாரிய கோடிகள். மனிதர்களுக்கு அறிவூட்ட அவர்கள் அவதரிப்பார்கள்; நரேந்திரரின் எல்லா விஷயங்களிலும் நிகரற்று விளங்குவதை நீங்கள் காணவில்லையா? அன்றொருநாள் அவன் கேதாரியுடன் தர்க்கித்தான். கேதாரியின் வசனங்கள் தலையெடுக்க முடியவில்லையே!" என்றார்.

நரேந்திரர் சஹஸ்ரதள அரவிந்தர்

வேதங்களில் உபமானார்த்தமாக எடுத்தோதப்படும் ஹோமா என்னும் பக்ஷிக்கு மேகமண்டலத்தினருகே சஞ்சரிப்பதும், அங்கேயே முட்டையிடுவதும், அம்முட்டைகள் பூமியை யடைவதற்கு

முன் ஆகாயத்திலேயே பொரிந்து குஞ்சாகப் பறந்து ஆகாயத்தி லேயே சஞ்சரிப்பதும் இயல்பல்லவா? அதுபோல ஆசார்யகோடிகள் அவதரிக்கிறார்கள். அவர்கள் பூமியில் வசித்தாலும் பற்றற்றவர்க ளாகவே யிருப்பார். அத்தன்மையினன் நரேந்திரன்' என்றார் பிறி தொரு சமயம்.

ஸ்ரீராமகிருஷ்ணர் எவரையும் புகழும் சுபாவமுடையவால்லர். அவருக்கு எவராலும் எந்தக்காரியமும் ஆகவேண்டியதில்லை. அவ ரெதையும் ஒளித்துப் பேசமாட்டார். குருதேவர் நரேந்திரருக்குரிய பெருமைகளை உள்ளவாறு பேசியது, முதலில் அனைவருக்கும் (நரேந் திரருக்கும்) வியப்பைத் தருவதாயிருந்தபோதிலும் பின்னர் மெய் யென்பது புலனாயிற்று.

குருதேவர் நரேந்திரரை ஜோதிசொரூபரென்றும், * கோஷ் ஸ்வாமி, கேசப் ஆகிய இருவரும் சிறு தீபப்பிரகாசம் போன்றவரென் றும் பன்முறை எடுத்துச் சொல்லுவார். நரேந்திரர் திருவவதரிக்கு முன்பு, குருதேவர் காசியிலிருந்து ஒரு சோதி கல்கத்தாவிற் பிரவே சித்தது கண்டு 'என்னப்பன் அவதரிக்கப் போகிறான்' என்றுரைத்து மகிழ்ந்தார்; ஒரு சமயம் சமாதியில் வீற்றிருக்கும்போது குருதேவர் ஒரு சிறு குழந்தை யுருக்கொண்டு, சோதியில் விளையாடி, நீல வண்ண காந்தியைக்கண்டு, அதன்பின் செந்நிறமுள்ள சோதியைத் தாண்டி, சூர்யமயமான அகண்ட சச்சிதானந்த சோதிமயத்திற் கலந்தார்; அப்பால் சப்தரிஷிகள் சமாதியில் வீற்றிருக்கு மிடத்தை யணுகி அவர்கள் சமாதியைக் கலைத்து, உரையாடி மீண்டார். அவ ரடைந்த சித்திகளில் ஆயிரத்திலொருபங்கு நரேந்திரரை யாட் கொண்டதெனில் அவருடைய மகிமையை நாமெங்ஙனம் விரிக்க வல்லோம்? நிற்க, இனி இச்சந்தர்ப்பத்திற்கேற்ப, ராமகிருஷ்ணரின் சித்திகளி லிரண்டொன்றை யியம்புவோம்.

அவர் சகல ஜீவராசிகளிடத்தும் இரக்கமுள்ளவர். பாபிகளைக் காணவே அவர் அதிகம் விரும்புவார். அனைவரிடத்தும் அவர் சம திருஷ்டி செலுத்துவது வழக்கம். பாபிகளைக் கைகொடுத் தயர்த் தவே அவர் விரும்புவார்; சண்டாளனையும் அவர் சகாவாகக்கொள் வார். பல ஸ்திரீ ரத்னங்களும் அவரிடம் பக்தி செலுத்தி வந்தனர்.

---

* பிஜாய் என்பது அவர் இயற்பெயர்.

அவர்களுள் ஒருமாது ஒருசமடம் அவரைக் காண வந்தபொழுது, அவளிடம் தூய்மை அதிகம் துலங்குவது கண்டு குருதேவர் அவளது சிரசை ஸ்பரிசித்தார். தொட்ட மாத்திரத்தில் அவள் சமாதியிலாழ்ந்து சில நாழிகைக்குப்பின் உணர்ச்சி பெற்றெழுந்து அவரதிணையடிகளில் வீழ்ந்து வணங்கினள். கோபாலர்-மா எனும் மற்றொரு பக்தையுண்டு. அவ்வம்மையார் துறவுபூண்டு கிருஷ்ணபக்தியே மேலிட்டவளாய் 'கோபாலா! கோபாலா!' வென்று கூறிக்கொண்டு, தக்ஷிணேஸ்வரத்தை யடைந்து பரமஹம்ஸரைக்கண்டு அவரையும் 'கோபாலா' வென்றழைக்க வாரம்பித்து, கங்கைக்கரையிலே சிலகாலந் தங்கி யிருந்தார். அப்புனிதையைக் குருதேவர் 'மா' (தாயே) என்றழைப்பர். அதுமுதலவளுக்கு கோபாலர்-மா என்ற பெயர் வழங்கலாயிற்று.

'கோபாலர்-மா' வென்னும் பக்தை

இதுவன்றி அவரை முகம்மதியகாஜிகள் பலர் வந்து தரிசித்து, தம் மதக்கோட்பாடுகளில் தமக்குள்ள ஐயப்பாடுகள் நீங்கப்பெற்று 'குர்ஆன்' கூறும் விஷயங்களின் பரம ரஹஸ்யங்களைக் கேட்டறிந்து போவர். மற்றும் கிரிஷ்பாபு அவரன்பானமை ஒரு ஆச்சரியமான விஷயம். கிரிஷ்பாபு ஜெகப்பிரிடரைப்போலப் (Shakespeare) பிரசித்தர்; லோகஞான முடையவர். அவர் ராமகிருஷ்ணரை முதல் முதலாகப் பார்த்ததும் 'இது ஒரு பைத்தியம்' என்று எண்ணினார். அப்பால், ஒருவித அன்பால் அவருக்குப் பக்தியேற்பட்டது. அவரொரு சமயம் குருதேவரைப் பார்த்து "குருதேவ! நான் எப்படி கிருதார்த்தனுவது?" என்று கேட்டார். அதற்கு குருநாதர் "நீ எனது பெயரை அனுதினமும் மும்முறை சொல்லி வா?" என்றார். பாபு "நான் மகாபாபி! என்னாலியலாதே" என்றார். ராமகிருஷ்ணர் 'போகட்டும்; இருமுறை நவில்வாயாக' என்றார். அதற்கும் அவர் 'எவ்வாறு செய்வேன்?' என்றார். குருதேவர் 'சரி ஒரு தடவையாகிலும் இயலுமா?' என்றார். பாபு 'அதுவும் சந்தேகமே' என, அவருடைய உண்மையான ஸ்திதியைக்கண்டு 'சரி! ஒன்று செய்! நீ எதற்கும் கவலைப் படவேண்டாம். உன்னுடைய பாவங்களையெல்லாம் எனக்கொப்பித்துவிட்டு, அமைதியாயிரு. இனி நீ போகலாம்' என்றார். ஒரு தடவைகூட 'ஸ்ரீராமகிருஷ்ண' வென்று ஸ்மரிக்க வியலாதென்றவர், அப்பால் அனுதினமும் பல்லாயிரந்தடவை குருதேவரது திவ்ய நாமத்தை ஸ்மரணைசெய்து, இறக்குந்தருவாயிலும், அவருடைய

கிரிஷ்பாபு அன்பரானமை

புனித நாமத்தைச் சொல்லிக்கொண்டே பிராணனைவிட்டார். குருமகராஜின் பெருமையை விளக்க இப்பக்தர் சரிதையொன்றும் சாட்சியாம்.

ஸ்ரீராமகிருஷ்ணரைத் தரிசிக்க வியாபகர்களான வைத்தியர்களும் நூலாசிரியர்களும், வக்கீல்களும், பாஷைநூற் புலவர்களும் சமயானுசாரிகளுமாகப் பலர் வருவதுண்டு. அவர்கள் அவரை வணங்கி, அவர் பாததூளியைச் சிரசின்மீது வகித்துச் செல்வார்கள். அவர்களுள் அந்தரங்க பக்தியுடையார் சிலர் அவரைப் பரீக்ஷிப்பதுமுண்டு. குருதேவர் சமாதியில் வீற்றிருக்குங்கால் ஓர் வைத்தியர் நாணயமொன்றை அவருடலிற் பொருந்துமாறு வைத்துப் பார்த்தார். அந்நாணயமானது குருதேவர்மீது பட்டமாத்திரத்தில் அவர் துள்ளிக்குதித்து விரைந்து எழுந்தார். இவற்றையெல்லாங்கண்ட நரேந்திருக்கு அளவிடவியலாத ஆச்சரிய முண்டாயிற்று; அவரே தெய்வமென ஆரவாரித்துத் தமது மனக்கோயிலில் அவரைப் பிரதிஷ்டை செய்தார்.

"ஆஹா! இம்மகானில்லையேல் நான் யார்? குப்பைக்குச் சமானமானவனல்லவோ? எத்தனையோ தனைதிகாரிகளும், மகா மேதாவிகளும் அவரடியணைந்து போகின்றனரன்றோ?" என்று நரேந்திரர் ஆச்சரியப்படுவார். ஒருசமயம் பரமஹம்ஸர் தம்மைக் காணவந்த ஓர் பெரும் நிலக்கிழவரை நோக்கி 'நீ யோர் மண்ணையுண்ணும் புழு; கேவலம் குடும்பி' என்றும், மற்றொரு பிரசித்தரைப்பார்த்து 'நீ குறுகிய புத்தியுள்ளவன்; தாழ்ந்த புத்தியே உன்னைப் பல குற்றங்களுக்கு அடிமையாக்கி விட்டது' என்றும் சொல்ல, அவர்கள் பலர்முன் தம்மைப் பரமஹம்ஸர் அவ்விதம் இகழ்ந்ததற்கு வெறுப்புக் கொள்ளாது 'ஆம்' என்று அவரடிசார்ந்து நிற்கும் நிலையை நரேந்திரர் கண்டு "ஆ! இப்பெரியாரின் பிரியனாக நாம் என்ன பாக்கியம் செய்தோமோ" என்று பெருமகிழ்ச்சி யடைந்தார். இதேபோல நரேந்திரரும் பிற்காலத்தில் ஒழுகி வருவாராயினர். இதை விளக்க கேஷத்ரி மகாராஜாவுடன் நடந்த உரையும், மைசூர் மன்னர் முன் நிகழ்ந்த சம்பாஷணையுமே சாலும். அவற்றை ஆங்காங்கே காண்க.

உள்ளதை
உள்ளவாறு
புகலுந்தன்மை

ஒருநாள் ஸ்ரீராமகிருஷ்ணர் நரேந்திரரை நோக்கி "ஏ! பிரிய! கவனி! சாதாரண மனிதர்கள் மகான்களைத் தூஷிப்பார்கள். ஆனால் அம்மகான்கள் அவற்றைப் பொருட்படுத்தாது, எவ்வாறு தன்னைப் பின்றொடர்ந்து குரைத்துக்கொண்டு வரும் நாய்களை யானையானது லட்சியம் செய்வதில்லையோ அதுபோன்றிருப்பார்கள். உன்னைச் சிலர்

பின்னால் தூஷிப்பார்களானால் நீ அவர்களை எப்படி நினைப்பாய்?" என்றார். நரேந்திரர் 'அவர்களைக் குறைக்கின்ற நாய்களென்றே எண்ணுவேன்' என்றார். உடனே பரமஹம்ஸர் விலாப் புடைக்க நகைத்து 'அல்ல. நீ அவ்வளவுதூரம் போகவேண்டாம். நீ அவர்களைப் பொருட்படுத்தாமல் அவர்க ளெல்லோரையும் நாராயண ரென்றே அபிமானிக்க வேண்டும். சர்வேஸ்வரன் எல்லாப் பிராணிகளிடத்தும் நிலவி வெவ்வேறு விதமாய் அவர்களை ஆட்டி வைக்கின்றான். ஒருவர்—'சந்நியாசி' நாராயணராக விருக்கலாம். மற்றொருவன் துஷ்ட நாராயணனாக விருப்பான்' எனப் பகர்ந்தார்.

தூஷணையும் பூஷணையும் ஒன்றே

பின்னொருநாள் மதசம்பந்தமான விஷயங்களைப்பற்றி நரேந்திரர் ஸ்ரீராமகிருஷ்ணருடன் வாதித்துக்கொண் டிருந்தார். அப்பொழுது துஷ்ட தேவதாராதனையை நரேந்திரர் கண்டனஞ் செய்து பேச, குருதேவர் 'பாலா! ஒவ்வொரு வீட்டிற்கும் பின் வாயிலுண்டு; ஏன் பொதுவாக எல்லோரும் அவ்வாயிலின் வழியே வீட்டிற்குள் செல்வதில்லை? முன் வாயில்தானே சிறந்ததாகக் கொள்ளப் படுகிறது? அவ் விஷயத்தை இங்கு பொருத்திப் பார்' என்று ஓர் சிறிய உபமானத்தைக் கொண்டு மகத்தான உண்மையை விளக்கி யருளினர். இதைக் கேட்டதும் 'எவ்வளவு பெரிய விஷயத்தை எத்துணை சிறிய உபமானத்தால் விளக்கினர் நமது குருநாதர்' என்று நரேந்திரர் உள்ளம் பூரித்தார். ராமகிருஷ்ணருக்கு உலக சம்பந்தமான விஷயங்களைப் பற்றிப் பேசுவதிலும், தமது சீடர்கள் சம்பாஷிக்கக் கேட்பதிலும் மிக்க வெறுப்பிருந்து வந்தது; "தாயே! இவர்களை என் முன் ஏன் வரச்செய்தாய்? பகவந்நாமத்தைத் தவிர வேறு எதையும் கேட்க என்னுள்ளம் பதறுகிறதே' என்பார். அவருடைய சக்தியின் திறத்தால் காளிதேவி அவருடன் நேருக்கு நேராகப் பேசுவாள். 'என்னுடைய சித்திகள் உண்மையே யானால், தாயே உனதருளால் இந்த பெருங்கல், தவளையைப்போலத் தாவட்டும்' என்பார்; அவ்விதம் அக்கல்லும் தத்திக் குதிக்கும். இப்படி யெல்லாம் தம்மைத் தாமே பரிசோதித்திடப்பட்ட பின்னரே அவர் 'நான் உபதேசிக்கிறவற்றையெல்லாம், நான் பிரத்யட்சமாகத் தரிசித்திருக்கிறேன்.' என்றியம்பினர். அவ்வழியை நரேந்திரருக்கும் கற்பித்தார். இதுவே அவர் புரிந்த மகத்தான சமயத்தொண்டிற்கு ஆதாரமானதாகும் இத்தகைய "குருமகராஜின் மகிமைகள்" நரேந்திரரை ஆனந்தமாக்கின.

துஷ்ட தேவதை ஆராதனை

15-ம் அத்தியாயம்.

சீர்பெற்ற சிஷ்யகோடிகள்

தவசிரேட்டரான ஸ்ரீராமகிருஷ்ணரை நரேந்திரநாதர் முதல் முதலாகச் சந்தித்ததிலிருந்து இதுவரை நான்காண்டுகளாயின. இதற்குள் நரேந்திரர் ராமகிருஷ்ணரிடம் பூரண சிஷ்யத்துவமடைந்து நிகரற்று விளங்கினர். 'நீர் கடவுளைப் பிரத்யட்சமாகத் தரிசித்ததுண்டா?' என்று கேட்ட அவர், 'நான் நிதரிசனமாகத் தரிசிக்கிறேன்' என்றியம்பும் நிலையை எய்திவிட்டார். அவர் எதுமுதல் பரமஹம்ஸரை குருவாக ஏற்றனரென்பதைக் காலப்பிரமாணமாக எடுத்துரைத்தலியலாது. அவர் மார்பினைக் குருதேவர் ஸ்பரிசித்த வமயமே நற்காலமாக அமைந்தது என்று கூறலாம். ஆனால் அவருடைய சங்கைகள் முழுவதும் நீங்கிய பின்னரே அவர் அம் மகானுபாவரின் நேரான சிஷ்யரானரெனலாம்.

நரேந்திரருக்கும் பரமஹம்ஸருக்கும் அறிமுக மேற்பட்டது முதல் அடிக்கடி அவர் தக்ஷிணேஸ்வரத்திற்கு வந்து கொண்டிருந்தார். முதல் இரண்டாண்டுகள் நீங்க, மூன்றுமாண்டு முழுவதும் அவர் முன்னிலும் அதிகமாகவே குருவின் சந்நிதானத்தை நாடுவாராயினர். நான்காவதாண்டிலோ இடைவிடாமல் ஸ்திரமாகவே உறுதியுடன் வந்துகொண்டிருந்தார். ஐந்தாவதும் கடைசியுமான அவ்வருஷம் முழுவதும் அநேகமாக அவர் தமது குருநாதரை விட்டுப் பிரியாமலேயிருந்தார். அவருடைய சிஷ்யத்துவத்தில் விசேடமான நிகழ்ச்சிகளும் இடையூறுகளுமில்லை. மௌனத்திலேயே சகல சித்திகளும் நரேந்திரருக்குக் கைவரப்பெற்றன. ஐந்தாமாண்டு அடியவர் நிலையில் ராமகிருஷ்ணரின் சித்திகள் யாவும் அவருக்குப் பிராப்தியாயின. நரேந்திரரை எவ்வளவுதூரம் பயில்விக்க வேண்டுமோ அத்துணை யோக, ஞானங்களை அப்யாசப்படுத்திவைத்தார் அம்மகாநுபாவர். அவருடைய சித்திகளான ஆஸ்திக்கு நரேந்திரநாதரே உரிய பாத்யஸ்தரானர். இங்ஙனம் இரண்டு மூன்று ஆண்டுகள்வரை குருதேவர் அவரை உடனிருந்து பழக்கிப் பக்குவப்படுத்தினர்; ஹிந்துமதத்தின் அடிப்படையான கொள்கைகளனைத்தையும் உணரவைத்தார். அவற்றை மேல்நாட்டுகளில் பிரசங்கிக்கும் வன்மையையும்

நரேந்திரரை குருதேவர் ஆயத்தப் படுத்தினமை

அவருக்குக் கடாக்ஷித்தருளினர். இக்காலத்திற்குள் நரேந்திருடைய அறிவும் உளமும் ஒருங்கே வளர்ந்துவந்தன. தத்துவஞானியான நரேந்திரர், சாதுவும் தீர்க்க தரிசியுமாக விளங்கினர் ; ஆழ்ந்த பலமான அஸ்திவாரத்தின்மேல் சமயத்தொண்டெனும் அறச்சாலையைக் கட்டினர் முதலில் 'மூளை கலங்கிய மனிதர்' என்றெண்ணிய அம்மகானுபாவரை பின்னர் நரேந்திரர் 'ஜெகத்ரக்ஷகர், ஜீவன்முக்தர்' என்று துதிக்க வாரம்பித்தார்.

ஸ்ரீராமகிருஷ்ணர் ஜோதிமயமாக உலகையே உயர்த்தத் தோன்றிய பேரொளி மயமானவர். அவருடைய அருட்பார்வையால் எத்தனையோ பாபிகள் பாக்யசாலிகளாயினர். எவ்வளவோ துன்மார்க்கர்கள் அவர் ஸ்பரிசமாத்திரத்தால் தூயோராகிவிட்டார்கள். அவர் காருண்யமே உருக்கொண்ட சீலர் ; புல்லிலும் புருடோத்தமனிருப்பதை அனுபவித்து அவர் பூக்கொய்யவும் துணியார் ; ஏழைகள் துயரைப்போக்க எழுவார். பிரபுவான மாதுர்பாபுவை யழைத்து 'அப்பனே ! அதோ போகின்ற அந்த தரித்திர நாராயணர்களுக்கு அன்ன வஸ்திரமளி' என்பார். அவருடைய திருவடி நீழலில் வீற்றதன் மகிமையால் நரேந்திரர் முதலில் தெய்வநம்பிக்கை வரப்பெற்றும், திருப்தியடையாதவராய் 'அரும்பொனே ! மணியே ! என்னன்பே' என்று பாடத்தொடங்கி, அப்பால் தம்மைக் குருதேவருக்கடிமைப்படுத்தி பலனெய்தினர். அவருக்கு சமாதிநிலை சகஜமாகவிருந்தது. தெய்வீகமான விஷயங்களைக் கேட்குந்தோறும், காணுந்தோறும் அவர் சமாதியாகிவிடுவார். அவருடன்கூட ராமகிருஷ்ணரின் சிஷ்யரா யிருந்தாரனைவரும், அவருக்கும் குருதேவருக்கும் சமமரியாதை காட்டி வந்தனர் ; பரமஹம்ஸரெனவே நரேந்திரரையும் பணிந்தார்கள்.

ஏழைகள் தரித்திரநாராயணர்கள்

பின்னர், காசிப்பூர் திருநந்தவனத்தில் சிவராத்திரி பூஜாகாலத்தில் நரேந்திரர் தமதன்பருடனிருக்குங்கால், குருதேவர் உண்மையாகத் தமக்கு யோகசித்திகளைப் புகட்டியுள்ளாரோ வென்பதைப் பரீக்ஷித்துணரும்பொருட்டு தம்மருகேயிருந்த ஓரன்பரின் மார்பைத் தொட்டுப் பார்த்தார். அக்கணமே அவ்வன்பர் சமாதியானமை கண்டு தாம் வாஸ்தவமாகப் பலனடைந்துவிட்டதாத எண்ணி மகிழ்ந்தார். இவ் விஷயத்தை அவ்வன்பர் சில நாட்களுக்குப்பின்

அபேதானந்தர்-நரேந்திரரின் போதனை

ராமகிருஷ்ணரிடம் தமது மார்பை நரேந்திரர் தொட்டதாகவும், அப்படி ஸ்பரிசித்த அளவில் ஏதோ ஓர் மின்சார சக்தியைப்போல அவரது கரத்தின் வழியாகத் தமதுள்ளத்தில் ஒருவித சக்தி சென்று தம்மைப் பரவசப்படுத்தி விட்டதென்றுங்கூற, பரமஹம்ஸர் தலையசைத்து, அப்பால் நரேந்திரரைக் தனியே யழைத்து "நீ யென்ன பிஞ்சிலே பழுக்க யத்தனிக்கின்றாய் ?" என்றியம்பித் தடுத்தார். அவ்வன்பர்தான் பிற்காலத்தில் வேதாந்த நிபுணராய் சுவாமி அபேதானந்த ரென்று பிரசித்தியடைந்தவர். இவ்விதம் புதையலைக் காப்பாற்றும் பூதத்தைப்போல நரேந்திரரைக் குருதேவர் காத்து வந்தார்.

இக்காலங்களில் குருதேவருக்கு 'கண்டமாலை' (பிளவை) யென்னும் வியாதி கழுத்தைச் சுற்றிப் பெருகி யிருந்தது. அந்நோயால் அவர் பெரிதும் வருந்தினார். நரேந்திரருடைய சிஷ்யத்துவத்தின் நான்காவதாண்டின் இறுதியில் கல்கத்தாவிற்குச் சமீபத்திலுள்ள காசிப்பூர் தோட்டத்திற்குச் சிகிச்சையின் பொருட்டு சிஷ்யர்கள் அவரை அழைத்துச் சென்றனர். அப்பொழுது ஒரு சீடர் 'சுவாமி ! தாம் யோகியாயிற்றே ! தமது யோகசித்தியால் ஏன் இந்நோயைப் போக்கிக்கொள்ளலாகாது ?' என, பரமஹம்ஸரும் 'அப்பனே ! என்னுடைய ஆன்மாவை நான் தேவியின் திருத்தாள்களில் அற்பணஞ் செய்துவிட்டேன். கேவலம் எலும்புக்கூடான அழியக்கூடிய இவ்வுடலை நான் ஏன் பொருட்படுத்த வேண்டும் ? எல்லா அபிமானங்களையும் ஒழித்த எனக்கெதற்கு தேகாபிமானம் ?' என விடை பகர்ந்தார். இக்காலத்தில் நரேந்திர் நிர்விகல்ப சமாதியை தமக்கு பிரசாதித்தருளும்படி குருதேவரை வேண்டிவந்தார். குருதேவர் இதற்கொன்றும் மறுமொழி கூறவில்லை. தமது அத்யந்த சிஷ்யனை மனப்பூர்வமாக வாழ்த்தி முன்னினும் பன்மடங்கு அன்பு காட்டினார். தமது சீடனின அபிலாஷையை நிறைவேற்றவுந் திருவுளங்கொண்டிருந்தார். அதற்கென நரேந்திரர் இன்னும் சிலவற்றை அப்பியசிக்க வேண்டு மென்பதுதான் அவர் கருத்து. அவையும் நரேந்திரருக்குக் கைவரப்பெற்றன. அப்பால் நிர்விகல்ப சமாதி அவருக்குச் சித்தித்தது. அதன்பின் குருதேவர் அதிககாலம் இவ்வுலகவாழ்விற் பொருந்தியிருக்கவில்லை. வெகு சீக்கிரத்தில் தீர்க்க சமாதியடைந்து பரப்பிரமத்தோடு ஐக்கியமானார்.

நிர்விகல்ப சமாதியை எய்துவிக்க நரேந்திரரின் கோரிக்கை

நிற்க, "பல மூர்த்திகளின் பெயரால் மனிதர் பித்தாக்கப் படு

கின்றனர். கொள்கைகள் அவர்களைப் பித்தாக்கிவிடுகின்றன. ஆனால் தெய்வமென்பது ஒன்றே. சமய கோடிகளெலாம் தம் தெய்வம் எம் தெய்வமென்று எங்குந் தொடர்ந் தெதிர்வழக்கிட நின்றது ஒன்றே. அது சகுணமும் நிற்குணமுமாகவுள்ளது. இவ்வுண்மையை யறிவதே மௌனம்; சமாதியெனப்படும் "கடாகாசம், மகாகாசம் ஏகமாவது போல் ஆன்மாவே பரப்பிரம்மமென்றும், பிம்பமே ஆன்மாவென்றும் ஐக்கியபாவம் கைவரப்பெற்று, ஆன்ம சொரூபியாகும் நீரே பரப்பிரம்மமென்று உறுதிபூண்டு, எண்ணங்கள் யாவற்றையும் விட்டு சிலாரூபத்தைப்போல அடங்கியிருப்பதே மோன மெனப்படும்." என்பது ஸ்ருதி. 'ஆன்மவடிவான நானே பிரம்மமென்னும் ஐக்கிய பாவத்தில் உறுதியாய் நின்று, எல்லா மனோவியாபாரங்களும் சூன்யமாய், எவ்வித எண்ணமுமற்று, கண்களுக்குப் புலனாகும் சகலப்பொருள்களையும் காண்பதால் வரும் எண்ணங்களையும் மறந்து, தானே தானாய்-பிரம்மமாய் சாக்ஷிமாத்திரனாயிருப்பதே சமாதி' என்பதும் ஸ்ருதி. இந்த சமாதிநிலையில் சகல மதங்களின் தீக்ஷண்யமும் ஒன்றென்பதைச் சீடர்கள் தரிசிக்க, குருதேவர் பேருதவி புரிந்தார். ஒரே கடவுளை யடையும் வெவ்வேறு மார்க்கங்களே சமயங்களென்பதை நரேந்திரர் அறிந்தார். கிரியாம்சமானவற்றையும், ஜெபதபங்களையும் சமயத்தையும் பிரித்துக்காட்டும் மகாசக்தியும் அவருக்குச் சித்தித்தது; ஹிந்துமதமெவ்வளவு உண்மையுள்ளதோ அத்தனை உண்மையுள்ளன மற்ற மதங்களுமென்பதை அவர் சாதிக்கவும் இயன்றது. பிரம்ம சமாஜத்தில் நரேந்திரர் சேர்ந்திருந்தபொழுது, மதம் அவருக்கு அப்பிரத்யக்ஷமானதாகக் காணப்பட்டது. அதனால் கடவுளைப் பிரத்யக்ஷமாகக் கண்டறிந்த மகானை அவர் தேடலுற்றார்; முயற்சியுடையார் இகழ்ச்சி யடையாராதலின் அவ்விதமே ராமகிருஷ்ணரிடங் கண்டு சுவானுபூதியில் அனுபவித்தார். அதுவே நிஜமான சமயமென்று தெளிந்தார். அபாரமான வேதாந்த சமய நூல்களைக் கற்பதில் அவருக்கிருந்த ஆசை அடியோடு போயிற்று. அரிய விஷயங்களெல்லாம் ஆசாரியரின் அனுக்கிரகத்தால் விளக்க மாவதைக்கண்டு 'வீண்வாசா ஞானத்தை' அவர் வெறுத்தார்.

சமயகோடிகள் தம்தெய்வம் எம்தெய்வம் என்பது ஒன்றே

காலக்கிரமத்தில் ஆன்மவளர்ச்சியால் குருதேவரைப்போலவே ஆகிவிடவேண்டுமென்று நரேந்திரநாதர் முயற்சித்தார். அதுவும் அவருக்குக் கைகூடிற்று. குருதேவரின் பாதாரவிந்தங்களினடியில் அமர்ந்து

அவர் வேதங்களையும் உபநிஷதங்களையும் உணரவாரம்பித்தார். 'ஆன்மா' தெய்வீகத்தை இடைவிடாமல் அனுபவிப்பதே மதம்' என்று அவர் சித்தாந்தப்படுத்தினார். ராமகிருஷ்ணரிடம் வேதாந்த விசாரம் செய்தமையால் அவருக்கு மதக்கொடுமைகளையெல்லாம் கண்டிக்கும் மனோவலிமை ஏற்பட்டது. ஜாதிபேதத்தை அவர் தீவிரமாகக் கண்டிக்கவும், 'ஒழுக்கத்தில் யாவும் வேண்டும், கற்றதன் கண் நிற்றல்வேண்டும், உண்மையை நாடி உழைக்கவேண்டும், பலனை எதிர்பார்க்கவே கூடாது, கடவுளைக்கண்டறியும் அதிவைதீக சமயத்தில் ஜாதியில்லை, பேதமில்லை, எல்லாம் அபேதம், நிஷ்களங்கம், பிரம்மமயம்' என்று பகரவும் அவற்றைச் சாதிக்கவும், அவர் முன் பிரத்யக்ஷ சைதன்யரும், நிதர்சன சங்கரரும், நூதனபுத்தருமாக விளங்கிய குருதேவரே காரணபூதராயிருந்தார்.

சர்வம் பிரம்ம மயம்

ஹிந்துமதத்தின் கொள்கை எவ்வளவு விசாலமானதோ அதற்குமேல் விசாலமானதா யிருந்தது அவருடைய புத்தி. அவர் குருதேவரை அவதார புருஷரென்று உறுதியாகப் பற்றிக்கொண்டார். மனிதனே தன் முயற்சியாலும் சித்தியாலும் தெய்வமாகி விடுவதை அவர் பிரத்யக்ஷமாகக் கண்டவராதலின் புத்தபகவானிடத்தில் அவருக்குப் பற்றதிகம். அவர் எல்லாப் பொருள்களிடத்திலும் பிரம்மத்தைத் தரிசித்தார்; 'ஒவ்வொரு ஆன்மாவும் ஈஸ்வரசக்கியமுள்ளது; இவ்வித ஈஸ்வர சொரூபம் ஆன்மாவிடத்தில் நிலைத்தல்தான் சமயவெற்றி' என்றியம்பினார்.

ஸ்ரீராமகிருஷ்ணரிடத்தில் சிஷ்யரா யிருந்தவர்கள் அநேகராயினும் அவர்களுள் முக்கியமாகச் சிலர் அவரையே முழுதும் நம்பியிருந்தனர். அவர்களைப் பரமஹம்ஸர் விசேஷமாக அழைத்து உபதேசித்து நரேந்திரரைப் புகழ்வதுபோலவே புகழ்வார். அவர்களிடம் நாராயணன் பிரசன்னமாக விளங்குகின்றானென்று குருதேவர் கூறுவது வழக்கம். அவர்களைத் தனியே விசேஷமான யோகப் பயிற்சிகளிலே பழக்குவிப்பதுண்டு. அவர்களும் அவரிடம் நிஷ்களங்க பக்தியுடன் ஒழுகி வந்தார்கள். இம் முக்கியஸ்தர்களையும், சாதாரண அன்பர்களையும், இல்லாச்சிரமிகள் சந்நியாசிகள் என இரண்டு பிரிவுகளாக அவரவர் நிலைக்கேற்பப் பிரிக்கலாம்.

முக்கிய பக்தர்கள்

சுமார் பதினெட்டு சிஷ்யர்கள்—வாலிபர்கள், மன பரிபக்குவப்பட்டவர்களாய்த் துறவறமேற்கும் நிலையை யெய்தியிருந்தனர். அவர்களினுதவியாலும் முயற்சியாலும் பிற்காலத்தில் ஸ்ரீராமகிருஷ்ண மடங்கள் இந்தியாவின் முக்கிய ஸ்தலங்களில் நிறுவப்பெற்றன. அவர்

கள் நரேந்திரரிடம் என்றும் மாறாத அன்பும் பக்தியும் மரியாதையு முடையவர்களா யிருந்தனர்.

இல்லாச்சிரமிகளில் இராமச்சந்திர தத்தர் என்பாரொருவர். அவர் ராமகிருஷ்ணரிடத்தில் அத்யந்த பக்தியுடையவர்; நரேந்திரின் நெருங்கிய உறவினர். இவர் தமது அந்தியகாலத்தில் துறவுபூண்டு, யதியாக வதிந்து கிரஹஸ்தாஸ்ரமத்தையும் விடாதிருந்தனர். ராமகிருஷ்ணர் முக்தியடைந்தவுடன் கல்கத்தாவிற்குச் சமீபத்தில் யோகோதயம் என்னுமிடத்தில் ஓர் ஆச்சிரமத்தை ஸ்தாபித்து ராமகிருஷ்ணரின் உபதேசங்களை பிரவசனம் பண்ணிவந்தார். சுரேந்திரநாத மித்ரா என்பவர் மற்றொருவர். இவர் ராமகிருஷ்ணரின் மகா சமாதிக்குப்பிறகு நரேந்திரரையும் மற்ற துறவுபூண்ட வாலிபர்களையும் ஆதரித்து பேரநாகூர் மடத்தையும் அமைத்துக் கொடுத்தார்.

சீடர்களில் இல்லாச்சிரமிகள்

நாக மஹாஷ்யர், பலராம் போஸ் ஆகிய இரண்டு மகாசாதுக்கள் இருந்தார்கள். நாகமஹாஷ்யர் நரேந்திரருக்கும் பரமஹம்ஸருக்கும் பாதசேவனம் பண்ணிய பாக்கியவான். நரேந்திரருடன் அவர் ஒருபொழுது தெய்வத்திருவருளைக் குறித்துத் தர்க்கித்துக்கொண்டிருக்கையில் நரேந்திரர் அவரைப்பார்த்து 'அவன் யார்? நானே தெய்வம்! நானே பரமாத்மன். நானே அனந்தன். நானே அவன், அவனே நான்' என்று கூறக்கேட்டு அவருடைய கம்பீர மொழிகளாலும், வதனத்தாலும் அடியாராகி அன்றுமுதல் அடிகூடிவந்தார். அவர் நரேந்திரரை சிவசொரூபமெனவும் அவனியிலுதித்தெழுந்த மகாபுருஷரெனவும் கருதி வந்தார். அவரும் அதீத துறவறத்திலீடுபட்டவர். அவரை மகாத்மாவென்றே சொல்லலாம். அவருடைய பெருமைமையை விளக்கும் விஷயங்களைப் பிரிதோரிடத்திற் கூறுவோம்.

பலராம்பாபு, கிரிஷ் சந்திர கோஷ்

பலராம் பாபு என்பவர் ஸ்ரீராமகிருஷ்ணரின் பரமபக்தசிகாமணிகளிலொருவர். அவருடைய கிருஹம் அடிக்கடி குருதேவரின் வருகையால் பரிமளித்திருந்தது. அவர் ஓர் ஜமீன்தார்; மகா தர்மிஷ்டர். ராமகிருஷ்ணர் அவரிடம் மிகுந்த அன்புகொண்டிருந்தார். பலராம் பாபுவின் இல்லத்தில் அடிக்கடி சிஷ்யர்கள்கூடிப் பல நாட்கள்வரையில் ஆத்மவிசாரஞ் செய்வார்கள். ராமகிருஷ்ணர் அவரில்லத்தில் சில சமயம் இரண்டு மூன்று நாட்கள்கூடத் தங்கிவிடுவதுண்டு. இப்பொழுதும் கல்கத்தா 'பாக் பஜாரி'லுள்ள அவருடைய கிருகத்

தின் ஓர்பகுதி ராமகிருஷ்ணமடத்திய சிஷ்யர்களுக்காக பிரத்யேகமாக அளிக்கப்பட்டிருக்கிறது. பூரியில் இப்பலராம்பாபுவின் குமாரருடைய இல்லமும் ராமகிருஷ்ணமடமாகத் திகழ்கின்றது. அதிகம் சொல்லுவானேன். அவருடைய சந்ததியார்கள் அனைவரும் ராமகிருஷ்ண பக்தராயுள்ளார்கள். கிரிஷ் சந்திரகோஷ் அவர்களைப் பற்றி முன்பே சிறிது கூறியுள்ளோம். ஏனைய அன்பர்களைவிட நூறுமடங்கு மனபரிபக்குவமடைந்தவரென்று அவர் பரமஹம்ஸரால் அபிமானிக்கப்பட்டார். அவர் ஓர் நிபுண நாடக வியலாசிரியர். அவர் சுமார் எண்பது நாடகங்களை வடமொழியில் இயற்றியுள்ளார். ஹிந்துமதக் கிரந்தங்களைத் தீர விசாரம் செய்தவரென்றும் அவர் புகழப்படுபவர். அப்பால், மாதுர் பாபு என்பவர் ராமகிருஷ்ணரின் மற்றொரு சீடர். அவர் ராணி ரஸா மணி யம்மையின் மருகர். அவரே முதல் கிருஹஸ்தாஸ்ரம பக்தர். செல்வத்தில மட்டுமன்றி, மனபரிபக்குவத்திலும் அவர் ஓர் இளவரசராக விளங்கினர். கலிபாதகோஷ் என்பவர் மற்றொரு பக்தர். சிவபெருமானுடைய அருள்வாய்ந்தவர்களெனக் குருதேவரால் போற்றப் பெற்ற மூவருள் இவரும் ஒருவர். சுரேஷ்பாபு, கிரிஷ்பாபு, என்பார் அம்மூவரில் மற்ற இருவர். அவர்கள் உடலிலும் புத்தியிலும், பலாட்டியர்கள். அவர்கள் மதுபானத்திற் கடிமையாயிருந்து, ஒருகால் பரமஹம்ஸரை வந்தடைந்து, நரேந்திரரைப்போலவே வாதம்புரிந்து பின் பக்தர்களானார்கள்.

மோகேந்திரநாத் குப்தா என்பவர் ஸ்ரீராமகிருஷ்ணரின் மகா உபதேசங்களை வங்க பாஷையிலும் ஆங்கிலத்திலும் வரைந்து தமது சேவையைப் புரிந்த ஓரன்பர். அவருடைய அடக்கமும் அறிவும் அவரை அந்நூலில் தமது பெயரை யிட்டுக்கொள்ளா திருக்கச் செய்தன. அந்நூலில் அவர் ராமகிருஷ்ணரின் அடியார்களி லொருவரான 'மோ' என்று அபிதான மிட்டுள்ளார். இப்பெருந்தகை ராமகிருஷ்ணரின் பெயரால் 'நவீன கலாசாலை யொன்றைத் தமது நேர் பார்வையில் நடைபெறச் செய்ததுமன்றி, ராமகிருஷ்ணரின் உபதேசப்படி சிறிதும் வழுவிலாது ஒழுகியவர்.

மோகேந்திரநாத் குப்தாவும் ஏனைய அன்பர்களும்

மற்றும், மனமோகன், கேதாரி, சுளி, கிஷோரி, தேவேந்திரர், அக்ஷயா, நபூகோபால், அதுல், நாபா சைதன்யா, மோகேந்திர முகர்ஜி, பீபின், நித்ய கோபால், கோஷ்வாமி, ஆத்தர் வைகுந்த சன்யால், யுபேந்திரர், ஹரமோகன் முதலியவர்களும் ராமகிருஷ்ணரின் முக்கிய இல்லாசிரமிக

பக்தர்களாவர். இவர்களை நரேந்திரநாதர் தமது அந்தியகாலம் வரையில் ஒரேவிதமாக அபிமானித்து வந்தார். தமது குருநாதரின் அடியவரெனு மன்பினுல் அவர்களிடத்தில் அவருக்குத் தனிப்பட்ட பற்றேற்பட்டிருந்தது.

கிருஹஸ்தரானவர்களும் ஏற்கனவே இல்லாஸ்ரமிகளா யிருந்தவர்களுமாகச் சிலருண்டு. அவர்களிள் பூரணசந்திரகோஷ் அவர்கள் குருதேவரின் அன்பிற்குரிய அடியவரா யிருந்தார். நரேந்திரருக்கு அடுத்த படியிலுள்ளவ ரென்று குருதேவர் இவரைக் கூறுவது வழக்கம். இன்னும் சோடா நாராயணன் (Chota Narayan) என்று குருதேவரால் செல்வப் பேரிடப்பெற்ற நரேந்திரநாத் மித்ரரையும், பெல்கோயா தாரகர், பாவநாதர், பிரேமநாதர், நாராயணன், நித்ய கோபால் முதலானவர்களையும் ஈண்டு குறிப்பிடலாம்.

ஸ்ரீராமகிருஷ்ணரின் அன்பர் குழாத்தை ஓர் சங்கிலித்தொடருக்கு ஒப்பிடலாம். நரேந்திரரே அதன் பிரதம வளையமாவர். ஏனையோர் பின்னே யிணைக்கப்பெற்ற வளையங்கள். அவர்கள் அதிபால்யர்களாயிருந்தனர். கோபால்தா என்ற ஒருவர்மட்டும் அவர்களுள் சற்று முதியவர். ரஹால் என்று ராமகிருஷ்ணரால் அதிகம் கொண்டாடப்பெற்றவர் பிற்காலத்தில் துறவறம்பூண்டு சுவாமி பிரம்மானந்தா என்று விளங்கியவர். இவரே ராமகிருஷ்ணரின் சந்நியாச மடத்தின் அதிபதி. பாபுராம் என்பவர் மற்ருெருவர். அவர் பிரேமானந்த ரென்ற தீக்ஷாநாமம் பூண்டார். யோகின் என்பார் சுவாமி யோகானந்த ராஞர். நித்யநிரஞ்சன் என்பவர் சுவாமி நிரஞ்ஜனுநந்தர் என சந்நியாச நாமங் கொண்டார். சாரதா என்பவர் சுவாமி சாரதானந்தர் என்று தீக்ஷைநாமம்பூண்டு அமரிக்காவில் அரிய சமயத்தொண்டியற்றுவாராயினர். அவரே ஸ்ரீராமகிருஷ்ணமடத்தின் காரியதரிசியாயிருந்தவர். சோஷியென்ற பரமபக்தர், குருதேவர் நோயுற்று வருந்தியபொழுது அவரைப் பிரியாதிருந்து, அவர் சீர்பரவுவதிலும், அவரை தியானிப்பதிலும், ஜயவீர ஹனுமானைப்போத்து விளங்கி, சுவாமி ஸ்ரீராமகிருஷ்ணனந்தர் எனுந் திருப்பெயர் பூண்டார். அவரே சென்னை ராமகிருஷ்ண மடத்தை ஸ்தாபித்தவர். ஹரி என்ற மற்ருெருவர் சுவாமி துரியானந்தர் என்று பெயர்பூண்டு அமரிக்காவில் சமயத்தொண்டு செய்தார். கோபால்-தாவென்ற வயோதிகர் சுவாமி அத்வைதானந்த ரென்று தீக்ஷாநாமம் வகித்து விளங்கினூர். கலி யென்ற ஓரன்பர் சுவாமி அபேதானந்தர்

சந்நியாச மேற்ற சீடர்கள்

என்ற பெயரேற்று அமெரிக்காவில் வேதாந்த சங்க ஸ்தாபனஞ் செய்து சிறந்தார். தாரக் என்பார் சுவாமி சிவானந்தராகி, காசி ஸ்ரீராமகிருஷ்ண மடாதிபதியாயினர். கங்காதரர் என்பார் சுவாமி அகண்டானந்தர் என்ற தீக்ஷைப்பெயரேற்று மூர்ஷிதாபாத்தில் அநாதைப் பிள்ளைகளுக்கு அன்னமளித்து அறிவூட்டுங் கழகத்தையும், கைத்தொழிற்சாலை யொன்றையும் நிறுவினர். சாரதா என்ற பிரதம சிடர் திரிகுணாதீதர் என்ற திருப்பெயருடன் அமெரிக்காநாட்டில் முதல் ஹிந்து ஆலயத்தைக்கட்டி மகாபிஷேகஞ் செய்தார். லடு என்பவர் அத்புதானந்த ரென்று பெயர் பூண்டு மதசேவை இயற்றினர். துளஸீ என்பார் நிர்மலானந்தரென்ற திருப்பெயருடன் பெங்களூர் ராமகிருஷ்ணமடத்தின் நிர்வாகியானார்; அமெரிக்காவிலும் அரியசேவை செய்தார். சுபோதர் என்பவரும் சுபோதானந்தராகி மதசேவை செய்தார். ஆக இவர்கள் ஸ்ரீராமகிருஷ்ணரின் பிரதம சந்நியாச சிஷ்யர்களாவார்கள்.

ஸ்ரீசாரதாமணி தேவியின் பக்தி

இவர்களனைவரையும் விடச் சிறந்த பக்தியுடையாள் ராமகிருஷ்ணர் தொட்டு தாலிகட்டிய அளவில் அவருடைய மனைவி யென்று கருதப்பட்ட பக்தையான ஸ்ரீசாரதாமணிதேவி. அவ்வம்மை தாம் மனைவி யென்பதை அறவே மறந்து, ஆசாரிய ஸ்தானத்தில் ராமகிருஷ்ணரை வழிபட்டு வந்தாள். ராமகிருஷ்ணரும் அவரைத் தாயெனப் போற்றி அவ்வன்னையைக் காளிதேவியாக தரிசித்து வந்தார். இருவரும் ஒருவரையொருவர் நிராகரிக்கவில்லை. அவ்வம்மை தக்ஷிணேஸ்வரத்தில் ராமகிருஷ்ணரின் பக்தைகளோ டிருந்து வந்தாள். ஸ்ரீராமகிருஷ்ணருக்கும் அவ்வம்மைக்கு முள்ள பாவத்தில் சிறிது ஐயப்பாடுண்டாக, ஓரன்பர் பரிசோதிக்க நினைத்து ஒருநாள் நள்ளிரவில் கவனிக்கலாயினர். அப்பொழுது குருதேவர் சாரதாமணிதேவியை 'தாயே! தேவியே!' என்று நிஷ்களங்க மனத்தராய் அழைப்பது கண்டு வெட்கிப்போனர். அப்பால் அவர் சில நாட்கள் வரையில் தக்ஷிணேஸ்வரத்திற்கு வரவில்லை. இவையனைத்தையும் உணர்ந்த முக்கால ஞானியாகிய குருதேவர் அவ்வன்பரை யழைப்பித்து "அன்ப! நீயே பரிசுத்தன். என்னைப் பரிசோதித்து அறியும்வரை நீ என்னை எப்படி நம்புதல்கூடும்? இனி, உனக்கு என்னிடம் ஸ்திரபக்தி யேற்படுமன்றோ?" என்றிசைக்கக்கேட்டு, அதுமுதல் அவ்வன்பர் மாறாத பக்தி சிரத்தையுடன் ஒழுகிவந்தார்.

குருதேவர் சாரதாதேவிக்கும் உபதேசம் செய்வார். அங்கு கூடும் பக்தகோடிகள் தேவியைத் தாயென்று கொண்டாடினார்கள். அவ்வம்மை குருதேவர் கற்பிக்கும் உண்மைகளை அனுபவத்திற்குக் கொண்டுவரும்படி அடிக்கடி அவ் வன்பர்களைத் தூண்டுவது பழக்கம். குருதேவர் கட்டளைக்கிணங்கி சாரதாமணி தேவியிடம் சிஷ்யர்களில் பலர் காஷாய மேற்றூர்கள். எவராயினுஞ்சரி, அப் புனிதையின் மனதைச் சற்றும் புண்படுத்த ஸ்ரீராம கிருஷ்ணர் இடங்கொடார். ஒரு சமயம் ராமகிருஷ்ணர் சாரதா மணிதேவியை ஏதோ ஒரு காரணம் பற்றிக் கடிந்துகொள்ள, அவ்வம்மை கண்ணீர்ததும்ப அவ்விடம் விட்டகலுகையில், அவர் 'ஐயோ என்தாயைத் துன்புறுத்தி விட்டேனே! என்ன செய்வேன் பாலா! சிலா! நீங்கள் அவள் பாதங்களைப்பிடித்து மன்றாடி அழையுங்கள்' என்று பரிந்து கூறினர்.

சாரதாதேவி தாயாக விளங்கினமை

ஸ்ரீராமகிருஷ்ணரின் இவ்வித அரியகுணாதிசயங்கள் அவருடைய சிஷ்யகோடிகளிடத்தில் பெரிதும் காணப்பட்டன. சாரதாமணி தேவியைக்கொண்டே ஆன்மவளர்ச்சியடைந்த அன்பர்களும் அநேகர். மென்மை, இனிமை, தூய்மை, உண்மை, தெய்வபக்தி, சமயஉறுதி முதலியவற்றை ராமகிருஷ்ணர் தமது சீடர்களிடத்தே கொழுந்துவிட்டெரிய உபதேசித்தாராயினும், அவற்றினின்றும் அவரது தீர்க்க சமாதிக்கு முன்னும் பின்னும் மாறுபடாது நிற்க, அவர்களைக் காப்பாற்றி போஷித்து வந்தவள் சாரதாமணி தேவியேயாவள். மானுஷீகம் அவ் வன்பர்கள் கூட்டத்தில் தெய்வீகமாகவே விளங்கிற்று. பேரின்பமே சிற்றின்பத்தின் ஸ்தானத்தை யெய்தியிருந்தது. பூஜிதையான அவ் வம்மை எல்லா சிஷ்யர்களையும் புத்திர வாஞ்சையுடன், அவர்களுக்குத் துன்பம்வந்தால் தாம் துக்கிப்பதும். இன்பம்வரின் மகிழ்வதுமாகவே யிருந்தாள். நரேந்திரநாதர் சாரதாமணிதேவியை அனுதினமும் வணங்கி அவள் விருப்பப்படி நடந்து வருவார். 'அன்னை களித்தால் அகிலம் களிக்கும்' என்பது அவர் கொள்கை. இதைப்பின்னர், பல விடங்களிலவர் மெய்ப்பித்திருக்கிறர். அவற்றை ஆங்காங்கு காண்போம். ஸ்திரீ சமூகத்தையே தாயமாகக்கொள்ளும் ஆற்றல் நரேந்திருக்கு அவ்வம்மையின் பேரருளாலேயே பிராப்தமாயிற்று.

அன்னையின் ஆதரணை.

நரேந்திரநாதருடைய அறிவும் ஆற்றலும் வளர வளர, ராமகிருஷ்ணருடைய தேகநிலை தளர்ந்துகொண்டே வரலாயிற்று. ஆனால்

குருதேவரின் மகா சித்திகள் மட்டும் முன்னிலும் பன்மடங்கு பிரகாசமாக இருந்தன. அவரை சிஷ்யர்கள் மிக்க பயபக்தியுடன் பொக்கிஷம்போல் பாதுகாத்துத் தங்கள் குலதெய்வமென்று கொண்டாடினார்கள். அவருடைய உடலைப்பற்றிய உபாதிமட்டும் தணிந்தபாடில்லை. பல வைத்தியர்கள் கூடி அவருக்குச் சிகிச்சை செய்து வந்தனர். அவர்கள் பன்முறை குருதேவரை மௌனமா யிருக்கும்படி வேண்டியும் அதன்படி அவர் நடக்கவில்லை. 'என்னைச்சுற்றிக் காத்துக்கொண்டிருக்கும் என்னருமைக் குழந்தைகளுக்கு நான் எவ்வாறு உபதேசியாமலிருப்பேன்?' என்று அவர் மென்மேலும் உபதேசித்தவண்ண மிருந்தார். தாம் நிர்வாண நிலையை யடையுந் தருவாயில் ஏதோ ஓர்வித சகிக்கவியலாத வலியால் துன்பப்பட்டும், தம்மை வந்தடுத்த சீடனுக்கு நயம்பட உபதேசித்தருளிய புத்தபகவானைப்போல அவரிலங்கினார். அவரது தேகநிலை கவலைக்கிடமானதா யுள்ளதென்றும், சில வார்த்தைகள் பேசினாலும் அபாயம் சம்பவிக்கலாமென்றும் வைத்தியர்கள் கூறியதையும் அவர் பொருட்படுத்தவில்லை. நாளுக்குநாள் அவருடல் பலங்குன்றி வந்தது. அவர்தேகம் எலும்புக்கூடாயிருந்தது.

குருதேவரின் தேகோபாதி

சோஷி யென்னும் அடியார் (ஸ்ரீராமகிருஷ்ணானந்தர்) குருதேவருக்குக் குன்றாத்துணையாயிருந்து சிஷ்ருஷை செய்து வருவாராயினர். ஏனையோரும் அவரைப் பிரியாதிருந்து தொண்டுசெய்து வந்தனர். நரேந்திரரைத் தலைவராகக்கொண்ட சில சீடர்களும் ராமகிருஷ்ணரும் தனியே யிருந்தனர். நரேந்திரா தூண்டுதற்கேற்ப ஏனைய அன்பர்களும் குருதேவருக்குப் போதிய உதவிசெய்ய அங்கேயே தங்கியிருந்தார்கள். மகா நிபுணர்களான வைத்தியர்கள் பலரும் எவ்வளவோ முயன்றும், எத்துணையோ விலையுயர்ந்த மருந்துகளை உபயோகித்தும் ராமகிருஷ்ணர் அடைந்துள்ள நோயைப் போக்குவது அசாத்தியமென்று தீர்மானித்து விட்டார்கள். ஆயினும் அவர்கள் பக்தியுடன் குருதேவருக்கு மருந்து கொடுத்துக்கொண்டும் சிகிச்சை செய்து கொண்டு மிருந்தனர்.

இக்காலங்களில் இல்லாசிரமிகளான சீடர்கள் அடிக்கடி வருவதும், மதசம்பந்தமான விஷயங்களைக்குறித்து உபதேசம் பெறுவதுமாக விருந்தார்கள். சில சமயங்களில் அங்கு அபரிமிதமாக கானமும் நடைபெறுவதுண்டு. இக்காலத்தில் அம்மகானுபாவர் சில யௌவன பக்தர்களுக்குக் காவியளித்து தீக்ஷையருளினார். நரேந்திரரும் அப்

பொழுதே காவி யேற்றுக்கொண்டார். அவர் நரேந்திரரையும் ஏனைய சில அன்பர்களையும் தமதருகே யழைத்து அவர்களை "நீங்கள் கையிற் கப்பரையேந்தி பிச்சை யெடுத்துண்ணப் பிரியங்கொள்கிறீர்களோ?" என்று வினவினர். அவர்கள் அக்கணமே குதூஹலத்துடன் அமுத முண்ட அமரரெனக் குதித்தெழுந்தனர். உடனே ஒரு பாத்திரத்தை யெடுத்துக்கொண்டு சென்று கொஞ்சம் அரிசி முத லியவற்றைப் பிச்சையெடுத்து வந்தனர். அவற் றைப் பாகஞ்செய்து ஈஸ்வரார்ப்பணமாக்கிப் பின் குருதேவரை உண்பித்தார்கள். ஆங்கிலங் கற் றறிந்த உயர்ந்த குலமும் சீலமுமுடைய செல்வக்குமாரர்கள் புத்தபக வானைப்போலத் துறந்து, தரித்திரத்தின் நிலையை யுணர்த்துவதும் துற வைப் புலப்படுத்துவதுமான காவியாடையைச் சிறிதும் தயங்காமல் ஏற்று, தரித்ததுகண்டு குருதேவர் கொண்டாடினர். இதுவன்றோ உண்மையான துறவு? சிலர் பஞ்சத்திற்காண்டி யாகின்றனர். பலர் சோம்பேறித்தனத்தாலும், உலகினரை ஏமாற்றும் நோக்கத்தாலும் சந்நியாசியாகக் காவிதரிக்கின்றனர். இவர்கள் ஒரு சிலரால் சந்நியாச நிலைக்கே ஒருவித தாழ்ந்த அபிப்பிராயங்கொள்ளப்படுகின்றது. ராம கிருஷ்ணர் ஓர் தூயதுறவியாதலின், அவரது தூய்மையில் எள்ளளவும் குறைவுபடாது, சகல நூல்களையுங் கற்றறிந்த சந்நியாசிகளாய் விளங் கினர் அவரைப் பின்பற்றிய புண்ணிய சீலர்கள்.

நரேந்திரர் காஷாயம் பூண்டமை

ஸ்ரீராமகிருஷ்ணருடைய ஆயுளின் கடைசிக்காலத்தில் அவ ருடைய சிஷ்யர்களனைவரும் துறவறத்திலும் யோகசாதனங்களிலும் பெருமுயற்சி செய்துவந்தனர்; குருதேவருடைய தேகநிலை சற்று திருப்திகரமானதாயிருக்கும்போது அவர்கள் மகிழ்வதும், கவலைக் கிட மானதாயிருப்பின் உள்ளங் கலங்குவதுமாயிருப்பர். 'ஐயோ தெய் வமே! எனது குருநாதர் நோயாற்படும் வாதனையைப்போக்க எனக் கொரு சஞ்சீவியை அருளாயோ?' என்று புலம்புவார் நரேந்திரர். ஒருநாள் அவர் தமது குருதேவரின் நோயைப் போக்கவேண்டுமென்ற தாபத்தால் காசிப்பூர் நந்தவனத்தில் ராமகிருஷ் ணர் எழுந்தருளியிருந்த ஆச்சிரமத்தைச் சுற்றிச் சுற்றி வந்தார்; 'ராமா! ராமா!' என்று வெதும் பிக் கண்கலங்கிக் கதறினர். அன்று பகல் முழு வதும் இவ்வாறு கழிந்தது. ஆனல் நரேந்திரர் தமது கூக்குரலை நிறுத்தவில்லை. இரவு முழுதும் அவர் அவ்வாறே

குருவின் நோயைப்போக்க நரேந்திரரின் முயற்சி

'ராமா' ராமா' வென்று உரக்க பிரலாபித்துக் கொண்டிருந்தார். அப்பொழுது பரமஹம்ஸர் அவரைத் தம் முன் அழைப்பித்து 'அப்பா! ஏன் வீணே கதறுகின்றனை; இவ்விதம் பன்னிரண்டாண்டுகளை நான் கழித்தவன். அவை மாயமாகப் போயின. ஒரு இரவுக்குள் நீ என்ன சாதித்து விடப்போகிறாய்?' என்று இயம்பித் தேற்றினார்.

காசிப்பூர் நந்தவனம் ஓராலயமாகவும் சர்வ கலாசாலையாகவும் பரிமளித்தது. வித்வான்கள் பலரங்கு கூடுவதும், இடைவிடாது வேதாந்தவிசாரஞ் செய்வதுமா யிருந்தார்கள். ஸ்மரணமும் கீதமும் செவிக்கின்பமளிக்கும். இடையிடையே நரேந்திரர் குருதேவரை யணுகி 'ஐயனே! என்மனக்கவலை நீங்கவும், புத்தி சலனமற்றிருக்கவும் மருந்தொன்றருள வேண்டும்' என மன்றாடுவார். குருதேவரும் அவ்வப்பொழுது தக்க உபாயங்களைப் புகட்டி அவரைத் தேற்றுவார்; நரேந்திரரின் மதுரகானத்தைக்கேட்டு மலர்க்கண்களினின்றும் மாரி போற் சொரிவர் ஆனந்தக் கண்ணீரை. இங்ஙனமிருக்கையில் ஒருசமயம் ஆனந்த மேலீட்டால் குருதேவர் நரேந்திரரைப்பார்த்து 'அப்பா! எல்லோரும் என்னைத் தெய்வமென்று சொல்லுகிறார்களே' என, நரேந்திரர் 'ஐயனே! ஆயிரம்பேர் ஆயிரம் சொல்லுவார்கள். அதைத் தாம் பொருட்படுத்தவேண்டாம். நான் அதை உண்மையில் அறிந்தாலன்றித் தங்களை முகஸ்துதி செய்யேன்' என்றார். அவரைத்தழுவி மகிழ்ந்தார் குருதேவர். அப்பால், அவர் நரேந்திரரை நோக்கி 'என்பிரிய! எனக்குத் தெய்வம் வேண்டாம். நான் நித்யானந்தத்தை யடையின் அதுவே எனக்குப் போதுமானது. சத்தியம் ஞானம் ஆனந்தம் இம்மூன்றுமே யானடைய விரும்பும் பொருள்கள்' என்றியம்பினார்.

நரேந்திரர் குருதேவருடன் மன்றாடுதல்

உபதேசங்களுக்கிடையில் ராமகிருஷ்ணர் தமது தீர்க்க சமாதி விரைவில் நேருமென்பதைத் தமதடியார்களுக்குக் குறிப்பாக உணர்த்தி வந்தார். அதுகேட்டு அவர்கள் ஆருத்துயரக் கடலிலாழ்ந்தனர். ஒருநாள் நரேந்திரர் தமது குருதேவர் தமக்குக் கோபிநாதனைக் காண்பிப்பதாக அழைத்துச் சென்றதாகவும், தாமவரைப் பின்றொடர்ந்து கொஞ்சதூரஞ்செல்ல, அவர் திரும்பித் தாமே ராதையாக மாறிக் காட்சி தந்ததாகவும், அக்காட்சியைக்கண்ட அவர் பிரம்மானந்தப் பொய்கையிலே விளையாடியதாகவும் கனவுகண்டார். இதை அவர் தமது சகாக்களிடமுரைத்து இன்புற்றார். ராமகிருஷ்ணரின் பாதார

விந்தங்களினடியில் பக்திசெலுத்தும் பாக்கியம் பெற்ற சீடர்களனை வரும், குருதேவருக் கடுத்தபடியாக நரேந்திரரையே போற்றி வந்தார்கள். இவ்வன்பு வளர்ந்து அவரைக் குருதேவராகவே பாவிக்கும் நிலையை யெய்த வைத்தது. இதற்குப் பரமஹம்ஸரே காரணராவர்.

நரேந்திரரே சீடர்களின் தலைவர்

அவர் தம்மை யாராவது சந்தேகங் கேட்கவரின் அவர்களை நரேந்திரரிட மனுப்புவதும், அவர்கள் முன் நரேந்திரரை அதிக அபிமானத்துடன் புகழ்வதும், அவரை எப்பொழுதும் சிலாகித்துப் பேசுவதுமாக விருந்தமையால் ஏனைய அன்பர்களுக்கு நரேந்திரரிடம் நிஷ்களங்க பக்தி நிலவியது. நரேந்திரர், சிஷ்யர்கள் கூடித் தர்க்கிக்கும்பொழுது தோல்வியடைய விருக்கும் கக்ஷியைச்சார்ந்து வெற்றி பெற வைப்பதும், வெற்றியடைய நெருங்கட்சியைத் தோற்கடிப்பதுமாகத் தமது சகாக்களின் அறிவு வளர்ச்சிக்கு ஆதாரமாய் விளங்கினர். அவர்களுக்கு அத்வைத மதத்தின் அடிப்படையான கொள்கைகளைப் புகட்டி வந்தார். ஆதலின் ராமகிருஷ்ணரிடத்து நரேந்திரரையும், நரேந்திரரிடம் ராமகிருஷ்ணரையும் சிஷ்யகோடிகள் தரிசிக்கலாயினர்; அதனால், அவர்கள் 'சீர்பெற்ற சிஷ்யகோடிகள்' ஆனார்கள்.

16-ம் அத்தியாயம்.

குருதேவரின் மகாசமாதி

நரேந்திரநாத தத்தர் குருதேவரின் அனுக்கிரகத்தால் பரிபூர்ண ஞானியாகிவிட்டார். அவரைப்பற்றித் தமக்கு எவ்வித கவலையுமில்லையென்று ராமகிருஷ்ணரும் புகன்று ஏனைய பக்தர்களுக்கு அவரைத் தலைவராக நியமித்துவிட்டார். இவ்விதம் சத்சங்கமென்பது ராமகிருஷ்ணரின் சன்னிதானமாகவே யிருந்தது. அவருடைய பாதநிழலில் நரேந்திரர் தலையிட்டசீடர்கள் ஹிந்துமதத்தின் மகோந்நதமான பெருமைகளனைத்தையும் அத்யயன பூர்வமாய் விசாரம் செய்தார்கள். நாட்கள்கழிய, சமயத்தின் வெற்றியும் மனித வாழ்வின் எல்லையும், பரமானுள்ளமும் பற்றுமாறு வெகு சுலபமாக உணர்த்தப்பட்டு வந்தன. ஹிந்துமகா சமயத்தின் பெருமையை விளங்கவைத்த மகா உத்தமர்களுடைய சரித்திரங்கள் இடையிடையே கூறப்பெற்றன. வெற்றிவாகை சூடிய ஸ்ரீராமன் தோள்வலியைப் பாடுவதும் கண்ண

னது கழலின் பெருமையினை பாடிச் சூடுவதும், சங்கரன் புகன்ற சமயக் கோடரி கொண்டு சங்கைகளைக் கொய்யும் சமத்காரத்தை வளர்ப்பதும், ஸ்ரீ கிருஷ்ண சைதன்யரின் பத்தியினது பெருமை, கபீர், ராமப்பிரசாதர் முதலிய அடியார்களது திருத்தொண்டின் திறம் முதலியவற்றைச் சிந்திப்பதும், குருநாமக்கைக் கொண்டாடுவதுமாகக் குருதேவரின் திவ்ய சந்நிதியில் சத்காலக்ஷேபம் நடைபெற்று வந்தது. காவ்யவீரர்களான யுதிஷ்டிரர், அர்ஜுனன், பீஷ்மர், இராவணன், மகாவீர ஹனுமான் முதலான பரம பாகவதோத்தமர்களின் பெருமை ஆங்காங் குணர்த்தப்பெறும். ராமகிருஷ்ணரைச்சுற்றி அன்பர்கள் அமர்ந்திருப்பார்கள். ஓரன்பர் ஒரு சரிதையைக் கூறத்தொடங்கி விஸ்தரிப்பார். இடையிடையே குருதேவர் சிற்சில விஷயங்களை விளக்குவார்.

குருதேவரின் மகா சந்நிதானம்

நிற்க, குருதேவரின் தேகஸ்திதி நாளுக்குநாள் குறைந்து கொண்டே வந்தது. சீடர்கள் உள்ளம் கலங்கினர்; 'சுவானுபூதி' என்ற கிரந்தம் மூடப்பட்டுவிடுமோ?' என்று அஞ்சினர். இதனால் அவர்களுக்கு முன்னினும் பன்மடங்கு சிரத்தை யதிகரித்தது. ஆதலின், அவர்கள் அரியவிஷயங்களை விரைவில் அவர்வாயிலாக அறியவெண்ணினர்; ஊக்கத்துடன் அவருடலைப்பற்றிய உபாதியைப் போக்கும் முறைகளைக் கைக்கொண்டனர்; அவரைவிட்டு அரைக்கணமு மகலாதிருந்தனர். ராமகிருஷ்ணர் தேக உபாதியால் துன்புற அவரைக் காசிப்பூருக்கு அழைத்துச்செல்லும் சமயம், நரேந்திருக்குப் புத்த பகவானிடம் அளவுகடந்த பிரேமை யேற்பட்டிருந்தது. புத்தர் விரித்த புகழ்நூலான லலித விஸ்தாரத்தை அவர் படித்துப் பாண்டித்ய மடைந்திருந்தார். குருதேவரால் ஏற்றப்பெற்ற ஞானவிளக்கு அவருள்ளத்தே ஒளிபரப்பியது. அவர் திருமேனியை ஒருவித தெய்வத்திருவருள் ஆட்கொண்டது. அசத்தைக் கண்டித்து சத்விவேகமானது ஓரே தாபாக்னியாக அவருள்ளத்தில் எரிந்தது. அவர் அனைத்தையும் மறந்தார். அவர் மனம் புத்தர் காலத்தைத் தரிசித்து புத்தர் சென்ற புண்ணிய க்ஷேத்திரங்களை யெல்லாம் சுற்றிச் சத்விசாரஞ்செய்தது. அரசன் ஆண்டியாகி சத்யமும் நித்யமுமான பொருளைக் கண்டுபிடித்து, குகைகளிலும் தூபிகளிலும் சமய உண்மைகளைத்தீட்டி, அசோகச் சக்ரவர்த்தியி னரசாட்சியில் மதசோகத்தைப் போக்கி, புத்தர் பள்ளிகளையும் கோட்டங்களையும் விஹாரங்களையும்

புத்தரின் புகழ்நூலைக் கற்றமை

நிறுவிய அப்புத்தரை-சித்தரை-அபய அத்தரை-நித்தரைத்தவிர வேறெப் பொருளிலும் அவர் சிந்தை நாட்டங் கொள்ளவில்லை.

புத்தன் துறவன்றோ துறவென்றவர் அடிக்கொருமுறை கூறுவார். "மாடமாளிகை கூடகோபுரங்களென்ன! அகிலத்தை ஆளும் ஆட்சிமுறையென்ன! குபேரனுமஞ்சும் சம்பத்தென்ன. அன்பேயுருக்கொண்ட தாய்தந்தைய ரென்ன? இரதியைப் பின்னடையச் செய்யும் நுண்ணிடையாளான காதலி, கண்மணி யசோதரையென்ன! மாங்குயில்போற்பேசும் வாஞ்சைதரும் பைங்கிளியான கணிகை மாதர்களென்ன! இவற்றையெல்லாம் நொடிப்பொழுதில் துறந்த புத்தரின் தெய்வீகத்துற வன்றோ துறவு?" என்று அவருள்ளம் பரிபூர்ணானந்த நிலையையெய்தும். 'அதுவே பேரவா!; சத்யமான தாபம். நித்யமான பொருளைக்காணுந் தன்மையில் சலிப்பில்லாது சலனமற்று அசலத்தைப் போன்றிருக்கும் நிலை. அலைந்துதிரியும் பிக்ஷுவாய் அவர் அரசநிதியத்தைத்துறந்து விளங்கினமை கண்டு அவர் ஆனந்தக்கண்ணீர் பெருக்குவார்; பிரம்மானந்தமாய் புத்தபகவான் திவ்ய சரித்திரத்தையை விரிப்பார்; அங்ஙனமே சமாதியாகி புத்தபகவானைத் தரிசிப்பார். தமதன்பர்களோடு கூடித் துதிபாடுவார். எத்தனை யாண்டுகளாயினுஞ்சரி புத்தரடைந்த அம்மகோந்நத நிலையை யெய்தும் வரையில் உழைப்போமென்று உறுதி பூண்பார். அங்ஙனமே பரவசமாகி ஓம் நமோ பகவதே புத்தாயா என்று தோத்தரிப்பார். புத்தரென்றே பரமஹம்ஸரின் பாதாரவிந்தங்களிற் பணிந்தெழுந்து, புத்தரடைந்த அப்பரம மெஞ்ஞானத்தை யருளுமாறு பகவானை வேண்டுவார்.

புத்தபகவானின் புனிதமான துறவு தனைப்போற்றல்

இவற்றால் நரேந்திரருக்கு எவ்வித சமாதானமும் ஏற்படவில்லை. 'நான் புத்தகயைக்குப் போகவேண்டும். அவர் வீற்ற அப் போதி விருட்சத்தின் நிழலில் யான் அமரவேண்டும்' என்றவர் தீர்மானித்தார். அந்தோ! எங்ஙனம் அகல்வது? தன்னையே சூழ்ந்து நம்பியிருக்கும் அன்பர்களை எவ்விதம் புறக்கணித்துச் செல்வது? 'குருதேவர் வியாதியால் துன்பப்படுகின்றனரே! நமதன்பர்கள் நம்மையொருகணமும் பிரியாதவர்க ளாயிற்றே? ஊரெல்லாம் தேடி ஏங்கவாரம்பித்து விடுவார்களே. என்ன செய்வேன்' என்று அவர் ஏங்கலானார். ஆனாலும் புத்தனது ஆணை-அப்பகவானுடைய கடாக்ஷம் அவருக்கு ஏற்பட்டுவிட்டமையால் அவர் அதை மறுக்க முடியவில்லை.

நோயால் பரிதாபகரமான நிலையில் வாதனைப்படும் பரமாசாரியனை விட்டகலவும் அவருக்கெள்ளளவும் மனமில்லை. ஆனால் ஒருவித சக்தியோ அவரை மகா பலத்தோடு இழுத்தது. அதற்கு அவர் இணங்காதிருக்கவும் முடியவில்லை. ஆதலால், புத்தகயைக்கு யாத்திரை செய்யவேண்டுமென்ற தம்மைப்போன்ற ஆவலுள்ள இரண்டன்பர்களை யழைத்துக்கொண்டு புறப்பட நிச்சயித்தார். சுவாமி சிவானந்தர் (தாரகர்) சுவாமி அபேதானந்தர் (கலி) ஆகிய இருவரும் உடனேக அவர் ஒருவரு மறியாவண்ணம் வெளியேறினார்.

புத்தகயைக்கு யாத்திரை போதல்

அப்பால், தம் தலைவரைக்காணாவல் அன்பர்கள் மூலை முடுக்குகள் தோறும் தேட வாரம்பித்தார்; பலவாறு புலம்பினர் ஆனால் குருதேவர் மட்டும் நரேந்திரருடைய பிரிவைப் பாராட்டாதிருந்தார். 'நரேந்திரர் எங்கேயோ போய்விட்டாரே' என்று சிஷ்யர்கள் அவரிடம் பிரலாபிக்க, அவர் புன்னகைபுரிந்து 'ஏன் கவலைப்படுகிறீர்கள். அவன், தானே திரும்புவான்' என்று சொல்லிப் பின்னும் பகர்வாராயினர்; 'ஒரு மயில் தினந்தோறும் ஒரு மனிதனுடைய நந்தவனத்திற்கு வருவது வழக்கம். அம்மயில் வந்தமர்தல் அச்சோலைக்கே ஓரழகைத் தருவதுகண்டு அத்தோட்டக்காரன், அது தினந்தோறும் தவறாமல் வருமாறுசெய்ய அதற்குக் கொஞ்சம் அபினியை அனுதினமும் கொடுத்து வந்தான். அதனை அதுவும் உண்டு வந்தது. இவ்விதம் பலநாட்கள் பழகிய பின்னர் அந்த மயில் ஆங்கு வாராதிருக்க முடியவில்லை. அக்குறித்த நேரத்தில் அந்த அளவு அபினியை உண்டாலன்றி அம்மயிலுக்குப் புத்தி சுவாதீனம் ஏற்படாது. ஆகையால், அம்மயிலை அச்சோலைக்குரியோன் மெல்ல வசப்படுத்தி விட்டான். அதுபோல, நரேந்திரன் இங்கு என்னிடத்தில் ஓர் அபினியைச் சாப்பிட்டுப் பழகி விட்டான். அதுபோன்ற ருசியுள்ள அபினி அவனுக்கு வேறெங்குங் கிடைப்பதரிது. ஆகவே, அவன் விரைவில் வந்து சேருவான்' என்றவர்களைத் தேற்றினார்.

சகபாடிகளின் சஞ்சலம்

நரேந்திரநாதர் 1886-ம் ஆண்டு 'ஏப்ரல்' மாதத்தொடக்கத்தில் தம் மிருதோழர்களையும் அழைத்துக்கொண்டு கங்காநதியைக் கடந்து பலி 'ரயில்வே ஸ்டேஷனை' யடைந்தார். அன்றிரவு முழுவதும் மூவரும் அங்கு துயின்றனர். மறுநாட்காலையில் இரயிலேறிப் பிரயாணமானார்கள். புத்தகயையைக் காணவேண்டுமென்ற அவர்கள் அவா

வுக்கோ ளவேயில்லை. இரயில்வண்டி கயையை யடைந்ததும் அவர்கள் இரயிலைவிட்டுத் துள்ளிக்குதித்து வெளியே வந்தனர். அக்காலத்தில் புத்தகயைக்கு ரயில்பாதை கிடையாது. கயைக்கும் அவர்கள் போகவேண்டிய விடத்திற்கும் சுமார் எட்டுமைல் தூரம் இருக்கும். அதை அவர்கள் பொருட்படுத்தவில்லை. வேடிக்கையாக நடந்துபோய் விடலாமென்று நிச்சயித்தார்கள். அங்கு பால்கு நதியில் நீராடி பிக்ஷைகொண்டு பிரயாணப்பட்டு புத்தகயையை யடைந்தார்கள். அன்றிராப்பொழுதை ஆங்கோர் குடிசையிற் கழித்து புத்தபகவானைப்பற்றி விசாரஞ்செய்யத் தொடங்கினுர்கள். அவர்கள் யாத்திரையின் கருத்தும் கைகூடிற்று.

கயை ஸ்தல யாத்திரை

அடுத்தநாட்காலையில் அவர்கள் நீராடி சத்வபுத்த ஆலயத்திற்கேகினர். நிர்வாண நிலையில் நிலவும் புத்தரின் சிலைமுன் புளகாங்கிதமெய்தி நிலந்தோய வீழ்ந்து வணங்கினுர்கள் ; அப்பால் பத்மாசனமிட்டு அமர்ந்து இரண்டுமணிநேரம் வரையில் தியானித்தனர். அதன்பின் அவ்விடம் விட்டகன்று சமணர் பள்ளிகளைச் சுற்றிப் பார்த்தனர். நரேந்திரரைப் பார்த்ததும் அவரது இனிய சொற்களால் வசீகரிக்கப்பெற்ற மகந்து அவரை அங்கேயே யிருக்கும்படி வேண்டினுர். கங்கை துங்கமாய்ப் பாய கா மலர்கள் நறுமணம் வீச, காந்தல்கள் மலர, புள்ளினங்கள் புளகமுறக்கூவ அன்று மாலைப்பொழுதில் நரேந்திரர் மனோகரமாகத் தம்மிரு அன்பர்களுடன் புத்தபகவான் ஞானோதய மடைந்த அப்'போதி' விருட்சத்தினடியில் பொருந்தியிருக்கும் கல்லாசனத்தின்மீது வீற்று அதீத சமாதிநிலையை யனுபவித்தார் ; புத்த மூர்த்தியை மனக்கண் கொள்ளக்கண்டு தரிசித்தார் ; ஆனந்தபாஷ்பம் பெருக்கினுர் ; ஆனந்தமேலீட்டால் அருகே யமர்ந்துள்ள அன்பரை யொருமுறை தழுவிக்கொண்டு பின்னும் சமாதியானுர். அவருக்குப் புத்தபகவானுடைய நிர்வாண நிலையின் தாத்பரியம் அங்கு விளக்கமாயிற்று. அங்கு அவர் ஓர் மகா உண்மையை யறிந்து கொண்டார்.

மூன்று நாட்கள் வரையில் அவர்கள் புத்தகயையிலேயே தங்கியிருந்தார்கள். புத்தபகவான் மிதித்தருளிய புண்யப் பிரதேசங்களையெல்லாம் அவர் கண்டானந்தித்தார். அதன்பின், அங்கிருந்து ஸ்தலயாத்திரை செய்யவேண்டுமென்ற எண்ணத்தால் அவருள்ளம் கொந்தளித்தது. ஆனுல் அவருடன் வந்திருந்த இருவரும் விரைவில் தக்ஷிணேஸ்வரத்தை யடைந்து மறுவேலை பார்க்கவேண்டுமென்றும்,

குருதேவர் தேகஸ்திதி கவலைக்கிடமானதா யிருக்கையில் தாமதிப்பது தகாதென்றுங்கூறி நரேந்திரரைத் தூண்டினார்கள். நரேந்திரர் மட்டும் தியானத்தால் பரமஹம்ஸரைத் தரிசித்துக் கொண்டே யிருந்தார். இங்கு இப்படி யிருக்க, இரண்டு மூன்று நாட்கள் இரண்டு மூன்று யுகங்களாகத் தோன்றினமையால், காசிப்பூர் நந்தவனத்தேயுள்ள சிஷ்யர்கள் பலவாறு புலம்பி குருதேவரை யடைந்து முறையிட்டனர்; நரேந்திரர் விரைவிலிங்குற அருளவேண்டுமென்று வேண்டினர். அவரும் மகிழ்ந்து மனத்தால் நினைத்தருளினார். குருதேவர் மனத்தில் அவ்வெண்ணமுதித்ததும் நரேந்திரருடைய கால்கள் தம்மை யறியாது தக்ஷிணேஸ்வரத்தை நோக்கி யிழுத்தன. அக்கணமே அவர் புறப்பட்டு தம்முடன் வந்த அவ்விரு அன்பர்களோடு குருவின் சந்நிதியை யடைந்தார். அவர் வரவுகண்டு அன்பரனைவரும் குதூகலித்து ஆராவாரித்தனர். அவர் குருவின்முன் பலருஞ் சூழத் தமது யாத்ரானுபவங்களை எடுத்துரைத்தார்.

கயையினின்றும் மீண்டமை

இதற்குமுன் நரேந்திரர் இவ்விதம் ஒருதடவை யாத்திரைபோயிருக்கிறார். ஆனால் அதை ஓர் சரியான யாத்திரையென்று கருத முடியாது. அப்பொழுது நரேந்திரருக்கும் ஏனைய அன்பர்களுக்கும் அத்துணை பற்றுதல் உதித்திருக்கவில்லை. அது, நரேந்திரர் பரமஹம்ஸருடைய உண்மையான வல்லமையை உணராது சலனப்பட்டுக் கொண்டிருந்த காலம். இந்த யாத்திரைதான் நரேந்திரருக்குக் குருதேவரிடத்தில் பரிபூர்ண நம்பிக்கை நிலவச்செய்தது. அந்நிலையில் ஸ்ரீராமகிருஷ்ணரைவிடச் சிறந்த மகானொருவரை அவர் தேடிக்கொண்டிருந்தார். * காஜிப்பூரில் பாவ்ஹாரிபாபா வென்ற நாமதேயமுடைய ஓர் பெரியாரைப்பற்றி அவர் அதற்குமுன் கேள்விப்பட்டதுண்டு. 'பாவ்ஹாரி' என்பது 'வாயுபக்ஷணஞ் செய்பவர்' என்ற பொருளுடைய தொடர்மொழி. 'பாபா' வென்பதற்குத் தந்தையென்பது பொருள். நரேந்திரர் அவரைப்போய்க் காணவெண்ணிச் சென்றார். அவரோர் குகையில் ஈஸ்வரத்தியானஞ் செய்துகொண்டு தனியே யிருந்தார். அவரைக்கண்டு அவர் பாதத்தில் வீழ்ந்தார் நரேந்திரர்; எழுந்து 'பவக்கடல் கடந்த முனியே!' என்று போற்றினார். அதற்கு அம்மகானுபாவர் இரண்டொரு வார்த்தைகளுக்குமேல் விடை பகரவில்லை. அவருக்குத் தம்மேல் அன்பெழுமோ வெனுமாசையால் நரேந்திரர்

* காசிப்பூர், காஜிப்பூர் இவை வெவ்வேறு ஊர்கள்.

தாம் ராமகிருஷ்ணரின் சீடரென அறிவித்துக்கொண்டார். அதுகேட்ட பாபு, பெருமகிழ்ச்சியெய்தி அவரைத்தழுவி 'ராமகிருஷ்ணர் ஓர் அவதாரபுருஷர். அவரை யடுத்த உனக்கென்ன குறை? அவருடைய படத்தை நான் திரிகாலமும் பூஜித்து வருகிறேன். அவரை என் ஹிருதயத்திலே வைத்து ஆராதனஞ் செய்கின்றேன். அவர் ஆசாரசீலர்; அப்ரமேயர்' என்றியம்பினார். இதுகேட்டதும் நரேந்திரர் எள்ளளவும் தமாதியாமல் தக்ஷிணேஸ்வரத்திற்குத் திரும்பினார். சகல விஷயங்களையும் சமாதிநிலையிற் கண்டறிந்த பரமஹம்ஸர் நரேந்திரர் வந்ததும் 'அப்பனே! உனக்கு இப்பொழுதேனும் ஸ்திரநம்பிக்கை யேற்பட்டதா?' என்று வினவினார். இப்பாவ்ஹாரி பாபாவைப்பற்றிப் பின்னர் விரிவாகக் கூறுவோம்.

காஜிப்பூர் பாவ்ஹாரிபாபா

பாவ்ஹாரி பாபாவைக்கண்டு திரும்பியது முதல் நரேந்திரநாதர் ஸ்ரீராமகிருஷ்ணரின் சரணாரவிந்தங்களை விடாமல் பற்றிக்கொண்டார். அவரைத் தவிர வேறெவரையும் புகழ அவர் நாவெழுவதில்லை. அநுபவத்தில் எதையும் கண்டறிய உதவிபுரிந்த பரமஹம்ஸரே அவருக்குப் பிரத்தியட்ச தெய்வமாக விளங்கினார். விடாமுயற்சியால் நரேந்திரருக்குக் குருதேவரின் பல சித்திகளும் கைவரப்பெற்றன. ஆனால் நிர்விகல்ப சமாதிமட்டும் எஞ்சி யிருந்தது. அதை யவருக்குப் புகட்டும் பக்குவ காலத்தை குருதேவரும் எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்.

கணத்திற் கோரிடத்தில் சஞ்சரித்துக்கொண் டிருக்கும் மனமானது இடமாறுங்கால், அவ்விரண்டிடங்களுக்கும் மத்தியில் எந்த ஞானமுளதோ அதுதான் சிதாகாச மெனப்படும். 'அந்த சிதாகாசமே பரப்பிரம்மம், என்று அறிந்து அனுபவித்து, அதேயாகியிருப்பர் மகான்கள். அத்தகைய சிதாகாசத்தில் சகலவித எண்ணங்களும் ஒடுங்கி தான் தானாகியிருப்பானாயின், யாவற்றிற்கும் மேம்பட்டதும், பரம சாந்தமா யிருப்பதுமான பிரம்ம சொரூபத்தில் ஐக்கியமாகி விடுகிறான். அவ்விதம் ஒன்று படுவதே நிர்விகலப சமாதியாகும். 'சங்கல்ப விகல்ப ரூபமாயிருக்கும் மனதை தூரப்படுத்தி எஞ்சியுள்ள ஞானமே உன் சொரூபமாதலால் சலனமில்லாமல் ஸ்திரமாயிருக்கவேண்டும்' என்பது உபநிஷத வாக்கியம்.

நிர்விகல்ப சமாதி

"தேகேந்திரியாதி ஜகத்திற்கு சாட்சியாயிருக்கும் பொருளே ஆன்மா வென்றும் பிரம்மமென்றும் உரைக்கப்படுவது. அங்ஙனம்

சாட்சி சொரூபமான ஆன்மா யாவற்றிற்கும் முதற்காரணமா யுள்ளது. அவ்வித ஆத்மாவிற்கு ஆதாரமொன்று மில்லை. அது நிராதாரமாக விளங்குவது. 'அதே நீ', 'நீயே அது' என்று உறுதியாய் நம்பி எப்பொழுதும் அதனைச் சிந்தித்தவாறு தன்மயமாயிருக்கவேண்டு" மென்று மஹோபநிஷதம் கூறும். 'பார்ப்பவன், பார்வை, பார்க்கப்படும் வஸ்து (திருசியப் பிரபஞ்சம்) ஆகிய இம்மூன்றும் திரிபுடியாம். இத் திரிபுடியின் மத்தியில் சாட்சியாக எந்த அறிவானது ஒளிர்கின்றதோ அந்த அறிவுதான் ஆன்மாவும் பிரம்மமுமாம். அதுவே தானென்றறிந்து சதா தன்மயமா யிருப்பதையன்றி வேறு சாஸ்திரார்த்த சாராம்ச மில்லை. எஞ்ஞான்றும் அந்த அறிவே தானென்றுணர்ந்து தன்மயமா யிலங்கவேண்டும்' என்பதும் மஹோபநிடத தாத்பரியம்.

ஆன்மா-பிரம்மம்

ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸர் இந் நிர்விகல்ப சமாதிநிலையைப் பரிபூர்ணமாக அனுபவித்தார். அதுவே அவருடைய மகாசித்திகளுக்கு ஆதாரமாய் நிலவியது. அவர் சமாதி பல திறப்பட்டது. சகல ஜகத்பொருளும் ஒடுங்கி ஐக்கியப்பட்டு பிரம்மமாக விளங்கும் அதீதநிலையை அவர் அனுபவித்த மகானுபாவர். இவ்வனுபூதியில், கிறிஸ்து நாதரே கிருஷ்ண பரமாத்மாவென்று கண்டறிந்தவர் அவர். அதனால் அவர்முன் எவ்வித வேற்றுமையுமில்லை. எல்லாப் பொருள்களிடத்தும் பிரம்மத்தை அவர் கண்டவர். இந்நிலையை நரேந்திரரெய்துவது ஆரம்பத்தில் அசாத்தியமானதாகவே தோன்றிற்று. சொல்லான் முழக்கிலோ சுகமில்லை; அதில் அவருக்கு நம்பிக்கையும் வரவில்லை. அத்வைத சித்தாந்தத்தை அவர் எளிதில் ஏற்கவில்லை. சுவானுபூதியில் அவருக்குப் பரமஹம்ஸர் சமாதிநிலையை யெய்தவைத்து அனைத்தையும் விளக்கிக்காட்டினமையால் குருதேவரிடத்தி லவருக்கு பக்தி நின்றுநிலவிற்று. இந் நிர்விகல்ப சமாதியை யநுபவிக்க ராமகிருஷ்ணர் அரும்பாடு பெரும்பாடு பட்டார். அவர் பக்குவப்படப் பன்னிரண்டாண்டுகளாயின. அந்நிலையைத் தமக்கு உரித்தாக்க நரேந்திரர் குருதேவரை எத்தனையோ முறை மன்றாடினார். அது அகோர தவத்தாலடையக்கூடியதன்றோ? அதனை யடைதல் கோடியில் ஒருவருக்குங் கூட சாத்யமன்றெனில் அதன் உயர்வையும், அடையும் வழியிலுள்ள சிரமத்தையும் எப்படி விஸ்தரிக்க முடியும்? 'இதனை அனுபவித்தவர் பிரம்மாவாலும் தேவர்களாலும் பஜிக்கத் தகுந்தவ' ரென்று சாற்றுகின்றது வேதம்.

அதீத நிலையெய்த அரும்பாடு

சாதாரண பிராணுயாமங்களெல்லாம் இந்நிர்விகல்ப சமாதியாம் கடலில் சிறு சில நீர்த்திவலைகளேயாம். அவ்வதீத நிலையை யடைவிக்க எத்தனையோ தடவை கெஞ்சியும் ஆகட்டும் ஆகட்டுமென்று சொல்லிக்கொண்டே வந்தார் குருதேவர். 'உபநிடத வாக்கியங்களை மறந்து அவற்றின் கருத்தினைக் கண்டு அனுபவிக்கும் காலமெப்பொழுது வரும்?' என்று நரேந்திரர் எதிர்பார்த்திருந்தார். அகம் பிரமமாஸ்மி எனுமானந்த அனுபூதியை யடைய அவருக்கிருந்த அவாவை அளவிட்டுரைக்கத் தரமன்று

காசிப்பூர் பவனத்திலிருந்த நாட்களில் அவருடைய மனோ நிலையைக்கண்டு மற்றைய அன்பர்கள் ஆச்சரியப்பட்டனர். அதன் கருத்தைமட்டும் கண்டுபிடிக்க அவர்களாலாகவில்லை. அந்த ரகசியம் நரேந்திருக்கும் குருநாதருக்கும் மட்டுமே தெரியும். துறவில் அவருக்கு அளவற்ற சந்துஷ்டி யேற்பட்டது. குருதேவர் அவரைப் பல யோக சாதனங்களிலும் வல்லவராக்கினுர். நரேந்திரர் ஒருநாள் தமது குருநாதரை யடைந்து 'அருள் மிக்க ஐயனே! நிர்விகல்ப சமாதி எனக்குக் கைகூடுமாறு செய்தலாகாதா?' என்ருர். குருதேவர் 'என்னுடல் சிறிது குணப்படட்டும். உன் விருப்பப்படி யாவற்றையும் செய்கிறேன்' என்ருர். நரேந்திரர் 'தாங்கள் முக்தியடைந்து விட்டால் எளியேன் என்னசெய்வேன்?' என்று வற்புறுத்தி வேண்டலாயினர். 'இதென்ன நரேந்திரனுடைய சித்தவிருத்தி இவ்வாருயிற்று? அநித்யமான இவ்வுடலையோ இவன் நம்பினுன். அவனுக்கு ஒன்றையடைவதில் உண்மையான முயற்சி யிருக்குமேல் இவ்வுடலிருப்பினென்? இல்லாது போயினென்?' என்று குருநாதர் தமக்குள்ளே எண்ணியவராய் 'நரேந்திரா! இப்பொழுது நீ யடைய விரும்புவ

நிர்விகல்ப சமாதியை யெய்துவிக்க மன்ருடல்

தென்னே?' என்ருர். நரேந்திரர் 'குருதேவ! சுகதேவரைப்போல நிர்விகல்ப சமாதியில் வீற்றிருக்கு மின்பத்தை யான் அடையச்செய்தல் வேண்டும். ஐந்து நாட்கள் வரையில் சமாதியிலேயே வீற்றிருக்கச் செய்யவேண்டும். அப்பால், இந்த தேகத்தைச் சிறிது காக்கக் கொஞ்சநேரம் ஜாக்கிரத்தை யடைந்து அதன்பின் அப் பரிபூர்ண சமாதியையே யடையவேண்டும். இவ்வாறு என்னுயுட்கால முழுவதையும் கழிக்க யான் விரும்புகிறேன்' என்ருர். இது கேட்ட ஸ்ரீராமகிருஷ்ணர் பொறுமை யிழந்தார்; 'உனக்கு வெட்கமாயில்லையா?' என்ருர்; இந்நிர்விகல்ப சமாதியை யனுபவிக்க நீ விரும்புவதால்

உனக்கு எள்ளளவும் பயனுண்டோ? உன்னை, ஆத்ம சாந்தியை விரும்பும் அநேக கோடி மக்கள் தங்குதற்குரிய ஆலமரமாக ஆக்கவன்றே யான் நினைத்தேன். நீ கேவல சுயநலப்பிரியனாக, தந்தேகத்தியான பரனாக நினைக்கின்றனையே. இன்றே விடு இவ்வெண்ணத்தை! தன்னல மிழந்து தாழுயிருக் குழைக்கத் தலைப்படு இப்பொழுதே! என்னையே பின்பற்று! என்னைப்போல் பலருக்கு வழிகாட்டு! ஞானியாகவும் பக்தனாகவும் பரிமளி!' என்றார். இவ்வசனங்களைக்கேட்டதும் அவர் புளகாங்கித மெய்தினார். அவர் கண்களினின்றும் ஆனந்த பாஷ்பம் பெருகிற்று. குருநாதருடைய கட்டளையையும் கருத்தையு மவர் கண்டுகொண்டார். மதாபிமானமற்று பவக்கடலிலுழன்று கடைத்தேறும் வழியறியாது தவிக்கும் ஜீவகோடிகளைக் கைதூக்கிவிட்டு, உலகை உயர்த்தும் உத்தம கைங்கரியத்தைச் செய்ய நரேந்திரர் அவதரித்துள்ளா ரென்பதை குருநாதர் அறிவாராதலின் அவ்வாறு இயம்பினார்.

ஸ்ரீராமகிருஷ்ணர் மகாபுருஷர்களை இரண்டு பெரும் பிரிவுகளாகப் பிரிப்பதுண்டு. அதாவது பிரம்மாநுபூதியை யடைந்து அதிலேயே ஸ்திரப்பட்டு முக்தியடையும் வகையினர், பிரம்மானந்தபரர்களாகிப் பின் ஜெக உத்தாரணார்த்தம் தொண்டு புரிந்து மீண்டும் பிரம்மமய மாவாரென இரண்டாம். அதில் நரேந்திரருடைய விருப்பம் முதலதைச் சார்ந்தாகவும், இயற்கை இரண்டாமதைப் பொருந்தியதாகவு மிருக்கக்கண்டு குருதேவர் 'நீ யிவ்வுலகில் மகத்தான கைங்கரியத்தைச்செய்ய அவதரித்தவன்' என்றியம்பினார்; 'நீயோ சித்யசித்தன்; ஆசார்யகோடி. உன்னுடைய தன்மைக்கு உனது விருப்பம் பொருத்தமானதன்று' என்று கூறித் தேற்றினார்.

மகாபுருஷர்கள் இருபெரும் பிரிவினர்

ஆயினென்? நரேந்திரர் மனோபீஷ்டமும் நிறைவேற வேண்டுமன்றோ? ஒருநாள் மாலையில் அவர் எதிர்பாராவண்ணம் ஓர் தெய்வ சக்தியின் வசமானார். படுத்தவிதமாக அவர் தியானஞ் செய்துகொண்டிருந்தார். அப்போது திடீரென்று அவர் சிரசின் பின்புறம் ஓர் சோதி பிரகாசித்தது. அவர் புத்தி அச்சோதியில் லயப்பட்டது. உடனே யவர் ஆழ்ந்து சமாதியாகிவிட்டார். அவர் மனக்கண்களுக்கு முன் இப்பிரபஞ்சமும், ஏனைய அண்டகோளங்களும் சூன்யமாயின. யாவும் பரப்பிரம்ம சொரூபத்தில் லயித்துவிட்டன. 'நான்' என்னும் அறிவு பரப்பிரம்ம சொரூபத்திற் கலந்து மறைந்துவிட்டது.

அந்த நிலையின் அனுபவத்தை யனுபவித்தாலன்றி எவ்வாறு விளக்க வியலும்? ஆன்ம வெற்றியா லவர் பரிபூரண அகண்ட சச்சிதானந்த சொரூபமே தானுகி தானே யவ் வஸ்துவாகி ஒப்பற்ற நிலையிலிருந்தார். அப்பொழுது சிலர் அவர் பக்கலில் வீற்று தபஸ் செய்துகொண் டிருந் தனர்; சிலர் குருதேவருக்குச் சிஸ்ருஷை செய்துகொண் டிருந்தார் கள். எங்கும் நிர்சப்தமாகவே யிருந்தது. சிலர் ஓர் மூலையிலிருந்து மெல்லிய குரலில் ஏதோ பாடிக்கொண் டிருந்தனர். நரேந்திரர் வீற்றிருக்கும் அறையிலேயே கோபால்-தா வென்ற பெரியாரும் தியானஞ் செய்துகொண் டிருந்தார். திடீரென்று அவர் தியானங்கலைந்து ஜாக்கிரதையானுர். "கோபால்-தா! எனது சரீரமெங்கே?" என்ற நரேந்திரர் குரல் அவ ரைத் திடுக்கிடவைத்தது. அவர் பயந்துபோய் 'இங்குளது இங் குளது' என்ருர். உடனே அவர் சீக்கிரமாக வந்து நரேந்திரர் சாஷ் டாங்கமாக வீற்றிருப்பதுக ண்டு அவருடலை ஸ்பரிசித்து விறைத்திருக் கக்கண்டார். இதென்ன விபரீதமென்று அவர் கைகளைப் பிசைந்து கொண்டு தமது நண்பர்களைக் யழைத்தார். ஓடிவந்தனர் பலர்; 'கண் கள் செருகிப்போ யிருக்கின்றன' என்ருர் ஒருவர். 'உடல் விறைத் துப்போய் விட்ட' தென்ருர் மற்றொருவர். 'என்ன மாயமோ' என்று நாகுழற மெய்பதறப்பேசி 'நரேந்திரா' வென்று உரக்க அழைத்தார் ஒருவர். பேச்சு மூச்சேயில்லை. புரட்டியும் செயலில்லை. அப்பால் அவர்கள் 'ஐயோ! நரேந்திரர் காலமாயினரோ?' என்று பயந்து போய் ஓடினுர்கள் குருதேவர் சந்நிதிக்கு. அவர் மௌனமாக வீற்றி ருந்தார்; நரேந்திரருக்கு நேர்ந்துள்ள யாவற்றையும் அறிந்தவர்போல வும் காணப்பட்டார். சென்ற அன்பர்கள் நிகழ்ந்ததை அவசர அவசர மாக எடுத்துக் கூறினுர்கள். 'இருக்கட்டும்! இந்நிலையை யெய்த அவன் பலகாலமாய் தவங்கிடந்தான்' என்ருர் குருதேவர். அவ ருடைய வார்த்தைகள் அவருக்குத் தேறுதலளித்தன. இந்த நிர் விகல்ப சமாதியில் நரேந்திரர் அன்றிரவு சுமார் ஒன்பது மணிவரையில் வீற்றிருந்தார். அடியார்கள் பலரும் அவரைச்சுற்றி யமர்ந்து கவ னித்துக்கொண்டே யிருந்தார்கள். அப்பால், அவருடல் சிறிது உணர்ச்சி யடைந்தது. உடனே ஒருவரோடி யிச்செய்தியை ஸ்ரீராம கிருஷ்ணருக் கறிவித்தனர். ஒருவர் 'நரேந்திரா' வென்றுவனுட னழைத்தனர். இச்சப்தம் வெகுதூரத்திலுள்ளோர் அழைப்பதுபோல அவர் செவியிற் பட்டது. அப்பால், வெகுநேரமாயினபின் கண்களைத்

நிறைந்த நிர் விகல்ப சமாதி

திறந்தார்; வெகுநேரம் நித்திரை போனவர்போல் உடலை முறுக்கிக் கொண்டெழுந்தார். அவருக்கொன்றும் புலப்படவில்லை. 'என்ன நேர்ந்தது? ஏன் என்னைச்சுற்றி வட்டமாக உட்கார்ந்திருக்கிறீர்கள்?' என்றார். நிகழ்ந்தவற்றை அன்பர்கள் எடுத்துரைத்தனர். அவருடல் உடல் உணர்ச்சி பெற்றதாயினும் புத்தி சரியான ஸ்திதியையடைய வெகுநேரம் பிடித்தது. அவருடைய கண்கள் சொலித்தன. அவரது உளம் பரிபூர்ணமாயிருந்ததனால் தாமனுபவித்த சமாதி நிலையை வருணிக்க அவரது நா எழவில்லை. பிறகு அவரெழுந்து நேராகத் தமது குருநாதர் எழுந்தருளியிருக்கும் அறையை நோக்கி நடந்து, குருதேவர் சந்நிதானத்தை யணுகினார். அவர் திருமுன் சென்றதும் குருதேவர் அவரை ஒருமுறை அன்புடன் பார்த்து 'பிரிய! காளிதேவி உனது நீடித்த விருப்பத்தை நிறைவேற்றி வைத்துவிட்டாள். பெட்டியில் திரவியம் பூட்டிவைக்கப் பெற்றிருப்பதுபோல், நீ இப்பொழுதடைந்த இந்தப் பிரம்மானுபூதி இனி உன் விஷயத்தில் மறைத்துவைக்கப் பெற்றிருக்கும். அதன் திறவுகோல் என்வசமிருக்கும். நீ ஓர் மகத்தான மதசேவையை உன் அவதார ரஹஸ்யப்படி செய்யவேண்டியிருக்கிறது. அதை நீ புரிந்தபின் அச்செல்வப்பேழை திறக்கப்படும்.' எனப் பகர்ந்து, அதுமுதல் உணவு விஷயத்தில் சிறிது தற்காப்புடனிருக்குமாறு உரைத்தருளினார். அதன்பின், தமது சீடர்களனைவரையு மழைத்து நரேந்திரர் வெகு விரைவில் பரிபக்குவ மடைந்துள்ளாரென்றும், சகல சித்திகளையும் அவருக்கு அன்னை யருளிவிட்டாளென்றும், அந் நிர்விகல்ப சமாதியின் பரிபூர்ண நிலைக்குப்பிறகு ஆன்மா நிர்வாணநிலையை யெய்துகின்றதென்றும் கூறினார். அன்றிரவு முழுதும் ஆனந்த மேலீட்டால் அன்பர்கள் கானஞ் செய்துகொண்டிருந்தனர். சிலர் நரேந்திரரைச் சூழ்ந்துகொண்டு அவரது சித்திப் பிரபாவத்தை வியந்தவாறிருந்தார்கள். சிலர் அவரைத் தழுவி மகிழ்ந்தனர். ராமகிருஷ்ணர் அப்பொழுது தமதன்பர்களை நோக்கி 'நரேந்திரன் அவனிஷ்டப்படி மரணத்தை ஏற்பான். தன்னை யாரென்றவனறிந்த பின்—தானியற்றவேண்டிய சேவையைப் புரிந்தபின் ஒரு கணமும் இப்பொய்யுடலுடன் கூடி வாழமாட்டான். இவ்வுலகத்தைத் தனது அபார அறிவாலும் ஆற்றலாலும் சமய மெய்ஞ்ஞானத்தாலும் ஓராட்டு ஆட்டிவிடுவான்' என்றியம்பி ஆனந்தக்கண்ணீர்விட்டார். அப்பால், அவர் காளிதேவியைத் தியானித்தவராகி 'ஜெகதீஸ்வரி! அத்வைத

ஸ்ரீ ராம கிருஷ்ண-நரேந்திரநாதர்

ஞானத்தில் நரேந்திரன் பரிபூர்ணமாக விளங்க நீ யருளக்கடவாய். அவனால் சமய உத்தாரணம் நடைபெறவேண்டி யிருக்கிறது.' என்று துதித்தார். மற்ற சிஷ்யர்களைக் குறித்தும் அவர்களுக்கு நல்ல சமயப் பற்றும், சத்சங்கமும் சமாதியும், சகல வல்லமையும் பாலித்தருளு மாறு வேண்டினார். ஆனால் அவர்களுக்காக அவர் அதிகம் பாடுபட வில்லை. அவ்வேலையை அவர் நரேந்திரரிடம் ஒப்புவித்து விட்டார். நரேந்திரர் சமயத்தொண்டாற்றச் சிறிது மாயையைமட்டும் அவரைப் பற்றுமாறு வைத்தா ரப்பராகாருண்ய சீடர். அன்றிரவுமுதல் சிஷ்ய கோடிகள் 'ஸ்ரீராமகிருஷ்ணர்—நரேந்திரர்' என் றிருவரையும் சமமாக ஆசார்ய ஸ்தானத்தில் பாவிக்கலாயினர். பரமஹம்ஸர் நரேந்திர ருடைய உளப்பூர்த்திக்குக் காரணராயிருந்து அவரை 'ஒரு ஜீவனுக்கு நான் உதவிசெய்ய வியலுமேல், நாயாய்ப் பிறப்பினும், பலகோடி ஜென்மமெடுப்பினும் நன்மையே' என்று சாற்றும் சேவை லக்ஷணம் பொருந்திய செல்வராக்கினார். ராமகிருஷ்ணர் அவரைச் சற்று திருப்பி விடாதிருந்திருப்பாரேல், அவர் சின்மயமாய், ஏகதேகத்யானபரராய், மௌனியாகித் தனியேயிருந்து பிரம்மானுபூதியை யடைந்திருப்பார். குருதேவரின் திருவருளாலேயே கலியிலேயாக்கடலில் "வருத்தப்பட்டு பாரஞ் சுமக்கிறவர்களே நீங்களெல்லோரும் என்னிடத்தில் வாருங் கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்" (மத்தேயு 11-அதி. 28. வாக்) என்ற இயேசுகிறிஸ்து நாதரின் இனியவாக்கும், குருக்ஷேத்திர மகாயுத்தத்தில் 'இவ்வுலகம் எனது மாயையால் கற்பிக் கப்பட்டது; என்னுடைய அம்சம்பெற்றது; பின்னனும் சிக்கலு முடையது; கடத்தற்கரிய மாயைகளையுடையது. ஆனால் என்னைப் பரிபூர்ணமாய் யாரடைகின்றார்களோ அவர்களே இப்பிறவிக்கடலை நீந்துவர்' என்ற ஸ்ரீகிருஷ்ணபரமாத்மாவின் திருமொழியும், நரேந்திர ரிடத்தில் தக்கவாறமைந்தன. இவ்வறத்தின் சாற்றுதல் என்றும் எப்பொழுதும் எங்கும் பரிமளித்துக்கொண்டே யிருக்கும். ஆனால் அதற்குச் செவிசாய்த்து எழுவார் வெகு சிலரே. அவர்கள் தான் மத உத்தாரணர்கள்-மகா புருஷர்கள்.

குருதேவரைப் பற்றிய கொடூரநோய்

விசேஷமாக ஸ்ரீராமகிருஷ்ணரின் தேக உபாதியைப்பற்றிக் கேள் விப்பட்ட அவர் மகிமைகளை யுணர்ந்தாரனைவரும் அவரைப் பார்க்க வந்துகொண்டே யிருந்தனர். காசிப்பூர் பவனத்தில் அது ஓர் விழாக்காலமாகவே மதிக்கப்பட்டது. அப்பொழுது நடைபெறுங்காலம் 1886-ம் ஆண்டு

ஆகஸ்டு மாதம். நாளுக்குநாள் குருதேவரின் உடல் பயங்கரமான நிலையிற் சென்று கொண்டேயிருந்தது. அது கண்டு அன்பர்களனைவரும் உள்ளம் கலங்கினர். நரேந்திருக்கு மட்டும் குருதேவரின் தீர்க்க சமாதிக்காலம் நெருங்கி விட்டதென்பது தெரியும் எத்தனையோ மருத்துவர்கள் வந்து அவர்களாலியன்ற வரையிலும் முயற்சித்துப் பார்த்தும் குணமில்லை.

ஜூலைமாதக் கடைசியில் ராமகிருஷ்ணருக்குப் பேசுவதுகூட கஷ்டமாயிருந்தது. அவர் பெருமூச்சு விட்டுக்கொண்டு மிக்க அவசியமான பொழுதுமட்டும் இரண்டொரு வார்த்தைகள் பேசுவார். இயலாவிடில் கையினால் சடைகாட்டுவார். எத்துணையோ தத்வோபதேசங்களைச் செய்துவந்த குருதேவருக்கு, இவ்வித நோய்வந்து தம்மைத் துர்பாக்கியர்களாக்கிவிட்டதே என்று சிஷ்யர்கள் 'தண்டாமரைப்பூ நெருப்புற்ற தன்மை' போல் வாடினர். இரண்டு கணமுங் கூடப் பிரியத்தரியாத அவர்கள் அவரது பெரும்பிரிவை யெங்ஙனம் சகிக்கமுடியும்? அந்தோ பாவம்! நாளடைவில் குருநாதருடைய இறுதிக்காலம் இன்றோ நாளையோவென்று அஞ்சும் அத்துணை கொடூரமாக விருந்தது நோய். 'எல்லாம் ஈசன் செயல்' என்று அவர்கள் கண்ணீர் விடுவதும், மனந்தேறுவதுமாயிருந்தனர். அவர் மகா சமாதியடைய இரண்டுநாட்களிருக்கையில் தமது சீடர்களை அழைத்து ஒருமுறை தழுவி நரேந்திரரை நோக்கி 'அப்பா என்று கண்ணீர்விட்டு, அப்பால் 'நான் இவர்களை- என்னருமைக் குழந்தைகளை உன் வசம் ஒப்புவிக்கின்றேன். இவர்களைக் காப்பாற்றக்கூடிய அறிவும் ஆற்றலுமுடையவன் நீயே! அன்புடனவர்களைப் பராமரித்து மதசேவையையும் எனது மனோபீஷ்டத்தையும் நீ நிறைவேற்ற வேண்டும்' என்று அருளினார். பீடரிடத்தில் இயேசு கிறிஸ்துநாதர் தமது அடியார்களை அடைக்கலப் பொருளாக ஒப்புவித்த நிகழ்ச்சி இங்கு நமது ஞாபகத்திற்கு வருகிறது. இவ்வரிய வசனங்களைக் குருதேவர் புகன்றதும் நரேந்திரரை யொருவித துக்கம் வந்தடைந்தது. அவர் கண்களில் நீர் ததும்பின; நாவெழவில்லை. அவரெழுந்து வெளியே போய் தமது கண்ணீரைத் துடைத்துக்கொண்டு துக்கம் மனதைப் பிளக்க பெருமூச்செறிந்துகொண்டிருந்தார்.

சீடர்களின் துயரம்

ஸ்ரீராமகிருஷ்ணர் அவரது கடைசி நாட்களில் நரேந்திரரைத் தனியே யழைத்து முடிவுரையான சில உபதேசங்களைச் செய்து

கொண்டே வந்தார்; ஏனை யன்பர்களை எவ்விதம் மனஸ்தாபமின்றி சேர்த்து ஒற்றுமையுடன் மதசேவை புரியவேண்டுமென்பதைப் பற்றியும், அவர்களை எப்படிப் பழக்கவேண்டு மென்பதைப் பற்றியும் சில முக்கிய விஷயங்களை அவருக்கு ஓதிவந்தார். அவருடைய அந்திய காலம் நெருங்க நெருங்க, அல்லும் பகலும் அன்பர்கள் அன்ன ஆகாரமின்றி அவருக்குத் தொண்டு செய்துகொண்டே யிருந்தனர். அப்பொழுது ராமகிருஷ்ணர் நரேந்திரரைமட்டும் தமதறைக்குட் தனியே யழைத்து, கதவைத் தாளிடச்சொல்லி, தம் பக்கலிலிருந்து அவரை தியானஞ் செய்யச்சொன்னார். குருவின் விருப்பப்படி அவரும் அவாருகே யமர்ந்தவண்ணம் நிஷ்டையிற் கூடியிருந்தார். அப்பால் அவர் ஜாக்கிரத்தை யடைந்து, திரும்பிப்பார்த்து தமது குரு

தனித்த வார்த்தை

தேவர் கண்களில் நீர் மல்கி யிருக்கக்கண்டு, ஹிருதயம் துக்கத்தால் வெள்ளரிப்பழம்போல வெடிக்க ‘குருதேவா! ஏன் துக்கப்படுகிறீர்கள்?’’ என்றார். அதற்கந்த மகானுபாவர், ‘என்னப்பனே! நானிப்பொழுது ஒரு பக்கிரியாகிவிட்டேன்; பிச்சைக்காரன் யான்; எனது சித்தியான செல்வ மனைத்தையும் உனக்கே யளித்துளேன். அதனுதவியால், நீ உலக மாயையைப்போக்கி, மகத்தன காரியங்களைச் செய்து அப்பால் வரக்கடவாய்’ (நான் புறப்படப்போகின்றேன்) என்றார். நரேந்திரர் குழந்தைபோ லழுதார்; ‘எனது ஆருயிரை நான் எங்ஙனம் பிரிவது?’ என்று பயந்தார்; தடுமாறினார்.

குருதேவர் சமாதியாவதற்கு முந்திய இரண்டு தினங்களும் சிஷ்யர்களிடையில் துக்கமே பொங்கி வழிவதாயிற்று. ‘குருதேவர் நம்மைக் கைவிட்டார். இன்னும் சில தினங்களுக்குள் யாவும் சரியாகிவிடும்’ என் றெண்ணி விம்மி விம்மி யழுதனர்; ‘தெய்வமே! இது முறையோ! இது தகுமோ? இது தருமந்தானோ?’ வென்று முறையிட்டனர். என்ன செய்வார்கள் பாவம்? அவர் தீர்க்க சமாதியடைந்த அத்தினத்தில் சோகமே நிறைந்திருந்தது. இவர்கள் துக்கத்தைக் கண்டு சகியாதவன்போல் சூர்யன் மேற்குக் கடலில் அஸ்தமித்தான். துக்கத்தை யுணர்த்துவதுபோல் வந்தது கங்குற் பொழுது.

குருதேவரின் மகா சமாதி

ராமகிருஷ்ணர் உபாதியால் ஆஸ்வாஸம் செய்துகொண் டிருந்தார். அவரைச் சுற்றிலும் அன்பர்களமர்ந்திருந்தார்கள். நள்ளிரவு வரையில் அவ்வாறிருந்தது. அவர்க ளனைவரும் நிர்சப்தமாக இருந்தனர். சுவாஸம்

மேலும் கீழுமிழுத்துக்கொண் டிருந்தது. குருதேவர் கண்களைத் திறப்பதும் மூடுவதுமாக இருந்தார். அப்பால் அவர் உரக்க 'நரேந்திரா! உனக்குப் பரிபூர்ண நம்பிக்கை யின்னும் ஏற்படவில்லையா? ஸ்ரீராமனும், ஸ்ரீகிருஷ்ணனும் திருவவதரித்தவனே இப்பொழுது இந்த சரீரத்தில் ராமகிருஷ்ணனாக உள்ளான். ஆனால் உனது வேதாந்தக் கொள்கைப்படி அப்படி யில்லை யென்பாய்! உண்மையில் 'அதுவே சத்யம்' என்று கூறி யருளினார். அப்பொழுது அவர் கண்களினின்றும் கண்ணீர் அருவிபோல் அரும்பிக் கன்னங்களின் வழியே வழிந்து கொண் டிருந்தது. இராப்பொழுது கழிந்தது. குளிர் கங்கையின் காற்று பிரம்மானந்தமாக வீசிக்கொண் டிருந்தது. பொழுது புலரும் சமயம்! அப்புண்ய தினம் 1886-ம் ஆண்டு ஆகஸ்டு மீ 16-ம் நாள் ஆதிவாரம். பகவான் ராமகிருஷ்ண பரமஹம்ஸதேவர் வேத மகா வாக்கியத்தைச் சொல்லிக்கொண்டே பிரம்ம நிர்வாண நிலையை யெய்தினர். 'ஓம்' என்று அவர் திருவாய் மூடித் தத்சத்தை யடைந்தது. ஓம். தத். ஸத்.

அந்தோ! சுவாஸம் நின்றுவிட்டது. அனைவரும் அலற வாரம்பித்தனர். அழுகை யொலி அகிலத்தை அசைப்பதுபோ லிருந்தது.

சிஷ்யர்களின் பிரலாபம்

இச்செய்தி யெங்கும் வாயுவேக மனோவேகமாகப் பரவவே, இடியொலி கேட்ட நாகம்போல அவருடைய பக்தர்க ளெல்லோரும் காசிப்பூர் பவனத்தை யடைந்தனர். நரேந்திரருக்கோ சித்தபிரமைபிடித்துவிட்டது. துக்கம் உண்மையில் ஆர்கடலினும் பெரிதாகவே யிருந்தது. "என்ன குருநாதா! இனி எப்பொழுது தம் திருவாயினின்றும் இனிய-மதுரமான நிகாற்ற மெய்ப்பொருள் மொழிகளை யான் கேட்பது?" என்று பிரலாபித்து அலறினார் நரேந்திரர்.

அவர் எழுந்தருளி யிருந்த கட்டில் வெளியே கொண்டு வரப்பட்டது. பழைய ஆடைகளை அப்புறப்படுத்திவிட்டுப் புதிய பட்டாடையில் அவரது திருமேனியைக் கிடத்தினர்; மலர் கொண் டருச்சித்தனர். அப்பால் கொஞ்சநேரம் அவர் சவம் அங்கு வைக்கப்பட்டிருந்தது; பிறகு 'குருமகராஜ்கி ஜே' என்ற கோஷத்துடன் பெரிய ஊர்வலமாக பேரநாகூர் தகன கட்டத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது. கண்ணீருங் கம்பலையுமாய் சீடர்களனைவரும் அவரது திருமேனி பொருந்தியுள்ள கட்டிலைத் தாங்கிச் சென்றனர். பலர் அக்கட்டிலையும் அப் பரமாத்மாவின் திருவடிகளையும் தொட்டுக் கண்களி லொத்திக்

கொண்டனர். நாமசங்கீர்த்தனம், தேவர்களுக்குக் குரு தேவரின் வரவை யறிவிப்பதுபோல் விண்ணையளாவி ஒலித்தது. பின்பு, கட்டத்தை யடைந்ததும் ஜதை யடுக்கி அதில் குருதேவரின் திவ்ய தேகத்தை மெல்லக் கிடத்தினர். பிறகு, அனைவரும் மந்த்ரோக்தமாக சில பூஜைகளைச் செய்து தீ மூட்டினர்; அகிலையும் குங்கிலியத்தையும் வெண்ணெய்யையும் அள்ளிப் பெய்தனர். அக்னி ஜெகஜ்யோதியாகக் கிளம்பி வியாபித் தெரிய வாரம்பித்தது. அப்பொழுது சிஷ்ய கோடிகளனைவரும் வீழ்ந்து நிலந்தோயப் பணிந்து, கண்ணீர் பெருக 'பகவான் ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸ மகாசற்குரு மூர்த்திகி ஜே!' என்று ஆரவாரித்தனர். ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி:

தகன காரியம்

17-ம் அத்தியாயம்

பேரநாகூரில் ஆச்சிரம ஸ்தாபனம்

பகவான் ஸ்ரீராமகிருஷ்ணரின் சீடர்கள் நரேந்திரருடன் தாத்காலீக வாஸஸ்தலமாக சின்னாட்கள் காசிப்பூரில் தங்கிப் பின் பொராநாகூர் ஆச்சிரமத்தை வந்தடைந்தனர். ராமகிருஷ்ணரின் மகா சக்தியே ஆவிர்பவித்ததுபோல நரேந்திரர் அந்த யௌவன சந்நியாசிகளின் தலைவராய் விளங்கினார். அந்த ஆச்சிரமத்தின் ஒருபகுதி யோகாப்பியாசத்திற்கென நிச்சயிக்கப்பெற்று ராமகிருஷ்ண பரமஹம்ஸர் படத்துடனும், யோகாசனங்களுடனும், பூஜைக்கான புஷ்ப பலாதிகளுடனும் விளங்கிற்று. அப்பொழுதுதான் துறவறத்தைத் தூய்மையுடன் ஏற்றவர்களான அவ்விளைஞர்கள் வறுமையால் பெரிதும் பீடிக்கப்பட்டபோதிலும், அவ்வாச்சிரமத்தில் துயில்வதையும் விட்டு சதாகாலமும் யோகசாதனங்கள் செய்வதும், பகவந்நாம சங்கீர்த்தனம் பாடுவதுமாக நரேந்திரராலூக்கப்பட்டு வந்தார்கள். நரேந்திரரைப் பார்க்குந்தோறும், அவருடைய மனமிளகிய தெவிட்டாத தேன்மொழிகளைக் கேட்குந்தோறும், நகையாடி நாநா விஷயங்களைப் பற்றி நவிலுங்காலையும் அவ்வன்பர்கள் பரமானந்தமடைவர். நாடகத்தில் வேடதாரிகள் வேடங்களைந்து புதுவேடம் புனைந்து வருவது போல், ராமகிருஷ்ணரே தமது வயோதிகவடிவம் நீங்கி, நரேந்திர

சிஷ்யர்களின் ஸ்திரபுத்தி

ரென்ற பால்யரூபத்தில் நுழைந்தனரோவென்று, அந்த ஞானகுருவின் சகல குணங்களும் நரேந்திரரிடத்தில் ஒருங்கே யமையப் பெற்றிருந் தமை கண்டு வியப்புற்றுக் கொண்டாடினார்கள். நரேந்திரநாத தத்தர் சந்நியாசியாயும், சாதுவாயும், தீர்க்கதரிசியாயும், தேச பக்தராயும் தமது கெம்பீர வசீகர தேகத்துடன் விளங்கினார்.

நிற்க, மகா புருஷர்களுடைய தீர்க்க சமாதி, சீடர்களுக்குச் சிறிது மனக்கிலேசத்தைத் தருவதாயிருந்தபொழுதிலும், பின்னர் அம்மகான்களின் உபதேச அதிர்ச்சியால் அவனி உயர்கின்றது. அடியார்களும் தமது குருநாதரின் தர்மத்தை ஸ்தாபிக்க விரைந்து முன் வருகின்றனர். அத்தன்மைபோல் ராமகிருஷ்ணருடைய சீடர்களும் குருவின் மரணத்தால் சோர்வடைந்து விடவில்லை. அவருடைய மனோ சக்தி அவர்களைத் தூண்டிக்கொண்டே யிருந்தது. ராமகிருஷ்ணர் மகா சமாதி யெய்தியபின் சில நாட்கள் வரையில் அவர்கள் துக்கித்துத் திகைத்தனராயினும் அப்பால் தெளிந்து தெய்வாம்சர்களாகி மனந் தேறினர். ஆசார்யமுகமாக ராமகிருஷ்ண தேவரிடம் சந்நியாசம் பெற்றுக்கொண்டவர்களெல்லாம் உறுதியாக நின்று ஏனைய அன்பர் களைத் தேற்றி வந்தனர். குருவின் பெரும் பிரிவை

சிஷ்யர்களின் நிலை அவர்கள் ஏற்கனவே எதிர்பார்த்தவர்களாயினும், நொடிப்பொழுதில் அவரை இழக்க நேர்ந்தமைக்கு வருந்திப் பின் மனந்தேறினர். காசிப்பூரி லவர்களிருந்துவந்த வீட்டிற் கேற்பட்டிருந்த ஒப்பந்த முடிவிற்கு இன்னும் ஒருவார காலமே யிருந்தது. ஆதலின், வேறோரிடத்தில் ஆஸ்ரமத்தை மாற்ற அவர் களிற் சிலர் ஏற்பாடு செய்துகொண்டிருந்தார்கள். கங்குற் பொழு தெல்லாம் பகவந்நாம பக்தியிலும், யோகசாதனங்களிலும் கழிந்தன. ராமகிருஷ்ணரின் என்புகள் நிறைந்த சம்புடத்தை அவர்கள் பிரதக்ஷிணஞ்செய்து பஜனை செய்து வந்தார்கள். நரேந்திரர் அவர்களிடையே அமர்ந்து தமது சிஷ்யநிலையில் நேர்ந்த சில ஆச்சரியகரமான யோகானுபவங்களை ஏனையோர்க்குக் கூறுவதும், பிரம்மானந்தமாகப் பாடுவதுமாக அவர்களைக் களிப்பித்து வந்தார். இவ்விளைஞர்களின் தீவிர குருபக்தியையும், உறுதிப்பாடுடைய சந்நியாச நிலையையுங்கண்டு அதிசயிக்காதாரில்லை. ராமகிருஷ்ணருடைய சக்தி அம்மடத்தில் வியாபித்து சீடர்களிடத்தில் குதூகலத்தை வுண்டுபண்ணிக் கொண்டிருந்தது. குருதேவரின் மகா சமாதி வந்துற்ற அதேவாரத்தி லொருநாள் நள்ளிரவில் நரேந்திரர் தமது சகோதரர்களுடன் காசிப்பூர் நந்தவனத்

தில் உலாவிக்கொண்டிருக்கையில், திடீரென்று ஜோதிவடிவான உருவமொன்று அவர்கள் முன் தென்பட்டது. அது ராமகிருஷ்ணருடைய திருவுருவா யிருக்கக்கண்ட நரேந்திரும் அவரது அன்பர்களும் வியந்து, மற்ற சீடர்களை விரைந்தழைக்குந்தருவாயில் அவ்வடிவம் மறைந்து விட்டது. அப்பொழுது நரேந்திரர் 'நமது குருதேவரின் கேவல ஸ்தூலசரீரமே தீக்கிரையாயிற்றே யொழிய, அவருடைய் சூக்ஷ்ம தேகமானது தீயினும் வல்லதாய் ஒளிர்கின்ற' தென்று கூறி ஆரவாரித்தார். சீடர்களின் மனவுறுதியைச் சித்தப்படுத்தியதற்கு இந்த சம்பவமும் ஒரு காரணமெனலாம்.

காசிப்பூர் வீட்டைக் காலிசெய்யவேண்டிய நாளும் நெருங்கிற்று. ராமகிருஷ்ண பரமஹம்ஸர் மரிப்பதற்குமுன் முகஸ்துதிக்காக சீடர்கள் குழாத்திற் கூடியிருந்து பொருளுதவி புரிந்தவர்களிற் பலர் இப்பொழுது மாயமாய் மறைந்து விட்டனர். குருதேவர் கண்டமாலை நோயாற் வாதனை யடைந்திருந்தபொழுதும், அவருக்குத் தொண்டு செய்துகொண்டிருந்த சீடர்களிற் சிலர் கலாகுமாரப் பரீக்ஷைக்கு வாசித்துக்கொண் டிருந்தார்கள். அவர்கள் ஆத்மவித்தைக்கு அணுவளவும் பொருந்தாத கல்வியால் வரும் பட்டங்களைப் பெறும் விருப்பத்தை ராமகிருஷ்ணருடைய சிஷ்யரான பிறகு மறந்தனராயினும், குருவின் தூண்டுதலால், அப்பட்டங்கள் தமது சஞ்சாரத்தில் தமக்கு ஆதரவைத் தேடித்தருமென்று கருதி ஒருவாறு இசைந்து கற்று வந்தனர். இப்பொழுது உதவிசெய்யக் கூடியவர்கள் பின்வாங்க அவர்களுடைய கதியென்ன? இச்சமயத்தில் அந்த வாலிப சந்நியாசிகளின் பெற்றோர் உறவினரான பலர் இல் வாழ்வை யேற்குமாறு அவர்களைப் பன்முறையும் வற்புறுத்தினர். அவர்கள் ராமகிருஷ்ணரின் சீடர்களல்லவோ! எதுவரினு மினிக்கொண்ட கருமத்தைக் கைவிடுவதேது? இச்சிஷ்ய வர்க்கத்தில் முக்கிய கிருஹஸ்தர்களான ஸ்ரீ பலராம்போஸ், சுரேந்திரநாத் மித்ரா, கிரிஷ் சந்திர கோஷ், மோகேந்திரநாத் குப்தா ஆகிய இந்நால்வரும் தனியாக ஒரு ஆச்சிரமத்தை நிறுவி இவ்வாலிபச் சந்நியாசிகளை வசிக்கச் செய்வதெனத் தீர்மானித்தனர். இச்சமயம் சில கிருஹஸ்தர்களுக்கும் அவ்வாலிபத் துறவிகட்கும் பலத்த வாக்குவாதங்கள் நிகழ்ந்தன. 'ஐயோ! உங்களுக்குப் பொருளுதவி புரிவார் யார்? உணவுக்கு நீங்களென்ன செய்வீர்கள்? உங்கள் எதிர்கால வாழ்வுதானென்னவாகும்?' என்று

பெற்றோர்களின் பிடிவாதம்

இரங்கி அவர்களுடன் வாதாடின பெற்றோர்களை அவர்கள் "நாங்கள் ராமகிருஷ்ணருடைய திருவடிகளை ஆராதித்தவர்கள். நாளை யென்ன செய்வதென்று கலங்கும் இயல்பு எமக்கில்லை. கைப்பிச்சை யெடுத்து அடியேங்கள் துறவற நெறிப்படி வயிறு வளர்ப்போம். எதற்கு மஞ்சோம்" என்றியம்பித் தேற்றினர். இவர்களுடைய தைரியமான மொழிகளைக்கேட்ட தயாளுவான ஸ்ரீபாபு நரேந்திரநாத் மித்ரா, ஆனந்த பாஷ்பத்துடன் தாம் தமது உதவியை நிறுத்தாமற் புரிந்து வருவதாயும், அப்பொருளையேற்று காலங்கழிக்குமாறு வேண்டடீசீட்ர்களும் மனமொப்பி மகிழ்ந்தனர். அவ்வன்பர் விருப்பப்படி தக்ஷிணேஸ்வரத்திற்கும் கல்கத்தாவிற்கு மிடைவழியிலுள்ள பெரநாகூரில் ஒரு சிறு மடத்தை யமைத்துக்கொண்டார்கள். அது இடிந்த ஒரு பாழடைந்த வீடு; இரண்டடுக்கு மெத்தைவீடே யாயினும் அதன் கீழ்ப்பாகம் மிகவும் சீரணமாகவும் வசிக்கத் தகுதியற்றதாகவும் இருந்தது. பாம்புகளும் பல்லிகளும் அங்கு நித்யவாசம் புரிந்தன. வாயிற்படியு மிடிந்து, தாழ்வாரமும் தளவரிசையுந் தகர்ந்து அறைகள் அகோரமாகக் காணப்பட்டன. அவ்வீடு சத்தியத்திற்குக் கட்டுப்பட்டு நின்று, இன்றோ நாளையோ இடிந்துவிடுமென எதிர்பார்க்கக்கூடிய நிலையிலிருந்து. அதற்குச் சமீபத்தில் மற்றொரு வீடு அதையொத்த நிலையில் அடுத்த தோட்டத்தி லமைந்திருந்தது. ஆங்கு அதன் உரிமையாளரின் குலதெய்வ பூஜை நிகழ்வது வழக்கம். உப்புமண் பிடித்து ஒருவித நாற்றத்துடன் அவ்வீடு தோற்றத்திற்கும், வசிப்பதற்கும் ஏற்றதாயில்லை. அதனைச்சுற்றி மா, பலாசு மரங்கள் அடர்ந்து வளர்ந்திருந்தன. அவ் விருக்ஷங்களினிடையே வில்வமரமொன்றும் இருந்தது. அப்பாழ்மனையின் புறக்கடையில் பாசி படர்ந்து துர்நாற்றம் வீசும் சிறுகுளமொன்றுண்டு. அவ்வீட்டைப் பேய்வாழு மிடமென்றும், தற்கொலைபோன்ற கோரசம்பவங்கள் நிகழ்ந்த காராக்கிருஹமென்றும் பலர் தமது மூட்டைகளை யவிழ்த்து விட்டனர். திடபுத்தியுள்ள அவ்வன்பர்கள் இதற்கெல்லா மஞ்சினரில்லை. அம் மனை குறைந்த வாடகைக்குக் கிடைத்தமையாலும், குருதேவருடைய உடலம் தகனஞ்செய்யப்பட்ட இடம் சமீபத்தி லிருந்ததாலும், கங்காநதி திரை கொண்டெழுந்து அருகிலோடுவதாலும், நகரச் சந்தடியின்றி ஏகாந்தவாழ்விற் கேற்றதா யிருந்தமையாலும், அவர்கள் அதில் வசிக்க மனமொப்பினர்.

பெரநாகூர் ஆச்சிரமம்

இவ்விதம் பொரநாகூரில் அவர்களது வாஸஸ்தல மமைந்தது. சிஷ்யர்களிற் சிலர் குடும்பத்திற்கும் தமக்குமுள்ள தொடர்புகளே முடித்துவரக் கல்கத்தாவிற் கேகினர். சிலர் அருகாமையிலுள்ள தலங்களுக்கு யாத்திரை போயினர். இவ்வாருக, நரேந்திரரும் கல்கத்தாவிற்கேகுவதும் குடும்பவிஷயங்கள் தம்மைத்தொடர்ந்து தமது எதிர்காலத்திற் பந்திக்காதவாறு சில நிரந்தரமான ஏற்பாடுகளேச் செய்வதுமாக விருந்தார். குருதேவர் மகா சமாதியடைந்த அவ்வாண்டு ஆகஸ்டு மாதம் பதினேந்தாந் தேதியிலிருந்து டிஸம்பர் மாதம்வரை ஒவ்வொருவராக பொரநாகூர் ஆச்சிரமத்தில் வந்து சேர்ந்துகொண்டேயிருந்தனர். இவர்களேயெல்லாம் நரேந்திரர் தேகாப்பியாசத்திலும் யோகாப்பியாசத்திலும் பழக்கி வந்தார்; அவர் தமது குடும்ப விஷயங்களே ஒருவாறு முடித்து வைத்துவிட்டு, பொரநாகூர் ஆச்சிரமத்தை விட்டகலாது கல்தாவுக்கு பி. ஏ., பட்ட நிமித்தமாகச் சென்றிருந்த நண்பர்களேயெல்லாம் தமது குருதேவரின் செய்தியாகிய கட்டளேயுடன் சென்று தாக்கி 'ஞான ஹீனமான வித்தை வித்தையாகுமா? அவித்தையைத்தேடி நீங்கள் அல்லும் பகலும் கற்பதேன்? பட்டத்தைச் சட்டைசெய்யாது உடனே விரைந்து வாருங்கள். ராமகிருஷ்ணருடைய உபதேசங்களே நீங்கள் இவ்வளவு சீக்கிரத்தில் மறந்தீர்கொலோ! விரைந்து மாயையை உதறித் தள்ளிவிட்டு வெளியேறுங்கள். நாம் இறைவனேப் பஜிப்போம்; நாம் சங்கீர்த்தனம் பண்ணுவோம்; புறப்படுங்கள்' என்று அவர்களேத் தட்டியெழுப்பிக் கொண்டுபோய் பொரநாகூர் ஆச்சிரமத்திற் சேர்த்தார். இவ்வாருக ராமகிருஷ்ணருடைய பிரிய சீடர்களனேவரும் பொரநாகூர் ஆச்சிரமத்தைத் தமது நிரந்தர வாசஸ்தலமாகக்கொண்டு ஒன்று சேர டிசம்பர் மாதம் வரையில் பிடித்தது.

சீடர்களனேவரையும் ஒன்று சேர்த்தல்

அன்றுமுதல் நரேந்திரர் தமது மகத்தான மதசேவையைத் தொடங்கினர். அவருடைய திருமேனி யழகால் வசீகரிக்கப்பட்ட சீடரெல்லோரும் பணிவாக நரேந்திரரை பந்த வாத்ஸல்யத்துடன் போற்றி வந்தார்கள். 'நரேந்திரா! உன்னிடத்திலெனது அருமைக் குழந்தைகளே ஒப்புவித்தேன். அவர்களுக்கு அறிவூட்டி வளர்ப்பது உன்கடன்' என்று குருதேவர் கூறிப்போந்த வாக்கியங்கள் அவர்களுக்கு நரேந்திரரிடமிருந்த அன்பைப் பெருக்கி வந்தன.

அவ்வாச்சிரமத்தில் வசித்த சீடர்களுக்கு ஸ்ரீராமகிருஷ்ணருடைய

பரிசுத்தமான ஹஸ்திகளைத் தவிர வேறு ஆஸ்தியில்லை. அதை அவர்கள் ஒரு குடத்திலிட்டு வைத்து வழிபட்டு வந்தார்கள். இவ்வாறிருக்குங்கால் கிருஹஸ்தராயிருந்த அன்பர்களுக்கும், துறவறநிலை மேற்கொண்டவர்களுக்கும் குருதேவரின் ஹஸ்தி நிறைந்த சம்புடத்தை யார் வைத்துக்கொள்வதென்ற விஷயத்தில் அபிப்பிராய பேதங்களேற்பட்டன. இல்லற அடியார்கள் சந்நியாசமேற்ற சற்சனரை நோக்கி 'நீங்கள் துறவிகள்; நாளை யிங்கிருப்பது நிச்சயமல்ல; தேச சஞ்சாரத்திற்குப் புறப்பட்டால் இச்சம்புடத்தை யென்ன செய்வீர்கள்? ஆதலின் அதனை ஒரு பொதுவிடத்தி லமைத்து மடமொன்று கட்டினால் அம்மகானது பக்தகோடிக ளனைவரும் பூஜிக்க வசதியா யிருக்குமல்லவா?' என்று வாதித்தனர். இவ்வுரை நியாயமாகத் தோன்றினும், குருதேவரிடங் கொண்டிருந்த பக்திப் பிரபாவத்தால் சந்நியாசமேற்ற நண்பர்கள் கொடுக்க இசையவில்லை. அப்பொழுது நரேந்திரர் அவர்களை யழைத்து "அன்பர்களே! மூட நம்பிக்கையை விட்டொழிக்க வேண்டுமென்ற ஆசாரியன் வாக்கு தங்கள் செவிகளி லொலிக்கவில்லையா? ஹஸ்திகளை வைத்துக்கொண்டு பரமாசாரியருடைய உபதேசங்களை மறப்பதாற் பயனென்ன? அவருடைய சித்தாந்தத்தை நிறைவேற்றுவதன்றோ சீடராகிய பற்றறுத்த நம்போன்ற துறவிகளுக்கழகு! இச் சிறு விஷயத்திலேயே நாம் சச்சரவு செய்து கொள்வோமானால் அம்மகானின் மகத்தான மனோரதத்தை நிறைவேற்றுவதெப்படி? வீண் வாதத்தை விடுங்கள்" என்று அறிவூட்ட, அவர்கள் ஏகோபிதமாக சம்புடத்தை அவ்வில் வாழும் அன்பர்களிடமளித்துவிடச் சம்மதித்தார்கள். அதற்கிணங்க ஓர் நல்லநாளில் சோஷி அந்த சம்புடத்தை சிரசின் மீது வகித்துச் செல்ல ஸ்ரீராமச்சந்திர தத்தரின் 'கஞ்சுர்கஹி' நந்தவனத்திற்குக் கொண்டுபோகப்பட்டது. அவ்வாசாரியரின் தூபி விளங்குவதால் அத்திரு நந்தவனத்திற்கு அன்று முதல் யோகோதயம் என்ற சிறப்புப்பெயர் வழங்கப்பெற்றது. சோஷி, நிரஞ்சன், ராமபாபு என்னும் மூன்று இல்லற வடியார்களுங்கூடி தினந்தோறும் அந்த சமாதிக்குப் பூஜை நடந்து வரும்படி ஏற்பாடு செய்தார்கள். ராமகிருஷ்ணருடைய ஹஸ்தியின் மற்றொரு பகுதியை அந்தத் துறவிகள் பெரநாகூர் மடத்தில் வைத்துப் பூசித்து வந்தார்கள். தந்தையையொத்த ராமகிருஷ்ணருடைய ஆஸ்தியான ஹஸ்தியைப் பற்றி அன்பால் நேர்ந்த சச்சரவு அடங்கியபின் யாவரும் அங்

குருதேவரின் ஹஸ்தியே ஆஸ்தி

யோன்யமாயிருந்து வந்தனர். துறவறம் பூண்டோர் ஸ்ரீராமகிருஷ்ணருடைய படுக்கை ஆடை முதலியவற்றைப் பூஜாக்கிரஹத்தில் வைத்துக் காப்பாற்றி வந்தனர்.

அடியார்களனைவரும் நரேந்திரரை விட்டகலாது, அவரையே குருதேவரின் வாக்குப்படித் தமது தலைவராகக்கொண்டு போற்றி வந்தார்கள். ஸ்ரீராமகிருஷ்ண மடம் 1886-ம் ஆண்டுமுதல் 1892-ம் ஆண்டுவரை பெரநாகூரிலும், 1892-முதல் 1897-வரையில் தக்ஷிணேஸ்வரத்திற்குச் சமீபத்திலுள்ள அலம்பசாரிலும், பின்னர் பெரநாகூருக்கு நேராகக் கங்காநதியின் அக்கரையிலுள்ள நிலம்பார் முகர்ஜியின் தோட்டத்திலு மிருந்துவந்தது. இஃதே இப்பொழுது பேலூர் மடம் என்று பிரபலமாய் விளங்குகிறது.

அக்காலம்முதல் நரேந்திரர் அலைந்து திரியும் துறவியாக வெளிப்படுகின்ற மூன்று வருடகாலம் வரையில் சந்நியாசமேற்ற அன்பர்களனைவரும் பெரநாகூர் ஆச்சிரமத்திலேயே வசித்து வந்தார்கள். அவர்கள் உணவுக்காகக் கவலைப்படாது கிடைத்ததை அருந்தி, எப்பொழுதும் மதாசார நூல்களைக் கற்பதிலும், யோகப்பயிற்சி செய்வதிலும் ஊக்கங்கொண்டிருந்தனர். ஆங்கில, ஆரிய பாஷைகளிலுள்ள அரிய நூல்களையும் அவர்கள் கற்று வந்தார்கள். சில மகான்கள் மூர்த்திகளின் படங்களைப் பூஜாக்கிரகத்தில் வைத்துப் பூஜித்து வந்தார்கள். இவற்றோடு, சில ஜபமாலைகளையும், மான்தோலாசனங்களையுந் தவிர அவர்களிடம் வேறொன்றுமில்லை.

அவர்களது யதேச்சையான வாழ்வின் பெருமையே பெருமை! அங்கு விளங்கிற்று ஒரு தெய்வீக விருக்ஷம்! அதன் அடிமரமாக விளங்கினார் நரேந்திரர். சீடர்கள் வளருங் கிளைகளாக வைராக்கியத்தால் வளர்ந்து வந்தனர். ஆசாரியருடைய அன்பே ஆணி வேர்களாக அனைவரையும் வளர்த்து வந்தது. கலையென்ற நன்னீர் பூமியிலிருந்து கடவுளருளோடு அத்தருவை வளர்த்தது. சுரேந்திரநாத் மித்திரா என்பார் தம் பெயருக்கேற்ப உள்ளன்புடன் கோபால் என்ற ஓரன்பர் மூலம் சிறிதும் பசிப்பிணியால் பக்தகோடிகள் வாடாதவாறு அவர்களுக்கு வேண்டிய சகலப் பொருள்களையும் 'உடுக்கை யிழந்தவன் கைபோலாங்கே' உதவினார். பல ஆண்டுகளுக்குப் பின்னர் அவருடைய மெய்யன்பால் தாமடைந்த உதவியைக்குறித்து நரேந்திரர் 'அண்ணலே! நாங்கள் கட்டியுள்ள சமயஸ்தாபன கட்டிடத்திற்கு அஸ்திவாரக்கல் நாட்டியவர் நீங்களே! குருதேவரின் மூலமந்திரத்தையும்,

எங்கள் துறவறத்தையும் காப்பாற்றியவரும் நீரே. வைராக்கிய முடையாராக எம்மை வகுத்தவரும் நீரேயன்றோ?'' என்று வரைந்திருந்தார்.

இந்நாட்களில் அப்பெராநாகூர் ஆச்சிரமத்திலிருந்த சீடர்களின் பெற்றோர்களும், காப்பாளர்களும் வந்து அடிக்கடி பலாத்காரமாகவும் அழுதும் புரண்டும் பல உபாயங்களால் அவர்களை இல்லறத்திற்குத் திரும்புமாறு மன்றாடினர். அந்த பரமசாதுக்கள் 'இல்லறப் படுகுழிக்கு இனி யாம் திரும்புதலில்லை. வாதம் பிடிவாதத்திற்கு முன்னில்லாதாதலின் செல்லுக' வென்றியம்பி யவர்களை அனுப்பிவிட்டனர். நரேந்திரர் அவர்களைத் தமது கானத்தாலும் தியானத்தாலும் அறிவுரைகளாலும் ஆசார்ய மகிமாப் பிரபாவத்தாலும் உற்சாகப் படுத்தி வந்தார். அவர்கள் தர்க்கம் வியாகரண நூல்களிற் பாண்டித்யமடைந்து வந்ததன்றி, மேல்நாட்டு மேதாவிகளின் லோகாயதவாதம் முதலியவற்றைப் பற்றி வாதித்து அவை யாவும் ராமகிருஷ்ண பரமஹம்ஸரின் அத்வைத மதத்திலடங்கிவிடுவது கண்டு ஆசார்யதோத்திரம் கூறி மகிழ்ந்திருந்தார்கள். அவர்கள் பண்டைநாட்களில் துறவிகளும், மகரிஷிகளும் எவ்வாறு தங்கள் வாழ்நாட்களை யோகசாதனத்திலும் சேவையிலும் கழித்து வந்தார்களென்பதைக் கண்கூடாகத் தரிசியாத இக்கால மக்களுக்கு ராமகிருஷ்ணருடைய சீடர்கள் விளக்கிக் காட்டுவார்போல விளங்கினர்; யானெனல் அறுத்து எமதெனல் விடுத்து முக்திசாதனத்தில் முயன்று வந்தனர். ஹிந்துமதத்திற்குரிய பெருமை, மகிமை, தொன்மைகளைப் பாமரனு மறியும் வண்ணம் அவர்கள் தொண்டு புரியலாயினர். அவ்வாண்டு டிஸம்பர் மாதத்தில் பெராநாகூர் மடத்தைவிட்டு அவர்களனைவரும் சுவாமி பரமானந்தருடைய அன்னையினழைப்பிற்கிணங்கி அனந்தபுரியென்ற கிராமத்திற்கு யாத்திரை செய்து திரும்பினார்கள்.

சந்நியாச ஆசிரமத்தில் உறுதி

அனந்தபுரி யாத்திரை

அவ் யாத்திரையை முடித்துத் திரும்பியதுமுதல் அவ்வாலிபத் துறவிகள் தங்கள் துறவறநெறியின் மேன்மைக்கான வழிகளில் தீவிரமாகப் பழகத்தொடங்கினர். நரேந்திரருக்கும் அவர்களுக்குமுள்ள அன்பு வளர்ந்து குருசிஷ்யபாவத்தில் வலுவடைந்து விட்டது. நரேந்திரரை உயிராகவும் தங்களை உடலாகவும் அவர்கள் அபிமானித்தார்கள். மானஸீகபூஜை, மூவாசை கடிதல், ஈஸ்வரபஜனம், சேவை முதலியவற்றில் அவர்கள் உறுதியுடன் தேறினர். நரேந்திரர் அவர்களுக்குக்

கிறிஸ்துநாதரின் சரித்ரோபதேசம்

கிறிஸ்துநாதரின் திவ்ய சரிதையை தத்துவார்த்தங்களுடன் விளக்கி, அவருடைய தியாகத்தையும் பொறுமையையும் புகழ்ந்துரைப்பார். கிறிஸ்துநாதர் பல யோகசித்தியினாலேயே அற்புதங்களை யியற்றினரென்பார். அவரைப் பாபிகள்—அநாகரீகர்கள் துன்பப்படுத்திச் சிலுவையிலறைந்து சித்திரவதை செய்தகாலத்தில் கூறிய மகாவாக்கியங்களை நரேந்திரர் விளக்குங்கால் சிஷ்யகோடிகள் தன்னறிவிழந்து தியானத்திலாழ்வார்கள். நரேந்திரர் அவ்வேசுநாதர் சரிதையைப் பேசுங்கால் ஆவேச முடையவராய்,

"அன்பர்களே! எழுமின்! இப்பொழுது நீங்களே கிறிஸ்துவாகிவிடவேண்டும். அவரைப்போல தியாகஞ்செய்யக் கனவிலும் சித்தமா யிருக்கவேண்டும். கிறிஸ்துநாதரை நாம் பார்த்ததில்லை. ஆனால் அவரைக் காண்பதற்குப் பதிலாக ஸ்ரீராமகிருஷ்ணரைக் கண்டோம். எந்த விஷயத்தையெடுத்துக்கொண்டாலும் நமது குருதேவரைவிடச் சிறந்த உதாரணமாக வேறு எவருமில்லை.

என்று கூறியவாறே சமாதி யடைந்து விடுவார். இவ்விதம் பொரநாகூர் ஆச்சிரமத்தில் தெய்வீகப் பரிமளகந்தம் எப்பொழுதும் கமழ்ந்து கொண்டே யிருக்கும். அவர்கள் சதாகாலமும் குருநாதருக்குத் துதி பாடிக்கொண்டே யிருப்பார்கள். அவ் வாச்சிரமத்தில் பக்தியென்ற பால் பொங்கி வழிந்துகொண்டே யிருந்தது. இப்பாலியர்களின் வைராக்கிய சித்தத்தைக் கண்டார் யாவரும் வியப்புற்றனர்.

பொரநாகூர் ஆச்சிரமத்தில் அவர்களியற்றிய வாழ்வு சிறிதும் கவலை யற்றதே. உப்பிலாதுண்டு அவர்கள் ஒப்பிலா மணிகளாயினர். சிலசமயம் காலையில் பஜனை தொடங்கி மாலைவரையில் அன்ன ஆகார சிந்தையற்றவர்களாக 'சீதா-ராமா' 'ராதா-கிருஷ்ணா' என்று ஆடிப்பாடியானந்தமடைவர். 'விழிமின்! எழுமின்! ஸ்ரீகிருஷ்ண நாமாமிருதத்தை யருந்த வம்மின்' என்று நரேந்திரர் ஏனைய அன்பர்களை அதிகாலையிற் றட்டி யெழுப்புவார். சகல மதக் கிரந்தங்களையும் நரேந்திரர் தமதன்பர்களுக்குப் புகட்டி தர்க்கத்திலும், இலக்கண இலக்கியங்களிலும் அவர்களை வல்லவராக்குவார். தேசீயம், இராஜீயம்,

பல்துறைக் கல்வி பயிலல்

தெய்வீகம் முதலியனவும் அங்கு பயிலப்பட்டன. அக்பரின் அரிய குணங்கள், பாரத மகா யுத்த சந்நாகம் முதலியன பொருளாகச் சில சொற்பொழிவுகளும் நிகழ்வதுண்டு. ஜனசார, மதாசார விஷயங்களிலும்

நரேந்திரர் பூர்ண பயிற்சியுட னிலங்கினர். பிரபல பாஷை நூற்புலவர்களும், வித்வஜ்ஜன சேகரர்களும் பொரநாகூர் ஆச்சிரமத்திற்கு வந்து நரேந்திருடன் வாதங்கள் புரிவர். அவர்களையெல்லாம் நரேந்திரர் தமது பாஷாஞானத்தால், சாஸ்திர விதிகளை யனுசரித்து மறுக்க வொண்ணு மேற்கோள்களுடன் தர்க்கிக்கத் தொடங்கி வெற்றியடைவார். அவர் அமரிக்காவிற்குச் சென்று வெற்றிமாலை சூடித் திரும்புவதற்கு முன்னரே, அவருடைய மகிமை ஸ்ரீமத் விவேகானந்த சுவாமிகளென்ற பெயருடன் ஜெகத்பிரசித்தமாகு முன்பே, அவருடைய சீடர்களால் 'ஹிந்து சமய தத்துவ ஞானி' யென்று போற்றப்பட்டு வந்தார். பல கிறிஸ்தவப் பாதிரிமார்கள் அவருடன் தர்க்கித்து அவருடைய தத்துவஞானத்திற்குத் தாழ்ந்தே போயினர்.

பொரநாகூர் ஆச்சிரமம் சிறந்த தர்க்க சங்கமாக விளங்கிற்று; நரேந்திரர் சத்சங்க அக்கிராசனதிபதியாகத் திகழ்ந்தார். எந்த கக்ஷியைச் சார்ந்தும் அவர்பேசி, தர்க்க முறைப்படி வெற்றி படையும் படிச் செய்வார். சமயம், வேதாந்தம், உபநிஷதம், இதிகாச புராணங்களாகிய யாவும் அங்கு ஓதப்பெற்றன. இலக்கண இலக்கிய ஆராய்ச்சி, தந்திரவித்தை, ரசாயன சாஸ்திரம், சமய ஒப்புவமை, தத்துவநூல், நாஸ்திகவாதக் கண்டனம் முதலிய விஷயங்களைப் பொருத்த விரிவுரைகளாங்கே நிகழ்ந்தன. தெய்வமென்பது சுத்த சூனியமென்று நரேந்திரர் யாவரும் ஒப்பும்படி கூறி, பின் அதனை மறுத்து தெய்வ நிச்சயத்தை நிலைநிறுத்திக் காட்டுவார்.

பொரநாகூர் ஆஸ்ரமமே ஓர் தர்க்க சங்கம்

சாங்கியம், யோகம், நியாயம், வைஷீசிகம், மீமாம்சம், வேதாந்தம், ஆகிய சகல விஷயங்களையும் நரேந்திரர் தமதன்பர்களுக்குப் புகட்டி வந்தார். அவர்களி லொவ்வொருவரும் ஒவ்வொரு விஷயத்திலும் பூர்ண பண்டிதராக விளங்கவேண்டுமென்பது அவருடைய விருப்பம். சைவ, வைணவ சமய சமரஸத்தை அவர் பல தக்க மேற்கோளால் தெளியவைப்பார்; புராணங்களைப் புதிய முறையில் புகட்டி வருவார். நரேந்திருடைய மதிநுட்பம் சீடர்களுக்கு ராமகிருஷ்ணருடைய பிரிவை மறைத்துவிட்டது. எவர் எச்சமயத்தில் எந்த விஷயத்தைக் குறித்து எதிர்த்தாலும் அவர்களை யடக்கித் தமது அன்பர்கள் வெற்றியுடன் விளங்கவேண்டுமென்ற அவாவால், தமது குருவாக்கியங்களைச் சிரமேற்கொண்டு அவர் உள்ளன்புடன், பல ஹிந்துமத ஜீவாதாரக் கிரந்தங்களைத் தம் சீடர்களுக்குப் புகட்டிவந்தார். இவை யாவற்றையும்

விட, அறிவாலும், பொருளாலும், அகந்தையாலும் தாழ்த்தப்பட்டவர்களை, திரிகரண சுத்தியுடன் உயர்த்த வேண்டுமென்ற அவாவே அவருடைய மனத்திற் குடிகொண்டிருந்தது.

'அறிவென்பது அனைவருக்கும் பொதுவானது. அவ்வாருயின் ஒரு வகுப்பாரை நாமேன் முன்னடைய வொட்டாது தடுக்கவேண்டும்? தீண்டப்படாதாரென்றும், சண்டாளரென்றும் குப்பைபோல ஒதுக்கவேண்டும்? அவர்கள் நமது சகோதரர்களல்லவா? பாரத அன்னையின் பரிசுத்த இரத்தத்திற் ருேன்றிய பாக்கிய சாலிகளல்லவா? கல்வி யாவருக்கும் பொதுவானதென்று வாயாற் பேசி, செய்கையில் முற்றிலும் மாருக நடந்தால் இறைவன் அத்தகையோரைத் தண்டியாது விடுவனே? இவற்றையெல்லாம் நாம் சற்று ராமகிருஷ்ணரைத் தியானித்த வண்ணம் யோசித்தால், நாமியற்றுவதெல்லாம் கொடுமை-கொடுமையிலுங் கொடுமை யென்பதை அறியாமற் போகோம். நாம் துறவிகள். நம்மைப்போன்றவர்கள் இத்துறையில் அவதூறுக் கஞ்சாமல் உழைப்போமானல் நம்மால் அவனியுலுள்ள அஞ்ஞானம் தணியுமென்பதி லென்னதடை? வேதங்களின் கதவுகளைத் திறந்து சண்டாள ரென்பார்க்கும், ஏழைகளுக்கும், அவர்களறிவாகின்ற கண்களுக்கு ஆனந்த சொரூபியான ஆண்டவனைத் தெளியக் காட்டுங்கள். அறவாழி யந்தணனை யவர்களும் தரிசித்து மோட்ச சாம்ராஜ்யத்தை யடையட்டும்' என்று நரேந்திரர் தமது சீடர்களைத் தூண்டுவார்.

நரேந்திரர் தூண்டுதல்

பொரநாகூர் ஆச்சிரமத்தில் சிவராத்திரி, ஸ்ரீகிருஷ்ண ஜயந்தி, முதலான முக்கிய புண்ய தினங்கள் கொண்டாடப்படுவதுண்டு. அவ்விழா நாட்களில் இரவும் பகலும், ஜெகந்நாத பிரதக்ஷிணமும், ஹரி நாம சங்கீர்த்தனங்களும் நிகழும். அன்று அடியார்கள் 'கோவிந்தா! கிருஷ்ணு ராமா, சங்கரா' வென்று கைலாஸ, வைகுந்தங்களை யெட்டுமாறு கைகோத்து ஓடியாடி உரக்கக் கூடிப்பாடி, ஆனந்தக் கண்ணீர் பெருக்கிக் களிப்பர். சுற்றுப்புறங்களிலிருந்து அநேகர் பஜனையைக் கண்டு களிக்க அங்கு கூடுவார்கள்.

இல்லாச்சிரமத்தை இளமையில் வெறுத்து அவ்விடுதியிலே விளங்கிய அன்பர்களுக் கெல்லாம் நரேந்திரர் ஒரு சகல கலா நிகண்டென நின்ருர். அவர் மேல்நாட்டு முறைக் கல்வியிலும் வடமொழிக் கிரந்தங்களிலும் தாம் கற்ற விஷயங்களைக் கார்மேகம் போலச் சொரிவார். பட்டப் பரீக்ஷைகளுக்குப் புத்தகமுங் கையுமாக வாசித்துக்கொண்

டிருந்தவர்க ளெல்லாம் 'நரேந்திருடைய விவேகமே நமக்குப் பட்டமளிப்ப'தென்று மகிழ்ந்து அப் புத்தகங்களை யெல்லாம், புகழ்பெறத் துறந்து பெரநாகூருக்கு வந்துவிட்டார்கள். ஏற்றத் தாழ்வின்றி நரேந்திரர் அவர்களுடைய புத்தியான கழனியைத் திருத்தி வித்தை யென்னும் விதை விதைத்து அன்பென்னும் நீர் பாய்ச்சி, சேவை யென்ற தானியத்தைச் செவ்வையாகப் பயிராக்கினர்; அவர்களது மூளையாகிய மலையைக் குடைந்து முத்தாகிய ஞானத்தை வெளிப்படுத்தினர்; அவர்கள் நெஞ்சமாகின்ற தரையை வெட்டி இரக்க மென்ற இனிய நீரை ஊற்றெடுத்து ஓடுவித்தார். அவ்வாச்சிரமத்தின் தானிதபஸ்வி யென்ற பெயருடைய அறையில், பிற்காலத்தில் மகா கீர்த்திமானாக விளங்கிய வடமொழி நிபுணர் சுவாமி அபேதானந்தர் இரவும் பகலும் தாளிட்டுக்கொண்டு தீவிர யோகப் பயிற்சிகளைச் செய்துகொண் டிருப்பார். இவ்விதம் கல்விக் களஞ்சியமாக ஒழுக்கத்தைச் சிறிதும் கைசோர விடாமல், அதுவே விழுப்பந் தருமென் றறிந்து நடந்தமையாற்றான் இன்றளவும் ராமகிருஷ்ணருடைய சிஷ்யர்கள் எங்கும் போற்றப்பட்டு வருகின்றனர். சோம்பேறிகள் மடங்களில் அஞ்சாது கஞ்சாவடித்துக் கொண்டு 'நூற்றைக் கெடுத்ததாம் குறுணி' என்ற வசனத்திற் கிலக்காய் சதா நித்திரா தேவியின் விருந்தினர்களாய் வசிக்கும் மாந்தராலன்றோ எத்துணையோ பெருமையை யுடைய துறவிகள், ஜன சமூகத்தால் வெறுக்கப்படுகின்றனர்.

சிஷ்யர்களின் அந்தரங்க முயற்சி

ஒருசமயம் அவர்கள் லலித விஸ்தாரம் என்ற நூலைக் கற்கப் புகுந்து அந்நூலிற் கூறப்பெற்றுள்ள புத்த பகவானது சரிதையி லீடுபட்டு, தாமே புத்தர்களாகி, அவருடைய பிறப்பிலே தாமும் பிறந்து, துறவிலே தாமும் துறந்து, போதி மரத்தடியில் பரிசுத்த ஞானோதயமடைந்து, அவ்வாறே உவருடைய சரிதையை முடிவுவரை யனுபவித்தனர். இதுபோலவே, அவதாரப் பிரபாவங்களையும், அடியார் சரித்திரங்களையும், ஆசார்ய விஜயங்களையும் கசடறக் கற்றனர். சத்ய சந்தனை ஸ்ரீராமனுடைய சரித்திரத்தைக் கூறும் வான்மீகி வரையாநின்ற இராமாயணத்தையும், கண்ணன் மகிமையைத் திண்ணெனச் செப்பும் கீதையையும் அவர்கள் முக்கியமாகக் கற்பது வழக்கம். ஸ்ரீசங்கரர், இராமாநுஜர், கபீர்தாஸர், துளசீதாஸர், ராமதாஸர், ஸ்ரீகிருஷ்ண சைதன்யர், ராமப்பிரசாதர், குருநானக் முதலிய கீர்த்தி பெற்ற தீர்க்க தரிசிகளின் சரித்திரங்கள் அடியார் பெருமையையும்,

ஐயனருளையும் அவர்களுக்கு விளக்குவனவாதலின் அவற்றையும் தெவிட்டாது ஓதினர். சனாதன தர்மத்தின் உயர்ந்த நோக்கங்களையும், பாரதபூமியின் பெருமையையும் அவர்கள் ஆழ்ந்து கற்று வந்தார்கள்.

சர்வ சமய சமரசக் கல்வி

மானசீகமாக அவர்கள் எருசலேம் நகரையடைந்து, இயேசுநாதரின் ஜனனத்தைக்கண்டு, அவருடைய சரித்திர முழுவதையும் தியானத்தால் தரிசித்து மீள்வர். அத்வைத சித்தாந்தத்தி லவர்களுக்கிருந்த பற்றிற்கு அளவே இல்லை. மானசீகமாக அவர்கள் பஜித்து, அல்லாவையும்-அரனையும்-ஹரியையும் பரப்பிரம்மமென்று கொண்டாடுவர்; யமனை மனவழிபாட்டால் உமை பங்காளனுக்கி உவகை கொள்வர். அவர்களுக்கு பகவத்கீதையே பைபிளாகத்தோன்றும். இங்ஙனம் நரேந்திரநாதரின் தலைமையின்கீழ் 'பெரநாகூரில் ஆச்சிரம ஸ்தாபனம்' சிறந்து விளங்கிற்று.

18-ம் அத்தியாயம்.

தூய துறவிகளின் தீவிர பக்தி

மலையொத்த மனத்தினரான அந்த பால்ய சந்நியாசிகள் பெரநாகூர் ஆச்சிரமத்தில் நடத்திய வாழ்வு மிகவும் போற்றத்தக்கது. அவர்களுக்கு உணவுள்ள நாட்களும் இல்லாத நாட்களும் ஒன்றாகவேயிருந்தன. தீவிர பக்தி பஜனங்களால் அவர்கள் பசிதாகத்தை மறந்திருப்பார்கள். அஞ்சாநெஞ்சினராய், அறிவுக் கடலாய் அவர்கள் விளங்கினார்கள். அவர்களுடைய தலைவரான நரேந்திரர் "நீங்கள் பிரசாரத்திற்கு விரைவில் தயாராக வேண்டும். அரைகுறைப் படிப்புடன் நாம் வெளிப்படலாகாது. அவ்வாறானால் நமதாசாரியன் திவ்ய நாமத்திற்கு அபகீர்த்தி ஏற்படும். மனம் வாக்கு காய சுத்தி நம்மிட மிலங்கினாற்றான் சமூகம், நமது தர்மோபதேசத்தையேற்கக்கூடும். ஆதலின் முதலில் பக்தியுடன் ஞான தர்ம சாஸ்திரங்களைக் கற்றுப் பின், விருப்பமாயின் நமது ஆசாரியரின் கருத்திற் கிசைந்து மதசேவையைத் தொடங்கலாம். இல்லையேல் கண்மூடி மௌனியாகித் தனியேயிருந்து விடலாம். காசி திரைலிங்க சுவாமிகளைப்போல மௌனமா யிருப்பதே ஒரு பிரசாரமென்பதை நீங்களுணரவேண்டும்.

தலைவரின் நன் மொழி

இதுதான் சித்த புருஷர்களின் சிறந்த நோக்கம்.'' என்று கூறி அவர்களைத் தூண்டி வந்தார்.

நரேந்திரர் பக்தர்களுக்குப் பக்தராயும் ஞானிகளுக்கு ஞானியாயுமிலங்கி, உபதேசங்கள் புரிந்து, அகப்புறப்பற்றுகளறுத்தல், அன்பர் பணி செய்தல், தியாகபுத்தி யுடைமை, விருப்பு வெறுப்பற்றிருத்தல் ஆகிய துறவிகளின் தூயநெறிகளை அவர்களுக்கு உணர்த்தி வந்தார். அகம் பிரம்மாஸ்மி, சச்சிதானந்த சிவோகம் என்ற மகா வாக்கியங்களை அத்வைத சித்தாந்தப்படி விளக்குவதும், துறவற நெறியிற் சிறிதும் வழுவாமல் சீடர்களை ஊக்குவதுமா யிருந்தார்; பல நாட்கள் உண்ணாவிரதம் பூண்டும், தவமியற்றியும், திருப்தி யடையாது மென்மேலும் யோகசித்தி யடையவேண்டுமென்ற அவாவால் மிகக் கடுமையான யோகசித்திகளை அப்யசித்தார். அவரைப்பார்த்து ஏனையோரும் இராஜயோக முறைப்படி யோகமுயற்சி செய்தார்கள். அவர்களது பக்தி வைராக்கிய நிலை அஞ்சத்தக்கனவாயும் பிறருக்குப் பயங்கரமாகவுந் தோன்றின.

இந்நாட்களில் நாகமஹாஷ்யர் என்ற ஸ்ரீராமகிருஷ்ணரின் மெய்யடியார் அபூர்வமாக பௌரநாகூருக்கு வருவதுண்டு. அவரொரு வைத்தியர். குருதேவர் அவரைப்பார்த்து "நோயின் விருத்தியையே விரும்பிப்பிழைக்கும் இத்தொழில் அன்பைப் பெருக்குவ தெங்ஙனம்? இம் மருந்துக் குப்பிகளும் மாத்திரைப் பெட்டிகளும் முக்திநெறியிற் மனிதரைச் செலுத்துவன அல்லவே?'' என்று கூற, அவர் அக்கணமே துறந்து ஜீவனோபாயமான அத்தொழிலைவிட்டு, கையிலிருந்த ஔஷதப்பெட்டியையும் கங்கையிலெறிந்துவிட்டு வந்தவர். ராமகிருஷ்ணர் மகா சமாதியடைந்த நாள்முதல் அவர் கண்ணீருங் கம்பலையுமாய் 'சர்வேஸ்வரனை நான் என்று தரிசிப்பது?' என்று தமது தனித்த சிறு வீட்டில் அகோராத்திரமழுது புலம்பிக்கொண் டிருந்தார். ராமகிருஷ்ணரின் பிரிவு அவருக்கு மரணத்தைவிடக் கொடியதாயிருந்தது. உண்மையாகத்துறந்த அவ்வுத்தமரின் குருபக்தியை யென்னென்போம்! உணவையும் அவர் மறந்திருப்பார். அவ்வமயம் சமீபத்திலுள்ள அன்பர்கள் அவரைக் கட்டாயப்படுத்தி உண்பிப்பார்கள். ஒருசமயம் அவர் ஐந்துநாட்களாக உணவில்லாமல் குருதேவரைத் தியானித்தவாறு புலம்பியழுது புரண்டுகொண்டிருப்பதாகக் கேட்டு நரேந்திரநாதர், தம தன்பர்களான துரியானந்தர், அகண்டானந்தர் முதலியோர் பின்றொடர

நாக மகாஷ்யர்

அவர் வீட்டை யடைந்து, அவருடைய நிலையைக்கண்டதிசயித்து "மகாஷ்யரே! அடியேங்கள் இன்று தமது ஆச்சிரமத்திற்கு பிக்ஷுக் களாய் வந்துளோம்' என்றூர். மகாஷ்யர் தாயின் வருகைகேட்ட தனியிளங் குழவிபோல விரைந்து சென்று, ஆகாரப்பொருள்களை வாங்கி வந்து பஜ்ய, போஜ்ய, லேகிய, சோசியங்களுடன் அவர் களுக்கு உண்டு வழங்கினூர். அதன்பின்னர், நரேந்திரர் சாதுக்களின் உச்சிஷ்டத்தைப் புசிக்குமாறு வேண்ட மகாஷ்யர் 'கடவுளைக்காணுத இப்பாவிக்கு உணவென்ன ?' என்று கூறி, உணவாக்கியிருந்த பாண் டத்தை உணவுடன் உடைத்தெறிந்து விம்மி யழுவாராயினர். அவ ருடைய பக்தி நரேந்திரர் நயனங்களினின்றும் கண்ணீர்த் துளிகளை உதிரவைத்து அவருக்கொரு பாடமுங் கற்பித்தது. அன்று முதல் நரேந்திரர் "வீணுகப்பேசி யலைவதாலும், ஸ்ரீராமகிருஷ்ணருடைய திவ்யநாமத்தைப் புகழ்ந்து வருவதாலும் பயனென்ன ? சத்யமான தாபமன்றூ வேண்டும்" என்று எண்ணியவாறு ராஜயோகாப்பியாசங் களை முன்னினும் பன்மடங்கு தீவிரமாகச் செய்யலானூர்.

'பகவானைவிடப் பெரியவர் எவருமில்லை ; அவரைப்போலத் தொண்டருக்குத் தொண்டரா யிலங்கும் கருணு மூர்த்தியுமில்லை. ஆத லின், அக்கடவுளை அகக்கண்ணுல் கண்டே தீருவோம்' என்று தீவிர வைராக்கிய சித்தத்துடன் அவர்கள் அகோராத்ரம் தவமியற்றுவா ராயினர். தியான சமாதி நிலையிலே அவர்கள் நாட்கணக்கில் அசை வற்று மரம்போல வீற்றிருப்பர். அவர்கள் கண்கள் செந்தாமரை போன்று செவ்வரிகளுடன் விளங்குவது கண்டு, தூர்த்தர் சிலர் 'இதென்ன! இவர்களுடைய கண்கள் மதுபானஞ் செய்தவர்களைப் போலச் சிவந்திருக்கிறது?' என்று கூறி நகையாடினர். எவர் தூஷ ணைக்கும் செவி சாயாது அவர்கள் பித்தர்களாகி அல்லும் பகலும் அகோர தவமியற்றி வந்தார்கள். அவர்களை யெல்லாம் காலா காலங் களில் கர்மாக்களுக்குத் தூண்டுவதும், உணவாக்கி உண்பிப்பதும், நீராடிவர அனுப்புவதுமாக தாயைப்போன்ற அன்பினராய் ராம கிருஷ்ணனந்தர் அவ்வப்போது ஊக்கிவந்தார்.

காலை மாலைகளில் தோத்திரபாடமும், சங்கத் துவனியும் ஆங்கு செவிக் கின்பம் பயப்பனவாய் எழும். ராமகிருஷ்ணர் ஜீவித்திருப்ப தாகவே பாவித்துப் பூஜைகளும் நிகழும். ஆசாரியருடைய ஹஸ்தி நிறைந்த சம்புடத்தி னருகாமையிலேயே அனைவரும் அத்யயனஞ் செய்து வந்தார்கள்.

𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌸𑌤𑍍𑌯𑌂 𑌜𑌗𑌨𑍍𑌮𑌿𑌥𑍍𑌯𑌾 𑌜𑍀𑌵 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑍈𑌵 𑌨𑌾𑌪𑌰𑌃

என்ற ஸ்ரீராமகிருஷ்ணருடைய ஆப்த வாக்கியம் அடிக்கொரு முறை அங்கு ஸ்மரிக்கப்படும். நிர்வாண நிலையைப் போற்றும் ஆறு பாக்களையுடைய நிர்வாண ஷட்கம் அங்கெப்பொழுதும் அத்யயனம் செய்யப்படும். பலர் அருகாமையிலுள்ள சுடலையில் எரிகின்ற பிணங்களினருகே யமர்ந்து அசைவற்று தவஞ் செய்வார்கள். உண்மையில் பொரநாகூர் ஆச்சிரமம் இத்துறவிகளான குழந்தைகளை வளர்க்கும் தொட்டிலாகவே யிருந்தது.

இவ்வாறாக பொரநாகூர் ஆச்சிரமத்தில் தெய்வீக மனித சிருஷ்டி நடைபெற்று வந்தது. துறவற நெறிப்படி ஒழுகும் அன்பர்களின் சுயேச்சை வாழ்வையும், அவர்களுடைய யோக சாதனங்களையுங் கண்டு இல்லாச்சிரமிகள் பலரும் ஆவலுடன் காஷாயம் தரிக்கலாயினர். ராமகிருஷ்ண பரமஹம்ஸர் நிர்வாண நிலையெய்தியபின், சுமார் நான்காண்டுகளுக்குள், பொரநாகூர் ஆச்சிரமத்தின் மகிமை வங்காளமெங்கும் பரவிற்று. நரேந்திரநாதர் தமது சந்நியாச சகோதரர்களையெல்லாம் துறவற நெறியில் தீவிரப் பற்றுள்ளவராக்கி, சகல சாஸ்திர புராண இதிகாசங்களையும் அவர்களுக்குக் கற்பித்து, யோகப்பயிற்சி வாயிலாக தேகப்பயிற்சி செய்வித்து, ஆராய்ச்சி முறையில் அதி நிபுணராக்கிவிட்டார். தமது சகபாடிகள் தங்களைத் தாமே காப்பாற்றிக் கொள்ளக்கூடிய நிலையை யெய்தும் வரை நரேந்திரர் அவர்களுக்கு உதவியா யிருந்தார்.

அப்பால், நரேந்திரருக்கு பரிவ்ராஜகராக வனாந்தரங்களிலும், மலைச்சாரல்களிலும் இயற்கையின் காட்சிகளைத் தரிசித்துக்கொண்டு, ஏகாந்தமாக அலைந்து திரிந்து, பாதசாரியாகவே தேச சஞ்சாரஞ் செய்யவேண்டு மென்ற அவா வுண்டாயிற்று. இவ்விதமே ஒவ்வொருவரும் தத்தம் மனம் பரிபக்குவப்படுகின்ற வரையில் சுற்றிப் பல கஷ்டங்களை யனுபவித்து வரவேண்டு மென்பது அவருடைய விருப்பம். இக்காலத்தில், சுவாமி யோகானந்தர் எவருமறியாவாறு வெளிப்பட்டு, சுமார் ஓராண்டு அலைந்து யாத்திரை செய்து திரும்பினார்.

பரிவ்ராஜக நிலையில் யாத்திரை

சுவாமி திரிகுணாதீதரும் அவ்விதமே சென்றார். நரேந்திரர் மட்டும் தாம் வெளியேறவேண்டிய காலத்தைச் சற்று ஒத்திவைத்திருந்தார். அவர் பன்முறை சஞ்சாரமாகப் புறப்பட்டு இரண்டொரு மாதங்களில்

திரும்பி பெரநாகூர் ஆச்சிரமத்தை யடைந்தார். அந்நாட்களில் அவர் தனியே யாத்திரை செய்யவில்லை. பரிவ்விராஜகன் எவ்வாறு சஞ்சரிக்க வேண்டு மென்பதைக் கற்பிப்பான் கருதி அவர் இரண்டொருவரைத் தம்முடன் அழைத்துச் செல்வது வழக்கம். பின் திரும்பிவந்து, அவர்களைப் பெரநாகூரில் விடுத்து, வேறு சிலருடன் வெளிப்படு வதும், வருவதுமாக விருந்தார் நரேந்திரர். அப்பால் 1891-ம் ஆண்டு ஜனவரிமாதத்தில் அவர் தமது சீடர்களையும், சகபாடிகளையும் விட்டு, தனியே இமயமலைச்சாரலில் சஞ்சரிக்கவும் சில மகா கடினமான யோக சாதனங்களைச் செய்யவும் விரும்பினர். ஆனல் அதை அவர் ஒருவரிடமும் வெளியிடவில்லை. தமது அன்பர்களை நடுவாற்றில் கைவிட்டுச் செல்ல அவர் மனமிசைந்திலது. அதனல் அவர் 1887-ம் ஆண்டு முதல் முற்றுந் துறந்து தனியேகும் வரையில் வெளியேறும்போதெல் லாம் பலரைத் தம்முடன் அழைத்துக்கொண்டே போனர்.

ஆனல் அவருடைய வதனம் பிரிவைச் சீடர்களுக்கு வெளிப் படுத்திவிட்டது. அவர், ஆச்சிரமத்திலுள்ள சீடர்களின் விஷயத் தில் பொறுப்பற்றிருந்தமை அவருடைய பிரிவு வெகு விரைவில் நேரு மென்பதன் அறிகுறிகளா யிருந்தன. சித்தார்த்தரைப்போல அவர் நீங்க விருந்தார். அவர் எங்கு சென்றாரென்றும் எப்பொழுது திரும்பு வாரென்றும் அறிய எவராலும முடியவில்லை. பாரதபூமியில் இமயம் முதற் கன்னியாகுமரி வரையில் பாதசாரியாக யாத்திரை செய்ய வேண்டுமென்ற எண்ணத்தோடு, கூட்டில் குஞ்சுகளுடன் கூடிக் குலவும் தாய்ப்பறவை விரைந்து இரைதேட வெளிப்படுவதுபோல், அரியவற்றையும் உரியவற்றையும் துறந்து எவரு மறியாவண்ணம் வெளியேகினர். சில நகரங்களில் அவருடன் உரையாடிய சிலர் ஆவலோடு அவரைப் பின்றொடர முயற்சிப்பது கண்டு, அவர் தம்மைப்பற்றிய விஷய மொன்றும் வெளிப்படலாகாதென்ற விருப்பத்தால் தமது பெயரை மாற்றிச் சொல்லிக்கொண்டே யாத்திரை செய்தார். யாத்திரையில் அவர் எங்கும் தமது வித்தையை வெளிப்படுத்தவில்லை. தமக்கு ஆங் கிலம் தெரியுமென்று வெளிக்காட்டவும் இல்லை. ஒரு சாதாரண சந் நியாசியைப்போல் அவர் பிக்ஷைவாங்கி யுண்டு, ஒருநாளைக்குமேல் எந்த ஊரிலும் தங்காமல் தமது யாத்திரையைத் தொடர்ந்தார். ஐந்து நாட்கள் வரையில் உணவின்றி யிருக்க அவர் பழகினர். கானகத்தில் மரங்களினடியிலும், வழிகளிலுள்ள பாழடைந்த விஹாரங்களிலும்

நரேந்திரரின் இமய யாத்திரை

அவர் இராக்காலங்களில் தங்குவார். மழை, வெயில் காற்று யாவற்றையும் அவர் பொருட்படுத்தாது. உண்மையொன்றையே பற்றும் உளமுடையாராய் பாதசாரியாய் நடக்கலுற்றார். எங்காவது இரந்து ஒருவேளைமட்டும் உண்பார். அந்நாட்களில் அவர் காசைக் கண்ணாலும் பார்த்ததில்லை. கமண்டலம், ஒரு நீண்ட தண்டம், ஸ்ரீமத் பகவத் கீதை, ஒரு காவிவஸ்திரம் ஆகிய இவற்றைமட்டும் அவர் உடன் கொண்டு போவதுண்டு. இவ்விதம், மலைகளிலும், குகைகளிலும், சுடலைகளிலும், கங்கா யமுனா நதி தீரங்களிலும், துணையின்றி, உணவின்றி ஒரே வைராக்கிய சித்தத்துடன், மோனநிலையினராய் யாத்திரை செய்வாராயினர்.

அவர் 1888-ம் ஆண்டினிறுதிவரை பெரநாகூர் ஆச்சிரமத்தைவிட் டகலவில்லை. அதற்குப்பின் வைத்தியநாதம், ஷிமுல்டோலா முதலிய சில இடங்களுக்குமட்டும் போய்வந்தார். ஆனால் அது முதல் அவருடைய சிந்தை சஞ்சாரத்தை நாடியதாயிருந்தது. ராமகிருஷ்ணர் தீர்க்க சமாதியடைந்த இரண்டு மாதங்களுக்குப் பிறகு, சரத் சந்திரரும், நிரஞ்சனரும் பூரி மகாக்ஷேத்திரத்திற்குச் செல்ல உளம்பூரித்தனர். சிலர் வடக்குதிசையை நோக்கிக் கேதாரி-பத்ரிநாதம் முதலிய க்ஷேத்திரங்களுக்குப்போகத் தீர்மானித்தார்கள். சுவாமி அகண்டானந்தர் இதற்கு முன்னரே யாத்திரையாகப் புறப்பட்டுப் போய்விட்டார்.

ஆனால் நரேந்திரர்மட்டும் அந்நிலையில் சிஷ்யர்களைவிட்டுப் பிரிய மனமில்லாதவராய், அவர்களை யாத்திரையில் பழக்கச் சில விடங்களுக்கு யழைத்துக்கொண்டு போய்வருவா ராயினர். அச்சமயங்களில் சுவாமி பிரம்மானந்தர், பிரேமானந்தர், போகானந்தர், துரியானந்தர், சாரதானந்தர், அகண்டானந்தர், நிரஞ்சனானந்தர், சிவானந்தர், அத்வைதானந்தர், திரிகுணாதீதர், அபேதானந்தர், நிர்மலானந்தர், சதானந்தர் முதலிய முக்கிய சீடர்களிற் பலரைத் தனித்தனியே வெவ்வேறு யாத்திரைகளுக்கு அழைத்துச்சென்று திரும்புவது வழக்கம். ஆனால் அகண்டானந்தர் மட்டும் சுவாமிகள் முற்றுந்துறந்து தனியே ஏகும் வரையில் அநேகமாக அவருடன் கூடவே இருந்தார்.

சஞ்சாரத்தில் அன்பர்களைப் பழக்குதல்

முதலில் சுவாமிகள் கல்கத்தாவிலிருந்து காசிக்குப் பிரயாணமானார். அங்கிருந்து சிலர் பின்றொடர சாரநாதத்திற்குப்போய் அங்கு

ஸ்ரீபுத்தபகவான் தர்மசக்ர பிரவர்த்தன சூத்திரத்தை உபதேசித்த புண்யபூமியை முன்னர் தரிசித்து, அப்பால் துர்க்கை சந்நிதானத்திற்குப்போய்த் திரும்பி வரும் வழியில் சில குரங்குகள் கூட்டமாக அவரைத் துரத்திக்கொண்டு வந்தன. அக்குரங்குகள் அவரை யணுகுந்தருவாயில் அவர் ஓட யத்தினித்தார். அப்பொழுது 'நில்! மூர்க்கர்களையே எப்பொழுதும் எதிர்க்கவேண்டும்' என்ற அசரீரிவாக்குப் பிறந்தது. உடனே அவர் வேரோடிய மரம்போல் நின்று அக்குரங்குகளை எதிர்க்க, குரங்களும் அவரை உற்றுப்பார்த்து இவர் இராமபக்தரென் றெண்ணுவது போன்று அஞ்சியோடின. அச் சிறு சம்பவத்திலிருந்து அவர் ஓர் அரிய உபதேசத்தையும், அனுபவத்தை மடைந்தவராகி,

> இயற்கையைப் போற்றுவதுதான் விடுதலை மார்க்கம். நீங்கள் அறியாமையை எதிர்க்கவேண்டும்! மாயையுடன் மல்யுத்தம் புரியவேண்டும்! ஓடுவதே பேடியின் செயல்!

என்று இந்நிகழ்ச்சியை யெடுத்துக்காட்டி உபதேசிப்பதுண்டு.

காசிமாநகரில் அவர் பல பண்டிதர்களையும், மகா சாதுக்களையும் துவாரகதாஸ் ஆச்சிரமத்தில் கண்டு தர்க்கித்தார். துவாரகதாஸரால் நரேந்திருக்கும், வங்காள மகா பண்டிதரான பூதப்ப முகோபாத்தியாயருக்கும் நட்பேற்பட்டது. முகோபாத்தியாயரிடத்தில் நரேந்திரர் 'காசியில் விளங்கிய திரைலிங்கசுவாமிகளுக்கும் தமக்கும் ஞாதித்துவமுண்டு' என்று கூற, அவர் அதிசயித்து எவ்விதமென்று வினவியபோது நரேந்திரர் தமது பரமாசாரியர் ஜீவபிரம்மைக்ய மகா ரஹஸ்யத்தைத் திரையலிங்கரிடமிருந்தே யறிந்தமைதான் என்று வேடிக்கையாகக்கூறி, அவருடன் அளவளாவிப் பின் பல ஞானமார்க்க விஷயங்களைக்குறித்துப் பேசுவாராயினர். காசிமாநகரவாசிகளனைவரும் பால்யத்தில் இத்தகைய பரிபக்குவ மடைந்து, பிரம்ம தேஜசுடன் விளங்குமிவர் அவதார புருஷரேயென்று ஸ்தோத்திரம் பண்ணினார்கள்.

காசியில் வாசம்

அப்பால், நரேந்திரர் மகாபிரசித்தரான சுவாமி பாஷ்கரானந்தரைக் கண்டு வணங்கி காமினி காஞ்சனத்தைப்பற்றிப் பேசுங்கால் பாஷ்கரர் மயங்க, அவருக்கிருந்த ஐயப்பாடுகளைத் தமக்கு குருநாதருளியவாறு எடுத்தோத அவரும் இவரைத்தழுவி ஆசி கூறினார்.

அப்பால் காசிபுரியினின்றும் புறப்பட்டு அவர் அயோத்தியை நோக்கிப் பிரயாணமானார். எந்த புண்ணிய பூமியை இடமாகக்கொண்டு

இராமாயணம் ஆரம்பிக்கின்றதோ அவ்வணிமாட வயோத்தியென்னும் பொன்னகரை யடைந்தால் நாம் புண்யனுவோமென்ற நம்பிக்கையால் அவருள்ளம் பூரித்தது. அந்நன்னகரிற் சில நாட்களிருந்து ஸ்ரீராமனைத் தியானித்து இராமாயண பாராயணஞ் செய்தார். பிறகு அயோத்தியினின்றும் நீங்கி இலக்குமணபுரியை யடைந்து அப்பதியில் விளங்கும் ஆலயங்களைக் கண்டு தரிசித்து, பின்னர் ஆக்ராவை யடைந்து படத்திற் கண்டு முன்பு தாம் பலவாறு புகழ்ந்த தாஜ்மகாலைக் காண வேண்டுமென்ற அவாவால் விசையொடு நடந்து சென்றார்; அப்பொழுது சந்திரன் தமது பரிபூர்ண கலைகளுடன் ஆகாயத்தில் விளங்கினன். நிலவில் தாஜ்மகால் ரஜிதமயமாகப் பிரகாசிப்பது கண்டு, அவர் ஆனந்தமேலீட்டால் அதனழகில் லயித்துத் தியானபரரானார். 'இதன் சிற்ப நுட்பங்களைக் கண்டு களிக்க இவ்விரண்டு கண்களா லமையா' தென்பார். 'நமது நாட்டிற்குப்பொருந்தா மேன்மையு மிப்புவிதனிலுளவோ' என்பார். மறுநாள் ஆக்ரா கோட்டையினழகிய மதில்களைக் காணச் சென்றார். அப்பொழுது அக்கோட்டையின் சம்பந்தமாகத் தாம் வாசித்த சரித்திரங்க ளெல்லாம் அவர் நினைவுக்கு வந்தன. நிர்மலமான நிலாக் காலத்திலேயே அவர் இவ்வற்புதக் கோட்டையைக் கண்டு களித்துப் பின் அவ் விராக் காலங்களிலேயே அவ்வூர் மயானத்தை யடைந்து வேகின்ற பிணத்திற் கருகே யோகாசனமிட்டு யோகாப்பியாசஞ் செய்து வரும் நாட்களில், பிருந்தாவனத்திற்குச் செல்லவேண்டு மென்ற பேரவா அவரைத் தூண்டிற்று. அதனுல் அவர் பிருந்தாவனத்தை நோக்கிச் செல்லலுற்றார். இக்காலங்களில் பொருளைக் கையாலுந் தொடுவதில்லை யென்ற வைராக்கியமுடன் அவரிருந்தமையால் முழங்காலளவு புழுதியேற, இரவும் பகலுமாகக் காட்டு மார்க்கமாயும், காடு முரடான கற்பாறை வழியாகவும் நடந்து பிருந்தாவனத்தைத் தியானித்தவாறே செல்வாரானார். அந்தோ! மல்லிகை மலரினும் துல்யமான அவாது பாதங்கள் எவ்வளவு வலி கண்டிருக்கும்?

அயோத்தி, இலக்ஷ்மண புரி, ஆக்ரா யாத்திரை

இளைத்துக் களைத்து அவர் மாலையில் ஒரு கிராமத்திற் போய்த் தங்குவதும், பொழுதுபுலர்ந்ததும் நடப்பதுமாகப் பரிவோடு பன்னாட்கள் நடந்து 'இதுதானோ பிருந்தாவனம்' என்ற ஆவலா லடைந்தார் அவ் வற்புத ஸ்தலத்தை. ராதா ருக்மணிலோலனுக நவநீத ததிசோரனுக பிருந்தாவனத்தில் திருக்கோயில் கொண்டு விளங்கும் கண்ணனைத்

தரிசித்துத் தமது உள்ளத்தை யவனுடைய பாதார விந்தங்களிற் சமர்ப்பித்து மகிழ்ந்தார்; 'நாம் இப்பொழுது கம்சனைக் கொன்ற பால னும், துரியோதனதியரைத் தொலைத்த தூயோனும், பாண்டவரின் பக்தனுமான பரமாத்மனைத் தரிசிக்கும் பாக்கியத்தை யடைந்தோம். பகவத்கீதையைப் பிரசாதித்த பரந்தாமன் நம்முன் நின்று பேசுகிருர்' என்று போற்றி நேத்ரானந்த மடைந்தார். சாதுக்களின் மனதை யொத்துச் சாந்தமாகப் பாய்கின்ற யமுனு நதிக்கரையி லுட்கார்ந்து கண்ணனைக் கருத்தினிற் கொண்டு பகவானுகிய பரமாத்மாவுக்கும் ராதையாகிய ஜீவான்மாவுக்கு மேற்பட்ட ஐக்கிய நாயகா நாயகிபாவத்தைத் தியான சித்தியால் தரிசித்து மகிழ்ந்தார். அப்பால், அவருக்கு பிருந்தாவனத்தைச் சுற்றியுள்ள சிற்றூர்களைப் பார்க்கவேண்டு மென்ற விருப்ப மேற்பட்டது. அவ்வாறு செல்லுங்கால் தாமொருவரையும் உணவு யாசிப்பதில்லையென்று உறுதி பூண்டு, அண்மையிலுள்ள சிற்றூர்களைக் கடந்து பகவான் கருணையால் குடையாகப் பிடித்தருளிய கோவர்த்தன கிரியை யணுகினுர். மெச்சிய கிரியினுச்சிவரை சென்று திரும்பிய பின் னர் அதன் சாரலில் சஞ்சரிக்க, ஆகாரமின்மையாலும், அடாத மழை பெய்தமையாலும் அவர் சோர்ந்து வாடி, கண்ணனுடைய நாமமே தம் கருத்திற்கிசைந்த உணவாக, அயர்ந்து ஓராலமரத் தடியி லமர்ந்த பொழுது, ஓரன்பர், பைஞ்ஞீலி செல்லும் வழியில் நாவுக்கரசருக்கு கல்லமு தளித்தது போன்று அவர்முன் தோன்றி, அன்னமளித்து மறைந்தார். அன்னமளித்த அன்பர் அரிதில் மறைந்தது கண்டு திரு வருளை வியந்து புகழ்ந்தார். பிறகு கோவர்த்தனத்தினின்றும் நீங்கி ராதா குந்தம் என்ற வைஷ்ணவ க்ஷேத்திரத்தை யடைந்தார். அத்தலத்தில் அவர் கௌபீனதாரியாக வசிக்க எண்ணினுர். தண்டத்தைத் தவிர வேறொன்றும் அப்பொழுது அவரிடமில்லை; அப்பதியின் அண்மையி லுள்ள புட்காணியில் நீராடி கோயிலுக்குச் செல்ல உத்தேசித்து, அக் குளத்தில் தமது கோவணத்தை நனைத்துத் தண்டத்தைத் தரையில் நட்டு, அதன் மேலிட்டு உலரவிட்டு, முழுகிப் பின் கரைக்கு வந்து பார்க்குங்கால் கௌபீனம் காணப் படவில்லை. சுற்றிப் பார்த்து, ஒரு குரங்கு அக்கோவணத்தைக் கையில் வைத்திருக்கக் கண்டு 'ஐயனே! தயைசெய்து எனது கோவணத்தை எனக்குக் கொடு. யானும் உன்னைப் போன்றே இராம பக்தன் தான்' என்று பலவாறு அதனைப்போற்றிக்

பிருந்தாவன ஸ்தல யாத்திரை

தொண்டரின் பெருமை சொல்ல வும் அரிது.

கேட்கக்கேட்க அது உச்சிக்கொப்புக்குத் தாவ வாரம்பித்தது. அதன் பின், இதுவு மிறைவன் திருவுள்ளமெனக் கொண்டு 'தாயே! ராதா குந்தமென்ற இப்பதியைத் தரிசிக்க வேண்டுமென்ற அவாவினு லுந்தப்பட்டு வந்த அடியேனுக்கு அது பிராப்தமில்லையானல், அடியேன் நிர்வாணமாய் மனிதர் கண்ணிற்படாமல் அருகாமையிலுள்ள மலையடிவாரத்திற்கேகி அதன் புதர்களிலே விலங்கைப்போல வசிப்பேன். கட்டாயப்படுத்தி எவரேனும் ஆடையளித்தாலல்லது நகரங்களுக்கு இனித் திரும்பேன்' எனப்புகன்று அவ்விடம்விட்டகன்றார். துறவியினுறுதியை எம்பெருமான் சோதிக்கும் திருவிளையாடலன்றோ இது? ஏகும் வழியில் ஓர் அடியார் தோன்றி அவர் அணிந்திருந்த அதே கோவணத்தை வலுவிலளித்து மறைந்தார். என்னே! அதிசயம்! தொண்டரின் பெருமை சொல்லவும் அரிதே யன்றோ?

கோவணமளித்த கோபிநாதன் மறையக்கண்டு 'நீ மகிமலனு நேனு செப்பதரமா பொகட தரமா' வென்று பாடிய ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகளைப்போல, கண்களினின்றும் நீர்பெருகத்துதித்துத் திரும்பி வந்து ராதா குந்தத்தில் திருக்கோயில் கொண்டுள்ள ராதாகிருஷ்ண மூர்த்தியைத் தரிசித்திருக்கும் நாட்களில், அவருக்கு இமயப் பனி வரையின் ஏகாந்தமான இடங்களிற்சஞ்சரித்து, பத்ரி நாராயணனைத் தரிசித்து வரவேண்டுமென்ற விருப்பமுண்டாயிற்று. ஆகவே, அவர் அங்குள்ளாரை விசாரித்துக்கொண்டு ஹத்ரஸ் (Hatras) 'ரயில்வே-ஸ்டேஷனை' யடைந்தார். பலநாட்களாக நடந்து யாத்திரை செய்தமையாலும், ஆகாரமின்மையாலும் அவர் களைத்துச் சுவற்றில்சாய்ந்தவாறு ஆங்கோரிடத்தில் 'ராம' என்று சொல்லிக்கொண்டே உட்கார்ந்தார்.

"குரு சிடனைத் தேடிச் செல்லுகின்றார்; சிடன் குருவைத்தேடி வருகின்றான்" என்பது மகாஞானிகளி னனுபவம். மெய்ப்பொருளை சித்த சுத்தியுடன் யறியவேண்டுமென்ற களங்கமற்ற அவாவையுடைய சிஷ்யன் முன், பரமாசாரிய ரொருவர் தோன்றி, அவனுக்கு ஞானோபதேசஞ் செய்கின்றார். இவையாவும் பகவத் சங்கல்பத்தால் நிகழ்வன.

சுவாமிகளின் முதல் சிஷ்யர்

அழகிய தமிழ் வேதத்தை யருளிய திருவாதவூரர் பரிகொள்வான் திருப்பெருந் துறைக்குச் செல்லும் வழியில் சிவபெருமான் அவர் சித்த சுத்தியை மெச்சி, குருந்த மாத்தடியில் வீற்றிருந்து, தமது சிவஞானபோத கோஷத்தால் அவர் மனதைத் தம்மிட மிழுத்து அவருக்கு உபதேசம்

புரியவில்லையா? குருவைத் தேடி யலைந்த நரேந்திரருக்குப் பரம ஹம்ஸரின் தரிசனம் பிராப்தமாகவில்லையா? ஆக இவ்விரண்டு நிகழ்ச்சிகளே இவ்வுண்மையை ஸ்திரப்படுத்தப் போதிய சான்றுகளாமன்றோ?

'ராமா' என்று அவர் கூறிய வார்த்தைகளைக் கேட்டதும், அந்த 'ஸ்டேஷன் மாஸ்டரான' ஸ்ரீ சாரத் சந்திர குப்தாவின் நெஞ்சம் நெருப்பில்வார்த்த நெய்யைப்போ லுருகியது. உடனே அவர் வெளியேவந்து வீற்றிருக்கும் சுவாமிகளைக் கண்டு, உடல் மயிர்ப்பொடிப்ப உவந்து, மனத்தாற் பணிந்து "சுவாமி! எனது அந்தரங்க அறைக்கெழுந்தருளவேண்டும்" என்று வேண்டி யழைத்துச்சென்று, சுவாமிகள் பசியாயிருத்தலை முகக்குறிப்பாற் கண்டு, பழவகைகளைக்கொண்டு வந்து உண்பித்தார். இவ்வாறு அவர் அவ்வூரில் சாரத் சந்திர குப்தாவுடன் சிலநாட்கள் தங்கி யிருந்தார். அப்பொழுது புரோஜன் பாபு, கோடு கிருஷ்ணர் என்ற அவ்வூர்வாசிக ளிருவர் சுவாமிகளின் அன்பராகி உபதேசம் பெற்றனர்.

சாரத் சந்திர குப்தாவை சுவாமிகளுடைய அருள்மேனி யாட்கொண்டுவிட்டது. "மகரிஷிகளின் இலக்கணமமைய இன்று அடியேனை யாட்கொள்ள வந்த அவதார புருஷரிவரே!" என்று குப்தா உள்ளன்புடன் ஒழுகுவது கண்டு, நரேந்திரநாதர் வியந்து அவரைப் பலவாறு பரிசோதித்துப் பார்த்தார். அக்கணமே காவிபூண்டு தமது சிஷ்யராய் வெளியேறச் சித்தமாயிருந்த அவ்வன்பரது திடபுத்தியையும் பேரன்பையும் அறிந்து அவரிடம் தாம் ஹிமாசலத்திற்கு யாத்திரை போவதாகக் கூறி புறப்படுந் தருவாயில் குப்தா, கைகூப்பி, ஐயனே! என்றியம்பி,

மின்னினு நிலைமை யில்லா விழுப்பொருள் யாவும் வேண்டேன்
உன்னடி யணைந்து நாயே னுறுபவ மொழித்தல் வேண்டும்
என்னையின் றடிமை கொள்வா யெம்முயிர்க் கிறைவா வென்று
முன்னுற வணங்கி நின்றார் முகமெலாம் கண்ணீர் வார. —(தி. ५)

என்றவாறு தாமும், தமது பெற்றோரிடம் அனுமதிபெற்று, தமது உத்தியோகத்தைத் துறந்து, காவியாடை யணிந்து பின்றொடர, இருவருமாகப் பன்னாட்கள் பிரயாணஞ்செய்து இமயமலையடிவாரத்திலுள்ள ஹரிகேசத்தைநோக்கி குன்றமுங் கொடியகானும் வழியாகக் கொண்டு நடந்தனர். அப்பொழுது குப்தா நடந்தறியாதவராதலால் களைத்துப்போய், தளர்ந்து 'ஐயனே! இந்த மலையின் செங்குத்தான பாறைகளில் ஏற என்னு லியலவில்லையே! என்ன செய்வேன்! எனக்கு

மயக்கம்வருகின்றது' என்று புகல, நரேந்திரர் 'அஞ்சேல்! ஐயன் நம்மைக் காப்பாற்றுவான்' என்று தேற்றி, அவருடைய பாதரக்ஷையைக் காத்தி லெடுத்துக் கொண்டு, அவரைத் தோளிற் சுமந்து, பல பயங்கரமான குன்றங்களிலேறிச் சென்றார் அன்பர்களே! இவையன்றோ உள்ளன்பின் உயர்ந்த தோற்றங்கள்? குருவின் பாதரக்ஷையைச் சீடன் சுமக்க நாம் கேட்டிருப்போம். இப்பொழுது சீடன் செருப்பைக் குரு சுமப்பதைக் காண்கின்றோம்! அணுமுதல் அனைத்திலும் இறைவனைக்கண்டு தரிசிக்கின்ற நரேந்திரரைப்போன்ற மகானுபாவர்களுக்குப் பேதாபேதமே தோன்றுத லில்லையன்றோ?

உள்ளன்பின் உயர்ந்த தோற்றங்கள்

இவ்வாறு மலைச்சாரலில் பயங்கரமான புதர்களின் வழியாக நரேந்திரர் தமது சிஷ்யரைச் சுமந்து நடந்தார். அவ்வழியில் கொடிய வனவிலங் கொன்று ஒரு சாதுவைக்கொன்று தின்ற வுடலின் சில பாகங்களையும் காவி கமண்டலம் முதலியவற்றையும் எறிந்துவிட்டுப் போயிருத்தல் கண்டு, நரேந்திரர் சிறிதும் அச்சமின்றி, சாரத்சந்திரரை நோக்கி "அன்ப! இதைப்பார்! இதைக் காண உனக்குப் பயமாயில்லையா?" என்றார். அவ்வன்பர் "தாங்க ளிருக்கும்போது எனக்கென்ன பயம்?" என்று மறுமொழி புகல, நரேந்திரர் கண்களில் ஆனந்தக்கண்ணீர் பெருக வாரம்பித்தது.

இவ்விதம் பல துன்பங்களை யனுபவித்து இருவருமாக ஹரிகேசத்தை யடைந்தனர். ஹரிகேசத்தில் பலதேச சாதுக்களையன்றி வேறெவருங் காணப்படவில்லை. அருவிகளில் நீர் சிலுசிலுத்தோடும் அழகும், பனிபடிந்து பரம்பொருளின் விபூதிதரித்த திருமேனியை யொத்திலங்கும் இமயமலைச்சாரலின் இயற்கைக்காட்சியும் அவரைப் பரவசமாக்கின. அங்கிருந்த பல சாதுக்கள், பனிகாலம் நீங்கிய பின் பத்ரி நாதத்திற்கும் கைலாசத்திற்குஞ் செல்ல உத்தேசித் திருப்பதாகக் கூறக்கேட்டு, நரேந்திரரும் அவ்வாறே அவ்வன்பர்களைப் பின்றொடர நிச்சயித்து அப்பதியில் தங்கினார். இச்சமயத்தில் சாரத் சந்திரருக்கு வியாதி வந்துவிட்டது. இதனால் மேற்கொண்ட பிரயாணத்தை அவர் நிறுத்தி வைக்க நேர்ந்தது. நோய் வர வர அதிகரித்தமையால் நரேந்திரர் அன்பரை யழைத்துக்கொண்டு மீண்டும் ஹத்ரஸுக்குப் பிரயாணமானார். ஹத்ரஸை யடைந்ததும் நரேந்திரருக்கும் மலேரியா சுரங்கண்டது.

ஹரிகேசத்திலிருந்து ஹாத்ரஸுக்குத் திரும்புதல்

இங்கு இவ்வாறிருக்கப் பொராநாகூர் ஆச்சிரம விஷயமென்ன வாயிற்றென்று கவனிப்போம். பொராநாகூர் ஆச்சிரமத்திலிருந்த சிஷ்யர்கள் பல மாதங்களாகியும் தமது தலைவர் திரும்பாமலும், தம் நிலையைப்பற்றிக் கடிதமேதும் வரையாமலு மிருத்தலைக்கண்டு அடைந்த துக்கத்திற்கு அளவேயில்லை. இச்சமயம் நரேந்திரர் ஹத்ராஸில் தமது நண்பர்களுடன் சம்பாஷித்துக்கொண் டிருக்கும்பொழுது, தாம் ஸ்ரீராமகிருஷ்ணருடைய சீடரென்றும், கல்கத்தா நகரவாசி யென்றும் புகன்றமையால், அந்நண்பர்கள் அவரைக் குறித்துக் கல்கத்தாவிற்குக் கடிதம் வரைய, அவ்விஷயம் ஆற்றொணுதுயரத்தால் வருந்தும் பொராநாகூர் ஆச்சிரமத்திலுள்ள சீடர்களுக் கெட்டிவிட்டது. உடனே, அவர்கள் 'ஆச்சிரம சம்பந்தமாகச் சில முக்கியமான விஷயங்களை முடிவு செய்யவேண்டி யிருப்பதால் இக் கடிதம் கண்டவுடன் கல்கத்தாவில் வந்து குதிக்கவேண்டும்' என்று அன்பின் பெருக்காலெழுந்த சில பொய்மொழிகளையும் சேர்த்து ஓர் கடிதமெழுதினார்கள். இக்கடிதத்தைக்கண்டதும் நரேந்திரர் ஆச்சரியப்பட்டு, அதில் அவருடைய வருகை யின்றியமையாததெனக் குறிப்பிடப் பெற்றிருந்தமையால், புறப்படத் தீர்மானித்து, தமது சீடரை குணப்பட்டபின் பொராநாகூருக்கு வந்து சேரும்படி பணித்துவிட்டு, தாம் கல்கத்தாவை யடைந்தார்.

தலைவரின் பிரிவு காற்ருத அன்பர்கள்

அவரைக் கண்டதும் அவ்வன்பர்கள் அடைந்த மகிழ்ச்சியை எவரால் எடுத்தெழுத வியலும்! அவர்கள் விம்மி விம்மி யழுது, பின் ஒருவாறு நரேந்திரரால் தேற்றப்பெற்றனர். பரிவ்ராஜக வாழ்வின் பரமானந்தமான அனுபவங்களையும், யாத்திரைசெய்து தரிசித்த திவ்ய தேசப் பிரபாவங்களையும் நரேந்திரர் எடுத்துக் கூறக்கேட்டு அன்பர்கள் குதித்து ஆடிப்பாடி அகமகிழ்ந்தனர். உணவின்றிப் பல பிரதேசங்களில் சுற்றி யலைந்தமையால் அவருடல் இளைத்திருக்கக் கண்டு சீடர்கள் உயிரிளைத்துப் போயினர். இரண்டொரு மாதங்களில் அவர் தேகம் மீண்டும் பழைமைநிலையை யடைந்தது. அவர் மீண்டும் தமது ஹிமாசல வாஸத்தை யாரம்பிக்க நிச்சயித்தார். இத்தருணம் சதானந்தா என்ற தீக்ஷாநாமம்பெற்ற சாரத்சந்த்ர குப்தா வியாதி நீங்கி, ஹத்ராஸினின்றும் புறப்பட்டு, பொராநாகூர் வந்து சேர்ந்தார். வந்து பணிந்த அவரை மார்போடணைத்துத் தழுவி, அவருடைய சிஷ்யப் பிரபாவத்தைக்கூறி அனைவருக்கும் அறிமுகப்படுத்தி வைத்து, அப்

பால், ஏதோ ஓருணர்ச்சியால் வழி கண்டு ஒரு மகானைத் தேடிச் செல்லலுற்றார்.

பரம சாதுவான பாவ்ஹாரி பாபா

'பாம்பறியும் பாம்பின்கால்' என்பது பழமொழி. மகான்களை மகான்களே அறிந்து கொள்ளுகின்றனர். முரட்டு பக்தியுள்ள முட்டாள்கள் அவதார புருஷர்களைப் பித்தரென்று கூறிப் பிதற்றிச் செல்லுவர். நரேந்திரருக்கு இப்பொழுது தாம் முன்பு பலகாலும் கேள்விப்பட்டிருந்த பாவ்ஹாரி பாபாவைக் காணவேண்டுமென்ற ஆவலேற்பட்டது. பாவ்ஹாரி பாபா வென்பவர் காசிமா நகருக் கருமையிலுள்ள ஓர் குக்கிராமத்தில் பரிசுத்த பிராம்மணர் குலத்தில் தோன்றிய ஓர் அவதார புருஷர். அவர் பால்யத்தில், காஜிப்பூர் என்ற ஸ்தலத்தில் வசித்த மகா பண்டிதரான தமது தாய் மாமனை யடைந்தார். அப்பெரியாரிடம் இளமையில் அவர் நியாய வியாகரணங்களில் நிபுணராகி, இராமாநுஜ மதத்தை ஐயந்திரிபற ஓதியுணர்ந்தார். பிறந்ததுமுதல் இறக்கும் வரை பிரம்மச்சரியத்தைச் சிறிதும் வழுவிலாது அனுசரித்த மகானான அவருடைய மாமன் மரிக்குந் தருவாயில், அவருக்குத் துறவறத்தின்மேன்மையை எடுத்தோதினமையின், பாவ்ஹாரி பாபா மாமன் மரித்தபின், துறவியாகிப் பிரம்மானந்த பரராய், ஸ்தலயாத்திரை செய்துகொண்டு, பல திராவிட பாஷைகளையுங் கற்றுக்கொண்டு, காசியை யடைந்து அத்வைத சித்தாந்தத்தில் வல்லாராகி, பல்லாண்டுகள் காடுமலைகளி லலைந்து திரிந்து, மீண்டும் காஜிப்பூரை யடைந்தார். காஜிப்பூரில் செழித்தோங்கும் நதிக்கரையில் அவர் பர்ணசாலை வேய்ந்து அதில் வசித்து வந்தார். கண்ணெதிர்ப்பட்ட அனைத்தையு மவர் கடவுளெனக்கொண்டு வணங்கும் மாண்பினர். ஒரு சமயம் கள்வ னொருவன் அவர் ஆச்சிரமத்தில் நுழைந்து, அவருடைய அற்பமான பொருள்களை அவசரமாகக் கவர்ந் தோடுங்கால், அவர் விழித்துக்கொண்டு, விரைந்து அக் கள்வனையணுகி "நாராயணா! உமது பொருள்கள் இவை. இன்னு முமது பொருள்கள் பலவுள. அவற்றையும் பயமின்றி எடுத்துச் செல்க" என்று வேண்டினார். ஏழைகளை அவர் இறைவனாக பாவிப்பார். ஏழையே அவர் பழிபடுந் தெய்வம். அத்தி பூத்ததுபோ லிருக்கும் அவர் அன்னம் புசிப்பது. ஒரு சமயம் அவரை நாகமொன்று தீண்டிவிட்டது. அதை அவர் வாரியெடுத்து 'நாராயணா'வென்று கண்களி லொத்திக்கொண்டு, முத்தமிட்டாரென்றால் அவர் மகிமையை நாமென்னென்று கூறுவது? அல்

னும் பகலும் அவர் யோகத்தில் வீற்றிருப்பதும், காற்றைப் புசிப்பதும், தர்ப்பாசனத்திற் படுத்து நித்திரை போவதுமாக இருந்தார். அதிகம் கூறுவானேன்? இவரோ இராமகிருஷ்ண பரமஹம்ஸரா? அல்லது ராமகிருஷ்ண பரமஹம்ஸரே இவரா? வென்று போற்றத் தக்க இம் மகானைத் தரிசிக்கவேண்டுமென்று நரேந்திரர் காஜிப்பூரை நோக்கி நடந்தார்,

காஜிப்பூரில் நரேந்திரர் குபேரசம்பத்துடையாரான ராய்ககன் சந்திரராய் பகதூர் அரண்மனையிற் றங்கி, அவருடன் உரையாடினர். நரேந்திரநாதர் வேதாந்த, வியாகரண சண்டமாருதமாய் விளங்குவது கண்டு புகழ்ந்து போற்ற, அவர் ககன் சந்திரரை நோக்கி, மொழிந்த உபதேசம் வருமாறு:

பிறரைத் தாக்கியோ குறை கூறியோ எந்த நாடு மிதுவரை முன்னேற்ற மடைந்ததாக நாம் கேட்டது மில்லை. ஒத்த அன்பும், உயர்ந்த கல்வியுமே நாட்டின் நலத்தைப் பெருக்குங் கருவிகளாகும் இந்தியர்களாகிய நாம், எவ்விதக் கல்வியை, எந்த பாஷையின் வாயிலாகக் கற்றாலும், ஹிந்து என்ற உணர்ச்சியுடன் கற்க வேண்டும். அதுவே பயனைத் தரும். படிப்பின் தீக்ஷண்யம் இப்பொழுது மத ஹீனர்களாவதாகவே யிருக்கின்றது. ஹிந்து மதத்தின் பரம பவித்திரமான தாத்பரியங்களை உள்ளபடி தெளிவாய் எக்கல்வி கற்பித்து நம்மை நல்வழியிற் புகுத்துமோ அதுவே கற்றதனலாய பயனை யளிப்பதாகும். வாலறிவன் நற்றாள் தொழாக் கல்வியைக் கற்றதனல் பயனில்லை சற்று ஊன்றிப் பார்க்குந் திறமை யுடையார்

உண்மையான கல்வி எது?

நமது ஹிந்து மதத்தின் பிரபாவங்களை உள்ளவாறறியலாம். அவ்வித வித்தையை யடைந்து தாய் நாட்டின் க்ஷேமாபிவிருத்தியைக் கருதுவதே நமது கடமை. பலகால் தாக்கப்படும், ஏனைய சமயங்களைப் போல அழியாது தனது சீரிளமைத்திறம் மாறாது விளங்கும் நமது ஹிந்து மதத்தின் சாஸ்திர சம்மதமான நாகரீகத்தை வளர்க்க நாம் முன் வாராதிருத்தலே நம் நாட்டின் க்ஷீணதசைக்குக் காரணம். நம்மை நாமே யறிய முயல வேண்டும் அதுதான் மகரிஷிகளின் நிலை. அப்பொழுதே சங்கைகள் மாய்கின்றன; உண்மையான ஞானம் உதயமாகின்றது.

அதன்பின், நரேந்திரர் பாவ்ஹாரி பாவாவைக் கண்டு தரிசித்து, அவரது பொன்னடி சூடி வந்தார். இவர் ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸரின் சீடரென்பதை அவர் முன்பே அறிவாராதலின் விசேட அன்புடையவராகி, அவருக்குப் பக்தி, வேதாந்தம், யோகம் முதலிய வற்றின் மகா ரஹஸ்யமான சில உண்மைகளைப் புகட்டி அவரைப் பார்த்து,

"குமாரா! துறவியின் தூய குணங்கள் மட்டுமன்றி மகா புருஷ லக்ஷணங்களும் உன்னிடம் ஜொலிக்கின்றன. நீயொரு தீர்க்க தரிசியாவாய்" என்று கூறி மனமார அவரை ஆசீர்வதித்தார்.

பாவ்ஹாரி பாபாவின் மகிமைகளைக் கண்ட நரேந்திருக்கு மனோதுக்கமும், "இவர் தமது குருவா? அல்லது ஸ்ரீராமகிருஷ்ணரேயா?" என்ற மனத் தத்தளிப்பும் உண்டாயிற்று. அவர் மனஞ் சலித்துக் கொண்டிருக்குந் தருவாயில், ஏதோ ஒருணர்ச்சியால் விரைந்து தமது யாத்திரையைத் தொடங்குவாராயினர். இரண்டொரு தலங்களைத் தரிசித்துப் பின்னர் அவர் திரும்ப பொரநாகூரை யடைந்தார். 'தூய துறவிகளின் தீவிர நிலை' இவ்விதம் நிகழ்ந்தது.

19-ம் அத்தியாயம்.

தீவிர பரிவ்ராஜக நிலை

இங்க சிங்கமான விவேகானந்த சுவாமிகள் பொரநாகூரை யடைய அவரது பிரிவாலிருளடைந்திருந்த ஆச்சிரமம், சிஷ்யர்களுடைய குதூகலத்தாலும் அவருடைய கலகலப்பான மொழிகளாலும் தேவலோகம்போலிருந்தது. அவர் தமது யாத்திரையின் அனுபவங்களையும், பாவ்ஹாரி பாபாவின் மகிமையையு மெடுத்தோதி அவர்களை மகிழ்வித்தார். சில மாதங்களாயினபின் சுவாமி யோகானந்தர் அலகபாத்தில் நோயுற்று அபாயநிலையிலிருப்பதாக ஒரு கடிதம் கிடைத்தது. அதனால் அவர் சில அன்பர்களுடன் பிரயாணமாகி அலகபாத்திற்குச் சென்றார். எங்கு சென்றாலும் அவரைப் பக்தர்கள் சூழ்ந்து அவரது வாய்மொழிகளைப் போற்றி வந்தார்கள். அலகபாத்தில் சுவாமிகள் சில சொற்பொழிவுகள் நிகழ்த்தினர். அவ்வூரில் ஒரு முகம்மதிய 'காஜி' சுவாமிகளைச் சந்தித்து சமயக்கொள்கைகளிற் றமக்கிருந்த சங்கைகள் நீங்கப்பெற்று, பக்தரானர். சுவாமிகள் அம்முகம்மதியப் பெரியாரை ஒரு மகா புருடரென்று கூறி, 'திகம்பரராகவும், பித்தராகவும், பண்டிதராகவும், முட்டாளாகவும், மூர்க்கராகவும், துறவியாகவும் மகாபுருஷர்கள் மண்ணுலகில் ஜனிக்கின்றனர்' என்று விளக்கி யருளினர். ஆதலின், உண்மைப்பொருளிருக்கும் இடத்தை ஊகித்துணர வேண்டுமென்றும் தமது சீடர்களுக்குக் கூறினர்.

சில தினங்களுக்கப்பால் யோகானந்தரின் தேகோபாதி சற்று தணிந்தது. பொரநாகூரிலிருந்து வந்த அன்பர்கள் இருவர் மூவராக ஊருக்குத் திரும்பினார்கள். சுவாமிகள் நிரஞ்சனானந்தருடன், வழியில் காசியில் இரண்டொருநாட்கள் தங்கினர். அலகபாத், பிருந்தாவனம், கங்கால் முதலிய விடங்களில் சுவாமிகளுடைய சித்தாந்தத்தைப் பரப்பும் சேவாஸ்ரமங்களும் சிறு மடங்களும் அவர் முதலில் யாத்திரை சென்ற காலம் முதல் ஆரம்பமமாகி நடைபெற்று வந்தன. அதன்பின் சுவாமிகள் தமது சிஷ்யர்களுடன் பொரநாகூரை யடைந்தார். அப்பொழுது அச்சொற்ப அவகாசத்தில் அவர் அதிகம் யாத்திரைசெய்ய வியலவில்லை. அண்மையிலுள்ள சில சிற்றூர்களைச் சுற்றிப் பார்த்து வந்தார்.

மறுபடியும் ஒரு சக்தி அவரை மீண்டும் காஜிப்பூருக் கிழுத்தது. பாவ்ஹாரி பாபா, ஸ்ரீராமகிருஷ்ணரைவிடச் சிறந்த மகானென்ற எண்ணம் அவர் மனதை ஆட்கொண்டிருந்தது. இது காரணமாக, 1890 - ம் ஆண்டு ஜனவரி மாதத்தில் அவர் ஒருவருமறியாவண்ணம் வெளிப்பட்டுக் காஜிப்பூரை யடைந்தார்; அவ்வூரில் பாபு சதீச சந்திர முகர்ஜி யவர்களின் விருந்தினராயிருந்தார். அப்பொழுது சுவாமிகளை அநேக பிரமுகர்கள் வந்து கண்டனர். அவர் முன் யாத்திரையில் நட்புக்கொண்ட ராய்ககன் சந்திரராய் பகதூர், ராஸ் (Ross) என்ற ஆங்கிலேய உத்தியோகஸ்தரை அவருக்கு அறிமுகப்படுத்தி வைத்தார். அவ்வைரோப்பியர் 'ஹிந்துக்களின் விழாக்கள் சாஸ்திர சம்மதமானவைகளா? அவற்றிற் காதார முளவோ?'' என்ற பலவித முடுக்கான கேள்விகளைக்கேட்டு, அவற்றில் தமக்கிருந்த ஆசங்கைகளை நொடியிற் போக்கி யருளிய சுவாமிகளின் சக்தியை வியந்து, அவரை, அவ்வூர் ஜில்லா நீதிஸ்தல அதிபரான பெனிங்டன் துரையிடம் அழைத்துச்செல்ல சுவாமிகளுக்கு அவருடைய அரிய கூட்டுறவு மேற்பட்டது. பெனிங்டன் துரையவர்கள் சுவாமிகளின் ஹிந்துமதோத்தாரண விஷயமான தீர்க்க தரிசித்துவத்தை யறிந்து, அப்பால் சுவாமிகள் யோகமும், கடுமையான துறவறநெறியும் தத்துவ சாஸ்திரத்தோடு பொருந்துவதை விஸ்தரித்துப் பேசக்கேட்டு பெருமகிழ்ச்சி யடைந்தார். அதன்பின் அவருக்கு கர்னேல் ரிவெட் கார்நாக் என்ற துரைமகனாரிடம் சிநேக மேற்பட்டது. அவரோடு வேதாந்தத்தைப்பற்றிய தர்க்கங்கள்

காஜிப்பூரில் கனவான்களின் நட்பு

சில நிகழ்ந்தன. வேதாந்தக் கொள்கைகள் அனுதினமு மனுசரிக்கக் கூடியவைகளா? என்பது அவ்வைரோப்பியரின் வினவாக, சுவாமிகள் தமது அபூர்வ ஞானத்தை வெளிப்படுத்தி,

"உலகத்தில் மனிதர்கள் தத்தம் நித்யவாழ்வில் இன்பமும் துன்பமும் சுகமும் துக்கமும் சோதனைகளும் மாறி மாறி வர அனுபவித்தாலும், வேதாந்த மானது அவர்களை யாவற்றையும் தெய்வச்செயலென்றே உணரச்செய்து இவையாவும் இறைவனருளால் சம்பவிக்கின்றன. யாவும் தெய்வாம்ச மானவைகள். தாழ்ந்தனவும், உயர்ந்தனவுமாகிய யாவும் இறைவனருள் பெற்றவைகள்; அவை யாவும் முடிவில் பரப்பிரம்மத்தையே யடைவன; சிருஷ்டிக்கப்பட்ட பொருள்கள் யாவும் சம்கரிக்கப் படுகின்ற காலத்தில் ஒரே பரப்பிரம்மமாகிய எல்லையையே யடைகின்றன. தன்னறிவின் வளர்ச்சி, சீர்திருத்த முறைகள் யாவும் உதவிசெய்யவும், உபாதியும் மகிழ்ச்சியும் மனவெழுச்சியைத் தரவும், நன்மையும் தீமையும், ஒளியும் இருளும் சிருஷ்டியும் சம்ஹாரமுமாகிய சகலமும் பரம்பொருளின் தோற்றங்களாக நிகழ்கின்றன."

என்றுரை செய்தார். சுவாமிகள், மேலும் அனைவரும் அஞ்சும்படி, எழுந்து, முகத்திற் காந்தி வீச நின்று, ஹிந்துக்களின் கம்பீர மான கொள்கைகளினுயர்வை, அவர்கள் உண்ணல், உடைதரித்தல், மணத்தல், குழந்தைகளை வளர்த்தல், பிணத்தைத் தகித்து சடங்குக ளியற்றல் முதலியவற்றிலுள்ள பரிசுத்த சாஸ்திரோக்தமான விஷ யங்களோடு விளக்கி யருளினார்.

இப்படி யிருக்கையில், அறிவென்னும் குன்றினின்றும், அரு ளெனும் வாய்க்கால் வழியோடி, நரேந்திரரின் உள்ளமென்னும் மருதநிலத்திற்பாயும் ஞானமென்னும் நீர் பாவ்ஹாரி பாபாவென் னுங் கண்ணி வாய்க்காலொன்றில் திரும்பியது. 'நமது பரமாசாரி யர் பாவ்ஹாரி பாபாவா? அன்றி ஸ்ரீராமகிருஷ்ணரா?' என்ற ஐயப் பாடுகளதனுலெழுந்தன. சந்தேகமான மாயையெழவே அதன் பிரதிபிம்பமான சோகம் அவரை வருத்தத் தொடங்கிற்று. இவ் விதம் இருபத்தோருநாட்கள் அவர் மனம் சலனப்பட்டது. ஸ்ரீராம கிருஷ்ணரை யடையா முன்னமிருந்த நிலையை அப்பொழுது அவர் அடைந்தார். பாவ்ஹாரி பாவாவினிடமிருந்து பின்னுந் தாம் மேலான யோகசித்திகளை யடைந்து பிரம்மஞான மார்க்கங்களிற் செல்ல விட மிருப்பதாக நினைந்து அவர் சிஷ்யராகச் சிலகாலமிருக்க வெண்ணி னார். "ஆத்மாவின் அதீத நிலையான நிர்விகல்ப சமாதியை - பிரம்

மானுபூதியை யடையக்கூடிய பண்பு உனக்கிப்பொழுது கைகூடி விட்டது. நீ உலகிற்குப் புரியவேண்டிய தொண்டை முன்னிட்டு அந்த ஒரு வழியைமட்டும் நான் இப்பொழுது மறைத்து வைக்கின் றேன். உனது சேவை முடிந்தபின் கணமுந்தாமதியாமல் நீ அந் நிலையை யடைவாய்'' என்ற ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸரின் வாக்கி யங்களை அவர் முற்றிலும் மறக்குமாறு செய்தது அம்மயக்கம். அவர் பாவ்ஹாரி பாபாவின் ஆஸ்ரமத்திற்குச் செல்லப் புறப்பட்டார். புறப் பட்டதும் அவரை ஏதோ ஒரு சக்தி தேக்கிற்று. கால்கள் வேரோ டியதுபோல் நின்றன அக்கணமே சோதிவடிவான ஸ்ரீராம கிருஷ்ண பரமஹம்ஸரின் உருவம் அவர் முன் தோன்றிற்று. அவ் வுருவத்தைக் கண்டவுடன் அவர் நடுங்கிப்போய் அஞ்சலிசெய்து, நிலந்தோயப் பணிந்தெழுந்து நின்று கைகூப்பி 'அந்தோ! நான் குருத்துரோகி யானேனே! சம்பூர்ணரான எனது குருநாதனின் சாமோபதேசங் களை மறந்து வேறொரு ஆசானை விரும்பிய பாவியானேனே' என்று புலம்பிக் கண்ணீர் வடித்து, தமது குருதேவரின் திவ்யநாமத்தைப் பாடிப்பரவி, இனித் தாம் எவரையும் அடுப்பதில்லை என்று விரதம் பூண்டார். இவ்விஷயத்தை அவர் வெகுகாலம் வரையில் பல தடவை வற்புறுத்தியும் விஸ்தரித்துக்கூறவில்லை. ஆனால் 'உன்னைப்போற்றும் என்னருட்பா' என்ற அவரியற்றிய பனுவலினின்றும் இவ்வுண்மை கள் புலனுகின்றன.

சந்தேகமும் சஞ்சலமும்

அவ்வமயம் சுவாமி அபேதானந்தர் காசியில் வெஞ்சுரத்தால் வருந்துவதாகச் செய்தி கிடைக்கவே அவர் காசிக்குப் போகத் தமக்கு அடிக்கடி தருணம் வாய்ப்பதைக் குறித்து மகிழ்ந்து உடனே பிரயாணமாகிக் காசியை யடைந்தார். காசியில் கீர்த்திபெற்ற வட மொழிப் பண்டிதராக விளங்கிய பிரமாததாஸ் மித்ராவின் விருந்தின ராயிருந்தார். அப்பொழுது சுவாமி பிரேமானந்தரும் பொநாகூரி லிருந்து வந்துசேர அபேதானந்தர் விரைவில் குணமடைந்து வந்தார். அன்பர் நாளுக்கு நாள் குணப்பட்டு வருவதைக் கண்டு சிறிது மகிழ்ந்தவண்ண மிருக்கையில், ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸரின் முக்கிய இல்லாச்சிர மிக சீடரான பலராம்பாபு காலகதி யடைந்ததாக இடியைவிடக் கொடியதொரு செய்தி கிடைத்தது. இதைக் கேட்ட அளவில் நரேந்திரர் துடித்துப் புலம்பிக் கண்ணீர் விடுவது கண்ட

இடிவிழுந்ததை யொத்ததோர் செய்தி

பிரமாத தாஸ் மித்ரா, 'சந்நியாசியாகிப் பற்றறுத்த தாங்கள் இவ்வாறு துயருறுதல் நெறியோ?' யென, நரேந்திரர் 'சந்நியாசியென்னும் பதத்திற்குக் கல்லினுங் கன்னெஞ்சனென்ற பொருளில்லவே யில்லை. எனது உயிர்த்தோழனது பிரிவை யானெவ்வாறு சகித்த லியலும்? மூன்று மாதங்களுக்குமுன் சுரேஷ்மித்ராவென்னும் மற்றொரு அன்பரின் மரணச்செய்தி கிடைத்தது. இவ்வாறு உயிருக் குயிராயிருந்த அன்பர்களின் பிரிவுக்காற்றாது நான் துக்கித்தால், அதனால் துறவறத்திற் கெவ்வித வழுவேற்படும்?' என்று மறுமொழி புகன்று, குழந்தையைப்போல் விம்மி விம்மி யழுதார்.

அதன்பின் பலராம் பாபுவின் குடும்பத்திற்கு அனுதாபங்கூற வும், ஆஸ்ரம விஷயங்கள் சிலவற்றைத் திருத்தவும் சுவாமிகள் பொ ரநாகூருக்குச் செல்லவேண்டி நேர்ந்தது. நேற்றுபோற்றோன்றிய ஸ்ரீராமகிருஷ்ணரின் மகா சமாதி நேர்ந்து அன்று நாலரை யாண்டுக ளாயின.

புதுப் புது எண்ணங்கள் சுவாமிகளுள்ளத்தில் வானிடு வில்லெ னத் தோன்றுவதும் மறைவதுமாக விருந்தன. அவர் ஆஸ்ரம முத லனைத்தையுந் துறந்து தமது நீண்ட யாத்திரையி னிமித்தம் வெளி யேக நினைத்தார். பாரதவர்ஷத்தின் மேன்மைக்காகப் பாடுபடவேண்டு மென்ற வெறி அவரைப் பிடித்தலைத்தது. ஆயினும், தமது சீடர் களைக் கண்திறந்துவிட்டுப் பின்பு செல்வதால், மன வமைதி ஏற்படு மென்றும், தாம் கருதியகருமமும் வெற்றியோடு நிறைவேறு மென்றும் எண்ணி, அவர் சற்று தயங்கித் தமதுசீடர்களைப் பழக்கத்தொடங்கினார்.

சஞ்சார உறுதி பூண்டமை

உண்மையில் சுவாமிகள் பற்றுள்ள குடும்பியைப் போல் தமது அன் பர்களை நீத்தகல மனமில்லாதவரா யிருந்து வரும் நாட்களில் சுவாமி அகண்டானந்தர் தமது யாத்திரையை முடித்துக்கொண்டு பொரநாகூர் ஆச்சிரமத்தை யடைந்தார். அடைந்தவர் தாம் திபத், காஷ்மீரம், கேதாரிநாதம், பத்ரிகாஸ்ரமம் முதலான பிரதேசங்களுக்குச் சென்று கண்ட அற்புதக் காட்சிகளை விஸ்தரித்து, அவ்விடங்களில் தெய்வீக சாந்நித்யம் பெற்றிலங்கும் இயற்கையின் தோற்றங்களைப் புகழவே, சலித்துக்கொண் டிருந்த சுவாமிகளின் மனது உறுதிப்பட்டது.

ஆகவே 1890-ம் ஆண்டு 'ஜுலை' மாதத்தில் அவர் பொரநாகூர் ஆச்சிரமத்தினின்றும் வெளியேறினார். புறப்படு முன் அவர் தமது அன்பர்களை நோக்கி "நான் எனது கரஸ்பரிச மாத்திரத்தால் மக்க

ளைப் பரிசுத்த ராக்க வல்ல சக்தியை யடைகின்றவரையில் இங்கு திரும்புவதில்லை. ஆதலின் ஆஸ்ரமத்தைக் கிரிஷ்பாபுவின் உதவியை யேற்றுச் செவ்வையாக நடத்தி ஒழுக்கத்திற் குறைவுபடாம விருப்பீர்களென ஸ்ரீராம கிருஷ்ணர் சாட்சியாக நான் நம்புகிறேன்" என்று கூறிவிட்டு, கங்கை யாற்றின் அக்கரையில் வதியும் ஸ்ரீசாரதாமணி தேவியை யணுகி "தாயே! நான் பரிபூர்ண ஞானத்தை யடைந்த பின்னரே, இப்பொழுது தொடங்கிய யாத்திரையி னின்றும் திரும்புவேன். என்னை ஆசீர்வதிக்க வேண்டும்!" என்று அவளடிபணிந் தெழ, அன்னையும் ஆனந்தக் கண்ணீர் பெருக்கி, அவரைத் தழுவி மனப்பூர்வமாக ஆசீர்வதித்தாள். அவர் தன்னைப் பெற்று வளர்த்த தாய் - புவனேஸ்வரி யடிபணிந்து விடைபெறவில்லை. இதற்குக் காரணம் அவர் தம்மை யீன்ற அன்னையை ஹிருதயத்திலேயே வைத்துப் பூசித்து வந்தமையே யாகும்.

சாரதா தேவியிடம் விடைபெறல்

அப்பால், சுவாமி விவேகானந்தர், சுவாமி அகண்டானந்தருடன் பொரநாகூரினின்றும் நீங்கி, பாகீரதியி னழகிய கரையை வழி கொண்டு, கால் நடையாகப் பரிசுத்த ஜலக்காற்றைச் சுவாசித்த வண்ணம், கிராமங்கள் பலவற்றின் வழியாக, இயற்கையி னழகைத் தரிசித்தவாறே செல்லலுற்றார். வனாந்திரங்களும், வசந்தமும், கங்கையுமே வழித் துணையாக வருவனபோற் றொடர்ந்தன. மாறுவேடம்பூண்ட மன்னர்களை யொத்த அவ்வதிபால்யர்கள், சில விடங்களி லுணவிரந்தும், யுவராஜர்களைப்போல் நடந்தும், தமது கமண்டலங்களுடன் யாத்திரை செய்தனர். இவ்விதம் பன்னாட்கள் நடந்து, பகல்பூரை யடைந்து, அவ்வூரில் கங்கைக்கரையி லமைந்துள்ள ஸ்ரீ சிவ சந்திர ராஜாவின் அரண்மனைக்கருகி லமர்ந்தார்கள். அவர்களுடைய முகம் வைராக்கியத்தாலும், தேஜசாலும் பிரகாசித்தது. அப்பொழுது நடுப்பகல் நேரம். சற்றுநேரங்கழித்து எழுந்து அவர்கள் மதுரநாத் சின்ஹாவின் இல்வாயிலிற் போயமர்ந்தார்கள். அப்பொழுது மதுரநாத் சின்ஹா திண்ணையி லுட்கார்ந்து கொண்டிருந்தார். இவர்களை யாரோ பஞ்சத்திற் காண்டியென்று நினைத்து அவர் பராமுகமாகத் தாம் வைத்திருந்த பௌத்த சமய நூலை வாசித்து வாறிருந்தார். பகலிரண்டுமணி யாயிற்று. பசியால் வாடிய நரேந்திரர் சின்ஹாவைப் பார்த்து 'ஐயா! தாங்கள் வாசிக்கின்ற புத்தகத்தின் பெயரென்ன?' என்று வினவ,

பகல்பூரை யடைதல்

மதுராநாதர் சுவாமிகளுடைய இனியதொனியா லிழுக்கப்பட்டவ ராய், அந் நூலின் பெயரைச்சொல்லி, 'உங்களுக்கு ஆங்கிலந் தெரியுமோ ?' என, சுவாமிகளும் 'சிறிது வரும்' என்று மறுமொழி பகர்ந்தார். பின்ஹறா, சுவாமிகள் அந்நூலிலுள்ள விஷயங்களையெல்லாம் பாராமலே கூறித் தமது அபிப்பிராயத்தையும், உரையையும் ஆங்காங்கு வெளியிடுவது கண்டு, ஆச்சரியப்பட்டு, விரைந்தெழுந்து 'இவர் யாரோ ஓர் மகான்போலும். நாம் இவர்களை அலட்சியஞ் செய்து அபசாரனுயினேம்' என்று அஞ்சலிஹஸ்தராய் அடிபணிந் தார். இருவரும் அப்பால் அளவளாவி சம்பாஷித்தனர். பின்ஹறா சுவாமிகளை யோகசாதனங்களைப்பற்றி வினவ, சுவாமிகள் தமது யோகானுபவங்களை விளக்கி யருள, அவருக்கு சுவாமிகளிடமிருந்த மரியாதையும், பக்தியு மதிகரித்தது. சில குறிப்பான உரைகளால் அகண்டானந்தருடைய பெருமையையும் பின்ஹறா அறியலானர். சுவாமிகள் சங்கீத நிபுணராய் விளங்குவது பின்ஹறாவுக்கிருந்த அன்பை வளர்ப்பதாயிற்று. 'இவர் ஒரு சித்தர்; யதீஸ்வரர்; சகல சாஸ்திர பாஷா சம்பன்னர்' என்று அவர் கண்டு கொண்டார். சுவாமிகளைப் பொன்னாலும், பெண்ணாலும் சோதித்துப் பார்த்தார். இச்சோதனையால் அவருடைய பக்தி அளவுகடந்து நின்றது. சுவாமிகளும் அவ்வன்பருடைய வேண்டுகோட்கிணங்கி பகல்பூரில் ஒருவாரந் தங்கினர். ஆங்கு சுவாமிகள் பல ஜைனமதானுசாரிகளைக் கண்டு அவர்களுடன் பழகி 'ஜைனம்' சனாதன தர்மத்தின் பிரிவே யென்றும், ஜைனர்களின் இருபெரும் பிரிவினர்களான திகம்பரர், சுவேதம்பரர்களின் கொள்கைப் பேதங்களிவையென்றும் தெரிந்துகொண்டார். அவ்வூரில் பக்க வாத்தியக்காரர்கள் பதறிப்போக சுவாமிகள் சுமார் பத்துமணிநேரம் வரையில் பக்திரஸக் கீர்த்தனங்களைப்பாடி சங்கீதக் கச்சேரியொன்று நிகழ்த்தினர். பகல்பூரில் பின்ஹறாவுக்கு ஸ்வாமிகளிடமிருந்த அந்தரங்க பக்தி ஸ்திரப்பட்டது.

வைத்தியநாத வாசம்

அப்பால், இருவரும் பகல்பூரைவிட்டுப் புறப்பட்டு வைத்திய நாதத்தை யடைந்தனர். அந்த க்ஷேத்திரத்தில் மிகப் பிரபல பிரம்ம சமாஜப் பிரவர்த்தகரான பாபு நாராயண போஸ் அவர்கள் சுவாமிகளை வரவேற் றுபசரித்தார். அவருடன் சுவாமிகள் ஆங்கிலந் தெரியாதவரைப் போலவே நடித்து வங்கபாஷையிலேயே பேசினர். அப் பெரியார் பிற்காலத்தில் தமது பிக்ஷுவாயிருந்த இவரே மேல்நாட்டில் ஹிந்து

மத சித்தாந்தங்களை ஸ்தாபித்தவரென்று அறிந்து ஆச்சரியமடைந்து போற்றுவாராயினர்.

பின்னர், சுவாமிகள் அகண்டானந்தருடன் அவண் நீங்கி வாரணாசியை யடைந்தார். அங்கு சில நாட்கள் வீரேஸ்வரரையும், விஸ்வநாதக் கடவுளையுந் தரிசித்தவாறு வதிந்து, தமது அன்பரான பிரமாதாஸ் மித்ரரைக் கண்டு சற்றுநேரம் உரையாடிய பின், தாம் இனி அவ்வூருக்குச் சமீபத்தில் திரும்புவதற்கில்லையென்றும், ஏதோ வொருசக்தி தம்மைக் குருதேவரின் மனோபீஷ்டத்தை நிறைவேற்று மாறு தூண்டுகின்ற தென்றுங் கூறி, அவரை ஓராச்சரியக் குழியிலழுத்தித் தமது பிரயாணத் தைத் தொடங்கினார். அதன்மேல், அகண்டானந்தர், தாம் அயோத்தியில் ஓர் மகானைக் கண்டதாகக் கூற, இருவரும் அவரைக் காணு மவாவுடன் அயோத்திக் கேகினர். அங்கு மகா பகவத் பக்த சிரோமணியாக விளங்கிய மோகானந்த ஜானகி பாத சரணரைக் கண்டு, அவர் வாயிலாகப் பக்தி மார்க்க உபதேசம் பெற்று, அயோத்தியை அன்பிலா தகன்றார்கள்.

வாரணாசி அயோத்தி வாசம்

பிறகு அவர்கள் நைனி தலத்தை (Naini Tal) யடைந்து, பாபு ராமப்பிரசன்ன பட்டாசாரியருடைய கிருஹத்தில் ஒருவாரந் தங்கி, பின் மலையடிவாரத்தை வழிகொண்டு, பத்ரிகாஸ்ரமத்தைத் தியானித்த வண்ணம், அன்ன ஆகாரமின்றி, பைசாவும் கையிலில்லாமல் ஆர்வம் வழிகாட்ட, வைராக்கியம் 'வா' வென்றழைக்கக் கொடிய காட்டுவழியே நடந்துசெல்லலுற்றார்கள். மாலைப் பொழுது மாண்புடன் வந்தது! சூரியன் அஸ்தமனமாகும் சமயம்! ஆங்கோர் அரித்தோடும் சிறு அருவி. அதன் கரையிலோர் அழகிய அசோக விருக்ஷம். இந்த இயற்கையினழகு பூரித்து விளங்குமிடத்தை இருவரு மடைந்தார்கள். சுவாமிகள் அவ் வருவியில் கை கால் களைச் சுத்தஞ் செய்துகொண்டு அவ்வசோக மரத்தடியி லமர்ந்து சமாதியாகித் தியானித்தெழுந்து அகண்டானந்தரை நோக்கி 'நான் புத்தர் ஞானோதய மடைந்த இவ்வசோக மரத்தடியில் ஓர் உண்மையை இன்று கண்டேன். அணுவி லண்டங்கள் விளங்குவதை நான் தரிசித்தேன்' என்று கூறி ஆனந்த மடைந்தார்.

நைனிதலம்-பத்ரி காஸ்ரமப் பிரயாணம்

அதன்பின் வழி நடந்து, சில தினங்களாயினபின் அல்மோராவைச் சமீபித்தனர். வழியில் சுவாமிகள் மிகவும் களைத்துப்போய்

ஒரு முகம்மதிய ரிடுகாட்டில் களையால் படுத்து விட்டார். அகண்டானந்தர் ஐயன் களையை யாற்றக்கருதி கமண்டலத்தை யெடுத்துக் கொண்டு தண்ணீர் கொண்டுவரச்சென்றார். அப்பொழுது அவ் விடுகாட்டுக் காவலாளரான முகம்மதிய வயோதிகரொருவர் சுவாமி களைப்பார்த்து மனமிரங்கி வணங்கி நிற்க, சுவாமிகள் பேசவும் சக்தியில்லாதவராய் உண்ண ஏதேனு முளதோவென சமிக்ஞை செய்ய, அக்கிழவர் 'அடியேன் இடுகாட்டைக்காக்கும் முகம்மதிய னாயிற்றே? யான் தமக்கு உணவளிக்க அருகனல்லவா?' என்று உள்ளன்புடன் புகன்றார். இதைக்கேட்டு சுவாமிகள் 'எச்சாதியனாயி னென்ன? ஈனப் பறையராயினு மவர் எனது சகோதரரன்றோ! அன்பின்முன் சாதிவேற்றுமை புறங்காட்டியன்றோ வோடும்?' என்று மெல்லப்பேசி அவ்வன்பரளித்த கோதுமை ரொட்டியை வாங்கியுண்டு, 'ஈஸ்வரோ மனுஷ ரூபேண' என்று அவரைப் போற்றுவாராயினர். இவ்வன்பரைச் சுவாமிகள் மறவாது தாம் மேல் நாட்டினின்று திரும்பியதும் சந்தித்துப் பொருளுதவி புரிந்தார். ஆஹா! பரிபூரண பிரம்மஞானத்தையடைய அவர்பட்ட துன்பங் கள் பலவன்றோ? அதற்கு மனவுறுதியும், சித்தசுத்தியும் எவ்வளவு வேண்டி யிருக்கின்றது.

ஓர் முகம் மதியக் கிழவரின் உபசாரம்

அதன்பின் கதகோடத்தின்வழியாக, அல்மோராக் குன்றுகளின் அற்புதக்காட்சிகளைத் தரிசித்தவண்ணம் அல்மோராவை யடைந்தார் சுவாமிகள். அகண்டானந்தர் சுவாமிகளை அம்பாதத்தருடைய நந்த வனத்திற்கு அழைத்துச்சென்று, ஆங்கிருத்தி, முன்பே அங்கு வந் துள்ள சாரதானந்தரையும், கிருபானந்தரையும் அழைத்து வந்தார். பொரநாகூரிலிருந்து முன்பே இவர்களது வருகையைக் கடித மூலமாக எதிர்பார்த்து அல்மோராவில் காத்துக்கொண்டிருந்த இவ்விரு அடி யார்களும், சுவாமிகள் வரவைக்கேட்டதும் அளவிலா மகிழ்ச்சியுடன் விரைந்து வந்து அவரைக்கண்டு வணங்கினர். அத்தலவாசியான ஸ்ரீ லாலா பத்ரிஷாவும் சுவாமிகளை வணங்கி அன்பர் குழாத்திற் கலந்து கொண்டனர். சிரஸ்தார் ஸ்ரீ கிருஷ்ண ஜோஷியும், சுவாமி களை வணங்கி, அளவளாவிய பின், துறவறத் தைப்பற்றிப் பேசத்தொடங்கி, தமக்கிருந்த சில ஐயப்பாடுகள் நீங்கப்பெற்றார். மாந்தர் மனத் தகத்தேயுள்ள மாசுகளைப் போக்கும் மகாத்மா ஒருவர் வந்துளா

அல்மோரா வாசம்

றென்ற விஷயம் அவ்வூரெங்கும் ஒரு நொடிப்பொழுதிற் பரவிற்று. பலரும் சுவாமிகளைக்காண வந்து கூடினார்கள். சுவாமிகள் 'ஏழை சந்நியாசியாகிய அடியேன் எவ்விதம் அதற்கருகன். நானோ நோயாளி. பிறர் நோயைப் போக்குவதெவ்வாறு?' என்று புகன்று, அப்பால் அன்பாற் கட்டுப்பட்டவராய் சில அரிய உபதேசங்களைப் புரிந்து, அவ்விடம்விட் டகலுந்தருவாயில், அந்தோ, கூற்றுவனைப் போன்ற ஒரு கொடிய தந்திச்செய்தி வந்தது. தன்னுடன் பிறந்து, உடன்விளையாடி "அண்ணா! அண்ணா!" வென்று அழைத்த தமது சகோதரிகளிலொருவள் விண்ணுலகேகியதறிந்து, அவர் துறவியே யானாலும் "அது இரத்த சம்பந்தமல்லவா? தானாடாவிட்டாலும் தன் சதையாடும்" என்னும் உலக வழக்குப்படி, தன்னையறியாது துக்கம் வந்தடைக்க விம்மி விம்மி யழுதுப் பின்னொருவாறு மனந் தேறினார்.

அதன்மேல், அவருள்ளே விளங்கும் பரமாத்மா அவரைத் தூண்ட, அவர் அல்மோராவினின்றும், அகண்டானந்தர், சாரதானந்தர், கிருபானந்தர்களுடன் வெளிப்பட்டு கார்வாளம் (Garhwal) என்னும் நகரை நோக்கி நடந்தார். கர்னப்பிரயாகைக்குச் சென்றதும், மலைக்காற்றும் நீருட் சம்பந்தப்பட்டமையாலும், சீதோஷ்ண மாறுபாட்டாலும் சுரத்தால் பீடிக்கப்பட்டு வழியிலிருந்த அறச்சாலையில் மூன்றுநாட்கள் தங்கிப் பின் சற்று குணமடைந்து, உருத்திரப்பிரயாகையை யணுகினார்கள். அப்புண்ணியத்துறையில் மகா சித்தராயிலங்கிய பூர்ணானந்தர் என்னும் வங்காள சந்நியாசியைக் கண்டு பணிந்து ஆத்மவிசாரம் செய்வாராயினர். சிறிது குணமடைந்ததுபோலத் தோற்றிய சுரம் மீண்டும் உருத்திரப்பிரயாகைக்குப் போனதும் வருத்தத் தொடங்கிற்று. 'சர்வலோக சரண்யனான பகவானே வைத்தியர்! அவருடைய திவ்யநாம சங்கீர்த்தனமே இப்பிறவியாகிய நோயையும், அப்பிறவிக்குக் காரணமான உடலைப்பற்றிய வியாதியையும் போக்கும் ஔஷதம்' என்று நம்பி, அம்மலைப்பிரதேசத்தில் தன்னந் தனியிடத்தில் வசிக்கின்ற அவருக்கு உதவுமாறு சிவபெருமான் அரசாங்க 'அமீனா' ஒருவரைக் கொண்டுவந்து அவர் முன் சேர்த்தார். சுவாமிகள் உடலைப்பற்றிய உபாதி சற்று தணிந்தபின் அவ் 'வமீனா' சுவாமிகளை வண்டிமார்க்கமாக ஸ்ரீநகருக்கு வழியனுப்பினார்.

கார்வாளம், கர்னப்பிரயாகை, உருத்திரப் பிரயாகை வாஸம்

இதுவரையில் அவர்கள் அல்மோராவிலிருந்து, பத்திரிகாஸ்ரமத்தை நோக்கி, சுமார் நூற்றிருபதுமைல் கடந்தே வந்துவிட்டார்கள். இதற்குள் ஒரு பட்ச காலமாகிவிட்டது. ஸ்ரீநகரை யடைந்ததும் அந்நகரை வலங்கொண்டோடும் அழகனந்த நதிக்கரையில் முன்பு சுவாமி துரியானந்தர் வசித்துவந்த பர்ணசாலையிற் றங்கினார்கள். பல மலர்களை யடுத்துத் தேனையுண்டு வதியும் பிரமரத்தைப்போல மலரையொத்த மனமுடைய சில இவ்வாச்சிரமிகளிடம், சுவாமிகள் தமது அன்பர்களுடன் அமுதிரந்து உண்டு வருவாராயினர். பின்பு ஸ்ரீ நகர ஆலயங்களிலுள்ள திவ்யமூர்த்திகளைத் தரிசித்து, எங்கும் பச்சைக் கம்பளம் விரித்ததுபோன்று விளங்கும் புற்றரைகளை 'பச்சைமா மலைபோல் மேனி' யென்று போற்றித் தமது யாத்திரையைத் தொடங்குவாரானார்.

ஸ்ரீநகர வாஸம்

செல்லும் வழியில் ஏகாந்தமான மலைப்பிரதேசங்களின் பரிசுத்தக் காற்றைச் சுவாசித்துக்கொண்டு தம்முடன் வரும் மூன்று அன்பர்களுக்கும் உபநிஷதங்களின் தாத்பரியங்களை உபதேசித்துக் கொண்டே சென்றார். வழியிற் பல காட்டு மிருகங்கள் தோன்றி மறைவதும், மேகங்கள் கூடி கர்ஜித்துப் பெய்வதுமாக அவர்கள் சஞ்சாரத்திற்கு இடையூறு புரிவனபோல் நடித்தும், அஞ்சா நெஞ்சினரான அவர்கள் இவற்றைப் பொருட்படுத்தவில்லை. அவர்களியற்றிய கடுமையான பரிவ்ராஜக வாழ்வைக்கண் டஞ்சினான் போல் ஆதித்தன் அஸ்தமித்தான். கால்வலி யொருபக்கமாக பசிப்பிணி பலவாறு வருத்த, எட்ட வுள்ள கிராமமொன்று, கிட்ட விருப்பது போல் தோன்றி, அவர்கள் அணுக வணுக எட்டிச்சென்று மாயைபுரிய, அவர்கள் ஓரச்சாலையை நண்ணினர். சற்றுக் களையாறி, அப்பால் சமீபத்தில் சில தீபங்கள் பிரகாசிப்பது கண்டு, ஊரொன்றுளதெனக் கொண்டு, ஊர்ந்து சென்று சில சிறுவீடுகளாலாகிய அக்குக்கிராமத்தை யடைந்தனர். பசி பொறுக்கமாட்டாமல் ஒவ்வோரில்லமாகச் சென்று 'பவதி பிக்ஷாம் தேகி' யென்று பிச்சை கேட்டும், பருக்கையுமளியா அன்னபூர்ணேஸ்வரிகள் அச்சிற்றூரில் நிறைந்திருத்தல் கண்டு, 'இதுவும் ஈசனது சோதனையே போலும்' என்று மயங்கிப் பின் 'துறவிகள் யாசித்தும் உணவு கிடைக்காது பசியினால் உயிர்விட நேருங்கால், பலாத்காரமாகப் பிக்ஷைபெறலாம்' என்ற நீதி

பருக்கையுமளியா அன்னபூர்ணிகள்

அவர்கள் நினைவுக்குவர, அப்பட்டிக்காட்டார்களைப் பயமுறுத்தி, அப்பால் சிறிது அன்னங்கிடைக்க அருந்தி ஆண்டவனைத் துதிப்பாராயினர்.

அவண் நீங்கி, சில நாட்கள் நடந்து சுவாமிகள் தமது சகபாடிகளுடன் தேக்ரி (Tehri)யை யடைந்தார். தேக்ரி சமஸ்தான திவானும் கல்கத்தா நகர பண்டித ஹரப்பிரசாத சாஸ்திரி யவர்கள் சகோதருமான பாபு ரகுநாத பட்டாச்சாரியார், நால்வரையும் அன்புடன் வரவேற்று, வேண்டிய உதவிகளனைத்துஞ் செய்தார். பாகீரதி நதிக்கரையில் பாங்குடன் சுவாமிகள் தமதன்பர் மூவருடனும் தங்கினர். அத்திவான், சுவாமிகள் கேதாரி - பத்ரிக்கும் கைலாசத்திற்கும் யாத்திரை செய்யப் போதிய வசதிகளைச் செய்து தருவதாக வாக்களித்ததுமன்றி, சுவாமிகளின் வேண்டுகோட்கிணங்கி கணேசப் பிரயாகையில் யோக சாதனங்களியற்ற ஏற்ற உதவியையும் புரிந்தார். அப்பொழுது ஒன்றை நினைக்க அது ஒழிந்து வேறாகி, அகண்டானந்தருக்கு சுவாச சம்பந்தமான வியாதி உண்டாயிற்று. அதனால், சுவாமிகள் தமது பிரயாணத்தைத் தாத்காலீகமாக நிறுத்தி, வைத்தியர் வேண்டுகோட்கிணங்கித் தமதன்பர்களுடன் தேக்ரி தேனத்தை நோக்கிப் புறப்பட்டார்.

தேக்ரி வாஸம்

அவர்கள் தேக்ரியினின்று மகன்று தேக்ரிக்கும் தேக்ரிதேனத்திற்கும் இடைவழியிலுள்ள ராஜ்பூரை யடைந்தார்கள். அவ்வூருக்குச் செல்லும் வழியில் துர்யானந்தரைப்போல யாரோ வொரு துறவி, சற்று தூரத்தில் நிற்பதைக் கண்டு சந்தேகித்து, சமீபித்து அவர் துரியானந்தராகவே யிருக்கக் கண்டு, கூடிக் குலாவித் தத்தம தனுபவங்களைப் பற்றி ஆரவாரத்துடன் பேசியவண்ணம் தேக்ரிக்குப் போயினர். அப்பால், திவானளித்துள்ள கடிதத்தைக் கொடுத்து, அவ்வூர் பிரதம வைத்திய சாலை யதிபரைக் கண்டு, சுவாமி அகண்டானந்தருடைய தேக நிலையைப் பரிசோதிக்க வேண்டினர். கற்றோர்க்குச் சென்றவிடமெல்லாம் சிறப்பாதலால், அவ்வைத்யாதிபர், அவர்களை அன்புடன் ஏற்றுபசரித்து, துரியானந்தரை முறைப்படி பரிசோதித்துப் பார்த்து, அவரை நல்ல விதமான காற்றுள்ள பிரதேசத்தில் வைத்துக் காக்குமாறு தூண்டினர். அதற்கிணங்க சுவாமிகள் தம தன்பர்க

ராஜ்பூருக்குச் செல்லல், பிரிந்தவர் கூடுதல், தேக்ரியை யடைதல்.

ளுடன் நோயாளியைக் கூட்டிக்கொண்டே, வைத்தியர் கூறியபடி ஓர் சிறு விடுதியும், நோயாளிக்கேற்ற உணவு மளிக்கப் பலரை வேண்டியும், இரும்பன மனத்தின ரெவரு மிசைந்தாரில்லை. கடைசியாக அவ்வூர் நியாயவாதியும், தயாளுவுமான பண்டித ஆனந்த நாராயணர் மனமிரங்கி முன்வந் துதவினார். அந்நகரில், பெரிய வேதாந்தி யென்றும், ஐந்து நிமிஷங்களில் அகண்டானந்தத்தைக் கண்டு மீண்டவ ரென்றும் பெயர் வாய்ந்தவரான பண்யகுலப் பண்டித ரொருவரைக் கண்டு, வேதாந்த விஷயமாக வாதித்து அவரை யாட்கொண்டருளினார். மற்றும் ஹிருதயபாசு என்ற கிறிஸ்தவ அன்ப ரொருவருக்கும் சுவாமிகளுக்கும் கிறிஸ்தவாம்சமான சில ரசமான சம்பாஷணைகள் நிகழ்ந்தன.

அப்பால், சுவாமிகள் அகண்டானந்தரை சிகிச்சையின் பொருட்டு அலகபாத்திற் கழைத்துச் செல்லுமாறு கிருபானந்தரை அனுப்பி விட்டு ருஷீகேசத்திற்கு மற்ற அன்பர்கள் கூடவா பிரயாணமானார். கிருபானந்தர், அகண்டானந்தரை அலகபாத்திற் கொண்டுபோய் விடுத்து மீண்டார். அகண்டானந்தரும் அலகபாத்திலிருந்து, மீரத்திலிருந்த அவருடைய பிரியஸ்நேகிதரான வைத்தியர் திரைலிங்க கோஷ் அவர்களை யடைந்து, சுமார் இரண்டு மாதகாலம் சிகிச்சையி லிருந்தார். இவ்விதம் சுவாமிகள் தமது 'தீவிர பரிவ்ராஜக நிலை'யி லொழுகிப் பின் மிக்க கடுமையாக அந்நிலையை யனுஷ்டித்தவாறு ஹிமாசலத்தில் சஞ்சாரம் செய்ய வாரம்பித்தார்.

ருஷீகேச யாத்திரை

20-ம் அத்தியாயம்

ஹிமாசல யாத்திரை

யதீஸ்வரர்களும் இல்லறத்தாரைப்போல விருப்புள்ளவர்களா யிருக்கின்றனர். பொருள் வேண்டும், மனை வேண்டும், கௌரவம் வேண்டுமென்ற நோக்கங்களுட னிலங்கு மில்லாசிரமிகளைப்போலத் துறவிகள் பகவான் திருக்கோயில் கொண்டருளி யிருக்கும் ஸ்தலங்களைத் தரிசிக்கவேண்டும், புண்ணிய நதிகளில் நீராட வேண்டும், மாயையென்ற மாண்புகழ் வேண்டுமென்று ஆர்வமிகுந்து அலைகின்றனர்.

ஆதலின் சுவாமிகள், வியாஸபகவான் நான்மறைகளைத் தொகுத்தருளிய நவிலொணுச் சிறப்புள்ள இருஷீகேசத்தை யடைந்தார். இருஷீகேசம். இயற்கை வனப்புடன் இமயவரையினடிவாரத்தில் கங்காதீரத்திலுள்ள ஓர் புண்ய க்ஷேத்திரம். அங்கு எப்பொழுதும் துறவிகள் கூடி ஆத்மவிசாரஞ் செய்துகொண்டிருப்பார்கள். அப்பதியில் சுவாமிகள் தமதன்பர்கள் சூழ உணவிரந்துண்டு சந்திர மௌளீஸ்வரர் சந்நிதானத்திற்கருகில் வசித்து வந்தார். இப்படியிருக்கும் நாளில் திடீரென ஒருநாள் சுவாமிகளுக்கு கொடூர சுரங் கண்டு நினைவற்றுக்கிடந்தார். அவருடைய உடல் சீதளமாயிருந்தது; நாடி பேசவில்லை. 'நாமென்னசெய்வோ மிதற்' கென்று நண்பர்கள் நடுநடுங்கி கைகளைப் பிசைந்தார்கள். வர வர சுரமதிகரிக்க, சுவாமிகள் கண்களைத் திறவாமலும், வாயசைக்காமலும் அசைவற்றிருத்தல் கண்டு பயந்துபோய் 'ஈசா! இதென்ன பரிசோதனை! எவ்வித உறவு மற்று ஏகாந்தவாசத்தைப் புரியவந்த எளியேங்களிடத்திற் கூடவா உமது திருவிளையாடல்?' என்று ஏங்கி நிற்கையில், சாது ஒருவர் திடீரென அங்கு வந்து அவர்களைத் தேற்றி ஏதோ ஒரு பச்சிலையைத் தேனிலரைத்துக் கொடுக்குமா றளித்துவிட்டு மறைந்தார். அப்பச்சிலை மருந்து பரம ஔஷதமாகி இரண்டொரு நாட்களில் சுவாமிகளைக் குணமடைவித்தது. பின்னர், அவர்கள் 'இந்நிகழ்ச்சி குரு சிஷ்யத்துவத்தை ஸ்திரப்படுத்துவதற்கான சோதனைபோலும்!' என்று வியந்தனர். அவ்வன்பர்கள் தமது தலைவரின் பொருட்டுத் தம்முயிரையே மருந்தாக உபயோகிக்கவும் சித்தமா யிருந்தார்கள். சுவாமிகளே அவர்களது உயிர்நிலை யன்றோ! அவரை யிழந்தால் பின் அவர்களுக்கென்ன ஆதாரவுண் டிவ்வவனியிலே? விவேகம் நீங்கிய பிறகு ஆனந்தமேது? ஆதலின், விவேகானந்த சுவாமிகளுள்ளவிடமே அவர்களுக்கு மனோவசீகரமாயும், அவரைப் பிரிந்த இடம் அரண்யமாகவுந் தோன்றிற்று.

ருஷீகேசவாசம், இறைவனது சோதனை.

பிறகு ருஷீகேசத்திலிருந்து சுவாமிகள் * ஹரித்துவாரத்திற் கேகி, கங்கால் (Kankhal) லிலிருந்து பிரம்மானந்தர் வந்துசேர அனைவருமாக சகரன்பூருக்குப் போயினர். அங்கு அகண்டானந்தர் மீரத்துக்குப் போயிருப்பதா யறிந்து, நோயோடு பிரிந்த அன்பரைக் காணவேண்டுமென்ற ஆர்வத்தால் மீரத்தை யடைந்தனர். அகண்டா

---

* விஷ்ணுவின் சந்நிதியை யடையும் மார்க்கமென்பது பொருள்.

னந்தரைச் சந்தித்து, அப்பால் சுவாமிகளும் அங்கு தங்கிக் கொஞ்சம் மருந்துண்டார். பசிவேளையில் புசியாததாலும், கிடைத்ததையுண்டு எங்கும் தரித்து நில்லாது வனாந்திரங்களிலும், மலைப்பிரதேசங்களிலு மலைந்து திரிந்தமையாலும் அவருடம்பு மெலிந்திருந்தது. ஏனைய அன்பர்களும் அப்பதியின் அண்மையிலுள்ள யக்ஞேஸ்வர பாபுவின் பிக்ஷுக்களாய்ச் சற்று ஓய்வெடுத்துக்கொண்டார்கள். சுவாமிகள் தமது பலஹீனத்தைப் பாராட்டாமல் அவ்வூரில் அவரிடம் உபதேசம் பெறவேண்டுமென்று விரும்பி வந்தவர்களையெல்லாம் அனுதினமும் செட்டிஜீ தோட்டத்திற் சந்தித்து உபதேசித்தார். இவ்வாறு சிறிது சாவகாசமாகவே மருந்து முதலியவை சாப்பிட்டு மீண்டும் பழைய தேகஸ்திதியை யடையும்வரை சுவாமிகள் அங்கு தங்கியிருந்தார். அந்நாட்களில் சுவாமிகள் தினந்தோறும் பிற்பகலில் பிரம்மானந்தர், அகண்டானந்தர், சாரதானந்தர், துரியானந்தர், கிருபானந்தராகிய சீடர்களையும் ஏனைய அன்பர்களையுங் கூட்டி, சாகுந்தலம், குமாரசம்பவம் முதலிய காளிதாஸ மகாகவி யியற்றியுள்ள நாடக நூல்களையும், விஷ்ணு புராணத்தையும் உபதேசித்து வந்தார்.

மீரத்திற்சேகல்

மீரத்தில் சுவாமிகளைப்பற்றிய புகழ் பரவவே தினந்தோறும் பக்தர்கள் திரள்திரளாகச் சுவாமிகள் தங்கியிருந்த கிருகத்தில் வந்து கூடினர். அவர்களுக்கெல்லாம் சலியாது தமது பலஹீனத்தையும் மதியாது சுவாமிகள் உபதேசஞ் செய்துவந்தார். ஏராளமாகத் தம்மை மக்கள் சூழ்ந்து நிற்பதைக்கண்டு அவருள்ளத்துள்ள சந்நியாசத்துவமெழுந்தது. பந்தம் வந்து அவரைக் கவிந்து கொண்டது. ஆதலின் அவர் உடனே தமது சீடர்களை விட்டுப் பிரிந்து தமது யாத்திரையைத் தொடங்க நிச்சயித்தார். இதைத் தமது சிஷ்யர்களுக் கறிவிக்க, அவர்கள் தாமும் உடன்வர அனுமதிக்க வேண்டினர். அதற்குச் சுவாமிகள் இணங்காராகி, பன்முறை தன்னைமட்டும் அழைத்துக் கொண்டுபோக அகண்டானந்தர் வேண்டியும் மறுத்து 'சிஷ்யர்களும் மாயா சொரூபிகள்தான்! அவர்கள் குருவை பந்தப்படுத்துகின்றனர். ஆதலின் நான் தனியே செல்ல நிச்சயித்துவிட்டேன்' என்று கூறிவிட்டு 1891-ம் ௵ 'ஜனவரி' ௴ டில்லிமாநகரை நோக்கிப் பிரயாணமானார்.

டில்லியை நோக்கிப் பிரயாணம்

டில்லி யென்னும் ஹஸ்திநபுரம் பாரததேசத்தின் பராக்கிரம சாலிகளான மன்னர்களின் பெருமையை விளக்க நிற்பது. இடிந்து பாழாகக் கிடக்கும் கோட்டை கொத்தளங்களும், அரண்மனைகளும் இப்பொழுது அந்நகரின் பல பாகங்களிலும் காணப்படுகின்றன. இந் நன்னகரை ஹிந்துக்களின் ரோமாபுரியெனல் ஒக்கும்! ஒக்கும்! சுவாமிகள் ஹஸ்திநபுரத்தை யடைந்து அதன் இராஜரீகத் தொல் புகழ விரிக்கும் ரமணீகரமான வீதியின் வழியே நடந்தார். பாழாகித் தோன்றும் பழங்கால அரண்மனைகளைக் காண அவருள்ளம் பராக்கிரமத்துடன் எழுந்தது. சில தெருக்களைத் தாண்டி சுவாமிகள் அன்பர் ஷியா மால் தாஸ் சேதரின் இல்லத்தை யடைந்தார். சிவபெருமானே தமக்கு வரமருள எழுந்தருளினரென மகிழ்ந்து, அவ்வன்பர் சுவாமி களை வரவேற்றார். அந்நகர் வியாபக வைத்தியரான ஹேமசந்திர சேனர் என்பார் சுவாமிகளைக்கண்டு உபதேசம்பெறும் பாக்கியத்தைப் பெற்றனர்.

அஸ்திநபுரத்தின் அழகு

சுவாமிகள் டில்லியின் பழங்கால இடிந்த மாடமாளிகைகளையும், கூட கோபுரங்களையும் கண்ணுறுங்கால், ஒரு பக்கம் சிற்ப நுட்பங் களைக் கண்டு ஆச்சரியமும், சரித்திர விஷயங்களை யெண்ணி வீரமும், அவை தற்காலம் பாழாகி வீழ்ந்திருத்தல் கண்டு துக்கமுடையவராயி னர். 'ஐயகோ! பாரத பூமியின் இத்தகைய மாண்புகளெல்லாம் மறைந்தனவே' என்று வருந்துவார். கண்களைக் கவருமற்புதக் காட்சிகளைக் காணும்போதெல்லாம் தமது சிஷ்யர்களின் ஞாபகம் அவருக்கு வரும். அவர்களு மிக்காட்சியைக் கண்டு களிக்கவேண் டாவோ' வென்று ஏங்குவார். அக்கணமே 'அந்தோ! எவ்வளவு ஜாக்கிரதையா யிருந்தாலும் பந்தம் வந்தெனைக் கவிழ்த்து விடுகின் றதே! என்ன செய்வேன்' என்று தமது சீடர்களைப்பற்றிய ஞாபகமே யுள்ள தம்மனதைப் பரிசுத்த கங்கை நீராற் கழுவி விடுவார். கலா சமுத்திரமாக விளங்கிய சுவாமிகளை அஸ்திநபுரத்திற் பல அன்பர் கள் சூழ்ந்து உபசரிப்பதும், உபதேசம் பெறுவதுமாகக் கொண் டாடினர்கள்.

பிறகு சுவாமிகள் டில்லியைவிட்டகல, அவருடைய பிரிவுக் காற்றுது ஹேம சந்திர சேனர் முதலான நண்பர்கள் பலரும் வருந் துவாராயினர். சிலர் அவரோடு வருவதாகப் பிரயாணப்பட்டனர். சுவாமிகள் தன் நெஞ்சைக் கன்னெஞ்சாக்கிக்கொண்டு "பந்தம் ஒழி!

பரமாசாரியன் மனத்தேரை நடத்திச் செல்" என்ற மகா வாக்கியங்கள் செவிகளி விடைவிடாது தொனிக்க, அன்பர்களனைவரையும் பிரிவுத்துயரத்தி லாழ்த்தி அஸ்திஞபுரத்தினின்றும் அன்றே ஆழ்வாரை நோக்கிப் பிரயாணமானார்.

எதிரிகள் துணுக்குற விடுத்து, பற்றலர்தம்மைப் பற்பலவிதமாய்ச் செறித்திடுந் திறனுடைத் தீர இரத்தினங்கள் தோன்றிய பிரதேசம் இராஜபுதனம். இராஜபுதனத்தைச் சுற்றி மலைகள் கோபிதமா யமைந்திருக்கும். அழகிய அருவிக ளாங்காங்கே பாயும்! புரந்தரனுலகே புவனத்தி லுற்றதோவெனக் கண்டோர் கண்களைக் கவரும், கற்களாலிழைத்த காவலர் மாளிகைகள் ஆங்காங்கே யமைந்திலங்கும். ஆழ்வாரென்னும் தலம் இவ்வழகிய இராஜபுதனத்தினரங்கெனத் திகழ்வது.

இராஜபுதனத்தின் சிறப்பு

ஆழ்வார் 'ரயில்வே ஸ்டேஷனி' லிறங்கி சுவாமிகள், அழகிய தோட்டங்களும் அற்புத மாளிகைகளும் பின்னிட நடந்து, போகும் வழியில் 'நகர வைத்தியசாலை' யென்ற 'போர்டை'ப் பார்த்து அதனுள் நுழைந்து அம்மருத்துவசாலை வைத்தியர் ஸ்ரீ குரு சரணவங்கரைப் பார்த்த மாத்திரத்தி லறிந்து, வங்கபாஷையில், 'அன்பரே! இவ்வூரில் சந்நியாசிகள் தங்கும் சத்திர மெங்குளது?" என்று வினவினார். ஸ்ரீ குருசரணர், சுவாமிகளைப் பார்த்தமாத்திரத்தில் 'இவர் ஓர் வங்கநாட்டு மஹான்' என்றுணர்ந்து, அவருடைய தோற்றத்தால் கவரப்பட்டு, அவரை அழைத்துச்சென்று அவ்வூர் அறச்சாலையையணுகி, ஓரறையை விடுதியாக ஏற்பாடுசெய்து, சுவாமிகளை அங்கிருத்தி, அவருடைய சிநேகிதரும் அந்நகரக் கலாசாலை துருக்கமொழிப் புலவருமான மௌலிசாப் அவர்களை அழைத்து வந்தார். மௌலிசாப் அவர்கள் முகம்மதியரானாலும் ஹிந்துமத சித்தாந்தங்களிற் பற்றுள்ளவர்; யோக நூல்களைக் கற்க வேண்டுமென்ற அவாவுள்ளவர். ஆகவே, தமக்கு சுவாமிகள் மெய்ஞான உபதேசஞ்செய்வாரென்ற நம்பிக்கையால் சுவாமிகள் தங்கியுள்ள அறைக்கு அவர் நேரே புறப்பட்டு வந்தார். அப்பொழுது சுவாமிகள் ஸ்ரீ குருசரணரால் ஏற்படுத்தப்பட்ட அறையில் தமது காவியாடையை விரித்து, அதன்மேல் தாம் கொண்டுவந்துள்ள சில புத்தகங்களை யடுக்கி வைத்து, தண்டத்தை சுவற்றில் சாத்திவிட்டு, கமண்டலத்தில் தண்ணீர் எடுத்து வைத்துக்கொண்டு

ஆழ்வாரை அடைதல்

அமர்ந்து, வந்த இரண்டு அன்பர்களுடனும் சம்பாஷித்துக்கொண்
டிருந்தார். அறிவுக்கடலென விளங்கும் ஐயனைப்பற்றி அவ்வைத்தியர்
வாயிலாகக்கேட்ட அன்பர்கள் பலரும் குளம் வெட்டியவுடன் தேனை
கள் வந்து கூடுவன போற் குழுமினர். அதன்பிறகு சௌகர்யார்த்த
மாக சுவாமிகள் பண்டித சம்புநாதருடைய கிருஹத்தில் அவர் வேண்டு
கோட் கிசைந்து தமது வாஸஸ்தலத்தை மாற்றிக்கொண்டார். ஆங்
கிலம், ஆரியமொழிகளில் வன்மையும், யோகசித்தியும் பொருந்த,

ஆழ்வார் நகரில் அன்பர்கள் சூழல்

பிரம்ம தேஜசுடன் விளங்குமோர் வாலிபச் சந்நி
யாசி வந்துளாரென்ற விஷயம் ஆழ்வார் நகரெங்
கும் பரவவே, அவ்வூர் பகவத் பக்த சிகாமணிகள்
மட்டுமின்றி, அனைவரும் அவருடைய அன்பிலாழ்ந்தவர்களாய்,
உணவு உறக்கத்தையும் மறந்து உயர்ந்த பலவிஷயங்களைப்பற்றி யுரை
செய்யக் கேட்டனர். சுவாமிகளும் செவிக்கினிமையாகப் பாடுவதும்,
ஆன்மபரிபக்குவத்திற்கான மாண்பொருள்களை ஓதுவதும், உபநிடதங்
களுக்குரைபகர்வதும், 'குர்ஆன்' 'பைபிள்' கொள்கைகளை விஸ்தரிப்
பதும், புத்தர், சங்கரர், இராமாநுஜர், குருநானக், சைதன்யர், துளசீ
தாஸர், கபீர், ஸ்ரீராமகிருஷ்ணர் முதலிய தீர்க்கதரிசிகளின் சரித்திர
'காலக்ஷேபம்' செய்வதுமாக ஆழ்வார் நகரவாசிகளைக் களிப்பிப்பாரா
யினர்.

இனி, ஆழ்வாரில் நிகழ்ந்த ஓரரிய நிகழ்ச்சியைப் பகர்வாம். வழக்
கம்போல் சுவாமிகள் உபதேசிக்கும்பொழுது முகம்மதியர்களும்
சைவ, வைணவ, கிறிஸ்தவருமாகச் சகல மதஸ்தரும் அங்கு கூடுவ
துண்டு. அவருடைய உபதேசங்களும் சர்வசமய சமரசத்துட னிலங்
கும். ஒருகால், சுவாமிகள் பலர் சூழ்ந்திருக்க, பாரமார்த்திக விஷ
யங்களை யெடுத்தோதிக்கொண் டிருந்தார். அப்பொழுது ஒரு வேதி
யர், அசம்பாவிதமாக, சுவாமிகளும் பிராம்மணரா யிருந்தால் அவரை
அதிக அன்போடு உபசரிக்கலா மென்ற எண்ணத்துடன் "சுவாமி!
தாங்கள் எந்த வருணத்தைச் சார்ந்தவர்கள்?" என்று வினவ, அவ
ரும் அருவருப்புடன் "காயஸ்த குலம்" என்றார். எவ்வருணத்திற்
பிறப்பி லென்ன? ஆத்ம ஞானமும் அறிவு வளர்ச்சியும் அனைவர்க்கும்
பொதுவானதன்றோ? இவ்விதம் சுவாமிகளை வினவியவர் இவர் ஒரு
வரன்று! எத்தனையோபேர். முன் நிற்பாருளத்தை முற்று முணரும்
சக்தியுடைய சுவாமிகள் அவ்வேதியர் மனப்பான்மையை ஊகித்
தறிந்தவராய் 'கிருஷ்ணனும் பௌத்தரும் உத்தம பிராம்மண ரல்லா

தாரல்லவா ! என்னைப் பிராம்மணனாகவே யிருக்கவேண்டு மென்று தாங்கள் ஊகித்தது தவறு' என்றுரைத்தார். மற்றொருநாள் வேறொருவர், சுவாமிகளை நோக்கித் 'தாங்களேன் காஷாயந் தரிக்கவேண்டும் ?' என சுவாமிகள் 'அதுவே பிச்சைக்காரன் மெச்சுமாடை ! காவி பூண்டவனிடம் எவ்விதப் பொருளு மில்லையென்பது பிரசித்தம். அடியேன் வெண்மையான உடைதரிப்பேனாகில், என்னையோர் சீமானென் றெண்ணிப் பல பிச்சைக்காரர்கள் யாசிப்பார்கள். பைசாவு மில்லாத யான் அளிக்க வியலாமையால் துக்கிப்பேன். இக்காவியாடையை யான் தரித்திருந்தால், அவர்களில் யானுமொருவனென்பதை யவர்களறிந்து கொள்ளுவர். மேலும் அது துறவிக்கோராணிகலனா யிருக்கின்றது. காவி யாடையை எம்மனோர் தரித்தாற்றான் ஒரு பிடி அன்னமாவது யாசிக்கின்ற பொழுது கிடைக்கும்' என்று தமது கருத்தைச் சாங்கோபாங்கமாய்க் கூறினார்.

காவி தரிப்பின் காரணம்

சுவாமிகளது சங்கீத சாகித்யத்தைக் கண்டு உருகாதார் எவரே ! அவரொருநாள் பரமாத்மாவான ஸ்ரீகிருஷ்ணபகவானுடைய படத்தை அலங்கரித்து, பக்தர்கள் சூழ பஜனை நிகழ்த்தினார். சுவாமிகள் அன்பே யுருவாகி, கோபிகா ஸ்திரீகளாகத் தம்மை பாவித்து நாயகா நாயகி பாவமும் நவரஸமும் விளங்க ஜெயதேவரியற்றி யருளிய 'கீத கோவிந்தத்தை'ச் சொல்லி அபூர்வமாக கானஞ் செய்யத் தொடங்கினார். அவருடைய கண்களாகிய மலைகளிலிருந்து அன்பாகிய அருவிநீர், கன்னங்களாகிய மருத நில வழியோடி, கடலாகிய கழுத்திற் பாய்ந்தன. பக்தகோடிகளும் பரவசமாயினர். சாரீர சம்பத்துள்ள சாது ஸ்வா சாகித்யத்தோடு எம்பெருமாளின் லீலா விபூதியை வர்ணித்த அழகு எங்கும் நிறைந்து நின்றது.

பகவத் பஜனம்

வளர்பிறைச் சந்திரனென வளருமன்புடைய மௌலிசாயபு அவர்கள் சுவாமிகளைத் தமது கிருகத்திற் கழைத்துச் சென்று விருந்தளிக்க விரும்பினார். ஆனால் முகம்மதிய ரில்லத்தில் அம் மகா சாது உண்பரோ வென்ற ஆசங்கையால் அவர் வருந்தி, பண்டித சம்புநாதருடைய வீட்டை யடைந்து, அச்சத்துடன் தமது விருப்பத்தை மொழிவாராய் வேதியர்களைக் கொண்டு வேண்டுவன செய்வதாய்க் கூறி விருந்தோம்ப, சுவாமிகள் பலர் முன் அம்முகம்மதிய வயோதிகரை நோக்கி "அன்பரே ! நான் யதி ! எனக்கு ஜாதி மத பேதமில்லை.

உம்மிடத்திலும் என்னிடத்திலும் ஒரே இறைவன் விளங்குகின்றான். தாங்கள் வேதியரைக்கொண்டே அமுதளிக்க வேண்டிய அவசிய மில்லை. உமது பார்வையால் பாகஞ் செய்யப்பெற்ற உணவையே நானுவந்து கொள்வேன்'' என்று புகன்றார். இதுகேட்டு சம்புநாதர் ''அவர் சித்த புருஷர்! தமது அருட்பார்வையால் எல்லாப் பொருள்களையும் பரிசுத்தப் படுத்த வல்லார். ஆதலின் அதிக சிரமங்கொள்ளாது சாதாரணமாகவே உணவளிக்கலாம்'' என்று அவ்வன்பரிடங் கூறி யனுப்பினார். அவரும் அகமகிழ்ந்தேகினர். 'மதபேதமு லேக சதா பக்த வினுத' என்ற ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகள் பாடியருளிய வண்ணம், சாதிமதவேற்றுமைக்கப்பால் விளங்கும் சர்வலோக சரண்யனின் பக்தரான சங்கரமத சாதுவன்றோ சுவாமிகள்? அவர் அவ்வன்பரில்லத்தில் அடுத்தநாள் செப்பியவாறு அமுதுகொண்டருளினார்.

சாதிமதபேத மின்மை

இவ்வாறொழுகும் நாளில் ஆழ்வார் சமஸ்தான திவானான ஸ்ரீ ராமசந்திரஜீ சுவாமிகளின் பெருமைகளைக் கேள்விப்பட்டு, விரைந்து வந்தார். அப்பொழுது அத் திவான் 'ஆங்கிலேய நாகரீகத்தால் மயக்குண்டு, சமயாசாரங்களை மறந்திருக்கும் அரசரை சுவாமிகளைக்கொண்டு நல்வழிக்குத் திருப்பக்கருதி, அடுத்த ஊரிலுள்ள அரண்மனையில் உல்லாசார்த்தமாகச் சென்றிருந்த மன்னர்பிரான் மகாராஜா ஸ்ரீ மங்கல் சிம்ஹருக்கு ''ஆங்கிலத்திலும், சம்ஸ்கிருத பாஷையிலும் அரிய பண்டிதராய், மேல்நாட்டு விஞ்ஞான நூற்புலவராய், துறவற நெறி பூண்ட தூயோராய், பரிசுத்த மனமும் ஒளிவிளங்கும் வதனமும் உயர்ந்த குணமுமுடையாராய், பந்தமறுத்த பரதேசியாய், ஞானகுருவாய், சதாசார சம்பன்னரான சாது ஒருவர் நமது நகருக்கு விஜயம் செய்துளார். அவரைத் தாங்கள் காண்பது அவசியமென நினைக்கின்றேன்'' என விண்ணப்பமொன்று வரைந்து விடுத்தார். அதற்கிணங்க மகாராஜா ஸ்ரீ மங்கல்சிம்ஹரும், மறுநாளே புறப்பட்டுத் திவான்மனையில் தங்கியிருக்கும் சுவாமிகளை வந்து கண்டார். இருவருமளவளாவிய பின் ஓர் ருசிகரமான சம்பாஷணை நிகழ்ந்தது.

ஆழ்வார் அரசர் மகாராஜா ஸ்ரீ மங்கல்சிம்ஹர்

வணங்கிய மன்னர் ஆனந்தரைப்பார்த்து ''சாது! பண்டித மணியாக விளங்கும் தாங்களேன் ஒரு கௌரவமான உத்தியோகத்தை யேற்று, கைநிரம்பப் பொருளீட்டிச் சுகஜீவியாயிராமல், அன்னப் பிச்சையெடுத்து அரண்யங்களை வாசஸ்தலமாகக்கொண்டு அலைந்து

திரியவேண்டும்!'' என்றார். சுவாமிகள் புன்னகையுடன் புலவரைக் கம்பீரமாக ஒருமுறை உற்று நோக்கி ''அரசரேறே! தாங்களேன் பிரஜாக்ஷேமத்தை அலட்சியம்செய்து, மேல்நாட்டு நாகரீகப்பித் தால் மயக்குண்டு வேடிக்கையாக வேட்டை நிமித்தம் அடிக் கடி அரண்மனையைவிட்டு வெளியே சுற்றவேண்டும்?'' என்றார். இம்மொழிகளைக் கேட்டதும் அவ் வாசர்பிரான் மயிர் சிலிர்ப்ப ''இம் மகா சாது மாயையையும், பற்றையும் வென்றதுமல்லாமல் அஞ்சாமையையும் அறுத்த பெருமைதானென்ன'' என்றெண்ணி நடுங்கிப் போனார். அப் பால் அவர் சுவாமிகளின் வீரமொழிகளைப் போற்றி 'எக்காரணத் தாலென்று என்னாற் கூற வியலவில்லை. ஏதோ அதில் எனக்கொரு மோகம்' என, சுவாமிகளும் அதேபோன்ற காரணத்தாற்றான் யானும் அலைந்து திரியா நிற்கின்றேன்' என்று விடை பகர்ந்தார்.

ருசிகரமான சம்பாஷணை

அடுத்த வினாவாக ஆழ்வார் மன்னர் ''சுவாமிஜி! எனக்கு விக் ரஹ ஆராதனையில் நம்பிக்கையில்லை. என் கதிதானென்ன?'' என்று புன்னகையோடு வினவினார். அவ்வாசர்பிரான் எதைக் குறித்துப் பேசுகின்றாரென்று விளங்காமல் சுவாமிகள் ''என்ன அரசே! நகை யுரையா யிது?'' என, வேந்தர் 'ஐயனே! அன்று! அன்று!

'உளியிட்ட கல்லையு மொப்பிட்ட சாந்தையு மூத்தையறப்
புளியிட்ட செம்பையும் போற்றுகிலேன்.'

இதனால் நான் க்ஷீணித்துப்போவேனா என்ன?'' என்று கேட்டார். அதற்கு சுவாமிகள் ''ஆம்! ஒவ்வொருவரும் தத்தம் கொள்கைப் படி நடப்பர்'' என்று புகல, அதுகேட்ட ஆங்கிருந்த அன்பர்கள் 'அரசருடைய வினாவிற்கு ஏற்ற விடை யிதுவாமோ? இதென்ன சுவாமிகளிவ்வாறு பதிலளித்தார்! தக்க விடையளிப்பா ரென்றல் லவோ நாமெதிர்பார்த்தோம். இவர் சிலை முன் விழுந்து புரண்டு புலம்புவதை நாம் கண்டோமே! விக்ரஹ ஆராதனையின் உண்மையை யறியாமலா இவர் அவ்வாறு செய்தார்? அவ்வாறாயின் அது மூட பக்தியின் செயலன்றோ?' என்று எண்ணி ஒருவர் முகத்தை யொரு வர் பார்த்தவண்ணமாக மனக்குழப்பத்துட னிருக்கையில் 'பொறு' என்ற ஓர் துவனி யெழுந்தது. அதனைக்கேட்டு ஆச்சரியமுற்றவர்களாய், அனைவரும் அமைதியா யிருந்தனர். அதன்பின் சுவாமிகள் ஒருமுறை யாவரையும் கம்பீரமாகப் பார்த்துவிட்டு, ஓான்பரை யழைத்து, சுவற்

அடுத்த ஓர் முடுக்கு வினா

றில் தொங்குமோர் படத்தைச் சுட்டிக்காட்டி அதை எடுக்குமாறு பணித்தார். அவ்வன்பர் அவ்வாறே எடுக்க, அப்படத்தை அவரிடமிருந்து வாங்கி திவானை நோக்கி 'இது யாருடைய படம்?' என்றார். திவான் 'இது அரசர் ஸ்ரீமங்கல் சிம்ஹருடைய படம்' என்றார். அங்கிருந்த அனைவரும் ஆச்சரியத்துடன் அமைதியா யிருந்தனர். அப்பால் சுவாமிகள் திவானைப்பார்த்து "இப்படத்தில் எச்சிலைத் துப்பும்!" என்றியம்பிப் பின், திவான் தான் துப்பவேண்டுமென்ற அவசியமில்லை; யாரும் துப்பலாம்" என்றார். ஒருவரும் முன் வரவில்லை. திவான் திடுக்கிட்டு 'அது மகாராஜாவை அவமரியாதை செய்வதல்லவா? எவர் தானிசைந்து முன் வருவார்?' என்றியம்பினார். சுவாமிகள் 'இது ஒரு காகிதம் தானே! இதில் மன்னர் உயிருடனிருக்கின்றனரா? இல்லையே! இதன்மீது எச்சிலுமிழ்ந்தால் மன்னர்பிரான்மீது உமிழ்ந்ததாகுமா?' என்றனர். திவான் பிரமித்துப்போனார். ஏனையோர் பயந்து அவர் முகத்திற்கும் அரசன் முகத்திற்கும் தம் கண்களால் கோடு வரைவதுபோல் மாறிமாறிப் பார்த்தவண்ண மிருந்தார்கள். சுவாமிகள் திவானைப் பின்னும் வற்புறுத்துவாராயினர். திவானவர்கள் பயந்து நடுங்கி, 'ஐயனே! என்னை யேன் இவ்வித அபசாரத்தைச் செய்யச் சொல்லுகிறீர்கள்?' என்று உரக்க மொழிந்தார். சுவாமிகள் அவரை நோக்கி 'இது அரசருடைய உருவப்படமாயினென்? அரசர் இப்படத்தில் சரீரத்துடனும் உயிருடனுமில்லை. இஃதோர் புகைப்படமே! இதில் தோலு மென்பும் பொருந்திய மன்னரின் சரீரமில்லை. அப்படத்திற் காணப்படு முருவம் பேசவும் இல்லை எழுந்து எங்கும் நடமாடவில்லை. அவருக்கும் இப்படத்திற்கும் இத்துணை தாரதம்யமிருக்க, அதன்மீது எச்சிலுமிழ்ந்து அவரை அவமதிப்பதாகு மென்பது உமது அபிப்பிராயமல்லவா?' என்று சொல்லிவிட்டு, வேந்தரை வியந்து நோக்கி, அப்படத்தைக் காட்டி 'இராஜமார்த்தாண்ட! இதைக் கவனிக்கவேண்டும். இப்படத்திற் காணப்படுமுருவம் நீரேயல்லவாயினும், ஒருவிதத்தில் அதில் நீங்கள் விளங்குகின்றீர்கள். இதன்மீது எச்சில் துப்பும்படி யான் தூண்டியபோது இங்கிருக்கின்ற அன்பர்களிலொருவரேனும் முன் வரவில்லை. இப்படத்தில் உமது களை விளங்குகின்றது. இப்படம் அவர்களுடைய மனத்திலே உமது உருவாய் விளங்குகின்றது. அதனால் அவர்கள் உமக்குச் செய்யும் மரியாதைகளெல்லாம் அப்படத்திற்கும் செய்யப்படுகின்றன. அதேபோல பக்தர்கள் தெய்வத்தைக் கல்வாயிலாகவும், உலோகத்தாலான உருவங்களின் வாயி

விக்ரஹ ஆராதனை விளக்கம்

லாகவும் வழிபடுகின்றனர். அச்சிலையாலான சொரூபம் பக்தர்களுள்ளத்திற் பதிகின்றபடியால் அவர்களுடைய மனோபீஷ்டம் நிறைவேறுகின்றதுமன்றி, அவர்கள் சிந்தையை யடக்கி, சும்மாவிருக்கின்ற திறமறிந்து, சத்தாகி சித்தமிசை குடிகொண்ட அறிவான தெய்வத்தைத் தரிசிப்பதற்கு விக்ரஹ ஆராதனையே ஆரம்பக்கல்வியாதலும் இங்கு யூகிக்கப்படும். அவர்கள் வணங்குவது பகிர்முகத்திற் கல்லையே யாயினும், அந்தர்முகத்தில் அதனைக் கல்லென்றெண்ணி வழிபடுவதில்லை. நான் சென்ற ஓராண்டாக ஸ்தலயாத்திரை செய்யத் தொடங்கி பல திருப்பதிகளைத் தரிசித்து வந்திருக்கிறேன். இதுவரையில் எவரும் சிலையை அவர்கள் வணங்கினாலும் 'ஹே கல்லே! நானுன்னைப் போற்றுகின்றேன். ஹே சிலையே! கருணை கூர்வாய்' என்று துதித்ததை நான் எங்கும் காணவில்லை. சகலரும் 'ஹே பரந்தாமா! பக்த வத்ஸலா! பரமபுருஷா' என்றே போற்றுகின்றனர். இதனால் அரசர்பெரும! ஒரே பரப்பிரம்மத்தை எவ்வாறெல்லாம் பக்தகோடிகள் துதிக்கின்றனர் பாருங்கள். விக்ரஹ ஆராதனத்தின் பெருமை யிப்பொழுது...." என்று முடிக்குமுன், ஆழ்வாரரசர் கண்களில் ஆனந்தக் கண்ணீர் வார, எழுந்து அஞ்சலி ஹஸ்தராய் 'விளங்கிற்று! விளங்கிற்று! என்று சொல்லிக்கொண்டே சுவாமிகளின் பாதத்தில் வீழ்ந்தார். பின்பு எழுந்து கைகூப்பி 'பரமாசாரியரே! தமது கருணையாலின்று நான் உபதேசம்பெற்று கிருதார்த்தனாயினேன். தாங்கள் என்னகக் கண்களைத் திறந்து, ஆனந்தமெய்த வைத்தீர்கள்' என்று தோத்தரிப்பாரானார். அப்பால் சுவாமிகள் எழ, பக்தி மேலீட்டால் மகாராஜா மங்கல் சிம்ஹர் "ஐயனே! என்மீது கிருபை பாலிக்கவேண்டும்" என்று வணங்கி நின்றனர். ஆனந்தர் அப்பொழுது 'சர்வேஸ்வரனே கிருபையுள்ளவன். அவனே கருணைத் தடங்கடல்! யான் ஒரு ஏழைச் சந்நியாசி! என்னாலென்னவாகும்? இறைவனைத் தூய மனத்துடன் வழிபடுங்கள். அவர் தமக்கு சகாயனாக விளங்குவார். பிரஜா பரிபாலனத்தை முக்கியமாகக் கவனியுங்கள்' என்றருளி அகன்றனர்.

பிறகு சுவாமிகள் திவானவர்கள் வேண்டுகோட் கிணங்கிப் பின்னுஞ் சில நாட்கள் ஆழ்வாரில் வாசம் செய்ய மனமொப்பினர். அந்நாட்களி லநேகர் சுவாமிகளிடத்தில் அடிக்கடி வந்து சிரவணானந்தபராகி ஏகுவார்கள். அவர்களில் ஒரு வயோதிகர் சுவாமிகளை நொடிக்கொருமுறை வணங்கி "நான் நற்கதி யடைய ஆசீர்வதிக்க வேண்டும்" என்று தொடர்ந்து பன்முறை கேட்டுவந்தார். சுவாமிகளும் பல நல்ல

பக்தி மார்க்கங்களைப் புகட்டி அவ்வித மொழுகிவரச் சொன்னார். ஆனால், அக்கிழவர் அவர் கூறியவற்றை யெள்ளளவும் அனுஷ்டிக்காமல், திரும்பத் திரும்பத் தமது பழம் பாடத்தையே படித்து "என்னை நற்கதி யடையச்செய்தல் வேண்டும்" என்று கேட்டுவந்தார். இது கண்டு வீண்வாய்ச்சாலம் பேசும் அவரிடம் சுவாமிகளுக்கு அருவருப்புத் தோன்றலாயிற்று. ஒருதினம் அவ்வயோதிகர் பேசப் பேச சுவாமிகள் பதிலுரைக்காமலே இரண்டு மணிநேரம் வரை மௌனமாயிருந்தார். இது கண்ட முதியவர் வெறுப்புற்று, வெளியே சென்று விட்டார்.

ஓர் வயோதிகரின் வாசாலம்

அவர் போனபின் சுவாமிகள் உரக்கச் சிரித்து இவற்றை யெல்லாம் பார்த்த வண்ணமிருந்த மற்ற பக்தர்களைப்பார்த்து "அன்பர்களே! இளைஞர்களாகிய உங்கள் நன்மைக்கென யான் எனது உடல் பொருளாவியாம் மூன்றையும் உவந்தளிப்பேன். அடியேனது சொற்படி நீங்கள் கடைப்பிடித் தொழுகுவீர்களாயின் இம்மை மறுமைப் பயன்களை எவ்வித ஐயமுமின்றி யடையலாம்! ஆனால், இந்திரியங்களி னிச்சைப்படித் தனது ஆயுட்காலத்தின் பத்திலொன்பது பாகங்களைக் கழித்த அக்கிழவன், இனி செயலற்று, கோற்கண்ணனாகி 'இரு சிகையுமுண்டோ?' என்று வரிசையாக உள் நாட்டங் கொள்ளப்படு மிந்நிலையில், வாயால் மட்டும் 'என்னை மோக்ஷமடையச் செய்யவேண்டும்' என்று கேட்க, அதற்கு யான் சில சுலப பக்திமார்க்கங்களைப் புகட்டியும், அனுசரியாதவராய், திரும்பத்திரும்பச் சொன்னதையே சொல்லி வருவதா லென்ன பயன்? அவர் முக்தியடைய அவரன்றோ யத்தனிக்க வேண்டும். என்னை யிடைவிடாது துன்பப்படுத்தினால் நானென்ன தரகரா? மனிதத் தன்மையிற் குறைவுபட்டிருப்பவன் தமோகுணத்தனே யாவன். முன்னையோர் பார்த்தன், தன்கடன் மறந்து தாமத குணத்தனாய் மயங்குந் தருவாயில் மண்ணையுண்ட மாதேவன், கீதையை யுபதேசித்து, சுவதர்மத்தை வற்புறுத்தி ஆட்கொண்டருளினார். தூய மனதுடன் பற்றற்றவனாய்த் தனது கடமையை யாற்றுவானேல் அவனே சத்புருஷ னாகின்றான். இதற்குத் தனது கடமையைச் செய்வதி லுறுதி வேண்டும். அப்பொழுது புருஷத்துவம் பொலிந்து விளங்கும். துன்மார்க்கனும் அவனிடமுள்ள புருஷத்துவம், அத் துன்மார்க்கத்திலுள்ள தனது ஆசையை நிறைவேற்றிக்கொண்டபின் சத்வகுண சம்பன்னனாகி விடுகின்றான். இதனால் அன்னோரிடத்து மெனக்கு அளவிலா அன்புண்டு' என்று உபதேசித்தார்.

சுவாமிகளின் அறிவுரைகளைச் செவியுற்று வந்த அன்பர்கள் அவர் விருப்பத்திற்கிணங்கி ஆரியம் கற்கத் தொடங்கினர். அவர்களுக்குச் சுவாமிகள் தாமே பாஷாஞானமூட்டி வந்தார். ஆயகாலை ஆனந்த ரவ்விளைஞர்களைப் பார்த்து,

சம்ஸ்கிருதத்துடன் மேல்நாட்டு விஞ்ஞான நூல்களையும் உடனுக்குடன் நீங்கள் திட்டமாகப் பயிலவேண்டும். அறம் பொருளின்பம் வீடடைதல் நூற்பயனென்பதைக் கவனியுங்கள். நீங்கள் பாடுபட்டுச் செவிச் செல்வத்தை இப்பொழுதே ஈட்டத் தொடங்குவீர்களாயின், மேல் நாட்டு விஞ்ஞான நூல்களிற் கூறப்பட்டுள்ள ஆராய்ச்சி முறைப்படி பாரததேசச் சரித்திரத்தை வெளியிடுங்காலம் விரைவில் வரும். இப்பொழுது இந்து தேசசரித்திரம் உதாசீனமான நிலையை யடைந்துவிட்டது. நமது தேசச் சரித்திரத்திற்கு ஆதிமுதல் காலகணித நிர்ணய மென்பதே யிதுகாலை யில்லை. நமது தேசச்சரித்திரத்தை வரைவான் வந்த, மேல் நாட்டுச் சரித்திராசிரியர்கள் நமது வீழ்ச்சியைப்பற்றியே நமது மனந்தளர்ச்சி யடையுமாறு வரைந்துள்ளனர். நமது தேச மக்களின் பழக்க வழக்கங்களிலும், மதத்திலும், ஞானத்திலும், எள்ளளவும் சுவானுபவ மில்லாத அவர்கள் எவ்விதம் பாரதவர்ஷத்தின் உண்மையான சரித்திரத்தை வரைவார்களென நாமெதிர்பார்க்கலாம்? இதனாற் பல தப்பபிப்பிராயங்களும், தவறான அனுமானங்களும், சரித்திரமென்னும் பயிரை யழிக்குங் களைகளாக முளைத்துள்ளன. ஆனால், பழங்கால சரித்திரங்களை ஆராய்ச்சி செய்யும் சுலபமான முறையை அவர்கள் நமக்குக் கற்பித்திருக்கின்றனர். இனி வித்தியாபிவிருத்தியால் சரியான ஆராய்ச்சித் துறையி லிறங்குதல் நமது கடமை. ஆதலின், வேத, இதிகாச புராணங்களை மாசறக்கற்று, உறுதியாக சுதேசாபிமானத்தை வளர்க்கவல்ல தேசசரித்திரத்தை சரியான கால வரையறைப்படி நீங்கள் கண்டுபிடிக்க முயலுங்கள். சிவாஜியின் ஜீவிய சரிதையை யாராய்ந்து, அவருடைய சமூக சிருட்டித்திறனைக் கண்டு பிடித்தலும் அவசியம். இவ்வித ஆராய்ச்சியில் ஆங்கிலேய சரித்திராசிரியர்கள் போக்கை நாம் பின்பற்றலாகாது. ஹிந்துக்களின் கல்விப் பெருக்கின் பெருமிதத்தை யறியச் சக்தியற்ற அவர்கள் நமது மேன்மையை எவ்விதம் புகழுமாற்றலுள்ளவராவர்: ஆயுங்கால் வேதகாலத்திலிருந்து புத்தருக்குப் பின் ஆயிரமாண்டுகள் வரை தொடர்ச்சியாக ஆதாரமான சரித்திரமேது மில்லை; அதைக்குறித்துத் தான் இப்பொழுது முயற்சிகள் நடைபெறுகின்றன. ஆனால் ஹிந்து தேசச்சரிதையை ஹிந்துக்களே வரையும் பாத்தியதை யுடையவர்கள். ஆனது பற்றிக் குப்பையிற் றள்ளப்பட்ட கோமேதகங்களை நீங்கள் தேடியெடுக்க வேண்டும். தனது குழந்தையை யிழந்த ஒருவன் அது கிடைக்கும் வரையிலும் தளராது தேடுவதேபோல் பாரத

புத்திரர்களாகிய நீங்கள் உங்கள் பழம் புகழான செல்வமணிகளைத் தேடிக் கண்டுபிடிக்கும் வரையில் உழையுங்கள். அதுதான் உண்மையான தேசீயக்கல்வியாகும். அதுவே நமது ஜன சமூகத்தை உறக்கத்தினின்றும் தட்டி யெழுப்பும்.

என்ற ஓர் விரிவுரையா லவர்களைக் களிப்பித்தார். அவரையே தமதாசிரியராகக் கொண்டு அவ்வன்பர்களும் உறுதியுடன் தமது தொண்டைத் தொடங்கினர். சுவாமிகள் ஆழ்வாரில் தங்கியிருந்த நாட்களில் ஓர் வேதியச்சிறுவன் அவருக்குத் தினந்தோறும் பணிவிடை செய்து வந்தான். அவனுடைய ஸ்திதியை விசாரித்து, அவன் பரம ஏழையென்றும் பொருளின்மையால் உபநயன மாகவில்லையென்றும் கேட்டு மனமிரங்கி, வரியாக வசூலித்து அவனுக்கு உபநயனஞ் செய்துவைக்குமாறு தமதடியார்களைத் தூண்டி வந்தார். இவ்வாறு சுவாமிகள் தமது 'ஹிமாசல யாத்திரை'யை முடித்துக் கொண்டு ஆழ்வாரிற் சிலகாலந் தங்கியபின் தமது சஞ்சாரத்தைத் தொடங்கலுற்றார்.

21-ம் அத்தியாயம்.

இராஜபுதன க்ஷேத்ரவாஸம்

ஒருவாறு இவ்விதம் சுவாமிகள் ஆழ்வாரில் ஏழுவார காலந் தங்கியிருந்து அதன்பின் யதேச்சையை விரும்பி யாத்திரை மேற் செல்ல நிச்சயித்தார். அன்பர்கள் எவ்வளவுதூரம் வேண்டித் தடுத்தும் சுவாமிகள் பிரயாணத்திற்கு உறுதியாய்ச் சித்தமாவது கண்டு கண்கலங்கினர். அதைக்கண்டும் சுவாமிகளின் களங்கமற்ற மனம் கலங்கவேயில்லை. 1891-ம் ஹு 'மார்ச்சு'ஸ்ரீ 28வ அவர் புறப்பட, அன்பர்கள் அவரைப் பிரிய மனமில்லாமல், ஆழ்வார் நகருக்குப் பன்னிரண்டு மைல் தூரத்திலுள்ள பந்துபல் (Pandupol) என்ற ஊர் வரை வந்து வழியனுப்பினர்கள்.

'பந்துபல்'லில் அழகிய ஆஞ்சநேய ஆலயமொன்றுண்டு. அக்கோயிலுக்குச்சென்று ஸ்ரீராமதூதனை வந்தித்து நின்றார் சுவாமிகள். அப்பொழுது அவருக்கு மகாவீர ஹனுமானின் சுந்தரமான சேவையின் மகிமையை விரிக்கும் சுந்தரகாண்ட நிகழ்ச்சிகளெல்லாம் கண்முன் நிகழ்வதுபோ லிருந்தது. மறுநாள், ஆழ்வாரிலிருந்து பின்றொடர்ந்துவந்த சில அன்பர்கள் கூடவர, அங்கிருந்து புறப்பட்டுப்

பதினாறு மைலுக்கப்பாலுள்ள ஸ்தலா (Tahla) என்ற கிராமத்தை யடைந்தார். அப்பதியில் கடவுண்ட கண்டனார் வீற்றிருக்கும் ஆலயத்திற்புக்குத் துதிபாடி, அன்றிரவு தங்கி மறுநாட்காலையில் அங்கிருந்து பதினெட்டுமைல் தூரத்திலுள்ள நாராயணீ யென்ற ஸ்தலத்தை யடைந்தார். அடைந்ததும் தம்மை யதுவரையில் பின்பற்றி வந்த அன்பர்களுக்கெல்லாம் ஆறுதல்மொழி புகன்று அனுப்பிவிட்டு, அங்கிருந்தும் பெயர்ந்து பதினாறு மைல்கள் நடந்து போசோவேஹ் என்ற ஊரையடைந்து, இருப்புப்பாதை மார்க்கமாக, தம்மை ஆழ்வாரிற் சந்தித்த ஜேயபூர் நண்பர்கள் அழைப்பிற்கிணங்கி, ஜெயபூரை நோக்கிப் பிரயாணமானார். சுவாமிகளின் நல்வரவை எதிர்பார்த்த வண்ணம் ஜெயபுரி அன்பர்கள் பண்டி குயி (Bandi Kui) 'ஸ்டேஷனி'ல் காத்திருந்து, சுவாமிகளைச் சந்தித்து உபசாரப் பத்திரம் வாசித்துக்கொடுத்தனர். அப்பிரியர்களின் பேரவாவிற் கிசைந்து, சுவாமிகள் முதலில் மறுத்தாராலும், பின்னர் தம்மைப் புகைப்படமெடுக்க அனுமதித்தார். இதுதான் சுவாமிகளை 'பரிவ்ராஜகர்-யாத்திரை செய்யும் சந்நியாசி' நிலையில் அவருடைய ஆயுளி லெடுக்கப்பட்ட முதற்படமாகும்.

இராஜபுதன ஆரம்ப யாத்திரை

நிற்க, சேய்கள் தாயைத்தேடுமாபோல், பெரநாகூர் ஆச்சிரம அன்பர்கள் சுவாமிகளிருக்கு மிடத்தை, அவரைப் பிரிந்த நாள்முதல் தேடுவாராயினர். அவர் சென்ற விடமெல்லாம் சிறப்புற்று விளங்கினமையால் அவரிருந்த இடத்தைக் கண்டு கொள்வது அவர்களுக்கு முன்போல இப்பொழுது அவ்வளவு சிரமமானதாயில்லை. அகண்டானந்தரோ சுவாமிகளைப் பிரிந்த நாள்முதல் பித்தரைப்போலாகி, அவா வென்னுங் காற்றிலாரோகணித்து, மெல்ல விசாரித்துக் கொண்டே ஜெயபுரிக்கு வந்து, தமது குருநாதனைக் கண்டு ஜெயபேரி முழக்கினார். சுவாமிகளைக்கண்டதும் கண்களில் நீர்வார 'ஐயனே!' என்று அன்பின் மேலீட்டால் அலறிக்கொண்டு அருகே வந்தார். சுவாமிகள் இத்தகைய பந்தங்களை வெறுக்க வேண்டுமென்று உறுதி பூண்டிருந்தாராதலால் 'உன்னை யாரிங்கே வரச்சொன்னார்கள்? விரைந்தகன்றுபோ' வென்று கடுகடுத்துப் பேச, அவரும் வாய்பேசாது 'நமது குருநாதன் ஏதோ ஒன்றை நாடியலைகின்ற வழியில் நாம் குறுக்கிட்டதால் அவர் கோபிக்க நேர்ந்தது. அவர் உண்மையாகவே கோபமுடையவரல்ல

பந்தத்தைக் கடிந்த பான்மை

அன்பே ஆணுருக்கொண்ட ஐயனவர். அவர் கூறிய வன்மொழிகள் நமக்கு ஆசிமொழிகளே யாம்' என்று சிந்தித்தவராய் அவ்விடம் விட்டகன்றார். இதுவன்றோ மெய்யடியாரின் செய்கை!

ஜெயபூரில் சுவாமிகள் ஒரு பட்சகாலம் தங்கி, அப்பதியின் கண் வதிந்த ஓர் பரம்பரை சம்ஸ்கிருத லக்ஷண ஆராய்ச்சி வித்வானை யடுத்து 'பாணினி அஷ்டாத்தியாயி' என்ற இலக்கண நூலைக் கற்க நினைந்து அவரை யடைந்தார். அப்பெரியார் மகா நிபுணரானாலும் தாம் கற்றுணர்ந்தவற்றைப் புலனுமாறு எடுத்தோதும் வன்மையுடையவரா யில்லாதிருத்தல் கண்டு சுவாமிகள் வைராக்கியசித்த ராய், அப்பாணினியின் அஷ்டாத்தியாயியை வியாக்கியானத்துடன், ஏகாந்தமா யோரிடத்திலமர்ந்து சில தினங்களிற் பாராமற் பாடஞ் செய்து பின்னர், அப்பண்டிதரை யடைந்து பாடமோத, அளவிறந்த ஆச்சரியத்துடன் அப்பெரியார் சுவாமிகளைப் புகழ்வாராயினர். 'தாங்கள் எப்படி இந்நூலை உரையுடன் பாடஞ்செய்தீர்கள்?' என்று வியந்து கேட்ட அவருக்கு சுவாமிகள்,

ஜெயபூர்வாஸம் பாணினி 'அஷ்டாத்தியாயி' பயிலல்

"இவை யாவும் வைராக்கியத்தாற் சாதிக்கக்கூடிய காரியந்தானே! உறுதியுள்ளவர்களுக்கு எந்த வேலையும் அசாத்தியமில்லை."

என விடைபகர்ந்தார்.

ஜீவனார்த்தமாக லௌகிகர்களோடு இரண்டுமாத காலத்திற்கு மேற் பழகினமையால், பாரமார்த்திகமான சுத்த வைதீக மார்க்கத்தி லியங்கும் சுவாமிகளுக்கு மன ஆவலடங்கிற்றில்லை. வனங்களிலும், வரைகளிலும் வசிக்கும் வாழ்வே அவருடைய மனதிற் குடிகொண்டிருந்தது. அதனால் சுவாமிகள் ஜெயபுரியிலிருந்து, அபூகிரிக் (Abu Ghir) கேகி, ஆங்கு ஐம்பது கோடி ரூபாய் செலவிட்டு மாநாய்கனனைய வணிகச்செல்வர்களால் பதின் மூன்றாம் நூற்றாண்டில் அமைக்கப் பெற்றுள்ள ஒப்புயர்வற்ற ஓர் ஜைன ஆலயத்தைக் கண்டார். அதனுட்பிரவேசித்து சுவாமிகள் தம்மை ஜைனராகப் பாவித்து, தியானித்தவாறே அச்சமய உண்மைகளை அனுபவித்து ஆய்ந்தறிவாராயினர். அக்குன்றினழகிய கண்கொள்ளாக் காட்சியைக்கண் டனுபவித்தபின், ஆஜ்மீரை யடைந்து அக்பரின் ஆட்சி முறையையும், அரிய குணங்களையும் தாம் நூல்களிற் கண்டவளவிற் போற்றி ஆங்குள்ள, இந்தியாவின் ஒரே பிரம்மாவின் ஆலயத்தையும் சென்று தரிசித்தார்.

அபூகிரியின் அழகிய ஆலயம்

அப்பால், அவர் 1891ஆம் 'ஏப்ரல்' மீ 14உ திரும்ப அழூகிரியை யடைந்தார். அங்கு சோடா மன்னரின் நியாயவாதியும், அவ்வரசர் முதன் மந்திரி தாகூர் பாடிஸ் சிங் அவர்களும் சுவாமிகளின் நண்பரா யினர். அவ்விருவர் மூலமாகச் சுவாமிகளின் மகிமையையும், கல்வித் திறத்தையும்கேட்ட க்ஷேத்திரி வேந்தரின் அந்தரங்கக் காரியதரிசியான முன்ஷி ஜெகமோகன லால், பி. ஏ., அவர்களும் அவரைக் காணவந் தனர். அவர் வந்தபொழுது சுவாமிகள் கோவணத்துடன் நித்திரை செய்துகொண் டிருந்ததைக்கண்டு 'இவர் மாயாவினோதப் பரதேசிக் கூட்டத்தைச் சேர்ந்தவர் போலும்' என்றெண்ணி, சுவாமிகள் துயில் நீங்கும்வரை காத்திருந்து, அப்பால் அவரை வணங்கி உபதேசம் பெற்றபின் அவரை அவதார புருஷரென் றறிந்தவராய்த் தன்னுள்ளே 'பார்த்த வுடன் ஆராயாது எவரையும் குற்றமுடையாராகத் தீர்மானிக்கலாகாது' என்ற படிப்பிணையுடன் மீண்டார்.

க்ஷேத்திரி மந்திரியைச் சந்தித்தல்

ஜெகன்மோகன் லால் அவர்கள், அவ் அழூகிரிக்கு கோடைக்காக வந்துள்ள தமதரசரை யணுகி 'அரசே! இத்தலத்திற்கு ஒரு மகா சாது எழுந்தருளி யுள்ளார். அவர் கல்வியின் பெருக்கும், வடிவழ கும், பிறவும் வர்ணிக்கத் தரமன்று. அவரைத் தாங்கள் தரிசிக்க வேண்டுவது அவசியமெனக் கருதுகின்றேன்' என்று கூற, க்ஷேத்திரி மன்னர், அன்று மாலையில் தாம் சுவாமிகளைப்போய்க் காண்பதாகச் சொன்னார். இவ்விஷயத்தை மோகனலால் அவர்கள் சுவாமிகளுக் கறிவிக்க, சுவாமிகள் அப்பொழுதே புறப்பட்டு அவ்வரசர் விடுதிக் கேகினர். சுவாமிகளைக் கண்டதும் க்ஷேத்திரி மகாராஜா பணிந்தெழுந்து உபசரித்தார். பின்பு பார்த்திபர் சுவாமிகளைப்பார்த்து "சுவாமி! வாழ் வென்பதென்ன?" என்று வினவ, சுவாமிகள் "அரசே! மனிதனை இன்ப துன்பங்களி லாழ்த்தி, மேன்மையையும் தாழ்வையு மடையச் செய்து, சுக துக்கங்களை நுகரவைத்து, விஷயாந்தரங்களில் புகுத்து வதே வாழ்வு" என்று விளக்கினார். அதன்பின் மன்னர் "ஐயனே! வித்தை யென்பதென்ன?" என்றார். இதைக்கேட்ட சுவாமிகள் புன் னகை செய்து 'உயர்ந்த சில கொள்கைகளை உணர்ச்சியுடன் அறிவதே வித்தை' என்று சொல்லி, அரைமணிநேரம் வரை 'வித்தை' யென்பது விஷயமாக அவருக் குபதேசித்தார். மற்றும் சுவாமிகள் தமது யாத்திரையின் அனுபவங்களையும், தமது குருநாதனின் வரலாற்றையும்

க்ஷேத்திரி மன்னரைக்காணல்

MADURA

எடுத்துக்கூறித் தமது ஆசாரியரியற்றிய வாழ்க்கை வரலாற்றை யுரைத்தார்.

இதனைக்கேட்ட க்ஷேத்திரி மன்னர் மிகுந்த மகிழ்ச்சியுமடைந்து மனமுருகி சுவாமிகளைத் தமது அரண்மனைக்கு எழுந்தருளுமாறு வேண்டினர். சுவாமிகளும் மனமிசைந்து, அங்கிருந்து தொண்ணூறு மைல் தூரத்திலுள்ள க்ஷேத்திரிக்கு அரசருடைய ரதத்திலேயே பிரயாணமானார். இரண்டு தினங்களில் சுவாமிகள் அம்மன்னருடன் க்ஷேத்திரியை யடைந்தார்.

க்ஷேத்திரிமன்னர் சுவாமிகளின் அத்யந்த பக்தரானார். பல சத்விஷயங்களை சுவாமிகள் அவருக்குபதேசித்து வருவாராயினர். மன்னர், ஒருசமயம் சுவாமிகளை வணங்கி, சத்தியமான பொருளின் இலக்ஷணத்தை விவரிக்க வேண்ட, அவரும் "சத்தியமென்பது ஒப்பற்று நிபந்தனையின்றி விளங்கும் பரம்பொருள். மகா சாதுக்கள் அம்மெய்ப்பொருளை யடையவேண்டி ஆத்மவிசாரம் செய்துகொண்டேயிருக்கிறார்கள். உண்மையாலேயே அவ்வுண்மைப்பொரு ளறியப்படுமேயன்றி, அசத்தியத்தால் அறிதலென்றுமில்லை. அவ்வுண்மைப் பொருள்தான் சைதன்யவஸ்து. அதை யறிதலே பரப்பிரம்ம விவேகமெனப்படும். அந்த விவேகம் மெய்ப்பொருளை 'கற்பூரமலைப் படுதீப் பட்ட விந்தை' யெனக்காட்டுந் தன்மையது" என்று உபதேசித்தார். அம்மன்னரின் உள்ளன்பாலெழுந்த வேண்டுகோட் கிணங்கிச் சுவாமிகள் அவரைத் தமது அன்பராக ஏற்று தீக்ஷை யருளினர். இவ்வாறு பல வாரங்கள் துறவியான சுவாமிகள் மன்னரைப் போலவே க்ஷேத்திரி மன்னராண்மனையில், வேதாந்தியாய், துறவியாய், வித்வஜன சேகரராய், சங்கீத நிபுணராய் வசித்து வருவாராயினர். அக்காலை ராஜபுதனத்தின் இலக்கணச்செல்வரான நாராயண தாஸ் சுவாமிகளுடைய சிநேகிதராகி, அவருக்குப் பாணினி சூத்திரங்களுக்குப் பதஞ்சலிமுனிவர் வரைந்துள்ள மகாபாஷ்யத்தைக் கற்பித்தார். பாடமோதுங்கால் சுவாமிகள் உடனுக்குடன் பாஷியங்களைப்பாராமல் ஒப்பிப்பதைக்கண்டு நாராயண தாஸர் வியப்புற்றுத் தாம் கற்றுணர்ந்தவை யெல்லாவற்றையும் சுவாமிகளுக் கோதினர்.

க்ஷேத்திரி அரண்மனைவாஸம்

இவ்விதம் தங்கியிருக்கும் நாட்களிலொருநாள் சுவாமிகள் தமதறையில் ஏதோவொரு புத்தகத்தைக் கையில் வைத்துக்கொண்டு அங்குமிங்கும் சில விஷயங்களை மட்டும் பார்த்த வண்ணமாகப் பக்கங்

மனப்பாடத்திற் காதாரம் பிரமசரியம்

களைத் திருப்பிக்கொண்டே போவதை, யதேச்சையாக அங்கு வந்த க்ஷேத்திரியரசர் பார்த்து, ஆச்சரியத்துடன், 'நீங்கள் எப்படி இத்துணை வேகமாய் இந் நூலைப் படிக்கின்றீர்கள்' என்று வினவ, சுவாமிகள்,

'ராஜமார்த்தாண்ட! ஒருவன் தனது கல்வியாரம்பத்தில் எழுத்தெழுத்தாக வாசிக்கத்தொடங்கி, கொஞ்சகாலத்திற்குப் பிறகு வார்த்தை வார்த்தையாக வாசித்து, பின் தேர்ச்சியால் வரி வரியாகவும், பத்தி பத்தியாகவும் படிக்கத்தக்க அப்பியாசத்தை யடைகின்றான். விஷயங்களை யறியும் நல்ல சக்தி பெற்றவன் ஒரு நூலிலுள்ள விஷயங்களை அங்கொன்று இங்கொன்றாகக்கற்று, அப்பனுவலின் சாராம்சத்தைத் தெரிந்து கொள்ளுகிறான். இவ்விதமே மனப்பாடஞ் செய்யுமாற்றலும் விருத்தி யடைகின்றது. ஆனாலதற்குப் புத்தி கூர்மைவேண்டும்! அப்புத்தி வன்மைக்குத் தூய பிரம்மச்சரியமே ஆதாரமாயுள்ளது.'

என்றார். பிறிதொருநாள், க்ஷேத்திரிக்காவலர், காவலா (கா அலர்) சோலையில், தென்றல்வீச மாலைப்பொழுதில் அழகிய ஆசனத்தமர்ந்து சுவாமிகளுடன் சம்பாஷித்துக்கொண்டிருக்குங்கால் 'சட்டம்' என்ற விஷயத்தை விளக்குமாறு வேண்ட, சுவாமிகள் பின் வருமாறு போதிக்கலாயினர்.

'சட்டமென்பது அகப்பொருளாகும். அது வெளித்தோற்றமுடையதல்ல. அது அறிவாலும் அனுபவத்தானு முணரத்தக்கது. அதை மனமானது பாகுபாடு செய்து ரூபத்தையளிக்கும். ஆதலின் அதை அறிவினால் மட்டும் விளக்க வியலுமேயன்றி அனுமானப் பிரமாணத்தாற் புகல வியலாது. பொறி வாயிலாக அறிவுக்கு வந்த உணர்ச்சியை ஒழுங்குபடுத்திச் சொல்வதுதான் சட்டத்தினியல்பென்பது பெரியோர் துணிபு. தத்வசாஸ்திரிகள், எல்லாம் சைதன்யமேயென்றும், உலகமும் அதனிடையே இயங்கும் சகல சராசரப் பொருள்களின் அசைவும், பேரறிவின் இயக்கத்தாலுண்டாகும் அசைவென்றே கூறுவர். அனுபவமும் அதன் வரையறை விவரங்களும் அவ்வனுபவப் பிரமாணத்தாலன்றி அளவினாலறியப்படா. அனுபவமும் அதன் பாகுபாடுகளும் அகப்பொருள் விஷயங்கள். ஆகச் சட்டமென்பதே விவேக சொரூபமானது. அது விவேகத்திடை ஜனிப்பது'

'சட்டம்' என்பது அகபொருள்

என்று சாங்கிய நூலாதாரங்களால் விளக்கி, அந்நூற் பொருளையே நவீன விஞ்ஞான நூல்கள் வலியுறுத்துவதையும் சில ஆங்கிலப் புத்தகங்களிலிருந்து எடுத்துக் காட்டினார். மேலும், இந்தியா விழிப்

படைய-அகக்கண் பிரகாசமடைய மேல் நாட்டு விஞ்ஞான நூலா ராய்ச்சி முறைப்படி, சுதேச மதக்கிரந்த ஆராய்ச்சிகள் செய்ய ஏற்பாடு பண்ணுமாறு அவரொப்பும் வண்ணம் செப்பினர்.

க்ஷேத்திரி மன்னரின் அன்பு

சுவாமிகளிடம் க்ஷேத்திரி மன்னருக்கிருந்த குரு பக்தியை வார்த்தைகளால் வரைதல் அசாத்தியம். நடுயாமத்தில் அரசரெழுந்து சுவாமிகளடிகளை வருடுவார். ஒருநாள் அவரிவ்வாறு செய்வதைக் கண்டு, நித்திரை செய்து கொண்டிருந்த சுவாமிகள் விழித்தெழுந்து திடுக்கிட்டு, 'ராஜனே! அரசன் தெய்வத்திற்குச் சமானமானவன்! ஆதலின் நீரிவ்வாறு செய்வது ஒவ்வாது' என்று கூற, அவர் 'சுவாமி குருபக்தியின் பிரபாவத்தால் சிஷ்யன் செய்யும் பணிவிடைகளைக் குரு மறுத்தல் தகுமோ?' என்று கூறிப்பிரார்த்தித்து, அவ்வாறுசெய்ய அனுமதி யளிக்குமாறு மன்றாடினர். பலர் முன்னும் அவ்வேந்தர் அவ்வாறு செய்தல் கண்டு சுவாமிகள் முற்றும் மறுத்து 'இதனால் உமது பிரஜைகள் உம்மை உதாசீனஞ் செய்ய நேரும்' என்று செப்ப, அவர் "பிரஜைகளுக்கு நான் புரவலன், விரோதிகளுக்குக் காலன், போரில் புறங்காட்டியோடா வீரன், ஆனால் தங்களுக்கு நான் அடிமை' என்று மொழிய, அவரன்பைக் கண்டு சுவாமிகள் ஆனந்தக் கண்ணீர் வடித்தார்.

புத்திர சந்தான முண்டாக ஆசிகூறல்

மற்றொருநாள் க்ஷேத்திரியரசர் தமது புத்திரசந்தானமில்லாக் குறையைக் குறித்து சுவாமிகளிடம் ஆருத்தியாத்துடன் விண்ணப் தருளினர். சுவாமிகள் மனமிரங்கி 'ஹே கிருபாநிதே! எத்தனையோ புத்திரனில்லாக் குறையால் உன்னைக் குறித்திறங்கியவர்களுக் கெல்லாம் நீயே புதல்வனாக வந்து தோன்றவில்லையா? எனது பக்தன் குறையை நீ போக்கியருள வேண்டும்' என்று துதித்து, 'அளித்தோம்' என்ற அசரீரிவாக்கு பிறக்க, அதனை இறைவன் திருவருட் பிரபாவமென்று கொண்டு, மன்னருக்குப் புத்திரபாக்கிய மேற்படும் வண்ணம் ஆசீர்வதித்தார். க்ஷேத்திரியில் வதிந்த நாட்களில் சுவாமிகள் ஏழைகளி னில்லங்களுக் கடிக்கடி சென்று உபதேசித்து வந்தார். அவருடைய ஸ்தூலசரீரம்மட்டும் அவ்வரண்மனையிலுலாவி வந்தது; சூட்சுமதேகமோ துறவியாக, ஞானமார்க்கத்தில் மலைப்பிரதேசங்களிலும் காடுகளிலும் சஞ்சரித்துக்கொண்டே யிருந்தது.

அப்பொழுது வெயிற்காலமானபடியால் ஒருநாள் மாலையில் மன்னர், சில விருந்தினருடன் பூங்காவனத்தில் அழகிய ஆசனத்தில் வீற்றிருந்து சல்லாபித்துக்கொண்டிருந்தார். உடனே அவருக்கு சுவாமிகளின் ஞாபகம் வந்தது. வரவே தமது அந்தரங்கக் காரிய தரிசியான ஜெகன்மோகன லால்ஜியை யழைத்துச் சுவாமிகளை யழைத்துவர ஆக்ஞாபித்தார். அவ்வாறே சுவாமிகள் எழுந்தருளியதும், பக்கத்தில் ஆசனமளித்து வீற்றிருக்கச்செய்து, கரங்களில் யாழ்கொண்டு, குயிலினும் மெல்லிய குரலால் பண்ணிசைக்கும் கணிகைமாதரி லொருத்தியை அழைப்பித்து, செவிக்கினிய, சிந்தைக்கினிய கீர்த்தனமொன்றைப் பாடச்சொன்னார். சுவாமிகள் அப்பெண்ணழகியைக் கண்டவளவில், கண்களை மூடிக்கொண்டு வெளியே புறப்படயத்தனிக்க, அரசர் அவரைப் பெரிதும் வேண்டி ஆசனத்திருத்தி, அத்தாசிப்பெண்ணைப் பாடுமாறு ஆக்ஞாபித்தார். பாவைபோன்ற அப்பாத்தைப்பெண், பாக்களிற் சிறந்த அருட்பாவொன்றைப் பாடுவாளாயினள். சுவாமிகள் அவள் கானஞ்செய்யும் கீதத்தின் பொருளிலேயே லயித்து, அவள் முகத்தைப் பாராமலே, சற்று தாமதிப்பது போல நடித்து விரைந்தகன்றார். எத்துணை உறுதியுடையாரையும் 'அந்நோய்க்குடையார்' அடிமைப்படுத்திவிடும் வல்லமையுடையாராதலின் சுவாமிகள் துஷ்டரைக் கண்டதால் தூரவிலகினார். மாதரைக் கண்டாற்றானே மதிமோசம்! காணுவிடில் விதிநாசமல்லவா?

மாதரைக் காண்டலே மதிமோசம்

" ஹா! இன்னுமா உறக்கம்! சஞ்சாரியல்லவா சந்நியாசி! என்ன நீ இவ்வாறு அரண்மனைவாஸத்தை ஆசித்தாய்! எழு!" என்ற மகா சக்தியின் தூண்டுதலுக்குச் சுவாமிகளால் சாக்குபோக்குச் சொல்ல முடியவில்லை. மறுநாளே அவர் மன்னரைத் தமது வாசாலத்தால் தேற்றி, அவரளித்த விலையுயர்ந்த ஆடையாபரணங்களையும், பொருளையும் தக்க சமாதானங்கூறி மறுத்துத் தாம் அமெரிக்கா நாட்டில், சிகாகோவில் நடைபெறவிருக்கும் 'சர்வமத சபைக்கு ஹிந்துமதப் பிரதிநிதியாகப் போக உத்தேசித்திருப்பதாகவும், அவ்வமயம் தேவையானால் அவசியமான உதவியை அம்மன்னரிடமிருந்து பெற்றுக்கொள்வதாகவும் வாக்களித்துவிட்டு க்ஷேத்திரியைவிட்டுப் புறப்பட்டார். புறப்பட்டவர் ஆஜ்மீரை யடைந்து இரண்டொரு நாட்கள் தங்கியபின், ஆமதாபாத்தை யடைந்தார். அப்பதியில் இரந்துண்டு, அங்கிகாற்ற

ஆஜ்மீருக்குப் பிரயாணம்

நகரை வலம்வந்து, கண்ணுக்கினிய காட்சி சாலைகளை யெல்லாம் பார்த்து வசிப்பாராயினர். அப்பொழுது அந்நகர உபந்யாயாதிபதியான ஸ்ரீ உமைசங்கரர் அவர்கள் சுவாமிகளின் நண்பராயினர். ஆமதாபாத் குஜராத்திய சுல்தான்களின் தலைநகரா யிருந்ததையும், அதை 'ஹிந்துஸ்தானத்தில் சகல சம்பத்தும் நிறைந்து லண்டன்மா நகரையொத்து விளங்கும் ராஜஸ்தானம்' என்று சர் தாமஸ் மன்ரோ எழுதிவைத்ததையும் சிந்தித்தவராய், சரித்திராராய்ச்சியிற் தாம் கற்றவாறு கர்னவதி என்ற பழம் பெயருடன் அப்பதி விளங்கிய காலத்தையும் சிந்தித்து மனமகிழ்ந்தார். சில நாட்களுக்குப் பின் செப்டெம்பர் மாதத்தில் அவர் அவ்வூரினின்று புறப்பட்டு கத்யவாரிலுள்ள வத்வான் (Wadhwan) என்ற ஊருக்கேகினர்.

அஹமதாபாத் வாஸம்

வத்வானில் இராணிதேவி ஆலயமென்று ஒரு சிற்ப நுட்பமுள்ள கோயிலுண்டு. இராணிதேவி யென்பவள் ஓர் சௌந்தரிய வதனி. அவளைப் படனில் (Patan) அரசாண்டுவந்த சித்ராஜா என்பவர் விவாக நிச்சயஞ் செய்திருந்தார். ஆனால் ஜூனகத மன்னரான இராகேங்கர் அவளை மணந்துவிட்டார். இதுகண்டு பொறுத சித்ராஜா படையெடுத்துச் சென்று இராகேங்கரைக் கொன்றுவிட, கணவனை யிழந்த பேதை, பகைவனை வரிக்க மனமின்றிக் கண்ணகியைப்போல ஆவேசங் கொண்டெழுந்து அக்நிப் பிரவேசஞ் செய்தனள். சித்தமொடிந்த சித்ராஜாவும் அவள் பெயராலொரு ஆலயமெடுத்தான். அந்தோ! இதனாற்றான் பெண்களின் கண்களை வாளாயுதத்திற் கொப்பாக உபமான சங்கிரஹத்திற் கூறினர் போலும். 'பார்யா ரூபவதி சத்ரு' என்பது இக்கதையில் மெய்ப்பிக்கப்பட்டுளது.

வத்வான் வாஸம், கண்ணகி யனைய இராணி தேவி

இவ்வாலயத்தை சுவாமிகள் போய்ப் பார்த்துவிட்டு, இராணிதேவி சரிதையை ஆங்குள்ளார் கூறக்கேட்டு, இந்தியர்களின் விவாக வழக்கங்களைப் பொறுத்த சில புதிய தோற்றங்களுடன், கண்ணகியேபோல் கணவனைப் பிரியாது மரணத்திலு மவனோடு கூடிய அவள் மாட்சியைப் புகழ்வாரானர்.

அடுத்தநாள் சுவாமிகள் அவ்வூரிலிருந்து லிம்பிடியை யடைந்தார். வழிநடையால் களைத்து, பசிப்பிணியால் வாடி, முன்பின் னறி

யாத அவ்வூரை யடைந்ததும், இருட்டினமையால், வழியிற் சந்தித் தவர்களை விசாரித்துக்கொண்டே சாதுக்கள் தங்கும் சத்திரமொன்றை யடைந்தார். அங்கு அன்றிரவு உண்டு துயின்றார். மறுநாள், அவ்வறச்சாலைப் பரிபாலகர் சாது சந்தர்ப்பண வேஷத்துடன், விலைமாதர் தொழிலையும் புரிவது கண்டு, 'இனிக்கணமு மிங்கு தரித்தலாகா' தென வெளியேற யத்தனிக்கையில் சுத்த பிரம்மச்சரிய சம்பன்னாக, ஆஜாநுபாஹுவாய், அரவிந்த நேத்ரராய், அரசிளங் குமாரைப்போல், அழகிய கம்பீர வதனத்துடன் விளங்கும் சுவாமிகளைக் கண்டு மோகித்து, அவரிருந்த அறையை வெளியே தாளிட்டுவிட்டு 'சுத்த பிரம்மச்சாரியாகிய தாம் காமநுகர்தலினால் சில புதிய யோக சாதன முறைகளைத் தெரிந்து கொள்ளலா' மென அசம்பாவிதமாகப் பேசத் தொடங்கினர். இதைக்கேட்ட சுவாமிகள் திடுக்கிட்டு, கூட்டி லகப்பட்ட சிங்கத்தைப்போ லந்த அறையிலகப்பட்டு 'இதென்ன விபரீதம் குருநாதா! இதிலிருந்து தப்பிக்கும் வழிதான் யாதோ! இவர்கள் யோக்யதையைப் பார்த்தால் இணங்காவிடில் கொலை செய்து விடுவார்கள்போ லிருக்கிறதே' என்று புலம்பிக்கொண்டிருந்தார். அப்பொழுது, அவரை முதல்நாள் சந்தித்து உபசரித்த ஒரு சிறுவன் ஓடிவந்து சன்னல் வழியாகப் பார்த்து 'சுவாமி' யென்றான். அவர் 'வத்ஸா! நல்ல சமயத்தில் தெய்வாதீனமாக வந்தாய். சுவாமி நானல்ல....நீதான்' என்று எண்ணிக்கொண்டே, அவ்வறையைச் சுற்றிப்பார்த்து, அங்கு கிடந்த ஒரு சிறு துண்டு ஓட்டை யெடுத்து, சன்னலிலிருந்த ஒரு கரியைக் கொண்டு அவ்வோட்டில் குறிப்பாகத் தனது நிலையைச் சில வார்த்தைகளாக வரைந்து, அச்சிறுவனிட மளித்து, அவ்வூர் அரசரிடம் கொடுத்து விரைந்து வருமாறு ஏவினர். அவனும் உற்சாகத்துடன் அவ்வோட்டைத் தனது ஆடையில் மறைத்துக்கொண்டு அச்சத்திர பரிபாலகர் சந்தேகிக்காதவண்ணம் வெளிப்பட்டு, மெல்ல அரண்மனையில் நுழைந்து, நேரில் எவ்விதமோ அரசரிட மளித்துவிட்டான். மன்னர் மீசை துடிப்ப, உடனே தமது வீரர்களையேவி, சுவாமிகளை விடுவித்து அழைத்து வரும்படி செய்யச் சுவாமிகள் 'தப்பியது தம்பிரான் புண்ய' மென அரண்மனைக் கேகினர். இவ்விதத் தீங்குகள் எத்தனையோ தர்மத்தின் பேராலும், தெய்வத்தின் பேராலும் நேருகின்றன. உண்ணப்போனவர் உயிரை யிழக்க நேரு மிதுபோன்ற சத்திரங்களுக்கு

விம்பிடியை யடைதல்

சத்திரத்தில் சம்போக பலாத்காரம்- தப்பியது தம்பிரான் புண்யப்

விவேகானந்த சுவாமிகளைப்போன்ற துறவிகள் சென்றால் நிச்சயமாக அறச்சாலையிலல்ல-மரணச்சாலையிலேயே புகநேரும். பஞ்சத்திற் க்ராண்டிகளாய்த் திரிவோர், இதுதான் சமயமென வேட்டையாட வாரம்பித்து வீணர்களாகி மாய்வர். 'அறியாத ஊரில் நாலுபேரை விசாரியாமல், எவரையும் நம்பி, எங்கும் தங்கிவிடலாகாது' என்ற அரிய அனுபவம் இதனின்றும் பெறப்படும்.

லிம்பிடியில் சுவாமிகள் அதிவைதீக பண்டிதர்கள் பலரோடு தர்க்கித்துத் தக்க ஆதாரங்களோடு தமது நோக்கத்தை வலியுறுத்தினர். அங்கெழுந்தருளியிருந்த கோவர்த்தனம் ஜகத்குரு ஸ்ரீசங்கராசாரிய ஸ்வாமிகளும் அவரை அழைத்து உபசரித்து மகிழ்ந்தார். லிம்பிடியி

ஸ்ரீசங்கராசாரிய ரைச் சந்தித்தல்

னின்று சுவாமிகள் ஜுனகதத்திற்குப் பிரயாணமாக அப்பொழுது லிம்பிடியரசர், வழியில் மிக்க தற்காப்போடு செல்லவேண்டு மென்றியம்பி, சில இடங்களைக் குறித்துக்கொடுத்து அவ்விடங்களில் மட்டுந் தங்கிச் செல்லுமாறு வேண்டி, ஜுனகதத்திலுள்ள தமது நண்பர்களுக்குக் கடிதமுந் தந்தனுப்பினர்.

பாவாநகர், சைகூா மார்க்கமாகச் சுவாமிகள் ஜுனகதத்தை யடைந்து திவான் ஹரிதாஸ் விகாரி தாஸ் அவர்கள் இல்லத்திற் றங்கினர். அவ்வூர் 'திவான் ஆபீஸ் மானேஜர்' ஸ்ரீ ஸி. ஹேச் பாண்டியா அவர்கள் சுவாமிகளை வந்து பார்த்து அன்பாயினர். அந்நகரிலவர் இயேசுகிறிஸ்துநாதரின் பரிசுத்த சரித்திரத்தையும், அதில் விளங்கும் அஹிம்ஸா பரமோதர்மத்தையும், அவரது மெய்யடியாரான அசிசி பிரான்ஸிஸின் அடிமைத்திறத்தையும், ஐரோப்பிய சமயப் பரிசுத்த சண்டைகளையும் (Crusade or the Holy War) அவ்வன்பர் விருப்பிற்கிணங்கி, எடுத்தோதி பகவத்கீதைக்கும் இயேசுவினின்ப வசனமிருதத்திற்குமுள்ள ஒற்றுமையைப் பொருத்திக் காட்டினர்.

ஜுனகதத்தில் இயேசுநாதர் சரித்திர விளக்கம்

சனாதன தர்மத்தின் மேன்மையையும், தக்ஷிணேஸ்வராலய பூஜ்யரான தமது குருதேவரின் சரித்திரத்தை அப்பெரியாரருளிய அமுதவாக்கியங்களோடும் விளம்பி, விளங்கிய சுவாமிகளைக் கரைகாணு வரியதொரு பேருவகைக்கடல்பெருக அன்பர்கள் அடிபணிவாராயினர். ஜுனகதத்திற்குச் சமீபத்திலுள்ள கிரிநார்கிரி யென்னும் யாத்திரை ஸ்தலத்திற்குச் சுவாமிகள் அன்பர் சிலரோடு சென்று

அக்குன்றிலுள்ள பல பழங்காலக் குகைகளையும், வழியிலுள்ள அசோக ஸ்தூபியையும் கண்டு களித்துப் பிரதக்ஷிணம் செய்தார்.

இக்கிரிநார்கிரி யென்பது பௌத்தர்களின் ஒரு மகா யாத்திரை ஸ்தலம். அதனைச் சிறப்பித்துக் கூறும் பௌத்த நூல்களும் பல. அக் கிரியினடிவாரத்தில் பாவாநாத ஸ்வாமி திருக்கோயில்கொண்டருளும் சிவாலயமொன்றுளது. இங்கு துறவிகள் ஆயிரக்கணக்காகக் கூடியிருப் பர். இவற்றையெல்லாம் சுற்றிப் பார்த்துக்கொண்டே சுவாமிகள் அக்குன்றின் மீதேறிச் செல்லலுற்றார். வழியில் இடையிடையே பல சிற்ப நுட்பமுள்ள சில ஆலயங்கள் காணப்பட்டன. பாதிவழி யேறியபின், பாதை மிகவும் குறுகிச் செங்குத்தான பாறைகளால் சூழப்பெற்றிருக்கக் கண்டார். சுமார் 1550 அடி உயரம்வரை ஏறிச் சென்றபின் 'வைரதும்ப' மென்ற ஓரிடத்தை யடைந்தார். இதற்கப் பாலும் அவர் சிறிதும் சிரமமின்றி 2,370 அடி உயரம்வரை யேறிப் போனார். ஆங்கு பதினாறு சிறுசிறு ஜைன ஆலயங்கள் அடுக்கடுக் காக அமைந்திருத்தல் கண்டு, அவற்றின் சிற்ப நுட்ப விவேக நிப ணத்துவத்தில் ஐக்கியப்பட்டு, அவ்வாலயங்களில் விளங்கும் சுவர்ணமயமான விக்ரஹங்களின்முன் சாஷ்டாங்கமாகப் பணிந்து எழுந்து, பின்னும் 3,330 அடி உயரத்திலுள்ள சிகரத்தை யடைந்து, 'இதோ தொட் டேன் வானத்தை. வானவர்களைக்கண்டு இதோ வணங்குகிறேன்' என்று பிரம்மானந்தபரராகித் துதிபாடி நின்றார். அப்பால் சிறிது தூர மிறங்கித் தத்தாத்ரேயர் பாதுகை யமைந்துள்ள விடத்தை யடைந்து, தத்தேகத்தியான பரராய், ஆங்கொரு குகையிலமர்ந்து சிலநாட்கள் யோகசாதனங்கள் புரிந்து, புதிய சில பரமார்த்த உண்மைகளைக் கண்டு, அதன்பின் மலையினடிவாரத்திற்கு வந்து, அவர்வரவை எதிர் பார்த்த வண்ணம் அங்கு பார்த்துக்கொண்டிருந்த அன்பர்களுடன் ஜுனகதத்தையணுகி, அவர்களிடம் விடை பெற்றுக்கொண்டு விரைந்து பூஜ் நகரை யடைந்தார்.

கிரிநார்கிரியின் விசேஷம்

இந்நிலையில் சுவாமிகள் அரண்மனைகளில் வசித்து, அரசர்களு டன் அன்புபூண்டு சஞ்சரிப்பது பரிவ்ராஜக நிலைக்குப் பாங்காகுமோ வென்ற சங்கை சிலருக்குதிக்கலாம். அவர் தமது தேசிகனின் திரு வாக்கை நிறைவேற்ற வேண்டுமென்ற எண்ணத்தால், அதற்கு மன் னர்களின் பேருதவி பெற்றாலல்லது வியலாதென்பதை யுணர்ந்து, அவ்வரசர்களின் அன்பிற்குக் கட்டுப்பட்டு அவர்களுடன் வசித்தார்.

இக்காரணம் பற்றியே அவர் யாத்திரைசெய்த க்ஷேத்திரங்களிலுள்ள பிரமுகர்களையும், உத்தியோகஸ்தர்களையும் சந்தித்து அவர்களிடம் தமது நோக்கங்களை யெடுத்தோதி வந்தார். பொருளையோ கௌரவத்தையோ அவர் பொருட்படுத்தவில்லை யென்பதை நாமுணர்த்தாமலே ஆங்காங்கு உணர்ந்து கொள்ளலாம். இதுவன்றி அவர் சாதுக்களில் மனபரிபக்குவ மடைந்த மகாபுருஷராகையால், அவரை எவ்வித பந்தமும் கட்டுப்படுத்தாதாதலின், அவர் விஷயத்தில் அவை குற்றமும் ஆகாது.

பூஜில் பிரசங்கம்

பூஜ்நகரில் அவர் தாம் கொண்டுவந்த அறிமுகக் கடிதத்தைக் கொண்டு, அச்சமஸ்தான அமைச்சரைக்கண்டு, அந்நகரில் கைத்தொழில் விருத்தி, விவசாயப்பெருக்கு, அர்த்தசாஸ்திர விசேஷம் முதலியன பொருளாக இரண்டோரிடங்களிற் பேசிவிட்டு, அவண் நீங்கி, ஜுனகதத்தை யடைந்து சின்னாட்கழிய, வீரவால் படான் வழியாக சோமநாத புரத்தை யடைந்தார். சோமராஜனால் சுவர்ணத்தாலும், இராவணேஸ்வரனால் வெள்ளியாலும், ஸ்ரீகிருஷ்ணபகவானால் மரத்தாலும் அமைக்கப்பெற்ற சிறப்பினையுடைய சோமேசர் ஆலயத்தைக் காணக்காண அவர் கண்களில் கண்ணீரரும்பின. 'மும்முறை இவ்வாலயம் பகைவர்களால் தகர்க்கப்பட்டுத் தரைமட்ட மாக்கப்பட்டும் மூன்று மன்னர்கள் இக்கோயிலைத் திரும்ப எடுத்தனர். பதினாயிரம் கிராமங்கள் ஆலய ஆராதன விழாக்களுக் கென மானியமாக விடப்பட்டன. முந்நூறு இசையாளர் குடும்பங்கள் வாத்ய கோஷத்திற்கென வகுக்கப்பெற்றிருந்தன' என்று ஆங்குள்ளார் கூறக் கேட்டு மனம் நொந்துபோனார். யாதவர்கள் ஒருவரை யொருவர் மாய்த்து மடிந்து ஜீவன் முக்தியடைந்த ஸ்ரீகிருஷ்ண பரமாத்மாவின் திருவிளையாடலும் இச்சோமநாதபுரத்திலே நிகழ்ந்ததென்று ஆங்கிருந்த அன்பர்கள் புகன்றனர். அத்தலத்தைப் பாழாக்கிப் பறிமுதல் செய்த முகம்மத் கசினியை நினைத்து அவர் வெகுண்டார். அதன் பிறகு அப்பதியினின்றும் சுராஜ்மந்திரம் என்னும் சூர்யாலய க்ஷேத்திரத்தை யணுகி, அதுவும் பாழாயிருக்கக்கண்டு அனலிற்பட்ட மெழுகென உருகி, அப்பால் இந்தூர் மகாராணி அஹல்யாபாய் அமைத்தருளிய சோமநாத ஆலயத்திற்குச்சென்று சிவபெருமானைச் சிந்தையில் நிறுத்திப் பணிந்து, இரண்டொரு நாட்களாயினபின், ஜுனகதத்

வீரவால், படான் வழியே சோமநாத புரத்தையடைதல்

தைத் திரும்பவுமடைந்தார். அங்கு சிலநாட்கள் தங்கிப்பின் மூன்றும் முறையாக ஜுனகதத்தினின்றும் போர்பந்தருக்குச் செல்வாராயினர். இவ்விதம் சுவாமிகள் 'இராஜ புதன க்ஷேத்ரவாச'த்தை முடித்தார்.

22-ம் அத்தியாயம்

வேந்தர் குழாத்தில் விளங்கிய பெருமை

இங்ஙனம் சுவாமிகள் இராஜபுதனத்துள்ள பல க்ஷேத்திரங்களையு மொருமுறை சுற்றிப் பின் போர்பந்தரை யடைந்தாரென்று கடந்த அத்தியாயத்திற் கூறினோம். போர்பந்தர் என்பது **சுதாமாபுரி** என்ற பாகவத சம்பந்தமுள்ள நகரம். அந்நகரில் சுதாமாவின் ஞாபகார்த்தமாக எடுக்கப்பெற்ற ஆலயமொன்றுளது. போர்பந்தரை யடைந்த அன்று மாலையில் சுவாமிகள் அவ்வாலயத்தைச் சுற்றிப் பார்த்துவிட்டு, அச்சமஸ்தான அமைச்சரைக்காணத் தாம் கொண்டுவந்திருந்த அறிமுகக்கடிதத்துடன் சென்றார். திவானவர்கள் சுவாமிகள் பேசிய இரண்டொரு சொற்களால், அவருடைய பெருமையனைத்து மறிந்தவராய் போர்பந்தர் வேந்தருக்கு அவரைப் பரிச்சியஞ் செய்து வைத்தார். அம்மன்னரும் சுவாமிகளுடைய அன்பாகி அரண்மனையிலேயே தங்கி யிருக்குமாறு பெரிதும் வேண்டினர். சுவாமிகள் போர்பந்தர் சமஸ்தான சம்ஸ்கிருத வித்வானுடைய கல்வியைப்பற்றி முன்பே வெகுவாய்க் கேட்டிருந்தமையால், அங்கு கொஞ்சகாலந் தங்கி அரிய வடமொழி நூல்களைக்கற்க எண்ணி. அரசருடைய விருப்பிற் கிசைந்தார். இதுவரையில் சுவாமிகள் தமது இயற்பெயரையோ தீக்ஷா நாமத்தையோ வெளியிடவில்லை. அந்நகரில் அவர் ஒன்பது மாதகாலம் தங்கி வடமொழி நூல்களைப் பயின்றார்.

போர்பந்தர் அல்லது சுதாமாபுரிக்கு ஏகல்

பயிலும் நாட்களில் ஸ்ரீராமகிருஷ்ணதேவரின் தீர்க்க சமாதி நேர்ந்தவுடன் எவருமறியாவாறு தக்ஷிணேஸ்வரத்தைவிட்டுப் புறப்பட்டு கால்நடையாகவே காடுமேடுகளைக்கடந்து, உடலிளைப்ப, காலாகாலங்களிலுணவின்றி, உறக்கமின்றி, ஊக்கம் வழிகாட்ட பரிவ்ராஜகராக ஸ்தலயாத்திரை புரிந்துவரும் சுவாமி திரிகுணதீதர் ஹிந்துஸ்தானத்தை யடையவராயினர். அடைந்த அவர் பல க்ஷேத்திரங்களை

யும், நகரங்களேயும் கடந்து வருங்கால், யாரோ ஒரு சந்நியாசி மகா மேதாவியாய் விரைவாக ஆங்கிலம்பேசும் தன்மையுடன் வடமொழி யிலும் வல்லவராய் பரம பாகவதோத்தம இலக்கணங்களுடன் அவ் வழியே சில மாதங்களுக்கு முன் வந்ததாகக்கேட்டு 'அவர் நமது நரேந்திரரா யிருக்கலாம்' என்று அனுமானித்தவாறு, நட்சத்திரம் வழிகாட்டக் கிறிஸ்துநாதன் ஜன்மபூமியை யடைந்த பக்தர்களேப் போல, சில சந்நியாசிகள் பின்ருெடரப் போர்பந்தருக்கு வந்து சேர்ந் தார்; ஆனுல் அப்பொழுது விவேகானந்தசுவாமிகள் போர்பந்தரி லிருப்பாரென்றவர் எண்ணவில்லே. அவருடன் வந்த துறவிகள் ஹிங் லஜ் (Hinglaj) எனும் நகரத்துக்கு யாத்திரைசெய்ய வேண்டுமென்று விரும்பிஞர்கள். திரிகுணுதீதருக்கும் அதில் விருப்பமேயாகுலும்

திரிகுணுதீதரின் வருகை

வெகுநாட்களாக நடந்தே யாத்திரைசெய்து வந்த மையால் அவர் கால்கள் சுரந்திருந்தன. ஹிங்லஜ் என்ற நகரோ அங்கிருந்தும் பன்னூறு மைல்களுக் கப்பாலுள்ளது. அதனுல் கராய்ச்சிக்குக் கப்பல் மார்க்கமாகச்சென்று, பின் ஒட்டகங்களிலேறி பாலேவனத்தைக் கடந்து ஹிங்லஜுக்குப் போகலாமென்று அவர் கூற, அவருடன் வந்த அனேவரு மதற்கிசைந் தனர். ஆனுல் அதற்குப் போதிய பொருள் வேண்டுமே? என்ன செய்வது? அவ்வமயம் ஒரு சந்நியாசி முன் வந்து, 'போர்பந்தர் அரசருடன் ஒரு பரமஹம்ஸர் வசிக்கின்ருராம். அவரும் நம்போன்ற சந்நியாசியாம். அவர் சொற்படி அம்மன்னர் ஆடுகிருராம். அவரை நீங்கள் கண்டு பேசி அவர் மூலமாக அரசரிடமேதேனும் உதவிபெற லாம்' என்று கூறினுர். முதலில் திரிகுணுதீதர் யாசிப்பதைவிடக் கேவலமொன்றில்லே யென்று நினேத்து அதற்கொப்பவில்லே யாயினும், அவ்வேந்தரை யாட்கொண்டருளிய துறவி விவேகானந்தராக விருக்க லாமோ வென்பதை யறியவேண்டுமென்ற இச்சையானது அவரை அரண்மனேக்கேகுமாறு தூண்டிற்று. அப்பொழுது சூர்யாஸ்தமன சமயம்.

விவேகானந்தர் ஏதோ ஆலோசித்தவாறு அரண்மனேயின் தாழ் வாரத்தி லுட்கார்ந்திருந்தார். யதேச்சையாக அவர் திரும்பிய பொழுது ஒரு சந்நியாசிக்கூட்டம் அரண்மனேயை நோக்கி வருவதைப் பார்த்து பயமும், மகிழ்ச்சியும், கோபமும் மாறிமாறியெழ அக்கூட் டத்தில் திரிகுணுதீதர் வருவதைக்கண்டு 'நான் தன்னந் தனியே-தயா பரரான எனது குருதேவரின் வாக்கை நிறைவேற்றப் பந்தத்தை

யொழித்து, பாரத்தை யறுத்து, யாத்திரார்த்தியாய் வந்த இவ்விடத்தில் ஏன் இத்திரிகுணதீதன் என்னைத் தேடிவரவேண்டும்?' என்று துடித்து நிற்பாராயினர். அப்பொழுது அத்துறவிகளும் அவரைச் சமீபித்தனர். சமீபித்ததும் அவர் திரிகுணதீதரை விளித்து 'உன்னை யார் இங்கு வரச்சொன்னார்கள்? காசிக்குப் போனாலும் கருமந் தொலையாதா?' என்று வன்மொழிகளை வருஷிக்கத் தொடங்கினர். பொறுமை, துறவிகளின் முக்கிய இலக்கண மாதலால் திரிகுணதீதர், தமது தலைவரைக் கண்ட ஆனந்தத்தாற் கண்ணீர் பெருக்கி, அவர் பேசிய இன்னாச்சொற்களை இதச் சொற்களாகக் கொண்டு, சுவாமிகளை வணங்கி 'ஐயனே! யதேச்சையாக நானுங்களைச் சந்திக்க நேர்ந்ததேயன்றித் தம்மைத் தேடி வரவில்லை; உண்மை யிது! இவர்களுடன் நான் 'ஹிங்லஜ்' தீர்த்தாடனத்திற்குப்போக எண்ணி, உங்கள் செல்வாக்கால் அரசரிடமிருந்து சிறிது பொருள்பெற்றுச் செல்லலாமென்றெண்ணியே யிங்கு வந்தது' என்றியம்பினர். அப்பொழுதும் சுவாமிகள் 'என்னால் ஒன்று மாகாது! யாராவது வலுவில் பொருளளித்தால் புரியுங்கள். யாத்திரை இல்லையேல் நடந்தே செல்வது உசிதம். உங்களுக்காக யானேன் அரசரை யாசிக்கவேண்டும்? பந்தத்தை யொழிக்க இப்பாடுபடும் யான் எவ்வாறு யாசகம் செய்யலாம்? விரைந்து வெளியேறுங்கள்' என்று கடுகடுத்துப் பேசினர். என்ன செய்வார் திரிகுணதீதர்; முகம் வாடியவராய் மெல்ல அகலமுயன்றார். பந்தத்தைத் துறவி முனிகின்றான். அதனால் சுவாமிகளுக்குக் கோபம் வந்தது. அவர் இயற்கையாகக் கோபசுபாவமுடையவரல்ல. கோபத்தை அவர் அப்பொழுது வருவித்துக்கொண்டார். அடுத்தக் கணமே அவர் சாந்தமூர்த்தியானார்; கருணையு முதித்தது. அப்பால் அவர் திருகுணதீதரை யழைத்து அவர் கோரிக்கையை நிறைவேற்றி வைத்தார்.

சுவாமிகளின் கடுகடுத்தப் பேச்சு

அதன்பின் சுவாமிகள் தமது சஞ்சாரத்தை ஆரம்பிக்க எண்ணி, போர்பந்தர் மன்னரிடம் கூற, அவரிசையாதது கண்டு பின்னுஞ் சில காலந்தங்கி ஸ்ரீ சங்கர பாண்டுரங்கர் என்ற ஆரியமொழிப் பண்டிதரோடு, வேதங்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வந்த அவருக் குதவியாக விருந்து, பதஞ்சலி சூத்திரபாஷ்யங்களை ஆராய்ந்து மொழிபெயர்த்து அக்காரியத்தைப் பூர்த்திசெய்து வைத்தார். அதனால் அவருக்குப்

பதஞ்சலி பிரம்ம சூத்ர ஆராய்ச்சி

பதஞ்சலி பாஷ்யத்திலிருந்த சில சந்தேகங்கள் நீங்கலாயின. அப் பண்டிதருதவிகொண்டு சுவாமிகள் 'பிரஞ்சு' பாஷையை வெகு விரை வில் கற்றுக்கொண்டார்.

சஞ்சார ஆவேசம் அவரைப் பிடித்தலைத்தது. போர்பந்தரை விட்டு சுவாமிகள் உடனே வெளிக்கிளம்ப நிச்சயித்தார். ஸ்ரீ சங்கர பாண்டுரங்கரும் "சுவாமி! கழுதைக்குத் தெரியுமோ கற்பூரவாசனை? தாங்களிங்கு பிரகாசிக்க முடியாது. ஆதலின் தாம் மேல்நாடுகளுக் குச்சென்று சனாதனதர்மத்தையும், பாரதவர்ஷத்தின் பெருமைகளை யும் நிலைநாட்டி வரவேண்டும்" என்று கூறினர். அவரும் 'நமது மனத்திலுள்ள ஆவலை இவர் எவ்விதமறிந்தார்' என்று வியந்து, பிறகு வேந்தரை யணுகி 'செங்கோல்மன்ன! நானின்னும் எனது ஆசாரி யரின் கட்டளையை நிறைவேற்றவில்லை. என்மனம் இன்னும் அடங்க வில்லை லௌகீகிகள் நிறைந்த நகரங்களில் வசிக்க என்மனங் கலங்கு கிறது. மகா மேதாவிகள்-தலைவர்கள் என்று கியாதிபெற்றவர்களிடத் தில் கேவலம் பொறாமை, தன்னயம் பேணல், ஒற்றுமையின்மை முதலிய தீயகுணங்களும், துரா சாரமும் விரவியிருப்பதைக்காண என்மனம் சகிக்க வில்லை. சுதேச அபிமான சுத்த இரத்தோட்டமுள்ள சுதாமரையே நான் காண முடியவில்லை. இந்நிலையில் பயனற்ற சீர்திருத்தங்களும், கொடிய வைதீகமும் தேசத்தைத் துடைக்கின்றன. சமூகத்தைச் சாலத்துறந்து புத்தனைப்போல் உண்மையைக் கண்டறிந்த பின்பே யானெங்கும் நிலைத்து நிற்கமுடியும். சமயங்களுக்குத் தாயகமாகவும், நாகரீகத்தை வளர்த்த தொட்டிலாகவும், தெய்வீகத்தின் தோரகவு மிருந்த பாரத பூமியின் பழைய தர்மத்தை அடியேன் நிலை நிறுத்தப் பாடுபடவேண்டு மென்பதே எனது குருதேவரின் கட்டளை. ஆதலின் நான் இப்பொழுதே புறப்படுகிறேன்' என்று கூறிப் பலவந்தமாக விடைகொண்டு துவாரகைக் கேகுவாரானர்.

துவாரகைக்குப் பிரயாணம்

'துவாரகாநாதனைக்காண அருமருந்தன்ன அடியானே வருக' வென்றழைப்பனபோல் துவாரகையில் தூபியிலுள்ள பதாகைகள் காற்றூலசைந்தன. சுவாமிகள் கடற்கரையை யெய்தினர். மாலைப் பொழுதானமையின் மலர்கள் அலர்ந்து மணங்கமழ்ந்தன. துன்ப மாகிய கடலிலே, இச்சையாகிய படகிலேறி மண், பெண், பொன்னு கிய மச்சவேட்டையினிமித்தம் சென்றவர்கள்போலச் செம்படவர்கள் அம்மாலைப்பொழுதில் மகிழ்ச்சியாகக் கரையை யடைந்தனர். யாதவ

குலதிலகரான கண்ணன் பெருமையைக்கழறுவனபோல் காந்தள்க ளெல்லாம் இதழ்விரிந்தன. இக்காணரும் காக்ஷிகளெல்லாம் சுவாமி களைச் சமாதியிலாழ்த்தின. அவர் களங்கமின்றி சர்வேஸ்வரனைச் சகல பொருள்களிடத்துந் தரிசித்தார். அப்பால் துவாரகையில் சாரதா பீட மடாதிபதி ஸ்ரீ ஜகத்குரு சங்கராசார்ய யதீந்திரர், சாதுக்கள் சௌகரியத்தைக்கருதி அமைத்துள்ள சத்திரத்திற் சில நாட்கள் தங்கி யிருந்து, துவாரகையின் தூய க்ஷேத்திரங்களை யெல்லாம் தரிசித்து, பின்னர் மாண்டவி நகரை யடைந்தார்; அப்பால் நாராயண சரோவர் வழியே யேகி, அஷபுரிக்குச் சென்று திரும்பவும் மாண்டவிக்கு வந்து, அவ் வூரினின்றும் பூஜ் நகரை யடைந்து, அதிலிருந்து வெகுதூரம் நடந்து புலிதனத்திற்கு (Palitana)ப் போய் சதுருஞ்ஜய வெற்பை யணுகினர். அக்கிரியில் புள்ளினங்களே பெரிதும் வசித்தன. அம்மலையினுச்சியில் ஓராஞ்சநேயர் கோயிலும், 'ஹெங்கர்' என்ற முகம்மதிய சந்நியாசி களின் பள்ளிவாசலும் காணப்பட்டன. இவற்றையெல்லாம் கண்ட வாறே அம்மலையின் சிகரத்தை யடைந்து காம்பே வளைகுடாவைக் கண்டார். அது ஒரு கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. அதன் பிறகு அம்மலையினின்று மிறங்கி ரோமாபுரியைவிடப் பழமையான ஹிந்துதேச மன்னர்களின் தலைநகராக விளங்கிய வல்லபிபுரம் சேர்ந்து ஒருநாள் அங்கு தாமதித்தார்.

துவாரகையின் தூயகாட்சி

பின்பு பரோடா சமஸ்தான ராஜதானிக்கேகி, கைக்குவாரின் அமைச்சரான திவான் பகதூர் மணிபாய்ஜேயைக்கண்டு, அவருக் குத் தமது அருட்சுடரைச் சிறிது வெளியிட்டுக்காட்டி, அப்பால் காண்டவம் (Khandwa) என்னும் நகரடைந்து, அவ்வூரில் சிறந்த நியாயவாதியாகத்திகழ்ந்த பாபுஹரிதாஸ் சடர்ஜீயின் உபசரிப்புக் கீடு பட்டு சில நாட்களிருந்தார். அப்பொழுது இரண்டொருமுறை இந் தூருக்கும் போய் வந்தார். காண்டவத்தில் சுவாமி கள் அந்நண்பர் வேண்டுகோட்கிணங்கி ஒருபந்நியா சஞ் செய்தார். அப்பிரசங்கத்தைக் கேட்ட அந் நகர நீதிபதி பாபு மத்காப் சந்திர பனர்ஜி அவரன் பராகி, அதனறிகுறியாக ஓர் கௌரவ விருந்தளித்தார். அத் தேசீர்க் கச்சேரியாயினபின், அங்கு கூடி யிருந்தவர்களுக்குச் சுவாமிகள் உப நிடதங்களின் உட்கோள்களை விளக்கி யோதுவாராயினர். சுவாமிகள் உபதேசிக்குங்கால் பாபு பயரிலால் கங்குலி என்னும் வடமொழி விர்ப்

பரோடா, காண்டவம், இந்தூர், வாஸம்.

பன்னர் தமக்கெழுந்த பல சந்தேகங்களும் நீங்கப்பெற்று 'இது தெய்வாம்சம். இத்தகைய கல்வியைக் கேவலம் முயற்சியால் மட்டு மடைதலியலாது. இறைவனருளே எதற்கும் பிரதானம்' என்று தோத்தரித்து மகிழ்ந்தார்.

அங்கு ஐயன் வெகுநாட்கள் தங்கவில்லை. தமது 'இமயம் முதற் கன்னியாகுமரி' வரை யாத்திரையை விரைவில் முடித்து மேல்நாடுகளில் தமது ஊழியத்தைப்புரிய விரைந்தேக வேண்டுமென்ற விருப்பமானது அவர்மனதை அலைத்துக்கொண்டே யிருந்தது. இவ்வெண்ணம் அவருக்கு முன்னம் ஜுனகதத்திலும் போர்பந்தரிலும் தோன்றிற்றாயினும் காண்டவத்திற்றான் தாண்டவமாடி நின்றது. அவருடைய நண்பர்கள் சுவாமிகளைப் பிரிய மனமிசையவில்லை. அவர்களைச்

பம்பாய்க்குப் புறப்பாடு

சுவாமிகள் ஒருவாறு தேற்றித் தாம் இராமேஸ்வர யாத்திரையை வெகு சீக்கிரத்தில் பூர்த்தி செய்ய விரும்புவதால், அப்பொழுதே பிரயாணமாக வேண்டுமென்று கூற, அவரது மெய்யன்பர் பம்பாயிலுள்ள தமது சகோதரருக்கு 'சபில்தாஸை சுவாமிகளுக்கு பரிச்சயஞ்செய்து வைக்குமாறு' கடிதமொன்று வரைந்து தந்து, டிக்கட் ஒன்று பம்பாய்க்கு வாங்கிக்கொடுத்து இரயிலேற்றி வழியனுப்பினர்.

சமயக்கொள்கைகளை ஸ்தாபிப்பதற்கான வழிகள் அப்பொழுது அவருள்ளத்தெழ வாரம்பித்தன. ஐரோப்பிய நாடுகளுக்கேகி பாரத நாட்டின் சமயப்பெருமையைச் சாற்றவேண்டுமென்ற சக்தி அவரை ஆட்கொண்டுவிட்டது. பரமஹம்ஸரின் திருவாயினின்றும் பிறந்த கட்டளையென்னும் சந்திரபிம்பத்தின் வருகையால் அவர் மனமாகிய கடல் பொங்கி வழிந்தது. சுவாமிகள் இவ்வாறு பல விஷயங்களை ஆராய்ச்சி செய்தவண்ணம் 1892-ம் ஆண்டு 'ஜுலை' மாதத்தில் பம்பாயை யடைந்தார். அப்பொழுது அவர் பக்தராயும், ஞானியாயும், தேசாபிமானியாயும் விளங்கினர். தற்சமயம் நிலைகுலைந்து தத்தளிக்கும் நாட்டின் நன்மைகளைப் பல துறைகளிலும் பெருக்கி, சனாதன தர்மத்தை ஸ்தாபனஞ்செய்து, பாரதபூமியின் புகழை மகோந்நத நிலைக்கு மீட்டுங் கொண்டுவரவேண்டுமென்ற விஷயாலோசனையிலேயே அவர் சித்தம் ஆழ்ந்திருந்தது. சுவாமிகள் பம்பாய் நகரடைந்ததும், தமது நண்பரளித்த கடிதத்தைக்கொண்டு பம்பாய் பிரபல சட்ட நிபுணரான ஸ்ரீராம்தாஸ் சபில்தாஸ் அவர்களைப்போய்ப் பார்த்தார்; அவரால் பெரிதும் கொண்டாடப் பெற்று, அவருடைய மாளி

கையிலேயே வேத அத்யயனஞ் செய்துகொண்டிருந்தார். சில தினங்களாயினபின், ஒருநாள் யதேச்சையாக அபேதானந்தரை அங்கு சந்தித்தார். சுவாமிகள் அவரையும் தன்னுடன் அழைத்துச்செல்ல மறுத்துத் தாம் மேற்கொண்ட கருமத்தைக் குறித்த விஷய ஆராய்ச்சியிலேயே கண்ணுங் கருத்துமா யிருந்தார்; தாம் மேல்நாட்டிற் செய்ய உத்தேசித்திருக்கும் ஊழியத்தை அந்நகரப் பிரபலரும் அறிவாளிகளுமான பலருக்கும் விஸ்தரித்துக் கூறி, சீக்கிரத்தில் சமுத்திர ஸ்நானம் செய்யவேண்டி, அந்நகர் நீங்கி புனாவுக்கு வந்து சேர்ந்தார்.

பம்பாயில் ஸ்ரீராம்தாஸ் சபில்தாஸின்நட்பு

புனாவை யடைந்ததும் மகா தேசபக்தசிகாமணியாய், பாஷா ஞானியாய் விளங்கிய ஸ்ரீ பாலகங்காதர திலகர் அவர்களைச் சந்தித்தார். இரண்டொரு வார்த்தைகள் பேசியதும் இருவரும் நண்பராயினர். திலகர் சுவாமிகளின் பாஷா நிபுணத்துவத்தையும், யோக சித்தியையும், பேசுந்திறமையையும், கம்பீர வதனத்தையுங் கண்டு போற்றுவாராயினர். சுவாமிகள் தமது நோக்கங்களை திலகருக் கெடுத்துக்கூற அவர் 'தங்கள் நோக்கங்கள் பரமபவித்ரமானவைகள். அவற்றை நிறைவேற்றக் கூடியவரும் தாங்களே' யென்று கூறிச் சுவாமிகளை ஊக்கினர். அப்பொழுது 'லிம்பிடி' மன்னர் மகாபலீஸ்வரத்திற் றங்கி யிருப்பதாகச் சுவாமிகள் கேள்விப்பட்டு, மகாபலீஸ்வரத்தை யடைந்து அவரைக் கண்டார். கண்டதும் அப்புரவலர் மார்பினணியாரம் நிலந்தோயப் பணிந்தெழுந்து, உபசரித்துத் தம்முடன் ராஜதானிக்கு வரும்படி மன்றாடியும், சுவாமிகள் தமது நோக்கங்களைக் கூறி, விடைபெற்றுக்கொண்டு பெல்காமை நோக்கிச் செல்லலுற்றார்.

புனாவில் திலகரின் கூட்டுறவு

பெல்காமில், பாபு ஹரிபாத மித்திரர் அவர்கள் சுவாமிகளின் மித்ரரானர். அவர் அம்மாகாண காட்டிலாகா தலைவர். சுவாமிகள் அவர்வீட்டைத் தங்குமிடமாகக்கொண்டு அந்நகர அறிவாளிகள் குழாத்தைத் தமது சக்தியால் வசப்படுத்திச் சில பிரமுகர்களைச் சந்தித்துத் தமது மன ஆவலை வெளியிடுவாராயினர். ஒருநாள் சுவாமிகள் அதிகாலையிலெழுந்து, சற்றுநேரத்தில் திரும்பி வந்து விடுவதாகத் தம் நண்பரிடம் கூறிவிட்டு, சுமார் இரண்டு மைல் தூரம் நடந்துபோய்த் திரும்புகையில், தாம் முந்தினநாள் சந்தித்த சில அன்பர்களைக் கண்டார். அவ்வன்பர்கள் அவரை உபசரித்து, ஓர் பொது ஸ்தலத்திலமர்ந்து

பெல்காம் வாஸம்

வேதாந்த விஷயங்களிற்றமக்குள்ள ஐயப்பாடுகளை அகற்றிக்கொள்ளத் தொடங்கினர். இப்படி யிருக்கையில் பாபு ஹரிபாதமித்ரர் 'சுவாமிகள் வெகுநேரமாகியு மின்னுந் திரும்பவில்லையே ? என்ன நேர்ந்ததோ' வெனக் கவன்று தெருவழியே தேடிவந்து சுவாமிகளிருக்குமிடத்தைக் கண்டு கவலை நீங்கி, அச் சத்சங்கத்திற் கூடினர் ; சுவாமிகள் அங்கு கூடியிருந்தவர்கள் கேட்ட கேள்விகளுக்கெல்லாம், உடனுக்குடனே விடையளித்து, வங்காளம், வடமொழி, ஆங்கிலமொழிகளில் தர்க்கித்துக்கொண்டும் வேத உபநிஷத மகாவாக்யரீதியைப் பின்பற்றி விளக்கும் வெற்றியைக் கண்டு 'நாம் முற்பிறப்பிற்செய்த தவத்தின் பயனே இவரை நமது மனையிற் றங்குமாறு கூட்டிவைத்த' தென மகிழ்ந்தார். தர்க்கம் முடிந்தபின் சுவாமிகள் குழந்தையைப்போல குதித்தெழுந்தவராய்த் தமது மித்திரரில்லத்திற்கேகி விளையாடுவாரானார். குழந்தையும் சந்நியாசியும் கொண்டாடத் தக்கவர்களல்லவா ?

பிறகு சுவாமிகள் 'துறவிகள் நகரங்களில் மூன்று நாட்களுக்கு மேலும், கிராமங்களி லொருதினத்திற்குமேலுந் தங்கலாகாது. தங்கினால் பற்றுவளரும். பற்றினால் விளையும் துன்பங்களோ பல. அத் துன்பநிவர்த்தியைக் கருதித் தமது நெறிக்குமுறணான விஷயங்களில் அவர்களிறங்குவர். நெறியினின்றும் மாறுபட்டவன் பாபியாவான்' என்று சொல்லிப் பிரயாண நிச்சயஞ்செய்ய, ஹரிபாதர் பலவந்தப் படுத்தி வேண்டினமையால் பின்னுஞ் சில நாட்கள் தாமதிக்க இசைந்தார். அந்நாளில் அவர் ஒரு பெரியாருடன் பேசுங்கால் 'பிக்விக் பத்திரிகை' யென்னும் ஆங்கில நூலிலிருந்து ஹாஸ்யமாக உண்மையை விளக்கி அரிய அனுபவங்களை எடுத்தோதும் சில பத்திகளை மேற்கோளாக ஒப்பிப்பதுகண்டு மித்திரர் ஆச்சரியமுற்று 'சுவாமி ! துறவியாகிய தாங்கள் இவற்றை எங்கு வாசித்தீர்கள் ? அதிலும் எப்படி இவ்விஷயங்களை மனப்பாடஞ்செய்ய முடிந்தது ? இதனைப்பாராமற் சொல்ல எத்தனைமுறை படித்திருப்பீர்கள் ?" என்று வினவ, அவர் "அன்ப ! மனப்பாடஞ்செய்ய மனமொருமைப்பாடு வேண்டும் ! அதாவது உடலின் சேட்டைகளை மனம் மறந்து நிற்கவேண்டும் ! உடல் வலிமை மனவலிமையாகிய இவ்விரண்டுமே அறிவை வளர்ப்பன. அறிவு ஏனைய இரண்டினுதவியாலும் சுலபமாக எவ்விதக் கடினமான பொருளையும் எளிதில் உணர்ந்து கொள்ளத்தக்கது' என்று மறுமொழி பகர்ந்தார் ; மற்றும் கீதையிற் பொதிந்து கிடக்கும் பல நுண்பொருள்களையும் அவருக்கு விளக்கி யருளினர். ஒரு துறவி, அதிபால்யர்-

அன்பர் ஹரிபாதமித்திரர்

பிரம்மதேஜசுடன் பிரகிருதிசாஸ்திரம், ரசாயன சாஸ்திரம், வான சாஸ்திரம், பூதத்துவம், கலந்த பல கணிதவகைகள் முதலியவற்றில் சிறந்த ஞானத்துடன் ஆங்கிலம், ஆரியம், வங்காளி பாஷா பாண்டித்யத்துடன் அழகிய திருமேனியுடன், இந்நகரத்தை அலங்கரித்து விளங்குகின்றாரென்று ஒவ்வொருவீட்டிலும் அவர் கியாதி உலாவிற்று. இப்பொழுது சுவாமிகள் பிரஞ்சுபாஷையை நன்றாகக் கற்றுக்கொண்டு பிரஞ்சுக்காரர் சங்கீத சாஸ்திரத்தை ஆராய்ந்தவண்ணம் சில நாட்கள் பெல்காமிலேயே தங்கினர். ஹரிபாதமித்ரரும் சுவாமிகளும் மிக்க அந்யோன்யர்களாயினர். அவ்வன்பரிடத்தில் சில துர்க்குணங்கள் பழக்கத்திலிருக்கக்கண்டு சுவாமிகள் அவரை நல்வழிப்படுத்தக் கருதிப் பின்வருமாறியம்பலுற்றார்: 'அன்ப! பொருட்செல்வத்தால்மட்டும் சுகமேற்படாது; மனதிற்கு உற்சாகமுண்டாகாது. துர்ப்பழக்கங்களும் துராசாரங்களும் நீங்க, பொடிகுடிகளுக் கடிமையாகாது, மாதர் மயக்கமற்றிருப்பானே மனநோயு முடல்நோயும் பீடியாவாதலின் அவ்வாழ்வே குறைவற்ற செல்வமுடையதாம்.'

ஹரிபாதமித்திரர் காட்டு இலாகாத்தலைவராதலின் அவருக்கு அடிக்கடி ஆபத்துக்கள் நேர்வதுண்டு. அவ்வமயங்களிலெல்லாம் சுவாமிகள் அவருக்கு சமயோசிதமான தந்திரங்களைப் புகட்டி வந்தார். ஊர் பலவிதமென்ற பழமொழிக்கேற்ப, சில பழங்கால பண்டிதர்கள் 'இவர் பரிவ்ராஜகரானால் பாராளும் வேந்தர்களுடன் பழகி அவர்கள் மாளிகையிற்றங்கியது தவறு' என்று வம்பு பேசியதை மித்திரர்கேட்டு, அதைக்குறித்துச் சுவாமிகளிடம் புகன்றபோது அவர்,

"மித்ரா! இந்த சாதாரண-தமோகுணமிக்காருடன் தர்க்கித்து ஆத்மவிசாரஞ் செய்வதால் விளையும் பயனென்ன? பல்லாயிர மக்களைக் காக்கின்ற காவலர்களுக்குத் தர்மோபதேசம்செய்து அத்வைத மத ஸ்தாபனஞ்செய்து, அவர்களிடத்தில் தேசபக்தியையும், சமயப் பற்றையும், உண்டுபண்ணினால் மகத்தான நன்மைகள் விளையுமன்றோ? இந்நோக்கத்துடனேயே நான் அரசர்களின் உபசாரங்களை அங்கீகரித்தேன். ஏழையின் கண்ணீரைத்துடைக்க மன்னர்களுடன் நட்புப் பூண்டால்தான் முடியும். ஏழையினும் ஏழையுடன் நண்பனுயின் எவ்வித நன்மை விளையும்? நான் எவரிடத்தும் இதுவரை பொருளேற்கவில்லை. அரசர்களிடம் பொருள் சம்பாதிப்பதென்று தொடங்கினால்

மன்னர்தம் உதவியே வேண்டும்

எனக்கு அது ஒரு பெரிய காரியமாகுமா? கோடிக்கணக்காகச் சேர்த்துவிட என்னுற்கூடும். இதுவரையிலும் சிலர் ரயில் டிக்கட் செலவிற்காவது பொருள்வாங்கிக் கொள்ளும்படி கட்டாயப்படுத்தின தால் மட்டும் அங்கீகரித்தேன். என்னுடைய நோக்கம் வேறு! எனது பரமாசாரியரின் வாக்கை நிறைவேற்றியபின் இவ்வுலகம் எனக் குத் திரணமாம்! அப்பால் இவ்வுயிர் உடலைப் போற்றுவதொழியும். கண்ணன் கீதையிலருளியவாறு "நான் உழைப்பேன்! பயனைக் கரு தேன்! இடையூறுகள் என்னையொன்றுஞ் செய்யமுடியாது. இதுவே சத்யம்" என்று கூறினர். அப்பொழுது சுவாமிகள் தாம் அமரிக்கா நாட்டில் சிகாகோவிற்கூடும் சர்வமத மகாசபைக்குப்போக உத்தேசித் திருப்பதாய் மித்திரரிடம்புகல, அவ்வன்பர் அன்றுமுதல் நன்கொடை வசூலிக்கத்தொடங்கி சேர்த்துத்தருவதாக வாக்களித்தார். சுவாமிகள் அவரைத்தடுத்து 'நான் இராமேஸ்வர யாத்திரையைப் பூர்த்திசெய்து, தீர்த்தாடனத்தை முடித்த பின்னர், ஆண்டவனருள் பாலிப்பின் அப்பொழுது உமது உதவியை ஏற்பேன்' என்று கூறிச் சமாதானப் படுத்தினர். சுவாமிகள் தாம் விரைவில் பிரயாணப்பட உத்தேசித் திருப்பதாகச்சொல்ல, தொண்டியற்றுவதில் தனது கணவரைவிட அந்தரங்க சுத்தையாயிருந்த மித்திருடைய மனைவி அவர் யாத்திரை தொடங்கு முன் அவரிடம் மூலமந்திர உபதேசம்பெற்று, தீக்ஷைகொள்ள வேண்டுமென்று தனது நாயகரிடங்கூற, மித்திரு மிசைந்து சுவாமிகளைப் பணிவுடன் வேண்டினர். சுவாமிகள் 'குரு ஆவது எளிதன்று. குரு தன்னுடைய சிஷ்யனின் பாபமூட்டைகளைச் சுமப்பவன்; சீடருடைய ஒழுக்கங்களுக்கு நற்சாட்சிப் பத்திரமளிப் பவன். நானே ஒரு துறவி! குரு சிஷ்யத்துவம் பந்தத்தை வளர்ப் பதாதலின், பந்தத்தை வேரோடுகளையக் கங்கணம் பூண்டுள்ள எனக்குமதற்கும் வெகுதூரம்' என்று செப்பி மறுத்தும், அன்ப ருடைய உறுதிப்பாட்டைக்கண்டு ஒருவாறு ஒப்பி, அவ்வாண்டு அக் டோபர்மீ 27-ம்உ அத்தம்பதிகளுக்கு மூலமந்திரோபதேசஞ்செய்து தீக்ஷையருளினர். அப்பால், சுவாமிகள் ஊருந்துருள்பொழுதும் தாமதிக்க மனமில்லாராய்ப் பிரயாணசித்தராயினர். மித்திரும் இர யில் சத்தத்தைச்செலுத்தி 'டிக்கட்' ஒன்று வாங்கிக்கொடுத்து, ஒரு பாதரக்ஷையையும் வாங்கித் தந்து, இரயில் வண்டியிலேற்றி யமரச் செய்து கண்ணீருங் கம்பலையுமாக விழுந்து வணங்க, சுவாமிகளின்

மூலமந்திர உபதேசம், தீக்ஷையருளல்

வருகையை யறிவிக்கும் காகளத்தொனிபோலச் சத்தமிட்டு, வண்டியும் பெல்காம் ஸ்டேஷனைவிட்டு அகன்றது.

மோர்முகோ சென்று பின் பெங்களூருக்கு வருதல்.

அதன்பின் அவர் போர்த்துகேசியர் எல்லையில் கடற்கரையிலுள்ள மோர்முகோ (Mormugao) வில் இரண்டொரு நாட்கள் தங்கி, மீண்டும் பெல்காம் வழியாகப் பெங்களூர் வந்து சேர்ந்தார். இரண்டு மூன்று நாட்களுக்குள் சுவாமிகளுடைய புகழ் அந்நகரெங்கும் பரவிற்று. அப்பொழுது மைசூர்சமஸ்தான திவானாகவிருந்த ஸ்ரீமான். சர். கே. சேஷாத்திரி ஐயர் அவர்கள் சுவாமிகளின் பிரியரானார். சுவாமிகளின் கம்பீர பிரம்மதேஜஸ் விளங்கும் வதனமே அவருடைய தூய துறவற நிலையை யுணர்த்திற்று. சகல மதஸ்தர்களும் பரமஹம்ஸரைப் போற்றியது போன்றே இவரையும் துதித்தார்கள். சர்வசமய சமரஸ நோக்கமும், மதக்கிரந்த பாண்டித்யமும், அருடன் ஆங்கிலம் பேசு மருமையும் அவரை பெங்களூரில் பிரபலராக்கிவிட்டன. மைசூர் சட்டசபை அங்கத்தினராயிருந்த அப்துல ரகிமான் சாகிப் அவர்கள் சுவாமிகளைக் கண்டு தமக்கு, குர்ஆனிலிருந்த சிலசங்கைகள் நீங்கப்பெற்று அன்பு பூண்டார். சுவாமிகள் திவானவர்க ளில்லத்திலேயே தங்கி தம்மைக் காணவந்த பலருக்கும் உபதேசம் செய்து வந்தார். அப்பொழுது திவான் சர். கே. சேஷாத்திரி ஐயரவர்கள் 'இந்த வாலிப பரமாசாரியரை' நமது மகாராஜா காணும் பாக்கியம் பெற்றால் எவ்வளவு சமய வளர்ச்சிக்கான நன்மைகள் பெருகக் கூடுமென்று எண்ணியவராய், சுவாமிகளை மைசூருக் கெழுந்தருளும்படி வேண்டினர். சுவாமிகளும் அவர் வேண்டுகோளுக் கிணங்கி யேகி, அரண்மனையை யடைந்து அரசர் பெருமானைக் கண்டார். ராஜ ஸ்ரீ சாம ராஜேந்திர உடையார் அவர்களும் சுவாமிகளின் தெய்வீகத் தன்மையைக் கண்டு, அவரைத் தமதுயிர்போல நேசித்து, அரசகாரியங்களில் அவருடைய உபதேசங்களை யடைந்து அதன்படி நடந்து, சுவாமிகளைத் தமதரண்மனையிலேயே எழுந்தருளி யிருக்கச் செய்தார். அறிவுடையொருவனை அரசனும் விரும்புமன்றோ?

மைசூர் மன்னரின் நண்பராதல்.

நாளடைவில் சுவாமிகளுக்கும் மன்னருக்குமிருந்த தாரதம்மியம் மாயமாய்ப் போயிற்று. தெய்வீக மங்கு தாண்டவமாடிற்று. இருவரும் குரு சிஷ்யராயினர். ஒரு சமயம் சுவாமிகள் வேந்தருடன் கொலு மண்

டபத்தில் வீற்றிருக்கும்பொழுது விநோதமாக மன்னர் "ஐயனே! எனது ராஜசபை பரிவாரங்களைப்பற்றிய தங்களபிப்பிராயமென்ன?" என்று வினவ, சந்நியாசி 'வேந்தர் வேந்தே! தமது தயாள சித்தமுடைய தன்மையை யார்தான் புகழ வல்லார்? தாங்கள் மக்களிடத்துக் கொண்டுள்ள கருணைத்திறத்தை யாரால் புகழ முடியும்? ஆயினும், தங்கள் பரிவாரங்கள் ஏனைய மன்னர்களின் சமஸ்தானத்திலுள்ளவர்களைப் போன்றுதா னிருக்கின்றன. அதுதான் ஒரு தூர்ப்பாக்கியமென எனக்குத் தோன்றுகிறது' என்று புன்னகையுடன் புகன்றார். திவானையும் அவர் சிறப்பித்துக் கூறவில்லை. அவ்வசனங்களைக் கேட்டதும் அங்கிருந்தா ரனைவரும் திகைத்து ஸ்தம்பித்துப் போயினர். சிலர் சுவாமிகளை உருட்டிப் பார்த்தனர். கொற்றவனும் ஆச்சரியப்பட்டு, மெல்ல பேச்சை வேறு விஷயங்களிற் றிருப்பிவிட்டார். அப்பாற் கொஞ்சநேரத்தில் சபைகலைந்தது. புரவலன் சுவாமிகளைத் தனியே கண்டு "சுவாமி! தாங்கள் இப்படிப் பகிரங்கமாக எதையும் பேசலாகாது. அவர்கள் மகா கொடியவர்கள். தங்களை மாய்க்க வழிதேடினுந் தேடுவர். அப்படி எத்தனையோ துறவிகள் என்னைச் சந்தித்தபிறகு விஷம் வைத்துக் கொல்லப்பட்டிருக்கிறார்கள்" என்று சொல்ல, ஐயன் நகைத்து ஸ்ரீ சாம ராஜேந்திர மன்னரைப் பார்த்து "வெற்றித்தார் சூரிசில்! உண்மையான துறவி சத்தியத்தைப் பேசச் சிறிதும் அஞ்சான் அதனால் விளைவது யாதாயினும் ஆகுக. உயிர் அவனுக்கு வெல்லமல்ல! துரும்பு! துரும்பு! உயிருக்கஞ்சி பொய்சொல்லி வயிறுவளர்க்கும் சந்நியாசிக் கூட்டத்தைச் சேர்ந்தவனல்ல நான். நாளை, நீங்கள் தங்களுடைய தந்தையின் சம்பத்துகளைப்பற்றிக் கேட்டால், இல்லாதவற்றையெல்லாம் உரியவையாக்கி நான் பேசுவதா? முகஸ்துதி பேசுவது அரச சிப்பந்திகளுடைய வழக்கம்! அரசரேறே! சத்தியம் பேசுவதே சந்நியாசியின் தர்மமாகும்" என்று சொற்ற சொற்கள் பசுமரத்தாணிபோ லம்மன்னவ ரிதயத்துப் பதிந்தன.

அரசர் சிப்பந்தியைப்பற்றிய அபிப்பிராயம்.

சுவாமிகள் மைசூரில் இப்படித் தங்கியிருக்கும் நாட்களில் ஆஸ்டிரியாதேசச் சங்கீத வித்வான் ஒருவர் அரண்மனையில் சுவாமிகளைக் கண்டார். சுவாமிகளும் ஐரோப்பிய சங்கீத சாஸ்திரத்தைப்பற்றி அவருடன் தர்க்கித்து, இந்திய சங்கீதமே சிறந்ததெனக் கூறினார். ஒருசமயம் அரண்மனையில், அமைச்சரின் அக்கிராசனத்தின்கீழ் பல

பண்டிதர்கள் சம்மேளன மொன்று நடைபெற்றது. அப்பொழுது சுவாமிகளும் அச்சபைக் கெழுந்தருளியிருந்தார். வேதாந்த விஷயங் யங்களைப்பற்றிய விரிவுரைகள் பல மேதாவிகளால் அச்சபையில் நிகழ்த்தப்பெற்றன. அனைவரும் பேசி முடிந்தபின், சுவாமிகள், எழுந்து, பழம் பாடமே யோதுமப்பண்டிதர்களைப் பார்த்து, ஹிந்து அதிவைதீக மதவேதாந்தங்கள் சர்வ சமயங்களுக்கும் தாயகமா யிருப்பதையும், மேல் நாட்டு உள நூலிற் கூறப்பெற்றுள்ள விஷயங் களனைத்தையும் ஹிந்து மதம் தனது மதானுஷ்டான முறைகளாகக் கொண்டு நிற்பதையும் காட்டி, அபூர்வமான ஆங்கில நடையில், தம தினிய குரலில் வேகமாகப் பேசினார். பாரததேசத்தின் எதிர்கால சமயாசார சீர்திருத்தங்களைத் தாம் கருதியவாறு எடுத்துரைத்தார். அவர் கூறியவற்றை அனைவரும் ஏகோபிதமாக ஏற்றனர். அவரை அவதார புருஷரென்று அனைவரும் போற்றினார்கள். இவர் 'மேல்நாட் டில் யாத்திரை செய்வதால் பாரதபூமிக்குப் பல துறைகளிலும் சாலச் சிறந்த நன்மைகள் பல விளையும்' என்று மந்திரி கூறினர். அடுத்த நாள் அவ்வமாத்தியர் தமது பிரதம கணக்காளரை யழைத்துச் சுவாமி களை இராஜவீதிக் கழைத்துச் சென்று 'ஆயிரமல்ல, பதினாயிரமல்ல, எவ்வளவு செலவானாலுஞ்சரி; அவர் விரும்பும் பொருள்களையெல்லாம் வாங்கிக்கொடுத்தழைத்து வாருங்கள்' என்று சொல்லி சுவாமிகளை இரண்டு குதிரைகள் பூட்டியுள்ள இரதத்திலேற்றி யனுப்ப, அவரும் பின் வாங்காமல் மௌனமாய்க் கடைவீதிக்குச் சென்றார். சென்றவர், இராஜவீதியின் அழகையெல்லாம் சுற்றிப் பார்த்துவிட்டு, அப்பால் ஒவ்வொரு கடையாகப் போய்ப் பார்த்து ஒரு கடையி லிருந்த பருத்த தடிகளில் ஒன்றைத் தேர்ந்து எடுத்துக்கொண்டு, அதன் விலையாக எட்டணா கொடுக்கும்படித் தம்மோடு 'செக்' புத் தகத்துடன் வரும் அன்பரிடங் கூறினர். அதுகண்டு உடன் வந்தவர் அப்பிரம்பின் விலையை யளித்துவிட்டு, சுவாமிகளின் விருப்பப்படி அரண்மனைக்குத் திரும்பினர். திரும்பியதும் அமைச்சர் சுவாமிகளைப் பார்த்து 'என்ன வாங்கினீர்கள்' என்று வினவ, சுவாமிகள் 'இந்த ஊன்றுகோலொன்றை வாங்கினேன்' என்று கூறியது கேட்டு, அதி சயித்து விலாப்புடைக்க நகைத்து 'இத்தகையோரே தெய்வீகத்துறவி கள்; இவரே உண்மையில் ஆசைகளைக் கடிந்தவர்' என்று எண்ணி உளமகிழ்ந்தார். இந்நிகழ்ச்சியால் அவருக்குச் சுவாமிகளிடத்தில் அளவிறந்த பக்தி யேற்பட்டது.

அரசர் கூட்டுறவில் நடந்த அரிய நிகழ்ச்சிகள்

இப்படி யிருக்கும் நாட்களில், ஒருசமயம் பூபாலர் சுவாமிகளைத் தமதந்தரங்க அறைக்கழைத்து, மந்திரியையும் அங்குவரயேவி, சுவாமிகளைப் பார்த்து 'எனதாருயிர் மருந்தே! தங்களுக்கு யான் சமர்ப்பிக்கக்கூடிய தென்ன? புகன்றருளவேண்டும்' என்று பக்தியோடு வினவ, ஐயன் தமது குருநாதனைத் தியானித்தவண்ணம் கண்களில் நீர்வார, மயிர்ப் பொடிப்பெய்தி "இறையே! இந்த ஏழை சந்நியாசிக்கு வேண்டுவதென்ன? இக் கமண்டலமும் காவியாடையுமே எனது சொத்துகள். இவற்றையும் உதறித்தள்ளிப் பிரம்ம தரிசனத்தையே இனி நான் அடைய வேண்டியவன். ஆனால் எனக்கு ஒரே விருப்பம் மட்டு முண்டு; அதுதான் எனது பரமாசாரியரின் மனோபீஷ்டத்தை நிறைவேற்றுவது. நிற்க, மேல் நாட்டில் நாகரீகத்தால் மயங்கிப் பழங்காலப் பிரபாவத்தை மறந்து, துக்கிகளாய், பாரத வர்ஷத்தின் ஞானார்த்த வேதவேதாந்தங்களை யிகழ்ந்து பரிதபிக்கும் ஜனங்களை மீட்கவேண்டுமென்னும் அபிலாசை மட்டும் எனக்குண்டு. வேதாந்தப் பிரமாணமான சகல தத்துவங்களையும் நிலை நிறுத்தி, மேல்நாட்டு விஞ்ஞான சித்தாந்தப்படி அவை வேதகாலமுதல் விளங்கி வருவனவென்பதை ஸ்தாபித்து, புத்துயிரளித்து பாழடைந்துள்ள நமது மக்களின் ஹிருதயமாகிய கோயில்களைப் புதுப்பிக்கவேண்டும். இதன்றி, 'கீழ்நாட்டிற்கு நாங்களே சகல நாகரீக ரசாயன, பூத பௌதிக சாஸ்திரங்களையும், சமயப்பற்றையும் முதல் முதலாக உணர்த்தினோம்' என்று பெருமைபேசி, நம்மைக் கேவல பாவத்துடன் நடத்தும் மேல்நாட்டா ருள்ளத்தில், அவர்கள் கூற்று மெய்யல்ல வென்பதை நாட்டி, சரணாகதி யடையும்படி செய்து, பாரதபூமியே சகல சமயங்களுக்கும், நாகரீகங்களுக்கும், பூத பௌதிக ஆராய்ச்சி சம்பந்தமான விஷயங்களுக்கும் ஜன்மபூமி யென்பதை வேத, வேதாந்த உபநிஷத மகாவாக்கியங்களைக் கொண்டு நிரூபித்துக்காட்டி, ஞான சூரியன் கீழ்த்திசையிலேயே—இந்தியாவிலேயே உதயமாகி, உங்களையும் பிரகாசிக்கச்செய்து, ஒளிதந்து விளங்கவைத்து, உங்களை அந்தகாரத்திலழுத்தி, மேற்குக் கடலிலே அஸ்தமிக்கின்றான். அவன் எழுவது எங்கள் பூமியில்! விழுவது உங்கள் அந்தகாரமாகிய கடலில்!' என்பதை உணர்த்தவேண்டு மென்னும் அவா என்னிருதயத்தைப் பிளக்கின்றது. ஆதலின், சமீபத்தில், அமெரிக்காவில் சிகாகோ நகரில் நடைபெறவிருக்கும் 'சர்வ மத மகா சபை'க்கு ஹிந்து மதத்தின்

"எனது மனோபீஷ்டம்"

பிரதிநிதியாக யான் செல்ல உத்தேசித்திருக்கிறேன். அக்கைங்கரியம் நிறைவேறத் தாமேதேனும் உதவிபுரியின் போதும்! அதுதான், எனது பரமாசாரியரின்—ஸ்ரீராம கிருஷ்ண பரமஹம்ஸரின்—மகா சாதுவின் மனோபீஷ்டம்" என்று கூறியருளினார். அவருடைய முகத்தில் காந்தி பிரகாசித்தது. இதுகேட்ட ராஜமார்த்தாண்ட ஸ்ரீ சாமராஜேந்திர உடையா ரவர்களும் பரவசராகித் தாம் பிரயாணச்செலவு முழுவதையும் உதவுவதாக உடனே ஒப்புக்கொண்டார்.

நாளுக்குநாள் அரசருக்குச் சுவாமிகளிடம் அன்பு பெருகி வந்தது. இருவரும் இணைபிரியாதவராயினர். சில நாட்கள் கழியச் சுவாமிகள் தாம் இராமேச்வரத்திற்குச் செல்லவேண்டுமென்றியம்பி, புறப்பட யத்தனித்தார். அமுதத்தை நிகர்த்த அரிய மொழிகள் வெளிவந்த அவர் வாயினின்றும் 'பிரயாணம்' என்ற சொல்லைக் கேட்க அரசர் சம்மதித்திலர். பின்னுங் கொஞ்சநாளாயினும் தங்கிச் செல்லுமாறு மன்னர்வேண்ட, சுவாமிகளு மிசைந்திருந்தார். அப்பொழுது சுவாமிகள் மைசூர் அரண்மனையிற் றங்கியதன் ஞாபகார்த்தமாக 'தோனிப்பிரதி பாதினி' (Phonographic record) வாயிலாகச் சில அரிய உபதேசங்கள் எடுக்கப்பட்டன. செம்மனச் செல்வரான அரசர் அதிலும் திருப்தி யடையாதவராய், சுவாமிகளுக்குப் பாத பூஜை செய்ய முயலுங்கால் அவர் மறுத்துவிட்டார்.

தோனிப் பிரதி பாதினி எடுத்தல்.

இனித் தாம் கணமுந் தாமதிக்க வியலாதென்று சுவாமிகள் கூறிப் புறப்படுந் தருவாயில், அரசர் ஏதேதோ பரிசுகளை யளித்தும், அவர் 'எனக்கெதற்கிவை? இவற்றை வறியோர்க்களித்து அவர்கள் துயரத்தைப் போக்கலாம்' என்றியம்பி ஏற்க மறுத்தும், வேந்தர் சம்மதியாது ஏதாவதொன்றை கிரஹித்தருளும்படி மன்றாடினார். அதனால் சுவாமிகள் 'இரயில் டிக்கட்' ஒன்றைமட்டும் பெற்றுக்கொண்டு, மன்னர் மாநிலந்தோய வீழ்ந்து வணங்க வெளிப்பட்டார்; அரண்மனையில் வதிவாரனைவரும் பிரிவுக்காற்றாது பெருந்துயரிலாழ்ந்தவர்களாய்க் கரங்கூப்பி வணங்கி வழியனுப்பினர். சுவாமிகள் மந்திரி யின்றொடு இரயில்வே ஸ்டேஷனை யடைந்தார். மன்னர் கூறியபடி, திவான் மெல்ல 'கரன்ஸி' நோட்டுகளடங்கிய ஒரு சுருளைச் சுவாமிகளுடைய புத்தகமூட்டையில் தந்திரமாய்ச் சொருக, சுவப்பனத்திலும் ஜாக்கிரதையாகத் தம்மை எவ்வித பந்தமும் அணுகாவாறு தற்காப்புச் செய்துகொள்ளுந் தன்மையினரான சுவாமிகள் அவ்வன்பருடைய

மண்டுகாதலைக் கண்டு வியந்து, அதனை யேற்கா தொழிந்தார்; அப்பால் திவானவர்கள் கொச்சி மன்னரின் அமைச்சருக் கோர் கடிதமளிக்க, அதனைமட்டும் பெற்றுக்கொண்டு, முதல் வகுப்பு வண்டியிலேறி யமர்ந்தார்; தன்னிடத்தில் சுவாமிகள் எழுந்தருளியிருப்பதால் பெருமை பேசுவதுபோல், இரயில் கூவி மைசூர் மாடங்களெல்லாம் பின்னேகப் புறப்பட்டது. இவ்விதம் விவேகானந்த சுவாமிகள் 'வேந்தர் குழாத்தில் விளங்கிய பெருமை' இவ்வத்தியாயத்தில் விஸ்தாரமாய்க் கூறப் பெற்றது.

மைசூரைவிட்டு அகன்றமை.

23-ம் அத்தியாயம்.

தென் நாட்டு விஜயம்

அனந்த புரத்தினழகிய காட்டின் வழியே வண்டி விரைந்தேகிற்று. மலைகளும் வனங்களும் அடர்ந்த திருவனந்தபுரத்தின் திவ்ய காட்சிகளைத் தரிசிக்க வேண்டுமென்று விரும்பி விவேகானந்த சுவாமிகள், திருவனந்தபுரத்திலிறங்கினார்; நகரத்திற் புக்கு நானாவிதக் காட்சிகளையும் பார்த்தவண்ணம் குலசேகரமன்னரது போதகாசிரியரான ஸ்ரீமான் கே. சுந்திரராமய்யர் அவர்களைச் சந்தித்தார். இமைப்பொழுதிலிருவரும் ஸ்நேகிதரானார்கள். சென்னைப் போராசிரியரான ஸ்ரீமான் அரங்காசாரியார் அப்பொழுது திருவனந்தபுரம் மகாராஜா கலாசாலையில் விஞ்ஞான நூற்புலவராயிருந்தார். அவரையும் சுவாமிகள் சந்தித்தார். அந்நகரப்பிரபலர் ஸ்ரீமான் எஸ். நாயரவர்களும் சுவாமிகளைத் தரிசித்து அன்பரானார். அவர் சுவாமிகளைத் தானறிந்தவாறு வரையுங்கால் "வடமொழிப் புலமையில் காளிதாஸனையும், ஆங்கிலத்தில் அதிநிபுணரான சிரேஷ்டர் (Spencer), ஜெகப்பிரியர் (Shakespeare) போன்றும் சுவாமிகள் விளங்கினார். வேத வேதாந்தங்களுக்கு விரிவுரை நிகழ்த்துவதும், சமய சன்மார்க்கப் பிரசங்கங்கள் புரிவதுமாக அவர் எல்லாத்துறைகளிலும் ஏற்றத்தாழ்வின்றி எல்லோரையும் மகிழ்வித்தார்" என்று வரைந்துளார். மேற்கூறிய ஸ்ரீமான் சுந்தரராமய்யரவர்கள் திருக்குமாரரும், வடமொழி நூலுரையாளரும், தற்காலம் நீதிபதியாக விளங்குபவருமான ஸ்ரீமான் கே. எஸ். இராமஸ்வாமி சாஸ்திரிகள் பி. ஏ., பி. எல்., தமது கிருகத்தில் சுவாமிகளைத்

அனந்தபுரத்திற்கு வருகை

தாம் கண்டவண்ணம் வரையுங்கால் 'சுவாமிகள் ஒரு ராஜ கம்பீரராய் எங்கள் வீட்டிற் பிரவேசித்தார். அவர் காவியாடை தரித்திராவிடில் நாங்கள் அவரை அரசகுமாரரென்றே கொண்டிருப்போம். அவருடைய கொள்கைகள் மகத்தான விஷயங்களைப் பொருத்ததாயிருந்தன. இந்தியாவின் எதிர்கால விஷயங்களை அவர் வலிமையோடும், கருணையுடனும் கணித்து வைத்திருந்தார். அவரைத் திருவனந்தபுரத்தில் தரிசித்தவர்களெல்லாம அவதார புருஷரென்று போற்றியே அடிபணிந்தனர்'' என்று எழுதியுள்ளார்.

அப்பால் சுவாமிகள் அங்கிருந்து கிழக்கு நோக்கிப் பிரயாணப்பட்டு, இராமேஸ்வரம் போகும் வழியில் மதுரையிலிறங்கி, அங்கு திருவாலவாயுடையார் தரிசனத்தின் பொருட்டு விஜயம் செய்திருந்த இராமநாதபுரம் மன்னர் ஸ்ரீ பாஸ்கர சேதுபதி யவர்களைத் தாம் கொண்டுவந்த கடிதத்தைக் கொடுத்துப் பார்த்தார். ஸ்ரீ பாஸ்கர சேதுபதி யவர்களைப்பற்றித் தமிழ் நாட்டாருக்கு நாம் அதிகம் வரைய வேண்டுவதில்லை. அவர்கள் சகலகலா பண்டிதராய் சங்கீத விற்பன்னராய், தமிழ் மொழியில் கவிவளம் சிறந்தவராய், வடமொழியின் வகையுணர்ந்த புலவராய்த் தமிழ்த்தொண்டிலே பெரிதும் ஈடுபட்ட பெரியாரென்பதை அறியாதார் யார்? சுவாமிகளைக் கண்டமாத்திரத்தில் சேதுபதியவர்கள் அடிபணிந்தெழுந்து அன்பாரானர். சுவாமிகளின் பெருமையையும் நோக்கங்களையும் எளிதிலுணர்ந்து ''இதுதான் தக்கசமயம். தாங்கள் அவசியமாக சர்வ தர்ம மகாசபைக்கு ஹிந்து மதத்தின் பிரதிநிதியாக எழுந்தருளவேண்டும்'' என்று மொழிந்து, தாம் தக்க பொருளுதவி செய்வதாக வாக்களித்தார். தாம் தீர்த்தாடனத்தை முடித்துக்கொண்டு அப்பால் அறிவிப்பதாகச் சொல்லிவிட்டு சுவாமிகள் விரைந்து இராமேஸ்வரத்தை யடைந்தார்.

ராஜா ஸ்ரீபாஸ்கர சேதுபதியவர்களைக் காணல்

பரிவ்ராஜகர் இராமேஸ்வரத்தை யடைந்ததும் பரந்த கடல்போல அவர் மனம் விளங்கிற்று; ஸ்ரீ தசரதராமன் ஈஸ்வராராதனஞ் செய்த புண்ணிய பூமியை யடைந்ததால் அவருக்கு ஆனந்தம் பொங்கி வழிந்தது. அவருடைய புத்திக்கு ராமேஸ்வரம் தக்ஷிணேஸ்வரமாகப் பொலிந்தது. அறுநூறடி நீளமும் நூற்றைம்பத்தேழடி அகலமும் உள்ளதாய் நூறடி உயரமுள்ள கோபுர வாயிலுடன் விளங்கும் அக்கோயி லுட்புக்கு ஸ்ரீ ராமச்சந்திர மூர்த்தியால் பிரதிட்டைசெய் தருளப்பெற்ற லிங்கத்தின் முன்னிலையில் சுவாமிகள் அடியற்ற மரமென

வீழ்ந்து துதித்தார். அங்கு அவருடைய மனக் கண்களுக்குக் காளியும், சிவனும், இராமனும், கண்ணனும், தச அவதாரங்களும் அந்த லிங்க ரூபத்திற் றோன்ற தரிசித்தார். அவர் இப்பொழுது பௌரநாகூரை விட்டுக் கால் நடையாகப் புறப்பட்ட சந்நியாசியாயில்லை. அவர் சங்கர பகவத் பாதாசாரியா ரென விளங்கினர். இராமாயண காவ்யத்திற் காணப்படும் அவ்விராமேஸ்வா நிகழ்ச்சிகளெல்லாம் அவர் அகக்கண்களுக்குப் பிரத்யட்சமாகத் தோன்றின. சமுத்திர ஸ்நானஞ் செய்துகொண்டு, ஓர் தனிமையான இடத்தில் மனதை நிறுத்தித் தவமியற்றியவாறு சிலநாட்களிருந்து பின்னர் கன்யாகுமரிக்கு யாத்திரை செய்தார்.

இராமேஸ்வர வாஸம்.

குமரியை யடைந்தவுடன் அவரடைந்த மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. 'இமயம் முதற் குமரிவரையில்' யாத்திரைசெய்ய அவர் கொண்ட விரதம் முடிவடைந்தது. அவர் இமயத்தில் பாரததேவியின் திருமுகமண்டலத்தைத் தரிசித்து, அவளுடைய கண்களாகிய ஹரித்துவாரம் ருஷிகேசம் முதலான ஸ்தலங்களை தபஸியாகத் தியானித்து, திருவாயாகிய கங்கையின் உற்பத்தி ஸ்தானத்தில் ஆங்கிருந்து பெருகும் அமுதத்தைப் பருகி, அவள் திருமேனியாகத் திகழும் பரந்த பூமியில் ஆபரணங்களென அறிவு சுடர் வீசும் க்ஷேத்திரங்களைச் சேவித்துக்கொண்டு, அவ்வணிகளில் விளங்கும் அழகிய சிறுகற்களா மாசர்களைச் சந்தித்துக் கொண்டே, அன்னையின் அடியிணைகளாகிய குமரியை யடைந்து, அவள் திருவடிகளை வருடிக்கொண்டும், தம்மை ஈடேற்றும்படி அவள் பாதகமலங்களைத் தமது கண்ணீரால் மஞ்சனமாட்டியும் அங்கு தங்குவாரானர். பத்திரிகாஸ்மத்தி லவருடைய மனேநிலை எவ்வாறிருந்ததோ அவ்விதநிலை கன்னியாகுமரியிலும் அவரை யாட்கொண்டது. இமயப்பனிவரையிலிருந்து, குமரிக் குளிர் முனைவரையிலுள்ள யாவும் அவர் மனக்கண்களுக்குப் புலனயின. அவர் ஜகதீஸ்வரி—காளிதேவியைக் குறித்து தியானஞ் செய்வாரானர். அவருடைய மேனியாகிய மலையின் கண்களாகிய சிகரத்திலிருந்து ஆனந்த மழையாகிய கண்ணீர் பெருகி இந்துமகா சமுத்திரத்திலோர் சிற்றாறெனக் கலந்து தியானமுகத்தில் பாரதவர்ஷத்தின் பழங்காலப் பெருமைகள் யாவும் அவர்முன் றோன்றின; இந்தியாவின் நலத்தைப் பொருத்த எத்தனையோ தோற்றங்க ளவரிதயத்தெழுந்தன. சீர்திருத்தவிஷயங்களும் சமயநெறிகளுமே அவர் முன் திருநடனம்

குமரியாடல்.

புரிந்தன ; பாரத பூமியில் மகான்களைப் படைக்கு மாற்றல், ஒளி வடிவா யவர் உள்ளத்தில், மேரியின் திரு வயிற்றில் தேவ ஆவி புக்கது போல் புகுந்தது. வியாச பகவானும் மனுச்சக்ரவர்த்தியும் அவர் முன் தோன்றினர். சங்கரரும் புத்தரும் அவர் மனக் கண்களின்முன் தோன்றிக் காட்சிதந்தனர். கண்ணனையும் கிருஷ்ண சைதன்யரையும் அவர் கண்டு பொங்கினர் ; அவர் எண்ணங்களெல்லாம் இப்பொழுது வங்காளியைப் போன்றதாயில்லை. 'நான் ஹிந்து' என்ற மன வெழுச்சி நிர்மலமாய் அவர் மனதில் நிலவி யிருந்தது. இந்து தேசச் சரித்திரப் போக்கில் இவரைப்போன்ற துறவியின் வருகை இக்காலத்தில் இல்லை யல்லவா? குமரியில் அவருக்குக் குமாரக்கடவுளை யொத்த ஆற்ற லுண்டாயிற்று. படகென்னும் மயிலேறி சக்தி யென்னும் வேலா யுதந் தரித்து, கடலாகிய அஞ்ஞானத்தைக் கடந்து, தாரகன், சிங்க முகன், சூரபதுமனாதி துராசாரத்தை வென்று, தாய்நாடென்னும் தண்டுறை யெய்தி, அஞ்ஞான வயத்தராய் அல்லவை செய்து வறு மைச் சாபம்பெற்று, வாழும் பராசர புத்திரர்களையொத்த அன்பர் களுக்கு அறிவூட்டி, சாப விமோசனஞ் செய்து, அவர்களைத் சத் சொரூபமான மகரிஷி புத்திரர்களாக்கி, குன்றின் மீதிட்ட விளக் கென விளங்கி, விரைந்து, தேவர்களைச் சிறையினின்றும் காத்தல் பொருட்டு அவர்கள் அளிக்கும் விருந்தை யேற்க வானுலகம் புகுவே னென அவர் தமது சுய சரிதத்தை வகுத்தார்.

இப்படி அவர் இந்தியாவின் வீழ்மை ஸ்திதியைக் குறித்து கண் ணீர் வடிப்பார் ; இந்து சமயத்திற்குக் காமாலையும், சோகையும் பிடித்து, நல்ல இரத்தோட்டமின்றி வெளுத்திருத்தலை யுன்னி விம்மி யழுவார் ; சமயத்தலைமை பூண்டு பலர் குருவென்ற பெயரால் புரியும் அடாத செயல்களையும், ஜாதிபிரஷ்டக் கொடுமைகளையும், பாமரர்கள் நசுக்கப்படும் பரிதாபத்தையுங் கண்டு அவற்றை ஒழிப்பேனென பிர

குமரியில் சமயக் குதூகல எண்ணங்கள்.

ளயகாலக் கடலைப்போன்று பொங்குவார். 'பல கோடி மக்கள் பசியால் வருந்தும்போது சமயப் பற்றெங்கிருந் துண்டாகும் ? துர்பிக்ஷமாகிய பீடை தேசத்தை விட்டு நீங்கிய பின்னர் புரியும் மதசேவையே பயனுடையதாகும். ஆதலின், 'முனிவனும் மன்ன னும் முன்னுவ பொன்னுன் முடியும்' என்னும் தமது குருதேவரின் மகா உபதேசம் அவர் ஞாபகத்திற்கு வரும். 'வறுமையைப் போக்கப் பொருளல்லவோ வேண்டும்? துறவியாகிய நான் பொருளுக் கெங்கு

போவேன். மன்னர்களைக் கண்டு மத சேவையைப் பற்றிப் பேசுங்கால் அவர்கள் கருணை-உள்ளன்பு உதடளவா யிருந்ததே யன்றி, உள்ளிருந்தும் எழுந்ததில்லை! என்ன செய்வேன்....! ஆயினும் அஞ்சேன்! எனது குரு தேவரின் கடாக்ஷத்தால் நான் மேல் நாடுகளுக்குச் சென்று பொருளீட்டிப் பாரதநாடு படுந்துயரைப் போக்குவேன். அத்தொண்டின் எல்லை மரணமா யிருப்பினும் மனமுவந்தேற்பேன்' என்று அவர் நினைப்பாராயினர்; 'எல்லை காண முடியாத ஹிந்து (சமய) மகாசமுத்திரத்தை யான் இப்பொழுது தரிசிக்கும் பாக்கியத்தை யடைந்தேன்; கிருதார்த்த னாயினேன்' என்று கூறி மகிழ்வார்.

கன்னியா குமரியிற்றான் அவருக்குச் சம்பூர்ண ஞானோதய முண்டாயிற் றெனலாம். தேசத்தின் சீர்திருத்தங்களைக் குறித்த விஷயங்களான காடு மேடுகளில் அவர் மனமாகிய நதியோடி, கன்னியா குமரியிற் ஹிந்து மகா சமய சமுத்திரத்திற் கலந்து பரிபூர்ண நிலையை யடைந்தது. ஸ்ரீராம கிருஷ்ணர் அவருக்களித்த வரங்களெல்லாம் அங்கு கைகூடின. சர்வ தர்ம மகா மண்டபத்தில் கம்பீரமாய் வீரமாய் சமரஸ சன்மார்க்கத்தைக் குறித்துப் பேசிய அவ்வாற்றலாகிய குழந்தை கன்னியா குமரியில் ஜனித்தது. நிர்விகற்ப சமாதியிலும் அவர் குமரியிலேயே சித்தாரானர்.

சுவாமி விவேகானந்தரை, அவர் பிறந்ததுமுதல், பரமாசாரியரிடத்தி லுபதேச மடைந்து, அவ்வாசார்யரின் மகா சமாதிக்குப் பின் சிஷ்யகோடிகளை பெரநாகூர் மடத்திலிருத்தி, பரிவ்ராஜகராக எங்குந் தரியாது சஞ்சரிக்கும் துறவியாக வெளிப்பட்டுப் பல நாடுகளையுங் கடந்து. பாதசாரியாக, இமயப்பனிவரையி னெழில் சிறந்த பிரதேசங்களிலெல்லாம் சுற்றித்திரிந்து, காடு மேடு வனாந்தரங்களையெல்லாம் தனிமையாகக் கடந்து, பசி தாகம் நித்திரை யின்மையால் வாதனைப் பட்டு, நாடெங்கும் பல நல்வேந்தர்களையும், கலைகளில் வல்ல பண்டிதர்களையும் சாதுக்களையுஞ் சந்தித்து, தமது வல்லமையைக் குருதேவரருளால் வெளிப்படுத்தி, பிரம்மஞான தரிசனத்திலேயே அவாக் கொண்டு சத்யமும் நித்யமுமான பொருளைக் கண்டுபிடிக்க வேண்டுமென்ற தாபத்தால் வழிநடந்து, இராமேஸ்வரத்தை யடைந்து, ஸ்ரீரகுநாதனது வில்லேந்திய திருக்கரங்களால் பிரதிஷ்டை செய்யப் பெற்று, அருச்சிக்கப்பட்ட ஐயனை அநேக முறை வலம் வந்து வணங்கி குமரியை யடைந்து அன்னையின் பாத கமலங்களை விடாது

தியானித்துக்கொண்டிருக்கும் இந்நிலை வரையில் கொண்டு வந்து விட்டோம்.

ஒரு காததூரத்திலுள்ள ஒரு ஸ்தலத்திற்குப் போய்வந்தால் நாம் நமது பிரயாணத்தைப் பற்றித் திரும்பத் திரும்ப நினைத்து எத்தனை முறையோ கூறுவதியல்பா யிருக்க, சுவாமிகள் 'இமயமுதற் குமரிவரை' யியற்றிய யாத்திரையின் இடைவழியில் நடந்த சில அதிசய சம்பவங்களை யும், அவருடைய அக்கால சித்த விருத்தியையும், அவர் அவதார புருஷரென்பதை நிரூபிக்குஞ் சில நிகழ்ச்சிகளையும் இனிச் சிறிது புகல்வோம்.

அவதார புருடரெனச் சில அரிய சான்றுகள்

ராஜபுதனத்தில் சுவாமிகள் யாத்திரை செய்துகொண்டு வரும் பொழுது ஒரு சம்பவம் நிகழ்ந்தது. அப்பொழுது கோடைகால மான தால் கொடிய பாலைவனங்களைக் கடந்து போவது அவருக்கு மிக்க சிரமமாகவே யிருந்தது. சுவாமிகள் தரிகட்டம் (Tarighat) 'ஜங் ஷனை' நோக்கி இரண்டாம் வகுப்பு வண்டியில் தமதன்பர்களின் விருப் பத்திற் கிசைந்து செல்லும் வழியில், வெயிற் கொடுமையால் தாக சாந்தி செய்துகொள்ளத் தண்ணீர் கிடைக்காமல் தவிப்பாராயினர். இடை வழியிலுள்ள 'ஸ்டேஷன்'களில் குடி தண்ணீர் விற்கப்பட்ட போதிலும், இவரிடங் காவியாடையும், கமண்டலமுந் தண்டமுமே யன்றி வேறு பைசாவு மில்லாததால், பருகும் நீருக்குப் படாதபாடு பட்டார். அவருக்குப் பக்கத்தி லுட்கார்ந்திருந்த அன்பரொருவர், காசுகொடுத்துப் பருகும் நீர்பெற்று அருந்திக்கொண்டே சுவாமிகளைப் பார்த்து, "நீங்கள் ஏன் வேலைசெய்து பணம் சம்பாதிக்கலாகாது? பொருளில்லார்க் கிவ்வுலகமில்லை யன்றோ! இப்பொழுது என்னிடம் பொருளிருந்தமையால் எனக்கு நல்ல பனிக்கட்டி கலந்த (ஐஸ்) தண் ணீர் கிடைத்தது" என்று வழியெல்லாம் கேலியாகப் பேசிக் கொண்டே வந்தார். சுவாமிகள் ஒன்றும் மறுமொழி புகலாது 'மௌனம் சர்வார்த்த சாதக' மென்று தரிகட்டத்தையடைந்து. சிறி தும் இரக்கமின்றி தகிக்கும் வெயிலில் ஒரு சிறு ஓட்டுக் கட்டடத்தின் வாயிலோரத்தில் தமது உத்தரீயத்தை விரித்து, சோர்ந்து உட்கார்ந்து கொண்டிருந்தார். அன்னங் கண்டு இரண்டு நாட்களாயின, பசியோ படுத்தாப்பாடு படுத்துகின்றது. இச்சமயம் அவருடன் யாத்திரை செய்துவந்த அவ்வன்பரும் தின்பண்டங்களை யின்பமாய்ப் புசித்து விட்டு, சுவாமிகளுக் கருகேவந்து, உல்லாசமாகத் தாம்பூலம் போட்

டுக்கொண்டே கேலியாகப் பேசத் தொடங்கினர். அப்பொழுதும் சுவாமிகள் கோபிக்கவில்லை. இங்ஙனமிருக்கையில், முன் பின்னறியா வேதியரொருவர், ஒரு பாத்திரத்தில் கறி, பலகார வகைகள், அன்னம் முதலியவற்றுடன், ஒரு செம்பில் தண்ணீரெடுத்துக்கொண்டு சுவாமிகளைத் தேடி வருபவர்போல வந்து முகமலர்ச்சியுடன் 'சுவாமி! வாருங்கள் சாப்பிட! காயுங் கறியும் கற்கண்டுப் பாயசமும் கொண்டுவந்தேன். ஆயாசம் நீங்க ஐயனே வாருங்கள்' என்றழைக்க, சுவாமிகள் 'இவர் வேறு யாரையோ குறித்துத் தவறாக நம்மை அடையாளந் தெரியாமல் அழைக்கின்றார்போலும்' என்றெண்ணி "என்னையா அழைக்கின்றீர்கள்?" என அவர் "ஆம்! ஆம்! தங்களையே நானழைக்கின்றேன்" என்றார். சுவாமிகள் "என்னை எப்படி நீங்களறிவீர்கள்?" என்று வினவ, அவர் 'நேற்று இரவு கனவில் ஸ்ரீ ராமசந்திரமூர்த்தி என்னிடம் வந்து நீங்க ளமர்ந்திருக்கு மிதே யிடத்தைச் சுட்டிக்காட்டி, இன்று இதே வேளையில் உட்கார்ந்திருக்கும் ஒரு சந்நியாசிக்கு அறுசுவை யுண்டி நீ யளித்தல் வேண்டும்' என்று கட்டளையிட்டு மறைந்தார். தம்மையும் இதே இடத்தில் இப்பொழுது அமர்ந்திருப்பதைப் போலவே காட்டி யருளினார் அதனால் அமுது கொண்டுவந்தேன். அவர் குறித்த துறவி தாமேயன்றி வேறல்ல! வாருங்கள்' என்று கட்டாயப்படுத்தி ஓர் நிழலுக் கழைத்துச்சென்று ஆசனமிட்டு, அருந்த நீர் கொடுத்து அன்ன மளித்தார். சுவாமிகளுடன் கேலியாகப் பேசிக் கொண்டுவந்த அவ்வழிப்போக்கர் 'ஆகா! என்ன பக்த வாத்சல்லியம்' என்று அறிவு வந்தவராய் ஆச்சரியத்துடன் தலை குனிந்து வெட்கியேகினர். சுவாமிகளும் பகவானைத் துதித்துப் பசி தீர உண்டு பரமானந்தபரராயினர். தமிழ்நாட்டில், மிகு சைவத்துறைவிளங்க, பூதபரம்பரை பொலியத் திருவவதரித்தருளிய அப்பர் சுவாமிகளுக்கு அமலன் கட்டமுதளித்த வரலாறு இப்பொழுது நமது ஞாபகத்திற்கு வருகின்றது.

கட்டமுது அருளப்பெற்றமை

பின்னும், இராஜபுதனத்தில் சுவாமிகள் யாத்திரை செய்து கொண்டிருந்த நாட்களில் இரயிலில் இரண்டு ஐரோப்பிய அன்பர்கள், சுவாமிகள் அமர்ந்திருந்த இரண்டாம் வகுப்பு வண்டியில் அவருடன் வந்தனர். அவர்கள் சுவாமிகளை ஒரு கேவல சந்நியாசியென்றெண்ணி, ரொட்டியைத் தின்றுகொண்டே தங்கள் மனம்போன வாறெல்லாம், கேவலமாகவும், பரிகாசமாகவும், விநயமாகவும் 'இவன்

முகத்தைப்பார்! இவன் ஆடையின் நிறத்தைப்பார்! இது ஒரு பைத்தியம்போலும்' என்று பேசிக்கொண்டே வந்தார்கள். சுவாமிகளும் ஆங்கிலமே யறியாதவர்போல நடித்து மௌனமாயிருந்து வந்தார. கொஞ்சதூரம் சென்றபின் ஒரு ஸ்டேஷனில் வண்டி நின்றது. சுவாமிகள் வண்டிக்கருகே வந்த 'ஸ்டேஷன் மாஸ்டரை' யழைத்து ஆங்கிலத்தில் 'பருக நீர்வேண்டு மென்று கேட்டார். இது கேட்ட ஐரோப்பியரிருவரும் திடுக்கிட்டு, தாங்கள் பேசிய அவதூறான வார்த்தைகள் எல்லா மவருக்குத் தெரிந்திருக்குமேயென்று பற்பலவாறெண்ணி, அவரைப் பார்த்து 'நீங்களேன் சிறிதும் ஆங்கிலந் தெரிந்தவராக பாவிக்கவில்லை' என்று கேட்க, சுவாமிகள் 'உங்களைப் போன்ற முட்டாள்களெத்தனையோ பேரை நான் இதற்கு முன் சந்தித்திருக்கிறேன்' என்றார். இதைக் கேட்டதும் அவ் வைரோப்பியர்களுக்குக் கோபம் பொங்கியெழுந்தது; சுவாமிகளை அடித்துவிடவும் அவர்கள் துணிந்தனர். ஆனால், அவர்கள் புத்திசாலிகள். சுவாமிகள் இவர்களைப் போன்ற பலரை ஒரு கைப்பலத்தால் பிண்டமாக்கி விடவல்ல உடல் வலிமை பெற்றிருத்தல் கண்டு சும்மா யிருந்துவிட்டனர். "பொறுமை கடலினும் பெரி" தல்லவா?

பொறுமையின் பெருமை

பின்னொருசமயம் சுவாமிகள் க்ஷேத்ரிமன்னர் சமஸ்தானத்தில் வசித்துவருங்கால் பலர் அவரைச் சுற்றி யமர்ந்து தங்களுக்குண்டான சந்தேகங்களுக்குச் சமாதானங் கேட்டவண்ண மிருந்தனர். அன்பர்கள் வந்துகொண்டும் போய்க்கொண்டு மிருந்தமையால் அன்று காலை முதல் மாலைவரையில் கூட்டம் இரவும் பகலும் கலையவில்லை. சுவாமிகளும் சற்றுஞ்சோராமல் பேசிக்கொண்டே யிருந்தார். அவர் பரிவ்ராஜக ரானதால் உணவு கேட்கவும் மன மிசையவில்லை. அனைவரும் மாலையில் தத்தம் இல்ல மேகிய பிறகு, சுவாமிகளின் உபதேசங்களைக் கேட்டுக் கொண்டிருந்த தாழ்ந்த வகுப்பைச் சார்ந்த ஏழை யொருவன் அவரைப் பார்த்து "ஐயனே! நான் பாமரன்! பதிதன்! தாங்கள் உணவுகொண்டிரண்டு நாட்களா யிருக்குமே! நான் உணவாக்க வேண்டிய பதார்த்தங்களைக் கொண்டுவந்து தருகிறேன். கிருபை செய்து ஏற்கவேண்டும்" என்று வேண்டினன். கடவுளே எதிர்ப்பட்டு வந்து இங்ஙனம் கேட்டதாகக் கருதி, சுவாமிகள் 'அன்ப! உனது கைப்படச்செய்த உணவையே கொண்டுவந்தால் நானருந்து

ஏழைக்குத்தான் இரக்கம் அதிகம்

வேன். துறவியான நான் ஜாதி வேற்றுமையையுந் துறந்தவன்; மேலும் நான் அக்னியைத் தீண்டலாகாது' என்று மொழிய, அவன் ஹீனனாகிய தான் சமைத்த உணவை சுவாமிகள் உண்ண இசைந்ததை நோக்கிக் கூசிப் பின், ஒருவாறு சமாதான மடைந்து அமுதளித்தனன். அங்கு வந்த நவீன நாகரீகிகளி லொருவரேனும் சுவாமிகளை 'உண்டீரோ' வென் றுபசரிக்கவில்லை. படிப்பில்லாதவனும் ஏழையும், தாழ்ந்த வகுப்பைச் சார்ந்தவனுமான அவனிடத்தில் புராதன விருந்தோம்பலான சுபாவம், இப் படித்த பாழும் மனத்தில் வற்றிவிட்டது. அவனளித்த உணவைச் சுவாமிகள் அமுதினுஞ் சிறந்ததாகக் கொண்டு 'ஈனப் பறையர்களேனும் எம்முடன் கூடியிருப்பவரன்றோ? சினத் தாய் விடுவாரோ' என்று கொண்டாடினர். யாவராயினும் அன்பென்பது ஒன்றே யல்லவா?

அவ்வூர் நீங்கி, சுவாமிகள் கொடும்புலி வாழும் கானிடைத் தனித்து நடந்து செல்லும்பொழுது சூரியன் மேற்குக் கடலில் வீழ்ந்தான். கங்குற்பொழுது வந்து கவிழ்ந்துகொண்டது. பாழும் பசியொன்று வருத்தத் தொடங்கிற்று. "என்ன சஞ்சாரம்! இப்படிக் காட்டுவழியில் அலைவதால் தாய் நாட்டிற்கு நாம் ஆற்றக் கூடிய அரும் பணிதா னென்னே?" என்று அவர் பலவாறு எண்ணிக் கொண்டே மனமும் உடலுமயர ஓர் மரத்தினடியி லமர்ந்தார். அமர்ந்தவர் யதேச்சையாகத் திரும்பிப் பார்க்கச் சற்று தூரத்தில் ஒரு புலி தம்மைப் பார்த்தவண்ணம் நிற்பது கண்டார். கண்டதும் அவர் மனதில்

அஞ்சா நெஞ்ச உறுதி

சிறிதும் பயமாவது அச்சமாவது உண்டாக வில்லை. புலியென்ற கிலியே கொன்றுவிடு மென்பது பழமொழி. அதைப் பார்த்துச் சுவாமிகள் 'நீயும் பசியாயிருக்கிறாய்! நானும் பட்டினியா யிருக்கிறேன். எனக் குணவளிப்பார் இக்காட்டில் எவருமில்லை. உனக்குணவாக யானிருக்கிறேன். எவ்விதப் பயனுமற்ற இவ்வுடம்பு உனது பசியைத் தணிக்கப் பயன்படுவதில் எனக்கு சர்வதிருப்தியே!' என்றியம்பியவாறு இறைவனைத் தியானித்துக்கொண் டிருந்தார். இராப்பொழுதும் இரங்கி யகன்றது; பகற்பொழுது பரிவுடன் வந்தது. புலி குணத்தில் எலியாகி புதரிற் மறைந்துவிட்டது. 'மனத்திலோர் உறுதிவேண்டும்' என்ற ஆன்றோர் வாக்கு இப்பெரியார் சரிதையில் நிதரிசனமன்றோ?

இப் பரிவ்ராஜகாசார்ய நிலையின் தமதனுபவங்களைக் குறித்துச்

சுவாமிகள் அமரிக்காவில் கலிபோர்னியா நகரிற் பேசுங்கால் புகன்றதாவது:

"பன் முறை யான் பயங்கரமான நிலையிலிருந்தேன்; மரணமென்ற பள்ளத் தாக்கின் வழியே யாத்திரை செய்தேன்; களைத்துப் பட்டினியாய் வெகு தொலை நடந்ததால் கால்கள் வீங்கவும் நான் கஷ்டப்பட்டேன். சில வேளை என் நாவாளத் தண்ணீர் கிடைக்காமையால் தவிப்பேன்; நாபேச வெழாது; ஒரு மரநிழலடியில் அயர்ந்து களைத்துத் தூங்குவேன். சில சமயம் என் மனம் தளர்வடையும்; அடுத்த கணமே ஆற்றலுடனெழும். மரணத்தை என்னுள்ளம் துச்சமாக எண்ணும். 'நான் பிறந்தது மில்லை; இறப்பதுமில்லை' யென்றியம்பும்; 'எனக்குப் பசிதாகமில்லை' யென்று பாடும்; 'சத்தியமே நான்; நானே சத்தியம்' என்று சாற்றும். இந்த இயற்கை யுலகமென்னை என்ன செய்ய முடியும்? அது எனது அடிமையே யென்று எதிர்க்கும்; என்னுடைய வல்லமையைத் தட்டி யெழுப்பும். உனது இழந்த மனோராஜ்யத்தை மீண்டும் அடையென்றறையும்; 'எழு; நட நில்லாதே' என்று கூறும். நான் எழுவேன். எங்கிருந்தோ எனக்கு அளவிலா ஆற்றல் வந்துவிடும். ஆதலின் எங்கு அஞ்ஞான இருள் வந்து மூடுகிறதோ, அப்பொழுது அதனை உதறி உணர்ச்சியுடனெழுங்கள். அவ்விருளெப்பொழுது சூர்யனைக் கண்ட பனிபோற் போம். யோசித்துப் பார்க்குங்கால் 'கடலென்ற புவிமீதில் அலையென்ற உருக்கொண்ட கனவென்ன வாழ்வேயிது! மலைபோலத் தோன்றும் துன்பங்களெல்லாம் மாயையின் சேட்டைகளே யன்றி வேறல்ல. பயமின்றி யெழுந்தால் அம்மாயை மாயமாய் மறைந்து விடுகிறது. அதை அருளென்ற வேலா லடித்துத் தள்ளி ஆற்றலென்ற காலால் அதன்மீதேறி ஆனந்த நடனம் புரியுங்கள்." (இதுவே சிதம்பர நடன ரகஸ்யம்.)

யாத்திரையின் பயன்

மற்றொரு சமயம் அவர் கடும் வெயிலில் கட்ச் வழியே ஒரு பாலைவனத்தைக் கடந்து செல்லுங்கால், சூர்யவெப்பத்தைத் தாங்கவியலாது, நாவரட்சியடைய, கால்கள் மணற் கொதிப்பால் துவள, சமீபத்தில் ஏதாவது ஒரு சிறு கிராமத்தையடைந்து தாகசாந்தி செய்துகொள்ளலாமென்ற அவாவுடன் மென்மேலும் நடந்தார். அப்பால் ஒரு சிறு கிராமம் அவர்து கண்ணிற்பட்டது. வீடுகளைக் கண்டவுடன் உணவருந்தலாமென்று அவர் மனம் பால் பருக வாரம்பித்

தது. ஆதலால் அவர் விரைந்து நடந்தார். 'வண்ணான் வீடு எங்கே, இன்னும் கொஞ்சதூரம்' என்பதுபோல அவர் நடந்து செல்லச்செல்லக் கிராமமும் எட்டிக்கொண்டே யிருந்தது. மனோவிரக்தியுடன் அவர் அப்பாலையிலே யுட்கார்ந்து 'இதுதான் மாயையின் ஏமாற்றம்; இப்பாலையின் கானலே மாயையின் சேட்டை' என்ற ஞானோதய மடைந்து பின்னும் நடப்பாராயினர். விஸ்வநாத தத்தரின் விவேக சந்திரோதயமெனத் தோன்றிய அண்ணல் நடந்தறியா நரேந்திரர்-எத்துணை தூரந்தான் நடப்பார் பாவம்! அவர் கண்களிருண்டன. வழியிலே அவர் படுத்து அயர்ந்து நித்திரை போனார். சிறிதுநேரங் கழித்து எழுந்தபோது ஒரு பெருமழையால் அவருடைய காஷாய ஆடைகள் முற்றிலும் நனைந்திருந்தன. இதுவே இறைவனின் அருள் மழை. 'இது விண்மாரி' என வியந்து கண்மாரி சொரிந்து, களை நீங்கிப் பின்னுஞ் செல்வாராயினர். என்னே மாயையின் ஏமாற்றம்!

இதுவே மாயை.

அவர் யாத்திரை செய்யுங்கால், கீதை, ஸ்ரீராம கிருஷ்ணப்படம், கமண்டலம், தண்டம் ஆகிய இவற்றைத்தவிர வேறொன்றுமில்லை. அவர் காண்டவத்தில் சஞ்சாரஞ் செய்யுங்கால் ஒருசமயம் மூன்று நாட்களாக ஆகாரமின்றி வருந்தினார். காப்பி காலா காலத்தில் கிடைக்காவிட்டால் நாமென்னபாடு படுகிறோம்? சுவாமிகளுக்கு அவர் சங்கீத நிபுணராதலால், 'காபி' ராகத்தையன்றி காபி யென்பதே தெரியாது. இப்படி வரும் வழியில் ஓர் குடிசை தென்பட்டது. பரிந்து வெப்புழலுவோன் கற்பக மெதிற் கண்டாற்போல அவ்வீட்டை யடைந்தார். அக்குடிசைக்காரனோ பரம ஏழை, ஆனல் மகா சாது; குழந்தைகளிலோ குசேலரை யொத்தவன்; பத்தினியோ பதிப்பணி புரியும் பரமபாக்யவதி. தாழ்த்தப்பட்ட வகுப்பைச்சார்ந்த அவன் சுவாமிகளைக் கண்டவுடன், எட்டிநின்று சாஷ்டாங்க தெண்டனிட்டு உபசரித்து, இனிதுறப்பேசி நின்றான். அவ்வின்ப வசனாம்ருதமே சுவாமிகளின் பசிப்பிணியைத் தணித்துவிட்டது. அவர் அக்குடிசையை அரசன் மாளிகையினும் அதிகமாக மதித்து அன்று முழுவதும் தங்கி அவனிட்ட கூழை 'ஒப்புடன் முகமலர்ந்து உபசரித்து உண்மைபேசி ஒப்பிலாக் கூழிட்டாலும் உண்பது அமுதமாகு' மாதலால் அருந்தி அவனுடைய குடும்ப சுகதுக்கங்களையும், ஏழ்மையையுங் கேட்டு இரங்கி, அவனுக்குச் சர்வ மங்கள மூண்டாகும் வண்ணம் கருணை

யாத்திரையின் கருத்து.

நிதியைப் போற்றி அப்பால் தமது யாத்திரையைத் தொடர்வாராயினர். இப்படி ஏழைகள் முதல் மன்னர்கள் வரை, சுவாமிகள் ஏழையாகவும், தனதிகாரியாகவும் அவர்களுடன் பழகிவந்தமையினாற்றான் அவருக்குத் தமது தேசத்தின் தேவையை அறிந்து அதற்குத் தக்கவகையில் உழைக்கவேண்டுமென்ற உண்மையான தாபமேற்பட்டது. பணக்காரர்களுக்கும் பதவியாளருக்கு மெங்கே தெரிகிறது பாம தரித்திரர்களுடைய கஷ்டங்களெல்லாம்? இதுதான் அவர் புரிந்த யாத்திரையின் பயன்; லோக ஞானமெனப் படுவது மிதுவேயாம். இதனாலே தான் தேசாசார, சீர்திருத்த, சமய தத்துவ விஞ்ஞான சித்தி யேற்படுகிறது; இது கருதியே யாத்திரையை வாழ்வின் முக்கியாம்சமாக வகுத்தனர்போலு மான்றோர். இவ்வனுபவங்களால் அவர் வெளியிட்ட அனுமானப் பிரமாணமான உபதேச மென்னை யெனில் 'மதம் நமது நாட்டை இந்தக் கேட்டில் தள்ளவில்லை. சமயக் கொள்கைகளை உதாசீனஞ் செய்ததுதான் இதற்குக் காரணம். உண்மையான சமயாசாரம் விளங்கும் நாட்டிற்கு எத்துறையில் ஒத்ததும் மிக்கதுமில்லை. சமயத்திற் கில்லாத சக்தியே கிடையாது. பீஷ்வாக்களைப் பின்னமையச் செய்தது சமயப்பற்றில்லாத ஒழுக்கமே! மகமது நபியின் சமயமே இராஜ்யங்களை வென்றது இதற்குப் போதிய சான்றாம். ஆதலின் சமயமே, ராஜீயம், தேசீயங்களின் தாயகமாகும்' என்பதே.

சுவாமிகள் தமது யாத்திரையில் அடிக்கடி துறவிகளையே சந்திப்பது வழக்கம். அவர் ருஷீகேசத்தில் பரிவ்ராஜகராக யாத்திரை புரியுங்கால் ஒரு சந்நியாசி எதிர்ப்பட்டார். இருவரும் வெகு நேரம்வரை வேதாந்த விஷயங்களைப்பற்றி யுரையாடிய பின்னர், அத்துறவி ஒரு கதை கூறுவேனெனத் தொடங்கி, நாம் முன்னர் கூறிய, சுவாமிகளின் இரண்டாவது குருவான பாவ்ஹாரிபாபாவின் சரித்திரத்தைச் சொல்லிக்கொண்டேவந்து, சுவாமிகள் தலையசைக்க, "ஒரு கள்வன் பாவ்ஹாரி பாபாவின் பர்ணசாலையிற் புக்கு, பல பொருள்களையுங் கவர்ந்தோடுகையில், பாபு விரைந்து சென்று அக்கள்வனடி பணிந்து அவன் ஓடும் அவசரத்தில் விட்டுப்போன சில முத்துசாங்களையும் அவனிட மளித்து 'நீ நாராயணன்! உனது பொருள்களிவை!' என்று மொழிந்தார்" என்று கூறினர். சுவாமிகளும் 'ஆம்! இந்நிகழ்ச்சியை யானும் கேட்டிருக்கிறேன்' என்றார். உடனே அத்துறவி 'அந்த திருடன்-பரமசண்டாளன்! நான் தான்! அந்நிகழ்ச்சிக்குப் பிறகு அவ

கள்வன் சாஷாயம் பூண்டமை.

ருடைய ஸ்பரிசத்தால் பரம ஞானோபதேசமடைந்து வெளிப்பட்டேன்' என்று அக்கதையை முடித்தார். சுவாமிகள் ஆச்சரியத்தால் நெஞ்சம் எழ, கண்களினின்றும் நீர்பெருகி, வியந்தலறி, நயந்துருகி அவரை மும்முறை வணங்கினார். திருமங்கை மன்னன் திவ்ய வைபவம் இப்பொழுது நமது ஞாபகத்திற்கு வருகின்றது. பாபிகளே பாக்கியவான்களன்றோ? இங்கு கள்வனும் காஷாண்டியாயினான்!

மேல் வரும்படி

நமது நாட்டில் 'மேல்வரும்படி' யில்லாத பதவியே கிடையாது. 'மேல்வரும்படியின் பொதுப்பொருள் அகிருத்யமான வழியில் பொருளீட்ட லென்பதே. மேல் வரும்படியை விரும்பாதவனுக்கு மேல் வரும்படி (மேன்மையடைதல்) இல்லாமற் போகிறது. சுவாமிகள் தக்ஷிணதேசத்தில் யாத்திரை செய்யுங்கால் ஒரு போலீஸ்-சப் இன்ஸ்பெக்டர் வீட்டில் தங்க நேர்ந்தது. அவ்விதம் அவர் தங்கும் நாட்களில் தமது நிமந்திரகர் (உணவிடுவோர்) சம்பளம் நூற்றிருபத்தைந்து ரூபாயாயிருக்க அவர் அதற்கு இரட்டிப்பு மடங்கு செலவிடுவதைக் கண்டு, அவரைநோக்கி வருமான விபரத்தை விசாரிக்க, அந்நண்பர் புன்னகையுடன் "எல்லாம் மேல் வரும்படிதான். இவ்வூரில் துறவிகள் வந்து சத்திரத்தில் தங்குவார்கள். அவர்களை நான் குறிப்பாகப் பார்த்துச் சோதனையிடுவேன். அவர்களிடம் அவசியம் பொருளிருக்கும். தங்களை விட்டாற் போதுமென்று அவர்கள் தனத்தை என்னிட மளித்து வனத்தை நோக்கிப் போவர். இதுதான் விவரம்" என்றார். சுவாமிகள் விம்மிதமடைந்து நிற்கையில் அவர் 'உங்களை நானொன்றுஞ் செய்யேன்' என்று கூறி நகைக்க, சுவாமிகளும் இடங்கொடாமல் புன்னகை புரிந்து 'என்னை உம்மால் ஒன்றுஞ் செய்ய வியலாது. மடியில் கன மிருந்தாற்றானே வழியில் பயம்' என்றியம்பி அவ்விடம்விட்டகன்றார். இப்படி எங்கும் பெண்ணுக்குக் கணவன் தேடுவார்கூட 'வதூவானுக்குச் சம்பளமென்ன? மேல் வரும்படி எவ்வளவு? என்று தான் வினவுகின்றார்கள். மேல்வரும்படியின் துறைகள் எத்தனையோ கோடி. 'இறந்தாரை யெண்ணிக்கொண்டற்றே' போலும்.

லோக சஞ்சாரியான சந்நியாசிகள் தமது யாத்திரையின் முடிவில் பெரிய சர்வக்ஞராகின்றனர். அத்துறவிகள் பூகோள சாஸ்திரத்தைக் காட்சிப்பிரமாணமாகக் கண்டு தரிசித்தவர்களாகின்றனர்; தேசசரித்திரத்தைத் தெளிவா யறிகின்றனர்; மனிதவாழ்வின் இன்பதுன்பங்களைச் சுவானுபவத்தி லறிகின்றனர். இதனாலவர்கள் சித்தம்

ஓர் சகல கலா நிகண்டாக விளங்குகின்றது. இவ்வுலகமே அவர்களுக்கு இயற்கையி னமைப்பைத் தரிசிக்கும் சர்வ கலாசாலை யாகின்றது. இம்மனோர்க்கே வாழ்வில் சுகதுக்கங்களின் ஏற்றத்தாழ்வு விளங்கும். ஏழைகளின் உண்மையான நிலையையும், துயரங்களையும் பரிவ்ராஜகர்களை விடத் தெளிவாய் எடுத்துக்கூற வேறெவராலு மியலாது. சலியாமல் தீவிர யாத்திரை புரிந்தமையால் சுவாமிகளுக்குத் தமது நாட்டின் பரிதாபநிலை நன்கு விளங்கிற்று. பண்டை மன்னர்களின் பெருமையை வழியிற் காணப்பெற்ற ஸ்தலங்களும் பாழிடங்களும் எடுத்தோதின. இதனாற்றான், பாரதபூமியின் நன்மைகளை உண்மையாகப் பெருக்கும் வழியும், அதனை நிறைவேற்றுவதி லளவிலா தாபமும் சுவாமிகளுக்கு உண்டாயிற்று. அவர் தமது யாத்திரானுபவமாக 'ஏழைகளின் கண்ணீரைத் துடைக்க முன்வாருங்கள்! அவர்களுக்கு அன்புடன் அறிவூட்டி கைகொடுத்து மேன்மையை யடையச் செய்யுங்கள். சண்டாளனையும் உங்கள் அன்பனென்று கொண்டாடுங்கள். வீணே வாய்ச் சொல்லில் வீரராக விளங்கவேண்டாம்' என்றியம்புவார்.

யாத்ரானுபவம்

பொரநாகூரை விட்டகன்று இமயம் முதற் குமரிவரையில் அவர் யாத்திரை செய்தபின், இந்தியாவின் உண்மையான நிலையை ஐயப்பாடுகளற அறிவாரானார். தாம் சந்தித்த ஒவ்வொரு மனிதரிடத்திலும், சமயாசாரம் தலைசிறந்து விளங்குவதையும், பொதுவில் அனைவரும் விருந்தைப்போற்று மியல்பினரா யிருத்தலையும் அவர் நன்கறிந்தார். வித்தையும் அதிவைதீக மதப்பற்றும், கொண்ட நெறியினுறுதியுடைமையும் கூடி விளங்கினமையால் அவர் அணுவிலும் அண்ட கோளகைகளைக் கண்டு களிக்கும் வல்லமைபெற்றிலங்கினார்; ஒவ்வொரு சிறுவிஷயத்தையும் ஊன்றிப்பார்த்து அவற்றின் உயர்ந்த தன்மையைத் தியான சித்தியால் சித்தாந்தப்படுத்தும் வல்லமையும் கைவரப்பெற்றார். அவர் அறிவிற்கு அசாத்தியமான விஷயமே யில்லாது செய்ய அவருடைய சுத்தபிரம்மச்சரியநிலை துணையாய் நின்றது. நிகழ்கால தேசநிலையைப்பற்றிய பல பின்னலான விஷயங்களின் முடிவொன்றும் அவருடைய யாத்திரையின் தொடக்கத்தில் அவருக்கு இல்லை. ஆனால், அவர் பலவிடங்களிற் சஞ்சரித்தும், பல மத ஜாதி பாஷை பேதங்களைக் கொண்டாடும் மக்களைச் சந்தித்தும், கன்னியாகுமரியை யடைந்தவுடன் எங்கும் அன்பாகிய சிவம் அவர்களிடத்தில் ஏகமாக விளங்குவதை சுவானுபவத்தால் கண்டு தெளிந்தமையால் விடு

தலைக்கேற்ற விஷயங்களில் அவருக்குண்டாயிருந்த சங்கைகள் நீங்கின.

இமயம் முதற் குமரிவரையில் எங்குமே ஹிந்துக்களுக்கும் முகம்மதியர்களுக்கும் அபிப்பிராயபேதம் பொதுவாயிருந்து வருவதை அவர் கண்டனராயினும் பாமர முரட்டுபக்தியுள்ள மதானுசாரிகளிடம் மட்டும் அவ்வித குரோதங்க ளேற்பட்டிருந்தன. பொதுவாக முகம்மதியர்களைமட்டும் சீர் தூக்கிப் பார்க்குங்கால் அவர்கள் ஹிந்துக்களைப் போன்று தயாள சித்தத்துடன், பௌர்ஷ முடையவர்களாய் மதப் பற் றுடையவர்களா யிருப்பதை அவர் எங்குங் கண்டார். மகா கல்விமான்களாக விளங்கிய முகம்மதியர்கள் ஹிந்துக்களின் அத்வைத வேதாந்தமும், சமூக சஞ்சார வாழ்வுந் தமது மதக் கொள்கையுடன் ஒன்றுசேர்ந்து நிற்பதைக்கண்டு ஹிந்துக்கள்போல் வாழ்வதை அவர் பார்த்து மகிழ்ந்தார்.

சுவாமிகள் தமது சஞ்சாரத்தைத் தொடங்கினதுமுதல் 'அன்னம், ஆ' போன்ற மாணவராகி, கன்னியா குமரியை யடைந்த பின்னர் அன்னத்தையொத்து சத்தாசத் விஷயங்களைப் பிரித்து 'ஆ' போன்று அவற்றை அசைத்துத் தாமே அறிவுக் களஞ்சியமானார். மேல் நாட்டிற்கு யாத்திரைசெய்து, அவர்களுடைய தேச அமைப்பு, நாகரீகம், பரஸ்பர அன்பு, சமயப்பற்று, பலம், நித்யவாழ்வு முதலானவற்றை ஆராய்ந்து நமதுநாட்டு நன்மைக்கு அவசியமானவற்றை ஏற்றபடி அனுஷ்டித்து இந்தியரின் பெருமையை யோங்கச் செய்ய வேண்டுமென்ற முடிவு அவருக்கு இக்கன்யா குமரியிலேயே பரிபூர்ணமாக ஏற்பட்டது. குமரன்போல அவர் குதித்தெழுந்து நாட்டினை நலிய வருத்தும் மிடிமைபோன்ற சூரபதுமாதியர்களை வெல்ல, திக்கஜங்கள் திரண்டதுபோல், சிம்மம் குகையைவிட்டு கம்பீரமாக வெளிப்படுவது போல் எழுந்தார். அவருடைய வதனம் திவ்ய காந்தியால் பிரகாசித்தது.

இப்படி விவேகானந்த சுவாமிகள் 'தென் நாட்டிற்கு விஜயம்' செய்த விஷயம் இவ்வத்தியாயத்திற் கூறப்பெற்றது.

24-ம் அத்தியாயம்.

சென்னைக்கு வந்து சிவமானமை

ஆனந்தானுபூதியை யடைந்து கன்னியாகுமரியி லிவ்விதம் தியானஞ்செய்துகொண்டிருந்த விவேகானந்த சுவாமிகளை 'எழுமின் ! விழிமின்' என்று ஏதோ ஓர் அசரீரி வாக்கு தட்டியெழுப்பிற்று. அவர் பூண்ட யாத்ராவிரதமும் பூர்த்தியாகிவிட்டது. தாம் இனித் தம் குரு தேவரின் கட்டளையைத் தொடங்கவேண்டிய வேலையில் அவர் முடிவுக்கு வந்துவிட்டமையால், தமது யாத்திரையை ஆரம்பித்து, இராமநாதபுரம் வழியே, அன்னப் பிச்சை யெடுத்துண்டு, கடற்கரையோரமாக வழிகொண்டு புதுச்சேரியை யடைந்தார். நடந்து அலுத்தமையால் அவர் அவ்வூரிற் சிலநாட்கள் தங்கலுற்றார். அப்பொழுது புதுவைவாசிகள் பலர் அவரைக்கண்டு, அவரது மெஞ்ஞான உபதேச மொழிகளிலே ஈடுபட்டுத் தத்தமில்லங்களுக்கு அவரை அழைத்துச்சென்று உணவளித்து உபசரித்தார்கள்.

புதுவையில் சுவாமிகளுக்கும் பழங்காலப் பண்டித ரொருவருக்கும் பலத்த வாக்குவாதங்கள் நிகழ்ந்தன. அவர் சுவாமிகளைப்போல விஷயங்களைச் சுவானுபூதியிற் கண்டவரல்ல; சிறிது படித்தவர். அவர் உரக்கப் பேசித் தமது கொள்கைகளை ஊர்ஜிதஞ் செய்ய முயன்றார்; அவரிடம் வாத ஞானத்தைவிடப் பிடிவாத புத்தியே குடிகொண்டிருந்தது. அவர் ஒருவழிக்கும் கட்டுப்படாமல், சுவாமிகள் மேல் நாடுகளில் தாம் புரியவெண்ணும் மதசேவையின் நோக்கங்களை வெளியிட்டபோது ஒரே முரட்டு வாதமாய் 'கடலைத் தாண்டினவன் பிரஷ்டனவான்' என்று தாம் பிடித்த முயலுக்கு மூன்றே கால்களென முருக்கிப் பேசுவாரானார். இதுகண்ட சுவாமிகள் 'இது நாட்டு வளப்பமில்லாத கிணற்றுத் தவளை' என்றெண்ணிக்கொண்டு, அவரைத் தமதருட் பார்வையா லடக்கி, "படிப்பறிவுள்ள ஒவ்வொருவனும் தன் சுதர்மப்படி கடமையைச் செய்யவேண்டு மென்பதை உணர்கின்றான். இதனாற்றான் நாம் நிகழ்கால நிலையையொட்டி, தேச க்ஷேமத்திற்கான துறைகளில் நமது கடமையைச் செய்ய வேண்டுமென்பது ஊர்ஜிதப்படுகின்றது. நாம் நமது வீட்டைவிட்டகலாது பண்டை நூல்களிற் குறித்தவாறு நடக்கவேண்டுமென்ற

புதுவையில் பலத்தவாதம்

முரட்டு வாதத்தைவிட்டு, முன் வர வேண்டுவதே தற்கால தேச க்ஷேமத்திற்கேற்ற முறையாகும். நம்மை சாஸ்திரவிதிகள் அத்துறைகளிற் றடுப்பதாயிருப்பின், காலதேச வர்த்தமானத்திற் கிணங்க அவற்றைத் தக்கவாறு மாற்றிக்கொண்டு நாட்டின் மத, வேதாந்த பொதுநல வளர்ச்சிகளுக்கு நாம் பாடுபடவேண்டுமென்பதி லென்ன தடை? நமக்கெனச் சட்டமா? சட்டத்திற்காக நாமா? சட்டம் கால பேதப்படி மாற்றத்தக்கவைகளல்லவா? இதற்கென்ன தடை?" என்று பேசினர்.

இங்ஙனமிருக்கையில், சுவாமிகளை ஏற்கனவே திருவனந்தபுரத்திற் கண்டு அவருடைய அத்யந்தப் பிரியரான சென்னை 'டிப்டி அக்கவுண்டெண்ட் ஜெனரல்' ஸ்ரீஜத் மன்மதநாத பட்டாசாரியார் அவர்கள் சுவாமிகளை யதேச்சையாகப் புதுச்சேரியிற்காண, இருவரும் யோகக்ஷேமங்களைப்பற்றி அளவளாவிப் பேசினர். பட்டாசாரியர், சுவாமிகள் சென்னைக் கேக உத்தேசித்திருப்பதாகக் கேட்டு தம்முடன் அழைத்துச் செல்லுவதாகக் கூற, அவரும் மன்மதநாதர் உத்யோக விஷயமாக வந்த வேலை முடிவடையும் வரையி லவருடன் வசித்தார். இதற்குள் பட்டாசாரியர் தாம் முன்பு திருவனந்தபுரத்திற் கண்ட சுவாமிகளைப் புதுவையில் சந்தித்ததாகவும், அவரைத் தம்முடன் அவர் இசைந்தவாறு சென்னைக் கழைத்துச் செல்லப்போவதாகவும், திருவனந்தபுரத்தி லிருந்த அவரது அத்யந்த சிநேகிதரான ஸ்ரீமான் சுந்தரமய்யருக்குக் கடிதம் வரைந்தார். ஐயரவர்க ளிக்கடிதங் கண்டதும் அளவிலா மகிழ்ச்சி யடைந்து சென்னையிலிருந்த தமது நண்பர்கள் பலருக்கும் சுவாமிகளைப்பற்றியும், அவர் சென்னைக்குப் பட்டாசாரியருடன் விஜயம் செய்யப் போவதைக் குறித்தும் நிருபங்கள் வரைந்தனுப்பி விட்டார். இதற்குள் ஒரு வாரகால மாயிற்று. பட்டாசாரியருடைய கிருகத்தில் குறித்தநேரத்தில் சுவாமிகளுடைய வரவை சென்னையிற் பல அன்பர்கள் ஆவலுடன் எதிர்பார்த்தவா றிருந்தனர். சுவாமிகள் சென்னையை யடைந்த அன்றே அவரைப் பல அறிவாளிகள் சூழ்ந்து கொண்டனர். விரைவில் 'ஆங்கிலத்தில் வல்ல துறவி யொருவர் விஜயம் செய்துளா' ரென்ற செய்தி சென்னை முழுதும் பரவலாயிற்று.

சென்னைக்கு வருகை

ஏனைய நகரங்களை விடச் சென்னைமாநகரம் செய்த தவமே சிறந்தது போலும்! சென்னைமா நகரில் வதிந்த சிறந்த அறிவாளிக

ளனைவரும், சுவாமிகளின் மகிமைகளைக் கண்டு கொண்டாடத் தொடங்கினர். சுவாமிகளுடைய தீக்ஷண்யங்களை ஆமோதிக்காத பிரமுகர்கள் அப்பொழுது சென்னையிலில்லை யெனலாம். சுவாமிகளுடைய குருநாதரது கட்டளை சென்னையிலேயே பழுத்துப் பயன் தருவதாயிற்று. சென்னைதான் சிகாகோ சர்வ தர்ம மகாசபைக்குச் சுவாமிகள் எழுந்தருளவேண்டிய சகல சௌகர்யங்களையும் செய்து கொடுத்தது.

சென்னையில் சதாகாலமும் சுவாமிகள் தம்மைச் சந்தித்த மேதாவிகளுக்கு சமயக் கோட்பாடுகளை சாஸ்திரப் பிரமாணமாக விளக்க வாரம்பித்தார். விரிவுரைகள் மதவிஷயத்திற் றொடங்கி தத்துவ விஞ்ஞான சரித்திர சாஸ்திரங்களிலும் ப்ரௌடக்கிரந்தங்களிலும் முடிவதாயின. புதிதாக வந்த ஒவ்வொருவரையும் சுவாமிகள் தமது திருமேனியினழகாலும், வாய் மொழிகளாலும், அருட்பார்வையாலும் வசீகரம் செய்துவிட்டார். ஒரு சமயம் ஹிந்து மதத்தின் பெருமையை எடுத்தோதுங்கால் பட்டாசாரியர் சுவாமிகளைப் பார்த்து "ஐயனே! இத்துணை வேதாந்தக் களஞ்சியமான ஹிந்துக்கள் விக்ரஹ ஆராதனை புரிவானேன்?" என்றார். சுவாமிகள் ஒருமுறை கம்பீரமாகப் பார்த்து 'ஹிமாசலம்' இந்நாட்டிலேயே இருத்தலால்' என்றியம்பி 'இயற்கையாம்சமான கம்பீரத்துடன் இமயம் விளங்க, அதன் இயற்கைப் பிரதேசத்தினிடத்து சரணாகதியடைந்து ஹிந்துக்கள் இறைவனை மனிதனிடத்தில் 'நீ நாராயணன்' என்று வணங்கிப் பரஸ்பர அன்புடையராய்ப் பரிமளிக்கின்றனர். சமயம் மனிதனுடைய ஞான கன்மேந்திரியங்களின் வளர்ச்சியாகி அவனை இயற்கையின் இனிய வடிவங்களை ஈஸ்வராம்சமாக தரிசிக்கச்செய்து சமயத்தை விட்டு இணைபிரியாதிருக்கச் செய்கின்றது. விக்ரகாராதனை மனங்குவிய ஆரம்ப ஆதாரமாயுள்ளது. இதன் வளர்ச்சியால் யதீஸ்வரர்கள் சித்தபுருஷராகின்றனர்' என்று உதாரணபூர்வமாக விளக்கியருளினர். மதப்பற்றில்லாதவர்களுக்கு அவர் மதாபிமானத்தை யுண்டாக்கினார்; தமது பக்த சரித்திர காலக்ஷேபத்தால் இரும்பான மனங்களையும் இளகவைத்தனர்; தெய்வத்தைப்பற்றியும் பிரத்யக்ஷத்திற் கப்பாலுள்ள விஷயங்களைப்பற்றியும் ஒன்றுமறிந்துகொள்ள வியலாதென்ற கட்சியினரையும், நாஸ்திக வாதிகளையும் நடுங்கவைத்தார். சென்னையில்

சென்னையில் சதாகாலமும் சத்விசாரம்

அவர் கலங்கரை விளக்கத்தில் (Light House) ஓர் சூரியனை யமைத்தது போல் ஒளிபரப்பினர். சமயமே விஞ்ஞானம்; சாஸ்திரம்; சுகாதாரம்; தேகாப்பியாசம்; சரித்திரம் சர்வமுமென்று அவர் நிரூபித்தார்; ஒரு சமயம் பதஞ்சலி யோகநூலைப் பாராமற் கூறி விளக்குவார்; அடுத்த நிமிஷமே வான்மீகி, காளிதாஸன், பவபூதி முதலியவர்களின் கவன சக்தியை விரித்து, வைரன் (Byron) ஜெகப்பிரியர் (Shakespeare) குடும்பி (Homer) வீராவேசர் (Virgil) முதலியோரின் சாதுரிய கவன சக்தியைப் புலனாக்கி, வான்மீகி, காளிதாஸன், பவபூதி முதலியோருடைய வர்ணனையுடன் ஒப்பிட்டு மேல்நாட்டுக் கவிகளின் வல்லமையை ஆரியநாட்டுப் புலவர்களுக் கடிமைப்படுத்திக் காட்டுவார். 'கிரோஜனர்' களைப் பாண்டவர்களுக்கும், 'ஹெலனை' திரௌபதிக்கும் இலக்கா யெடுப்பார்; அடுத்த நிமிஷமே கிரேக்க மகோந்நத நாகரீகத்தை ஹிந்துக்களிட்ட பிச்சையென்றோதா நிற்பார். அவரிடம் எப்பொழுதும் விவேகம்! வித்வத்துவம்! விநோதம்! ஆச்சரியம்! ஆனந்தம்! வியாபித்திருந்த பெருமையே பெருமை!

விவேகாநந்தருடைய கம்பீர உடலமைப்பு யாவற்றினும் சிறந்து நின்றது. அவருடைய இனிய குரலும், பண்ணிசைக்கும் பாங்கும், ஆத்ம பலம் திடபுத்தி அஞ்சாது தயங்காது விடையளிக்கும் தன்மை முதலியனவும் சென்னைவாசிக ளனைவரையும் வசீகரப் படுத்திவிட்டது. அவரை ஒரு பண்டிதர் 'சந்தியாவந்தனத்தை விட்டொழிப்பதால் என்ன பாபம் சம்பவிக்கும்!' என்று வினவ அவர் கோபத்துடன் எழுந்து "அக்கால மகரிஷிகள் சந்தியா வந்தனத்தைச் சலியாமற் புரிந்து ஆகாயமார்க்கத்தில் சஞ்சரித்தனர். அவர்களுடைய சந்ததியிற் பிறந்த நீங்கள் எந்த விஷயத்தையும் மன மிசைந்து தனித்து யோசித்துச் செய்யாமல் சோம்பேறிகளாய் சந்தியாவந்தனம் புரிய நேரமில்லையென்று கூறுவது சுத்த அசட்டுத்தனம்" என்று ஆவேசத்துடன் கூறினர். மற்றொரு சமயம் ஒருவர் 'மகரிஷிகளின் அர்த்தமில்லா உபதேசங்கள்' என்று தாழ்த்திப் பேசிய பொழுது சுவாமிகள் இடி முழக்கமென வெழுந்து 'அற்பத்தனம் உமது புத்தியை மழுக்கிவிட்டது. எத்துணை துணிவாக நீங்கள் உங்கள் மகான்களான மூதாதையர்—மகரிஷிகளைக் குறைகூற முன் வந்தீர்? அவர்களுடைய இரத்தம் உமது உடம்பிலோடுவதையும் நீர்

சந்தியாவந்தனம் புரிவானேன்?

மறந்தீர். மகரிஷிகளின் உட்கருத்துக்களை ஆராயவல்ல உமதறிவை ஆங்கில பதார்த்த விஞ்ஞான நூல்களைக் கற்றமையால் மழுக்கிக் கொண்டு, அரிய சாஸ்திரங்களை அவமதிக்கலுற்றீர். வேதங்களைப் படிக்கும் சக்திகூட உமக்கிருப்பதாக நான் நம்பவில்லை. இதோ மகரிஷிகள் உம்மை பகிரங்கமாக எதிர்க்கும் மறுப்பொன்றுளது. அவற்றை நீர் மறுக்கக்கூடுமானால் இதோ முன்வாரும்? அவற்றைப் பரீக்ஷித்துப் பாரும். அவை பரிபூர்ணமாக விளங்குவது உமக்கு நிச்சயமாகப் புலப்படும். தேசத்தை இவ்வித முரட்டு வாதத்தால் பாழாக்குவதிற் பயனென்ன ? முன்னறி தெய்வமாய் விளங்கும் தன்னை ஈன்றுளை இம்சித்து அன்னபோஜன அறச்சாலைகள் கட்டிய அரசன் கதையை அறியீரா'' என்று சாற்ற, அவ்வன்பர் பயந்து புத்திவரப் பெற்றவராய் நடுநடுங்கி அடிபணிந் தேகினர்.

மாலை நேரங்களில் சுவாமிகள் கடற்கரைக்கு உலாவப்போவது வழக்கம். போகும்பொழுதெல்லாம் அங்கு படகில் சென்று மீன்பிடிக்கும் ஏழைப் பாமர மக்களைப் பார்த்து அவர் இயேசுவைப்போல இரங்கி 'தீனபந்து ! ஜெகத்ரக்ஷகா ! இவர்கள் இந்நிலையிலிருக்க ஏன் படைத்தாய் ? எனது கண்கள் இவர்களைக் காணப் புண்களாகின்றனவே' யென்று புலம்புவார் ; கண்ணீர் சொரிவார். இங்ஙனம் ஒழுகிவரும் நாட்களில் சென்னைவாசிகள் சுவாமிகளைக் கௌரவிக்க ஒரு சம்மேளனம் கூட்டினார்கள். அக்கூட்டத்தில் சுவாமிகள் எழுந்து பேசுங்கால் தம்மை அத்வைத சித்தாந்தி யென்று கூற, நண்பரொருவ ரெழுந்து 'தாங்கள் தமது சித்தாந்தப்படிக் கடவுளுடன் அபேதமானவரானால், தங்கள் கடமைகளெல்லாம் அங்கு மறைவனதானே ! நன்னெறியினின்றும் மாறிப் பாபங்களைச் செய்யத் தாம் முற்பட்டால் தங்களை அப்பொழுது தடுப்பதெது ?' என்று கேட்க, சுவாமிகள் சிம்மத்தைப்போலத் திரும்பி ''நானே சைதன்ய சொரூபமென்னுங்காலத்தில் என்முன் மாயை நசித்துப்போகின்றது. மாயையாற்றான் தவறான வழிகளிற் செல்ல நேரும். மாயை நசித்த இடத்தில் தடுத்தாட்கொள்ளவேண்டிய வேலையேயில்லை''. என அனைவரும் கரகோஷம் செய்து போற்றுவாராயினர்.

செம்படவரைக் குறித்து இரங்கல்

பின்னொரு சமயம் விக்கிரஹாராதன நிச்சயத்தைப்பற்றி உபதேசிக்குங்கால் சுவாமிகள் 'அவதாராம்சமாயிலங்கும் சிலாரூபங்களை

நாம் வணங்குவதால் பாபிகளாவோமானால் சிலா ரூபத்தையே தொழும் வழக்கமுடைய கிறிஸ்தவர்களைப்பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? கிறிஸ்துநாதரை அவர்கள் கடவுளின் திருக்குமாரரென வணங்குவதற்கென்ன ஆதாரம்? ஹிந்துக்கள் பஜிக்கின்றன ஸ்ரீகிருஷ்ணன், ஸ்ரீராமன், மகான்கள் முதலியோரின் புண்ய சரித்திரங்களை கட்டுக்கதையென்று கழறுவீர்களானால் அப்பொழுதும் வேதங்கள் மூட நம்பிக்கையும், முரட்டு பத்தியுமற்று விளங்குகின்றனவே. அவையாவும் ஆத்ம விசாரத்தைப் பெருக்கி ஆதாரத்துடன் பாரமார்த்தீக விஷயங்களைக் கற்பிக்கின்றன. இவ் விஷயத்தைச் சலியா முயற்சியால் சுவானுபூதியிற் கண்டுணரலாம், என்று வலியுறுத்தினர்.

விக்ரஹ ஆராதனையைப் பற்றிய விளக்க வுரை

சுவாமிகள் புகழ் பரவவே திருவல்லிக்கேணி, மைலாப்பூர் வாசிகளான ஆங்கிலத்தில் வல்லார் பலர் சுவாமிகளைக்கண்டு பலமாதிரியான சிக்கலுள்ள கேள்விகளெல்லாங் கேட்டு, அவற்றிற்கெல்லாம் திருப்திகரமாகச் சலியாது சுவாமிகள் விடையளித்தமையால், அவருடைய அபார சக்தியையும், புலமையையுங் கண்டு அடியாராயினர். அவர்கள் சீர்திருத்தக் கொள்கையினர்; அதற்காகப் பாடுபடுவோர். ஆனாலவர்கள் தவறான மார்க்கத்தில் உழைத்து வருவதைக்கண்டு சுவாமிகள் தடுத்தார்; "மேல்நாட்டு நாகரீக ஜனசாரக் கொள்கைகளை ஆழ்ந்து பரிசோதித்து அவை சமயப்பற்றற்றவை யென்பதை நீங்களே தெரிந்துகொள்ளவேண்டும். உங்கள் வழி பயனற்றதுமன்றி, தேசத்தை நாசமென்னும் படுகுழிக்கிட்டுச் செல்வதுமாகும். நான் ஜனசாரத்தை எதிர்க்கவில்லை. அது வேரூன்ற வேண்டுமென்பதே எனது கொள்கை. சீர்திருத்தங்கள் வேண்டுவ தவசியம். ஆனாலவை நமது நாட்டுக்கொள்கை, சமயக்கிரந்த ஆதாரங்களுக்கேற்றவாறு ஏற்படவேண்டுமேயல்லாது மேல்நாட்டுக் கருத்துப்படி, அப் படிப்பினுதவியால் பரவலாகாது" என்று அவர்களுக்கு உபதேசித்தார்.

இக்காலத்தில் சென்னைக் கிறிஸ்தவ கலாசாலை விஞ்ஞான நூற்புலவரான ஸ்ரீமான் சிங்காரவேல் செட்டியாரவர்கள் சுவாமிகளைக் கண்டார். திருவாளர் முதலியாரவர்களோ நாஸ்திகவாதி. அவர் மேல்நாட்டு ஆராய்ச்சி முறைப்படி கிறிஸ்தவ சமயக் கொள்கைகளை அளவு கடந்து புகழ்ந்து ஹிந்து சமயத்தை எல்லை யிகந்து இகழ்பவர்.

சுவாமிகள் சில அரிய வசன மழையால் அவரை சமயப்பற்றுடையா ராக்கித் தமது சீடராக ஏற்று 'கிடி' என்று செல்லப் பெயரிட்டு அன்பு பூண்டார். பின் திரு முதலியாரவர்கள் சுவாமிகளிடம் தீக்ஷையேற்று சந்நியாசம் பூண்டார். அவரது விருப்பத்திற் கிணங்க சென்னையில் 'பிரபுத்த பாரதா' எனும் மாதாந்தப் பத்திரிகை பிரசுரிக்கப்பட, அதன் கௌரவ பரிபாலகராக அவர் பலகாலமிருந்து அப்பால் சிவபதமடைந்தார்.

ஸ்ரீமான் சிங்கார வேல் செட்டியார் அவர்கள்.

தற்கால மாணவர்களின் தன்மை கலாசாலைக்குப் போவதும் படிப்பதும், அநாகரீகமாக நடிப்பதும், தாய்மொழியை யிகழ்ந்து அடுப்பங்கரையிலும் ஆங்கிலம் பேசுவதும், உடுப்புகளை அரையுங் காலுமாகக்கொண்டு, அடுப்புக்குடுமி யொன்று வைத்து அதை ஆராதிப்பதுமான யாவும் 'வேடிக்கை' தானே! அதன் வினைதான் தேசத்தைக் கெடுப்பதென்பதை அவர்கள் அறிவதுமில்லை; அறிவிக்கப்படுதலுமில்லை யன்றோ? ஒரு நாள் ஸ்ரீமான் வி. சுப்பிரமணிய அய்யரவர்கள் தம்போன்ற மாணவர்களுடன் 'யாரோ ஒரு துறவி ஆங்கிலத்தில் அளவற்ற பேசுந்தன்மையுடன் வந்திருக்கிறாரென்று கூறுகின்றனரே, அவரை வேடிக்கையாகப் போய்ப்பார்த்து வரலா' மென்று பட்டாசாரியர் மனைக்கு வந்து சேர்ந்தார். அவ்வமயம் சுவாமிகள் சாய்ந்துகொண்டு எதைக்குறித்தோ ஆலோசித்தவாறிருந்தார். மெதுவாக சுவாமிகளுள்ள அறையை அவர்கள் எட்டிப் பார்த்துவிட்டு, அவருடைய திருமேனியைக் கண்டு அச்சமுற்று 'நீ போ! நீ முன்னால் போ' என்று ஒருவரை யொருவர் தள்ளி, எவரும் முதலில் அவர்முன் போக பயந்து கசகச வெனப் பேசிக்கொண்டிருந்தனர். பின்னர், ஸ்ரீமான் ஐயர் முதலில் உள்ளே நுழைந்து தூரத்தில் நின்று சுவாமிகளுக்குத் தண்டனிட்டு, அறிமுகவார்த்தைகளேதும் சொல்லாமல் எடுத்ததும் "சுவாமி! தெய்வமென்பதென்ன?" என்று கேட்டார். சுவாமிகள் பொட்டெனத் திரும்பி முன் நிற்பாரை யுற்றுப் பார்த்துவிட்டு 'சக்தியென்பது என்ன? சடுதியில் கூறு?' என்றார். அவருடைய தொனியைக் கேட்டதும் அவர்கள் பயந்துபோய், ஒருவர் முகத்தை யொருவர் பார்த்தவாறு விழித்தனர். அப்பால் அவர் "அடுத்தவர்!—நீர்!" என்றனைவரையுங் கேட்டுவிட்டு, யாவருந் தயங்குவது கண்டு "சக்தியைப்பற்றி எவ்வளவோ படித்

துள்ள நீங்கள் சில வாக்கியங்கள்கூடக் கூற சக்தியில்லாதவர்களாய்ப் போனதென்ன! என்னை நீங்கள் எவ்விதம் தெய்வத்தைப் பற்றிக் கேட்டீர்கள்? அதைக்குறித்து யான் கூறின் அதைக் கிரகிக்கும் சக்தி உங்களுக்கு வேண்டாமா?" என்று கூறி நகைத்தார். பிறகு அவர்களை அன்புடனழைத்து வரிசையாக அமரச்செய்து, அவர்கள் எதிர் பார்த்ததற்கு மேலும் பன்மடங்கு விஷயங்களை மனதிற் பதியுமாறு தெளிவாக விஞ்ஞான நூலாதாரப்படி 'தெய்வ நிச்சய' மென்பது பொருளாக ஒரு சிறு உபந்நியாசம் செய்தார். அன்றுமுதல் ஸ்ரீமான் சுப்பிரமண்ய ஐயர் சுவாமிகளின் பிரிய சிஷ்யரானார்.

தெய்வ நிச்சய உபதேசம்

அதன்பின் ஒருநாள் ஸ்ரீமான் சுப்ரமண்ய ஐயரும் சுவாமிகளும் சில வித்யார்த்திகளுடன் கடற்கரைக் கேகியபொழுது சுவாமிகள் தம்முடன்வந்த மாணவர்களைப் பார்த்து "நீங்கள் கலாசாலையில் தேகாப்பியாசம் செய்யும் வழக்கமுண்டோ?" என்று வினவினர். அன்பர்கள் 'ஆம்' என்றனர். 'ஆனால் என்னுடன் சற்று 'குஸ்தி' போட வாருங்கள்' என்று அவர் அழைக்க அவர்களில் ஒருவராவது முன்வரவில்லை. அன்று 'உடல் வலிமையின் அவசியம்' என்னும் விஷயமாய் அவர்களுக்கு சுவாமிகள் உபதேசித்தருளினர். அந்நாள் முதல் பக்தவாத்ஸல்யத்தின் பெருமிதத்தால் அம்மாணவர்கள் அவரை '**பைல்வான் ஸ்வாமி**' என்றழைப்பாராயினர்.

சுவாமிகள் பக்தி ஞானம் யோகம் கர்மம் முதலானவற்றை சுருதி, ஸ்மிருதி, வேதம் வேதாந்தம் உபநிஷதங்கள் முதலான ஆதாரங்களுடன் விளக்குவதையும், பகவத்கீதையை சர்வசமய தாத்பர்ய பாஷ்யங்களுடன் சங்கையற ஆராய்ந்து கூறுவதையும் பதஞ்சலி வியாக்ரபாதர் அருளிய இலக்கண நூல்களில் நிபுணராய் வடசொற் கடற்கெல்லை தேர்ந்திருத்தலையும், ரசாயனம், பூதபௌதிக சாஸ்திரங்கள், பூகோளப் பிரகிருதி சாஸ்திரங்கள் முதலியவற்றைத் தத்துவ சாஸ்திரங்களுடன் பொருத்திக் காட்டுவதையும் கேட்டு வெளி நகரங்களிலிருந்தும் பலர் சுவாமிகளைத் தரிசிக்க வந்தார்கள். இப்படி பக்தர்கள் அல்லும் பகலும் நிறையப்பெற்று பட்டாசாரியாருடைய கிருகம் ஓர் சத்காலக்ஷேப சபாமண்டபமாக விளங்கிற்று. பத்திரிகைகள் பண்பாடி அவரைச் சிறப்பித்தன. சுவாமிகள் மகா வியாபகரானார். அவரது மெய்யடியார்களி லொருவரான ஸ்ரீமான்

பக்தி, ஞானம், யோகம்-உபதேசங்கள்

கே. வியாசராவ் அவர்கள் பி.ஏ., சுவாமிகளைச் சென்னையில் தாம் கண்டவிதம் வரைந்த கடிதத்தில் "அவரை அவதார புருஷரென்று சென்னைபுரிவாசிக ளனைவரும் எளிதிலுணர்ந்து போற்றினர்; அவர் சித்த புருஷராக விளங்கினார். அவருடைய விஜயத்தால் பலர் சமயப் பற்றுடையவராயினர்" என்று வரைந்துளார். ஸ்ரீமத் விவேகானந்த சுவாமிகள் பெருமையே தமிழ் நாடெங்கும் பொங்கி நின்றது.

இவ்வாறாக, அமரிக்கா நாட்டில் 'சிகாகோ' நகரில் சர்வமத மகா மண்டலி நடைபெறுங்காலம் நெருங்கிற்று. சுவாமிகள் அம்மகா சபைக்குத் தாம் ஹிந்துமதத்தின் பிரதிநிதியாக எழுந்தருள உத்தேசித்திருப்பதாகப் பன்முறை சென்னை அன்பர்களிடங் கூறியிருந்தார். அதற்கு உரிய காலமும் நெருங்கி வந்தது அதனை உன்னி சுவாமிகள்

"நமது தர்மத்தை அகிலத்தார்க் கெடுத்தோதும் அரியசமயம் வந்துவிட்டது. மகரிஷிகளின் மகத்தான சக்தியை நமது நாட்டின் தற்காப்பை யுத்தேசித்து மேல் நாடுகளில் வெளியிடும் பரிபக்குவ காலமிதுதான். இப்பொழுது நாம் நமது கைங்கர்யத்தைத் தொடங்கி நம்மைத் தற்காப்பு செய்துகொள்வதன்றி, பிற நாடுகளுக்கும் நமது மகோன்னத மதத்தின் பெருமைகளை எடுத்தியம்புவதா? அல்லது அடங்கி அழுந்திக் கிடப்பதா? நாம் மந்தபுத்தி யுடையாராகவே இன்னுமிருப்பதா? அல்லது பழங்கால மகான்களைப்போல தர்மத்தின் வெற்றியை விஸ்தரித்து ஆக்ரமிப்பதா? குருட்டு நம்பிக்கையுடன் கிணற்றுத் தவளைபோல் நமது தேசத்திலேயே யடங்கிக் கிடப்பதா? அன்றி பாரதநாட்டின் நன்மையைக்கோரி அதன் பரிசுத்த மதப்பிரசாரத்தை மேல்நாடுகளில் பரப்புவதா? இந்தியா மேன்மையுறவேண்டுமானால் நாம் பலத்துடன் ஒன்றுகூடி ஜெயபேரி முழக்கவேண்டும். இதுதான் அடியேன் சந்நியாசம் பூண்டதன் நோக்கம்" என்று பிரசாரஞ் செய்யத் தொடங்கினர்.

நமது வேலை

இவ்வமயம் அமரிக்காவில் சிகாகோ நகரத்தில் 'மகா கோலம்பியன் பிரதர்சனி' (The Great Columbian Exposition) என்ற அகிலச் சந்தையை நடத்துவதென்றும், அதில் பூமி முழுவதுமுள்ள மக்கள் அதுவரை பல துறைகளினு மிறங்கிச் செய்துள்ள சிற்பம், சித்திரம் முதலியவற்றிலும், பின்னும் பல்வகைக் கைத்தொழில்களிலும் ஆச்சரியகரமான வேலைத்திறனுடைய பொருள்களைக் காட்டும்பொருட்டு

அவ்வப் பிரதேசங்களிலிருந்து பொருள்களை வரவழைத்து வைக்க வேண்டுமென்றும், மேலும் அதன் பிரிவாக 'சர்வ தர்ம மகாசபை' யொன்று கூட்டி அதன் ஆதரவில் உலகிலுள்ள எல்லா சமயங்களின் உண்மையான தத்துவங்களையும் ஆராயவேண்டு மென்றும் தீர்மானிக்கப்பெற்றிருந்தது அதனுல் உலகத்திலுள்ள சகல மதஸ்தரும் தத்தம் சமயப் பிரதிநிதிகளை யனுப்பிவைக்குமாறு கோரி அழைப்புப் பத்திரங்களும் அனுப்பப்பெற்றன. அதற்கிணங்க பௌத்தர்களும் முகம்மதியர் களும் தங்களுள் சிறந்த மதானுசாரிகளைத் தேர்ந்தனுப்பியிருந்தனர். ஆனுல் இந்தியாவிலே இதனைப்பற்றிய முயற்சிகளேது மதுவரை நடைபெறவில்லை. ஹிந்துமதக் கிரந்தங்களில் கரைகடந்த தேர்ச்சி யும், அவற்றை மேல் நாட்டாருக்கு இனிய ஆங்கில நடையில் எடுத் தோதும் வன்மையு முடையா ரெவருமிலாததால், சர்வ தர்ம மகா சபைக்கு யாரைத் தேர்ந்தனுப்புவதென்று சென்னை வாசிகள் தயங் கிக்கொண்டிருந்தனர். வடமொழியில் சிறந்த பாண்டித்ய முடைய வர்களுக்கோ ஆங்கிலத்தில் தேர்ச்சியில்லை. ஆங்கிலத்திலும் வட மொழியிலும் சமத்வமான வித்வான்கள் சிலரிருந்தபோதிலும் அவர் களுக்குச் சாதுரியமாகப் பேசும் சக்தி குறைவாயிருந்தது. மேலும் தற்கால விஞ்ஞான நூல்களைக் கற்றவர்களைக் காண்பது அரிதா யிருந்தது. இங்ஙனம் ஒன்றுக்கொன்று பொருந்தாமல் சென்னை வாசிகள் குழம்பிக்கொண்டிருந்தனர். அப்படி யாவும் பொருந்திய ஒருவர் காணப்படினும் அவர்கள் 'கப்பலேறியவன் ஜாதிப்பிரஷ்ட னுவான்' என்ற மதக்கொடுமைக்குப் பயந்து சிகாகோ செல்ல முன் வரவில்லை. இவ்விதக் காரணங்களை முன்னிட்டு சென்னைவாசிகள் தங்கள் யத்தனத்தை அநேகமாய் கைவிட்டுவிட்டனர். பக்தர்கள் தங்கள் முயற்சியைக் கைவிட்டனரேயன்றி சர்வேஸ்வரன் கைவிட வில்லை. அவர் எப்பொழுதும் நிராசையாக அபிமானத்தைவிட்டு 'ஹா கிருஷ்ணு' என்றழைக்குந் தருணத்தில் வந்தாடை யுதவுந் தன்மையரன்றோ? ஆதலின் இச்சமயத்தில் சென்னைவாசிகள் குதூ கலிக்குமாறு அவர்கள் முன்னே, குமரியில் தவஞ்செய்துகொண் டிருந்த விவேகானந்த ஸ்வாமிகளைத் தட்டி யெழுப்பி, கொண்டுவந்து விட்டார்.

"மகா கொலம்பி யன் பிரதர்சனி"

அப்பொழுது சென்னையிலிருந்த மேதாவிகளெல்லாம் ஒன்று கூடிச் சுவாமிகளை சர்வமத மகாசபைக்கு ஹிந்துமதத்தின் பிரதி

நிதியாகச் செல்லத் தகுதியும் தன்மையும் வாய்ந்தவரென்றும், அவரால் மேல்நாட்டிலும் பாரத பூமியிலும் ஓர் புதிய சகாப்தம் ஏற்படுமென்றும் ஆலோசித்துத் தக்க முடிவுக்கு வந்தனர். சென்னை மாணவர்கள் ஒன்றுகூடி உற்சாகத்துடன் சுவாமிகளின் வழிச் செலவிற்கெனப் பொருள் சேர்க்கத் தொடங்கி, ஐந்நூறு ரூபாய் வரையில் சேர்த்து அவரிடம் கொண்டுவர, அவர் பொருளைப் பார்த்தவுடன் பயந்து, தமது குருநாதரின் "காமினி.காஞ்சன" உபதேசத்தை நினைத்து 'என் ஐயனே! இதற்காகவா நான் காடு மேடுகளையுங் கடந்து, கொடிய வனவழி நடந்து, மலைகளேறி வந்தேன்? அன்னையே! இது உனது கட்டளையானால் ஏற்பேன்" என்று கண்ணீர் வாரப் புலம்பிப் பின், அப்பொருளைத் தொடப்பயந்து அன்பர்களை நோக்கி "நான் மேல் நாடுகளுக்குப் பிரயாணமாக வேண்டுவது இறைவனது விருப்பமேயாயின் எப்பொழுதும் பொருள் கிடைக்கும். ஆதலின், இப்பொருளை அன்று நான் கடற்கரையில் தங்களுடன் கண்டிரங்கிய பாம ஏழைகளுக்கு அன்னமிடுவதில் தயங்காமற் செலவிடுங்கள்" என்றியம்பினர். அவர்களும் அவ்விதமே செய்தனர்.

சுவாமிகளைச் சென்னைவாசிகள் சர்வமதசபைக்கு இந்து சமயத்தின் சார்பாக அனுப்ப உத்தேசித்தல்

பின், சுவாமிகள் சிலநாட்கள் உபந்நியாசங்களை யிடைவிடாது நடத்திக்கொண்டு வந்தார். இங்ஙன மிருக்கும் நாளில் சுவாமிகளைப் பற்றி நேரிற் கண்டவர் வாயிலாகவும் பத்திரிகைகள் மூலமாகவும் அறிந்த ஐதராபாகத்து வாசிகள், அவரைத் தமது நகருக்கு எழுந்தருளுமாறு கடிதவாயிலாக உள்ளன்புடன் அழைத்தார்கள். அவர் 'இதுவும் அன்னையின் கட்டளை! அங்கு ஏதோ ஒரு புது உண்மையை நாம் கண்டறியக்கூடும்' என்றெண்ணி ஏக இசைந்தார். பட்டாசாரியர் '10-2-1893-ல் சுவாமிகள் ஐதராபாகத்திற்கு விஜயம் செய்வார்' என்று தமது நண்பரும், நிஜாம் மாகாண சூப்பரிண்டெண்டிங் எஞ்சினீயருமான பாபு மதுசூதன சட்டர்ஜிக்கு ஒரு தந்தியனுப்ப, சுவாமிகள் பிரயாணமாகி, ஹைதராபாத் ரயில்வே ஸ்டேஷனை யடைந்ததும், சகண்டிராபாகம் ஹைதராபாக அன்பர்களாகச் சுமார் ஆயிரம் பேர்களுக்குமேல் அவரை எதிர்கொண்டு சிறப்பாக வரவேற்றார்கள். பண்டிதர்களும், தனாதிகாரிகளும், பிரபல வர்த்தகர்களும், நியாயவாதிகளும், உத்தியோகஸ்தர்களுமாகப் பலர்

ஹைதராபாகத்திற்குப் பிரயாணம்

சுவாமிகளைக் கண்டதும் அடைந்த மகிழ்ச்சிக் களவின்று. ராஜா ஸ்ரீநிவாச ராவ்பகதூர், மகாராஜா ராம்பா ராவ் பகதூர், பண்டித ரத்னலால், காப்டன் ரகுநாதர், ஷம்ஸ்-உல்-உலிமா, ஸையத் அலி பில்கிரமி, நவாப் இமாத்ஜங் பகதூர், நவாப் துலகான் பகதூர், நவாப் இமாப் நவாஜ்ஜங் பகதூர், நவாப் சிகுந்தர் நவாஜ் ஜங் பகதூர், ஸ்ரீமான்கள் ஹெச். துரட்ஜி, எப். எஸ். முண்டன், சாய் ஹீசம் சந்தர் M. A., L. L. D., செட்ஸ் சதுர்புஜர், மோதிலால் பாங்கர் அழைத்தவரான பாபு மதுசூதன சட்டர்ஜியின் குமாரர் பாபு கலி சரணர் முதலிய பிரமுகர்கள் வரவேற்புக் கழகத்திற் காணப்பட்டனர். பாபு மதுசூதன சட்டர்ஜி அன்பர்களனைவரையும் சுவாமிகளுக் கறிமுகஞ் செய்துவைத்தார். மாலைகளும் மலர்களும் குவிந்து சுவாமிகளை மூடின. விமரிசையான இவ்வரவேற்பைக் கண்கூடாகக் கண்ட அன்பர் ஒருவர் வரைந்த கடிதத்தில் 'இத்தகைய வரவேற்பு ஐதராபாக அரசருக்கும் நடந்ததில்லை' என்று புகழ்ந்துளார்.

குதூகலமான வரவேற்பு

மறுநாட்காலையில் (11-2-1893)-பழம் பால் முதலியவற்றுடன், பூர்ண கும்பங்கொண்டு சுவாமிகளைப் பலர்வந்து வணங்கி, சகண்டிராபாகம் 'மகபூப கலாசாலை' யில் ஓர் உபந்நியாசம் செய்தருளும்படி வேண்டிக்கொண்டார்கள். அவரும் 13-12-1893-ல் நிகழ்த்த ஒப்பினார். அதன்பின் சுவாமிகள் கலிசரணருடன் கோல்கோண்டாவிற்குச் சென்றார். வைத்திற்கும் க்ஷேத்திரத்திற்கும் பேர்போன அந்த க்ஷேத்திரத்தைத் தரிசிக்க வெகுகாலமாக அவருக்கிருந்த அவா இப்பொழுதுதான் பூர்த்தியாயிற்று. பத்ராசலத்தைக்கண்டு அவர் பரவசமடைந்தார்; "பரம தாரக மந்திர ராம! பரந்தாமா! * "நன்னு தய சூடக ராதா பத்ராசல ராமா" என்று போற்றித் துதித்தார். சீதா லக்ஷ்மண, பரத சத்ருக்ன அனுமத் சமேதராய் ஸ்ரீராமச்சந்திரப்பிரபு அவர் அகக் கண்களுக்குக் காட்சி யளித்தார். அப்பால், அங்கிருந்தும் சகண்டிராபாத்தை யடைந்தவுடன், ஐதராபாத் செங்கோல் மன்னரின் மைத்துனரான நவாப் பகதூர் சர் குர்ஷித்ஜா அமீரிய்-ய்-கபீர் கே. ஸி. எஸ். ஐ. அவர்கள் சுவாமிகளை அரண்மனைக்கு வரவேற்கத் தமது அந்தரங்கக் காரியதரிசியை அனுப்ப, சுவாமிகள் உடனே கலிசரணருடன் அரண்மனையை யடைந்து சர் குர்ஷித்ஜாவால் உபசரிக்கப்பெற்று

பத்ராசல தரிசனம்

* ஸ்ரீ தியாகராஜஸ்வாமிகள் கீர்த்தனாரம்பத்தி லருளியது.

அமர்ந்து, உபசார வசனம் முடிந்தபின்னர் இருவரும் மத விஷயமாகப் பேசத் தொடங்கினார்கள். சர், குர்ஷித்ஜா அவர்கள் ஹிந்து க்ஷேத்திரங்களில் ஒன்றையும் விடாமல் இமயம் முதல் குமரிவரையில் யாத்திரை செய்த முதல் முகம்மதியராவார்; ஹிந்துமதக் கொள்கைகளிற் பற்றுள்ளவர். அதனால் சுவாமிகளிடம் அவருக்கு உள்ளன்பு பொங்கிற்று. இருவரும் மத விஷயமாக இரண்டுமணிநேரம் அளவளாவிப் பேசினர்.

ஹிந்து கிறிஸ்தவம் முகம்மதியமான மூன்று மதங்களும் ஒன்று கூடு மெல்லையாகிய பாப்பிரம்ம விவேகத்தைச் சுவாமிகள் அவருக் கெடுத்தோதினார்; ஒரே கடவுள் வெவ்வேறு நாம ரூபங்களுடன் மூர்த்தீகரித்திருப்பதை உபாசனா மூர்த்திகளாக அவருக்கு எடுத்துக் காட்டினார்; ஹிந்து மதத்தைத் தவிர ஏனைய சமயங்களை முதல் முதலாக ஓதியவர்கள் மகான்களென்பதையும் அவ்வன்பருக்குத் தெளிவாக உரைத்தார் சத்யமும் நித்யமுமான பொருளின் பிரதி பிம்பமாகவும், இயற்கையின் சொரூபமாகவும் உலகிற்றோன்றி சமயங்கள் திகழ்கின்றனவென்பதை அவ்வன்பர் ஒப்பக்கூறினார். மனிதனிடத்தில் தெய்வீகத்தன்மை இயற்கையா யுள்ளதென்றும், தர்மங்கள் அவற்றை உணர்த்தி அவனைத் தட்டியெழுப்பிப் பிறவியின் பயனைத் தேடத் தூண்டுகின்றனவென்றும் சுவாமிகள் விளக்கக் கேட்ட அவ்வன்பரின் பக்தி அளவு கடந்ததாயிற்று. அவ்வமயம் சுவாமிகளுடைய கண்கள் சொலித்தன; ஆனந்த பாஷ்பஞ் சொரிந்தன; உடல் பிரகாசித்தது. அவர் சகல தத்துவாராய்ச்சிக் கடலில் நீந்துவார் போல் காணப்பட்டார். அப்பொழுது அவர் மெய் மறந்து தாம் அமரிக்காவில் நடைபெற விருக்கும் சர்வமத மகா சபைக்குச் செல்ல உத்தேசித்திருப்பதாயும், அதன் நோக்கங்களையும், அந்நோக்கங்களால் விளையும் பயனையும் பற்றிப் பேசிவிட்டார். அவர் அதைக்கூறி முடிக்குமுன்னர் நவாப் தாம் அவ்விஷயத்தில் ஆயிரம் ரூபாய் அப்பொழுதே அளிப்பதாக வாக்களித்தும், அவர் ஏற்காமல், 'அதற்குரிய காலத்தை எம்பெருமான் உணர்த்தும் போது நான் தங்களை ஞாபக மூட்டுகிறேன்' என் றியம்பிப் பின் விடைகொண்டு அந்நகரிலுள்ள மெக்கா மஸ்ஜித், பாலக் நாமா (Falak nama) நைசாம் அரண்மனை பஷீர்பாகம் முதலிய அபூர்வ சிற்ப விசேடமுள்ள இடங்களைப் பார்த்துவிட்டுத் தமது விடுதிக்

நவாபின் மைத்துனருக்கு உபதேசம்

கேகினார். மறுநாள் அவர் ஐதராபாகம் பிரதம மந்திரியான சர் அஷ்மன்ஜா. கெ. ஸி. ஐ. இ., மகாராஜா நரேந்திர கிருஷ்ண பகதூர் அரண்மனை பேஷ்கார், மகாராஜா ஷியூராஜா பகதூர் முதலிய பிரபுக்களைச் சந்தித்தார். அவர்களும் மகிழ்ச்சியோடு சுவாமிகள் சர்வ மத சபைக்கேக உதவிபுரிவதாக வாக்களித்தனர். அன்று மாலை முன் குறித்தபடி மகபூப கலாசாலை மண்டபத்தில் 'நான் மேல்நாட்டிற்குச் செல்லுவதன் நோக்கம்' என்பது பொருளாக பண்டித ரத்னலால் அவர்கள் அவைத் தலைமையின்கீழ் சுவாமிகள் ஓர் சொற்பொழிவு நிகழ்த்தினார்.

அப்பொழுது ஹிந்து சமயத்தின் பெருமையையும், அதன் மதக் கிரந்தங்களான மகரிஷிகளா லருளப்பட்ட வேதவேதாந்த உபநிஷதங்களின் உயர்வையும், சாஸ்திரங்களான சட்டங்களை வகுத்தவர்களும், சமயக் கோட்பாடுகளைத் தொகுத்தவர்களுமான மகான்களின் மகிமைகளையும், சுவாமிகள் விஸ்தரித்து, அவற்றை பாரத தேசத்தின் எதிர்கால நன்மையை உத்தேசித்துத் தாம் மேல்நாட்டில் பாவ இறைவன் திருவருளை முன்னிட்டு ஆவல்கொண்டிருப்பதாகச் சருக்கரைப் பந்தலில் தேன்மாரி பெய்ததென்ப பிரசங்கித்தார். அங்கு கூடியிருந்தவர்களுக்கு சுவாமிகளுடைய சொல் வன்மையும், துரிதமாக இனிய கம்பீரமான ஆங்கில நடையிற் பேசுந்திறனும், ஆதாரங்களி னமைப்பும், அளவிலா மகிழ்ச்சியை யளித்தன. மறுநாட் காலையில் அந் நகர தனுதிகாரிகள் செத் மோதிலாலுடன் சுவாமிகளைக் கண்டு தாம் ஏற்ற உதவி புரியச் சித்தமாயிருப்பதாக வணக்கத்துடன் விண்ணப்பித்துக் கொண்டார்கள். அன்று 'தியாசபிகல் சங்க' அங்கத்தினர் சிலரும், அந்நகர 'சம்ஸ்கிருத தர்ம மண்டல சபை' அங்கத்தினர் சிலரும் சுவாமிகளைக் கண்டு சம்பாஷித்தார்கள். அம்மாதம் பதினைந்தாம் தேதி புனுவிலிருந்து ஹிந்து மகாசபை நிர்வாகிகள் சுவாமிகளை அகத்தியம் உடனே தரிசிக்க விரும்புவதாகவும், புனுவுக்கு அடுத்த வண்டியிற் பிரயாணமாகி வரவேண்டுமென்றும் தந்தி கொடுத்தார்கள். சுவாமிகள் பல அசௌகரியங்களை முன்னிட்டுத் தாம் வரவியலாதென்று அவர்களுக் கறிவித்துவிட்டு அந்நகருக் கருகாமையிலுள்ள ஹிந்து ஆலயங்கள், பாபா-சாரப்-உ-டின் தூபி, சர் சாலர் ஜங் அரண்மனை முதலியவற்றைச் சுற்றிப்பார்த்தார். ஐதராபாத்திலிருந்த ஓர் சித்த புருஷரையுங் கண்டு வணங்கி, அப்பால் அம்மாதம் பதினேழாம்

மேல்நாட்டுப் பிரயாணத்தின் நோக்கம்

தேதி சென்னைக்குப் பிரயாணமானார். பலர் ஆடம்பரத்துடன் சுவாமிகளை வழியனுப்பி வைத்தார்கள்.

இவ்விதம் சுவாமிகள் 'சென்னைக்கு வந்து சிவமானமை' என்ற தலைப்பில் அவர் சீமைக்குச் செல்ல உறுதி பூண்டமை விவரிக்கப்பட்டது.

25-ம் அத்தியாயம்

அமரிக்கா யாத்திரை

இதன்பின் சுவாமிகள், ஹைதராபாத்திலிருந்து சென்னைக்கு வந்து சேர்ந்தார். முன்னிலும் பன்மடங்கு உற்சாகத்துடன் அன்பர்கள் அவரை வரவேற்றார்கள். தினந்தோறும் அவருடைய விடுதிக்கு வருமடியார்களின் தொகை யதிகரித்துக்கொண்டே வந்தது. அவரும் தளராமல் அவர்களுக்கு உபதேசித்துக்கொண்டிருந்தார். இக்காலத்தில் நடந்த ஓர் முக்கிய சம்பவம் குறிப்பிடத் தக்கது. அஃதாவது சில தற்கொலை புரிந்துகொண்டவர்களுடைய ஆவேசம் (பிசாசங்கள்) சுவாமிகளைப் பிடித்துக்கொண்டு சித்தப் பிரமையுண்டாகுமாறு செய்துவிட்டன. இதனால் அவர் முதலில் சற்று மன அலைப்பால் வருந்தி, பிறகு அவற்றைத் தம்முன்னழைத்து "உங்களுக்குத் தர்மா தர்மமில்லையா? துறவியான என்னைத் துன்புறுத்துவது முறையா? என்று வினவ, அவை 'அதர்மமே எங்களுக்கு தர்ம' மென்று சாற்றின. அப்பால், சுவாமிகள் தாம் முன்னொரு சமயம் ஏதோ ஒரு நூலின்வாயிலாக அறிந்த முறைப்படி, அவற்றிற்குச் சமுத்திரக் கரையில் ஈரமணலை உருண்டையாக உருட்டிப் பிண்டதானம் கொடுத்து அவற்றைக் கடிதில் விரட்டித் திரும்பினார். அவருக் கேற்பட்டிருந்த திகைப்பும் நீங்கிற்று.

ஆவேசம் ஆட்டி வைத்தமை

நாளுக்கு நாள் அமரிக்கா நாட்டிற்குச் செல்லவேண்டுமென்ற அவா அவர் மனதை ஆக்ரமித்தது. அவருக்குத் தமது யாத்திரையைக் குறித்த பலவித ஆக்ஷேப சமாதானங்கள் எழுந்தன. அன்றே அவருடைய மனம் அமரிக்காவை மானசீகமாகக் கண்டு ஆனந்தப்படும். இப்படியிருக்க அவ்வாண்டு 'மார்ச்சு ஏப்ரல்' மாதங்களில் சுவாமிகளின்

பிரயாணச் செலவிற்கு வேண்டிய நன்கொடைப் பொருளை அவருடைய அன்பர்கள் வசூலிக்கத் தொடங்கினர். சிலர் மைசூர், இராமநாதபுரம், ஹைதராபாகம் முதலிய விடங்களுக்குப் பொருள்வசூலிக்கச் சென்றனர். ஸ்ரீமான் அழகசிங்கபெருமாள் எனும் அன்பர் இக் கைங்கரியத்தில் அதிக முயற்சி யெடுத்துக் கொண்டார். "அன்னையி னருளால் நான் அமரிக்கா நாட்டிற் கேகுவதாயின், சாதாரண மக்கள் எனக் குதவி புரியட்டும். நான் ஏழைகளின் பொருட்டே மேல்நாட்டிற்குப் போகின்றேன். ஆதலின் ஏழைகளின் கைங்கரியமே சிறந்ததாகும்" என்று சுவாமிகள் புகன்றதால் அன்பர்கள் வீடு வீடாய் யாசிக்கத் தொடங்கிப் பொருள் சேர்த்தார்கள்.

அன்பர்கள் நன்கொடை வசூலித்தல்

இக்காலத்தில் சுவாமிகள் 'தாயே! உனது கட்டளை இன்னும் பிறக்கவில்லை. அடியேனை வாழ்த்தி நீ யனுப்பினன்றோ அடியேனுடைய நோக்கங்கள்—குருதேவருடைய மகா வாக்கியங்கள் நிறைவேறும்' என்று துதித்துப் பின்னர், தமது குருதேவரின் தர்ம பத்னியான சாரதாமணிதேவிக்கு, தமக்கு விடையளிக்குமாறு வேண்டி விண்ணப்பமொன்று வரைய எண்ணினார். இப்படி யிருக்கும்போது ஒருநாள் அவர் கனவில் ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸர் தோன்றி, அவரை ஆசீர்வதித்து வழி யனுப்பியதுபோல சுவப்பனமாயிற்று. அதையே நன்னிமித்தமாகக்கொண்டு, தமது நிலையையும் உத்தேசத்தையும், குருநாதர் கனவிற்றோன்றி கொடுத்த உத்தரவையும் குறிப்பிட்டுக் கடிதம் வரைந்து, ஸ்ரீசாரதாமணி தேவியின் ஆக்ஞையை எதிர்பார்த்திருந்தார். அன்பெனுங்கூட்டிலுள்ள அருள் மையில் ஆர்வமென்ற எழுதுகோலைத் தோய்த்து, ஆண்டவனையும் குருதேவரையும் தியானித்துப் பின் கடிதமெழுதத் தொடங்கி எழுதி முடித்து அதைக் கீதையின் மீதுவைத்து ஒருமுறை வணங்கித் தபாற்பெட்டியிற் சேர்த்தார். இவ்வாறாக, 'நமது பர்த்தாவின் பிரதம சிஷ்யனான நரேந்திரன் எங்குற்றனனோ—என்ன செய்கின்றானோ; என்ன செய்வேன்' என்றேங்கிக் கொண்டிருந்த ஸ்ரீ சாரதாமணிதேவி, கடிதங் கண்ட அளவில் உள்ளம் பூரித்து உவகை பொங்க, தனது அன்பிற்குரிய துரையைத் தான் நேரிற்கண்டதுபோலவே அக் கடிதத்தைப் பாவித்து அவரே முன்னின்று பேசுவதுபோல அந்நிருபத்திற் கண்டவாக்கியங்களைப் படித்து பூங்கதிர்

அன்னையிடம் விண்ணப்பித்தல்

ஸ்ரீசாரதாமணி தேவியின் அனுமதி

வாவு பார்க்கும் பொற்ற புண்டரீக மன முடையாளாய், கண்ணி னுள் மணிபோன்ற மைந்தன் கண்காணுத் தொலையிலுள்ள தேசத்திற் குக் கப்பலேறிச் செல்வதில் மனமில்லாளாய், தத்தளிக்குந் தருவாயில் அங்கும் கனவில் பரமஹம்ஸர் ஆணை பிறக்கக் கண்டு அப்பால் அன்பா லெழுந்த ஆசிமொழிகள் நிறைந்த கடிதமொன்று எழுதினள். "கண் காணு தேசத்திற்கு நீ செல்வேன் என்கின்றாய்; செய்; பகவான் உனக்குத் துணை புரிவார்" என்னும் அன்னையின் அரியகுணங்களை யுணர்த்துஞ் சில சொற்களும் அக் கடிதத்திற் காணப்பட்டன.

'இனி, மேல் நாட்டு விஷயமே என் மனதில் நிறைந்திருக்கிறது. அன்னையும் அருள் பாலித்து விட்டாள். நானினிப் புறப்படவேண் டியதே' என்று சுவாமிகள் தமது அன்பர்களிடம் கூற, அவர்கள் தாம் திரட்டிய பொருளையெல்லாம் சேர்த்துத் தயாராக வைத்திருந்தனர். இவ்வமயம் ஒருநாள் சுவாமிகள் கடற்கரைக்குச் சென்றிருந்தார். அப் பொழுது பட்டாசாரியார் வீட்டிற்கு ஜெகமோகனலால் அவர்கள் வந்து 'சுவாமிகள் எங்கே' அவர் கப்பலேறி விட்டனரா?' என்று திரும்பத் திரும்பப் பரபரப்புடன் அங்கிருந்தவர்களைக் கேட்டவண் ணம் சுவாமிகளைக் காணவேண்டுமென்ற அவாவினல் துள்ளிக்கொண் டிருந்தார். அங்கிருந்தவர்கள் சுவாமிகள் கடற்கரைக்குச் சென்றுளா ரென்றும் விரைவில் வருவாரென்றும் கூறினர். அவ்வமயம் சுவாமி களும் கடற்கரையிலிருந்து திரும்பினர். அவரைக் கண்டவுடன் ஜெகன் மோகனர் சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து தமது மன்னருக்கு (கேஷத்ரி) சுவாமிகள் கடா க்ஷித்தவாறு புத்ரசந்தான முண்டாயிருப்பதாகவும் சுவாமிகள் உடனே கேஷத்ரிக்கு எழுந்தருளா விடில் மன்னரே புறப்பட்டு வந்து விடுவாரென்றும் கூறிச் சுவாமிகளை அடுத்த இரயிலுக்கே பிரயாணப்படும்படி வற்புறுத்தினர். சுவாமிகள் தாம் அமரிக்காவிற்குப் பிரயாணப்பட்டு விட்டதாயும், கேஷத்ரிக்கு வர அவகாசமில்லையென்றும் கூற, ஜெகன்மோகனர் ஒப்பாது சுவாமி களின் திருவடிகளைப்பற்றிக்கொண்டு பிடிவாதமாக மன்றாடினர்; கேஷத்ரி அரசரோடு ஒரு நாளாகிலும் தங்கியே செல்லவேண்டு மென்று வேண்டினர் சுவாமிகளும் இனி மறுப்பதழகாகா தென்று கருதி, பம்பாயிலிருந்து கப்பலேறிப் பிரயாணப்படுவதாகத் தீர்மா னித்து கேஷத்ரிக்கு ஜெகன்மோகனருடன் புறப்படுவாராயினர். சத் குண சம்பன்னரான சுவாமிகளைவிட்டுப் பிரிய யாருக்குத்தான் மனம்

ஜெகன்மோகன லாலரின் வேண்டுகோள்

வரும்? சிலர் பிரிவுக்காற்ருது குழந்தைகள்போ லழவாரம்பித்தனர்; சிலர் ஏதோ ஒரு துக்கம் தங்களை வந்தழுத்த வருந்தினர். சென்னையி லப்போதிருந்த சுவாமிகளுடைய சிஷ்யர்கள் பலரும் அவரை நிலந் தோய நமஸ்கரித்து ஆசீர்வாதம் பெற்றுக்கொண்டார்கள். அப்பால், அவரை வழியனுப்ப ரயில்வே ஸ்டேஷனுக்கு அனைவரும் வந்தார்கள். சுவாமிகள் வண்டியிலேறிக் கதவின் பக்கலில் நின்று, அனைவரையும் கையமர்த்தி ஆசீர்வதிக்க, 'ஜயவிஜயீபவா' என்ற கோஷம் வானத்தை யளாவியெழ, சிலர் பிரிவுக்காற்ருது ஆனந்தக்கண்ணீ ருகுக்க இரயில் வண்டி 'இதோ மேல்நாட்டில் பாரத தர்மத்தைப் பரவச்செய்கின் றேன்' என்றியம்புவதுபோல் கூவிப் புறப்பட்டது. மறுநாள் மாலையில் சுவாமிகள், கேஷத்ரி மன்னரின் அந்தரங்கக் காரியதரிசியான ஜெகன் மோகனரோடு கேஷத்ரி அரண்மனையை யடைந்தார். அப்பொழுது மாலை வேளை. நான்கு நாட்களாக ஊரெங்கும் புரவலருக்குப் புத்திரசந்தான முண்டானதைக் குறித்து மகோத்ஸவமாக மகர தோரணங்களா லும், வாழை கமுகுகளாலும் அலங்கரிக்கப் பெற் றிருந்தது. அரண்மனையில் நாட்டியம், சங்கீதக் கச்சேரிகள், அன்ன போஜனம் முதலியவை இடைவிடாது நடந்துகொண்டிருந்தன. ராஜக் கிருகத்தின் நான்கு வாயில்களிலும் வாத்யகோஷம் முழங்கிக்கொண் டிருந்தது.

சென்னையி விருந்து கேஷத்ரிக் கேகல்

சுவாமிகள் அரசக்கிரஹ வாயிலிற்போயிறங்கி நேராக உள்ளே சென்ருர். அவ்வமயம் கேஷத்ரி மகாராஜா, சர்வாலங்கிருத பூஷித ராய் சிம்மாசனத்தில், உற்ருர் உறவினரான ராஜபுத்ர சிற்றரசர்க ளுடன் வீற்றிருந்தார்; சங்கீதக் கச்சேரி நடந்துக்கொண்டிருந்தது. சுவாமிகள் ராஜ சபையைக் கிட்டியவுடன், தாயது வருகை கண்ட தனியிளங் குழவிபோல மன்னர் விரைந்தெழுந்து வந்து நிலந்தோயப் பணிந்தெழுந்தார். சுவாமிக ளும் அவரைக் கைகொடுத்து எழச்செய்து மங் களாசாஸனம் செய்தார். ஏனைய சிற்றரசர்களும் சுவாமிகளைப் பணிந்தெழுந்தனர். இசையாளர் வா வேற்புத்துதி பாடினர். அப்பால், அரசர் சுவாமிகளை பக்கத்திலிருந்த அழகான ஆசனமொன்றில் வீற்றிருக்கச் செய்து, வாயாரப் புகழ்ந்து 'இம்மகானுடைய அனுக்கிரகத்தாற்ருன் எனக்குப் புத்திரோற்பத்தி பிராப்தியாயிற்று' என்று தமது சுற்றத்தாரிடம் பேசி மகிழ்ந்தார்.

கேஷத்ரி மன்னரின் புத்திரசந்தான மகிழ்ச்சி விழா

அரசருடைய ஆக்ஞையால் ஐந்து நிமிடங்களுக்குள் குழந்தை சுவாமிகள் திருமுன் கொண்டுவரப்பெற்றது. சுவாமிகளும் உவந்து குழந்தையைத் தமது திருக்கரத்தால் ஸ்பரிசித்து ஆசீர்வசித்தார். சுவாமிகள் சனாதன தர்ம ஸ்தாபனார்த்தமாக அக்கரையுடன், அக்கரைக்குச் செல்வதை அரசர் வாயிலாக அறிந்து அங்கு வந்திருந்த இராஜபுதன சிற்றரசர் பலரும் மனமகிழ்ந்தார்கள்.

இவ்விதம் பெரிதும் உபசரிக்கப்பெற்று அவர் சில நாட்கள் கேஷத்ரியிற்றங்கிப் பின் தாம் பம்பாய்க்குப் பிரயாணமாக வேண்டியதை யறிவிக்க, அரசரும் பிரிய மனமின்றித் தயங்கி, ஈஸ்வர ஆக்ஞையினிடையே தாம் ஒன்றும் செய்ய வியலாமல், சுவாமிகளுடன் ஜெயபூர் வரையில் வந்து வழியனுப்பி, தமது அந்தரங்கக் காரியதரிசியிடம் வழிச் செலவிற்கு வேண்டிய பொருளையளித்து, பம்பாய்வரை சென்று, கப்பல் சீட்டு, உடைகள் முதலியவற்றை வாங்கிக்கொடுத்துக் கப்பலேறி அவர் புறப்படும் வரையிலிருந்து மீளும்படி யனுப்பினார்.

கேஷத்ரி மன்னர் வழியனுப்புதல்

சுவாமிகள் அபூரோட் என்ற 'ஸ்டேஷ'னில் தங்கிப் பின் பிரயாணத்தைத் தொடங்குகையில் ஒரு ஐரோப்பிய 'டிக்கட் கலெக்டர்' சுவாமிகளுடன் பேசிக்கொண்டு வரும் மற்றொரு நண்பரைப் பார்த்து நீ இந்த வண்டியிலுட்காரலாகாது. இரண்டாம் வகுப்புக்கு உடனே போ" என்று அதட்டி மிரட்டி உருட்டிப் பேசினான். அவ்வன்பர் சாத்வீகமாகப் பேசப் பேச அந்த டிக்கட் கலெக்டர் வெகுண்டு ஆடி 'என்ன நீ அதிகமாகப் பேசுகிறாய்? வெளியே போகின்றனையா? இல்லையா?" என்று பின்னும் வெருட்டிச் சீறினார் உடனே சுவாமிகள் குறுக்கிட்டு 'என்ன ஐயா! டிக்கட் கலக்டரே! உமக்கு மரியாதையாகப் பேசத் தெரியாதா? முதல் வண்டியிற் பிரயாணம் செய்கின்றவர்களிடம் நீரென்ன ஏகவசனமாக, 'வா, போ' என்று பேசுகிறீர்! உமது பெயரென்ன? நான் உம்மேல் நடவடிக்கை யெடுத்துக்கொள்ளப்போகிறேன்' என்று அதட்ட, அவர் பயந்து கெஞ்சி அவ்விடத்தைவிட் டகன்றார்.

ஓர் டிக்கட் கலெக்டரின் நடத்தை

அதன்பின் சுவாமிகள் ஜெகன்மோகன லாலுடன் பம்பாயை யடைந்தார். சென்னையிலிருந்து ஸ்ரீமான் அழகசிங்கப் பெருமாள் அவர்கள் சுவாமிகளை வழியனுப்ப அங்கு வந்து காத்துக்கொண்டிருந்தார். கேஷத்ரி மகாராஜா சொல்லியிருந்தபடி ஜெகன்மோகனர் சுவா

மிகளுக்கு உபந்நியாசம் செய்கின்ற காலங்களில் உடுக்க உயர்ந்த பட்டாடைகளையும், குளிர்தேசத்திலுடுக்கவும், கப்பல் யாத்திரையில் தரிக்கவும் உயர்ந்த கம்பளி அங்கிகளையும் வாங்கிக் கொடுத்து சகல செலவையும் கவரப் போதிய ஒரு பண முடிப்பையும் அளித்தார் பெனின்சுலர் ஓரியண்டல் கம்பெனிக்குச் சொந்தமான 'பெனின்சுலர்' என்ற கப்பலிற் பிரயாணமாக ஒரு முதல் வகுப்பு 'டிக்கட்டும்' வாங்கப்பெற்றது. இங்ஙனம் அவர் பிரயாணத்திற் கொத்த சகல சௌகரியங்களும் செய்யப் பெற்றன.

பிரயாணத்திற் கேற்ற வசதிகள்

பம்பாயில் சுவாமிகள் தம்மைக் காண வந்தவர்களிடமெல்லாம் தர்மோபதேசம் செய்துவந்தார். அப்பொழுது அவர் தமது பெயரை **விவேகானந்தன்** என்று வெளியிட்டார். அதுவரையில் பிரபலத்தையும் பந்தத்தையும் தடுக்கவும், தாம் மேற்கொண்ட இராமேஸ்வர யாத்திரையைப் பூர்த்தி செய்யவும் நினைத்து, சென்ற இடங்களிலெல்லாம் விவிதிக்ஷினந்தர் என்றும், சச்சிதானந்தரென்றும் மாறுபாடாகச் சொல்லிக்கொண்டே வந்தார். 'விவேகத்தினுலெழும் பிரம்மானந்தத்தை யனுபவிப்பவர், அனைவருக்கும் ஆனந்தத்தை வழங்குபவர்' எனப் பொருள்படும் அத்திருநாமம் அதுமுதல் பிரசித்தமாயிற்று இது இப்படியிருக்க பொரநாகூர் ஆச்சிரமத்திலிருந்த சீடர்கள் சுவாமிகளைப்பற்றிய செய்தியொன்றும் கிடைக்கப் பெருமல், பதை பதைத்து ஸ்ரீராம கிருஷ்ணரையும் எம்பெருமானையும் தமது தலைவரைக் காப்பாற்றித் தங்களிடம் விரைவில் கொண்டுவந்து சேர்க்கும்படி வழுத்திக்கொண்டிருந்தனர்.

உண்மைப் பெயரை உரைத்தருளல்

"அவரவருடைய சுதர்மப்படி, மனேபீஷ்டத்திற்கிசைய மந்திர புஷ்பங்களால் அருச்சித்து வழிபடும் உரிமை யாவருக்கு முண்டு. சமயாநுசாரிகள் சிவனென்றும், விஷ்ணுவென்றும், அல்லாவென்றும், கிறிஸ்துவென்றுங் கூறி, அருச்சிக்கும் முறைகளில் பேதப்பட்டாலும் அவர்களுடைய தெய்வமெல்லாம் அவ்யக்த பாப்பிரம்மமாகவே விளங்குகின்றன. சமயங்களாவன மோக்ஷத்தை யடையும் முறைகள். மோக்ஷம் என்பது மட்டும் ஒன்றுதான். இந்த விவேகத்தால் தாய் நாட்டு மகா ஜனங்கள் ஒன்றுகூடி தேச க்ஷேமத்தை வளர்க்கவேண்டும்!" என்று சுவாமிகள் பம்பாயில் தம்மைக்கண்ட அடியவர்கட்கெல்லாம் உபதேசித்தார். தாய்நாட்டின் தர்மத்தைப் பரவும் ஆர்வ

மும், மேல்நாட்டில் ஞான விளக்கேற்றும் அருளும் நாட்களை விநாடிகளாகச் செய்தன. சுவாமிகள் 1893-ம் ஆண்டு மே மீ 31உ யாகிய பிரயாண தினமும் வந்தது. அச்சுபதினத்தில் ஸ்ரீமான் அழகசிங்கப் பெருமாள் அவர்களும் ஜெகன்மோகன லால்ஜியும் சுவாமிகளைக் கப்பல் வரையிலும் கொண்டுபோய் வழிவிட்டு, கண்ணீர்மல்க மும்முறை விழுந்து பணிந்து, அன்பின் மேலீட்டாலும் அளவுகடந்த பக்தியாலும் வழியைக் குறித்துச் சில முன்னெச்சரிக்கைகள் செய்து பின்னர் கப்பல் புறப்படுவதை யறிவிக்கும் முதல்மணி யடித்தவுடன் கரைவந்து சேர்ந்தார்கள். புகைக் கப்பலும் புறப்பட்டது. சுவாமிகளின் கண்களி லானந்தக் கண்ணீர் பெருகிற்று. 'டெக்' கிலிருந்தே அவர் கரையைப் பார்த்தவண்ண மிருந்தார். அவர் மனம் எழுந்து கம்பீரமாய் நின்றது. அவர் குருநாதரைத் தியானித்தார்; தாயை வந்தித்தார்; சிஷ்யர்களை வாழ்த்தினர். அறிவாகிய கடலில் ஆர்வமான இயந்திரத் துடிப்புகள் தள்ள அருளாகிய மரக்கலம் ஐயனைப் போற்றிக்கொண்டு கரையினின்றும் புறப்பட்டு விரைந்து சென்றுகொண்டிருந்தது. கரையும் சிறிது சிறிதாக மறையத் தொடங்கிற்று. சுவாமிகள் கரையை நோக்கிக் கைகூப்பியவண்ணம் பாரததேவியைத் துதித்துக்கொண்டேயிருந்தார். கரை கண்ணுக்கு மறைய—பிரிவாற்று பந்தமென்னும் திரைவிலக, அவருள்ளம் அக்கரையை நாடிய வண்ணம், பாற்கடலில் அரவணையில் துயிலும் பரமனைத் தியானித்தவாறே பரிபூர்ண மகிழ்ச்சியால் பூரித்தது.

கப்பலேறுதல்

மரக்கலம் மென்மேலும் அலைகடல் நீரைப் பிளந்துகொண்டு சென்ற வண்ணமாக, சுவாமிகளும் எங்கும் தண்ணீரைத்தவிர வேறொன்றும் காணப்படாத அக்காட்சியைக் கண்டு களித்தார். அதுவரை அவர் தமது கமண்டலத்தைத்தவிர வேறெதையும் தம்முடன் கொண்டுவந்ததில்லை. புரவலர்கள் பற்பல பொருள்களைச் சமர்ப்பித்த காலத்திலும் அவற்றை ஏற்காது யாத்திரையைப் பூர்த்தி செய்த அவருக்கு இப்பொழுது உடுப்புகளடங்கிய பெட்டிகள், தோற்பை முதலிய அந்நியதேச யாத்ராவசியமான பொருள்களை நினைக்க ஆச்சரியமா யிருந்தது. அவற்றைப் பார்த்து அவர் 'நான் குடும்பியாகி விட்டேனே; என்னை எவ்வாறோ இப்பொருள்கள் பந்தப்படுத்திவிட்டனவே' என்றெண்ணி அதிசயிக்கலாயினர். கப்டல் செல்லச் செல்ல மேகக்கூட்

கலம் கடலிற் சென்ற காட்சி.

டங்கள் வருவதும் போவதும், கடல் கொந்தளிப்பின்றி அடங்கித் தனதழகிய திரைகளாகிய கரங்களால் கப்பலிலுள்ள அவரை உபசரிப்பதை யொத்து வந்து கலத்தைத் தழுவிச் செல்வதுமாக விருந்தன. மரக்கலம் பாடி யோடி யரங்கிலாடும் கணிகை மாதை யொத்து கடலைப்பிளந்து செல்லலுற்றது.

கப்பலில் சுவாமிகளைச் சந்தித்தவர்களெல்லோரும் அவரன்பராயினர். மரக்கலத்தலைவரும் சுவாமிகளின் நண்பராகி அவகாச முள்ளபோதெல்லாம் சுவாமிகளைச் சந்தித்துக் கப்பலின் பல பாகங்களையும் பார்வையிடச் செய்து, கலத்தைச் செலுத்தும் இயந்திரங்களி னமைப்பையெல்லாம் காண்பித்து வந்தனர். அவரும் யாத்திரைதொடங்கிய சில நாட்களுக்குள் உணவுகளின் மாறுபாடு, புது ஜனங்களுடன் ஏற்றவாறு பேசுந்திறன், ஐரோப்பியர்களுடன் பேசுந்தன்மை முதலியவற்றில் கலந்துகொண்டார். அக்காலத்தில் யாத்திரைசெய்யும் சில ஜர்மானியர்களின் நட்பும் அவருக் கேற்பட்டது.

கொளும்புக் கேகல்

சில நாட்களாயினபின் கப்பல் கொளும்புவை யடைந்தது. அங்கு ஒருநாள் கப்பல் தங்குமென்றறிந்துகொண்டு அவர் அந்நகரைச் சுற்றிப் பார்க்கச் சென்றார். ஒரு வண்டியை யமர்த்திக்கொண்டு, வீதிகளையெல்லாங் கடந்து ஒரு பௌத்த ஆலயத்தை யடைந்தார். அவ்வாலயத்தில் பென்னம் பெரிய ஓர் புத்தர் சிலை யிருந்தது. புத்தர் பள்ளிகொண்டு நிர்வாண நிலையை யடைவதுபோல் அச்சிலை யமைக்கப்பட் டிருந்தது. இவ்வாலயத்தைக் கண்டபின் சுவாமிகள் விரைந்து கப்பலுக் கேகினர். கலமும் கொளும்புத் துறமுகத்தைவிட் டகன்றது. அப்பால், மலேயா தீவுகள் முனையிலுள்ள பினங் துறைமுகத்தை யடைந்தது.

பினங் துறைமுகம்

கப்பல் தலைவரிடம், நிகழ்காலத்தில் முகம்மதியர்களே பெரும்பானும் மலேயாத்தீவுகளில் வசித்து வருகின்றனரென்றும், பழங்காலத்தில் கப்பற்கொள்ளைக்காரர்கள் அவ்விடங்களைத் தமது ஒளிவிடமாகக் கொண்டிருந்தனரெனவும், நவீன பீரங்கிகளின் வல்லமையால், அக்கப்பற்கொள்ளைகாரர்கள் சாத்விகர்களாகிச் சமாதானத்துடன் வாழ்ந்து வருகின்றனரெனவும் விசாரித்தறிந்துகொண்டார். பிறகு பினங்கிலிருந்து சிங்கப்பூர் போகும் வழியில் சுமத்ராவைப் பார்த்தார். அத்தீவில் பல மலைகள் வானளவு உயர்ந்து பசுமையான தோற்றத்துடன் நிற்பது காண்டற்கரிய காட்சியாகவே யிருந்தது. அம்மலைச் சாரல்களில் முற்

காலத்தில் கொள்ளைக்காரர்கள் வதிந்துவந்தன ரென்றும், அக்கப்பற்றலைவர் சுவாமிகளுக் கெடுத்துரைத்தார். ஒரு குழந்தையைப்போல அவர் புதிது புதிதான இடங்களைக்காண ஆர்வ முடையவரா யிருந்தார்.

சிங்கப்பூருக் கேகல்

அடுத்தாற்போல் அக் கலம் சிங்கப்பூரில் தங்கிற்று. அவ்வூரின் கண்காட்சி யிடமான 'ஓஷதி உத்தியான வனத்தைப் (Botanical Garden) பார்த்துவிட்டு, அதன்பின் பனை, மா முதலிய மரங்கள் செழிப்புற்று அத்தீவில் வளர்ந்திருப்பதைக்கண்டு, அப்பால் அவ்வூர் 'துர்லப வஸ்து சேகரசாலை' (Museum) யையும் பார்த்துவிட்டுத் திரும்பினர்.

பின்னர், கப்பல் சீனர்களின் முக்கிய வியாபார ஸ்தலமான ஹாங்காங் துறைமுகத்தை யடைந்தது. சீனதேசச் சரித்திரத்தை சுவாமிகள் சிறு பிராயத்தில் ஊக்கமாக வாசித்தவராதலின், அவற்றைக் கண்கூடாகக் காண ஆவல் கொண்டார். கப்பலருகே சில நாவாய்க்காரர்கள் வந்து கொச்சையாக ஆங்கிலம் பேசிப் பலரையும் கரைக்கு வருமாறு அழைத்தலையும் அவர்கள் படகிலேயே குடும்பத்துடன் வசித்தலையும் சுவாமிகள் கவனித்தார்; இதிலிருந்து 'சீனர்கள் அதிக சுறுசுறுப்புள்ளவர்கள்' என்று அனுமானித்தார். இந்தியர்களைப் போல அவர்களும் வாதனைப்படுவதே அவர்கள் நன்னிலை யடையாததற்குக் காரணமென அவருக்குப் புலப்பட்டது.

ஹாங்காங் துறைமுகம். சீனர்களின் பழக்க வழக்கங்கள்.

சீனமாதர்கள் தங்கள் குழந்தைகளை முதுகிற் கட்டிக்கொண்டு, நிற்பயமாய் படகுக்குப்படகு தாண்டுவதையும், மகாகடினமான வேலைகளையும் அலட்சியமாகச் செய்வதையும், சீனர் குழந்தைகள் சாத்வீகமாய் அநேகமாகத் தாயின் பராமரிப்பில்லாமலே வளர்ந்து வருவதையும் குறிப்பிட்டு அவர் தமது அன்ப ரொருவக்குக் கடிதமும் வரைந்தார். 'ஹாங்காங்'கில் கப்பல் மூன்று நாட்களுக்குமேல் தங்கிற்று. சிகியாங் நதியின் முகத்துவாரத்திலிருந்து சீனதேசத்தின் பிரபல நகரமான 'காண்டன்' (Canton) எண்பது மைல் தூரத்திற்றூனே யிருந்தமையால், அவர் அக்கப்பலில் வந்த ஜர்மானியர்களுடன் அந்நகருக்குச் செல்ல நினைத்தார். அப்பொழுது சுவாமிகள் வரைந்ததாவது:

"எத்துணை சுறுசுறுப்புடன் கூடிய வாழ்வுள்ள மக்களின் காட்சி! தண்ணீர்ப்பரப்பை மூடி மிதக்கும் சிறுபடகுகள் எத்தனை! அநேகருக்குப் படகே

வீடாக விளங்குகிறது. அநேகமாக அப்படகுகள் யாவும் அழகான சிறு வீடுகள் போன்றுள்ளன. அச்சிறு படகுவீடுகளில் மூன்று மாடிகளென்ன! உழக்கில் கிழக்கு மேற்கு என்பதுபோல் நடைபாதைகளென்ன! அழகான வீடுகளே தண்ணீரில் மிதப்பதுபோ லிருந்ததக்காட்சி! எங்கள் கப்பலி னிருபுறமும் கண்ணுக் கெட்டிய தூரம்வரை இத்தகைய படகுகளே காணப்படுகின்றன.''

சீனாவினின்று வரைந்த கடிதம்

காண்டன் பட்டணத்தைக் காணவேண்டு மென்று சுவாமிகள் தம்முடன் பிரயாணஞ் செய்த ஜர்மானிய நண்பர்களுடன் புறப்பட்டார். துவிபாஷி யொருவர் அவர்களுடன் வந்து சுவாமிகள் கேட்ட கேள்விகளுக் கெல்லாம் விளக்கமாக விடைபகர்ந்தார். அவர் மூலம் வட இந்தியாவிலுள்ளதுபோல் சைனாவிலும் பெருங்குடி வணிகர் பெருமடமகளிர் கோஷாக்களாக விருப்பார்க ளென்று தெரியவந்தது சாதாரண சீன மாதர்களின் பாதங்கள், பிறந்த குழந்தையின் பாதங்களினுஞ் சிறிதாக விருந்ததையும், அவர்கள் நடக்கவியலாது தத்தித் தத்தி நடப்பதையும் சுவாமிகள் கண்டு சீனர்களின் ஜீவகாருண்ய மின்மையை நினைத்து இரங்கினார். அனைவருமாகப்போய் 'காண்டன்' நகரிலுள்ள பல முக்கிய பௌத்த ஆலயங்களைப் பார்த்தனர். அவற்றி லொன்றில் சீனதேயத்து முதல் பௌத்த மன்னரும், சீனத்தின் பௌத்த சமய தீக்ஷை யேற்ற முதல் ஐந்நூறு சீடர்களும், சிலையாயமைந்துள்ள இடத்தைக் கண்டார். ஆங்கு பிரம்மாண்டமான ஓர் பௌத்த விக்கிரஹத்தையும் அதனடியில் புத்தப் பேரரசரும், ஐந்நூறு சீடர்களும் வணங்குவது போன்ற சிலைகளின் அமைப்பையும் பார்த்தார். அவை மரச்சிலைகளாயமைக்கப் பெற்றிருந்தன. அவற்றின் சிற்ப நுட்பத்தைக்கண்டு 'நமது பாரதபூமியே யிவற்றின் பிறப்பகம்' எனவுவந்து, சற்று தியானித்து, புத்தபகவானை மனக்கண்ணால் தரிசித்தார். சில நாட்களே சீனர் பூமியிற்றங்க நேர்ந்த போதிலும் அதற்குள் சுவாமிகள் அவர்களுடைய நாகரிகம், நடையுடைபாவனை முதலியவற்றை வெகு விரைவில் ஊகித்தறிந்துகொண்டார். துறவியாதலின் சீன-பௌத்த சந்நியாசிகளின் ஆச்சிரமத்தைப் பார்க்க அவா அவருக்குண்டாயிற்று. ஆனால், அந்நிய தேசத்தார் அத்தகைய இடங்களுக்குச் செல்ல அநருகரென்று அங்கு கருதப்படுதற்கு வருந்தி துவிபாஷியோடு ஆலோசித்தார். துவிபாஷி சாத்யமில்லை யென்று கூறினார். ஆனாலும் முயற்சிசெய்து பார்ப்போ மென்று 'அப்படி நுழைந்தால்

காண்டன் நகரைப் பார்வையிடல்.

என்ன நேரும்' என்று சுவாமிகள் துவிபாஷியைக் கேட்டார். அதற்கு துவிபாஷி 'நிச்சயமாக துன்பத்தை யடையவேண்டும்' என, அவர் தம்மை இந்திய சாது வென்று அறிந்தால் காவலாட்கள் துன்புறுத்தா ரென்று கூறி, மெல்லத் தம்முடன் வந்த ஜர்மானிய நண்பர்களை அழைத்துக்கொண்டு அவ்வாஸ்ரமத்தில் நுழைந்தார். நுழைந் ததுதான் தாமதம்; பல வீரர்கள் கோபாவேசத்துடன் தடியுங் கையுமாக ஓடி வருவதுகண்டு, அச்சர்மானியர்கள் பயந்தோடி விட்ட னர். சுவாமிகள் மட்டும் புன்னகையுடன் அவ் விடத்தைவிட் டகலா திருந்தார். என்ன நெஞ்சழுத்த மிவருக்கென்று அத்துவிபாஷி அதி சயித்தனர். இவர் நெஞ்சழுத்தத்தை நாமிளமை முதல் கண்டு வரு கின்றோ மாதலின் அத்துவிபாஷியடைந்த ஆச்சரியம் நமக்குச் சர்வ சாதாரணமானதாகவே தோன்றுகிறது. அவ்வீரர்கள் தம்மை நெருங்கு முன்னர், சுவாமிகள், அத்துவிபாஷியை நோக்கி 'சந்நியாசிக்குச் சீன பாஷையிலென்ன வார்த்தை'யென்று கேட்டறிந்து கொண்டு அவர் களருகில் வந்ததும் 'சாபாட்ச்' என்று உரக்கப் பன்முறை கூறினார். அவ்வார்த்தை யவருக்கு ரக்ஷாபந்தனத்தை யளித்தது. கோபத் தோடுவந்த காவலாளர் அவருடைய பாதங்களில் விழுந்து வணங்கி தம்மை யாசீர்வதிக்க வேண்டினர். சுவாமிகளுக்கு அவர்களென்ன சொன்னார்களென்றறிய முடியவில்லை. பின்னர் துவிபாஷியினுத வியால் விஷயத்தை யறிந்து தமதங்கியின் பையிலிருந்து ஒரு காகி தத்தை யெடுத்து அதைச் சிறு துண்டுகளாகக் கிழித்து ஓம் என்ற பிரணவத்தை வரைந்து அவர்களுக்களிக்க, அவர்களதைப் பெற்றுச் சிரமேற் வகித்தும், கண்களில் ஒத்திக்கொண்டும் மதித்து, சுவாமிகளை அவ் வாச்சிரமத்தினுள்ளே யழைத்துச் சென்றனர். அதன் சில தனித்த இடங்களைப் போய்ப் பார்க்குங்கால் சம்ஸ்கிருத சுலோகங்கள் வங்கபாஷையில் அவ்வறையின் சுவர்களில் சாஸனஞ் செய்யப் பெற் றிருந்தது கண்டு, ஆச்சரியப்பட்டு பாரததேவியின் பெருமையை யிசைத்துப் பண்பாடுவாராயினர்; ஒரு அடி கம்பீரமாக உயர்ந்தார். சரித்திர பூர்வமாக 'ஐந்நூறு வங்க சாதுக்கள் பிக்ஷுக்களாய் புத் தரைத் தொடர்ந்து சீனதேசத்திற்குவந்ததும், அவர்களே சீனர் ஆல யங்களில் தற்காலம் மூர்த்திகளாய் விளங்குவதையும் உத்தியாலுணர் ந்து, சரித்திரவாயிலாக முன்நாட்களில் சீனரும் பாரதமக்களின் ஞானத்தாயால் வளர்க்கப்பட்டவர்களே யென்பதைச் சித்தாந்தப் படுத்தி சகோதர சம்பந்தத்தையும், ஹிந்துசமயமே சீனருக்குச் சம யத்தாயகமாக விளங்குதலையும் ஆய்ந்து கண்டார். இதனால் பிரத்யக்ஷ

மான ஆராய்ச்சியொன்று அவருக்கு எளிதாயிற்று. அப்பால், சுவாமிகள் அவ்வாச்சிரமத்தை விட்டகன்று வெளியே சென்றதும், வெளியே நின்று கொண்டிருந்த ஜர்மானிய அன்பர் அதிசயித்துச் சுவாமிகளை வணங்கிச் சேர்ந்தனர். பின்னர் அனைவரும் காண்டனை நீத்து 'ஹாங் காங்'கை யடைந்து கப்பலேறினர். பலநாட்கள் யாத்திரைக் கப்பால் கலம் ஜப்பானிலுள்ள நாகசாகியை யடைந்தது. சுவாமிகள் அங்கு இறங்கி அந்நகரைச் சுற்றிப் பார்த்தார். அப்பொழுது அவர் தமது சென்னையன்ப ரொருவருக்கு வரைந்ததாவது:

ஜப்பான் நாகசாகியை அடைதல்

"ஜப்பான் தேசத்தார் 'சுத்தம் சோறுபோடு' மென்பதைக் கடைப்பிடித்தவர்கள். இங்கு சகலப் பொருள்களும் சுத்தமாகவே யுள்ளன. தெருக்களெல்லாம் இடமகன்றும் நேராகவும் விளங்குகின்றன. ஒவ்வொரு சிறு நகரிலும், ஜப்பானியர்களுடைய சிறுவீடுகளின் பின்புறம், சற்று அப்பால் பசுமையான அழகிய சிறு குன்றுகள் காணப்படுகின்றன. வாமனராகவும் சாதாரண அழகுள்ளவராகவும் அவர்கள் இருக்கிறார்கள். நேர்த்தியான உடுப்பும் அவர்கள் தன்மையும், சமிக்ஞைகளும், பிறவும், பார்க்கப் பார்க்க மனோகரமாயுள்ளன. ஜப்பான் ஒரு காட்சிசாலையாகவே விளங்குகின்றது. ஒவ்வொரு ஜப்பானியர் வீட்டின் பின்புறமும் சிறு தோட்டங்களிருக்கின்றன. அத்தோட்டங்களில் அழகான சில காய்வகைச் செடிகளும், சிறு கிணறுகளும், பொய்ப் பாலங்களும், அழகிய புற்றரைகளும் காணப்படுகின்றன."

ஜப்பானியர் பழக்க வழக்கங்கள்.

பிறகு கப்பல் நாகசாகியை விட்டு கோப்புக்குச் சென்றது. 'கோபில்' சுவாமிகள் இறங்கி, தரைமார்க்கமாக ஜப்பானின் உட்பிரதேசங்களையெல்லாம் பார்த்துவிட்டு 'யோகஹோமாவில்' கப்பலை மறுபடியும் சந்திப்பதாகக் கப்பற் றலைவரிடஞ் சொல்லிப் பிரயாணமானார். அப்பொழுது அவர் சைனுவின் கைத்தொழிற் ஸ்தானமான ஒசாகோ, பழைய இராஜதானியான கியோடோ, தற்கால அரசிருக்கையான டோக்கியோ, ஆகிய மூன்று நகரங்களையும் முக்கியமாகப் போய்ப் பார்த்தார். ஜப்பானியர்களுடைய பழக்க வழக்கங்களை முற்றிலும் அவர் தம் சொற்ப யாத்திரைக்குள் படித்துக்கொண்டார். அவருக்கு ஜப்பானியர்களின் கைத்தொழில் வணிகப்பெருமிதமே மிக்க ஆச்சரியத்தைத் தருவதாயிருந்தது. அக்காலை 'ஜப்பானியர் விழித்துக் கொண்டனர். தங்கள்

கோப்பு, ஒசாகோ கியோடோ, டோக்கியோ நகரங்களுக் கேகல்.

கப்பற் படையையும் ஆயுதங்களையும் அவர்கள் பெருக்கி வருகின்றனர். அதற்கென்றே பெரும்பாலும் பொருட்செலவு செய்யப்படுகின்றது. தீக்குச்சிசாலைகளே எங்கு பார்த்தாலும் காணப்படுகின்றன. தங்கள் நாட்டிற்குத் தேவையானவற்றைத் தாங்களே செய்து கொள்வதில் அவர்கள் அரும்பாடுபடுகின்றனர்'' என்று அவர் வரைந்த ஒரு கடிதத்தில் காணப்படுகின்றது. இவை யாவற்றையும்விடப் பழங்கால வங்க எழுத்துக்களில் பல வடமொழி மந்திரங்கள் ஜப்பான்தேச தேவாலயத்தின் மதில்களில் வரையப்பெற்றிருந்ததும், சில பௌத்த சம்ஸ்கிருத ஜப்பானிய விர்ப்பன்னர்களிருந்ததுமே அவரைப் பிரமிக்கச்செய்தன. இந்தியாவைத் தாயாக அவர்கள் அனுதினமும் வழிபட்டு வருவதையும் சுவாமிகள் கண்கூடாகக் கண்டார். அப்பொழுது அவர் யாத்ராநுபவத்தைக் குறிப்பிட்டு வரையுங்கால் குலகுருக் கொடுமை இந்தியாவைப் படுகுழியி லழுத்திவிட்டதென்றும், மதத்தைப் பெருக்குவதாக மதம்பிடித்தலையும் சில வேதிய குழாத்தினரின் தீமையும், ஜாதிக்கொடுமையும் ஜனசார அசம்பாவிதங்களுமே இந்தியாவின் துயரநிலைக்கு வேர்களாயினவென்றும் வரைந்திருந்தார். அக்கடிதத்திலேயே அவர் பிராம்மணத்துவத்தை இந்தியாவின் ஆஸ்தியென்றும் போற்றியிருந்தார். ஆனால் அவ்வேதியர்கள் வழிமாறி மதத்தின்பேரால் புரியும் கொடுங்கோன்மையே நாட்டின் பரிதாப நிலைக்கு அடிகோலியதென்று வற்புறுத்திப் பின்னும் 'இந்தியாவிலுள்ள இளைஞர்களில் தியாக புத்தியுள்ள, உறுதியும் அறிவும் வீரமுமுள்ள ஆயிரம் பேர்களாவது நாட்டையுயர்த்த முன்வரமுடியுமா?' என்று ஒரு வினவு மிட்டிருந்தார். 'சென்னையில் எத்தனை பேர்கள் சுயநல மற்று, நேர்வழிப்பட்டு, உயிர்போம்வரையி லஞ்சாதுழைத்து, ஏழைகளுக்குத் தொண்டுபுரிந்து அவர்கள் பசியைத்தணித்து, இந்தியாவிலுங்கள் முன்னோரிற் சிலர் செய்த கொடுமைகளால் அடைய நேரிட்ட இப்பரிதாப நிலையினின்றும் தேசத்தை மீட்கவும் அறிவால் லக்ஷ்தீபமேற்றவும் இப்பொழுது முன்வருவீர்கள்?' என்ற மற்றொரு வினவு மக்கடிதத்திற் காணப்பட்டது. இதனால் அவரது தாய் நாட்டின் மேன்மையைப் பொருத்த தாபமும், அஞ்சா மனமும் சொல்வன்மையும் நன்கு போதரும்.

ஜப்பானிலிருந்து வரைந்த கடிதத்தின் சாராம்சம்.

அதன்பின், அவர் தரைமார்க்கமாக யோகஹோமாவில் கப்பலைச் சந்தித்தார். அப்பால், 'பசிபிக்' மகாசமுத்திரத்தைப் பிளந்து கப்

பல் பிரயாணப்பட்டது. பலநாட்கள் ஒரே சமுத்திரத்தில் 'ஏலேலோ' வென்று கப்பல் ஆடியாடிச் சென்றது. அலைகளுயர்ந்து ஆகாயத்தைத் தொடுவன போன்றன. கலத்தில் சுவாமிகள் தியானத்திலும் மோனத்திலும் ஞானபுருஷனைத் தரிசித்தவண்ணம் 'அமரிக்கா அமரிக்கையாயிருக்குமோ, எவ்வாறிருக்குமோ, எப்பொழுது அதன் கரையைக் காண்போம்' என்று யோசனை செய்துகொண்டே சென்றார்.

மரக்கலம் பூகோள சாஸ்திரப்படி பழைய உலகத்திலுள்ள யோகஹோமாவிலிருந்து, புது உலகத்திலுள்ள வான்கூவர் வந்து சேர்ந்தது. 'பிரிட்டிஸ் கொலம்பியா' மாகாணத்திலுள்ள வான்கூவர் துறைமுகத்தை, தமது நாட்டின் சீர் பாவவந்த அக்கரையை—தர்மத்தின் புனிதத்துறையை அவர் கண்டார். கரைக்கேகி அமரிக்கா பூமியை மிதித்ததும் அவர் பேரானந்த மெய்தினர். குளிர்மட்டும் அவரைச் சிறிது பாதித்தது. அவர் கொண்டுவந்த ஆடைகள் அவ்வளவு அதிக சீதளபூமிக்குப் போதியதாயில்லை. சுவாமிகள் வான்கூவரில் இரண்டொருநாள் தங்கித் தாம் கொண்டுவந்த பெட்டி, பொருள்கள் முதலியவற்றைச் சீர்படுத்தி, பின்னர் இரயில் மார்க்கமாக சிகாகோவிற்குப் பிரயாணமானார். அமரிக்காதேசத்தின் உட்பாகத்திலுள்ள பல மலைகளையும், ஆறுகளையுங் கடந்து 'கானடா' வழியாக மூன்றுநாட்கள் வரையில் இரயில் சென்றது. வழியிலுள்ள இயம்புதற் கரிய இயற்கை அழகமைந்த பசுமையான மலைப்பிரதேசம், மகாநதிகளின் பிரவாஹம், நகரங்களின் அமைப்பாகியவற்றைப் பார்த்துக்கொண்டே நான்கு நாட்களுக்குப் பின் தாம் இந்தியாவில் சொல்லளவிலறிந்த அச் சிகாகோ நகரை இறைவனருளால் க்ஷேமகரமாக அணுகினர். பணத்தைக் காப்பாற்றும் பழக்கம் அவருக்குச் சிறுபிராயம் முதலில்லாததால் வழியில் சிலர் அவரை ஏமாற்றத் தொடங்கினர்.

கொலம்பியா வான்கூவர் அடைந்தமை

சிறப்பி னிருப்பிடமான சிகாகோ நகரை யடைந்ததும் சுவாமிகளின் நிலை யெவ்வாறிருக்குமென்பதை நாம் ஊகித்துணரலாம். எல்லாம் அந்நியர் மயமாகவே யிருந்தது. சில சிறுவர்கள் காவியாடை தரித்துள்ள அந்நியரான சுவாமிகளைக் கண்டு கேலி செய்துகொண்டே பின்றொடர்ந்தனர். கூலியாட்களோ அவரை அந்நியரென் றெளிதி லறிந்துகொண்டு அதிகக் கூலிகேட்க வாரம்பித்தனர். தெருக்களில் ஜனங்கள் திரள்திரளாக அந்நகரிற் கூடியுள்ள உலகச் சந்தைக்குப் போய்க்கொண் டிருந்தார்கள். தங்குமிட மொன்றைப்

சிகாகோ நகரடைதல்

பற்றிச் சுவாமிகள் எதிர்ப்பட்ட பலரையுங் கேட்டும், அக்கர்விகள் இவரைத் தலையெடுத்தும் பாராது அலட்சியம் பண்ணிச் சென்றனர். அப்பால் ஒரு சாத்வீகி ஒரு 'ஹோட்டலை'க் குறிப்பிட்டுச் சென்றார். அதன்படி சுவாமிகள் அந்த ஹோட்டலை மிக்க சிரமத்துடன் கண்டுபிடித்து, அதுவே அந்நகரில் மிக்க உயர்தரமானதென்றறிந்து, அதன் உரிமையாளர் குறிப்பிட்ட அறையை யடைந்து, தமது மூட்டை முடிச்சுகளை ஒழுங்குபடுத்தி வைத்துவிட்டு, அறையின் கதவை உட்தாளிட்டுத் தமது குருதேவரை நினைத்துச் சற்று கண்மூடியிருந்து, பின் வேற்றார் மயக்கமும், மனக்கலக்கமும் நீங்கப்பெற்றார்; அன்று இளைப்பாறி மறுநாட்காலையில் உலகச் சந்தையைப் போய்ப் பார்க்க வேண்டுமென்று உத்தேசித்திருந்தார்.

உலகச்சந்தை

உலகமே ஒரு சந்தை யென்ற விந்தையை அவர் உணர்ந்த ஞானியாயினும் உலகச்சந்தையின் சில அற்புதக்காட்சிகள் அவர் கண்களைக் கவர்ந்தன. அகிலத்திலுள்ள அரியபொருள்கள் யாவு மிச்சந்தையில், பரீக்ஷார்த்தமாகவும், சிருட்டியின் பெருமையைப் போற்றும் வண்ணமும் சேகரிக்கப் பெற்றிருந்தன. காம மயக்கத்தால் மோகவலையாற் கட்டுண்ட மாயை யென்ற மாகடலிடையே அகப்பட்ட ஒருவன் மோக்ஷலோகமென்ற மேல்நாடு எவ்வித மிருக்குமென்று எங்ஙனம் பாவனையாலோ, அல்லது மானசீகக் கற்பனைசக்தியாலோ ஊகித்தறிய வியலாதோ—அதேபோன்று அம் மேல்நாடு என்பதைப்பற்றி நூலறிவு மட்டிலுமடைந்து, அதைக் கண்கூடாகக் காணவேண்டுமென்ற அவாவின் பெருக்கால் மாயையான பசிபிக் மகாசமுத்திரத்தைத் தாண்டி வந்த அவர் மேல்நாட்டை மேன்மையோடு கண்டார்; அக் காட்சிசாலையாகிய கடவுள் திருமுன்னேகினார். மகா இயந்திரங்கள் அக் காட்சிசாலையில் நூதனப் பொருள்களாகக் காணப்பெற்றன. அவற்றைக்கண்டு அறிவால் ஆகாத காரியமில்லை யென்பதையும், அதன் வன்மையாற்றான் விசுவாமித்திரர் சுவர்க்கத்தைச் சிருஷ்டித்தார்; மகரிஷிகள் மகா சித்திகளை யடைந்தனர்; என்பதையும் அவர் கணித்தறிந்தார்.

எங்கு பார்த்தாலும் தம்மனிதரொன்பதில்லாமல் அந்நியர் மயமாகவே யிருந்தது மட்டும் அவருக்குத் துக்கத்தை யளித்தது. அங்குமிங்கும் சிலர் "தாம் யார்? வேலை (சமுத்திரம்) யைத் தாண்டி இக்குற்ற வேலையென்ன ?" [அது வேலை (சமுத்திரம்) யினும் பெரிது]

என்று உசாவுவார்களாயினர். இதைத்தவிர வேறு எவருடனும் சில நாட்கள் வரையிலும் அவருக்கு நட்பேற்படவில்லை. அவர் கண்ட அபூர்வ காட்சிகளில் அவருடைய கண்கள் ஆழமாகப் பதிந்தமையின் சில சமயங்களில் கண்ணிழந்தவர்போ லாயினர். கண்டவற்றை யவ்வப் பொழுது தமது மனமாகிய புத்தகத்திற் குறித்துக் கொண்டார்; அமரிக்காவைப்பற்றிப் பல துறைகளிலும் தாமறிய வேண்டிய விஷயங்களனைத்தையும் அவர் பன்னிரண்டு நாட்களுக்குள் பன்னிரண்டாண்டுகளிற் சாதாரண அறிவாளி சேர்க்கக்கூடிய அத்துணை விஷயங்களைக்கொண்டு விளங்கினர். இவ்விதம் சுவாமி 'அமரிக்காதேச யாத்திரை' யை முடித்து, அதன் அழகிய சிகாகோ நகரின் அற்புத மாளிகை யொன்றில் தங்கித் தலைவனை வழுத்திக் கொண்டிருந்தார்.

26-ம் அத்தியாயம்.

சர்வ தர்மமகா சபை

(ஈசனருளிருப்பின் எக்காரியந்தான் கைகூடாது) இறைவனருளால் இரண்டொரு கல்விமான்கள் அவரது அன்பராயினர். பத்திரிகாசிரியர்களும், நிருபர்களும் அவரைப் பேட்டி கண்டு தத்தம் வெளியீடுகளில் சுவாமிகளின் வரவைப் பெரிதும் பாராட்டி வரைந்தனர். நிற்க, சுவாமிகள் சமாச்சார நிலையத்தை யடைந்து சர்வ தர்ம மகாசபையைப் பற்றிய விஷயங்களை சவிஸ்தாரமாக விசாரிக்கலானர். அங்நிலையத்தினர், மகாசபை 'செப்டம்பர்' மாதத்திற்றான் கூடப் போகிறதென்றும், அதில் எந்த தேசத்திலிருந்தானாலும் பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுக்கப் பெற்ற அத்தாட்சிப் பத்திரமுள்ள பிரதிநிதிகளே உபந்நியசிக்க அநுமதிக்கப்படுவார்களென்றும், அவ்வாறு பதிவுசெய்து கொள்ளும் நாளும் கடந்து போயிற்றென்றும் கூறக்கேட்டு உயிரிழந்தவர் போலாயினர்; தாயை யிழந்தவரைப் போலத் துக்கித்தார். அப்பொழுது ஜூலை மாதத்தின் முதற்பக்ஷம். தீர்க்காலோசனையில்லாத சென்னை மாணவர்கள் வார்த்தையை நம்பி நாம் மோசம் போயினோமே யென்றெண்ணினர். சென்னை மாணவர்கள் இவ் விஷயத்தை யறியாதவர்களல்ல. ஆனால் எவ்விதமோ அங்ஙனம் நேர்ந்துவிட்டது. எல்லாம் இறைவன் திருவருளால் நிகழ்ந்ததென்றே நாம் கொள்வோம்.

சர்வ தர்ம மகா சபையைப் பற்றி விசாரித்தல்.

அவரது பணப்பை வரவர சுருங்க ஆரம்பித்தது. அங்கு உண்டிக்கு அதிகப் பொருள் செலவு செய்ய வேண்டியிருந்தது. பணத்தை அமரிக்கர்களோ தண்ணீரைப்போல் செலவிடுகிறார்கள். நாணய மாறுபாட்டால் அவரைப் பலர் ஏமாற்ற வாரம்பித்தனர். சர்வதர்ம மகா சபையில் தாம் பேச அனுமதி கிடைக்காவிடில் இந்தியாவிற்குத் திரும்பிவிடவோ, அல்லது அமரிக்காவில் கொஞ்சகாலம் தங்கித் தமது தர்மோபதேசத்தைச் செய்யவோ போதிய பொருள் அவரிடமில்லை. பணத் தேவையைக் குறித்துச் சென்னை அன்பர்களுக்குத் தந்தி யனுப்ப நேருமோவென்ற எண்ணமவரைப் பிடித்தது. முடிவில் அவர், 'அமரிக்காவில் தமது நோக்கத்தைப் பூர்த்தி செய்வது, அது அசாத்தியமானால் இங்கிலாந்துக்குப் போய்ப் பிரசாரம் செய்வது, அங்கும் இடையூறுகள் நேர்ந்தால் ஜன்ம பூமியையடைந்து குருதேவரின் கட்டளையை எதிர்பார்ப்பது' என்று முடிவு செய்து கொண்டார். இவ்வமயம் சென்னையிலிருந்த அன்பரொருவர் தமது அமரிக்கா நண்பருக்கு சுவாமிகளைப்பற்றி சிபார்சு செய்து எழுதியிருந்தமையால், அவ்வன்பரும் அவரது மனைவியாரும் சுவாமிகளுக்கு வேண்டிய அளவு உதவி புரிந்தார்கள். இந்த நட்பு சுவாமிகள் ஆயுட்காலம் வரையில் நிலவியதுமன்றி அக் குடும்பத்தார் இன்றுமவரைப் போற்றி வருகின்றனர். சுவாமிகள் ஆடம்பரமற்ற தன்மையும், அளவிலா பக்தியும் அருட்பிரசாதமும், ஆங்கிலம் பேசு மழகும் அவர்களை அந்தரங்கப் பிரியர்களாக்கி விட்டன.

சலனமும் உறுதிப்பாடும்

அப்பால், சுவாமிகளுக்கு அமரிக்கர்களின் யாத்திரை தலமாக விளங்கும் பாஸ்டன் நகரைப் போய்ப் பார்த்து வரவேண்டு மென்ற எண்ண முதித்தது. சிகாகோவைவிட அங்கு சொற்ப பொருட் செலவில் வசிக்கலா மென்றும் தெரிந்தமையால் சுவாமிகள் பாஸ்டனுக்குப் புறப்பட்டார். ஈஸ்வர ஆக்ஞையை யாரறிவார்? 'எம்பெருமானே நீயே எனக்குத்துணை! எல்லாம் நீ! என்னுடலும் பொருளும் ஆவியும் நீயே' என்று பரிபூர்ணமாய் சரணமடைந்தவர்களைக் கைவிட்ட பக்தர் சரிதை யேதுமிலையே யன்றோ? ஒரு ஐரோப்பிய விருத்தை, சுவாமிகளுடைய திருமேனியைக் கண்டவளவில் ஈடுபட்டு அவரைத் தமது விருந்தினராக வர வேண்டினள். அவர், தமது கைப்பொருள் அநேகமாகக் குறைந்துகொண்டே வருமத்தருணத்தில், ஆண்டவனே இவ்வருள் புரிந்

பாஸ்டன் நகருக்கேகல்

தனெனக் கொண்டு அவளுடன் சென்று மாஸ் (Mass) எனும் மாகாணத்தைச் சார்ந்த மெட்காப் (Metcalf) என்ற ஊரிலுள்ள 'தென்றல் மன்றம்' (Breeze Meadows) எனும் அவ்வம்மையார் இல்லத்தை அன்றைய அடுத்தநாள் அடைந்தார். அம்மாது அவரை உள்ளன்புடன் உபசரித்தாள். ஆனால் அவ்வூரிற் சில அறிவிலிகள் அவருடையைக் கண்டு தெருவில் அவர் செல்லுங்கால் புறச்சமயத்தானென்று நகைக்க வாரம்பித்தனர்; பல விதண்டாவாதிகள் தாறுமாறுக் கேள்விகள் கேட்கத் தொடங்கினர். சுவாமிகள் அனைத்தையும் பொறுமையுடன் வகித்து, 'தர்மஸ்தாபனம், தியாகம் கஷ்டமின்றி நடைபெறுவதில்லை' என்று எண்ணி மனந்தேறுவாரானார்.

இவ்விதமிருக்கும் நாட்களில் பல பிரமுகர்கள் 'இந்தியாவிலிருந்து ஒரு சந்நியாசி வந்திருக்கிறா' ரென்பது கேட்டு அவரைக் காணவந்தார்கள். அமரிக்காநாட்டுப் பிரபல அறிஞர்களுடன் கலந்து பேசவேண்டுமென்ற அவர் சுவாமிகளுக்கு முன்பே யிருந்தது. ஆனால் அப்பொழுது கோடைகாலமானதால் உல்லாசமாக கிரிவாசஞ் செய்ய அனைவருஞ் சென்றிருந்தமையால் அவர் அவா முற்றுப்பெறச் சிறிது தாமதப்பட்டது. "குளிர்காலம் வந்தால், அதற்குத் தகுந்த ஆடைக்கென்ன செய்வோம், பொருளுக் கென்ன பண்ணுவது?" என்ற கலக்கம் அவரைப் பிடித்தலைத்தது இவ்வாறிருக்க, சில அன்பர்கள் சுவாமிகளை அவ்வூர் 'பெண்கள் சபை'யில் உபந்நியாசஞ் செய்ய வேண்டினர். அதற்கவரு மிசைந்து பெண்கள் மகா சபையில் ராமா பாய் சரிதையை எடுத்துரைத்து அவர்களைக் களிப்பித்தார். அதன்பிறகு பல சௌகரியங்களை உத்தேசித்து அவர் அமரிக்கா தேசாசாரப்படி நீண்ட அங்கியொன்றை வாங்கினார். ஆனால் சொற்பொழிவு நிகழ்த்துகின்ற பொழுதெல்லாம் அவர் தமது பட்டுக்காவி அங்கியையே தரித்து வந்தார்.

பெண்கள் சபையில் ராமாபாய் சரித்திர உபந்நியாசம்.

ஐயன் மெல்ல அவர் பிரபலமடைய வழி காட்டினன். மகா பிரபலரும் ஹார்வார்ட் சர்வகலாசாலை கிரேக்க மொழிப் புலவருமான ஜே ஹெச் வ்ரேயிட் என்பார் சுவாமிகளின் நண்பரானார். பலவேறு விஷயங்களைப்பற்றி அவர் சுவாமிகளுடன் பேசி, சுவாமிகள் மகா நிபுணராக விளங்குவது கண்டு "ஐயனே! தாங்கள் ஹிந்துமத சித்தாந்தத்தைப்பற்றி சர்வ தர்மமகாசபையில் அவசியம் பேசவேண்டு" மென்று கேட்டுக்கொண்டார். சுவாமிகள் அப்பொழுது தமக்குப்

21

பிரதிநிதித்துவ மில்லையென்று நிகழ்ந்தவற்றை யெல்லாம் சாங்கோபாங்கமாகக்கூற, அவர் 'பிரதிநிதித்துவம் உங்களைபொத்த மகான்களுக்கெதற்கு? அவையை அலங்கரிக்கத் தங்களைவிடச் சிறந்தார் யார்?' என்று துதித்துத் தேற்றினர். எல்லாம் எனையாளும் ஈசன் செயலல்லவா? அவ்வன்பர் மிக்க செல்வாக்குடையவர். ஆதலின் அன்றே அவர் சர்வ தர்ம மகாசபையின் அக்கிராசனாதிபதிக்கு அமரிக்காவிலுள்ள அறிவாளிகளாங்கிற்கு நக்கீரரென்று சுவாமிகளைக் குறிப்பிட்டு ஒரு கடிதம் வரைந்ததுமன்றி, தாம் எப்படியாவது சுவாமிகளை மகாசபையார், ஹிந்து மதத்தின் பிரதிநிதியாக ஏற்குமாறு செய்து விடுவதாக உறுதி கூறினர். அப்பால் சுவாமிகளுக்கு அவர் சிகாகோவிலிருந்த, சர்வ தர்ம மகாசபையின் நிர்வாகிகளுக்கு அறிமுகக் கடிதமளித்து, சுவாமிகளிடம் போதிய பொருளின்மை கண்டு, சிகாகோவிற்கு ஓர் 'டிக்கட்'டும் வாங்கிக் கொடுத்து வழியனுப்பினர். 'கும்பிடப்போன தெய்வம் குறுக்கிட்டு' உதவிபுரிந்த தன்மையு மிதுவன்றோ?

பேரறிஞரின் நட்பு

எனினும் இடையூறுகள் அவரை இடைவிடாது பின்றொடர்ந்தன. அவர் வழிதவறித் தடுமாறி நிற்கையில், ஒரு வர்த்தகர் அவரைச் சிகாகோவிற் கழைத்துச் சென்றார். அழைத்துச் சென்ற அவர் சுவாமிகளை ரயில்வே ஸ்டேஷனிலேயே விட்டுவிட்டுப் போய் விட்டமையால், வழிதெரியாமல் சுவாமிகள் தடுமாறி அந்நகரின் கீழ்ப்பாகத்தை யடைந்தார். அது ஜெர்மானியர் வசிக்கின்ற பாகம். அங்கு சிலரைக்கண்டு சர்வ தர்ம மகாசபைத் தலைவரான பரோஸ்துரை யவர்களில்ல மெங்குளதென வினவினர். அவர்கள் இவரை அலட்சியமாகவும், அவமரியாதையாகவும் நடத்த வாரம்பித்தனர். அப்பொழுது சூரியாஸ்தமானகாலம்! இருள் வந்து கூடும் நேரம். திக்குதிசை புரியாது திகைத்தார் சுவாமிகள்! என்ன செய்வார்? எங்கு போவார்? பசி யொருபுறம்; கண்ணிருண்டு காதடைத்து சோர்ந்தார். 'எனையாளு மீசனே! உமையவள் நேசனே! அடியார்க்கெளியனே! நீயே கதி' என்று துதித்துவிட்டு, அந்த இரயில்வே ஸ்டேஷனுக் கருகாமையிலிருந்த ஒரு பலகையிற் படுத்துத் துயரப்பட்டுக் கொண்டே நித்திரை போய்விட்டார். கங்குல் சுவாமிகள் மனத்திலுண்டாயிருந்த கிலேசமான விருளையுந் தன்னோடு கவர்ந்து அகன்றது. பொழுது புலர்ந்ததும் அவரெழுந்து ஏதோ ஓர் உற்சாகத்தால் விரைந்து நடந்து புரவலர்களும் பொறாமை கொள்ள

சிகாகோவிற்கு மீளல்.

வும், குபேரனது கொஞ்சும் நகரோ இது என்று விம்மிதமடையவும், சிறப்புற்று விளங்கும் அழகிய மாளிகைகளை யெல்லாம் தாண்டி டாக்டர் பரோஸ் துரையவர்கள் வீடெங்குளதென்று விசாரிக்க வாரம்பித்தார். சிலர் அவரைக்கண்டதும் கதவைமூடித் தாளிட்டனர்; சிலர் எள்ளித் துள்ளிப் பேசினர். இங்ஙனம் அவர் பல மாளிகைகளையும் கடந்து, ஒருவித நிச்சயமான செய்தியையும் அடையமுடியாமல் வெயிலால் களைத்து, நடையால் இளைத்து மனம் முறிகின்ற சமயத்தில் இறைவனருள் சுரந்தார். அவர் கால் வலிமிக, கண்களிருண்டுவர, பசியொருபக்கம் நசுக்க ஒரு தெருத்திண்ணையிற் போயமர்ந்தார். அவ்வமயம் ஒரு யுவதி, வானுலகிலிருந்து வையகத்திற் கிறங்கும் கந்தருவமாதை யொத்து, மாடியிலிருந் திறங்கிவருவது கண்டு அழைத்து விசாரித்தார். தாய்போல் அங்கு வந்த அவள் "தாங்கள் சர்வதர்ம மகாசபை'யின் பிரதிநிதியா?' என்றாள். சுவாமிகள் தாம் முந்தியநாள் பட்ட கொடுமைகளை யெல்லாம் அவளிடமெடுத்துச்சொல்லி, டாக்டர் பரோஸின் வாஸஸ்தலத்தைப் பற்றிக் கேட்க, அச்சீமாட்டி அவரைத் தனது மாளிகையினுள் ளழைத்துச்சென்று, தமது வேலையாட்களை விளித்து, உடனே சுவாமிகளுக்கு வேண்டிய சௌகரியங்களைச் செய்யுமாறு ஏவிப் பின் அவரைப்பார்த்து இன்று பிற்பகலில் நான் நேரில் தங்களை அவரிடமழைத்துச் செல்லுகின்றேன். தாங்கள் முதலில் நீராடி ஆகாரஞ் செய்யுங்கள்' என்றியம்பினள். அவள் செய்த உதவிக்கு வையகமும் வானுலகு மாற்றலரிதென்று சுவாமிகள் எண்ணுவாரானர். இதுவன்றோ மகான்கள் சரிதையில் எங்கும் விசதம்!

நங்கையின் நல்ல உதவி

அம் மங்கையர்க்கரசியின் பெயர் ஜியார்ஜ் டப்ளியூ. ஹேல் (George W. Hale) என்பது. குறித்தவாறு சுவாமிகள் அம்மாதுடன் பரோஸ்துரை யவர்களைப்போய் பார்த்து, அவளுடைய சிபார்சாலும், தாம் கொண்டு வந்திருந்த கடிதங்களின் உதவியாலும் ஹிந்துசமயப் பிரதிநிதியாக ஏற்றுக்கொள்ளப்பட்டார். அப்பொழுதே அவருக்கு வேண்டிய சகல வசதிகளும் செய்து கொடுக்கப் பெற்றன. மிகவும் கௌரவமாகப் பலராலும் கொண்டாடப் பெற்று, மிக்க தொலையிலிருந்து ஆங்கு சபையின் பொருட்டு வந்திருந்த அன்பர்களை யெல்லாம் அவர் கண்டு அளவளாவிப் பேசினர். ஆக, சுவாமிகள் இடையில் நேர்ந்த பல இடையூறுகளையும் பொருட்படுத்தாது, தமது

சர்வ தர்மமகா சபையின்பிரதிநிதியாக ஏற்கப்படல்.

குருநாதரின் ஆக்ஞையை நிறைவேற்றவும், பாரததேச மகாத்மியத்தைப் பரப்பவும், ஹிந்து சமயத்தின் மகா சாஸ்திரப் பிரமாணங்களைக் கொண்டு அம் மதமே சர்வ சமயங்களுக்கும் உற்பத்திஸ்தான மென்பதை நிரூபித்து, வெற்றி முரசுடன் திரும்பவும், அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கடவுளைச் சிந்தித்த வண்ணம் சிகாகோ நகரில், பரிவ்ராஜகாசார்யாராக, சர்வ தர்ம மகா சபையில் ஹிந்துமதப் பிரதிநிதியாக விளங்கினார்.

சிகாகோவில் 1893-ம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் நடைபெற்ற சர்வ தர்ம மகா சபையிலிருந்து உலகச் சரித்திரத்தில் புதிய சகாப்த மேற்பட்ட தெனலாம். அதிலும் சமயங்களின் சரித்திரத்தில் அம் மகாசபை ஓர் புதிய நிலையை விளக்குவதாயிருந்தது. தவிர அச்சபையால், ஹிந்துசமயம் புத்துயிர் பெற்று, புகழ்கொண்ட தென்பதும் குறிப்பிடத்தக்கது. அம் மகாசபைக்கு உலகின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் பல மதானுசாரிகள் விஜயம் செய்தனர். அச்சபை சமயப்பாராளு மன்றமாக மட்டு மில்லாமல், மானுடர் பிரகிருதியின் மகிமையைப் பூர்ணமாகக் காணத்தக்க காட்சிசாலையாகவுமிருந்தது. மானுடப் பிறவியில் தோல் வித்தியாசம், ஜாதிபேதம் முதலியவற்றை யொழித்து யாவரும் ஒன்றுபட வேண்டுமென்ற நோக்கத்துடன் அம்மகாசபை விளங்கிற்று. இதனால் மேல் நாடுகளில் புதிய சமயநிலை புகுந்து திக்விஜயஞ் செய்த தெனலாம். அம் மகாசபையின் 'சாஸ்திரீகப் பிரிவுச் சபை'யின் தலைவரான மேன்மை தங்கிய திரு. மேர்வின் மேரி ஸ்நேல் அவர்கள்

சர்வ தர்ம மகா சபையின் விசேஷம்

'இம்மகா சபையில் கிறிஸ்தவ உலகம், அதில் முக்கியமாக அமரிக்கா ஐக்கிய மாகாணத்தாராகிய நாங்கள், கிறிஸ்தவ சமயத்தை விடப் போற்றத் தகுந்ததும், வேதாந்த விசாரத்தில் மிக்க ஆழ்ந்த கருத்துகளுடன் விளங்குவதும், மனோசக்தியால் உயர்ந்ததும், அஹிம்சா தர்மத்தையும் உடையதும், நீதி நூலிலிருந்து மயிரிழையும் வழுவாது பரிமாளிக்கும் மதங்கள் பலவுள வென்பதை அறிந்து கொள்ளும் பாக்யத்தை யடைந்தோம் ஹிந்துமதம், ஜைனமதம், புத்தசமயம், யூதமதம் முகம்மதீய மதம், எனும் மகத்தான சமயங்களின் ஆழ்ந்த கருத்துகளை இம்மகா சம்மேளனத்தின் வாயிலாக நாங்களறியலாயினோம்."

என்று வரைந்துள்ளார்.

உலகச் சந்தை நடைபெறுங்காலத்தில் அமரிக்காவிலிருந்த கிறிஸ்தவ குருமார்கள்-அவர்களுள்ளும் விசேஷமாக கத்தோலிய குருக்கள்

ஸ்ரீமத் விவேகானந்த ஸ்வாமிகள் ("சிகாகோ" சர்வதர்ம மகா சபையில் நின்று பேசும் நிலை.)

(324-ம் பக்கம்)

ஒரு 'சர்வ தர்ம மகாசபை'யை நடைபெறச் செய்யலாமென்றெண்ணி, ஒரு கூட்டங்கூட்டித் தீர்மானித்து, உலகத்தின் பலபாகங்களிலு முள்ள மதாசாரப் பிரமுகர்களுக்கு அழைப்புப் பத்திரமனுப்பவும், அவர் களை வரவேற்றுபசரிக்கவும் தக்க ஏற்பாடுகள் செய்திருந்தனர். அம் மகாசபைக்குக் கிறிஸ்தவ சமயத்தின் ஒவ்வொரு கொள்கைப் பேத முள்ள பிரிவினரும் சேரப் பதினாயிரத்துக் கதிகம்பேர் வந்திருந்தனர். உலக ஞானசாரிகள் பலரும் அங்கு பிரசன்னமாயிருந்தனர். ஆயிரத் திற்கு மேற்பட்ட சமய ஸ்தாபனப் பத்திரங்கள் அம்மகா சபைமுன் வாசிக்கப்பட்டன.

இவ்வித சிறப்புடைய அம்மத மகாசபையின் '**கலா பவநம்**' (Art Palace) என்ற கட்டிடத்தில் சமயப் பிரதிநிதிகள் வீற்றிருந் தனர். சுவாமிகள் அக் கட்டிடத்தைப்பற்றி வர்ணித்து, வரவேற்புப சாரப்பத்திரத்திற்கு வந்தனமளிக்கு முன்னிருந்த தமது மனோநிலை யைப் பின்வரும் கடித வாயிலாக வெளியிட்டுள்ளார்.

சர்வதர்ம சபை மண்டபத்தின் வர்ணனை

"சர்வதர்ம மகாசபை ஆரம்பமான தினத்தின் காலையில் நாங்களனைவரும் '**கலாபவநம்**' என்னும் பிரம்மாண்டமான மாளிகையிற் கூடினோம். அதில் சர்வதர்மசபை கூட்டங்களுக்காகப் பென்னம் பெரிய அத்தாணி மண்டபமொன்றும், வேறு சிற்சிறு மண்ட பங்களும் அமைந்திருந்தன. எல்லா தேசவாசிகளும் அம் மண்டபத்திற் கூடியிருந்தனர். இந்தியாவிலிருந்து பிரம்மசமாஜப் பிரதிநிதியாக ஸ்ரீஜத் மஜும்தாரும், பம்பாய் நாகர்கரும், ஜைனமத சித்தாந்தியான ஸ்ரீஜத் காந்தியும் திவ்ய ஞான சங்கத்தின் பக்ஷமாக ஸ்ரீஜத் சக்ரவர்த்தியும், பெசண்டம்மையாரும் அங்கு விஜயம் செய்திருந்தனர். இவர்களுள் மஜும்தாரும் யானும் பழைய நண்பர்கள்: சக்ரவர்த்தி யவர்கள் மட்டும் என்னைப் பற்றிப் பெயரளவில் முன்னறிமுக முடையவர். அவ்வம யம் நாங்களனைவரும் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டு, சொற்பொழிவு நிகழும் மேடையின் மேற்புறம் இருபக்கங்களிலும் வரிசையாக அமர்ந்தோம். ஆஹா! அந்த அலங்கரிக்கப் பெற்ற மண்டபத்தில் கூடிய சபையின் காட் சியை நான் எவ்விதம் விவரிப்பேன்! கீழே ஓரழகிய அத்தாணி மண்டபம் விளங்கிற்று. அதன் நாற்புறமும் அந்நாட்டின் நாகரீகப்பெருக்கும் கல்விகேள்வி களின் சிறப்பும் வாய்ந்த சுமார் ஏழு எட்டு ஆயிரம் மகாஜனங்கள் நிறைந்த விசாலமான சந்திரசாலை (காலரி) யொன்று அற்புதமாக விளங்கிற்று. பிரசங்க மேடையில் பல தேசங்களிலிருந்தும் அங்கு வந்திருந்த பிரபல சமயவாதிகள் வீற்றிருந்தனர். இத்தகைய சபையில்—முன்பின் பலர்முன் பேசிப்பழக்க மில்லாத யான்!—ஒரு சந்நியாசி!! காவி யாடையுடன் மகாபண்டித மணி களின் முன் பேச முன்வந்த பேதமை யென்ன!!! இதையெல்லாம் நீங்கள்

மானசிகப் படுத்திப் பார்த்தால் ஒருவாறு இச் சபையின் அலங்காரத்தையும் வைபவத்தையும் ஊகித்தறிய வியலும். அச்சபை மங்கல வாத்யங்கள் முழங்க, சமயங்களின் வெற்றி முரசமொலிப்பத் தோத்திரத்துடன் தொடங்கா நின்றது. சமயாநுசாரிகளனைவரும் சபைக்கு அக்கிராசனாதிபதியால் அறிமுகம் செய்விக்கப் பெற்றபின் ஒவ்வொருவராய் முன் வந்து பேசத் தொடங்கினர்.''

சர்வதர்ம மகாசபை எவ்வாறிருக்கு மென்பதை சுவாமிகள் முன்பாக அறியாராதலின் அம் மகத்தான கூட்டத்தைக் கண்டவுடன் அவருக்குப் பேசக் கூச்சமாயிருந்தது. அதில் வீரத்துட னெழுந்து ஆணித்தரமாகப் பேசும் தைரியமும் அவருக்கு முதலில் ஏற்படவில்லை. அங்கு கூடியிருந்த மக்களனைவரும் மிகவும் ஆவலோடு சொற்பொழிவு களைக் கேட்க நிர்சப்தமாக அமர்ந்திருந்தார்கள். இளவரசர்களைப் போல் கிறிஸ்தவ மதப்பிரசங்கிகள் உடைதரித்து மேடையில் வீற்றிருந் தனர். இவர்களிடையில் நமது இந்திய சந்நியாசி தமது சாதாரண உடையுடன் அமர்ந்திருப்பதை அவர்கள் உற்றுப் பார்த்தவண்ண மிருந்தார்கள். விவேகானந்த சுவாமிகள் இவற்றை யெல்லாம் பார்த்துக் கொண்டே, ஏனைய பிரதிநிதிகள் பேசுவதையும் கவனித்த வண்ணம், திவ்யத்தாயின் திரு தாள்களைத் தியானித்தவாறு வீற்றிருந் தார். அவைத்தலைவர் அவரைப் பேசும்படி வேண்டும்போதெல்லாம் ஏதோ ஓர்வித கூச்சத்தால் அவர் 'பின்னராகட்டும்' என்று சொல்லிக் கொண்டே வந்தார். அன்று இடைவேளை போஜனமான பின், மறு படியும் அனைவரும் கூடினர். இத் துறவி எழுந்து பேசமாட்டார் போலுமென்று அக்கிராசனாதிபதி நினைக்கும் வரையில் சுவாமிகள் மெல்ல போக்கு சொல்லிக்கொண்டேவந்தார். அவ்வமயம் திடீரென்று ஒருவித சக்தி அவரை ஆட்கொண்டது. அவர் முன்பாக ஓர் ஜோதி தோன்றி அவரது கண்களுக்குள் நுழைந்தது. அவர் ஒருமுறை சபை யோர்களைத் திரும்பிப் பார்த்தார்; அவரிடம் சப்தரிஷிகளின் மகா தபோபல மெல்லாம் ஒன்று கூடிப் பொலிந்தன. அவர் ஸ்ரீராம கிருஷ் ணரின் திருவடி நிழலில் வீற்றிருப்பதுபோல் விளங்கினார். வேதாந்த தாத்பரியங்கள் அவர் நாசியின் சுக்கிர நாடிவழியே சஞ்சரித்தன. கம் பீரமாக சுவாமிகள் குதித்தெழுந்து நின்றார்; சரஸ்வதி தேவியை யொரு முறை தியானித்த வண்ணம்' அமரிக்கா வாசிகளான எனது அன் பார்ந்த சகோதர சகோதரிகளே !' எனத் திருவாய் மலர்ந்தார். இச் சொற்களைக் கேட்ட அக்கணமே சபையோர் கரகோஷம் செய்து,

சர்வதர்ம சபையின் தொடக்கம்

அதிக உற்சாகத்துடன் குதித்துப் புகழுரை புகலவாரம்பித்தனர். அச் சபையோரின் குதூகல மடங்கக் கொஞ்ச நேரமாயிற்று. சாஸ்வதி தேவி அவர் வாக்கில் கோயில் கொண்டு விளங்கினுள். 'ஆ என்ன! இதுவரையில் நம்மில் ஒருவரும், இதுவரை மேடையில் வந்தஷுபை சாரத்திற்கு உத்தரமாகப் பேச எழுந்த எவரும், சகோதரத்வத்தைப் பற்றி நினைத்தது மில்லையே' என்று சொல்லிப் பொங்கினர். "குயிலினு மினிய குரலுடன் பேசும் இத்தெய்வ புருஷன் யாரோ!" வென்று சிலர் பிரமித்தனர். "அவர் கம்பீரப் பார்வையே நம்மைப் பரவசமாக்கி விட்ட" தென்றூர் சிலர். எந்த பரமபுருஷனுடைய சங்கற்பத்தால் இவ்வவனியும், அதன் கண்ணுள்ள பலகோடி ஜீவராசிகளும் தோன்றி விளங்குகின்றனவோ, அந்த அகிலலோக காரணஞன சர்வேஸ்வரன் அவரிடத்து அப்பொழுது சாந்நித்யமாயிருந்தார். சில நிமிஷங்களுக்குப் பிறகு இயற்கையாக அச்சபையின் உற்சாக கரகோஷங்கள் தணிந்த பின் சுவாமிகள் மேலே பேசத் தொடங்கிஞர்.

சபை யோரின் உற்சாகம்

சகோதரிகளே! சகோதரர்களே!

நீங்கள் எங்களை முகமலர்ச்சியோடு ஏற்று உபசரித்தற்காக நான் பிரதிவந்தன மளிக்க எழுங்கால் என்னுள்ளம் அளவிட்டுரைத்தற்கரிய ஆனந்த மடைகின்றது. இவ்வுலகிற் றேன்றியுள்ள மஹான்களின் போால் நான் உங்களுக்குப் பிரதி வந்தனஞ் செய்கின்றேன்? சகல மதங்களுக்கும் எது தாய் மதமாக விளங்குகின்றதோ அம் மதத்தின் பிரதிநிதியாக நான் உங்களுக்கு வந்தன மளிக்கின்றேன். பலவகைச் சாதியினரும், சமயத்தினருமான பல கோடானுகோடி ஹிந்துமகா ஜனங்களின் பிரதிநிதியாக நான் உங்களைப் போற்றுகின்றேன்.

சபை வணக்கம்.

பூமியின் பல்வேறு திசைகளிலிருந்தும் இம் மகாசபைக்கு வந்து வீற்றிருக்கும் பலர் சர்வ மத சமரஸத்தைச் சார்ந்து சொற்பொழிவுகள் நிகழ்த்துவார்களென்றும், அப் பெரியார்கள் புறச்சமய தூஷணையின்றி, இதரமதக் கொள்கைகளையும் ஆதரித்துப் பேசுவார்களென்றும் எனக்கறிவித்த அன்பர்களுக்கு எனது மனமார்ந்த வந்தனம் உரியதாகும். நான் சகல சமயங்களையும் தழுவி ஞானமூட்டிய தாயகமான சமயத்தைச் சேர்ந்தவனென்ற உயர்வால் எனது உள்ளம் பூரிக்கின்

றது. எங்களுடைய ஹிந்து சமயகிரந்தங்கள் வரையப்பெற்றுள்ள சம்ஸ்கிருத பாஷையில் 'எக்ஸ்க்ளுஷன்' (விலக்கு) என்ற சொல் இல்லா திருத்தலினின்றும், எங்களுடைய சமயத்தினுயர்வை ஊகித்தறியலாம். நாவலன் தீவின் நாலாபக்கங்களினின்றும் மதக்கொடுமைகளால் துன் புறுத்தப்பட்டு தப்பியோடி வந்த மக்களைத்தாங்கி ஆதரித்த ஹிந்து சம யத்தைச் சார்ந்தவன் யான். முன்னாட்களில் ரோமாபுரியில் ரோமர் களின் மதக்கொடுமைக்காற்றாது, தங்கள் ஆலயம் அழிக்கப்பட்ட பொழுது, தப்பியோடி எங்கள் தென்னாட்டை வந்தடைந்த யூதகுல திலகர்களை நாங்கள் பரிவுடனேற்றுபசரித்தோம். அடைக்கலமென் றடைந்த பாரசீக ஜரதஷ்டிர மதஸ்தர்களை அன்புடன் ஏற்று, அஞ்சே லென்றருளிய சமயம் எதுவோ அதைச்சேர்ந்தவன் நான்! இப் பொழுது யான் எனது இளமை முதல் தினந்தோறும் அப்பியசித்து வருவதும் ஒவ்வொரு ஹிந்துவாலும் ஓதப்பட்டு வருவதுமான ஓரிய சுலோகத்தின் முதலிரண்டு அடிகள் எனது ஞாபகத்திற்கு வருகின் றன. கேளுங்கள்!

𑌰𑍁𑌚𑍀𑌨𑌾𑌂 𑌵𑍈𑌚𑌿𑌤𑍍𑌰𑍍𑌯𑌾𑌤𑍍 𑌋𑌜𑍁𑌕𑍁𑌟𑌿𑌲
𑌨𑌾𑌨𑌾𑌪𑌥𑌜𑍁𑌷𑌾𑌂 ।
𑌨𑍃𑌣𑌾𑌮𑍇𑌕𑍋 𑌗𑌮𑍍𑌯𑌸𑍍𑌤𑍍𑌵𑌮𑌸𑌿 𑌪𑌯𑌸𑌾𑌮𑌰𑍍𑌣𑌵 𑌇𑌵 ।

'பல்வேறிடங்களினின்றும் புறப்படும் நதிகள் வெவ்வேறு வழி யோடிவரினும், அவை ஒரே கடலில் போய் சங்கமமாவதுபோல், அபி ருசி வேறுபாட்டால் மக்கள் பற்றும் மார்க்கங்கள் வேறுபடினும், அவர்கள் முடிவில் உனது பொற்பாத கமலங்களையே அணைகின்றனர்' என்பதே.

ஸ்ரீமத் பகவத் கீதையில் ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மா அருளிச் செய் துள்ள,

𑌯𑍇 𑌯𑌥𑌾 𑌮𑌾𑌂 𑌪𑍍𑌰𑌪𑌦𑍍𑌯𑌨𑍍𑌤𑍇
𑌤𑌾𑌂𑌸𑍍𑌤𑌥𑍈𑌵 𑌭𑌜𑌾𑌮𑍍𑌯𑌹𑌮𑍍 ।
𑌮𑌮 𑌵𑌰𑍍𑌤𑍍𑌮𑌾𑌨𑍁𑌵𑌰𑍍𑌤𑌨𑍍𑌤𑍇
𑌮𑌨𑍁𑌷𑍍𑌯𑌾𑌃 𑌪𑌾𑌰𑍍𑌥 𑌸𑌰𑍍𑌵𑌶𑌃 ॥

"பார்த்தனே! எவரெவர் என்னை எங்ஙெந்த விதமாக ஆராதித் தாலும் அவர்கள் மனோபீஷ்டப்படி நானவர்களை அடைகின்றேன்" என்ற மகாவாக்கியத்திற்கிலக்காக இம்மகாசபை விளங்குகின்றது.

மதஸ்தர்களின் கக்ஷிபேதத்தாலும், மூடபக்தர்களின் கொடிய மத வீராவேசத்தாலும் அன்பெனுஞ் சமயப் பெருமித மடியோடு வற்றி அவனியில் மிருகபலத்தின் எழுச்சியால் இரத்த வெள்ளம் பெருக லாயிற்று. இம்மதக்கொடுமைகளால் எத்தனையோ நாடுகள் அழிந்து, மக்கள்மாண்டு, நாகரீகம் நாசமாகி, சத்வகுணம் சங்கரிக்கப் பட்டு யாவு மலங்கோலமாயின. இத்தகைய விபரீதங்கள் நடைபெறா திருக்குமேல் தேசங்கள் இக்காலத்தில் மகோந்நத நிலையை யடைந் திருக்கும். ஆனால் இம்மதாவேசத்திற்கு மாணகாலம் இப்பொழுது நெருங்கிவிட்டது. இன்றுகாலையில் இம்மகாசபை தொடங்குங்கால் அடித்த மணியே மதப்பேயின் மாணத்தை அறிவித்ததாகும். ஒரே பரம்பொருளை நாடிச்செல்லும் பலமதத்தினரும் இனி இத்தகைய தீங்குகளின்றும் மீண்டு, சமரஸ பாவனையுடன், பரஸ்பர அன்புள்ள வர்களாய் வாழ இறைவன் அருள்புரிவாராக.

சுவாமிகளின் சொற்பொழிவு அன்று மிகவும் சிறிதானதாகவே யிருந்தாலும் அதன் மகிமையையும் உயர்வையும் எவராலும் எடுத் தெழுத வியலாது. ஏனைய சமயாநுசாரிகள் தத்தம் சமயக்கோட் பாடுகளை வலியுறுத்திப் பேசி முடித்தபின்னர், சுவாமிகள் வையகத் துள்ள சமயங்களையெல்லாம் சமரஸப்படுத்திக்காட்டி அவற்றின் எல்லை யொன்றே யென்று விளக்கிப்பேசியதை எவர்தான் புகழவல்லார்? ஏனைய சமயவாதிகள் தத்தம் சமயக்கொள்கைகளை ஆங்கு கூடியிருந்த மகாஜனங்களுக்கு எடுத்துரைத்தனர். ஆனால் விவேகானந்த சுவாமி களோ அவர்கள் இதயத்தில் ஞானவிளக்கேற்றினர். அன்றைய கூட் டம் குதூஹலமாக 'இவரே அவதார புருஷர்! இவரே மஹான்! ஞானசாரியன்!' என்று அனைவரும் போற்ற முடிவடைந்தது.

கல்லிடைப் பிறந்து போந்து கடலிடைக் கலந்த நீத்த
மெல்லையில் மறைக ளாலு மியம்பரும் பொருளீ தென்னத்
தொல்லையி லொன்றே யாகித் துறைதொறும் பரந்த சூழ்ச்சிப்
பல்பெருஞ் சமயஞ் சொல்லும் பொருளும்போற் பரந்த தன்றே.

என்னும் கம்பராமயாணம் பாலகாண்டம் ஆற்றுப்படலம் 19-ம் செய் யுள் இப்பொருள் பற்றி நிற்றல் காண்க.

1893-ம்௵ செப்டேம்பர்மீ 15-ம்௳ வெள்ளிக்கிழமை பிற்பக லில் கூடிய சர்வதர்ம மகாசபையின் ஐந்தாம் நாள் கூட்டத்தில், பல் வேறு மத சித்தாந்திகளும் பேசி முடித்தபின்னர் சுவாமிகள் கா

கோஷத்தினிடையே எழுந்து பின்வருங் கதையைச் சொல்லி அனை வரையும் மகிழ்வித்தார்.

அன்பர்களே !

ஒரு சிறு கதை சொல்லவே யான் இப்பொழுது முன்வந் துளேன். இதுவரை பிரசங்கித்த அன்பர்கள் புறமத இகழ்ச்சியை யொழித்துவிட வேண்டுமென்று வலியுறுத்திப் பேசினார்கள் அவர் கள் சொற்பொழிவுகளி னின்றும் மதாநுசாரிகளுக்குள் ஏற்பட்டுள்ள மனஸ்தாபத்தைப் போக்கவேண்டு மென்பது பெறப்பட்டது. மத பேதத்திற்குக் காரணமாயுள்ளதெது வென்பது பின்வருங் கதையால் விளங்கும்.

சர்வ சமய சகோதர தத்துவம்

வெகு காலமாக ஒரு கிணற்றில் ஒரு தவளை வசித்துவந்தது. அத் தவளை அக்கிணற்றிலேயே பிறந்து வளர்ந்துவந்தபோதிலும் அதன் சரீரம் எவ்வித வளர்ச்சியையு மடையாது ஒரே விதமாயிருந்துவந்தது. அக்காலத்தில் நிகழ்காலத்தி லுள்ளதுபோல் நவீன வளர்ச்சி வாதிகள் ஒருவருந் தோன்றாமையால் பிறந்ததுமுதல் அக் கூவலைவிட்டு வெளி வாரதிருந்த அந்தத்தவளை கண்பார்வை பெற்றிருந்தும் பெற்றதா லடையும் பயனொன்றையு மடையவில்லை. தற்கால கீடதத்துவ விற் பன்னர் அடைகின்ற அத்துணை மகிழ்ச்சியை அத்தவளையும் அக்கிணற் றிலிருந்த புழுக்களைத்தின்று அனுபவித்து வந்தது. இவ்வாறிருக்கும் நாளில் கடலில் வசிக்குந்தவளையொன்று யதேச்சையாக அக்கிணற்றை வந்தடைய, அதனை அதிசயத்துடன் நோக்கி, இத்தவளை 'நீ எங் கிருந்து வந்தனை ?' என்றுகேட்டது. அக்கடற்றவளையும் 'கட லிருந்து' என்று விடையளித்தது. கடலென்ற சொல்லைக்கேட்ட கிணற்றுத்தவளை உடல்மயிர் பொடிப்ப ஆச்சரியத்துடன் "கட லென்ன இவ்வளவு பெரியதாயிருக்குமா ?" என்று அக்கூபத்தின் ஒரு ஓரத்திலிருந்து மற்றொரு ஓரத்திற்குத் தாவியது. கடற்றவளை 'இதென்ன விந்தை ! இச்சிறு கிணற்றைச் சமுத்திரத்திற் கொப்பிடுவ தெப்படி ?' என, கிணற்றையன்றி வேறொன்றையுங் கண்டறியாத அக்கூபத்தவளை, மற்றொருமுறை குதித்து 'இவ்வளவு பெரிதாயிருக் குமா ?' என்று கேட்டதாம். சமுத்திரத்தவளை 'அறிவீனம் முற்றிய நீ சமுத்திரத்தைக் கிணற்றுக் கொப்பிடுவ தெவ்வாறு ஒக்கும் ?' என, அக்கிணற்றுத்தவளை கோபத்துடன் "எனது கிணற்றைவிடப் பெரி

தான தொன்றும் இருக்கமுடியுமா? இவன் பெரும் பொய்யன், இவனை விரட்டுங்கள்'' என்று கூறிற்றும். சகோதரர்களே! இந்நிலையிற்றும் நாமித்துணை காலமா யிருந்துவந்தோம்! ஹிந்து மதத்தைச் சார்ந்த யான் எனது இந்தியாவாகிய சிறு கிணற்றிலிருந்துகொண்டு, அதுவே பிரபஞ்சமென்றும் அதற்கு ஒப்பானதும் மிக்கதுமில்லையென்றும் நினைக்கின்றேன்; அவ்விதமே கிறிஸ்துவ ரொருவரும் அவரது நாடாகிய சிறு கிணற்றிலிருந்து அதுவே உலகமென்று எண்ணுகின்றார். முகம்மதியரும் அவ்விதமே தமது கிணற்றைவிடப் பெரியது வேறில்லையென்று கருதுகின்றார்.

ஆதலால், அமரிக்கா நாட்டு அன்பர்களே! இம் மத வளர்ச்சிக்குரிய இடையூறுகளைப் போக்கி சர்வதர்ம சமரஸ பாவனையைப் பெருக்கத் தாங்கள் கொண்டுள்ள முயற்சி திருவினையாமாறு நான் இறைவனது திருவருளைப் பிரார்த்திக்கின்றேன்.

இக்கதையால் சுவாமிகள் அங்கு கூடியிருந்த மகாஜனங்களைக் களிப்பித்தார். அன்றுமுதல் அமரிக்கா நாடெங்கணும் விவேகானந்த சுவாமிகளைப்பற்றிப் பத்திரிகைகள் புகழ்ந்தெழுதவாரம்பித்தன; விவேகானந்த சுவாமிகளின் பிரசங்கத்தைமட்டும் கேட்கவேண்டுமென்ற அவாவுடன் பலர் அம்மகாசபைக்குத் திரள் திரளாக வர ஆரம்பித்தனர். அமரிக்கா நாட்டு அறிவாளிகளின் நாவிலெல்லாம் சுவாமிகள் கலைமகள்போன்று விளங்கினார். இங்ஙனம் சுவாமிகள் 'சர்வதர்ம மகாசபை'யின் பூர்வாங்கத்தில் இருமுறை பேசினார். அப்பால், சர்வ தர்ம மகாசபையின் ஒன்பதாம் நாள் 'ஹிந்துமதம்' என்பது பொருளாக ஒருபந்நியாசஞ் செய்தார். அதனை அடுத்த அத்தியாயத்திற் காண்போம்.

27-ம் அத்தியாயம்.

ஹிந்துமதப் பிரசங்கம்

உயர்திரு சுவாமிகள் 1893-ம்௵ செப்டம்பர்௴ 17௳ ஞாயிற்றுக்கிழமையாகிய ஒன்பதாம் நாள் சர்வ தர்ம மகாசபை கூடியபொழுது செய்தருளிய உபந்நியாசம் பின்வருமாறு:-

சகோதரர்களே! சகோதரிகளே!

சரித்திர ஆதாரத்துடன் காலவரையறை கண்டுரைக்க வியலாத தொன்மைபெற்று விளங்கும் சமயங்கள் மூன்று. அவை, ஹிந்துமதம், பாரசீகர் சமயமான 'ஜரதஷ்டிரமதம்' 'யூதமதம்' ஆகியமூன்றே யாகும். இம்மூன்று சமயங்களும் பயங்கரமான ஆபத்துகள் பல நேர்ந்தும், தமது அஸ்திவார பலத்தால் அவ்வாபத்துகளை யெல்லா மெதிர்த்து வெற்றிவாகை சூடிவிளங்குகின்றன. யூதமதம் கிறிஸ்து சமயத்தைத் தன்னுள்ளடக்கிக்கொள்ளச் சக்தியில்லாமல் தமது ஜன்ம பூமியினின்றுந் துரத்தப்பட்டது. தற்காலமுள்ள சில நூற்றுக் காணக்கான பாரசீகர்களே ஜரதஷ்டிரமதத்தின் அடையாளமாக விளங்குகிறார்கள். இவற்றின் நிலை யிவ்வாறாக, ஹிந்து மதத்தின் நிலையென்ன வென்பதை யாராய்வோம். பாரதநாட்டிலோ, மிக்கப் புராதனமான வேதமார்க்கத்தை வேரோடு பெயர்த்தெறிய அநேக சமயபேதங்கள் ஒன்றின்பின் னொன்றாகத் தோன்றியும், மிக்கபயங்கரமான பூகம்பத்தில் சற்று பின்வாங்கிப் பின்பு முன்னிலும் பன்மடங்கு வேகத்துடன் யாவற்றையும் கவர்ந்து கொள்ளும் சக்தியோடுகூடி எதிர்த்துவரும் கடல்போல் வேதமதம் முதலிற் சற்று பின்வாங்கினபோதிலும், பின்னர் வன்மையுடனெழுந்து நொடிப்பொழுதில் அம்மத பேதங்களைத் தனது அருட்பார்வையால் வென்று அடிமையாக்கி விளங்கிற்று. இந்தியாவில், துவைதிகள் முதல், அஞ்ஞேயவாதிகளான பௌத்தர்கள், நாஸ்திக வாதிகளான ஜைனர்கள், தாழ்ந்த விக்கிரஹ ஆராதனை செய்கின்றவர்கள் வரையில் யாவருக்கும், பல்வகைப் புராணக்கதைகளுக்கும் எங்களுடைய ஹிந்துமதம் தாயகமாகத் திகழ்கின்றது. ஐரோப்பிய விஞ்ஞான நூல்களால் நிகழ்காலத்தில் கண்டுபிடிக்கப்பட்டிருப்பவை யாவும் ஹிந்துமதத்தின் குழந்தைகளென்றே கூறலாம். சைவம், வைணவ முதலான சகலமதங்களுக்கும் ஆதாரமாயிருப்பது ஹிந்து மதந்தான். இவர்கள் எல்லோரும் வேதத்தையே பிரமாணமாகக்

கொண்டாடுகிறவர்கள். இனி வேதமென்பது என்னவென்று கூறுகின்றேன்.

வேதம்.

வேதம் அநாதியானது. ஒரு புத்தகத்திற்கு முதலும் முடிவுமில்லையெனல் எவ்வாறு பொருந்துமென்று நீங்கள் வினவலாம். வேதமென்பது ஒரு ஆசிரியரால் வரையப்பெற்ற நூலன்று. பல மஹரிஷிகள் ஈஸ்வர சம்பந்தமாக இயற்றிக் கண்டுணர்ந்த அனுபவநிதியே வேதமெனப்படும். பூமிக்கு இயற்கையாயுள்ள, ஆகர்ஷண சக்தி, முதல் முதல் உண்டானகாலம் இது என்று நாம் கண்டுரைத்தல் முடியாத காரியம். அச்சக்தியை நாமறிந்த பின்னரும் பூமி இழப்பதில்லை. இவ்வுண்மையைச் சமீப காலத்திலேதான் தத்துவ ஞானிகள் கண்டறிந்தனர். அதுபோலவே வேதமுண்டான காலமிதுவெனக் குறிக்க எவராலு மியலாது. இவ்வாறே ஜீவான்மாவும் பரமாத்மாவும் ஒன்றேயென்ற உண்மை உள்ளகாலம் இன்றல்ல, நேற்றல்ல. இந்த உண்மைகள் நாம் மறந்துவிடினும் அவை ஒன்றேயாகி என்றும் விளங்குவன. இவ் வேத விதிகளை வெளியிட்டவர்கள் மகரிஷிகள். அவர்கள் சந்ததியிற்பிறந்த நாங்கள் அவர்களைப் பரிபூர்ண ஞானசித்தி யடைந்த மஹான்களென்று போற்றுகின்றோம். அவர்களுள் மகோந்நத நிலையில் விளங்கியவர்களிற் சிலர் பெண்பாலரென்று கூறவெழுங்கால் என் உள்ளம் உவகையால் பூரிக்கின்றது.

நான் சற்றுமுன் வேதம் அநாதியானதென்று கூறியதற்கு அவை அழிவற்ற சம்பந்த முடையனவாய், பெருகுவன வாதலின் முடிவில்லாதிருக்கலாமானாலும், ஆரம்பமில்லை யென்பது எவ்வாறு பொருந்துமென்ற ஆசங்கையுண்டாகலாம். வேதத்தில், சிருஷ்டிக்கு எவ்வித ஆதியுமில்லை, முடிவுமில்லை யென்று கூறப்பெற்றுளது. தற்கால ஐரோப்பிய விஞ்ஞான சாஸ்திரிகளுமிதை ஆமோதித்தே உலக சக்தித்திரளானது ஏறக் குறைவுபாடின்றி எந்நாளும் ஒரே அளவுள்ளதென்று கூறுகின்றனர். ஆதலின் ஒன்றுமேயில்லாத காலமொன்றிருந்திருக்குமானால், அப்பொழுது இவ்வித வேறுபாடுகளைத் தோற்றுவிக்கும் பிராணசக்தி எங்கே யிருந்தது? சிலர் அவ்யக்தபரப்பிரம்ம வடிவாக இருந்ததென்பர். அவ்வாறாயின் அவ்யக்த பரப்பிரம்மத்திற்குச் சிலகாலம் அவ்யக்தமாகவும், சிலகாலம் வியக்தமாகவும் விவகரிக்கும் நிலைபேதங்க ளுண்டென்றேற்படு மன்றோ? நிலைமாறுபடுந் தன்மை பரப்பிரமத்திற்குண்டெனில் அது இயற்கையினின்று

மாறுபட்டதாய், செயற்கையானதாகி அழிவென்னும் முடிவை யடையவேண்டுமல்லவா? இதனால் பரப்பிரம்மத்திற்கு அழிவுகால மொன்றுண்டு என்றல்லவா ஏற்படும்? ஆனதுபற்றி சிருஷ்டிக்கு ஆதியுமந்தியமுமில்லை யென்பது ஹிந்துக்களின் கொள்கை. இவ்வுண் மையை உதாரணத்துடன் விளக்குவேன். சிருஷ்டி, சிருஷ்டிகர்த்தா ஆகிய இவ்விரண்டையும் முதலும் முடிவுமில்லா இரண்டு சமதூர ரேகைகளுக்கு ஒப்பிடுங்கால் சிருஷ்டிகர்த்தாவாகிய கடவுள் சக்தி சொரூபியாயும், நியந்தாவாயுமிருந்து, தமது சக்தியால் ஊழிக்காலத் தில், பிரளய சமுத்திரத்தினின்றும் சூர்யன், சந்திரன், நக்ஷத்திரங் கள், பிரபஞ்சம் முதலிய பிரம்மாண்டங்களைச் சிருஷ்டித்துக் காத்துப் பின்னர் அழித்துவிடுகின்றார். இவ்வாறு எப்பொழுதும் நடைபெற் றுக் கொண்டேயிருக்கிறது. இதை ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு பிராம்மணச் சிறுவனும்,

"ஸூர்யாசந்த்ரமஸௌ தாதா யதா பூர்வமகல் பயத்"

(கடவுள் சூர்ய சந்திரர்களை முன்போலவே படைத்தார்) என்ற சுலோ கத்தால் அத்யயநம் பண்ணுகிறான். ஐரோப்பிய விஞ்ஞானிகளுமிதை ஆமோதிக்கிறார்கள்.

நித்திய வஸ்துவின் இலக்கணம்

நான் இங்கே நிற்கிறேன்; எனது கண்களை மூடிக்கொண்டு 'நான் நான் நான்' என்று எனது ஸ்திதியைப்பற்றி நினைக்கும்போது எனக் குண்டாகும் எண்ண மென்ன? கேவலம் சரீரத்தின் பாவனையே யல் லவா? அப்படியானால், நான் சடப்பொருள்களாலான அசேதனப் பொருளேயன்றி விசேஷமான வேறெதுவுமல்லனோ? அதற்கு வேதம் என்னைச் சடப்பொருளின் சேர்க்கையல்ல வென்கின்றது. 'நான்' என்பது இத்தேகத்துள் நிவசிக்கும் ஆத்மா; 'நான்' இச்சரீர மல்லன்; இவ்வுடலழிந்துபோம்; நானோ என்றும் அழிய மாட்டேன்; நான் இப்பொழுது இங்கே இந்த சரீரத்திலிருக் கிறேன்; இது அழிந்த பின்னரும் இருந்து கொண்டே யிருப் பேன். இந்த உடலை யடைவதற்கு முன்பும் 'நான்' இருந்தேன். ஆன்மா சிருட்டிக்கப்பட்டதன்று, ஏனெனில், சிருஷ்டி யென் பதற்குச் சேர்க்கை யென்பது பொருள். அச் சேர்க்கைப் பொருள் நிச்சயமாக என்றாகிலும் அழியவே வேண்டும். ஆதலின், ஆத்மா

வென்பது சிருஷ்டிக்கப்பட்ட வஸ்துவானால் உறுதியாக அழிய வேண்டியதுதான். சிலர் பிறவியில் சுகங்களையே யனுபவிக்கின்றனர்; சிலர் பூர்ண தேகாரோக்யம், அழகமைந்த மேனி, மனோவலிமை முதலியவற்றுடன் எவ்விதக் குறைவுமின்றி பாக்கியவந்தர்களாகப் பிறக்கின்றனர். வேறு சிலர் நிர்ப்பாக்கியர்களா யுழலுகின்றனர். சிலர் அங்கஹீன முற்றும், பின்னுஞ் சிலர் மந்த புத்தியுள்ளவர்களாயுந் தோன்றி கஷ்டப்படுகின்றனர். அவர்கள் அனைவரும் படைக்கப்பட்டவர்களானால் நியாயவானும் கருணாநிதியுமான சர்வேஸ்வரன் அத்துணை பக்ஷபாதமாக ஒருவனை சுகியாகவும் மற்றொருவனைத் துக்கியாகவும் படைப்பானேன்? இதற்கு, 'இந்தப்பிறவியில் துக்கப்படுவோர் மறுபிறப்பில் சுகத்தை யனுபவிப்பர்' என்பதும் தக்க சமாதானமாகாது. நியாயமூர்த்தியும் கருணாகரனுமான கடவுளின் சந்நிதானத்தில் ஏனிப்பிறவியிற்கூட ஒருவன் நிர்ப்பாக்கியனாக வேண்டும்?

இரண்டாவதாக சிருஷ்டிகர்த்தா-கடவுள் என்னும் கொள்கைப்படி, இந்த விஷயத்திற்குத் தக்க சமாதானங் கூற வியலவில்லை. ஏனெனில் சர்வவல்லமையுள்ள ஒருவருடைய கொடூரச் செய்கைகளையே அக்கொள்கை தெரிவிக்கும். ஆகவே, ஒருவன் இன்பத்தையோ அல்லது துன்பத்தையோ அடைவதற்குக் காரணம் அவன் பிறந்ததற்கு முன்பிருந்தே இருந்திருக்க வேண்டும். அவைதாம் அம் மனிதனுடைய பூர்வஜன்ம கர்மாக்கள் (வினைகள்) எனப்படும். மனிதனுடைய பலவிதமான மனோபாவங்களுக்கும், தேகக்கூறுக்கும் அவனது பரம்பரை வாசனையே காரணமாயுள்ளன வல்லவா? என்றால், இங்கே ஜடத்தைப்பற்றியும் சைதன்யத்தைப் பற்றியுமான இரண்டு நிலைகள் உள்ளன.

சேதனப் பொருளின் பரம்பரை வாசனை.

ஜடமும், அதன் விகாரங்களும், நமது காரியங்களுக் கெல்லாம் காரணமாகுமானால், ஆன்மா வென்பது இருப்பதாகக் கொள்ள வேண்டிய அவசியமேயில்லை. ஆனால், ஜடப்பொருளி னின்றும் சைதந்ய சக்தி யுண்டாயிற்றென்று நிரூபிக்க முடியாது. ஆனது பற்றி, ஒரு தனிமையுள்ள ஜடப்பொருளிலிருந்து சகல சிருஷ்டிகளும் ஏற்பட்டனவென்று கொள்ளத் தேவையானால், ஒரே மூல சைதன்யத்திலிருந்து பிரபஞ்சமனைத்தும் உற்பவித்ததென்று கொள்வது அவசியமான முடிபாகவும், யுக்திக்குப் பொருந்தியதாயும், அனைவராலும் ஏற்கத்தக்கதாயு

மிருக்குமன்றோ? ஆனால், இவ் விஷயத்தைப்பற்றி இப்பொழுது ஆராய வேண்டிய அவசியமில்லை. சில சரீர சுபாவங்கள் பரம்பரையாக வந்தன வென்பதையும் நாம் மறுக்க முடியாது. சரீர சுபாவங்கள் ஒரு வகையில் ஆன்மாவுக்கு மட்டும் அதன் இயல்பிற்குரித்தான ஒரு வழியில் துணைபுரிவதற்குப் பொருந்தியதாம். ஆன்மாவையே பொறுத்த சில சுபாவங்கள் அதன் முன் வினையினால் ஏற்படுகின்றன. ஒருவித சுபாவத்தையுடைய ஆன்மா அச்சுபாவத்தை வெளியிடக்கூடிய தகைமையுடைய சரீரத்திலேயே,

''யோக்யம் யோக்யேந யுஜ்யதே''
''இனம் இனத்துடன் சேரும்''

என்னும் இனமுறை விதிக்குத் தகுந்தபடி பிறவி எடுக்கின்றது. இது சாஸ்திர சம்மதமானதாயு மிருக்கிறது. எவ்வாறெனில், விஞ்ஞான சாஸ்திரம் ஒவ்வொன்றிற்கும் பழக்கமே காரணமென்று கூறுகின்றது. அப்பழக்கமோ ஒருமுறை செய்ததைத் திரும்பத்திரும்பச் செய்வதால் உண்டாகின்றது ஆதலால், புதிதாகப் பிறந்த குழந்தையினுடைய சுபாவமான பழக்கமும் அது திரும்பத் திரும்பச் செய்த கருமத்தின் பலனேயாகும். அச்சுபாவங்கள் அக்குழந்தைக்கு இப்பிறவியில் ஏற்பட்டிருக்க முடியாது. ஆக, அவை பூர்வஜென்மங்களிலிருந்தே தொடர்ந்து வந்திருக்க வேண்டும்.

இதுவரையில் நான் மொழிந்தவை யாவும் ஒப்புக்கொள்ளப் பட்டாலும் சிலர் வேறு சில ஆபேக்ஷனைகள் செய்யலாம். அதாவது எனது பூர்வஜன்ம விஷயங்களில் ஏன் இப்பொழுது கொஞ்சங்கூட எனது ஞாபகத்திற்கு வரவில்லை? என்பதே. இதைச் சுலபமாக விளக்கி விடலாம். நான் இப்பொழுது ஆங்கிலத்தில் பேசிக்கொண் டிருக்கிறேன்; அது எனது தாய்மொழியல்ல; உண்மையில் எனது தாய் மொழியின் ஒரு வார்த்தைகூட இப்பொழுது எனது ஞாபகத்திலில்லை. ஆனால் நான் அப்பதங்களை மெல்ல நினைக்க வாரம்பித்தால் அவை உடனே உதிக்கின்றன. இதனால் ஞாபகமென்பதும் மனமே யென்றும், அம்மனம் ஒரு சமுத்திரத்தைப் போன்றதென்றும் அக்கடலின் ஆழ்ந்த அடிப்பாகத்தில் நமது அனுபவங்களான ஞான மெல்லாம் அடங்கியுள்ளன வென்றும் புலனும். பாடுபட்டு முயன்றால் அவை மேலே வரும். அம்முயற்சியின்பயனாகப் பூர்வ ஜன்மத்தின் அனுபவங்களும் இப்பொழுது ஞாபகத்திற்குக் கொண்டுவாப் படக்கூடும்.

நடந்து போனவற்றை நினைவுக்குக் கொண்டுவரல்.

'இது பூர்வஜன்ம சம்பந்தத்தை நேரில் நிரூபிக்கக்கூடிய பிரமாணம். பிரத்யக்ஷ அனுபவமே எந்த விஷயத்தையும் ரூபிக்கச் சிறந்த பிரமாணமாகும். ஆதலின் இதோ எங்கள் மூதாதையர்களான மகரிஷிகள் உலகமறியச் சாற்றும் வீரவசனங்களைக் கேட்பீர்களாக; சமுத்திரத்தில் ஆழ்ந்து மறைந்துகிடக்கும் பூர்வஞானங்களையெல்லாம் அடியோடுகலக்கி மேற்கிளப்பக்கூடிய ரகசியங்களை யாங்கள் கண்டு பிடித்திருக்கிறோம். இந்த ரகஸியங்களை அனுசரித்து வருவீராயின், உமது பூர்வஜன்ம ஞாபகமெல்லாம் உமக்கு இப்பிறப்பிலுதிக்கும்' என்பது.

ஆனதுபற்றியே ஹிந்துமதஸ்தன் தன்னை ஓர் ஆத்மாவெனக் கருதுகின்றான். "அந்த ஆன்மாவை ஆயுதம் சிதைக்க முடியாது; நெருப்பு எரிக்க வியலாது; தண்ணீர் கரைக்க முடியாது; காற்று உலர்த்த முடியாது."

நைநம் சிந்தந்தி ஶஸ்த்ராணி நைநம் தஹதி பாவக: |
ந சைநம் க்லேதயந்த்யாபோ ந ஶோஷயதி மாருத: ||

(ஸ்ரீ கீ 2-23)

ஒவ்வொரு ஆன்மாவும் வட்டமென்றும், அவ்வட்டத்தின் சுற்றுக்கோடு இன்னவிடத்தில் உள்ள தென்று கூற முடியாதென்றும், அதன் மத்தியஸ்தானந்தான் ஆன்மா தங்கியிருப்பதான இடமென்றும், அம்மத்தியஸ்தானத்தின் கண்ணுள்ள ஆன்மா ஒரு தேகத்தினின்று மற்றொரு தேகத்திற்கு மாறுவதுதான் மரணமென்றும் ஹிந்துக்கள் நம்புகிறார்கள். அந்த ஆத்மாவானது ஜடத்தின் நிலைகளுக்குக் கட்டுப்பட்டதன்று; அது இயற்கையாகவே பாசபந்தமற்ற சுத்த சுதந்திர நிர்மல பரிபூர்ணத் தன்மையுடையது; ஆனால் அது எக்காரணம் பற்றியோ ஜடப்பொருளோடு கட்டுண்டு தன்னையும் ஜடமென்றே கருதுகின்றது.

விசுத்த பரிபூர்ண விமுக்த ஆத்மாவானது இவ்விதம் ஜடத்திற்கு அடிமையாகக் காரணமென்ன? ஒரு பரிபூர்ண ஆன்மாதான் அபூர்ணமானதென்று புத்தி மயங்குவது எக்காரணம்பற்றி? ஹிந்துக்கள், இவ்வினாக்களுக்கு விடை பகராமல் மெல்லத் தப்பித்துக்கொள்வதன் பொருட்டு, 'இவ்விதக் கேள்விகளுக்கு இடமேயில்லை' யென்று சொல்வதாக நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். இதற்கு தத்துவ ஞானிகளிற்

சிலர், ஆன்மா, ஜீவன் என்னும் இரண்டினிடையே பூர்ண கல்ப சத்துவத்தை யுடையாராக வெகுசிலருளரென விக்ஞான கடின பரிபாஷையால் மறுமொழி புகல முயலுகின்றனர். இவ்வித பரிபாஷைப் பதங்கள் எவ்வித சமாதானத்தையும் தாராவாம். ஆக அக்கேள்விக்கு இன்னும் விடையளிக்கப்படவில்லை. சர்வபரிபூர்ணவஸ்து எங்ஙனம் தன்னியற்கையில் அணுவளவேனும் குறைவடையும்? ஹிந்து மதஸ்தனே இவ்விஷயத்தில் மிக்க யதார்த்தவாதியாவான். விதண்டாவாதத்தால் இவ்விஷயத்தை நிலைநாட்ட அவன் மனம் துணிவதில்லை; திடமான ஆண்மையோடு அவனிதற்கு விடையளிக்க முன் வருகின்றான். முதல் கேள்விக்கு அவன்சொல்லும் விடை யென்னை யெனில் "எனக்குத் தெரியாது'' என்பதே. பரிபூர்ண வஸ்துவான ஆன்மா தன்னைக் குறைவுபட்ட பொருளென்றும், ஜடத்துடன் கூடி, அதனால் பந்தத்திற்கு ஆளாக்கப்பட்டுள்ள வஸ்துவென்றும் எண்ணும்படி எப்படி நேர்ந்ததோ யானறியேன். ஆனால் உள்ளது உள்ளதே. ஒவ்வொரு மனிதனும் உடலே உயிரென்று எண்ணுகிறான். 'நான்' அல்லது என் ஆத்மா எவ்வாறு என் இச்சரீரத்துள் வந்தடைந்தது? என்பதற்குச் சமாதனங்கூற ஹிந்துக்கள் யத்தனிப்பதில்லை. அது ஈஸ்வரசங்கல்பமெனினும் பொருந்தாது. 'எனக்குத் தெரியாது' என்று சொல்வதைப் பார்க்கிலும் மேலான சமாதான மொன்றில்லை.

ஆன்மா நித்தியமானது.

ஆகவே, மனிதனது ஆன்மா அநாதியானது; அழிவற்றது; பூரணமானது; எல்லையற்றது; அது ஒருடலைவிட்டு மற்றொரு உடலையடைதலே மரணமெனப்படும். முன்செய்த இருவினைகளால் நம்முடைய நிகழ்கால நிலையும், இப்பிறவியிற் செய்யும் வினைகளால் எதிர்கால ஸ்திதியும் கணிக்கப்படும். ஆன்மாவானது ஜனனமரண சக்கரத்தில் முறைப்படிச் சுழன்றுகொண்டேயிருக்கும். வலுத்த புயற்காற்றிலகப்பட்ட ஒரு நாவாய் ஒரு க்ஷணகாலம் கொந்தளிக்கும் கடலின் அலைகளாற் றாக்கி யுயர்த்தப்பட்டுப் பின் நிமிஷத்தில் மிக்கப் பள்ளமான மடுவில் அழுத்தப்படுவதுபோல், ஆன்மாவும், நல்வினை தீவினைகளின் வசப்பட்டு, அங்குமிங்கும் புரண்டுழன்று, எதற்கும் பணியாது, எப்பொழுதும் கல்லோலமிட்டுப் பாயும் காரணகாரியப் பிரவாகத்தினிடையே அகப்பட்டுத் தத்தளித்து திக்கற்று, வலிமையற்று, திகைக்கும் 'படகை யொத்திருக்கின்றது; தன் வழியிற்படும் எதையும் மடக்கிக்கொண்டு கணவனையிழந்த கைம்பெண்ணின் கண்

ணீரையும், பெற்றோரற்ற குழந்தைகளின் இரங்கலையுங் கண்டு விலகிச் செல்லாமல் சுழன்றோடிக் கொண்டே யிருக்கும் கர்ம சக்கரத்தின் கீழகப்பட்டுத் தவிக்கும் புழுவென்றும் அவ்வாத்மாவை யழைக்கலாம். இதனை நினைக்கும்போதே என் உள்ளம் கலங்குகின்றது. எனினும் பிரகிருதி ஏற்பாடு அவ்வாறிருக்கிறது. "ஆனால் இதற்கு வேறு ஆறுதலில்லையா? இத்துன்பத்தினின்றும் தப்பிப்பிழைக்க உபாயமேதுமில்லையா?" என்ற இரக்கமொழிகள், உழலும்மனத்தின் உள்ளகத்திலிருந்து கிளம்பிற்று. அவ்வொலி கருணாநிதியான கடவுளின் சிம்மாஸனத்தை எட்ட, அங்கிருந்து ஆறுதலளிக்கும் அபயமொழிகள் ஓர் வேதகால மகரிஷியின் மனத்திடத்தே வந்திறங்கின. அவர் ஆன்ம கோடிகளின் முன்னுகை எழுந்து கம்பீரமாக உரக்க வெளியிட்ட செய்தியாவது:

𑌶𑍃𑌣𑍍𑌵𑌨𑍍𑌤𑍁 𑌵𑌿𑌶𑍍𑌵𑍇 𑌅𑌮𑍃𑌤𑌸𑍍𑌯 𑌪𑍁𑌤𑍍𑌰𑌾
𑌆𑌯𑍇 𑌧𑌾𑌮𑌾𑌨𑌿 𑌦𑌿𑌵𑍍𑌯𑌾𑌨𑌿 𑌤𑌸𑍍𑌥𑍁𑌃
𑌵𑍇𑌦𑌾𑌹𑌮𑍇𑌤𑌂 𑌪𑍁𑌰𑍁𑌷𑌂 𑌮𑌹𑌾𑌨𑍍𑌤𑌮𑍍
𑌆𑌦𑌿𑌤𑍍𑌯𑌵𑌰𑍍𑌣𑌂 𑌤𑌮𑌸𑌃 𑌪𑌰𑌸𑍍𑌤𑌾𑌤𑍍
𑌤𑌮𑍇𑌵 𑌵𑌿𑌦𑌿𑌤𑍍𑌵𑌾𑌤𑌿 𑌮𑍃𑌤𑍍𑌯𑍁𑌮𑍇𑌤𑌿
𑌨𑌾𑌨𑍍𑌯𑌃 𑌪𑌨𑍍𑌥𑌾 𑌵𑌿𑌦𑍍𑌯𑌤𑍇𑌽𑌯𑌨𑌾𑌯

"ஹே! அழிவற்ற ஆனந்த சொரூபத்தின் குழந்தைகளே! வானுலகிலுமுள்ளவர்களே! கேளுங்கள்; யான் மோக்ஷ ஸ்தானத்தைக் கண்டறிந்து கொண்டேன். அந்தகாரத்துக்கப்பால் ஜகஜ்ஜோதியாய் சூர்யனைப்போல் சுவயம்பிரகாசமாய் விளங்கும் மாயாதீதப் பழம்பொருளான மகாபுருஷனைக் கண்டேன். அவ்வறிவான தெய்வத்தை அறிவதால் மட்டும் நீ மரணத்தினின்றும் மீட்சிபெறலாம். பரகதியடைய வேறு எவ்வித வழியுமில்லை" என்பதே.

'அழிவற்ற ஆனந்தசொரூபத்தின் குழந்தைகளே!'—என்பது ....ஹா! எவ்வளவு மதுரமும் அபயப் பிரதானமும் நிறைந்ததா யிருக்கின்றது! சகோதரர்களே! அந்த மதுரமான நாமத்தால் உங்களை யான் அழைக்க எனக்கு அனுமதியளிக்கவேண்டும். ஹிந்து மதஸ்தனெவனும் உங்களைப் பாவிகளென்றழைக்க சிறிதும் உடன்படான்.

[illegible]
[illegible]

ஈஸ்வரனின் சந்நிதானங்கள்

நீங்களும் ஈஸ்வரனின் குழந்தைகள் ; அழிவிலா ஆனந்தத்தில் சரியளவான பங்குக்குரியவர்கள். பவித்திர பரிபூர்ண வஸ்துக்களும் நீங்களே யாவீர்கள். இவ்வையகத்தில் வாழுங்கடவுளாகிய தாங்களோ பாபிகள்? 'ஒரு மனிதனைப் பாபியென்பதே பெருத்த தோஷம். அவ்வாறழைப்பது மானுட இயல்பிற்குத் தாழ்வும் பழியுமாகும். ஹே! சிம்மங்களே! உற்சாகத்துடனெழுங்கள் ; கேவல ஆட்டு சுபாவத்தை விட்டொழியுங்கள் ; நீங்கள் ஜனனமரணமற்ற நித்யான்மவஸ்துக்கள் ; நீங்கள் ஜடப்பொருள்களல்லர் ; அநித்யமான சரீரங்களுமல்லர் ; ஜடத்திற் கடிமைப்பட்டவால்லர் ; ஜடந்தான் உங்களது அடிமை.

இப்படியாக எங்களது வேதங்கள் தயை சிறிதுமில்லா கொடூரமான விதிகளின் வெள்ளசொரூபமான விஷயங்களைக் கோஷிக்கவில்லை ; அனந்த காரணகாரியங்களால் விளையும் நிர்ப்பந்த நிலைக்கு முடிவே கிடையாதென்றும் அவை சொல்லவில்லை ; ஆனால் சகலவித பிரகிருதி நியமங்களுக்கெல்லாம் மூலமாக, ஒவ்வோரணுவினுக்கும் வல்லமைக்கும் அகமும் புறமும் எங்கும் ஓர் மகாபுருஷன் நிலவுகின்றான்.

"அவனுடைய ஆணையாலேயே காற்று வீசுகின்றது ; நெருப்பு எரிகிறது, வானம் வரையாது பெய்கின்றது ; யமன் உலகில் சஞ்சரிக்கின்றான்"

𑌭𑌯𑌾𑌦𑌸𑍍𑌯𑌾𑌗𑍍𑌨𑌿𑌸𑍍𑌤𑌪𑌤𑌿 𑌭𑌯𑌾𑌤𑍍𑌤𑌪𑌤𑌿 𑌸𑍂𑌰𑍍𑌯𑌃 |
𑌭𑌯𑌾𑌦𑌿𑌨𑍍𑌦𑍍𑌰𑌶𑍍𑌚 𑌵𑌾𑌯𑍁𑌶𑍍𑌚 𑌮𑍃𑌤𑍍𑌯𑍁𑌰𑍍𑌧𑌾𑌵𑌤𑌿 𑌪𑌞𑍍𑌚𑌮𑌃 ||

என்று முறையிடுகின்றது. அந்த பரமபுருஷனுடைய ஸ்வரூபம் என்ன? "அவர் அங்கிங்கெனாதபடி எங்குமுள்ளவர் ; அருளொடு நிறைந்தவர் ; அரூபி ; எல்லாம் வல்லவர். எமது தந்தையும் நீரே ; தாயும்நீரே! நீர்தாம் எனது அன்பிற்குரிய நண்பன் ; எல்லா சக்திக்கும் காரணபூதரானவரும் நீர்தான். எங்களுக்கு பலத்தை நீர் கொடுத்தருளும். நீர் சர்வலோக சரண்யன் ; இப்பிறவியின் சுமையைப்பொறுக்க நீர் சிறிது உதவிபுரிந்தருளும்."

𑌪𑌿𑌤𑌾 𑌤𑍍𑌵𑌂 𑌮𑌾𑌤𑌾 𑌤𑍍𑌵𑌂 𑌦𑌯𑌿𑌤𑌤𑌨𑌯𑌸𑍍𑌤𑍍𑌵𑌂 𑌪𑍍𑌰𑌿𑌯𑌸𑍁𑌹𑍃𑌤𑍍
𑌤𑍍𑌵𑌮𑍇𑌵 𑌤𑍍𑌵𑌂 𑌮𑌿𑌤𑍍𑌰𑌂 𑌗𑍁𑌰𑍁𑌰𑌸𑌿 𑌗𑌤𑌿𑌶𑍍𑌚𑌾𑌸𑌿 𑌜𑌗𑌤𑌾𑌂 |

[illegible]

[illegible] ‖

என்று வேத வித்துக்களான மஹரிஷிகள் கானஞ் செய்தார்கள். அவரை எவ்விதம் நாம் வழிபடுவது? பக்திவாயிலாகவே. "இம்மை மறுமைக்குரிய பொருள்களனைத்திலும் அரியபொருளாக அவரை நாம் எண்ணி வந்தித்து வழிபடவேண்டும்."

வேதம் இவ்வித பக்திமார்க்கத்தையே புகட்டுகின்றது. இதனை ஹிந்துக்கள், கடவுளின் அவதாரமாகக் கொண்டாடும் ஸ்ரீ கிருஷ்ண பகவான் எவ்விதம் உபதேசித்திருக்கிறு ரென்பதைச் சற்று கவனிப்போம்.

ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவின் உபதேசம்

அவர், 'இவ்வுலகில் மனிதன் தாமரை யிலையைப்போலிருக்க வேண்டும்; அது தண்ணீரில் வளர்ந்தபோதிலும் அதன்மேல் நீர் ஒட்டுகிறதில்லை. அவ்விதமே மனிதன் கடவுளிடத்து மனதை அர்ப்பணஞ்செய்து, கர்மாவை உறுதியாகப் பற்றியவண்ணம் உலகில் வாழ வேண்டும்" என்று திருவாய் மலர்ந்துள்ளார்.

இம்மையின்பத்தைக் கருதியோ, மறுமைச் சுகத்தை விரும்பியோ ஈஸ்வரனிடம் பக்திசெலுத்துவது நலம்; மேலும் எவ்வித பலனையும் வேண்டாமல் அவரிடத்து சேவை வாயிலாக அன்புகொள்வது அதனிலும் சிறந்தது;

𑌨 𑌧𑌨𑌂 𑌨 𑌜𑌨𑌂 𑌨 𑌸𑍁𑌨𑍍𑌦𑌰𑍀𑌂 𑌕𑌵𑌿𑌤𑌾𑌂 𑌵𑌾 𑌜𑌗𑌦𑍀𑌶 𑌕𑌾𑌮𑌯𑍇 |
𑌮𑌮 𑌜𑌨𑍍𑌮𑌨𑌿 𑌜𑌨𑍍𑌮𑌨𑍀𑌶𑍍𑌵𑌰𑍇 𑌭𑌵𑌤𑌾𑌦𑍍𑌭𑌕𑍍𑌤𑌿𑌰𑌹𑍈𑌤𑍁𑌕𑍀 𑌤𑍍𑌵𑌯𑌿 ‖

"என்னையனே! எனக்குச் செல்வம் வேண்டாம்; தாரமும் தனயரும் வேண்டாம்; ஞானமும் வேண்டாம்; உமது திருவுள்ள மிதுவாயின் எத்தனை பிறவி வேண்டுமாயினும் எடுப்பேன்; ஆனல் பலாபேக்ஷையற்ற இடையருத அன்பு உன்னிடத்தில் எனக்கேற்பட மட்டிலும் நீ அருள்புரிவாய்" என்பது ஒரு பிரார்த்தனை. ஸ்ரீ கிருஷ்ண பகவான் சிஷ்யர்களி லொருவரும் அக்காலத்திய பரதகண்டச் சக்ரவர்த்தியுமான யுதிஷ்டிரர், தமது அரசிருக்கையினின்றும் மாற்றார்களால் துரத்தப்பட்டபோது, தமது தர்மபத்தினியுடன் இமயவரையி னடிவாரத்திலுள்ள கானகமொன்றில் காந்துறையநேரிட்டது. அப்போது ஒரு நாள் அவர் மனைவி அவரைப்பார்த்து 'புண்யபுருடரிற் சிறந்த புரு

ஷோத்தமரே! தாம் இவ்வளவு துன்பங்களை யனுபவிக்கக் காரண மென்ன!?' என்று வினவினாள். அதற்கு யுதிஷ்டிரர்

𑌨𑌾𑌹𑌂 𑌕𑌰𑍍𑌮𑌫𑌲𑌾𑌨𑍍𑌵𑌷𑍇𑌷𑍀 𑌰𑌾𑌜𑌪𑍁𑌤𑍍𑌰𑌿 𑌚𑌰𑌾𑌮𑍍𑌯𑍁𑌤 ।
𑌦𑌦𑌾𑌮𑌿 𑌦𑍇𑌯𑌮𑌿𑌤𑍍𑌯𑍇𑌵 𑌯𑌜𑍇 𑌯𑌷𑍍𑌟𑌵𑍍𑌯𑌮𑌿𑌤𑍍𑌯𑍁𑌤 ॥
𑌧𑌰𑍍𑌮 𑌏𑌵 𑌮𑌨𑌃 𑌕𑍃𑌷𑍍𑌣𑍇 𑌸𑍍𑌵𑌭𑌾𑌵𑌾𑌚𑍍𑌚𑍈𑌵 𑌮𑍇 𑌧𑍃𑌤𑌮𑍍 ।
𑌧𑌰𑍍𑌮𑌵𑌾𑌣𑌿𑌜𑍍𑌯𑌕𑍋 𑌹𑍀𑌨𑍋 𑌜𑌘𑌨𑍍𑌯𑍋 𑌧𑌰𑍍𑌮𑌵𑌾𑌦𑌿𑌨𑌾𑌮𑍍 ॥

'பிரியே! இவ்விமயமலைத் தொடரைப் பார்! அது எவ்வளவு அழகாகவும் மகோந்நதமாயு மிருக்கின்றது. அதனிடத்து எனக்கு அன்பு உதிக்கின்றது. அது எனக்கு ஒன்றையுங் கொடுப்பதில்லை யாயினும், மகிமையும் அழகுமுள்ள பொருள்களிடத்து அன்புகொள்வது என தியல்பாதலின், அதன் மீதும் நான் பிரேமையுள்ளவனாயிருக்கிறேன். பகவானே நமது அன்பிற்கு உரியபொருள். அவரே எல்லா மகிமைக்கும் அழகுக்கும் மூலமானவர். ஆனதுபற்றியே நான் அவரிடம் அன்பு செலுத்துகிறேன். அவரிடமிருந்து யான் எதையும் இச்சிப்பதில்லை; விரும்பி வேண்டுவதுமில்லை. அவர் விருப்பப்படி என்னை எந்த இடத்திலேனும் வைக்கட்டும். 'நான் அன்பைக் கோரியே அவரிடம் அன்பு செலுத்தவேண்டியவன். அவ்வன்பை விலைப்பொருளாக்கும் தர்மவாணிகன் நானல்ல' என்று பதிலுரைத்தார்.

ஆத்மாவின் தெய்வத்தன்மை

ஆன்மா தெய்வத்தன்மை யுள்ளதென்றும், ஜடப்பொருளால் பந்தப்பட்டு மட்டும் இருக்கின்றதென்றும், இப்பந்தம் நீங்குங்காலத்திலேயே பரிபூர்ண நிலை யெய்துமென்றும் வேதங்கள் ஓதுகின்றன. இப் பரிபூர்ண நிலைக்கே முத்தி யெனப் பெயர். முத்தியாவது அபூர்ணம், மரணம் துக்கம் முதலியவற்றினின்றும் விடுபடல்.

இறைவனது திருவருளினால்மட்டுமே இவ்வித பந்தமொழிந்து விடுதலையுண்டாகும். அவருடைய திருவருள் புண்யாத்மாக்களுக்கே லபிக்கும். ஆதலால், அவருடைய கிருபைக்குப் புண்யமே காரணமாகிறது. அக்கிருபை எவ்வித முண்டாகின்றது? அவர் மாசற்ற மனமுடையாருக்கே காட்சியளிக்கின்றார். நிர்மல முனிபுங்கவர்கள் இப் பிறவியிலேயும் ஈஸ்வரனைத் தரிசிக்கின்றனர். அப்பொழுதுதான்

𑌭𑌿𑌦𑍍𑌯𑌤𑍇 𑌹𑍃𑌦𑌯𑌗𑍍𑌰𑌨𑍍𑌥𑌿𑌶𑍍𑌛𑌿𑌦𑍍𑌯𑌨𑍍𑌤𑍇 𑌸𑌰𑍍𑌵𑌸𑌂𑌶𑌯𑌾𑌃 ।
𑌕𑍍𑌷𑍀𑌯𑌨𑍍𑌤𑍇 𑌚𑌾𑌸𑍍𑌯 𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑌿 𑌤𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌦𑍃𑌷𑍍𑌟𑍇 𑌪𑌰𑌾𑌵𑌰𑍇 ॥

'அவர்களுக்குச் சித்தசுத்தி ஏற்படுகின்றது; சந்தேகங்க ளெல்லாம்

நீங்குகின்றன ; இவ்வுலகின் பயங்கரமான காரணகாரிய ரூபமாயுள்ள கர்மபலன்களினின்றும் அப்பொழுதுதான் அவர்களுக்கு நிவிர்த்தி யேற்படுகின்றது.' இதுவே ஹிந்துமதத்தின் உயிர்நிலையான கொள்கை. வீண்வார்த்தைகளாலும், சாஸ்திர தர்க்கங்களாலும் ஹிந்துவானவன் திருப்தியடைவதில்லை ; இந்திரியங்களுக்கு எட்டாத உயர்ந்தநிலை யொன்றிருக்குமானால், அதை நேருக்கு நேராகக் கண்டறியவேண்டு மென்ற அவா அவனுக்கேற்படுகிறது. ஜடப்பொருளைவிடச் சிரேஷ்ட மான ஆன்மா ஒன்று தன்னிடத்தே யுளதாயின், பரமகருணாநிதியும் எங்கும் நிறைந்த பரம்பொருளுமான கடவுளொருவருளரானால், அவ ரிடத்தில் நேரில் செல்ல விரும்புகின்றான் ஹிந்து. அவன் அப்பொரு ளைக் கண்டே தீரவேண்டியவன் ; அவ்வித தரிசனத்தால் அவனுக் கேற்பட்டுள்ள ஐயப்பாடுகளனைத்தும் நீங்கியேதீரும். ஆதலால், ஆத்மானுபவ சித்தர்களான மகரிஷிகள், [illegible] 'நாங்கள் ஆன்மாவை நேரில் கண்டிருக்கிறோம் ; கட வுளைக் கண்கூடாகத் தரிசித்திருக்கிறோம்' என்றிபம்பி யுள்ளார்கள். இதுவே பரிபூர்ண நிலையின் தன்மை. சில கொள்கைகளையும் சமயக் கோட்பாடுகளையும் நம்பி, அவைகளைச் சாதிக்கப் போராடுவதும் ஹிந்து தர்மமன்று ; மூலமந்திரம். அது நம்பிக்கையால்மட்டும் கைவரத்தக்கதன்று. அனுபவத்தால் ஆய்ந்து கண்ட பேருண்மையே யாம்.

ஹிந்துக்களின் மதம்.

இவ்விதம், பரிபூர்ண நிலையினை யெய்துவதற்கும், தெய்வத் தன்மை யடைவதற்கும், ஈஸ்வரனைக் காண்பதற்கும் இடைவிடாமல் முயற்சிசெய்வதே ஹிந்துமதத்தின் முழுதீக்ஷண்யமாயுள்ளது. இப் படிக் கடவுளை யடைவதும், அவரைத்தரிசிப்பதும் ஜகத் பிதாவான ஈஸ்வரனைப்போன்ற நிலையையெய்த முயற்சிப்பதுமே ஹிந்துமத தர்மமாகும்.

பரிபூர்ண நிலையை யெய்திய பின்னர் மனிதன் எத்தகைய ஸ்திதி யிலிருப்பான் ? அவன் அளவிலா ஆனந்தத்தை யனுபவித்த வண்ண மிருப்பான் ; எந்த ஒரே பரம்பொருள் மனிதனுக்குப் பரிபூர்ண நிலையை யளிக்குமோ, அந்த இறைவனை யடைந்து, அவரோடு பரமா னந்தத்தை யனுபவிக்கிறான்.

இதுவரை சொல்லப்பெற்றவை யாவும் எல்லா ஹிந்துக்களாலும் ஏகமனதாய் ஒப்புக்கொள்ளப் பெற்றவையாகும். இந்தியாவிலுள்ள

பல்வேறு சமயப் பிரிவுகளுக்கும் இதுவே பொது தர்மமாகும். ஆனால் பரிபூர்ணத்வம் துரியமானது; நிர்விகல்பமானது. அந் நிர்விகல்ப அவஸ்தையென்பது ஒன்றே ஒன்றுதான்; அத் தனிநிலை இரண்டு மூன்றாக விருத்தலியலுமோ? முடியாது. அது குணாதீதமானது. அதற்கு வியக்தித்துவமில்லை. ஆதலின், ஒரு ஆன்மா அந் நிர்விகல்ப நிலையை யெய்தும்பொழுது, பிரம்மத்தோடு கலந்து ஐக்கிய மாகிவிட வேண்டும். அவ்வாத்மா துவைதஞான பரிசூன்யமடைந்து, தனது சத் ஸ்வரூபம், ஞான ஆனந்த சொரூபங்களை உணர்கின்றது. இங்ஙனம் ஆன்மா அடையநேரும் வியக்தி விநாசமானது (ஆத்மநாசம்) ஜடா வஸ்தையான தென்று சிலர் நூல்களில் வரைந்துள்ளதை நாம் பன் முறையும் படித்திருக்கிறோம். எப்பொழுதும் காயப்பட்டறியாதவன், போர்க்களத்தடைந்த புண்ணின் வடுவினைக்கண்டு நகைத்தலியல்பு தானேன்?

அந்நிலை மிக்க வுயர்ந்ததென்றும், ஜடாவஸ்தையல்ல வென்றும் நான் உறுதியா யுரைப்பேன். இச் சிறு தேகத்திற்குரிய ஆத்ம ஞானத்தை யடைந்து அனுபவிப்பது ஆனந்தமானால், இரண்டு மூன்று நான்கு சரீரங்களுக்குரிய ஆத்மஞானத்தை யனுபவிப்பது அதனைவிடப் பன்மடங்கு அதிகமானதாயிருக்க வேண்டுமன்றோ? இவ்விதம் உலகமுழுவதுமே நம்முடைய ஆன்மபோகத்திற் குரித் தாவதுதான் ஆனந்தத்தின் முடிவாகும்.

அகண்ட சொரூபம்.

ஆக, இந்த அந்தியமற்ற விஸ்வதேகத்தை யடையவேண்டுமா யின், இவ் விழிவான சிறைபோன்ற சாதாரண சரீரம் தொலையவேண் டும். 'நான் பிராணமயனாகும் பொழுதே மரணம் என்னைவிட்டு நீங் கும்; நான் ஆனந்த மயனாகும்பொழுதுதான் துக்கம் என்னைவிடும்; நான் ஞானமயனானாற்றான் அஞ்ஞானமும் குற்றங்குறைகளும் என்னை விட்டகலும்'.—இது விக்ஞான சாஸ்திர சம்மதமான முடிவு. தனித் தனி சரீரவடிவாய்த் தோன்றும் ஜடப்பொருள்களின் உருவவேறுபாடு கள் நிலையற்றனவென்றும், உண்மையாக என்னுடைய இத்தேகம் பெரிய ஜடசமுத்திரத்தில் இடைவிடாமல் மாறுதலடைந்து கொண்டே யிருக்கும் திரையையொத்த ஓர் சிறு உருவென்றும் நிகழ்கால பிர கிருதி-விக்ஞான சாஸ்திரம் மெய்ப்பிக்கின்றது.

விக்ஞான சாஸ்திரமாவது ஒரு மூலமானபொருள் அல்லது சக்தி யைக் கண்டுபிடித்தலேயன்றி வேறல்ல. ஆகவே, விக்ஞான சாஸ்

திரம் அம் மூலப்பொருளைக் கண்டுபிடித்த பின்னர், அது மேலே செல்லாமல் நின்றுவிடும். ஏனெனில், அப்பொழுதே அதன் உட் கருத்து பூர்த்தியாகிவிடுகின்றது. ஒரு பூத பதார்த்தத்திலிருந்து மற் றெல்லாப் பொருள்களும் உண்டாக்கப்படலாமென்ற ரசாயன சாஸ் திரத்தைக் கண்டுபிடித்துவிட்ட பிறகு அதன் அபிவிருத்தி நின்று விடும். ஒரு சக்தியிலிருந்துதான் சகலவித சக்திகளும் உண்டாகின் றனவென்று கண்டுபிடிக்குந் தொழிலை ஜடசக்தி சாஸ்திரம் செய்து முடித்துவிடின் அதன்வேலை பூர்த்தியாகிவிடும்; அதுபோன்றே மத சாஸ்திரமும், மரண சுபாவமுள்ள உலகத்தில் அழிவற்ற ஒருவருள்ளா ரென்றும், எக்காலத்திலும் மாறுதலடைந்து கொண்டேயிருக்கும் உலகில் மாறாத மூலபுருஷர் ஒருவருண்டென்றும், அவரே பரமாத்மா வென்றும், பிற ஆன்மாக்கள் யாவும் அவர் பிரதிபிம்பத்தை யடைந் தனவே யென்றும், எப்பொழுது கண்டு கொள்ளுமோ அப்போது அது பூர்ணமாகும். இவ்விதம் வெகு ஈஸ்வர வாதத்தாலும், துவை தவாதத்தாலும் ஒன்றென ஓதும் அத்வைதம் உண்டாகின்றது. அதற்கு மேற்போக எந்த சமயத்திற்கும் சாத்யமில்லை. இதுதான் எல்லா விக்ஞான சாத்திரங்களும் அடைய உத்தேசிக்கும் எல்லை.

எல்லாம் ஏகவஸ்துவின் தோற்றமே.

விக்ஞான சாஸ்திரங்கள் யாவும், முடிவில் இந்த சித்தாந்தத் திக்கு வந்தாகவேண்டும். நம்முன் காணப்படும் பொருள்களனைத் தும், தோற்றத்தில் உருவ வேறுபாட்டை யுடையனவே யன்றி சிருஷ்டியிலில்லை யென்று நிகழ்கால ஐரோப்பியர்கள்—வைக்ஞானிகள் கூறுகின்றனர். ஹிந்துவானவன், எந்த மனோபாவத்தைத் தமது உளநிலையென வெகுகாலமாகக் காத்து வந்தானோ அது, அவ்வைக் ஞானிகளால் பிரபல பிரமாணங்களோடு புதிது புதிதாகக் கண்டு பிடிக் கப்பட்டு வெளிவா விருத்தல்பற்றிப் பெருமகிழ்ச்சி யடைகின்றான்.

இனி, வேதாந்த அறிவின் உந்நத சிகரத்திலிருந்திறங்கிச் சாதா ரண மக்களின் சமயத்தைப்பற்றி ஆலோசனை செய்வோம். பாதகண் டத்தில் வெகு ஈஸ்வரவாதம் இல்லையென்று முன்னாக நான் உங்களுக் குச் சொல்லிவிடுகிறேன். ஒவ்வொரு தேவாலயத்திலும், ஒருவர் போய் நின்று உற்றுக்கேட்டால், பக்தர்கள் ஸர்வ வியாபகத்வம் உள்பட கடவுளுக்குரிய சகலகுணங்களையும் ஆங்குள்ள சிலாரூபங் களுக்கே ஆரோபிப்பதைக் காணலாம். இது வெகு ஈஸ்வர வாத மல்ல; தத்தம் ஆப்த தெய்வத்திற்குப் பிராதான்யம் கொடுக்கும்

வாதமுமன்று. 'எப்பெயர் கொண்டழைப்பினும், ரோஜாப்புஷ்பம் தன்மணத்திற் சிறிதும் குன்றுவதில்லை.' வெறும்பெயர் சூட்டுதல் விளக்கமாகாது.

நான் பால்யனாயிருந்தபோது இந்தியாவில் ஒரு கிறிஸ்தவப்பாதிரி ஒரு ஜனக்கூட்டத்தில் பிரசங்கித்த விஷயம் இப்பொழுது என் ஞாபகத்திற்கு வருகின்றது. அவர் அழகிய விஷயங்களை அருமையாகப் பேசிக்கொண்டு வருகையில் ஜனங்களைப் பார்த்து 'என்னுடைய கைப் பிரம்பால் உங்களுடைய விக்ரஹத்தை அடித்தால் அது என்னை என்ன செய்யும்?' என்று கேட்டார். அப் பிரசங்கத்தைக் கேட்டுக் கொண்டிருந்தவர்களில் ஒருவர் உடனே துடுக்காக "நான் உமது தேவனை வைதால் அவர் என்ன செய்வார்?" என்று அப்பாதிரியாரை வினவினார். அதற்குப் பிரசங்கியார் 'மரணத்திற்குப் பிறகு நீ தண்டிக்கப் படுவாய்' என்றார்: 'அதுபோலவே எங்கள் விக்ரஹமும் நீர் இறந்த பின் உம்மைத் தண்டிக்கும்' என்றார் அந்த ஹிந்துவும்.

மரத்தின் குணகுணங்களை அதன் பழத்தால் அறியலாம். நல்லொழுக்கத்திலும், ஆத்யாத்மிக பாவத்திலும், பக்தியிலும் சிறந்த பெரியோர்களை விக்ராராதனை செய்பவர்களாகவே யான் கண்டிருக்கிறேன்; ஏனைய சமூகத்தாரில் யான் கண்டதில்லை. ஆதலால், 'பாவத்திலிருந்து புண்யம் பிறக்குமா?' வென்ற கேள்வி இயல்பாக அடிக்கடி என்மனத்தி லெழுவதுண்டு.

மூடப் பிடிவாத மேன்?

மூடபக்தி மனிதனுடைய பரமசத்ரு; யுக்திக்கேற்காத மத வைராக்கியமோ அதனினும் கொடியது; கிறிஸ்தவன் ஏன் தேவாலயத்திற்குப் போகிறான்? சிலுவையை ஏன் பரிசுத்தமான தென்று பாவிக்கிறான்? பிரார்த்தனை செய்யும்போது ஏன் வானத்தை நோக்குகிறான்? கத்தோலியர் என்னும் பிரிவினரின் தேவாலயத்திலேன் அத்தனை மூர்த்திகள் உள்ளன? பரிசுத்தர்கள் என்றும் சம்பிரதாயிகள் தோத்திரஞ் செய்யுங்கால் அவர்களது ஹிருதயத்தில் ஏன் அத்தனை மூர்த்திபாவம் இருக்கவேண்டும்? சகோதரர்களே! சுவாசிப்பது எப்படி நாம் உயிருடனிருக்க அவசியமோ அப்படியே சமாதியிலிருக்குங்காலத்தில் மூர்த்திசொரூபம் மனத்திலுதிக்கவேண்டியது அவசியம். பாவனா ஸம்யோக நியமப்படி, ஜடரூபத்தால் மானஸபாவனையும், மானஸ பாவனையால் ஜடரூபமும் தோன்றுகின்றன. இதனை

லேயே ஹிந்துக்கள் தேவோபாசனையில் வெளிப்படையான சங்கேத மூர்த்தியை ஆராதிக்கின்றனர். தாம் தியானிக்கும் கடவுளிடம் மனதைநிறுத்த இவ்விக்ரஹ ஆராதனை துணைபுரியுமென்று ஹிந்துக்கள் சொல்லுவார்கள். இந்த விக்ரஹமே கடவுளல்ல; அதற்கு சர்வ வியாபகத்துவம் இல்லையென்பதை உங்களைப்போலவே அவர்களும் நன்கு யறிவார்கள். ஆனால், உலகில் சர்வ வியாபகத்துவம் என்பதைப்பற்றி எத்தனைபேருக்கு எவ்வளவு தெரியும்? அது வெறும் பெயரள விலேயே தெரிந்திருக்கும். கடவுளுக்கு வெளி விஸ்தீர்ண மென்ப துண்டா? இல்லையானால், ஸர்வ வியாபகத்துவம் என்ற வார்த் தையை நாம் சொல்லுங்கால், பரந்த ஆகாசத்தின் அல்லது பூமியின் நினைவைத்தவிர வேறொன்றும் நமக்குண்டாவதில்லை.

நமது உடலும் உயிரும் அமைந்துள்ள முறைப்படி, எவ்விதமோ, அகண்டாகார பாவத்தை நாம் அடையும்போது நீலநிறமுள்ள ஆகா யத்தின் வடிவோ, பரந்துள்ள சமுத்திரத்தின் ரூபமோ தான் நமது நினைவுக்கு வருகிறது. அதைப்போன்று, பரிசுத்தம் என்னும் எண் ணம் நமக்குதிக்கும்பொழுது தேவாலயமோ, மசூதியோ, சிலுவை யோதான் நமது மனத்தில் உருவகமாகின்றது. அவ்வாறே ஹிந்துக் கள் பவித்திரம், விமலம், சத்யம், சர்வ வியாபகத்துவம் முதலிய பாவங்களை வெவ்வேறு விக்ரஹங்களோடும் ரூபங்களோடும் பாவனைப் படுத்திக் கொள்ளுகிறார்கள். ஆனால் அவர்களுக்கும் மற்றவர்களுக்கும் ஒரு வித்தியாசம்மட்டு மிருக்கிறது. அதாவது சிலர் தம்மாயுட்கால முழுவதையும் ஆலயத்தின் கண்ணுள்ள விக்ரஹ ஆராதனையிலேயே செலவிட்டு, விருத்தி யடையாமலிருக்கிறார்கள். ஏனெனில் அவர் களுக்கு சமயமென்பது சில கொள்கைகளை முற்றிலும் நம்புவதும் பிற ருக்குதவி புரிவதுமேதான். ஆனால் ஹிந்துமதத்தின் முக்கியலட்சியம் பிரம்ம சாக்ஷாத்காரத்தைக் கண்டறிவதுதான். மனிதன் பிரம்மானந் தத்தை நேருக்குநேராக அனுபவித்தாற்றான் தானே தன்மயனாய் விளங்குமியல்பினனாகின்றான். ஆகவே விக்ரஹங்கள், ஆலயங்கள், வேத சாஸ்திரங்கள் முதலியனயாவும் அவனுடைய சமயஜீவனின் பால்யாவஸ்தைக்கு ஞான ஆரம்பநிலையில் உதவமட்டுமேயாம். அதி லிருந்து அவன் படிப்படியாய் உயரவேண்டியவன்.

பரிவ்ராஜகன் (எவ்விடத்தும் தங்காதவன்)

"அவன் ஓரிடத்தும் தங்கிநிற்றல் கூடாது; பகிரங்க பூஜை, விக்ரஹ ஆராதனை ஆகிய இவை உத்தம ஸ்தானத்தையடைய முயலும்

தாழ்ந்தபடிகள் ; அதற்குமேல் சிறிது உயர்வுடையது மானசிக பூஜை ; ஆனால் 'ஈஸ்வர சாக்ஷாத்காரமே பரமோத்கிருஷ்டமானது''

𑌉𑌤𑍍𑌤𑌮𑍋 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌸𑌦𑍍𑌭𑌾𑌵𑍋 𑌧𑍍𑌯𑌾𑌨𑌭𑌾𑌵𑌸𑍍𑌤𑍁 𑌮𑌧𑍍𑌯𑌮𑌃 ।
𑌸𑍍𑌤𑍁𑌤𑌿𑌰𑍍𑌜𑌪𑍋𑌽𑌧𑌮𑍋 𑌭𑌾𑌵𑍋 𑌬𑌹𑌿𑌃 𑌪𑍂𑌜𑌾𑌽𑌧𑌮𑌾𑌧𑌮𑌾 ॥

என்று வேதம் முறையிடுகின்றது.

இதில் இன்னொரு விசேஷம். விக்ரஹத்தின் முன்னால் சாஷ்டாங்கமாக வணங்கும் பக்தன், 'சூர்யன் அவரைப் பிரகாசிக்கச் செய்ய மாட்டான் ; சந்திரனாகட்டும், நட்சத்திரங்களே யாகட்டும், மின்ன லாகட்டும், அவரைப் பிரகாசிக்கச் செய்யமாட்டா. நாம் அக்கினி யென்று எதைப் பூசிக்கின்றோமோ அதுவும் அவரைப் பிரகாசிக்கச் செய்யாது அவரோ அவை யனைத்திற்கும் பிரகாசமளிப்பார்'

𑌨 𑌤𑌤𑍍𑌰 𑌸𑍂𑌰𑍍𑌯𑍋 𑌭𑌾𑌤𑌿 𑌨 𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌤𑌾𑌰𑌕𑌂 𑌨𑍇𑌮𑌾 𑌵𑌿𑌦𑍍𑌯𑍁
𑌤𑍋 𑌭𑌾𑌨𑍍𑌤𑌿 𑌕𑍁𑌤𑍋𑌽𑌯𑌮𑌗𑍍𑌨𑌿𑌃 ।
𑌤𑌮𑍇𑌵 𑌭𑌾𑌨𑍍𑌤𑌮𑌨𑍁𑌭𑌾𑌤𑌿 𑌸𑌰𑍍𑌵𑌂 𑌤𑌸𑍍𑌯 𑌭𑌾𑌸𑌾 𑌸𑌰𑍍𑌵𑌮𑌿𑌦𑌂
𑌵𑌿𑌭𑌾𑌤𑌿 ॥

என்று துதிப்பதை நாம் கண்ணுறுங்கால், அவன் அவ் விக்ரஹத்தைப் பழிக்கின்றானென்றாவது, அவ்விக்ரஹ ஆராதனையைப் பாகர்ம மென்று பகருகின்றானென்றாவது நினைக்கலாமோ ? இதில் ஜீவனுக்கு இன்றியமையாத அவஸ்தையொன் றுளதென்றே அவன் அறிகிறான். இன்று குழந்தையா யிருப்பவன், அப்பால் வளர்ந்து மனிதனாகிறான். ஆதலால், கிழவனொருவன் இளமை, பாலியப்பருவங்களைப் பாபகாமானதென்று சொல்வதும் இகழ்வதும் தகாதல்லவா ?

விக்ரஹ ஆராதனை அவசியமென்று ஹிந்துமதங் கூறவில்லை ; அதன்வாயிலாக ஒரு மனிதன் தமது தெய்வீகநிலையை அடையக் கூடு மானால் அதைப் பாபகரமானதென்று சொல்வது பொருந்தாதல்லவா ? அந்த ஆரம்ப அவஸ்தையைக் கடந்தபின்பும் அவனதனைத் தாழ்ந்த தாகக் கருதுதலாகாது. ஹிந்துவின் சித்தாந்தப்படி, மனிதன் மயக் கத்திலிருந்து உண்மையான நிலையை யெய்துவதில்லை. உண்மையி லிருந்தே உண்மைக்கு, அதாவது கீழ்ப்பட்ட ஸ்திதியில் கைக்கொள் ளப்படும் உண்மையிலிருந்து உயர்ந்த—மேம்பட்ட ஸ்திதியில் விளங் கும் உண்மைக்குச் செல்லுகிறான். யாவற்றினுந் தாழ்ந்த ஜடப்

பொருட் பூசனைமுதல், உயர்ந்த வேதாந்தத்தின் ஆணித்தரமான அகண்ட அத்வைதவாதம் வரையிலுமுள்ள தர்மங்களெல்லாம், ஆதியும் அந்தியமுமற்ற நித்திய வஸ்துவை அடைந்து அனுபவிக்க ஒவ்வொரு மனுஷிய ஆத்மாவுஞ் செய்கின்ற பிரயத்னங்களின் சொரூபங்களேயாம். பிறவியினாலும் பழக்கத்தினாலும் ஒவ்வொரு தர்மத்தின் பயனும் நிர்ணயிக்கப்படும். அவை ஒவ்வொன்றும் ஆத்மார்த்த அபிவிருத்தியின் ஒவ்வொரு படியைச் சூசிப்பிக்கின்றன. ஒவ்வொரு ஜீவாத்மாவும், ஜோதி சொரூபமாயிலங்கும் சூர்யனை நோக்கி ஆகாய மார்க்கத்தில் மென்மேலும் பறந்து படிப்படியாக அதிக வலிமை பெற்று நிற்கும் இளங்கருடனுக்குச் சமானமாகச் சொல்லலாம்.

சமயக்கோள்கைகளும் அடையாளங்களும்.

வேற்றுமையில் ஒற்றுமை விளங்குவதுதான் உலகவியற்கையின் ரீதி. இவ்விஷயத்தை ஹிந்துக்கள் செவ்வையாக உணர்ந்திருக்கின்றார்கள். ஏனைய சமயங்கள் ஒவ்வொன்றும் சிற்சில விதிகளை ஏற்படுத்தி அவற்றை யாவரும் கைப்பற்றவேண்டுமென்று வற்புறுத்துகின்றன. அவை ஜன ஸமூகத்தின் முன்பாக ஒரேவிதமான சட்டையைக்காட்டி ராமன், கிருஷ்ணன், கோவிந்தன் ஆகிய எல்லாருக்கும் அதுபொருந்தவேண்டுமென்று சொல்லுகின்றன. அச்சட்டை கிருஷ்ணனுக்காவது கோவிந்தனுக்காவது சரியாயில்லாவிட்டால் அவர்கள் அங்கியின்றி யிருக்கவேண்டியவர்கள்தான். அகண்டவஸ்துவைப் பிரத்யக்ஷமாய் அனுபவிப்பதற்காவது, சிந்தனை செய்வதற்காவது, சொல்வதற்காவது, நமது மனதிற்குப் பொருளாகக்கூடிய கண்டப் பொருளின் உதவியில்லாமல் இயலாதென்பதை ஹிந்துக்கள் கண்டுகொண்டிருக்கின்றனர். ஹிந்துக்களின் விக்ரஹங்களும், கிறிஸ்தவர்களின் சிலுவையும், முகம்மதியர்களின் சந்திரகலை—இளம்பிறையும் ஆத்யாத்மிக பாவனைகளின் சங்கேத சொரூபங்களாம். ஒவ்வொரு மனிதனுக்கும் இவ்வித உதவி வேண்டுமென்பது அவசியமன்று; ஆனால் அதை விரும்பாதவர்கள் அதைத் தப்பென்று சொல்ல நியாயமே கிடையாது. ஹிந்துமதத்தில் அது வேண்டுமென்பது கட்டாயமில்லை.

நான் இன்னும் உங்களுக்கறிவித்தற் குரிய விஷயமொன்றுண்டு. இந்தியாவில் நடைபெறும் விக்ரஹ ஆராதனை எவ்வித கோரமான செயலையுமுடையதன்று. அது வேசிகளைப் பெருக்கும் தன்மையதுமன்று. ஆனால் அது, மன பரிபக்குவமடையாதவர்கள் மதத்தின் உயர்ந்த

உண்மைகளைக் கிரஹிப்பதற்கு வழிபாடியற்றும் முயற்சியேயாம். ஹிந்துக்களிடத்தில் தவறுகளுளவாயினும், அவர்கள் எப்போதும் தங்கள் ஆன்மதேகத்தைத் தண்டித்துக் கொள்வார்களே யல்லாமல், அயலாரின் கழுத்தை யறுக்க மறந்தும் மனந்துணியார். மதாவேசமுடைய ஹிந்துவானவன் அக்கினிப்பிரவேசஞ்செய்து தனது தேகத்தை ஆஹுதியாக்குவானானாலும், புறச் சமயங்களை யழிக்கும்பொருட்டு அவன் தீமூட்ட இசையான். இத்தோஷமும் ஹிந்துமதத்திற்குக் கிடையாது. பண்டைக்காலத்தில் கிறிஸ்தவ சமயத்தார் சூன்யக்காரர்களைச் சுட்டெரித்தது எவ்வாறு தவறாகாதோ அவ்வாறே இப்படி தீக்குளிக்கும் செயலும் ஹிந்து தர்மப்படி குற்றமாகாது.

ஆகவே, உலகிலுள்ள சகல சமயங்களும், பல்வேறான ருசியுள்ள ஆடவர் பெண்டிரென்னு மிருபாலரும் தத்தம் பரிபாக பேதத்துக்கும் கர்மவிசேஷத்திற்குந் தக்கவாறு யாத்திரையாகி, ஒரே முடிவைக் கருதி மென்மேலும் முன்னடையச்செய்யும் உபாயங்களென்பதே ஹிந்துக்களின் கொள்கை. ஜடபாவனையுடைய மனிதனினின்றும் பிரம்மம் பரிணமிக்குமாறு செய்வதே ஒவ்வொரு சமயத்தின் காரியமாகும். ஒரே கடவுள்தான் எல்லாமதங்களையும் விளங்கவைத்திருக்கின்றனர். அப்படியானால், சமயங்களுக்குள் ஏனப்படி வித்தியாசங்க ளேற்பட வேண்டும்? ஹிந்துக்கள் 'அவ்வேற்றுமைகள் பார்வைக்குமட்டும் வித்யாசமுடையனவாகத் தோன்றும்' என்றியம்புகின்றனர். ஒரே உண்மை வெவ்வேறு சுபாவமுள்ள மனிதர்களின் வெவ்வேறு பக்குவ நிலைக்கேற்றபடி அமைந்து விளங்குவதால் அவ் வேற்றுமைகள் தோன்றுகின்றன.

ஒரே கடவுள் எல்லா சமயங்களிலும் விளங்குகிறார்.

பலவித நிறமுள்ள கண்ணாடிகளின் வழியாக ஒரே வெளிச்சம் ஊடுருவிவருவதை இது ஒத்திருக்கிறது. பலவகைப் பிரத்தியேக சுபாவத்தின் உபயோகத்திற்காக இவ்வித அற்பவித்தியாசங்கள் அவசியமாயிருக்கின்றன. ஆனால் இவை ஒவ்வொன்றினுளத்திலும் நிலைத்திருப்பது ஒரே உண்மைதான். சர்வேஸ்வரன் ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மாவாகத் திருவவதரித்தபொழுது,

[illegible] |
𑌯𑌦𑍍𑌯𑌦𑍍𑌵𑌿𑌭𑍂𑌤𑌿𑌮𑌤𑍍𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌂 𑌶𑍍𑌰𑍀𑌮𑌦𑍂𑌰𑍍𑌜𑌿𑌤𑌮𑍇𑌵 𑌵𑌾 |
𑌤𑌤𑍍𑌤𑌦𑍇𑌵𑌾𑌵𑌗𑌚𑍍𑌛 𑌤𑍍𑌵𑌂 𑌮𑌮 𑌤𑍇𑌜𑍋𑌽𑌂𑌶𑌸𑌂𑌭𑌵𑌮𑍍 ||

'முத்துமாலையில் ஓடும் நூலைப்போல நான் ஒவ்வொரு சமயத்திலுள்ளு மிருக்கிறேன். எங்கெங்கு விசேஷப் பிரபாவமாக சக்தியும் தூய்மை யுந்தோன்றி, ஜனசமூகத்தை நல்வழிப்படுத்துகின்றதோ அங்கங்கே நான் நிலைத்திருப்பதாக அறிவீர்களாக' என்று ஹிந்துக்களுக்கு உபதேசித்திருக்கிறார். இதன் பயன்தானென்ன; வடமொழி தரிசன நூல்களனைத்தையும் தேடிப்பார்த்தாலும் 'ஹிந்துக்களுக்குமட்டுமே மோக்ஷமுண்டு, மற்றவர்களுக்குக் கிடையாது' என்ற வசனம் எங்கும் காணப்படவில்லையென்று யான் உங்களுக்கு நிச்சயமாயச் சொல்லுவேன்; அதை மறுக்க யாராவது முன்வர முடியுமா? ஸ்ரீ வியாஸ பகவான் தாம் வரைந்த வேதாந்த சூத்திரத்தில் அந்தரா சாபி து தத்ருஷ்டே: அதாவது 'நம்முடைய ஜாதி சமயங்களுக்கு வெளியேயுள்ளவர்களிலும் சித்தபுருஷர்கள் காணப்படுகின்றார்கள்' என்று கூறியிருக்கின்றனர். அப்படியானால் ஆஸ்திக சிகாமணிகளாகிய ஹிந்து மக்கள், அக்ஞேயவாதமான பௌத்த மதத்தையும் நிரீசுவரவாதமாகிய ஜைன மதத்தையும் எவ்வாறு விசுவாசிக்கிறார்கள்; என்று நீங்கள் கேட்கலாம். *பௌத்தர்களும், ஜைனர்களும் கடவுளையே நம்பியிருப்பதில்லை ஆயினும், மனிதனிடத்திலிருந்து தெய்வத்தன்மை பரிணமிக்குமாறு செய்யுந்தன்மையுள்ள ஒவ்வொரு சமயத்திலும் பொருந்தியிருக்கின்ற உண்மையே அவர்களுடைய மதலக்ஷியம். அவர்கள் ஜகத்பிதாவாகிய சர்வேஸ்வரனைக் காணவில்லையானாலும், அவ்வீஸ்வரனது புத்திரசொரூபர்களைக் கண்டிருக்கிறார்கள். †'புத்திரனைப் பார்த்தவர்கள் பிதாவையுங் கண்டவர்களாவர்.'

சகோதரர்களே! இதுவே ஹிந்துமதத்தைப்பற்றிய கொள்கைகளின் சாராம்சம். ஹிந்துக்கள் தங்களுடைய உத்தேசங்களனைத்தையும் நிறைவேற்றுவதில் தவறியிருக்கலாம். ஆனால் சர்வசம்மதமான மதமொன்று எந்தக்காலத்திலேனும் உண்டாகக்கூடுமாயின், அது காலதேசங்களைப்பொருத்ததாயிராமல் இருக்கவேண்டும். அந்த

---

*. 'பிரத்யக்ஷத்திற் சப்பாலுள்ளதை அறியாதவர்கள்' இவ்வுண்மை நாலடியார் என்னும் நூலின் கண் பல விடங்களிலும் விளக்கமாதல் காண்க.

† 'I and my father are one.'—நானும் எனது பிதாவும் ஏகமானவர்களே; He that hath seen the son hath seen the Father' புத்திரனாகிய என்னைக் கண்டோர் கடவுளான என் பிதாவைக் கண்டவர்களே யாவர். கிறிஸ்தவர்கள் சூழாத்தில் சுவாமிகள் பேசினமையால் இவ்வாக்கியங்களைக் குறிப்பிடநேர்ந்த தென்க.

[library stamp: ... MADRAS ...]

மதம், அது உபதேசிக்கும் கடவுளைப்போல அனந்தமாயுமிருத்தல் வேண்டும். அந்தச்சமய சூரியன், சாதுக்கள் மீதும், பாபிகள் மேலும், கிருஷ்ணபக்தன் மேலும், கிறிஸ்தவர் மீதும் சமமாகவே பிரகாசிக்கவேண்டும். அம்மதம், கேவலம் பிராமண மதமாகவோ, முகம்மதியர்மதமாகவோ, கிறிஸ்தவ மதமாகவோ இல்லாமல், இவை யாவும் ஒன்றாகிய ஸமஷ்டிசொரூபமாய், இன்னும் பெருகவேண்டிய இடந்தருவதாயு மிருக்கவேண்டும்; வன விலங்குகளுக்கும் அதமராய்த்திரிந்துழலும் தாழ்ந்தோர்முதல், விவேகத்தாலும், அன்பாலும் எல்லா மக்களிலும் உயர்ந்து விளங்கி, தம்மைக்காணும் மனிதர்கள் 'இவர்கள் அமரரோ, அன்றி மனிதரோ' என்று சங்கிக்கும்படியான நிலையை யெய்தியுள்ள உத்தம ஸ்திரீ புருஷர்கள் வரையிலுள்ள சகலரையும் ஆதரித்து, அளவற்ற தனது கரங்களால் அனைவரையும் அணைத்தெடுக்கும் சார்வபௌமிக சுபாவத்தை அந்தசமயம் அடைந்திருக்கவேண்டும்.

சர்வ சம்மதமான சமயம்.

அது அன்னியர்களைத் துன்புறுத்தவோ, அவர்களிடம் பொறாமை கொள்ளவோ முற்படாத சமயமாகவும், ஒவ்வொரு ஆடவர் பெண்டிரிடத்துமுள்ள தெய்வீகத் தன்மையை ஆய்ந்தறிவதாகவும், மக்களனைவரும் தமது உண்மைத் தன்மையான தெய்வீகத்தை யடைவதில் உதவிபுரிவதாயும், அதன் முழுவல்லமையையும் நோக்கத்தையும் வெளிப்படுத்துவதாயுமிருக்க வேண்டும்.

அப்படிப்பட்ட சமயத்தை அருளுவீர்களானால் எல்லா ஜாதியாரும் தங்களைப் பின்பற்றுவார்கள். முன் அசோக சக்ரவர்த்தி கூட்டிய சபையானது கேவலம் பௌத்த சபையாகவே யிருந்தது. அக்பர் சக்ரவர்த்தி கூட்டிய தர்மசபை, கூடியவரையில் முன்கூறியபடி பல சமயத்தவருங்கூடியதா யிருந்தபோதிலும், அதனால் விசேஷ பலனொன்றும் விளையவில்லை. 'ஒவ்வொரு மதத்திலும் சர்வேஸ்வரன் விளங்குகிறார்' என்ற பேருண்மையை அகில முழுவதிலும் பிரகடனஞ் செய்யும் பாக்கியம் அமரிக்காவுக்கே உரியது போலும்!

அன்புள்ள வாழ்த்து:

ஹிந்துக்கள் பிரம்மமென்றும், பாரசீகர்கள் அஹீரமஸ்தரென்றும், பௌத்தர்கள் புத்தரென்றும், யூதர்கள் ஜிஹோவாவென்றும், கிறிஸ்தவர்கள் வானுலகிலுள்ள பிதாவென்றும், எந்த தெய்வத்தைப்

போற்றுகிறார்களோ, அந்த சர்வேஸ்வரன் உங்கள் மேலான உத்தேசத்தை நிறைவேற்றப்போதிய சக்தியை யருள்வாராக. சமரஸபாவனையெனும் கீழ்த்திசையில் உதயமான நட்சத்திரம், சிலசமயம் மங்கலாயும், சிலவேளை பிரகாசமாயும் ஒளிவீசி, குடதிசையை நோக்கிக் கொஞ்சங் கொஞ்சமாகச் சென்று, பூப்பிரதக்ஷணஞ் செய்துமுடித்து, மறுபடியும், குணதிசையின் அடிவாரத்தில் முன்னிலும் பன்மடங்கு மேலான பிரகாசத்துடன் மறுபடியும் உதயமாகியுள்ளது.

சுதந்திரத்திற்குத் தாயகமான * கொலம்பியாவே! நீ என்றும் வாழி! நீ என்றும் அயலாரைக்கொன்று அவர்களுடைய ரத்தத்தைச் சிந்தவைக்க சிந்தித்ததேயில்லை. அயலாரை கொள்ளையடித்து ஐஸ்வரியத்தைச் சேர்க்கவேண்டுமென்னும் அற்பகுணம் உன்னிடத்தென்று மிருந்ததில்லை. ஆதலாற்றான் நாகரீகர் முன் சமரஸக் கொடியையுயர்த்தும் பாக்கியம் உனக்கே கிடைத்தது.

ஓம் சாந்தி : சாந்தி : சாந்தி :

அன்றைய உபந்நியாசம் இத்துடன் முடிவடைந்தது. ஹிந்து மதத்தைப்பற்றிய உண்மைகளை பலமுறை கற்றறிந்தும் மயக்கமுடையவர்களாயிருந்த அமரிக்கர்களுக்கு சுவாமிகள் 'ஹிந்துமதப் பிரசங்க' வாயிலாக ஹிந்துமதத்தின் பிரபாவத்தை வெகு சுலபமா யூட்டினார். பாமரன்முதல் பண்டிதர்வரை யாவரும் அவர் கூறியவற்றை கிரகித்தார்கள். அன்று சபை அதோடு முடிவடைந்தது.

---

* கொலம்பஸ் என்பவரால் முதல் முதலாகக் கண்டு பிடிக்கப்பட்டபடியால் அமரிக்காவிற்கு 'கொலம்பியா' என்ற மற்றொரு பெயரும் வழங்கப்படும்.

28-ம் அத்தியாயம்.

பின்னியற்றிய பிரசங்கங்கள்

ஊற்று நீர் போல் அன்பு பெருக, அனைவரும் ஆனந்தக் கண்ணீர் சொரிய, சுவாமிகள் 'சர்வதர்ம மகாசபை' கூடிய பத்தாம் நாள்—1893ஆம் செப்டெம்பர்மீ 20உ நிகழ்த்திய சொற்பொழிவு பின் வருமாறு:

ஏழை அஞ்ஞானிகள்

புறச்சமயத்தவர் கிறிஸ்து சமயத்தை நியாயபூர்வமாகச் சீர்தூக்கி ஆராய்ச்சிசெய்ய முன் வரும்போது, கிறிஸ்தவ சமயத்தவர் அதற்கு இடந்தரச் சித்தமாயிருக்கவேண்டும். ஆதலால், உங்கள் சமயவிஷயங்களில் நான் ஏதேனுஞ் சிறிது குற்றங் குறைகளை எடுத்துக் கூறின் நீங்கள் மனவருத்த மடையீரென்று நம்புகிறேன். ஹே! கிறிஸ்தவ சகோதரர்களே! நீங்கள் 'அஞ்ஞானிகள்' என்றழைக்கும் எங்கள் சமயத்தவரைக் காக்கும்பொருட்டு, பாதிரிமார்களை மத உணர்ச்சியுடன் அனுப்புகின்றீர்களல்லவா? பசிப்பிணியால் துன்பப்படும் அம்மக்களைக் காப்பாற்ற நீங்களேன் எவ்வித முயற்சியும் செய்வதில்லை? பாரதநாட்டில் கொடிய பஞ்சகாலங்களில் பல்லாயிரம் மக்கள் உண்ண உணவில்லாமல் பிராணனைவிட நேரிட்டதே, அப்பொழுது அவர்களை ரக்ஷிக்க கிறிஸ்தவ சமயத்தவரான நீங்கள் செய்த உதவியென்ன? ஏதுமில்லையல்லவா? இந்தியாவின் மூலைமுடுக்குகள்தோறும் நீங்கள் உங்களுடைய மாதாகோயில்களைக் கட்டுகிறீர்கள். ஆனால் கீழ்தேசத்தாரை மதக் குறைவானது வருத்துவதில்லை. அவர்களுடைய சமயம் கடலினும் பெரிதாக விளங்குகின்றது. குடிக்க கூழுமின்றி அவர்களிற் பலர் வறுமையுறுகின்றனர். இந்தியாவில் கால்சுட, தலை கொதிப்படைய, நெஞ்சுலர நா வரள, வயிறுவாட 'அம்மா பிச்சை'யெனக் கையி லகலேந்தி, எத்தனையோ பேர் கதறுகின்றனரே. அவர்கள் உணவுகேட்டால் நாம் மண்ணை யள்ளியா கொடுப்பது? குடிக்கக் கூழுமில்லாமல் வறுமையுற்றவர்களுக்கு சமயப்பிரசாரம் செய்தால், அது அவர்களை ஏளனஞ்செய்வதுபோலல்லவா யிருக்கின்றது. பசிப்பிணியால் வருந்துபவருக்கு வேதாந்தோபதேசமென்ன? அது அவர்களை எள்ளுவது போலல்லவா இருக்கும்? எங்கள் தேசத்தில் நாங்கள் பொருளைக் கருதி ஞானோபதேசம் செய்தவர்களைச் சாதியினின்றும் விலக்கி, அவ

மானப்படுத்துவோம். எனது தாய்நாட்டின் கண்ணுள்ள ஏழைமக் களைக் கைதூக்கிவிட வெண்ணி நான் இங்குற்றேன்; கிறிஸ்தவ நாட்டில், கிறிஸ்தவர்களிடமிருந்து 'அஞ்ஞானி' என்றழைக்கப்படும் எனது சகோதரர்களுக்கு எவ்வளவு உதவி கிடைக்கு மென்பதைத் திட்பமாயறிந்து கொண்டேன்.

அப்பால் மகாசபை கூடிய பன்னிரண்டாம் நாட் கூட்டத்தில் 1893ஆம் செப்டெம்பர்மீ 22உ அம் மகாசபையின் 'சாஸ்திர ஆராய்ச்சிப் பிரிவுசபை'யின் ஆதரவில் 'வைதீக ஹிந்துமதம்' என்பது பொருளாக சருக்கரைப் பந்தலிற் றேன்மாரி பெய்ததெனும் வழக்கு மெய்யாமாறு ஓர் உபந்நியாசஞ் செய்தார். அன்று கத்தோலிய குரு மார்கள், 'பிராடஸ்டெண்ட்' பாதிரிமார்கள், யுத்திவாதிகள், சமயா சார விர்ப்பன்னர்களாகிய பலரும் எள்விழ இடமின்றி நிறைந்திருந் தார்கள். அவர்களுக்கு இடையிடையே உண்டான பல சந்தேகங் களுக்கும் சுவாமிகள் தக்க விடையளித்தார். அவர்கள் விருப்பிற் கிணங்கி வெளியிடங்களில் ஹிந்துதர்மத்தைப்பற்றி உபந்நியசிக்கவும் சம்மதித்தார். அறிவாளிகள் பலரும் அவரைச்சூழ்ந்து கொண்டனர். 'குளம் வெட்டித் தேரை வழிச்சென்ற ரில்லை' யல்லவா?

பிறகு மகாசபையின் பதினாறும் நாள் விழாவில்—செப்டேம்பர்மீ 26உ சுவாமிகள் பின்வருமாறு உபந்நியாசஞ் செய்தார்:
எனது சகோதரர்களே!

நான் பௌத்தனல்லன் என்று நீங்கள் கேள்வியுற்றிருக்கிறீர் கள். ஆனாலும் என்னை ஒருவகையில் பௌத்த னென்றும் சொல் லலாம். சீனர்களும், ஜப்பானியரும், சிங்களரும் தத்தம் லோக குருவான புத்ததாது உபதேசங்களை அனுசரித்து நடந்தால், பாரத நாட்டினராகிய ஹிந்துக்கள் அவரை ஈஸ்வராவதாரமென்றே மதித்து ஆராதித்து வருகிறார்கள். நான் பௌத்த சமயத்தின் குணதோஷங் களை ஆராயப் போவதாகச் சொல்ல சற்றுமுன் கேட்டிருக்கிறீர் கள். அதனால் நான் குற்றங்கூறப் போகின்றேனோ வென்று நீங்கள் சம்சயப்படவேண்டாம். புவனத் தில் எவரை யான் அவதார புருஷராகக் கொண்டாடு கிறேனோ அவரைப்பற்றி நிந்திப்பது எனது கருத்தன்று. ஆனால், புத்த பகவானைப்பற்றிய எங்கள் அபிப்பிராயமெல்லாம், அவரை அவருடைய சீடர்கள் சரியாகத் தெரிந்துகொள்ளவில்லை யென்பதுதான். ஹிந்து

பௌத்த ஹிந்து மதசம்பந்தம்

மதத்திற்கும், கிறிஸ்தவ சமயத்திற்கும் உள்ள சம்பந்தாசம்பந்த மெதுவோ அதுதான் இப்போது பௌத்த மதத்திற்கும் வேதாந்த ஹிந்து மதத்திற்கு மிடையே நிலவுவது. இயேசுகிறிஸ்துநாதர் ஓர் யூதர்; சாக்கிய முனிவர் ஓர் ஹிந்து. ஆனால் அவர்களுக்கிடையே யிருந்த பேதமென்னை யெனில்,-யூதர்கள் இயேசு கிறிஸ்துவை எதிர்த்ததுமட்டுமின்றி அவரைச் சிலுவையில் அறைந்தார்கள்; ஹிந்துக்கள், சாக்கியமுனிவரை .தெய்வமாக ஏற்றுப் போற்றுகின்றனர். ஆனால் இன்றைய பௌத்த சமயத்திற்கும், புத்த பகவானின் உண்மையான உபதேசங்களுக்கும் உள்ள பேதம் யாதெனில், சாக்கியர் எந்த சமயக் கொள்கையையும் புதிதாகப் புகட்டவந்தவரில்லை யென்பதுதான். இயேசு கிறிஸ்துவைப் போலவே சாக்கிய முனிவரும் பிறவிப்பயனை நிறைவேற்ற அவதரித்தவரே யல்லாமல், ஏற்கனவே யுள்ளதைக் கெடுக்க வந்தவரன்று. இயேசுவின் விஷயத்தில்மட்டும், பூர்வகால மக்களான யூதர்கள் அவரை அறிந்து போற்றுமற் போயினர். புத்த பகவான் விஷயத்தில், அவரது அத்யந்த சீடர்களுங்கூட அவருடைய உபதேசங்களின் உயர்வை யறியாமற் போயினர். யூதர்கள் கிறிஸ்துவின் அரிய உபதேசங்களைப் பழைய ஏற்பாட்டின் பூரணமென அறிந்து கொள்ளாமற்போனது போன்றே பௌத்தர்களும், ஹிந்து மதத்தின் முடிவே பௌத்த மதமென்பதை உணராமற்போயினர். சாக்கிய முனிவர் பூர்த்திசெய்ய வந்தாரே யல்லாமல் அழிக்கவரவில்லை யென்று நானுங்களுக்கு மறு முறையும் சொல்லுகிறேன். ஹிந்துமதத்தின் சிறந்த கொள்கைகளை முற்றிலும் தமது வாழ்க்கையில் விளக்கிக் காட்டிய மகானுபவர் அவரே யாவார்.

ஹிந்துக்களுடைய சமயமானது கர்மகாண்டம் ஞானகாண்டமென்னும் இரண்டு பெரும் பிரிவுகளையுடையது. ஞானகாண்டத்தை முக்கியமாக அனுசரிப்பவர்கள் சந்நியாசிகளே. அதில் ஜாதி வித்தியாசமில்லை. இந்தியாவில் இழிகுலத்தோனும் உயர்ந்த ஜாதியானும் துறவு பூணலாம். அவ்விருவரும் அப்பொழுது ஒன்றாகிவிடுகின்றனர். வேதாந்தத்தில் ஜாதிபேதமில்லை. ஜாதியென்பது ஜனசமூகத்தில் உண்டான ஓர் கட்டுப்பாடேயன்றி வேறில்லை. சாக்கிய முனிவர் ஓர் துறவிதான். வேதத்தின் மறைபொருள்களை வெளிப்படுத்தி, அவற்றை உலகமுழுவதும் பரவுமாறு செய்த தயாளு அவரேயாவர். உலகத்தில் சமயப்பிரசாரத்தை அனுஷ்டானத்திற்குக் கொண்டுவந்தவரும் அவரே.

மதப்பிரசாரஞ்செய்து மக்களை நல்வழிப்படுத்தலாமென்ற உண்மையை முதல்முதலாக அனுஷ்டித்தவரும் அவரேயாவார்.

ஏழைகளிடத்திலும், முக்கியமாக அஞ்ஞானிகளிடத்திலும் அவர் கொண்டிருந்த ஆச்சரியகரமான அனுதாபமே அவரது மகிமைக்கு முக்கியகாரணம். அவருடைய சீடர்களுள் சில பிராம்மணர்களுமிருந்தனர். புத்தபகவான் தர்மோபதேசஞ் செய்யத் தொடங்கிய காலத்தில், இந்தியாவில் சம்ஸ்கிருதபாஷை பேச்சு வழக்கற்றுப் போயிற்று. புலவர்தம் புத்தகங்களில் மட்டும் அது ஏட்டுச்சுரைக்காயாக விருந்தது. புத்தபகவானுடைய பிராம்மண சிஷ்யர்களிற் சிலர், அவருடைய உபதேசமொழிகளை சம்ஸ்கிருத பாஷையில் மொழி பெயர்க்க விரும்பினர். ஆனால் புத்தர் 'நான் ஏழைகளுக்காகவே அவதரித்தவன் ; சாதாரண மக்களைக் காக்கவே வந்தவன். ஆதலால், சாமான்ய மக்களின் பேச்சு வழக்கிலுள்ள பாஷையிலேயே யான் பேச விரும்புகிறேன்' என்று கண்டிப்பாய்க் கூறிவிட்டார். ஆதலால், அவருடைய உபதேசங்கள் பெரும்பான்மையும் இந்தியாவில் அப்போது வழங்கிய *'பாலி' என்னும் பாஷையிலேயே வரையப்பெற்று இன்று முள்ளன.

சாஸ்திர விசாரமும், வேதாந்தமும் எவ்வித நிலையை யெய்திய போதிலும், உலகில் மரணம் என்னும் வியாபாரமொன்று நிலவும் வரை, மனிதனுடைய மனத்தில் துர்ப்பலம் என்னும் மனோபாவம் உள்ளவரை, அத்துர்ப்பலத்தால் மனிதன் மனங்கரைந்து ஈஸ்வரனை நோக்கி ஓலமிடுகின்றவரையிலும், இறைவனிடத்தில் ஒருவித நம்பிக்கை யிருந்தேதீரும்.

ஒருவகையில், புத்ததேவரது சீடர்கள் தத்துவஞான விஷயமாய் வேதமென்னும் அசலத்தின் மீது எவ்வளவு மோதித்தாக்கி அசைத்துப்பார்த்தும் அவர்களா லதனை யழிக்க முடியவில்லை. மற்றொருவகையில், ஒவ்வொரு ஸ்திரீ புருஷனும் மிக்க அன்புடன் எந்த பரமபுருஷனை ஆராதிக்கின்றார்களோ, அந்த இறைவனை எல்லா ஜாதியாரிடத்தினின்றும் அபகரித்துவிட்டனர். இது காரணமாகத்தான் புத்தமதம் இந்தியாவில் இருந்த இடந்தெரியாமல் அழிந்துபோய்விட்டது. இப்போது, அம்மதத்தின் பிறப்பிடமாகிய இந்தியாவில் 'நான் பௌத்தன்' என்று சொல்லிக்கொள்பவன் ஒருவன்கூட இல்லை.

---

* பாலி யென்பது சம்ஸ்கிருத மொழியினின்றும் ஜனித்த பல பிராகிருத பாஷைகளுள் ஒன்று.

ஆனால், அதே காலத்தில் பிராம்மண தர்மமும் சிற்சில அம்சங்களை யிழந்தது. ஜனசமூகத்தைச் சீர்திருத்தவேண்டுமென்ற பேரவாவும், ஒவ்வொரு ஜீவப்பிராணிகளிடத்துங் காட்டிய ஆச்சரியகரமான காருண்யமும், தயாளத்துவமும் பிராம்மண தர்மத்திற்கு ஒருவிதக் குறையை விளைத்ததெனலாம். 'எந்த ஹிந்துவும் பொய்பேசான்; எந்த ஹிந்து ஸ்திரீயும் தனது பதிவிரதா தர்மத்தினின்றும் தவறாள்' என்று அக்காலத்தில் கிரேக்கச் சரித்திராசிரியர் ஒருவர் யெழுதியபடி இந்திய ஜனசமூகம் எதனால் மேன்மையுற்றதோ அதற்கு ஆஸ்பதமாயிருந்த அப் பௌத்தமதத்தின் விசேஷத்தன்மைகள் யாவும் பிராம்மணதர்மத்தை விட்டகன்றன.

[அப்பால், ஆங்குவீற்றிருந்த பௌத்தப் பிரதிநிதிகளைப் பார்த்து]

பௌத்த அன்பர்களே! நாங்கள் உங்களை விட்டுபிரிந்திருக்க இயலாது; எங்களை விட்டுப்பிரிந்து நீங்களுமிருக்க முடியாது. நாமிருவரும் பிரிந்துபோய் விட்டமையால், பிராம்மணர்களுடைய உயர்ந்த புத்தியும், தத்துவ ஞான ஆராய்ச்சியுமில்லாமல் நீங்கள் முன்னடைய முடியாதென்பதையும், ஜீவகாருண்ய சம்பன்னர்களான உங்களுடைய அன்பின்றி நாங்கள் நிற்க முடியாதென்பதையும் இப்பொழுது நாம் தெரிந்துகொண்டோம். இவ்வாறு நாம் ஒருவரைவிட்டொருவர் பிளவுபட்டுப் போனதுதான் இந்தியாவின் மிடிமைக்குக்காரணம். இந்தியாதேசம், முப்பதுகோடி பிச்சைக்காரர்கள் வதியுமிடமானதற்கும் இதுவே காரணம். இந்தியா கடந்த ஆயிரமாண்டுகளாக வெளிநாடுகளிலிருந்து படையெடுத்து வருவோருக்கெல்லாம் அடிமையாகி வருவதுமிதனாலேயே. ஆதலால், நாம் பிராம்மணர்களுடைய மேலான புத்தியையும், லோக குருவான புத்தபகவானின் கருணைநிறைந்த ஹிருதயத்தையும், மகிமைபொருந்திய ஆன்மாவையும், அற்புதலோக ஹிதசக்தியையும் ஒன்று சேர்த்து இன்புற்றுக் கூடிவாழ்வோமாக.

அதன்பின், சுவாமிகள் முடிவுரையாக—1893ஆம் செப்டம்பர் மீ 27உ உபந்யசித்தார். அது பின்வருமாறு:

முடிவுரை.

அகில சர்வதர்ம மாகாசபையானது வெகு சிறப்பாய் நடைபெற்றுவிட்டது. இப்பவித்திரமான காரியத்தை நடத்த முயற்சித்து அழைத்தவர்களுக்குப் பரமகருணா நிதியான சர்வேஸ்வரன் துணையாக

கின்று, அவர்கள் சுயநலங்கருதாது பட்ட சிரமத்திற்குத் தக்க ஜயத்தை யளித்திருக்கின்றார்.

எவர்களுடைய நிஷ்களங்கவிசால மனோபாவத்தாலும், முதலில் கனவுகண்டு அப்பால் அதை நிறைவேற்ற வேண்டுமென்ற முயற்சியாலும், இம்மகாசபை நிறைவேறிற்றோ அச்சத்துவகுண சம்பன்னர்களுக்கு நான் எனது மனப்பூர்வமான வந்தனத்தைச் சமர்ப்பிக்கிறேன். இம்மேடையில், இடைவிடாது பொழிந்தோடிய உதார பாவனைகளுக்கும் எனது மனமார்ந்த வந்தனம். கல்வி கேள்விகளிற் சிறந்தோர்களான இச் சபையோர்கள், என்பொருட்டு காட்டிய கருணைக்காகவும், சகல சமயங்களுக்கும் பரஸ்பரமுள்ள வைஷம்யத்தை (விஷம குணத்தை)த் தணித்தற்குப் பயன்படும் ஒவ்வொரு கருத்தையும் காரியசித்திக்குக் கொண்டுவந்த பெருமைக்காகவும் நான் வந்தனமளிக்கின்றேன். இந்த இனிமையான சங்கீதத்துவனியினிடையே, அவ்வப்பொழுது அபஸ்வரங்கள் சிற்சில தோன்றின; ஆனால் அவை ஒன்றுக்கொன்று மாறுபட்டு, நமது சங்கீதத்தைப் பின்னும் இனிமையாக்கினதால் அவற்றிற்கும் எனது வந்தனம் உரியதாகும்.

சமய ஐக்கியத்திற்குரிய பொதுவான சில அரிய விஷயங்களைப் பற்றி மகாசபையில் பிரஸ்தாபங்கள் நடைபெற்றன. இதைக்குறித்து எனது சொந்த அபிப்பிராயத்தை வெளியிட இப்பொழுது யான் விரும்பவில்லை. ஆனால், இங்கு எவரேனும் சமயஒற்றுமை, ஏதேனுமொரு சமயத்தின் வெற்றியாலும், மற்றசமயங்களின் அழிவாலும் கைகூடு மென்றெண்ணுவரேல், அவருக்கு "சகோதரரே! உமது எண்ணம் கைகூடாது" என்று நான் உறுதியாகச் சொல்லுவேன். கிறிஸ்தவர்கள் ஹிந்துக்களாக வேண்டுமென்று நான் இச்சிக்கின்றேனா? அவ்விதம் இல்லாதிருக்குமாறு இறைவன் அருள் பாலிப்பாராக. பௌத்தர்களும் ஹிந்துக்களும் கிறிஸ்தவர்களாக வேண்டுமென்பதும் எனது நோக்கமா? எம் மிறைவன் அதனையும் தடுப்பாராக.

நிலத்தில் விதையை விதைத்துவிட்டோம். அதைச் சுற்றிலும் மண்போட்டு, நீர் பாய்ச்சி, காற்று வீசும்படி செய்கிறோம். அந்த விதை மண்ணாகவோ, தண்ணீராகவோ, காற்றாகவோ மாறிவிடுகிறதா? இல்லை. அது செடியாகித் தன்னுடைய வளர்ச்சிக்கேற்றவாறு பரிணமித்து, காற்றையும் மண்ணையும், தண்ணீரையும் தன்னின

மாகச் சேர்த்துக்கொண்டு தன்னினத்திற்கேற்ற தாவரப் பொருள்களாக்கி மரமாய் ஓங்கி வளருகின்றது.

மத விஷயமு மிது போன்றதே. கிறிஸ்தவன் ஹிந்தவாகவோ பௌத்தனாகவோ மாறவேண்டியதில்லை. ஹிந்துவோ, பௌத்தனோ கிறிஸ்தவனாக மாறவேண்டியது மில்லை. ஆனால், ஒவ்வொரு மதமும் ஏனைய சமயங்களின் சத் அம்சங்களைப் பெற்று, அதனால் தன் சொரூபத்தைப் பாதுகாத்துக் கொள்வது மட்டுமன்றி தன் னியல்புக்கேற்ற விதிகளை அனுசரித்து விருத்தியடைதல் அவசியம்.

இந்த சர்வதர்ம மகாசபையானது உலகத்தாருக்கு எதையேனும் விளக்கிற்றெனில் அது யிதுவே: தூய்மை, சித்தசுத்தி, அருள், என்னும் அரியகுணங்கள் உலகத்திலுள்ள எந்த தனி மதத்திற்கும் தனிப்பட்ட சொந்தமான பொருளல்ல வென்பதையும், ஒவ்வொரு சமயத்திலும் சத்குண சம்பன்னர்களான ஸ்திரீ புருஷர்கள் உள்ளா ரென்பதையும், இச்சபை விளக்கியிருக்கிறது. இதுபோன்ற உயர்ந்த பிரத்யக்ஷப் பிரமாணமிருக்கும் பொழுதுகூட, எவராவது தமது சமயமே ஏகமாக வெற்றிபெற்று விளங்குமென்றும், ஏனைய சமயங்கள் வற்றிவிடு மென்றும் பகற்கனவு கண்டுகொண்டிருப்பரேல், நான் அவருக்காக என் உளங்கனிய வருந்தி, யார் எவ்வளவு தூரம் குறுக்கிட்டாலும், ஒவ்வொரு சமயத்தின் கொடியிலும்:

“உதவியே யன்றி உற்பாதமில்லை. ஏற்று அளிப்பதே யன்றி தூற்றியொழிப்பதில்லை. சுபமும் சாந்தியுமே யன்றி கலகமும் கபடமுமில்லை”

யென்ற வாக்கியமும் விரைவில் வரையப்பெறு மென்பதையும் நான் அவர்களுக் கெடுத்துக் காட்டுவேன்.

சர்வதர்ம மகாசபையின் நடவடிக்கைகளை யெல்லாம் அமரிக்காவிலிருந்த பத்திரிகைகள் யாவும் நிரப்பிக் கொண்டெழுந்தன. அவை யாவும், சுவாமிகள் செய்தருளிய ஹிந்துமதப் பிரசங்கமே மிகச் சிறந்ததென்று புகழ்ந்து வரைந்தன. அச் சொற்பொழிவு நிகழ்ந்த அன்று, ஈயுட்காரவு மிடமின்றி அம்மண்டபம் முழுவதும், பெரும்பாலும் பெண்களாலும், சிறுபான்மை ஆடவராலும் நிறையப்பெற்றிருந்தது. ‘நிர்ச்சப்தமாக அனைவரும் பொறுமையுடன், சுவாமிகளின் பிரசங்கத்தைக்கேட்க, முன் பேசியவர்கள் சொற்பெருக்கையும் அமைதியாகக் கேட்டனர்’ ரென்று ஒரு சிகாகோ பத்திரிகை வரைந்தது. சுவாமி

பத்திரிகைகளின் புகழ்ச்சி.

களின் உபந்நியாசத்திலிருந்து உலக சமய சம்பந்தமான விஷயத்தில் ஒரு புது சகாப்தம் தொடங்கிற் றென்பதும் மிகையாகாது.

சுவாமிகளுடைய உபந்நியாசம் சர்வசமய சமரஸபாவனைக்கே வித்தாகவும், உலக ஒற்றுமைக்கே அஸ்திவாரமாகவுமிருந்தது. சுவாமிகள் புறச்சமயிகளைத் தூஷிக்கவில்லை. ஹிந்துமதத்தின் மகிமையைச் சித்தாந்தப்படுத்தி அவர் ஏனைய சமயங்களை ஆதரித்தும், சமயிகளைப் புகழ்ந்தும் பேசினர். அவனியின்கண்ணுள்ள சகலமதங்களுக்கும் ஹிந்துமதமே தாயக மென்பதை அவர் நிரூபித்த பெருமைதான் மிக்க விசேடமாயிருந்தது. 'நாங்கள் எல்லா சமயங்களையும் சமரஸபாவனையுடன் பாராட்டி, எல்லா மதங்களும் சத்தியமானவை என்று ஒப்புக்கொள்ளுகிறோம்' என்று தொடங்கி அவர் பேசிய வாக்கியங்களின் உயர்ந்த கருத்துகள் மேல்நாட்டாருக்கு சமத்வநோக்கத்தைப் போதிப்பதாயிலங்கின. 'ஹிந்துக்களான எங்கள் மூதாதையர்கள் மனத்திலொன்றும் வாயிலொன்றுமாக வாழ்ந்ததில்லை. இறைவனின் இலக்கணங்களைப்பற்றிக் கூறும் நூல்களை நாங்கள் வாசித்துக்கொண்டே போவதில்லை உண்மையான ஹிந்துஞானி கடவுளை நேருக்குநேர் காண வேண்டு மென்பார். வீண் வாய் வேதாந்தம் பேசுவதில் யாங்கள் விருப்புறுவதில்லை. மகரிஷிகள் 'நாங்கள் கடவுளைக் கண்டோம்; ஜீவ பிரம்மைக்கியத்தை அனுபவித்தோம்' என்று கூறுகின்றனர்'' என்று ஹிந்துமதத்தின் பெருமையை எடுத்தோதினர்.

சிகாகோ பிரசங்கத்தின் சிறப்பு.

வேதமென்பதைச் சொல்லளவில் மட்டும் அறிந்தவர்களாய் அதிற் கூறப்பெற்றுள்ள விஷயங்களையோ, அவற்றின் கருத்தையோ அறியாதாருக்கு வேதங்களைப்பற்றி யவர் விளக்கமாகக் கூறினர். 'ஹிந்துக்களின் நித்யவாழ்விலேயே வேதவேதாந்தக் கருத்துகள் ஆழ்ந்து கிடக்கின்றமையாலும், அவற்றைப் பயபக்தி, விநய விசுவாசத்துடன் அனுஷ்டித்து பிரம்மானுபூதியை யடைதலாலும் இந்தியாவில் ஞானிகள் அதிகம்' என்றவர் சிறப்பித்துப் பேசினர். அச்சபையிற் பேசிய பலருள்ளும் ஆன்மதத்துவத்தைப்பற்றி விசேடமாக விளக்கிப் பேசியவரும் சுவாமிகளே யாவார்.

அவருடைய பிரசங்கத்தில் முக்கியமாக சமயத்தின் தத்துவாதாரத்தை அவர் விளக்கிக்காட்டி, ஹிந்துமதக் கொள்கைகளைக் கிறிஸ்தவர் சமயக் கோட்பாடுகளுடன் பொருத்திக் கூறிய விசேஷமே விசேஷம். அவருடைய உபந்நியாசத்தால் பாரத பூமியின் தொன்மை

யும் மேன்மையும் மேல்நாடுகளில் விளங்கலாயின. ஹிந்துமதமே உலக மதமென்று சுவாமிகள் ஸ்தாபித்த தன்மையே இந்தியாவின் புகழைப் பெருக்கிற்று. சனாதன தர்மத்தின் ஞானபரமான கொள்கைகளை அவர் மேல் நாட்டாருக்குத் தெளிவாய் எடுத்துக் காட்டினார். அவருடைய முடிவுரையின் இனிய வசனங்கள் 'அன்பு வெள்ளம் பெருக வேண்டும். உதிரவெள்ளமும் வேற்றுமையு மொடுங்கவேண்டும். கூடுவதன்றிக் குலைவது வேண்டாம். சமாதானமும் ஒற்றுமையும் சமயங்களின் நோக்கமேயன்றி விரோத பாவமல்ல' என்று விளம்பினார்.

ஊர்பேர் கூறாது பெயரைமாற்றி யுரைத்துக்கொண்டு பரிவ்ராஜகராக அலைந்துதிரிந்த விவேகானந்த சந்நியாசி, சர்வதர்ம மகாசபையானது முடிவானபின் உலகப்பிரசித்தரானார். காடுமேடுகளில் கால்நடையாக ஸ்தல யாத்திரை செய்த அவர் ஜகத்குருவாக உலகத்தாரால் ஒப்புக்கொள்ளப்பட்டார். உலகமென்ற கோயிலின் மதில்களிலெல்லாம் அவருடைய திவ்யநாமம் எதிரொலி செய்தது. அவருடைய திருவுருவப்படம் சிகாகோ நகரத்தின் ஒவ்வொரு தெருவிலும் 'விவேகானந்த யதி' என்று அடியில் வரையப்பெற்றுத் தொங்கவிடப் பெற்றது. அப்படத்தை அவ்வழி செல்லும் அமரிக்கரனைவரும் வணங்கிப்போயினர். அந்நாட்டுப் பத்திரிகைகள் யாவும் சுவாமிகளை அனுதினமும் போற்ற வாரம்பித்தன. அவற்றுள் 'நியூ யார்க் தூதன்' என்ற பத்திரிகை:

'நியூயார்க் தூதன்' அபிப்பிராயம்.

சர்வதர்ம மகாசபையிற் சொற்பெருக்கிட்ட பலருள்ளும் சுவாமி விவேகானந்தரே சிறந்தவரென்பது யாவரும் கண்டறிந்த உண்மை. இப்பொழுது இவரைப் போன்ற அதிமேதாவிகளின் ஜன்ம பூமியாகிய இந்தியாவிற்கு நமது சமயப் பிரசாரார்த்தமாகப் பாதிரிகளை யனுப்புதல் எவ்வளவு மதியீனமான செய்கை என்பதை நாம் கூறத் தேவையில்லை'' என்று வரைந்தது. இனிச் சுவாமிகளின் சொற்பொழிவுகள் அமரிக்கா நாட்டினரினுள்ளத்திற் பசுமரத்தாணிபோற் பதிந்த தென்பதை விளக்க, சில பிரபல பத்திரிகாபிப்பிராயங்களை எடுத்துக் கூறுவோம்.

'பாஸ்டன் ஈவினிங் டிரான்ஸ்கிரிப்ட்' எனும் வெளியீடு வரைந்ததாவது: 'ஸ்ரீமத் விவேகானந்த சுவாமிகள் சர்வதர்ம சபையின் ஒரு செல்வமாயிருந்தார். அவருடைய சுவர்ண விக்கிரஹம் போன்ற திருமேனி அனைவரையும் காந்தம்போல் வசீகரப்படுத்திவிட்டது. சபையின் நிகழ்ச்சிகளினிடையே அவர் தமது மதுரமான வசனங்களால் அனை

வரையும் ஆட்கொண்டுவிட்டார். சர்வ தர்மசபையில் அனைவரும் அமைதியாகப் பிறருடைய பிரசங்கங்களைக் கேட்க, கடைசிவரையில் சுவாமி விவேகானந்தரை வீற்றிருக்குமாறு செய்வது வழக்கமாயிருந்தது. 'கொலம்பஸ்' மண்டபத்தில் பதினைந்து நிமிஷ நேரமே பிரசங்கித்த விவேகானந்தரின் சொற்பொழிவைக்கேட்க, ஏனையோரின் நீண்ட பிரசங்கங்களையும் சபையோர் அமைதியுடனிருந்து கேட்டனர். அவைத்தலைவரும், உயர்ந்த பொருளைக் கடைசியிலுபயோகிக்க வேண்டு மென்னும் ரகசியத்தை யறிந்த தந்திரசாலியே' என்று விரைந்து. பின்னொரு நாள் 'விவேகானந்தர் உண்மையில் ஓர் அவதாரபுருஷர். அவர் கம்பீரமாய், கபடமற்று, ஆடம்பரமின்றி யிருப்பதுடன், நம்முடைய தேச மகா பண்டிதர்களுடன் ஒப்பிட்டுரைக்க வியலாத அத்துணை மகா வித்வானுகவும் விளங்குகிறார்' என்று தீட்டிற்று.

'பாஸ்டன் ஈவினிங் டிரான்ஸ்கிரிப்ட்'டின் அபிப்பிராயம்

'அமரிக்கா பிரஸ்' என்ற பத்திரிகை:

'வித்வான் விவேகானந்தர் மதசபைக்கு விஜயம் செய்திருந்த பிரதிநிதிகளுட் சிறந்த ஒருவர். அவருடைய உபந்நியாசத்தால் சபைக்கே ஒரு கௌரவ மேற்பட்டதெனினு மொக்கும். ஒவ்வொரு மாதாகோயில் பரிபாலக மதகுருமாரும் அச்சபையிற் காணப்பட்டனர். அவர்கள் அனைவரும் சுவாமிகளின் உபந்நியாசத்தால், புயற்காற்றால் தாக்குண்ட மரங்கள் போல விழுந்து போயினர். ஜொலிக்கின்ற அவரது திருமுகத்தில் அவருடைய திவ்ய விவேகம் சாஸனஞ் செய்யப் பெற்றிருந்தது. அவர் நாவில் நாமகள் குடிகொண்டிருந்தாள். அவர் தமது புராதன ஹிந்துமதத்தைப் பற்றி உயர்ந்த நடையில், தேர்ந்த ஆங்கிலத்திற்பேசி, அச் சபையோருள்ளதில் ஹிந்து மதவுணர்ச்சி நீடுழிகாலம் நின்று நிலவுமாறு செய்துவிட்டார்' என்று வரைந்தது.

அமரிக்கா பிரஸ்.

பத்திரிகைகளின் பலத்த பிரசாரத்தால் சுவாமிகளின் புகழ் அமரிக்கா நாட்டின் மூலை முடுக்குகளிலெல்லாம் பரவிற்று கிறிஸ்தவ சமயத்தின் பல்வேறு பிரிவினரும், சுவாமிகளின் பிரசங்கத்தைப் பத்திரிகைகளின் வாயிலாகப் படித்தறிந்து 'இவர் சர்வேஸ்வரனுலனுப்பப்பட்ட கீழ்த்திசையிலுதயமாகிய சூர்யன்' என்று போற்றினார்கள். ஆனல் சுவாமிகளுக்கு இப்புகழுரைகளும் விளம்பரங்களும் துரும்புக்

குச் சமானமாகவேயிருந்தன. 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்ற தீவிர அனுஷ்டான முடையவரன்றோ என்னப்பன்? 'இந்த ஊமையை உலகப் பிரசித்தனாக— உபந்நியாசம் செய்யும் வல்லவனாக ஆக்கியதெது?' என்று அன்னையின் திருத்தாள்களை அனவரதம் அவர் தொழுது கொண்டேயிருந்தார். அமரிக்காநாடெங்கணும் அல்லும்பகலும் அவரைப்பற்றிய பேச்சாகவேயிருந்தது மணிக்கு மணி அவரைப்பற்றிப் பத்திரிகைகள் வரைந்துகொண்டே யிருந்தன. பிரபலத்தையோ, கீர்த்தியையோ சத்யமாய் விரும்பாத அவர் அவற்றை ஆடம்பரத்தின், அங்கங்களென்றே வெறுத்தார். அமரிக்கநாட்டு மேதாவிகள் அனைவரும் அவரை வந்து கண்டார்கள். பலர் அவரை இடைவிடாது சுற்றியவண்ணம் உபசரித்துக் கொண்டே யிருந்தனர்.

அமரிக்கர்கள் போற்றுதல்.

கிறிஸ்தவ தர்மத்தைப் பிரசாரஞ் செய்ய இந்தியாவுக்கு வந்து திரும்பிய ஒரு அமரிக்கப் பாதிரியார் சுவாமிகளைப்பற்றி, அவர் ஜாதிப் பிரஷ்டரென்றும், அனாதையென்றும், இருக்க வீடும் உண்ண உணவுமில்லாத பரம தரித்திரரென்றும், வேஷதாரி யென்றும் கள்வரென்றும் சர்வமத சபையின் அக்கிராசனாதிபதியிடங் கூறி அவரைப் பேச ஒட்டாது தடுக்க முயன்றார். ஆனால் அச் சபையின் தலைவர் பெருங்குண முடையவராதலால், சுவாமிகள் வதனத்தால் அவர் மகா உத்தமகுல புருஷரென்றும், வெகுதூரம் யாத்திரை செய்து வந்திருப்பதால் தரித்திரரல்லவென்றும், தேவாம்ருதமான அவருடைய வார்த்தைகளால் பாமரரல்லவென்றும் எளிதில் அறிந்துகொண்டு அப் பாதிரியாரைக் கண்டித்தனுப்பி விட்டார். நிற்க, இந்தியாவிலிருந்து சென்றிருந்த யோகானுபவ (Theosophy) வாதத்தலைவர்கள் சுவாமிகளுக்கு உதவி புரியாதிருந்தது மட்டுமின்றி, அவரை சபையிற் பேச ஒட்டாது தடுக்கவும் முயன்றனர்! இந்தியர்களை 'நெல்லிக்காய் மூட்டை' என்று கூறுவதற்கு இதைவிடப் போதுமான சாக்ஷி யென்ன வேண்டும்?

தடுக்க யத்தனித்த தந்திரிகள்.

சிகாகோ நகரச் சீமான்கள் சுவாமிகளை விருந்துக் கழைத்தனர். ஏனைய நகரங்களினின்றும் ஏராளமாக அழைப்புக் கடிதங்கள் அவருக்கு வந்து கொண்டே யிருந்தன. இப் பெருமைகளை யெல்லாம் அவர் பொருட் படுத்தவில்லை. "தம் தாய் நாட்டின் தரித்திர நிலையை மாற்ற வழி யெதுவோ அதை ஆராயவேண்டும், அத்துறையில் பாடுபடவேண்டு"மென்ற எண்ணம் அவரையாட்கொண்டது. அந்நகரச்

சீமான்களி லொருவர் சுவாமிகளை விருந்துக்கழைத்து அரசரைப் போலுபசரித்தார். அவர் தங்குவதற்கேற்ற அழகிய அறையொன்று, உயர்ந்த பஞ்சணையுடன் அவருக்கமைத்துக் கொடுக்கப் பெற்றது. சுவாமிகள் அவ்வறையில் அன்றிரவு தூக்கமின்றி மனம் வருந்தியவராய் தாயே! எனது ஜன்மபூமி மிடிமையால் பீடிக்கப்பட்டிருக்க எனக்கு, இந்த ஹம்சதூளிகா மஞ்சமெதற்கு? உண்ண உணவின்றி தரித்திரத்தா லிறக்கும் இந்திய ஏழைமக்கள் ஒருபுறமிருக்க, தங்கள் சொந்த சௌகரியங்களுக்காக அமரிக்கர்கள் கோடி கோடியாகப் பொருட்செலவு செய்கின்றனரே? பசித்த என் சகோதரர்களுக்குப் பாலன்னமிடுபவர் யார்?' என்றழுத வண்ணம் அப்படுக்கையைத் தமது கண்ணீரால் நீராட்டி விட்டார். ஜன்ம பூமி செல்வங் கொழிக்க வேண்டுமென்ற அபிலாஷை அதுமுதல் அவருக்கேற்பட்டது. ஆதலால், அவர் ஹிந்துமதப் பிரசாரத்துடன், பல துறைப்பட்டவிஷயங்களையும் ஊடுருவிக் கவனிக்கலானார். கைத்தொழில் விஷயத்தை அவர் முக்கியமாக கவனித்துவந்தார். அவர் 'பின்னியற்றிய பிரசங்கங்கள்' பாரதநாட்டின் பெருமையை விளக்கி, ஹிந்துக்களுக்கே பெருங் கௌரவத்தைத் தருவனவாயிருந்தன.

29-ம் அத்தியாயம்.

எங்கும் பொங்கிய புகழ்

எங்கும் புகழோங்கிப் பெருகவே அமரிக்காநாட்டுப் பிரசங்க சபையார் சுவாமிகளை அமரிக்கா தேசமெங்கணும் உபந்நியாசம் செய்தருளுமாறு வேண்டினர். இதனால், இந்தியாவை மிகவும் கேவலமாக பாவித்துக்கொண்டிருக்கும் அமரிக்கர்களுக்குப் பாரத பூமி புண்யபூமி யென்றும், கல்வி, சிற்பம், இசை, சமயம், நாகரீகம் முதலியவற்றை அதுவே ஏனைய தேசத்தாருக்கு முதல்முதலாக உபதேசித்ததென்றும் பேசி பாரத பூமியின் உத்தாரணத்திற்குப் பாடுபடலாமென்று அவர் நம்பி அவ்வழைப்பை அன்புடன் ஏற்றார்.

அப்பால் அவர் சுற்றுப் பிரயாணத்தைத் தொடங்கி, சிகாகோ, அயோவா (Iowa), டேஸ் மாயின்ஸ், செயிண்ட் லூயிஸ், இந்தியநபோலிஸ், மின்னியபோலிஸ், டிட்ராயிட், ஹார்ட்போர்டு, பபலோ, பாஸ்டன், கேம்பிரிட்ஜ், பால்டிமூர், வாஷிங்டன், புரூக்லின், நியூ

யார்க் முதலிய பெரிய நகரங்களில் 'இந்தியர் பெருமை', 'பாரத ஸ்திரீ தர்மம்', 'ஹிந்துக்களின் சமயாசாரங்கள் முதலியன பொருளாகப் பல பிரசங்கங்கள் செய்து திரும்பினர். அவரது வடிவழகைக் கண்டு, வித்யா விசேஷத்தைக் கருதி இதற்குமுன் ஆச்சரியப்பட்டவர்களெல்லோரும் இப்பொழுது அவருடைய சிஷ்யரானார்கள். ஹிந்து தர்ம பிரசாரார்த்தமாகச் சுவாமிகள் இரண்டாண்டுகள் பாடுபட்டார். ஆங்காங்கிருந்த வித்வத் சபைகள் தத்தம் சபாமண்டபங்களில் அவரை வரவேற்று, வேதாந்த உபந்நியாசங்கள் நிகழச் செய்வதில் போட்டி போட்டன. அவர் தினந்தோறும் காலையிலும் மாலையிலும் பிரசங்கிப்பதும், தம்மைப் பார்க்கவரும் அன்பர்களுடன் உரையாடுவதும், உள்ளன்புடன் தஞ்சமென் றடிபுகுவார்க் குபதேசிப்பதும், சந்தேக நிவிர்த்தியின் பொருட்டு வரும் கடிதங்களுக்கு உத்தரம் வரைவதும், பத்திரிகைகளில் விரிவான வியாசங்களை எழுதுவதுமான விஷயங்களிலீடுபட்டு வந்தார். மூடத்தனமாக முரட்டுவாத நியாயங்கொண்டு தம்மை எதிர்த்தவர்களை யெல்லாம் அவர் தமது சொல்வன்மையென்னும் வச்சிராயுதங்கொண்டு அடக்கினர். அவர் தமது சொற்பெருக்குகளில் கிறிஸ்து நாதரை உயர்த்தியும், தற்காலக் கிறிஸ்தவர்களின் செயல்களை யிகழ்ந்தும் அந்நிய நாடாயிருந்த போதிலும் அஞ்சாது பேசினர். அதை நிரூபிக்க அவர் டிட்ராயிட் (Detroit) என்னும் நகரில் 1894-ம் ஆண்டு பிப்ரவரி மாதத்திற் செய்த ஒரு பிரசங்கத்தின் முக்கிய பாகத்தை ஈண்டு வரைவோம்:

'நான் உங்களுக்கு ஒரு விஷயஞ் சொல்லுவேன். உங்களை இரக்கமின்றி யான் எவ்வித குறையுங்கூற எண்ணவில்லை. நீங்கள் எக்காரியஞ் செய்வதற்காக மனிதர்களைப் பழக்கி, அறிவூட்டி, ஆடை பொருளளிக்கின்றீர்கள்? எனது தாய்நாட்டிற்கு வந்து, வாய்க்கு வந்தவாறு எனது மூதாதையர்களையும், எமது சமயத்தையும் எமக்குரிய பிறவற்றையும் உதாசீனமாகப் பேசத்தானே. அவர்கள் ஒரு கோயிலுக்கருதே நின்றுகொண்டு 'ஹே! விக்கிராகாராதனை புரிபவர்களே! நீங்கள் நரகத்தை அடைவீர்கள்' என்று பேசுகிறார்கள். ஆனால் ஹிந்து இதைப் பொருட்படுத்தவில்லை. அவன் புன்னகை செய்து 'அந்த மூடன் பேசட்டும்' என்றியம்பிப் போய்விடுகிறான். அதுதான் உள்ள நிலை. உதாசீனமாகப் பேசவும் குதர்க்கவாதஞ் செய்யவும் பழக்குவிக்கின்ற நீங்களே இப்பொழுது, உங்களை யான்

உண்மையான அநுதாபத்துடன் நன்மையைக் கோரிச் சிறிது குறை கூற முன்வரின், நீங்கள் அருவருப்படைந்து 'எங்களை யணுகவேண்டாம்; நாங்கள் அமரிக்கர்கள்; நாங்களே பூமியின் கண்ணுள்ள பல சமூகத்தாரையும் குறைகூறவும், தூஷணை செய்யவும் சபிக்கவும் ஜனித்தவர்கள். எங்களை நீங்கள் குறைகூற வேண்டாம். நாங்கள் உணர்ச்சி யுள்ளவர்கள்' என்று கூறி ஆர்ப்பாடஞ் செய்கின்றீர்கள். நீங்கள் உங்கள் விருப்பம்போற் செய்யலாம். ஆனல் நாங்கள் எங்களிஷ்டப்படி நடப்பதிலேயே திருப்தி யடைகிறவர்கள். பின்னும், ஒரு விஷயத்தில் நாங்கள் மேம்பட்டவர்கள்—அதாவது பிறரை தூஷிக்குமாறு நாங்கள் எங்கள் சிறுவர்களைப் பழக்குவதில்லை. உங்கள் மதிமந்திரிகள் எங்களைக் கண்டனஞ் செய்யும் பொழுதெல்லாம் இதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளட்டும். எங்கள் தேசமக்களனைவரும் ஒன்றுகூடி எழுந்து ஹிந்துமகா சமுத்திரத்தி னடிபாகத்தேயுள்ள சேற்றை வாரி மேல்நாடுகளின் மீது வீச வாரம்பித்தால், நீங்கள் எங்களைச் செய்கின்ற கண்டனத்தைவிடப் பன்மடங்கு பலமுள்ள வேலையை யாங்கள் செய்யக்கூடும். எதற்காக இந்தக் காரியம்? நாங்கள் எப்பொழுதாவது ஒரு சமயப் பிரசாரகரை அனுப்பி உங்களிலொருவரையேனும் எங்கள் மதத்திற்கிழுக்க யத்தனித்தோமா? நாங்கள் 'உங்களுடைய மதத்தை நீங்கள் அனுசரியுங்கள். எங்களுக்குரித்தானவற்றைக் கொண்டு நாங்கள் இன்பமடைகிறோம்' என்கிறோம். நீங்கள் உங்கள் சமயத்தை வியாபகமாயுள்ள தென்கிறீர்கள். வியாபகர்களான நீங்கள் இதுவரையிலும் எவ்வளவு பேரை உங்கள் சமயத்திற் சேர்த்திருக்கிறீர்கள்? உலகில் ஆறிலொரு பங்கினர் சீனர்கள். அவர்கள் பௌத்தர்கள். இந்த கிறிஸ்தவ ஒழுக்கமும், கத்தோலிய ராலயமும் அவர்களிடமிருந்தே வந்தனவென்று நான் உங்களுக்குச் சொன்னல் ரசிக்காது. சரி, இது எப்படி நடந்தேறியது? ஒரு சொட்டு ரத்தஞ் சிந்தாமலா? உங்களுடைய பெருமை பெரியதாயிருக்க வாளாயுதத்தின் வலிமையின்றி உங்கள் சமயம் எவ்வாறு நிலைத்தது? உலகில் ஓரிடத்தைக் குறிப்பிடுங்கள் பார்ப்போம். கிறிஸ்தவ சமயச் சரித்திர பூர்வமாக நான் உங்களுக்கு ஒருவிஷயம் சொல்லுகிறேன். ஒன்றே போதும்; இரண்டாதாரங்கள் எனக்கு வேண்டாம். உங்கள் முன்னோர்கள் எப்படி கிறிஸ்தவ மதத்திற் சேர்க்கப்பெற்றார்கள் என்பதை யானறிவேன். அவர்கள் மதம் மாறியோ அல்லது கொலை யுண்டோ போகவேண்டி யிருந்தது........அதுவே போதும். 'நாங்கள்தான்

டிட்ராயிட் பிரசங்கம்

உயர்ந்தவர்கள். ஏன்? ஏனெனில் நாங்கள் பிறரைக் கொலை செய்ய லாம்.' அரபியர்கள் அப்படிச் சொல்லுவார்கள்; இவ்விதம் அவர்கள் வீண் ஜம்பம் பேசிக்கொண்டார்கள். அந்த அரபியர்கள் இப்பொழுது எங்கே போனார்கள்? அரபியனை 'பிடோயின்' என்று ரோமர்கள் அழைப்பது வழக்கம். அவர்கள் இப்பொழுது எங்கே யுள்ளார்கள்? நாங்கள் கருங்கல்லின்மீது அமர்ந்திருந்தோம். சமாதார நோக்க முடையவர்களே எப்பொழுதும் கிருதார்த்தர்களாவர். ஏனெனில், அவர்களைத்தான் கடவுளின் திருக்குமாரர்களென அழைக்கலாம். அப் பேர்ப்பட்ட வஸ்துகள் தடுமாறிப் போகின்றன. அவை மணல்மேற் கட்டப்பட்டவை. அவை நீண்டகாலம் நிலைத்திருக்க முடியாது. எந்த காரியத்தினுடைய நோக்கம், சுயநலமே அடிப்படையாகவும், போட்டியும் தானே யனுபவிக்க வேண்டுமென்ற பேராசையும் வலது கரமாகவு மிருக்கின்றதோ அக்காரியம் சீக்கிரமாகவோ அல்லது காலக் கிரமத்திலோ அழிந்தே தீரவேண்டும். நீங்கள் உய்ய வேண்டுமானால் உங்கள் கிறிஸ்து நாதரைப் பின்பற்றுங்கள். மன்னுயிரை இன்பமடை வித்தலே தனது கடனாகக் கொண்ட அம்மகாநுபாவரைச் சரணமடை யுங்கள். உங்கள் மதப்பிரசாரத்துளெல்லாம் ஆடம்பரமே தலைவிரித் தாடுகின்றது. என்ன விதியின் கேலி யிது! நீங்கள் உஜ்ஜீவிக்க வேண்டு மானால் விரைவில் நல்வழிப்படுங்கள். நான் இந்நாட்டில் கேட்ட விஷ யங்கள் யாவும் வெளிப்பகட்டான விஷயங்களாகவே யிருக்கின்றன. இத்தேசம் வாழவேண்டுமானால் அவரைப் பின்பற்றட்டும். நீங்கள் ஏககாலத்தில் தேவனையும் 'மம்மனை'யுந் தொழமுடியாது. இந்த செல்வமெல்லாம் உங்களுக்கு இயேசுநாதர் அளித்ததுதானே. ஆனால் கிறிஸ்துவானவர் அதை ஒப்புக்கொள்ள மாட்டார். இயேசுநாத ருடைய பரிபூர்ணத்துடன் இந்த ஐஸ்வரியத்தை நீங்கள் இணைக்கக் கூடுமானால் அதுவே சிலாக்கியமானது. உங்களால் முடியாவிட்டால் இந்த வீண் யத்தனங்களை விட்டு அவரைப் பின்பற்றிச் செல்வதே மேன்மைதரும். இயேசுநாதர் அருளன்னியில் அரண்மனைகளில் வசிப்பதைவிட, அவருக்குக் கந்தைகளை அணிந்து தாங்களும் கந்தை களைத் தரித்து அவரோடு வசிக்க விரும்புவதே உத்தமமானது."

இவ்விதம் சுவாமிகள் வைராக்யசித்தராய் மத அட்டூழியங்களைக் கண்டித்துப் பேசியது மூட பக்தியுள்ளவர்களுக்குக் கோப மூட்டுவதா யிருந்தது. அவர்கள் சுவாமிகளின் புகழை யொடுக்கச் சமயம் பார்த் திருந்தனர். அவரைப்பற்றித் தாழ்த்திப்பேச எவ்வித சந்தர்ப்பமும்

வாய்க்காததால், முடிவாக ரூபலாவண்யமுள்ள) சில ஸ்திரீகளை யழைத்து அவரை வசப்படுத்தினால் வெகுமதி யளிப்பதாகக் கூறியனுப்பினார்கள். அப் பெண்மணிகள் அவரை வசப்படுத்திவிட்டனர்—தம் குழந்தையாக! அவர் 'அன்னையே!' என்று பேசும் அருண்மொழித் தேவராய் விளங்குதல் கண்டு அஞ்சி அகன்றனர். இதனால் அவருடைய கௌரவமும் கீர்த்தியும் முன்னினும் பன்மடங்கு ஓங்கின. உண்மையான கிறிஸ்தவ சமயத்தின் தாத்பரியங்களைப் பாழ்படுத்தி அநாசாரங்களை யணிந்து நிற்கும் அவ்வாங்கில மக்களை சுவாமிகள் மிகவும் கடுமையாகப் பேசி கண்டனஞ் செய்தார். மேல்நாட்டாரின் சமய அநாகரீகத்தை அவர் நேருக்கு நேராகக் குற்றங் காட்டிப் பேசினார். 'நான் என்னுள்ளத்தில் எதையும் ஒளித்துப் பேசுவதில்லை. நான் கூறுவதெல்லாம் உண்மையானவை என்பதை உணர்ந்தே பேசுகிறேன். உண்மையையே நான் உங்களுக்கு முன் உரைக்க வந்தவன். உங்களை முகஸ்துதிசெய்து மனச்சாட்சிக்கு விரோதமாக நான் பேச வரவில்லை; அது எனது தர்மமுமன்று. அவ்வாறு கபடமாக உங்களை வஞ்சிப்பதானால், நியூயார்க்கின், ஓர் அழகிய பாகத்தில் ஒரு ஹிந்து ஆலயத்தைக் கட்டியிருப்பேன். நீங்கள் எனது சகோதரர்கள்—அன்பர்கள். உங்களுடைய குற்றங்களை யுணர்த்தி, அநித்யப் பொருள்களிடத்து உங்களுக்குள்ள மோகத்தை விரட்டி, சத்யத்தைப் பேசி நல்வழிப்படுத்துவதே எனது கடமை. அதனாற்றான் நிகழ்கால கிறிஸ்தவ சமயிகளைப் போற்றும் இதமான சொற்களை நீங்கள் என்னிடமிருந்து கேட்க முடியவில்லை. உங்கள் கிறிஸ்தவ சமயம் எங்கே யுள்ளது? உங்கள் சுயநலப் போராட்டத்தில் இயேசு கிறிஸ்து நாதரிருக்கும் இடமெங்கே யுளது?" என்று சுவாமிகள் ஒரு முறை சொல்லலுற்றார்.

மாதரைக்கொண்டு மயக்குவித்தல்

யான் வந்ததன் நோக்கம்

விவேகானந்த சுவாமிகளிடம் அத்யந்த அன்புள்ள பல கிறிஸ்தவ குருமார்களும் செல்வந்தர்களும் கிறிஸ்தவப் போலி மனிதர்களை அவர் தாக்கிப் பேசும்பொழுது, மறுப்புக் காதாரமான சில விஷயங்களை அவருக்கு எடுத்துக் கொடுப்பார்கள். அப்பொழுது அவ்வன்பர்களை நோக்கிச் சுவாமிகள் 'திரும்பத் திரும்ப நாமேன் அவர்களை எதிர்க்கவேண்டும்? அது இந்தியத் துறவியின் கொள்கையல்ல. உண்மைக்குள்ள பெருமையைக் குறைக்க எவராலியலும்? என்னை உறுதியாக

சில அன்பர்களின் நல்லுதவி

நம்புங்கள்' என்றுரைத்து அவர்களைத் தேற்றுவார். இதுவன்றி, இந்தியாவிலிருந்த பாதிரிமார்கள் பத்திரிகைகளின் வாயிலாக சுவாமி களின் உபந்நியாசங்களைப் படித்துப் பார்த்துவிட்டு, தங்கள் வேலைக்கு ஆபத்து வந்தமையால், கோபங்கொண்டு அவரை இந்தியாவிற் பல வாறு தூற்ற வாரம்பித்தனர். இதற்கெல்லாம் சுவாமிகள அஞ்ச வில்லை. அமரிக்காவில் அவருக்கு நாளுக்கு நாள் புகழ் அதிகரித்துக் கொண்டே வந்தது. கீதையின் மகாவாக்கியங்கள் அவருடைய செவி களில் சந்நாஹித்துக் கொண்டிருந்தனவாதலின், அவர் பலனைக்கருதி யொன்றுஞ் செய்யவில்லை. பயன் உண்மையான தியாகத்தால், தானே வருவதன்றோ ?

அவர் சுற்றுப்பிரயாணத்தில் பல அழகுள்ள அமரிக்க மங்கையர், கோடீஸ்வரர்களின் ஏக புத்ரிகள், அவருடைய முகவிலாசத்தில் ஈடு பட்டு விவாகம் செய்துகொள்ள விரும்பினர். ஒரு தெரிவை ஐயனை யணுகி 'சுவாமி! என்னையும் எனது செல்வத்தையும் நான் தமது திருவடிகளில் சமர்ப்பித்து விடுகிறேன்! என்னை மணந்துகொள்ள வேண்டும்!' என வேண்டினள். அதற்குச் சுவாமிகள் அவளைப் பார்த்து 'அன் னையே! துறவியாகிய எனக்கும் விவாகத்திற்கு மென்ன சம்பந்தம்? எனக்கு எல்லாம் தாய் மயமே' என்று கூறக்கேட்டு முகம் வாடித் திரும்பினள் அம்முல்லைக் கொடியனையாள்!

ஓர் நங்கையின் விண்ணப்பம்

பத்திரிகைகள் அவரைக்கொண்டு பொருள் சம்பாதிக்க ஆரம் பித்துவிட்டன. அவை, அவரை உபந்நியசிக்குமாறு வேண்டி பத் திரிகா தந்திரம், வியாபார வித்தை புரியத் தொடங்கின. அப் பொரு ளின் எட்டில் ஒருபங்கு சில வேளைகளில் அவருக்களிக்கப் பட்டது. கொஞ்ச காலத்திற்குப் பின் சுவாமிகள், அவர்கள் தம்மிடம் புரியும் ஏமாற்றத் தொழிலைக் கண்டு கொண்டு "வீண் கரகோஷம் இந்துமகா ஜனங்களின் ஏழ்மையை எங்ஙனம் போக்கும்?" என்றெண்ணித் தமது பிரசங்கங்களை மெல்லச்சுருக்கிக் கொண்டார். அப்பால், வேதகால மகரிஷிகளை யொத்து பிரதிப் பிரயோஜனம் ஏதொன்றையு மேற்காது உபதேசஞ் செய்வதெனத் தீர்மானித்துக் கொண்டார். மேலும், தாம் அமரிக்கா வுக்கு வந்தமையால் இந்தியாவின் செல்வப் பெருக்குக் கேற்றவற் றைக் கற்றுக்கொண்டு போகவேண்டு மென்ற பேராவா அவருக் கிருந் தமையால், அந் நாட்டிலுள்ள, பொருட் காட்சி சாலைகள், சுரங்க

பத்திரிகைகளின் வித்தை

சாலைகள், நீராவி மின்சார இயந்திர தொழிற்சாலைகள் முதலியவற்றைத் தமது நண்பர்களுடன் சென்று சுற்றிப் பார்த்தார்; அவற்றின் சூக்ஷ்மங்களையும் தமது புத்திகூர்மையால் வகுத்துக் கொண்டார்.

நிற்க, சுவாமிகள் தமது இந்தியாவிலிருந்த சீடர்களை மறந்து விடவில்லை. அவர்களுடன் அடிக்கடி கடிதப் போக்குவரவு செய்து கொண்டேயிருந்தார் அவர்களைத் தேற்றுவதும், ஊக்குவதும், தூண்டுவதும், உபதேசிப்பதுமாக அவரது கடிதங்கள் சிகாகோ நகரின்றும் புறப்பட்டு இந்தியாவை யடைந்தன. அல்லும் பகலும் அவரை ஆயிரக்கணக்கான உயர்குல ஸ்திரீகள் வந்து சூழ்ந்து கொண்டேயிருந்தனர். இத்தனை மாதரை ஒரே சமயத்தில் அவர் சந்தித்துப் பேசியது இதுதான் முதற்றடவை. இந்தியாவில் கோஷாக்கள் அதிக மாதலின் இதற்கிட மிருந்திருக்க முடியாது. அவர்களை யெல்லாம் அவர் தமது உபதேசங்களால் மகிழ்விப்பார். இதைக்குறித்து சுவாமிகள் அவ்வமயம் தமது சீடரொருவருக்கு வரைந்த கடிதத்தில் "இந்தியாவில் ஸ்திரீகளின் நிலையை நீங்கள் சற்று உயர்த்த வியலுமா? அப்பொழுதுதான் தேசநன்மை பெருகும். இல்லையேல் இதே நிலையினின்றும் மீள்வதில்லை" என்று தொடங்கி "தெய்வத் தன்மையில் அமரிக்கர்கள் நம்மைவிடப் பன்மடங்கு தாழ்ந்தவர்கள். ஆனால் அவர்களுடைய சமூகசம்பந்தமான சீர்திருத்தங்கள் மிக்க உயர்ந்தனவாகவே யுள்ளன. நாம் அவர்களுக்குத் தெய்வத் தன்மையைப் புகட்டுவோம். அதற்குமாறாக, அவர்களுடைய சமூக சீர்திருத்தங்களிற் சிலவற்றை நாம் கடைப் பிடிப்போம்" என்று வரைந்தார்.

மாதரிடையே சொற் பொழிவு

அவர் இவ்விதம் உழைக்க வாரம்பித்தது முதல் பலர் அவருடைய அந்தரங்கப் பிரியர்களாயினர். அவர்களுள் சம்சய வாதியும் கீர்த்தி பெற்ற சொற் பெருக்காளருமான ராபர்ட் இன்கெர்சால் (Robert Ingersoll) என்பார் முக்கியமானவர். அவர் சுவாமிகளுக்கு அவ்வப் பொழுது, அமரிக்கா மக்களின் மனோநிலைக் கேற்றவகையில் பேச உதவிபுரிந்தார். கண்டனத்தை இயன்ற வரையில் விலக்கியே பிரசங்கிக்குமாறு அவர் கூறுவது வழக்கம். ஒரு சமயம் இது சம்பந்தமாகச் சுவாமிகளிடம் பேசிக்கொண்டிருந்தபொழுது அவர் "சுமார் நாற்பதாண்டுகளுக்கு முன் தாங்கள் இங்கு வந்திருந்து, இத்துணை கண்டனங்களோடு பேசியிருந்தால், மூடச்சமயவாதிகள் தங்களைக் கொலை செய்தோ, உயிருடன் தீக்கிரையாக்கியோ ஊர் பெயர் தெரியாது

செய்திருப்பர்'' என்றார். இவர் இங்ஙனம் கூறியது சுவாமிகளுக்கு வியப்பாகவே யிருந்தது. அதற்கு சுவாமிகள் ''எனினும் இந்நாட்டில் சத்விஷயத்தை விருத்திசெய்வது எனது கடமை. அதனால் நான் நிர்ப்பயமாயிருக்கிறேன் தாரம், மக்கள், சுற்றம் பொருளாகிய இவ் வித பந்தமேது மெனக்கில்லை. அதனால் யான் அனைவரிடத்தும் அன் புள்ளவன்; அனைவரையும் ஈஸ்வராம்சமாக ஆராதிப்பவன். மனி தனே கடவுளென்னும் பாவத்தால் நீங்கள் பார்த்தால் அதனா லடை யப்பெறு மானந்தத்தினளவை யானெவ்வாறு புகல முடியும்?'' என் றியம்பினார்.

நாலாபக்கங் களிலும் புகழ்

அவர் தமது சேவையைத் தொடங்கிய ஓராண்டுக்குள் பத்திரிகைகளில் காலையிலும் மாலை யிலும் அவரைப்பற்றிய விஷயங்கள் பல பக்கங் களில் வெளியிடப்பெற்றன. பத்திரிகாசிரியர்களும் நிருபர்களும், அவரைச் சூழ்ந்துகொண்டு, அவருடைய பழக்கவழக்கங்கள், சமயம், வேதாந்தம், மேல்நாட்டு ஜனசார சீர்திருத்தத்தைப் பற்றிய அபிப்பிரா யம், அவருடைய எதிர்கால அலுவல்கள், அவர் கொள்ளும் உணவு, அவரது தாய்நாட்டின் தேசீய நிலை முதலிய விஷயங்களைப்பற்றிப் பன் னிப்பன்னிக் கேட்டுப் பத்திரிகைகளில் பிரசுரித்த வண்ணமாக விருந் தனர். அவருடைய ஒவ்வொரு பிரசங்கமும் தினசரிப் பத்திரிகை களில், ஒலியெழுத்தாளர் வாயிலாக எடுத்து வரையப்பெற்று வந்தது. அவற்றையெல்லாம் ஈண்டு மொழிபெயர்த்தெழுதுதல் மிகையாமென விடுத்தோம். அப்பத்திரிகைகள் ஏகோபிதமாக ''அவர் அளவிடற் கரிய தேசாபிமானத்துடன் பேசினார். 'எனது ஜன்மபூமி' என்று அவர் குறித்துப் பேசிய வார்த்தைகளினின்றும் தேன் துளிகள் சொரிந்தன. அவர் ஒரு யதியாகமட்டு மில்லாமல் தேசாபிமானியாக வும் விளங்கினார்'' என்றெழுதின.

அகோராத்ரம் அவர் சென்ற இடங்களிலெல்லாம் உபதேசிப்ப தும், உபந்நியாசங்கள் புரிவதும், தர்க்கிப்பதுமா யிருந்தார். பக்த கோடிகளிடத்தில் அவர் கொண்டிருந்த பரம கருணையால் காப்பாற்றப் பெற்ற அவருடைய மன உறுதி மாத்திரம், அவர் மேற்கொண்ட சிரமமான சேவையை உற்சாகத்தோடு தொடங்குவதற்கான வல்ல மையை அவருக் களித்திராவிடில் உருக்குப் போன்ற அவருடல் வெகு விரைவில் உருகி உருமாறிப் போயிருக்கும். அத்துணை தீவிர மாக அவருழைத்து வந்ததற்கு அத்வைத வேதாந்தத்தை மேல்நாட் டில் நிலை நிறுத்த வேண்டுமென்ற அவாவே பேருதவி புரிவதா யிருக்

தது. அழைத்த விடங்களிலெல்லாம் அவர் களைக்காது பேசினர். ஒரே தினத்தில் அவர் மூன்று நான்கு உபந்நியாசங்கள் புரிவது முண்டு. 'காவியுடன் மேவிய கவிவாண' ரென்றும், 'சன்மார்க் கத்தைப் போதிக்க வந்த சதாசாரிய' ரென்றும் அவரை அமரிக்கர் கள் பூஜிக்க லாயினர். ஒரு விரிவுரையிற் சொன்ன விஷயத்தை மற்றொரு விரிவுரையில் அவர் புகலுவதே யில்லை. இதனால் 'வித்யா சாகர' மென்னும் புகழ் நாமம் அவருக்கு அமரிக்கர்களால் புனையப் பெற்றது. இத்துணை சிரமமான உழைப்பினிடை யிலும் அவர் விடாமல் தினந்தோறும் யோகாப்பி யாசஞ் செய்து வந்தார். பின்னும் பல யோக சித்திகள் அமரிக்காவில் அவருக்குக் கைகூடின. தம் முன்பாகத் தோன்றும் எவருடைய முன்பின் விஷயங்களையும் அவர் சொல்லும் வல்லமை யெய்தினர். தம்மை வந்து காணும் அன்பருடைய உளத் தின்கண்ணுள்ள விஷயங்களை அவர் கூறி வந்தமையால் அவரிடம் அம ரிக்கர்களுக்கு அச்சமும் பக்தியு மதிகரித்து வந்தது.

அமரிக்கர்களின் அரிய ஆதரவு

நிற்க, 1894ஆ செப்டெம்பர் மாதத்தில், பாதிரிமார்களின் தூண்டுதலால், சுவாமிகளின் அமரிக்காப் பிரசங்கத்தைப்பற்றி கல் கத்தாவிற் சிலர் கெட்ட அபிப்பிராயத்தைப் பரவ வாரம்பித்தனர். சுவாமிகள் அமரிக்காவில் ராஜீய வாதியாக விளங்குகின்றாரென கலி சரண பனர்ஜி யவர்கள் கல்கத்தாவில் பேசியிருந்ததை சுவாமிகள் பத் திரிகையின் வாயிலாகப் பார்த்து, அதற்கு மறுப்புக் கடிதமொன்று தமது சென்னை யடியாருக்கு வரைந்து பொதுஜன அபிப்பிராயத்தை மாற்றி, பனர்ஜியவர்கள் பேசியது தவறென்பதை உணர்த்தினர்.

இஃது இங்ஙனமிருக்க, விவேகானந்த சுவாமிகள் அமரிக்காவில் நடைபெற்ற சர்வதர்ம மகா சபையில் ஹிந்துமத ஸ்தாபனஞ் செய்து, வெற்றியுடன் கொடி யுயர்த்தி அந்நாடெங்கும் சுற்றுப் பிரயாணஞ் செய்து உபந்நியாசஞ் செய்து வருகின்றாரென்ற செய்தி இமயம் முதற் குமரிவரை பாவிற்று. தினசரிப் பத்திரிகைகளும் மாஸிகை களும், அமரிக்கா நாட்டுப் பத்திரிகைகளிலிருந்து சுவாமிகளுடைய உபந்நியாசத்தைக் கோவையாய் வரைந்து, தத்தம் தலைபங்கங்களில் வாழ்த்துடன் வெளிவர வாரம்பித்தன. நிற்க பொநாகூர் ஆச்சிரமத்தை விட்டு, விவேகானந்த சுவாமிகள் ஒருவரிடமுங் கூறாது வெளி யேறிய பின் ஏனைய சீடர்களின் நிலை யென்னவாயிற்றென்று கூறுவோம்.

ஸ்ரீராம கிருஷ்ண பரமஹம்ஸர் தீர்க்க சமாதி யடைந்ததும் அவருடைய சீடர்கள் உயிரற்ற உடல்போ லாயினர். அவ்வமயங்களி லெல்லாம் சுவாமிகள் அவர்களைத் தேற்றி ஊக்கி வந்தார். துறவறத்தை மேற்கொண்ட அவ்வன்பர்கள் தமது ஆருயிர்த்தலைவர் யாத்திரார்த்தமாக வெளிப்பட்டது முதல், ஏக்கமடைந்து, பொரநாகூர் ஆச்சிரமத்திலேயே இறைவனைத் துதித்தவாறு தங்கள் தலைவரை— ஆசாரிய னளித்த அருமருந்தைப் பற்றிய செய்தி யொன்றுங் கிடைக்காமல், அவருக்குத் தீர்க்காயுளையும், சஞ்சாரத்தில் சித்தியையும் கடாக்ஷிக்குமாறு பரம்பொருளைத் தியானித்துக்கொண் டிருந்தனர். இச்சமயம், அமரிக்காவில் விவேகானந்தர் பிரசித்தாய் ஹிந்துமதப் பிரவர்த்தகராய், சண்டமாருதம்போல் அஞ்ஞானத்தா லுண்டான மத வைஷ்யமென்னும் மனப்பான்மையான மரங்களை ஆணிவேர் சல்லிவேரோடு பெயர்த்தெறிந்து, திக்விஜயஞ்செய்து, வெற்றிவாகை சூடி விளங்குவதை அவர்களு மறிவாராயினும் இவ் விவேகானந்த ரென்பவர் நரேந்திரரோ? என்னவோ? என்னும் ஐயப்பாட்டால் சலித்துக் கொண்டிருக்கையில் அவர்களுக்கு சுவாமிகளிட மிருந்து கடிதமொன்று வந்தது. அப்பொழுது அவர்க ளடைந்த மகிழ்ச்சியை வாசகர்களே ஊகித் துணர்ந்துகொள்ள முடியுமே யன்றி ஈண்டு வரைதல் சாத்தியமன்று.

பொரநாகூர் ஆஸ்ரம சீடர்களின் மகிழ்ச்சி.

இந்தியா வெங்கும் ஒவ்வொரு வீட்டிலும் சுவாமிகளைப்பற்றிய பேச்சாகவே யிருந்ததைப் பாராட்டி ஒவ்வொரு நகரத்திலும் அமரிக்காவிற் கூடிய சர்வ மத சபையில் சுவாமிக ளடைந்த வெற்றியை பொது ஜனங்களுக்கு அறிவித்து, அவர் செய்த கைங்கரியத்தை உள்ளன்புடன் பாராட்டித் தத்தம் வந்தனோபசாரத்தைத் தீர்மானங்கள் மூலமாக, சர்வ தர்ம மகா சபையின் அக்கிராசனாதிபதிக்கும் சுவாமிகளுக்கும் அறிவிக்கலாயினர். இராமநாதபுரம் மகாராஜாவான ஸ்ரீ பாஸ்கர சேதுபதி யவர்கள் சுவாமிகளுக்குத் தமது உபசாரத்தையும், வந்தனத்தையும் தனித் தந்தி மூல மறிவித்து மகிழ்ந்தார். அல்லும் பகலும சுவாமிகளின் ஞாபகமாகவே யிருந்தவரும், சுவாமிகளை அமரிக்காவிற்குக் கப்பலேற்றிவிட்டு, வேண்டிய பொரு ளளித்தவருமான கேஷத்ரி மகாராஜா ஸ்ரீ அஜித்சிங் பகதூர், சுவாமிகளின் வெற்றியைக் கேட்டதும் ஒரு தர்பார் கூட்டி, சுவாமிகள் பாரத

அரசர்களின் உபசாரப் பத்திரங்கள்.

தேசத்தின் பெருமை வாய்ந்த ஹிந்து மதக் கொள்கைகளைச் சர்வ தர்ம மகா சபையில் நிலைநாட்டியதைப் போற்றி தந்தி யொன்று போக விடுத்தனர்.

சென்னை வாசிகளின் வந்தனோபசாரம்.

சென்னையில், ராஜா. சர். இராமஸ்வாமி முதலியார் அவர்கள், திவான் பகதூர். சர். சுப்ரமணிய ஐயர் அவர்கள் ஸி. ஐ. இ., முதலிய பல பிரமுகர்கள் கூடித் தத்தம் வந்தனோபசாரத்தைச் சுவாமிகளுக்கு அறிவித்துக் கொண்டார்கள். கும்பகோணம் முதலான நகரங்களிலிருந்தும் இவ்வித உபசாரப் பத்திரங்கள் அனுப்பப்பெற்றன. இவற்றைவிட, சுவாமிகளின் ஜன்ம பூமியும், அரசப் பிரதிநிதி ஸ்தானமும், பண்டிதர்களும், பணக்காரர்களும் நிறைந்த இடமுமான கல்கத்தா நகரில் நடைபெற்ற வந்தனோபசாரக் கூட்டம் மிகப் பெரிதாகவே யிருந்தது. 1894-ம்ஞு செப்டெம்பர்மீ 5௳ அக்கூட்டம் நடைபெற்றது. பிரபலர்களான பண்டித ராஜ்குமார நியாய ரத்னர், பாபு இஷன் சந்திர முகர்ஜி, மகராஜ் குமார் பேநாய் கிருஷ்ண பகதூர், பாபு குரு பிரசன்ன கோஷ், ராய் நுந்த லால் போஸ், முதலியவர்களால் அக்கூட்டம் கூட்டப் பெற்றது. அங்கு பல துறவிகளும் விஜயம் செய்திருந்தனர். பிரக்யாதி பெற்ற,

கல்கத்தா வாசிகளின் வந்தனோபசாரம்.

மதுசூதன ஸ்முருதி ரத்னர், காமாக்கியாநாத தர்க்கபாகீ, உம சரண தர்க்கரத்னர், சந்தி சரண ஸ்மிருதி கர்த்தா, ராமநாத தாரக சித்தாந்தா, கேதாரி நாத் வித்யா ரத்னர், மோஹகேச சந்திர சுரமணி, நுந்து குமார நியாய ரத்னர், காளிதாஸ் நாத் வித்யா ரத்னு, ஷரபாத வித்யா சாகரர், பேனிமத தர்க்காலங்காரர், ஜாதுநாத் சர்ப்ப ஹீமா, அம்பிகா சரண நியாய ரத்னர், வைகுந்த நாத் வித்யா ரத்னர், சிவ நாராயண சிரோமணி ஆகிய மகா மேதாவிகள் அக்கூட்டத்திற்குப் போயிருந்தனர் இன்னும் ராஜா பியாரி மோகன் முகர்ஜி ஸி. எஸ். ஐ., கனம் நியாயாதிபதி, குருதாஸ் பனர்ஜி டி. எல்., கனம் சுரேந்திரநாத் பனர்ஜி, 'இந்திய சமூகம்' பத்திராதிபரான என். என். கோஷ், 'இந்திய ஆதர்சம்' பத்திரிகாசிரியரான பாபு நரேந்திரநாத் சேனர், 'இந்திய தினசரி விமரிசை' தாளாளரான டாக்டர். ஜே பி. டலி, 'தேசியக் காப்பாளன்' ஆசிரியர் பாபு சோஷி பூஷண முகர்ஜி, 'நம்பிக்கை' ஆசிரியரான பாபு அமிர்தலால் ராய், ராய் ஷியோ புக்ஷ் போக்லா பகதூர், பாபு பூபேந்திரநாத் போஸ்,

ஜெ. பாட்ஷா, இலங்கைப் பாதிரியார் என் பரீஷல், ஜமீன்தார் சதா னந்தர், குமார தினேந்திரநாத்ராய், குமார் ராதா பிரசாதராய், ராய் ரக்ஹால் சந்திர சவுத்திரி, தகி ஜமீன்தார் ராய் ஜோதிந்திர நாத் சௌத்திரி, முதலிய பலரும் அக்கூட்டத்தில் வீற்றிருந்தனர். இன்னும் நியாய வாதிகள், வைத்தியர்கள், ராஜீயத்தலைவர்கள், அணுதிகாரிகள், வித்துவான்கள் பலரும் அங்கு காணப்பெற்றனர்.

ராஜா பியாரி மோகன் முகர்ஜி அவர்கள் அவைத் தலைமை வகித்தார். அங்கு கூடியிருந்த பலரும் வரிசையாகச் சுவாமிகளின் அரிய சேவையையும், அதற்கு மூலாதாரமாக விருந்த பகவான் ஸ்ரீராமகிருஷ்ண பரம ஹம்ச தேவரையும், தத்தம் வாக் சாதுர்யத்திற்குத் தக்கவாறு புகழ்ந்து பேசியபின்னர் கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாய் நிறைவேறின.

ஏகோபிதமான தீர்மானங்கள்.

1. இக்கூட்டம் ஸ்ரீமத் விவேகானந்த சுவாமிகள் சிகாகோ சர்வ சமய மகாசபையில் ஹிந்துமதத்தின் சார்பாகச் செய்த விமரிசையான உபந்நியாசத்தையும், சுற்றுப் பிரயாண வாயிலாகச் செய்து வரும் சேவையையும் பெரிதும் பாராட்டுகிறது.

2. மேலும் இக்கூட்டம், சுவாமிகளைப் பரிவுடன் வரவேற்று உபசரித்து, மகாசபையில் ஹிந்து சமயத்தின் தரப்பிற் பேச அவகாச மளித்து ஊக்கிய சர்வ தர்ம மகா சபையின் அக்கிராசனாதிபதியான டாக்டர். ஜெ. ஹெச். பரோஸ் துரையவர்களுக்கும், அச்சபையின் சாஸ்திரீய கிளைச் சபையில் தலைமை வகித்த மெர்வின் மேரி ஸ்னெல் துரை யவர்களுக்கும், ஏனைய அமரிக்கா நாட்டுப் பொதுஜனங்களுக்கும் தங்கள் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்ளுகின்றது

3. இக்கூட்டம் இங்கு கூடியிருக்கும் மகா ஜனங்களின் வந்தன பூர்வமான இத்தீர்மானங்களை ஸ்ரீமத் விவேகானந்த சுவாமிகளுக்கும், டாக்டர் பரோஸ் துரை யவர்களுக்கும், ஸ்னெல் துரையவர்களுக்கும் அனுப்புமாறு இக்கூட்டத்தின் அக்கிராசனாதிபதியை வேண்டிக் கொள்ளுகின்றது.

மேற்கண்ட தீர்மானங்கள் நிறைவேறிய பின்னர் சுவாமிகளுக்கனுப்பப் பின் வருமாறு வந்தனோபசார பத்திரமொன்று வரையப் பெற்றது.

ஸ்ரீமத். விவேகானந்த சுவாமிகள் திவ்ய சந்நிதிக்கு:—

ஜெகத் பூஜ்ய !

கல்கத்தா நகர வாசிகளும், அந்நகரின் ஏனைய பாகங்களில் உறைபவரும் 1894ஞு செப்டெம்பர்மீ 5உ கல்கத்தா நகர மண்டபத்திற் கூடிய மகா சபையில் தலைமைவகித்த அடியேன், ஹிந்துமதத்தின் பேரிலும், ஹிந்துக்கள் சார்பிலும் தாங்கள் 1893-ம் ஆண்டு செப்டெம்பர் மாதத்தில் சிகாகோ நகரில் நடைபெற்ற சர்வ தர்ம மகாசபையில் ஹிந்து மதத்தின் பெருமையைப்பற்றி நிகழ்த்திய பிரசங்கத்தின் வாயிலாகச் செய்தருளிய அரிய ஊழியத்தைப் பாராட்டித் தங்களுக்கு வந்தன பூர்வமாக இப்பத்திரத்தைச் சமர்ப்பிக்கிறேன்.

அமரிக்கா சர்வ தர்ம மகா சபைக்குப் போவதில் தாங்கள் மேற்கொண்ட பிரயாசையும், புரிந்த தியாகமும், இக்கூட்டத்திற் கூடிய மகா ஜனங்களால் மிகவும் போற்றப்படுகின்றன. பரிசுத்த பாரத தர்மத்தைத் தாங்கள் மகா சக்தியுடன் அம் மகா சபையில் நிலை நிறுத்தி, அவர்கள் குதர்க்கமான கேள்விகளுக்கெல்லாம் கோவையாக உத்தர மளித்ததை இங்கு கூடிய மக்கள் பெரிதும் பாராட்டுகிறார்கள். 1893-ம்ஞு செப்டெம்பர்மீ 19உ செவ்வாய்க்கிழமையன்று, தாங்கள் எந்த ஹிந்து மதத்தின் கொள்கைகளை ஒரு சிறு உபந்நியாசத்தி லடக்கிக் கூற ஒண்ணுதோ, அதை சாத்தியப்படுத்தி அனைவரையும் மகிழ்வித்ததைக் கேட்ட யாங்கள் தம்மைப் புகழ எம் மாத்திரம் ! அதே விஷயத்தைத் தொடர்ந்து பின் பல விடங்களிலும் தாங்கள் மிக்க விளக்கமாகவும் தெளிவாயும் பிரசங்கித்ததை நாங்கள் பெரிதும் கொண்டாடுகிறோம். அந்நிய மதஸ்தர் நிறைந்த அறியாத அயல் நாட்டில், துரதிர்ஷ்ட வசமாய் ஹிந்துக்களுடைய மதத்தையும் கொள்கைகளையும் மாறுபடுத்தித் தாழ்வாகக் கருதப்பட்டு வந்ததை, வீரமும், உறுதியும், மகா சக்தியும், வித்தையும் ஒருருக்கொண்டு அவதரித்தது போன்ற தாங்கள் போக்கி, 'ஹிந்து மதத்தைவிடச் சிறந்த சமயமில்லை. அதுவே அவனியிலுள்ள மதங்க ளனைத்திற்கும் தாயக' மென்பதை நிரூபித்த தங்களை நாங்கள் மனமாற வழுத்துகிறோம். கூட்டங்களில் தங்களை ஆதரித்து, பேசச் சந்தர்ப்பங் கொடுத்து, அமைதியாகத் தங்கள் உபந்நியாசங்களைக் கேட்டு, அந்நியரென் றிகழாது தமக்கு உதவிபுரிந்த அமரிக்கா நாட்டு அன்பர்களுக்கு எங்கள் மனப்பூர்வமான வந்தனம் உரித்தாகட்டும். ஹிந்து மதத்தின் முதல் முதல் அந்நிய தேசப் பிரவர்த்தகராக எழுந்தருளிய தங்களையும், தாங்

கள் அநேக ஆயிர காததூரத்திற் கப்பாலுள்ள தேசத்திற் புரிந்த மத ஊழியத்தையும் அடியேங்கள் உள்ளங் கனியப் போற்றுகின்றோம். பாரத தர்மத்தின் புராதனப் பெருமையை ஐரோப்பியர் பூமியில் ஆர வாரத்துடன், மகா கஷ்டங்களை யெல்லா மனுபவித்து மதத் தொண்டு புரியும் தங்களுக்கு எளியோராகிய யாங்கள் இந்த வந்தனோபசாரத்தை யேனும் அளியாவிடில், எங்களைப் போன்ற செய்நன்றி கொன்றவ ரில்லை யென்பதை உணர்ந்தே இவ் வந்தனோபசாரத்தை யளிக்க முன் வந்தோம். தாங்கள் தொடங்கிய தர்ம ஊழியத்தை மென் மேலும் வெற்றியுடன் பரவுவதற்கு ஆற்றலையும், வலிமையையும் அருளுமாறு எல்லாம் வல்ல இறைவனை யாங்கள் துதிக்கின்றோம்.

இங்ஙனம், தங்கள் அன்பிற்குரிய,
(ஒப்பம்) பியாரி மோகன் முகர்ஜி,
அவைத்தலைவர்.

இவ்வாறே பெங்களூர், சென்னை முதலிய பட்டணங்களில் நடைபெற்ற கூட்டங்களிலும் பல தீர்மானங்கள் நிறைவேற்றி அனுப் பப்பட்டன. இவ்வமயம் இந்தியாவின் காற்றிலெல்லாம் ஸ்ரீமத் விவே கானந்தருடைய நாமப் பரிமளம் கலந்து வீச வாரம்பித்தது புகழு வோர் முப்பத்து முக்கோடிப்பேர்! புகழப்படுவோர் ஒருவர்! அவர் பெயர் அநேக கோடி மக்களின் நாவில் விளங்கியதன் பெருமையே பெருமை. அவருக்கு 'எங்கும் பொங்கிய புகழாக'வே யிருந்தது.

30-ம் அத்தியாயம்

இங்கிலாந்துக்கு முதல் விஜயம்

ஏக மனதாய் சுவாமிகளை அமரிக்கா ஐக்கியமாகாண வாசிக ளனைவரும் புகழ்ந்து கொண்டாடி வந்தார்கள். 'அட் லாண்டிக்' மகா சமுத்திரக் கரையிலிருந்து மிசிசிபி நதிதீரம் வரையில் சுவாமிகள் சுற்றுப் பிரயாணஞ்செய்து வேதாந்த உபந்நியாசங்கள் நிகழ்த்தினார். சென்ற விடங்களிலெல்லாம் அவருக்கு விமரிசை யான வரவேற்புடன் விருந்துக ளளிக்கப்பெற்றன. 'டிடிராயிட்'டில் சுவாமிகள் மிசிகன் கவர்னராயிருந்த ஜான் ஜே. பாக்லி துரை யவர்களின் மனைவியாரும், சிறந்த அறிவினியுமான மாதரசி சுவாமி களைத் தனது விருந்தினரா யடையும் பாக்கியத்தை யடைந்தாள். உல

கச் சந்தையின் தலைவரும், அமரிக்கா ஐக்கியமாகாண கல்விச் சபையின் அங்கத்தினரா யிருந்தவருமான தாமஸ் டப்ளியூ பால்மர் துரையவர்கள் சுவாமிகளைப் பெரிதுங் கொண்டாடி ஆதரித்தார். 1894-ம் ஆண்டு 'ஏப்ரல்', 'மே' மாதங்களில் சுவாமிகள் சிகாகோவிலிலேயே பெரும்பாலும் தங்கியிருந்தார். 'பாஸ்ட'னிலும், நியூ யார்க்கிலும் அவர் சிலகாலம் வசித்தார். அவ்வருஷம் 'அக்டோபர்' மாதத்தில் அவர் பால்டிமோர், வாஷிங்டன் முதலிய பெரிய நகரங்களுக்குப் போய்வந்தார்.

பிரபல அமெரிக்கர்கள் உறவு

நியூ யார்க் வாசியான டாக்டர் லூயிஸ் ஜி. ஜேன்ஸ் அவர்கள் சுவாமிகளுடைய பக்தியி லீடுபட்டு அவருடன் இணைபிரியாதிருந்து, பரம பக்தராகி மரணம் வரை அவரை மனத்தாற் பிரியாதிருந்தார். பல கல்விச் சபையின் ஆதரவிலும், மாதா கோயில்களிலும், நகர சிங்கார மண்டபங்களிலும் சுவாமிகளின் பிரசங்கங்கள் நிகழ்ந்தன. 'புரூக்லின்' நகர 'நீதிநூற் பிரசார சபை'யின் ஆதரவில் சுவாமிகள் ஓர் பிரசங்கம் செய்தார்; அதன் பயனாக மாது எஸ். இ. வல்டோ என்பாள் சுவாமிகளின் சிஷ்யையாகிய ஹரிதாசி என்ற தீக்ஷாநாமம் பூண்டனள். 1895-ம்ஸு பிப்ரவரிமீ வரை சுவாமிகள் ஒரு இடத்திலும் தரித்திருக்கவில்லை. அனுதினமும் அவர் பிரயாணஞ் செய்துகொண்டும், கேள்விகளுக்கு விடை யளித்துக்கொண்டும், உள்ளங் கனிந்து வந்தவர்களுக்கு உபதேசித்துக்கொண்டும், உவந்து வரவேற்ற விடங்களில் உபந்நியசித்துக்கொண்டும் சுற்றிய வண்ணமே யிருந்தார். குருதேவரின் அனுக்கிரஹப்படி, தெய்வ பலத்தால் தாம் தொடங்கியவேலை அமெரிக்காவில் ஸ்திரப்படுவது கண்டு சுவாமிகள் தளராது தயங்காது உழைத்து வருவாராயினர்.

யோக சாதனங்களில் மென்மேலும் அடைதற்குரிய சித்திகள் ஒவ்வொன்றாக அவருக்குக் கைகூடின. அவர் சோதி மயமாய் பிரகாசித்தது கண்டு அநேகர் அடிமை பூண்டனர். அவருடைய உழைப்பு நாளுக்கு நாள் நம்பிக்கையான பலனையே யளித்து வந்தது. இடையிடையே நேர்ந்த பல இடர்களை யெல்லாங் கடந்து காரியத்திலேயே சுவாமிகள் கண்ணாயிருந்தார். அவற்றை யெல்லாம் அவரது மெய்யடியாரான லியோன் ஸாண்ட்ஸ் பர்க்—கிருபாநந்தர் என்ற தீக்ஷாநாமமேற்றவர் 'பிரம்மவாதிநி'யில் விரிவாக வரைந்து சுவாமிகள் தமக்கு நேரும் துன்பங்களை அலக்ஷியமாகக் கருதி தமது நெறியினின்றும் வழுவாதிருந்த வரலாற்றை மிக்க நன்றாக விளக்கி யுள்ளார். இங்

காலங்களில் இந்தியாவிலிருந்த சுவாமிகளின் சீடர்களிடமிருந்தும், ஏனைய அன்பர்களிடமிருந்தும் கடிதங்கள் நூற்றுக் கணக்காக வந்து கொண்டிருந்தன. தவறாமல் அவற்றிற்குத் தக்கவாறு சுவாமிகள் தமது நெருக்கடியான வேலைகளுக்கிடையே பதிலெழுதி வந்தார். சென்னையிலிருந்த அன்பர்களுக்கு சுவாமிகள், 'பிரம்ம வாதிநி' என்னும் ஓர் வேதாந்தப் பத்திரிகையை ஆரம்பிக்குமாறு எழுதி, தாம் அமரிக்காவில் உபந்நியாச நிமித்தமாகச் சென்றபொழுது அளிக்கப்பட்ட பிரயாணச் செலவை மீத்து, அப்பத்திரிகைக்கு மூலதனமாக அனுப்பினர்.

அமரிக்கா முழுவதும் தமது சுற்றுப் பிரயாணத்தையும், பிரசங்கங்களையும் முடித்துக் கொண்டபின் சுவாமிகள் நியூயார்க்கில் தங்கியவாறே சில சிஷ்யர்களுக்கு வேதாந்த பாடஞ் சொல்லத் தொடங்கினர். பெரும்பாலும் 'ராஜயோகம்' 'ஞானயோகங்'களையே முதலில் புகட்டி வந்தார். அவ்வாண்டு ஜூன் மாதத்தில் 'ராஜயோகம்' என்ற நூலை அவர் பூர்த்திசெய்தார். அதை அவர் வரைந்த விதம் மிக்க ஆச்சரியகரமானதே. அவருடைய அத்யந்த சிஷ்யையான ஸ்ரீமதி. எஸ். இ. வால்டு அந்நூலை சுவாமிகள் வரைந்தவிதத்தை வர்ணிக்குங்கால் ராஜயோக நூலை சுவாமிகள் சொல்ல அடியேன் வரைந்தவிதம் மிக்க அதிசயமானதே.

பாடமோதிய பான்மை

பிரம்ம சூத்திரங்களுக்கு பாஷ்யம் கூறுங்கால், அவர் என்னைக் காத்திருக்கவிட்டு, ஆழ்ந்த சமாதியிற் கூடி, தமது சூக்ஷ்ம அறிவின் உணர்ச்சியால் பரவசமாமி மள மளவென்று கூறுவார். நான் எப்பொழுதும் எனது பேனாவை மையுடன் ஆயத்தமாகவே வைத்திருப்பேன். வெகுநேரம் அவர் சமாதியிலிருந்து பின் திடீரென்று ஆரம்பித்துத் தங்கு தடையின்றி விஷயத்தைக் கொட்டுவார். நாங்கள் அள்ளிப் பருகி ஆனந்த மடைவோம்' என்று கூறியுள்ளாள். இவ்விதமாக, சுவாமிகள் இராஜயோகத்தை அப்பியசிப்பதும் போதிப்பதும், நூலாக வரைவதுமாக இருந்தார். எப்பொழுதும், இளம் பெண்கள் சூழ்ந்திருந்தபொழுதிலும், அவர் சிறிதும் மனச்சலன மடையாது, தமது யோகாப்பியாசத்தை நிறுத்தாமல் புரிந்து வந்ததுதான் மிக்க ஆச்சரியமானது. அக்காலத்தில் சிலருக்கு ஞானோபதேசஞ்செய்து காவியளித்து, தமது மேல் நாட்டுக் கைங்கரியத்தைப் பூர்த்தி செய்ய வேண்டுமென்ற அவா அவருக்கு ஏற்பட்டது. அக்காலை மேடம் மேரி லூயிஸ், கேர்லியோன் லாண்டஸ்பர்க்கு

என்ற இருவரும் பகிரங்க பக்தர்களாகி துறவி பூண்டு அபயானந்தா, கிருபானந்தா வென்ற ஞானப் பெயர் பூண்டனர்.

அவர்களுள், அபயானந்தா வென்பவள் ஒரு பிரஞ்சுமாது. அவள் அப்பொழுதைக்கு இருபத்தைந்து ஆண்டுகளாக நியூயார்க்கைத் தனது வாஸஸ்தலமாகக் கொண்டவள். அவளுடைய பூர்வ வரலாறு மிக்க வியப்பானது. இருபத்தைந்தாண்டுகளாக அவள் லோகாயத மதவாதியாயும், வித்த சாமானிய வாதியாயுமிருந்தவள்; ஓராண்டுக்கு முன் 'மன்ஹாதன் லிபரல் கிளப்' பின் முக்கிய அங்கத்தினளாக விளங்கிய மாதுமணி. அதன்பின் மிமி என்ற பெயருடன் அவள் பிரசங்கிப்பதில் பிரசித்தியடைந்திருந்தாள். எதற்கும் அஞ்சாது முன்வந்துழைக்கும் ஆற்றல் மிகுதியும் படைத்தவள் அவ்வம்மை.

இரண்டு பக்த சிரோமணிகள்

சுவாமி கிருபானந்த ரென்ற மற்றொருவர் சுவாமிகளின் மேல்நாட்டு சீடர்களில் பிரமுகர்; நல்ல அறிவாளி. நியூயார்க்கில் நடைபெற்று வந்த ஒரு பிரபல பத்திரிகாலயத்தில் கீர்த்தியுடன் விளங்கியவர். பிறப்பால் அவர் ஓர் ருஷ்யநாட்டு யூத குடும்பத்தைச் சார்ந்தவர். அவரது இயற்பெயர் லியோன் லான்ட்ஸ்பர்க் என்பது. அவரது பூர்வ சரித்திரமும் அபயானந்தா என்ற மாதின் சரிதைப் போன்ற ஆச்சரிய முள்ளதே.

பிற பக்தர்களுள், நார்வே நாட்டவரும், பிடில் வாத்திய பிரபலருமான டாக்டர் அலன்டே அவர்களின் மனைவி மாது ஓலி புல் என்பவளும், கன்னி எஸ். இ. வால்டோ என்ற பிரசங்கியும் முக்கியமானவர்கள். இவர்களைத் தவிர ஏனைய பாதிரிமார்களும் மாதா கோயிற் பரிபாலர்களும் சுவாமிகளின் அன்பர்களாயிருந்தனர். இவ்வமயம் பிரான்ஸ்தேச பெயர்பெற்ற சாரா பேர்ன்ஹார்ட் (Sarah Bernhardt) எனும் நடனமாது ஒருத்தி சுவாமிகளின் ஞானோபதேசங்களைக் கேட்டு அவரைப் போற்றிவந்தாள். பின்னர், மாடம் கால்வ் (Madame Calve) என்ற பெயர் வாய்ந்த இசைவல்லாளும் சுவாமிகளின் பக்தையானாள். பிரான்ஸிஸ் லக்கெட் என்ற நியூயார்க் சமூக ஊழியர் தமது மனைவியாரோடு சுவாமிகளுக் குதவி புரிந்து வந்தார். மகா கீர்த்திமானும், வித்யுத் சக்தி (ரசாயனம்) ஆராய்ச்சி நிபுணருமான நிகோலஸ் தேஸ்லா என்பாரும் சுவாமிகளின் சாங்கிய யோக

ஏனைய பக்தர்கள்

உரையைக் கேட்டு, அதன் உண்மைகளில் பரிபூர்ண நம்பிக்கை யுடைய வராய் 'பிரபஞ்சமென்பது ஆதிமத்யந்தமற்றது; பொருள்களும் அவற்றின் சக்தியும், ஆகாசமும், பிராணனும், முதல் நடு முடிவில் லாதவைகள்' என்ற தாத்பரிய பூஷிதராய் அன்பு பூண்டனர்.

இங்ஙனம் சுவாமிகள் உழைத்து வந்து 1895௵ ஜூன்மீ தமது வேலை ஒருவிதமாக நிலை நிறுத்தப் பெற்றதைக் குறித்துத் தமது குருதேவரின் பேரருளைச் சிந்தியாநின்றார். பல தனவந்தர்கள் அவருக்குப் பொருளுதவி புரிந்து வந்தமையாலும், சுவாமிகளின் பரிசுத்தத்தோடு கூடிய இடையறா முயற்சியாலும் அவருடைய சமய ஸ்தாபனம் கைகூடிற்றேயன்றி வேறில்லை அந்நிய நாட்டு நடை, உடை, பழக்க வழக்கங்கள், உண்டி, சமயம் முதலிய அனைத்திலும் முற்றிலும் மாறுபாடாயுள்ள அமரிக்கர்களிடத்தில், அரும்பாடுபட்டு, பலரைத் திருப்திசெய்து பாரத நாட்டிற்கே பெரும் புகழீட்டி வைத்த சுவாமிகட்கு நாமென்ன கைம்மாறு செய்யவல்லோம்? முகமறியாத நாட்டில், நாகரீகத்திலும் கல்வியிலும் வல்ல மகாமேதாவிகள் மலிந்த அத்தேசத்தில், சுவாமிகள் தமது ஹிந்து மதத்தின் பெருமைகளை நிலை நாட்டியதை ஆராயுங்கால், அது மனித யத்தனத்திற் கைகூடியக் காரியமல்ல வென்பதிலையமின்று. அதனால் ஒவ்வொரு அணுவிலும் தெய்வீகத்தன்மை விளங்கும் அவருடைய சரிதையினின்றும், ஐயனருளாலும், அவரது தூயநெறியாலும், பின்வாங்காத உழைப்பாலுமே அக்காரியம் நிறைவேறின தென்பதே ஏற்ற முடிபு.

சில சமயங்களில் சுவாமிகள் மனமொடிந்து தளர்வார்; வெறுத்துத் தமது பழைய பரிவ்விராஜக நிலையை யெண்ணி—அதன் பெருமிதத்திலாழ்ந்து மீளவிரும்புவார். அந்நிலையில் அவர் தமது சென்னை யன்பரொருவருக்கு எழுதிய கடிதத்தில் "தலைமொட்டை யடித்துக் கொண்டு காவி யாடையுடன், தன்னந் தனியாய் மர நிழலிற் றுயின்று, கவலையற்றுத் திரிந்த அந்நாட்களை யடைய நான் பேரவா வுள்ளவனா யிருக்கின்றேன்" என்று குறிப்பிட்டுள்ளார். ஆயினும் அன்பின் பெருக்கால் சுவாமிகள் தாம் மேற்கொண்ட திருத்தொண்டைக் கைவிட வியலாமல், பலனை எதிர்பாராமல் உழைத்து வந்தார். புறப்பயனை அவர் கருதவில்லை. மதமென்னும் பயிரை யழிக்கும் வேலியாகிய மூட நம்பிக்கை, மூர்க்காபிமானம் முதலியவற்றின் அழிவையும், ஆத்ம நம்பிக்கையின் ஊர்ஜிதத்தையும் அவர் முதலில் எதிர்

அகமும் புறமும்

பார்த்தார். மத அடிமைகளைப்போக்கி, அத்வைத வேதாந்த ஸ்தாபனஞ் செய்து, தனக்குத் தானே உதவியாகவும், நிற்பயமாக விருப்பற்று, விதியை வெறுத்து, ஒப்பற்ற மெய்ப்பொருளின் தன்மையைத் தனக்குத்தானே அறியுந் தன்மைக்கு மக்களைப் பழக்க வேண்டுமென்ற அபிலாஷை அவர் மனத்தே ஸ்திரமாயிருந்தது. அகத்தேயும் புறத்தேயும் அமலனைத் தரிசிக்கும் மகா ஞானிகளாக அனைவரையும் ஆக்கிடவிடவேண்டு மென்னும் அவருடைய அவா கடலைவிடப் பெரிதாயிருந்தது.

அத்வைத வேதாந்தத்தைப் பரவச் செய்வதில் அவர் தமது உயிரையும் தியாகம் செய்ய உவகை பூத்திருந்தார். அவர் மனம் மட்டும் எந்நேரமும் துறவியின் பந்த மற்ற நிலையையே பற்றிய வண்ண மிருந்தது. சீடர்களிடையே அவரது ஸ்தூல சரீரமே ஆடும். மெய்யன்பர்கள் பலர் சுவாமிகளை "நீங்கள் அப்படி நாகரீகமாகத் தாங்கள் உடுக்கவேண்டும். அந்த பிரபுவை நீங்கள் பார்க்கவேண்டும் இக்காரிய சித்திக்கு அவர் உதவி அவசியமானது" என்று குறுக்கிட்டுத் துன்புறுத்தி வந்தனர். அதற்கவர் "இவற்றால் நான் ஏன் பந்திக்கப் படவேண்டும்? நான் ஒரு யதி. உலகப்பற்றை ஒழித்து வெளிப்பட்டவன். யான் மேற்கொண்ட பணியை ஆற்றவே எனக்குப் போதிய அவகாசமில்லை. என்னுடைய விருப்பப்படியே யான் செல்வேன். 'முக்தி—விடுதலை' என்பதே எனது சமயம். என்னை எதுவும் பந்திக்க முடியாது. இறைவன் ஆக்ஞைப்படி யான் நடப்பேன். உங்கள் புறவெற்றியை யான் ஒரு பொருட்டாகக் கருதவில்லை. உங்கள் நாகரீக குகைக்குள் நானேன் புகவேண்டும்?" என்று மறுமொழி பகர்ந்து பந்தத்தை அகற்றி வருவாயினர். விலக்க முடியாத பந்தம் சில சமயங்களில் வந்துறும்போது அவர் சிவபெருமானைத் தியானித்த வண்ணம் 'மால் விடைப்பாக! சிறு குழந்தை முதல் யான் உமது பாதகமலங்களையே சரணமென் றடைந்தவன். துருவத்திலும், இமயத்தின் உச்சியிலும், சமுத்திரத்தி னடியிலும் நீ என்னுடன் விளங்குகின்றாய்! மனித முயற்சி காற்பங்கும் உமது திருவருள் முக்காற்பங்குமாக கார்ய சித்தி யேற்படுகின்றது. ஸ்ரீராம கிருஷ்ண தேவரின் இணை யடிகளை யன்றி வேறெந்த குருபீடத்தையு மறியாத அடியேனை நீ காத்தருளல் வேண்டும்" என்று கண்ணீர் மல்கத் துதிப்பார்.

தமக்குப் புதிதான அத்தேயத்தில் உதவிபுரிந்த அன்பர்களிடத்தில் அவர் காட்டிய விஸ்வாஸத்திற் களவின்று. அவருக்கு முதல்

முதலாக முன்வந் துதவியவர்கட்கு, அவர் மைசூர் அமைச்சரும், ஜுனகத மன்னரு மனுப்பிய பட்டு பீதாம்பரங்களைப் பரிசாக அளித்தார். அதுமட்டுமன்றி இந்தியாவி லிருந்த தம தன்பர்களுக் கெழுதி ருத்ராக்ஷம் தர்ப்பாஸனம் முதலியன வரவழைத்து யோகாப்பியாசம் செய்துவரும் தமது சிஷ்யர்களுக்கு வழங்கினர்.

அவ்வாண்டு முழுவதும் அவர் இரவும் பகலும் இடைவிடாது, உழைத்து வந்தமையால் உடல் சிறிது தளர்ச்சியுற்றது; மனமுஞ் சிறிது ஓய்வை விரும்பிற்று. அவரைப் பார்க்காத பலரும் பத்திரிகைகளின் வாயிலாக உபந்யாசங்களை வாசித்துப் பக்தர்களானர்கள். சனதன தர்மத்தின் சிறப்பிற்கு அந்நாட்டில் துவஜாரோகண மேற்பட்டுவிட்டது. அநேகமாக அமரிக்காவின் ஒவ்வொரு பிரதான பட்டணத்திலும் அவர் பிரசங்கித்து மதஸ்தாபனஞ் செய்து முடித்திருந்தார். அவர் பெயரையும், பெருமையையும் கேளாதார் அந்நாட்டில் முற்றிலுமிலரென்றே சொல்லலாம். அப்பொழுது சுவாமிகள் க்ஷேத்ரி மன்னருக்கு வரைந்த கடிதத்தில் எவ்வளவுக் கெவ்வளவு தம்மைப் பாதிரிமார்கள் தாக்கிப் பேசுகின்றனரோ அவ்வளவுக் கவ்வளவு தாம் அதிக வன்மையுடன் உழைத்து, அழியாப் புகழீட்டித் திரும்ப உத்தேசித்திருப்பதையும், அங்கு சிலரைத் துறவற நெறியிலே பழக்கி ஹிந்து சமய தீக்ஷை யளித்து, தாம் நாட்டிய அஸ்திவாரத்தின்மேல் அவர்களைக் கொண்டு கட்டிடங்கட்ட எண்ணி யிருப்பதாயும் எழுதி யிருந்தார்.

இரண்டாண்டுகள் வெகு சிரமப்பட்டுப் புரிந்த மதசேவையின் காரணமாக சுவாமிகள் சிறிது ஓய்வை விரும்பித் தமது சிஷ்யர்களிடம் கூற, அவர்கள் செயிண்ட் லாரன்ஸ் நதியிலுள்ள சகஸ்ர தீவுகளில் (Thousand Islands Park) ஒன்றன 'பர்ஸி' என்னும் சித்தாஸ்ரமமே உத்தமமானதென் றியம்பினர். அதற்கிணங்கி, அவர்கள் குறிப்பிட்ட இடத்திற் கொஞ்சகாலம் வசிக்கத் தீர்மானித்து, நியூயார்க்கினின்றும் புறப்பட்டு 1895-ம் ஆண்டு ஜுன் மாத ஆரம்பத்தில் பிரயாணமானர். அங்கு அடக்கமான ஆஸ்ரமமொன்று அமைய அதில் தமது சிஷ்ய வர்க்கத்துடன் உற்சாகமாக வசித்து வந்தார். அவ்வாஸ்ரமத்தின் மேன்மாடி உபதேச மண்டபமாக வைக்கப்பெற்றது. அங்கிருந்தவாறு சுற்றிப் பார்க்கும்போது நாற்புறங்களிலுள்ள பசும்புல் தரைகளா லலங்கரிக்கப்பெற்ற சிற்சிறு

சகஸ்ர தீவகத்திற் கேகல்.

தீவுகள் வெகு அழகாகக் காணப்படும். அகண்டமான அக்நதியின் அலைகள் கல்லோலமிட்டுக் கரைகளில் மோதும். சாத்வீக உணவுடன் சகல சௌகரியங்களு மமைந்த அவ்வாச்சிரமம் அதியற்புதமாய் விளங்கிற்று.

அவ்வாண்டு ஜூன் மாதம் பத்தொன்பதாம் நாள் புதன்கிழமை முதல், காலையிலும் மாலையிலும் வேதாந்த உபதேசஞ் செய்ய வாரம்பித்து, முதல்நாள் பைபிளிலிருந்து சில அரிய வசனங்களைக் கடவுள் வணக்கமாகக் கொண்டு விளக்கிப் பின்பு தமது உபதேசத்தை ஆரம்பித்தார். அன்றுமுதல் ஏழு வாரங்கள் வரையில் இடைவிடாமல் வேதாந்த வகுப்புகள் நடைபெற்றன. உபதேசங்களி னிடையிடையே சுவாமிகள் வியாச வேதாந்த சூத்திரங்கள், நாரத பக்தி சூத்திரங்கள், பகவத் கீதா வாக்கியங்கள், பதஞ்சலி யோக சாஸ்திர சூத்திரங்கள், பிரகதாரண்யோபநிஷதம், கடோபநிஷதம் தத்தாத்ரேய அவதூத கீதை, முதலியவற்றின் தாத்பரியங்களை எடுத்தோதினர். அவற்றுள் பல, மளமள வென்று அருளாளராய் அவர் சொல்லியபடியால் சாங்கேதிகலேகக நிபுணர்களால்கூட வரைய முடியாது போயின. சிலவற்றை மட்டும் மிஸ் வால்டோ என்னும் சிஷ்யை 'அருள் பிரவாக தீபிகை' (Inspired Talks) என்ற தலைப்புடன் தொகுத்து ஒரு நூலாக்கி யுள்ளாள். அவற்றில் இரண்டொன்றை மட்டும் இங்கு எடுத்துக் காட்டுவோம்.

"வீரத்துடனும் சித்த சுத்தியுடனு மிரு; பின் உள்ளன்புடன் எவ்வழி யேகினும் நீ பகவானையே யடைவது திண்ணம்." "நீயே பரப்பிரம்ம மென்னும் உணர்ச்சி உனக் குண்டாகும்பொழுது பயமென்பது உன்னிடத்தில் நசிக்கின்றது. ஜீவனாகிய நானும், பரமாத்மாவும் ஒன்றென்பதை நீ யொருகாலும் மறவாதே," உலகாயதன் ஏகான்மவாதியைப் பித்த னென்பான். ஸ்தூலமாகிய பிரபஞ்சம் பொய்யென்று வாதிப்பான். பந்தத்தைப்பற்றிக் கூறும் வாக்கியங்களைப் பிரமையே என்று பேசுவான். வேதாந்தமோ 'நீ பந்தமற்றவன்; பந்திக்கப்பட்டவன்; லோக விஷயங்களில் மயங்கும் வரையில் நீ விடுதலை யடைந்தவனல்ல' என்று கூறும். ஆத்ம சம்பந்தமான விஷயங்களில் நீ எப்பொழுதும் பந்த முடையவனல்ல. ஆதலால் பந்தத்திற்கும் விடுதலைக்கும் அப்பால் விளங்கா நிற்கும் விண்ணோரமுதை அடைய நீ பிரயாசை கொள்."

அருள் வாக்கு.

இங்ஙனம் சஹஸ்ரத்வீபத்தில் சுவாமிகள் அனுதினமும் பிரசங்கித்துக்கொண்டும், உபதேசங்கள் புரிந்துகொண்டுமிருந்தது மட்டுமின்றித் தமது மெய்யடியார்களை யோகாப்பியாசத்தில் பயில்வித்து, காஷாய மீந்து, அமரிக்காவில் பின்னர் நடைபெறவேண்டிய வேதாந்த ஸ்தாபனத்திற் கேற்றவாறு அவர்களைப் பழக்குவித்தார். 'வறுமையை நீங்கள் வலுவில் ஏற்கவேண்டும்' என்று அவர்களை உறுதிப்படுத்தினார். ஏழுவாரங்கள் அங்கு கழிந்தன.

இங்கிலாந்துக்குப் பிரயாணப்படல்.

அதன்பின் சுவாமிகள் தமது அன்பர்களுடன் நியூயார்க்குக்கு எழுந்தருளினார். இங்கிலாந்துக்குப் பிரசாரார்த்தமாகச் செல்லவேண்டுமென்ற விருப்பம் சில மாதங்களாக அவருக் கேற்பட்டிருந்தது. அஞ்ஞான இருளைப் போக்கும் அகண்ட விளக்கான அவருடைய வரவைப்பெறும் பாக்கியத்தையும் இங்கிலாந்து தேசம் அடைந்திருந்தது. அதற்கிணங்க மிஸ் ஹென்றியதா முல்லரிட மிருந்து ஓர் வரவேற்புக் கடிதமும் சுவாமிகட்குக் கிடைத்தது. இ. டி. ஸ்டர்டி துரை யென்னும் ஆங்கிலநாட்டு அன்பரொருவர் சுவாமிகளை இங்கிலாந்துக்கு எழுந்தருளும்படியும் தாம் சமயப் பிரசாரத்திற்கு எதையும் தியாகஞ் செய்யச் சித்தமா யிருப்பதாயும் வாக்களித்து எழுதிய கடிதமொன்றும் அப்பொழுது சுவாமிகளுக்கு வந்து சேர்ந்தது. அதேசமயத்தில் 'நியூயார்க்' செல்வந்தர் சிலர் தாம் பாரிஸ் நகருக்கு உல்லாசப் பிரயாணம் போவதாகக் கூறி, சுவாமிகளையும் அழைத்தார்கள். நாலும் கூடிவர, இதுவே தக்க தருணமென்று கொண்டு, குருதேவரையும், பகவானையும் தியானித்து சுவாமிகள் இங்கிலாந்துக்குப் பிரயாணமானார். தேக சிரமத்தைப் பாராட்டாமல், அளவுக்கு மீறி அலைந்து பிரசங்கங்கள் செய்தமையால் சுவாமிகளுக்கு களையுண்டா யிருந்தது. கடற்பிரயாணஞ் செய்தால், தமது பலஹீனம் நீங்கி, திடமாகத் தாம் சீமையிற் மேற்கொண்ட மத சேவையை நடத்தலாமென்று நிச்சயித்து, தமது பிரிவுக்காற்றாத அன்பர்களுக்கு ஹிதோபதேசஞ் செய்துவிட்டு, அவ்வாண்டு ஆகஸ்டு மாதத்தில் நியூயார்க் நகரில் நீராவிக் கப்பலேறி அம்மாதப் பிற்பகுதியில் பாரிஸ் நகரை அடைந்தார். பாரிஸ் நகரில் அவர் வெகு நாட்கள் தங்கவில்லை. சின்னாட்களேயிருந்து பொருட் காட்சிசாலை, தேவாலயங்கள், செப்பருஞ்சீர் நெப்போலியன் திறனை யுணர்த்தும் தூபி முதலியவற்றைப் பார்த்துவிட்டு, அமரிக்காவிலிருந்து தம்முடனேகிய அன்பர்களின் உதவியால் பிரான்ஸ் தேச அறிஞர்களைச் சந்தித்து,

அவர்களிடம் தமது நோக்கங்களை வெளியிட, அவர்களும் சுவாமிகளைப் புகழ்ந்துகொண்டாடினர். அங்கு சென்று தங்கிய சொற்ப தினங்களுக்குள் சுவாமிகள் பிரான்ஸ் தேசத்தாரின் நடை யுடை பழக்க வழக்கங்களை ஆராய்ந்து முடிவு கட்டிக்கொண்டார்.

பாதிரிமார்கள் துற்செய்கை.

நிற்க, சுவாமிகள் மேல்நாட்டி லிருந்த காலங்களில், இந்தியாவில் மதத்தொண் டியற்றும் பாதிரிமார்கள், பத்திரிகைகளின் வாயிலாகச் சுவாமிகள் அமரிக்காவில் அனுசிதமாக உணவு கொள்ளுகின்றாரென்றும், ஒழுக்கத்தைக் கைவிட்டா ரென்றும் இந்தியாவின் பல பாகங்களிலும் மக்களுக்கு சுவாமிகளிடத்தில் அதிருப்தி விளைவிக்கும் நோக்கத்துடன் செய்தி பரப்புவாராயினர். இதை நம்பிய மாந்தர்கள் ஆராயாது ஐயனைக் கடுமையாகத் தூஷிக்கத் தொடங்கினர். இதைக் குறித்து எச்சரிக்கைசெய்து சுவாமிகளுடைய சிஷ்யர்களிலொருவர் பெரநாகூரிலிருந்து சுவாமிகட்கோர் கடிதம் வரைந்திருந்தார். அதற்கு சுவாமிகள் வரைந்ததாவது:

"நீங்கள் வரவிடுத்த நிருபம் எனக்கு வியப்பையே தருகின்றது. பாதிரிமார்களின் புரட்டை நீங்களும் நம்பி எனக் கிவ்விதம் வரைந்தது பின்னும் ஆச்சரியமாகவே யிருக்கின்றது. நான் துறவி—பந்தத்தைக் கடிந்தவன். நான் சந்நியாச நெறியை விட்டேன் என்று எவராவது தூற்றினால் அதை நீங்கள் நம்பியது தவறு. மேலும் மனித பலத்தைவிட மிக்க தெய்வ பலத்தின் ஆக்ஞைப்படி நான் செல்லுகின்றேன். என்னை எந்த தேசத்தாரும் தமக்குச் சொந்தமானவனென்று கூற முடியாது. நான் எத்தேசத்தி னடிமையுமல்ல. நான், இந்த சாதி மதக்கொடுமை, விபரீத ஆசாரத்தின் தீங்கு, வன்னெஞ்சமுடன் வேஷம் போடுகிற தன்மையுடன் மூடாத்மாவாய்ப் பிறந்து, பூமிக்குச் சுமையாயிருந்து இறப்பவர்களில் ஒருவனல்ல. பகவந் நாம பக்தியற்ற விஷயங்களில் எனக்கு விருப்பமே கிடையாது......"

அதன்பின், பாரிஸ் நகரகன்று, அணிமாடங்களா லலங்கரிக்கப் பெற்று, திருமகள் நித்யவாசம் புரிவதுபோலத் திகழும் லண்டன்மா நகரை யடைந்தார். இங்கிலாந்துக்குச் சென்று, ஐரோப்பியர் சமூகத்தில் ஹிந்துமதத்தின் பிரபாவத்தை எடுத்தோத வேண்டுமென்று அவர் தம் பரிவ்ராஜக நிலையில் கொண்டிருந்த எண்ணம் இப்பொழுதே கைகூடிற்று. கடித வரவால், சுவாமிகளுடைய வருகையை யறிந்து, அவரை எதிர்கொண்டழைக்க, அவரைச் சர்வ தர்ம மகா

சபையிற் சந்தித்த மிஸ் ஹென்றியதா முல்லர், துறைமுகத்திற் பல பிரமுகர்களுடன் வந்திருந்தாள். சுவாமிகள் கப்பலிலிருந்து இறங்கியவுடன் அவரை விமரிசையாக வரவேற்று, மாலை சூட்டித் தனது கிருகத்திற்கு அழைத்தேகினள் அம்மாதரசி. அன்று முதல் பலரும் அவரைச் சூழ்ந்துகொண்டு வேதாந்த சிரவணம் பண்ணலானார்கள். ஒருவார காலத்திற்குள் அந்நாட்டின் பல பாகங்களினின்றும் அழைப்புப் பத்திரங்கள் வந்து குவிந்தன. 'ஹிந்து யோகி' என்று அவர் பெயர் அந்நாடெங்கும் பிரசித்தமாயிற்று. அவரது வேதாந்த விரிவுரைகளைக் கேட்க தினந்தோறும் ஆயிரக்கணக்கான ஜனங்கள் வந்து கூட ஆரம்பித்தார்கள். பெரிய தனவந்தரும், இந்தியா முழுவதும் யாத்திரை செய்து இமயத்தின் பெருமையைப் புகழ்ந்து இந்தியாவே அறிவின் ஆஸ்தானமென்னும் முடிவு கண்டவருமான இ. டி. ஸ்டர்டி துரை மகனார் சுவாமிகளின் முக்கிய நண்பரானார். அமரிக்காவிற் செய்ததுபோலவே சுவாமிகள் இங்கும் அல்லும் பகலும் ஓயாது உபந்நியசிக்கவேண்டி நேர்ந்தது. பிறகு, அவ்வன்பர்கள் வேண்டியதற்கு இசைந்து அக்டோபர்மீ 22வ 'லண்டன் இளவாசர் மண்டபத்தில்' 'ஆத்ம ஞானம்' என்று ஓர் பிரசங்கம் செய்தார். இதைப் புகழ்ந்து, "ராஜாராம் மோகனராய் என்ற இந்திய மகாமேதாவிக்குப் பிறகு, பிரம்ம சமாஜ சண்டமாருதமான ஸ்ரீகேசப் சந்திரசென் அவர்களுக்குப்பின், இப்பொழுதுதான் சுவாமி விவேகானந்த ரென்ற, ராஜலக்ஷணம் பொருந்திய மகாசக்தராய் சமத்காரத்துடன் அறிவுக் கடலாய் விளங்கும் ஓர் மகானை நாம் இங்கிலாந்தின் பிரசங்க மேடைகளிற் காணும் பாக்கியம் பெற்றோம்" என்று ஓர் பத்திரிகை வரைந்தது.

லண்டன் நகர வாசம்.

அவர் இங்கிலாந்தில் ஒரு மாதத்திற்குமேல் தங்கவில்லை. ஆனால் அந்த ஒரு மாத காலத்திற்குள் அவர் தமது மகாசித்தியாலும், வசீகர வல்லமையாலும், எவர் சந்தேகத்தையும் போக்கும் அபார ஞானத்தாலும் சாமான்ய பிரவர்த்தகர் ஒன்பது வருஷ காலத்தில் சாதிக்கக் கூடிய அரிய மதசேவையைச் செய்து முடித்தார். அப்பொழுது, நவம்பர் மாதம் ஒரு ஞாயிற்றுக்கிழமை பிற்பகலில் கலா சமுத்திரமெனத்தகும் மாதொருத்தி பல நாளாகப் பொங்கித் ததும்பிய அன்பினளாய் அவர் தம் பொன்னடி சார்ந்தாள். அவ்வம்மையின் பெயர் மிஸ் மார்

மிஸ் மார்கரட் நோபிளின் பக்தி.

ஸ்ரீமத் விவேகானந்த ஸ்வாமிகள் (லண்டன் நகரவாசம் தியானபரராய் அமர்ந்திருக்கும் நிலை.)

(388-ம் பக்கம்)

கரட் நோபிள் என்பது. அன்றுமுதல் அவள் அவரை ஆஸ்ரயித்து வேதாந்த விசாரஞ் செய்யத் தொடங்கினாள். அவ்வுத்தமி கேட்ட பல கேள்விகளுக்கும் நூலாதாரங்களுடன் சுவாமிகள் தக்க சமாதானம் கூறி அவளை அத்வைத வேதாந்த அலைகடலாக்கினார். அம்மாதரசி பிற்காலத்தில் சுவாமிகளைத் தமது குருநாதனாக் கொண்டு சகோதரி நிவேதிதாதேவி யென்ற தீக்ஷாநாமம் பூண்டு 'வேதாந்த சேவை'க்கே தனது உடல் பொருளாவி மூன்றையும் தியாகம் செய்தாள்.

இங்கிலாந்தில் சுவாமிகள், கிறிஸ்து மதத்தின் பெருமையை எடுத்துக் காட்டி, அன்பே சமயமென்னும் உண்மையை அறியாமல் மாந்தர்கள் இரத்த வெறி பிடித்து யுத்தம், இயந்திரம், செல்வம் ஆகியவற்றையே நாடி, அல்லும் பகலும் பிராணனை வதைத்து, அரைக்கணமும் ஆண்டவனை உள்ளன்புடன் வழிபடாது, அலா நெறிக்கே ஆளாகி வாழும் வாழ்வின் அபாய நிலையை யுணர்த்தி, தர்மத்தின் - சமயத்தின் - வேதாந்தத்தின் மகாவாக்கியங்களை யுபதேசித்து, கர்மம் பக்தி ஞானம் முதலிய விஷயங்களை அறிவுறுத்தி வந்தார்; தம்மைத் தாக்கிப் பேசி வாக்குவாதம் புரிந்தவர்களுக்கெல்லாம் தக்க விடையளித்து, ஹிந்து மதமே ஏனைய தர்மங்களுக்கெல்லாம் தாயகமென்பதை ஸ்தாபித்து விளங்கினார். அவர் மேடைமீது நின்று பேசுங் காலங்களில், சகலகலா வல்லி அவருடைய வெள்ளை யுள்ளத்திற் குடிகொண்டு விளங்கினாள். தமது பிரசங்க வன்மையாலும், அருட்பிரபாவத்தாலும் சண்டமாருதம்போற்பேசி, அஞ்ஞானத்தை ஆங்கில நாட்டினின்றுந் துரத்தி, அறிவூட்டிய ஐயன் பெருமையை என்னென்று பகர்வோம்? பேசுங் காலங்களில் அவர் கண்களினின்றும் பரிதியின் பசுங்கதிர்களென ஜ்யோதி வெளிப்படும்; ஆனந்தக் கண்ணீர் அரும்பும். இயக்கரும் வியக்கும் வண்ணம் இலங்கிய அவரது சொன்மாரியால் பலர் ஆத்மசோகம் நீங்கினர்.

பிரசங்கப் பெருமிதம்.

இந்நாட்களில் அமரிக்காவிலிருந்த சுவாமிகளின் பக்தர்கள், அவர் பிரிவைச் சகிக்கக்கூடாமல், அன்பென்ற மை தோய்ந்த ஆவல் மிகுந்த கடிதங்கள் வரைந்துகொண் டிருந்தார்கள். 'அடியேங்களை அரைவேலையிற் கைவிடல் தர்மமோ?' என்ற மனமிளகிய வசனங்கள் பல அக்கடிதங்களில் காணப்பெற்றன. இங்கிலாந்தில் அணுவிலும் வியாபித்து நின்றது அவர் புகழேயாதலின், ஆங்கிருந்த அன்பர்கள் அவரை லண்டன்மா நகரிலேயே ஸ்திரவாஸஞ்செய்ய மன்றாடினார்கள்.

அன்பெனும் அணிமணிக் கயிற்றால் கட்டுண்ட சுவாமிகள் மீண்டும் விரைவில் தாம் இங்கிலாந்திற்கு வருவதாக வாக்களித்துவிட்டு, தமது அமரிக்காவேலையைப் பூர்த்திசெய்ய உத்தேசித்து, அமரிக்காவுக்குப் பிரயாணமானார்.

இதற்கிடையில் அமரிக்காவில் சுவாமிகளிடம் தீக்ஷை பெற்றவர்கள் தினந்தோறும் ஒரு பொதுஸ்தலத்திற்கூடி, பகவத்கீதை பாராயணஞ் செய்து வந்தனர். கிருபானந்தரும், அபயானந்தரும், மிஸ். எஸ். இ. வால்டோவும் சேர்ந்து வேதாந்த பிரசாரம் செய்துகொண்டிருந்தார்கள். உள்ளன்புடன் சுவாமிகளின் அடியாராயினர் பலரும் அந்நாட்டின் பல பாகங்களிலும் அவருடைய உபதேசப்படி வேதாந்த சபை கூட்டினர். அமரிக்கா நாட்டு அன்பர்களைப் பிரிந்து மூன்று திங்களாயபின் சுவாமிகள் அவ்வாண்டு டிசம்பர் மாதம் ஆறும்நாள் சுக்ரவாரமன்று மீண்டும் நியூயார்க்கை யடைந்தார். அவரது 'முதல் இங்கிலாந்து விஜய'த்தால் பெரும்பயன் விளைந்துவிட்டது கண்டு பாரதவாஸிகளனைவரும் குதூகல மடைந்தனர்.

31-ம் அத்தியாயம்.

அமரிக்காவில் வேதாந்த முழக்கம்

ஐயன் அமரிக்காவை யடைந்ததும், தமது கைங்கரியத்தை வெகு விரைவில் பூர்த்தி செய்துவிட்டு இங்கிலாந்து வழியாக இந்தியாவுக்கேகவேண்டு மென்ற கருத்துடன் கிருபானந்தாவோடு, நியூயார்க் முப்பத்தொன்பதாம் திருவீதியில் தமது ஆஸ்ரமத்தை ஸ்தாபித்து, கர்மயோக உபந்நியாசம் செய்ய ஆரம்பித்தார். இரண்டு வாரங்களுக்குள் பதினேழு உபந்நியாசங்கள் நிகழ்ந்தன. 'சமயத்தின்வெற்றி,' 'சமய உண்மையும் பயனும்,' 'உலக சம்பந்தமான மதத்தின் அடிப்படையான நோக்கங்களும் தாத்பரியங்களும்,' 'அவற்றால் சர்வ சமய சமரஸத்துவ மேற்படக்கூடிய வழிகள்' 'பிரபஞ்சம்' 'சிருஷ்டிக்கிரமம்' முதலியவற்றை விஸ்தரித்து சுவாமிகள் விரிவுரைகள் நிகழ்த்தினார்.

அவருடைய உபந்நியாசங்களை உள்ளபடி வரைய பிரபல ஒலியெழுத்தாளர்களாலும் இயலாமற் போயிற்று. மேலும் விஷயம் வேதாந்த ஞான சாரமானது. சுவாமிகள் மிக்க வேகமாகப் பேசுங்

தன்மையின ராதலின் அத்துணை வேகமாக வரைவோர் கிடைப்பதும் அரிதாயிருந்தது. அப்பொழுது யதேச்சையாக இங்கிலாந்திலிருந்து வந்திருந்த ஜே. ஜே. குட்வின் (J. J. Goodwin) என்ற ஒரு சாங் கேதிக லேகந நிபுணர், தமது பெயருக்குப் பொருத்தமாக சுவாமிக ளது உபந்நியாசங்களைச் சிறிதும் விடாமல் வரைந்து வந்தார்.

குட்வின் துரையவர்கள் ஒரு யதார்த்தமான யௌவன புரு ஷர். பரோபகாரமான விஷயங்களில் ஈடுபடுவதில் உற்சாக முள்ள வர். சுவாமிகள் அமரிக்காவில் தமது தொடர்ச்சியான பிரசங்கங்களை ஆரம்பித்தபோது 'சாங்கேதிக லேகந நிபுணர்' (Shorthand Writer) ஒருவர் வேண்டுமென்ற விளம்பரத்தைக் கண்டு அவ்வேலையை அவர் ஒப் புக்கொண்டார். அவர் அவ்வேலையை ஒப்புக்கொள் ளும் காலத்தில் அதன் வாயிலாகப் பொருளீட்டவேண்டும் என்னும் ஆவலுடையவராயிருந்தபோதிலும், அதனை ஏற்றபின் சுவாமிகளின் குணாதிசயங்களில் ஈடுபட்டு, சத் சங்கத்தால் காம காஞ்சன ஆசை யற்றவராய் அவரது சிஷ்யராகி டாம்பீகத்தை வெறுத்து, அவரைப் பிரி யாமல் கூடவே யிருந்து, இங்கிலாந்து இந்தியா முழுவதும் சுவாமிக ளுடனே சுற்றுப் பிரயாணஞ் செய்து, வெகு பால்யத்தில் உதக மண் டலத்தில் நோயுற்றிறந்துபோனார். அப்பொழுது சுவாமிகள் 'நான் இழக்கத்தகாத ஓர் பொருளை யிழந்தேன். ஐயோ! என்ன செய்வேன்' என்று மனமுருகிப் புகன்றதினின்றும் அவரியற்றிய சேவையின் மேன்மை யூகிக்கப்படலாம். இவரைப்பற்றிய விஷயங்கள் பின்னர் ஆங்காங்கே வரும்.

குட்வின் துரை-சாங்கேதிக லேகந நிபுணர்.

அம்மாதம் 'கிறிஸ்டிமஸ்' பண்டிகையை முன்னிட்டு ஸ்ரீமதி: ஓலி புல்லின் உபசாரத்தை யேற்று, சுவாமிகள் 'பாஸ்டன்' நகருக் கேகிச் சில வேதாந்த விரிவுரைகள் செய்து திரும்பினார். வந்தபின் 1896-ம் வரு ஜனவரி 5ௗ முதல் ஞாயிற்றுக்கிழமை தோறும் நியூ யார்க் 'ஹார்டிமன்' மண்டபத்தில் சொற்பொழிவுகள் நடைபெற்றன. அம்மண்டபத்தில் எள்விழ இடமின்றி பலர் அவருடைய பிரசங்கங் களைக் கேட்கக் காலையிலிருந்து காத்தவண்ண மிருப்பதுண்டு. இடம் போதாமை கருதி, பிப்ரவரி மாதம் அவர் புரிந்த தொடர்ச்சியான உபந்நியாசங்கள் 'மடிஸன் ஸ்குயர் கார்டன்' என்னும் சுமார் ஈராயிர வர் இருக்கத்தக்க பெரிய மண்டபத்தில் நடைபெற்றன. அம்மண்ட பத்தில் 'பக்தியோகம், சத்புருஷ இலக்கணம். எனது குருநாதன்,

ஸ்ரீராம கிருஷ்ண பரமஹம்சர்' என்ற பல பிரசங்கங்கள் செய்தார். அம்மாதத்திலேயே 'சிகாகோ தத்துவ ஆராய்ச்சிக் கழக'த்தினாதரவில் 'ஆத்ம தத்துவம்' என்ற விஷயமாய் ஓர் பிரசங்கம் நடைபெற்றது. அம்மாதம் 24௳ 'எனது குருநாதன்' என்று சுவாமிகள் அக்கழகத்தில் மறுமுறை பேசினார். அவர் மிக்க நிபுணத்துவத்துடன் பேசக்கூடிய விஷயங்களில் அது பிரதானமானதாகக் கருதப்பட்டதாதலின், அவற்றால் அமரிக்கா நாட்டில் ஸ்ரீராம கிருஷ்ணருடைய திருநாமம் பிரபலமாயிற்று. அத்தினம் ஸ்ரீராம கிருஷ்ணரது திருநாளாக அமைந்ததும் மற்றொரு பொருத்தம். அம்மாதம் 20ம்௳ வியாழனன்று பலர் சுவாமிகளிடம் மூலமந்திர உபதேசம் பெற்று காஷாயந் தரித்தனர். வியாபகர் டாக்டர் ஸ்டிரீட் என்பாரும் அன்று காவிபூண்டு யோகானந்தரென்ற தீக்ஷாநாமம் பூண்டார்.

'நியூயார்க்'இல் சொற்பொழிவுகள்

சுவாமிகள் தமது திருப்பணியை யங்கு தொடங்கிய ஓராண்டுக்குள் மூவர் செல்வத்தைத் துறந்து, கமண்டலமேந்தி, காவிபூண்டனர். பலர் பிரம்மச்சாரிகளாய் அவரிடம் மூலமந்திர உபதேசமடைந்தனர். இதற்குமுன் அவரைப் போற்றிவந்தா ரனைவரும் இப்பொழுது நேராக அவருடைய அடியார்களானார்கள். அந் நன்னாள் நிகழ்ச்சிகளைப்பற்றி கிருபானந்தர் "இந்தியா தனது எழிலை வெளியிட்டுவிட்டது. விவேகானந்த ரென்னும் சங்கநிதி இனி அமரிக்கா தேசத்திற்கே சொந்தமானதென்று நான் பெருமை பாராட்டுவேன். எனது குருநாதரான அவரது சரிதையை அமரிக்காநாட்டு சகலகலா நிகண்டில் வரைய உறுதிபூண்டுள்ளதை எண்ணி நான் பெருமை பேசுவேன்" என்றெழுதினார். கவி பாடுவதில் கடாக்ஷம் பெற்றவளாய் அமரிக்காவின் அரிய நூலாசிரியை யென விளங்கிய எல்லா வீலர் வில்காக்ஸ் (Ella Wheeler Wilcox) என்பாள் சுவாமிகளின் பக்தையாகி 'எங்கள் அறியாமை சுவாமிகளைக் கண்டமாத்திரத்தில் நீங்கிற்'றென்று வரைந்து சிறந்தாள்.

அமரிக்காநாட்டுத் தத்துவஞானிகளும், பாஷைநூற் புலவர்களும், சாஸ்திர ஆராய்ச்சியாளரும், பாராளுமன்ற அங்கத்தினர்களும் சுவாமிகளுக்குத் தொண்டராயினர். இதைக் குறிப்பிட்டு தாம் அமரிக்காவில் ஹிந்துமத சேவையில் வெற்றி யடைந்துவிட்டதாக சுவாமிகள் பிப்ரவரிமாதம் பதினேழாந்தேதி யிட்ட கடிதத்தில் வரைந்துளார். இதற்குள் சுவாமிகளது ராஜயோக பக்தியோக கர்மயோக உபந்நியா

சங்கள் குட்வின் துரையவர்களின் பேருதவியால் அச்சிட்டுத் தயார் செய்யப்பெற்றன. அப்பால், டிடிராயிட் அன்பர்களின் வேண்டு கோளுக்கு இசைந்து சுவாமிகள் அந்நகருக்குச் சென்று இரண்டு வாரங் கள் தங்கிப் பிரசங்கங்கள் செய்துவிட்டு, ஹார்வார்ட் சர்வகலாசாலைப் பட்டதாரிகளும் மாணவர்களும் அளித்த விருந்தை ஏற்று, பாக்ஸ் துரையவர்கள் உபசாரத்திற்கிணங்கி மார்ச்சு மாதம் 25உ ஹார்வார்ட் சர்வகலாசாலை மண்டபத்தில் 'வேதாந்த சாரம்' என்பது பொருளாக ஓர் சர்வோத்தமமான பிரசங்கம் செய்தார். அப்பொழுது அவர்கள் சுவாமிகட்கு 'இந்தியா கலைவளர்ச்சிக் கழக'த்தின் சாஸ்வத அக்கிரா சனர் பதவியை யளிக்க சுவாமிகள் 'நான் பூசஞ்சாரி' என்று கூறி மறுத்துவிட்டார். அச்சர்வ கலாசாலையின் பிரபல உபந்நியாசகரான ரேவரெண்ட் ஸி. ஸி. எவரெட் டி. டி. எஸ். எல். டி. அவர்கள் பெரி தும் ஈடுபட்டு, சுவாமிகளின் உபந்நியாசத்தை சர்வகலாசாலைச் சஞ்சி கையில் எடுத்தெழுதிப் புகழ்வாராயினர்.

அச்சர்வ கலாசாலையின் தத்துவஞான நூலாசிரியர்களும், மாண வர்களும் பின்னிப் பின்னிக் கேட்ட பல கேள்விகளுக்குச் சுவாமிகள் தக்க விடையளித்து, ஞானநூலாதாரங்களுடன் அழுத்தமாகவும் திருப்திகரமாகவும் மறுமொழிபகர்ந்தார். வேதாந்தங்களையே ஆதாரமா கக்கொண்டு, நவீன விக்ஞான நூல்களினுட் பொருள்களை விளக்கிக் காட்டி, அத்வைத துவைத மதக்கொள்கைகளை தெளிவாக உபதேசித் தார். சுயதாரண சக்திப் பிரயோகமே ராஜயோகமெனப் படுமென் பதை அவர் விளங்கக் கூறினர். யோகத்தின் மகாசித்திகள் வேதாந் தத்திற் பொதிந்து விளங்குகின்றனவென்று 'பாவ் ஹாரி பாபு'வின் சரித்திரத்தைக் கூறி விளக்கினர். நாகரிகத்தின் வளர்ச்சியைப்பற்றி அவர் நவிலுங்காலை தெய்வவுணர்ச்சியே நாகரிகத்தின் உந்நத நிலை யென்றும், சமயக்கொள்கைகள் யாவும் அனுஷ்டானத்தில் பொருந்தி யிருக்கப்பெற்ற நாடே மேன்மையான நாகரிகத்துடன் விளங்கு மென்றுஞ் சாற்றினர். அவருடைய விரிவுரைகள் ஒழுக்கத்தையே பெரிதும் தழுவியனவா யிருந்ததோடுகூட தர்க்க ஞானத்துடன் விவே கோதயத்தையும் உண்டாக்கும் நேர்மையுட னிருந்தன. ஆன்ம விடு தலையும், அதன் வெற்றியுமே அப்பிரசங்கங்களில் செழித்திலங்கின.

அதன்பின், கடுமையான சேவையால் அவர் உடல் நலம் சிறிது குறைய வாரம்பித்தது. அவர் அல்லும் பகலும் பேசி யலுத்துப் போனர். அமரிக்காவில் தாம் மேற்கொண்ட மதசேவையை அவர்

1896-ம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் பிற்பகுதியில் ஒருவகையாகப் பூர்த்திசெய்ய உறுதி பூண்டார்; வேதாந்த சிறு நூல்களை வரைந்து வெளியிட்டு, நியூயார்க்கில் ஒரு வேதாந்த சபையையும் ஸ்தாபித்தார். சர்வசமய சகோதரத்துவத்துடன் ஜாதிபேதத்தை யொழித்துச் சத் விசாரஞ் செய்வதே அச்சங்கத்தின் நோக்கங்களாகும். அந்நகரப் பிரமுகர்கள் பலரும் அதன் அங்கத்தினரானார்கள். காலை மாலை இரு வேளையும் குறித்தநேரத்தில் அங்கு தவறாது வேதாந்த வகுப்புகள் நடைபெற்று வந்தன.

சுவாமிகள் அமரிக்காவிற் பிரசங்கித்த இராஜயோகம், கர்ம யோகம், பக்தியோக நூல்கள் அச்சாகி விரைவில் விற்பனையாயின. அப்பொழுது அமரிக்கா நாட்டுப் பத்திரிகைகள் யாவும் ஏகோபிதமாக அந்நூலைப் புகழ்ந்து மதிப்புரைகள் எழுதின. ஆனாலும் சில உள நூலோரும், அங்க வியாபார நூலறிஞர்களும் அவற்றிற்குச் சில மறுப்புகள் விடுத்தமையின், துவைத, அத்வைத, விசிட்டாத்துவைத சமயக் கொள்கைகளை ஒருசேரத் திரட்டி சர்வ சமய சம்மதமான ஒரு நூலை சுவாமிகள் வரைய உத்தேசித்தார். இக்கருத்தை வெளியிட்டு அவர் தமது இந்தியாவிலிருந்த நண்ப ரொருவருக்கு வரைந்ததாவது:

"நான் ஒரு புதிய முறையைக் கண்டுபிடித்திருக்கிறேன். அதாவது வேதாந்த ஞானத்தின் மூன்று படிகளிலும் எல்லாச் சமயங்களும் வந்து ஒன்று கூடுகின்றன வென்பதே. துவைத விசிட்டாத்துவைதம், அத்வைதமாகிய மூன்று கொள்கைகளும் ஒன்றின்பின் னொன்றாக ஒன்று சேருகின்றன. ஆத்ம ஞான வளர்ச்சியின் மூன்று நிலைகளே யிவை. ஆதலின் இவற்றுள் ஒவ்வொன்றும் முக்கியமானதேயாகும். இந்தியாவின் சகலவித மதானுஷ்டானங்களிலு முள்ள வேதாந்தங்கள் யாவும் சேர்ந்து 'இந்துமதம்' என்ற உருவடையும். ஐரோப்பியர்களின் உயர்ந்த கிறிஸ்தவப் பிரிவு துவைதமானது; அதன் மத்திமமான பிரிவுடையது முகம்மதீயம்; யோக பூர்வமாக அனுசரிக்கப்படும் அத்வைதமே புத்தசமயம்; இப்பொழுது எனது சமயம் வேதாந்த மென்பதே. ஆகையால் இப்பொழுது எனக்கு எவரைக் கொண்டாவது முதலில் அத்வைதம், பிறகு விசிட்டாத்துவைதம், துவைதம் ஆகிய மூன்று சமயக் கொள்கைகளையும் தனித்தனியாகவும் இணைந்தும் வலியுறுத்தும் சம்ஹிதை, பிராம்மணம், உபநிஷதம் புராணம் முதலியவற்றி லிருந்து அரிய சுலோகங்களைத் திரட்டி வரிசைப் படி வகுத்து தெளிவாக வரைந்து அனுப்புங்கள். ஒரு நூல் வாயிலாக மேல் நாட்டில் வேதாந்த ஸ்தாபனஞ் செய்யாது திரும்ப என் மனம் இசையவில்லை. மைசூரில் 'புரொபெஸர் டியூசென்ஸ்' புத்தகாலயத்தில்

நூற்றெட்டு உபநிஷதங்களையும் விடாமல் சேர்த்துள்ள ஒரு தமிழ் நூலைப் பார்த்தேன். அதே நூல் இப்பொழுது தேவ நாகர மொழியில் அச்சாகி வெளியாயிருந்தால் அதை அனுப்பிவையுங்கள். இல்லையேல், அத் தமிழ் நூலையும் மற்றொரு ஏட்டில் தமிழ் பாஷையிலுள்ள எழுத்துக்களை சப்தப் படி வரைந்தனுப்பினால் அதன்படி தமிழ் கற்றுக்கொள்கிறேன்."

இச்சமயம் அவரிடம் மும்மத பாஷ்யங்களும் கைவசமிருந்தன. அவற்றினின்றும் அவர் வியாக்யாதாக்கள் எவ்விதம் எக்கருத்துடன் தமது கொள்கைகளை விளக்கி சித்தாந்தப்படுத்திப் போகின்றனரென் பதை தமது அன்பர்களுக்கு விளக்குவதுண்டு. 'ஹார்வார்ட்' சர்வ கலாசாலையில் அவர் பிரசங்கித்தபோது அவரை ஒருவர் 'ஏன் மாயை - அறியாமை இருக்கின்றது?' என்று கேட்க உடனே சுவாமிகள் "ஏன்" என்பது எச்சரிக்கையில் பிரயோகிக்கத்தக்க சொல்லன்று. அதை நான் தர்க்க பூர்வமாக விளக்குவேனென்று விஸ்தரித் துரைத் தார். அதன்பின் சமாதியைப்பற்றி 'ஜீவான்மாவை பரமாத்மாவிடத் தில் ஐக்கியப்படுத்துவதே சமாதியெனப்படும் போலும்' என்றொரு வர் எழுந்து வினவ, சுவாமிகள் 'அல்ல! பரமாத்மா ஜீவான்மாவிடத் தில் விளங்குவதே சமாதிநிலை; அப்பொழுது மாயையின் வடிவான பிரபஞ்சம் நசிக்க 'அகம் பிரம்மாஸ்மி' என்பது பரிபூர்ணமாயிலங்கு மென்று விடையளித்தார்.

இக்காலங்களில், பல சமயங்களின் தாத்பரியங்களையும் ஒவ் வொரு மதஸ்தரும் அறிந்து ஒன்றுபடவேண்டுமென்பதே அவரது சிறந்த நோக்கமா யிருந்தமையால், மேல் நாட்டையும் கீழ்நாட்டை யும் அன்பெனும் மணிக்கயிறால் பிணிக்கவேண்டுமென்று விரும்பி, சுவாமிகள் அமரிக்காவில் ஸ்ரீராமகிருஷ்ண தேவரின் அடித்தாமரை களில் அமரும் பாக்கிய மடைந்திருந்த சில சீடர்களைக்கொண்டு தமது மதசேவையை நடைபெறச் செய்யவும், அமரிக்காவிலுள்ள சில அடி யார்களைக்கொண்டு இந்தியாவில் மதசேவை செய்விக்கவும், தாமவர் களுக்குப் போதித்தவற்றை அவர்களே தமது சுவானுபூதியில் கண்டு தெளியும்படி செய்யவும் ஆவல்கொண்டிருந்தார். இதனால், இந்தியா வில் சமரஸமும் ஒற்றுமையும் விக்ஞான அறிவும் கைத்தொழி லபி விருத்தியும் சிக்கனமான செலவு திட்டங்களும் மேல்நாட்டிலுள்ள சிறந்த முறைப்படி இயற்கையாகவே அவ்வன்னிய நாட்டினரின் உபந்நியாசங்களாற் பரவுமென்பது அவரது உட்கருத்து. இக்கருத் துடன் சுவாமிகள், சுவாமி சாரதானந்தரை அமரிக்காவுக்குப் புறப்

பட்டு வருமாறு வரைந்தாராயினும், சில இடையூறுகளால் அப்பொழுது அவருடைய பிரயாணம் தடைப்பட்டது.

1896-ம் ஆண்டின் வசந்தருதுவில் சுவாமிகளை இங்கிலாந்துக்கு வந்தருளுமாறு பல கடிதங்கள் வரலாயின. அவரும் அமரிக்கா இங்கிலாந்து நாடுகளின் பிரதமபுரிகளான நியூயார்க் லண்டன் நகரங்களில் தமது மதஸ்தபனத்தை நிலைநிறுத்திவிட்டால் அவை இயல்பாகப் பரவி அந்நாடுகள் முழுதும் வியாபித்துவிடுமென்று எண்ணினார். அமரிக்காவில் ஹரிதாசி என்ற தீக்ஷாநாமம் பூண்ட (மிஸ். எஸ். இ. வால்டோ) பக்தையே அதற்குத் தக்கவள் எனத் தேர்ந்து, அவருக்குத் தாம் உபதேசிக்கவேண்டிய அனைத்தையும் புகட்டி, சுவாமி கிருபானந்தா, அபயானந்தா, யோகானந்தா முதலிய சிஷ்யர்களை அவ்வம்மைக்கு பக்கபலமா யிருந்து தண்பணியாற்றுமாறு ஏற்பாடு செய்தார்.

வேதாந்த சபை ஸ்தாபனம்

அவர் இங்கிலாந்துக்குப் புறப்படுமுன் கோடீஸ்வரரான பிரான்ஸிஸ். ஹெச். லெக்கெட் என்ற மேதாவியை-'நியூயார்க் வேதாந்த சபை'யின் அமைச்சர் பதவியை வகிக்கச் செய்து, ஏனைய சீடர்களைக் காரியதரிசிகளாகவும் நிர்வாகிகளாகவும் நியமித்தருளினார். நியூயார்க்கில் பிரபல வித்வத்துள்ள, மாதரசி மிஸ். மேரி பிலிப்ஸ், மிஸி—ஆர்தர் ஸ்மித், வால்டர் குட்கியர், அவர் மனைவி, மிஸ் எம்மா தாஸ்பை என்ற வியாபக இசைமாது முதலியோர் அச்சபையின் முக்கிய அங்கத்தினர்களாயினர். அவர்களுடைய வேண்டுகோளுக் கிசைந்து, சுவாமிகள் சாரதானந்தரை உடனே புறப்பட்டு இங்கிலாந்திற்கு வந்து இ. டி. ஸ்டர்டி துரை யவர்களின் கிருகத்திற் றம்மைச் சந்திக்குமாறு கடிதமும் வரைந்து, அமரிக்காதேச சிஷ்யர்களுக்கு சீக்கிரத்தில் ஒரு தலைவரை அனுப்புவதாகவும் வாக்களித்தார்.

இவ்விதமாகக் கார்யங்களைப் பூர்த்தி செய்துகொண்டு சுவாமிகள் 1896-ம்ஹு ஏப்ரல்மீ 15உ நியூயார்க்கில் கப்பல் ஏறி இங்கிலாந்திற்குப் பிரயாணமானார். கடற்கரையில் கப்பல் கண்ணிற்கு மறையும் வரை இமை கொட்டாது அந்த அன்பர்கள் நின்ற வண்ணம் கண் கலங்கினார்கள். அப்பால் 'கலம் கண்ணுக்கு மறைந்ததே! அருங்கலமாகிய ஐயனைக் கொள்ளைக்காரனைப் போன்று இக்கப்பல் அபகரித்துச் செல்லுகின்றதே என்றனைவரும் துக்கித்தனர்.

உபந்நியாசங்கள் முடிந்ததும் குழந்தையைப்போல விளையாடு வாரே எமதையன்! அப்பா 'ஜே' இங்கே வாவென்று செல்லமா

யழைப்பாரே யென்னப்பன்!' என்றொருவர் புலம்புவார். 'அவருடைய பாததூளி நமது வீட்டின் பல பாகங்களிலும் பட்டுப் பரிசுத்தமாவதெப்பொழுது? பரமானந்தமான பாட்டுகளை யானினிக் கேட்பதெப்பொழுது? தாயொக்கும் அன்பில் தவமொக்கும் நலம் பயப்பின் சேயொக்கும் முன்னின்று செல்கதிக்குய்க்கும் சீரால்! நோயொக்குமென்னில் மருந்தொக்கும், நுணங்கு கேள்வியாயப் புகுங்கால் அறிவொக்கு மென்னையனை இனி என்று காண்பேன்' என ஏங்குவா ரொருவர். 'ஐயோ! என்னுடலிற் பொருந்திய உயிரெங்கேகிற்று?' என்பாரொருவர். பொன்னையும் மண்ணையும் ஒன்றென பாவித்துத் தாம் பெற்ற பொருளனைத்தையும் ஏழைக்கென்றே செலவிடுத்த என்னப்ப னெங்கேகினன்' எனத் தேடுவாவார் ஒருவர். "அதிகமாக உண்பவனும், அளவுக்குக் குறைவாக உண்பவனும், யோகி யாகான். அதிகம் துயில்வோனும், அளவுக்குக் குறைந்து நித்திரை செய்வோனும் யோகியாகான். 'உணவு நித்திரை, விநோதம் ஆகியவற்றை அளவைப்பற்றிக் கொள்பவனே துக்க நாசனுவான்' என்ற கீதையின் வாக்கியத்தைப் போதித்தவாயினின்றும் இனி எப்பொழுது உபதேசம் பெறுவேன்" என்று பிரலாபிப்பார் மற்றொருவர். இவ்வாறு அவர்கள் மனம் வருந்திப் பின்பு ஒருவாறு தேறிச் சில நாட்கள்வரை பித்தம் பிடித்தவர் போன்றிருந்தனர். பிறகு இங்கிலாந்திலிருந்து சுவாமிகள் அவர்களைத் தேற்றி வரைந்த கடிதம் கிடைத்ததன்மேல் ஊக்கத்துடன் தமது வேலையைத் தொடங்கினர்.

பிரிவுக்காற்றா பிரலாபம்.

நிற்க, சுவாமிகள் அமரிக்காவில் தமது அன்பர்களுடன் எவ்வளவுதூரம் அளவளாவிப் பழகினரென்பதைச் சிறிது நவில்வோம். அமரிக்கா அன்பர்களுடைய அகத்தின் அந்தரங்க அறைமுதல் சமையலறை வரையில் சுவாமிகள் தாராளமாகச் சென்று வருவார். ஒருகால் அவர் டிடிராயிட் நகரில் ஒரு அன்பரின் வீட்டில், அன்று தாம் ஹிந்துக்கள் வழக்கப்படி உணவாக்குவதாக உரைக்க அவர்களு மிசைந்தனர். சுவாமிகள் எங்கு சென்றாலும் தமக்கு இந்திய அன்பர்கள் அனுப்பியிருந்த கடுகு, உப்பு, புளி முதலிய சாமான்களைச் சிறு சிறு பொட்டணங்களாகக் கட்டிக்கொண்டு போவது வழக்கம் இந்தியாவிலிருந்து சுவாமிகளுக்கு அடியாரொருவர் 'சட்னி' செய்தனுப்பி யிருந்தார். அதையும் அவர் உடன்கொண்டு செல்வார். இவற்றி னுதவியால் சுவாமிகள் தமதன்பர்களுக்கு ஓர் விருந்தளித்தார். அவ்வுணவு

பாகசாஸ்திர முறைப்படிமட்டுமல்லாமல் அன்பெனும் நெய்யால் பாகஞ் செய்யப்பெற்றிருந்தமையால் அமுதினு மினியதாயிருந்தது.

சுவாமிகள் எப்பொழுதும் தமது சிஷ்யர்களைக் களிப்பித்தவண்ணமாகவே யிருப்பார். ஒரு சமயம் ஒரு விநோதமான கதையை விளையாட்டாக விலாப்புடைக்க நகைக்குமாறு கூறுவர்; அடுத்த கணமே அதி தீவிர வேதாந்த நிலையினராய்ப் பேசுவார்; அப்பொழுதே அவர் ஆங்கில உயிர்நூற் புலவராய்த் திகழ்வார்; ராஜயோகத்தைப் பற்றி யுரைப்பார்; அடுத்த நிமிஷம் அருமையாகப் பாடுவார்; தொடுத்த விநாடியில் அவர் தூயாம் நீங்கிய துறவியாய் விளங்குவார்; எல்லாம் அவராய் அவரே யாவுமாய்த் திகழ்வார். அன்பின் பெருமிதமே யாவருக்கும் அவரிடத்தில் அளவிடற் கரிய பற்றைப் பெருக்குவதா யிருந்தது.

இடைவிடாமற் செய்த உபந்நியாசங்களால் அவர் உடல் நலம் சிறிது குறைய வாரம்பித்தது. சிறிது சிறிதாக அவர் தேக ஸ்திதி தாழத் தொடங்கிற்று. அவர் அதை அறிந்திருந்தும் தேகாபிமானத்தை விட்டவராதலின் முன்னிலும் பன்மடங்கு அதிகமாகவே பேசி வந்தார். அவருடைய தேகம் இளைத்ததாயினும் மனோவன்மையும் திடமும் சக்தியும் வளர்ந்து கொண்டே வந்தன. அவருடன் அகோரமாகத் தர்க்கித்த ஒருவர் மூன்றுநாள் வயிற்றுநோயால் வருந்தினரெனில், சுவாமிகள் எத்துணை வன்மையோடு பேசியிருப்பாரென்பதை நாம் ஊகிக்கலாம். இதுவே அவரது ஆயுள் குறுகியதன் முக்கிய காரணம் போலும்.

சுவாமிகள் அமரிக்காவில் ஒரு குருகுல வித்யாலயத்தை ஸ்தாபிக்க எண்ணி இருபதுமைல் விஸ்தீரணமுள்ள புற்றரை யொன்றை விலைக்கு வாங்கி அதில் தமது சீடர்களைக் குடிசைக ளமைத்துக் கொண்டு வேதாந்த விசாரம் செய்யுமாறு ஏற்பாடு செய்யப்போவதாகத் தமது பக்தையான 'மிஸஸ் புல்'லிடம் தெரிவித்தார். அவ்வம்மை அதற்குப் பொருளுதவ முன்வந்தாளாயினும் எவ்விதக் காரணங்களாலோ அக்காரியம் நடைபெறாது போயிற்று. அவர் அமரிக்காவிலிருக்குங்கால், இந்தியாவில் அவரைத் தூற்றுவதில் பாதிரிமார்களும் பாமரர்களும் பலத்த பிரசாரஞ் செய்து வந்தனர். அவர் கொள்ளும் உணவு உடை முதலியவற்றைப் பற்றிக் குறைகூறும் பாதிரிமார்களின் வார்த்தையைக் கேட்டுக்கொண்டு அறிவாளிகளும் குற்றஞ் சாட்டிப் பேசத்தொடங்கினர். இவற்றை யெல்லாம் சுவாமிகள் பொருட்

படுத்தவேயில்லை. அவர் தமது குருநாதரின் கட்டளையின்படி 'நரேந்திரர்' எனுந் தமது பெயருக்கேற்பச் சிறிதும் பின்வாங்காமல் முன்னிலும் பன்மடங்கு உற்சாகத்துடன் தமது பணியை ஆற்றிவந்தார். மனத்தூய்மை அவரை மகானுக்கிற்று. சமயஸ்தாபனஞ் செய்யத் திருவவதரிக்கும் மகான்கள் இவ்விதத் துன்பங்களை யடைதலும் எதிர்த்து வீண்வாதம் புரியும் புறச்சமயவாதிகளை வென்று விளங்குவதும் அடியார் சரிதப் பெருமையைப் பெருக்குவதற்கேயல்லவா? அப்ப ரடைந்த அருந்துயரென்ன? இயேசுநாதர் இரக்கமின்றி சிலுவையி லறையப் படவில்லையா? இவற்றையெல்லாம் ஆலோசித்தால் விவேகானந்த சுவாமிக ளடைந்த இடையூறுகளும், எதிர்ப்புகளும் பெரிதாகா அன்றோ? அப்பொழுது அவரது மெய்யடியார்கள் பெரும்பாடு பட்டுப் பொய் நிந்தனைகளை அடக்கி வந்தனர். மேலும் 'பிரம்ம வாதினி' யில் 'சுவாமிகளுடைய மேல் நாட்டு வெற்றி' யென்ற தலையங்கத்தில் பல விஷயங்கள் வெளிவந்தன. அமரிக்காவில் சுவாமிகள் அத்துணை வெற்றியுடனும் புகழுடனும் திரும்பி யிராவிடில் அவரை தேசப்பிரஷ்டம் செய்து மிருப்பர் இந்த மூடச் சமயவாதிகள்.

அமரிக்காவில் சுவாமிகளுக்கு ஏற்பட்டிருந்த செல்வாக்கைக் கவனித்தால் அவருக்கு இந்தியாவின் பலபாகங்களிலுமிருந்த விஷமிகளாலேற்பட்ட அவதூறுகள் மிகவும் சிறிதென்றே சொல்லவேண்டும். அமரிக்காவில் அவரைப் புகழாத நாவில்லை; போற்றாத மனமில்லை. அவரைக் கண்டு களிக்காத கண்கள் புண்ணெனவே கருதப்பட்டன. அமரிக்காவின் பல மாகாண சர்வ கலாசாலைகளிலும் 'சம்ஸ்கிருத ஸ்தானத்திற்கு' சுவாமிகளைப் பிரதிநிதியாக ஏற்றும் அவர் துறவியாதலால் மறுத்து விட்டார் ஔஷதங்களுக்குப் பதிலாக நோய்களைப் போக்கிக்கொள்ள சுவாமிகள் அமரிக்கர்களுக்கு உபவாஸ முறைகளைப் புகட்டினார். இராஜயோகத்தின் வாயிலாக பட்சவாதம் நரம்பு சம்பந்தமான நோய்கள் முதலியவற்றைப் போக்கிக்கொள்ளும் முறைகளைப் போதித்தார். இவற்றாலும் அவர் புகழ் மேலோங்கிற்று. இவையுந் தவிர, ஸ்ரீராம கிருஷ்ணருடைய மகாசக்தியும், பகவத் கிருபையும், கலைமகள் கடாக்ஷமும் அவருக்குப் பேருதவி புரிந்தன. மின்சாரத்தை முதல் முதலாகக் கண்டு பிடித்தவரான 'புரோபஸர் இலிஷா கிரே' யவர்கள் அமரிக்காவில் நடந்த மின்சார அறிஞர் மகாநாட்டிற்குச் சுவாமிகளை யழைத்தபோது, அத்துறையில் புதிது புதிதாகப் பல

ஹிந்து மதம் உணராத்தாத தில்லை.

வற்றை ஆராய்ந்து கண்டு பிடித்துக் கொண்டிருக்கும் மேதாவிகள் வீற்றிருக்க சுவாமிகள் அங்கேகினர். அம்மகாநாட்டில் மின்சாரத்தின் இயல்பையும் அதுவரை அமரிக்கர்கள் அறியாத பல விஷயங்களையும் சுவாமிகள் யோக சாஸ்திரத்தினின்றும் எடுத்தோதினர். இவ்விதம், எத்துறை நிபுணர்கள் சுவாமிகளை யழைத்தபோதிலும் அவர்களுக்குச் சுவாமிகள் திருப்திகரமாக, அவர்கள் அதுவரை கண்டும் கேட்டுமிராத விஷயங்களை யுணர்த்திக் களிப்பித்து வந்தார். அவற்றிற்கெல்லாம் ஹிந்து மதநூல்களையே யன்றி வேறெதையும் அவர் ஆதாரமாகக் கொண்டதேயில்லை. இதிலிருந்து நமது சமய நூல்களிற் கூறப்படாத விஷயங்கள் இலவேயில வென்பதை இந்தியர்களும், மேல் நாட்டாரும் தெற்றென அறியலாயினர். அதிகம் கூறுவானேன். சுவாமிகள் அவதரித்து மேல் நாட்டிற்குச் சென்று பாரத நாட்டின் எழிலைத் தாபித்திராவிடில் இன்று நாம் இந்தியர்களாகவோ இந்துக்களாகவோ இருப்பது சந்தேகந்தான்.

அமரிக்காநாட்டு மாதர் குழாங்களால் அவர் அடிக்கடி வரவேற்கப்பட்டு 'இந்தியத் தாய்மார்' என்பது பொருளாக, ஸ்திரீ தர்மத்தைப் போற்றிப் பேசுவது வழக்கம். அந்த சமயங்களில் சுவாமிகள் தமது தாயை மனத்திற் றியானித்தவாறே கண்களில் நீர் ததும்ப விம்மி விம்மிச் சிறு குழந்தைபோ லழுது, அவருடைய மத சேவைக்கே பிறப்பிடமாயிருந்த அவர் குடியிருந்த கோயிலை—புவனேஸ்வரி யன்னையைப் போற்றுவார். அவருக்கிருந்த மாதுர் பக்தியை வியந்து, 'காதல் மங்கையர் கண்ணெனும் வாளிற்' கிரையாகாத அவர் உறுதியை நயந்து, சுவாமிக ளறியாவண்ணம் பாஸ்டன் நகரச் சபைத் தலைவரான லூயிஸ். ஜி. ஜேன்ஸ், கிறிஸ்து பிறந்த நாட் கொண்டாட்டத்தன்று புவனேஸ்வரி யம்மைக்கோர் கடிதம் வரையலானார். அக்கடிதத்தில் இயேசுநாதர் குழந்தையாகத் தமது தாயின் மடியில் விளங்கும் அழகிய படமொன்று மிருந்தது. அந்நிருபத்தில்,

புவனேஸ்வரி அம்மைக்கோர் கடிதம்.

"அன்புள்ள தாயே! கிறிஸ்து பிறந்து மேரியம்மையின் திருமடியில் வீற்றிருக்கும் இப்பண்டிகைத் தினத்தன்று, நீங்கள் பெற்ற செல்வன் எங்களிடையே பரமாசாரியராய் விளங்குகிறார். அவரால் நாங்கள் அறியாமை நீங்கி அறிவடையப் பெற்றோம். பொருளீட்டவே கல்வி யுரியதென்ற எங்கள் நம்பிக்கையைப் போக்கி 'கல்வியின் பயன் ஜீவன் முக்தியை யடைவதே' என்னும், விவேகத்தை யூட்டி விவேகா

னந்தாக விளங்கும் அவர் மகிமைக்கும் அவரால் யாங்கள் அடைந்துள்ள மேன்மைக்கும் தாங்களன்றோ காரணபூதை! உங்களுக்கு எங்களது நமஸ்காரத்தைச் சமர்ப்பிக்கின்றோம்" என்ற சில உருக்கமான வசனங்கள் காணப்பெற்றன.

மேல்நாடுகளில் அவர் யாத்திரை செய்தபோது நரேந்திரராகவே விளங்கினார்; சிம்மத்தை யொத்தே சஞ்சரித்தார்; மிகு வல்லமையுடன் ஞான விளக் கேற்றினார். அவரை எதிர்த்து வாதித்தவனெவனாயினும் அவர் நம்பும் வரையில் ஆட்கொண்டுபதேசிப்பார். எத்துணையோ சிறப்புள்ள, வணங்காமுடி மன்னரான அறிவாளிகளும் நாங்களெங்கள் இஷ்டமான சுவாமிகளை வணங்கிப் போவது வழக்கம். புத்தருடைய அம்சம் அவரிடத்திற் காணப்பெற்றது. கிறிஸ்தவர்கள் அவரைக் கிறிஸ்து புத்துயிர்பெற் றெழுந்தாரென்றே போற்றி வந்தனர். உபநிஷதங்களை யருளிச்செய்த மகரிஷிகளி லொருவராகவே அவர் திகழ்ந்தார். மற்றொரு சங்கரரென்றே மகிதலத்தார் அவரைக் கொண்டாடுவாராயினர். கார் வானமாகிய அவர் பூமியின் பல புண்ணிய பாகங்களிலும், அஞ்ஞானத்தை யகற்றும் இடியிடித்து, ஞானச்சுடராகிய மின்னல் மின்னி, அன்பாகிய அருள்மழையைப் பெய்து, அறியாமையென்னும் உஷ்ணத்தைத் தணித்து, பூமண்டலமெங்கும் குளிர்ச்சியுண்டுபண்ணி, சமயமென்னும் சண்பகமலர்ச் செடிகளை வளர்த்து, தெய்வத் தன்மை யென்னும் விரையார்ந்த மலர்களை உலகமெங்குந் தூவி வியாபித்திருந்த பெருமையை அடியேன் எவ்வா றெழுத வல்லேன்?

இனிமை, சொன்னயம், கம்பீரம், மகாசித்தியின் பயனாய சக்தி, அடக்கம், அருள், துறவு, தூய்மை, தெய்வீகம் முதலியவற்றுடன் மகா பூஜ்யராய் சுவாமிகள் அமரிக்காவில் தமது சேவையை விசேஷமாய் முடித்துக்கொண்டு இங்கிலாந்துக்குத் திரும்பிய விஷயம், "அமரிக்காவில் வேதாந்த முழக்கம்," என்ற தலைப்பிற் கூறப்பெற்றது.

32-ம் அத்தியாயம்

இரண்டாவது இங்கிலாந்து விஜயம்

'ஒப்புவமை யற்றது இந்தியா' வென்று அமரிக்கரனைவரும் புகழ, தமக்கும் தமது தாய் நாட்டிற்கும் அரும்புக ழீட்டிய சுவாமிகளின் சரிதையைத் தொடருமுன், அவர் மேல்நாட்டிற் செய்த அரிய மதசேவையின் திறத்தைப் பற்றியும், அவருடைய மேல் நாட் டடியார்களைப் பற்றியுஞ் சில குறிப்பான விஷயங்களைக் கூறுவோம். அமரிக்காவில் அவர் நிறுவிய வேதாந்த சபை மிக்க ஊக்கத்தோடு விருத்தியடைந்து வந்தது. இங்கிலாந்தில் வேதாந்த உணர்ச்சி அவருடைய முதல் விஜயத்திலேயே ஏற்பட்டிருந்த போதிலும் அவரது இரண்டாவது விஜயத்திற்றான் அது ஸ்தாபிதமாயிற்று. முக்கியமாகச் சில ஐரோப்பியர்கள், வேதாந்த சபையின் வளர்ச்சிக் கெனத் தமது வாழ்நாட்கள் முழுவதையும் அர்ப்பணஞ் செய்திருந்தனர். திறமையுடனும் உற்சாகத்துடனும் அவ்வன்பர்கள் சுவாமிகளின் கொள்கைகளை நிலை நிறுத்தக் கங்கணம் கட்டிக் கொண்டு முன் வந்தார்கள். பலர் சுவாமிகள் மேற் கொண்ட சேவையை நிறைவேற்ற ஏராளமான பொருளுதவி புரிந்தாராயினும், நேராக சிஷ்யர்களாகவில்லை; ஆனால் இவர்கள் கொண்டிருந்த அன்பைக் குறை படுதிக் கூற ஈண்டு நாம் முன் வந்திலம். முனிவனும் மன்னனும் முன்னுவ பொன்னன் முடியுமாதலின் அவர்களுடைய பொருளுதவியே ஏனையோர் தொண்டியற்றுவதற் காதாரமாயிருந்த தென்பது யாம் கூறுமலே தொனிக்கும். சுவாமிகளின் நோக்கங்களை மேல் நாட்டிலும், இந்தியாவிலும் நிலைபெறச் செய்த பல மெய்யடியார்களுள் மிகையஞ்சிச் சிலரை மட்டும் இங்கு குறிப்பிடுவோம்.

மேல் நாட்டு சீடர்களின் பெருமை.

மிஸ். எஸ். இ. வால்டு என்ற மாதரசி சுவாமிகளுக்குப் பேருதவி புரிந்தவர்களுள் முக்கியமானவள். இவளையே சுவாமிகள் முதல் முதலாக அமரிக்காவிற் சந்தித்து உபசரிக்கப் பெற்றார். பின்னர், இராஜயோக உபந்நியாசங்களைச் செய்யுமாறு சுவாமிகளை வேண்டிக் கொண்டவளும் இவ்வம்மையே. இவள் ரால்ப் வால்டோ இமர்சன் என்ற ஞானியினிடத்தில் முதலில் சிஷ்யையாயிருந்து சுவாமிகள் அமரிக்காவிற்குச் சென்றதும் அவரிடத்தில் சமய தத்வோபதேச

மடைந்து அறிவு வளர்ச்சி யெய்தி வந்தாள். இதுவன்றி ஜெ. ஜெ. குட்வின் என்ற சாங்கேதிகலேகர விற்பன்னரை யும் இவளே சுவாமிகளின் சிஷ்யராக்கி அவருடைய 'அருள் வாக்கியங்களை' யெல்லாம் நூலாக வெளிவரச் செய்தவள். சுவாமிகள் செய்த உபந்நியாசங்களை மனனஞ்செய்து, அவரைப்போன்ற இனிய குரலோடு, அத்துணை நயமும் பொருந்த இவள் பேசியதைக் கண்ட சுவாமிகள் அதிசயித்தாரென்னில் இவளது அடிமைத் திறமும், குருபக்தியும் எத்துணை சிறந்ததென்பது புலனும். மேலும் சுவாமிகள் நியூயார்க் முப்பத்தொன்பதாம் திருவீதியில் ஒரு சிறுவீட்டில் வசித்தபோது அம்மாது புரிந்த உதவிகள் பல. சுவாமிகள் ஹிந்துவாதலின் அவருக்கேற்ற நியமப்படி உணவாக்கும் பாத்திரங்களைக் கழுவித்தருவதும், உண்பிப்பதும், ஆடைகளைத் துவைத்துத் தருவதுமான கைங்கரியங்களையும் தாமே நேரிற் செய்து வந்தாள். அவளுக்குச் சுவாமிகள் முன்பு தாமளித்த ஹரிதாசி என்ற பெயருடன் யதிமாதா என்ற மற்றொரு தீக்ஷா நாமமுமிட்டு அழைத்து வந்தார்.

மிஸ். எஸ். இ. வால்டு.

அவ ரடிமைத்திற மிவ்வாருக, மிஸ்டர். ஜே. ஜே. குட்வின் துரை யவர்களைப்பற்றிக் கூறுவோம். இவ்வன்பர் சுவாமிகளுக்கு மிஸ். வால்டுவால் அறிமுகப்படுத்தி வைக்கப் பெற்றவர். அப்பொழுது அவருக்கு வயது இருபத்து மூன்று தான். சுவாமிகள் முதற்றடவையாக இங்கிலாந்துக்குப் போய்த் திரும்பியபின், குட்வின் துரை அமரிக்காவைச் சுற்றிப் பார்க்க வந்தவர். அமரிக்காவில் ஏதாவது ஜீவனோபாயத்தை எதிர்பார்த்தும் அவர் பிரயாணமானவர். சுவாமிகளைக் கண்டதுமுதல் அவருடைய எண்ணங்கள் முற்றிலும் மாறுத லடைந்தன. சுவாமிகளிடம் சொற்ப ஊதியத்திற் கமர்ந்து இணைபிரியாதிருந்து அவர் பிரசங்கங்களை வரைந்ததுமன்றி, சிஷ்ருஷையுஞ் செய்யலானர். மேலும் அவர் சுவாமிகளின் உபதேசங்களை யேற்றுப் போதுமென்ற மனமுடையாராய் ஆடம்பரமற்ற வாழ்வை நயந்தார். சுவாமிகள் பிரசங்கஞ் செய்யும்போதெல்லாம் அவர் கூடவே யிருந்து வரைந்து, அப்பொழுதே 'டைப்' செய்து, நள்ளிருளிலுங்கூட, அவரது வரவை ஆவலுடன் நோக்கியிருக்கும் பத்திரிகாசிரியர்களிடம் கொடுத்து வருவார். இத்தகைய அரிய குணங்களைக் கண்ட சுவாமிகளுக்கு அவரிடம் உள்ளன்பு பெருக அவருக்கு ஞானோபதேசஞ் செய்து மிகவும் அபிமா

மிஸ்டர் ஜெ. ஜெ குட்வின்

ணித்து வந்தார். குட்வின் துரை சுவாமிகளின் மகிமைகளை யறியலான அக்கணம் முதல் எவ்வித ஊதியத்தையும் ஏற்கவில்லை. அவர் அதிக பாஷாஞான முடையவரல்லராயினும் சுவாமிகளுடைய பிரசங்கங்களை எடுத்தாண்டு வரைவதில் நிபுணத்துவ முடையவர். அவருடைய ஊக்கமும் பாலியமும் அவருக்குப் பேருதவியா யிருந்தன. 'எனது காரியத்திற்கென்றே குட்வின்துரை தோன்றியவர். அவரின்றி யான் என்ன செய்திருக்க முடியும்? நான் ஏதாவது ஒரு நற்காரியத்தைச் செய்தேனென்றால் அதில் அவரும் சமபாகஸ்தர்' என்று சுவாமிகள் அவரைப் போற்றிப் புகழ்ந்துளார். அவர் ஒலியெழுத்தாளர் வேலையைச் செய்ததுமட்டுமன்றி, ஏகாந்தத் தொண்டு மியற்றி வந்தார். சுவாமிகள் இரண்டாம் முறை இங்கிலாந்துக்குச் சென்றபொழுது அவரும் உடன்சென்று, திரும்ப சுவாமிகளுடன் இந்தியாவுக்கு வந்து, சீதோஷ்ண மாறுபாட்டால் உடல்நலங் குன்றித் தமது வெகு பால்யமான இருபத்தாறும் பிராயத்தில் காலகதி யடைந்தார். சுவாமிகளால் அமரிக்காவிலும் இங்கிலாந்திலும் நிகழ்த்தப்பெற்ற அரிய சொற்பொழிவுகளை இவ்வன்பர் தமது காத்தாலேயே வரைந்தவர். கொலம்புவிலிருந்து அல்மோரா (Colombo to Almora) வரையிலும் சுவாமிகள் செய்தருளிய பிரசங்கங்களை இவரே வரைந்தார். அவர் உதகமண்டலத்தில் கொடிய வாத சுரத்தால் வருந்தி யிறந்துபோன செய்தி அல்மோராவிலிருந்த சுவாமிகளுக்கெட்டியதும் அவர் துடித்துப்போய் பெரிதும் வருந்தி ஓர் சரமகவி யியற்றி யருளினார்.

மிஸ் மார்கரட் நோபிள்.

சகோதரி நிவேதிதா தேவி யென்னும் மாதரசி மிஸ் மார்கரட் நோபிள் எனும் இயற்பெயருடையவள். 'ஆத்ம நிவேதனஞ் செய்தவள்' எனும் பொருள்படும் நிவேதிதாவென்னுந் திருநாமம் அவளுக்கு சுவாமிகளா லளிக்கப்பெற்றது. இந்தியா முழுதும் அவ்வம்மையின் பெயரை அறியாதாரிலர் என்றே சொல்லலாம். அவள் முதலில் சீமையில் சுவாமிகள் நடத்திய வேதாந்த வகுப்புகளுக்குத் தவறாது சென்றுகொண்டிருந்தாள்; வேதாந்த விற்பன்னையாகிப் பல நூல்களை ஏற்கனவே வரைந்திருந்தாள்; அப்பால் அவர் சுவாமிகளைப் பின்றொடர்ந்து இந்தியாவுக்கு வந்து, சுவாமிகளுடன் ஒருமுறை சுற்றுப் பிரயாணஞ் செய்து முடித்தபின் கல்கத்தாவில் ஹிந்துக்களோடு கலந்து ஸ்ரீ சாரதாமணி தேவியாருடன் வசித்து வந்தாள். பின்பு, ஹிந்து ஸ்திரீ பாடசாலை யொன்றும் அவ்வம்மையாரால் நிறுவப்பெற்றது. சுவாமி

களுடைய நேர்பார்வையிலேயே அவர் ஹிந்துமத ஐதீகங்களை மாசறக் கற்றுத் தெளிந்தாள். ஐரோப்பியர்க்குரிய சுகங்கள் அனைத்தையும் அப்புனிதை வெறுத்து, பிரம்மசாரிணியாகக் காவிபூண்டு ஸ்ரீராம கிருஷ்ண மடத்தின் உரிமையுடன், அதி வைதீக ஹிந்து மாதாய்த் தன் வாழ்நாட்களைக் கழித்து வந்தாள். விரைவில் அவள் பிரசித்தியடைந்து, அறிஞரனைவராலும் புகழ்ப்பெற்று, நூல்கள் வரைவதிலும், பிரசங்கங்களியற்றுவதிலும் பிரக்யாதிபெற்று விளங்கினாள். அவள் இயற்றியுள்ள 'இந்திய வாழ்வின் இழை' (Web of Indian Life) 'என்னையனை யான் கண்டவாறு' (The Master as I saw him) 'ஹிந்து மதத் தாலாட்டுக் கதைகள்' (Cradle Tales of Hinduism) 'அன்னை காளி' (Kali the Mother) எனும் அரிய நூல்களே அவ்வம்மையின் பெருமைகளை விளக்கச் சாலும். இவளது விரைவாகவும், இனிமையாகவும் பேசுந் தன்மையை இங்கிலாந்திற் பலரும் இந்தியாவில் யாவரும் கேட்டு கௌரவித்து வந்தார்கள்.

அவ்வம்மை 'கோபுரி' (Oxford) சர்வகலாசாலையாரால் பாஷாஞானியென்று புகழப்பட்டு வந்தவள். அவளாற்றான் இந்தியாவில் ஸ்ரீராமகிருஷ்ண மடத்தின் மூலமாகப் பெண்களின் அறிவு வளர்ச்சிக்கான சில புதியமுறைகள் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றன. அவள் எழுதிய 'என்னையனை யான் கண்டவாறு' எனும் நூலைக் கோபுரி சர்வகலாசாலை வித்வான் டி. கே. சைனி (T. K. Cheyne) என்பார் தேவாலயப் புத்தக நிலையத்தின் முக்கிய கிரந்தங்களினிடையில் செயிண்ட் ஆகஸ்டைனின் பாப மன்னிப்புப் புத்தகத்தோடு வைத்துப் பூசிக்கலாமென்று சிபார்சு செய்தார். அவள் இந்தியாவுக்கு வந்தபின் சுவாமிகளின் கொள்கைகளை நிலைநிறுத்தி, அவர் ஏவற்படி பதினைந்தாண்டுகள் அல்லும் பகலும் சிறிதும் தளர்வடையாமல் சமயத் தொண்டியற்றி இறைவன் திருவடி நிழலெய்தினாள்.

சகோதரி கிறிஸ்டைன் என்பவர் மதத்தொண்டாற்றிய மற்றொரு மாதரசி. இவள் பெயர் சகோதரி நிவேதிதா தேவியின் பெயரையொட்டியே தொனிக்கும். பெண்ணலம் பேணிப் பெருந்தொண்டாற்றிய இப்பெதும்மை மிஸ் கிறிஸ்டினு கிரீன்ஸ்டிடெல் (Miss Christina Greenstidel) எனும் இயற்பெயர் கொண்டவள்; டிடிராயிட் மாகாணத்தில் கல்வி இலாகாவில் ஓர் கௌரவமான பதவியிலிருந்தவள்; அவ்வுத்தியோகத்தினின்றும் நீங்கி இந்தியாவில் பெண்ணலத்

சகோதரி கிறிஸ்டைன்

தொண்டு புரிய சுவாமிகள் விரும்பியபடி இசைந்து 1902-ம் ஆண்டின் முற்பகுதியில் அவள் இந்தியாவுக்கு வந்தாள். அவள் வந்த கொஞ்ச காலத்திற்குள் சுவாமிகள் மகா சமாதி யடைந்து விட்டாராஞலும் தனக்கு நேர்ந்த கஷ்டங்களையெல்லா மனுபவித்துக்கொண்டு பல்லாண்டுகள் உழைத்து வந்தாள். அவளுடைய பெரு முயற்சியிஞல் பெண்கல்வி நன்னிலை யெய்தியது. அதனை நிவேதிதா தேவியே தனது நூலில் பகிரங்கமாகப் பலவிடங்களில் ஒப்புக்கொண்டுள்ளாள். அக் கலாசாலை ஸ்தாபிக்கப்பட்டதும் சந்நியாசிகள், தமது அன்பர்களை— தத்தம் பெண்களை அனுப்புமாறு தூண்டி வந்தனர். சுவாமிகளின் மகாசமாதிக்குப் பிறகு அக்கலாசாலை வெகு தீவிரமாக உழைத்து வந்ததன் பயஞக, அதி வைதீகக் குடும்பத்தைச் சார்ந்தவர்களும் தத்தம் விவாகமான பெண்களையும், விதவைகளையும், கோஷாக்களையுங் கூட அனுப்பி வந்தனர். இக்கழக வாயிலாக ஹிந்துமத உணர்ச்சியுடன் தீவிர கர்மானுஷ்டானமும் ஸ்திரீகளிடம் நிலவுவதாயிற்று. அப்பால், அக்கலாசாலை இரண்டு கிளைகளாகப் பிரிக்கப்பட்டது. ஒன்றில் விதவைகட்கும் வயதான பெண்கட்கும், மற்ருென்றில் சிறுமிகளுக்குமாகக் கல்வி போதிக்கப்பட்டு வந்தது. சுவாமிகளுடைய மனேபீஷ்டப்படி இக்கலாசாலை அகிலபாரத சம்மத ஸ்தாபனமாகவே விளங்கிற்று.

ஜெ ஹெச். சேவியர் தம்பதிகள்.

சுவாமிகளின் பெருநோக்கங்கள் நிறைவேறுவதில் ஜே. ஹெச். சேவியர் துரை யவர்களும் அவர் மனைவியாரும் முக்கியஸ்தராவார்கள். அல்மோராவுக்கு அப்பால், இமயமலைப் பிராந்தத்தில் இவர்களது சிறந்த உதவியாற்ருன் ஓர் ஆச்சிரமமும் பிரசுராலயமும் ஸ்தாபிக்கப் பெற்றன. இத்தம்பதிகள் சுவாமிகளை இரண்டாவது இங்கிலாந்து யாத்திரையில் சந்தித்தவர்கள். சந்தித்ததும் அவர்கள் ஆச்சரியகரமாக ஆப்தர்களாயினர். அவர்கள் அதற்கு முன்பே ஒரு தடவை இந்தியாவுக்கு வந்து சுற்றிப் போனவர்கள். அவ்விருவரும் விருத்தர்கள்; சந்ததி யற்றவர்கள். சுவாமிகள் சேவியர் அம்மையை முதல் முதலாகச் சந்தித்ததும் 'அம்மா' வென்றழைத்து அன்பு பூண்டார். பின்னர், அவர்கள் இல்லத்திலேயே சிலகாலந்தங்கி, தர்க்கிப்பதும் உபதேசிப்பதுமாக விருந்து புத்திர வாஞ்சையுடன் நடத்தப்பட்டார். அவர்கள் சுவாமிகட்கு நெருக்கடியான சமயங்களில் தக்க உதவிபுரிந்து வந்தார்கள். 'லண்டனில்' சுவாமிகளின் வேதாந்த ஸ்தா

யன காரியம் ஒருவாறு பூர்த்தியானதும், பிரான்ஸ் முதலிய தேசங்களில் சுவாமிகள் சுற்றுப்பிரயாணஞ் செய்தபொழுது இவர்களும் கூடவே சென்றார்கள். அப்பால் சுவாமிகள் இந்தியாவுக்குத் திரும்பியபொழுதும் இவர்கள் பின்றொடர்ந்து வந்தார்கள். சுவிட்சர்லந்துக்குப் போன காலத்தில் சுவாமிகள், இமயப்பிராந்தத்தில் ஓர் ஆஸ்ரமத்தை ஏற்படுத்த வேண்டுமென்று அவர்களிடம் கூறியபொழுது, அவர்கள் உடனே இசைந்து, அவருடன் இந்தியாவுக்குவந்து அவருடைய எண்ணத்தைப் பூர்த்திசெய்து வைத்தனர். அவர்கள் தம் செல்வமனைத்தையும் சுவாமிகளுடைய மதசேவைக்கென அற்பணஞ் செய்ததுமன்றி, சந்நியாசமேற்று இந்தியாவிலேயே தங்கிவிட்டார்கள். 'பிரபுத்த பாரதா' வென்னுஞ் சஞ்சிகையும் அவர்களுடைய பொருளுதவியிலே ஆரம்பிக்கப்பட்டது. அவ்வாஸ்ரம சிஷ்யர்க ளனைவரும் சேவியர் துரையை 'பிதாஜி' என்றழைத்துப் போற்றி வந்தார்கள். அவர் மரிக்குமுன் அந்த ஆச்சிரமம் நன்னிலையை யெய்தி சிறந்து விளங்கிற்று. அத் துரையவர்களின் தேகம் அவ்வாச்சிரம எல்லையிலேயே தகனஞ் செய்யப்பெற்றது. அப்பால் அவரது மனைவியாரின் உதவியால் 'பிரபுத்த பாரதா' மகத்தான மதசேவை புரிந்து வந்தது. சுவாமிகளின் காருண்ய பாத்திரரும், மகாமேதாவியுமான சொரூபானந்தா அப்பத்திரிகையை நன்கு நடத்தி வந்தார். அவர் 1906-ல் சமாதி யடைந்தபின் விரஜானந்தா அப்பதவியை யடைந்தார். அவ்வாஸ்ரமத்தில் பாரத தேசத்தின் பல பாகங்களி லிருந்தும் சிஷ்ய கோடிகள் ஆத்ம சாந்தியை உத்தேசித்துக் கொஞ்சகாலத்தைக் கழிக்க வந்து தங்குவதுண்டு. பெரும்பாலும் மேல் நாட்டு சிஷ்யர்களே அவ்வாச்சிரமத்தைத் தமது வாஸஸ்தலமாகக் கொள்வார்கள். சுவாமிகள் மேல் நாட்டி லிருந்து திரும்பியதும் அவரது அடியார்களாய் இந்தியாவுக்கு வந்தவர்கள் இன்னும் பலர். ஒலிபுல் (Oli Bull) என்னும் பெண்ணரசி அவர்களுள் முக்கியஸ்தை. அவள் கல்வியிலும் செல்வத்திலும் உயர்ந்தவள். அமரிக்கப் பிரபல பிடில் வாத்திய வித்வானின் மனைவி யென்ற கௌரவம் வாய்ந்தவள்; பூததயை பூண்டவள்; சுவாமிகள் தமது அமரிக்கா வேலையைத் தொடங்கியது முதல் அவ்வம்மை சுவாமிகளின் சிஷ்யையாகிப் பொருளாலும் உழைப்பாலும் உதவிபுரிந்து வந்தாள்; பாஸ்டன் நகருக்கருகேயுள்ள 'கேம்பிரிட்ஜ்' என்னும் தனது சொந்த ஊரில் இவ்வம்மை சுவாமிகளை அடிக்கடி விருந்தளித்து உப

ஒலி புல் அம்மையார்.

சரிப்பது வழக்கம் அவளுக்கு பாஷா ஞான மிகுதியுமுண்டு. அவளுடைய இல்லத்தில் எப்பொழுதும் வித்துவான்கள்கூடி ஆராய்ச்சி செய்துகொண்டே யிருப்பார்கள். அவளுடைய ஆதரவு ஏற்பட்டமையால் சுவாமிகளுடைய கௌரவம் விசேஷ விருத்தி யடைந்தது. பேலூர் ஆஸ்ரமத்தை ஸ்தாபிக்கக் காரணமாயிருந்த இவள், சுவாமிகள் இந்தியாவுக்கு வந்தபோது பின்றொடர்ந்து அவருடன் அல்மோராவுக்கும் காஷ்மீரத்துக்கும் யாத்திரை செய்தாள். அவளுடைய தூண்டுதலாலும் நன்கொடையாலும் நிவேதிதாதேவி ஆரம்பித்த பெண்பாடசாலை மிகவும் விமரிசையாக நடைபெற்று வந்தது. நிவேதிதாதேவியும் ஓலிபுல் அம்மையும் மரணபரியந்தம் அன்புபூண்டு இடைவிடாது ஆஸ்ரமத்தின் நன்மையைக் கோரிப் பாடுபட்டு வந்தனர்.

ஸ்ரீமத் விவேகானந்த சுவாமிகளைப்பற்றி நினைக்குந்தோறும் மிஸ் ஹென்றியதா முல்லரின் பெயரை நாம் கருதாதிருக்க முடியாது.

மிஸ். ஹென்றியதா முல்லர்.

ஸ்ரீராம கிருஷ்ண மடத்தின் தலைநிலையமான பேலூர் ஆஸ்ரமத்தை ஸ்தாபிக்கவும், சுவாமிகளின் அரிய நூல்கள் வெளிவரவும் இவ்வம்மை இலட்சக் கணக்காகப் பொருளுதவி புரிந்தாள். சுவாமிகளின் அமரிக்கா நாட்டு முதல் யாத்திரையிலேயே இவள் அவரிடம் அன்பு பூண்டவள்; இந்தியாவுக்கு வந்ததும் சுவாமிகளின் ஆங்கில நூல்களை அச்சியற்றி வெளியிடுவதில் சேவியர் தம்பதி, இ. டி. ஸ்டர்டி துரை யவர்கள் முதலியோருடன் கூடி உழைத்து வந்தாள். இம்மாது பெரிய செல்வந்தையா யிருந்தபோதிலும் ஆடம்பரத்தை வெறுத்து விளங்கினாள்; செம்மனச் செல்வியாய், சிறந்த சமயத்தொண்டிற்கெனத் தனது வாழ்வை அர்ப்பணஞ் செய்தாள்.

இ. டி. ஸ்டர்டி துரையவர்கள் சுவாமிகளின் பழைய அன்பர். இவர்தான் சுவாமிகளை முதல்முதல் இங்கிலாந்துக்கு வரும்படி கடிதமெழுதி, கடற்கரையினின்றும் விமரிசையாக வரவேற்றுத் தமது

இ. டி. ஸ்டர்டி துரை யவர்கள்.

கிருகத்தையே வேதாந்த சபையாக்கி விளங்கியவர். சுவாமிகளை அவர் சந்திக்குமுன் யோகானுபவ ஞான சங்கத்தின் அங்கத்தினராக, இந்தியாவெங்கும் சுற்றி, அல்மோராவுக் கருகிலுள்ள குன்றுகளில் தனியே சஞ்சரித்து யோகாப்பியாசஞ் செய்துகொண் டிருந்தார். சுவாமிகளைக் கண்டபின் அவர் அத்யந்த சிஷ்யராகி, ஸ்ரீராம கிருஷ்ண மடத்தின் முக்கிய அங்கத்தினராய்ச் சேர்ந்து ஓய்வின்றி உழைத்து வந்

தார். இவருடைய உதவியைக் கொண்டே சுவாமிகள் தமது இரண்டாவது இங்கிலாந்து விஜயத்தில் நாரத சூத்திரங்களைத் தெளிவுரையுடன் மொழி பெயர்த்து வெளியிட்டார். லண்டனில் சுவாமிகள் செய்தருளிய பக்தி ஞான கர்மயோக உபந்நியாசங்களைச் சஞ்சிகையாக இவரே வெளியிட்டு வந்தார். லண்டனில் சுவாமிகளின் நோக்கம் ஈடேறப் பொருளுதவி புரிந்தும், பல பிரமுகர்களை அறிமுகப்படுத்தியும், வேதாந்த பாடசாலையை ஸ்தாபித்தும் இவ்வன்பர் செய்த உதவிகள் எண்ணில.

சுவாமிகளுடன் நெருங்கிய நட்புரிமை பூண்டவர்களுள் மிஸ். ஜோஸபைன் மெக்லியோட் என்ற மாதரசி குறிப்பிடத் தகுந்தவள். அப்பெண்ணரசி, சுவாமிகள் இங்கிலாந்தில் வசித்த காலங்களில், அவருக்குப் பணிவிடை செய்து, அவருக்கு அதிக சிரமங்கொடாமல் பல வேலைகளைத் தானே பார்த்து வந்தாள். சீமையில் சுவாமிகளிடம் அன்பு பூண்ட பலரும் அவரை அடிக்கடி சிக்கலான கேள்விகளைக் கேட்டு வந்தார்கள். ஆனால் இவள்மட்டும் அவர் வாய்மொழிகளைப் போற்றிவந்தாள். சுவாமிகள் அவதார புருஷரென்பதை அவள் உண்மையாகக் கண்டுகொண்டாள். அது முதல் தனது ஆயுளை அவருக்கு தொண்டு செய்வதற்கென அற்பணஞ் செய்துவிட்டாள். ஏற்கெனவே அம்மாது பகவத்கீதையைக் கற்று அதன் உபதேசப்படி நடந்துவந்தவள். அவள் ஓலிபுல் சாரதானந்தா முதலியவர்களுடனும் ஏனைய மேல்நாட்டுச் சிஷ்யர்களுடனும் இந்தியாவுக்கு வந்து பேலூர் ஆச்சிரமத்திற்கருகாமையிற் சில ஆண்டுகள் வசித்தாள். அப்பால் பிரஞ்சு பிரபல உபந்நியாசகரான பிரி ஹயாசின்தி (Pere Hyacinthe) முதலியோர் உடன்வர, சுவாமிகளோடு வியன்னா, கான்ஸ்டாண்டிநோபிள் முதலான நகரங்கட்கு யாத்திரை செய்து, பிறகு எகிப்து தேசத்திற்கு யாத்திரைபோய் நீல நதியின் பிரதேசங்களில் சுற்றினார். பின்னொரு முறை அவ்வம்மை இந்தியாவுக்கு வந்தார். அதுதான் அவர் சுவாமிகளைச் சந்தித்த கடைசித் தடவை. பிரான்ஸிஸ் லெக்கேட் தம்பதிகள் முதலியவர்களும் சுவாமிகளின் ஆப்த சிநேகிதர்களாகக் கருதப்பட்டவர்கள்.

மிஸ். ஜோஸபைன் மெக்லியோட்

இன்னும், சுவாமிகளின் அன்பராகிய ஐரோப்பியர்கள் பலர். முக்கியமாக டிடிராயிட் பன்கி (Funke) அம்மையும், சிகாகோ ஹேல்ஸ் தம்பதிகளும் அவர்களுடைய பெண்களும் அவரிடம் மிகுந்த பக்தி

யுடையவர்கள். இன்னும், லண்டன், பாரிஸ், கலிபோர்னியா, நியூ யார்க் முதலான பாகங்களிலிருந்த பல்லாயிரவர் அவரிடம் பக்தி செலுத்தினர். பல்லோர் அவருடைய திருவுருவப் படத்தை யாராதித்து அவர் மெய்யுபதேசங்களைப் போற்றி வருகிறார்கள்.

நிற்க, சுவாமிகள் இங்கிலாந்தை யடைந்ததும் சுவாமி சாரதானந்தா ஏற்கனவே அங்கு வந்து இ. டி. ஸ்டர்டி துரையவர்களின் விருந்தினரா யிருக்கக்கண்டார். அநேக ஆண்டுகளாக சுவாமிகள் தமதன்ப ரெவரையும் சந்திக்கவில்லை யாகையால் சாரதானந்தரைக் கண்டதும் அவரை மார்புறத் தழுவிக்கொள்ள, பரஸ்பரம் இருவரும் அன்பு மேலீட்டால் ஆனந்தபாஷ்பஞ் சொரிந்தனர். சாரதானந்தரும் இந்தியாவில் இடையில் நடந்தவற்றையெல்லாம் வெகு ஆவலோடு கூறி முடித்தார்; ஏனைய சிஷ்யகோடிகளின் க்ஷேமத்தைப்பற்றியும், அலம்பசாரிலுள்ள ஆஸ்ரமத்தைப் பற்றியும் விஸ்தாரமாகக் கூறினார்.

இங்கிலாந்தில் சுவாமிகளின் வல்லமையால் ஏற்பட்டிருந்த வேதாந்த சபைகளைக் காண சாரதானந்தருக்கு ஆச்சரியமாகவே யிருந்தது. இருவரும் செயின்ட் ஜார்ஜ் சாலையிலுள்ள மிஸ் முல்லர், இ. டி. ஸ்டர்டி துரை ஆகிய இருவர் கிருகத்திலும் வசித்துவந்தார்கள். சுவாமிகள் அப்பொழுது தமது காரியத்திலேயே குறியுடையவராயிருந்தார். அவரை முதல் விஜயத்திலேயே அறிந்திருந்த பலரும் அவரைச் சூழ்ந்து கொண்டு உபதேச மடையலானார்கள். பிரமுகர் பலர் நகரப் பொது ஜன மண்டபங்களில் சுவாமிகளை பிரசங்கிக்கச் செய்தனர். இங்கிலாந்தின் வெவ்வேறு பாகங்களிலிருந்து வித்யார்த்திகளும், வித்வான்களும் புதிது புதிதாக சுவாமிகளை வந்து தரிசித்து உபதேசமடைந்து அவருக்குத் தொண்டு செய்ய முற்பட்டனர். 1896-ம் வருடம் மே மாத ஆரம்பத்தில் சுவாமிகள் வேதாந்த பாடஞ் சொல்ல வாரம்பித்து ஞானயோக உபந்நியாசங்கள் புரிந்து வந்தார். அருள் மாரியென அவர் திருவாயினின்றும் வெளி வந்த சொற்களைச் சிறிதும் வழுவாது அன்பர்கள் அல்லும் பகலுங் கேட்டுப் பரவசமாய்ப் பக்தி பூண்டனர். 'மே' மாதக் கடைசியில் ஞாயிறு தொறும் பிகாடில்லியில், சுவாமிகள் தொடர்ச்சியாக 'சமயத்தின் அவசியம்' 'உலக சம்மதமான உந்நத மதம்' 'உண்மையும் ஒளியும் பொருந்திய மனிதன்' என்ற விஷயங்களைப் பற்றிப் பிரசங்கித்து வந்தார். இவற்றைக் கேட்ட அனைவரும் அவரை அவதார புருஷரென்

இங்கிலாந்துக்கு சுவாமி சாரதானந்தரின் வருகை

றும், தீர்க்கதரிசியென்றும், சித்தரென்றும் கொண்டாடினார்கள். அப்பால், இளவரசர் மண்டபத்தில் சில சொற்பொழிவுகள் நிகழ்ந்தன. அவை ஜூன் மாதம் முதல் ஜூலை யிறுதிவரை நடைபெற்றன. பக்தி, யோகம், துறவு, சித்தி ஆகிய விஷயங்கள் ஆங்கு பிரசங்கிக்கப்பெற்றன. இதுவன்றி ஒவ்வொரு வாரத்திலும் ஐந்து வேதாந்த வகுப்புகள் நடைபெற்றன. பின்னும், சுக்ரவாரந்தோறும் மாலையில் 'வினா-விடை' வகுப்பொன்றும் நடந்துவந்தது. முதலில் நடந்த தொடர்ச்சியான பிரசங்கங்களில் அவர் ஆரிய சரித்திரத்தையும், அவர்கள் சமய, ஞான சார முன்னேற்றம் சமயக்கோட்பாடுகள் முதலியவற்றையும், ஹிந்து விக்ஞான நூலாதாரங்களுடன் விளக்கினார்; ஞான யோக சொற்பெருக்குகள் நடைபெறும்போது ராஜயோகத்தைப் பற்றியும் பேசி வந்தார். இவற்றையெல்லாம் அன்பர் குட்வின் துரையவர்களே ஒலியெழுத் தாண்டுவந்தார். இதனிடையே பல பத்திரிகாசிரியர்களும் சீமான்களும், வித்வான்களும் அவரை வந்து கண்டார்கள்.

பல 'கிளப்'களிலும், பொது ஸ்தலங்களிலும் சுவாமிகள் அவகாசமேற்பட்ட பொழுது உபந்நியசித்து வந்தார்; அனிபெசண்ட் அம்மையின் வேண்டுகோட் கிணங்கி 'செயிண்ட் ஜான்ஸ் உட் அவன்யூ' ரோட்டிலுள்ள ஓர் கழகத்தில் 'பக்தி' யென்பது பொருளாக பிரசங்கித்தார்; மார்டின் துரைசாணியார் கிருகத்தில் 'ஹிந்துக்களின் ஆன்ம தத்துவம்' என்று ஓர் விரிவுரை நிகழ்த்தினார். அதன் பின் 'நாட்டிங்ஹில் கேட்' மிஸ் ஹூட்டன் வீட்டிலும் ஓர் பிரசங்கஞ் செய்தார்; விம்பிள்டனில் ஓர் பெரிய கட்டிடத்தில் மற்றொரு சமயம் பேசினார்; 'சிசேம் கிளப்' ஆதரவில் 'கல்வி' யென்பது பொருளாக ஓர் பிரசங்கஞ்செய்தார். 'கானன் வில்பர்போர்ஸ்' வாஸஸ்தானத்தில் விசேஷமாக கௌரவித்து சுவாமிகளை உபசரித்தபொழுது ஆங்கோர் பிரசங்கமுஞ் செய்தார்.

இங்கிலாந்தில் சுவாமிகளின் பிரசங்கங்கள்.

சுவாமிகள், தாம் பேசும்பொழுதெல்லாம் தமது குருதேவரின் மகிமைகளை எடுத்தோதி 'அவர் திருவடி நிழலில் வீற்றிருந்த சிஷ்யர்களுக்குத் தலைவர்' என்ற உரிமையோடு துதிபாடிவந்தார். "பூவுடன் கூடிய நாரும் மணம் பெற்றதுபோல் ஸ்ரீராமகிருஷ்ணருடைய சகவாஸத்தால் எனக்குச் சிறிது மதசேவை செய்யும் பாக்கியம் கிடைத்தது. என்னுடைய பிரசங்கங்கள் உயர்வானதென்று நீங்கள் கருதுவீர்களானால் அதற்கெல்லாம் பாத்யஸ்தர் எனது குருநாதரே" என்று

அவர் பேசி வருவாரானுர். உண்மையான சிஷ்யன்தானே சதாசாரி யனுக வாமுடியும்? இக்காலங்களில் லண்டன் இந்திய மாணவர்கள் சுவாமிகளைக் கண்டு பணிந்து அவரது புத்திமதிப்படி நடந்து வந்தனர். அவர்கட்கு சுவாமிகள் பல துறைகளிலும் இன்றியமையாத பல உத விகள் செய்து வந்தார். இதற்கென 18-7-1896-ல் லண்டன் இந்து சங்கத்தின் ஆதரவில், இங்கிலாந்து அயர்லந்து மாணவர் மகா நாடொன்று நடைபெற்றது. அதற்கு சுவாமிகளே தலைமை வகித் தார். "ஹிந்துக்களின் குறைகள்" என்ற விஷயம் அன்று ஆலோ சனைக் கெடுத்துக் கொள்ளப்பட்டது. இதற்கு முந்திய விஜயத்தில் அவர், தாம் செய்த காரியத்தைவிட இப்பொழுது பல முக்கிய காரி யங்களைச் செய்ய ஹேது வுண்டாயிற்று. பல புத்தகங்களும் அச்சா கிப் பிரசுரமாயின. சுவாமிகள் 'இங்கிலாந்துக்கு இரண்டாம் விஜ யம்' செய்ததினுலேயே இந்திய சம்பந்தமான மகத்தான காரியங்கள் அவருக்கு எளிதிற் கைகூடின.

33-ம் அத்தியாயம்.

இங்கிலாந்தில் ஹிந்துமத சேவை.

ஒத்துக்களினின்றும் உயர்ந்த மேற்கோள்களால் ஹிந்து சமய அன்பெனும் பயிரை ஆங்கில நாட்டில் விவேகா னந்த சுவாமிகள் வளர்த்து வரும் நாட்களில், வித்வான் மோக்ஷமூலர் அவரைத் தமது வாஸஸ்தலத்திற்கு அழைத்தார். அவர் விடுத்த வர வேற்புக் கடிதத்திற் கிணங்கி மேமீ 28வ சுவாமிகள் அவரை கோபுரி யில் (Oxford) சந்தித்த சம்பவம் இங்கு குறிப்பிடத் தக்கது. அவர் கள் சந்திப்பைப்பற்றிச் சுவாமிகளே ஜூன்மாதம் 6வ 'பிரம்மவாதி னி'க்கு வரைந்ததின் சாராம்சமாவது:

"ஆஹா! வித்வான் மோக்ஷமூலர் என்ன அற்புத புருஷர்! சில தினங்களுக்கு முன் நான் அவரைக் காணச் சென்றிருந்தேன். அவரை நான் தரிசிக்கச் சென்றிருந்தே னென்றே சொல்லவேண்டும். ஏனெனில், எவர் ஸ்ரீராமகிருஷ்ண ரிடத்தில் பக்தியுள்ளவரோ, அவர் எச்சாதி, எம்மதம், எக்கொள்கை, எத்தேசத்தவரா யிருந்தபோதிலும் அவரைச் சென்று காண்பது ஓர் புண்ணிய யாத்திரையென்றே நான் கருதுகிறேன். அவர் என்னைக் கண்டவுடனே, காலஞ்சென்ற

பிரம்மசமாஜத் தலைவரான ஸ்ரீகேசப் சந்திரசேனரின் வாழ்வில் திடீ ரென்று ஏற்பட்ட சில மாறுதல்களுக்குக் காரணமா யிருந்த சக்தியைக் குறித்துக் கேட்க வாரம்பித்தார். கேசப் சந்திரர் ஸ்ரீராமகிருஷ்ணரின் மகிமையால் மாறுதலடைந்தது முதல், மோக்ஷமூலரும் ஸ்ரீராமகிருஷ்ணருடைய சரிதையையும், அரிய உபதேசங்களையும் ஆழ்ந்தாராய்ந்து அவற்றின் உயர்வைப் போற்றிக் கொண்டாடி வருவாராயினர். "பண்டிதரே! ஸ்ரீராம கிருஷ்ணரை இன்று பல்லாயிரம்பேர் போற்றி வருகிறார்கள்" என்று நான் சொன்னேன். அதற்கு அவர் "அப்படிப்பட்ட மகானுபாவர்களைப் பூஜியாமல் வேறு யாரைத்தான் பூஜிப்பது" என்று விடையளித்தார். கருணையே உருக்கொண்டதென விளங்கிய அவர் என்னையும் ஸ்டார்டி துரையவர்களையும் சிற்றுண்டி யருந்தத் தம்முடனழைத்தார்.

வித்வான் மோக்ஷமூலரைப் பற்றிய கடிதம்.

அப்பால், கோபுரி சர்வ கலாசாலையிலுள்ள பற்பல கலாசாலைகளையும், 'போட்லியன்' புத்தகசாலையையும் எங்களுக்குக் காட்டினர்; நான் திரும்பி வரும்போது 'ரயில்வே ஸ்டேஷன்' வரையில் வழியனுப்ப வந்தார்; என்னால் தங்களுக்கு சிரம மேற்பட்டதென்று நான் உபசாரமாகப் பேசியதற்கு அவர் "ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸருடைய சிஷ்யர்களின் தரிசனம் பிரதிதினமும் லபிக்குமோ?" என்றார். ஆஹா! என்ன அன்பு! விநயம்! அடக்கம்! இந்நிகழ்ச்சி எனக்கோர் புதிய உணர்ச்சியைத் தந்தது. மஹரிஷிகளின் ஆச்சிரமத்தைப்போன்ற அந்தச் சிறிய மாளிகையையும், அதைச் சுற்றிலுமுள்ள அழகிய உத்யான வனத்தையும், அதில் ரஜிதம்போல் வெண்ணிற ஒளி வீசும் அந்த ரிஷியையும், சாந்தமும் கருணையும் நிறைந்த அவரது முகமண்டலத்தையும் எழுபது பிராயமாகியும் குழந்தையின் நெற்றியைப்போல் பளபளப்பாக ஒளிரும் அவருடைய நெற்றிப்பாகத்தையும், அதில் எங்கோ மறைந்து நிற்கும் ஆழ்ந்த ஞானகரத்தை வெளியிடுவது போலும் மௌனப் பிரசங்கம் செய்வதுபோன்று மிலங்கும் ஒவ்வொரு விசேஷ ரேகையையும், அவர் எவ்வளவோ சிரமப்பட்டு அதியற்புதமான பல புதிய விஷயங்களை அவனிக் குணர்த்தி, அவற்றைப் பொறாமையால் பழித்தும் பகைத்தும் எதிர்த்தும் வந்த துர்வாதிகளின் செருக்கை அடக்கி, கடைசியாக நமது பிராசீன பாரதநாட்டு மகரிஷிகளின் சித்தாந்தங்களை மேல்நாட்டில் நிலைநிறுத்த பட்ட அரும்பாடுகளில் முதலிலிருந்து இதுவரை அவருக்கு ஏற்ற வாழ்க்கைத் துணை

யாய்ப் பொருந்திய அவ்வுத்தமியையும்—அவ்வளவேன்! அந்த மரங்களையும் நறுமண மலர்களையும் அந்த அமைதியுடன் கூடிய மாசற்ற விசும்பையும் கண்ணுற்ற காலையில், பண்டைக் காலத்தில் நமது பாரத நாட்டில் விளங்கிய பிரம்மரிஷிகளும், ராஜரிஷிகளும், வானப்பிரஸ்தர்களும், தபோபலமுடைய அருந்ததிகளும், வசிஷ்டர் முதலாயினோரும் வாழ்ந்த புண்யதினங்கள்தான் இப்பொழுது எனக்கு இவ்வரிய காட்சியை யளித்தனவோ வென்று எண்ணினேன்.

நான் அங்கே கண்டது பாஷாதத்துவ பண்டிதரை யல்ல; வித்வானையுமன்று. பிரம்மைக்யத்தை யனுபவித்துவரும் ஆன்மாவையும், அகிலாத்மாவுடன் ஏக தத்துவமாய்ச் சேரப் பிரதிதினமும் விசாலமாகிவரும் ஆன்மாவையே யான் கண்டேன். சாரமில்லா வீண் விஷயங்களாகும் பாலைவனத்தில் பிறர் அலைந்துகொண் டிருக்கும் இடத்திலே, அவர் சார தத்துவமான மதுர நீர் பொருந்திய கிணற்றை வெட்டியவர்போல் விளங்குகிருர்.

ஆத்மாநமேவ விஜாநத

அந்யா வாசோ விமுஞ்சத

என முறையிட்டு நிற்கும் உபநிஷத்துக்களின் மதுர நாதத்தை மெய்யாகக் கண்டுள்ள அவருடைய ஹிருதய நாடிகள் அதன் வழியே இயங்கிக்கொண் டிருக்கின்றன.

அகிலத்தையே பிரமிக்கச் செய்யும் கல்வியும், சாஸ்திர ஞானமும் அவருக் கிருந்தபொழுதிலும், அந்தக் கல்வியும் ஞானமும் அவரைப் படிப்படியாக ஆத்மானுபவத்தில் உயர்ந்து பரமோத்தமமான நிலையை யடைவிப்பதற்கே பயன்படுவதா யிலங்குகின்றன. அவருக்குள்ள அபார வித்தையானது பரவித்தையை அளிக்க அவருக்கு உதவிபுரிவதா யிருக்கின்றது. இதுதான் உண்மையான கல்வி"

வித்யா ததாதி விநயம்

'வித்தையளிக்கும் விநயம்' கல்வியானது உத்தம பதவியை உணர்த்தாதாயின் அதனற் பயனென்?

இந்தியாவினிடத்தில் அவருக்குள்ள அன்பை நானென்னவென்று கூறுவேன்! அவ்வன்பின் நூற்றிலொருபங்கேனும் எனக்கு எனது தாய் நாட்டினிடத்தில் ஏற்படாதாவென்று நான் ஆசைப்படுகிறேன். அதிக சுறுசுறுப்புடன் கூடிய, விசேஷமான அவருடைய

மன்றோ விருத்தியானது, சென்ற ஐம்பதாண்டுகளாய் ஹிந்துக்களின் கல்வியாகிய உலகிலே பரவி, முடிவில்லாத காடுபோன்ற வடமொழி இலக்கியங்களின் அதி நுட்பமான கருத்துகளை யெல்லாம், அதிக அன்புடனும், அக்கரையோடும் ஆராய்ச்சி செய்து, அவையாவும் தனக்குள் புக, அவற்றின் தன்மையே தன்மயமாகும் வரையில் அவ்விஷயத்தில் சிரமப்பட்டிருக்கிறது.

மோக்ஷமூலர் வேதாந்திகளுக்கெல்லாம் வேதாந்தியா யிருக்கிறார். உலகத்திலுள்ள சமய வித்தியாசங்க ளெல்லாவற்றையும், பேரொளியுடன் விளங்கச்செய்யும், பெரும்பிரகாசமெதுவோ, சகல மதங்களுள்ளும் புகுந்து அவற்றின் ஜீவ தாதுவேயாகி விளங்கும் மூலாதார தத்துவமெதுவோ, அத்தகைய பேரொளியும் மூலாதார தத்துவமுமாகிய வேதாந்தத்தை அவர் குறைபாடின்றி உணர்ந்து அதன் மதுரகீத நாதத்தின் இன்பத்திலே ஆழ்ந்திருக்கிறார். இனி, ஸ்ரீராம கிருஷ்ணரின் பெருமை யென்னவெனில், அவரே மேற் குறிப்பிட்ட பரமோத்தமமான பிராசீன தத்துவத்தின் பிரத்யக்ஷ நிரூபணர்; அவரே பிராசீன பாரத வர்ஷத்தின் பெருமையை உணர்த்திய பேருளாளர். பாரதவர்ஷத்தின் எதிர்கால சூர்யன்; ஜகத்திலுள்ள சகலருக்கும் வழிகாட்டும் பிரசன்னமூர்த்தியும் அவரே யாவர். 'இரத்தினங்களின் குணங்களும் விலைமதிப்பும் இரத்தின வியாபாரிகளுக்கன்றோ தெரியும்' என்னும் பழமொழிப்படி, ஹிந்துமத தத்துவ விசாரமென்னும் வானத்திற்றோன்றும் ஒவ்வொரு நட்சத்திரத்தையும், இந்தியர்களும் அவற்றின் மகிமையை யறியு முன்பே, இந்த மேல்நாட்டு மகான் கண்டாராய்ந்து போற்றி வருவதும் ஓர் ஆச்சரியமா?

"தாங்கள் எப்பொழுது இந்தியாவுக்கு வருகிறீர்கள்? தம் முன்னோர்களின் ஞானத்தை உண்மையாய் விளக்குவதற்கு எவ்வளவோ அரும்பாடுகள்பட்ட தங்களை இந்தியர்க ளெல்லாரும் மனமகிழ்ந்து எதிர் கொண்டு வரவேற் றுபசரிப்பார்கள்" என்று நான் கேட்டதற்கு அப்பெரியார், முகத்தில் காந்திவீச நிமிர்ந்து, கண்களில் ஆனந்தபாஷ்பம் பெருக, தலையை மெதுவாயசைத்து பின்வருமாறு மறுமொழி பகர்ந்தார்: "நான் இந்தியாவுக்கு வந்தால் திரும்பி வரமாட்டேன். என்னை நீங்கள் அங்கேயே தகனஞ்செய்யவேண்டியதுதான்" என்றார். பின்னும் அவரைக் கேள்விகள் கேட்டால், அது மனிதன் அந்தரங்கமான விஷயங்களைப் பாதுகாத்து வைத்திருக்கும் இடத்தில்

அவசியமின்றிப் புகுந்து நிற்பந்தப்படுத்துவதுபோல் தோன்றிற்று. 'ஹிருதயத்தில் ஸ்திரமாய்ப் பதிந்துள்ள முற்பிறவியிலிருந்த நட்பையும், மனிதன் தன் வல்லமையால் ஞாபகத்துக்குக் கொண்டு வருகிறான்' என்று அந்த கவி * கூறியதுபோல் அவருக்கு முன் ஜென்ம உணர்ச்சி வந்துற்றதுபோலும்.

அவருடைய வாழ்க்கை உலகத்துக்கே ஒரு பாக்கியமா யிருக்கிறது. அவர் இன்னும் பல்லாண்டுகள் வாழ்ந்து உலகிற்கு உதவி புரிந்து முடிவில் உத்தம பதவியை யடையவேண்டு மென்பதே எனது கோரிக்கை"

மோக்ஷமூலர் கல்கத்தா சென்னை முதலிய இடங்களிலுள்ள அன்பர்களிட மிருந்து ஸ்ரீராமகிருஷ்ணரைப் பற்றிக் கிடைத்த விஷயங்களைத் திரட்டி 'பத்தொன்பதாம் நூற்றாண்டு' என்னும் பத்திரிகையில் 'ஓர் உண்மையான மகாத்மா' என்ற தலையங்கமிட்டு வரைந்த வியாசத்திற்குப் பின் இக்கடிதம் சுவாமிகளால் வரையப்பெற்றது. மோக்ஷமூலர், சுவாமிகளைச் சந்தித்தபொழுது தமக்குத் தக்க ஆதாரமான விஷயங்கள் கிடைக்குமானால் ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸரின் சரித்திரத்தைத் தாமே ஓர் நூலாக வரைய ஆவல்கொண்டுள்ளதாகக் கூற, சுவாமிகளும் அவர் பேராவலைக் கண்டு இசைந்து, சுவாமி சாரதானந்தரைக் கொண்டு தக்க ஏற்பாடுகள் செய்தார். அங்ஙனமே பின்னர், 'ஸ்ரீராமகிருஷ்ணரின் சரித்திரமும் உபதேசங்களும்' என்ற தலையங்கத்துடன் அப் புத்தகம் மோக்ஷமூலரால் வரையப்பெற்றது. அது முதல் மோக்ஷமூலரும் சுவாமிகளும் சிறந்த நண்பர்களாயினர்.

லண்டன்மா நகரில் சுவாமிகள் தங்கியிருந்த பொழுது அவர் தமது யோக சாதனங்களை மென்மேலும் இடைவிடாது செய்தவண்ணம் மகா தேஜசுடன் பிரம்மானுபூதியை அனுபவித்தவா றிருந்தார்.

லண்டனில் விசேஷ ஆதரவு.

அவரது உபந்நியாசங்களை மிகவும் புகழ்ந்து 'லண்டன் டெய்லி கிரானிகிள்' 'தி கண்டிரி ஹவுஸ்' 'இந்தியன் மிர்றர்' முதலிய பிரபல பத்திரிகைகள் வரைந்தன. அவருடைய மகா வித்துவத்துவம் பொலிந்த பிரசங்கங்களைக் கேட்க வேண்டுமென்ற ஆவலுடன் அந்நாட்டின் நாலுபக்கங்களிலிருந்தும் பிரபல ஞானிகள் பலரும் வந்து திரண்டார்கள். சிறிதும் அவகாசமின்றி அவரிடம் தனியாகவும், சிலர்

* காளி தாஸர்.

கூடியும் உபதேசம் பெற்ற வண்ணமிருந்தனர். ஆங்கில நாடு முழு வதும் சுவாமிகள் திருநாமம் பரவி, ஒவ்வொருவர் நாவிலும் நில விற்று. இங்கிலாந்து முழுவதும் அவர் வரவால் விசேஷ குதூகலமு மேற்பட்டிருந்தது. மாமேதாவிகளான கிறிஸ்தவ சமயக் குருக்க ளெல்லாம் அவருடைய மகிமையிலீடுபட்டு, தத்தம் தேவாலயங் களில் அவருக்குத் துதி பாடினர். மகா கீர்த்திமான்களும் சமய தத் துவ நிபுணர்களும் அவரை இடைவிடாமல் உபசரித்துக் கொண்டிருந் தார்கள் அவர் உபதேசங்களின் உள்மனக் கிளர்ச்சி—வேகம் இன் னும் இங்கிலாந்து முழுவதும் சமய சமரஸத்தை நிலைநாட்டப் பாடு பட்டுக் கொண்டிருக்கிறதென்னின் அவர் செய்தருளிய பிரசங்கங் களின் பெருமையை நாமெவ்வாறு விஸ்தரிக்க முடியும்? சுவாமிக ளுடைய முன் யாத்திரையில் அவருடைய நண்பர்களாயினவர்களெல் லாம் இப்பொழுது பக்தர்களாயினர். சகோதரி நிவேதிதா தேவி, குட்வின் துரை, சேவியர் தம்பதிகள் முதலியோர் பலரும் அவரையே சரணமென்று, மனத்துறவு பூண்டு மாசிலாமணிகளாய் விளங்கினர்.

சுவாமிகள் இங்கிலாந்தில் செய்தருளிய பிரசங்கங்களையும், உப தேசங்களையும் எடுத்தெழுத வாரம்பித்தால் அது ஒரு பெரிய தனி நூலாகிவிடும். ஆனதுபற்றி அவர் செய்த பிரசங்கங்களின் இரண் டொரு முக்கியாம்சமான பாகத்தைமட்டும் இங்கு மொழிபெயர்த்து வரைகின்றேன்.

"அன்பு ததும்பிய அந்தரங்க ஹிருதய கமலத்திலே பகவானைத் தரிசிக்கலாமே யன்றி, ஞானத்தை ஆதாரமாகக்கொண்ட அந்தக்கா ணத்தினலாகாது. ஞான மென்பது தெருவைப் பெருக்கும் தோட் டிக்குச் சமானமானது. எவ்வாறெனில் வழியை நமது பிரயோஜ னத்திற்காகச் சுத்தமாயும் சரியாகவும் வைத்திருப்பது போலீஸ்கார னுடைய கடமை. ஆனல் ஜனங்கள் ஒன்றுபட்டு வாழ்வதற்கு அந் தப் போலீஸ்காரன் வேண்டிய அவசியமில்லை. ஒருவருக்கொருவர் சச்சரவு செய்து கொள்ளாமலிருக்கவே அவன் வேண்டியிருக்கிறான். இதைப்போலத்தான் ஞானத்தால் ஆகவேண்டிய வேலையும். ஞான வாத நூல்களையும் நீங்கள் படித்து முடித்தபின் 'இவற்றை இனிமேல் நாம் படிக்காதிருக்குமாறு இறைவன் அருள் பாலிக்க வேண்டும்' என்றே நினைக்கிறீர்க ளல்லவா? ஏனெனில் அந்தக்கரணம் குருட்டுத் தன்மையது. அதற்குத் தானே சலிக்கும்படியான தன்மை இல்லை. அதற்குக் கைகால் முதலிய அவயவங்களும் இல்லை. சலிக்குந் தன்

மையையுடையது 'அன்பு' ஒன்றுதான். மின்சார வேகத்தைக் காட்டிலும் அதிக வேகமானதொன்றிருந்தால் அதைக் காட்டிலும் ஆயிரங்கோடி மகாவேகமாய்ச் செல்லுந் தன்மையுள்ளதும் 'அன்பு' ஒன்றுதான்.

அன்பு வேண்டும்.

இப்பொழுது உன்னிடத்தில் அன்பு இருக்கின்றதா? என்பதுதான் கேள்வி. உன்னிடத்தில் அன்பு இருக்குமானால் பகவான் உனக்குப் பிரத்தியக்ஷமாவார். இன்று உங்களிடத்திலிருக்கும் இதே அன்பு இனி நாளுக்கு நாள் படிப்படியாய் விருத்தியாகி, சிவமயமான உயரிய நிலையை எய்துவித்து, முடிவில் அனைத்தும் தானேயாகி யாவற்றிலும் ஏக தத்துவமாய் நின்று நிலவும். அதுதான் அன்பும் சிவமும் ஒன்றாகும் நிலை. (அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்.) இவ்வளவு வேலைகளும் ஞானத்தால் ஒருபோதும் ஆகாது.

வாக்வைகரீ ஶப்தஜரீ ஶாஸ்த்ரவ்யாக்யான கௌஶலம் ।
வைதுஷ்யம் விதுஷாம் தத்வத் புக்தயே ந து முக்தயே ॥

"மனிதனை ஸ்தம்பிக்கச் செய்யும் பலவிதமான பதப் பிரயோகங்களும், பற்பலவிதமான வியாக்யானங்கள் செய்யும் சாதுரியமும் கவிகளின் இன்பத்திற்கேயல்லாமல் முக்திக்குப் பயன்படுவனவாகா" *

தாமஸ் ஏ கெம்பிஸ் என்னும் பக்தர் வரைந்துள்ள 'கிறிஸ்து கர்ணாமிர்தம்' (The Imitation of Christ) என்னும் நூலிலுள்ள வாக்கியங்களை வாசித்தவர்கட்கு அந்நூலின் ஒவ்வொரு பக்கத்திலும் மேற்குறிப்பிட்ட பொருள் வலியுறுத்தப்பட்டிருப்பது நன்கு விளங்கும். இவ்வவனியில் உதித்துள்ள மகான்களனைவரும் ஏகோபிதமாக இதைத்தான் வற்புறுத்தியிருக்கிறார்கள். ஞானம் மிக்க அவசியமானதுதான். ஞானமில்லாவிட்டால் நாம் பெருந்தவறுகள் செய்வோம். இத் தப்பிதங்களைச் செய்யாதவாறு நம்மைத் தடுப்பதற்கு ஞானமே சிறந்த சாதனம். ஆனால் இதற்குமேல் ஞானத்தை ஆதாரமாகக் கொண்டு எதையும் செய்துவிடக் கூடாது. அது சலனமற்றது (இயக்கமில்லாதது). அதனால் விளையும் பயன் மத்யமமானது. உண்மையாக நமக்கு உதவிபுரிவது அன்பேயாகும், பிரேமையே யாகும்.

ஞானம் அவசியமானதே.

* "வெல்லாமல் எவரையும் மருட்டிவிட வகைவந்த
வித்தையென் முத்தி தருமோ" என்றார் தாயுமானவரும்.

உங்களுக்குப் பிறரிடம் அன்பு இருக்கிறதா? இருக்குமானால் நீங்கள் ஒன்றுபட்டு நன்றாய் முன்னேற்ற மடைவீர்கள். அந்த அன்பு மட்டும் உங்களுக் கில்லா யிட்டால், நீங்கள் எவ்வளவு உயர்தர ஞானிகளா யிருந்தாலும் பயனற்றவர்க ளாவீர்கள். நீங்கள் இப்பொழுது சுஷ்க ஞானமுடையவர்களா யிருக்கிறீர்கள். அப்படியே இனிமேலும் இருப்பீர்கள். ஆனால் அவ்வுள்ளன்புமட்டும் உங்களிடமிருக்குமானால், எந்த நூலையும் உங்களுக்குப் படிக்கத் தெரியாவிட்டாலும், எந்தவித மொழிவன்மையும் உங்களுக் கேற்படாமற் போனாலும் நீங்களே நல்லவழியில் செல்வோராவீர்கள். ஆகையால் இறைவன் திருவருள் உங்களுக்குப் பரிபூர்ணமாய் இருக்கும்.

உலகத்தின் சரித்திரத்தைக் கவனிக்கு மிடத்து, மகாயோகிகளுக்கிருந்த உயர்ந்த வல்லமைகளெல்லாம் உங்களுக்குப் புலனாகவில்லையா? அஃது எங்கிருந்தது? ஞானத்திலா? அவர்களில் எவராவது தர்க்க நூலின் பின்னலான வாதங்களைப் பற்றியும், பிரதிவாதங்களைப் பற்றியுமுள்ள சூக்குமங்களைத் திரட்டி நேர்த்தியான தத்துவ நூல்கள் வரைந்தனரா? இல்லையே. சிறிதளவே அவர்கள் பேசினார்கள். நீங்கள் கிறிஸ்துவைப்போ லன்புடையவர்களா யிருந்தால் அவரைப் போலவேயாகலாம். புத்தரைப் போன்ற அன்பு உங்களுக்கு ஏற்பட வேண்டும். அன்பே, உயிர், வல்லமை, ஜீவன் அனைத்துமாம். எவ்வளவு ஞானமிருப்பினும் அன்பில்லாவிட்டால் கடவுளை யடைதல் முடியாத காரியம். ஞானமானது அசையவியலா அங்கங்களுக்குச் சமானமானது.

அன்பே அனைத்துமாம்.

அன்பாகின்ற உணர்ச்சி அத்தகைய அங்கங்களுடன் சேர்ந்து அவற்றை இயக்கும் பொழுதுதான், அவை அசையத் தொடங்கிப் பிறரைத் தாக்குகின்றன. இதுவே உலகானுபவம். இதை நீங்கள் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும். இவ்விஷயம் வேதாந்த நியமத்தின் முக்கிய அனுபவ பூர்வமானது. ஏனென்றால், நீங்களெல்லோரும் யோகிகளென்றே வேதாந்தம் உபதேசிக்கின்றது. அதனால் நீங்கள் யோகிகளா யிருக்கவேண்டும். உங்கள் ஒழுக்கத்திற்குப் புத்தகம் பிரமாணமானதாகாது. நீங்கள்தான் நூலுக்குப் பிரமாணம். ஒரு நூல் உண்மையையே போதிக்கின்றதென்பதை நீங்கள் எப்படி அறிந்து கொள்ளுகிறீர்கள்? அதை நீங்கள் உணர்ந்து அனுஷ்டிக்க முடிந்தால் தானே. இதுதான் வேதாந்தத்தின் உபதேசமும்."

இதுபோன்ற தெளிவான பிரசங்கங்களைக் குறித்து இங்கிலாந்து

பத்திரிகைகளின் புகழ்ச்சி.

தேசப் பத்திரிகைகளனைத்தும் அவ்வப்போது புகழ்ந்துபேச வாரம்பித்தன. அவற்றுள் 1896-ம் ஆண்டு ஜூன் மாதம் 13-ம் தேதி பிரசுரமான 'லண்டன் அமரிகன்' என்ற பத்திரிகை "ஹிந்து மதம் கேவலம் தாழ்ந்த பொம்மை வணக்கமானதே யென்று மேல்நாட்டார்கள் இழித்து அதன்மீது கற்பித்திருந்த குற்றத்தை விவேகானந்த சுவாமிகள் மாற்றியதோடு கூட, அனைவரும் புகழ்ந்து கொண்டாடத்தக்க விதத்தில் அதை ஸ்தாபித்துவிட்டார்" என்று எழுதியது.

'லண்டன் ஸ்டாண்டர்ட்' என்னும் பத்திரிகை சுவாமிகள் லண்டன் நகரிலே செய்தருளிய பிரசங்கத்தைப் போற்றி வரைந்ததாவது: ராஜாராம் மோகன் ராய் காலத்துக்குப்பின் கேசப் சந்திர சேனர் ஒருவர் நீங்கலாக, அக்டோபர் மாதம் 2-ம் தேதி 'பிரின்ஸ் ஆப் வேல்ஸ்' மண்டபத்தில் உபந்நியசித்த அந்த ஹிந்துவைவிட மிக்க மனோகரமான இந்தியத் திருவுருவம் இதுவரையில் ஆங்கிலப் பிரசங்க மேடையிலே வந்து நின்றதே இல்லை. பௌத்த சந்நியாசிகளைப்போல் நீண்ட காவியாடை யுடுத்து, இடையில் சந்நியாச மேகலை பூண்டு, சிரசில் இந்துஸ்தானிப் பாகை பொலிய விளங்கும் விவேகானந்த சுவாமிகள், எந்த வேதாந்த சித்தாந்தத்தைப் பரவும் பொருட்டுத் தம்மாயுட்காலத்தை விநியோகித்து வருகிறாரோ, அந்த சித்தாந்தத்தின் முக்கிய ஆதாரங்களைப்பற்றி ஒன்றேகால் மணிநேரம் மதுரமான அழகிய குற்றமற்ற ஆங்கிலநடையில் பேசினார்"

இதையன்றி 'இந்தியன் மிர்றர்' என்னும் பத்திரிகை, சுவாமிகள் பிரசங்கிக்கு மிடங்களிலெல்லாம் விசேஷ நிருபர்களை வைத்துக்கொண்டு, அவர் பிரசங்கங்களையும், ஜனத்திரள் முதலியவற்றையும் தனது அபிப்பிராயத்தையும் வெளியிட்டு வந்தது. அதில், 1896-ம் வருஷம் ஜனவரி மாதம் 10-ம் தேதி வெளிவந்த அணிந்துரையாவது:

"விவேகானந்த சுவாமிகள் லண்டன்மாநகரில் பிரபல ஸ்திரீ புமான்களிடையே அவர்கள் மனதைக் கொள்ளைகொண்டு அதியற்புதமான பிரசங்கங்களைச் செய்து வருகிறாரென்பதை மகிழ்ச்சியுடன் குறிப்பிடுகின்றோம். ஹிந்து தத்துவ சாஸ்திர விஷயமாயும், யோக சாஸ்திர சம்பந்தமாயும் அவர் அனுதினமும் நடத்திவரும் வகுப்புகளிலே அநேகர் சேர்ந்து, அங்கு நடைபெறும் பாடங்களை வெகு விசுவாசமாகக் கேட்டு வருகின்றனராம். 'லண்டன் நகரத்தில் அதிக

அலங்காரப் பிரியைகளான பெண்கள், ஹிந்துக்களைப்போல் ஆடம்பரத்தை வெறுத்து தரையிலுட்கார்ந்து (நாற்காலிகளின்மையால்) விஸ்வாசத்துடன் அப்பிரசங்கங்களைக் கேட்டு வருவது ஓர் அதிசயமான காட்சியே' என்று ஒரு லண்டன் விசேஷ நிருபர் எழுதுகிறார். உவில்பர் போர்ஸ், ஹேய்ஸ் முதலான உத்தம கிறிஸ்து மதாசாரியர்கள் சுவாமிகளை மிக்க பரிவுடனேற்று உபசரித்து கௌரவித்தார்களெனத் தெரிய வருகிறது. முன் சொன்ன துரையவர்கள் சுவாமிகளை வரவேற் றுபசரித்தபோது, சுவாமிகளை கௌரவித்தற்பொருட்டுச் சென்றிருந்த கோஷ்டியிலே லண்டன் நகர பிரபல ஸ்திரீ புருஷர்கள் வந்திருந்தனராம். 'ஆங்கிலேயர் உள்ளங்களிலே இந்தியா விஷயமாக சுவாமிகள் உண்டாக்கி வரும் அன்பும் அனுதாபமும் இந்தியாவின் எதிர்கால நன்மைக்குப் பெருத்ததோர் ஆதாரமா யிருக்குமென்பது உறுதி' என்று அந்த லண்டன் விசேஷ நிருபரே எழுதுகிறார்.

இந்தியன் மிர்றரின் அணிந்துரை.

கற்பகத்தைப்போல அடுத்தவர்களுக் கெல்லாம் உபதேசித்து லண்டன் நகரில் இடைவிடாது பிரசங்கங்கள் புரிந்தமையால் சுவாமிகள் களைத்துப்போனார். அதனால் அவருக்குச் சிறிது ஓய்வு வேண்டியிருந்தது. அப்பொழுது, சில அத்யந்த அன்பர்கள் ஐரோப்பாக் கண்டத்திலுள்ள சில முக்கியப் பிரதேசங்களைப் போய் பார்த்து வரலாமென்று சுவாமிகளை அழைத்தார்கள். பழைய பரிவ்ராஜக நிலையின் ஞாபகமும் அவருக்கு அப்பொழுது வந்துவிட்டது. 'அழகிய குன்றங்களின் காட்சிகளைக்காண எனக்கு ஆவலுண்டாகின்றது' என்று சுவாமிகள் கூறி சுவிட்சர்லந்துக்கேகவேண்டுமென்ற அவாவால் சித்தமானார். அவருடைய நிகழ்ச்சிக் குறிப்பை நிறைவேற்ற அன்பர்கள் தயாராயிருந்தனர். அவருக்கு ஊர்ப்பிரயாணஞ் செல்வதில் குழந்தையைப்போல ஆசை யிருந்தது. இக்காலத்தில் ஜினீவாவில் 'சுவிஸ் தேசீயப்பிரதர்சனி' யொன்று நடைபெற விருந்தமையால், ஆங்கு வரும் கைத்தொழிற்காட்சிப் பொருள்களைக் காணவேண்டுமென்ற எண்ணம் அவருக்குதித்தது. 'ஷில்லான் கோட்டை'யையும் லார்ட் பைரன் என்ற மகாகவி ஷில்லான் சிறையாளன்' என்ற கவியில் வர்ணித்துள்ள குன்றையும், ஏரியையும் காணவேண்டுமென்ற ஆவல் கொண்டார். அதன்படி அவர்கள் ஜினீவாவுக்குப்போக இசைந்தார்கள். அப்பால், சுவாமிகளின் திருவுள்ளப்படியே 'பிராங்' மலை

யையும் 'சமோனிக்ஸ்' கிராமத்தையும், கிளேசியர்' நதியையும் பார்த்து வருவதாகத் தீர்மானிக்கப்பட்டது. 'இங்கிலாந்தில் ஹிந்து மத சேவை' இங்ஙனம் சுவாமிகளால் தொடங்கப்பெற்று விருத்தி யடைந்துகொண் டிருந்தது.

34-ம் அத்தியாயம்.

லண்டனில் வேதாந்த ஸ்தாபனம்.

*ஔசித்வ அன்புநிறைந்த சுவாமிகட்கு லண்டன் நகரிலிருந்த அன்பர்கள் வாழ்த்து கூறிப் பிரயாணப்படுத்தி வைத்தார்கள். சுவாமிகள் இரண்டு மாத காலத்திற்குள் தமது யாத்திரையை முடித்துக்கொண்டு வருவதாகச் சொல்லியும் அன்பர்கள் மனந் தேறினார்களில்லை. பிறகு, சுவாமிகள் தமது ஆப்தர்களுடன் லண்டனைவிட்டுப் புறப்பட்டு, டோவரை (Dover) யடைந்து, கலேயை நோக்கிச் சென்றார். வெகு தொலைப் பிரயாணத்தால் நேரக்கூடிய களையைப் போக்கிக்கொள்ள, அவர்கள் இடையே பாரிஸ் நகரில் தங்கினார்கள்; அடுத்தநாள் புறப்பட்டு குதூகலமாக ஜினிவாவை யடைந்து, அங்கு அழகிய ஏரிக்கரையில் அமைக்கப்பெற்றிருந்த 'ஹாஸ்டல்'லில் தங்கினார்கள். அவ்விலாசமான ஏரியின் தெள்ளிய அலைகளின் காட்சியும், வெகு சுமுகமாக வீசும் தென்றலின் ஸ்பரிசமும், மாளிகைகளின் மனோகரமான அமைப்பும் சுவாமிகளின் மனதைக் கொள்ளைகொண்டன. நீண்ட காலப் பிரயாணத்தா லேற்பட்ட களையையும் அவர் பொருட்படுத்தாமல் அன்று மாலையிலேயே வெளிப்பட்டு, அன்பர்களுடன் 'காட்சிசாலை'யைக் கண்டு; ஆங்கு காட்சியின் பொருட்டு கொண்டு வந்து வைக்கப்பெற்றிருந்த மா சித்திர நுட்பமுடைய பொருள்களையும் ஏனையவற்றையுங் கண்டு மகிழ்ந்தார். மற்றும், அப்பிரதர்சனியில் ஆகாய விமானமொன்று இருந்தது அதைக் கண்டவுடன் அதிலேறி கருடன்போலக் ககனமார்க்கத்தில் சஞ்சரித்துவர வேண்டுமென்ற ஆவல் அவருக்கு உண்டாயிற்று. குழந்தையைப் போல் அவர் குதித்து 'நேரமாயிற்றே? ஏன்! புறப்படலாமே' என்று ஆசையால் துள்ளினார். அங்ஙனமே சூர்யாஸ்தமன சமயத்தில் அவ்

'ஜினிவா'வுக் கேகல்.

* ஔசித்வ அன்பு - மெய்யன்பு.

வாகாய விமானத்தி லனைவரும் ஏறி, வெகு உயரச் சென்று, பந்த மற்று வெட்டவெளியில் சஞ்சரிக்கும் ஜீவாத்மாவைப்போன்ற கருடனை யொத்து, பூமியிலிருந்து பார்ப்பவருக்குப் புள்ளிவடிவாகத் தோன்றும் அத்துணை உயரத்திலிருந்து கீழே பார்க்க, ஜினிவா நகரம் ஓர் தேசச் சித்திரப்படத்தைப்போல் காணப்பட்டது. பின்னர், மெல்ல மெல்ல ஆகாய விமானம் கீழேவந்து ஏரிக்கரையில் இறங்கியதும், அனைவரும் வெளியே வந்து, மேலே வெகுதூரஞ் சென்று மீண்டதாலுண்டான களையைப் போக்கச் சிறிது சிற்றுண்டி யருந்திவிட்டுத் தமது தங்குசாலைக் கேகினர்.

ஜினிவா நகரம் விசேஷ ஸ்நான வசதிகளுடன் அமைந்திருந்தது. அவர் அங்கு தங்கிய சொற்ப தினங்களுக்குள் பன்முறை நீராடினார். அதன்பின் மூன்றுநாள் யாத்திரை போய் 'ஷில்லான்' கோட்டையைப் பார்த்து வந்தார். அப்பால், அங்கிருந்து நாற்பது மைல் தூரத்திலுள்ள 'சமோனிக்ஸ்' (Chamounix) க்குச் சென்றார். போகும் வழியில் அவர் கடந்து சென்ற 'பிளாங்க்' குன்று இமயவரையைவிட மிக்க பனியும் குளிரு முடையதா யிருந்தது. அக்குன்றின்மீது ஏறிப் பார்க்கவேண்டுமென்று சுவாமிகள் விரும்பினாராலும், குளிர் பொறுக்க முடியாதென்று தமதன்பர்கள் கூறக்கேட்டு 'மொர்-டி கிளேஸ்' என்னும் பனிவயல் வழியே கோவேரிக் கழுதையின்மீதிவர்ந்து, கொஞ்சதூரம் சென்று திரும்பினார். அம் மலைவாசிகள் இமயமலையின் அடிவாரங்களில் வதியும் மக்களைப் போன்றே நடை யுடை பாவனை யுடையாரா யிருப்பது கண்டு வியந்தார். சுவாமிகள் இமயமலைப் பிரதேசத்தில் ஓர் அத்வைதாஸ்ரமத்தை ஸ்தாபிக்க வேண்டுமென்ற தமது நோக்கத்தை இங்கேயே தம்முடைய அன்பர்களிடம் உரைத்தருளினார். சேவியர் துரையும் அவர் மனைவியாரும் சுவாமிகள் விருப்பத்தை ஆதரித்ததுமன்றி, அதற்கான பொருட் செலவனைத்தையும் தாமே ஏற்றுக்கொள்வதாக வாக்களித்தனர். மகாத்மாக்களின் வாயினின்று வெளிவரும் சொற்கள் அவலமாவதில்லையன்றோ ?

குன்றுகட்குச் சென்று வருதல்.

பின்பு, அனைவரும் 'சமோனிக்ஸி'லிருந்து, 'லிட்டில் செயிண்ட் பர்னாட்' (Little Saint Bernad) எனுமோர் பழம்பதிக்குச் சென்றனர். பழங்கால சமய குருமார்களின் எழில்பெற்றிலங்கும் அப்பழூரின் காணருங் காட்சிகளைக் கண்ணாரக் கண்டு, அப்பால் மிஸ் முல்லரின் விருப்பப்படி அங்கிருந்து கொஞ்ச தூரத்திலிருந்த ஓர் கிராமத்திற்

குச் சென்று சில தினங்கள் தங்கினார்கள். அக்கிராமத்தைச் சுற்றி நாலாபக்கங்களிலும் பனியால் மூடப்பெற்ற அழகிய சிறு குன்றுகள் பல காணப்பட்டன. யதேச்சையான அக்கிராமவாசம் சுவாமிகளுக்கு மனோரம்யத்தை யளித்தது. பின்னலான பல சமயக் கோட்பாடுகள் நிற்சிந்தையான அவ்வூர்வாசத்தில் சுவாமிகளுக்கு விளக்கமாயின.

கிராமவாசம். அவர் தனியே உலாவுவதும் தியானஞ் செய்வது மாக நிம்மதியாக இருந்தார். அவ்வூரில் அவர்கள் பதினைந்து நாட்கள் தங்கினார்கள். தம தன்பர்களுக்கு உபநிஷதங்களின் உட்கருத்துக்களை உபதேசிப்பதும், யோக சாதனங்கள் செய்வதுமாக சுவாமிகள் அவ்வூரில் நாட்களைக் கழித்தார். அப்பால் அவ்வூரிலிருந்து திரும்பி வரும் வழியில் ஒரு சிறு மாதா மலைக்கோயிலிருக்கக் கண்டு, உள்ள முருகி, சேவியர் அம்மையை அழைத்துக்கொண்டு, அவ்வாலயத்திற்கேகி, நறுமணமலர்கள் சில கொய்து அருச்சிக்கச் செய்து 'அன்னை - காளிகாதேவி இங்கு இவ்வடிவு கொண்டாள்' என்று போற்றித் திரும்பினார். அங்கு சுவாமிகளுக்கு விசேஷச் செய்தி யொன்று கிடைத்தது. அதாவது 'பால் தாய்சென்' என்னும் கீல் (Kiel) சர்வ கலாசாலை விஞ்ஞான நூற் புலவர் சுவாமிகளைத் தமது வாசஸ்தலத்திற்கு எழுந்தருளுமாறு அனுப்பியிருந்த அழைப்புக் கடிதமே. அக்கடிதம் சுவாமிகளின் லண்டன் விலாசத்திற்குப் போய் அங்கிருந்தும் இக்கிராமத்திற்கு அனுப்பப்பெற் றிருந்தது. பால் தாய்சென் என்பார் சிலகாலமாக சுவாமிகள் லண்டனி லியற்றிய வேதாந்த உபந்நியாசங்களைப் பத்திரிகைகள் வாயிலாக வாசித்து, அம்மகானுபாவரை நேரில் சந்திக்கவேண்டு மென்ற ஆவலோடு இக்கடிதத்தை வரைந்திருந்தார். சுவாமிகளும் சுற்றிக்கொண்டே யிருக்கவேண்டிய தர்மமும் விருப்பமு முடையாராதலால், தாம் இங்கிலாந்துக்குத் திரும்புமுன் கீலுக்குப்போக உத்தேசித்தார். ஆனால் அவருடைய சகபாடிகள் கீலுக்குப் போகுமுன் சுவிஸ் யாத்திரையைப் பூர்த்தி செய்யவேண்டுமென்று அபிப்பிராயப்பட்டனர்; வழியில் சில விசேஷக் காட்சிகளை சுவாமிகளுக்குக் காண்பிக்கவேண்டுமென்றுங் கருதினார்கள்.

பிறகு, அனைவரும் 'லூசர்னி'க்குப் போனார்கள்; அதற்கருகாமையிலுள்ள 'ரிகி கிரி' (Mount Rigi) மீது இருப்புத்தொடர் வண்டியி லேறிச் சென்று மீண்டனர். அக்கிரியி லிருந்த சுவிஸ் வீரர்களின் சிற்ப நுட்பமுடைய சிலைகளைப் பார்த்து சுவாமிகள் மிக்க ஆச்சரியப்

பட்டார். சிங்கமொன்று துயில்வதுபோல அம்மலையிலேயே சித்திரிக்கப்பெற்று, சிறு நீர் நிலைகளில் பிரதி பிம்பிப்பது மற்றொரு அரிய காட்சியாயிருந்து. எல்லோரும் மகா பிரசித்தரான 'தோர்வால்ஸ்டேன்' (Thorwalsden) ஸாசரின் அவர்களின் பொருட் காட்சிசாலையையும் போய்ப் பார்த்தார்கள். பின்னும் ஆங்காங்கே யிருந்த சிற்ப விசேஷமுள்ள ஆலயங்களையும் சுவாமிகள் தமது நேயர்களுடன் போய் பார்த்துக் களித்தார்.

அப்பால், சுவாமிகள் தமது யாத்திரையைத் தொடங்கவேண்டுமென்ற அவாவால் மூல்லர் அம்மையிடம் விடை பெற்றுக்கொண்டு, சேவியர் துரை யவர்கள் தம் மனையாளுடன் உடனேக சுவிட்ஜர்லந்தின் முக்கிய ஸ்தலமான 'சேர் மாட்' (Zermat) க்குப் பிரயாணமானர்; 'கார்னர்கிராட்' (Kornergrat) என்னும் குன்றின்மீது ஏறினார்கள். 'மாட்டர் ஹாரர்ன்' எனும் நகரைப் பார்த்து வரவேண்டுமென்ற அவர்கள் உத்தேசம்மட்டும் நிறைவேறவில்லை. காற்று மிகவும் கடுமையாக வீசினமையால் சேவியர் துரை மட்டும் அம்மலையின் சிகரம் வரை சென்று திரும்பினர். அங்கிருந்து பின்பு அனைவரும் 'சிஹாப்ஹாஸ்' (Schaffhausen) ஜுக்குச் சென்று, 'ரம்ய நதி'யின் (Rhine) நீர் வீழ்ச்சியையும் அருகாமையிலிருந்த காட்சி சாலைகளையும் கண்டார்கள். அப்பொழுது சுவாமிகளுக்கு இமயவரையின் சில இயற்கை யழகமைந்த இடங்கள் ஞாபகத்திற்கு வந்தன. அவ்விடத்தை அவர் இமயமென மானசீகமாகத் தரிசித்தார். சிஹாப்ஹாஸனிலிருந்து மூவருமாக 'ஹைடல்பர்க்' (Heidelberg) என்னும் ஜர்மானிய உயர்தர சர்வகலாசாலைக் கேகி இரண்டொருநாள் தங்கினார்கள். சுவாமிகள் அக்கலாசாலையைச் சுற்றிப் பார்த்ததும் 'ஜர்மானிய மாணவர்கள் புவனத்திலேயே பாக்கியவான்கள்' என்று தம்முள் எண்ணினர். 'ஆகா! இத்துணை சௌகரியங்களுட னமைந்த சர்வ கலாசாலை எனது தாய் நாட்டிலும் விளங்க நீ யருளாயோ'' என்று பகவானைக் குறித்து இரங்கினர். அங்கிருந்து மூவரும் 'செப்லொன்ஸ்' (Ceblonz) க்குச் சென்று அன்றிராப்பொழுதை அங்கு கழித்து, மறுநாட் காலையில் புகைக்கப்பலேறி, ரம்ய நதியின் வழியே 'கோலோன்' (Cologne) நகருக் கேகினர்; அப்பட்டணத்தில் அநேகமாக எல்லா முக்கிய பாகங்களையும் பார்க்க உத்தேசித்துச் சில தினங்கள் தங்கினர். முதலில் எல்லோருமாக அந்நகரத்திலிருந்த முக்கிய தேவாலயத்தைப் போய்ப்

ஏனைய சுற்றுப் பிரயாணங்கள்.

பார்த்தார்கள். கனகத் தகடுகளால் அமைக்கப்பெற்றுள்ள அக்கோயிலையும், அதன் கண்ணுள்ள கற்களிழைத்த சிலுவையையும், அவர்கள் செல்வத்தையும் சமயப்பற்றையும் விழாக்களையும் கண்டு சுவாமிகள் ஆச்சரியப்பட்டார். சேவியர் துரை யவர்கள் சுவாமிகளுடன் கோலோனிலிருந்து நோரகக் கீலுக்குப் போக ஏற்பாடு செய்திருந்தாரேனும் 'பர்லின்' நகரைப் பார்க்கவேண்டுமென்று இடையில் ஒரு யோசனை உண்டாயிற்று. பர்லின் மட்டுமன்றி 'டிரஸ்டேன்' (Dresden) பட்டணத்திற்கும் போக வேண்டுமென்று பின்னர் தீர்மானிக்கப்பட்டது. சுவாமிகள் சேவியர் துரை, அவர் மனைவியார் ஆக மூவரும், ஜர்மன் தேசத்தின் பல மனோகரமான பாகங்களின் வழியாய், அழகிய நகரங்களையும், அதிரம்யமான மாளிகைகளையும், பார்த்துக்கொண்டே பர்லினை யடைந்தார்கள். அங்கு சில நாட்கள் தங்கியபின், டிரஸ்டென்னுக்குச் செல்ல உத்தேசித்திருப்பதாக சேவியர் துரை கூற, சுவாமிகள், வித்வான் தாய்ஸென் தமது வரவை எதிர்பார்த்திருப்பாரென்றும், நோரகக் கீலுக்குப் போகலாமென்று தாம் அபிப்பிராயப்படுவதாகவுங் கூற, அதற்கிணங்க அனைவரும் நோரகக் கீலுக்குப் புறப்பட்டார்கள். தாய்சென் என்னும் அம்மகானுடைய அரிய ஸ்நேகத்தை அடையுந் தருணத்தை ஆவலுடன் சுவாமிகள் எதிர்பார்த்துக்கொண்டே சென்றார்.

உலக சம்பந்தமான ஒவ்வொரு துறையிலும், விவேகத்தின் ஒவ்வொரு மார்க்கத்திலும் சுவாமிகளுக்கு அளவற்ற ஊக்கமும் உற்சாகமு மேற்பட்டிருந்தது. எப்பொழுதும் அவர் சந்தோஷமாகவும் கருணையோடும் அதி நுட்பபுத்தி விசேடத்தோடும் வடிவழகுடனும் விளங்குவது கண்டு அனைவருக்கும் அவரிடத்தில் ஓர் தனிப் பற்று ஏற்பட்டிருந்தது.

'கீல்' சர்வ கலாசாலைக்கு விஜயஞ் செய்தல்.

கீல் என்பது பால்டிக் சமுத்திரத்தின் கரையில் விளங்குமோர் அற்புத நகரம். அதில் டாக்டர் பால் தாய்சேன் என்பார் ஓர் சர்வ கலாசாலையில் விக்ஞான நூற்புலவராயிருந்தார். அவரே அக்காலத்தில் ஆங்கிலேயர்களுக்குள் சிறந்த வடமொழிப் பண்டிதராவார். சுவாமிகள் கீல் நகரின் ஓர் சத்திரத்தில் வந்திருப்பது அறிந்து, அப்பெரியார், அடுத்த நாள் தம்முடன் பகற்போசனங் கொள்ளத் தமது திருமாளிகைக் கெழுந்தருளுமாறு சுவாமிகளுக்கும் அவருடன் வந்திருந்த சேவியர் தம்பதிகட்குமாக ஓர் அழைப்புக் கடிதம் அனுப்பினர். அதன்படி மறுநாள் சரியாகப் பத்துமணிக்கு

சுவாமிகள் தமது சகாக்களுடன் சென்றார். அப்பெரியார் தமது பத்னியுடன் மூவரையும் வரவேற்று குசலப்பிரச்னஞ் செய்தபின், மேஜையின்மேல் திறந்து வைக்கப்பெற்றிருந்த இரண்டொரு புத்தகங் களைப் புரட்டிப் பார்த்துவிட்டு, மகா விவேகியாய் வித்யானுபவ நூல் களைப்பற்றிச் சம்பாஷிக்க ஆரம்பித்தார். அப்பால், ஒரு புத்தகத்தைத் திறந்து இரண்டொரு உபநிஷதங்களை வாசித்தார். பின்பு, இருவரு மாக சில ஆராய்ச்சி விஷயமாய் உரையாடினார்கள். அதன்மேல் சுவா மிகள் ஒரு கவிநூலைப் புறட்டிப் பார்த்துக்கொண்டிருந்தார். அவ்வம யம் அம்மேதாவி சுவாமிகளுடன் சம்பாஷிக்க யத்தனித்துச் சில வார்த்தைகள் புகன்றும் அவை, அவர் செவியிற் படவில்லை. பிறகு சுவாமிகள் இதை யறிந்து, வருந்தி மன்னிக்கும்படி கேட்டுக்கொண்டு, 'நான் சிந்தையை அப்புத்தகத்தைப் படிப்பதிலேயே செலுத்தி யிருந்த மையால் அங்ஙனம் நேர்ந்த'தென்று கூறினார். இவ்விஷயம் அப்பெரி யாருக்குத் தக்க சமாதானமாகத் தோன்றவில்லை. அதன்பிறகு, சுவாமிகள் சற்று முன்பு ஒரே முறை படித்த புத்தகத்திலிருந்து சில முக்கிய கவிகளைப் பாராமலெடுத்துரைத்து விளக்குவது கண்ட தாய் சென் ஆச்சரியப்பட்டு க்ஷேத்ரி மகாராஜாவைப்போல், "தாங்கள் எப் படி இவ்வித ஞாபக சக்தி யுடையவரா யிருக்கிறீர்கள்?" என்று வின வினர். அப்பொழுது சுவாமிகள் அவருக்கு ஹிந்துக்களின் யோக சாதனமே இதற்குக் காரணமென் றியம்பி யருளினர்.

அக்காலத்தில் கீல் நகரில் ஒரு பிரதர்சனி (Exhibition) நடை பெறுகின்றதென்றும், அதற்கு சுவாமிகள் அவசியம் எழுந்தருள வேண்டுமென்றும், தாய்சென் பண்டிதர் வற்புறுத்த, அன்று இடை வேளை போஜனமான பிறகு அனைவருமாக, அக்காட்சி சந்தைக்குப் போய் வந்தார்கள். அடுத்த நாள் காணத்தக்க பல முக்கிய இடங்க ளுக்குப் போய்வர வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. அற்றைக் குச் சில தினங்களுக்கு முன்பு கெயிஸரால் திறந்து வைக்கப்பெற்ற கீல் துறைமுகத்தையும் பார்வை யிட்டார்கள். தாய்செனும் அவர் மனைவியாரும், சுவாமிகளையும் அவருடன் வந்த மற்ற அதிதிகளையும் விருந்துக் கழைத்து உபசரித்தார்கள். இதுவரை ஆறுவாரகாலம் இவ் வித சுற்றுப் பிரயாணத்திற் கழிந்தது. சுவாமிகளுக்கும் லண்டனில் தாம் ஆரம்பித்த சேவையை மிக்கத் திறமையுடன் நடத்தி அஸ்தி வாரக் கல் நாட்டிவிட்டு தாய் நாட்டிற் கேகவேண்டு மென்ற எண்ண முதித்துவிட்டது. ஆகவே, அவரும் சேவியர் தம்பதிகளும் பிரயாண சித்த ரானார்கள்.

சுவாமிகள் பின்னுஞ் சில நாட்கள் அங்கு தங்குவாரென்றும், அவரிடம் தமக்குள்ள பல சந்தேகங்களையும் போக்கிக்கொள்ளலா மென்றும் தாய்சென் எண்ணியிருந்தார். சுவாமிகள் தாம் தமது சேவையை விரைவில் ஒரு நிலைப்படுத்தி இந்தியாவுக்குத் திரும்ப உத்தேசித்திருப்பதாய் உரைத்தருள, அவர் தாம் சுவாமிகளை ஹாம்பர்க் (Hamburg) கில் சந்திப்பதாகவும், பின்பு ஹாலண்டு (Holland) வழியாய்த் தாமும் அவருடன் லண்டனுக்கு வந்து சில நாட்கள் அவருடன் கழிக்க உத்தேசித்திருப்பதாயுங் கூறினார். அப்பால், சேவியர் துரையும் அவருடைய மனைவியும் சுவாமிகளுமாக, கீலைவிட்டகன்று ஹாம்பர்க்குக்குச் சென்று, அவ்வூரிலுள்ள ஓர் தர்மசாலையிற் றங்கி, அங்குள்ள 'மிருகக்காட்சி சாலை'யை (Zoological Gardens)ப் பார்வையிட்டார்கள். மூன்று நாட்களுக்குப் பின் தாய்சென் துரையவர்கள் அங்கு வந்துசேர்ந்தார். சுவாமிகளோடு சத்விசாரஞ் செய்ய தாய்சென் அம்மையார் தனது கணவரைவிட பன்மடங்கு ஆவல் கொண்டிருந்தாள். அவள் சிறந்த பாஷாஞான முடையவள்; விரைவாகப் பேசுந் திறமை வாய்ந்தவள்; வேதாந்த விஷயங்களை சிரவணம் செய்ய வேண்டுமென்ற அவாவுடையவள். ஆயினும் சில அசௌகரியங்களால் அவளும் உடன்வர வியலாமற் போயிற்று. பிறகு, நால்வருமாக ஆம்ஸ்டர்டா (Amsterdam) முக்குப்போய், அங்கு மூன்று நாட்கள் வரை வாஸம்செய்து விட்டு, ஆங்குள்ள காட்சி சாலைகளைப் பார்த்த பின் லண்டனுக்குப் பிரயாணமானார்கள். லண்டன் நகரை யடைந்ததும் வித்வான் தாய்சென் 'செயிண்ட் ஜான்ஸ் வுட்'டில் இருந்த தமது நண்பரில்லத்தில் தங்கினார். சுவாமிகள் 'ஹாம்ஸ்டெட்'டிலுள்ள சேவியர் அவர்கள் கிருகத்தில் வசித்து வந்தார்.

சுற்றுப் பிரயாண முடிவு.

சுவாமிகள் சாரதானந்தரை, சமயோத்தாரண வழிகளில் நன்கு பழக்கி சித்தப்படுத்தி அமரிக்காதேச பக்தர்களின் இடையறு வேண்டுகோளுக்கிணங்கி வேதாந்த பிரசாரார்த்தமாக, அவ்வாண்டு ஜுன்மாத இறுதியில் குட்வின் துரையவர்களுடன் நியூ யார்க்குக்கு அனுப்பிவைத்தார். சாரதானந்தர் அமரிக்காவை யடைந்ததும், அவாது ஹிந்து மத வித்யானுபூதியில் அனைவரும் ஈடுபட்டு, பேசுந்திறனில் பெரிதுஞ் சார்ந்து அவரிடம் பக்திபூண்டனர். 'சமயக் கொள்கைகளின் ஒற்றுமை ஆராய்ச்சி' சங்கத்தின் ஆதரவில் சாரதா

சாரதானந்தர் அமரிக்காவுக் கேகல்.

னந்தர் வேதாந்த உபந்நியாசங்கள் புரிவதும், யோகாப்பியாச முறைகளில் அன்பர்களைப் பழக்குவதுமாக மதத்தொண்டியற்றி வந்தார். சுவாமி விவேகானந்தர் இரண்டாண்டுகட்கு முன் அமரிக்காவில் புரிந்த அரிய சொற்பொழிவுகள் ஓர் தேவதாரு விருக்ஷத்தினடியில் நடைபெற்றன. அவ்விருக்ஷத்திற்கு அதுமுதல் 'விவேகானந்த தேவதாரு' என்று பெயரிடப் பெற்றது. அம்மரத்தினடியில் சாரதானந்தரும் பல ஏகாந்தபிரசங்கங்கள் செய்தருளினர். அதன்பின், புரூக்லின்னிலிருந்தும் நியூயார்க்கிலிருந்தும், பாஸ்டனிலிருந்தும் அவருக்குப் பல அழைப்புக் கடிதங்கள் வந்தன. அமரிக்காவிலிருந்த அன்பர்களும் தமது புது ஆசாரியரைப்பற்றி, லண்டனிலுள்ள சுவாமி விவேகானந்தருக்கு, சிலாகித்தும் போற்றியும் அடிக்கடி கடிதங்கள் வரைந்து கொண் டிருந்தனர்.

நிற்க, லண்டனுக்குப் போனபின் சுவாமிகள் சில தினங்கள் 'ஹாம்ஸ்டெடில்' சேவியர் துரையுடன் வசித்து சிரமபரிஹாரஞ் செய்துகொண்டு, பிறகு தமது வேலையைத் தொடங்கினர்; மிஸ் மூல்லர் அம்மையின் இல்லத்திலும் ரிட்ஜ்வே. கார்டனிலுமாகச் சில உபந்நியாசங்கள் நடைபெற்றன. முதல் பிரசங்கத்தில் ஜே. எப். சிவான் (J. F. Schwann) அவர்கள் தலைமையில், நல்ல உயர்குல மாதர்கள் நிறைந்த சபையில் சுவாமிகள் 'வேதாந்தமே உந்நத நாகரிகத்தின் எல்லை' என்னும் பிரசங்க வாயிலாக ஐரோப்பிய விஞ்ஞான சாஸ்திரத்தை இந்திய ஞானநூல்களோடு பொருத்திக் காட்டினர். அவருடைய நிகரற்ற உபந்நியாசங்களைச் செவியுற்ற அனைவரும் அன்றுமுதல் அனுதினமும் வேதாந்த சிரவணத்தின் பொருட்டு அவரிடம் வந்தனர்; இராஜயோகத்தை அப்யசிக்க வேண்டுமென்ற ஆவலுடன் சிலர் உள்ளன்பு பூண்டார்கள். வேதாந்தத்தின் ஞானபரமான பாகத்தைப் புகட்டும் ஞானயோகத்தைப் பற்றிச் சுவாமிகள் பொதுக்கூட்டங்களில் பேசி வந்தார். சுவாமிகள் கேவலம் படிப்பறிவு மட்டுமுடையவரல்ல; ஞானயோக சித்தராதலின் அவரைவிட ஞானயோகத்தை வேறொருவர் அத்துணை விளக்கமாக எடுத்துரைத்தல் இயலாதென்று தோன்றிற்று. பொது ஜனோபகாரார்த்தமாக இ. டி. ஸ்டார்டி துரையவர்கள் விக்டோரியா தெரு 39-ம் நெம்பர் கட்டடத்தைச் சுவாமிகளின் பிரசங்கங்களுக்கென வாடகைக்கமர்த்தினர். சேவியர் துரையும் அவர் மனைவியும் சுவாமிகளின் சௌகரியத்தை உத்தேசித்து 'கிரே கோட் கார்டன்ஸ்' தெரு 13-ம் நெம்பர் மாளிகைக்

குத் தமது இருப்பிடத்தை மாற்றிக் கொண்டார்கள். அப்பொழுது இந்தியாவிலிருந்து சுவாமிகளின் கடிதப்படி அபேதானந்தரும் அங்கு வந்து சேர்ந்தார். அவரையும் சுவாமிகள் மேல்நாட்டுத் தொண்டிற் கேற்ற வழிகளிற் பழக்கி வந்தார். தாம் இங்கிலாந்தில், ஹிந்துமதப் பிரசாரமாகிய கூட கோபுரத்திற்கு அஸ்திவாரக்கல் நாட்டிவிட்டு, அபேதானந்த சுவாமிகளைக்கொண்டு மேல் கட்டட வேலையை நடத்த, சுவாமிகள் உத்தேசித்திருந்தாராதலின் அவரை மென்மேலும் அத் துறையில் சித்தப்படுத்தினார். விரைவில் ஜென்மபூமிக் கேகவேண்டு மென்ற ஆர்வம் சுவாமிகளுக்கு உண்டாய்விட்டது. அப்பொழுது அவர் "சித்த சுத்தியுடனும், தாழ்மையுடனும், சாமர்த்திய புத்தி நுட்பங்களோடும் உழைக்கக்கூடிய இருபது அன்பர்க ளிருப்பரேல் நான் மேல்நாட்டை ஹிந்துமதத்தின் மூலஸ்தான மாக்கி விடுவேன்" என்று குறிப்பிட்டுத் தமது இந்திய அன்ப ரொருவருக்குக் கடிதமெழுதினார். மேல் நாட்டில் அத்தகைய வேலையின் அவசியத்தையும் சுவாமிகள் அறிந்துகொண்டார். அதனாற்றான் அவர் "இந்தியாவுக்கு வெளியே யிருந்து அடிக்கும் ஒரு அடியுஞ் சரி; உள்ளே யடிக்கும் நூறுயிர மடிகளுஞ் சரி" யென்று தமது கடிதத்தில் ஒரு சமயம் குறிப்பிட்டது.

வித்வான் தாய்சென் இரவிலும் பகலிலும் சுவாமிகளை அடிக்கடி சந்தித்து வேதாந்த விசாரஞ்செய்து, தமக்குள்ள சங்கைகள் நீங்கப் பெறுவர். இனம் இனத்தோடு சேரு மாதலால் இருவருக்கும் விரைவில் நட்பு விசேஷமாய் ஏற்பட்டுவிட்டது. ஹிந்துக்களின் வேதாந்தம் வாழ்க்கையை நல்வழிப்படுத்துவதாய் சத்கர்மாக்களோடு ஐக்கியப்பட்டிருத்தலையும், மேல் நாட்டு வேதாந்தம் அங்ஙனம் அமையப் பெறாது தனிவிஷயமா யிருத்தலையும் சுவாமிகள் அவருக்குணர்த்தி, வேதாந்த கூடார்த்தங்கள் அனைத்தையும் விளக்கி யுரைத்து வந்தார். இதேகாலத்தில் மோக்ஷ மூலரும் சுவாமிகளுடன் கலந்து பல விஷயாராய்ச்சிகள் செய்துகொண்டிருந்தார். ஆக, திரிமூர்த்திகளைப்போல இம்மூன்று ஞான மூர்த்திகளும் அளவளாவி லோகோபகாரார்த்தமாக அரிய உண்மைகள் பலவற்றை ஆராய்ந்து வெளியிடுவாராயினர். அப்பொழுது சுவாமிகளைப் பேட்டி கண்டு பேசாத சீமானும், அடுத்துவந்து உபதேச மடையாத அறிவாளியும் இலரே யாயினர். அக்டோபர் மாதம் 8உ முதல் சுவாமிகள் தினசரிப் பாடஞ் சொல்ல வாரம்பித்தார். இந்துக்களின் மறைபொருளான மாயையைப்பற்றி அவர்,

சில விசேஷப் பிரசங்கங்கள்.

மேல் நாட்டு வடமொழிப் புலவர்களும், ஹிந்துதேச மகா மேதாவிக ளும் ஆச்சரியப்படுமாறு பிரசங்கிக்கத் தொடங்கினர்; மாயையின் தன் மையை நவீன முறைப்படித் தெளிவாக அனைவருக்கும் புலனுமாறு எடுத்தோதினர். 'மாயை' 'மாயையும் தெய்வ நிச்சயம் பரிணமித்த லும்,' என்ற அவரது பிரசங்கங்களை ஊன்றிக் கற்போருக்கு, எத்துணை சிக்கலான விஷயத்தை அவர் எவ்வளவு தெளிவாகக் கூறியுள்ளாரென் பது நன்கு விளக்கமாம். 'எங்கும் ஈஸ்வர மயம்,' 'சித்தி', 'ஆன்ம சுயேச்சை,' 'அனுபவ வேதாந்தம்' ஆகிய விஷயங்களைப்பற்றிப் பிரசங் கித்து மகா தீர்க்க தரிசியாய், அத்வைத வேதாந்த சண்டமாருதமாய், மகா ஞானியாய், ஞானனந்தபரராய் விளங்கி, ஆத்மா பந்தமற்றது, நித்தியமானதென்று சாற்றிச் சமயத்தொண்டாற்றி வருவாராயினர்.

ஆலோசித்தோ அல்லது முன்னதாகத் தயார்செய்தோ சுவாமி கள் பிரசங்கங்களிற் பேசியதேயில்லை. புத்தகங்களில் தாம் படித்த விஷயங்களை அவர் ஒப்பித்ததுமில்லை. பேசும்பொழுதே அவர் அவ் வப்பொழுது சமாதியி லாழ்ந்துவிடுவார்; திடீரென்று அருள் வாக்கா கப் பேசுவார். அவருடைய உபந்நியாசங்களையும் உபதேசங்களையும் செவியுற்ற மகா மேதாவிகளும் அஞ்சலிபந்தம் பண்ணிக் கைகட்டி வாய்பொத்தி நிற்பர். எந்த விஷயத்தைக் குறித்துப் பேசச் சொன் னலும் அக்கணமே சுவாமிகள் பெருமிதந் தோன்றப் பேசி அனை வரையும் ஆனந்தக்கடலி லாழ்த்துவார்.

அக்டோபர் நவம்பர் மாதங்களில் சொந்தச் சங்கங்களில் உபந் நியசிக்குமாறு அவருக்கு அநேக வரவேற்புப் பத்திரங்கள் வந்து குவிந் தன. 'வெஸ்ட்மினிஸ்டரி' லிருந்த ஓர் பிரசித்தர் அவரை வரவேற் றுபசரித்துப் பாதபூஜை செய்து வேதாந்த விசாரத்தில் ஓர் நன் மாணக்கரானர். 'சீசேம்' கிளப்பின் (Sesame Club) ஆதரவில் சுவாமிகள் அடிக்கடி சொற்பொழிவுகள் நிகழ்த்தினர். எட்வர்ட் கார் பெண்டர், பிரடரிக். ஹேச். மையர்ஸ், முதலான வித்வத் சிரோமணி கள் சுவாமிகளின் அந்தரங்க மாணவரானர்கள். பல உயர்தர தேவா லய பரிபாலகர்களான பாதிரிமார்களும் சமயவித்யா விற்பன்னர்களும் அவரைச் சூழ்ந்து உபசரிக்கத் தொடங்கினர்.

இதேசமயத்தில் சுவாமிகள் வேதாந்த நூலொன்று வரைந்து கொண்டிருந்தார். அவர் இப்பொழுது பல விஷயங்களில் கவனஞ் செலுத்தவேண்டி யிருந்தது. காணவருபவர்களைக் கண்டு பேசுவதும், காலையிலும் மாலையிலும் வேதாந்த வகுப்புகளுக்குச் செல்வதும்,

பொதுக் கூட்டங்களிற் பேசுவதும், புத்தகம் வரைவதும் இந்தியாவில் தாமினிமேல் நடத்தவேண்டிய விஷயங்களைப்பற் றிச் சிந்திப்பதும் அவற்றைக் குறித்து இந்தியாவி லுள்ள தம தன்பர்களுக்குக் கடிதங்கள் எழுது வதுமாகச் சிறிதும் ஓய்வில்லாம லுழைத்து வந்தார். அவர் செய்தரு ளிய உபந்நியாசங்களும், வேதாந்த உபதேசங்களும் அவ்வப்போது அச்சாகி வெளி வந்துகொண்டிருந்தன. அவருடைய இராஜயோக உபந்நியாசங்களும் புத்தக ரூபமாய்ப் பிரசுரிக்கப்பெற்றன. இப்புத்த கத்தின் முதற்பதிப்பு முழுவதும் செலவாகி, இரண்டாம் பதிப்புப் புத் தகத்தைப்பெற ஆயிரக்கணக்கில் தேவைப்பத்திரங்கள் வந்திருந்தன. ஹிந்து விக்ஞான சாஸ்திர ஆராய்ச்சி நூல்களை வெளியிடவேண்டு மென்ற விருப்பம் சுவாமிகளுக்கு மென்மேலும் அதிகரித்துக் கொண்டே வந்தது. பிற்காலத்தில் 1901-ம் ஆண்டு ஜனவரி மாதத் தில் சுவாமிகள் தமது சுற்றுப் பிரயாண வேலையைச் சுருக்கிக்கொண்டு ஏகாந்தமாக மாயாவதியிலிருந்து 'ஹிந்து சமயதத்துவ நூற்கோவை' யொன்றை ஆங்கிலத்தில் வரைய விருப்பங்கொண் டிருந்தார். அப் பால், பேலூர் ஆஸ்ரமத்திற்குத் திரும்பி வந்ததும் 'உலகிற்கு இந்தியா வின் செய்தி' 'தெய்வீகஞான சக்தி' எனும் இரண்டு பெரிய நூல்களை எழுதத் தொடங்கினர்.

அல்லும் பகலும் வேலை.

இங்கு இப்படியிருக்க, அமரிக்காவில் சுவாமிகளிடம் காஷாயம் பெற்ற துறவிகள் உற்சாகத்தோடு வேலைசெய்து வந்தனர். பிறருக்கு உதவிபுரிய முன் வருவதுகூடத் தமக்குப் பந்தத்தை யுண்டாக்கி விடும் என்று கருதிய விவேகானந்த சுவாமிகள், இப்பொழுது பொன் னும் பொருளும், ஆடையும் அணியும், புத்தகங்களும் பெட்டிகளும் சிஷ்யர்களும் தம்மைச்சூழ, பாரததேசத்தின் சமயோத்தாரணமொன் றை மட்டுங் கருதி இங்கிலாந்தில் பெரிய குடும்பியா யிருந்தார். தமது நிலையை அவர் உணராதிருக்கவில்லை; அவ்வாறு அவர் கொண் டதும் குற்றமாகாது. பந்தத்தை மனவுறுதியில் கணத்தில் நிவர்த்தி செய்துகொள்ளக்கூடிய சக்தியுடையவர் களுக்கு எத்துணைச் சுற்றுப் பொருள்கள் இருப்பி னென்ன? அவற்றையெல்லாம் சுற்றி யெறிய அவருக்கு எத்தனை கணநேரம் பிடிக்கும்? ஆகஸ்ட்டு மாதம் 23வ சுவிட்சர்லந்திலுள்ள லூசர்னியிலிருந்து சுவா மிகள் இந்தியாவிலிருந்த தமதன்பருக்கு வரைந்த கடிதத்தில் இவ்

இங்கிலாந்தில் வேதாந்த பிரவர்த்தகப் பூர்த்தி.

விஷயமே தர்க்கபூர்வமாய் நிரூபிக்கப்பட்டிருந்தது. இந்துக்கள் தொட்டதிலெல்லாம் சந்தேகமும் தோஷமுமே காணக்கூடிய குதர்க்க புத்தியுடையவர்க ளாகிவிட்டார்க ளென்பதை சுவாமிகள் அறிந்து அவ்வப்பொழுது 'உஷார்' கடிதங்கள் வரைந்துகொண்டு வந்தார். இவற்றை யெல்லாந் துறந்து பழைய பரிவ்ராஜகராய் வெளிப்பட அவர் பல தடவைகளில் எண்ணியதுண்டாயினும், இறைவன் திருவருளை எவர்தான் மீறமுடியும்? பின்னால், அவர் எவ்வளவோ மகத்தான கார் யங்களைச் செய்யவேண்டி யிருக்கின்றதல்லவா? பாரத சனாதன தர் மத்தை உயர்த்தி, இந்து மக்களைத் தத்தம் சமயக் கடமைகளிற் றூண்ட வேண்டிய காரியத்தை அவர் செய்யவேண்டியிருந்தது. அவர் தமது இந்திய அன்பர்கட்கும் மாணவர்கட்கும் அடிக்கடி எழுதிக் கொண்டிருந்த கடிதங்களிலெல்லாம் ஆறுதல் வசனங்களே சாலவும் நிறைந்திருந்தன. ஒரு கடிதத்தில், அவர், 'வீரர்களே! பயப்படாதீர் கள். என் அன்பர்களே! அரிய காரியங்கள் நடைபெறப் போகின் றன. மன உறுதியோடிருங்கள். மாரிக்காலத்தில் நான் இந்தியா வுக்குத் திரும்பப்போகிறேன். சர்வேஸ்வரன் நம்முடனிருப்பான். வீரர்களே! வேலை செய்யுங்கள். தளராதீர்கள்' என்று தீட்டியிருந் தார். 'பிரம்மவாதினி' என்னும் பத்திரிகை இந்தியாவில் அப்பொழுது மகத்தான மதசேவை செய்துகொண்டிருந்தது. சுவாமிகளுடைய தூண்டுதலால் அவரது அடியார்களும் உற்சாகத்தோடு உழைத்து வந் தார்கள். 'லண்டனில் வேதாந்த ஸ்தாபனம்' ஒருவாறு திருப்திகா மாக முடிவடைந்தது.

35-ம் அத்தியாயம்

பாரத பூமிக்கு வருகை

கற்பகத்தைப்போல அடுத்தவர்களுக் கெல்லாம் அறிவூட்டிய ஐயன், சுவாமி அபேதானந்தரைத் தமக்குப் பின் இங்கி லாந்தில் மதசேவை செய்துவருமாறு ஆயத்தப்படுத்தி வந்தாரென்று முன் அத்தியாயத்திற் கூறினோம். 'புளூம்ஸ் பார்ரி ஸ்குயர்' என்னு மிடத்தில் அக்டோபர் மாதம் 27-ந் தேதி சுவாமிகள் அபேதானந்த ரைத் தமக்குப் பதிலாக உபந்நியசிக்குமாறு அனுப்பினார். அபேதா னந்தரின் பிரசங்கத்தை அங்குக் கூடியிருந்து கேட்டவர்களுக்கு அள விலா மகிழ்ச்சி யேற்பட்டுவிட்டது. இதுகண்ட சுவாமிகளடைந்த

திருப்திக்கோ அளவில்லை. அப்பொழுது சாரதானந்தர் அமரிக்காவில் தமது மதசேவையை விடாமுயற்சியுட னியற்றி விசேட வெற்றி யடைந்துவரும் செய்தி சுவாமிகளுக்கு அடிக்கடி கிடைத்து வந்தமையால் அமரிக்காவைப்பற்றித் தாம் அதிகக் கவலைகொள்ளத் தேவையில்லை யென்றவர் அகமகிழ்ந்தார். அபேதானந்தரின் வெற்றி, சுவாமிகளுக்கு அவரைக்கொண்டு இங்கிலாந்தில் வேதாந்த ஸ்தாபனஞ் செய்யலாமென்ற உறுதியை ஈந்தது. மேலும், மிஸ். வால்டோ வென்னும் அமரிக்கா நாட்டு சிஷ்யை, சாரதானந்தருடன் ஒத்துழைத்து வந்தார். சாரதானந்தரும் அமரிக்காவின் பல பாகங்களிலும் பலருடன் அன்பு பூண்டு தமது சேவையைக் குன்றாது புரிவாராயினர். ஆகவே, 1896-ம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் சுவாமிகளின் சித்தம் இந்தியாவையே நாடியிருந்தது. இதை சுவாமிகள் இரண்டொருவரிடம் சொல்லி வந்தார். புல் அம்மையாருக்கும் தாம் இந்தியாவுக்குப் பிரயாணப்படப் போவதாக, தமது உத்தேசங்களை யெல்லாம் வெளியிட்டு கடிதமொன்று வரைந்தார். அதற்கு அவ்வம்மை தாம் யதேஷ்டமாகப் பொருளுதவி புரிய உத்தேசித்திருப்பதாயும், அதை ஏற்று, இந்தியாவில் ஒரு தலைமையான மடத்தை ஸ்தாபிக்கும்படிக்கும் கோரிய பதில் கடிதமொன்று கிடைத்தது சுவாமிகள் அதற்கு வந்தன பூர்வமாகத் தாம் முதலில் தமது வேலையைச் சிறிதாகவே தொடங்கப்போவதாயும், அவசியமான பொழுது அவ்வம்மையாரின் உதவியை ஏற்றுக்கொள்வதாயும் எழுதிவிட்டார்.

சுவாமி அபேதானந்தரின் அபார வெற்றி

இவ்வித மிருக்குநாளில், ஒருநாள் வேதாந்த வகுப்பு முடிந்ததும், சுவாமிகள் திடீரென்று சேவியர் அம்மையை யழைத்து 'நேபிளி' (Naples) லிருந்து சௌகரியமான கப்பலுக்கு நான்கு டிக்கட்டுகள் வாங்கும்படிச் சொன்னார். இயன்ற அளவு கடல் யாத்திரையைச் சுருக்கவேண்டுமென்பது அவருடைய விருப்பம். சேவியர் துரையும் அன்னார் மனைவியாரும் சுவாமிகளுடன் இந்தியாவுக்கு வந்து, அவரது மதசேவையை உடனிருந்துதவி நடத்தி வைத்து, வானப்பிரஸ்தராய் வாழவேண்டுமென்ற நோக்கமுடையாராதலின், அவர்கள் தாமும் சுவாமிகளுடன் பிரயாணப்பட நிச்சயித்து, செய்ய வேண்டிய ஏற்பாடுகளை விரைவாகச் செய்யத் தொடங்கினர். வழியில் அவர்கள் இத்தாலி தேசத்தின் இரண்டொரு முக்கிய நகரங்களைப்

திடீரென்று பிரயாண நிச்சயம்.

போய்ப் பார்க்கவும் உத்தேசித்தனர். அன்றையதினமே 'நார்த் ஜெர் மன் லாயிட்' என்னும் பாகத்திலிருந்து ஓர் புதுப் புகைக்கப்பல் சிலோ னுக்கு டிசம்பர் மாதம் 16உ புறப்பட்டு நேப்பிளிலிருந்து செல்லப் போவதாக விசாரித்தறிந்து அதற்கு டிக்கட்டுகள் வாங்கி விட்டார் கள்.

சுவாமிகள் அப்பொழுதே தமது சென்னை யன்பர்கட்குத் தங் கள் வருகையை அறிவித்து, முதலில் சென்னையிலும் கல்கத்தாவிலு மாக இரண்டு மடங்களைத் தாம் ஸ்தாபிக்கக் கருதியிருப்பதாயும், தமது மெய்யன்பரான சேவியர் துரையவர்கள் ஹிமாசலத்தில் ஓர் ஆச்சிர மத்தை நிறுவவேண்டு மென்று அபிப்பிராயப்படுவதால் அங்கேயு மொன்றை ஸ்தாபிக்க உத்தேசித்திருப்பதாயும் ஒரு கடிதம் வரைந் தார். 'முதலில் இந்த மூன்று மடங்களை வைத்துக்கொண்டு நாம் நமது வேலையைத் தொடங்குவோம். பிறகு பம்பாயிலும் அலகபாத் திலும் மடங்களை ஸ்தாபிப்போம். இறைவன் அருள் பாலிப்பனேல் பின்னர் நாம் ஒவ்வொரு தேசத்திற்கும் மதப் பிரசாரகர்களை அனுப் பிப் பாடுபடுவோம்' என்ற சில வசனங்கள் அக்கடிதத்திற் காணப் பட்டன.

சேவியர் துரையும் அவருடைய இல்லக்கிழத்தியாரும் அவரு டைய சங்கற்பத்தை நிறைவேற்றுவதில் அவரைவிடப் பன்மடங்கு ஊக்க முடையவர்களா யிருந்தார்கள். உலக இன்பங்களைத் துறந்து சதாகாலமும் சமயத்தொண் டியற்றிப் பேரின்ப வீடெய்தும் பெரு வாழ்வைப் பெறுவதிலேயே அவர்களுடைய மனம் நாடியிருந்தது ஆகவே, அவர்கள் தம் குடும்ப விஷயங்களை ஒருவிதமாக முடிவு செய்து, தம் ஆபரணங்கள், விலையுயர்ந்த படங்கள், புத்தகங்கள், காணி பூமிகள் அனைத்தையும் விற்று விட்டு, சேர்ந்த பொருளையெல்லாம் சுவாமிகளிடம் சமர்ப் பித்து, தனியே ஓரிடத்தைக் கொஞ்ச நாளைக்கு வாடகைக் கமர்த்திக்கொண்டு பிரயாண சித்தராயிருந்தார்கள்.

உடன் புறப்பட்ட உத்தமர்கள்.

அவர்க ளோடு, ஸ்ரீராமசந்திர மூர்த்திக்கு வாய்த்த இலக்குமணரைப் போன்று, சுவாமிகளுக்குத் தொண்டு புரிவதையே தமது பிறவிப் பய னாகக் கொண்டு, பிரம்மசாரியாய், சுவாமிகளுக்குப் பணிவிடை செய்த வண்ணமிருந்த குட்வின்துரை யவர்களும் பிரயாணப்பட்டார். மிஸ். முல்லரும் அவருடைய தோழியான மிஸ். பெல்லும் சில தினங் கள் சென்றபின் புறப்பட்டுவர, வேண்டிய காரியங்களைச் செய்து

கொண்டிருந்தார்கள். மிஸ். மூல்லரைக்கொண்டு பெண்களுக்கென இந்தியாவில் தேசீய சமயாசாரக் கல்விக் கழகமொன்றை நடத்த வேண்டுமென்ற எண்ணமும் சுவாமிகளுக்கு அப்பொழுது உதயமாயிற்று. மிஸ். மார்கரட் நோபிளையும் பின்னர் இந்தியாவுக்கு வரவழைத்து இப் பெண் கல்விக் கழக விஷயங்களை மேற்பார்வை பார்த்து வருமாறு அவர் வசமாக்க வேண்டுமென்ற எண்ணமும் அவருக்கிருந்தது. ஆக, இப் பெரியார்களின் உதவியால், தாம் அரும்பாடுபட்டு, காடு மேடுகளிலும், வனாந்தரங்களிலும் சுற்றிப் பட்ட கஷ்டங்களின் பயனெல்லாம் இறைவனருளால் விரைவில் கைகூடுமென்ற நம்பிக்கையால் அவருள்ளம் களித்தது.

இந்திய பிரசித்த ஞானி தமது ஜென்ம பூமிக்குப் பிரயாணமாகப் போகிறாரென்ற சமாசாரம் மெல்ல லண்டன்மா நகரெங்கும் பரவலாரம்பித்தது. அதுகேட்ட அன்பர்களனைவரும் துக்கக்கிராந்தர்களானார்கள். ஓர் உபசாரப் பத்திரம் வாசித்துக் கொடுப்பதாக பிரமுகர்கள் பலர் கூடித் தீர்மானித்தனர். டிசம்பர்மீ 13வ ஞாயிற்றுக்கிழமையன்று மாபெருங்கூட்டமொன்று கூட்டப்பெற்றது. லண்டன் நகரின் சுற்றுப்பக்கங்களிலிருந்தும் அன்பர்கள் திரள் திரளாக அன்று வந்திருந்தனர் இ. டி. ஸ்டர்டி துரையவர்கள் அப்பொழுது தலைமை வகித்தார். அபேதானந்த சுவாமிகளும் அங்கு பிரசன்னமாயிருந்தார். சுவாமிகளின் உள்ளம் அக்கூட்டத்தைக் கண்டதும் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவின்று. சுவாமிகளிடத்தில் ஐரோப்பிய அன்பர்களுக்கு எவ்வளவு பக்தியும் விஸ்வாசமுமிருந்த தென்பதை உணர்த்த அவருக்களிக்கப் பெற்ற வந்தனோபசாரப் பத்திரத்தை ஈண்டு மொழிபெயர்த்து வரைகின்றோம். அது வருமாறு:

'லண்டன்' வாசிகளளித்த உபசாரப் பத்திரம்.

"தாங்கள் விசேஷ பாண்டித்யத்துடன் போதித்துவரும் வேதாந்த சித்தாந்தங்களை இந்த லண்டன் நகரத்திலே சிரவணம் பண்ணும் பாக்கியத்தையடைந்த சீடர்களாகிய அடியேங்கள், தாங்கள் பலா பேக்ஷையில்லாமல், லோகோபகாரார்த்தமாய் நடத்த முன்வந்துள்ள உத்தம கைங்கரிய விஷயமாயும், அதன்வாயிலாகத் தங்களுடைய சீடர்கள் அடைந்துள்ள நன்மைகளின் விஷயமாயும், எங்களுக்கு ஏற்பட்டுள்ள மனமார்ந்த மகிழ்ச்சியை இதுபோழ்து வெளியிடாமற்போனால், நாங்கள் எங்கள் கடமையிற் றவறியவர்களாவோம்!

தாங்கள் இவ்வளவு விரைவில் பிரயாணசித்தரானமைபற்றி நாங்கள் மிக்க துக்கத்தை யடைகின்றோம். ஆனால் இந்தியாவிலுள்ள எமது சகோதர

சகோதரிகளும் தங்களுடைய பரமோத்கிருஷ்டமான கைங்கரியத்தின் பலனை அடையவேண்டியவர்கள் தான். அதை நாங்கள் ஒப்புக்கொள்ளா விடில் மிக்க சிறந்ததென கருதும்படித் தாங்கள் எங்களுக்குப் புகட்டிய மிகவும் உயர்ந்த வேதாந்தத்தை நாங்கள் சரிவர உணர்த்த சீடர்கள் ஆக மாட்டோம் !

அவ்வித கைங்கரியத்தில் தங்களுக்கு மென்மேலும் அபீஷ்டசித்தி உண்டாக வேண்டு மென்பதுதான் தங்களுடைய உபதேசங்களின் உயர்வையும், தங்கள் போற்றுதற்குரிய குணங்களையும் கண்டு களித்த எல்லோரும் ஒன்று கூடிச் செய்யும் தோத்திரம். விதியிலுள்ளதுபோல ஒழுக்கத்திலும் நாங்களனைவரும் இறைவனது மெய்யடியார்களா யிருத்தற்கு எங்களைக் கைதூக்கிவிட்டு உதவிசெய்யும் பெரிய வேதாந்த நூலா யமைந்திருப்பது தங்களுடைய நற்குணச் சிறப்பேயென்று நாங்கள் நம்புகிறோம்!

தாங்கள் மறுபடியும் எங்கள் தேசத்திற்கு கூடிய சீக்கிரத்தில் திரும்பி வருவீர்களென்று பூர்ணமாய் நம்புகிறோம். ஆனால் தங்களுடைய உபதேசங்களைச் செவியுற்றது முதல் பாரதபூமியிடத்தில் எங்களுக்கு ஒருவித அடக்க முடியாத அன்பும், ஆதரவும் இயற்கையாக ஏற்பட்டிருப்பதால், தாங்கள் இயற்றிவரும் சிறந்த சமயத்தொண்டின் பயனை எங்களையொத்தே அந்நாட்டினரும் அடையப் போகின்றார்களென்பதைக் குறித்து நாங்கள் உண்மையாய்ச் சந்தோஷப்படுகிறோம் !

முடிவுரையாக, ஹிந்து மகா ஜனங்களுக்கு எங்கள் அன்பான அனுதாபத்தை அறிவிக்கவேண்டுமென்றும், நாங்களனைவரும் ஒரே பிரம்ம ஸ்வரூபமெனத் தாங்கள் உபதேசித்தருளியவற்றை நாங்கள் சத்தியமாகவே நம்பி, அவர்களுடைய கஷ்ட நிஷ்டூரங்களை எங்களுடையதாகவே பாராட்டிவருகின்றோமென்றும்-இவ்வுறுதி மொழிகளை எங்களிடத்திலிருந்துதாங்கள் ஏற்றருள வேண்டுமென்றும் மிகவும் தாழ்மையுடன் வேண்டுகின்றோம்.''

அன்று கடைகள் மூடப்பட்டன. தெருக்கள் சந்தடியற்றிருந்தன. சுவாமிகளுக்குப் பிரிவுபசாரப் பத்திரம் வாசித்துக் கொடுத்த மண்டபம் மலர்களாலும் சித்திரங்களாலும் விசேஷமாக அலங்கரிக்கப் பெற்றிருந்தது. சுவாமிகளின் முடிவுரையான உபதேசங்களைக் கேட்கவும், அவரைத் தரிசிக்கவும், கூட்டமிகுதியால் இயலாமற் போனால் அவர் வெளியே ஏகும்பொழுது அவருடைய ஆடையையேனும் தொட்டு கண்களில் ஒத்திக்கொள்ளவும் ஆவல் கொண்டு எத்தனையோபேர் அங்கு வந்திருந்தனர். மேடையின்மீது சங்கீத வித்வான்கள் பாடுவதும் பண்ணிசைப் பதுமாக விருந்தனர். சில நயனங்களில்

பிரிவு உபசாரக் கூட்டம்.

கண்ணீர் ததும்பிக்கொண்டிருந்தது. சிலர் சோர்ந்தும் மனந்தளர்ந்து மிருந்தனர். இத்தருணம் சுவாமிகள் கெம்பீரமாகப் பிரசங்க மேடையை யடைந்தார். மேற் குறிப்பிட்ட உபசாரப்பத்திரம் அப் பொழுது வாசித்துக் கொடுக்கப்பெற்றது. அவர் அதைப் பெற்றுக் கொண்டு, தமது பிரிவினால் வருந்தக்கூடிய அவ்வன்பர்களுக்குத் தக்க சமாதானங்கள் கூறி, தாமிந்தியாவுக் கேகியபின் அவர்கள் செய்ய வேண்டிய வேலையை யுணர்த்தி அவர்களைக் களிப்பித்தார்.

சுவாமிகளின் அத்வைத வேதாந்த சம்பந்தமான கடைசி லண் டன் உபந்நியாசம் மிகவும் மேன்மை பொருந்தியதா யிருந்தது. அதைக்கேட்ட பலர் "அந்தோ! நாம் இந்தியாவிற்றான் பிறந் தோமா?" என்றெண்ணி ஏங்கினர். "ஆஹா! கடவுளை நேராகத் தரி சித்த பரம புருஷர்களுக்கன்றி வேறெவருக்கு வேதாந்த விஷயங்களை இவ்வளவு சுலபமாகவும், இனிமையாகவும் துரிதமாகவும் பேசி விளக்க முடியும்?" என்று புகழ்ந்தார் சிலர். "இவரைப்போல இந்தியாவில் இன்னும் எத்தனை மகான்க ளிருக்கின்றனரோ? நேற்று இங்குவந்த அபேதானந்த சுவாமிகளும் இவரைப்போன் றிருக்கின்றாரே!" என்று சிலர் அதிசயித்தனர். பின்னும் பிபின் சந்திரபாலர் 'இந்தியன் மிர்றர்' என்னும் பத்திரிகைக்கு இப்பிரசங்கத்தைச் சிறப்பித்து ஒரு கடிதமும் வரைந்திருந்தார். சுவாமிகளே தமது இங்கிலாந்து வேலையைப்பற்றி கல்கத்தா வந்தனுபசாரப் பத்திரிகையில் குறிப்பிட்டுள்ளது பின் வருமாறு:

அமெரிக்காவைக் காட்டிலும் இங்கிலாந்திற் செய்த வேலையின் உயர்வு

"நான் அமெரிக்காவிற் செய்ததைவிட இங்கிலாந்திற் செய்த வேலை எனக்கு மிகவும் திருப்திகரமா யிருக்கிறது. வீரமும், அஞ்சாமையுமுடைய ஆங்கி லேயர்கள் ஏதாவது ஒரு விஷயம் அவர்களுக் குணர்த்தப்பட்டால், பிறகு அதை ஆயுள் பரியந்தம் மறப்பதேயில்லை. அச்சாதியா ருக்குள்ள அபார அனுபவ ஞானமும், பலமும் உடனே பலன் தந்துவிடுகின்றன. இத்தகையோரை நான் வேறெந்த தேசத்திலும் கண்டதேயில்லை. இத்தகைய உயர்ந்த அனுபவ ஞானத்தையும் சக்தியையும் நீங்கள் வேறு எந்த தேசத்திலும் காண முடியாது. அவர்களிடம் பாவனை சிறி தளவாயும், காரியக்கண்—குறி அதிகமாயு மிருக்கின்றது. அறிவின் ஊற் றாகிய அவர்கள் மனதை யார்தான் முற்றிலு மறிய முடியும்? ஆஹா! அவர்கள் எவ்வளவு சங்கற்பமும் உழைப்பு முடையவர்களா யிருக்கிறார் கள். அவர்கள் வீரர்கள் நிறைந்த குலத்தினர். அவர்களே உண்மை க்ஷத் திரியர்கள். அவர்களுடைய வித்தை உணர்ச்சிகளை ஒளிப்பதேயன்றி

வெளியிடுவதல்ல. சிறு பிராயம் முதல் அவர்கள் அவ்விதமே பழக்கப்படு கிறார்கள். ஆனால், இத்துணை வீரத்தன்மையுள்ள விஷயங்களோடு, போர் வீரன் என்னும் திரைக்குப் பின்னால், அன்பு என்னுமோர் ஆழமான ஊற்று அவர்கள் ஹிருதயத்தே இருக்கின்றது. அதை எப்படி அடையக் கூடுமென்பதை நீங்கள் அறியக்கூடுமானால், அடைந்துவிட்டால், உண்மை யான உறவும் அன்பும் அந்நியோன்ய பாவமும் பெருகிவிட்டால், அவர்கள் உங்களிடம் தமது அந்தரங்கங்களைக்கூறி நீடித்த நட்பு பூண்டு, உங்கள் சேவகராகிவிடுவார்கள். ஆகவே, எனது அபிப்பிராயத்தில் யான் இங்கி லாந்திற் செய்த காரியமே சர்வோத்தமமானதென்று கருதுகிறேன்."

அப்பால், டிசம்பர்மீ 16உ சுவாமிகளும் சேவியர் துரை யவர் களும் அவர் மனைவியாரும் லண்டனைவிட்டுப் பிரயாணமானார்கள். குட்வின் துரை யவர்கள் சவுத்தாம்டனி (Southampton) லிருந்து புகைக்கப்பலேறி நேபிள்ஸி லவர்களைச் சந்திக்கப் புறப்பட்டுவிட்டார். லண்டன் ஸ்டேஷனில் ஆயிரக்கணக்கான பிரியர்கள் வந்து சுவாமி களை வழி யனுப்பினர். அவருடன் அவ்வன்பர்கள் உயிரும் வெகு தூரம் சென்று மீண்டன. சுவாமிகளுடைய மனத்தில் ஜன்ம பூமி யின் நினைப்பே குடிகொண் டிருந்தது.

சற்குண சம்பந்தரான சேவியர் துரையும், அவர் மனைக்கிழத்தி யாரும் உடன் வர, லண்டன்மா நகர் பின்னேக சுவாமிகள் பிரயாண மானார். அவருக்கு அப்பொழுது கடமை என்ற ஓர் சுமை குறைந் தது போலிருந்தது. சுவாமி அபேதானந்தர் சிரத்தையாகத் தமது சமயத்தொண்டை நடத்தி வருவாரென்ற பரிபூர்ண நம்பிக்கை அவ ருக்கு ஏற்பட்டு விட்டது. 'நாம் நமது கடமையை வஞ்சனையின்றிச் செய்து விட்டோம். இனி பகவான் துணை புரி வார் அவனால் ஆட்டுவிக்கும் யந்திரமன்றோ நாம்' என்று அவர் தியானித்துக் கவலை யொழிந் திருந்தார்.

ஆகா! என்ன தேசாபிமானம்.

ஆகா! பாரத நாட்டை யடைய வேண்டுமென்ற அவாது ஆவலை என்னென்போம்? அவர் சேவியர் துரையை நோக்கி 'எனக்கு இந்தி யாவைப்பற்றிய எண்ணத்தைத் தவிர வேறெவ்வித சிந்தனையுமில்லை. இங்கிருந்தே என் மனம் இந்தியாவுக்குத் தாவுகிறது' என்றார். பிர யாண தினத்தன்று மாலையில் ஓரன்பர் சுவாமிகளைப் பார்த்து 'ஐயனே! செல்வமும், சிறப்பும், வலிமையும் புகழும் ததும்பும் இம்மேல் நாட் டில் நான்காண்டுகள் வசித்தபின் தங்களுக்கு எப்படி இந்தியாவிற்குப்

போக வேண்டுமென்று எண்ண முண்டாகிறது?' என, சுவாமிகள் 'இங்கு வருவதற்கு முன் நான் இந்தியாவிடத்தில் அன்பு பூண்டவன். இப்பொழுது இந்தியாவின் தூளியே என்னைப் பாக்கியவானாக்கி யிருக்கிறது. அதன் காற்றுப் பட்டமாத்திரத்தில் நான் சத் புருஷனாவேன். அது மகா பரிசுத்த பூமி.' என விடை பகர்ந்தார். ஆஹா! என்ன தேசாபிமானம்!

சுவாமிகளும் அவருடைய சகாக்களும் லண்டனைவிட்டகன்று, டோவர், (Dover) கலே, (Calais) மண்ட் செனிஸ் (Mont Cenis) மார்க்கமாக மிலானை (Milan) நோக்கிச் சென்றார்கள். பிறகு பிரான்ஸ் வழியே 'ஆல்ப்ஸ்' மார்க்கமாக இரயில் மென்மேலுஞ் சென்றது. இரயில் மிலானை யடைந்ததும், சுவாமிகட்குப் பூர்வ இத்தாலிய தேசச் சரித்திரம் முழுதும் ஞாபகத்திற்கு வந்தது. தாம் கலாசாலையில் வாசித்தபொழுது மனப்பாடஞ்செய்த ரோமச் சரித்திர மனைத்தும் நிகழ்ந்த பூமியில் தாம் இருந்தமை யெண்ணி அவர் உவகை கூர்ந்தார். மிலானில் அவர்கள் பிரசித்தி பெற்ற தேவாலயத்திற் கருகாமையில் ஓர் ஹோட்டலில் தங்கினார்கள். அதற்கப்பால், அவண் நீங்கி, கோபுரத்திற்கும் 'காம்போ சான்டே'வென்ற தேவாலயத்திற்கும் பேர் போன பைசா (Pisa) நகரத்தை யடைந்தார்கள். பைசா நகர கோபுரத்தின் மேல் ஏறிப்பார்க்கலாமென்று சேவியர் துரை கூற சுவாமிகளு மிசைந்தார் அவ்விதமே, சென்று அதன் சிகரத்திலிருந்து நாலா பக்கங்களிலும் காணப்படும் அழகிய காட்சிகளைக் கண்டு களித்தார். மிலானிலும் பைசாவிலுமுள்ள மிக்க நேர்த்தியான பளிங்கு வேலைத் திறங்களைக்காண அவருக்கதிக ரம்யமாக விருந்தது பின்னர், அவர்கள் பைசாவிலிருந்து புறப்பட்டு பிளாரன்ஸ் (Florence) நகருக்கேகினர். பூ மண்டலத்திலேயே சிறப்ப விசேஷம் நிறைந்த இடத்திற்குப் பேர்போன அப்பட்டணத்தில் இரண்டொரு நாட்கள் தங்கிச் சரித்திர முக்கியாம்சமான இடங்களையெல்லாம் சுவாமிகள் தமதன்பருடன் போய்ப் பார்த்துவந்தார். அப்படிச் செல்லும்போது வழியில் யதேச்சையாக சிகாகோ நகரில் தமக்குப் பேருதவிகள் பல புரிந்த ஹேல் துரை யவர்கள் தமது பத்னி சகிதம் வரக்கண்டு பெருமகிழ்ச்சி யடைந்து அளவளாவிப் பேசினார். அவர்கள் இத்தாலியா தேசத்தில் யாத்திரை செய்தவண்ணம் அங்கு வந்திருந்தார்கள். ஆனால் அப்பொழுது ஏற்பட்டது எதிர்பாராத சந்திப்பாதலின் விசேஷ குதூகல மேற்பட்டிருந்தது.

பிளாரன்ஸை விட்டு இரயில் ரோமாபுரியை நோக்கிப் புறப்பட்டதும் தொல்புகழுமுதச் சுடர்பூமியான ரோமாபுரியை நாம் விரைவில் காண்போம் என்னு மெண்ணத்தால் அவருள்ளம் உவகை கூர்ந்தது. ரோமாபுரி அஸ்தினாபுரத்தைப் போன்ற பெருமையுள்ளதல்லவா? அப்புரியை யடைந்ததும் சுவாமிகள் பழம் பெருங் கட்டிடங்களையும், அழிந்துபட்ட ஆலயங்களையும், இடிந்து தரைமட்டமாயிருந்த நெடும் புரிசைகளையும் கண்டு விம்மித மடைந்தார். இவ்விதம் ஒரு வார காலம் ரோமாபுரியிற் கழிந்தது.

ரோமா புரியில் வாஸம்

சேவியர் அம்மையின் சிநேகிதையான மிஸ். மாக்லியோட் என்பார் ரோமாபுரியி லிருந்த மிஸ். எட்வர்ட்ஸுக்கு ஓர் கடிதம் அளித்திருந்தமையால், அவர் அனைவரையும் வரவேற்று உள்ளன்புடன் உபசரித்தார்; சுவாமிகளின் பெருமைகளை யுணர்ந்து போற்றிச் சிஷ்யையு மானார். அவரது உதவியால் இன்னும் பல முக்கிய ஸ்தலங்களைப் பார்க்கக்கூடிய வசதிகளு மேற்பட்டன. அவர்கள் பார்த்த பலவற்றுள்ளும் 'விடிகன்' 'செயிண்ட்' 'பீடர்ஸ் காதிட்ரல்' (மாதா கோயில்கள்) ஆகிய இவற்றின் காட்சிகள்தான் மிக்க விசேஷமாயிருந்தன. 'இந்த ரோமாபுரி பழங்காலத்தில் எவ்வளவு நாகரீகமுள்ள மக்களுடன் அமோகமாக வாழ்ந்திருக்கும்!' என்று சுவாமிகள் யோசித்து, அங்ஙனமே நிஷ்டையாகி, அனைத்தையும் மானசீகமாகக் கண்டார். கிறிஸ்துநாதரின் சரித்திர வைபவ முழுதும் அவர் மனக்கண்கட்குப் பிரசன்னமாய் நடை பெறுவதுபோன் றிருந்தது.

பின்சியன் குன்று (Pincian Hill) பார்கீஸ் பார்க் (Borghese Park) ஏபியன் வே (Appian Way) இம்மூன்றிடங்கட்கும் சுவாமிகளை சேவியர் தம்பதிகள் அடிக்கடி ரதத்தில் அழைத்துச் சென்றார்கள். நகருக்கு வெளியேயுள்ள இப்பாகங்களில் அப்பொழுது மிகவும் ரமணீகரமான சீதோஷ்ணமா யிருந்தது. அறுபது நாழியும் சுவாமிகள் கிறிஸ்துநாதரைத் தியானித்த வண்ணமாயிருந்தார்; ஸ்ரீ கிருஷ்ணனாகவே இயேசுநாதரைக் கருதிப்போற்றினர்; கிறிஸ்துவும் ஸ்ரீகிருஷ்ணனும் ஒரே பிரம்மசொரூபிகளென்னும் அத்வைதஞானம் அவருக்கு அப்பொழுது அரும்பிற்று.

ரோமாபுரியை விட்டகல அவருக்குச் சிறிதும் மனம் வரவில்லை. ஆனால், அகன்றபின் அதனிலும் அதிக அன்பு பாராட்டுதற்கிடமான பாரதபூமியின் நினைவால் துக்கமும் உண்டாகவில்லை. இந்தியாவுக்கு உடனே புறப்பட வேண்டுமென்று சுவாமிகள் குறித்து நின்றார். மூவ

ரும் மறுநாளே நேபிள்ஸுக்குப் பிரயாணமானார்கள். அப்பொழுதும் புகைக்கலம் நேபிள்ஸை விட்டுப் புறப்படச் சிலநாட்களே இருந்தன.

விசூவியஸ் பாம்பியை நகரங்கட்கு விஜயம்.

அக்காலத்தை நேபிள்ஸில் கழித்து, புராதனமான பல இடங்களைப் பார்த்துவர உத்தேசித்தார்கள். ஒருநாள் விசூவியஸ் என்னும் பழமையான ஸ்தலத்தையும் மற்றொருநாள் பாம்பியை என்னும் அழிந்துபட்ட அணிநகரிருந்த இடத்தையும் சென்று பார்த்து வந்தார்கள். 'பாம்பியை' சுவாமிகளுக்குப் பூரி க்ஷேத்திரத்தைப் போற் றேன்றிற்று. பூரியைப்போல அப்புரியில் ஆலயங்கள் நிறைந்து காணப்பெற்றன. அந்நகரின்கண் ணிருந்த அபூர்வ வஸ்து காட்சிசாலையும், மீன் காட்சிசாலையும் அவர்கள் கண்களைக் கவர்ந்தன.

"அப்பப்பா! எப்பொழுது வருமோ இந்தியாவுக் கென்னை யிட்டுச் செல்லுங் கப்பல்" என்று சுவாமிகள் ஆவலுட னிருந்தார். சவுத்தாம்டனிலிருந்து புறப்பட்ட கப்பலும் நேபிள்ஸ் வந்தடைந்தது. அதில், சுவாமிகள் எதிர் பார்த்தவாறு குட்வின் துரை யவர்களும் வந்து சேர்ந்தார். 1886-ம் வருஷம் டிசம்பர்மீ 30உ யன்று, 1897-ம் ஆண்டு ஜனவரிமீ 15உ கொழும்புவை யடையுங் குறிப்புடன் அந்நீராவிக் கப்பல் நேபிள்ஸை விட்டுப் புறப்பட்டது. வழியில் நேபிள்ஸுக்கும் 'போர்ட் செட்' டுக்கும் இடையே நிகழ்ந்த ஓர் ருசிகரமான

கடல் யாத்திரையில் கருத்து நிறைந்த கனவு.

நிகழ்ச்சியை மட்டும் இங்குச் சுருக்கமாகக் குறிப்பிட விரும்புகின்றோம் அதாவது சுவாமிகள் ஒரு கனவு கண்டார். அது அவரைப் பலவித எண்ணங்களுக் காளாக்கியது. கடந்த சில வாரங்களாக அவர் கிறிஸ்து நாதரின் ஜென்ம பூமியிலேயே யாத்திரை செய்து கொண்டு வந்தவராதலால், கிறிஸ்தவ சமய விஷயங்களிலேயே அவருடைய புத்தியும் லயித்திருந்தது. அவர் ஒருநா ளிரவில் நித்திரைக்குப் போன பிறகு ஒரு கனவு ஏற்பட்டது. அதில் ஒரு வயோதிக ஆணுருவம் நீண்ட தாடியுடனும், ரிஷியைப் போன்ற தோற்றத்துடனும் அவர்முன் வந்து நின்று 'நான் இப்பொழுது உமக்குக் காட்டுமிடத்தை நன்றாய் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளக் கடவீர். தாங்கள் இப்பொழுது கிரீட் (Crete) என்னும் தீவி லிருக்கிறீர்கள். இதே பூமியிற்றான் கிறிஸ்துமதம் தோன்றிற்று' என்றது. மேலும் அத்தோற்றம் 'நான் தேரபுத்திரர்களில் ஒருவன்; இங்கு வசிப்பவன்' என்

றது. 'தேர புத்திரன்' என்ற பதத்திற்கு புத்தமதத் துறவிகளிற் பிரதமரான தேரா என்பவது சிஷ்யவர்க்கத்தில் யாளுெருவன் என்பது பொருள். அவ்வுருவம் முடிவாக 'நாங்கள் எந்த உண்மைகளேயும், சித்தாந்தங்களேயும் முதல் முதலில் வெளியிட்டோமோ, அவை கிறிஸ்தவர்களால் கிறிஸ்துநாதர் அருளிபதென்று இயம்பப்படுகின்றன. இதைத்தவிர, கிறிஸ்துநாதர் என்றவர் பிறந்ததாகவோ இருந்ததாகவோ இல்லை. இந்த இடத்தைப் பரிசீலனை செய்து பார்த்தால் இதற்குப் பல ஆதாரங்கள் கிடைக்கும் என்று சொல்லி மறைந்தது. சுவாமிகள் திடுக்கிட்டு விழித்தெழுந்து கப்பலின் டெக்குக்கு விரைந்து சென்றார்; அங்கு நின்றுகொண்டிருந்த கப்பல் தலைவரை நோக்கி 'இப்பொழுது மணி என்ன?' என்று கேட்டார். அதற்கவர் 'நள்ளிரவு' என்று சொல்லி வாய் மூடுமுன் சுவாமிகள், 'நாம் இப்பொழுது எங்கே யிருக்கிறோம்' என, அவர் 'கிரீட்டுக்குச் சுமார் ஐம்பது மைலுக் கப்பால்' என்றார். கிறிஸ்துநாதரின் சரிதையை உண்மையென்றே நம்பியிருந்த சுவாமிகளுக்கு இக்கனவால் சில சம்சயங்கள் ஏற்பட்டன. பால் என்னும் தீர்க்க தரிசியின் சரிதத்தி லவருக் கிருந்த ஆழ்ந்த நம்பிக்கையும் அவருள்ளத்தைவிட் டகலவில்லை. இவ்விஷயத்தைச் சுவாமிகள் சில ஆண்டுகட்குப் பின்னர் இங்கிலாந்திலிருந்த சிலா சாஸன ஆராய்ச்சி நிபுணரொருவருக்கு எழுதி சோதிக்கும்படிக் கேட்டிருந்தார். அதன் பயனுய் சுவாமிகளுடைய தீர்க்க சமாதிக்குப் பிறகு இதனைக் குறித்த பல உண்மைகள் கல்கத்தா 'ஸ்டேட்ஸ்மென்' எனும் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டன.

இச்சொப்பனத்தால் எத்துணை ஐயப்பாடுகள் ஏற்பட்ட பொழுதிலும், அவருக்கு மேரித்தாயின் மரகதச் செல்வரான இயேசு கிறிஸ்துநாதரிட மிருந்த பக்தி சற்றும் குறையவில்லை. இதனைப்பற்றி ஓர் ஆங்கிலமாது அவரைக் கேட்டபொழுது அவர் ஆவேசராய், "தாயே! நான் நாசரத் இயேசுநாதர் காலத்தில்மட்டும் இருந்திருப்பேனுல், அவருடைய திருவடிகளை என் கண்ணீரைக் கொண்டுமட்டும் கழுவி யிருக்க மாட்டேன். என் ஹிருதய இரத்தத்தைக்கொண்டே நீராட்டி யிருப்பேன்" என்று போன்பால் பகர்ந்தார்.

சுவாமிகளின் மனதில் இந்தியாவின் சமயசீர்திருத்த விஷயங்களே குடிகொண்டிருந்தன. பகற்காலத்தை சுவாமிகள் தமதன்பர்களுடன் சதுரங்கம் சொக்கட்டான் முதலியன விளையாடிக் கழிப்பார். பிரயாணகாலம் இவ்விதம் சந்தோஷமாகவே கழிந்தது. தாய்நாட்

டைத் தரிசிக்கவுள்ள ஆசையால், அன்பால் நாட்கள் நாழிகைகளாகக் கழிந்தன. வந்தது ஜனவரிமீ பதினைந்தாம் தேதியாகிய புண்யதினம்.

கொழும்புவில் கொண்டாட்டம்.

அதிகாலையில் கப்பல் கொழும்புவை நோக்கி வந்து கொண்டிருந்தது. சூர்யன் சீரியோன் வருகையைச் செப்புவான்போலக் கிழக்கு திக்கில் தேஜோமயனாகத் தோன்றினன். வரவர கொலம்புத் துறைமுகத்திலுள்ள பனைமரங்களின் தோகைகள் தென்பட்டன. இதைக் கண்டதும் சுவாமிகளின் உள்ளக் குதூகலத்தை யார்தான் அளவிட்டுரைக்க வியலும்? கரையில் அவருக்கு நடைபெற விருக்கும் அமோகமான வரவேற்பை அவர் கொஞ்சமேனும் எதிர்பார்த்தவரில்லை. கொழும்புக் கடற்கரையில் இந்திய சமூகத்தலைவர்களெல்லோரும் கூட்டங் கூட்டமாக அவரை வரவேற்கக் கூடியிருந்தனர். சுவாமிகள் சாதாரணமாகத் தமது நண்பரொருவருக்கு வரைந்த கடிதத்தில் தாம் இந்தியாவுக்குப் புறப்படும் செய்தி, கப்பல், வந்துசேரும்நாள், இடம் முதலியவற்றைக் குறிப்பிட்டு வரைந்திருந்தார். இவ்விஷயம் இந்தியா முழுதும் பாவி, இலங்கையிலும் வியாபித்துவிட்டது. அவரை வெகு சிறப்பாக வரவேற்கத் தென்னிந்தியா வெங்கணும் ஏற்பாடாயிருந்தது. அவருடைய சிஷ்யர்களி லொருவரும் அவரைச் சந்திக்க வேண்டி கொளும்புவுக்கு வந்திருந்தார். அநேகமாக எல்லாப் பத்திரிகைகளும் பெரிய எழுத்தில் சுவாமிகளின் விஜயத்தைப் பற்றி வரைந்து புகழ்ந்தன. ஆயிரக்கணக்கான வரவேற்புப் பத்திரங்களும், தந்திகளும் கொழும்புவில் அவர் தரிசனத்தை எதிர்பார்த்திருந்தன. சுவாமிகளின் 'பாரத பூமிக்கு வருகை'யைக் கேட்டவர்கள் சகலரும் தம்மையறியா தெழுந்த ஓர் உற்சாகத்தால் உள்ளம் பொங்கினர்.

36-ம் அத்தியாயம்.

தமிழ் நாடெங்கும் தக்க உபசாரம்

சர்வ தர்ம சமரஸ குருமூர்த்தியான விவேகானந்த சுவாமிக ளின் வருகை, பாரததேசச் சரித்திரத்தின் ஓர் முக்கிய சம்பவமென்றே கூறலாம். 'நாகரிகத்திலும் கல்வியிலும் விக்ஞானத் திலும் பிறவற்றிலும் நாங்களே முன்னேற்ற மடைந்தவர்கள், உந்நத ஸ்திதியிலுள்ளவர்கள்' என்று பெருமை பேசிக்கொள்ளும் மக்கள் நிறைந்த மேல் நாடுகளில் ஹிந்துமதமே களங்கமற்றதென்றும், அதுவே அகில சம்மத சமயமாகுமென்றும் பகர்ந்து, அவர்களில் மேதாவிகள் பலரைத் தமது சீடர்களாக ஏற்று, முக்கிய ஸ்தலங்க ளில் வேதாந்த சபைகளை ஸ்தாபித்து சுவாமிகள் செய்துவந்த மத சேவையை இந்தியாவிலிருந்த அறிவாளிகள் பத்திரிகைகளின் வாயிலா கப் பாக்கக்கண்டு, அக விழிப்படைந்து அவரைக் கொண்டாடி வந் தார்கள். ஆயிரக் கணக்கான ஐரோப்பிய மேதாவிகள் அவரைக் குரு மூர்த்தியாகக் கொண்டுள்ளதையும், அபாரமாகத் துதிப்பதையும் அவ் வப்பொழுது கவனித்து வந்த அவர்கள், அவருடைய வருகையைப் பற்றிக் கேள்வியுற்றதும் களிகூர்ந்து அவரைத் தத்தம் நகரங்களில் விமரிசையாக வரவேற்க ஏற்பாடு செய்துகொண்டிருந்தார்கள்.

நீராவிக் கப்பல் 1897ஆம் ஜனவரிமீ 15வ பிற்பகல் கொழும்புத் துறைமுகம் வந்து சேர்ந்தது. அன்று மாலைப்பொழுதில் சுவாமிகள் கப்பலிலிருந்து வெளிப்பட்டு 'ஸ்டீம்லாஞ்ச்' ஒன்றில் ஏறித் தம்மை எதிர்கொண்ட சுவாமி நிரஞ்சனானந்தர் முதலியவர்களுடன் கரை சேர்ந்தார். கொழும்புவிலிருந்த ஹிந்துக்கள் சுவாமிகளை விமரிசையாக வரவேற்க வேண்டி ஓர் உபசாரக் காரியசபையை ஏற்படுத்தியிருந்தார் கள். அவர்களுள், ஸ்ரீமான்களான கனகசபை, சோக்கநாதன், கனம். பி. குமாரசாமி, ஹாரிசன் (ஐரோப்பிய பௌத்தர்), சுவாமி நிரஞ்சனானந்தர் முதலியவர்கள் முக்கியஸ்தர்கள் இவ்வரவேற்பு ஏற்பாடுகளை நடத்தினார்கள். சுவா மிகள் கரையை யடைந்ததும் கனம். பி. குமார சாமி அவர்கள் தமது சகோதரருடன் சுவாமிகளைச் சென்னியுற வணங்கி மலர்மாலை சூட்டினார். அவரைத் தரிசிக்க வந் திருந்த ஜனங்கள் குதூகலத்தால் மெய்மறந்து, கல்லோலக் கடலின்

கொழும்பு வாசி களின் வரவேற் புபசாரணைகள்.

ஒலியும் பின்னடையுமாறு 'ஜெய ஜெய' வென்று ஆரவாரித்தனர். அக்கூட்டத்தைக் கடந்து சுவாமிகள் இரதத்திலேறும் வரையில் அவ்வாரவாரம் ஓயவில்லை. இரண்டு குதிரைகள் பூட்டிய இரதமொன்று அங்கு ஆயத்தமாய் நின்றுகொண்டிருந்தது. அவரை அந்த இரதத்திலெழுந்தருளச்செய்து, அங்கிருந்து ஊர்வலமாக அழைத்துக்கொண்டு சென்றார்கள். சுவாமிகள் கனம். குமாரசாமி யவர்களுடன் மெல்ல 'பார்நெஸ்' தெருவில் அமர்த்தப்பட்டிருந்த மாளிகையை யடைந்தார். 'பார்நெஸ்' தெருவானது கொழும்புப் பட்டணத்தின் வெளிப்புறத்தே யுள்ளது 'சின்னம்மன்' தோட்டத்திலிருந்து நோக்கச் சென்றால், அத்தோட்டத்திற்கும் மாளிகைக்கும் இடையே கால்மைல் தூரந்தானிருக்கும். இக்கால்மைல் தூரமுள்ள வழிமுழுதும், தென்னைமரத்தின் மட்டைகளாலும், குருத்துகளாலும், குலைகளாலும் அலங்கரிக்கப்பெற்றிருந்தது தோரணங்களில் 'சுவாமிகளின் வரவு நல்வரவாகுக' என்று எழுதப்பெற்றிருந்தது. மேலும், இப்பாதை முழுவதும் பச்சைப் பனையோலைகளால் சித்திரிக்கப்பெற்ற தோரணங்கள் இரண்டு பக்கங்களிலும் அமைக்கப்பெற் றிருந்தன. இரதமானது இவ்வித அலங்காரங்களின் வழியாகச் செல்லும்பொழுது சிலர் துகில்தனை யுயர்த்திக் கூட்டத்தை விலக்குவதும், சிலர் சருக்கரை வழங்குவதுமாகத் தத்தம் உற்சாகத்தை வெளியிடுவாராயினர். வாத்தியக்காரர்கள் நாட்டைப் பண்பாடி, நாட்டை யுயர்த்திவந்த நரேந்திரநாத சிம்மத்தைத் துதித்தார்கள். ஜனங்கள் நெருக்கடியால் சுவாமிகளைப் பார்க்கக்கூட முடியாமல், ஆங்காங்கு வழியில் நடப்பெற்றிருந்த கமுகுகளை முறித்தெறிந்து கொண்டே செல்லலுற்றார்கள்.

இரதம் அம்மாளிகைக்கெதிரில் போடப்பட்டிருந்த 'பாளை கமுகு பரிசுடைப் பந்தலை' யடைந்ததும், சுவாமிகள் தமது அன்பர்களுடன் அப்பந்தலிலிடப்பெற்றிருந்த மேடையிற் போயமர்ந்தனர். சற்று நேரமானதும் யாவரும் சந்தடியற்று நிசப்தமாயிருந்தார். ஒருவர் பிடில் வாத்தியம் வாசித்தார். மற்றொருவர் தேவார மோதினார். அதன் பின் சுவாமிகளுடைய பெயரை யமைத்து இசைக்கப்பெற்றிருந்த வடமொழி ஸ்லோகமொன்று வாசிக்கப்பட்டது. அப்பால், கனம். பி. குமாரஸ்வாமி யவர்கள் எழுந்து சாஷ்டாங்க தண்டனிட்டுக் கொழும்பு வாசிகளின் சார்பாக உபசாரப்பத்திரமொன்றை வாசித்துக் கொடுத்தார். அது வருமாறு:

ஸ்ரீமத் விவேகானந்த சுவாமிகளின் திவ்ய திருவடிகளுக்கு வணக்கம்.

பூஜ்ய பாதரே,

கொழும்பு வாசிகளின் உபசாரப் பத்திரம்.

கொழும்பு நகர வாசிகளான ஹிந்துகளின் பொதுச் சபையிற் செய்த தீர்மானத்திற் கிணங்க நாங்கள் இத் தீவின்கண் தங்களுக்கு எங்களுடைய மனப் பூர்வமான நல்வரவுப் பத்திரத்தைச் சமர்ப்பிக்கின்றோம். மேல் நாட்டில் தாங்கள் மேற்கொண்ட பெரிய விரதத்தைப் பூர்த்திசெய்து தங்கள் ஜென்ம பூமியை நோக்கிவருங் காலையில், தங்களை உபசரிப்பதில் நாங்களே முதன்மையராயிருக்கக் கைகூடியதை எங்கள் பாக்கியமென்றே கருதுகின்றோம்.

தாங்கள் மேற்கொண்ட விரதமானது இறைவன் திருவருளால் நிறைவேறியதைக் கண்டு நாங்கள் மனப்பூர்வமாக எம்பெருமானை வழுத்துகின்றோம். சர்வ சமய சம்பிரதாயங்களையும் நேர் சீர்படுத்தி, ஒவ்வொரு ஜீவனையும் அவரவாது மன பரிபக்குவ நிலைக்குத் தகுந்தவாறு மதானுஷ்டானங்களில் சேர்த்து இறைவனுக்கருகில் அன்புடன் கொண்டுபோய்விடும் மதமாகிய ஹிந்துக்களின் சர்வ சமய சமரஸ நெறியை ஐரோப்பா அமரிக்கா வாசிகளுக்குத் தேவரீர் புலனாக்கினீர்கள். எவர் தம் திருவடி சஞ்சாரத்தால் பாரத பூமியைப் பரிசுத்தமாக்கி, அதற்கு எத்தனையோவித மாறுதல்களைப் பலர் உண்டாக்கியும், அவற்றைக் கருணையங் கடலான தங்கள் பரிபூரண அன்பாலும், ஞானோபதேசத்தாலும், திவ்யப் பிரகாசமாய் விளங்கச் செய்தனரோ, அப்பேர்ப்பட்ட மகாநுபாவர்களால் தொன்று தொட்டு வழி வழி உபதேசிக்கப் பட்டு வருகின்ற சமத்துவ வேதாந்த மார்க்கத்தையே தேவரீர் எடுத்தோதினீர்கள்.

அதுபோன்ற அவதார புருஷர்களில் ஒருவராகிய பகவான் ஸ்ரீராம கிருஷ்ண பரஹம்ச தேவரது திருவருளாலும், தன்னல மிகழ்ந்து தாழுயிர்க் குழைக்கும் தன்கமைசான்ற தேவரீரது உறுதியினாலுமல்லவா மேல் நாட்டார்கள் பாரதபூமியின் பரந்த ஞானத்தினெழில் பெற்று, விலை மதிக்க வியலாத மகத்தான பாக்கியத்தை யடைந்தார்கள்? அது மட்டுமோ! நமது நாட்டிலும் பலர் மேல்நாட்டு நாகரிகத்தால் மயங்கி யிருந்த நிலையினின்றும் மீண்டு, நமது சிறந்த பழங்கால வைப்பான ஞானநிதியின் உயர்வைக் கண்கூடாகக் காணலானார்கள்.

தங்களுடைய பரமோத்தமமான கைங்கரியத்தாலும், சிறந்த அனுட்டானங்களாலும் மாணவர்களனைவரையும் தேவரீர் மனமொப்பிக் கடமைகளைச் செய்ய வைத்ததுடன், எமது தாய் நாட்டிற்கும் ஓர் விசேடச் சிறப்பை யளித்தீர்கள். தங்களையும் தாங்கள் மேற்கொண்டுள்ள சமயத்தொண்டையும் சிறக்கப் பரிபாலித்தருள்புரியுமாறு எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

இங்ஙனம்,
தங்கள் பக்தர்களான கொழும்பு வாசிகளான
ஹிந்துக்கள் சார்பில்
பொ. குமார சுவாமி
இலங்கைச் சட்ட நிரூபணசபையின் பிரதிநிதி,
சபையின் அமைச்சர்.
ஏ குலவீரசிங்கம்
காரியதரிசி.

கொழும்பு
1897-ம் வூ
ஜனவரிமீ 15உ

அப்பொழுது சந்தியாகாலம் வந்துவிட்டபடியால், வெகுநேரமாக இடித்து முட்டி மோதிக்கொண்டு நிற்கும் ஜனங்களை காக்க வைக்க மனமின்றி, பிரதிவந்தன பூர்வமாக சுவாமிகள் சில வசனங்கள் புகன்றனர். அவர் அருளியதாவது: "அன்பர்களே! இராஜ தந்திரங்களில் விசேஷ நிபுணத்துவ முடையவனுக்காவது, மகா வீரனுக்காவது கிடைத்தற்கரிய விசேஷ மரியாதையைக் கேவலம் பிச்சையெடுக்கும் துறவியாகிய அடியேனுக்கு நீங்கள் செய்ததானது, ஹிந்துக்களுடைய உள்ளம் எப்பொழுதும் சமயப்பற்று நிறைந்தது என்னும் பேருண்மையை நிரூபித்துக் காட்டுகின்றது. நமது தேசம் க்ஷேமமாய், உயர்வுற்று விளங்க வேண்டுமானல், நீங்கள் எப்பொழுதும் மதானுஷ்டானங்களை கைநழுவ விடாதிருந்து வரவேண்டும். இத்தகைய சிறப்பு எனக்குக் கிடைத்ததென்னும் காரணம் பற்றி நான் மகிழ்ச்சி யடையவில்லை. ஆனல், இது உங்களுக்குள்ள மதாபிமானத்தை வெளியிடுகின்றதென்பது கருதியே நான் அகமகிழ்கிறேன்."

சுவாமிகளின் உத்தரம்.

அதன்பின், சுவாமிகள் தமது விடுதிக்கேக அங்குமோர் மாலை சூட்டப்பெற்றார். அந்த மாளிகையின் முன் கூடியிருந்த ஜனங்கள் அன்புமேலீட்டால் கலையாமலிருப்பது கண்டு, அவர் மறுபடியும்

வெளியே வந்து அனைவரையும் ஆசீர்வதித்துவிட்டுச் சென்றார். அந்நாள் முதல் அம்மாளிகைக்கு 'விவேகானந்தாஸ்ரமம்' என்று பெயரிடப்பெற்றது.

மறுநாள் சனிக்கிழமையன்று, சுவாமிகள் கொழும்பு நகரப் பூந்தோட்டத்திலுள்ள மண்டபத்தில் (Floral Hall) ஓர் உபந்நியாசஞ் செய்தார். எள்விழ இடமின்றி அம்மண்டபத்தில் ஜனங்கள் நிறைந்திருந்தார்கள். அவர் சிகாகோ சர்வ தர்ம மகாசபையில் பிரசங்கித்ததற்கு முன்பு இந்தியாவில் பொதுஜனக் கூட்டங்களில் பேசியவரல்லராதலால், இந்தியாவுக்கு இதுவே அவருடைய முதற் பிரசங்கமாகும். அப்பொழுது 'பரிசுத்த பாரத பூமி' என்பது விஷயமாகச் சுவாமிகள் பேசலுற்றார். அடுத்த நாள் ஞாயிற்றுக்கிழமை யன்று, அவரைப் பிரமுகர்கள் பலர் தரிசிக்க வந்தார்கள். சுவாமிகள் அவர்களுக்கு உபதேசஞ் செய்துகொண்டிருந்தார்; அன்றுமாலையில் அந்நகர சிவாலயத்திற்குப் பத்தர் குழாங்கள பின்னேகச் சென்றார். ஏகும் வழியில் ஹிந்துக்கள் தத்தம் தெருத்திண்ணை தொறும், குத்துவிளக்கேற்றி வைத்து, தட்டுகளில் புஷ்பமாலை பழங்கள் பன்னீர் முதலியவற்றுடன், தத்தம் வீட்டுவாயில்களில் சுவாமிகள் வந்தவுடன் சென்று நமஸ்கரித்து, மாலைசூட்டிக் கனிகளை அனைவருக்கும் வழங்கிப் பன்னீர் தெளித்தனர். 'நமப்பார்வதீ பதயே; ஹர ஹர மகாதேவ' என்ற ஆரவாரம் அடிக்கொரு முறை கைலையங்கிரியில் தையலாளுமையுடன் வீற்றிருக்கும் ஐயனைத் தட்டி யெழுப்புவது போன்று எழுந்தது. ஸ்திரீகள் ஆலத்தி சுழற்றினர். சுவாமிகள் தமதாஸ்ரமத்திற்குத் திரும்பியதும் அநேக வேத விற்பன்னர்கள் வந்து அவருடன் இரண்டு மணிவரையில் சம்பாஷித்துக் கொண்டிருந்தார்கள்.

பாரத பூமியில் முதற் பிரசங்கம்.

மறுதினம் சோமவாரத்தன்று காலையில் சுவாமிகள் ஸ்ரீமான். சின்னையா அவர்கள் கிருகத்திற்கு ஏகினர். அவருடைய வருகைக்கென்றே அவ்வில்லம் மனோகரமாக அலங்கரிக்கப் பெற்றிருந்தது. ஹிந்து தெய்வங்களின் படங்களும், துறவிகளின் படங்களும் சுவர்களை அலங்கரித்திருந்தன. அங்கிருந்து தமது குருதேவருடைய படத்தைக்கண்டு சுவாமிகள் நமஸ்கரித் தெழுந்தார்; தம்மைப் பார்க்க வேண்டி அங்கு வந்திருந்தவர்கட்கெல்லாம் விபூதி யளித்தார். அன்று ஆங்கோர் சங்கீதக் கச்சேரியும் நடைபெற்றது. அன்று மாலையில் கொழும்பு நகரப் பொது மண்டபத்தில் ஓர் வேதாந்த உபந்நியாசம்

நடைபெற்றது. அப்பொழுது அவ்விடத்தில் அமர்ந்திருந்தவர்களில் அநேகர் ஐரோப்பியர்களைப்போல உடுப்பு தரித்திருந்தமை கண்டு, சுவாமிகள் மனம் புண்பட்டு, 'ஆடையிலுமா நாம் அவர்களைப் போன்று நடக்க வேண்டும், அவர்கள் நம்மைப்போலுடுப்பதில்லையே! உடுப்பானது தேச சீதோஷ்ண ஸ்திதியைப் பொருத்ததேயன்றி, நாகரிகத்தைச் சார்ந்ததல்ல. அடிமைகளாக முயலாதீர்கள்; எதுவரினும் உங்கள் தேசாசாரத்தைக் கைவிட வேண்டாம்' என்று பேசினார்.

அடுத்த நாள் மங்கள வாரத்தன்று சுவாமிகள் இரயில் மார்க்கமாய்த் தனி வண்டியில் கண்டிக்குப் புறப்பட்டார். கொழும்புவிலிருந்து அவர் நேராகச் சென்னைக்கேக முதலில் நிச்சயித்திருந்தாரேனும் தென்னிந்தியா நகர வாசிகளின் உபசாரங்களுக்கிணங்கியும், இலங்கைத் தீவிலுள்ள நகர வாசிகளின் வரவேற்புக் கிசைந்தும் தமது திட்டத்தை மாற்றிக்கொண்டார்.

கண்டிக்குச் செல்லல்.

கண்டி ரயில்வே ஸ்டேஷனில் வண்டிவந்து நின்றதும், ஜனங்கள் பெருங்கூட்டமாகச்சென்று வரவேற்கும் நிமித்தம் கூடியிருந்தனர். சுவாமிகள் வண்டியை விட்டிறங்கியதும், அவர்கள் மேளவாத்தியங்கள், கோயில் யானை, பூச்சக்ரக்குடை, திருச்சின்னங்களுடனும் கோயில் பரிவாரத்துடனும் அவரை இரதத்திலழைத்துக் கொண்டு போய், அவருக்காக அமர்த்தப்பட்டிருந்த ஓர் மாளிகையில் எழுந்தருளச் செய்தனர். ஆங்கோர் ஸ்வாகதோபசாரப் பத்திரமும் அளிக்கப்பட்டது. சுவாமிகள் அதற்கு இனிமையாகவும் சுருக்கமாகவும் விடையளித்து விட்டு அவ்வலங்காரமான பட்டணத்தின் முக்கியமான காட்சிகளைப் பார்த்துக்கொண்டு பிரயாணப்பட்டு, அன்று மாலையில் 'மாத்தளையை' (Matale) யடைந்தார். பிறகு புதன்கிழமை காலையில் சுமார் இருநூறு மைல் தூரத்திலுள்ள யாழ்ப்பாணத்திற்குப் பிரயாணமானார். வழியில் சுவாமிகள் ஏறிச் சென்ற வண்டியின் சக்கரமொன்று உடைந்து போனமையால் பிரயாணம் சிறிது தடையுற்றது. அவர்கள் வெகுநேரம் காத்திருந்து, பின்பு சிரமப்பட்டு மாட்டு வண்டியொன்றை அமர்த்திக்கொண்டு மெல்ல அநுராதாபுரத்தை யடைந்தார்கள்.

அநுராதாபுரம் என்பது உலகத்திலுள்ள மிகப் பழமையான நகரங்களுள் ஒன்று. இந்நகர் சுமார் இரண்டாயிரமாண்டுகட்கு முன்னர் நிலமகள் முகமெனச் சிறப்புற்று விளங்கிற்றென்பதை நிரூபிக்க இன்னும் பல அடையாளங்கள் அங்கு காணப் படுகின்றன. இது

போழ்து ஓர் * போதி விருட்சமும், ஓர் புராதன தடாகமும், இடிந்து பாழான பௌத்தாலயங்களின் மதில்களும் அதற்குச் சான்று பகர்கின்றன. அத்தடாகம் பிராசீன சிற்பிகளின் வேலைப்பாட்டை நன்கு புலப்படுத்துவதுடன் 'தகோபாஸ்' என்ற கட்டிடத்தின் கீழ்ப் பௌத்தர்களின் உடைமையான ஏராளமான திரவ்யங்களும் விலைமதிப்பில்லா ஆபரணங்களும் தமிழர்களின் இலங்கைப் படையெடுப்புக் காலத்திலிருந்து புதைத்து வைக்கப் பெற்றிருக்கின்றன வென்றும் கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. சுவாமிகள் தங்கியிருந்த தர்ம சத்திரத்தை யொட்டியுள்ள 1600 கற்றூண்கள் கி. மு. இரண்டாம் நூற்றாண்டில் எடுக்கப் பட்ட பெரிய அரண்மனையின் அடையாளமா யிருக்கின்றன. அக்காலத்தில் அவ்வரண்மனை ஒன்பது மாடிகளுடனும் புத்த குருக்களின் ஆயிரம் பள்ளியறைகளுடனும் அமைந்திருந்ததாம்; அதன் மேல்வாய் பித்தளைத் தகடுகளாலும், வெள்ளிப் பதுமைகளாலும் அமைக்கப் பட்டிருந்தது. அதன் பெரிய கூடம் சிம்மங்களின் தலைமேல் நிறுத்தப் பட்ட தூண்களால் தாங்கப்பட்டிருந்தன. அக்கூடத்தின் மத்தியில் தந்த ஆசனமொன்று, ஒருபுறம் சூர்யப் பிரவையும், மற்றொரு புறம் சந்திரப் பிரவையும் அமையப் பொருத்தப் பெற்றிருந்தது.

அநுராதாபுரத்தின் பெருமை.

அந்த போதிமரத்தினடியில் சுவாமிகள் சுமார் மூவாயிரம் ஜனங்கள் நிறைந்த கூட்டமொன்றில் ஓர் விரிவுரை நிகழ்த்தினார். அதனைத் துவிபாஷிகளிருவர் தமிழிலும் சிங்கள பாஷையிலும் மொழி பெயர்த்தார்கள். அவர் அப்பொழுது 'ஆராதனம்' என்பது பொருளாக உபந்நியாசிக்கத் தொடங்கி, ஆடம்பரமான பூஜையைக் கண்டனஞ் செய்து, வேதங்களில் ஓதப்படும் உபாசனைப்படி நடத்துவதே சிலாக்கியமென்று பேசினார். அப்பால், சமயத்தின் சர்வார்ஹத்தன்மையைப் பற்றிச் சொல்லத் தொடங்கி, சிவனென்றும், விஷ்ணுவென்றும், புத்தனென்றும் வெவ்வேறு பெயர்கொண்டு உபாசிக்கும் மூர்த்திகள் ஒரே பரப்பிரம்மமென்றும், பல்வேறு சமயத்தைச் சார்ந்தவரும், பரஸ்பர சமரஸ நோக்கத்தோடும் ஜீவகாருண்யத்தோடும் நடந்துகொள்ள வேண்டுமென்றும் பேசினார்.

அனுதாராதாபுரத்தில் பிரசங்கம்.

---

* புத்தகயையிலுள்ள மகாபோதி விருட்சத்தின கிளை யொன்று கி. மு. 245-ல் இங்கு கொண்டுவந்து நடப்பெற்றதென்பர் சிலா சாஸனப் பரிசோதகர்கள்.

அநுராதாபுரத்திற்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையிலுள்ள தூரம் நூற்றிருபதுமைல். சாலையும் குதிரைகளும் அதமமாயிருந்தமையால், பிரயாணம் சிறிது சிரமத்தையே தருவதாயிற்று. இரண்டு இரவு நித்திரையின்றிச் சுவாமிகளும் பிறரும் யாத்திரை செய்தார்கள். வழியில் 'வவோனியா'வில் சுவாமிகளுக்கோர் உபசாரப்பத்திர மளிக்கப்பெற்றது. அதற்குச் சுருக்கமாக விடை பகர்ந்தபின், அனைவரும் காடுகளின் வழியே பிரயாணமானார்கள். 'யானைக்கணவாயில்' அவரை வரவேற்க வந்திருந்த சிலரைச்சந்தித்து அங்கிருந்து செல்லுகையில், யாழ்ப்பாணத்திற்குப் பன்னிரண்டுமைல் தூரத்தில் பல ஹிந்துப் பிரமுகர்கள் அவரை எதிர்கொண்டு வரவேற்று, இரதத்திலேற்றிக் கொண்டு போனார்கள். சுவாமிகளின் வருகையைக் கருதி யாழ்ப்பாணத்தின் ஒவ்வொரு தெருவும்—ஏன் ஒவ்வொரு வீடும் வாழைத் தோரணங்களால் அலங்கரிக்கப் பெற்றிருந்தது. ஹிந்து காலேஜுக்கெதிரில் அமைக்கப் பெற்றிருந்த பந்தருக்குச் சுவாமிகள் அழைத்துச் செல்லப்பட்டார். யாழ்ப்பாணம் முழுதும் குதூகலம் மிகுந்திருந்தது.

யாழ்ப்பாணத்தில் விமரிசையான உபசாரம்.

சுமார் பதினையாயிரம் ஜனங்கள் வரை அந்த ஊர்வலத்திற் கலந்திருந்தனர். இத்தகைய விசேஷ ஏற்பாடுகளுக்கு ஆஸ்பதமாயிருந்தவர்கள் ஸ்ரீமான்களான நாகலிங்கம், கனகசபை, திருவனந்தபுரம் பிரதம நீதிபதியாயிருந்த ஸ்ரீமான். எஸ். செல்லப்பப்பிள்ளை முதலியவர்களாவர். ஸ்ரீமான் செல்லப்பப்பிள்ளை அவர்கள் சுவாமிகளை மேடைமீது எழுந்தருளச்செய்து மாலைசூட்டிய பின் ஓர் சுவாகதோபசாரப் பத்திரிகை வாசித்துக் கொடுக்கப்பட்டது. அதற்கு சுவாமிகள் தகுந்தபடி பதிலளித்தார். மறுநாள் மாலையில் ஏழுமணிக்கு அதே பந்தரின்கீழ் சுவாமிகள் 'வேதாந்த மதம்' என்பது பற்றிப் பேசவாரம்பித்துச் சுமார் ஒருமணி நாற்பது நிமிஷங்கள் பேசினார். சுவாமிகள் பேசி முடிந்தபின், சேவியர் துரையவர்கள் தாம் ஹிந்து மதத்தை ஏற்றுக் கொண்டதின் காரணங்களை அங்கு கூடியிருந்த மகாஜனங்களுக்கு எடுத்தோதினார்.

அப்பால், யாழ்ப்பாணத்திலிருந்து இந்தியாவுக்குப் புறப்படுவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டன. யாழ்ப்பாணத்திற்கும் பாம்பனுக்குமிடையிலுள்ள தூரம் சுமார் ஐம்பதுமைல் அங்ஙனமே செல்ல ஒருபடகு வாடகைக்கு அமர்த்தப்பட்டது. சுவாமிகள் தமது சகபாடிகளுடன் அன்றிரவு ஒரு மணிக்குப் பிரயாணமானார்.

காற்று மனோகரமாக வீசினமையால் பிரயாணம் சுகமாகவேயிருந்தது. ஜனவரி மீ 26வ மூன்று மணிக்குத் தோணி பாம்பனை யடைந்தது. மாலை ஆறுமணி சுமாருக்கு இராமநாதபுரத்து மன்னர் ஸ்ரீபாஸ்கர சேதுபதியவர்கள், முன்பே ஏற்பாடு செய்திருந்தபடி, சுவாமிகளைத் தமது சமஸ்தான படகுடன் சென்று எதிர் கொண்டழைத்தார். அவ்வமயம் யதிபதியும் நரபதியும் உள்ளன்பு பொங்க அளவளாவி யிருந்தவிதம், கண்டோருள்ளத்தை உருக வைக்குந் தன்மையதா யிருந்தது. சேதுபதியவர்கள் சுவாமிகளை 'என்னையனே' என்றழைத்து அவரது திருவடிகளை மலர் கொண்டருச்சித்தார்; தமது படகில் சுவாமிகள் எழுந்தருளியதும் தமது பரிவாரங்களுடன் அவருடைய அடிச்சுவடுகளில் நிலந்தோயப் பணிந்து நமஸ்கரித்தார்.

யதிபதியும் நரபதியும் அளவளாவல்.

ஆஹா ! மனம்போல மாங்கல்யமென்பர். சுவாமிகள் முதலில் பாதசாரியாய் இராமேஸ்வர யாத்திரையி னிமித்தம் வந்தபோது, சிகாகோவில் நடைபெற விருக்கும் சர்வமத மகாசபைக்குச் செல்லவேண்டுமென்றிருந்த அவரது எண்ணத்தை உறுதிப்படுத்தி, ஆதாவளித்து, செல்லும்படியாகத் தூண்டி, பொருளுதவிபுரிந்து தமது மரபிற்கேயுரிய மனப்பூர்வமான மதாபிமானத்தை வெளியிட்ட அவ்வரசரையே சுவாமிகள் மேல்நாடுகளில் மகத்தான ஜெயத்துடன் திரும்பியபோது முதல் முதலாகப் பாரதபூமியில் அடிவைத்த சமயம், சந்திக்க நேர்ந்ததென்னும் விஷயம் ஈண்டு கவனிக்கத்தக்கது.

அரைமணி நேரத்திற்குள் சமஸ்தானப்படகு, சுவாமிகளின் பரிவாரங்களுடன் கரையை யடைந்தது. அங்குச் சுவாமிகளின் வரவை ஆவலுடன் எதிர்பார்த்திருந்த பாம்பன் நகரவாசிகள், இலங்கை நீராவிக்கப்பல் சங்கத்தாரின் பிரதிநிதியான ஸ்ரீமான். நாகப்பப்பிள்ளையவர்களைத் தலைவராக வைத்துக்கொண்டு, அங்கு அமைத்திருந்த பந்தரிலே சுவாமிகளை வரவேற்று உபசரித்தார்கள். ஸ்ரீமான். எஸ். கெ. நாயர் அவர்களும் சேதுபதியும், சுவாமிகள் மேல்நாட்டு யாத்திரையை இனிது முடித்துத் திரும்பியதுபற்றித் தமது மகிழ்ச்சியை வெளியிட்டுப் பேசினார்கள். அப்பால், ஆங்கிலத்தில் ஓர் வந்தனோபசாரப்பத்திரம் வழங்கப்பெற்றது. அதைச் சுவாமிகள் ஏற்றுக்கொண்டு சுருக்கமாக ஓர் பிரசங்கம் செய்து அனைவரையும் களிப்பித்தார்.

பாம்பனில் உபசரணை.

இந்த உபந்நியாசம் முடிந்தபின், சுவாமிகள் சேதுபதியவர்களின்

இரதத்திலேறி சேதுபதி யவர்களின் மாளிகைக்குப் புறப்பட்டார். அப்பொழுது ஸ்ரீ பாஸ்கர சேதுபதி யவர்கள், அந்த இரதத்திற் பூட்டப்பெற் றிருந்த குதிரைகளை யவிழ்த்துவிட்டுத் தமது பரிவாரங்களுடன் தாமே இழுத்துச் சென்றார். இதுவன்றோ உண்மைச் சமயப் பற்றின் உயர்ந்த செய்கை? சுவாமிகள் பாம்பனில் மூன்றுநாட்கள் தங்கியிருந்தார். அடுத்தநாள், துவாரகை, பத்ரிநாதம், ஜெகன்னாதம் போன்ற தீர்த்தங்களில் முக்கியமானதான ஸ்ரீராமேஸ்வரத்திற்குச் சென்றார். அவர், அற்றைக்கு ஐந்தாண்டுகட்கு முன்னர் அதே ஸ்தலத்திற்குப் பாதசாரியாய் யாத்திரை செய்தது அப்பொழுது அவர் ஞாபகத்திற்கு வந்தது. முன்னர் அவரை எவரும் அறியார்; அப்பொழுது நடந்து களைத்தமையால் கால்கள் வீங்கியிருந்தன. ஆகா! அதே சந்நியாசிக்கு இப்பொழுது என்ன உபசாரம்! சுவாமிகள் கோயிலைக் கிட்டியதும் ஆலய பரிபாலர்கள், யானை, ஒட்டகம், குதிரை, ஆலவட்ட மங்களவாத்திய சகிதம் அவரை எதிர்கொண் டழைத்தார்கள். சுவாமிகள் உள்ளங் கனிந்து, கண்களில் ஆனந்தக் கண்ணீர் ததும்ப, பக்தபாராதீனனாக எழுந்தருளியிருக்கும் சிவபெருமானைத் தரிசித்து அவனது அருள் வெள்ளப் பெருக்கிலே மூழ்கினார். பின்னர், தேவஸ்தானத்தார் ஆலயத்திற்குரிய திருவாபரணங்க ளனைத்தையும் காட்டப் பார்த்துவிட்டு, கோயிலை வலமாய்வர, பிராகாரத்திலுள்ள ஆயிரக்கால் மண்டபத்தை யடைந்தார்கள். அம்மண்டபத்தின் சிற்ப நுட்ப வேலைப்பாடுகளைப் பார்த்தபின்னர், அங்கு ஜனங்கள் பெருங்கூட்டமாகக் குழுமி யிருந்தாராதலின், சுவாமிகள் சில அன்பர்களின் வேண்டுகோளுக் கிசைந்து சிறு பிரசங்கமொன்று செய்தார். 'உபாசனை' என்பது அன்று விஷயமாகக் கொள்ளப்பட்டது. அதை ஸ்ரீமான். நாகலிங்கம் பிள்ளை அவர்கள் தமிழில் மொழிபெயர்த்தார்.

இராமேஸ்வரத்திற்கு வருகை.

அன்றைய உபந்நியாசத்தில் சுவாமிகள் குறிப்பிட்டதற் கிணங்க, சேதுபதியவர்கள் அடுத்தநாள் ஆயிரக்கணக்கான ஏழைகட்கு அன்ன வஸ்திர மளித்தார். சுவாமிகள் மேல் நாட்டிலிருந்து இந்தியாவுக்குத் திரும்பியதும் முதல் முதலாகப் பாம்பனில் இறங்கியமையால், அதைக் குறித்து, அந்த இடத்தில் ஓர் தூபி நாட்டப்பெற்றது. அத்தூபியில் பின் வருமாறு சேதுபதி யவர்களால் சாஸனம் செய்யப்பட்டது:

சுவாமிகளைக் கௌரவித்தற் பொருட்டு நாட்டப்பெற்ற தூபி.

சத்யமேவ ஜயதீ.

ஸ்ரீமத் பூஜ்ய பாத விவேகானந்த சுவாமிகள்.

குடகோளார்த்தத்தில், வேதாந்த சித்தாந்தத்தைப் பரவுதற் பொருட்டு லோகோபகாரார்த்தமாக உத்தம சேவை செய்து, ஆங்குக் குறைபாடில்லாத காரிய சித்தியுடன், அழியாப் புகழடைந்து, வெற்றித்தார்சூடி, அங்கிருந்து புறப்பட்டு, ஆங்கிலேய சீடர்களுடன் பாரத பூமியில் முதல் முதலாக 1897 வருஷம் ஜனவரிமீ 26வ யன்று திருவடி சாத்திய புண்ணிய ஸ்தலத்தைக் காட்டும் இந்த ஞாபக ஸ்தம்பம்,

இராமநாதபுரம் பூபாலராகிய

ஸ்ரீ பாஸ்கர சேதுபதி யவர்களால்

நாட்டப்பெற்றது.

அப்பால் அனைவரும் கரைவழியாகப் புறப்பட்டு, ஓர் அறச்சாலையில் வந்து தங்கி, அங்கு உணவுகொண்டு, திருப்புல்லணை (திருப்புல்லாணி)யை யடைந்து, அவண் நீங்கி இராமநாதபுரம் வந்து சேர்ந்தார்கள். சேர்ந்ததும் அருகாமையிலுள்ள ஏரிக்கரையில் சேதுபதி யவர்கள் சுவாமிகளை அரச மரியாதையுடன் எதிர்கொண் டுபசரித்து, அவரை இராமநாதபுரப் பிரமுகர்களுக்கு அறிமுகம் செய்து வைத்தார். இவர்கள் வருகையின் அறிகுறியாக பீரங்கிகள் ஒலித்தன. பின்னர், வாணவேடிக்கையுடன் சுவாமிகளை, அரசர்பிரான் தமது தேரிலேற்றி, அதில் தமது மெய்க்காப்பாளர்களையும் நிறுத்தி, தாம் நடந்து வழி காட்டிக்கொண்டே ஏகினர். தெருக்களின் இருமருங்கும் பிரகாசமான விளக்குகள் ஏற்றி வைக்கப்பட்டிருந்தன. உயர்ந்த மேளவாத்தியமும் 'பாண்டு'வாத்தியமும் முழங்கின. 'வெற்றி வீரரின் வருகையைக் காண்மின்' (See the Conquering Hero Comes) என்று பொருள்படும் கீதமொன்றை இசைத்து 'பாண்டு' வாத்தியம் வாசிக்கப்பட்டது. இப்படிப் பாதி தூரஞ்சென்றதும் மலர்களால் அலங்கரிக்கப்பெற்ற பல்லக்கில் சுவாமிகளை எழுந்தருளச் செய்து 'சங்கர விலாசம்' என்னும் மாளிகையை யடைந்தார்கள். சுவாமிகள்

இராமநாதபுரத்து பூபாலரின் உபசாரம்.

சற்று ஆஸ்வாசம் செய்துகொண்ட பிறகு அங்குள்ள சபாமண்டபத்தை யடைந்தார். அவ்வமயம் அங்குக் கூடியிருந்த ஜனங்கள் செய்த காகோஷத்தின் ஒலியானது, 'இத்தகைய பெரும்பாக்கியத்தை நீங்கள் அடையவில்லையே' என்று தேவர்களை நோக்கிக் கேலிசெய்வதுபோன் றிருந்தது. **சேதுபதி** யவர்கள் சபையைத் தொடங்கச் செய்து தமது இளைய சகோதரரான ஸ்ரீ தினகர சேதுபதி **யவர்களை** வந்தனோபசாரப் பத்திரிகையை வாசிக்கும்படி ஏவ, அவரும் உருக்கமாகப் படித்து, சுவர்னப் பெட்டியிலிட்டுச் சுவாமிகளிடம் அளித்தார். அளிக்கவும் சுவாமிகள் அதனைப் பெற்றுக்கொண்டு மிகவும் உருக்கமான பிரசங்கமொன்று செய்தார்.

சுவாமிகள் பேசி முடிந்ததும், சேதுபதி யவர்கள் எழுந்து அவரது வரவை கௌரவிக்க, அவ்வூரில் நன்கொடை வசூலித்துச் சென்னை வறுமை விலக்கு நிதிக்கு அனுப்ப வேண்டுமென்று தீர்மானித்தபின் சபை முடிவுற்றது. அடுத்த நாள் சுவாமிகள் அரண்மனைக்கேகி, ஆங்கிருந்த பிரமுகர்கள் தமிழிலும் வடமொழியிலும் வழங்கிய வந்தனோபசாரப் பத்திரிகைக்கு உபசாரமொழி பகர்ந்து 'ஸ்ரீ பாஸ்கர சேதுபதி யவர்கட்கு 'ராஜ ரிஷி' என்ற பட்டமும் வழங்கினர். மற்றும் 'இசையொலியாள'னில் (போனோகிராப்) அரசர் பெருமான் வேண்டுகோட் கிணங்கி 'சக்தி பூஜை'யின் சிறப்பைப் குறித்து ஓர் சிறு பிரசங்கமும் செய்தார்.

'சக்தி பூஜை' எனும் பிரசங்கத்தைப் போனோகிராப் பிடித்தல்.

பின்பு, சுவாமிகள் தமது தோழர்களுடன் இராமனாதபுரத்தினின்றும் நீங்க, பரமகுடிக்கு வந்து சேர்ந்தார்; அப்பதி வாசிகளளித்த வந்தனோபசாரப் பத்திரிகையை ஏற்று, ஓர் உருக்கமான பிரசங்கம் செய்துவிட்டு, மானாமதுரையை யடைந்தார். மானாமதுரையில் மகத்தான கூட்டமொன்று சுவாமிகளை வரவேற்று, ஓர் முத்துப்பந்தரில் எழுந்தருளச் செய்து, உபசரித்தது. சிவகங்கை மகா ஜனங்களும் அக்கூட்டத்தோடு கலந்து கொண்டார்கள். சுவாமிகள் அங்கும் ஓர் உபந்நியாசஞ் செய்துவிட்டுப் பிரயாணமானார். பின்னர் ஒவ்வொரு 'ரயில்வே ஸ்டேஷ'னிலும் ஜனங்கள் கூடி நிற்க, அவர்களுக்கெல்லாம் ஆசி கூறிவிட்டு மதுரைமா நகரை யெய்தினர். மதுரையில் இராமநாதபுரம் மன்னருடைய 'பங்களா'விற் றங்கியிருக்க, மதுரை வாசிகள் பெருங் கூட்டமாக வந்து அவரை உபசரித்து, உபசாரப் பத்திரமொன்றைப் படித்

மதுரைக்கு வருகை.

துக் கொடுத்தனர். அதற்குச் சுவாமிகள் அற்புதமாக விடையளித்து விட்டு, ஸ்ரீ மீனுட்சி சுந்தரேசர் ஆலயத்திற்குச் சென்று தரிசித்தார். ஸ்தல பரிபாலகர்கள் சுவாமிகளை வெகுவா யுபசரித்து, மாலை பரிவட்டம் வழங்கி, கருவூலத்திற் கழைத்துச் சென்று விலையுயர்ந்த ஆபரணங்களை யெல்லாம் எடுத்துக் காண்பித்தார்கள். அன்று மாலையில் சுவாமிகள் இரயிலேறிக் கும்பகோணத்திற்குப் புறப்பட்டு விட்டார். வழியில் ஒவ்வொரு ஸ்டேஷனிலும் அவருக்கு மலர்மாலை சூட்டுவதும் 'ஜெய! ஜெய!' வென்று கோஷிப்பதுமாக ஜனங்கள் தத்தம் உற்சாகத்தை வெளியிட்டனர். சுவாமிகள் அவர்களுக்கெல்லாம் ஆசி கூறுவதும், அன்புரை புகலுவதுமாகச் சென்ருர்.

திருச்சிவாசிகளின் உபசாரப் பத்திரம்

முக்கியமாக, திரிசிரபுரம் ஜங்ஷனில் அதிகாலை நான்குமணி சுமாருக்கு ஆயிரம் ஜனங்களுக்குமேல் 'பிளாட்பாரத்தில்' கூடியிருந்து சுவாமிகளுக்குக் கீழ்க்கண்ட சுவாகதோபசாரப் பத்திரிகையை அளித்தார்கள்.

ஸ்ரீமத் சுவாமி விவேகானந்த பரமஹம்சருக்கு,

புண்ய சீலரே!

திரிசிரபுரவாசிகளாகிய அடியேங்கள் தேவரீருக்கு எங்கள் தாழ்மையான வந்தனத்தைச் செலுத்துகிறேம். இந்தியாவின் ரத்னமான தங்களை யாங்கள் எங்களிடையே ஒருதினமாகிலும் இருக்கச் செய்து இன்புறலாமென்று பெரிதும் நம்பியிருந்தோம். எங்களுடைய நஷ்டமானது சென்னையின் லாபமென்பதைத் தவிர எங்களுக்கு வேறு சமாதானமில்லை.

சற்குரு மூர்த்திகளான ஈஸ்வர புத்திரர்களே மானுடப் பிறவியில் சாலச் சிறந்தவர்கள். எங்களுக்குத் தேவரீரைப்போன்ற அவதார புருஷர்களைத் தரிசிக்கும்படியான பாக்கியத்தை யளித்த பராபர வஸ்துவான கடவுளுக்கு நாங்கள் எங்கள் நன்றியை எங்ஙனம் செலுத்துவதென்று தோன்றவில்லை.

பாரத அன்னைக்குத் தாங்கள் அழியாப் புகழீட்டிவைத்ததற்கு அவள் தக்க வெகுமதியளித்து ஆசீர்வதிப்பாள். ஹிந்து மதாசார சாஸ்திரங்களின் ஸ்தோத்திரம் இன்று பராக்கிரமம் பொருந்திய ஆங்கிலேய ஆதிபத்திய நாடுகளின் மூலை முடுக்குதோறும் வியாபித்து விட்டது.

தாங்கள் மேற்கொண்டு புரிந்த சேவைக்குப் பகவான் தமக்கு சிறந்த சம்மான மளிப்பதுடன், எங்களுள்ளத்தில் கிண்டிவிட்ட உற்சாகமும், அமரிக்கா நாட்டு வெற்றியும் என்றும் கொழுந்து விட்டெரிய இறைவன் அருள் பாலிப்பானாக.

திரிசிரபுரம்
1897ஹு பிப்ரவரிமீ 2உ

தங்கள் அடியவர்களான
திருச்சி நகர வாசிகள்.

மற்றும் திரிச்சிராப்பள்ளி தேசீயக் கலாசாலை சங்கத்தார் (Nationıl High School Council) சார்பில் ஸ்ரீமான். ஜி. சேஷய்யங்கார் அவர்கள் சுவாமிகளுக்கு ஓர் உபசாரப்பத்திர மளித்தார். திருச்சி மாணவர்கள் சார்பிலும் ஓர் வந்தனோபசாரப் பத்திரம் வழங்கப் பெற்றது. அவற்றிற் கெல்லாம் சுவாமிகள் பிரதிவந்தன பூர்வமாய்ச் சுருக்கமாகப் பேசினர். தஞ்சை ரயில்வே ஸ்டேஷனிலும் அந்நகரவாசிகளால் ஓர் உபசாரப்பத்திர மளிக்கப்பெற்றது.

பிறகு, சுவாமிகள் கும்பகோணத்திற்குச் சென்றதும், அத்தல வாசிகள் அவரை வெகு சிறப்பாக வரவேற்றனர். அவர் திருக்குடந்தையில் மூன்று நாட்கள் தங்கியிருந்தார். இரண்டு சபைகளில் அவருக்கு நல்வரவுப் பத்திரிகைகள் அளிக்கப்பெற்றன. சுவாமிகள் ஒரு பொதுக்கூட்டத்தில் 'வேதாந்தத்தின் நோக்கம்' என்ற விஷயம் பற்றி அரியதோர் சொற்பொழிவு நிகழ்த்திவிட்டுச் சென்னைக்குப்பிரயாணமானர். மாயூரம் ஸ்டேஷனில் ஜனங்கள் எள்விழ இடமின்றி நிறைந்து பிளாட்பாரத்தில் சுவாமிகளின் வருகையை எதிர்பார்த்த வண்ணமிருந்தார்கள், ஸ்ரீமான். D. நடேசய்யர் அவர்களால் பொது மக்கள் சார்பாக ஓர் வந்தனோபசாரப் பத்திரிகை படிக்கப்பட்டது. அதற்குச் சுவாமிகள் தாம் மகத்தான காரியமெதையும் செய்து விடவில்லையென்றும், பகவதாணைப்படித் தமது கடமையையே செய்ததாகவும் மறுமொழி புகன்றார். உடனே, இரயில்வண்டி 'ஜெய சுவாமி விவேகாநந்த மகாராஜிகி ஜே' என்ற கோஷத்தினிடையே ஸ்டேஷனை விட்டகன்றது.

இரயில் சென்னைக்குச் சமீபத்தில் வந்து கொண்டிருந்தது. இடையே ஒரு சிறு ஸ்டேஷனில் ஜனங்கள் கூடி, ஆங்குக் கொஞ்ச நேரம் வண்டியை நிறுத்துமாறு ஸ்டேஷன் மாஸ்டரை வேண்டினர். அதற்கவர் இணங்காதது கண்டு, வண்டி ஸ்டேஷனை யடைந்ததும் அனைவரும் தண்டவாளத்தில் படுத்துக்கொண்டார்கள். இதுகண்டு

'கார்டு' வண்டியைச் சற்று நேரம் நிறுத்திவைக்க இசைந்தார்; அப்பால் யாவரும் சுவாமிகளிருந்த வண்டியண்டை சென்று வணங்கிப் போற்றினர்; சுவாமிகள் அவருடைய உள்ளன்பைப் பார்த்து மகிழ்ந்து அவர்களுடன் சற்றுப் பேசினார். பின்னர், இரயில் சுவாமிகளின் வருகையை வெகு ஆவலோடு எதிர் பார்த்திருக்கும் சென்னை வாசிகட்கு 'இதோ வந்து விட்டேன்' என்றுரைப்பதுபோலச் சத்தமிட்டுப் புறப்பட்டது. தமிழ்நாடெங்கும் தக்க உபசாரத்துடன் சுவாமிகள் சென்னைக் கேகலானார்.

37-ம் அத்தியாயம்.

சென்னை கல்கத்தா நகரங்களில் உபசாரம்

தியாபர மூர்த்தியான சுவாமிகள் சென்னைக்கு வரப் போகின்றாரென்ற செய்தி நகரெங்கணும் பரவிவிட்டது. சென்னை வாசிகளனைவரும் மிக்க உற்சாகமா யிருந்தார்கள். சுவாமிகளை வரவேற்கச் சிறந்த ஏற்பாடுகள் செய்யப்பெற் றிருந்தன; சுவாமிகள் வங்கநாட்டினரா யிருப்பினும், அம்மகானுபாவர் 'சிகாகோ' சர்வ தர்ம மகா சபைக்குச் செல்லுவதில் உதவிபுரிய முதன்மையாய் நின்றது சென்னையே யல்லவா? அவருடைய உண்மையான பெருமைகளை உணர்ந்து அனுப்பிவைக்க முன் வந்தவர்கள் தமிழர்களன்றோ? ஹிந்துமதமே சர்வோத்தமமானதென்பதை ஆங்கிலேயர் ஒப்புக்கொள்ளும்படி செய்து, ஆங்கிலேய ஆதிபத்ய நாடுகளிலெல்லாம் பாரதபூமியின் பெருமையினை நிலைநாட்டித் திரும்பிய சுவாமிகளை அவற்றிற்கெல்லாம் ஆதிகாரணமாயிருந்த சென்னை நகரவாசிகள் எத்துணை அமோகமாக வரவேற்றிருக்கவேண்டும்?

ஒருவாரமாகவே, அநேக வரவேற்புக் கமிட்டிகள் அபாரமாக வேலை செய்துகொண் டிருந்தன. முக்கியமான இடங்கள் யாவும் விநோதமாக அலங்கரிக்கப்பெற் றிருந்தன; பெரிய எழுத்துகளில் 'சுவாமி விவேகானந்தருக்குப் பல்லாண்டு', 'அவதார புருஷருக்கு நல்வரவு', 'மகரிஷிகளின் மாட்சியை வெளியிட்ட மகானுபாவருக்கு நல்வரவு,' 'சமய மன்னருக்கு நல்வரவு' என்று ஆங்கிலத்திலும், 'ஏகம் சத் விப்ரா பகுதா வதந்தி' என்று சமஸ்கிருதத்திலும் தீட்டப்பெற்ற தோரணங்

நகர அலங்காரம்.

கள் கண்களைக் கவர்வனவா யிலங்கின. கனம். நீதிபதி சுப்ரமண்ய ஐயரவர்களும் ஏனைய முக்கியஸ்தர்களும் அவ்வரவேற்பு விழாவின் தலைவர்களா யிருந்தார்கள். சென்னை இராஜதானியிலுள்ள மன்னர் களின் பிரதிநிதிகளும் மற்றோரும் சுவாமிகளை வரவேற்க முன்பே சென்னையில் வந்து காத்துக்கொண்டிருந்தார்கள். சென்னையில் நடை பெற்றுவந்த பத்திரிகைகளும் அவ்வரவேற்பில் சிறந்த ஊக்கங் காட் டின.

அன்று காலைமுதல் சென்னைபுரியில் ஓர் பெரிய திருநாளாகவே யிருந்தது. ஆயிரக்கணக்கான ஜனங்கள், நீராடி மடிபூண்டு ரயில்வே ஸ்டேஷனை நோக்கிச் சென்றவா றிருந்தனர். சிலர் கொடிகளுடனும், சிலர் ஹாரங்களுடனும் ஏகினர். இரயில் சுவாமிகளுடன் ஸ்டேஷனை யடைந்ததும் கடலொலிபோன்ற கரகோஷமும் 'ஜெய ஜெய' வென்ற ஆரவாரமும் எழுந்தன. பூரணகும்ப மளித்தல், மாலை சூட்டல் முத லான உபசாரங்கள் நடந்த பின், பெரிய ஊர்வலம் ஆரம்பித்தது. அன்பு மேலீட்டால் பக்தர்கள் வண்டியிற் பூட்டப்பெற்றிருந்த குதிரைகளை யவிழ்த்துவிட்டுத் தாமே இழுத்துச் செல்வாராயினர். ஆகா! அந்தக் கூட் டத்தையும் ஆரவாரத்தையும் கணக்கிட்டுக் கூறத்தான் முடியுமா? சுவாமிகள் இவ்வாறு வழியெல்லாம் ஒளிபொருந்திய தமது முக வதனத்தால், அவ்வரிய காட்சியைக்கண் டானந்திக்க மொய்த்திருந்த ஆயிரக்கணக்கான ஜனங்களுக்கும் நேத்திரானந்தத்தை விளைவித்து, 'நேப்பியர் பார்க்' வழியே, சிந்தாதிரிப்பேட்டைக்குச் சென்று, அங் கிருந்து 'கவர்ன்மெண்ட்' ஹவுஸ் இருக்கு மிடத்திற்கு 'மவுண்ட் ரோட்' வழியாக வந்து வாலாஜா ரோட் மார்க்கமாக 'சீப்பாக்' குக்குச் சென்று, 'பைகிராப்ட்ஸ் ரோட்' வழியாக, தெற்குக் கடற்கரையோர மாய் 'ஐஸ்' மெத்தைக்கு வந்து, அங்கிருந்து ஸ்ரீமான். பிலிகிரி ஐயங் கார் அவர்களது 'காசில் கெர்னன்' என்ற மாளிகையண்டை வந்து சேர்ந்தார். வழியெல்லாம் சுவாமிகள் நின்றும் உட்கார்ந்தும் தம் மைப் பார்க்க முட்டி மோதிக்கொண்டுவரும் ஜனங்களின் ஆர்வத் தைத் திருப்தி செய்த வண்ணம் ஏகுவாராயினர். இடை யிடையே பலர் பழங்கள் பூர்ணகும்பங்கள் அளிப்பதும், அநேகர் மாலை சூட்டு வதுமாக மரியாதை செய்தார்கள். அப்பொழுது அந்த விமரிசை, சோழன் திக் விஜயஞ்செய்து வெற்றிவாகை சூடிவருங் காட்சியை யொத்திருந்தது. அழியுந்தன்மையதான பிரபஞ்சப் பொருள்களை

மகத்தான ஊர் வலம்.

மட்டிலுமன்றி, சிந்தனையுள்ள இந்தியருள்ளத்தையும், பௌதிகவாதிகளான மேல் நாட்டினரின் ஹிருதயத்தையும் வென்ற வீரகேசரியன்றோ சுவாமிகள்?

நிற்க, ஊர்வலத்தில் நிகழ்ந்த முக்கியமான நிகழ்ச்சி யொன்றை நாமிங்கு எடுத்தெழுதாது செல்ல மனம் இடந்தரவில்லை. அதாவது ஒரு விருத்தை வக்கீல்களையும் உயர்ந்த உத்தியோகஸ்தர்களையும் விலக்கிக்கொண்டு சுவாமிகள் ஏறிவரும் இரதத்தண்டை வந்து 'ஐயனே! தேவரீரைத் தரிசித்தமையால் எனது பாவங்கள் பறந்தன. திருஞான சம்பந்தமூர்த்தி சுவாமிகள் சமணர்களை வென்று சிவிகை யூர்ந்து, தண்டமிழ் நாடெங்கும் சைவ சமய ஒளி பரப்பினரென்று அடியாள் நூல்கள் வாயிலாக வாசித்துள்ளேன். ஆனால் கண்ணாரக் கண்டு களித்தவளல்லள். இன்று தங்களைத் தரிசித்த மாத்திரத்தில் தாங்களே சம்பந்தப் பெருந்தகை யென்று எண்ணுள்ளம் நவில்கின்றது. அப்பெரியார் உள்நாட்டில் திக்விஜயம் செய்தவர். தேவரீரோ உலகமெங்குஞ் சென்று ஹிந்துமத சித்தாந்தங்களைச் சகல மதஸ்தரும் மேன்மையானதென்று ஏற்குமாறு செய்தீர்கள்.' என்றியம்பிக் கண்ணீர் மல்க விழுந்து அடிபணிந்தனள். ஆகா! என்ன மன பரிபக்குவம்! சிந்தாதிரிப்பேட்டை வழியாக ஊர்வலம் வந்தது. ஒவ்வொரு வீட்டிலும் கற்பூர ஹாரத்தி சுழற்றினர். தெய்வத்திற்குரிய பூஜைகளெல்லாம் சுவாமிகளுக்கு நடைபெற்றன.

ஒரு விருத்தையின் பக்தி.

பட்டினப் பிரவேசம் 'காஸில் கர்னனை யடைந்ததும், ஸ்ரீமான். பிலிகிரி ஐயங்கார் முதலியோர், கோயில் மேளத்துடன் சுவாமிகளை எதிர்கொண்டுபசரித்து, உள்ளே அழைத்துச் சென்று, திருவல்லிக்கேணி ஸ்ரீ பார்த்தசாரதிப் பெருமாள் கோயிலிலிருந்து வந்த அபிஷேக தீர்த்தத்தால் மஞ்சனமாட்டி, மாலைசூட்டிச் சுருதி மந்திரங்களால் மங்களா சாஸனம் செய்தார்கள். அப்பால், 'சமஸ்கிருத காவ்ய நாடகாதி கலா விநோத சபை' யாரென்னும் வித்வந் மனோரஞ்சநீ சபை'யார் சார்பில் ஸ்ரீமான் கிருஷ்ணமாச்சாரியார் அவர்கள். பி. ஏ., பி. எல். வடமொழியில் ஒரு ஸ்வாகதோபசாரப் பத்திரமளித்தார். அதன் பின், கன்னட பாஷையிலும் ஓர் வந்தனோபசாரப் பத்திரம் வாசிக்கப் பெற்றது. பின்பு, நீதிபதி ஸ்ரீ சுப்ரமணிய ஐயாவர்கள் அங்கு கூடியிருந்த பதினாயிரக் கணக்கான ஜனங்களை நோக்கி,

வித்வந் மனோரஞ்சநீ சபையாரின் உபசாரம்.

சுவாமிகள் சிரம பரிகாரம் செய்துகொள்வாரென்றும், மாலையில் யாவரும் அவரைச் சந்திக்கலாமென்று மியம்பக் கூட்டம் மனமின்றிக் கலைய ஆரம்பித்தது. இதைப் போன்ற சிறப்பான வரவேற்பு அதற்கு முன் யாருக்கும் எப்பொழுதும் நடந்ததில்லை யென்று மிக்க வயோதிகர் ஒருவர் கூறியதாகவும், மே. தா. அரசப் பிரதிநிதி ரிப்பன் துரையவர்களுக்குக் கூட இவ்வித உபசாரம் நடைபெறவில்லை யென்றும் ஓர் பத்திரிகை குறிப்பிட்டுள்ளது.

சுவாமிகள் சென்னையில் ஒன்பது நாட்கள்தான் தங்கியிருந்தார். அந்த ஒன்பது நாட்களும் நவராத்திரி விழாவைப்போன்றே யிருந்தன. அவ்வொன்பது தினங்களுக்குள் ஆறு பிரசங்கங்கள் நடைபெற்றன. இப்பிரசங்கங்கள் இமயம் முதல் குமரி வரையிலும் அவரது மகா வல்லமையை உணர்த்தும் தன்மையனவாயிருந்தன. அன்றைய தினம் சுவாமிகள் பக்த கோஷ்டிகளைக் காணும்பொருட்டு விக்டோரியா ஹாலுக்கேகினர். அங்கு சென்றதும் பொது ஜனங்களின் உபசாரப் பத்திரம் முதலில் வாசிக்கப் பெற்றது. பின்பு வித்வத் வைதீகசபையார் ஓர் பத்திரிகை யளித்தார்கள். பிறகு, க்ஷேத்ரி மகாராஜா அனுப்பியிருந்த உபசாரப் பத்திரிகை படிக்கப்பட்டது. அப்பால் வடமொழி, தமிழ், தெலுங்கு, பாஷைகளில் சுமார் இருபது பத்திரங்கள் வாசிக்கப் பெற்றன. அவற்றை யெல்லாம் பெற்றுக்கொண்டு சுவாமிகள் பதிலளிக்க எழுங்கால் மண்டபத்தில் நிறைந்திருந்த பதிணாயிரத்துக் கதிகமான ஜனங்களும், இதையன்றி வெளியில் தள்ளிக்கொண்டிருக்கும் கூட்டமும் நெருக்க, சுவாமிகள் அக்கட்டிடத்தை விட்டு வெளியே வந்து அவர் ஏறிவந்த ரதத்தின் உச்சியில் நின்றுகொண்டு பிரசங்கிக்க வாரம்பித்தார். அப்பொழுது அவரைப் பார்க்க வேண்டியும், அவர் திருவாய் மலர்ந்தருளப் போகும் நவநீத வசனங்களைக் கேட்க வேண்டியும் அங்கு நிறைந்திருந்த ஜனங்கள் ஒரே கும்பலாகத்தள்ளி நெருங்க வாரம்பித்தமையால் பிரசங்கத்தை நீடித்து நடத்த முடியாமற் போயிற்று. ஆகையால் சுவாமிகள் பின் வருமாறு சுருக்கமாகப் பேசித் தமது பிரசங்கத்தை முடித்துக் கொண்டார்.

விக்டோரியா ஹால் பிரசங்கம்.

“நாமொன்று நினைத்தால் தெய்வமொன்று நினைக்கிறது. வந்தனோபசாரங்களும் அவற்றிற்குப் பிரதி வந்தன பூர்வமான உரைகளும் மேல் நாட்டு முறைப்படி நடைபெறவேண்டுமென்று உத்தேசிக்கப் பட்டிருந்தபோதிலும் ஈஸ்வர சங்கற்பத்தால் அங்ஙனம் நடைபெற

வில்லை. அன்று ஸ்ரீகிருஷ்ண பரமாத்மா யுத்தபூமியில் அர்ச்சுனனுக்குபதேசித்ததுபோல், யானும் இப்பரந்த இடத்தில் இரதத்தின்மீது நின்று கொண்டு பிரசங்கிக்கும் நல்வாழ்வடைந்தேன். அதற்காக நாம் இறைவனை வாழ்த்துவோமாக. இவ்விதம் நேர்ந்தமையால் எனக்கோர் உற்சாக முண்டாகிறது. நீங்களனைவரும் கேட்கும்படி உரக்கப்பேச என்றால் இயலுமோ? எனினும் இயன்றவரை முயலுகின்றேன். இதுபோன்ற பரந்த வெளியில் இத்தனை ஜனங்களுக்கு முன்பாக உபந்நியசிக்கும்படியான சமயம் இதற்குமுன் எனக்கெப்பொழுதும் வாய்க்கவில்லை. கொழும்புவிலிருந்து சென்னை வந்து சேருமளவும் எனக்கு உள்ளன்புடன் செய்யப்பட்ட உபசாரங்களையும், இனியும் நீங்கள் செய்யப்போவதாகத் தோன்றும் சிறப்புகளையும் நோக்குங்கால் எனக்குண்டாகும் ஆனந்தத்தை அளவிட்டுரைத்தலும் இயலுமோ? இதனால் ஹிந்துக்களுக்கு எவ்வளவு மதப்பற்று இருக்கின்றதென்பது வெளிப்படையல்லவா? இதைக்குறித்தே நான் ஆனந்தப் படுகிறேன். அயல்நாடுகளிலெல்லாம் ஜனங்களுக்கு ராஜரிகத்திலும், வாணிபத்திலும், தொழிலிலும் பற்று அதிகமேயன்றி மத விஷயத்தில் அவ்வளவில்லை. ஹிந்து மகாஜனங்களே இவ்விஷயத்தில் பாக்கியசாலிகள். இல்லையேல், எந்த தேசத்திலாவது பிச்சை யெடுக்கும் சந்நியாசிக்கு இவ்வளவு உபசாரங்கள் நடைபெறுமா? இப்பொழுது உலகத்திலுள்ள சாதியார்கள் இரண்டு சிரமமான பொருள்களை ஆராய்வதில் முற்பட்டிருக்கிறார்கள். அவற்றுள், ஒன்றைப் பாரதபூமி வகித்திருக்கிறது மற்றொன்றை பிறதேசத்தார்கள் மேற்கொண்டார்கள். அஃதென்னையெனில், 'எது நிலையான பலனை யளிக்கும்? எதனால் ஒரு சமூகத்தார் அழிவின்றி உயிர்வாழ வியலும்? அது அன்பா, அல்லது விரோதமா? பொறி வழி இன்பங்களை அனுபவித்தலா, அன்றி வைராக்கியநிலையா? இந்த உலக யாத்திரையென்னும் போரில் ஜடம் வெற்றியடையுமா, அல்லது ஆத்மா ஜயமடைந்து விளங்குமா?' என்பதேயாகும் இதனை நமது ஆன்றோர்கள் பல்லாயிர மாண்டுகட்கு முன்னரே ஆய்ந்து முடிவுசெய் திருக்கிறார்கள். அதாவது, வைராக்கிய நிலையும், ஆடம்பர வெறுப்பும், அன்புடைமையுமே நிலையான பலனை யளிக்க வல்லன வென்பதாம். உலக சரித்திரத்தைப்பார்த்தால் இவ்வுண்மை விளங்கும். எத்தனையோ தேசத்தவர்கள் அற்பகாலம் சிறப்புற்றுச் செம்மையான நிலையை வகித்து, சொற்பகாலம் ஆடம்பர

இரதத்தில் நின்றவாறு செய்த உபந்நியாசம்.

வைபவத்தால் உள்ளம் பூரித்து, அப்பால் நீரிற் குமிழிபோல் மறைந்து போயினர். ஆனால் நமது ஹிந்து ஜனசமூகமோ, அதனை அழிக்க எத்தனையோ இடுக்கண்கள் உண்டானபோதிலும், என்றும் சிரஞ்சீவியாக இருந்து வருகிறது. இதற்குக் காரணமென்ன? நம் நாட்டிலுள்ள வைராக்கிய நிலையேயாகும். வைராக்கியமற்ற எந்த சமயமும் தழைத்திருக்க இயலுமோ? ஐரோப்பிய நாட்டிலனைவரும் 'ஒருவன் எவ்வளவு செல்வம் சம்பாதிக்கலாம், எங்கெந்த ஏமாந்த நாடுகளைப் பிடிக்கலாம், எங்கெங்கு அதிகாரத்தைச் செலுத்தலாம்' என்று ஆராய்ந்தவண்ணம் தமது எண்ணங்கள் வெற்றியுற முயன்றுகொண்டிருக்கிறார்கள். ஆதலின், அந்நாடுகளில் ஜனங்களுக்குள் போட்டா போட்டியும், விரோதமும், கொடுமையும் அதிகரிக்கின்றன. இது தான் ஐரோப்பாவின் நிகழ்கால நிலை. நாமோ, வருணாஸ்ரம தர்மமென்னும் சீரிய சாதனத்தை யுடையாராதலின், மக்களின் வாழ்க்கைப் போரில் போட்டா போட்டியின்றி, கொடுமையை மறந்து, தத்தம் வருண தர்மப்படி நடந்து இம்மை மறுமைப் பயன்களை யடைகின்றோம்."

இப்படி சுவாமிகள் பேசிக்கொண்டிருக்குந் தருவாயில் கூட்டம் அதிகரித்து நெருக்கினமையால், அங்கு கூடியிருந்த அனைவருக்கும் கேட்கும்படிப் பேச அவராலியலாமற் போயிற்று. ஆதலின், சுவாமிகள் பின்வருமாறு சொல்லித் தமது பிரசங்கத்தை முடித்தார்.

"நாம் பிறிதொரு சமயத்தில் விரிவாகக்கலந்து பேசலாம். இன்று இதோடு எனக்கு விடைகொடுங்கள். நாற்புறமும் திரும்பியவாறு உங்களைப் பார்த்துப் பேசுவது எனக்குச் சிரமமாயிருக்கிறது. இன்று என்னைப்பார்த்த வளவில் நீங்கள் திருப்தியடைய வேண்டும்; இன்னொரு சமயம் நான் விவரமாக உபந்நியசிக்கிறேன். நீங்கள் உற்சாகத்தோடு எனக்கு நல்வரவு கூறிச்செய்த உபசாரத்தால் நான் தன்யனானேன்."

இதைத்தவிர, சுவாமிகள் சென்னையில், விக்டோரியா ஹாலில் இரண்டும் பச்சையப்பன் ஹாலில் ஒன்றும், திருவல்லிக்கேணி இலக்கிய சங்க மண்டபத்தில் ஒன்றும் 'ஹார்ம்ஸ்டன்ஸ் சர்க்கஸ் பாவலியனில் (Harmston's Circus Pavilion) ஒன்றுமாக ஐந்து பிரசங்கங்கள் செய்தார். இந்த முக்கியமான பிரசங்கங்களில் முறையே 'எனது கிருத்தியங்களின் ஏற்பாடு,' 'இந்திய வாழ்வின் வேதாந்த அனுஷ்டானம்,' 'இந்திய மகரிஷிகள்,' 'நமது எதிர்கால வேலை, 'இந்தி

யாவின் வருங்காலம்" என்பன. அப்பொழுது நடைபெற்ற சென்னை புரி அன்னதான சமாஜத்தின் ஆண்டு விழாவில் சுவாமிகள் தலைமை வகித்து, ஹிந்துக்களின் கொடைப் பெருமையைச் சிறப்பித்துப் பேசினார். ஒவ்வொரு பிரசங்கத்திலும் பதினாயிரத்துக்குமேல் மக்கள் குழுமியிருந்து கேட்டார்கள். அவருடைய நண்பர்களும் அபிமானிகளும் அடியார்களும் அவரைச் சென்னையில் ஸ்திரவாசம் செய்யும்படி வற்புறுத்தினர். சுவாமிகள் தாம் அவ்வாறு செய்யக்கூடாமைக்கு வருந்தி ஏற்ற காரணங்களைக்கூறி, தாம் கல்கத்தாவை யடைந்ததும் சீக்கிரத்தில் தமது குருபாய்களில் ஒருவரைத் தேர்ந்தனுப்புவதாகக் கூறினார்.

ஏனைய பிரசங்கங்கள்.

அவர் சென்னையிலிருக்கும் பொழுது, அமரிக்காநாட்டு பக்தர்களிட மிருந்தும் இங்கிலாந்து சிஷ்யர்களிடமிருந்தும் அநேக கடிதங்கள் வந்து கொண்டிருந்தன 'சுவாமி சாரதானந்தர் முக்கியமான பட்டினங்களில் வேதாந்த சபைகளை ஸ்தாபித்தும், அழைத்த இடங்களுக்கெல்லாம் சென்று உபந்நியசித்தும் தங்களைக் காட்டிலும் மேலான விஸ்வாஸத்தை அமெரிக்கர்களிடமிருந்து அடைந்துவிட்டார்' என்று நியூயார்க் அன்பரொருவர் சுவாமிகளுக்குக் கடிதமெழுதியிருந்தார்.

சென்னையில் முதற்றடவை சுவாமிகள் எழுந்தருளியபொழுது நிகழ்ந்தவாறே இப்பொழுதும், பல்வித சமயவாதிகளும், வித்வான்களும் அவரைச் சூழ்ந்து உபதேசம் பெறுவாராயினர். அமரிக்காவுக்குப் புறப்படுமுன் தம்மிடம் அன்புடன் கூடிப் பழகியிருந்தவர்களுடன் சுவாமிகள் இப்பொழுது நெருங்கிப் பழகினார். இப்படி யிருக்கையில் ஒருநாள் ஆகமங்களில் தேர்ந்தவரும் அனுபவத்தாலும் வயதாலும் முதியவருமான ஓர் வைகானச சமயி திருப்பதியிலிருந்து வந்து சுவாமிகளைக் கண்டார். அவர் சுவாமிகளைப் பார்த்ததும் அணிநிலிந் தேரயத் தாழ்ந்தெழுந்து நமஸ்கரித்து மாலைசூட்டி ஆனந்தபாஷ்பம் பெருக "வைகானசரே திரும்பவும் உலகில் அவதரித்ததுபோல விளங்கும் மாமுநியே! என்று தோத்திரஞ் செய்தார். வைகானசர் என்பவர் விஷ்ணுவின் அவதாரமென்றும், ஆகமங்களை வகுத்த அற்புத மூர்த்தியென்றும் அக்கொள்கையினர் புகல்வர். கர்மயோகத்தில் இக்கொள்கையினர் மிகுந்த பற்றுடையவர்கள். அவ்வாகமப் பெரியார், சுவாமிகள் கர்மயோக நிபுணராயிருந்தமை கண்டு "சுவாமி! தொட்

ஓர் வைகானசரின் பேரன்பு

டிலிருந்து கற்றுத் தேர்ந்துவரும் என்னைவிடத் தேவரீர் ஆகமவை கானசமதப் பற்றுடையவர்களா யிருக்கின்றீர்களே !'' என்றியம்பித் துதித்தார். சுவாமிகளும் அவரைப் பெரிதும் கொண்டாடினார்.

இங்ஙனம் பலதரமுடைய மக்களோடு பழகிய போதிலும் சுவாமிகளின் மனம் மட்டும் தாமரையிற் பட்ட நீர்த்துளி போலப் பற்றற்று சச்சிதானந்த சொரூபத்தையே தரிசித்தவா றிருந்தது. இவ்வாறாக உபசாரணைகளும் உபந்நியாசங்களும் சென்னையில் நடைபெற்றபின், சுவாமிகளின் உள்ளம் சமயத் தொண்டிற்குத் தம்மை ஆளாக்கிவிட்ட ஸ்ரீராம கிருஷ்ணருடைய சமாதியுள்ளதும், தமது ஜனன ஸ்தானமுமாகிய கல்கத்தா நகரைக் கருதலாயிற்று.

கங்கை நதி துங்கமாய்ப் பாயும் வங்காள மெங்கும், சுவாமிகள் கொழும்புவில் வந்திறங்கியது முதல் பலத்த உற்சாகம் பரவியிருந்தது. அவர் அமரிக்காவிற்கு ஏகுவதில் சென்னை நகர் எத்துணை உதவிகள் அவருக்குப் புரிந்திருந்தாலும் 'எங்கள் ஊர் மனிதர்' என்ற அபிமானம் தனிதானே ! அதற்குள்ள பாக்யமும் வேறல்லவா ? ஜாதிக் கொடுமையின் அதிபதிகளும் வீரசமயவாதிகளும் அழுக்காறுடையாரும் சுவாமிகளைப்பற்றி, அவர் அமெரிக்காவிலும் இங்கிலாந்திலு மிருந்த காலங்களில், அவதூறான வார்த்தைகள் கிளம்ப இடந்தந்தவர்கள் கூட, இப்போது தமது குற்றத்தை யுணர்ந்து அவரைக் கொண்டாட வாரம்பித்தார்கள். கல்கத்தா நகரப் பிரமுகர்களெல்லாம் ஓர் கார்யசபை கூட்டி, தர்ப்பங்கா மகாராஜாவை அதன் தலைவராகத் தேர்ந்தெடுத்து, வரவேற்புக்கு வேண்டிய ஆயத்தங்கள் செய்யலுற்றார்கள்.

அதன்மேல், சென்னையிலிருந்த சுவாமிகளுக்குப் பிறந்த ஊர் ஞாபகம் வந்துவிட்டது. கொழும்புவிலிருந்து சென்னை வரும்வரை பிரயாணம் செய்வதும், பெரிய கூட்டங்களில் உரக்க வேகமாய்ப் பேசுவதும், இரவு வெகு நேரம்வரையில் தம்மைக் காணவரும் அன்பர்களுடன் சம்பாஷிப்பதுமாக விருந்தமையால், தேக சிரமமடைந்து இளைத்துப் போயிருந்தார். இன்னும் தரை மார்க்கமாகவே கல்கத்தாவுக்குச் செல்வதனால், வழியில் இடையிடையே உபந்நியசிக்கவும் உபசாரங்களுக்குப் பதிலளிக்கவும் நேருமென் றஞ்சிச் சென்னையிலிருந்தவாறு கல்கத்தாவிற்குக் கப்பலிற் செல்ல நிச்சயித்தார். சுவாமிகள் கடற் பிரயாணஞ் செய்யுங்கால் உடல் நலத்தின் பொருட்டுத் தேங்காய்ப் பாலைத்

கல்கத்தாவிற்குப் புறப்பாடு.

தண்ணீருக்குப் பதிலாக அருந்துமாறு வைத்தியரொருவர் கூற, அதற்கிணங்க, ஒரு பக்தர் பதினாயிரத்துக் கதிகமான தேங்காய்களை ஒரு தனி இடத்திற் கொண்டுவந்து மலைபோலக் குவித்து விட்டார்; மகா பாக்கியவதியான சேவியர் துரையின் மனைவியார் சுவாமிகளை நோக்கி 'சுவாமி! இதென்ன நாம் சுமை ஏற்றுங் கப்பலிலேறி விட்டோமா? இந்த தேங்காய்கள் எங்கு செல்வதற்குரியன?'' என்று வினவ, சுவாமிகள் புன்னகை செய்து 'அல்ல! அவை எனக்காக என்னுடன் வருவன' என விடை பகர்ந்தார். தமிழ் மக்களின் அன்பே அன்பு!

சுவாமிகள் கல்கத்தாவை அடைதல்.

நீராவிக்கலம் சென்னையை விட்டுப் புறப்பட்டதி லிருந்து கல்கத்தாவை யடையும் வரையில் சேவியர் தம்பதிகட்குச் சுவாமிகள் வங்க நாட்டின் வளப்பத்தையும் வங்காளிகளின் குணம் பழக்க வழக்கங்களையும் விரிவா யெடுத்துச் சொல்லிக் கொண்டே சென்றார். அவர் சென்னையை விட்டுப் பிரயாணமானாரென்பதை யறிந்தது முதல் கல்கத்தாவில் மிக்க பரபரப்புடன் உபசார காரியங்கள் நடைபெற்று வந்தன. இருவர், சுவாமிகளுக்கு வரவேற்புக் கமிட்டியார் செய்துள்ள ஏற்பாடுகளை யெல்லாம் நேரில் முன்னதாகவே விண்ணப்பிக்கும்படித் துறைமுகத்திற்கு வந்திருந்தனர். கப்பல் கிடில்பூருக்கு வந்ததும் அங்கிருந்து சீல்டா ஸ்டேஷனுக்குப் பிரத்யேகமான ரயில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. காலை சுமார் ஏழரை மணிக்குச் சுவாமிகள் தமது ஐரோப்பிய சிஷ்யர்களுடன் சீல்டா ஸ்டேஷனை யடைந்தார். விடியற் காலத்திலிருந்தே ஸ்டேஷனில் ஜனங்கள் கூடிச் சுவாமிகளுடைய வருகையை ஆவலுடன் எதிர் பார்த்திருந்தார்கள். அப்பொழுது நியூயார்க் லண்டன் ஆகிய இரண்டு பிரதான நகரங்களிலும் மாணவர்கள் அவருக்களித்த பிரிவுபசாரப் பத்திரத்தின் அச்சிட்ட பிரதிகள் அங்கு கூடியிருந்தவர்களுக் கெல்லாம் இலவசமாக வழங்கப்பட்டன. இரயிலின் சப்தங்கேட்டதும் ஜனங்கள் ஆர்ப்பரித்து கரகோஷம் செய்து கொண்டு, பிளாட் பாரத்தில் வந்து நிறைந்தனர். இரயில் வந்து நின்றதும் சுவாமிகள் தமது அன்பார்ந்த வங்கமகாஜனங்களின் உற்சாக கரகோஷத்தால் உள்ளப்பூரிப்பெய்திக் கைகூப்பி அனைவருங்காண நின்றார். வண்டியிலிருந்திறங்கியதும், அவருக்குச் சமீபத்திலிருந்தவர்கள் பாததூளியைக் கிரகிக்க மிக்க ஆவலோடு வந்து விழுந்தனர். ஏனையோர் வணங்குவதும் 'ஜெயஜெய' வென்று ஆர்ப்பரிப்பதுமாக

ஒருவரையொருவர் தள்ளிக்கொண்டு முன் வந்தனர். வரவேற்பு அவைத்தலைவரான 'இந்தியன் மிர்றரி'ன் பத்திராதிபர் ஸ்ரீஜத். நரேந்திரநாத் ஸென் அவர்கள் சுவாமிகளுக்குக் கைலாகு கொடுத்துப் பட்டினப் பிரவேசத்திற்காக அலங்கரிக்கப்பெற்றிருந்த இரதத்திற்கு அழைத்துச் செல்வது மிக்க பிரயாசையாகிவிட்டது. அக்கூட்டத்தில் சுவாமிகளோடு ஸ்ரீராம கிருஷ்ணரின் திருவடியின்கீழ் அமர்ந்த குருபாய்களிற் பலருங் கலந்திருந்தனர்.

சுவாமிகளுக்குச் சூட்டப்பெற்ற மாலைகள் அவரது திருவுருவத்தை மறைத்துவிட்டன. கழுத்திலிடப்பெற்ற நறுமணமிக்க மாலைக ளிரண்டைத் தவிர, பிறவற்றையெல்லாம் களைந்து, பிறகு அவரை இரதத்தில் எழுந்தருளப் பண்ணினர். சேவியர் தம்பதிகளும் சுவாமிகளும் 'சாரட்'டி லேறியதும், கல்கத்தா நகர மாணவர்கள் அதிற் பூட்டப்பட்டிருந்த குதிரைகளை யவிழ்த்துவிட்டுத் தாமே இழுத்துச் சென்றார்கள். நானாவித வாத்யங்களும் கோஷிக்க, ஊர்வலம் ரிப்பன் கலாசாலையை நோக்கிச் சென்றது. இந்த ஊர்வலத்தில் பின்னே பேரிவாத்யமும் ஓர் சங்கீத பஜனை கோஷ்டியும் தொடர்ந்தன. வழியெல்லாம் கொடிகளாலும் தோரணங்களாலும் வளைவுப் பந்தர்களாலும் அலங்காரங்கள் செய்யப்பட் டிருந்தன; கோஷாக்கள் மேல்மாடிகளிலிருந்து சுவாமிகளை நமஸ்கரித்துப் புஷ்பங்களை வாரி இறைத்தனர். வர்த்தகர்கள் தத்தம் கடைகளுக்கு நேராக வண்டியை நிறுத்திப் பூர்ணகும்ப மளித்து வணங்கினர். ஓர் வயோதிகக் கிழப் பிராமணர் சுவாமிகளைக் கைகூப்பித் தொழுது ஆனந்தக்கண்ணீர் பெருக "சங்கரா! ஹரா! ஹரா!" வென்று துதித்தார். ஆகா! அன்பின் வயப்பட்ட அடியார்களின் செய்கைகள் அனந்தமல்லவா? ஊர்வலம் ரிப்பன் கலாசாலையை யடைந்ததும் கூட்டத்தின் மிகுதியாலும் ஆரவாரத்தாலும் பிரசங்கம் நடைபெற முடியாமற் போயிற்று. இதனாலும் சுவாமிகட்குச் சிறிது ஓய்வு கொடுக்கும் பொருட்டும் அன்று பிரதிவந்தன பூர்வமான சிறு பிரசங்கத்தோடு சபை கலைந்தது; அனைவரும் அமைதியாகக் கேட்கத் தக்க இடத்தில் பிரசங்கத்தை ஒரு வாரத்திற்குள் நடத்துவதாகவும் அன்று நிச்சயிக்கப்பட்டது.

கல்கத்தாவில் பட்டினப் பிரவேச வைபவம்

அப்பால், சுவாமிகள் தமது சகபாடிகளுடன் ராய் போஷுபதிநாத் போஸ் அவர்கள் அழைப்பிற் கிசைந்து விருந்துகொள்ளப் பாக்பசாரிலுள்ள அவரில்லத்திற் கேகினர்; பிறகு மாலை நான்கு மணி சுமா

ருக்கு அங்கிருந்து கங்காநதிக் கரையிலுள்ள கோபால் லால் சீல் அவர்களின் பூஞ்சோலைக்குச் சென்றார். அவ்விடத்தைச் சுவாமிகள் தமது தாத்காலீக வாஸஸ்தலமாகக் கொள்ளவும் நேர்ந்தது. மறு நாள் முதல் அவரைத் தரிசிக்கப் பிரமுகர்கள் பலர் திரள் திரளாக வரத் தொடங்கிவிட்டார்கள். வெளி நாடுகளிலிருந்தும், இந்தியாவின் பல நகரங்களி லிருந்தும் தந்திகளும் கடிதங்களும் வந்து குவிந்து கொண்டே யிருந்தன. அதுமுதல் அவர் பகற்காலங்களில் காசிப்பூர் நந்தவனத்தி லிருப்பதும், இராப்பொழுதை அலம்பசார் மடத்திற் கழிப்பதுமாக விருந்தார் அவருக்குச் சிறிதேனும் ஓய்வென்பதில்லை. பார்க்கவும் சம்பாஷிக்கவும் வருபவரோ பல்லாயிரம்பேர் பேசுபவரோ ஒருவர். சுவாமிகள் என்ன செய்வார் பாவம்; அலுத்துக்களைத்துப் போய்விட்டார். ஆனாலும் அவர் சிறிதும் தளராமல் ஒவ்வொருவனை யும் சமதையாகவே திருப்தி செய்து வந்தார்.

வங்கமா நாட்டில் புதியதோர் உற்சாகம்.

சுவாமிகளுடைய பிரசங்கத்தை 1879-ம்வரு பிப்ரவரிமீ 28உ யன்று சோபா பசாரிலுள்ள ராஜா சர் இராதாகண்ட தேவ் பகதூர் அவர்களின் அரண்மனைக் கூட்டத்தில் நிகழ்த்துவதென்று தீர்மானிக்கப்பட்டது. அப்பொழுது ஸ்ரீராஜா பினய் கிருஷ்ணதேவ் பகதூர் அவர்கள் அக்கிராசனம் வகித்தார். ராஜாக்களும் மகாராஜாக்களும் சந்நியாசிகளும் உத்தியோகஸ்தர்களும் வித்வான்களும் கீர்த்திபெற்ற ஐரோப்பியர்களும் மாணவர்களுமாகப் பல்லாயிரம்பேர் அவ்விடத்தில் நிறைந்திருந்தார்கள். அக்கிராசனர் தம் முன்னுரையில் சுவாமிகளின் மேல்நாட்டு வெற்றியைப் புகழ்ந்து பேசியபின், ஓர் உபசாரப் பத்திரிகை வெள்ளிப்பேழையிலிட்டு சமர்ப்பிக்கப்பட்டது. வங்கமா தேவியின் வரபுத்திரரான சுவாமிகள் சிங்கம்போ லெழுந்து பெருமிதந் தோன்றப் பிரசங்கித்தார். இப்பிரசங்கமே சுவாமிகள் இதற்குப் பின்னும் முன்னும் செய்த உபந்நியாசங்க ளெல்லாவற்றிலும் உத்தமமும் சொற்சாதுரியமும் தீரிதமும் பொருள் நயமும் பொலிந்ததாகக் கொண்டாடப்படுவது. இச்சொற் பெருக்கிலிருந்து வங்காளிகள் அவரைத் தீர்க்க தரிசியென்று மிகவும் கொண்டாடினார்கள்.

பாராட்டுதல் கூடம்

இதன்பின், ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ச தேவரின் ஜன்மதினம் வந்தது. சுவாமிகள் மேல் நாட்டிலிருந்த காலத்தில் அம்மகானுபாவருடைய பக்தர்கள் அவ்விழாவை தக்ஷிணேஸ்வரத்திலேயே நடத்தி

வந்தார்கள். இப்பொழுது அவர்களுடைய தலைவர் வந்துவிட்டபடியால் அவ்விழாவை வெகு சிறப்பாக நடத்த ஆயிரக்கணக்கான பக்தர்கள் அன்று தக்ஷிணேஸ்வரத்திற் கூடினர். அன்றுமாலை ஒன்பது மணிக்குச் சுவாமிகள் தமது குருபாய்களுடன் தக்ஷிணேஸ்வரத்தை யடைந்தார். அவரை இடைவிடாமல் நூற்றுக்கணக்கான பக்தர்கள் சூழ்ந்திருந்தார்கள். பின்பு, சுவாமிகள் ஆலயத்தினுள்ளே சென்று, காளிகாதேவியின் முன் சாஷ்டாங்கமாக நமஸ்கரித்துத் துதிபாடிப் பரவசராய்க் கண்களில் நீர்பெருக நின்றூர்; ராதா கண்டஜீயின் பிருந்தாவனத்தை வலம் வந்து, ஸ்ரீராமகிருஷ்ணரின் பழைய அறைக்குட் சென்று, அங்கிருந்த அடியார் குழாமும் பஜனை கோஷ்டியினரும் எழுந்துபணிய அவர்களைப் பிரதட்சிணமாக வந்து பிரதிவந்தனம் பண்ணி யுபசரித்து, தமது ஐரோப்பிய அன்பர்களுடன் பஞ்சவடியை யடைந்தார். அங்கேகியதும் பழைய நிகழ்ச்சிகளெல்லாம் அவருடைய ஞாபகத்திற்கு வந்தன. அப்பொழுது சுவாமிகள் மெய்மறந்து துதிபாடி அவ்விடத்தில் வீற்றிருந்த கிரிஷ் சந்திரகோஷ் அவர்களுடன் சற்று சத்விசாரஞ்செய்த பின்னர், சிவானுபூதிச் செல்வரான ஸ்ரீராமகிருஷ்ணர் வீற்றிருந்த வில்வமரத்தி னருகே சென்று கைகூப்பி நிற்க, அப்போது அங்கு வந்திருந்த ஜனங்கள் ஸ்ரீராமகிருஷ்ணரின் திவ்ய சரித்திராம்ருதத்தை யருளும்படி சுவாமிகளை வேண்டிக்கொண்டார்கள். அவரும் இசைந்தாரேனும், கூட்டத்தின் மிகுதியால் இயலாது போயிற்று. அப்பால், சுவாமிகள் தமது ஐரோப்பிய சீடர்களுக்கு, அங்கு வந்திருந்த பக்தர்களை யெல்லாம் அறிமுகப்படுத்தி வைத்தார். பின்பு, மூன்று மணிக்குப் புறப்பட்டு அனைவரும் அலம்பசார் மடத்திற்குச் சென்றூர்கள். சுவாமிகள் செல்லும் வழியில் தமது ஐரோப்பிய அன்பர்களுக்கு விழாக்களின் அவசியத்தைப் பற்றி உரைத்தார்.

ஸ்ரீராம கிருஷ்ணரின் ஜன்ம தினம்.

மறுபடியும் சுவாமிகளின் உபந்நியாசமொன்று கல்கத்தாவில், நடைபெற்றது. அதில் 'எல்லாத் துறைகளிலும் வேதாந்தம்' என்பது பற்றிச் சுவாமிகள் வெகு அழகாய்ப் பேசினூர். அப்பொழுது அவர் வேதம் உபநிஷதங்களிலிருந்து சிறந்த மேற்கோள்களுடன் ஹிந்து சமயத்தின் பெருமைகளை விளக்கி, சாங்கியம் யோகம் முதலிய குறிப்புகளுடன் ஸ்ரீராமாநுஜ மதசித்தாந்தங்களை ஆங்காங்கு எடுத்துக் காட்டி, ஹிந்துக்கள் பொதுவாக 'வேதாந்திகள்' என்

றுரைக்கப்படுவதின் உயர்ந்த உட்கருத்துங்களை விரித்துரைத்தார்; வழக்கம்போல இப்பிரசங்கத்திலும் சனாதன தர்மத்தின் பெருமைகளை விளக்கிக் காட்டினார். இப்பிரசங்கத்தால் பெரும்பயன் விளைந்ததென்றே சொல்வோம். அறியாமையால் அலட்சியமாகக் கருதியிருந்த சிலரும், அகந்தையால் அவமதித்துப்பேசிய சிலரும் இப்போது அறிவு வரப்பெற்று அகந்தை நீங்கிச் சுவாமிகளைப் போற்றிக் கொண்டாட வாரம்பித்து விட்டார்கள். இவ்வாறு "சென்னை கல்கத்தா நகரங்களில் உபசாரம்" வெகு விமரிசையாக நடைபெற்றது.

எல்லாத் துறைகளிலும் வேதாந்தம்.

38-ம் அத்தியாயம்.

பூந்தோட்ட சம்பாஷணைகள்

நல்லோர் நனி மிகு கல்கத்தாவில் சுவாமிகள் அநேகமாக ஆலம்பசார் மடத்திலும், 'சீல் கார்ட'னிலும் வசித்து வந்தாரேனும் அடிக்கடி ஸ்ரீராமகிருஷ்ண பரம ஹம்ஸரது மெய்யடியார்களான தமது குருபாய்களின் வீடுகளுக்குச் சென்று வருவார். அவர்கள் சுவாமிகளின் வருகையைக் குலஞ்செய் தவமென்றுணர்ந்து கொண்டாடி உபசரித்து பிக்ஷை யளிப்பார்கள். ஸ்ரீராம கிருஷ்ணரது சிஷ்யர்களில் தனவந்தர்களு முண்டு; ஏழைகளுமுண்டு. அவர்களுள் ஏழைகளின் கிருஹங்களிற்றான் சுவாமிகள் அதிகமாகக் காணப்படுவார். 'சீல்' தோட்டத்திற்கு அனுதினமும் கலைகளின் துறைகள் பலவற்றிலும் பயின்று கீர்த்திபெற்ற வித்வத் சிரோமணிகள் வருவது வழக்கம். அவர்களுட் சிலர் சுவாமிகளைச் சோதிக்கவும், சிலர் தம் ஐயப்பாடுகளைப் போக்கிக்கொள்ளவுமாக பலர் பற்பல நோக்கங்களுடன் வருவார்கள். இப்புவிதனில் நாமடந்தை ஆணுருவங்கொள உவந்து போந்தனளோ வென்று புகலும் வண்ணம் சாஸ்திர ஆதாரங்களுடன் அவர்களி லொவ்வொருவரையும் திருப்தி செய்வார்.

விவாகமாகாத மாணவர்களுடன் சம்பாஷிப்பதிலேயே சுவாமிகளுக்கு விருப்பம் மிகுந்திருந்தது அவர்களைச் சிறந்த ஒழுக்கமும், உயரிய கல்வியும், ஆரோக்கிய திடசரீரமும், அஞ்சாமையும், மதாபிமானமும் உடையவர்களாக்கித் தாய்நாட்டின் சமயத் தொண்டிற்கேற்ற சிம்மங்களாகத் தயாரிக்கவேண்டுமென்ற அவரது அவாவிற்கு

அளவே இல்லை. வித்தியார்த்திகளிடம் சுவாமிகள் எப்பொழுதும் ஹிதோபதேசமாகவே பேசுவார்; அவர்களுடைய துர்ப்பல சரீரத்தைக் குறித்தும், பால்ய விவாக வழக்கத்தைப் பற்றியும், குறைவான மதப்பற்றை இழித்தும், அநாகரீக அநுசார செயல்களைத் தூற்றியும் கண்டிப்பார். அவரிடம் வந்தவர்கள் மோதிரக்கையால் குட்டுப்பட்டோமென்று மனமகிழ்ந் தேகுவர்; தமது குற்றங்களை யுணர்ந்து நன்னெறிக்குத் திரும்புவர். சுவாமிகள் அமெரிக்காவிலிருந்த காலத்தில் அவர் வைஷ்ணவ சமயத்தை ஒருமதமாக மதித்து எந்தப் பிரசங்கத்திலும் விஷ்ணுபக்தியைப் பாப்பியதில்லை யென்ற பொய் மொழிகளைக் கேட்டு, வங்கநாட்டு 'ஸ்ரீ கிருஷ்ண தாஸர்கள்' அவரிடம் அபிமானமும் அன்புமற்றவர்களா யிருந்தார்கள். இதை யுணர்ந்து, சுவாமிகள் 'சீல்' தோட்டத்தில் தம்மோடு உறவாடவந்த உத்தம பக்தரொருவரை நோக்கி, தாம் ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவின் திவ்ய சரித்திரத்தை அமெரிக்காவில் பிரசங்கித்ததன் பயனாக, ஓர் பேரிளமங்கை, தனது செல்வமனைத்தையுந் துறந்து, ஓர் தீவிற்சேகி கிருஷ்ணத்தியானஞ் செய்துகொண் டிருக்கிறாளென் றியம்பி, மதவைஷம்யத்தைக் கண்டித்துப் பேசினார்.

பரமோத்தமமான பிரசங்கங்கள்.

ஒரு நாள் சுவாமிகள் வங்காள திவ்யஞான சங்கத்தின் (Theosophical Society) நிலையத்திற்குச் சமீபத்தில் வசிக்கும் ஓர் வாலிபரோடு சம்பாஷித்துக்கொண் டிருந்தார். அவ்வாலிபர் 'சுவாமி! நானும் பற்பல மதங்களை அனுஷ்டித்துப் பார்க்கிறேன். ஆனால் எனக்கு எது உண்மை யென்பது புலப்படவில்லை' என்றார். சுவாமிகள் அன்போடு ''பிரியா! நீ அஞ்சவேண்டாம்; நானும் உன்னைப் போன்றே பல மதக் கொள்கைகளையும் கையாண்டு உழன்றவன். ஆனால் யார் யார் உனக்கு எங்ஙெந்த விதம் உபதேசித்தார்களென்றும், அவற்றை எந்த அளவில் அனுஷ்டித்து வந்தாய் என்றும் மட்டும் எனக்குத் தெரிவி' என, அவ்விளைஞர் 'திவ்யஞான சங்கத்தின் பிரவர்த்தகரொருவர் தனது சந்தேகங்களைப் போக்கி சத்ய போதம் செய்து விக்ரக ஆராதனத்தின் லாபத்தையும் செப்பினாரென்றும், அதனால் திருப்தியடைந்து தாம் பூஜையும் ஜபமும் செய்து வந்தும் எவ்வித அனுகூலமும் ஏற்படவில்லை' என்றும் உரைத்தார். மேலும் அவர் 'சுவாமி! பிறகு என்னைச் சிலர் யோகாப்பியாசம் செய்யும்படித் தூண்டினர்.

ஓர் இளைஞரின் சன்மார்க்க ஆர்வம்

அப்படியும் நான் எனது அறையின் கதவுகளைத் தாளிட்டுக்கொண்டு கண்களை நன்கு மூடித் தியானத்தின் வழி நின்றும் மன நிம்மதி எனக்கு ஏற்படவேயில்லை. ஐயனே! என்ன செய்வேன்? எனக்குத் தாங்கள் சன்மார்க்கத்தைக் காண்பிக்கலாகாதா?' என்றிரந்தார்.

அதற்குச் சுவாமிகள் கருணையோடு அவ்விளைஞரைப் பார்த்து "குமாரா! நீ எனது வார்த்தைகளை ஏற்பதானால் முதலில் உன் அறையின் கதவுகளைப் பாக்கத் திறந்து வைத்துக்கொண்டு, கண்களைப் பலமாய் மூடுவதற்குப் பதிலாக விசாலமாகத் திறந்து நாலா பக்கங்களிலும் பார்க்கவேண்டும்; உனது அறையைச் சுற்றி ஆயிரக்கணக்கான ஏழைமக்கள் வறுமையால் அனாதையாய் வாடுகிறார்கள். அவர்களுக்கு நீ உன் சக்தியானுசாரம் உதவி புரியவேண்டும். பிணியுற்றவர்களுக்கு மருந்தும் உணவுமளித்துச் சிஷ்ருஷை செய்யவேண்டும். ஒருவனுடைய உயிர் ஆகாரமின்றி இறக்கும் தருவாயிலிருக்கின்றது; அவனுக்கு அன்னமளிக்க வேண்டும். ஒருவன் அறியாமையால் அவலமாகின்றான்; அவனுக்கு அறிவூட்டி ஆதாவளிக்கவேண்டும் உனக்கு மன நிம்மதி ஏற்படவேண்டுமானால் நீ இதைச் செய்; பிறருக்கு உன்னாலியன்ற அளவு உதவிபுரி" என்றார்.

'பிறருக்கு உன்னாலியன்ற உதவியைச் செய்'

அவ்வாலிபர் "ஆனால் சுவாமிஜீ! நான் ஒரு பிணியாளனுக்குப் பணிவிடை செய்வதால் அந்நோய் எனக்கும் வந்து நானும் நோயுறுவதாக வைத்துக் கொள்வோம். அப்பொழுது.......?" என்றவுடன், சுவாமிகள் மனம் கசிந்து "அப்பா! உன்னுடைய வார்த்தையிலிருந்தே 'சேவை'யின், சிறப்பை எவ்வளவு தூரம் நீ உணர்ந்துள்ளாயென்பது புலனும். சுயநலம் பாராட்டுகிறவர் என்றும் பிறர் நன்மையைப் பேணித் தொண்டு செய்யவே முடியாது. சேவையில் இறங்குகிறவர்கள், போர்க்களத்தே புகும் வீரன் எங்ஙனம் தனது தேகத்தைத் துரும்புக் கொப்பாக எண்ணிப் போர்புரிவானோ, அங்ஙனம் தேகாபிமானத்தை விட்டு முன்வரல் வேண்டும்" என்றார்.

பின்னொருநாள், ஒரு சம்பாஷணையில் ஸ்ரீராம கிருஷ்ணரின் சிஷ்யர்களுள் முக்கியமான ஒருவர் அவரைப் பார்த்து "சுவாமிஜீ! தாங்களென்ன எப்பொழுதும், 'சேவை', 'தர்மம்', 'லோகோபகாரம்,' என்று பேசிக்கொண்டே இருக்கிறீர்கள். அவை யாவும் மாயையின் ராஜ்யத்திலுள்ளவைதானே! வேதாந்தப்படி, மனிதனுடைய சக்தி

யெல்லாம் 'முத்தி'யை யடைதலே யல்லவா? உடம்பினைப்பெற்ற பயனுவதெல்லாம் திடம்பட ஈசனைத் தேடுதற் பொருட்டே யன்றோ? மாயையின் பந்தங்களை யெல்லாம் கடிய வேண்டியதுதான் ஞானிகளின் கொள்கை. தேவரீர் இந்த லௌகிகதர்மங்களைப் பற்றிப் பேசுவதாலென்ன பயன்?'' என்றார். அதற்குச் சுவாமிகள் கணமுந் தரியாது 'முக்தியென்னும் நினைவும் மாயையின் ராஜ்யத்தில் உலாவவில்லையா? வேதாந்தமானது 'ஆன்மா' எப்பொழுதும் பந்தமற்றிருக்கிறது என்பதையும் உபதேசிக்கவில்லை? அப்போது 'ஜீவன் முக்தி' என்பதன் பொருள் என்ன?'' என்று வினவினர். சுவாமிகளின் அருள் வாக்கை எதிர்க்க முடியாமல் மௌனம் சாதித்தார். அவருடைய நம்பிக்கைப்படி, தியானபராகி முத்தி யின்பத்தையே தனது தீக்ஷண்யமாகக்கொண்டு, உலகப்பற்றே முற்றிலுமற்று பக்தியோகப்படி ஒழுகுவதுதான் ஆத்மார்த்தமென்றும், மற்றவை, (கர்மயோகங் கூட) மாயை யென்றும் கருதியவர் அதீத நிலையினின்றும் ஆலோசிக்குங்கால் இவை யிரண்டும் பொருளற்றவை அநித்யமானவை-மாயை என்றும், உழலும் மனதிற்கு, இவையிரண்டும் ஆன்மவளர்ச்சியின் ஒரு நிலைவரை அவசியமானதே என்றும் அவர் சிறிதும் சிந்தித்தாரில்லை. ஒன்றைவிட்டு மற்றொன்றைப் பிரிக்க முடியாது. குறுகிய நோக்கம் சுயநலம் தூர்வம் ஆகிய ஆன்ம சுத்தியைத் தடுத்துக்கொண்டிருக்கும் பருத்த பளுவான சுவர்களைத் தகர்க்காமல் எப்படி ஆத்மலாபம் பெறுவது? இதையே சுவாமிகள் அவருக்கு நன்கு உணர்த்தினர்.

ஓர் ருசிகரமான சம்பாஷணை

இந்திய ஜன சமூகங்களெல்லாம் போற்றவும், உலகமெல்லாம் உயர்த்தி வாழ்த்தவும், எவ்வளவு பொருள் கைவசமிருந்தும் சுவாமிகள், கௌரவமோ தற்பெருமையோ பாராட்டாமல் பழங்காலப் பரிவ்ராஜக ஏழைச் சந்நியாசியாகவே இருந்தார். ஒருநாள், ஸ்ரீராமகிருஷ்ணருடைய சகோதரியின் குமாரரான ஸ்ரீராமலால் சடோபாத்யாயர் சுவாமிகளைப் பார்க்கவந்தார். வந்ததும் சுவாமிகள் பரபரப்போ டெழுந்து நின்று தமது ஆசனத்தை அவருக் களித்தார். ஸ்ரீராமலால் விநயத்தோடு மரியாதையாக சுவாமிகளின் ஆசனத்தில் அமர அஞ்சிப் பின்வாங்கினர். அங்குக் கூடியிருந்தவர்கள் இவற்றை யெல்லாம் பார்த்து அதிசயித்தார்கள். பிறகு சுவாமிகள் அவரைக்

குருவின் பந்துவும் குருவுக்குச் சமானமாவார்

கட்டாயப்படுத்தித் தமது இருக்கையில் அமரும்படி செய்துவிட்டு, அங்கிருந்தவர்களை நோக்கி 'குருவைப்போலவே அவர் பந்துக்களையும் மரியாதை செய்யவேண்டும்' என்ற நியாயத்தை எடுத்தோதி குரு பக்தியின் பிரபாவத்தை விளக்கிக்காட்டினார்.

ஒருநாள் ஆத்மவிசாரத்தில் ஆர்வம் மிக்க அன்பரொருவர் சுவாமிகளைப் பார்த்து 'அவதார புருஷர்களுக்கும் முக்த புருடர்களுக்குமுள்ள பேதமென்ன?' என்று வினவினார். சுவாமிகள் அதற்கு நேராக விடை பகராமல் 'விதேக முக்திதான் அதீதமென்பது எனது முடிபு' என்று கூறிவிட்டு "எனது சாதன நிலையில் யான் இந்திய நாடு முழுதும் சுற்றி யலைந்தபோது, பல நாட்கள் ஏகாந்தமான குகைகளில் தியானஞ் செய்திருந்தேன். சில சமயங்களில், 'நாமின்னும் முக்தி யடையக்கூடவில்லையே' என்ற ஏக்கத்தால் நான் பட்டினியாகவு மிருந்து உயிர்விடவும் துணிந்ததுண்டு. ஆனால் இப்பொழுது எனக்கு முக்தியில் ஆசையே இல்லை இந்த உலகில் ஒருவரேனும் அதனை அடையாதிருக்கும்பொழுது, நான் ஏன் (சொந்த) முக்தியையே பெரிதாகக் கருதவேண்டும்?" என்றார். இம்மொழிகளால் கௌதம புத்தருடைய அரிய உபதேசங்கள் நமது ஞாபகத்திற்கு வருகின்றன.

அவதார புருடன் விதேக முக்தன்

ஆனால் இவ்விரண்டு மகா புருஷர்களைப் போன்று, தாம் ஞானியாகி சுதந்தரமாய் அனைத்திலும் பற்றுவிட்டு விளங்குந் தன்மையினரே இவ்விதம் முக்தியைப்பற்றி ஆக்ஷேபித்துப் பேசமுடியுமென்பதுமட்டும் இங்கு நோக்கத்தக்கதாம். அவதார புருஷர்களுக்கும் உள்ளங்கை நெல்லிக் கனியே போல் முத்தியையுடைய முக்த புருடர்களுக்கும் பேதமுளது. அவதார புருஷன் பராபர வஸ்துவிற் கலக்க விருப்பங்கொள்ளாமல், உலகிற் பிறருக்கு நன்மை செய்யவும், தாழ்ந்து தவிக்கின்றவர்களைக் கைதூக்கிவிடவும் ஆசை கொள்கிறான். விதேக முக்தன் பரப்பிரம்மத்தோடு இரண்டறக் கலப்பதே குறி.

'கோ' சம்ரக்ஷண சங்கப் பிரவர்த்தகருடன் சம்பாஷணை

ஒருநாள் சுவாமிகள் ஸ்ரீ பிரியநாத் முகர்ஜியவர்களின் இல்லத்தில் 'இந்தியன் மிர்றர்' பத்திரிகாசிரியரான ஸ்ரீ நரேந்திரநாத் சென் அவர்களிடம் தமது நோக்கங்களை ஒப்ப உரைத்த பின்னர், கோ சம்ரக்ஷண சங்கத்தின் பிரவர்த்தகரொருவருடன் சம்பாஷித்துக்கொண் டிருந்தார். அந்த ருசிகரமான சம்பாஷணை அவருடைய சிஷ்யரான ஸ்ரீ சரத் சந்திர சக்ரவர்த்தி பி. ஏ.,

அவர்கள் எழுதிய 'குரு சிஷ்ய சம்வாதம்' என்ற நூலில்கண் காணப் படுகின்றது. அது பின்வருமாறு:

சுவாமிகள்:—உங்களுடைய சங்கத்தின் நோக்க மென்ன ?

பிரவர்த்தகர்:—நாங்கள் எங்கள் கோமாதாக்களைக் கசாப்புக்காரர்கள் வாங்கி வதைபுரியா வண்ணம் பார்ப்பதுடன் நோயுற்றும், கிழமாயும், அங்க ஹீனமாயுமுள்ள பசுக்களைக் காப்பாற்றுகின்றோம்.

சுவாமிகள்:—இது சிறந்த நோக்கந்தான். உங்கள் வருமான வழிகளெவை ?

பிரவர்த்தகர்:—தேவரீரைப் போன்ற காருண்ய சீலர்கள் அளிக்கும் கொடைப் பொருளைக்கொண்டு மேற்படி வேலை நடைபெற்று வருகிறது.

சுவாமிகள்:—உங்களிடம் இப்போதுள்ள மூலதன மெவ்வளவு ?

பிரவர்த்தகர்.—மார்வாரிகளின் வர்த்தக மரபினர்களே இச்சபையின் போஷகர்கள். அவர்கள் ஏராளமாகப் பொருளுதவி புரிந்துள்ளார்கள்.

சுவாமிகள்:—மத்திய இந்தியாவில் மிகக் கொடிய பஞ்சம் மக்களைக் கொள்ளைகொண்டு போகின்றது. இந்திய அரசாங்கத்தார் பட்டினியால் இறந்தவர்களின் தொகை 900,000 என்று வெளியிட்டிருக்கிறார்கள். உணவின்றி மரிக்கும் மாந்தர்களை இயமன் வாயிலிருந்து ரக்ஷிக்க உங்கள் சங்கம் ஏதாவது முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறதா ?

பிரவர்த்தகர்:—பஞ்சம் முதலியவற்றில் நாங்கள் உதவி புரிவதில்லை. எங்கள் நோக்கமெல்லாம் பசுபரிபாலனந்தான்

சுவாமிகள்:—இலக்ஷக்கணக்கான நமது சகோதரர்கள், சமயத்தவர் கொடிய வறுமையால் மடியும்போது ஓர் ஆழாக்கு அரிசி கொடுத்து உதவுவது கடமையென்று உங்கள் சங்கத்தாருக்குத் தோன்றாத விந்தைதான் என்ன ?

பிரவர்த்தகர்:—இல்லை. அவர்கள் கர்மவினைப்படி, அவர்கள் செய்த பாபத்திற்காக அவ்விதப் பஞ்சம் சம்பவித்திருக்கிறது. தம் வினைக்காக அவர்கள் துன்பத்தை அனுபவிக்கிறார்கள்.

இந்த வார்த்தைகளைக் கேட்டதும் சுவாமிகளுடைய முகம் சிவந்தது; கண்கள் தீப்பொறி கக்கின. அவர் அவ்வன்பரை ஒரு முறை உற்றுப் பார்த்தார். ஆனாலும் தமது வேகத்தை அடக்கிக் கொண்டு பேசலுற்றார்: "அன்பரே! கண்கூடாகப் பல்லாயிரம் சகோதரர்கள் வறுமையால் பட்டினி கிடந்து பரிதபித்து உயிர்விட அவர்களுக்கு ஆழாக்கு அரிசியுங் கொடாது, கேவலம் எள்ளளவு உதடு அனுதாபமுங் கொள்ளாது, இலக்ஷக்கணக்கான பொருளைப் பறவைகளையும் மிருகங்களையும் காப்பாற்றவே செலவழிக்கின்ற கூட்டத்தாரிடத்தில் எனக்கு அனுதாபமே கிடையாது. இவற்றால் எவ்விதப் பொது க்ஷேமமும் ஏற்படுமென்பதை நான் நம்பவில்லை. 'மனிதர்கள் அவர்கள் கர்மவினைக்காகச் சாகின்றனர்! ஆகையால் அவர்கள் இறக்கட்டும்!'—ஆகா! இவ்வித கொடிய வசனங்களைச் சொல்ல உமக்கு வெட்கமாயில்லையா? கர்மயோகத்தை ஆதாரமாகக்கொண்டு நீர் இந்த சாக்குச் சொல்லுவீரானால், பிறருக்கு உதவிபுரிவதைப் பற்றிச் சிந்திக்கவேண்டிய வேலையே இல்லை. நீர் சொல்லும் நியாயப் படி பார்த்தால் உங்கள் சங்கவேலையும்—கோமாதாக்களும் தத்தம் முன் கர்மத்தின்பயனாய், கசாய்க்காரர்களின் வாளுக்கோ பிணிக்கோ ஆளாகின்றன; ஆகையால், அவற்றிற் குதவிபுரிய வேண்டிய அவசியமுமில்லை யென்பதும் பொருந்துமல்லவா?"

எனலும் அப்பிரசாரகர் மயங்கிப் பயந்துபோய் "தாங்கள் கூறுவதும் சரியே. ஆனால் நமது சாஸ்திரங்கள் 'கோ நமது தாய்' என்று விளம்புகின்றனவே?" என்றார்.

இவ்வார்த்தைகளைக் கேட்டதும் சுவாமிகள் ஆச்சரியமுற்று "ஆம்! அப்பசு உங்கள் தாய் என்பதை நானும் அறிவேன். அப்படியில்லையானால் உங்களைப்போன்ற விசேஷபுத்தி வைபவமுள்ள புத்திரர்களை யார்தான் பெறுவார்கள்" என்றார்.

இந்த அழுத்தமான சொல்லை அந்தப் பிரசாரகர் கவனிக்கவில்லை போலும். ஏனெனில், அவர் எவ்வித மறுமொழியும் புகலாது சுவாமிகளை ஏதேனும் பொருளுதவி செய்யுமாறு வேண்டினார். அப்பொழுது சுவாமிகள் "நான் ஒரு சந்நியாசி என்பதை நீங்கள் பிரத்யக்ஷமாகப் பார்க்கிறீர்கள். ஜனங்கள் எனக்குப் பொருளளித்தால், அதை முதல் முதலாக நான் மனிதர்களுக்கு உதவிபுரிவதிற் செலவிடுவேன். மனிதர்களுக்கு உண்டியளித்துச் சமய அறிவும் கல்வியு மூட்டி அவர்களைக்

காப்பாற்ற நான் முதலில் முயற்சிக்கிறேன். இந்த விஷயங்களில் செலவழிந்தபின் என்னிடம் ஏதேனும் எஞ்சுமேல் அதிலிருந்து ஒரு சிறு பகுதியை உங்கள் ஸ்தாபனத்திற்களிக்கிறேன்" என்று கூறினார்.

அப்பால், அந்த பிரசாரகர் அகன்றார். சுவாமிகள் தமக்கருகே யிருந்தவர்களைப் பார்த்து "எவ்வளவு ஆபாசமாக (ஆ-பாசமாக) அந்த மனிதன் பேசினான் பாருங்கள், 'அவரவர்கள் கர்மத்திற்காக சாகின்றவர்களுக்கு உதவிபுரிவதிலென்ன பயன்' என்று அவன் மொழிந்ததை நினைக்க நினைக்க எனக்கு ஆத்திரம் அடங்கவில்லை. இப்படிப் பேசிப் பேசித்தான் இந்த தேசம் மதிகெட்டு வதைப்பட்டுப் பாழாகிவிட்டது. எவ்வளவு அகோரமாக கர்மத்தை சந்திக்கு இழுத்துக்கொண்டு வந்துவிட்டார்கள் என்பதை நீங்கள் கவனித்தீர்களா? அந்தோ! மக்களின் கஷ்டத்தைக் கண்குளிரக் கண்டு, எள்ளளவும் இரக்கமின்றி இருக்கும் ஜன்மம் ஜன்மமா?" என்று கூறிய வண்ணம் பெருமூச் செறிந்து உடல் நடுங்கினார்.

இத்தகைய ரசமான சம்பாஷணைகளைத் தொகுத்துப் பதிப்பித்த ஸ்ரீ சரத்சந்திர சக்ரவர்த்தியவர்கள் ஸ்ரீபிரியநாத் முகர்ஜியவர்களின் கிருகத்திலேயே சுவாமிகளை முதல் முதலாகச் சந்தித்தார். இவர் ஸ்ரீராம கிருஷ்ணரின் சிஷ்யரும் பரம பக்த சிரோன்மணியுமான ஸ்ரீநாக மகாஷ்யரின் சிஷ்யரும், அதி வைதீக பிராம்மண குலத்தைச் சார்ந்தவரும், பெரிய வேதாந்தியுமாவார். சுவாமிகளும் இவரும் முதலில் சந்தித்த பொழுது சுவாமிகள் அவரிடம் சமஸ்கிருதத்திலேயே பேசத்தொடங்கி, அவரைத் தனியே அழைத்துச் சென்று ஸ்ரீசங்கராருளிய 'விவேக சூடாமணி' யிலுள்ள பின்வரும் சுலோகத்தை எடுத் தோதினார்:

ஸ்ரீசரத் சந்திரரின் பெருமைகள்

𑌮𑌾 𑌭𑍈𑌷𑍍𑌟 𑌵𑌿𑌦𑍍𑌵𑌂𑌸𑍍𑌤𑌵 𑌨𑌾𑌸𑍍𑌤𑍍𑌯𑌪𑌾𑌯𑌃
𑌸𑌂𑌸𑌾𑌰𑌸𑌿𑌨𑍍𑌧𑍋𑌸𑍍𑌤𑌰𑌣𑍇𑌽𑌸𑍍𑌤𑍍𑌯𑍁𑌪𑌾𑌯𑌃।
𑌯𑍇𑌨𑍈𑌵 𑌯𑌾𑌤𑌾 𑌯𑌤𑌯𑍋𑌽𑌸𑍍𑌯 𑌪𑌾𑌰𑌂
𑌤𑌮𑍇𑌵 𑌮𑌾𑌰𑍍𑌗𑌂 𑌤𑌵 𑌨𑌿𑌰𑍍𑌦𑌿𑌶𑌾𑌮𑌿॥

இதன் பொருள்: "அஞ்சேல்! ஓ விவேகியே! உனக்கு மாணமென்பதே இல்லை, சம்சார சாகரத்தைக் கடக்க ஓர் வழியுண்டு. அதைக்கடைப்பிடித்தே மகரிஷிகள் பிறவிப் பெருங்கடலை நீந்தி இறைவனடி சேர்ந்துள்ளார்கள். அதனை உனக்குக் காட்டுகிறேன்."

சுவாமிகள் கல்கத்தாவின் எப்பாகத்திற்கேகினும் அவருடைய அன்பர்கள் அவரைச் சூழ்ந்துகொண்டு கேள்விகள் கேட்பார்கள். அதற்கெல்லாம் சுவாமிகள் கூறும் சமாதானங்களை ஏற்காதவர் இல்லையென்றே சொல்லலாம். ஒரு சமயம் சுவாமிகளுடைய பெயரைக் கேட்டதும் வேத தர்சனங்களில் நல்ல புலமை வாய்ந்த சில குஜராத்திப் பண்டித வர்க்கத்தினர் அவர் வெகு காலமாக ஆங்கில நாடுகளிலிருந்தமையால், வடமொழியை மறந்து மிருப்பாரென்ற துணிவால், அவரை ஏமாற்றிவிடலாமென்ற நோக்கத்துடன் அவர்கள் இலக்கிய நடையில் அவருடன் சம்பாஷிக்கத் தொடங்கினார்கள். சுவாமிகள் இவர்களைப்போல எத்தனையோபேரைக் கவிழ்த்து வந்தவரென்பதைப் பாவம் அவர்கள் அகந்தையால் மறந்து போயினர் போலும்! சுவாமிகள் வெகு இனிமையாகவும் மிக்க நயமாகவும் பேசுவது கண்டு அவர்கள் விம்மிதமடைந்து போயினர். ஒரு தடவை மட்டும் சுவாமிகள் 'சுவஸ்தி' என்ற பதத்தை 'அஸ்தி' என்று உபயோகித்தார். அப்பண்டிதர்கள் பிரமாதமாகக் கூச்சலிட ஆரம்பித்து விட்டார்கள். சுவாமிகள் தம் பிழையைக் கணத்தில் மாற்றிக் கொண்டு 'நான் பண்டிதர்களின் தாஸன்; அவர்கள் இந்தத் தவறைப் பொருட்படுத்த மாட்டார்கள். அவர்கள் சுபாவம் மெய்ப்பொருள் காண்பதல்லவா?" எனலும், அவரது அடக்கமான மொழிகளைக்கேட்ட பண்டிதர்கள் வெட்கிப் போயினர்.

குஜராத்திப் பண்டிதர்களோடு வாதம்.

அவர்கள் ஒரு விஷயத்தைக் குறித்து வாதிக்க வந்தவர்களல்ல. ஆனால், பூர்வ உத்தரமீமாம்சங்களைப் பற்றியே விசாரம் நிகழ்ந்தது. சுவாமிகள் உத்தர மீமாம்சத்தையே ஆதரித்துப் பேசினார்; ஞானகாண்டத்தை உயர்த்தித் தர்க்கபூர்வமாகப் பேசியதை அப்பண்டிதர்கள் சிலாகித்து ஒப்புக்கொண்டார்கள். பின்னர், அவர்கள் ஏகுங்கால் சுவாமிகளின் பக்தர்களைப் பார்த்து, 'இலக்கணத்தில் நல்ல பாண்டித்யமில்லாவிடினும் சுவாமிகள் சாஸ்திரங்களில் நல்ல ஆராய்ச்சியுள்ளவர்; தர்க்கஞானம் அவரிடம் ஒப்பற்று மிளிர்கின்றது. சாஸ்திரங்களின் சாரத்தையெல்லாம் அவர் சுருக்கிக் கருத்தைப் பின்பற்றி வெகு நுட்பமாகப் பேசுகிறார். அவருடைய அருள் வாக்கு அபாரமாயிருக்கின்றது' என்று சொல்லிவிட்டுச் சென்றார்கள். அப்பால், தமக்குள் 'சுவாமிகளை பெரிய சம்ஸ்கிருத பண்டிதரென்று சொல்வதற்

இல்லை. ஆனால் அவருடைய முகத்தில் ஒருவித காந்தியும் கடாக்ஷ வீக்ஷண்யமும் வீசுகின்றது. அதனாற்றான் அவருக்கு உலகெங்கும் வெற்றி ஏற்பட்டிருக்கவேண்டும்' என்று சொல்லிக்கொண்டதையும் ஓரன்பர் கவனித்துச் சுவாமிகளிடம் அறிவித்தார். அது உண்மையே; சுவாமிகளுடைய நயனங்கள் அத்தகைய விசேஷமுடையனவென்பது வாஸ்தவமே; அதை எவரும் மறுக்கமுடியாது. அது எங்கிருந்து வந்தது?—வெறும் படிப்பிலிருந்தா? சரீரலாவண்யத்தாலா?—அன்று! அன்று! அவருடைய கடினமான யோக சாதனங்களாலும், தீவிர பிரம்மசரிய விரதானுஷ்டானத்தாலும் ஆத்ம தரிசனத்தாலும் அடைந்த பேறு அதுவாகும்.

அப்பண்டிதர்கள் அகன்றபின் சுவாமிகள் தமது குருபாய்களைப் பார்த்து 'இப்பண்டிதர்கள் மிக்க வாசித்தவர்களாயினும் தவறுதலான வழியிலேயே பழக்கப்பட்டவர்கள். மேல்நாடுகளில் இவ்வித நடத்தை வித்வத்துடன் கூடியிருப்பின் பெரிதும் கண்டிக்கப் படுகின்றது. நாகரீகர்களான மேற்றேயத்தார் விஷயத்தைக் கவனித்துப் பின்பற்றித் தர்க்கிப்பார்களேயன்றிக் கொள்ளப்பட்ட விஷயத்தை விட்டு எதிரியின் பேச்சில் ஓட்டை கண்டுபிடிக்கவும், இலக்கணப் பிழை வாய்தவறி வந்துவிட்டால் சிரித்துக் கேலி செய்யவும் மாட்டார்கள். ஆனால் நமது பண்டிதர்கள் அங்கு சொட்டை இங்கு சொள்ளை என்று சுட்டி முரட்டுத்தனமாய்த் தாம் பிடித்த முயலுக்கு மூன்றே கால்களென வாதித்து வம்பு செய்து; தானியத்தைவிட்டுப் பதரைத்தான் முக்கியமென்பர்" என்று கழறினர்.

பண்டிதர்களைப் பற்றிய அபிப் பிராயம்.

சுவாமிகளிடம் அவரது குருபாய்கட்கிருந்த அன்பைத்தான் என்னென்பது! இவ்விதத் தருக்கங்கள் நடைபெறும்போதெல்லாம் சுவாமி இராமகிருஷ்ணனந்தர் யோகாசனம் வீற்றுத் தமது தலைவருக்கு வெற்றியேற்படவேண்டுமென்று இறைவனை வேண்டிக் கொண்டே இருப்பார். இது உண்மையான கோரிக்கையாதலின் அபஜெயமென்ற சொல்லே அவர்களுடைய அகராதியில் அற்றுப் போயிற்று

பிறிதொரு சமயம் சில அன்பர்கள் சுவாமிகளிடம் அவர் எழுதிய 'ராஜயோகம்' என்ற நூலைப்படித்த பிரேமையால் பிராணயாமத்தைப் பற்றி உபதேசம் பெற வந்தார்கள். அவர்கள் நமஸ்கரித்து

நெருங்கியதும், அவர்களிலொருவர் தம்முடன் கலாசாலையில் வாசித்தவரென்பதைச் சுவாமிகள் அறிந்துகொண்டு அவர்களைத் தம்மருகே அமரும்படி ஆசனமளித்ததும், அவர்கள் வினவுமுன் தாமே பிராணாயாமத்தைப் பற்றி யுரைக்கத் தொடங்கி விட்டார். மாலை மூன்று மணி முதல் இரவு ஏழு மணி வரை அவர்கள் உரையாடி யிருந்தார்கள். அந்த நேரத்தில் சுவாமிகள் விளக்கியருளியது இராஜயோக மென்ற நூலான கடலின் ஒரு சிறு திவலையேயாகும் இதுவன்றித் தாம் கருதி வந்த விஷயத்தை வெளியிடு முன்னரே, சுவாமிகள் அதை யறிந்து உரைத்ததுதான் அவர்களுக்கு வெகு ஆச்சரியமாயிருந்தது. இதைக்குறித்து சின்ஹா வென்ற அன்பர் வினவியபோது அவர் இதுபோல குடதேயங்களில், பலர் எண்ணிவந்த விஷயத்தைத் தாம் எடுத்துரைத்ததுண்டு என்றார். அவர் அவ்வாறு கூறியது உண்மையே என்பதை வாசகர்களும் அறிவர். அப்பொழுது அவர்கள் ஆச்சரியமுற்று "சுவாமி! தங்களுடைய பூர்வ ஜென்மத்தைத் தாங்கள் அறிவீர்களா?" என்று கேட்டார்கள். அதற்கு அவர் 'நான் அறியக் கூடும்; அறியவும் அறிவேன்; ஆனால் அதைப்பற்றித் தற்சமயம் நானொன்றுஞ் சொல்ல விரும்பவில்லை' என விடை பகர்ந்துள்ளார்.

தீர்க்க தரிசித்துவம்

இப் "பூந்தோட்ட சம்பாஷணைகள்" நடந்த இதேகாலத்தில் சுவாமிகளின் யோக சக்தியைப் புலனாக்கும் நிகழ்ச்சி யொன்றும் நடைபெற்றது. சுவாமிகள் ஒருநாள் பிரேமானந்தருடன் தமது அறையில் அமர்ந்தவண்ணம் சாதாரணமாகப் பேசிக்கொண்டிருந்தார். சம்பாஷித்துக்கொண் டிருக்கும்போதே திடீரென்று அவர் பேசலொழிந்தார்; சற்று நேரங் கழித்துத் தமது குருபாயை நோக்கி 'ஏதாவது உன் கண் முன் படுகிறதா?' என்று வினவினார். அவர் ஒன்றுமில்லை யெனவும், சுவாமிகள் தாம் ஒரு பூதத்தைப் பார்த்ததாகவும், அது தலை யறுபட் டிருந்ததாகவும், வாதனையுடன் தன்னை அத் துக்ககரமான நிலையினின்றும் காக்குமாறு வேண்டிற்றென்றும், பின் தான் விசாரித்ததில் அதே தோட்டத்தில் பல ஆண்டுகட்கு முன்னர், தான் ஒரு பிராமணனைப், அதிக வட்டிக்குக் கடன் கொடுத்து லேவாதேவி செய்துவந்ததாகவும், அக்காரணம் பற்றித் தன்னையோர் கடன்காரன் கழுத்தை யறுத்துக் கங்கையி லெறிந்துவிட்டதாகவும், அதிலிருந்து தான் பிசாசமாய் அலைந்து கொண்டிருப்பதாயும் தன் வரலாறு கூறி இரந்ததாகவுஞ் சொன்னார்.

அதிக வட்டிக்குக் கடன் கொடுத்தவன் கதி.

39-ம் அத்தியாயம்

சிஷ்ய சேகரம்

பரமானந்த மூர்த்தியான சுவாமிகளுக்குக் கல்கத்தாவிலிருந்த காலமுழுதும், தக்ஷிணேஸ்வரத்திற்குச் சமீபத்திலுள்ள அலம்பசார் மடத்தைப்பற்றிய கவலையே மிகுந்திருந்தது. குருபாய்கள் மேல் நாட்டிலிருந்து வெற்றியுடன் திரும்பிவந்த தமது தலைவர் ஆணைப்படி நடக்கச் சித்தமாயிருந்தார்கள். தாங்கள் பரமஹம்ஸரிடம் சிஷ்யர்களா யிருந்தகாலத்தில் நடந்த விஷயங்களெல்லாம் அவர்கள் ஞாபகத்துக்கு வரும்; விடுதலையை விரும்பி அலைந்து திரிந்த அந்நாளைய நிகழ்ச்சிகளெல்லாம் அவர்களுள்ளத்தி லுதிக்கும்; சுவாமிகள் தமது குருபாய்கட்கும் பக்தர்கட்கும் தமது மேல்நாட்டு அனுபவங்களை எடுத்துரைப்பார். தமது குருபாய்களைப் புதியவழிகளில் சுவாமிகள் சிறிது சிறிதாகத் திருப்பிக்கொண்டுவந்தார். மேல்நாட்டிலிருந்து சுவாமிகளுடன் வந்திருந்த பக்தர்களைத் தழுவி அவர்களுடன் கலந்து கொள்வதில் குருபாய்களுக்கு முதலில் சிறிது அருவருப்பு இருந்து வந்தது. அவர்கள் தனி வைதிகக்கொள்கையுடையவர்களா யிருந்தார்கள். சுவாமிகள் களங்கமில்லாத அவர்கள் உள்ளத்தை விசாலப்படுத்தி ஐரோப்பிய பக்தர்களுடன் சகல விஷயங்களிலும் சமமாக நடந்துகொள்ளும்படி தூண்டிவந்தார். நாளடைவில், மேல்நாட்டு பக்தர்கள் உண்மையில் ஆத்மநிவேதனஞ் செய்த மகாநுபாவர்கள் என்பது குருபாய்களுக்கு விளக்கமாயிற்று.

ஸ்ரீமத் விவேகானந்த சுவாமிகளின் சரித்திரத்தில் தோல்வியென்பதே இல்லை. 'தமக்குத் தாமே முயற்சிசெய்து ஆத்மானந்தமடைவதிலேயே கண்ணுங் கருத்துமாயிருந்த குருபாய்களைச் சுவாமிகள் மத சேவையிலும், பொதுஜன ஊழியத்திலும் சிறிது சிறிதாகப் புகுத்திவந்தார். ஸ்ரீராமகிருஷ்ண தேவரின் மகா சமாதிக்குப் பின்பு,

குருபாய்களைப் பொதுஜன சேவையுட் புகுத்துதல்.

குருபாய்களின் மனம் ஏகாந்த யோகானுபவத்திலும் ஆத்ம தரிசனத்திலுமே ஆழ்ந்திருந்தது. இவ்விதமே வேதகாலத்திலிருந்து இதுவரை மகரிஷிகளின் அனுபூதியும் சாஸ்திரவிதியும் ஏற்பட்டு நடந்து வருகின்றதென்பதும் உண்மை. அவ்விதியினுக்கேற்ப நானாவிதங்களாகத் தோன்றுகின்றவை யாவும்

* மித்தையே என்று நூல்கள் நுவலுகின்றன. ஆத்மானந்தத்தில் ஆவலுள்ளவன் அனைத்தையும் 'பொய்' என்று திரஸ்கரிக்கின்றான். மக்களிடையில் வாழ்வதும், அவர்கள் கஷ்ட நிஷ்டூரங்களில் கலந்து கொள்வதும் பாசத்தையே வளர்க்கும் என்று அஞ்சுகிறான். துறவிகள் உலக சம்பந்தமான எந்த விஷயத்திலும் சற்றும் ஈடுபடாமல் ஜாக்கிரதை யடைகிறார்கள். இவ்விதிப்படியே சுவாமிகளுடைய குருபாய்கள் இதுவரையிலும் விசேஷ சிரத்தையுடன் நடந்துவந்தார்கள். ஆனால் சுவாமிகள் மட்டும் அவ்விதம் கருதவில்லை.

இக்காலங்களில், சுவாமிகள் தமது முக்திக்கே பாடுபடுவது அதமமென்றும், ஜீவகோடிகளுக்குத் தொண்டுசெய்வதே பரமோத்தமமானதென்றும், விசாலநோக்கமே விழுப்பந்தருமென்றும் பகர்ந்து அவர்களனைவரையும் ஒன்றாகத்திரட்டி மதசேவைபுரியத் தூண்டி வந்தார்; 'நமது நாடு வரவர கீழ்நோக்கிச் செல்வதை நீங்கள் கவனியுங்கள். நமது கோடிக்கணக்கான சகோதரர்கள் பொருளாசை பிடித்துத் தவறான வழிகளில் இறங்கி வருவதைப் பாருங்கள். ஏழைகள் படும் கஷ்ட நிஷ்டூரங்களை உணருங்கள்; ஸ்ரீமத் இராமாநுஜரைப் பின்பற்றுங்கள். மூட நம்பிக்கையை விட்டு, அறிவற்றும், அன்னமற்றும், தவிக்கின்ற ஏழைகளைக் கைதூக்கிவிட நீங்கள் முன்வராவிடில் முத்தி உங்களுக்கு எவ்வாறு லபிக்கும்? அன்பர் பணி செய்தாற்றான் இன்ப நிலைதனை யெய்தலாம். தாம் இன்புறுவது பிறர் இன்புறக்கண்டு, அல்லவா?'' என்று தமது குருபாய்களை உற்சாகப்படுத்தி வந்தார்.

தாம் இன்புறுவது உலகு இன்புறக்கண்டு

அநுதினமும் சுவாமிக ளிவ்வாறு உபதேசித்து வந்தும் குருபாய்களைத் தமது கொள்கைக்குத் திருப்புவது சிரமமாகத்தா னிருந்தது. கர்மயோகிகளான சிலர்மட்டும் அப்பொழுதே சுவாமிகளின் சொற்படி நடக்கச் சித்தரானார்கள். பலர் வாது செய்துகொண்டேயிருந்தார்கள். ஆனால் சுவாமிகளின் கருத்துக்கு மாறாகச் செல்ல முடியுமோ? தமது மகாவல்லமையால் அவர் அனைவரையும் தம் வச

" * பானது முகத்திற் குலருபொய் படிற்றுளக்கினுக் கதுமெய்ம்மை
திராமுறு சாட்சிதானெனச் சீவன் தெரிந்திடில் பரன்மண மிவற்காம்
வீரவிய சகம்அப் போதுபொய்யாகி விளங்கிடுமென்றெனக் கிசைத்தான்"
—சிதம்பர சுவாமிகள்.

மாக்கிவிட்டார். மேலுலக மில்லெனினும் சுவாமிகளின் சொற்படி நடந்தே தீரும் ஓர்வித அதீத அன்பு அவர்களிடம் இயல்பாகவே குடிகொண்டிருந்தது. மேலும் 'எனக்குப் பின் நரேந்திரனை உறுதியாகப் பிடித்துக் கொள்ளுங்கள்; அவன் அவதாரபுருஷன்' என்ற குருதேவரின் வாக்கு, அவர்களை சுவாமிகளிடத்தில் அளவற்ற அன்புடையா ராக்குந் தன்மையதா யிருந்தது.

குருவாக்கிய பரிபாலனம்

இத்தகைய தூண்டுதலின் பயனாகச் சுவாமிகளை ஸ்ரீராமகிருஷ்ண னென்றே பன்னிரண்டாண்டுகளாகப் போற்றி வருபவரும், அவரது வாய்மொழிகளையே மறையென அபிமானிப்பவரும், அவரை யன்றி வேறு தெய்வம் அவனியிலில்லை யென்ற அபார பக்தி யுடையவரும் அரைக்கணமும் மடத்தைவிட்டு அகலாதவருமான சுவாமி ஸ்ரீராமகிருஷ்ணானந்தர், தென்னாட்டில் வேதாந்த பிரவர்த்தகார்த்தமாக சுவாமிகளுடைய கட்டளைப்படி சென்னைக்கு வந்தார், சுவாமி சாரதானந்தரும் அபேதானந்தரும் ஏற்கனவே சுவாமிகளின் அழைப்பிற் கிசைந்து மேல்நாடுகளுக்குப்போய் வேதாந்தசேவை செய்துகொண்டிருந்தார்கள். சுவாமிகளின் கண்ணுக்குக்கண்ணான அகண்டானந்தர், மூர்ஷிதாபாத்தில் ஜனங்கள் பசியால் நலிந்து மாய்வதைப் பார்த்து, ஆங்குச்சென்று பஞ்ச நிவாரணவேலையைத் தொடங்கினர். இவருடைய அளவற்றபக்தியை, 1894-ம் ஆண்டில் அல்லும் பகலும் பரிவ்ராஜகராகச் சென்றிருந்த சுவாமிகளைப் பல விடங்களினும் தேடிக் காணாமையால் மனம் வாடிக் கண்ணீர் சொரிந்து, கடைசியில் க்ஷேத்திரியில் பார்த்து வணங்க, சுவாமிகள் எள்ளளவும் அன்பற்றவர்போலப் பேசியும், தமது அபிமானத்திற் குறையாதவராய் அகன்ற நிகழ்ச்சியினின்றும் அறியலாகும். இவ்வாறு சுவாமிகளுடைய குருபாய்களில் ஒவ்வொருவராக வெளி நகரங்கட் கேகி சேவாஸ்ரமங்களையும், வெள்ளத்தாலும் பஞ்சத்தாலும், பெருவாரி நோய்களாலும் மக்கள் துயருறுகின்ற இடங்களில் ரக்ஷணார்த்த வேலைகளையும் ஆரம்பித்தார்.

குருபாய்களின் குலவிய பக்தி

சுவாமிகள் கல்கத்தாவிற்கு வந்து சேர்ந்தது முதல் சிறிதும் ஓய்வேற்படவில்லை. எவ்வளவோ விஷயங்களில் அவர் ஈடுபட்டு உழைக்கவேண்டி யிருந்தது. இங்ஙனம் சிரமப்பட் டுழைக்க வாரம்பிக்கவே சிரேஷ்டரான வைத்தியர்கள் பலர் சுவாமிகளின் உடல்

மிக்க பலஹீனமா யிருக்கின்றபடியால் முற்றிலும் ஓய்வெடுத்துக் கொள்ளவேண்டுமென்று கூறினர். அக்காலத்திற்றான் சுவாமிகட்கும் அதிக வேலை யிருந்து வந்தது. இமாசல ஆஸ்ரமத்தைக் குறித்தும், பிறகு அதை சௌக்கியமான வேறொரு இடத்திற்கு மாற்றுவதைப் பற்றியும், தலைமையான மடத்தைக் கங்காதீரத்தில் அமைப்பதற்காக விசாலமான இடமொன்றை வாங்கும் விஷயமாயும் பலவித அவசிய கார்யங்கள் அப்பொழுதே வந்து நெருங்கின. மேல் நாட்டில் அபாரவேலை செய்துவரும் இரண்டு குருபாய்களும் சுவாமிகளுக்கு அடிக்கடி தமது சேவாபிவிருத்தியைப்பற்றி யெழுதி மேல் நடத்தவேண்டிய கார்யங்களைப்பற்றி யோசனை சொல்லும்படி கேட்டுக்கொண் டிருந்தார்கள். சுவாமிகளும் களையுற்று, சிரமபரிகாரார்த்தமாகக் கொஞ்சகாலம், தமது அலுவல்களையெல்லாம் ஒத்தி வைத்து 'தார்ஜலிங்'குக்குப் போகத் தீர்மானித்தார். ஏற்கனவே

தார்ஜிலிங்கில் ஏகாந்த வாஸம்

சேவியர் தம்பதிகள் தார்ஜலிங்கி லிருந்து வந்தார்கள. சுவாமிகள் தார்ஜிலிங்கை யடைந்ததும், சுவாமி பிரேமானந்தர், திரிகுணாதீதர் ஞானானந்தர், பாபு கிரிஷ் சந்திர கோஷ், குட்வின் துரை, டாக்டர் டர்ன்புல், ஸ்ரீமான்கள் அளகசிங்கப் பெருமாள், ஜி. ஜி. நரசிம்மாச்சாரியர், சிங்காரவேலு முதலியோரும் அங்கு சென்றனர். பின்னர் குறிப்பிட்ட மூவரும் சுவாமிகளைப் பூர்வத்தில் சென்னையிற் சந்தித்தவர்கள்; பின்னரும் சென்னையிலிருந்து கல்கத்தாவுக்கு அவரைப் பின்றொடர்ந்து வந்தவர்கள். தார்ஜிலிங்கில், எம். என். பானர்ஜியவர்கள் சுவாமிகளை அவருடைய அடியார்களோடழைத்து உபசரித்தார். மற்றும், பர்த்துவான் மகாராஜா தமது வாசஸ்தலத்தின் 'ரோஜாவனம்' என்ற பகுதியில் சுவாமிகளை எழுந்தருளவித்து உபசரித்தார். இங்கு சுவாமிகள் உலாவுவதும் ஏகாந்தமாக இமாசலத்தின் இயற்கை யழகைத் தரிசிப்பதுமாக விருந்தார். இந்நாட்களில் நிகழ்ந்த ஓர் அரிய சம்பவத்தை இங்குக் குறிப்பிடுவோம். மோதிலால் முகர்ஜி என்பார்—(பின்னர் சச்சிதானந்தர் என்ற தீக்ஷாநாமம் பூண்டவர்) தமது மனைவியுடன் அங்கு வசித்து வந்தார். திடீரென்று அவருக்குக் கொடிய கபவாத சுரம் வந்துவிட்டது. அப்பொழுது சுவாமிகள் கருணையுடன் அவர் சிரஸை ஸ்பரிசிக்கச் சுரம் உடனே நீங்கிற்று. மோதிலால் முகர்ஜி என்னும் இவர் சுவாமிகளிடம் மிக்க உள்ளன்பு பூண்டவர். சங்கீர்த்தன காலங்களில் அவர் ஆடிப்பாடிக் குதித்துப் புரண்டு மூர்ச்சையடைந்து கண்

ணீர் வடித்து "கிருஷ்ணா! ராமா!" வென்று துதித்துப் பித்தர்போலாகிவிடுவார். இந்த நிலை அவருக்கு மிகவும் சாமான்யமாகிவிட்டது.

யோக சக்தியே சுரத்திற்கு மருந்தானமை

அல்லும் பகலும் அவர் தன்னைமறந்து "ராமா! கிருஷ்ணா!" என்று ஸ்மரித்துக்கொண்டே இருப்பார். மத சேவைக்கு ஆயத்தப்படுத்தக் கருதி சுவாமிகள் அவருடைய மார்பை ஒருமுறை ஸ்பரிசிக்க, அவர் அவ்வித பக்தலீலைகளினின்றும் மாறிப் பெரிய அத்வைதியாகி ஞானயோகத்தை அப்யசிக்கத் தொடங்கினர். மகான்கள் யோகசக்தியால் ஸ்பரிசமாத்திரத்தில் எவரையும் உத்தமமான சேவையில் திருப்பவல்லவர்கள் என்பது இதனால் தெளிவாகும்.

இதற்கிடையில் குடதேச யாத்திரையிலிருந்து திரும்பி தம்மைத் தரிசிக்க ராஜபுதனத்திலிருந்து கேஷத்ரி மன்னர் ஸ்ரீ அஜித்சிம்மர் கல்கத்தாவுக்கு வந்தார். இதையறிந்த சுவாமிகள் உடனே கல்கத்தாவுக்குச் சென்றார். கேஷத்ரி மகாராஜா சுவாமிகளைக் காண வந்தபோது, சுவாமிகள் அவரை அலம்பசார் மடத்தில் ஏற்றுபசரித்தார். அஜித்சிம்மர் தாமும் மற்றுஞ்சில இராஜபுதனச் சிற்றரசர்களும்

கேஷத்ரி மகாராஜாவின் சிரேஷ்டமான பக்தி

இங்கிலாந்துக்குச் செல்ல உத்தேசித்திருப்பதாகச் சுவாமிகளிடம் விண்ணப்பித்து, அவரையும் தம்முடன் வரும்படி வேண்டினர். வைத்தியர்களின் நல்லுரைக் கிணங்கி சுவாமிகள் செல்லவில்லை. ஆனால் இந்த தார்ஜிலிங்வாசத்தால் சுவாமிகளுக்கு வியாதி சிறிது குணப்பட்டது. அவரைப் பற்றிய ஒருவிதப் பாழும் நோய், தேக சுகத்தைத் தருவதுபோல் கொஞ்சகாலம் காட்டுவதும், அப்பால் திடீரென்று பிடிப்பதுமாக விருந்தது. அதனால் வைத்தியர்கள் அவரை அதிகம் வாசிக்காமலும், பேசாமலு மிருக்குமாறு வேண்டிக் கொண்டார்கள். சுவாமிகளுக்கு இவ்விதநோய் வந்ததுபற்றி சிஷ்யர்களும் வைத்தியர்களும் மனக்கலக்க மெய்தினர்; சற்று அதிகமாக வேலைசெய்தால் அவருக்கு மூர்ச்சையும் களையும் காயலும் வந்துவிடும். ஆனால் வேலைசெய்யாம லிருப்பது சுவாமிகளுக்கு மரணத்தினுங் கொடியதா யிருந்தது.

எல்லா இடங்களையும்விட ஆஸ்ரமத்தி லிருந்தால்தான் சுவாமிகளுக்கு அதிக சந்தோஷமா யிருக்கும். இக்காலங்களில், முன்பே ஆஸ்ரமத்திற் சேர்ந்து பிரம்மச்சாரியாய் யோகசாதனஞ் செய்து கொண்டு குருபாய்களின் சொற்படி நடந்துவந்த யுவர்கள் சிலர்



ஸ்ரீமத் விவேகானந்த ஸ்வாமிகள் (துறவறம்பூண்ட தூயோர்)

(பக்கம் 487.)

சுவாமிகளிடம் மூலமந்திர உபதேசமடைந்து காவி தரித்தார்கள். சுவாமிகள் அவர்களிடம் பரிபூர்ண திருப்தி யடைந்தவராய், அவர்கட்கு வைராக்கியத்தை மேற்கொள்ளும்படி உபதேசஞ்செய்து அனுதினமும் பகவத் கீதையைப் புகட்டிச் சமய சேவைக்கு ஆயத்தப்படுத்தி வந்தார்.

பிரம்மச்சாரிகளை ஏற்றமை

அவர்களுக்குக் காவியளிக்கச் சுவாமிகள் திருவுள்ளம் பற்றியக்கால் அவரது குருபாய்கள், சிலரை ஏற்பதில் மட்டும் பலத்த ஆக்ஷேபனை செய்தார்கள். சுவாமிகள் அவர்கள் வார்த்தையைக் கேளாமல் 'நீங்கள் சொல்வது சிறிதும் நன்றாயில்லை! நாமே குற்றமுடையவர்களை ஏற்று நல்வழியில் திருப்பப் பின்வாங்கினால் அவர்களை யார்தான் ரக்ஷிப்பது?' என்று சொல்லி அவர்களையும் ஏற்றுக் கொண்டார். அந்த சமஸ்கார வைபவம் மிகவும் விசேஷமாக நடைபெற்றது.

துறவற மேற்ற அத்தூயோர் முறையே விரஜானந்தா, நிர்ப்பயானந்தா, பிரகாசானந்தா, நித்யானந்தா என்ற தீக்ஷாநாமம் பூண்டார்கள். அந்த சுதினத்தின் முதல்நாள் அவர்கள், தலை மொட்டையிட்டு, கங்கையில் நீராடி, தூய சுவேத வஸ்திரம்பூண்டு, சுவாமிகளை நமஸ்கரித்துக் குரு ஆக்ஞைப்படி, சம்பூர்ணப் பிதுர்கடன்களைச் செய்து முடித்தார்கள்; அதுமுதல் தமக்கும் இல்லற கருமங்களுக்கும் பிதுர்க்களுக்கும் வருணாஸ்ரமங்கட்கும் எவ்வித சம்பந்தமுமில்லை யென்று பிரதிக்ஞைசெய்து கொள்வதே இச்சடங்குகளைச் செய்வதன் நோக்கம்.

துறவறம்பூண்ட தூயோர்

இப்பிறவியின் சுகங்களையோ மறுபிறப்பில் அடையக்கோரும் போகங்களையோ அவர்கள் அன்றே மறக்கக்கடவர். அது முதல் அவர் ஸ்தூல சரீரத்தாற் கருதப்படுபவரல்ல; இன்னாருடைய புத்திரரென்பதும் அப்பொழுதே ஒழியும்; ஸ்தூலசரீர சம்பந்தா சம்பந்தங்களை அவர்கள் அறவே மறந்தவர்களாவர்; இந்த சிரார்த்தத்தைச் சுவாமிகளின் பிரியரான ஓர் சிரத்தையுள்ள வேதியர் நடத்தி வைத்தார். இவ்வித சிரார்த்தத்தை அவர்கள் முடித்துத் திரும்பியதும் சுவாமிகள் "சம்சாரத்திற்கு அவர்கள் இறந்தவர்கள்; நாளையிலிருந்து புதுமாதிரியான உடை; புதிய எண்ணங்கள் உடையோராவர்; பிரம்மமென்னும் தூண்டப்பெற்ற தீயை ஒப்பார்; துறவறத்தால் மட்டுமே யன்றி செல்வத்தாலோ, பிராப்தத்தாலோ சிரஞ்சீவித்வம் எய்தப்படுவதில்லை" என உரைத்தார்.

அவர்கள் காவிபூண்டு தீக்ஷா நாமமேற்றுச் சுவாமிகளை வந்தித்தபோது அவர் கண்களினின்றும் சுடரொளி வெளிப்பட, உரோமம் சிலிர்ப்பப் பின்வருமாறு உபதேசிக்கலுற்றார்: தன் சுய ஜீவன் முக்தியின் பொருட்டும், பலரின் சந்தோஷ நன்மைகளைக் குறித்தும் சந்நியாசி உலகில் அவதரித்தவன் என்பதை நீங்கள் என்றும் மறவாதிருக்கக் கடவீர்கள். பிறர் க்ஷேமார்த்தமாகத் தன் வாழ்நாட்களை அர்ப்பணஞ்செய்யவும் 'ஹோ' வென்றலரும் கோடிக்கணக்கான மக்களை வாதனையினின்று கைதூக்கிவிடவும், ஆதரவற்ற விதவைகளின் கண்ணீரைத் துடைக்கவும், ஈன்றதாயின் ஹிருதயத்தைக் குளிர வைக்கவும், அறிவிலிகளென்று தாழ்த்தப்பட்டு நலிவோரை உய்யும் வழியுடன் சுவாதீன மடைவிக்கவும், பார பக்ஷமின்றி சாஸ்திரங்களின் உட்கருத்துகளை உலகெங்கும் பரப்பவும், இகபர சாதனங்களை எவரு மடையுமாறு செய்யவும், அறியாமை யென்னும் ஆரண்யத்தில் ஆசையென்னும் குகையில் தூங்கிக்கொண்டிருக்கும் 'ஹிருதயம்' என்னும் பிரம்ம ஞானமான சிம்மத்தைத் தூக்கத்திலிருந்து எழுப்பி ஞான மடைவிக்கவும் சந்நியாசி உலகில் பிறந்தவன்.''

சந்நியாசி இலக்கணம்

பிறகு, தமது குருபாய்களைத் திரும்பிப்பார்த்து 'இக்காரியங்களைச் சாதிக்கவே நாம் உலகிற் பிறந்தோ மென்பதையும் அவற்றை நாம் செய்தே தீரவேண்டு மென்பதையும் நீங்கள் எப்பொழுதும் மறவாதிருக்கக் கடவீர் ! எழுங்கள் ! விழிப்படையுங்கள், பிறரையும் எழுப்பி விழிப்படையத் தூண்டுங்கள். எதை நமது குருதேவர் நம்மைச் செய்யும்படியாகத் தூண்டினரோ அதைப்புரிய முன்வாருங்கள், புராணங்களை நீங்கள் கற்கவேண்டாம். சாஸ்திரங்களை விசாரிக்க வேண்டாம். ஸ்ரீராமகிருஷ்ணர் காட்டியருளிய சர்வோத்கிருஷ்டமான நெறியைப் பின்பற்றுங்கள்'' என்று புகன்றருளினர். அப்பொழுது அவர் திருமேனியினின்றும் காந்தி வீசிற்று; சிம்மத்தைப் போல் கர்ஜித்தார்; சமயமென்னும் கோபுரத்தைக் கட்டவேண்டிய விஷயங்களை அழுத்தமாக அறிவுறுத்தினர்; பக்தியின் துறைகளைப் பகர்ந்து நின்றார். ''குருவினுடைய பாதார விந்தங்களில் சதாசார சிஷ்யன் அனைத்தையும் அர்ப்பணஞ்செய்து அவர் சொற்படி நடந்து வரவேண்டும். சீடர்களின் பரிபூர்ண நம்பிக்கை, தாழ்மை இவற்றை அங்கீகரிக்கும் குருவின் யோக்யதை யென்ன? பரப்பிரம்ம விவேக நிஷ்டரான அவ்வாசாரியன் தமது கருணையால் சிஷ்யனுடைய சஞ்

சலத்தையும் வியாகூலத்தையும் போக்கி, சம்சார சாகரத்தினின்றும் கரையேற்றி, கோடி சூர்யப்பிரகாசமான லோகத்திற்கிட்டுச் சென்று பிரம்மானந்தத்தை யனுபவிக்கச் செய்யும் தன்மையுடையவரா யிருக்கவேண்டும்" என்று சுவாமிகள் சொல்லித் துறவறத்தின் உண்மையான தாத்பரியங்களை விளக்கினர். பிறகு அவ்வாலிபர்களை நோக்கி "அனைத்தையும் நீங்கள் உதறித்தள்ள வேண்டும். சிறிதும், சுகத்தையோ சௌகரியத்தையோ சிந்திக்கவுங் கூடாது; எல்லாப் பற்றுகளையும் துண்டு துண்டாகச் சின்னபின்னமாக வெட்டி வீசி யெறிய வேண்டும்; மண், பொன், பெண் ஆசைகளை விஷமென்றும், பெயரையும் கீர்த்தியையும் திரணமென்றும், பிரதாபத்தைப் பெரும்பேயென்றும், குலப்பெருமைகளும் பதவிச் செருக்கும் மதுபானஞ் செய்வதைப் போன்ற பாப சொரூபங்களென்றும் கருதவேண்டும். சமயப் பிரசார நிமித்தம் மனமொப்பி வெளிப்பட்ட நீங்கள் உங்கள் பாகதிக்காகவும், உலக ரக்ஷணார்த்தமாகவும் பாடுபடவேண்டும். இவ்விதம் நடந்துகொள்ள நீங்கள ஆத்ம சக்தியுடன் முன்வரக்கூடுமா? தீர எண்ணி இந்த வழியிற் செல்ல முயலுங்கள். பழைய வாழ்விற்குத் திரும்ப இன்னும் காலமிருக்கிறது. எனது கட்டளைக்குச் சற்றும் மனங் கோணமல் கீழ்ப்படிந்து நடக்க நீங்கள் சித்தமாயிருக்கிறீர்களா? ஒரு சிம்மத்தையோ, கொடிய பாம்பையோ எதிர்க்கும்படி நான் ஏவினும் சரி, கங்கையின் வெள்ளப் பெருக்கில் குதித்து ஒரு முதலையைப் பிடித்துவரச் சொன்னலும் சரி, அசாமிலுள்ள ஒரு தேயிலைத் தோட்டக்காரனுக்கு உங்களை அடிமைக் கூலிகளாக விற்று ஆயுட்காலம் முழுமையும் நெற்றி வியர்வை நிலத்தில் விழ உழைக்கச் சொன்னலும் சரி, அது நிச்சயமாக உங்களுக்கு நன்மை பயக்குமென்று நான் கருதித் தூண்டினல் உடனே நீங்கள் அதன்படி நடக்கத் தயாராயிருப்பீர்களா?" என்று வெகு அழுத்தமாகக் கேட்டார். அதற்கவர்கள் மௌனமாய்த் தலைவணங்கி நின்றார்கள். பிறகு சுவாமிகள் அவர்களுக்கு மந்திரோபதேசஞ்செய்து, விராஜா ஹோமம் செய்வித்து, தீயின்முன் அவர்கள் "இனி நாங்கள் மூன்றுலகங்களிலுமுள்ள பொருள்களிடத்தும் ஆசையற்றிருக்கிறோம்." என்று சபதஞ் செய்ய, அவர்களை அன்போடழைத்துத் தழுவிக் கொண்டார்.

எண்ணித் துணிக கருமம்

இதைப்போல இக்காலத்தில் அலம்பசார மடத்திலும் தீக்ஷை விழாவொன்று நடைபெற்றது. அங்குச் சுவாமிகள் ஸ்ரீ சரத் சந்திர

சக்ரவர்த்தி யென்னும் ஒரு பக்தருக்கும், சுத்தானந்தருக்கும் தீக்ஷையருளினர். இவ்விருவரையும் சுவாமிகள், உண்மையான தாபமுடையவர்களா வென்று சோதித்துப் பார்த்துக் கொண்ட பின், முறைப்படி சடங்குகளைச் செய்வித்து சமய தீக்ஷையருளினர். அப்பொழுது சுவாமிகள் சாரத் சந்திரரைப் பார்த்துக் கூறியதாவது:

மற்றோர் தீக்ஷை விழா

"அன்பனே! நீ இன்று ஈஸ்வரார்ப்பணமாயினை. நீ சிரத்தையோடிருப்பது மட்டுமின்றி உன் தேசத்தாரிடத்தும் சிரத்தையை யுண்டுபண்ணக் கடவாய். நீ * நசிகேதஸைப்போல் உண்மையையறியவும் கடைத்தேறவும், ஜனன மரண நிவர்த்தி மருந்தை யடையவும் இயமனுடைய வாயிலைப் போய்த் தட்டுக. மரணமென்னுங் கொடிய விலங்கின் வாயினின்றும் நீ உண்மையை உணரவும், உன் தலையை நுழைக்கவும் வேண்டுமாயின் அதனைச் செய்ய நீ அஞ்சாது முன்வரல் வேண்டும். 'இறப்பதற்கு என் கடவேன்' என்ற பயந்தானே? அதற்கு மேலும் நீ ஏகுதல் வேண்டும். இன்று முதல் நீ அஞ்சலொழி! சித்தமாயிரு; உனது மோக்ஷ ஹேதுவான விஷயங்களிலும்

---

* நசிகேதஸ் வரலாறு: அருணர் என்ற மகரிஷிக்கு ஔத்தாலகி என்ற புதல்வ ரிருந்தார். ஔத்தாலகியின் புதல்வனே நசிகேதஸ் என்பான். ஔத்தாலகி 'விஸ்வஜித்து' யாகஞ் செய்தார். அதில் எல்லாவற்றையுந் தானஞ் செய்தபொழுது, சக்தியற்ற பசுக்களைத் தானஞ் செய்வதால் பயனென்ன வென்று நசிகேதஸ் தன் தந்தையைப் பார்த்து 'என்னை யாருக்குக் கொடுக்கப் போகிறீர்கள்?' என்று மும்முறை வினவ, கோபங்கொண்ட மகரிஷி 'இயமனுக் களிப்பன்' என்றியம்பினர். அப்பொழுது எழுந்த அசரீரி வாக்கின்படி நசிகேதஸ் இயமனுலகிற் கேகினன். இங்கு இயமன் இல்லாதிருந்தபோதிலும் அவன் வேலைக்காரர்கள் நசிகேதஸை யுபசரிக்க, அவன் அவ்வுபசாரங்களை இயமனுடைய உத்தரவின்றி ஏற்க விசையாது உபவாசமிருக்க நான்காம்நாள் வந்த இயமன், இச்செய்தி கேட்டு மகிழ்ந்து, மூன்றுநாள் உபவாசத்திற்கும் மூன்று வரங்களைக் கேட்கும்படி நசிகேதஸை வினவினன். அப்பொழுது நசிகேதஸ், முதல் வரத்தால் தான் திரும்பிப் போய் தன் தந்தையை நமஸ்கரிக்குங்கால் தன்னை அவர், தமது பிள்ளையென்று தெரிந்துகொள்ள வேண்டுமென்றும், இரண்டாவதால் சுவர்க்கத்திற்குக் காரணமான அக்னி ஜெயனம் செய்யும் விதத்தை உபதேசிக்கும்படியும், மூன்றாவதால் ஜீவாத்ம சொரூபத்தை உரைத்தருளும்படியும் வேண்டினன். அவ்விதமே இயமன் அனைத்தையும் அளித்து அவனை அனுக்கிரஹித்தான். (நாசிகேத உபாக்யானம் காண்க.)——

பிறர் விடுதலைக்குப் பாத்திரனுக்கக்கூடிய தன்மையிலும் பொருந்தா விடில் 'ஊனிடைச் சுவர் வைத்து, என்பு தூண் நாட்டி, உரோமம் வேய்ந்த ஒன்பது வாசல் தானுடைக் குரம்பையால்' எய்துதற்குரிய பயன்தானென்ன? இன்று மூல மந்திரோபதேசம் பெற்றதன்பயனுக இன்றே உன்னை பகவதார்ப்பணஞ் செய்துவிட்டு கொடிய அசுரரின் துன்பத்திற்கு ஆற்ருத தேவர்கள் ஓடி முதுகெலும்பைத் தரும்படி யாசித்தபோது மனமொப்பி யளித்த ததீசியைப்போல உனது தேகத்தை உலக ரக்ஷணர்த்தமாக அர்ப்பணஞ் செய்'' என்பதாம்.

அப்பால், சுவாமிகள் நீராடிப் புதிய காவியாடை தரித்துத் தம தறையில் யோகாசனத்தில்வீற்று, கண்களைப் பகுதியாக மூடி இரண் டொரு வார்த்தைகளை உச்சரித்ததும் அசைவற்றுச் சமாதியாகி விட் டார். சிஷ்யர் வெளியில் சிவத்யானம் செய்துகொண்டிருந்தார். சற்று நேரமானபின், சுவாமிகள் அவரை அன்புடன் ''அன்பனே! உள்ளே வா'' என்றழைத்துக் கதவைத் தாளிடச் சொல்லி, தன்ன ருகே வீற்றிருக்கச் செய்து மூல மந்திரத்தை மும்முறை யுபதேசித்து அவரையும் மும்முறை ஜெபிக்கச் செய்தார். பின்பு கதவுகள் திறக்கப் பெற்றன. சிஷ்யர் சில கனிவகைகளைக் குரு தக்ஷிணையாகச் சமர்ப் பித்தார். அவ்வாறே சுத்தானந்தருக்கும் இவ்வுபதேசம் நடை பெற்றது. இங்ஙனம் 'சிஷ்ய சேகரம்' ஆயினபின் சுவாமிகள் ஸ்ரீ ராம கிருஷ்ண மடத்தை ஸ்தாபிக்கும் விஷயமாய் யோசிக்கலானர்.

40-ம் அத்தியாயம்.

ஸ்ரீ ராம கிருஷ்ண மட ஸ்தாபனம்

மகானன சுவாமிகளோ, ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸரோ அவகாச மேற்பட்ட போது அடிக்கடி கல்கத்தாவிற் கெழுந்தருளுவது வழக்கம். அவ்வமயங்களில் அநேகமாக பாக்பசாரி லுள்ள பரம பாகவதோத்தமரான ஸ்ரீபலராம் பாபு அவர்களின் கிரு கத்திற்குச் செல்லாது திரும்பமாட்டார்க ளென்பதை இந்நூலின் பூர்வாங்கத்திலேயே நாம் கூறியுள்ளோம். அக்காலங்களில் நகரின் பலபாகங்களிலிருந்தும் பக்தர்கள் அங்கு வந்து கூடுவர். இதனல் பலராம் பாபுவின் கிருகத்தைப் பரிசுத்தமானதாகக் கருதி அவ்விரு மகாபுருடர்களுடைய சீடர்களும் அடிக்கடி வருவது வழக்கம்.

சுவாமிகள் அனுப்பியிருந்த அழைப்பிற்கிணங்க, ஸ்ரீராமகிருஷ்ணரின் இல்லறத் துறவற அன்பர்களனைவரும் 1897ஆ மேமீ முதல் தேதியன்று பிற்பகலில் பலராம் பாபுவின் வீட்டிற் கூடினர். சுவாமிகள் தமது கிருஹஸ்த சந்நியாச பக்தர்களனைவரையும் ஒரு ஸ்தாபனத்தின் கீழ்க் கூட்டி, தமது தர்ம ஸ்தாபனத்தை அவர்கள் ஒத்துழைப்பால் நடத்தவும் தமது குருதேவரின் திவ்யப் பெயர் சூட்டி மடமொன்றை ஸ்தாபிக்கவும் கருதியே கூட்டிய கூட்டமிது. அவர் அழைப்பிற் கிணங்க அங்கு அன்பர்களனைவரும் கூடியதும் சுவாமிகள் பின்வருமாறு கூறினர்.

''பல நாடுகளிற் செய்த சுற்றுப்பிரயாணத்தின் பயனாக எந்தப் பெரிய நிரந்தரமான காரியமும் ஓர் ஸ்தாபனமின்றி நடைபெறா தென்னும் முடிபுக்கு நான் வந்திருக்கிறேன். நிகழ்கால நிலையில், இந்தியாவைப் போன்ற தேசங்களில், சமத்வமும் உரிமையும், பெரும்பான்மையோரால் முடிவுசெய்யும் வழக்கமுங் கொண்டுள்ள பிரஜா பிரபுத்வக் கொள்கைப்படி, எந்த ஸ்தாபனத்தையும் நடத்தவியலாது. வித்யாபிவிருத்தியோடு, தியாக மூர்த்திகளாய், தன் பலத்தில் நிற்குந் தகைமையுடன் சமூக முன்னேற்ற நிபுணர்களாகி, தேச க்ஷேமாதிகாரிகளாய் நாம் விளங்குங் காலத்தில் அந்த பிரஜா பிரபுத்துவ சித்தாந்தப்படி நாமும் நடக்கலாம். இவற்றையெல்லாம் ஆராயுங்கால், நமக்கு ஒரு தலைவர் வேண்டும்; அவரது சொற்படி அனைவரும் வணங்கி நடக்க வேண்டும்; பின்பு உரியகாலத்தில் அங்கத்தவர்களின் ஆலோசனைப்படியே இந்த ஸ்தாபனம் நடைபெறலாம்.

சுவாமிகளின் முன்னுரை

எந்த மகானுபாவருடைய கடாக்ஷ வீக்ஷிண்யத்தால் நாம் சந்நியாசிகளானோமோ, எவரைக் குலதெய்வமாகக் கொண்டு பூஜித்து கிருஹஸ்தர்கள் தங்கள் இல்லறவாழ்வை இயற்றுகின்றார்களோ, எந்தத் திவ்யபுருஷருடைய திருநாமம் அவருடைய மகாசமாதியான ஒரு மகாமகத்திற்குள் பூலோகமெங்கும் வியாபித்து விட்டதோ, அவருடைய திவ்ய நாமத்தையே இந்தச் சங்கமும்பூண்டு விளங்கும். ஆகவே, இச்சங்கம் 'ஸ்ரீராம கிருஷ்ண மடம்' என்ற பெயரையடையும். நாம் அந்த பரமாசாரியருடைய உபதேசங்களைக் கடைப்பிடித்தொழுகும் சிஷ்யர்கள் தான். இதில உங்களெல்லோரையும் ஒத்துழைக்கப் பிரார்த்திக்கின்றேன்.''

சுவாமிகள் பிரஸ்தாபித்த மேற்கூறிய விஷயம் ஏகோபிதமாக ஒப்புக்கொள்ளப்பட்ட பின், பின்வரும் தீர்மானங்கள் நிறைவேறின:

1. இச்சபை 'ஸ்ரீ ராம கிருஷ்ண மடம்' என்றழைக்கப்படும்.

2. ஸ்ரீராம கிருஷ்ண தேவர் செய்தருளிய திவ்யோபதேசங்களைப் பரப்புவதும், அவருடைய அனுபவ பூர்வமான சித்தாந்தங்களைக் கொண்டு மானுடப் பிரகிருதியின் நன்மைகளை வளர்ப்பதும், ஆத்மானந்தத்வைத மக்களுக்கு ஊட்டுவதும் இச்சபையின் நோக்கங்களாம்.

ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்தின் நோக்கங்கள்.

3. ஸ்ரீராம கிருஷ்ணர் சர்வ சமய சமரஸ நோக்கத்துடன்—எந்த ஆதி யந்த மில்லா மதத்தை உபதேசித்தாரோ அதை உண்மையுடன் உள்ள படியே அனுஷ்டிப்பது இந்தச் சாதுசங்கத்தாரின் கடமையாகும்.

4. இதனுடைய கொள்கைகளின் பத்ததிகளாவன: (1) இகபர க்ஷேமார்த்தமாக உபதேசிக்கக்கூடிய தகுதியுடையவர்களாக சிஷ்யர்களைப் பழக்குதல்; (2) கலை, கைத்தொழில் முதலியவற்றின் அபிவிருத்தியை வளர்த்தல்; (3) ஸ்ரீ ராமகிருஷ்ணரால் தெளிவுற உணர்த்தப்பட்ட வேதாந்தக் கொள்கைகளை ஜன சமூகத்தில் புகுத்திப் பரப்புதல் முதலியன.

5. இந்தியக் கார்ய இலாகா: பாரத பூமியின் பல வேறிடங்களிலும் மடங்களையும், ஆஸ்ரமங்களையும் ஸ்தாபித்து, சந்நியாசிகளைப் பழக்கவும், சமயப்பிரசாரதாபமுடைய குடும்பிகளை அபிமானிகளாகச் சேர்க்கவும், ஜனங்களின் போதனார்த்தமாக, ஒவ்வொரு மாகாணங்களிலும் யாத்திரைபோய் பொருள் சேகரிப்பதும் இதன் வேலைகளாம்.

6. பிரதேச இலாகா: பழக்கப்பெற்ற சந்நியாசிகளை வெளிநாடுகளுக்கனுப்பி, தர்ம ஸ்தாபனார்த்தமாக சபைகளை ஸ்தாபித்து, அம்மடங்களுக்கும், சுதேச மடங்களுக்கும் நெருங்கிய சம்பந்தா சம்பந்தமும் பரஸ்பர உதவியும் நிலவுமாறு செய்தல் இதன் அலுவல்களாம்.

இச்சங்கத்தின் நோக்கங்கள் யாவும், சமய மானுடப் பிரகிருதியின் தொடர்புடையனவாதலின், ராஜீயத்திற்கும் இம்மடத்திற்கும் எத்தகைய சம்பந்தமு மிருத்தலாகாது. ஸ்ரீராம கிருஷ்ணருடைய கொள்கைகளில், நம்பிக்கை யுடையவர்களும், மடத்தினிடத்தில் அபிமானமுள்ளவர்களும் மேற்கூறிய நோக்கங்களை நிறைவேற்றி வைப்பதில் இச்சையுள்ளாரும் இம்மடத்தின் அங்கத்தினராகச் சேர அருகராவர்.

இத்தீர்மானங்கள் நிறைவேறியபின்னர், நிர்வாகிகள் நியமிக்கப்பட்டார்கள். ஸ்ரீமத் விவேகானந்த சுவாமிகள் பொது அக்ராசனாதி

பதியாகவும், சுவாமி பிரம்மானந்தரும் சுவாமி யோகானந்தரும் கல்கத்தாமடத்து அக்கிராசனாதிபதி - உப அக்கிராசனாதிபதிகளாகவும் ஏகோபிதமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் மாலையில் பலராம் பாபுவின் இல்லத்தில் கூட்டம் கூடுவதென்றும், அப்பொழுது கீதை, உபநிஷதம், வேதாந்த நூல்கள் முதலியன அத்யயனஞ் செய்யப்படுமென்றும், அக்கிராசனரால் தீர்மானிக்கப்படுகிற உபந்நியாசங்களே நடைபெறுமென்றும் நிச்சயிக்கப்பட்டது. மேற்கூறிய விஷயங்கள் மே மாதம், ஐந்தாம் தேதிக்குள் முடிவாயின. பிறகு அம்மாதம் ஒன்பதாம்நாள் சுவாமி பிரம்மானந்தரின் தலைமையின்கீழ், முதல் பொதுக் கூட்டம் நடைபெற்றது. பல்ராம்பாபுவின் வீட்டில் இங்ஙனம் சபை மூன்றாண்டுகள் வரை நடைபெற்று வந்தது. சுவாமிகள் கல்கத்தாவிலிருந்தபோ தெல்லாம் அவ்வப்போது தவறாது சபைக்கு வந்து பிரசங்கங்கள் செய்துகொண் டிருந்தார். விவரமாய்க் கூறுமிடத்து, 1909 - ம் ஆண்டில், 'ஸ்ரீராம கிருஷ்ண மடம்' சட்டப்படி ஸ்தாபனமார்க்கம் பெற்றபொழுது சுவாமிகள் மூல நோக்கங்களுக்குப் பங்கமேற்படா வாறு சில மாறுதல்கள் செய்யப்பெற்றன. ஆக, ஸ்ரீராம கிருஷ்ண மடம் இப்பொழுது பேலூர் மட கார்யதரிசிகளின் நியமனப்படி நடைபெறுகின்றது. மடத்தின் கிளைச் சங்கங்கள் எல்லாவற்றிலும் சேர்ந்துள்ள அங்கத்தினர்கள் வாக்குரிமையுடன் அலுவல்களை மேற்பார்வை பார்த்து வருகின்றனர். ஸ்ரீராம கிருஷ்ண மடத்தைப் பற்றி இப்பொழுது அறியாதார் இலராவர். அம்மடம் செய்துவரும் மகத்தான சமய சமூக வேலைகளும் பிரசித்தமானவையே. ஆதலின் அவற்றை ஈண்டு விஸ்தரிக்க அவசியமில்லை யென்று விடுத்தோம்.

ஸ்ரீராம கிருஷ்ண மடத்தின் அலுவல்கள்

ஸ்ரீராம கிருஷ்ண மடம் இரு பெரும் பிரிவுகளையுடையது. அதில், மடத்தார் துறவற நெறிகளில் பிரம்மசாரிகளைப் பழக்கி, ஏற்ற கல்வி புகட்டிச் சமயத் தொண்டிற் காயத்தப்படுத்தி வருகின்றனர். சேவாஸ்ரமத்தார் சமயசேவை புரிவதோடு பஞ்சம் வெள்ளச் சேதம் கொடிய நோய் முதலியன நேருமிடங்களிலெல்லாம் ரக்ஷணார்த்த வேலையும் செய்து வருகிறார்கள். ஸ்ரீராம கிருஷ்ண மடம், குரு தேவரது மதத்தை சுவாமிகள் எடுத்தோதியவாறு பரவவும், சர்வ சம்மத சமய தீக்ஷிண்யங்களை எடுத்தோதவும், வேத வேதாங்கங்களின் உட்கருத்துக்களை விளக்கிக்காட்டி நிகழ்கால மக்களுள்ளத்

தில் அன்பு ததும்பும்படி செய்வதுமாகப் பாடுபடுந்தன்மையது. இதற்குச் சுவாமிகள் 1899-ம் ஆண்டின் தொடக்கத்தில் சாஸன மொன்று செய்துவைத்துள்ளார். அதனால் சுவாமிகளின் உத்தேசப் படி யாவும் நடைபெற்று வருகின்றன.

நிற்க, இவ்வித ஆரம்ப விழாக்க ளெல்லாம் முடிந்தபின், நாளா வட்டத்தில் சுவாமிகள் தமது குருபாய்களிடமும், சிஷ்யர்களிடமும் இம்மடத்தின் அபிவிருத்தியின் பொருட்டுத் தாம் செய்ய உத்தேசித் திருக்கும் வேலைகளைப்பற்றிச் சொல்லி வந்தார். அப்பொழுது ஒரு நாள் குருபாய்களி லொருவர் 'மேல்நாட்டு முறைகளால் குருதேவ ரின் நோக்கங்கள் நிறைவேறப் போவதில்லை. பிரசங்கங்கள் புரிந் தும் கூட்டங்கள் கூட்டியும் என்னவாகப் போகின்றது?' என்று மறுத்துப் பேச, சுவாமிகள் வேகத்தோடு 'இம்மாதிரியான சேவை யால் ஸ்ரீராம கிருஷ்ணருடைய நோக்கங்கள் ஈடேறுமென்று நீர் எப்படிக் கண்டுகொண்டீர்? நீர் ஸ்ரீராம கிருஷ்ணரை உங்கள் உள் நாட்டிற்குள்ளேயே அடைத்துவைக்க நினைக்கின்றீரா?' என்று வீரமொழி பேசி அவரை அடக்கினார். சுவாமிகளுடைய குருபாய் கள் அவரை அடிக்கடி அபிமானத்தால்—பிரேமையால் எதிர்த்து வாதாடினாலும், முடிவில் அவருடைய கொள்கைகளை ஒப்புக்கொண்டு விடுவார் கள். சுவாமிகளும் அவர்கள் சமாதான மடைகிறவரையில் போராடி நிற்பார். ஸ்ரீராம கிருஷ்ணருடைய சிஷ்யர்களும் குதர்க்கமற்ற சீலர்களாதலின் அனாவசியமாகச் சுவாமிகளுடன் வாது செய்யமாட் டார்கள். தங்கள் மோக்ஷ சாதனத்தையே தேடுவதற்கு வேண்டிய ஆத்மானுபவ வழிகளில் பதிந்து, வெளி விஷயங்களில் பிடிப்பு அவ் வளவு ஏற்படாமல் இருந்தபடியால் அவர்களுக்குச் சுவாமிகள் ரக்ஷ ணார்த்த ஸ்தாபனங்களைப்பற்றிப் பேசும்பொழுது, அவை புதியன வாகத் தோன்றியபடியால் ஒருவித மலைப்பேற்பட்டதே யன்றி வேறில்லை. சுவாமிகளைப்போல், அவர்கள் உலகெங்கும் சஞ்சரித்துப் பலவற்றையுங் கண்டு அனுபவித்தவர்களல்லர். இவைதான் அவர் கள் 'எங் குருதேவரின் உபதேசங்களைக் கை நழுவவிட நேருமோ' வென்றெண்ணி ஆக்ஷேபித்ததன் காரணங்களாகும்.

குரு சிஷ்ய பிரேம வாதங்கள்

இப்படிக் கொஞ்ச நாட்கள் கழிந்தபின், ஒருநாள் பிற்பகலில் சுவாமிகள் பலராம் பாபுவின் கிருகத்தில் எழுந்தருளி யிருக்கும் போது, தமது குருபாய்களுடன் வேடிக்கையாய்ப் பேசிக் கொண்

டிருந்தார். இத்தகைய அவகாசமான காலங்களில் அவர், அவர்களைக் கேலிசெய்வதும், தட்டிக் கொடுப்பதும், விளையாடுவதுமாகப் பழைய பள்ளிக்கூட நரேந்திரராக விளங்குவார்; தமது குருதேவரை 'பெரும் பித்து' என்று பக்தி மேலீட்டால் பரிகசித்துத் தமது குருபாய்களிடம் நகையாடுவார். குருபாய்கள் தமது தலைவர் இவ்வாறேனும் அவரது மூளைக்கு ஓய்வுகொடுக்கட்டு மென்றெண்ணி அகமகிழ்வர்; வைத்தியர் சுவாமிகளுடைய தேக நிலையைப்பற்றி எச்சரிக்கை செய்திருப்பதால், தமது தலைவரை இவ்வாறேனும் அதிகம் வேலை செய்யாமலிருக்கச் செய்யலாமென்றும் கருதுவர். ஆனால் அவர் வினோதமாகப் பேசிக்கொண்டிருந்த வண்ணமே திடீரென்று ஆத்மானுபவங்களைப் பற்றியும், முடிந்த ஞானத்தைப்பற்றியும் உணர்த்த வாரம்பித்து விடுவார்.

இந்நாளில் ஒருசமயம் குருபாய்களி லொருவர் சுவாமிகளுடன் கேலியாகவே பேசிய வண்ணம் ஸ்ரீராம கிருஷ்ணருடைய மதத்தைச் சுவாமிகள் அனுஷ்டிக்கவில்லை யென்று மறுத்து, அவரது புதிய கொள்கைகளால் குருதேவரின் மனோபீஷ்டங்கள் எங்ஙனம் நிறைவேறு மென்று ஆக்ஷேபிக்கலானார். ஏனெனில் ஸ்ரீராம கிருஷ்ணர் யாவற்றையும் விடப் பக்தியையே பாராட்டுவார்; பிரம்மாநுபூதியையடைய ஏகாந்தமான இடத்திலிருந்து யோக சாதனங்களைப் புரியும்படி தூண்டுவார்; ஆனால் சுவாமிகளோ சேவை செய்யுமாறு தூண்டுகிறார்; சமயப் பிரசாரஞ் செய்யவும், ஏழைகள், நோய்களால் நலிவோர் முதலியவர்களுக்கு உதவி புரிந்து தொண்டு செய்யவும் வேண்டு மென்கிறார்; பொது நன்மைக்காக மடங்களையும், சேவாஸ்ரமங்களையும் ஏற்படுத்த வேண்டுமென்று கூறுகிறார்; இவை யெல்லாம் மேல் நாட்டு முறைகளைத் தழுவியனவா யிருக்கின்றன; குருதேவரின், 'சேவை உபதேச இலக்கணங்கள் இவருடைய கொள்கைகளில் வேறுருக் கொண்டுள்ளன என்னும் இவ்வித ஐயப்பாடுகள் தான் அவரை ஆக்ஷேபிக்கும்படித் தூண்டின. சுவாமிகளும் அன்னார் மறுப்புகளை ஏற்றுக் கேலியாக மறுமொழி புகல வாரம்பித்து "உனக்கென்ன தெரியும்? நீ அறியாமை மிகுந்தவன்; ஸ்ரீராம கிருஷ்ணரின் தக்க சீடன்; குருவைப் போன்றவன் நீயும்; பிரகலாதன் கல்வியைப் போன்றது உன் படிப்பும்; வங்காள பாஷையின் முதலெழுத்தான 'க' என்ற அக்ஷரத்தை உச்சரித்ததும், அது ஸ்ரீகிருஷ்ண பரமாத்மா

அதுவோ இதுவோ

-வின் திவ்ய நாமத்தை ஞாபகத்திற்குக் கொண்டு வந்துவிட பிரகலாதன் கண்களில் ஆனந்தபாஷ்பம் பெருக, மேலே எதையும் வாசிக்க முடியாமற் போயிற்று. நீங்கள் பக்தர்கள்; அதாவது மனக் கற்பித முள்ள முட்டாள்கள்; சமயத்தைப்பற்றி நீ என்ன அறிந்து கொண்டிருக்கிறீர்கள்? நீங்கள் குழந்தைகள்; பிரேமையால் கரங்கள் கூப்பி, 'பிரபோ! உமது மூக்கு எவ்வளவு அழகாயிருக்கின்றது; கண்கள் எவ்வளவு கருணையோடு ஜொலிக்கின்றன,' என்று அர்த்தமில்லாத துதிசெய்து—நமது மோக்ஷம் நிச்சயமாகி விட்டதென்றும், ஸ்ரீராமகிருஷ்ணர் முடிவில் நம்மை வந்து உயரத் தூக்கிக்கொண்டு போய் விடுவாரென்றும் நினைப்பவர்கள்; பொதுஜன ஊழியமும் மத சேவையும் உங்கள் கொள்கைப்படி மாயை யாகும். ஏனெனில், ஸ்ரீராம கிருஷ்ணரே அவற்றைப் புரியவில்லையே என்பீர்கள்; மற்றும் அவர் யாரோ ஒருவரிடம் "முதலில் பிரம்மஞானத்தை யடையப் பாடுபடு; உலகிற்கு நன்மை செய்யவேண்டு மென்பதெல்லாம் வெறுங் கற்பனைகள்" என்று உபதேசித்தாரென் றுரைப்பீர்கள். கடவுள் என்னவோ அவ்வளவு எளிதில் உங்கள் வலையி லகப்பட்டு விடுபவர்போ லிருக்கிறது. ஈஸ்வரன் என்னவோ நிர்வீரியர்கள் கையில் அகப்பட்டுக்கொண்டு தத்தளிக்கக்கூடிய விளையாட்டுச் சாமான்போ லிருக்கிறது!" என்றார். இப்படிச் சொல்லிக்கொண் டிருக்கும் போதே மகாவல்லமையுடன் கொந்தளிக் குங் கடல்போன் றெழுந்து சுவாமிகள் பின்வருமாறு சாற்றுவாரானார்:

இதுவே அது

"நீங்க ளென்னவோ ஸ்ரீராம கிருஷ்ணரை என்னை விட அதிகமாக அறிந்துவிட்டதாக எண்ணுகிறீர்கள்; ஞானமென்பது தள்ளுபட்ட வழியிலே ஹிருதயத்தின் நளின சக்தியின் விருத்தியைக் கொன்று அடையப்படும் கேவல வித்தையென்று நினைக்கிறீர்கள். உங்கள் 'பக்தி' பும்சத்துவ மற்றவர்களாக்கும் வீண் மனக் கல்பிதமானது. குருதேவரை நீங்க ளறிந்துகொண்டதோ அணுவளவு; ஆனால் நீங்கள் அவரை முற்றிலு முணர்ந்து விட்டதாக எண்ணிப் பிரசித்தப் படுத்தவேண்டு மென்கிறீர்கள். கையை விரைவில் எடுங்கள்! உங்கள் ராம கிருஷ்ணரை இங்கு பொருட்படுத்துவார் யார்? உங்கள் பக்தி முக்திகளெல்லாம் இங்கு யாருக்கு வேண்டும். உங்கள் சாஸ்திரங்களை லட்சியம் செய்வார் யார்? நான் ஆயிரம் முறை நரகவாதனை

கொதித்தெழுந்த சேவா தாபம்

யடைய நேரினுஞ்சரி; தாமதகுணத்தராய்த் தாமஸி நிலையெனும் மயக்கத்தால், தத்தளிக்கும் எனது சுதேசமக்களைக் கர்மயோகத்தின் தூண்டுதல்படி நான் தட்டியெழுப்பக் கூடுமாயின் ஆயிரம்முறை நரகவாதனை அடைய நேரிடினும் ஆனந்தமா யனுபவிப்பேன். எனது கொள்கைகளை நிறைவேற்றும் ஆர்வமுடையாரை யன்றி நான் ஸ்ரீராமகிருஷ்ணர் முதலான எவரையும் பின்பற்றுவேன் அல்லேன்; நான் எவருடைய அடிமையுமல்ல; எவர் சுயபக்தியையும், முக்தியையும் கருதாது பிறருடைய விடுதலைக்காகப் பாடுபடுகிறார்களோ அவர்களுடைய தொண்டன்."

இப்படிப் பேசியதும் அவர் முகம் எரிகின்ற அனல்போன் றிருந்தது; கண்கள் சிவந்தன; எழுச்சியால் தேகம் குலுங்கிற்று. அவர் சரீரம் வெடித்து விடும்போன் றிருந்தது. எதையும அடக்க அவர் அசக்தரா யிருந்தவர்போற் றோன்றினர். அவர் நேத்திரங்களி னின்றும் கண்ணீர் ஆறுயப் பெருகிற்று. அவர் வேகமா யெழுந்து சரேலென்று தமது துயிலறையில் புகுந்தார். அவருடைய குருபாய்கள் பயந்துபோய், தாம் அவ்வாறு பேசியது தவறென்றோர்ந்து நடுங்கினர். ஒருவரும் வாய்திறந்து பேசாது கலங்கிப்போய் ஒருவர் முகத்தை யொருவர் பார்த்தவண்ணம் விழிக்கலாயினர். சில நிமிஷங்கட்குப் பின் இரண்டொருவர் மனதைத் திடப்படுத்திக் கொண்டு, மெதுவாக நடந்து மெல்ல எட்டிப் பார்த்தனர். அப்பொழுது சுவாமிகள் யோகாசனத்தில் அசைவற்று, பாதி மூடிய கண்களினின்றும் கண்ணீர் தாரை தாரையாகச் சொரிய, உரோமஞ் சிலிர்ப்ப வீற்றிருக்கக் கண்டார்கள். அவர் பாவ சமாதியில் பாங்குடனிருந்தார். குருபாய்கள் நடு நடுங்கிப்போய் வெளியே வந்து நின்று கொண்டிருந்தார்கள்.

இப்படி ஒருமணி நேரமானபின் சுவாமிகள் எழுந்து முகம் கைகால்களைச் சுத்திசெய்துகொண்டு மறுபடியும் கூடத்திற்கு வந்தார். அங்கு வேறு சிலரும் காத்துக்கொண் டிருந்தார்கள். சுவாமிகள் சற்று நேரம் மௌனமாயிருந்தார். அவர் கண்கள் அப்பொழுதும் சிவந்திருந்தன; கம்பீரமாகவும் ஆழ்ந்த யோசனையோடும் சுவாமிகள் தமதாசனத்தி லமர்ந்தார். அப்பால், அவர் பின் கண்டவாறு பேசத் தொடங்கினர்:

"ஒருவனுடைய மனம் பக்தியால் பரவசமாகிவிட்டால், அவனுடைய மனமும் நாடிகளும் புஷ்ப ஸ்பரிசத்தையும் பொறுக்க முடியாது

களினத்தை யடைகின்றன. இந்நாளில் என்றால் ஒரு சிறு நூலைக்கூட வாசிக்க இயலவில்லை யென்பதை நீங்க ளறிவீர்களா? ஸ்ரீராம கிருஷ்ணரைப்பற்றி நினைக்கவோ பேசவோ யான் முயன்றால் என்னை மறந்து விடும்படி நேரிடுகிறது. ஆதலின், என் மனத்தகத்தேயுள்ள பக்தி யென்னும் சுனையின் ஊற்றுக் கண்களை நான் திறந்து விடுவதே யில்லை. நான் இன்னும் எனது தாய் நாட்டிற்குச் செய்யவேண்டிய தொண்டு பாக்கியா யிருப்பதாலும், உலகிற் குணர்த்தவேண்டிய செய்திகளுள வாதலாலும், ஞானமென்னும் இருப்புச் சங்கிலிகளால் என்னைப் பிணித்துக்கொண் டிருக்கிறேன் ஆகையால், பக்தி என்னை வந்து ஆக்ரமித்துக் கொள்ளுங் காலங்களில், ஞானத்தால் நான் அதனை எதிர்த்து நிற்கிறேன். ஹா! நான் இன்னும் செய்யவேண்டிய தொண்டு உளது! உளது! நான் ஸ்ரீராம கிருஷ்ணரின் குலவடிமை! அவர் தமது வேலையைப் பூர்த்திசெய்யுமாறு என்னைப் பணித்திருக் கிறார்; அதை நான் முடித்துத் தீரும்வரை அவரெனக்குச் சாந்தியை யருளமாட்டார். 'ஹா! நான் எப்படி அவரை ஸ்தோத்தரிப்பேன்!''

சுவாமி யோகானந்தரும் மற்றவர்களும், அவர் மறுபடியும் உக்ர மூர்த்தியாகத் திரும்பி விடுவாரோவென்ற பயத்தால், மெல்ல சுவாமி களைக் காற்றோட மெத்தைக் கழைத்துக் கொண்டுபோய், பேச்சை வேறு வழியிற் றிருப்பிச் சாந்தப்படுத்தினர். அதற்குப் பிறகு அவர் கள், சுவாமிகளின் வார்த்தைக்கு விரோதமாகப் பேசுவதே யில்லை. இக்காலங்களில் சுவாமிகள் பக்தி முக்திகளைவிடக் கர்மாவே மேம் பட்டதென்று வற்புறுத்தித் தமது கொள்கைகளை நிறைவேற்றி வந் தார்; 'ஸ்ரீராம கிருஷ்ண மட ஸ்தாபன'த்தை மேன்மேலும் விருத்தி செய்ய அவருக்கிருந்த தாபத்திற் களவேயில்லை.

41-ம் அத்தியாயம்.

கல்கத்தா—அல்மோரா வாசம்

வங்காள நாட்டுச் சமய முடிசூடா மன்னராய் விளங்கிய சுவாமிகள் கல்கத்தாவில் தங்கியிருக்க, மறுபடியும் அவருக்கு ஓய்வில்லாமலே யிருந்தது. எந்நேரமும் பக்தர்கள் அவரைச் சூழ்ந்து தத்தம் சந்தேகங்களைப் பரிகரித்துக் கொள்வதும், பாத தூளியைச் சிரசின்மீது வகிப்பதுமா யிருந்தார்கள். அதோடு தமது கிருஹத்துக் கெழுந்தருளி விருந்துண்ணுமாறு இல்லாச்சிரமிகள் அனுப்பும் அழைப்புக் கடிதங்கள் அவர் முன் குன்றெனக் குவிந்திருக்கும். அதனால் அவர் அலம்பசாரிலிருந்து அடிக்கடி கல்கத்தாவுக்குச் சென்று வருவார். பலராம் பாபுவின் இல்லத்தில் எந்நேரமும் ருசிகரமான சம்பாஷணைகள் நிகழும். இந்தியரின் நிகழ் காலத்திற்கு அவசியமான கல்வி, ஆடவர்கட்கும், பெண்கட்கும் எவ்வாறு தேசீயக் கொள்கைக்கேற்ப அளிக்கப்படலாம் என்பதைப் பற்றிய உரைகளும் நடைபெறும். ஒரு சமயம் அவர் குரு கோவிந்தசிங் சிஷ்யர்களைப் பழக்கிய திறத்தைப் புகழ்வார்; அந்த சீக்கிய குருவின் சிறந்த குணாதிசயங்களை யுயர்த்திப் பேசுவார்; அவருடைய துறவு, முடிவணங்காப் பெருமை, பொறுமை, சீக்கிய சமூக உத்தாரணத்தின் பொருட்டுத் தன்னுயிரையும் ஒரு பொருளாகக் கருதாதிருந்த தன்மை முதலியவற்றைக் கொண்டாடுவார்; முகம்மதிய மதத்திற் புகுந்த சீக்கியர்களை மீண்டும் மத தீக்ஷை யளித்து, சீக்கிய சமூகத்தோடு கூட்டிவைத்துச் செய்த உயரிய செய்கைகளையும், நர்மதா தீரத்தில் ஏற்பட்ட அவருடைய வீர சுவர்க்கத்தையும் விமரிசைப்படுத்திப் பேசுவார். இப்படி அவர் இரவும் பகலும் எந்நேரமும் பேசியவண்ணம் தமது குருபாய்களையும், சிஷ்யர்களையும் உற்சாகப்படுத்தி வந்தார்.

பலராம் பாபுவின் கிருகத்தில் சம்பாஷணைகள்

சுவாமிகள் பலராம் பாபுவின் கிருஹத்தில் வசித்து வந்ததற்குச் சுமார் பத்து நாட்களுக்குப் பிறகு, ஒருநாள் சாரத் சந்திரருக்கு 'ரிக்' வேதத்தை சாயனருடைய பாஷ்யத்துடன் பாடஞ் சொல்லிக் கொண்டு வந்தார். அப்பொழுது வித்வான் மோக்ஷமூலர் சாயனருடைய பாஷ்யத்துடன் பதிப்பித்துள்ள ரிக் வேதத்தின் பிரதி

யொன்று அவர்களுக்குக் கிடைத்தது. வேதங்களின் அநாதித்துவத்தை ஊர்ஜிதப் படுத்தச் சாயனர் கூறும் மகா அபூர்வமான விஷயங்களைச் சுவாமிகள் புகழ்ந்தும், சிற்சில இடங்களில் அழுத்தித் தமது அபிப்பிராயத்தை வெளியிட்டும் ஆதரித்துப் பேசி வருங்கால், விஷயம், மோக்ஷமூலரைப் பற்றித் திரும்பியது. அப்பொழுது அவர் சாரத் சந்திரரைப் பார்த்து, "சில சமயங்களில் நான் என்ன நினைக்கின்றேன் தெரியுமா? சாயனர் தாம் எழுதியருளிய வியாக்யானத்தைத் தாமே விளக்க எண்ணி மறுபடியும் அவனியில் மோக்ஷமூலராக அவதரித்திருக்கிறார் என்று கருதுகிறேன். அவரைச் சந்தித்த பிறகு இவ்வெண்ணம் எனக்கு ஊர்ஜிதமாய் விட்டது. அத்தகைய வேத வேதாந்த தேசிகரான பரிசுத்த பாஷா ஞானமுடையவரை நாம் இந்நாட்டிற் கூடக் காண முடியாது. அவ் விருத்த தம்பதிகள் வானப்பிரஸ்தர்களாய்க் கோபுரியில் நிம்மதியாக வசித்து வரும் பாங்கைக் கண்டதும், வேதப் புகழ்படைத்த வசிட்டரும், அருந்ததியு மென்றே நான் அவர்களைக் கருதினேன். என்னைப் பிரியும்போது அந்த விருத்தர் பிரிய மனமில்லாமல் அப்படியே கண்ணீர் விட்டார்" என்று அன்போடு பகர்ந்தார்.

மோக்ஷ மூலரின் பெருமை.

"இவ்வளவு விவேகியான சாயனாசாரியார், இவ்வார்ய வர்த்தத்தில் ஏன் பிராம்மண ஜென்மத்தை யெடுக்காமல், மிலேச்சராகத் தோன்றினார்?" என்று ஒருவர் கேட்டபொழுது, "மனிதர்கள் அறியாமையாற்றான், ஆரியன், மிலேச்சன் என்ற பேதங்களைக் கற்பிக்கிறார்கள். பிரம்ம சொரூபியும், வேதங்களுக்குத் தாத்பரிய கர்த்தாவுமாகத் தோன்றிய அவருக்கு, சாதி நிறம் குலமென்ன? மானுடப் பிரகிருதியின் க்ஷேமத்திற்காக எங்கு வேண்டுமானாலும் அவர் தோன்றுவார். கல்வியுஞ் செல்வமும் அளவு கடந்து நிறைந்துள்ள மேல் நாட்டில் அவர் அவதரித்திராவிடில் இத்தகைய பிரம்மாண்டமான வேலையை வேறு யார் முடித்திருக்க முடியும்? இந்த ரிக்வேதத்தைப் பிரசுரிக்கக் கிழக்கு இந்திய கம்பெனி ஒன்பது லக்ஷ ரூபாய் அளித்தார்கள் என்பதை நீ கேட்டதில்லையா? அது கூட போதியதாயில்லை. எத்தனையோ நம் நாட்டுச் சம்ஸ்கிருத பண்டிதர்கள் இக்காரியத்தில் மாதச் சம்பளங் கொடுத்து வேலைக்கு வைத்துக் கொள்ளப்பட்டார்கள். வித்யாபிவிருத்திக்காக யாராவது இக்காலத்

பேதம் அறியாமையால் கற்பிக்கப்பட்டது.

தில் இவ்வளவு பொருள் செலவழித்ததாக நாம் கேட்டதும் உண்டா?

மோக்ஷமூலர் ரிக்வேதத்தை மொழி பெயர்த்த சீர்

மோக்ஷமூலரோ தமது முகவுரையில் தாம் இருபத்தைந்தாண்டுகள் கைப்பிரதிகளையே எழுதியதாயும், அவற்றை அச்சிட அப்பால் இருபதாண்டுகள் பிடித்ததாயும் வரைந்துள்ளார். தமது ஆயுட்காலத்தில் நாற்பத்தைந் தாண்டுகளை, ஓர் அன்னிய பாஷையிலுள்ள கஷ்டமான கிரந்தங்களை உலக க்ஷேமார்த்தமாக எளிய நடையில் நயம்பட வரைவ தென்றால் அது சாதாரணமான மனிதர்களால் செய்யக்கூடிய காரியமல்லவே. நான் காரணமில்லாமலே அவரைச் சாயன ரென்கிறேன்" என்றார்.

அப்பால், மேலே வாசித்துக்கொண்டுபோக, பிரபஞ்சோற்பத்தி வேதத்திலிருந்தும் வேத பூர்வமாகவும் வந்ததென்று சொல்லும் சாயனருடைய கொள்கையைச் சுவாமிகள் ஆதரித்து அதற்கான ஆதாரங்களை விளக்கி வந்தார்; நிர் விகல்ப சமாதியின் படிப்படியான நிலைகளை விஸ்தரித்துக் காட்டினார்; சமாதியி லிருக்கும்பொழுது எப்படிச் சகலமும் 'ஓம்' என்ற பிரணவ சப்தத்தி லடங்கி நிற்கிறதோ, அதுபோல பிரளய காலத்தின் முடிவையும் வேத நியாயப்படி எடுத்துக் காட்டினார். இவ்வளவும் பேசிக்கொண் டிருக்கும் பொழுது கிரிஷ் பாபு அங்கு வந்து முறைப்படி நமஸ்கரித்து விட்டுச் சம்பாஷணையைக் கேட்டுக் கொண்டிருந்தார். அவரைத் திரும்பிப் பார்த்துச் சுவாமிகள் வேடிக்கையாக 'பாபு' இவற்றையெல்லாம் உணர்ந்து கொள்ள ஆவலில்லாமல் ஏதோ உங்களுடைய கிருஷ்ண விஷ்ணுக்களுடன் காலத்தைக் கழிக்கிறீர்களே" என்றார். அதற்கு அவர் பக்தி மேலீட்டால்

கிரிஷ்பாபுவின் குரு பக்தி

வினயத்துடன் "அப்பா இந்த வேதங்களைப் படித்தால் எனக்கென்ன வரும்? இவற்றிலெல்லாம் நுழைந்து பார்க்க எனக்கு அவகாசமோ ஆவலோ கிடையாது. எட்ட நின்று இவற்றிற் கெல்லாம் ஒரு கும்பிடு போட்டுவிட்டு, ஸ்ரீராம கிருஷ்ணருடைய திவ்ய நாம ஸ்மரணஞ் செய்துகொண்டே நான் பிறவிப் பெருங்கடலைக் கடந்தாற் போதும். அவர் உன் மூலமாய் எவ்வளவோ சமய சேவையைச் செய்ய நிச்சயித் திருந்தமையால் இந்தச் சாஸ்திரங்களை யெல்லாம் வாசிக்கும்படி அவர் உன்னைச் செய்து விட்டார்" என்று சொல்லிக் கொண்டே அந்த ரிக்வேத புஸ்தகத்தின் முன் மும்முறை வணங்கி, "வேத ரூபியாய் விளங்கும் ஸ்ரீராம கிருஷ்ணருக்கு மங்களம்" என்றியம்பினார்.

பிரம்ம ஞானம், பக்தி, கர்மயோகம், தேசீயக் கொள்கை—இவற்றிற்கான சாதனங்களைப் பற்றிப் பேசுங்கால் சுவாமிகள் பிறர் ஒப்பும்படி வெகு சாமர்த்தியமாகவும், அழகாகவும் பேசுவது வழக்கம். அவர் எதிலும் பற்றற்றவ ரென்பதைக் கிரிஷ் பாபு நன் கறிவார். ஆனால் அங்கிருப்பவர்களுக்குத் தம்மைப் பற்றி தப்பான அபிப்பிராய மேற்பட்டு விடுமோ என்றெண்ணி, "சரி! நரேந்திரா! நான் உன்னை யொன்று கேட்கிறேன். நீ எல்லா வேதங்களையும் வாசித்தவன். அவற்றுள், இந்த அழுகைக் கெல்லாம், பசியினால் நலியும் பரிதாபத்திற் கெல்லாம், விபசார முதலான அடாத பாபச் செயல்களுக் கெல்லாம், மற்றும் ஒவ்வொரு நாளும் எவ்வளவோ பேர் படும் துக்க—துன்பங்கட் கெல்லாம் ஏதாவது நிவாரணம் சொல்லப்படுகின்றதா? அன்று ஒரே சமயத்தில் ஒரே பந்தியில் ஐம்பது பேருக்கு அன்னமளித்த அன்னை யொருத்தி மூன்று நாட்களாகத் தனக்கும் தனது குழந்தைகட்கும் உணவின்றிக் கஷ்டப்படுகிறாள். மற்றொரு மாது மகாக் கொலை பாதகர்களால் துன்புற்று வதை செய்யப்பட்டாள். ஒரு மனிதருடைய யௌவன விதவை, கருப்பமுற்று, மானத்திற்கஞ்சி கர்ப்பத்தைக் கலைத்து விட்டாள். நரேந்திரா! நீ படித்த இந்த வேதங்களில் இவற்றை நிவாரணஞ் செய்ய ஏதாவது மார்க்கங்க ளிருக்கின்றனவா?" என்று தனது கருத்துக்களையும், மக்கள் படுந் துன்பத்தையும் விஸ்தரித்து வினவ, சுவாமிகள் மௌனஞ் சாதித்தார். இவற்றைக் கேட்டமையால், அவருடைய கண்களினின்றும், தாரை தாரையாகக் கண்ணீர் பெருகிற்று; அவர் முகத்தை மறைத்துக்கொண்டு வெளியே போய் விட்டார். அப்பொழுது கிரிஷ்பாபு, அங்கிருந்த சிஷ்யரைப் பார்த்து, இப்பொழுது உங்கள் குருவின் மனம் எவ்வளவு இளக்கமுள்ளதா யிருக்கின்ற தென்பதைக் கவனித்தீர்களா? அவர் பெரிய படிப்பாளியாயும், விவேக மூர்த்தியாயு மிருப்பதைக் குறித்து நான் அவரைப் புகழவில்லை; கண்களில் நீர் மல்க எழுந்து வெளியேகிய அவரது கருணை நிறைந்த தன்மையைக் கண்டே நான் அவரைப் பெருமைப் படுத்துகிறேன். அதை அவர் கேட்டமாத்திரத்தில், உங்கள் வேத வேதாந்தங்களெல்லாம் கண்களுக்கெட்டாத் தூரத்தில் சென்று விட்டன; ஒரு விநாடிக்கு முன் அவர் வெளிக்காட்டிய வித்துவத்வ மெல்லாம் விரைந்து எங்கோ சென்று விட்டனவே. அன்போடு கூடிய கருணை அவரைச் சூழ்ந்து கொண்டது. இதைக் கவனித்துக்கொள். உங்கள் சுவாமிகள்

அன்பிற்கில்லை அடைக்குந்தாழ்

ஞானியும் பண்டிதரும், ஜீவதயை யுடையவரும் பக்தரும் அனைத்து மாவார்'' என்றார்.

சற்றுநேரமானபின் சுவாமிகள் திரும்பவும் அவ்விடத்திற்கு வந்தார்; வந்ததும் தம்மை நோக்கிவரும் சுவாமி சதானந்தரை அன்போடு அழைத்து ஏழைகள் படும் எண்ணிலாத் துயரினைக் கேட்ட தாம் இனிச் சகிக்க முடியாதென்று கூறி, உடனே ஒரு சேவாஸ்ரமத்தை நிறுவி, இயன்றவரையில் ஏழைகளுக்கு ஏற்ற உதவிகளைச் செய்யுமாறு அவரைத் தூண்டினார்; பிறகு கிரிஷ் பாபுவைப் பார்த்து, "அப்பா இங்கே பார்! இனி, மக்களின் துக்க நிவாரணார்த்தமாக, ஒரு சின்னஞ் சிறு உதவியை, ஒருவருக்குச் செய்யக்கூட, ஆயிரம் ஜென்மமானாலும், அதை நான் மனப்பூர்வமாக மகிழ்ச்சியுடன் செய்வேன். கேவலம் என் முக்திக்குமட்டும் நான் வழி தேடுவதிற் பயனென்ன'' என்றார். அவருடைய கருணைத்திறத்தை நாமென்னென்பது!

சுவாமிகள் அதே காலத்தில், ஸ்திரீகளின் வித்யார்த்தமாக 'மகா காளி பாடசாலை' என்ற பெயருடன் மாதாஜி தபஸ்வினி என்ற மாதரசியால் ஸ்தாபிக்கப்பட்டு, பிரசித்தமாக நடந்துவரும் கலாசாலைக்குச் சாரத்சந்திரருடன் விஜயம் செய்தார். தாமும் சில வித்யாபிவிர்த்திச் சம்பந்தமான அபிப்பிராயங்களைப் பிரரேபிக்கலாமென்பதே அவர் அம் மாதரசியின் அழைப்புக் கிணங்கிச் சென்றதன் கருத்து. சுவாமிகள் கலாசாலையை யடைந்ததும் மாதாஜி தபஸ்வினி, அவரை ஒவ்வொரு வகுப்புக்கும் அழைத்துச் சென்றாள். ஒரு வகுப்பில் ஒரு பெண் சிவ ஸ்தோத்திரம் சொல்லித் தனக்குக் கற்பிக்கப்பட்டபடி பூஜை முதலியவற்றைச் செய்தாள். மற்றொரு புத்திசாலியான பெண், காளிதாசருடைய ரகுவம்சத்திலிருந்து, கோகில மனைய குரலுடன் ஒரு ஸ்லோகத்தை எடுத்துக் கானம் செய்து, அதற்குச் சமஸ்கிருதத்திலேயே பொருளும் உரைத்தாள். சுவாமிகள் மிகவும் திருப்தியடைந்து அந்தப் பெண்ணை ஆசீர்வதித்தார். அப்பால் தபஸ்வினியிடம் அவளுடைய பொறுமையுடன் கூடிய உழைப்பாற்றான் இவ்வித நல்ல வித்தியாபிவிருத்தி ஏற்பட்டுள்ளதென்று நவில, தபஸ்வினி விநயத்தோடு "சுவாமி! நான் இந்தப் பெண்களைப் பகவதிகளாகக் கருதுகிறேன். அதையன்றி வேறு எவ்விதப் போற்றுதலையும் யானறியேன்'' என்றனர். பின்னர் சுவாமி

மாகாளி பாடசாலை

மாதாஜி தபஸ்வினி

கள் ஏகும்பொழுது அபிப்பிராயப் புத்தகத்தில் எழுதிய சிறப்புரையின் கடைசிவாக்கியம் "இந்தக் கலாசாலை சரியான மார்க்கத்தி லிருக்கிறது" என்பது.

அங்கிருந்து திரும்பிச் செல்லும் பொழுது, அவர் தமது சிஷ்யர்களிடம், ஸ்திரீகளுக்கென்று இதைப்போன்ற நிரந்தரமான கலாசாலைகளை அநேக இடங்களில் நடத்தவேண்டுமென்றும் ஒவ்வொன்றிற்கும் பிரம்மச்சாரிணிகளைப் பழக்கி அனுப்பி, மேல் நாட்டுப் பாதிரிமார்களைப் போல் ஊக்கத்தோடு உழைக்கச் செய்து, நற்கல்வி, நல்லொழுக்கம், பதிபக்தி, மதாபிமானம் முதலியவற்றை ஊட்டுவிக்க வேண்டு மென்றும், அதற்குத் தாம் தகுந்த ஏற்பாடுகள் செய்ய உறுதிகொண் டிருப்பதாயு மியம்பினார் மற்றும் பால்ய விவாகத்தைத் தடுக்க வேண்டுமென்றும், அதுவே சந்ததியின் சரீர புத்திகளின் பலக் குறைவிற்குக் காரணமென்றும், ஹிந்து விதவைகளின் தொகையும் இதனாற்றான் பெருகுகின்றதென்றும் செப்பலுற்றார். அவர் மனமாகிய கடலில் பல சீர்த்திருத்த அலைகள் உயர்ந்து எழுந்து ததும்பிக் கொண்டிருந்தன. ஆனால், குணங் காட்டி வந்த அவருடைய தேகம் திடமான அவரை நோயுற வைத்தது. உடனே வைத்தியர்கள் சீதளப் பிரதேச வாசஞ் செய்யுமாறு அவரைத் தூண்டினர். அப்பொழுது மிஸ் மில்லர் குட்வின் துரை முதலியவர்கள் அல்மோராவி லிருந்தார்கள். ஆகையால் அவர் அவ் வாண்டு 'மே' மாதம் ஆறுந்தேதி சில குருபாய்களும் சிஷ்யர்களும் உடன்வரக் கல்கத்தாவிலிருந்து அல்மோராவுக்குப் பிரயாணமானார்.

ஸ்திரீகட்டுக் கலாசாலை

சுவாமிகள் அல்மோராவுக் கேகும் வழியில் இலக்ஷ்மணபுரி (Lucknow) யில் ஓரிரவு தங்கி கத்கோடம் (Kathgodam) என்னும் மலையடிவாரத்திலுள்ள ஊருக்குச் செல்ல, குட்வின் துரையும் அல்மோராவுக்குச் சமீபத்திலுள்ள லோடியா வில் ஜனங்கள் கூட்டமாக அவரை எதிர்கொண் டழைத்து, அலங்கரிக்கப் பெற்ற பரிவாகனத்தின் மீதேற்றி ஊர்வலமாக அழைத்துச் சென்றனர். தெருவழியே செல்லுங்கால் கூட்டம் அதிகமா யிருந்தது. ஒவ்வொரு வீட்டுத் திண்ணையிலும் விளக்குகள் கார்த்திகை தீபம்போலப் பிரகாசித்தன; மாதர்கள் மாடியிலிருந்து மலர்களை வருஷித்தனர். அப்பால் அந்நகரின் மத்தியில் வெகு விமரிசையாக அலங்கரிக்கப்பெற்ற பந்தரில் ஊர்வலம் போய்

அல்மோராவுக்கு ஏகுதல்.

கின்றது. சுவாமிகளுடன் கொளும்புவிலிருந்து அல்மோராவரை யாத்திரை செய்தவர்களுங்கூட அப்பட்டினப் பிரவேசத்தை மிக்க விசேஷமானதா யிருந்ததென்று சிலாகித்துப் பேசியுள்ளார்கள். முதலில் கீதங்கள் பாடப்பெற்ற பின், பண்டிட் ஜவாலா தத் ஜோதி அவர்கள் வரவேற்புக் கமிட்டியின் சார்பாக ஹிந்தி பாஷையில் ஓர் உபசாரப் பத்திரம் வாசித்துக் கொடுத்தார். பின்னர், பண்டித ஹரிராம் பண்டியும், சுவாமிகளின் நிமந்திரகரான லாலா பத்ரி சாதுல் கரியா முதலியவர்களும் சம்ஸ்கிருதத்தில் அழைப்புப் பத்திரங்கள் அளித்தனர். சுவாமிகள் அவற்றிற்குச் சுருக்கமாக விடை யளித்து விட்டுத் தமது வாசஸ்தலத்திற் கேகினர்.

லோடியாவில் விமரிசையான வரவேற்புபசாரம்

மறுபடியும் அவரை அங்கு பலர் சூழ்ந்துகொண்டு ஆத்ம விசாரஞ் செய்யத் தொடங்கி விட்டனர். சுவாமிகளுடைய சரீரம் அந்த சமயம் குணப்பட்டு வருவதுபோ லிருந்தது. இவ்விஷயமாய்ச் சுவாமிகள் மேமீ 29உ கல்கத்தாவிலிருந்த தமது வைத்திய அன்பருக்குக் கடிதமொன்று வரைந்தார். அதன் சாராம்சமாவது:

"நான் தினந்தோறும் காலை மாலைகளில் குதிரை சவாரி செய்வதுபோன்ற தேகாப்பியாசங்களைச் செய்து வருகிறேன். அதனால் நான் திடமடைந்து வருகிறேன். நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வ மென்பதை நான் பிரத்யக்ஷமாக அனுபவிக்கிறேன். பழய உற்சாகத்தை நான் மீண்டும் அடையா விட்டாலும் நல்ல தேகா சுகம் அடைந்துள்ளது மட்டும் உண்மை. குஸ்தி போட்டால் ஜி. ஜி யையும் நிரஞ்சனனையும் நான் தோற்கடித்து விடுவேன். தார்ஜிலிங்கி லிருக்கும்பொழுது நான் இவ்வித உற்சாகத்தையும் பலத்தையும் அடையவில்லை. இங்கு, என்னைப் பிடித்த வியாதியென்னும் பேய் நீங்கியதோடுகூட ஏதோ என்னை யறியாமல் ஓர் புது ஊக்கமும் திடமும் ஏற்பட்டிருக்கிறது. என்னுடைய ஆயுட்காலத்தில் இதுவரை நான் படுக்கைக்குப் போனதும் நித்திரை செய்ததேயில்லை; இரண்டு மணி நேரமாவது புரண்டுகொண்டே இருப்பேன். சென்னையி லிருந்து தார்ஜிலிங்குக்குப் போய்ச்சேரும் வரையில் தலையணையில் தலைசாய்த்தவுடன் எனக்குத் தூக்கம் வந்துவிடும். இப்பொழுது இது முற்றிலும் போய், பழைய புரளும் வழக்கமும், மாலையில் உண்டபின் சிறிது கொதிப்புண்டாதலும் வந்து விட்டன. பகற் போஜனமான பின்

வைத்திய நண்பருக்கு வரைந்த கடிதம்

எனக்கு எவ்வித உஷ்ணமும் உண்டாவதில்லை. இங்கு வந்தது முதல், அருகே பழத் தோட்டங்கள் அதிகமா யுள்ளமையால் முன்னிலும் மிகுதியாகவே பழங்களைச் சாப்பிடுகிறேன். எவ்வளவு அக்னி நட்சத்திரமா யிருந்தாலும் எனக்குத் தாக மெடுப்பதில்லை. ஆகவே, நான் இப்பொழுது பழைய பலத்தையும், உற்சாகத்தையும் மிகுந்த தேக சௌக்கியத்தையும் அடைந்திருப்பதாக முழுமையும் உணர்கின்றேன். அதிகம் பால் சேர்த்துக்கொண்டு வருவதால் எங்கு கட்டை உதித்துப் போய்விடுமோ என்னும் அச்சம் மட்டும் எனக்கிருந்து வருகிறது. வைத்தியரே ! நீங்கள் நான் பணிவரையின் முன் யோகாசனமிட்டு உபநிஷதங்களி லிருந்து,

ந தஸ்ய ரோகோ ந ஜரா ந ம்ருத்யு: ப்ராப்தஸ்ய
யோகாக்நிமயம் சரீரம்

(பொருள்) "அவனுக்கு மரணமோ, சிதைவோ, நோயோ இலவாகும்; ஏனெனில் அவன் யோகாப்பியாசத்தால் திவ்ய தேகத்தையடைந்திருக்கிறான்" என்ற மகா வாக்கியங்களை உச்சரிப்பதை நீர் இங்கு வந்து பார்த்தால் ஆச்சரியமும் ஆனந்தமு மடைவீர்."

சுவாமிகள் அல்மோராவி லிருந்தபொழுது அவருடன் சென்றவர்களும், அல்லது அவரை அங்கேயே சந்தித்தவர்களும், மற்றும் அவருடன் வட இந்திய சுற்றுப் பிரயாணத்தை முன்னிட்டுத் தொடர்ந்து சென்றோரும் (சுவாமிகள்) யோகானந்தா, நிரஞ்ஜனாந்தா, அத்புதானந்தா, அச்சுதானந்தா, விக்ஞானந்தா, சதானந்தா, (பழய) சச்சிதானந்தா, (பிரம்மாச்சாரிகள்) சுத்தானந்தா, கிருஷ்ண லால் குட்வின் துரை முதலியவர்கள் ஆவர். இவர்களுடன் அல்மோராவில் சுவாமிகள் இமயத்தின் பரிசுத்தக் காற்றைச் சுவாசித்துக் கொண்டு, உபதேசிப்பதும், தர்க்கிப்பதும், விநோதமாகப் பேசுவதுமாக விருந்தார்.

அவர் எதை விரும்பி அல்மோராவுக் கேகினாரோ அதை மட்டும் அடைய வியலவில்லை. அவர் இந்திய பூமியில் கால்வைத்து மகத்தான குதூகல வரவேற்புக் கொண்டாட்டங்களுடன் கொழும்பு முதல் அல்மோரா வரையினும் எங்கும் புகழ் பெற்றமை கண்டு மனம் பொறாத புறச்சமயிகள் அவரைப் பற்றி உதாசீனமாகப் பேசவும் அவதூறுகள் கிளப்பவும் முன் வந்துவிட்டனர். அமெரிக்கன் மிஷனைச் சேர்ந்த பாதிரிமார்கள் அமரிக்காவிலுள்ள தமது தலைச்சங்கத்

தின் வாயிலாகப் பல தந்திரங்கள் சொல்லிக் கொடுத்து சுவாமிகளுக்கு, அந்நாட்டிலுள்ள கீர்த்தியைக் கெடுக்கத் தலைப்பட்டனர். இந்தியர்கள் சுவாமிகளை வீண்வாயாடி என்று மதிக்கின்றனர்; அவர் மேல் நாட்டிலிருந்து இந்தியாவுக்குத் திரும்பியதும் அவரை எவரும் லட்சியம் செய்யவில்லை; அவருடைய பிரசங்கங்களை எவரும் கேட்கவில்லை. மேலும் அவர் தாழ்ந்த குலத்தவர்'' என்று அவர்கள் அமரிக்கா தேசப் பத்திரிகைகளிலெல்லாம் எழுதிக்கொண்டிருந்தார்கள். இவ் விஷயங்கள் வெளிவந்த பத்திரிகைகளின் பிரதிகள் சுவாமிகட்குப் பலவிடங்களிலிருந்தும் வந்து குவிந்தன வாயினும், அவர் எதையும் பொருட்படுத்த வில்லை. 'அசத்யத்தின் முடிவு என்றும் அபஜெயந்தான்' என்று அவர் திண்ணமா யிருந்தார்.

சில குறும்புச் செயல்கள்

சுவாமிகள் அமரிக்காவில் மட்டு மல்லாது இங்கிலாந்திலும் பெரும் புகழ் படைத்தமை கண்டு இந்தியாவுக்குப் பிரசங்க நிமித்தம் வந்த அமெரிக்கக் கிறிஸ்தவப் பிரபல சமயவாதியும், சர்வ தர்ம மகா சபையின் கிளைச்சங்க அக்கிராசனாதிபதியுமான டாக்டர் பரோஸ் துரை, தம்மிடம் சுவாமிகள் உண்மையான அன்புடையவ ரென்பதையும் மறந்து, அழுக்காறுற்று, சுவாமிகளைப்பற்றி மிக்கத் தாழ்வாக, அவர் அமரிக்க நாட்டு மாதர்களைப் பற்றிப் பிரசங்கங்களிற் கேவலமாகப் பேசி வருவதாக, மனச் சாட்சிக்கு விரோதமாகக் கற்பனைசெய்து கொண்டு, கலிபோர்னியா 'கிரானிகிள்' பத்திரிகையின் நிருபரிடத்தில் அடாத பொய்யுரைகள் புகன்றனர். சுவாமிகள் இங்கிலாந்தி லிருக்கும்போதே அவர் இந்தியாவுக்குப் புறப்பட்டு வந்தவர். தமது அன்பராகிய அவர் இந்தியாவுக்குச் செல்லுவதை யறிந்த சுவாமிகள் அவரை விமரிசையாக வரவேற் றுபசரிக்கும்படி இந்தியாவிலுள்ள தமதன்பர்களுக்குக் கடிதம் வரைந்திருந்தார். அதனாற்றான் தம்மைச் சிலரேனும் இந்தியாவில் உபசரிக்க நேர்ந்த தென்பதையும் பரோஸ்துரை மறந்து, எள்ளளவும் நன்றி யறிதலின்றி, அன்னமிட்டவ ரில்லத்திற் கன்னமிடுவது போன்று அவதூறு பேச முன் வந்தது தான் விசனிக்கத் தக்கதா யிருந்தது. எனினும் அறுவடையான தெல்லாம் நெல்லாவதில்லை யல்லவா ? பதர் இருந்தே தீருமன்றோ?

பரோஸ் துரையின் சூழ்ச்சி

நிற்க, சுவாமிகள் அமரிக்காவிலுள்ள தமது அன்பர்களுக்கும்

அடியார்களுக்கும் சிஷ்யர்களுக்கும் தமக்குக் கிடைத்திருந்த பத்திரிகைகளின் பிரதிகளிற் காணப்பட்ட விஷயங்களுக்கு மறுப்பு எழுதியிருந்தார். இதனால், பரோஸ் துரையின் கூற்றை அமரிக்காவில் அவரைப்போன்ற மனப் பான்மையுள்ள சிலரைத் தவிர வேறெவரும் ஏற்கவில்லை; இதனால் அநேகர் பரோஸ் துரையிடம் வெறுப்புக் காட்டினர். அமெரிக்கா நாட்டு மாதர்களைப் பற்றிச் சுவாமிகள் நிந்தித்து இந்தியாவில் பேசினரென்ற பரோஸ் துரையைப் பார்த்து, அவர் கூற்றுக்குப் பத்திரிகை வாயிலாகவாவது, கடித மூலமாகவாவது அத்தாட்சியுண்டாவென்று கேட்ட பத்திரிகாசிரியர்களிடத்தும் அன்பர்களிடத்தும் அவர் விழிக்க, அவர்கள் அவரைப் பல்லைப் பிடுங்கிப் பருந்தாட்டமாட்டி விட்டனர். 'அடாது செய்தார் படாது படுவார்' என்பது அங்கு நிதரிசனமாயிற்று.

இது இப்படியிருக்க, மூர்ஷிதாபாத் ஜில்லாவில் பெரும் பஞ்சத்தாலும் கொடிய நோய்களாலும் பரிதபித்த மக்களுக்கு உதவி புரிந்து, அவர்கள் சுக துக்கங்களிலெல்லாம் உழன்று பாடுபடும் ஓர் குருபாயின் சேவையைக் கண்டு சுவாமிகள் பெரிதும் பாராட்டினர். காடு, மலைகளிலெல்லாம் சஞ்சரித்து யாத்திரை செய்து கொண்டுவந்த அகண்டானந்த சுவாமிகள், மூர்ஷிதாபாத் ஜில்லாவிலுள்ள சில கிராமங்கள் வழியே வரும்போது, ஜனங்களின் பரிதாப நிலையைக் கண்டு அனுதாபங் கொண்டு, கையில் தப்படி யில்லாவிட்டாலும் தம்மா லியன்றவரை உழைப்பதென்று பிரதிக்ஞை செய்துகொண்டு அங்கு தங்கி விட்டார். இதைக் கேட்டதும் சுவாமிகள், நித்யானந்த சுவாமி, சுரேஸ்வரானந்த பிரம்மச்சாரி ஆகிய தம்மிரு சிஷ்யர்களையும் அவருக்கு உதவியாக அனுப்பிவிட்டு, துக்க நிவாரண நிதியொன்றின் வாயிலாகப் பொருளுதவி செய்யவும் ஏற்பாடு செய்தார். கல்கத்தா, காசி, சென்னை மகாபோதி சங்கம் ஆகிய இவ்விடங்களிலிருந்து அதற்கு ஏராளமான பொருள் சேர்ந்தது. சுவாமி அகண்டானந்தர் அனுதினமும் ஐந்நூறு ஜனங்களுக்கு மேல் அன்னமளிப்பதும், நோயாளிகட்கும் கொள்ளை நோயால் வாதனைப் படுகிறவர்களுக்கும் மருந்து கொடுப்பதுமாகப் பல மாதங்கள் உழைத்து வந்தார்: ஆயிரம் பேருக்கு மேல் வஸ்திரம் இலவசமாக வழங்கப் பெற்றது. அரசாங்கத்தாரும் அகண்டானந்தரின் சேவையைப் புகழ்ந்தனர்.

அகண்டானந்த சுவாமிகளின் மூர்ஷிதாபாத் ஜன ஊழியம்

அகண்டானந்த சுவாமிகளை வாசகர்கள் மறந்திருக்க மாட்டார்கள். சுவாமிகளுடைய முதல் இமயவரை யாத்திரையில் உடனேகியவர் இவர். அதற்கு முன்பாக அவர் இமயத்தை நான்கு முறை சுற்றிப் பார்த்தவர். யௌவனத்திலேயே துறத்தற்கரியவற்றை யெல்லாந் துறந்த உத்தமர்; சுவாமிகள் அமெரிக்காவி லிருந்த பொழுது இவர் இராஜபுதனத்திற் பல ஆண்டுகள் சுற்றிவிட்டு, கேஷத்ரி மகாராஜாவின் உபசாரத்திற் கிசைந்து ஏழைகளுக்காக தர்ம பாடசாலை யொன்றை ஸ்தாபித்தார். ஸ்ரீராம கிருஷ்ணமடம் வெற்றியோடு உழைத்து வருவதாகவும், சுவாமி ஸ்ரீராம கிருஷ்ணானந்தர் சென்னையில் வேதாந்த ஸ்தாபனத்தை விமரிசையாகச் செய்து வருவதாகவுங் கேட்டுச் சுவாமிகள் மனமகிழ்ச்சி யடைந்தார்.

அதீத அன்புள்ள அகண்டானந்த சுவாமி

மார்ச்சுமாதக் கடைசியில் சென்னைக்கு வந்த ஸ்ரீராம கிருஷ்ணானந்தர் வெகு கம்பீரமாகத் தமது வேதாந்த ஸ்தாபனத்தை ஆரம்பித்து, தொடர்ச்சியாகத் தீர்க்க தரிசிகளான ஸ்ரீகிருஷ்ண சைதன்யர், இராமாநுஜர், சங்கரர், மத்வர், புத்தர், ஜரதட்டிரார், முகம்மதுநபி முதலியோரின் திவ்ய சரித்திராம்ருதத்தை மக்களுக்கு ஊட்டுவதும், அனுதினமும் வேதாந்த பாடமோதி கீதை உபநிஷதம் முதலியவற்றை உபதேசிப்பதுமாகக் கைங்கர்யபராரானுர். சுவாமிகளின் தேகமும் குணப்பட்டு வந்தது. உடனே புறப்பட்டு நகரங்கட் கேகித் தமது சமய ஊழியத்தைத் தொடங்கவும் சுவாமிகள் உறுதி பூண்டார். இதுகண்ட அல்மோரா வாசிகள் சுவாமிகளை ஒரே ஒரு பிரசங்கம் மட்டும் செய்யுமாறு மிகவும் தாழ்மையாகக் கேட்டுக் கொண்டார்கள். அப்படியே சுவாமிகள் 'ஸில்லா' பள்ளிக்கூடத்திலும், 'இங்கிலீஷ் கிளப்பி' லுமாக இரண்டு உபந்நியாசங்கள் செய்தார். 'கொள்கையிலும் அனுஷ்டானத்திலும் வேத விதிகள்' என்பது பொருளாகச் சுவாமிகள் வெகு ரம்யமாக உபந்நியாசித்தார். உயர்ந்த கல்விமான்களான உத்தியோகஸ்தர்களும் ஸ்திரீபுமான்களுமாகச் சுமார் ஐந்நூறுபேர் வரை அச் சிறு கட்டிடத்திலிருந்து அப்பிரசங்கத்தை வெகு அமைதியாகக் கேட்டனர்.

தார்ஜிலிங்கிலும் அல்மோராவிலும் சுவாமிகள் நிம்மதியாக ஓய்வு கொண்டிருந்தார். அவர் தேகம் குணப்பட்டதாயினும், அது நிரந்தர குணமாயில்லை. மலைவாச மற்று அவர் நகர வாசஞ்செய்யத் தொடங்கினால் வியாதியும் அவருடன் வசிக்க வாரம்பிக்கும். இதை யெல்லாம் கவனித்த சுவாமிகள் தமது தேகோபாதியைப் பொருட்படுத்தாமல்

தாம் செய்யவேண்டிய வேலைகளைத் துரிதமாக முடிக்க ஆவேசங் கொண் டெழுந்தார். 'கல்கத்தா - அல்மோரா வாசத்' தால் சுவாமிக ளுடைய சரீரமும் மனமும் அன்றலர்ந்த மலர்போ லாயின.

42-ம் அத்தியாயம்.

வட இந்திய சுற்றுப் பிரயாணம்

யதீஸ்வரரான சுவாமிகள் இங்ஙனம் அல்மோராவில் இரண்டரை மாதகாலம் வாஸஞ் செய்த பின், தம்மைப் பரிவுட னழைத்த பக்த சிரோன்மணிகளிடையே உறவாடித் தமது கொள் கைகளை நிலை நிறுத்தக் கருதி, பாஞ்சால காஷ்மீர் தேசங்களில் யாத் திரை செய்ய நிச்சயித்துப் புறப்பட்டார். அல்மோராவிலிருந்து கத் கோதத்திற்கு வந்து, பீம்தால் (Bhim Tal) என்னு மிடத்தில் சிறிது தேகக் கொதிப்பு ஏற்பட்டதால் ஒருநாள் தங்கிவிட்டு ஆகஸ்ட் மாதம் ஒன்பதாம் நாளில் பரில்லி (Bareilly) க்கு வந்து சேர்ந்தார். சுவாமி களின் வரவை முன்னரே அறிந்து உபசார ஏற்பாடுகள் செய்திருந்த அந்நகர கனவான்கள் அவரை எதிர்கொண்டழைத் துச் சென்றனர். அங்கு போய்ச் சேர்ந்ததும் மறு படியும் அவருக்குச் சுரம் வந்து விட்டது. ஆனால் அவர் தம் தேக உபாதியைப் பொருட்படுத்தாமல் அவ்வூரில் நான்கு நாட்களிருந்து உபதேசம் புரியலானார்; பத்தாந்தேதி யன்று காலையில் ஆர்ய சமாஜ அனுதாரக்ஷண சபைக்குப்போய்த் திரும் பினார்; அவ்வூர் மாணவர்கள் வேதாந்த சேவையில் ஆர்வமுடையவர்க ளாகிச் சுவாமிகளின் கொள்கைப்படி நடக்க முன் வந்தார்கள். 'மாண வர் வேதாந்த சபை' யொன்றையும் சுவாமிகளைக் கொண்டு ஸ்தாபித் தார்கள். அன்று பிற்பகலிலே சுவாமிகள் எக்காரணம் பற்றித் தமது மனத்தெழுந்த உணர்ச்சியாலோ, அச்சுதானந்த சுவாமிகளிடத்தில் தாம் பின்னும் ஐந்தாறு ஆண்டுகட்குமேல் உயிர் தரித்திருக்க வியலா தென்றுரைத்தார். அதன்படியே ஐந்து வருடங்களுக்குள் அவர் தீர்க்க சமாதி யடைந்தது மிக்க ஆச்சரியமானதே.

அல்மோரா வினின்று புறப் படுதல்

அம்மாதம் பன்னிரண்டாந்தேதி இரவு சுவாமிகள் புறப்பட்டு அம்பல்லா (Umballa) விற்குப் போய் ஒரு வார மிருந்தார். அந்நகர வாசிகள் ரயிலவே ஸ்டேஷனிலிருந்து சுவாமிகளை எதிர்கொண்

டழைத்துச் சென்றூர்கள். அதுவரை சிம்லாவில் வசித்துக் கொண்டிருந்த சேவியர் தம்பதிகளும் அப்பொழுது அங்கு வந்து சேர்ந்தார்கள். எல்லாச் சமயத்தவரும் சுவாமிகளைக் கண்டு சன்மார்க்க உபதேச மடைந்தார்கள்.

அம்பல்லாவை யடைதல்.

பதினூருந்தேதி மாலையில் 'லாகூர் காலேஜ்' சொற் பெருக்காள ரொருவர் கோரிக்கைக் கிணங்கி சுவாமிகள் பொனகிராமில் பிரசங்கமொன்று செய்தார்; தேக அசௌக்கியமா யிருந்தும் மறுநாளும் சுமார் ஒன்றரை மணிநேரம் உபந்நியாசஞ் செய்தார்; அம்பல்லாவில் ஹிந்து முகம்மதிய ஒற்றுமையை வளர்க்கும் உந்நதக் கருத்துடன் நடைபெற்று வந்த 'ஹிந்து-முகம்மதிய கலாசாலை'க்கும் விஜயம் செய்தார்.

அதன்மேல், அம்மாதம் இருபதாந்தேதி சேவியர் தம்பதிகள் முதலான சகாக்களுடன் சுவாமிகள் அமிர்த சரஸுக்குப் (Amirtsar) போய்ச் சேர்ந்தார். அந்நகரப் பிரபலர்கள் நல்வரவு கூறி அனைவரையும் மிகவும் உபசரித்தார்கள். அங்கு ஸ்ரீதோடர்மால் அவர்கள் கிருகத்திற் சில மணி நேரம் தங்கினூர். அவ்வூரன்பர்கள் இரண்டொரு நாளேனும் தங்கிச் செல்லும்படி பெரிதும் வேண்டினூர்கள். அவர்களை மறுக்க முடியாமல் ஒருவாறு சமாதானப்படுத்திச் சமீபத்திலிருக்கும் குன்றின்மீதுள்ள தர்ம சாலைக்குச்சென்று ஆவ் வாசம் செய்துக் கொண்டார். சேவியர் தம்பதிகள் மட்டில் சுவாமிகளுடனேயே இருந்தனர்.

அமிர்தசரஸுக்கு விஜயம் செய்தல்

அப்பால் அம்மாதம் முப்பத்தோராம் நாள் திரும்ப அமிர்த சரசுக்கு வந்து இரண்டு நாட்கள் தங்க, ஆர்ய சமாஜத் தலைவரான ராய்மூல் ராஜ் சுவாமிகளைச் சந்தித்துப் பேசினூர். பின்னர், சுவாமிகள் தமது சகாக்களுடன் ராவல்பிண்டி யடைந்து அங்கிருந்து தேக சௌக்கியத்தின் பொருட்டு முற்றீ (Murree)க் கேகினர். முற்றீயில் தமது நோக்கங்களை வெளியிட்டு ஹான்ஸ்ராஜ் அவர்கள் திருமாளிகையிற் சில தினங்கள் தங்கியிருந்து காஷ்மீரத்துக்குப் பிரயாணமானூர். சேவியர் தம்பதிகளும் காஷ்மீரத்துக்கு அவருடன் செல்லக் கருதி முற்றீக்கு வந்தார்கள்; வந்தவர்கள் சேவியர் துரையின் தேக அசௌக்கியத்தால் இடையில் தம் பிரயாணத்தை நிறுத்திக் கொண்டு, சுவாமிகளின் வழிச் செலவிற்காக 800 ரூபாய் மட்டும் அனுப்பி விட்டார்கள். சுவாமிகளும், சேவியர் துரையின் கட்டாயத்தின்பேரில் அத்தொகையில் பாதியை மட்டும் ஏற்றுக்கொண்டு டன்கா (Tonga)

வழியாகச் செப்டம்பர்மீ 8உ பாமுல்லாவுக்குப் போய் படகேறி ஸ்ரீநகரை யடைந்தார் பத்தாந்தேதி ஸ்ரீநகரை

ஸ்ரீநகரம் செல்லல்

யடைந்து கனம் நீதிபதி ரிஷிபார் முகோபாத்தியாயரின் விருந்தினராய் எழுந்தருளி வேதாந்தோபதேசங்கள் செய்துகொண் டிருந்தார்; காஷ்மீர தேசத்திய பண்டிதர்கள் பலர் வந்து சுவாமிகளை தரிசித்தார்கள். அன்றைய மூன்றும்நாள் சுவாமிகள் சாதாரணமாக ஸ்ரீநகர மகாராஜாவின் அரண்மனையைப் பார்வையிட்டார். அப்பொழுது ஸ்ரீநகர மன்னர் ஜம்முவிலிருந்தமையால், அம்மன்னர் பிரானுடைய இளைய சகோதரர் ஸ்ரீராஜாராம் சிங் மறுநாள் சுவாமிகளை அழைத்து, அரியதோர் ஆச

ஸ்ரீராஜாராம் சிங்

னத்தின்கண் எழுந்தருளச் செய்து தாமும் தமது உத்யோகஸ்தர்களுமாகத் தரையி லுட்கார்ந்த வண்ணம் இரண்டுமணி நேரம்வரை சுவாமிகளின் உபதேசங்களைச் செவிமடுத்து இன்புற்று அவருடைய நோக்கங்களை நிறைவேற்றத் தாம் என்றும் சித்தரா யிருப்பதாகவும் வேண்டிய உதவி புரிவதாகவும் கூறினர். சுவாமிகள் மறுபடியும் முற்ரீக்கு வரும் வரையில் சாதுக்களும், பண்டிதர்களும், வித்யார்த்திகளும், உத்யோகஸ்தர்களும் ஸ்ரீநகரில் அவரைச் சூழ்ந்துகொண்டு உபதேச ஸ்ரவணம் பண்ணுவதும் பிக்ஷையளிப்பதுமாகத் தமது அன்பை வெளியிட்டனர். ஓய்வு நேரங்களில் சுவாமிகள் காற்றுவாங்க ஸ்ரீநகர மன்னரது அமைச்சருடைய சொந்தப் படகு சுவாதீனமா யிருந்தது. சில சமயம் கடைவீதிகளைப் போய்ப் பார்ப்பதும், சங்கீத வாத்யங்கள் முழங்கக் கேட்பதுமாகச் சுவாமிகள் எழுந்தருளி யிருந்தார். செப்டெம்பர்மீ 20உ மந்திரியின் படகிலேயே சுவாமிகள் ஸ்ரீநகரிலிருந்து பாம்பூருக்கு (Pampur)ப் போய், பிறகு அனந்த நாக் (Anantanag) கிற்குச் சென்று அங்குள்ள விஜ்பீரா (Vijbera) ஆலயத்தைப் பார்த்து விட்டுக் கால்நடையாக மார்த்தாண்ட (Martanda) நகருக்குச் சென்று அங்குள்ள † விகாரத்திற் றங்கினார்; அங்கிருந்து வழியில் பாண்டவர்கள் சரித்திர சம்பந்தமான ஆலய மொன்றைக் கண்ணுற்றபின் அச்சபாலத்திற்கு (Acchabal) மெச்சச் சென்றார்; பிறகு நேராக அச்சபாலத்தினின்றும் ஸ்ரீநகருக்குத் திரும்பி வந்தார்.

அதன்மேல், ஸ்ரீநகரினின்றும், தோணியேறி வுஹ்லர் (Uhlar lake) ஏரியைத் தாண்டி ஆரண்யங்களின் அற்புதக் காட்சிகளைத் தரிசித்துக்

† வடநாட்டிலுள்ள தர்ம சத்திரங்களுக்கு 'விஹாரம்' என்று பெயர்.

கொண்டு பாமுல்லா (Baramulla) மார்க்கமாக முற்றீக்குத் திரும்பி னூர். அந்தப் பிரதேசத்தின் மனோகரமான சீதோஷ்ண ஸ்திதியால், சுவாமிகளுக்குப் பழைய தேக சுகம் மீண்டு முண்டாயிற்று. வெகு சந்தோஷமாக ஆங்காங்கு தம்மைக் காணவரும் புமான்க ளிடமும் கல்விமான்களிடமும் தமது நோக்கங்களை வெளியிடுவதும், தேசீய சமய சீர்திருத்தக் கொள்கைகளைப் பகர்வதுமாகச் சுவாமிகள் மிக்க உல்லாசமா யிருந்தார். அவர் முற்றீக்குத் திரும்பியதும் சேவியர் துரையும், துரைசானியும் ஏனைய பாஞ்சால வங்காள அன்பர்களும் அவரை மங்களகரமாக வரவேற்றனர். நிபாரன்பாபு சுவாமிகளைத் தமது கிருகத்தில் எழுந்தருளச் செய்து பிக்ஷை யளித்து வந்தார். அக்டோபர்மீ 14உ ஓர் வரவேற்புப் பத்திரம் அவருக் களிக்கப் பெற்றது. அதற்கு மிகவும் சுருக்கமாகப் பதிலளித்துவிட்டு, சுவாமிகள் தமது சிஷ்ய கோடிகளுடன் ராவல்பிண்டிக்கு மீண்டும் வர, அப்பதிவாசிகள் அரனூர் பத்தி மிக்க அன்பர்கள் — அவரை பட்டினப் பிரவேச வைபவாலங்காரத்தோடு ஏற்று ஸ்ரீஹான்ஸ் ராஜ் அவர்கள் இல்லத்திற்கு அழைத்துச் சென்றனர்.

ராவல்பிண்டிக்கு விஜயம்-ஸ்ரீபிரகாசானந்த சுவாமி

இங்கு ஆரியசமாஜாதிபரான ஸ்ரீபிரகாசானந்த சுவாமிகளுடன் சுவாமிகள் சம்பாஷித்து மகிழ்ந்திருந்தார். நீதிபதி ஸ்ரீமான் நாராயணதாஸ், ஸ்ரீபக்தராம் (பார்-அட்-லா) முதலிய பதவியாளர்கள் சுவாமிகளிடம் அன்பு பூண்டார்கள். ஸ்ரீசுஜனசிங் அவர்களின் மலர் வனத்தில் அபூர்வமான பிரசங்கமொன்று நிகழ்ந்தது. அதில் சுவாமிகள், நவீன ஹிந்து வித்யார்த்திகளின் மனத்திற் றோன்றும் சில குயுக்தியான எண்ணங்களையும் விநோதமான நடவடிக்கைகளையும் விளக்கிக்காட்டி, வேதாந்த ஹிந்து மதத்தின் விழுமிய புராதன தர்மங்களினுடைய உயர்வை விஸ்தரித்துப்பேசி அனைவரையும் களிப்பித்தார். "அவர் அசைந்து கொண்டும், அருகிலிருந்த அலங்கரிக்கப்பெற்ற தூணிற் சாய்ந்துகொண்டும், தமது சிரசிலும், கழுத்திலும் மாலைகள் விளங்கப் பேசியதைப் பார்த்தால் 'கிரேக்கர்கள் தெய்வ'த்தைப்போ லிருந்தது" என்று அவருடன் யாத்திரைசெய்த ஓர் ஐரோப்பிய சிஷ்யர் எழுதியுள்ளார்.

ராவல்பிண்டியில் சுவாமிகள் அடிக்கடி அவ்வூர் காளி கோயிலுக்குச் சென்று அங்கு வருபவர்க்கு உபதேசித்து வந்தார். சுவாமி பிரகாசானந்தர் சுவாமிகளிடம் அளவற்ற அன்புடையவராய் எப்பொழுதும் அவரை விட்டுப் பிரியாமலிருந்தார். அதன் பிறகு சுவாமிகள்

ஜம்மூவிலிருந்த காஷ்மீர மகாராஜாவின் உபசாரணைக் கிணங்கி, அக்டோபர் மாதம் இருபதாம் நாள் 'ஜம்மூ'விற்கு விஜயம் செய்தார். இராஜ உபசாரத்துடன் சுவாமிகள் ஸ்டேஷனிலிருந்து அரண்மனைக் கழைத்துச் செல்லப் பட்டார். அரண்மனை விருந்தினர்களை உபசரிக்கும் பதவி வகித்துள்ள பாபு மகேச சந்திர பட்டாசாரியர், சுவாமிகளை அன்பர் குழாத்துடன் உபசரித்து, ஆங்குள்ள புத்தாலயம் முதலான இடங்களைக் காண்பித்து, தமது குருவான கைலாசானந்த சுவாமிகளிடம் பரிச்சயஞ் செய்துவைத்தார். இருபத்து மூன்றும் தேதி அரண்மனை இரதத்திலேறி, அரசர் பெருமானைக் கண்டு, அவரளித்த அரியாசனத் தமர்ந்து, அம்மன்னர்பிரான் சந்நியாச ஆஸ்ரமத்தைப்பற்றிக் கேட்ட கேள்விகளுக்கெல்லாம் ஒப்ப உத்தர மளித்து, தமது நோக்கங்களையும் சமயாசாரக் கொள்கைகளையும் அவருக்குணர்த்தி நான்கு மணி நேரம் சம்பாஷித்தார். அன்று மாலையில் சுவாமிகள் யுவாராஜாவைக் கண்டு பேசினார். அன்று சுவாமிகள் நிகழ்த்திய தொரு பகிரங்கப் பிரசங்கத்தால் பரம திருப்தி யடைந்த அரசர் பெருமான் அவரை அடுத்தநாளும் உபந்நியாசிக்க வேண்டினார்; 'பத்து நாட்களேனுமிருந்து பாமராகிய அடியேங்களுக்கு பத்தியூட்ட வேண்டும்' என்று மிரந்தார். இருபத்தைந்தாந் தேதி சுவாமிகள் நகரபரிபாலன மின்சார யந்திரசாலைக்கு விஜயம் செய்துவிட்டு, இரண்டோரிடங்களில் சுருக்கமாகப் பிரசங்கங்கள் புரிந்து திரும்பினார். அன்று மாலையில் மகாராஜாவின் விருப்பப்படி இரண்டுமணி நேரம், ஓர் பெரிய கட்டிடத்தில் நாலுவேதம், ஆறு சாஸ்திரம், பதினெண் புராணங்கள் முதலியவற்றைப் பற்றியும், பத்தி மார்க்கத்தைப் பற்றியும் பிரசங்கித்தார். பின்பு, புத்தசாலைக்குச் சென்றுப் பார்வையிட்டார்; அன்று மாலையில் திவாலிப் பண்டிகையி னிமித்தம் நிகழ்ந்த நகர சிங்காரங்களைப் பார்த்து மகிழ்ந்திருந்தார்.

காஷ்மீர மகாராஜாவின் உபசாரம்

அடுத்த மூன்று நாட்களும் சுவாமிகள் திரும்பத் திரும்பத் தம்மைத் தரிசிக்க வந்த அன்பர்களுக்கு உபதேசம் புரிந்தவாறிருந்தார், அவர்களிடம் இந்திய ஜனசார சீர்திருத்தங்களைக் குறித்தும், மதத்தின் பேரால் செய்யப்படும் அட்டூழியங்களை நிவர்த்திக்கும் மார்க்கத்தைப் பற்றியும், கீர்த்தியை விரும்பாது உழைக்குந் தன்மையைச் சார்ந்தும் தமது நோக்கங்களை வெளியிட்டார். அப்பால், அக்டோபர் மீ 29உ மகாராஜா அவர்கள் பக்திப் பிரபாவ சம்பிரமங்களால் மயிர்க்கூச்சு

லெடுத்து ஆனந்தக் கண்ணீருடன் வழியனுப்ப, அவரைத் தேற்றி விடைபெற்றுக் கொண்டு சியல் கோட் (Sialkote) டுக்குப் பிரயாணமானார். இக்காலங்களில், சுவாமிகள் ஹிந்தி பாஷையிலே சொற் பொழிவுகள் நிகழ்த்தி வந்தமையால் மிகச் சிறந்த அவற்றை அவ்வாறே சாங்கேதி கலேகனப் படுத்தி வைக்க வியலாமற் போயிற்று. 'சியல்கோட்' என்பது பாஞ்சால தேசத்திலுள்ள ஒரு நகரம். அங்கு சுவாமிகள் ஸ்ரீலாலா மூல் சந்திரர் எம். ஏ., எல். எல். பி., அவர்களின் விருந்தினராயிருந்து 'இந்தியாவின் எதிர்கால சமய நிலை' என்பது பொருளாக ஆங்கிலத்திலும் 'பக்தி' என ஹிந்தியிலுமாக இரண்டு பிரசங்கங்கள் செய்து விட்டு லாகூருக்குச் சென்றார். அவ்வூர் சனாதன தர்ம சமாஜத்தின் சார்பில் மகாஜனங்கள் அவரை எதிர்கொண் டுபசரித்து, அலங்கரிக்கப் பெற்ற அழகிய தெருக்கள் வழியே மங்கள வாத்தியங்களுடன் ஊர் வலமாக எழுந்தருளச் செய்து ராஜா தியான் சிங் அவர்கள் ராஜக் கிருகத்தில் விடுதி யமைத்துக் கொடுத்தார்கள். அடுத்த வெள்ளிக்கிழமை யன்று மாலையில் சுமார் பதினாயிரத்திற்கதிகமான ஜனங்கள் நிறைந்த கூட்டத்தில் சுவாமிகள் "நம் முன் நிற்கும் வினா" என்ற விஷயமாய் பாரத பூமியில் அடிக்கடி நேரும் ஜாதி சமயச் சண்டைகளை யொழித்து, ஒற்றுமை நிலவுமாறு செய்வதற்கேதுவான சாதனங்களை எடுத்தோதினார். வேதம் பொதுப் பொருளென்றும், அது பொதுவான நிலைவகித்தே பொருள்களை யுணர்த்துகின்றதென்றும் கூறி, "ஜாதிகளிருப்பதால் தீமையில்லை, ஜாதிக் கொடுமைகளே ஒழிய வேண்டும்' என்று அறிவுறுத்தினார். அடுத்த செவ்வாய்க்கிழமை யன்று "வங்காளி புரபஸர் போஸ் சர்க்கஸ்" கூடாரத்தில் பக்தி யென்பது பொருளாக மிக்க உருசிகரமான உபந்நியாச மொன்று நடைபெற்றது. அவ்வமயம் அறிவிலிகளே புராணங்களைத் தாக்குவரென்றும், புராணங்கள் மனிதனுக்கும் தெய்வத்திற்குமுள்ள நெருங்கிய ஐக்கியத்தை ஊட்டுவனவென்றும் பிரமாண பூர்வமாக விஸ்தரித்து ஒவ்வொரு சமயத்திலும் இஃதே போலப் புராணங்கள் திகழ்வதையும் சீர்தூக்கிக் காட்டினார்; விக்ரஹ ஆராதனையை வெறுப்பதும் சிலைவணக்கஞ் செய்வோரை நிந்திப்பதுமான மனப்பான்மை யுடையாரைக் கண்டித்தும் விக்கிரக ஆராதனையை ஒவ்வொரு மனிதனும் செய்தே தீரவேண்டுமென்று பேசுகிறவர்களை மறுத்தும் பேசினார்; இக்காலத்தில் உத்தம

சியல்கோட்டு வாசம்.

லாகூரில் ராஜோபசாரம் - பிரசங்கம்.

ஆராதனையாவது உயிருடன் வாதனைப்பட்டுழலும் ஏழை மனிதர்களைச் சிவசொரூபமாகப் பாவித்து அன்னமளித்த லாகு

உத்தம ஆராதனை

மென்றும், இச்செயல் நமக்கு இகபர லாபங்களை நல்குவதுடன் தேசத்தின் மிடிமையையும் நிவர்த்தி செய்யுமென்றுஞ் செப்பினர்; "நீங்கள் ஒவ்வொருவரும் அனுதினமும் உங்கள் சக்திக்கேற்றவாறு தரித்திரத்தால் தடுமாறும் இரண்டொரு ஏழைகளையோ அங்கவீன நாராயணரையோ உங்கள் கிருகத்திற் கழைத்துப்போய்ச் சிவ விஷ்ணுக்களை ஆராதனஞ் செய்வதுபோல் அவர்களை உபசரிக்கக் கடவீர்கள். மக்கள் தர்மஞ் செய்வதை நான் பலதேசங்களிலும் பார்த்திருக்கிறேன். அவற்றால் பலன் ஏற்படுவதில்லை; ஏனெனில், தர்மமானது உண்மையான கருத்தோடு செய்யப் படவில்லை. 'இந்தா-பெற்றுக்கொண்டு தொலைந்துபோ' என்று தானே சொல்லுகிறார்கள்? இதனால் தர்மத்தின் அந்தரார்த்தம் எவ்வளவு தூரம் அனுஷ்டானத்திலுள்ள தென்பதையும், கொடுப்பவனுக்கும் பெற்றுக் கொள்பவனுக்கும் உள்ள சம்பந்தம் எப்படி யிருக்கிற தென் பதையும் நீங்கள் அறியலாம். இந்தியர்கள் அவசியம் இதை ஞாபகத் தில் வைக்க வேண்டும்; அவர்களுடைய தர்மம் மத

தர்மமென்பதெது!

சம்பந்தமானது; பக்தி வடிவானது. கபீர்தாஸ் செய்த தர்மத்தைச் சற்று கவனியுங்கள். அளிப்பவனைக் காட்டிலும் ஏற்பவன் எண்மடங்கு உயர்ந்தவன் என்பது ஹிந்துக்களின் தாத்பரியம். 'அவர்-இவர் நம்மை மெச்சவேண்டும்' என்று உலகோர் கண்களில் மண்ணைத் தூவித் தர்மஞ் செய்வதைப்போலக் கேவலமான—பாபகரமான செய்கையும் உண்டோ?' என்று சுவாமிகள் பேசிய வசனங்கள் கன்னெஞ்சையும் கரைய வைத்தன.

அடுத்த வெள்ளிக்கிழமையன்று லாகூரிலுள்ள, நான்கு உயர்தரக் கலாசாலை (காலேஜ்) மாணவர்களும் விண்ணப்பித்துக் கொண்டதற் கிணங்கி மாணவர், ஆசிரியர் மாட்சியாளர்கள் நிறைந்த பெரியதோர் சபையில் 'வேதாந்தம்' என்பது விஷயமாக சுவாமிகள் உபந்நியசித் தார். அவர் இந்தியாவி லியற்றிய பிரசங்கங்களுள் இதையும் மிக்க விசேஷமானதென்று குறிப்பிட லாம். சுவாமிகளின் உரையிலீடுபட்டு லாகூர் மாண வர்கள் அவரைக் கொண்டே ஓர் வேதாந்த

லாகூர் காலேஜில் உபந்நியாசம் "வேதாந்தம்."

சபையை ஸ்தாபித்து ஏழைகட்கும், பிணியாளர்கட்கும் பாமாருக்கும் ஜாதிமத வித்யாசமன்னியில் உடல்பொருளாவியால் உற்ற உதவிகள்

புரியவும் மனப்பூர்வமாக உழைக்கவும் முன்வந்து விட்டதாகச் சுவாமிகள் முன்னிலையில் உறுதி பூண்டார்கள். இரண்டு தினங்கள் கழிந்தபின் சுவாமிகள் * தேக்ரீ தேனத்திற்குப் (Dehra Den) போய், அங்கிருந்து ஆக்ரா டில்லி நகரங்களில் சற்று தங்கி, ஜெயப்பூருக்குப் போய்ச் சேர்ந்தார். அவருடைய ஜாதிபேத மின்மைக் கொள்கை லாகூரிலேதான் பகிரங்கமாகத் தெரிய வந்தது. சில வைதீக மதானுஷ்டானர்கள் சுவாமிகளை ஆரிய சமாஜத்திற்கு விரோதமாகப் பிரசாரம் செய்யும்படி கேட்டுகொண்டார்கள். ஆனால் அவர்கள் கூறிய 'விரோதமான' என்பது அவருக்குப் பிடிக்கவில்லை; ஆயினும் ஆர்ய சமாஜத்தாருக்கு நம்பிக்கையில்லாத சிரார்த்தத்தைப்பற்றி மட்டும் சுவாமிகள் தாக்குதலின்றி அறிவுறுத்தச் சம்மதித்தார். அதில் இருதிறத்தாரும் வந்து கலந்துகொண்டார்கள். பலமான தருக்கம் நடைபெற்றது. முதலில் சிரார்த்தத்தின் அவசியத்தைச் சுவாமிகள் எடுத்துரைத்து அதனை வெறுக்கும் ஆரிய சமாஜத்தாரை நேராகக் கண்டியாமலும் தாக்கியது போலவும் சாதுர்யமாகப் பேசவே, அவர்கள் வாதாடத் தலைப்பட்டனர். சிரார்த்தத்தின் பூர்வத்தைச் சுவாமிகள் ஆராய்ந்து தேவதா உபசாரணையிலிருந்தே ஹிந்து மதம் ஆரம்பித்தது என்று தெற்றெனக் காட்டினார். 'முதல் முதலாக ஹிந்துக்கள் சிரார்த்த காலங்களில் பிதுர்க்களின் சொரூபத்தை ஓர் மனிதனிடத்தில் மந்திரபூர்வமாக ஆவாகனஞ்செய்து அவனுக்கு அன்னமளித்து வந்தார்கள். அதனால் மந்திரபூர்வமாகப் பிதுர்க்களாக்கப் பெற்றவர்கள் நாளாவட்டத்தில் பீடிக்கப்பட்டு வந்தமைபற்றி அதைவிட்டு, அந்த ஸ்தானத்தில் தர்ப்பையை வைத்து பிண்ட விசர்ஜனஞ் செய்யலாயினர். ஆகையால், சிரத்தையுடன் தம் முன்னோர்களைக் கருதி அவர்கள் ஞாபகார்த்தமாகச் சிரார்த்தம் செய்யப்படுகின்றது'' என்று சுவாமிகள் விளக்கிக் காட்டினார். பாஞ்சால தேசத்திய மதானுஷ்டானர்களுள் பலமாக ஏற்பட்டிருந்த போட்டியையும் வாதத்தையும் நீக்கிச் சமரஸப்படுத்த வேண்டுமென்பதுதான் சுவாமிகளின் கருத்து. சண்டைக்குத் தூண்டிவிட்டுப் பிறநாட்டார் கைகொட்டி நகைக்கக் கோர்ட்டுக் கொத்தளங்களில் பொருளை அழிக்கும் சமையவாதிகள் அப்பொழுது பேழையுள்ளிருக்கும் பாம்பென அடங்கிக் கிடந்தார்கள். அப்பொழுது பாஞ்சாலத்தில் சமய சீர்திருத்தக் கொள்கையையுடைய ஆர்ய சமாஜத்தாரும் அவ

சிரார்த்தத்தின் அவசியம்.

---

* 'டேராடென்' என்பது, ராஜ்பூர் சமஸ்தானத்தி லுள்ளது.

ரைச் சூர்யனெனப் போற்றித் தமது சமாஜத்தின் தலைவர் பதவியை ஏற்கும்படி வேண்டவுங் கருதினரென்னில் அவ்விரு திறத்தினருக்கும் சுவாமிகளிடம் ஏற்பட்ட பக்தியை என்னென்பது?

முன்ன ருரைத்தபடி, லாகூரில் சுவாமிகளியற்றிய முதற் பிரசங்கம் பழைய ராஜக்கிருஹ மண்டபத்தில் இடம் போதாமையாலும், அபாரமான கூட்டத்தின் ஆரவாரத்தாலும், மைதானத்தில் நடைபெற வேண்டி வந்துவிட்டமையால் ஸ்வாமிகள் சவிஸ்தாரமாகப் பேச முடியாமற் போயிற்று. ஆனாலும் அவர் ஒன்றரைமணிநேரம் வரையில் பிரசங்கித்துச் சுருக்கமாக முடித்து விட்டார். அதில் தாம் பேசக்கருதிய விஷயங்களை 'ஹிந்து மதத்தின் பொதுவான ஆதாரங்கள்' என்று சிறு நூலாக வெளியிட்டார். அடுத்ததாக, சர்க்கஸ் கூடாரத்தில் பக்தியைப்பற்றிப் பேசுங்கால், அந்த சர்க்கஸ் தலைவர் அன்று இரவு ஆட்டம் நடத்த நிச்சயித்திருந்தமையால் எட்டுமணிக்குப் பிரசங்கத்தை நிறுத்திவிடுமாறு சுவாமிகளைத் தாழ்மையுடன் கேட்டுக்கொண்டார். ஆனால் சுவாமிகள் எட்டுமணி யடித்தபொழுதுதான் பீடிகையை விட்டு, விஷயத்தைப் பற்ற வாரம்பித்தார். அது கண்ட மோதிபாபு (சர்க்கஸ் தலைவர்) தமது கெடிகாரத்தைப் பார்ப்பதைச் சுவாமிகள் குறிப்பாக நோக்கித் தமது பிரசங்கத்தை இரண்டொரு வார்த்தைகளில் முடித்துக்கொண்டார். ஆகா! என்ன சூக்ஷ்ம புத்தி? அவர் கெடிகாரத்தை எடுத்து மணி பார்த்தது தமது பிரசங்கத்தை முடித்துக்கொள்ளுமாறு வேண்டுவதுபோ லிருந்ததாம்! ஆகவே, அவ்விரண்டு சந்தர்ப்பங்களிலும் அவர் கொண்ட கருத்துப்படி விரிவாகப்பேச வியலாமற் போயிற்று. அடுத்த வேதாந்த உபந்நியாசத்தில் சுவாமிகள் இவற்றையெல்லாம் சேர்த்துப் பொழிந்து விட்டார். அது அவருடைய ஆயுட்காலத்தில் செய்த பிரசங்கங்களிலெல்லாம் முதன்மையாக வைத்துப் பேசப்படும் ஏற்றமுடையது.

சர்க்கஸ் கூடாரத்தில் சொற்பொழிவு.

ஒருநாள் சுவாமிகள் சாதாரணமாகப் பேசிக்கொண் டிருக்கும்போது, ஐந்து புண்ணிய நதிகள் பாயப்பெற்ற பாஞ்சால தேசத்தில் ஆத்மார்த்த விஷயமும் பக்த சங்கீர்த்தனங்களும் வற்றிப்போ யிருக்கின்றனவென்று கூறி ஸ்ரீகிருஷ்ண சைதன்யரின் சங்கீர்த்தன பஜனையினது எழிலை எடுத்தோத, அவர்கள் சுவாமிகளைத் தலைவராகக் கொண்டு ஓர் பஜனோத்ஸவம் நடத்த நிச்சயித்தார்கள். ஆயிரக்கணக்கான கொடிகளுடனும் பக்தர்களுடனும் பஜனை கோஷ்டி புறப்பட்

டது. சுவாமிகள் பரவசமாகிக் காதாளம் போட்டுப் பாடிக்கொண்டே திரும்பிப் பார்க்க, ஆங்கோர் மிருதங்க மிருந்தது. அதனை எடுத்து வைத்துக்கொண்டு அவ்வாத்ய விற்பன்னர்களும் அஞ்சுமாறு வாசித்தார்.

சுவாமி ராமதீர்த்தரைக் காணல்.

இதே லாகூரில்தான் சுவாமிகள் ஸ்ரீதீர்த்தராம் கோஷ்வாமியை முதல் முதலாகச் சந்தித்ததும், பிற்காலத்தில் சுவாமிகளின் நெறியைக் கடைப்பிடித்து அமெரிக்காவில் வேதாந்த சேவை புரிந்து சுவாமி ராமதீர்த்தர் என்ற புகழ் நாமத்துடன் ஜெகப் பிரசித்தியடைந்த தீர்த்தராம் கோஷ்வாமி அப்பொழுது லாகூர் காலேஜில் கணிதப் புலவராயிருந்தார். இவருடைய தூண்டுதலாற்றான் சுவாமிகளின் வேதாந்தப் பிரசங்கமும் நிகழ்ந்தது. சுவாமிகளிடத்தில் அவர் அளவற்ற அன்பு பூண்டு, குட்வின்துரை முதலான எல்லோரையும் வரவேற்று விருந்தளித்தார். அவ்விருந்தானபின் சுவாமிகள் "ஜஹன்ராம் வியுஹன் காம் நஹின், ஜஹன்காம் நகின்ராம்"........'எங்கு தெய்வ நம்பிக்கையுளதோ அங்கு ஆசை, காமமென்பதில்லை; எங்கு காம மிருக்கின்றதோ அங்கு தெய்வ நம்பிக்கை இல்லை' என்ற கருத்துடைய கீர்த்தனத்தைக் கானவிசாதரராய்ப் பாடினார். தீர்த்தராம் இதைக் குறித்து 'இன்னிசை பொலிந்த அக்கீர்த்தனத்தாலேயே அதன் பொருள் அங்கு குழுமியிருந்தவர் உள்ளத்திற் பதிந்து விட்டது' என்று வரைந்துளார். தீர்த்தராம் அவர்கள் புத்தக சாலையைச் சுவாமிகள் பார்வையிட்டபோது, ஆங்கு விளங்கிய எவ்வளவோ புத்தகங்களில் 'அமரிக்கா சந்நியாசி' யென்று அவர் போற்றி வந்த வால்ட் விட்மான் (Walt Whitman) எழுதிய புல்லிலைகள்" (Leaves of Grass) என்ற புனித நூலையே எடுத்து வாசித்தார். ஒரு நாள் மாலையில் சாலையின் வழியே சுவாமிகள், குருபாய்கள், தீர்த்தராம், சிஷ்யர்கள் முதலானோர் பேசிக்கொண்டே காற்றுவாங்கச் சென்றார்கள். இரண்டு மூவராகத் தனித்தனியே பிரிந்து வார்த்தை சொல்லிக்கொண்டே போகும்பொழுது தீர்த்தராம் அவர்கள், தமது மாணவர்களி லொருவர் கேட்ட கேள்விக்கு 'பூர்ண லக்ஷணம் பொருந்திய மகாத்மா தனது சொரூபத்தை மறந்து தானே சகலமுமாய் சர்வ ஜீவ தயாபர மூர்த்தியாய் விளங்குகின்றார். ஓர் பிரதேசத்திலுள்ள காற்றானது எவ்வளவுக் கெவ்வளவு சூர்ய வெப்பத்தால் மென்மையுற்று மேலே கிளம்புகின்றதோ அவ்வளவுக் கவ்வளவு அந்த வெற்றிடத்தை

அடைக்க வெளிக்காற்று வருகின்றது. அதுபோல மகாத்மாவானவர் தனது சர்வ ஜீவதயையால் சொரூபமாற்றமுற மக்களனைவரும் அவரை நாடுகிறார்கள்' என்று சொல்லிக்கொண்டே வரும்போது, இதைக் கவனித்துக்கொண்டே சற்று முன்னாக நடந்துகொண்டிருந்த சுவாமிகள் பொட்டென நின்று உரக்க 'அப்படிப்பட்டவர் எனது குரு! பரமஹம்ஸ ஸ்ரீராம கிருஷ்ணதேவர்' என்றார். அவர் குருவை எப்பொழுதும் மனமாகிய கோயிலில் வைத்து ஆராதித்து வந்தவரல்லவா? அதுமுதல் சுவாமிகட்கும் தீர்த்தராமுக்கும் விசேஷ நட்பேற்பட்டுவிட்டது. தீர்த்தராம், சுவாமிகளுக்கு ஓர் பொன் கடிகாரத்தை யளிக்க, சுவாமிகள் அதை அன்போடு ஏற்றுக்கொண்டு 'நண்ப! நான் என்னுடைய பையில் இதைத் தரிக்கிறேன்' என்று திரும்பவும் தீர்த்தராம் பையிலேயே அதனை இட்டு விட்டார்.

லாகூரில் அப்பொழுது சர்க்கஸ் நடத்திக்கொண்டிருந்த மோதிலால் போஸ் என்பவர், சுவாமிகளின் பால்ய சிநேகிதர். அவர் சுவாமிகளைப் பார்க்க வந்தபொழுது தமது கலாசாலைத் தோழரான அவருக்கு நூற்றுக் கணக்கான மேதாவிகள் பாதசேவனஞ் செய்வதைப் பார்த்துத் திகைத்து, சற்று நிதானித்து சுவாமிகளைக் கிட்டி மெல்ல 'நான் இப்பொழுது உன்னை சுவாமி! என்றழைக்கட்டுமா? அல்லது நரேந்திரா! என்று கூப்பிடட்டுமா?'' என்றார். அதற்கு சுவாமிகள் 'என்ன மோதி! பைத்தியம் பிடித்துவிட்டதா உனக்கு? நான் அதே நரேந்திரனென்பதையும் நீ அதே மோதி என்பதையும் மறந்து விட்டனையா? என்றுரைத்து தழுவிப் பேசினார். இது மட்டுமல்ல. அவர் மேல்நாட்டிலிருந்து திரும்பியபின் தம்மைக் காணவந்த பால்ய சிநேகிதர்களெல்லாரோடும் இதுபோன்றே நடந்து கொண்டார்.

பழைய நண்பர்களைப் பாராட்டிய விதம்.

தமக்குக் கொஞ்சம் பெயர் வந்துவிட்டால் மேலுங் கீழும் பார்க்கும் கேவலபுத்தி அற்பருக்கன்றோ? சுவாமிகள் அவ்வாறின்றித் தம்முடன் கலாசாலையிற் படித்த எவரையாவது பார்த்துவிட்டால் என்ன அவசரமானாலும் நின்று அன்போடு பேசி, ''நாம் அந்த சந்தில் கோலி விளையாடிய போது உன்னை முட்டியடிக்கச் செய்தேனல்லவா?'' என்று சிறு வயதில் நடந்த ஒரு நிகழ்ச்சியை வெகு ஞாபக சக்தியோடு சொல்லி உறவாடுவார். சுவாமிகள் கல்கத்தா மாகாணக் கலாசாலை (Presidency College) யில் படிக்கும்போது ஒரு நண்பரைப் பார்த்து ''அப்பா! என்னைப் பார்த்தால் யோகிபோலிருக்கிறதா? நான் பெரிய சந்நியாசி

யாக ஆவல்கொண்டுள்ளேன்' என்று எந்த தோழரிடம் புகன்றனரோ, அதே யுபேந்திர பாபு சுவாமிகளை அவர் குடதேசங்களிலிருந்து திரும்பியபின் பலராம் பாபுவின் கிருகத்தில் சந்தித்தபொழுது, அவரைப் பார்த்ததும் சுவாமிகள் எழுந்து நின்று, துணைக்கரம் நீட்டிப் பல அடியார்கள் சுற்றிலும் கூடியிருக்க அருகே யழைத்துத் தழுவி 'அந்த நாட்களில்' என்றெடுத்து பால்ய நிகழ்ச்சிகளையெல்லாம் பகர்ந்து வருவாரானூர். இப்படியே அவர் எல்லோரையும் உபசரிப்பது வழக்கம்.

நிற்க, பத்து நாட்கள்வரை லாகூரில் சுவாமிகள் பிரசங்கித்ததனுல், தேக உபாதி மீண்டும் தலைகாட்ட வாரம்பித்தது. ஆகையால், அவர் தமது உத்தேச உபந்நியாசங்களையும் பிரயாணத்தையும் ஒத்தி வைத்துக்கொண்டு இமயப்பிராந்தத்திலுள்ள தேக்ரி தேனத்திற்கு ஏகினர். அங்கும் அவர் சும்மாவிருக்க முடியவில்லை; தம்முடைய சிஷ்யர்களை யெல்லாம் கூட்டி அனுதினமும் சம்ஸ்கிருத பாடமோதி வந்தார்; பிரம்ம சூத்திரங்களுக்கு ஸ்ரீராமாநுஜாசாரியர் வரைந்த பாஷ்யத்தை நாள் தோறும் புகட்டி வந்தார்; யாத்திரையிலுங்கூட ஸ்நான போஜனமானபின் சுவாமிகள் தமது சிஷ்யர்களை வரிசையாக அமரச்செய்து சம்ஸ்கிருத பாஷா விற்பன்னரான சுவாமி அச்சுதானந்தரைக்கொண்டு சாங்கிய நூலைக் கற்பிப்பார். அச்சுதானந்தர் பொருள் சொல்லத் திகைக்கு மிடங்களில் தாமே உரை வகுப்பார். தேக்ரி தேனத்திலும் காஷ்மீரத்திலும் பிரம்மச்சரிய ஆஸ்ரமமொன்றை ஸ்தாபிக்க ஏற்ற ஏகாந்தமான இடமொன்றை வாங்கவேண்டுமென்ற எண்ணம் அவருக் கிருந்தது. அது பிற்காலத்தில் நிறைவேறிற்று.

தேக ஆரோக்கியத்திற்காகத் தேக்ரி தேனம் செல்லல்.

அவர் தேக்ரிதேனத்தி லிருக்கும்பொழுது க்ஷேத்திரி மகாராஜா அவர்கள் தமது ராஜ்யத்திற் கெழுந்தருளுமாறு அடிக்கடி ஸ்ரீமுகம் விடுத்துக்கொண்டே யிருந்தார். தமது குருவான சுவாமிகளைத் தரிசிக்க மகாராஜாவுக் கிருந்த அவாவிற்கோ அளவில்லை. சுவாமிகட்கும் சும்மாயிருப்பது மிக்கக் கஷ்டமா யிருந்தமையால், சீக்கிரமாகப் புறப்பட்டு டில்லி, ஆக்ரா, ஆழ்வார், ஜெயப்பூர் மார்க்கமாக ராஜபுதனத்தை யடைந்தார்; டில்லியில் தம்மை முன்பு பரிவ்ராஜகர் நிலையில் ஹத்ராஸில் உபசரித்த ஷோடு கிருஷ்ண ரில்லத்தில் தங்கினர். அப்பால், சேவியர் தம்பதிகளும் தமது குருபாய்களும் சிஷ்யர்களும் உடனேக டில்லிமா

நகரின் சுற்றுப் புறங்களிலுள்ள மொகலாயச் சக்காவர்த்திகளின் பாழான, சிற்ப நிபுணத்துவமுள்ள கட்டிடங்களையெல்லாம் சுற்றிப் பார்த்துவிட்டு, ஆக்ராவுக்குப்போய் அக்பர் ஷாஜஹான் முதலிய மொகலாய அரசர்களின் மாளிகைகள் இடிந்து பட்டிருக்க அவற்றையெல்லாம் பார்வையிட்ட பின்னர் ஆழ்வாரை யடைந்தார். மகாராஜா அப்பொழுது ஊரிலில்லை. பிரபுக்களும் கல்விமான்களும் உத்தியோகஸ்தர்களும் அவரை ரயில்வே ஸ்டேஷனில் சந்தித்து அலங்கரிக்கப்பெற்ற தெருக்கள் வழியே ஊர்வலங்கொண்டனர். ஊர்வலம் புறப்படும் பொழுது, கூட்டத்தில் நெருக்குண்டு நிற்கும், அலைந்து திரிந்த சந்நியாச நிலையில் தம்மை யுபசரித்த ஓரன்பரை, சுவாமிகள் 'ராமாஸ்நிஹி;' என்று பெயர் சொல்லி உரக்க அழைத்துச் சுகம் விசாரித்தார். இது போலவே, சென்னையிலும் கூட்டத்தில் நசுக்குண்டு தத்தளித்த சதானந்தரை 'சதானந்த பாபா' வென்றழைத்து தமக்குப் பக்கத்தில் அமர்த்திக்கொண்டார். இதைப்போன்ற சுவாமிகளின் திவ்ய குணாதிசயங்கள் பலவிடங்களிலும் காணப்படுகின்றன. நிறைந்த குடம் என்றும் தளும்புவதில்லை யன்றோ?

டில்லி—ஆக்ராவிற் கேகல்.

அந்நகர வாசிகள் தினந்தோறும் சுவாமிகளை, அவர் பக்தர்களோடு அழைத்துச் சென்று விருந்தோம்புவர். அவர் முன்னறியற்றிய யாத்திரையில் அவரை யழைத்து பிக்ஷை கொடுத்தமையால் பெருமகிழ்ச்சி யடைந்திருந்த ஓர் கிழ ஸ்திரீ இத்தடவை இவ்வளவு புகழ் படைத்த சுவாமிகள் தமதில்லத்தில் உணவு கொள்வரோவென மனங் கவன்றிருந்தாள். இப்படி யிருக்க, முன்னாளில் அவ்விருத்தையினில்லத்தில் தாம் உணவு கொண்டதை மறவாத சுவாமிகள், அவள் அழையா முன்னமே, தாம் அவள் கையினாற் சுட்ட ரொட்டியைப் புசிக்க ஆவல்கொண்டிருப்பதாகச் சொல்லி யனுப்பினர். இச்செய்தி கிடைத்ததும் அவள் உளம் பொங்க ஆனந்தபாஷ்பஞ் சொரிந்து உணவு தயாரித்தனள். சுவாமிகள் தமது சீடர்களுடன் சென்று போஜனம் செய்யும் பொழுது, அவள் 'புத்ரா! ஏழையேன் உனக்கு நல்ல உணவளிக்க எங்ஙனம் வல்லேன்.? குசேலனளித்த அவலைக் கண்ணன் ஏற்றதுபோல இதனை நீ ஏற்கவேண்டும்' என்றனள். சுவாமிகள் அவ்வுணவை அருமருந்தாகக் கொண்டு, பின்னர் ஓர் சீடனை நோக்கி "இங்கே பார்! என்ன அருமை! என்ன தாயன்பு! அவள் அளித்த

ஓர் கிழவியிட்ட விருந்து

உணவு எவ்வளவு சத்வமா யிருக்கிறது பார் !'' என்று கூறிவிட்டு, பரிதாபப்பட்டு அக்கிழவி யறியாவண்ணம், அவ்வீட்டுத் தலைவர்களிடம் நூறு ரூபாய் நோட்டொன்றைக் கொடுத்துத் திரும்பினார்.

அப்பால், சுவாமிகள் தமது பரிவாரங்களோடு கேஷத்ரிக்குப் பிரயாணமானார். மன்னரின் ஆக்ஞைப்படி ஜெயப்பூருக்கும் கேஷத்ரிக்கும் இடையிலுள்ள வழி யெங்கும் தகுந்த அலங்காரங்களும் விடையாற்றி மண்டபங்களும் அமைக்கப்பெற்றிருந்தன. கேஷத்ரி மகாராஜாவும் சமீபத்திற்றான் மேல்நாட்டு உல்லாச யாத்திரையினின்றும் திரும்பினா ராதலின், சீமையிலிருந்து திரும்பிய நரபதியையும் யதிபதியையும் சேர்த்து உபசரிக்க வாய்த்தமை கருதி நகரெங்கணும் லக்ஷதீபமேற்றி வாண வேடிக்கையுடனும் மங்கள வாத்தியங்களுடனும் வரவேற்றார்கள். மகாராஜா அவர்கள் கேஷத்திரியிலிருந்து பன்னிரண்டு மைல் தூரஞ் சென்று சுவாமிகளை எதிர்கொள்ள ஆண்டியும் அரசருமான இருவரும் ஒரே ரதத்திலமர்ந்து நகர் வலம் வந்தார்கள். பிறகு இருவருக்கும் உபசாரப் பத்திரங்களளிக்கப் பெற்றன. பிறகு டிசம்பர்மீ 11உ மன்னரையும் சுவாமிகளையும் கௌரவிக்க கேஷத்ரி கலாசாலையில் ஓர் பொதுசபை கூட்டப்பெற்றது. அப்பொழுது பற்பலத் தனித்தனி சபைகளினின்றும், ராஜாங்கப் பொது ஜன ஸ்தாபனங்களிலிருந்தும் சுவாமிகளுக்கும் வேந்தருக்கும் வந்தனோபசாரப் பத்திரிகைகள் அளிக்கப்பட்டன. அக்கலாசாலை மாணவர்கள் வடமொழியில் ராஜ ஸ்தோத்திரங்களை கவனஞ் செய்து வாசித்தனர். அக்கலாசாலை நிர்வாகிகள், அவ்வாண்டைய பரிசளிப்பு விழாவை நடத்த இதுவே தருணமென்று நிச்சயித்து நடத்தினார்கள். மகாராஜாவின் வேண்டுகோளுக் கிசைந்து சுவாமிகள் பரிசுகளை வழங்கினார்; சுருக்கமாக வித்தியார்த்திகளுக் கேற்றவாறு சுவாமிகள் பேசினார். அதோடு அன்றைய உபசார மகோற்சவம் முடிவடைந்தது.

கேஷத்ரியில் வரவேற்பு மகோற்சவம்.

வரவேற்புக் கூட்டத்தில், கேஷத்ரி பிரஜைகள் தமது அதிபதிக்கு அதுபோன்ற விழாக்களில் நடத்தும் வழக்கப்படிச் சமர்ப்பித்த பொன் மோகராக்கள் ஐந்து பெட்டிகள்வரை நிரம்பி யிருந்தன. அதன் பெரும்பாகத்தை அவர் தமது ராஜ்யத்திலுள்ள கல்விச் சாலைகளுக்கு நன்கொடையாக அளித்து விட்டார். சாமான்ய ஜனங்கள் ஒவ்வொருவராக முன்வந்து வணங்கி, இரண்டு ரூபாய் வீதம் பாதக் காணிக்கை சமர்ப்பித்தனர்; இப்படி இரண்டு மணி நேரம் நடந்தது. சுவாமிகள்

க்ஷேத்ரியில் 'வேத வேதாந்த' மதப் பிரசங்கம்.

க்ஷேத்திரியை விட்டுப் புறப்படும்பொழுது அவருக்கு மகாராஜா மூவாயிரம் ரூபாய் கொண்ட ஓர் பண முடிப்பையு மளித்தார். அதைச் சுவாமிகள் வாங்கி உடனே கல்கத்தா மடத்திற்கனுப்பி விட்டு, டிசம்பர் மாதம் பன்னிரண்டாந் தேதி 'வேதாந்தம்' என்பதுபற்றி ராஜக் கிருஹ பிரசங்க மண்டபத்தில் பேசினார். அவ்வமயம் க்ஷேத்ரியிலிருந்த ஸ்திரீ புமான்க ளனைவரும் வந்திருந்தனர்; மகாராஜா அக் கூட்டத்திற்குத் தலைமை வகித்து ஆங்கு வீற்றிருந்த கனதனவான்களுக்குச் சுவாமிகளை அறிமுகப் படுத்தி வைத்துச் சுமார் ஒன்றரைமணி நேரம் முன்னுரையாகப் பேசினார் சுவாமிகள். பலத்த கரகோஷத்தினிடையே எழுந்து கிரேக்க ஆரியர்களின் உன்னத நாகரிகத்தை விஸ்தரித்து, தாரதம்மியப் படுத்திக்காட்டி, பழங் காலத்திலிருந்து அன்னோர் முன்னேற்ற மடைந்த பாங்கை முற்றிலும் சரித்திரப் பூர்வமாக விளக்கி, அத்தேசத்தின் நாயகங்களான 'பிளேடோ, சாக்ரடீஸ்' முதலான தியாக மூர்த்திகளைப் பற்றி யுரைத்து, பின்னர் வேத வேதாந்த கடலுக்குட் புகுந்து விளையாடி,

ஏகம் ஸத் விப்ரா பஹுதா வதந்தி

என்ற சுலோகப்படி "விளங்குவது ஒன்றுதான்; அதை மகான்கள் வெவ்வேறு பெயரிட்டு அழைக்கின்றனர்" எனப் பகர்ந்து துவைதம், வெகு தேவ வாதம் முதலான சகல கொள்கைகளும் அந்தத்தில் அத்வைதத்தில் நிலைத்து 'தத்வமஸி' என்னும் எல்லையையே காட்டுகின்றன வென் றுரைத்தார். இப்படிப் பேசிக்கொண் டிருக்கும்போது அவர் களைத்துப்போய் ஆஸ்வாஸ நிமித்தஞ் சென்று அரைமணி நேரங் கழித்துத் திரும்பிவர சபையோர் அனைவரும் வெகு அமைதியாகக் காத்திருப்பது கண்டு, உற்சாகத்தோடு உபந்நியாசத்தைத் தொடங்கி அரைமணி நேரம் பேசினார்; க்ஷேத்ரி மன்னரின் குணநிசயங்களைப் புகழ்ந்து, தமது மேல் நாட்டு விஜயத்திற்கும் வெற்றிக்கும் உதவிய உத்தம க்ஷத்திரிய மன்னரொன்றும் அவராற்றான் ஹிந்து மதப் பிரவர்த்தகம் குட தேசங்களில் சாத்யமாய் வேரூன்றிற்றென்றும் குறிப்பிட்டார்.

க்ஷேத்ரியில் சுவாமிகட்கு அதிக அவகாசங் கிடைத்தது. பேட்டியளிப்பதும் பிரசங்கிப்பதுமான கார்யங்களோடு மகா ராஜாவுடன் குதிரை சவாரி செய்வதும் இயற்கை யழகிலியைந்து நிற்கும் எம்பிரானைத் தரிசித்துப் பரவசமாவதுமாக சுவாமிகள் வசித்து வந்தார். ஒரு

நாள் இங்ஙனம் சுவாமிகளும் மன்னரும் குதிரை சவாரி செய்து கொண்டு போகையில், இடையில் ஒரு மரக்கிளை நீட்டிக் கொண்டிருக்க, அது சுவாமிகளின் மீது பட்டுக் காயப்படுத்தி விடுமோ வென்றஞ்சிய மன்னர், அதைத் தமது காத்தாற் பற்றித் தேக்கினர். அது அவருடைய கையை சிதைத்து விட்டது. கையிலிருந்து உதிரம் பெருகுவதையும் அவர் கவனியாது செல்வதைக்கண்ட சுவாமிகள் இரங்கிப் பேசியபொழுது மன்னர்பிரான் 'சுவாமி! நாங்கள் எப்பொழுதும் காக்கப் பிறந்தவர்க ளல்லவா?'' என்றார். ஆகா! என்ன குருபக்தி!

அரசர் பிரான் சுவாமிகளைக் காத்தல்.

சுவாமிகள் கேஷத்ரியை விட்டுப் புறப்பட்டதும், ராஜமார்த்தாண்டர் சிறிதும் பிரிய மனமின்றி ஜெயப்பூர் வரையில் வந்தார். ஜெயப்பூர் ஆலயத்தில் ஓர் கூட்டம் கூட்டப்பெற்றது. அரசர்பிரான் அக்கிராசனம் வகித்தார். அங்கு கூடியிருந்த ஐயாயிர மக்கட்கிடையே ஓர் சிறு பிரசங்கம் செய்துவிட்டு, பிரம்மச்சாரி கிருஷ்ணலாலைத் தவிர, மற்ற சிஷ்யர்க ளனைவரையும் கல்கத்தா—பேலூர் மடத்திற் கனுப்பி விட்டு மகாராஜாவிடம் விடை பெற்றுக்கொண்டு கிஷென்கார் (Kishengarh), ஆஜ்மீர், ஜோட்பூர், இந்தூர் முதலிய நகரங்களின் வழியாக ஏகிக் காண்டவத்தை எய்தினர். ஜோட்பூரில் சுவாமிகள் பத்துநாட்கள் பிரதம மந்திரி ராஜா சர் பிரதாப் சிங் அவர்கள் திருமாளிகையில் இறங்கி யிருந்தார். வழியிலுள்ள ஸ்டேஷன்கள் தோறும் ஜனங்கள் திரள் திரளாக வந்து உபசாரப் பத்திரங்க ளளித்தனர் சுவாமிகள் பிரதி வந்தன பூர்வமாய் அவர்களோடு சுருக்கமாய் பேசித் தமது கொள்கைகளை உணர்த்தியவாறே இந்தூர் சமஸ்தானத்திலுள்ள காண்டவத்தை யெய்தி, அங்கு தம்முடன் பரிவ்ராஜக நிலையில் அன்பு பூண்ட ஸ்ரீபாபு ஹரிதாஸ் சடர்ஜியவர்கள் வீட்டில் தங்கினர். மீண்டும் அவருக்கு சுரம் வந்து விட்டது. இக்காரணத்தால் அவர் காண்டவத்தில் பத்து நாட்களுக்குமேல் தங்க நேரிட்டது. ஸ்ரீபாபு ஹரிதாஸ் சடர்ஜியும் மிக்க பாடுபட்டுச் சிகிச்சை செய்தார். சுவாமிகள் குணமடைந்தார்; தம்மைத் தரிசிக்க வந்தவர்களுக்கெல்லாம் அவரவர் மனப் பரிபக்குவ நிலைக்கேற்ப பக்தி, யோக, ஞான, கர்ம வழிகளைப் புகட்டினர். உறுதியுடன் நீங்கள் பன்னிரண்டாண்டுகள் சாகபக்ஷணங் கொள்வீர்களானல் சித்த புருடர்க ளாகிவிடுவீர்கள்'' என்று

காண்டவத்திற் சேகல்.

ஊனைத் தின் றிவ்வூனைப் பெருக்குவதை யொழிக்குமாறு உபதேசித்து வந்தார்.

பின்னர், காண்டவத்தினின்றும் நீங்கி ரட்லம் (Rutlam) ஜங்ஷன் வரையிற் சென்றார். தேக அசௌக்கியத்தால் மறுபடியும் அவரது சுற்றுப் பிரயாணம் தடையுற்றது. ஏற்கனவே பம்பாய் மாகாணத்திலுள்ள குஜாத், பரோடா முதலான இடங்களிலிருந்து அவருக்கு வரவேற்புத் தந்திகளும் கடிதங்களும் வந்திருந்தன. எனினும், நேராகக் கல்கத்தாவிற்குச் சென்று கொஞ்சகாலம் ஓய் வெடுத்துக் கொண்டு, பின்னர் தமது பணியைத் தொடங்க உறுதிபூண்டு ஸ்வாமிகள் நேராகக் கல்கத்தாவிற்குப் பிரயாணமானார். இடையில் ஜபல்பூர் ரயில்வே ஸ்டேஷனில் வரவேற்புப் பத்திர மளிக்கும் சம்பவம் நிகழ்ந்தது.

இந்த சுற்றுப் பிரயாணத்தில், சுவாமிகள் செய்தருளிய பாமோத்தமான பிரசங்கங்களை விரிவஞ்சி ஈண்டு முற்றிலும் மொழி பெயர்த்தெழுத வியலாவிடினும் அவர் பரப்பிய கொள்கைகளைமட்டுஞ் சுருக்கமாக வரைகின்றோம். அவையாவன:

சுவாமிகள் உபதேசித்த கொள்கை நலம்.

(1) எண்ணுக் கடங்காத ஜாதிப் பிரிவினைகளை இயன்றவரை கலப்பு விவாகத்தால் ஒன்று படுத்தல். (2 அதிகமான விவாகங்களைத் தடுத்தல் "ஒவ்வொரு பிச்சைக்காரனும் விவாகம் செய்து கொள்ளுகிறான்; தேசத்தில் பின்னும் பத்து அடிமைகளை விருத்தி செய்கிறான்; ஆகையால் அநேகர் பிரம்மச்சரிய ஆஸ்ரமத்தை ஏற்கவேண்டும்" என்று சுவாமிகள் புகன்றுளார். (3) பாமரஜனங்களைப் பாக்கியவான்களாக்கிக் கல்வியூட்டி அவர்கள் ஸ்திதியை உயர்த்துதல். "தத்துவம் போதிப்பதற்கு முன் வயிற்றிற்கு உணவளி" என்பது சுவாமிகளின் உபதேசம். (4) சுலபமான வழிகளிலே சம்ஸ்கிருத பாஷா ஞானத்தை பாவச் செய்தல். இது விஷயமாகச் சுவாமிகள் பண்டிதர்களையும் பிராம்மணர்களையும் கேவல பாவத்தோடு நடத்தாதிருக்கும்படி எச்சரிக்கை செய்து அவர்களே சம்ஸ்கிருத மொழித் தேர்ச்சியைக் காத்து வருகிறார்களென்றும், அவர்கள் அவ்வாறு செய்யாதுபோனல், சம்ஸ்கிருத பாஷையே இருந்தவிடந் தெரியாமற் போயிருக்குமென்றும் உணர்த்தினர். (5) திடதேகத்தையும் ஆழ்ந்த யோசனையு முடையவர்களைப் பெருக்கத் தக்க தேசீயக் கலாசாலைகளை ஆரம்பித்து நடத்துதல். "புருடர்களை

விருத்தி செய்யும் சர்வகலாசாலைகள் நமக்கு வேண்டும்; அதன்கண் மாணவர்களும் உபாத்தியாயர்களும் சதாசார சம்பன்னர்களாய் வித்யாபி விருத்திசெய்து வர வேண்டும்' என்பது சுவாமிகளின் நோக்கம். (6) தன் சுயமரியாதையைக் காக்கவும், அதனால் அகமும் புறமும் நம்பிக்கைகள் வளரவும் பாடுபடுதல். (7) அபிப்பிராய பேதங்களை அறவே களைந்து அனைவரிடத்தும் அன்பும் ஒற்றுமையும் நிலவப் போதித்தல். (8) அநேக இளைஞர்களை ஹிந்து மதப் பிரவர்த்தகர்களாகத் தயார் செய்து மேல் நாடுகளுக்கனுப்பி, அவர்களது ஆராய்ச்சி முறைகளையும், பொதுநல வாழ்வையும் அறிந்து வருமாறு ஏற்பாடு செய்தல் ஆகியவைகளாம். சுவாமிகள் இங்ஙனம் பிரபல உபந்நியாசங்களின் வாயிலாகத் தமது கொள்கைகளை இமயம் முதற் குமரிவரை பரவுமாறு எடுத்தோதி தமது "வட இந்திய சுற்றுப் பிரயாண"த்தை முடித்துக்கொண்டு நேரே கல்கத்தாவிற்குத் திரும்பினர்.

43-ம் அத்தியாயம்

பக்திப்பிரபாவ சம்பிரமங்கள்.

ஞானப்பிரகாச வள்ளலாகிய சுவாமிகளுடைய ஜீவ்ய காலத்தின் அடுத்த பகுதி அதாவது 1898-ம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் அக்டோபர் மாதம் வரையிலாகும். இக்காலம் கல்கத்தாவிலும், அலம்பசாரிலிருந்து கங்கையின் மேற்குக் கரையிலுள்ள பேலூரின்கண் விளங்கும் நீலம்பர் முகர்ஜி அவர்களின் சோலைக்கு மாற்றப்பட்ட ஸ்ரீராமகிருஷ்ண மடத்திலும் கழிந்தது. ஜனவரி மாதத்தில் சுவாமிகள் காண்டவத்திலிருந்து புறப்பட்டுக் கல்கத்தாவுக்குச் சென்றார்; பிறகு மார்ச்சு மீ 30உ கல்கத்தாவிலிருந்து தார்ஜீலிங்குக்கு உடல் நலத்தைக் கருதியேகி மே மீ 3உ திரும்பவும் கல்கத்தாவுக்கு வந்தார். மே மீ 11உ தமது குருபாய்கள், ஐரோப்பிய இந்திய சிஷ்யர்கள் முதலியவர்களுடன் பிரயாணமாகி அல்மோராவுக்குச் சென்றவர் மீண்டும் ஜுன் மீ 10உ தான் கல்கத்தாவிற்குத் திரும்பினர். ஜுன் மீ 20உ சுவாமிகள் தம் சிஷ்யர்களுடன் காஷ்மீரை யடைந்து அக்டோபர் மாதம் வரை அங்கிருந்தார். பின் லாகூர் வரை சென்று அங்கிருந்து கல்கத்தாவுக்குப் பிரயாணமாகித் தமது ஐரோப்பிய சிஷ்யர்களுடன் அக்டோபர் மீ 8உ வந்து சேர்ந்தார்.

கல்கத்தாவுக்கு வருகை.

சுவாமிகள் கல்கத்தாவி லிருந்தபொழுது தொடர்ச்சியாகச் சிஷ்யர்களைப் பழக்குவதும், தம்மைப் பரிவுடன் அழைக்கும் பக்தர்க ளில்லங்களுக்குப் பாங்குடன் சென்று வருவதும், அல்லும் பகலும் வரும் அன்பர்களுக்குக் களைக்காமல் உபதேசிப்பதுமா யிருந்தார்; சந்நியாசிகளையும், பிரம்மச்சாரிகளையும் பழக்குவதும் அனைவரையும் யோகாப்பியாசம் செய்யத் தூண்டுவதும், சங்கீதப் பயிற்சி செய்வித்துச் சங்கீர்த்தனத்தில் ஈடுபடுத்துவதும், வாசிப்பதும், கடிதங்களுக்குக் கருத்துடன் விடை யெழுதுவதும், கதை சொல்லுவதுமான பல அலுவல்களிற் சார்ந்திருந்தார் சிலவேளை, பகவத்கீதை, உபநிடதம், வேதாந்த விசாரம், பிரம்ம சூத்திரங்கள் முதலியவற்றைப் பற்றிய விரிவுரைகள் நிகழும்; சில சமயம் தர்க்க வகுப்புக்கள் நடைபெறும். இவ்விதம் பல வேலைகளுக்கிடையே கும்பாபிஷேகம் நிகழ்ச்சியொன்று நடந்தது.

அதாவது, ஸ்ரீ ராம கிருஷ்ணரின் மெய்யடியார்களில் ஒருவரான பாபு நாபா கோபால் கோஷ் அவர்கள் ராம கிருஷ்ண புரியிலுள்ள தமது கிருகத்தில் ஸ்ரீ ராம கிருஷ்ண பூஜாக்கிரக மொன்றை வெகு நேர்த்தியாகக் கட்டி, அதில் ஸ்ரீ ராம கிருஷ்ணரின் சிலையைப் பிரதிட்டை செய்யும் பொருட்டு, சுவாமிகளையும், குருபாய், சிஷ்ய, பிரம்மாச்சாரிகளையும் அழைத்தார். அவ்வண்ணமே பிப்ரவரிமீ 6வ பௌர்ணமி தினத்தன்று, படகுகளை அமர்த்திக் கொண்டு, கங்கையைக் கடந்து பாகீரதிக் கரையிலிருந்து பஜனை செய்துகொண்டே நாபா கோபால் பாபுவின் இல்லத்தை அனைவரும் எய்தினர், சுவாமிகள் அவர்களிடையே சாதாரணமான காவியாடை பூண்டு மத்தளத்துடன் ஆனந்த பாவசராகி ஆடிப் பாடிக்கொண்டே செல்வதைக் கண்ட ஆயிரக் கணக்கான ஜனங்கள் 'ஆஹா! என்ன அடக்கம்! எவ்வளவு அழகும் அன்பும் நிறைந்த வதனம்! என்று போற்றலாயினர். சுவாமிகள் தமது சங்கீர்த்தன கோஷ்டியுடன் அப் பரம பாகவதோத்தமரின் கிருகத்தில் நுழைதலும் சங்கமும் துந்துபிகளும் ஒலித்தன. பாபு, சாதுக்களின் திருவடிகளை சோதித்து, அந்த தீர்த்தத்தைச் சிரசில் புரோக்ஷித்துக் கொண்டு உள்ளே அழைத்துச் சென்றார். அவ்வன்பர், பளிங்குக் கற்களாற் அமைத்திருந்த பூஜாக்ருகத்தைப் பார்த்துப் பார்த்து சுவாமிகள் ஆச்சரியப்பட்டார். அப்பொழுது அவ்வீட்டிலிருந்த மூதாட்டி

பாபுநாபா கோபால்கோஷ் இல்லத்தின்கண் கும்பாபிஷேக விழா.

"சுவாமிகளைப் பார்த்து ஏழையேங்கள் நிருமித்த இக்கோயிலுக்கும் ஸ்ரீராமகிருஷ்ணர் எழுந்தருள்வாரோ?" என்று இரங்கிக் கூறச் சுவாமிகள், "தாயே! எங்கள் குருநாதர் இதைப்போன்ற பளிங்குத் தரையை கண்ணுற்கூட பார்த்திருக்க மாட்டார்! குடிசையிற் பிறந்த அவர் குடிலையே மாளிகையென்று மதித்த மாதவச் செல்வர்! இந்தப் பரிபூர்ண பக்தரில்லத்தில் அவர் வசிக்கா விட்டால் இதைவிடச் சிறந்த இடம் அவருக்கு வேறு எங்கு கிடைக்கும்?" என்று பதிலுரைத்து விட்டு குருதேவரின் விக்ரஹத்தின் முன்னமர்ந்து சுவாமி பிரகாசானந்தர் பிரதிட்டை மந்திரங்களைச் சொல்லி வர, கண்களை இறுக மூடிப் பின்வரும் ஸ்லோகத்தைச் சொல்லிப் பிரதிட்டை செய்தார். அதாவது:

ஓம் ஸ்தாபகாய ச தர்மஸ்ய ஸர்வதர்மஸ்வரூபிணே
அவதாரவரிஷ்டாய ராமக்ருஷ்ணாய தே நம:||

(பொருள்) "ஹே ராமகிருஷ்ண தேவா! சமயோத்தாரண சம்பன்ன மூர்த்தி! சர்வமத தாத்பர்ய ரூபீ! அவதாரங்களிற் சிறந்த விளக்கே! உனக்கு மங்களம்"

சுவாமிகள் இக்காலமெல்லாம் தமது சிஷ்யர்களையும் குருபாய்களையும் சேவையில் பழக்குவதும், கல்வி புகட்டுவதும், சைவ வைஷ்ணவ சமய தாத்பரியங்களை அறிவுறுத்துவதும், தர்க்க வியாகரண நூல்களைக் கற்பிப்பதும், வேத வேதங்களை விளக்கிக் காட்டுவதுமாக ஆயத்தப் படுத்தி வந்தார். அவ்வாண்டில் (1898) அவர் கங்கா தீரத்தில் பேலூரில் சுமார் பதினைந்து ஏகர் விஸ்தீரணமுள்ள ஓர் பெரிய புறம்போக்கு பூமியை, அதிலிருந்து ஓர் சிறு கட்டட முள்படவிலைக்கு வாங்கினார். அது பொரநாகூருக்கு எதிர் கரையிலுள்ள இடம். இதற்குப் பெரும்பாலும் சுவாமிகளின் ஆப்த சிஷ்யையான மிஸ். ஹென்றியதா. எப். முல்லர் கொடுத்த நன்கொடையே உதவுவதாயிற்று. 1898-ம் ஆண்டின் ஆரம்பத்திலேயே இந்த இடம் வாங்கப் பெற்றதாயினும் 1899-ம் ஆண்டு ஜனவரி மாதத்திற்றான் நிரந்தரமாக மடம் ஸ்தாபிக்கப்பட்டது. இதற்குக் காரணம் அந்த பூமி செம்படவர்களால் வெட்டப்பட்டு மேடுபள்ளமா யிருந்தமையே யாகும். தவிர, அங்கு ஏற்கனவே இருந்த பழைய கட்டடத்தைச் செப்பஞ் செய்ய வேண்டி யிருந்தது. சுவாமிகள் தாம் லண்டனிலிருந்து கொண்டு வந்த

பேலூர் மடம்.

பொருளைக்கொண்டு அக்கட்டடத்தைச் செப்பனிட்டு மேல்மாடி யொன்றையும் கட்டி முடித்தார். இதன் பின், மிஸ். ஒலிபுல் அம்மை யனுப்பிய திரவியத்தைக் கொண்டு ஸ்ரீராமகிருஷ்ண ஆலய மொன்றை யும் அமைத்து நிதியையும் ஏற்படுத்தினார். சுவாமிகள் ஸ்ரீராம கிருஷ்ண மடத்திற்கு ஒரு லக்ஷ ரூபாய்க்குமேல் சாஸ்வத மூல தனத்தை ஏற்படுத்திய பிறகு ஏதோ தம்மீதிருந்த ஒரு பெரிய பாரம் குறைந்து விட்டதுபோல மனவமைதி யடைந்தார்.

சிவராத்திரி விழாவும், அதற்கு மூன்றுநாள் கழிந்தபின் ஸ்ரீராம கிருஷ்ண தேவரின் ஜன்ம திதியும் நெருங்கிவர நீலாம்பார் முகர்ஜியின் தோட்டத்திலிருந்த ஆஸ்ரமத்தில் பக்தர்களெல்லோரும் கூடிவிட் டார்கள். சுவாமி சாரதாநந்தரும் அப்பொழுது அமரிக்காவிலிருந்து வந்து சேர்ந்தார்; சுவாமி சிவானந்தர் இலங்கை யில் வேதாந்த பிரசாரம் செய்து திரும்பினார்; சுவாமி திருகுணாதீதர் பஞ்ச நிவர்த்தி வேலையைக் குஞ்சரம்போல முடித்துவிட்டு மீண்டார். சுவாமிகளுடைய நியமனப் படி சிவராத்திரியன்று பிற்பகலில் எல்லா சந்நியாச குருபாய்கட்கும், அவரவர்கள் செய்த சேவையைப் பாராட்டி வந்தனோபசாரப் பத் திரங்கள் வாசித்துத் தரப்பெற்றன. அன்று சுவாமிகள் அக்கிரா சனம் வகிக்க, அப் பத்திரங்களுக்கு ஒவ்வொரு குருபாயும் முன் வந்து பதிலளித்தார்கள். சுவாமி திருகுணாதீதர் துரிதமாகவும் இனிமையாகவும் பேசினார். அதன்பின் ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸ தேவரின் ஜன்மதினத் திருவிழா, சுவாமிகளின் நேர்ப் பார்வையில் வெகு சிறப்பாக நடைபெற்றது. சுவாமிகள், பூணூல்களை வர வழைத்து வைத்துக்கொண்டு, அப்புண்ணிய தினத்தன்று மடத் திற்கு வந்த பிராமணரல்லாத தமது குருதேவரின் க்ஷத்திரிய வைசிய சிஷ்யர்கட்கெல்லாம் யக்ஞோபவீத மருளினர். அவ்வமயம் அவர் தமது பிராம்மண சிஷ்யரான சரத் சந்திரரைப் பார்த்துக் கூறியதாவது "நமது குருதேவரின் குழந்தைக ளனைவரும் பிராம்மணர்களே! வேதங்களும், க்ஷத் திரிய, வைசியர்கள், உபநயனத்திற் குரியவர்க ளென்று ஓதுகின்றனன. அவர்கட்கும் பிராமணர்களைப்போன்று கர்மானுஷ்டானங்கள் உண்டு. இன்று ஸ்ரீராமகிருஷ்ணரின் அவதார தினமாதலால் ஒவ்வொருவரும் பரிசுத்தராதற் குகந்தநா ளிதுவே யாகும். இதுவே பக்தர்கள் பூணூல் தரிக்கும் புண்ணியநாளாகும்.

ஓர் கூடுதல் விழா.

யக்ஞோபவீத மருளல்.

பாலர் வந்தன பூர்வமாகப்பேச, இருவரும் தத்தளித்துக் கொண்டு மெல்லக் குறித்த இடத்திற்குப் போய்ச் சேர்ந்தார்கள். அடைந்ததும், இருவரும் தத்தம் கால்களைச் சுத்தம் செய்துகொள்ளப் போனார்கள். தர்மபாலர் ஒரு செம்பை எடுத்துக் கால் கழுவப் போனதைக் கண்ட சுவாமிகள் கடிது சென்று, அவர் கையிலிருந்த செம்பைப் பிடுங்கி "தாங்கள் எனது அதிதி. உங்களுக்குத் தொண்டு செய்யும் உரிமையை நான் இழக்கமாட்டேன்" என்று சொல்லிக் கொண்டே அவர் பாதங்களைச் சோதிக்கப்போகுந் தருவாயில், சிஷ்யர்கள் சுவாமிகளைப் பொறுங்களென்று வந்து சூழ்ந்துகொண்டார்கள். அதற்குள் ஒரு சிஷ்யர் சுவாமிகளின் கரத்திலிருந்த செம்பைப் பிடுங்கியவண்ணம் "குருதேவா! நான் அப்பணியைச் செய்கிறேன். நீங்கள் எப்படி இதைச் செய்ய முன் வரலாம்? சிஷ்யர்களையெல்லாம் பார்த்திருக்க விட்டு நீங்கள் செய்வது நியாயமன்று!" என்று கூறித் தர்மபாலரின் கால்களைக் கழுவினார். அங்கிருந்தவர்க ளெல்லோரும் சுவாமிகளின் குணாதிசயங்களைக் கண்டு மகிழ்ந்தார்கள்.

சுவாமி ஸ்வரூபானந்தர், சுரேஸ்வரானந்தரின் தீக்ஷை விழா.

இக்காலத்தில் நிகழ்ந்த இன்னொரு முக்கிய சம்பவம் சுவாமி ஸ்வரூபானந்தர், சுரேஸ்வரானந்தர் ஆகிய இருவருக்கும் காஷாய மளித்ததாகும். இது மார்ச்சுமீ 29உ நடை பெற்றது. அதற்கு முன் சுவாமி சொரூபானந்தர் மடத்திற்கு மூன்றல்லது நான்கு தடவைகட்கு மேல் வந்தவரல்ல. அதற்குள் அவர் மன பரிபக்குவமடைந்து, சுவாமிகளிடத்தில் பரிபூர்ண நம்பிக்கை ஏற்பட்டவராய்ச் சகலத்தையும் வெறுத்து, சுவாமிகள் சொற்படி நடக்க உறுதி பூண்டு விட்டார். அத்தருணமே அவர் தம்முடன் மடத்திற்கு வந்திருந்த நேயர்கள் சிலரை நோக்கித் தாம் வீட்டிற்குத் திரும்பிவரப் போவதில்லை யென்ற செய்தியை அறிவித்து வரும்படி சொல்ல, அந் நண்பர்கள் ஸ்தம்பித்துப் போனார்கள். அவ்விதமே அவர் ஒழுகிக் காட்டினார். அவருக்கு இளமையிலேயே விவாகமாய் விட்டபோதிலும் அவர் அகப்புறப் பற்றுக்களை முற்றிலும் ஒழித்து நின்றவர்; களங்கமற்ற பிரமசரிய விரதம் பூண்டவர்; சமூக சமய சேவையில் விசேஷ தாபங் கொண்டிருந்தவர்; தமது எண்ணத்தை அவர் சுவாமிகளிடம் விண்ணப்பித்துக் கொள்ள, அவரும் உடனே இசைந்தார். இவரைப் பற்றிச் சுவாமிகள் பிற்காலத்தில் 'ஆயிரம் பவுன் கொடுத்தாலும் சொரூபானந்தரைப் போன்ற உத்தமர் நமக்குக்

கிடைப்ப தரிது' என்று போற்றியுள்ளார். இதற்கு அவரிடம் சுவாமி கட்கு ஏற்பட்ட நம்பிக்கையே காரணம். சுவாமிகள் அவருடைய சிறந்த சேவையை மெச்சிச் சில மாதங்களுக்குள் அவரை "பிரபுத்த பாரதா" பத்திரிகையின் ஆசிரியராக்கினர்; மேலும் அடுத்த ஆண்டில் இமயமலைப் பிராந்தத்தில் அத்வைத ஆஸ்ரமத்தை ஸ்தாபித்ததும் அவரை அதன் அமைச்சராக்கினர்.

ஐரோப்பிய பக்தைகள் காவி ஏற்றமை.

சுவாமி சொரூபானந்தருக்குக் காஷாய மளித்ததற்கு நான்கு நாட்களுக்கு முன்புதான் 'மிஸ். மார்காட் நோபிள்' என்னும் ஆங்கில மாது 'பிரம்மசாரிணி' ஆக்கப்பட்டு நிவேதிதாதேவி (ஆத்ம நிவேதனஞ் செய்தவள்) என்ற ஞானப்பெயரு மளிக்கப்பட்டது இச் சம்பவம் மிக்க விசேஷமாக நடைபெற்றது. ஏனெனின் அவள் தான் முதல் முதல் இந்தியாவுக்கு வந்து காஷாயந் தரித்த ஐரோப்பிய மாது சிரோன்மணி. மந்திர பூர்வமாகச் சடங்குகள் நடைபெற்றதும் சுவாமிகள் அவளையும் மற்ற இரண்டு அமெரிக்க நாட்டு சிஷ்யைகளையும் தமக்கு முன்பாக உட்காரச் செய்து, தாம் விபூதி, ருத்ராக்ஷம், புலித்தோல் முதலியன அணிந்து, சிவமூர்த்தமாக ஒருமணி நேரம் வரையில் சிவத்யானம் செய்து கீர்த்தனங்கள் பாடினர். இதுவன்றி இம் மேல்நாட்டு சிஷ்யைகளை ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸ தேவரின் தர்ம பத்னியான ஸ்ரீ சாரதாமணி தேவியார் பரிவுடன் 'எனது குழந்தைகளே!' என்று சொல்லி அழைத்துத் தழுவிய சம்பவமும்; மகா வைதீகப் பிராமண குலத்தைச் சார்ந்தவரும் கைமை விரதம் பூண்டு ஸ்ரீராமகிருஷ்ணருக்குப் பாதசேவை புரிந்து வந்த புனிதவதியுமான 'கோபாலர்-மா' வென்ற தாயானவள் இம் மேல்நாட்டு பிரம்மச்சாரிணிகளைத் தன்னோடு உண்பித்து வந்த சம்பவமும் மிக்க விசேஷமானவைகளாகும்.

சுவாமிகள, பஙபசார் விக்ஞான சங்கத்தில் மார்ச்சுமீ 21உ நடைபெற்ற கூட்டத்திற்கும், மாகதப் பிரசங்கசாலை (Emerald Theatre)யில சுவாமி சாரதானந்தா எங்கள் அமெரிக்க சேவை' என்பது பொருளாக உபந்நியாசித்த கூட்டத்தில் அக்கிராசனம் வகிப்பதற்கும், மார்ச்சுமீ 11உ 'நட்சத்திர நாடகசாலை' (Star Theatre) யில் சகோதரி நிவேதிதா தேவி 'இங்கிலாந்தின் ஆத்மஞானத்தின் பெருமிதம்' என்று பிரசங்கித்த காலையில் அவைத்தலைமை வகிப்பதற்கும்- ஆகிய இம்மூன்று தடவைகளைத் தவிர கல்கத்தாவின் வேறு எந்த

பொது ஜன கூட்டத்திற்கும் வாவில்லை. சகோதரி நிவேதிதா தேவி யின் மேற் குறித்த பிரசங்கத்தில் சுவாமிகள் தமது முன்னுரையில் தேவியை சபையோர்க்கு அறிமுகப் படுத்த எழுந்து 'இந்தியாவுக்கு இங்கிலாந்து தந்தருளிய ஓர் பெருநிதி' யென்று சிறப்பித்தார். அப்பொழுது தேவி பேச வாரம்பித்து "உள்ளதை என்றும் காப்பாற்ற வேண்டுமென்னும் யதார்த்தக் கொள்கை, கடந்த ஆறுயிர மாண்டுகளாக உங்களிடத்தே யிருக்கின்றது. மேலும், எவ்வளவோ நீண்ட காலமாக அக் கொள்கையை அனுஷ்டானத்திலிருந்து கைநழுவ விடாமலிருக்கும் தன்மையுடன், மேலான ஆத்மஞான நிதியை லோகோபகாரார்த்தமாக பத்திரப் படுத்தி வைத்திருக்கும் சீலமுள்ள மகா ஜனங்களையுடைய நாடு இந்தியாவே யாகும். தலையில் தீப்பிடித்துக் கொண்ட காலத்தில் அதனை யவிக்க விரைபவனைப் போன்ற சேவாதாபத்துடன் நான் இந்தியத் தாய்க்குத் தொண்டுபுரிய வந்ததன் காரணம் இதுவே யாகும்" என்றியம்பினுள். தேவி பேசி முடித்ததும் ஸ்ரீமதி ஒலிபுல் எழுந்து மேல் நாட்டா ருள்ளத்தில் ஹிந்துமத உணர்ச்சி உறுதியாகப் பதிந்து விட்டதென்றும், அதிலும் சுவாமிகள் எழுதியுள்ள நூல்களனைத்தும் அமரிக்காவில் ஒவ்வொரு வீட்டிலும் வைத்துப் படிக்கப் படுகின்றன வென்றும் உரைத்தாள். பின்னர் மிஸ். முல்லர் அம்மை எழுந்து சபை யோரை "எனதருமை நண்பர்களே! சுதேச வாசிகளே! நானும் மற்ற ஐரோப்பிய சிஷ்யைகளும் இந்தியாவுக்கு வரும்பொழுது ஏதோ அந்நிய நாட்டிற்குச் செல்லுகிறோம் என்ற எண்ணம் எங்களுக்கு உதிக்க வில்லை. இதுவே, தெய்வீகத்திற்கும், மெய் யறிவிற்கும், சமயத்திற்கும், எங்கள் தாயகமா யிருக்கின்றது. விவேகானந்த சுவாமிகள் தாம் எங்கள் தேசங்களில் லியற்றிய காரியங்களைப் பற்றி உங்களிடம் வெகு சிறிதாகவே கூறியுள்ளார். ஆனல், அவருடைய விஜயத்தில் எங்களுடைய நாட்டில் எவ்வளவு சீர் திருத்தங்களையும், மாறுதல்களை யும், சமூகத்திலும், ஆசார அனுஷ்டானங்களிலும் புகுத்தி யிருக்கிறுரென்பதை அவர் அதிகம் அறியார். அவர் பிரசங்கிக்கக் கேட்டு பாக்யவந்தர்களாய் தம் வீடுகள் தோறும் அவர் படத்தை வைத்து ஆராதித்து அவருடைய உபதேசப்படி ஒழுகி வருகின்ற குடும்பங்கள் இன்று மேல் நாடுகளி லனந்தம். அவருடைய இனிய தொனியோடு

கல்கத்தாவில் நடைபெற்ற பெரிய பிரசங்கங்கள்.

மிஸ். முல்லரின் பிரசங்கம்.

கூடிய உபதேசங்களை நாங்கள் கேட்டது மட்டுமல்ல; இதுவரையி லும் நாங்கள் அறியாமலிருந்த பேருண்மைகளை நாங்கள் தெரிந்து கொண்டது மட்டுமல்ல; நாங்கள் அவற்றை உள்ளங்கனிய உணர்ந் தோம்; எங்கள் வீடுகளிலும் தாய்மார்கள், தந்தையார், புதல்வி புதல்வர்கள் உள்ளத்திலும் நீங்கள் பல்லாயிரக் கணக்காகப் பாது காத்து வைத்திருக்கும் நிதியை விருத்தி செய்து அனுஷ்டிக்கச் செய் திருக்கிறோம்." எனச் சொன்மாரி பெருக்கிப் பலத்த கரகோஷத்தி னிடையே யமர்ந்தாள். பின்னர் சுவாமிகள் எழுந்து இனித் தாம் செய்ய வேண்டிய வேலையைப்பற்றிக் கவனிப்பதுதான் அவசியம் என் றும், மேல் நாட்டாரைப்போல் சத்தை கிரஹித்து விருத்தியடைய நாம் முற்படுவோமானால், அது முதல் பாரத தேவியின் வதனத்தில் மங்கிப் போயிருக்கும் ஒளியை மட்டும் உண்டாக்கலாமென்று இவற் றிற் கெல்லாம் முக்கியமாகச் சிரத்தை வேண்டுமென்று புகன்று "மனுஷ்யா! உன்னையே நீ நம்பு. கடவுளிடத்தில் நம்பிக்கையைப் பெருக்குவதற்கு அதுவே வழி. சிறந்த ஞானத்தை உணர்த்துவதே என்னுடைய நோக்கம். முடிவற்ற நம்பிக்கையே எல்லையற்ற அவா வைப் பூர்த்தி செய்யும். அவ்விதிகளில் நமக்கு நம்பிக்கை ஏற்படுமா

மனிதனே எழு!

யின் நமது தேசீய வாழ்வு வியாஸ - அர்ஜுனர் காலத்தை யொத்து சர்வாபீஷ்டப் பூர்த்தியுடன் விளங்கும்" என்று கூறி வங்காள வாலிபர்களைக் குறித்து "நீங்கள் ஏழைகளாயினும் எழுமின்! ஏழைகளே எழில் மிக்க பென்னம் பெரிய கார்யங்களைச் சாதித்தவர்கள். இந்தியாவின் எழிலோங்கத் தூய்மை என்னும் கோட்டையைக் கட்டி நேர்மை யென்னும் அகிழ்வெட்டி, உறுதி என்னும் தூண்கள் நாட்டி, சீல மென்னும் செங்கல் கூட்டி அஞ்சாமை யென்னும் சுண்ணம் சேர்த்து, குணமென்னும் கோபுர மெடுத்துச் சமத்வ மென்ற சங்கம் ஊதி, அருள் என்னும் முரச மொலிப்ப வெற்றியே என்னும் விளங்கச் செய் யுங்கள்" என்று கம்பீரமாகப் பேசி முடித்தார்.

மறுபடியும் சுவாமிகள் மார்ச்சுமீ 30உ தமது தேகாரோக்கியத் தைக் கருதி தார்ஜிலிங்குக்குப் போனார். வைத்தியர்களுடைய நல் லுரைக் கிணங்க, அவர் அதிகம் வாசிக்காமலும், பேசாமலும், மூளைக்கு வேலை கொடுக்காமலும் வாசித்து வந்தார். இப்படி அவரு டைய தேக நிலை பாதியளவு குணமாகுமுன், கல்கத்தாவில் 'பிளேக்' வியாதி பாவி விட்டதென்ற செய்தி திடீரென்று இடி யொலிபோல்

அவருக்கு எட்டவும் அவர் கணமுந் தாமதிக்காமல் புறப்பட்டு மேமீ 3 - ம் தேதி கல்கத்தாவுக்கு வந்து சேர்ந்தார். கல்கத்தாவின் நிலை பயங்கரமானதா யிருந்தது ஜனங்கள் அலங்கோலமாகிப் பரிதவித் தார்கள். சுவாமிகள் கல்கத்தாவை யடைந்ததும் ஹிந்தியிலும் வங் காளியிலும் பிளேக் நிவாரணப் பொருளுதவி விண்ணப்பங்களைத் தயார் செய்தார். நோயால் அலங்கோலமாய்த் துன்பப் படுவோரை ரக்ஷிக்க, ரக்ஷணார்த்த நன்கொடை வசூலிக்க ஏற்பாடுகள் செய்தார்.

கல்கத்தாவில் 'பிளேக்' கொடுமை.

அவ்வமயம் ஒரு குருபாய், சுவாமிகளைப் பார்த்து 'இதற்கெல்லாம் பொருளுக் கென்ன செய்வது ?' என்று வினவ சுவாமிகள் 'ஏன் ? அவசியமானால் இப்பொழுது வாங்கின பூமியை விற்று உபயோகிப் பது ! நாம் சந்நியாசிகள் ! முன்போல இராந்துண்டு மா நிழலில் படுத் துத் தூங்க எப்பொழுதும் தயாரா யிருப்பவர்கள் தானே ! அதை விற்று, கண் முன்பாகக் கஷ்டப்படும் ஆயிரக் கணக்கான ஜனங்களைக் காப்பாற்றாமல் நமக்கு மடமென்ன ! மற்றவைதா னெதற்கு? ' என் றார். சுவாமிகள் அவ்விதமே விற்றிருப்பார். அதற்கு அவசியம் ஏற் படவில்லை; எவ்வளவோ நன்கொடைப் பொருள் வந்து விரைவில் குவிந்து விட்டது. அவற்றைப் பிளேக் காலச் சட் டப்படி கூடாரங்கள் அமைத்து உணவுப் பொருள்க ளளித்துப் பலவிதத்திலும் உதவி, மக்களைக் காப் பாற்றினர். சிஷ்யர்கள், குருபாய்களோடு பல தொண்டர்களும் நிவாரண வேலை செய்தார்கள்; இதனால் ஜனங்களுக் குச் சுவாமிக ளிடத்திருந்த அன்பு மேன் மேலும் பெருகிற்று.

சுவாமிகளின் கஷ்ட நிவாரண வேலை.

இவ்விதம் கல்கத்தாவில் பிளேக் நிவாரணை வேலை செய்து அந் நோய் முற்றிலும் நீங்கி, ஜனங்கள் மீண்டும் தத்தம் இல்லங்களில் நிம்மதியாய் வசிக்கும்படியான சௌக்கியங்கள் ஏற்பட்டதும் சுவாமி கள் முன்பே யோசித்திருந்தபடி சில சீடர்களுடன் இமய மலைக்குப் பிரயாணமானர். சேவியர் தம்பதிகள் ஏற்கனவே இந்தியா முழுவதும் யாத்திரை செய்து சிம்லாவில் வந்து கொஞ்சகால மிருந்து விட்டு இப்பொழுது அல்மோராவுக்குப் போயிருந்தார்கள். அவர்கள் விண்ணப்பத்திற் கிணங்கச் சுவாமிகள் நைநிதால் வழியாக அல்மோராவுக்குப் புறப் பட்டார். அப்பொழுது சுவாமிகளுடன் சுவாமி துரியானந்தா, நிரஞ் ஜனனந்தா, சதானந்தா, சொருபானந்தா, ஸ்ரீமதி ஓலிபுல், ஸ்ரீமதி

அல்மோராவுக்குப் பிரயாணம்.

பாடர்சன் (Paterson), சகோதரி நிவேதிதாதேவி, மிஸ். ஜோசபைன் மெக்லியோட் முதலியவர்கள் சென்றார்கள். தாம் புறப்படும் நிமிஷம் வரையில் சுவாமிகள் கல்கத்தாவிலிருந்த வேலைகளை யெல்லாம் கவனத்துடன் ஒழுங்கு செய்து கொண்டிருந்தார். மறுபடியும் அவர் உடல் நலம் பாதிக்கப் பட்டமையால் தான் அல்மோராவுக்குச் செல்ல நேர்ந்தது. இத்தகைய 'பக்திப் பிரபாவ சம்பிரமங்க'ளி னின்றும் சுவாமிகளுடைய திவ்ய குணாதிசயங்களும் மகிமைகளும் நன்கு விளக்கமாகும்.

---

44 -ம் அத்தியாயம்.

ஐரோப்பிய பக்தர்களை ஆயத்தம் செய்த விதம்.

இங்ஙன மிருக்கத் தமது குருதேவரின் அவதார திவ்ய தேசத்தைத் தரிசிக்கவும், புண்ணிய நதிகளில் நீராடி, அன்பர்களோடு அளவளாவிப் பழகி, ஐயனுடைய அமிழ்தினு மினிய உபதேசங்களை யடையவும் அமெரிக்காவி லிருந்து வந்த ஸ்ரீமதி ஒலி புல்லும், மிஸ் ஜோஸபைன் மெக்லியோட்டும் பேலூர் மடத்தின் பிரதேசத்திலே யிருந்த பழைய ஆஸ்ரமத்தில் வசித்து வந்தார்கள். மகா உத்தமியான மிஸ். மார்கரட் நோபிகளும் சுவாமிகளிட்ட உத்தரவைச் சிரமேல் வகித்துத் தமக்குள்ள ஆங்கில நாட்டுச் சம்பந்த மனைத்தையுந் துறந்து, பெண் கல்வி சேவையிற் பெரிதும் அவாவுடையவளாய் ஜனவரிமீ 28உ இந்தியாவை யடைந்தாள். சுவாமிகள் இவர்களைப் பரிவுட னேற்றுச் சேவைக்குரிய வழிகளில் இந்தியர் பழக்க வழக்கங்களைப் பற்றிக் கூறிப் பழக்கி வந்தார். அப் பழக்கத்தின் பயனாய் சுவாமிகளின் பரமோத்தமமான கொள்கைகளை அவ்வம்மணி, தனது உரை யெழுதும் வன்மையால் அகில மெங்கும் பரவச் செய்தாள்.

நிவேதிதா தேவியின் அரிய சமயத்தொண்டு.

சுவாமிகள் நீலம்பர் முகர்ஜியின் உத்யானவனத்தில் வசித்து வந்தபோது, தினந்தோறும் பேலூர் ஆஸ்ரமத்திற்குச் சென்று, தமது ஐரோப்பிய சிஷ்யைகளைச் சந்தித்து அவர்களுடன் விருக்ஷத்தி னடியில் விமரிசையா யமர்ந்து உபதேசம் செய்து திரும்புவது வழக்கம். இவ்விதம் மேல் நாட்டுச் சிஷ்யைகள் புராண, இதிகாச சாஸ்திர ஞானம் அடைந்தார்கள்.

சுவாமிகள் உபதேசம் செய்யும் முறையே வெகு அபூர்வமா யிருக்கும்; சிஷ்ய கோடிகளின் உள்ளத்தைச் சீலமுடன் கவரும்; அவர்கள் அதில் ஐக்கியமாகி விடுவார்கள். அவர் புராணங்களே ஹிந்து மதத்தின் புதையலென்று புகல்வார்; கருணைமிகுந்த சுலோகங்களை யெடுத்துக் கந்தருவரும் மயங்கப் பாடுவார்; உமை சிவ சொரூபங் களைப்பற்றி இன்று ஒருரை பகர்வார்; நாளைக் காளி தேவியைப் பற்றிய கற்கண்டுப் பாகைச் செவிகளி லூற்றுவார்; ராதையாகிய ஜீவாத்மாவும், கிருஷ்ணனாகிய பரமாத்மாவும் ரமித்த லீலாவிபூதியை ரஞ்சிக்கப் பேசுவார். சாஸ்திரீயம், சங்கீதம், சரித்திரம், தேசீயம் ஆகிய விஷயங்களும் இடை யிடையே உபதேசிக் கப்படும். அவற்றிலெல்லாம் அத்வைத ஞானம் அரும்பி நிற்கும். பக்தி, ஞானம், பாவித்தை, மோக்ஷ சாதகம், ஜீவகாருண்யம் என்னும் விஷயமாகவே உரைக ளெல்லாம் நிகழும். அவர் சொல்லும் சொற்களிலெல்லாம் ஓர் சொரூபச் சுவை தோன்றும். அவரைக் காண்பதும் ஆநந்தம்; அவ ருடன் பேசுவதும் ஆநந்தம். அதனாற்றான் அவருக்கு ஆநந்தமென்ற அருமைப் பெயர்.

உபதேசப் பிரபாவம்.

இந்நாட்களில் சுவாமிகள் தமது கொள்கைகளையும் நோக்கங்களை யும் பிரதமமான சில சிஷ்யர்களிடத்தில் ஆவாகனஞ் செய்து வந் தார். இந்துக்களுடைய மதானுஷ்டானங்களின் உட் கருத்துக்களை உணரமாட்டாதவர்களாய்த் தாமே சர்வக்ஞர்களென்று வாய் மதம் பிடித்துப் பேசி ஹிந்துக்களைத் தூற்றும் பான்மையுள்ள சில ஐரோப் பிய சமயானுசாரிகளின் மூடப் பிடிவாதத்தையும், ஸ்வதேசத்தில் ஜாதிப் பிரிவினையால் போர் தொடுத்து நிற்கும் மக்களின் ஆபாஸ விப ரீதப் போக்கையும் பார்க்கப் பார்க்க அவருள்ளம் பதறிற்று. ஆதலின் அவர் சுத்த நிர்க்குண புத்தரைப் போன்றெழுந்தார்; தர்ம ஸ்தாபனத் தில் வியாபித்தார். ஐரோப்பிய சிஷ்யர்களைப் பழக்குவது தான் அவ ருக்குச் சற்று சிரமமா யிருந்தது. ஹிந்துக்களுடைய மதக் கோட் பாடுகளின் உட்கருத்துக்களையும், ஈஸ்வர பூஜாக் கிரமங்களையும் அவர்கள் கிரகிப்பதில் கொஞ்சம் சிரம மேற்பட்டது. அவர்கள் கற்கண்டுக் கட் டியா யிருந்தார்கள்; ஆநந்த உபதேச மென்னும் அமிர்தமாகிய ஊற்று சுரக்கவே, அவர்கள் உள்ளமும், உடலும் உருக உத்தமரானார்கள். சுவாமிகள் சற்றும் களைக்காமல் அவர்களுக்

சுவாமிகளின் மேலான உத் தேசம்.

கூத் திருப்தியும் சம்மதமும் ஏற்படும் வரையில் உபதேசித்து வந்தார். மேற்கையும், கிழக்கையும் ஒன்றாக்க வேண்டுமென்பது அவரது மேலான உத்தேசம். அது நிறைவேறியே தீர்ந்தது. கொஞ்ச காலத்திற்குள் ஐரோப்பிய சிஷ்யர்களும், இந்திய சிஷ்யர்களும் ஏகமாய் மனோபாவம் ஒன்றாகி, ஒரு குடும்பத்தினர்போல், சகோதரர்களைப் போல் உண்பதிலும், உடுப்பதிலும், பேசுவதிலும், அனைத்திலும் திருந்தி விட்டனர். அம் மேல்நாட்டுச் சிலர்கள் சுவாமிகளிடம் ஞானோபதேசம் பெறுங்கால், எல்லா விதத்திலும் அவர்கள் இந்தியாவுக்குப் புதியவர்களாதலால், சுவாமிகள் கூறும் விஷயங்கள் பல தடவைகளில் விளங்காமலிருக்கும். அப்பொழுது அவர்கள் திரும்பத் திரும்ப, சந்தர்ப்பமும் சம்பந்தமும் இல்லாமல் குறுக்கிட்டுச் சந்தேகங் கேட்பார்கள். சுவாமிகள் பொறுமைசாலியும், விவேகியுமாதலால் அவர்களுக்கு விஷயங்களை எப்படி எடுத்துச் சொன்னால் விளங்குமோ அதை யறிந்து புகட்டுவார்.

ஐரோப்பிய சிஷ்யர்களை இந்திய சமய நெறிகளிலும், வாழ்க்கையிலும் பழக்குவிப்பதற்கு அவர் பட்டபாடு கொஞ்ச நஞ்சமன்று. தம்மையே நம்பி, நாட்டையும், ஏனைய நலங்களையும் துறந்து வந்த அவர்களுக்குத் தாம் உத்தரவாதி என்பதை அவர் உணர்ந்தார். இந்திய உணவும், உடையும், உறவும், கொள்கைகளும் அவர்களுக்குப் புதிதாக ஏற்படவேண்டி யிருந்தது. இங்கிலாந்தில் அவர் வசித்த நாட்களில், ஹிந்து மதத்தின் தீர்க்க தரிசியாய் பல்கோடி நூறாயிரமாண்டு தொன்மைத்தான ஹிந்து மதத்தின் தர்மங்களைத் தெளிவாக எடுத்துரைத்தார்; மனிதன் அஞ்ஞான வலையினின்றும் விடுபட்டு, மெய்ஞ்ஞான மடைந்து வாழும் மார்க்கத்தைப் புகட்டினார்; சமயானுசாரிகளுக்குள் அன்யோன்ய பாவமும் சகோதரப் பற்றும் நிலவ வேண்டியது அவசியமென்று கூறினார்.

ஐரோப்பிய சிஷ்யைகளைப் பழக்கப்பட்ட அரும் பெரும் பாடுகள்

இந்தியாவில் அவ்வாறல்லாமல் தேசாபிமானியாகவும் பாஷாபிமானியாகவு மிருந்து மதோத்தாரண வேலையைச் செய்ய வேண்டியது அவசியமா யிருந்தது. மதஸ்தாபகர்களில் எவர் தாம் இடையூறின்றித் தமது கொள்கைகளை நிலை நாட்டினர். அப்பர் சுவாமிகள் எவ்வளவோ துன்பங்களை அனுபவிக்க வில்லையா? அதுபோலச் சுவாமிகளுடைய நோக்கங்களை எத்தனையோ பேர் தாக்கிப் பேசினார்கள். அவர்களை யெல்லாம் சுவாமிகள் பொருட்படுத்தாது, பகவானையே முற்றிலும்

நம்பி, புகழையோ பொருளையோ மறந்தும் நினையாத மனமுடையவராய், தமக்கு இடை யிடையே நேர்ந்த தேக உபாதியையுங் கருதாது பாடுபட்டு வந்தார். பாரத நாட்டு ஸ்திரீ ரத்னங்களைப் பரிதாப நிலையினின்றும் உயர்த்தச் சகோதரி நிவேதிதா தேவியே தக்கவளென்று சுவாமிகள் நம்பி அவளை ஆயத்தப்படுத்தினார். அவ்வம்மையால் அவருடைய நோக்கங்கள் நிறைவேறின.

மேல் நாட்டு சிஷ்யர்கள் இந்தியாவுக்கு வரா விருந்தமையை சுவாமிகள் ஓர் சோதனையாகவே நினைத்தார். அவரிடம் வாக்களித்தவாறே அவர்கள் வாராது போயிருப்பினும் அவர்கள் பால் சுவாமிகளின் அன்பு எள்ளளவேனும் குறையுமோ? நிவேதிதா தேவி லண்டனை விட்டுப் புறப்படும் தினத்தன்று மாலையில் சுவாமிகள் அவளுக்கு "நீ இந்தியாவிற்காக உழைப்பினுஞ் சரி, இல்லையானாலுஞ்சரி, வேதாந்தத்தை இழப்பினுஞ் சரி, அதற்காக உழைப்பினுஞ் சரி, மரண பரியந்தம் நான் உனக்குத் துணையாக நிற்பேன். யானையின் தந்தங்கள் நீண்டு முன் வந்துள்ளன; அவை எப்பொழுதும் திரும்பி உள்ளே போவதில்லை. மனிதனுடைய வாக்கும் அவ்வாறே வீண் போகாது" என்று கூறி யருளினார். அவனுடைய அடியார்களில் கொஞ்ச காலத்திற்குள் மேல் நாட்டு, கீழ் நாட்டுச் சிஷ்யர்கள் என்ற பேதங்கள் யாவும் அகன்றன.

ஸ்ரீமதி நிவேதிதாதேவி கல்கத்தாவிற்கு வந்தது முதல் ஐரோப்பிய பக்தர்களைப் பழக்குவதற்காக தக்க முறைகளைச் சுவாமிகள் ஆராய்வாரானார். இந்திய சமூக ஊழியத்திற்கெனத் தமது இன்னலங்க ளனைத்தையும் துறந்து இந்தியாவை அடைந்தவர்களை முற்றிலும் ஹிந்துக்களே யாக்கினால் மட்டுமே அவர்கள் சேவை சிறக்கும் ஆதலின் ஆடைதரித்தல் போன்ற சிறு கொள்கைகளி லிருந்து தொடங்கிப் படிப்படியாய் அவர்களை அநேகமாக எல்லா ஆசாரானுஷ்டானங்களிலும் பழக்கி விட்டார். அதி வைதிக அந்தண பிரம்மாச்சாரிணி அநுட்டித்தற்குரிய அரும்பெரும் ஆசாரங்களில் நிவேதிதாதேவி பழக்கப்பட்டாள். "இங்கிலாந்தைப்பற்றிய எண்ணம் கனவிலும் உனக்கு வாலாகாது" என்று சுவாமிகள் தேவியிடம் இந்நாட்களில் ஒரு சமயம் கூறினார். இந்துக்களின் சமயக் கொள்கைகளையும் நூல்களையும் ஐரோப்பிய சீடர்கள் எளிதில் கற்று வல்லவரானார்க ளெனினும், உணவிலும் லௌகிக விஷயங்களிலும் அவர்களை மாற்றுவது சிரமமாகவே யிருந்தது. காலக்கிரமத்தில்

அவையும் தாமாகவே மாறின. இந்தியா சீர்திருத்த தேசீய, நாகரிகக் கொள்கைகளில் இன்னும் அவ்வளவு முதிர்ச்சி யடையாவிட்டாலும், மத விஷயத்தில் அதற்கொத்ததும் மிக்கதுமான நாடு வேறு எதுவுமில்லை. எவ்வளவோ ஆயிரக்கணக்கான ஆண்டுகளாய் அது பரீக்ஷார்த்த சம்பவங்களுக்கும் புறச் சமய எதிர்ப்புக்கும் ஈடு கொடுத்துக்கொண்டு, அசைக்கவும் முடியாதபடி ஆணிவேர் பாய்ந்து எத்தேயத்தாராலும் அடையப்படாத மகோந்நத நிலைமையிலேயே விளங்குகின்றதென்னும் உண்மையைச் சுவாமிகள் அனுதினமும் பேலூர் மடத்தில் விளக்கி வருவார். 'இந்தியா ஏழ்மைத் துன்பங்களுக்கு ஆளாகி யுள்ளதானாலும் அது பரிசுத்தமானது; துறவே சமயத்தின் பெருமிதமாயுள்ள நாடுகள் வறுமையுற்றே தீரவேண்டும்; இந்தியாவின் ஏழ்மை மேல் நாடுகளி லுள்ளதுபோல் தீய ஒழுக்கங்களின்பாற் படுவதல்ல; அனுதினமும் அதி காலையில் நீராடுதல், அடிக்கடி வீட்டையும் பாத்திரங்களையும் கழுவிச் சுத்தஞ் செய்தல், ஆகிய இவை சமயத்தின் சார்பாகச் சுகாதாரத்தைக் கற்பிக்கின்றன" என்னு மிவற்றை யெல்லாம் சுவாமிகள் அவர்கட்கு நாளடைவில் புலனாக்கிவர, மெல்ல அவர்கள் முன்னிருந்த சந்தேகத்திரை விலகி, இந்தியாவின் மேன்மையும், அன்பும், ஆடம்பர மின்மையும் உள்ளங்கை நெல்லிக்கனியே போல் வெளியாயின. கங்கையில் நீராடி, பாத்திரங்களைப் பள பளப்பாய்த் தேய்த்து, தண்ணீருடன் வீடு திரும்பும் பெண்டிரையும், கட்டங்களில் காலை மாலை இருபோழ்தும் கரங்கள் கூப்பி, முழங்கால் நீரில் நின்றுகொண்டு நீர்க்கடனாற்றும் நூற்றுக்கணக்கான பக்தர்களையும், தெருக்களில் 'ராமா! சீதா!' என்று ராமலீலை பாடிக்கொண்டு செல்லும் பைராகிகளையும், தெருத் தெருவாகத் தேகமெங்கும் வெண்ணீறணிந்து சஞ்சரிக்கும் பரிவ்ராஜகர்களையும் பார்க்கப் பார்க்க அவர்களுக்கு ஓர் அதிசயமாயும் காட்சியாயு மிருக்கும். இவற்றிலுள்ள ரகசிய சமய தத்துவங்களை சுவாமிகள் அவ்வப்பொழுது அவர்களுக் கெடுத்தோதுவார்.

எனினும் சுவாமிகள் தாம் கருதியவாறு அவர்களைத் திருத்துவது நாட்கணக்கில் செய்யக்கூடிய வேலையாயில்லை; ஆண்டுகளாயின அவர்களை மாற்ற; இந்துக்களின் கர்மாக்களுக்கும் விஞ்ஞான சாஸ்திரத்திற்குமுள்ள சம்பந்தம், சாத்வீக ராஜஸ தெய்வ வணக்கங்கட்கும் பழங்கால ரோமன் கத்தோலிய விக்கிரகாராதனைக்குமுள்ள ஒற்றுமை, முதலிய

சமய தத்துவங்களின் ஒற்றுமை.

வற்றைச் சுவாமிகள் அவர்களுக்கு உணர்த்துவார். மேல் நாட்டுக் கொள்கைகளுக்கும் ஆசாரானுஷ்டானங்களுக்கு முள்ள தாரதம்யங்களைச் சீர் தூக்கிப் பாரத நாட்டின் தத்துவங்களே சீரியவையென்பதைத் தெளிவாய்க் காட்டி, அவர்களைச் செய்கையிலும், குணத்திலும், ரூபத்திலும் ஹிந்துக்களே யாக்க அவர் பட்டபாட்டை எடுத்தெழுதவு மியலுமோ? இந்திய ஐரோப்பிய சிஷ்யர்களை ஒன்றுபடுத்தி அவர்களுள் எந்தச் சிறு விஷயத்திலும் பேதா பேத மன்னியில் சகோதர பாவத்தை நிலவச் செய்ய வேண்டுமென்ற எண்ணத்துடன் சுவாமிகள் அவைதீகமான காரியங்களைக் குறிப்பாகச் செய்வது வழக்கம். சுவாமிகள் ஐரோப்பிய சிஷ்யர்களைப் பிரம்ம க்ஷத்திரியர் என்றழைப்பதும் அவர்களுண்ட பின் உச்சிஷ்டத்தைத் தாமுண்டு பிறரு முண்ணச் செய்வதும் அவர்கள் பாகஞ்செய்த உணவைத் தமது குருபாய்களுள்பட எல்லோரும் அருந்தச் செய்வதுமாக, ஐரோப்பிய சிஷ்யர்களையும், இந்திய சிஷ்யர்களையும் ஒரு குடும்பத்திற் பிறந்த சகோதரர்களைப்போ லாக்கி விட்டார். அப்பொழுது தானே ஒருவருக்கொருவர் உள்ளன்பு ஏற்படும். ஒற்றுமை ஏற்படும்? ஒற்றுமை உண்டானுற்றானே மேற்கொண்ட எந்த வேலையும் இனிது நடைபெறும்.

சுவாமிகளின் சோதனைகள்.

நிற்க, சுவாமிகள் தமக்கு அஞ்சித் தமது குருபாய்கள் ஐரோப்பிய சிஷ்யர்களுடன் நெருங்கிப் பழகுகின்றார்களா, அன்றி உண்மையான அபிமான மேற்பட்டு அங்ஙனம் நடந்து கொள்கிறார்களா என்பதைச் சோதித்துப் பார்ப்பதுண்டு. புதிய விஷயங்களிலே புகுதல் என்றால் யாருக்கும் முதலில் கொஞ்சம் அச்சந்தானே! அவர்களிற் சிலர் தயங்கும் போது சுவாமிகள் "சிறப்புஞ் சீலமுமே நலந்தருவன வன்றிக் கேவலம் பிறப்பு நலந்தராது" என்று அவர்களைத் தேற்றி வருவார். இவ்விதம் 1898 - ம் ஆண்டு முழுமையும் மேல் நாட்டு சிஷ்யர்களைப் பழக்கும் பணியிற் கழிந்தது. ஐரோப்பியர்களுக்கும் இந்திய சிஷ்யர்களுக்கும் உண்மையான அன்பு நிலைத்து விட்டது சுவாமிகளின் பழக்கும் அன்பு நிறைந்த முறைகளைப் பெரிதும் கண்டு பாராட்டி ஓர் ஐரோப்பிய அன்பர் "சுவாமிஜீ! நான் என்னுடைய நன்றி யறிதலை தேவரீருக்கு எங்ஙனஞ் செலுத்துவது?' என, அதற்கு அவர் "இந்தியாவிடத்தில் அன்புகொள்" என்று கூறினார்.

கடந்த அத்தியாயத்தின் இறுதியிற் கூறியவாறு சுவாமிகள்

தமது கோஷ்டியாருடன் கல்கத்தாவை விட்டு நைநிதால் வழியாக அல்மோராவுக்குப் பிரயாணமானார். சுவாமிகள் வழி யெங்கும் தமது சிஷ்யர்களுடன் சமயச் சரித்திர விஷயங்களை எடுத்துக்கொண்டு விநோதமாகத் தர்க்கிப்பதும், இடையில் சந்தர்ப்பங்களுக் கேற்ற வாறு பார்ஸி பாட்டுகளைப் பாடுவதும், சீனர் பழமொழிகளைச் சொல்வதும், சம்ஸ்கிருத சுலோகங்களைக் கூறுவதுமாக அவர்களைக் களிப்பித்துக் கொண்டே சென்றார். வழியில் பாட்னா வாரணவத க்ஷேத்திரங்களின் விசேஷத்தையும் இலக்குமண புரியில் முற்காலத்தில் அரசு செலுத்திய நவாப்களின் ஆடம்பர வாழ்க்கையையும் பற்றிக் கூறினார். குருபாய்களும் மற்ற சிஷ்யர்களும் சுவாமிகளின் சரித்திர ஞானத்தைக் கண்டு ஆச்சரியப்பட்டார்கள். தேரை என்னும் ஸ்தலத்தின் வழியாக இரயில் போகும்போது, அந்த க்ஷேத்திரத்திற்றான் கௌதம புத்தர் தமது பால்யத்தைச் சத்திய தரிசனத்தின் பொருட்டுக் கழித்தாரென்று அதன் பெருமையைக் கூறினார்.

தேரைமாதலம் கௌதமபுத்தரின் தீர்க்க தரிசனம்.

இந்திய சிம்மங்களான ராஜபுத்திரர்களின் வீரச் செயல்களைச் சுவாமிகள் புகழ நேரும்பொழுது அவர் சொல்லும் ஆற்றலே ராஜ புத்திரர்களின் அரும் பெருஞ் செயல்களை நிரூபித்துவிடும். தாம் முன்பு சாதுவாக தேச சஞ்சாரஞ் செய்தபோது கிராமங்களில் மாலை நேரத்தில் பசுக்கள் மேய்ச்சலிலிருந்து கூட்டங் கூட்டமாகவும் கன்றுந் தாயுமாகவும் வருங் காட்சியையும், கிராமவாசிகளின் கனிந்த மனதையும் கள்ளங் கபடமற்ற சிந்தையையும் தாம் அனுபவித்தபடி புகழ்ந்து கூறுவார். சுவாமிகள் தமது ஐரோப்பிய சிஷ்யர்களுக்கு உணர்த்தும் விஷயங்கள் வெறும் சரித்திராம்சம் மட்டும் உள்ளதா யிராது; மத விஷயங்கள் இடை யிடையே தொனிக்கும்; பராக்கிரமச் செயல்களும் பாங்குடன் வரும்; அவர் எதையும் சொல்லும் அழகிலேயே பிரத்யக்ஷமாக விஷயம் மனதிற்குத் தரிசனமாகும்; புண்ணிய நதிகள், அடர்ந்த காடுகள், மகத்தான மலைகள் முதலியன யாவும் தமது இந்து மகா ஜனங்களின் படிப்பிற்கு ஜீவாதாரமா யுள்ளவை யென்று சுவாமிகள் கூறுவார். நில வளங்களையும், பூமியின் தாவகைகளையும், எருக்களையும் பற்றியும் சில உழவுத் தொழில் விஷயமாகவும் அவர் பேசுவதைப் பார்த்து சிஷ்யர்கள் ஆச்சரியப் படுவார்கள். மற்றும் அவர் சரித்திரத்திலிருந்து நாகரிகத்திலிருந்து பல்துறைக் கல்வியையும்,

வேளாண்மை விஷயம்

நாகரிகத்தையும்,

கல்வியினின்று சமயத்தையும் சங்கிலிபோலத் தொடுத்துக் காட்டுவார். யதிகட்கெல்லாம் பதியாய் முதுகாடுறை முக்கண்ணனின் தாண்டவ தத்துவார்த்தத்தையும் உரைப்பார்; உயிரற்ற உடலம் பரிசுத்தமற்றதாகக் கருதப்படும் காரணங்களையும், வலது கரத்தால் உண வருந்துதல், ஜபஞ் செய்தல் முதலான சத்கர்மங்களைச் செய்யும் நோக்கங்களையும், விதவைகளின் விரத வாழ்வையும், அவர்கள் ஏகாதசி முதலிய விரத தினங்களில் பட்டினி கிடப்பதன் கருத்தையும், வர்ணாஸ்ரம தர்மங்களின் ஆழ்ந்த கருத்தையும், பிராம்மணர்களின் கர்மானுஷ்டான வேலைகள் காலையிலும் மாலையிலும் நடுப்பகலிலும் விதிக்கப்பட்டிருப்பதன் நோக்கத்தையும், ஒவ்வொரு ஹிந்துவின் வீடும் பூஜாக்கிருகத்தோடு ஆலயமாக விளங்கும் சிறப்பினையும் விஸ்தரித்துரைக்க மேல்நாட்டு சிஷ்யர்கள் வழியெல்லாம் தாம் அவசியம் அறிந்துகொள்ள வேணடிய விஷய மிவையென்று பய பக்தியுடன் கேட்டவண்ணம் சித்திரப் பாவைப்போ லானார்கள். பிராம்மணச் சிறுவர்கள் காசி க்ஷேத்திரங்களிலும், ஏனைய தென்னாட்டு ஆலயங்களிலும் வேதாத்யயனம் சொல்வதைப் புகழ்வார்; முழந்தாளிட்டு வணங்கும் முகம்மதியர்களின் பக்தியைப் பாராட்டுவார்; மதஸ்தாபகர்கள் புகட்டிய சமரஸத்தை விளக்கி மேற் கூறப்பெற்ற இவைதாம் இந்தியாவைத் தன்ய பூமியாக்கினவென்று அவர்களுக்கு உபதேசிப்பார். இவை யனைத்தையும் சுவாமிகள் சுவானுபூதியில் அறிந்தவர்; அதுபற்றியே "ஐயனே! செல்வமும் சிறப்பும் வலிமையும் புகழும் ததும்பும் இம்மேல்நாட்டில் நான்காண்டுகள் வசித்த பின் தங்களுக்கு எப்படி இந்தியாவிற்குப் போகவேண்டுமென்ற எண்ண முண்டாகின்றது?" என்று லண்டனை விட்டுப் புறப்படும் பொழுது ஓரன்பர் அவரை வினவ, அவர் "இங்கு வருவதற்கு முன் நான் இந்தியாவினிடத்தில் அன்பு பூண்டவன். இப்பொழுது இந்தியாவின் தூசியே என்னைப் பாக்கியவானாக்கி யிருக்கிறது. அதன் காற்றுப்பட்ட மாத்திரத்தில் நான் மகிழ்வேன். அது மகா பரிசுத்த பூமி" என்று விடை பகர்ந்தார்.

மேமீ 13உ எல்லோரும் நைனிதலத்தை அடைந்தார்கள். அப்பொழுது க்ஷேத்ரி மகாராஜா கோடை வாசத்திற்காகச் சமீபத்திலுள்ள ஓர் குன்றிற்கு வந்திருந்தார்; சுவாமிகள் அவரைச் சந்தித்துத் தமது ஐரோப்பிய சிஷ்யர்களை அவருக்கு அறிமுகப்படுத்தி வைத்தார். நைனிதாலில் ஓர் முகம்மதிய அன்பர் சுவாமிகளைச் சந்தித்

தார். அவர் உடையாலும் தோற்றத்தாலும் முகம்மதியரா யிருந்தாலும் உள்ளத்திற் பெரிய அத்வைத வேதாந்தி யாதலின் சுவாமிகளை நோக்கி 'சுவாமிஜீ! தேவரீரைத் தரிசித்தமையால் நான் பாக்கியவானானேன்! எனது பாவங்கள் பஞ்சாய்ப் பறந்து அகன்றன" என்று கூறித் திருவடிகளைத் தமது கரங்களால் பிடித்துக்கொண்டு வணங்கினார்.

முகம்மதானந்தா ஓர் அதீத பக்தர்.

அவரது பக்தியைக் கண்ட சுவாமிகள், அன்று முதல் அவரை சிஷ்யராக அங்கீமானித்து 'முகம்மதானந்தா' என்ற பெயருமளித்தார். மற்றும், அவர் நைனிதாலி லிருக்குங்கால் அவரது ஜீவதயையை விளக்கும் நிகழ்ச்சி யொன்று நடந்தது. சுவாமிகள் தமது பக்தர்களுடன் நைனிதால் ஈஸ்வரி சந்நிதானத்திற்குச் சென்று திரும்பும்பொழுது, சுவாமிகளுடன் ஏகிய ஐரோப்பிய சிஷ்யைகள், அங்கு திவ்யாலங்காரத்துடன் நின்றுகொண்டிருந்த இரு தேவதாஸிகளை, கபடமற்றவர்களாய், கண்யமான குடும்ப ஸ்திரீகளெனக் கருதிப் பேச வாரம்பித்தார்கள். அத்தாசிகள் சுவாமிகளின் இருப்பிடத்தை ஐரோப்பிய சிஷ்யைகளிடமிருந்து விசாரித்துக்கொண்டு, ஆலய அலுவல்கள் முடிந்து வீட்டிற்குத் திரும்புங்கால் சுவாமிகளைத் தரிசிக்கும் வண்ணம் அவர் தங்கியிருந்த வீட்டிற்கு வந்து, அவர் முன் தம்மைச் செல்லவிடுமாறு வேண்டினர். அப்பொழுது அங்கிருந்த சிஷ்யர்கள் அப்பரத்தையரை வெறுப்புடன் பேசி உள்ளேவிட மறுத்து விட்டார்கள். சுவாமிக ளிதை யறிந்து அவர்களை யழைப்பித்து ஹித விசனங்கள் கூறி யனுப்பினர். அவ்வூர் வாசிகளான பல பிரமுகர்கள் சுவாமிகளைத் தரிசிக்க வந்தார்கள். அவர்களோடு சுவாமிகள் ஸ்ரீராஜாராம் மோகன்ராய் அவர்களுடைய கொள்கைகளின் கருத்தையும், இந்து முகம்மதிய ஒற்றுமைக் கேதுவான வழிகளையும் தேசநல் சீர்திருத்தங்களைப்பற்றியும் உபதேசம் செய்தார். இடை யிடையே சுவாமிகள் நைனிதால் வாசிகளுக்குத் தாம் கண்கூடாகக் கண்ட ஐரோப்பிய நாட்டுச் சமய ஜனாசார விஷயங்களை எடுத்தோதி வந்தார். அவ்வாறு கூறுங்கால் ஒரு சமயம் சுவாமிகள் மேல் நாட்டிலுள்ள தாழ்ந்த வகுப்பாரைப் பற்றி 'மேல் நாட்டிலுள்ள தாழ்ந்த வகுப்பினர், சமயநூலறிவற்றுப் பாமரர்களா

பரத்தையர்க் குபதேசம்.

யிருப்பதோடு தீய ஒழுக்கமுடையோராயும், முரட்டுத்தனமும் ஆபாச வசனப் பிரயோகமு முடையாராயும் இருக்கிறார்கள்; நான் ஒருநாள் சாதாரணமாக இந்தக் காவியாடையை யணிந்துகொண்டு லண்டனில்

ஒரு தெரு வழியே செல்லும்பொழுது, ஒரு கரிவண்டி யோட்டி என்னைப் பார்த்து ஆபாசமான வார்த்தைகளைச் சொல்லிக் கொண்டே ஒருகை நிலக்கரிக் கட்டிகளை வாரி வீசினான். நல்லவேளை அது என் மேற் படவில்லை'' என்று சொல்லிச் சிரித்தார்.

நைனிதாலில் சுவாமிகளோடு கல்கத்தா மெட்ராபாலிடன் கலாசாலையில் மாணவராயிருந்த ஜெகோன் சந்திரதத்தர் அவரைச் சந்தித்தார். அவ்வன்பர் பாரத தர்மத்தைப் பரவுதல் பொருட்டு ஐரோப்பிய நாகரிகத்தை யறிந்து வரச் சில யுவர்களை நன்கொடை வசூலித்துப் பொருளுதவி செய்து ஐ ஸி. எஸ் பரீக்ஷை கொடுக்க இங்கிலாந்துக்கு அனுப்பலாமென்று யோசனை கூறினார். சுவாமிகள் அதை ஒப்புக் கொள்ளாமல் ''அன்பனே; அதெல்லாம் வேண்டாம். இந்தக் கொழுத்த பயல்கள் அங்குச் சென்றதன் பயனும் கொள்கையற்று ஐரோப்பிய அனுதாபமே குடிகொண்ட ஹிருதயத்துடன் 'உள்ளதும் போயிற்று நொள்ளைக் கண்ணி' என்று திரும்புவார்கள். இது நிச்சயம். அவர்கள் இந்தியாவென்ற பெயரை அறவே மறந்து, உடையிலும் உணவிலும் ஒழுக்கத்திலும் அனைத்திலும் நீசர்களாகி வருவார்கள்'' என்று கூறினார். அவர் வாய்க்குச் சருக்கரை போட வேண்டும்.

சுவாமிகள் ''ஐரோப்பிய பக்தர்களைப் பழக்கிய விதமே'' இந்தியாவின் சமய, ஜனசார சேவைகட்குப் பக்கபலமா யிருந்தது.

45-ம் அத்தியாயம்

காஷ்மீர தேச யாத்திரை.

அப்பால், நைனிதாலை விட்டு மாலைப் பொழுதில் சுவாமிகள் தமது சகாக்களுடன் புறப்பட்டு, அடர்ந்த கானகத்தை வழிக்கொண்டு அல்மோராவை நோக்கிச் செல்லலானார். தூக்கு விளக்குகளையும் பந்தங்களையு மெடுத்துக்கொண்டு புதர்களிற் புகுந்து கொஞ்சதூரஞ் சென்றபின், ஓர் பெரிய விருட்சத்தி னடியிலுள்ள 'முசாபுரி பங்களா'வை யடைந்தார்கள். வழியெல்லாம் சுவாமிகள் வேடிக்கை வேடிக்கையாகக் கதை சொல்லுவார்; விநோதமாகப் பேசுவார்; எல்லோரும் வயிறு கிழியச் சிரிப்பார்கள். அந்த பங்களாவை யடைந்ததும் சுவாமிகள் சுயம்பாகம் செய்து தமது சிஷ்யர்

களை உண்பித்துக் கட்டுச்சோற்று மூட்டை யொன்றுங் கட்டிக் கொண்டார். எல்லோருமாக மெல்ல இமயமலைச் சரிவின் வழியே சென்று மூன்றாவது நாளில் அல்மோராவை அடைந்தார். அல்மோராவை யடைந்தபின் சுவாமிகள் தமது குருபாய்களுடனும் சிஷ்யர்களுடனும் 'தாம்ஸன் ஹவுஸ்' என்னும் சேவியர் துரையின் விடுதியில் இறங்கினார்.

அல்மோரா வழி.

ஐரோப்பிய சிஷ்யர்கள் அதற்குப் பக்கத்திலிருந்த ஓர் பங்களாவில் வசித்தார்கள். அல்மோராவில் வசித்த காலத்தில் அவர் அனுதினமும் அதி காலையி லெழுந்து, இரண்டு மைல் அளவிற்குக் குறையாமல் தமது சிஷ்யர்களுடன் உலாவித் திரும்பியபின் உபதேச வகுப்பைத் தொடங்குவது வழக்கம். இந்திய ஸ்திரீ சமூகத்திற்குப் பெரிதும் உழைத்த சகோதரி நிவேதிதாதேவியும் இந்திய ஸ்திரீ சமூக சேவைக்கென சுவாமிகளால் பழக்கப்பட்டதும் இக்காலத்திலேயே யாகும். சகோதரியை முற்றிலும் இந்திய ஸ்திரீயாக்கச் சுவாமிகள் பட்ட அரும்பாடெல்லாம் இங்குதான். 'பாரத பூமியிலே பிறந்து அத்தாயின் மடியில் வளர்ந்த ஓர் பெண்மணியின் உண்மையான தேசபக்தியும் ஆசாரானுஷ்டானங்களும் எத்திறத்ததா யிருக்குமோ, அவ்விதப் பாங்குடையவளாக நிவேதிதாதேவி விளங்க வேண்டும்; அப்பொழுதுதான் தேவியின் மத ஊழியம் பயன்படும்,' என்பது சுவாமிகளின் கருத்து. அங்ஙனமே அவர் ஐரோப்பிய சிஷ்யர்க ளனைவரையும் அல்மோராவில் வெகு தீவிரமாகப் பழக்கினார். அதிகம் கூறுவானேன். ஸ்ரீராம கிருஷ்ணர் தமது சீடர்களை எவ்விதம் பழக்கினாரோ, அங்ஙனமே சுவாமிகளும் தமது சீடர்களையும் குருபாய்களையும் பழக்கினார்.

நிவேதிதாதேவியை முற்றுந் திருப்புவது முதலில் சாமான்யமான காரியமாயில்லை. ஆனால் முடிவில் விளைந்தபலன் மிக்கத் திருப்திகாமாகவே யிருந்தது. தினந்தோறும் காலையிலும் மாலையிலும் சுவாமிகள் தமது ஐரோப்பிய சீடர்களைக் கூட்டி, அவர்களுடன் தர்க்கித்து அவர்களுக்கு ஏற்படும் சந்தேகமான மன அழுக்கினைப் போக்கி, ஹிந்துமத வேத வேதாந்தங்களில் பரிபூரண நம்பிக்கையை அடைவித்து வந்தார். இதற்கு அல்மோரா என்னும் ஏகாந்தப் பிரதேசம் கிடைத்தது அவருடைய பக்தர்கள் செய்த பாக்யத்தின் பயனே யாகும்.

அல்மோராவில் வசித்த நாட்களில் சுவாமிகள் பற்பல விஷயங்

லைத் தமது சிஷ்யர்களுக்கு வெகு ருசிகரமாக உபதேசித்து வந்தார். ஒருநாள் காலையில் அவர் பிரம்ம, க்ஷத்திரிய, வைசிய சூத்திரர்க ளென்று ஓதப்படும் நான்கு வருணாஸ்ரம தர்மங்களைப் பற்றி யுரைக்க வாரம்பித்து அந்நான்கு வருணங்களின் தாத்பரியப்படி தேசியமான நான்கு மகத்தான கார்யங்கள் உலகில் உண்டென்றும், அவற்றுள் ஆசாரத்தையும், குருத்துவத்தையும் நடத்துவதில் ஹிந்துக்களும், தம் தேசத்தைக் காக்கும் வீரர்களுக்கு ரோம ராஜ்யமும், வணிக தந்திரங்களோடு பொருளீட்டும் வைசியர்களுக்குத் தற்கால இங்கி லாந்தும், குடியரசுக்கு அமெரிக்காவும் சான்றாயுள்ளன வென் றுணர்த்தினார். சூத்திரர்கள் என் றழைக்கப் படுகிறவர்களின் சுயமரி யாதையையும், உரிமைகளையும், சுவதந்திரத்தையும் ஒற்றுமையையும் அமெரிக்கா நாடு எவ்வாறு காப்பாற்றி அவர்கள் நிலையை உயர்த்தப் போகின்ற தென்பதைச் சுவாமிகள் அப்போதே

சிவாஜி மகாராஜா.

தீர்க்க தரிசனஞ் செய்தார். மற்றொருநாள், மகா ராஷ்டிரர்களின் வீரச் செயல்களையும், அவர்கள் தமது குல தெய்வங்களாகப் போற்றும் பவானியையும், சிவாஜி மகா ராஜாவையும் புகழ்ந்து பேசி "இன்னும் சிவாஜியென்றால் யாருக்கும் அச்சந்தான். அதிலும் மகாராஷ்டிர சந்நியாசியைக் கண்டால் வெகு பயம்; சிவாஜி சந்நியாசி வேடம்பூண்டு எவ்வளவோ மெச்சுந் திற முடைய ராஜ தந்திரங்களைச் செய்ததால் இன்னும் சந்நியாசிகளைக் கண்டால் எங்கே உள்ளே போர்க்கோலம் பூண்டுள்ளாரோ வென்ற அச்சம் ஏற்படுகிறது. இதை நான் யதியாகத் தீர்த்த யாத்திரை செய்த பொழுது ரெய்காரில் கவனித்தேன்" என்று கூறினார். பின் னொருநாள் இத்தாலி தேசத்தின் பழங்காலச் சிறப்பினை விஸ்தரித்துப் பேசி அந்நாடே சகல விஷயங்களிலும் மேலான நிலையை யெய்தி யிருந்ததெனச் சாஸன சாஸ்திர பூர்வமாக விளக்கினார். மற்றொருநாள் ஸ்ரீசுகப்ரம்மத்தின் சரித்திரத்தை உரைத்து ஸ்ரீராம கிருஷ்ணர் ஸ்ரீசுகப் பிரம்மம் ஆகிய இருவருடைய தரிசனங்களும் ஏகமானவைகளே யென்று கூறினார்.

* ஒருநாள் "இந்தியத்தாயின் தாலாட்டுக் கதை" களி லுள்ள நீதி, பக்தி, ஞானம், வேதாந்தம் முதலிய ரசமான விஷயங்களைக் கூறித் தமது சிஷ்யர்களின் மனதைத் தாலாட்டினார். மற்றுஞ் சில நாட்களில், வங்காளத்தில் திருவவதாரஞ் செய்த ஸ்ரீகிருஷ்ண சைதன்

* Cradle Tales of Hinduism சகோதரி நிவேதிதாதேவி எழுதியது.

யர், ராஜாராம் மோகன்ராய், பண்டித வித்யா சாகரர் முதலான பெரியோர்களின் திவ்ய சரிதைகளை எடுத்துப் பிரசங்கித்து, அவர்களது கொள்கை நலங்களை வெள்ளையாக விளக்கிக் காட்டினார். சுவாமிகள் அடிக்கடி மொகலாயச் சக்கரவர்த்திகளுள் சூரியன் போன்றவரும், அழகென்பதை அருமையாக அனுபவித்து ஆனந்தித்த அற்புத புருஷரும், பெரிய சித்ரிகருமான ஷாஜகானையும், மகா கீர்த்திமானும், ராஜரீக நிபுணரும், ராஜ சிம்மமும், ஜனசார சீர் திருத்தப் பிரபுவுமான அக்பரையும் புகழ்வதுண்டு. அதில் அக்பரைப்பற்றிச் சொல்லும்போது சுவாமிகளுடைய கண்களில் ஆனந்த நீர் பெருகி வழியும். இக்காலத்திற்றான் சுவாமிகள் பண்டித வித்யா சாகரரைத் தமது ஐரோப்பிய சிஷ்யர்களுக்கு அறிமுகப் படுத்தி வைத்தார். அவ்வமயம் அவர் தமது சிஷ்யர்களை நோக்கி, "இம்மகாநுபாவர் - பண்டிதமணி விதவா புனர் விவாகத்தை நிலை நிறுத்தப் பாடுபடும் வீராவார். ஒருவர் பல மனைவிகளை விவாகம் செய்து கொள்ளும் கொடிய வழக்கத்தையும் அடியோடு களையத் தோன்றிய அவதார புருஷர் இவர்" என்று போற்றினார்.

சரித்திராராய்ச்சி.

இவ் வல்மோரா வாசத்தில் சம்பாஷணைக்கு வராத பயனுடைய விஷயங்கள் இல்லை யென்பது உறுதி. ஒரு சமயம் ஸ்ரீகிருஷ்ணவதாரத்தைக் குறித்துப் புகழுரை தொடங்கியபோது சுவாமிகள் கிறிஸ்து நாதரின் ஜீவ்ய சரித்திரத்தைப் போலவே ஸ்ரீகிருஷ்ணவதார மொன்று நிகழ்ந்த காலத்தைப் பற்றித் தமக்கு அதுவரை எவ்வித நிர்ணயமும் ஏற்படவில்லை யென்றும், மத மூலர்களுள் புத்தர், முகம்மதுநபி ஆகிய இருவருமே சரித்திரத் தகாரர்களின்றிக் காரராக இருந்தவர்களென்று சொல்லக் கூடிய இயல்பினில் சத்ரு மித்ருக்களை உடையவர்களா யிருந்தார்களென்றுஞ் சொன்னார். பின்னும், யாவற்றுள்ளும் ஸ்ரீகிருஷ்ணவதாரமே அநேகமாகச் சரித்திராதாரமும் அடையாளங்களு மின்றி மங்கலாகக் காணப்படுகிறதென் றுரைத்து 'கவி ஆனிறை மேய்ப்பன், வேந்தன், வீரன், மகாஞானி ஆகிய பல ரிலக்கணங்களும் ஏகமாய்ப் பிரகாசிக்கக் காத்திற் கீதையைக்கொண்ட திவ்ய புருஷன்' என்று துதித்து ஆனந்த பாஷ்பஞ் சொரிந்தார்; அப்பால், 'ஆனால் இன்று கிருஷ்ணவதாரம் மற்றைய அவதாரங்களுள் நிஷ்களங்கமானது. ஆகா! அந்த கீதைக்குச் சமானமான ஓர் கிரந்

அவதார காலமும் சரித்திர நிர்ணயமும்.

தம் இது வரையிலும் நாவலன் தீவினில் தோன்றியது மில்லை; இனி, தோன்றப் போவது மில்லை; கிருஷ்ணாவதாரத்தின் பிரபாவத்தை விளக்கக் கீதை யொன்றே சாலும்; அதனாற்றான் இந்தியாவின் எப் பாகத்திலும் என்றும் இன்றும் இனியும் கிருஷ்ண பக்தி அதிகம்' என்று முகத்தில் ஒளி வீசச் செப்பியவண்ணம் தியானத்தி லாழ்ந்து விட்டார்.

அல்மோரா வாசத்தின் கடைசி நாளன்று சுவாமிகள் ஏதோ சந்தர்ப்பம் வர, ஸ்ரீராம கிருஷ்ணர் தீர்க்க சமாதியை யடைந்த தினத்தின் நிகழ்ச்சிகளை விஸ்தரித்துத் தம்மை குருதேவரழைத்து சமோபதேசஞ் செய்ததையும், பக்தர்களின் துக்கத்தையும் மற்ற நிகழ்ச்சிகளையும் விரிவாகக் கூறினார். இதிலிருந்து அவாது விசேஷ குருபக்தி அவ்வைரோப்பிய சிஷ்யர்களுக்கு வெளிப்படை யாயிற்று. அவாது அல்மோரா வாஸத்தில் கோடைக் காலத்தைக் கழிக்கப் பல பாகங்களிலிருந்தும் அங்கு வந்திருந்த பிரமுகர்கள் அநேகர் அவரை வந்து தரிசித்துச் சம்பாஷித்தவண்ண மிருந்தார்கள். ஸ்ரீ. ஜி என். சக்ரவர்த்தி யவர்களின் அதிதியாய் அங்கு வந்திருந்த அனிபெசண்ட் அம்மையாரும் சுவாமிகளை இருமுறை வந்து கண்டு போனார். சக்கரவர்த்தி யவர்களின் மனைவியாரைச் சுவாமிகள் தமது சிறு பிராயத்தி லிருந்து அறிவாராதலின் அவ்வன்னையின் வேண்டுகோளுக் கிணங்கி விருந்து கொள்ளச் சென்ற காலத்தில் அங்கும் சுவாமிகள் பெசண்ட் அம்மையைக் கண்டு பேசினார்.

இப்படி யிருக்குங் காலத்தில் மேமீ 25உ புதன்கிழமை யன்று சுவாமிகள் ஏகாந்தமாகத் தியானத்தி லாழ்ந்திருக்கப் பெரிதும் ஆவல் கொண்டு, அக்கணமே புறப்பட்டுச் சமீபத்திலிருந்த 'ஷிய தேவி' என்னும் தனித்த இடத்திற்கேகி சுமார் பத்துமணி நோம் வரையில் நிஷ்டை வகித்துத் திரும்பினார். இங்ஙனம் சனிக்கிழமை வரையில் நடைபெற்று வந்தது. சுவாமிகள் இவ்விதம் ஏகுவதால் அவரைத் தரிசிக்க வேண்டுமென்ற பேரவாவுடன் வந்த பலர் அவரைக் காண வியலாது ஏங்கிச் செல்ல நேர்ந்தமையால் அவர் அதன் பிறகு எங்கும் செல்லவில்லை. அப்பால், அம்மாதம் 30உ திங்கட் கிழமை யன்று சுவாமிகள் சேவியர் தம்பதிகளுடன் பின்னுங் கொஞ்ச தூரத்தி லிருந்த ஓர் திவ்ய ஸ்தலத்திற்கு அல்மோரா மட ஸ்தாபனார்த்தமாக சாஸனம் வாங்கும் நோக்கத்துடன் பார்க்கப் பிரயாணமானார். பிறகு, அவர் ஜுன்மீ 5உ ஞாயிற்றுக்கிழமை அங்கிருந்து

திரும்பியதும் இடியினுங் கொடிய துக்கச் செய்திக ளிரண்டு அவருக்குக் கிடைத்தன. அவற்றுள், ஸ்ரீராம கிருஷ்ணருக்கு அடுத்தபடியாகச் சுவாமிகள் துதித்துவந்த அவதார புருஷரான பாவ்காரி பாபாவின் மகா சமாதியொன்று, பெரிய கர்மயோகியாய் எவ்வித பலாபேக்ஷையுமின்றி சுவாமிகளுக்குத் தொண்டு செய்துவந்த குட்வின் துரையவர்கள் உதகமண்டலத்தில் தேக வியோக மடைந்த விஷயம் மற்றொன்று.

இடியினுங் கொடிய செய்தி.

சுவாமிகளின் முதல் அல்மோரா விஜயத்தில் மிஸ். முல்லருடன் அங்கு வசித்து வந்த குட்வின் துரை யவர்கள் சென்னை 'மதராஸ் மெயில்' பத்திரிகாலய உருப்பினராய் நியமனம் பெற்று உதகமண்டலத்திற்கு சாங்கேதிகலேகக கார்யமாய்ச் சென்றிருந்த பொழுது கொடிய சுரங் கண்டு ஜூன்மீ 22வு காலமானார். இவ் விஷயத்தைக் கேட்டதும் சுவாமிக ளடைந்த துக்கத்திற்குக் கங்கு கரையில்லை. அன்று முழுதும் அவர் குட்வின் துரையின் மனத்துறவு பூண்ட மான்மியப் பக்தியைப் புகழ்வதும், கண்ணீர் விடுவதும் 'என் துரையே! எனது அன்பே!' என்று பிரலாபிப்பதுமாக விருந்தார். 'என்னருமைக் குட்வினைக் கொண்டுபோன அந்த நமனைச் சண்டையிட்டு வாளுக் கிரையாக்க வென்னா லியலாதென்றா? குட்வின் இருந்தால் நான் இன்னும் எவ்வளவு கார்யங்களைச் செய்வே னென்பதை அந்தப் பாழுந் தெய்வம் சற்றும் சிந்திக்க வில்லையே' என்று கூறி மெய்ம் மறந்து விம்மினார். சுவாமிகள் அதன்மேல், அவர் குட்வின் துரையவர்களின் கைம்பெண்ணான தாய்க்கு வரைந்த அனுதாப லிகிதமாவது:

பாவ்ஹாரி பாபாவின் தீர்க்க சமாதி

குட்வினின் மரணம்.

'அம்மா! அவன் எனக்கியற்றிய சேவைகட்கு நான் கைம்மாறு செய்ய அசக்தனாவேன். ஏதோ, நான் உலகத்தின் தீர்க்க தரிசியென்று புகழ்கிறார்களே, அந்தப் புகழ்ச்சிக்கெல்லாம் அவனே உரியவன்; அவனது பேனா முனையாற்றான் எனது பிரசங்கங்களெல்லாம் பகிரங்க மாயின. அவனுடைய மரணத்தால் நானே அமரில் ஆயுத மிழந்த வீரனைப்போ லாயினே னென்னில் பெற்ற வயிறு எவ்வாறெரியும். அவன் என்னிடத்தில் பக்தி செலுத்துவதில் என்றும் எள்ளளவும் குறைந்ததில்லை. அவனுக்குச் சிரம

குட்வினின் தாய்க்கு அனுதாபக்கடிதம்.

மென்பதே இன்னதென்று தெரியாது; அவனுடைய மரணத்தால் இவ்வையகம் ஓர் நிதியை யிழந்த தென்பது திண்ணம். பிறர்க்கென வாழ்ந்த பெரியார் வரிசையில் நான் குட்வினையே முதலில் வைப்பேன்.''

அவருடைய மனம் புண்ணடைந்த பெரும் புழையா யிருந்தது. அதில் கனல் நுழைந்தது போல வரிசையாக அனுதாபக் கடிதங்கள் அவருக்கு வர வாரம்பித்தன. அதனால் அவர் மனம், பொங்கி யெழுந்து வீழ்ந்து மீண்டு மெழுந்து சென்று கொண்டிருக்கும் கடலலையை யொத்திருந்தது. என்னே? பந்தத்தைக் கடிந்தவர்! குறும் பறுத்தவர்! மகா ஞானி! இங்ஙனம் சாதாரண குடும்பியைப் போலத் துக்கிக்கப்போமோ! என்னில் அவர் எவ்வளவுக் கெவ்வளவு ஞானியா யிருந்தாரோ அவ்வளவுக் கவ்வளவு பக்தராயும் இருந்தார். பக்தி சம்பிரமங்கள் தரிசிக்கப்பெற்ற விடத்தில், அப் பத்திக்குப் பாத்திரமா யிருந்த பொருள் மறைந்தமையால் அவர் துயருற நேர்ந்தது. அதற்குப் பின், சுவாமிகள் தமக்குத் துக்கச் செய்தி கிடைத்த அவ்விடத்திலிருக்க மனமின்றி, கொஞ்சகாலம் காஷ்மீர தேசத்தில் யாத்திரை செய்ய உத்தேசித்தார். ஆகவே ஜூன்மீ 11உ தமது சிஷ்யைகள் மட்டும் உடன்வர, ஒலிபுல் அன்னையின் விருந்தினராகப் பிரயாணப்பட்டார்.

சுவாமிகள் அல்மோராவினின்றும் புறப்படு முன்னர், ஸ்ரீராம கிருஷ்ண மடத்தின் பெருமைகளையும் அக் குருதேவரின் உபதேசங்களையும் வெளியிடும் பணியில் ''பிரபுத்த பாரதா'' வென்னும் பத்திரிகை தொண்டு செய்துவர, அதில் சில சீர் திருத்தங்கள் செய்ய வேண்டி யிருந்தது. அதுகாறும், அச் சஞ்சிகையைச் சென்னையில், வரப்பிரசாதியாய் வேதாந்த விற்பன்னராய் இருபத்தாறு வயதே யுடையவராய், சுவாமிகளின் சீடராய் விளங்கிய ஸ்ரீமாந் B. R. ராஜமையர் அவர்கள் வெகு விமரிசையாகத் தக்க மூலதனத்துடன் நடத்தி வந்தார். அவர் அப்பொழுது விண்ணுலகெய்தவே, சுவாமிகள் அப்பிரசுராலயத்தை அல்மோராவுக்கு மாற்றி, சுவாமி சொரூபானந்தரை அதன் பத்திராதிபராக்கி, சேவியர் துரையவர்களைக் கொண்டு ஆரம்பிக்கவேண்டிய ஏற்பாடுகளைச் செய்து விட்டுத் தமது காஷ்மீரப் பிரயாணத்தைத் தொடங்கினர். சேவியர் துரையவர்கள் புதிதாக ஓர் முத்திராக்ஷர சாலையை வாங்கி, அப்பத்திரிகை காலா காலத்தில்

'பிரபுத்த பாரதா' பத்திரிகையின் நேர்மை'

கண்யமாக வெளி வருவதற்கான சௌகரியங்களைச் செய்து கொண்டார். சுவாமிகள் ஸ்ரீநகரை அடைந்ததும் பிரபுத்த பாரதா புதுப் பதிப்பின் முதற் சஞ்சிகையைக் கண்டு ஆனந்தித்து, அடுத்த இதழுக்கு ஓர் கட்டுரையும் வரைந்தனுப்பினார். பத்திரிகையே நிகழ்கால தர்ம ஸ்தாபனத்திற்கான முக்கிய சாதனமென்பதைச் சுவாமிகள் உணர்ந்து அதையே தினசரிப் பத்திரிகையாக நடத்தவும் உத்தேசித்தாராயினும், பின்னர் அவசியமாகத் தோன்றாமையான் அந்தயோசனை அமுலுக்கு வரவில்லை.

சுவாமிகளும் அவரது ஐரோப்பிய சிஷ்யைகளும் ஜூன்மீ 12உ 'பீம்தால்' என்னும் ஏரிக்கரையை யடைந்து சிரம பரிகாரஞ் செய்து கொண்டார்கள். அன்று பிற்பகலில் சுவாமிகள் சில வேத மகா வாக்கியங்களைத் தமது சிஷ்யர்களுக்கு ஆங்கிலத்தில் கவியாகப் பாடி யருளி அவற்றின் பொருளை விளக்கினார். அனைவரும் அடுத்த நாள் புறப்பட்டு வனங்கள் வழியே சென்று, குன்றுகளைக் கடந்த வண்ணம் பாஞ்சால பூமியிலுள்ள ராவல்பிண்டியை நோக்கி இரயிலில் பிரயாணமானார்கள். பாஞ்சால தேசத்தின் வழியே செல்லும்பொழுது, சுவாமிகள் தமது சிஷ்யைகளிடம் அம் மக்களின் வீரச் செயல்களை விளம்பிய வாறு செல்லலுற்றார். சுவாமிகள் அதற்கு முந்திய ஆண்டில் லாகூருக்குச் சென்றிருந்த பொழுது அப்பிரதேச வாசிகள் அவரைத் தமது மதாசாரியர்களான குருநானக்கும் குரு கோவிந்தருமே புனராவதாரம் செய்துளாரெனப் போற்றிய சீலர்களாவார்கள். பாஞ்சால வாசி ஒவ்வொருவனும் பெரிய வேதாந்தியா யிருப்பதைச் சுவாமிகள் மெச்சிப் பேசினார்; பற்றலர் தம்மைச் செற்றிடுந் திறனுடைய தீர இரத்தினங்களான அப்பாஞ்சால வீரர்கள் கிரேக்க வீரான அலக்சாந்தரைப் பின்னடையச் செய்து வெற்றிகொண்டதையும், அந் நாட்டில் சத்ரபதியான சந்திர குப்தன் அரசாட்சி புரிந்ததையும், பௌத்த சமயம் வியாபித்ததையும், மிக்க மனோகரமாகக் கூறிய வண்ணம் செல்லலுற்றார்.

பாஞ்சாலநாட்டின் சிறப்பு.

அவர்கள் ராவல்பிண்டியை யடைந்ததும், அங்கிருந்து மூர்றி (Murree) க்குப்போய் அங்கு மூன்று நாட்கள் தங்கியிருந்து, அவண் நீங்கி ஜூன்மீ 22உ ஸ்ரீநகரை யெய்தினர். கோஹலா (Kohala) பாமுல்லா (Baramulla) வழியே ஏகுங்கால் சுவாமிகள் வாமாசாரம் போன்ற மதத்தின் பேரால் செய்யப்படும் துர்வழக்கங்

களை பலமாய்க் கண்டித்துப் பேசிக்கொண்டே போனார். இதனின்றும் சுவாமிகள் தேசாபிமானத்தால் எதையும் ஒளித்துப் பேசாது நல்லவற்றையும் தீயவற்றையும் பகிரங்கமாக உரைத்தருளும் குணாதிசயம் இங்கு வெளிப்படையாம். ஜூன் மாதம் ஒன்பதாம் தேதியில் அவர் ஜீல நதியின் பள்ளத்தாக்கு வழியே யாத்திரை செய்கையில் பூர்வ யாத்திரானுபவ விவரணா யிலங்கினார். பிரம்ம வித்தையைப் பற்றிச் சுவாமிகள் விசேஷ உபதேசங்கள் செய்து கொண்டும், தமது நண்பரொருவர் நோய்வாய்ப்பட்டு வைத்தியர்கள் அனைவரும் கைவிட்ட பின், ஸ்ரீராமகிருஷ்ணரின் மகிமைகட்கெல்லாம் பாத்யஸ்தரான நீங்களே யோக சித்தியால் வியாதியைப் போக்க வேண்டுமென்று வேண்ட, தாமும் இறைவ னருளாலிசைந்து உபநிஷதமொன்றை உச்சரித்து அவர் சரீரத்தை மும்முறை தடவிக் கொடுக்க வைராக்கியமும் நம்பிக்கையுமுடைய அவர் குணமடைந்தா ரென்றியம்பி "நான் அடிக்கடி அதிசயமாகவும் சில சமயம் கோபமாகவும் விஷயங்களை உணர்த்தினும் 'அன்பை'த் தவிர வேறெதையும் போதிப்பதில்லை. இவை யெல்லாம் நமக்குள் உள்ளன்பு ஏற்பட்டபின் உண்மை யென்பது புலப்படும்" என்றும் உரைத்தருளினார். அந்நாட்டின் வழியே சுவாமிகள் ஆங்காங்கு பாஞ்சால பூமியில் வழங்கும் பழங்கதைகளைக் கூறியவாறு பாமுல்லாவை ஜூன்மாதம் 20வ யெய்தி, அன்று பகற்போஜன மானபின் பிற்பகல் சுமார் நான்கு மணிக்குப் படகிலேறி ஸ்ரீநகரை மூன்றும் நாளன்று அடைந்தார். மறுநாள் சுவாமிகள் தமது சிஷ்யைகளுடன் தோணியில் ஜீலம் நதியை எதிர்த்துச் சிறிது தூரஞ் சென்று ஒரு கிராமத்திற்கு நேராகக் கரையில் இறங்கி கழனிகள் வழியே சென்று தமது சிஷ்யைகள் யாவரும் பின்றொடர ஓர் அழகிய் குடிசைக் கேகினார் அக் குடிசையில் ஒரு விருத்தை தனது இரு மருமக்களும் பேரக் குழந்தைகளும் உதவி புரியக் கம்பளி செய்துகொண் டிருந்தாள். கடந்த ஆண்டில் சுவாமிகள் இங்கு வந்தபோது இக்கிழவியை யதேச்சையாகச் சந்திக்க நேர்ந்தது. அப்பொழுது சுவாமிகள் அக் கிழவியைக் கேட்டுத் தண்ணீர் ஏற்றுப் பருகி விடாய் தணிந்த பின் 'அம்மா! தங்களுடைய சமயமெது' என்று வினவ, அவ்வன்னை 'இறைவன் திருவருளால் ஐயனே! நான் முகம்மது மதத்திற் பிறந்தவள்' என்று மிக்க உற்சாகத்துடன் புகன்றனள். அது கேட்ட சுவாமிகள் அந்த விருத்தையின் மதாபி

சுவாமிகள் தம் யோக சக்தியால் சுரம் நீக்கிய சம்பவம்.

ஓர் முகம்மதியக் கிழவியின் அன்பு.

மானத்தை மெச்சி, அக மகிழ்ந்து, அப்பால் அவர் கல்கத்தாவிற் செய்த பிரசங்கத்தில் இதே நிகழ்ச்சியை எடுத்தோதியது மன்றி, சமயம் வாய்த்தபோதெல்லாம் சமயப்பற்றுடைய தாய்மார்களைக் குறித்துத் தமது சிஷ்யர்களிடம் பேசும்போது இவ்வம்மையைப் புகழ்ந்து வருவாரானார். அக் குடும்பத்தார்கள் சுவாமிகளையும் அவரது சிஷ்யைகளையும் உபசரித்தார்கள்.

சுவாமிகள் காஷ்மீரத்தின் பிரதான ஸ்தலமான ஸ்ரீநகரில் வாசஞ் செய்த காலத்திலும், சுற்றுப் புறங்களில் யாத்திரை செய்த காலத்திலும் அவருடைய ஐரோப்பிய சிஷ்யைகள் அனுபவ இந்திய வித்யாபி விருத்தியை அடையலானார்கள். ஜூன் மாதம் இருபத்திரண்டாம் நாள் முதல் ஜூலை மாதம் இருபத்தைந்தாம் தினம் வரை அவர் காஷ்மீரத்தில் வாசஞ் செய்திருந்தார். அதுபோழ்து கனிஷ்கரின் ராஜ்ய காலத்தில் ஸ்ரீநக ரெய்தியிருந்த சிறப்பையும், பௌத்த தர்மத்தையும் அசோகர் சக்ரவர்த்தியின் சமயோத்தாரண ராஜரீகத்தையும், சிவபூஜையிற் சிறந்த பக்த மணிகளின் சரித்திரங்களையும், பத்திச்சுவை ததும்பும் கதைகளையும் அவற்றின் தத்துவார்த்தங்களையும், யோகாப்பியாச முறைகளை அனுஷ்டிப்பதிலுள்ள சிரமத்தையும், பிளேடோவின் வேதாந்தக் கொள்கைகளையும் சிருஷ்டி லீலைகளையும் சுவாமிகள் சமயம் நேர்ந்தபோது தம் ஐரோப்பிய சிஷ்யைகட்கோதி வருவாராயினர். பின்னும் ஸ்ரீமத் ராமாயண மகா பாரத காவ்ய விளக்கங்களும், துளஸீதாஸ், கபீர்தாஸ் முதலான பாண்டுரங்க பக்தலீலாம்ருதக் கதைகளும் அவ்வைரோப்பிய மாதிரத்தினங்களுக்குப் புகட்டப் பெற்றன.

அவர் செய்த சிறு யாத்திரைகளுள் ஜூன் மாதம் ஒன்பதாம் நாளன்று சென்ற தாக்டி சுலேமான் யாத்திரை ஒன்று. அக்குன்று வெகு ரம்யமாக மூவாயிரமடி உயரமுள்ளதாய் ஸ்ரீநகருக்குச் சமீபத்தில் அமைந்திருப்பது. அதனை யடைந்ததும் சுவாமிகள் உள்ளங் களித்து, தமது சிஷ்யைகளைப் பார்த்து "ஹிந்து ஆலய மமைப்பதில் தனது திறனை எங்ஙனம் காட்டியுள்ளா ரென்பதைப் பாருங்கள். அவன் எப்பொழுதும் சாஸ்திரீயமான இடத்தையே நாடுகிறான்

தாக்டி சுலேமான் குன்றம்

இம்மலை காஷ்மீரத்தையே கௌரவிப்பதாய் எவ்வளவு அழகாயிருக்கின்றது பாருங்கள். நீலவண்ண அலைகளுக்கிடையே எழுந்து பொலியும் செந்நிற ஹரிபர்வதம் சிம்மராஜன் கிரீடம் வகித்ததைப் போன் றிலங்கு

வதைப் பாருங்கள். மார்த்தாண்ட ஆலயத்தின் முன்னிலையில் அப்பள்ளத்தாக்கு அபரிமிதமாய் மிளிர்வதைத் தரிசியுங்கள். இயற்கையி னழகிலேயே இறைவ னிலங்குகின்றான்'' என்று உற்சா கத்துடன் சில வசனங்கள் புகன்று நிஷ்டை யடைந்து விட்டார். பிறகு அக்கோஷ்டியார் ஷலிமார் பாக நூர்மகாலுக்கும், நிர்ஹத் பாகத்திற்கும் போய் வந்தார்கள். இவை இரண்டும் மொகலாயச் சக்கர வர்த்திகளின் உத்தியான வனங்களா யிருந்தவை. இவற்றைப் பார்த்த பின் சுவாமிகள் தமது பக்தைகளுடன் ஸ்ரீநகருக்குத் திரும்பினார். அவர் மனம் திடீரென ஒருவித மாறுதலடைந்தது. துறவிலே அவ ருள்ளம் முற்றிலும் ஆவல் கொண்டது. உலக இன்பங்களை, நவ நவ மாகப் புதுக்கிய வாழ்வை நடத்தியவர்களை அவர் அருவருப்புடன் தாக்கிப் பேசினார். அப்பொழுது ஜனக மகாராஜாவின் ஞாபகம் அவ ருக்கு வந்து விட்டது; கண்களில் நீரரும்பித் தாரை தாரையாக வடிந்தது; ''ஜனகரைப் போலாவதும் எளிதோ? பற்றற்று சிம்மா சனத்தில் விளங்குவதும் சுலபமோ? செல்வத்தையும் கீர்த்தியையும் பெண்டு பிள்ளைகளையும் துச்சமாய்க் கருதுவதும் முடியுமோ?'' என்று சுவாமிகள் ஆச்சரிய வசனங்கள் புகன்றார். அப்பால் மினு மினுப் பூச்சிக்கும் ஜெகஜ்ஜோதியான சூரியனுக்கும், சிறு கிணற்றிற்கும் கரையற்ற கடலுக்கும் ஒரு முந்திரிக் கொட்டைக்கும் மேரு பர்வ தத்திற்கும் எவ்வளவு பேதமுண்டோ, அத்துணை வித்தியாசம் சந்நி யாசிக்கும் கிருஹஸ்தனுக்கும் உளது என்று விளக்கித் தமது சிஷ்யர் கள் எவ்விதம் துறவற நெறி பிடித்தொழுக வேண்டுமென்பது பற்றி வெகு நேரம் பேசினார்.

அதுமுதல் சங்கத்தில் அவருக்கு வெறுப் பேற்பட்டிருந்தது. ஆதலில், அவர் கொஞ்சகாலம் தன்னந் தனியே யாத்திரை செய்ய உத்தேசித்தார். அதன்படி அவர் புறப்பட்டு அமர்நாதத்திற்கு நடந்து கொஞ்ச தூரஞ் சென்று வழி செவ்வியதா யில்லாமையால் நாலைந்து நாட்களுக்குள் திரும்பி விட்டார். அப்பால் சுவாமிகள் சில தினங்கள் வரை உணவையும் வெறுத்து, அருள் மாரிபோலப் பத்தியைப்பற்றிச் சிஷ்யைகளுக்குபதேசிக்கலானார். சுஷுப்தியாவஸ்தை அவரைச் சாலவும் ஆட் கொண்டது. அம்மாதம் 18உ அனைவரும் இஸ் லாமியா பாக்கத்திற்குச் சென்றார்கள். அடுத்த நாள் பிற்பகலில் ஜீல நதிக்கரையில் ஆம்பல்பூத்த ஓர் புட்காணியின் கரையில் ஓர் பூஞ்

இஸ்லாமியா பாக்கம் - பண்டரிநாதர் தரிசனம்.

சோலையினிடையே இலங்கும் பண்டரி நாதர் ஆலயத்தை யடைந்து தரிசித்தார்கள். அக்கோயிலின் சிலாசிற்ப நுட்பங்களைச் சுவாமிகள் தமது ஐரோப்பிய சிஷ்யர்களுக்குக் காண்பித்து, சிற்ப சாஸ்திரத்தைப் பற்றிய சில குறிப்புரைகள் தந்தார். அக்கோயிலின் கிழவாயிலில் புத்த விக்ரஹமும் புத்தருடைய தாயான மாயா தேவியின் சிலையும் அமைந்திருப்பது கண்டு சிரமீது கரங்கூப்பித் துதிபாடினார். அக்கோயிலின் அமைப்பிலிருந்து அது மார்த்தாண்ட மன்னர் முன் கனிஷ்கர் காலத்தில் சுமார் கி. பி. 150 ல் கட்டப்பட் டிருக்கலாமென்று முடிவு செய்யப்பட்டது. மேலும், அவ்வாலயத்தில் நாகபூஜை, சூர்ய நமஸ் காரம், புத்த சமய சிலா ரூபங்கள், ஹிந்துமத அதிதேவதைகள் ஆகிய ஹிந்துக்களது புராதன வழிபாடுகட்குப் போதிய சான்றுகளுள்ளன. அப்பொழுது தேவாராதன விஷயங்களைப்பற்றிப் பேச்சுவர சுவாமிகள் "கிறிஸ்தவர்களும் ஹிந்துக்களைப்போல ஈஸ்வரனுக்கு நைவேத்தியம் செய்கின்றார்கள். அவர்கள் 'பணியார' மென்று ஒரு விதப் பெயரிட்டுச் சொல்லுகிறார்கள். நாங்கள் பிரசாதமென்று பரியாய நாமமிட்டு வழங்குகிறோம். இதுபோல ஹிந்து மதத்திற்கும் கிறிஸ்தவ தர்மத்திற்கும் எத்தனையோ கொள்கைகளில் ஒற்றுமையுள்ளன; அவர்களும் எங்களைப் போல குருமார்களை ஆதரிக்கிறார்கள். முகம்மதிய சமயம் மட்டும் முற்றிலும் மதகுருத்துவத்தை யொழித்து விட்டது. இதற்குத் தம்பி கிறிஸ்தவப் பரிசுத்த (Protestant) மதம்" என்று சமய ஒற்றுமைகளை விவரித்தார். ஆனால் 'கிரீட்' வழியே புகைக்கலத்தில் பிரயாணஞ் செய்தபோது கண்டகனவால் கிறிஸ்து நாதரின் அவதாரத்தைப்பற்றிய ஐயப்பாடுகள் சில மட்டும் அவருள்ளத்திற் பதிந்திருந்தன. கிறிஸ்துநாத ரென்பவர் இருந்ததே இல்லை; அவர் சரித்திர புருஷரல்லவென்று அபிப்பிராயப் பட்டு நூல்கள் வரைந்த ஐரோப்பிய ஆராய்ச்சி நிபுணர்களான மிஸ்டர் ஜெ. எம். ராபர்ட்ஸன், டாக்டர் எ. டுரூஸ், பிரொபஸர் டப்ளியூ. பி. ஸ்மித், பிரடரிக் ஸி. கான்பேர் எம். ஏ., முதலானவர்களுடைய அபிப்பிராயத்தைத் தழுவி யிருந்தது சுவாமிகளுடைய அபிப்பிராயமும்.

உபதேசம் மதங்களின் ஒருமைப் பாடு.

அதன்பின், ஜீலநதியின் வழியே தோணியேறிச் சுவாமிகள் தமது சகாக்களுடன் அவந்திகா புரியின் அழிந்து பட்ட ஆலயங்களைப் பார்த்துவிட்டு இருபத்திரண்டாந்தினம் இஸ்லாமியா பாக்கத்

திற்கு வந்து சேர்ந்தார். இந்த யாத்திரை முழுவதும் அவருட னிருந்த சகோதரி நிவேதிதாதேவி, சுவாமிகள் புத்தபகவானிடத் தில் அளவற்ற அன்புகொண்டிருந்தாரென்றும், அடிக்கடி மேல் நாட்டு, இந்தியநாட்டு சமய, நாகரீகத் தத்துவங்களை தர்க்க பூர்வ மாகத் தமக்கும் தமது சகோதரிகளுக்கும் புகட்டி வந்தாரென்றும் வரைந்துள்ளாள். "புத்தரின் மகா உபதேசங்களை இந்தியா ஏற்றது. அதனுல் ஆயிரம் ஆண்டுகளுக்குள் செழிப்புற்றது. இந்திய தேசீய வாழ்வே அநித்திய இன்ப திரஸ்காரத்தை அடிப்படையாகக் கொண்ட தாகும். அதன் உயர்ந்த நோக்கங்கள் சேவையும் முத்தியுமே யாம்" என்பது அவரது மெய்யுரை.

சுவாமிகளின் அரிய குணுதிசயங்கள் பல. அவர் எப்பொழுதும் சமய விஷயங்களையே மூச்சு விடாமல் எவருக்கும் புரியாத வேதாந்த பாஷையில் பேசு மியல்பினரல்ல. அவர் விளையாட்டாகவும், விநோத மாகவும், கேலியாகவும், சிரிப்பாகவும் கதைகள் சொல்லுவார். அக் கதைக ளனைத்திலும் பொருள் பொலிந்திருக்கும். இது அவருடைய சுபாவகுணம். இங்ஙனமே அவர் இங்கிலாந்தி லிருந்தபோது சிரிப்ப தும் விளையாடுவதுமாக விருப்பது கண்டு ஓன்பர் அவரை நோக்கி "ஐயனே! மதோத்தாரணரென்று மகிதலமே போற்றும் தாங்கள் இங்ஙனம் சாதாரண மனிதரைப்போல் சிரித்து விளையாடலாமா?" என்று வினவ, அவர் 'நாங்கள் பிரம்மானந்தத்தை யனுபவிக்கும் குழந்தைகள் தானே! நாங்கள் ஏன் மந்தமாகவும் கடுகடுப்போடு மிருக்க வேண்டும்? நான்குபேர் புகழ்ந்து விட்டால் மகா கர்விகளாய் படாடோபத்துடன், ஆடம்பரமாய் வேடதாரிகளாய் இருப்பது உங் கள் வழக்கம். இந்து சந்நியாசி என்றும் குழந்தை முதல் விருத் தர்வரை, பாமரர் முதல் படித்தவர் ஈருக, ஏழை முதல் கோடீஸ் வரர்கள் வரை எல்லோரிடத்தும் ஏகோபித்துப் பழகும் தன்மை யினன்" என்ருர்.

இஸ்லாமியா பாகத்தில் சுவாமிகள் மாலை நேரங்களில் சதுப்பு நிலங்களிலுள்ள புற்றரையில் தமது குழாத்துட னமர்ந்த வண்ணம் தேச கைங்கர்யங்களைப் பற்றிப் புத்திமதிகள் கூறுவது வழக்கம். தாம் சீக்கிரத்தில் மரித்துவிடக் கூடுமென்றும் அதற்குப்பின் அவர்கள் தக்கவாறு பாரத நன்ஞட்டைப் பரிமளிக்கச் செய்ய வேண்டுமென் றும் அவர் சொல்லிக் கொண்டிருப்பார். பின்பு, அடுத்த நாள் அதா வது இருபத்திரண்டாந் தேதி மார்த்தாண்ட ஆலயத்தின் ஜீர்ண

மான பாகத்தைச் சுவாமிகள் தமது சிஷ்யர்களுக்குக் காண்பித்து வந்தார். அப்பால், எல்லோரும் இருபத்தைந் தாம் நாளன்று அச்சாபாலத்திற்குப் (Acchabal) போய், ஜிஹாங்கீர் என்னும் முகலாய மன்ன ரின் பாழான எஞ்சியுள்ள அரண்மனையின் பகுதி களைப் பார்த்துத் திரும்பினார். அப்பொழுது சுவாமிகள் திடீரென்று தாம் அமரிநாதத்திற்குப் போக நிச்சயித்திருப்பதாகத் தமது சிஷ்யைகளிடம் கூறினார். பின்னர் கட்டாயத்தின் பேரில் புறக்கணிக்க வியலாது, நிவேதிதா தேவியையும் அழைத்துச் செல்ல விசைந்தார். அப்போது இரண்டு மூன்று ஆயிர யாத்திரிகர்கள் அமரிநாதத் திற்குக் கூட்டமாகப் பிரயாணமானார்கள். மற்றவர்கள் பால்கம் வரையில் அவருடன் சென்று அங்கேயே அவர் திரும்பும் வரை வதிவ தெனத் தீர்மானிக்கப்பட்டது. ஆகவே, சுவாமிகள் இருபத்தாறாந் தேதி பிற்பகலில் பர்வான் என்னும் ஸ்தலமார்க்கமாக அமர்நாதத்திற் குப் பிரயாணப்பட்டார்.

அச்சாபாலத்திற்குச் சென்று திரும்புதல்.

இக்காஷ்மீர தேசயாத்திரையில் சுவாமிகள் தமது சிஷ்ய கோடி களுக்கு உபதேசித்த இரண்டொரு முக்கியமான உபதேசங்களைமட் டும் இங்கு மொழிபெயர்த்துத் தருவோம்,

“எந்த தேசமும் (கிரேக்க நாடுகூட) ஒரு சமயத்திலாவது ஜப் பானியர்களைப் போல அவ்வளவு தேசாபிமானத்தோடு கார்யங்களை நடத்தியதில்லை. ஜப்பானியர்கள் பேசுவதில்லை; அவர்கள் செய்கை யிற்சிறந்த நலமுடையவர்கள்; அனைத்தையும் தம் தேச நலத்திற்காக அற்பணஞ் செய்யுந் தியாகி கள். தம் ராஜீய உரிமைகளையும் அதிகாரங்களையும் நாட்டில் ஒற்றுமை நிலவுவதற்காக விட்டுக் கொடுத்த பெரு நோக்கமுடைய தன்யர்கள் அந்நாட்டில் இன்றும் பல ருள்ளார்கள். ஜப்பானிய யுத்தத்தில் ஒரு தேசத் துரோகியைக் கூடக் கண்டுபிடிக்க முடியவில்லை. அதை உன்னுங்கள்; நலம் பெறு வீர்கள்.”

யாத்திரையி லருளிய முக்கிய உபதேசங்கள்

“பொன்னை நினைக்குந் துறவி அதை அடைய விருப்ப முடை யானையின் அவன் பஞ்சமாபாதகங்களைச் செய்த தோஷத்தை அடை கின்றான்.”

“ஹிந்துக்களின் விவாகம் சுவய சுகானுபவத்திற் கானதல்ல; தேச நன்மைக்கும் ஜாதி நன்மைக்கும் உரியதாகும்.”

"ஒருவன் ஒரே ஜன்மத்தில் தலைவனாகி விடுவதில்லை. அதற்கவன் எத்தனையோ பிறவிகளெடுக்கவேண்டும். ஏனெனில், சங்கஸ்தாபனமும், சீர்திருத்த முறைகளும் செய்வதில் கஷ்டமில்லை. அவன் பரீக்ஷை உண்மையான தேர்ச்சி, பல்வேறு மக்களை ஒரேவிதமான அனுதாப முடையவர்களாய் ஒன்று படுத்துவதிற்றானிருக்கின்றது. இது மெய்மறந்து பாடின்றி செய்யக் கூடியது."

இங்ஙனம் சுவாமிகள் தமது "காஷ்மீர தேச யாத்திரை'யை முடித்துக்கொண்டு நிவேதிதா தேவியுடன் அமரிநாத்தை நோக்கிப் பிரயாணமானார்.

46-ம் அத்தியாயம்.

அமரிநாதம்—க்ஷீரபவானி வாஸம்

(ஏகாந்த யோகாநுபவங்கள்)

ஆகாயத்தைத் தொடுவதுபோன்றிலங்கும் இமயத்தின் மேற்பாலுள்ள அமரிநாத க்ஷேத்திரத்தின் விசேஷமே விசேஷம்! வழியெங்குமுள்ள உலகின் எப்பாகத்திலும் காணப்படாத இயற்கை யழகு, பாரத பூமியிலேயே ஈஸ்வர சான்னித்யம் ஏற்பட்டுள்ளதென்பதைப் பிரமாணப் படுத்தும். அவ்வமயம் யாத்திரை செய்த நாலாயிரம் ஐயாயிரம் யாத்திரார்த்திகள் பகற்காலமெல்லாம் ஒரே கூட்டமாகச் சிலர் கதை பேசிக் கொண்டும், சிலர் பஜனை செய்து கொண்டும், மற்றுஞ் சிலர் பரவசமாகக் கானஞ் செய்து கொண்டும், அநேகர் 'கிருஷ்ண கேசவா' வென்று நாமஸ்மரணை செய்து கொண்டும் வழிநடந்தார்கள். பாதையில், சில இடங்களில் பயங்கரமான குகைகளும் புதர்களும் காணப்பட்டன. ஓரிடத்தில் வெகு உயரத்திலிருந்து மலைச்சரிவின் வழியாக ஓர் சிற்றருவி சிலுசிலுத் தோடிவரும்; மற்றோரிடத்தில் பசும்புல், கம்பளங்கள் விரிக்கப்பெற்றதுபோல் நேத்ரானந்தத்தைத்தரும்; ஓரிடத்தில் மலைச்செடிகளில் அற்புதமான மலர்கள் அபூர்வமான வண்ணமும் வாசனையுமுடையனவாய் மலர்ந்திருக்கும்; சிற்சிறு குன்றுகளுக் கிடையே மலையானைகள் வீறிட்டோடும்; ஓரிடத்தில்

இமாசலத்தை இறைவன் அலங்கரித்துள்ள விதம்

கிருஷ்ணசர்ப்பம் படமெடுத்தாடும். ஆகா! அந்த பிரம்மானந்தமான இமயப் பிராந்தத்தினை இயற்கையால் இறைவன் அலங்கரித்துள்ள அழகை நேரிற்கண் டானந்திக்க வேண்டுமேயன்றி, எழுதி யுணர்த்துதல் இயலாது. இதனாற்றான் எவ்வளவோ மேல்நாட்டு யாத்திரார்த்திகள் இந்தியாவுக்கு வந்து, இமயத்தின் இயற்கை யழகைத் தரிசித்த பின், தத்தம் தாய் நாடுகட்குத் திரும்பிச் செல்ல மனமில்லாதவர்களாய்த் தங்கிவிடுகிறார்கள்.

இவ்விதம் பகலில் இமயவரையில் இயற்கை யழகைத் தரிசித்த வண்ணம் அப்பாக்கிய வந்தர்கள் இராப்பொழுது வந்ததும் வசதியான ஓரிடத்தில் பலவித வண்ணமான தத்தம் கூடாரங்களை அடித்துக்கொண்டு தங்கி விடுவார்கள். சிலர் கற்களைக்கூட்டி அடுப்புமூட்டி உண்டு சமைப்பர்; சிலர் நீரோடையின் கரையிலமர்ந்து மாலைக்கடனை மாண்புட னியற்றுவர். அங்கோர் சிறு அங்காடிக் கடைத்தெருவுங் காணப்படும்; சாதுக்கள் தத்தம் காவிவர்ணக் குடையைக் கீழே நட்டு, அதனடியிலமர்ந்து ஆத்மவிசாரஞ் செய்வதும், சிலர் ஜபம் பண்ணுவதும், சிலர் உக்காக் குடிப்பதுமாக விருப்பர். இவ்வாறு அந்த யாத்திரிகர்கள் தங்குமிடம் ஓர் ஊர்போலிருக்கும். மறுநாட் காலையில் அவ்வூர் மறைந்துபோம். ஆகா! ஹிந்து மதக்கொள்கைகளின் உயர்வுதானென்னே! என்னே! ஏனைய சமயக்கொள்கைகள் சாஸ்திரீய சம்பந்தம் நிரம்ப வுள்ளனவல்ல; சுகாதாரத்தை அந்தர் முகமாகப் போதிப்பனவல்ல. ஹிந்து மதமோ அத்தகைய தன்று. மதமே வாழ்வு; வாழ்வே மதமாக வுள்ளது. இத்தகைய யதேச்சையான காற்றுள்ள இமயப் பிரதேசத்தில் வசிப்பதினாலேயே மக்கள் சர்வ ரோகங்களும் நிவாரணமாகி ஆரோக்கிய திடகாத்ர சரீரிகளாய்விடுகிறார்கள் என்பதன்றோ சமயத்தில் யாத்திரையை ஓர் முக்கியாம்சமாகப் புகுத்திவைத்த மகாத்மாக்களின் கருத்து. க்ஷேத்திர யாத்திரையென்பது ஏனைய சமயிகட்கு இத்தகைய சிறப்புடையதன்று.

தீர்த்த யாத்திரையின் கருத்து

சுவாமிகள் நூற்றுக்கணக்கான யாத்ரிகர்களுடன் சென்றார். பெரியோர்களால் கையாளப் பெற்றுவந்த பூஜை புநஸ்காரங்களைச் சிறிதும்வழுவாது செய்யுமியல்பினர். அவர் பூஜைக் காலங்களில் விரதமனுஷ்டிப்பதும், மந்திரங்களைக் குறைபாடின்றி ஓதுவதும், பிரதக்ஷிணம், ஸ்மரணம், படனம், அர்ச்சனம், நிவேதனம், தீபாராதனம் முதலிய பூஜா அம்சங்களைச் சிறிதும் விடாது செய்வதும் சுவாமிகளி

டம் பரிபூர்ணமாய்க் காணப்படும். இவற்றின் அந்தரார்த்தங்களை அவர் தாம் உணர்ந்ததுமன்றி அவ்வப்பொழுது தமது சிஷ்யர்களுக்கும் உபதேசித்தும் வந்திருக்கிறார். மேற்கூறிய நியமங்களை விட்டவன் 'பதிதன் ஆவான்; அவன் சண்டாளத்துவத்தைச் செய்த தோஷத்தை யடைவான்'' என்று அவர் அடிக்கடி கூறுவது வழக்கம். மதானுஷ்டானங்கள் யாவும் சாஸ்திரீயமானவை யென்பதில் தீவிர நம்பிக்கையும் உறுதியுமுடைய சுவாமிகள் எப்பொழுதும் இவ்விதம் யாத்திரை செய்வதில் வெகுப்பிரியமுடையாராதலால்தான் அதில் அவருக்கு மிகுந்த சிரத்தை யிருந்தது.

சுவாமிகளின் மகா விவேக வசனங்களிலீடுபட்டு அவ்யாத்திரார்த்திகளுள் பல சாதுக்கள் அவரை யணுகிப் பிரமாதமாய்த் துதித்தார்களானாலும், சுவாமிகள் சிகாகோ பிரசங்க முன்னுரையிற் கூறிய வண்ணம் 'கிணற்றுத் தவளை'களான அவர்கள், அவர் தம்முடன் ஓர் ஐரோப்பிய (கிறிஸ்தவ) மாதை அழைத்துக் கொண்டு வந்திருப்பதைப்பார்த்து, அருவருத்துத் தமது கூடாரங்களுக்குச் சமீபத்திற் கூட

யாத்ரிகர்களும் சுவாமிகளும்

சுவாமிகள் கூடாரமிடக் கூடாதென்று முதலில் சச்சரவு செய்ய வாரம்பித்தார்கள். சுவாமிகள் வேடிக்கையாக அவர்களை நெருங்கி வசிக்கத் தொடங்கி, அவர்களுக்கு ஏற்றவாறு உபதேசிக்க வாரம்பித்தும் 'செவிடன் காதில் ஊதிய சங்கு' என்ற சங்கதியாய் விட்டது அதனால் சுவாமிகள் இந்த முரடர்களுடன் நாமேன் வம்பு செய்யவேண்டுமென்றெண்ணி விலகிக் கொண்டார். அந்த யாத்திரிகர்களை அமரிநாத க்ஷேத்திரம் சென்று மீளும் வரைக் காத்து, இரயில்வே ஸ்டேஷனில் கொண்டுவந்து அறிக்கையுடன் ஒப்புவிக்க, அரசாங்கத்தாரால் நியமிக்கப்பெற்றிருந்த தாசீல்தார்—(முகம்மதியர்) சுவாமிகள் இஸ்லாமிய மதத்தின் எழிலினை விரித்து விளக்க, அவ்விவேக வசனங்களி லீடுபட்டு, அவரை இடையிடையே உபசரிப்பதும், அவருக்குத் தேவையான வசதிகளைச் செய்து கொடுப்பதுமாக விருந்தார். மற்ற சாதுக்களும் காலக்கிரமத்தில் சகோதரியிடம் அன்புடையாரானார்கள்.

தீர்த்த விசேஷமான பவான் என்னும் பிரதேசத்தைக் கடந்து, சுவாமிகள் யாத்திரிகர் கூட்டத்தோடு, ஆட்டிடையர் சேரியாகிய பால்கம் (Pahlgam) என்னும் அம்பு போலமைந்துள்ள கணவாயில், லிடர் (Lidar) என்னும் வெகு உயரத்தினின்று விழும் அருவிக்குச் சமீபத்தில் கூடாரமிட்டார். இங்கு ஏகாதசி விரதத்தை இயற்றும்

பொருட்டு அனைவரும் ஒருநாள் தங்கினார்கள். அப்பால், செல்லத் தொடங்கி சந்தனுவரத்தையடைதலும், அங்கிருந்து வியாபித்திருந்த உறைந்த பணிப் படலத்தில் அநேக ஆயிரமடி யுயரம் ஏறும்படிச் சுவாமிகள் தமது சிஷ்யையைத் தூண்டினார். இப்படி மிக்க பயங்கரமான செங்குத்தாயுள்ள குன்றுகளிலேறி வெகு சிரமப்பட்டு நாலுபக்கங்களிலும் ஒரே பணிக் கட்டியாய் உறைந்திருக்கும் 1800 அடி உயரத்திலுள்ள ஓர் சமபூமியை யடைந்து அங்கு கூடாரமிட்டு அன்றிராப் பொழுதைக் கழித்தார்கள். மறுநாட்காலையில் பின்னும் ஏறத் தொடங்கி லிடர் அருவியின் உற்பத்திஸ்தானத்திற்குச் சுமார் ஐந்நூறடிக்குமேலுள்ள ஓரிடத்தை யடைந்து யாத்திரார்த்திகளுடன் தங்கினார். அடுத்த நாள் கரடு முரடாயும் செங்குத்தாயுமுள்ள குன்றுகள் பலவற்றையும் பனியுறைந்த பிரதேசங்கள் வழியே தாண்டிச் சென்று, பந்தாஜஹாரணி எனும் ஐந்தருவிகள் அற்புதமாய்ப் பாயும் ஸ்தானத்தை யெய்தி உதக வஸ்திரத்தோடு ஒவ்வொரு அருவியிலும் நீராடி, பூஜை முதலியவற்றைப் புரிந்து சகோதரியையும் இயற்றுவித்து, மேன்மேலும் அபாயகரமான சிகரங்கள் வழியே ஏறி அந்த யாத்திரிகர்களுடன் அடைந்தார்கள் அப்பா அந்த அமரிநாதத்தை! அமரிநாத க்ஷேத்திரத்தில் ஆலயமானது ஓர் பெருங்குகையிலுள்ளது. சுவாமிகள் சகோதரியுடன் அருகிலோடும் அருவியில் நீராடி, அற்புத மூர்த்தியாய் சிவசாரூபமென இவ்வவனிக்குதித்தெழுந்த மாமுனியாய் சந்நிதானத்தை யடைந்து, பனிக்கட்டியா லமைந்த பரம மூர்த்தியாம் அகிலாண்ட பூர்த்தி சச்சிதானந்த விக்ரகமாய் விளங்கும் சிவலிங்கத்தை, சிரமிசைக் காங்கள் கூப்பிக் கண்ணீர் தாரையாக வழிய, வாய்குழற, மெய் சிலர்ப்ப,

பவான், பால்கம், லிடர், சந்தனுவாம், பந்தாஜஹாரணி, ஆகிய ஸ்தானங்களைக் கடந்து யாத்திரை செய்தல்

வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி
ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்க்
கோனாகி யான் எனதென் றவரவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றாயை என்சொல்லி வாழ்த்துவனே

என்று துதித்து நின்றார். பாம பக்த சிகாமணிகளான சாதுக்கள் "ஓம் ஹரா! ஹரா! மாக தேவா! சம்போ! கங்காதரா" என்று ஆரவரித்து, அலறி விழுவதும் எழுவதும், பணிவதும், ஆடுவதும் பாடுவதும் பாவசமாகி மெய்சோர்ந்து வாடி மனமுருகி, உள்ளங்கனிந்து,

உவகைகூர்ந்து இன்பமெய்தி விளங்குவதும்கண்டு சுவாமிகள் பாவசப் பட்டு அப்படியே சமாதியாகி 'சிவோகம்' என்றுஸ்மரித்து ஆனந்தா னுபவமெய்தினர்; மீண்டும் 'அரும்பொனே! மணியே! என் அன்பே! என் அன்பிலூறும் ஆனந்த வெள்ளமே" என்று பாடிக் கூத்தாடினர். ஆகா! இதுபோன்ற க்ஷேத்திரங்களுக்குப் போய், தரி சித்தபின் மனம் இல்லறத்தை நாடுமோ? இந்திரிய சுகங்களைத் தேடுமோ? துன்பங்களால் வாடுமோ? பொய்ப்புகழைச் சூடுமோ? பொருளாசையால் ஆடுமோ? ஒருகாலுமில்லை. இதனாற்றான் க்ஷேத்திர யாத்திரையே விரும்பும் சாதுக்கள் இப்பாரத பூமியிலதிகம். பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர் "நரேந்திரன் தான் யார்? எதற்காக அவதரித் தவன்? என்பதை யறிந்த பின்னர் ஒருக்கணமும் அந்த ஸ்தூல சரீரத் துடன் கூடியிரான்" என்றருளியபடி, சுவாமிகள் இங்கு அநேகமாக தீர்க்க சமாதியிற் கூடியவற் போன்றே யாகிவிட்டார். வெகுநேரம் அவர் சமாதிநிலையில் வீற்றிருந்தார். அப்பொழுது சுவாமிகள் தமது சிஷ்யையிடம் "இதுவரையில் நான் இத்தகைய உயர்தரமான அளவில் சமாதியிற் கூடியிருந்ததே யில்லை; இதை யொத்த க்ஷேத்திரங்களுக் குச் சென்றது மில்லை. இது ஏதோ ஈஸ்வரானுக்கிரகத்தினு லேற்பட் டது" என்றியம்பினர். இந்த க்ஷேத்திரத்தின் வாலாற்றை "ஒரு சமயம் சில ஆட்டிடையர்கள் தமது ஆடுகளைத் தேடும் வண்ணம் இக் குகையைத் தற்செயலாக அடைந்து அங்குவிளங்கிய கற்பூர வண்ணர் என்றும் கரையா பனிலிங்கத்தை—புறக்கண்கட்குப் புலப்படாப் புத் தேளிர் கோவிலைக் கண்டார்கள். அது முதல் அந்த க்ஷேத்திரம் பிர சித்தமாயிற்று" என்று சுவாமிகள் நிஷ்டை வாயிலாக உணர்ந்தார். எப்படிச் சிவபெருமான் ஏகாந்தமான அந்த ஸ்தலத்தில் விளங்கு கிறரோ அவ்வண்ணமே தாமும் ஏகாந்தமான இமயப் பிரதேசத்தில் தமது எஞ்சிய காலத்தைக் கழித்து முக்தியடைய வேண்டுமென்று அவர் சிவபெருமானிடம் வரமிரந்தார்.

சுவாமிகளின் ஆனந்தானுபவம்

அப்பால், பிரிய மனமின்றிக் கடமையும் சிவாக்ஞையும், ஜன்ம தேசத்திடத்தில் தாம் கொண்டுள்ள அன்பும் பிடித்துந்த சுவாமிகள் பால்கம் என்னுமிடத்தை யடைந்து தமது ஐரோப்பிய சிஷ்யைகளைச் சந்தித்துத் தமது யாத்ரானுபவங்களை யெல்லாம் அவர்களுக் குரைத்த வண்ணம் பிரயாணமாகி இஸ்லாமியா பாக்க மார்க்கமாய் ஆகஸ்டுமீ 8௳ ஸ்ரீநகரை யெய்தினர். ஸ்ரீநகரில் சுவாமிகள் அநேகமாகத் தனித்

ஸ்ரீமத் விவேகானந்த ஸ்வாமிகள் (யோக நிலை)

566-ம் பக்கம்)

திருப்பதும், சமீபத்திலுள்ள வனங்களுக்கேகி இரண்டொரு நாளி ருந்து வருவதுமாகச் செப்டம்பர்மீ 30-ம்நாள் வரையிலிருந்தார். அப்பொழுதெல்லாம் தீண்டாமையை யொழித்துச் சர்வசமய சமரஸ பாவத்தோடு எங்கும் ஹிந்துமதத்தை அதன் உண்மையான தாத்பரியங்களுடன் சுறுசுறுப்பாயும் அனுபவசித்தியும் பொருந்த வியாபிக்கச் செய்தற்குரிய சாதனங்கள் அவருக்குத் தீர்க்கதரிசனமாயின. அப்பொழுது சுவாமிகள் தமது குருதேவரின் "சமுத்திரத்தைப் போன்ற ஆழமும் ஆகாயத்தைப் போன்ற விசாலமும் உள்ளது ஹிந்து மதம்" என்னும் வாக்கியத்தைத் தமது சிஷ்ய கோடிகளுக்கு உணர்த்தி வந்தார்.

ஸ்ரீ நகராவாசம்

ஸ்ரீ நகராவாஸத்தில் சுவாமிகள் சாஸ்திரம் சரித்திரம் முதலியவற்றின் போக்கைத் தமது சீடர்களுக்குத் திடம்பட விளக்கி வருவாராயினர். தோடர்வரைந்த "ராஜஸ்தான சரித்திரம்" என்னும் நூலைப்பற்றிப் பேசத் தருணம் வாய்த்தபோது சுவாமிகள் 'வங்காள தேசியக் கொள்கைகளில் முக்காற்பங்கு இப்புத்தகத்திலிருந்தே எடுக்கப்பெற்றவை' என்றபிப்பிராயப் பட்டார். மீராபாய், கன்னியாசி கிருஷ்ண குமாரி, ராஜபுத்திர வீரர் பிரதாப்சிங் முதலியோரது சரித்திர உபாக்யானங்களைப் பற்றிச் சுவாமிகள் கூறுவாராகி அத்தகைய பெரியோர்களிருந்த காலத்திய சமய, ராஜீய ஜனசார நிலைக்கும் தற்போதைய ஸ்திதிக்குமுள்ள தாரதம்மியத்தை விளக்கிக் காட்டுவார். ஹிந்துக்கள் ஆராதிக்கும் விக்கிரஹத்தைக் குறித்துப் பேசும்பொழுது 'அவை பக்தர்கட்கு அடையாளமாக விளங்குவது மட்டுமின்றி அகக் கண்களுக்குப் பிரத்யட்ச ரூபமாயும் பொலிவன' என்றருளினர்.

ராஜஸ்தான சரித்திரத்தைப் பற்றிய அபிப்பிராயம்.

சுவாமிகள் காஷ்மீரத்தை யெய்திய பின்னர், ஸ்ரீநகர மகாராஜா அவரை உபசரித்து வேண்டிய சௌகரியங்களைச் செய்து கொடுத்தார். பிறகு, அவ்வரசர் உபசாரத்திற் கிணங்கி, ஒரு மடத்தையும் சம்ஸ்கிருத கலாசாலையையும் ஸ்தாபிப்பதற்கு ஏற்ற பூமி யொன்றைப் பார்க்கும் பொருட்டு நதி தீரத்திற்குச் சென்று திரும்பினர். மிக்க விசாலமானதும், சகல வசதிகளும் இயற்கையிலேயே அமைந்ததுமான ஓர் ஸ்தலத்தை சுவாமிகள் குறிப்பிட, மகாராஜா அவர்கள்;

சுவாமிகட்கு ஸ்ரீநகரமன்னரின் பூசாஸனம்.

அதை சுவாமிகட்குச் சாஸனஞ் செய்து கொடுத்தார். இக்காலங்களில் சுவாமிகள் ஊக்கமுடன் யோகாப்பியாசஞ் செய்து வருவதைக் கண்ட ஐரோப்பிய சிஷ்யைகள், தாமும் யோகாப்பியாசஞ் செய்ய விரும்ப, சுவாமிகள் அவர்களை இந்த இடத்திற் கனுப்பி, இந்துக்களின் அனுஷ்டானவழி நின்று வருமாறு பணிக்க, அவ்வாறே அவ்வமயம் இந்த மடம் ஸ்திரீகளுக் கேற்றதாயிற்று. பிறகு, இந்த இடத்தை சம்ஸ்கிருத கலாசாலைக்காக ஸ்ரீராமகிருஷ்ண மடத்தாருக்கு சாஸனம் செய்யும் விஷயம் சட்ட சபைக்கு வந்தபோது சர் அடல்பர்ட் டாவ்பட் என்னும் ஸ்ரீநகர அரசாங்கப் பிரதிநிதியான புண்யவான் குறுக்கிட்டுத் தடுத்து விட்டார். மற்றும் சேவியர் தம்பதிகள் குமயான் (Kumaon) குன்றினில் ஓர் பிரதேசத்தை வாங்கத் தீர்மானித்தமையால் சுவாமிகளும் இவ்விடத்தைப் பற்றிய விஷயத்தில் அதிக சிரத்தை கொள்வதில்லை.

பின்னர், செப்டம்பர்மீ 20உ சுவாமிகள் தகல் ஏரி (Dahl Lake) க்கு அமரிக்காதேச ஆலோசனைச் சபைத் தலைவரின் அழைப்பிற் குகந்து சென்று இருந்துவிட்டு இரண்டு நாட்களுக்குப்பின் ஸ்ரீநகருக்குத் திரும்பினர். அமரிநாத யாத்திரையில் அப்பனை சிவ பெருமானைத் தரிசித்து வந்ததிலிருந்து சுவாமிகள் அன்னையான உமாதேவியைத் தியானத்தில் தரிசிப்பதும் தக்ஷிணேஸ்வரத்தில் தாண்டவமாடுந் தாயை—அகிலாண்ட கோடிப் பிரம்மாண்ட நாயகியை அனவரதம் துதிப்பதுமாக விருந்தார். அடிக்கடி சாமப்பிரசாத் என்னும் பக்த சிகாமணி யருளிய "தேவீ ஸ்தோத்திர"த்தை சுவாமிகள் திவ்யமாகக் கானம் பண்ணுவதுண்டு. இக்காலங்களில் மோன நிலையையே அவர் பெரிதும் வகித்திருந்தார். முன்போல அவர் தமது சிஷ்யைகளுடன் அதிகம் பேசுவதில்லை. அவருடைய சித்தம் பெரிதும் சூக்ஷுமத்திலேயே பிரவேசித்திருந்தது. மாலை நேரங்களில் ஸ்ரீநகருக் கருகாமையிலுள்ள நதியில் படகேறி அக்கரையை யெய்தி ஏகாந்தமான இடத்தில் வீற்றிருந்து நிஷ்டையிற்கூடி அருட்தாயை ஆனந்தானுபவத்தால் தரிசித்து "ஜெகதீஸ்வரி! என்னை நீ விரைவில் அழைத்துக் கொள்" என்றிரந்து தாம் நிலை நிறுத்தற்குரிய மத உத்தாரண

ஆங்கிலத்தில் அருட்கவி பாடுதல்

வேலைக்காக அன்னையிடத்தில் ஆசிபெற்று மீள்வார். இந்நாட்களில் அவரிடம் அனுதினமும் உபதேசம் பெறவந்த புதிய பக்தரான பிரம்ம சமாஜ வைத்திய ரொருவருக்கே யன்றிச் சுவாமிகள் வேறெவருக்

கும் உபதேசம் செய்ததே இல்லை. வரவர அவர் அதிக உக்ர மூர்த்தியா யிருந்தார். சில வார்த்தைகள் கூட அவர் பேசியதில்லை. இத்தன்மையைத்தான் யோகிகள் 'குலகுண்டனி' யில் ஜாக்கிரமென்று கூறுவார்கள். ஒரு சமயம் சுவாமிகள் தியானத்திலிருந்து திடீரென வெளிப்பட்டு அவசரமாய் எழுதுகோலை எடுத்து "ஜெகன்மாதா காளிதேவி" என்று தலையங்கமிட்டு அபூர்வமான ஆங்கிலக் கவியொன்றை யியற்றி யருளினர். இதுவே இன்றும் பெரிய ஞானப்பிரகாச தரங்கமென்று அவருடைய அடியார்களால் போற்றப்படுவது. இக்கவியின் கடைசிப் பதத்தை விரைந்து முடித்ததும், எழுதுகோல் அவர் கையினின்றும் நழுவிற்று; அவர் அப்படியே தரையிற் சாய்ந்து பாவ சமாதியிற் சேர்ந்தார்.

அமரிநாதத்திலிருந்து சுவாமிகள் திரும்பிய பின்னர், அவருடைய நிலைமையைக் கண்டு சிஷ்ய கோஷ்டிகள் அஞ்சினர். தலையில் தீப்பிடித்தவன் எவ்வாறு தண்ணீரைத் தேடியலைவானோ அதுபோலச் சுவாமிகள், "தாயே! தாயே!" என்று காளிதேவியைத் தோத்தரிக்கலானர். பாவசராகி, "காலாந்தகியாய், பக்தர் மனதைக் கொள்ளை கொள்ளும் பாகீரதியாய், சக்தியாய் விளங்குகிருள் ஈஸ்வரி' என்றும், "நீ என்னை வாள்கொண்டு வீசினலும் நான் உனது சரணரவிந்தங்களை விடவே மாட்டேன்" என்றும், 'சுகமடைவதையே நோக்கமாக உள்ள மக்களெல்லாம், மானிலத்தில் பாவங்களை யியற்றவே பிறந்தவர்களாவர்; கஷ்டத்தைத் தேடி துன்பத்தை யனுபவிப்பவர்களே பரம சுகத்தை யடைவோராவார்; அப்பேர்ப்பட்ட மகான்களுக்குச் சித்திரவதையிலும் பிரம்மானந்த மேற்படும்; நாம் பயங்கர ஸ்வரூபத்தை காமக்ரோத பயந்தீர உபாசிப்போம்" என்றும், சுவாமிகள் கண்மாரி பெய்து பேசுவார். சில சமயம் அவர், "தேவியைச் சித்ததீனமில்லாமல் தீமையிலும், பயங்கரத்திலும், துக்கத்திலும் சர்வநாசத்திலும் பஜியுங்கள்; அஃதே பேரின்பத்தை நல்கும்" என்றியம்புவார்; "அறிவிலிகள், 'தாயே! உன்னுடைய திருமேனியில் ஓர் மாலையைச் சாத்தி, பயத்தோடு திரும்பி உன்னைக் காருண்யரூபி யென்று ஸ்தோத்திரம் செய்கிறர்கள்" என்று பழிப்பார்; பயங்கர ரூபத்தை பக்தி செய்வதிலேயே பயங்கர க்ஷணத்திரயங்கள் நசிக்கப் பேரின்ப நிலையை எய்துதலாம். மரணத்தைத் தியானியுங்கள்; இயமனை வாழ்த்துங்கள்: பயங்கரத்தைப் போற்றுங்கள். தேவியே பிரம்மமாய் விளங்கு

காளிதேவி ஸ்தோத்திரம்.

கிறாள்! அவளுடைய சாபமும் அன்பினுல் அனுக்கிரக மாகிவிடும்; மனமே ஒரு பெரிய சுடுகாடாக வேண்டும்; அகந்தையும், தன்னலமே நாடுந் தன்மையும் ஆசைகளும் அச் சுமசானத்தில் சாம்பராக வேண்டும்; அப்பொழுதுதான் ஜெகதீஸ்வரி பிரத்யக்ஷமாவாள்'' எனப் பெருமிதமுடன் பேசா நிற்பார். இந்தக் காலமுழுதும் எந்நேரமும் அவர் காளிதேவியைப் போற்றியவண்ணமே யிருந்தார். "தேவியே ஜெகத்தை ஆட்டுவிப்பவள்; அவளிடத்தில் பக்தி செலுத்த அச்சமென்பது சிறிதும் வேண்டியதில்லை. அவளுடைய பக்தர்கள் அஞ்சலொழிந்து சிம்மங்களாகி விடுவர். அவர்களுடைய நடையின் அதிர்ச்சியால் அண்ட கோளகைகளெல்லாம் தூளியாய்ப் பறக்கும். தேவிக்கு உங்களிடத்தில் தயையுண்டாமாறு நடந்து கொள்ளுங்கள்; அவளே சர்வ சக்தை யென்பதை மறவாதீர்கள்'' என்னு மிதுபோன்ற உபதேசங்களை அவர் புரியுங்கால் சிஷ்ய கோடிகள் சிரத்தையுடன் சிரவணஞ் செய்வார்கள்.

இவ்விதம் காளிதேவியின் தியான வயப்பட்ட சுவாமிகள் செப்டெம்பர் மாதம் 30வ தமது சிஷ்யைகளி லெவரும் தம்மைப் பின்ருெடர லாகாதெனக் கண்டிப்பாய் ஆக்ஞாபித்து விட்டு, 'வண்ண' அருவிகள் வளமுடன் பாயும் க்ஷீரபவானி யென்னும் ஏகாந்த ஸ்தலத்தை யெய்தினர்; சென்றவர் அக்டோபர் மாதம் 6வ தான் மீண்டும் ஸ்ரீநகருக்கு வந்தார். அந்த க்ஷீரபவானி தேவியின் சந்நிதானத்தில் சுவாமிகள் ஹோமம் வளர்த்து, க்ஷீரம் அன்னம் வாதுமை முதலியவற்றை நைவேத்தியம் செய்து வழிபட்டார். தேவியிடத்தில் எழுந்த பக்தியால் சுவாமிகள் "தாயே!

சுவாமிகள் க்ஷீரபவானிக்கு எழுந்தருளல்.

"ஒளிமருவு நினதுதிரு வருளனுத் துணையேனும்
உற்றிடிற் சிறு துரும்பும்
உலகம் படைத்தன் முதல் முத்தொழிலி யற்றுமென
உயர்மறைக ளோர நந்தம்
தெளிவுற முழக்கவது கேட்டு நின் றிருவடித்
தியானமில் லாம லவமே
சிறுதெய்வ நெறிசெல்லு மானிடப் பேய்கள்பாற்
செல்லாமை யெற்க ருளுவாய்'' (அருட்பா.)

என்று தோத்தரித்து வணங்கினர். விசேஷ சாதனமாக ஒவ்வொரு நாட் காலையிலும் ஓர் பிராம்மணச் சிறுமியை உமாகுமாரியாக பாவித்

துப் போற்றினர். பயங்கரமான பல ஹடயோக சாதனங்கள் அவருக்கு அந்த க்ஷேத்திரத்தில் சித்திக்கலாயின. இங்ஙனம் ஐந்து நாட்கள் க்ஷீரபவானியிற் கழிந்தபின் சுவாமிகள் ஸ்ரீநகரை யடைந்தார். அவர் ஏதோ திவ்ய தேகியாய் பிரம்ம தேஜசுடன் விளங்குவதைக் கண்டு சிஷ்ய கோடிகள் அதிசயித்தார்கள்.

க்ஷீரபவானி ஆலயத்தின் பல பாகங்கள் முகம்மதியப் படையெடுப்பால் தகர்க்கப் பட்டிருப்பதைக் கண்டு அவர் மனந்தாளாது சீற்றங்கொண்டு 'இத்துணை தூரம் இந்த மூட சனங்கள் தங்கள் கோயிலைப் பிறர் இடித்துத் தகர்க்க எப்படிப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்? நான் அந்தக் காலத்தில் இருந்திருப்பேனாயின் இவ்வாறு நடக்க விட்டிருப்பேனா? என்னுயிர் போமளவும் இந்த க்ஷேத்திரத்தைக் காக்க ஒருகை பார்த்தே யிருப்பேன்' என்று தமக்குள் எண்ணிக்கொண்டிருக்கையில் பவானிசங்கரி அசரீரியாக "குழந்தாய்! என்னை நம்பாதவர்கள் ஆலயத்தினுட்புக்கு விக்ரஹத்தைக்கூட தூள் தூளாக்கினாலும் நான் இல்லாமற் போய்விடுவேனா! அதனால் எனக்கு உன்னிடமுள்ள அன்பு குறையுமா? உனக்கு என்னிடத்தேயுள்ள பக்தி தான் போமா? கவலை யொழி! அபிமானத்தை விடு" என்றருளினள்.

க்ஷீரபவானி சங்கரி ஆலயம்

சுவாமிகள் க்ஷீரபவானியிலிருந்து ஸ்ரீநகரை யடைந்ததும் இதுபோன்ற தமது தீர்த்தாடன அனுபவங்களைச் சிஷ்யைகளிடம் புகன்று அன்னையின் அருட்திறத்தை யுன்னி யுன்னி உவகை பூத்தார். அவர் பேலூர் மடத்தை அமைப்பதற்குச் சாஸ்வத நிதியாக வைத்திருந்த பொருளைக் கொண்டு க்ஷீரபவானி கோயிலை சீரணோத்தாரணஞ் செய்ய எண்ணியக்கால், பவானி சங்கரி 'அப்பா! எனக்குப் புதியதொரு கோயில் வேண்டியிருந்தால், நான் ஆயிரக்கணக்கான கோயில்களை அடையக் கூடும். இதே இடத்தில் ஏழு கூட கோபுரங்களமைந்த ஓர் சுவர்ணமயமான ஆலயத்தை நான் இச்சாமாத்திரத்தில் உண்டாக்கிவிடுவேன்' எனலும் சுவாமிகள் அடக்கமாய்த் தேவியின் திருத்தாள்களை தியானித்த வண்ண மிருந்துவிட்டார்.

இதேகாலத்தில் ஓர் முகம்மதியப் பக்கிரி சுவாமிகளுடைய திருமேனி யழகில் ஈடுபட்டவராய் அவரை அடிக்கடி வந்து கண்டுபோவது வழக்கம். இங்ஙனமிருக்கையில் அப்பக்கிரியாருக்கு ஒரு சமயம் கொடிய சுரங்கண்டது. சுவாமிகளிதைச் செவியுற்றதும் தாமே நேரிற்சென்று அவருடைய சிரசைத் தமது கரத்தால் ஸ்பரிசிக்க

அன்றே அந்நோய் தீர்ந்தது. இந்நிகழ்ச்சியால் அப்பக்கிரியாருக்குச் சுவாமிகளிடத்தில் அதிக அன்பு ஏற்பட, அவர் முன்னிலும் அதிகமாக வரத்தொடங்கினர். இதைக்கவனித்த அப் பக்கிரியாருக்குப் பக்கிரி (தலைவர்) தமது சிஷ்யர் எங்கு சுவாமிகளின் அடியாராகி விடுவரோ வென்ற அச்சத்தால் இனிச் சுவாமிகளிடம் செல்லக்கூடதென்று அப்பக்கிரிக்குக் கட்டளையிட்டது மன்றி, சுவாமிகளை உதாசீனமாகப் பழிக்கவும் முற்பட்டார். அம்மட்டோடிராமல் சுவாமிகட்குச் சூன்யமும் வைத்து விட்டார். அப்பக்கிரியாரின் உத்தேசப்படி அவர் செய்த சூன்யவேலையால் சுவாமிகள் உதிரம் கக்கவில்லையாஞலும், சுரமும் புத்திமாராட்டமு முற்று அற்பவாதனையை யடைந்தார். ஜிதேந்திரியரான சுவாமிகள் வெகு எளிதில் அத்துன்பத்தைப் போக்கிக்கொண்டாரேனும், 'ஸ்ரீராம கிருஷ்ணரின் சிஷ்யாாய் நாம் இருந்ததன் பயன்றனென்ன ? தனது சித்திகளும் வேதாந்தமும் எதற்குப் பிரயோஜனம் ? இந்த சூன்யத்திற்கு நாம் கட்டுப்படாமலிருக்க முடியவில்லையே'' என்றெண்ணியவராய், பின்னர் வெகு நாட்கள் கழிந்தபின் கல்கத்தாவை யடைந்தபோது ஸ்ரீசாரதாமணி தேவியிடத்தில் இந்நிகழ்ச்சியைக் கூற, அவ்வம்மை தமது ஞானச்சேயை இயன்றவாறு தேற்றினர். சுவாமிகளும் அப்பக்கிரியின்பால் தாம் கொண்டிருந்த அபிமானத்தால் அப்பக்கிரியின் குருவை ஒன்றுஞ் செய்யவில்லை. சிவபெருமானென்றே போற்றப்படும் அத்வைத மத ஸ்தாபகரான சங்கரரே ஓர் மலையாள மாந்திரிகனல் இவ்வித சூன்யத்திற் குட்பட்டு, அது தீரா நோயாகத் திரும்ப அதனல் அவர் ஜடசமாதியடைய நேர்ந்ததன்றோ ? இதைப் போன்ற நிகழ்ச்சி ஸ்ரீராமகிருஷ்ணரின் சரித்திரத்திலும் விசதம். அதாவது, ஸ்ரீராம கிருஷ்ணர் நான்காண்டுகள் யோகசாதனங்க ளியற்றி ஸ்ரீகாளி தேவி அவருக்குக் காட்சியளித்த சம்பவத்திற்குப் பிறகு, ஒரு நாள் அவர் உண்மையாக ஒன்று சொல்ல, அது போதாத காலத்திற்கு அவருடைய சிற்றன்னையின் புதல்வரான சகோதரரும், பெரிய சாதனரும் பண்டிதருமான ஹலத் ஹரி என்பாருக்குக் குற்றமாகத் தோன்ற, தற்பெருமையால் அவர் பரமஹம்சரை 'எனக்கு இளையவனை நீ என்னை அவமதித்துப் பேசத் துணிந்தமையால் உனது வாயினின்றும் உதிரம் கக்குவாய்' என்று சாபந் தந்து சென்றார். அவ்வண்ணமே தேவரும் ஒருநாள் கட்டிக் கட்டியாகக் கரு இரத்

சுவாமிகட்குப் பக்கிரி சூன்யம் வைத்தல்.

தம் கக்க வாரம்பித்து "தேவி! தேவி!" என்று தபிக்க, யதேச்சையாக அங்கொரு சாது தோன்றினர். அவர் ஸ்ரீராம கிருஷ்ணரைப் பார்த்து 'மகாத்மாஜி! பயப்படவேண்டாம்! தாம் மிக்கக் கடுமையான யோக சாதனங்களைச் செய்தமையால், சுஷும்னு நாடி திறந்து, தலைக்கேற வேண்டிய இரத்தம் நல்லவேளையாக வாய் வழியே வெளிப்பட்டுத் தேவரீரைக் காப்பாற்றி விட்டது. உதிரம் தலைக்கேறி இருக்குமானால் தேவரீர் ஜட சமாதி யடைந்திருப்பீர்கள். பகவான் தம் வாயிலாக ஏதோ ஓர் மகத்தான கார்யத்தை யியற்றவே இங்ஙனம் அருள் புரிந்திருக்கிறார்" என்று கூறிப் போனர். அப்படியே குருதேவர் இரண்டொரு நாட்களில் குணமடைந்தார்.

இத்தகைய சூன்யத்தால் விவேகானந்த சுவாமிகள் வாதனையுற்றது அது இரண்டாந் தடவை யாகும். சுவாமிகள் தமது நோக்கங்க ளெல்லாவற்றையும் மறந்தவராய் "உடம்பினுற் பெற்ற பயன் உடம்பினில் உத்தமனைத் தேடுதற் பொருட்டே" என்ற ஒரே தியானமுடையாரா யிலங்கினர். அன்பைத் தவிர வேறெதையும் அவர் இந்நாட்களில் உபதேசித்ததே யில்லை. 'அன்புதான் அனைத்திற்கும் ஆதி காரணம். அன்பினுல் சாதிக்கக் கூடாத கார்யமே யில்லை. அதனுல் அண்டங்களை ஜெயிக்கலாம்! ஆதலால், அன்புதயை, ஜீவகாருண்ய முடையவராக முயலுங்கள்' என்றியம்பி அவர் தமது சிஷ்யர்களை உற்சாகப்படுத்தி வருவாராயினர். அதற்கு உதாரணமாக அவர் உரைத்தருளிய கதை வருமாறு: "வசிஷ்ட விஸ்வாமித்திரர் என்ற இரண்டு மகரிஷிகள் ஹிந்துக்களால் பெரிதும் கொண்டாடப்படுகிறவர்கள். அவர்களுள் விஸ்வாமித்திரர் மிக்கக் கோபிஷ்டர்; அழுக்காறு படைத்தவர். வசிஷ்டரோ முனிபுங்கவர்களால் சாலவும் சிறப்பிக்கப் படுதல் கண்டு பொருத அவர் வசிஷ்ட புத்திரர்கள் நூற்றுவர்களையும் கொலை புரிந்தார்: பொறுமைசாலியான வசிஷ்டரோ உதவியற்று தன்னந் தனியே தமது பத்தினியுடன் வசிக்க நேர்ந்தது. அச்சதிபதிகள் தனியே கானகத்தில் ஓர் பர்ணசாலையில் வசிக்கும்போது ஒருநாள் இரவில் அவருடைய பத்தினி அவரைத் தழுவி "நாதா! சந்திரன் எவ்வளவு பிரகாசமாய் நிர்மலமான ஆகாசத்தில் சஞ்சரிக்கின்றான் பாருங்கள்" என்றாள் அவ்வேளையில், விஸ்வாமித்திரர் வரைந்தருளிய கிரந்த மொன்றினை ஆழ்ந்து வாசித்துக் கொண்டிருந்த வசிஷ்டர், தம் காதலியின் பிரிய வசனங்

'அன்புடைமை' யை வலியுறுத்த ஓர் அருங்கதை.

களிலீடுபடாது, "கண்ணே அதைவிட ஆயிரமடங்கு திவ்யப் பிரகாச முடையதா யிருக்கிறது விஸ்வாமித்திரன் எழுதியுள்ள இந்தக் கிரந்தம் என்றியம்பினர். ஆகா! என்ன அன்பு! எல்லாக் கொடுமைகளையும் மறந்த பான்மை! தமது நூறு புத்திரர்களைப் பறிகொடுத்ததையும் நினையாத தன்மை! இவ்வளவுக்கும் காரணராயிருந்த தமது பகைவரான விஸ்வாமித்திரரிடத்தில் அவருக்கிருந்த அன்பைக் கவனித்தீர்களா?" என்றார் சுவாமிகள்.

மகான்கள் ஈஸ்வர ஆக்ஞைப்படி நடக்கிறார்கள். ஆகவே சுவாமிகள் தமது கோஷ்டியாருடன் அக்டோபர் மாதம் 11௳ பாமுல்லாவுக்கு வந்து அங்கிருந்து நேராக லாகூருக்குப் பிரயாணமாயினர். அவ்வமயம் ஐரோப்பிய சிஷ்யர்கள் சுவாமி சதானந்தரோடு வட இந்தியாவில் லாகூர், டில்லி, ஆக்ரா முதலிய சில முக்கிய பட்டணங்களையும் க்ஷேத்திரங்களையும் பார்க்க உத்தேசித்து, செப்டெம்பர் மாதம் 27௳ புறப்பட்டுச் சுவாமிகளைக் காஷ்மீரத்தில் சந்திக்க வந்தார்கள். அப்பொழுது சுவாமிகள் சிறிது உடலிளைத்து வாடியவர் போலிருந்தார். முன்னிருந்து தொடர்ந்த நோய் உள்ளிருந்தே அவருடைய சரீரத்தைக் கொஞ்சங் கொஞ்சமாக உருக்கி வந்தது. "அமரிநாதம்—க்ஷீர பவானி க்ஷேத்ரவாஸ"த்தின் பயனாக சுவாமிகள் திவ்ய "ஏகாந்த யோகானுபவ" சம்பன்னராக விளங்கினர்.

47-ம் அத்தியாயம்.

மடப்பிரதிஷ்டாபனம்

இந்தியத் தாயின் சற்புத்திரரான சுவாமிகள் லாகூரிலிருந்து, அல்மோராவிலிருந்த சுகானந்தருக்கு உடனே புறப்பட்டு வருமாறு தந்திகொடுக்க, அவர் வந்து சேர்ந்ததும், திடீரெனப் புறப்பட்டு அக்டோபர் மாதம் 18௳ நேராக பேலூருக்கு வந்து சேர்ந்தார். எதிர் பாராத தமது தலைவரின் வருகையைக் கண்டு அவருடைய சிஷ்யர்கள் உவகை பூத்தார்களாயினும், அவருடைய இளைத்த வெளுத்த திருமேனியைப் பார்த்துப் பார்த்துச் சோகித்தனர். சுவாமிகளுடைய வருகை முன்னரே அறிவிக்கப்படவில்லை யாயினும், அவருடைய திவ்யானுபவங்களைப் பற்றிச் சகோதரி நிவேதிதா தேவி அடிக்கடி பேலூர் மடத்திற்குக் கடித மெழுதிக்

கொண்டிருந்தாள். அக்கடிதங்களை வாசித்து வாசித்து சிஷ்யர்கள் பெருமகிழ்ச்சி யடைந்திருந்தார்கள்.

சுவாமிகள் பேலூரிலிருந்த காலத்திலும், யாத்திரை செய்த காலத்திலும் அநேகர் ஸ்ரீராமகிருஷ்ண மடத்தில் அங்கத்தினர்களானார்கள். அப்பொழுதே கோகேந்திரரும், ஹரிபாதரும் சேர்ந்தார்கள். இவர்களே பின்னர் சுவாமிகளின் சீடர்களாகிக் காவியேற்று சுவாமி விமலானந்தா, சுவாமி போதானந்தர் என்ற ஞானப் பெயர் பூண்டனர். சுவாமி கல்யாணனந்தா, சுவாமி சோமானந்தா என்ற இருவரும் அப்பொழுது பிரம்மச்சாரிகளாய்ச் சேர்ந்திருந்தார்கள். இவர்களுள், முதலவர், மடம் அலம்பசாரிலிருந்த பொழுதும், இரண்டாமவர் நிலம்பர் முகர்ஜியின் சிருங்கார வனத்திலிருந்த பொழுதும் கலந்து கொண்டார்கள். இவ்விதம் அங்கத்தினரானவர்களுக்கு வேத பாடமும், புராண இதிகாஸ மீமாம்ஸ காவ்ய நாடகாலங்காராதி நூல்களும் அனுதினமுங் கற்பிக்கப்பட்டன. சுவாமிகள் பேலூரை யடைந்ததும் தமது உடலுபாதியைப் பாராட்டாமல் மீண்டும் தமது சிஷ்யர்களைத் திடம்படப் பழக்கத் தொடங்கினார். பத்தொன்பது இருபதாம் தேதிகளில் சுவாமிகள் ஹோமங்கள் செய்தார். அடுத்த மூன்று நாட்களிலும் கிருஹஸ்த சந்நியாச சிஷ்யர்களுக்கு விசேஷ விருந்துடன் 'துர்க்கை பூஜை' கொண்டாடப் பெற்றது. இருபத்து நான்காம் நாளன்று சுவாமி துரியானந்தா அல்மோராவிலிருந்து வந்து சேர்ந்தார். எல்லோரும் ஒன்று கூடப் பேலூர் ஆச்சிரமத்தில் சிஷ்யர்களின் குதூஹலம் நிறைந்திருந்தது.

கோகேந்திரரும் ஹரிபாதரும் சீடராதல்.

நவம்பர் மாதம் முதற் தேதியிலிருந்து, சுவாமிகள் ஒரு நாள் மடத்திலும் ஒருநாள் பாக்பசாரிலிருக்கும் பலராம் பாபுவின் கிருகத்திலுமாக வசித்து வந்தார். அம்மாதம் ஐந்தாம் நாள் சுவாமிகள் பேலூர் மடத்தில், காஷ்மீரத் தலைமை நியாயாதிபதியான கனம் ரிஷிபார் முகர்ஜி அவர்களும், பிரதம அமைச்சரான ஸ்ரீ நிலம்பர் முகர்ஜி யவர்களும் வர, அளவளாவி அவர்களுடன் சம்பாஷித்தார். மறுநாள், சுவாமிகளோடு சென்று காஷ்மீரத்தில் யாத்திரை செய்து கொண்டிருந்த ஐரோப்பிய சிஷ்யர்கள் திரும்ப பேலூருக்கு வந்து சேர்ந்தார்கள்; அன்று அவர்களுக்கு விருந்தளிக்கப்பட்டது. அப்பால், நவம்பர் மாதம் 12உ காளி பூஜை மகோத்ஸவம் அக்கோயில்

அருச்சகரைக் கொண்டு அபிஷேக பூஜாக்கிரமங்களோடு எல்லா குருபாய்களும் சிஷ்யர்களும் கூடியிருக்க விமரிசையாக நடைபெற்றது. அவ்வமயம் ஸ்ரீசாரதாமணி தேவியாரும் அங்கு பிரசன்னமா யிருந்தார். அன்று மாலையில் சுவாமிகளின் வேண்டுகோளுக் கிசைந்து தேவியார் கல்கத்தாவிற் கெழுந்தருளி பாக்பசாரில் ஸ்தாபிக்கப் பெற்ற சகோதரி நிவேதிதா தேவியின் தேசீயப் பெண் பாட சாலையைத் திறந்து வைத்து ஆசீர்வதித்தார்.

சகோதரி நிவேதிதா தேவியின் தேசீயப் பெண் பாடசாலை.

சுவாமிகள் சகோதரி நிவேதிதா தேவியை முதல் முதலாகச் சந்தித்த பொழுது அவ்வம்மை வித்யாபிவிருத்தியில் விசேஷ திறமையுடையவளா யிருந்தது கண்டு அவ்வன்னையைக் கொண்டு இந்திய ஸ்திரீகளின் உண்மையான மதாசாரங்களை விருத்தி செய்யத் தக்க கல்வியைப் போதிக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று எண்ணினர். மேலும் தேவியின் உண்மையான பக்தியில் அவருக்கு மாசிலா நம்பிக்கை ஏற்பட்டிருந்தது. அங்ஙனமே, தேவி இந்தியாவுக்கு வந்த பிறகு சுவாமிகள் அவரைத் தமது கருத்துக் கிணங்கப் பழக்கத் தொடங்கினர். தேவி போதிய பயிற்சி யடைந்ததும் சுவாமிகள் தமது நோக்கத்தின் பலா பலனைப் பரீக்ஷிக்க வேண்டியே முதலில் கல்கத்தாவில் ஒரு சிறு பெண் பாட சாலையை ஆரம்பித்து அவரைக் கொண்டு நடத்தச் செய்தார். முக்கியமாக ஸ்ரீசாரதா தேவியின் உத்தரவை ஏற்ற பின்னரே இக்காரியத்தில் சுவாமிகள் பிரவேசித்தார். ஆரம்ப காலத்தில் சகோதரிக்கு, ஸ்ரீசாரதாமணி யம்மையின் ஆஸ்ரமத்திற்குப் பக்கலில் ஓர் சிறு வீடு வாடகைக் கமர்த்தப்பட்டது. சகோதரி பெரும்பாலும் இராப்பொழுதில் ஸ்ரீ சாரதாமணி தேவியாருடன் வசித்து வந்தார். சுவாமிகளும், தாம் கல்கத்தாவிலிருந்த காலங்களில் அடிக்கடி சகோதரியைச் சந்தித்து ஆலோசனை கூறி உரிய சௌகரியங்களைச் செய்து வந்தார். நிவேதிதா தேவி, ஸ்ரீசாரதாமணி தேவியாருடன் மிகவும் நெருங்கிப் பழகி வந்தமையால் சுவானுபவத்தில் ஹிந்து மாதர்களின் ஆசாரங்களையும் அவற்றினுள் மறைந்து விளங்கும் தத்துவ நலங்களையும் உணர இடமேற்பட்டது. இதனால் மேன்மேலும் வித்யாபிவிருத்தி முறைகளைப் பெருக்க வேண்டுமென்னும் ஆவல் தேவிக்கு அதிகரித்தது. அவ்வன்னை அனுபவத்தி லுணர்ந்து மகிழ்ந்த இந்திய ஆசாரங்களின் உயர்வைத் தாம் எழுதியுள்ள "ஹிந்து வாழ்வின் இழை"

(The Web of Indian Life) என்னும் நூலின்கண் பரக்கக் காணலாம். ஸ்ரீசாரதா தேவியின் கிருகத்தில் ஆசார சீலமுடைய மாது சிரோன்மணிகள் சிலரிருந்தனர். அவர்கள் நல்ல விவேகமுடையவர்கள். புராண காவியங்களிலும், நாடகத்திலும், ஹிந்து சமயக் கோட்பாடுகளிலும் சிறந்த ஞானமுள்ளவர்கள்; இவர்களுடைய உதவியாலேயே ஐரோப்பிய சிஷ்யைகள் ஹிந்து தர்மவிதிகளின் மேன்மையினை எளிதில் அறிய வியன்றது.

சகோதரி நிவேதிதா தேவியின் சேவாரம்பத்தை இங்கு குறிப்பிடுவதற்குக் காரணம் இக்காலத்திலேயே தேவியின் வேலை தொடங்கப் பெற்றமைதான்; இந்நாட்களிலேயே அவர் சுவாமிகளை அடிக்கடி சந்தித்து அவரது புத்திமதிப்படி நடந்து "சுவாமிகள், உபதேசிக்கவே திருவவதரித்த சமயக் கோளரி" எனப் போற்றி வந்ததுமாம். சுவாமிகள் அந்தப் பெண் பாடசாலையை நடத்தும் பணியில் தேவிக்குச் சகல சுதந்திரங்களையும் அளித்திருந்தார். இந்திய மாதர் சமூகம் முன்னேற்றமடையவும், அவர்கள் வீரத் தாய்மார்களாக விளங்கவும் அடிப்படையான முயற்சி அப்பாடசாலையில் நடைபெற்றது. சுவாமிகள் அனுக்கிரகம் பரிபூர்ணமாயிருந்தமையால் தேவியும் தளராதுழைத்து இன்று ஒவ்வொரு இந்தியர் நாவிலும் விளங்கும் மேன்மையைப் பெற்றாள்.

இஃதிவ்வாறிருக்க, ஸ்ரீராம கிருஷ்ண மட ஸ்தாபனத்தைப் பற்றிக் கூறுவோம். இது டிசம்பர் மாதம் 9உ நடைபெற்ற போதிலும், புதிதாக வாங்கப்பெற்ற பூமியில் மடம் ஏற்கனவே 1898-ம் ஆண்டு மார்ச்சு மாதத்தில் நிறுவப்பெற்றிருந்தது. அந்நன்னாளில் சுவாமிகளே தமது குருபாய்களின் ஒத்துழைப்பால் கிரியாம்சமானவற்றையெல்லாம் குறைவின்றிச் செய்வித்தார். அன்று காலையில் அனைவரும் கங்கையில் பிராயச்சித்தத்துடன் மந்திரபூர்வமாக நீராடினர். சுவாமிகள் ஓர் புதுக் காவியாடை தரித்து, பூஜாக்கிருகத்தையடைந்து பீடத்திலமர்ந்து, ஸ்ரீராமகிருஷ்ணரின் ஹஸ்தி யடங்கிய கடத்தை வில்வ தளங்களாலும் மலர்களாலும் அருச்சித்தார். அப்பொழுது சுவாமி பிரேமானந்தா முதலியோர் கைகட்டி வாய் பொத்தி அவ்வறையின் வாயிலில் நின்றுகொண்டிருந்தார்கள். அதன்பின், குருபாய்களும் சிஷ்யர்களும் சேர்ந்து விழாக் கோலமாய்ப் புறப்பட்டு, சுவாமிகள் தமது

ஸ்ரீராமகிருஷ்ணரின் ஹஸ்தி நிறைந்த கடஸ்தாபன சம்பவம்.

வலது புஜத்தில் குரு தேவரின் என்பு நிறைந்த கடத்தைத் தாங்கி வர, சங்கநாதம் துங்கமா யொலிக்க "ஜெய! ஜெய! ஸ்ரீராமகிருஷ்ண ஜெய ஜெய" வென்ற சங்கீர்த்தனத்துடன் கங்கையின் கரையோரமாய் நீலம்பர் முகர்ஜியின் சிருங்கார வனத்திலிருந்து புது மடத்திற்குச் சென்றார்கள். சுவாமிகள், அவ்வமயம் ஆனந்த பரவசராகி, பழைய சம்பவங்கள் ஞாபகத்திற்குவர, தமது சீடர்களை நோக்கி "ஒரு சமயம் குருதேவர் என்னிடம் "நீ அன்போடு என்னை எங்கே உன் தோள்மீது சுமந்து சென்றாலும் சரி; அது ஓர் குடிசையா யிருப்பினுஞ் சரி; அல்லது மரநிழலாயினுஞ்சரி; நான் வருகிறேன்" என்று சொல்லிப் புறப்பட்டார். அந்த அரிய வாக்கிற்கிணங்க நான் இப்பொழுது அவரைப் புதுமடத்திற்குச் சுமந்து செல்லுகின்றேன். அன்பர்களே! அவருடைய திவ்யநாமம் அவருடைய சிஷ்ய கோடிகளின் உள்ளத்தை அவரது தூய்மை, வாய்மை, தெய்வீகத்தன்மை அன்புடைமை, பிறர்க்கென வாழ்ந்த பெருமை முதலியவற்றுடன் ஆக்ரமித்துத் தூண்டும்வரை, அவ்விடங்களி லெல்லாம் அவர் சத்யமாக விளங்குவா ரென்பது திண்ணம்" என்றியம்பிக் கண்ணீர் விட்டார். புது மடத்தைச் சமீபித்ததும் அவர் "சர்வ சமயங்களின் சித்தாந்தங் கட்கும் இடந்தரும் ஸ்ரீராமகிருஷ்ணருடைய மதம் இவ்விடத்தில் நிலை நிற்கும். ஆற்றலை யளிக்கும் அதீத சமயக் கொள்கைகள் இவ்விடத்தினின்றும் வெளிக்கிளம்பி, அவனியெங்கும் அன்பையே பரவி நிற்கப் போகின்றன" என்று கூறினார். சுமந்துவந்த கடத்தை ஆவாகிக்க முன்பே நிரணயிககப்பட்டிருந்த இடத்தில் வைத்து விட்டுச் சுவாமிகள் சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து எழுந்தார். உடனே ஏனைய சிஷ்யர்களும் நிலந்தோயப் பணிந்தெழுந்து நின்றார்கள். பின்னர், சுவாமிகள் சாஸ்திர விதிப்படி அக்கினி வளர்த்து விரஜாஹோமத்தைச் செய்து முடித்தார். இந்த ஹோமத்தைச் சந்நியாசிகளே செய்தற்குரியார். அப்பால், சுவாமிகள் தாமே பாயஸான்னஞ் செய்து குருதேவருக்கு ஆராதித்து விட்டுத் தமது சிஷ்யர்களைப் பார்த்து "என்னருமைச் சகோதரர்களே! நீங்களெல்லோரும் மனப்பூர்வமாக ஸ்ரீராமகிருஷ்ணர் இதே இடத்தை இனித் தமது வாசஸ்தானமாகக் கொண்டு என்றும் விளங்கி, நம்மை ஆசீர்வதித்து அவரது வாழ்வின் அனுபவ பூர்வமான நமது கொள்கைகளை நிறைவேற்றி வைத்து இதை ஓர் புண்ணிய க்ஷேத்திரமாக்க அருள்புரியுமாறு அவரது சரணாரவிந்தங்களிலே முறையிட்டுக் கொள்ளுகின்றீர்க ளல்லவா?" என்றார்.

அன்பர்களெல்லோரும் கரங்கூப்பி "ஜெய ஜெய" வென்று கோஷித்தார்கள். பிறகு திரும்பவும் சுவாமிகளின் சிஷ்யரான சாரதசந்திரர் கடத்தைத் தாங்கிவர விழா வலமாகப் புறப்பட்டுச் சென்றார்கள்.

இந்நாள் ஸ்ரீராம கிருஷ்ண மடத்தின் சரித்திரத்திற்கே ஓர் விசேஷமான நாளாகும். அங்கு கூடியிருந்த எல்லோருள்ளத்திலும் சற்குருநாதர் கோயில் கொண்டு விளங்கினார். அன்று சுவாமிகள் தமது குருதேவரின் கட்டளையைத் தாம் சக்தியானுசாரம் நிறைவேற்றி, அவருடைய உபதேச மொழிகளை யேற்றுத் துறவு பூண்டு சேவாப் பிரியர்களாய், இப்பொழுதும் இனியும் பாரத தேசீய ஜாதீய சமய முன்னேற்றங்கட்கெனப் பாடுபடும் பக்தர்களுக்கு ஓர் சாஸ்வத மடத்தையும் ஸ்தாபிக்க இறைவன் அருள் பாலித்தமை பற்றிக் களிகூர்ந்து "சகோதரர்களே! குருவின் இன்னருளால் இன்று அவருக்கோர் தர்ம க்ஷேத்திரம் நிறுவப் பெற்றது. கடந்த பன்னிரண்டு ஆண்டுகளாக நான் சுமந்த கடமையென்னுஞ் சுமை இன்று என் தலையை விட்டு இறங்கிற்று. இனி நடக்கப்போகும் விஷயங்களை நான் இப்பொழுதே பிரத்யக்ஷமாகப் பார்க்கின்றேன். இந்த மடம் பெரிய வித்யாமன்றமாகவும், சாதன ஸ்தானமாகவும் ஆகிவிடும். சாதுக்களான இல்லாச்சிரமிகள் இந்த மடத்தைச் சுற்றிலுமுள்ள பிரகாரத்தில் தாமே வீடுகளமைத்துக்கொண்டு வாழ்வார்களாக. இம்மடம் இனி ஓர் பெரிய சமயஞான சர்வகலாசாலையாகப் பிரகாசிக்கும். சந்நியாசிகள் இதன் மத்ய பாகத்தில், இல்லாஸ்ரமிகட்கிடையே வசிக்கக் கடவர். அதோ! அந்தத் தென்பாகத்தில் குருநாதரின் குழந்தைகளான அமரிக்க, இங்கிலாந்து வாஸிகள் வந்து வசிக்கட்டும்" என நவின்ற வண்ணம் தம தருகேயிருந்த ஓர் சிஷ்யனைத் திரும்பிப் பார்த்து "என்ன சொல்லுகின்றாய் நீ இதற்கு?" என்றார். எனலும் அச் சந்தேகியான சீடர் 'தங்களுடைய மேலான மனோபாவனை நிறைவேறுமானால்........' என்று கூறி முடிக்குமுன் சுவாமிகள் சிலிர்த்தெழுந்து "பாவனை! என்றா சொல்லுகிறாய் நீ! கவனி! அற்ப நம்பிக்கையுள்ள அன்பனே! கேள்! காலக்கிரமத்தில் எனது விருப்பமனைத்தும் பூர்த்தியாகும். நான் இப்பொழுது சாதாரணமாக அடிகோலி யுள்ளேன். மகத்தான காரியங்கள் இம்மடத்தாரால் நடைபெறப் போகின்றன. நான் செய்ய வேண்டிய வேலை

சுவாமிகளின் அருள் வாக்கு.

லைச் செய்து விட்டேன்; நீங்கள் இனிச் செய்தற்குரியவற்றையும் நான் உங்களுக்கு வகுத்து விடுகிறேன். சமயத்தில் உந்த நோக்கத்தைப் படித்துப் பண்டிதனுவதோடல்லாமல் அவற்றை நீங்கள் முற்றிலும் அனுஷ்டானத்திற் காட்டவேண்டும். தெரிகிறதா?” என்றார்.

சின்னாட்களுக்குப் பின் சுவாமிகள் ஸ்ரீராம கிருஷ்ண மடப் பிரதிஷ்டாபனத்தைப் பற்றித் தமது நோக்கங்களை அந்த சிஷ்யரிடம் சம்வாத ரூபமாய் வெளியிட்டருளினார். அச் சம்பாஷணை ரூபமான விஷயங்களுள் சிலவற்றை ஈண்டு காட்டுதும்: அவற்றினின்றும் மடத்தின் இயக்கங்களும், ஊழிய நோக்கங்களும் நன்கு விளங்குவன. புதிய மடத்தின் பூமியில் சுவாமிகள் உலாவிய வண்ணம் பழைய ஆஸ்ரமத்தைச் சுட்டிக் காட்டி,

ஸ்ரீ ராம கிருஷ்ண மடத்தின் அலுவல்கள்.

“அது சாதுக்கள் வசிப்பதற்கு ஏற்ற இடமாகும். இந்த மடமே சகல கிளை இயக்கங்கட்கும், பிரிவு மடங்கட்கும், மதானுஷ்டான ஸ்தாபனங்கட்கும், ஞானயோகப் பயிற்சி ஸ்தலங்கட்கும், அகிலமெங்கும் ஸ்ரீ ராம கிருஷ்ணருடைய பெயரை வைத்துக்கொண்டு நடைபெறும் எல்லா இயக்கங்கட்கும் தலைமை மடமாய் விளங்கும். இந்தப் பிரதேசத்திலிருந்து புறப்படும் ஞானப் பிரயோகம், உலகமெங்கும் சென்று பரவி மாந்தர் உள்ளத்தின் ஆவலைப் புதிய புனித வழிகளிலே திருப்பும். இவ்விடத்திலிருந்தே ஞானபக்தி கர்ம யோகங்களின் தாத்பரியங்களும் ஒன்று பட்டுக் கிளம்பி யாவரையும் உழைக்கச் செய்யும். அந்தகாரத்தில் மூழ்கி யுழலும் மக்களின் உள்ளம், இந்த மடத்துச் சந்நியாசிகளின் இச்சா மாத்திரத்தால் பரிசுத்தப்பட்டு பிரகாசமுற்று எழுங்காலமும் இனி வரப் போகின்றது. இவை யனைத்தையும் நான் மனத்தால் தரிசிக்கிறேன்.

சுவாமிகள் தமது நோக்கங்களை உரைத்தருளல்.

அத் தென்பாலுள்ள பூமியில் நமது பூர்வீக முறைப்படி ஓர் வித்யாலயம் நிறுவப்படும். அதில் இலக்கணமும் தத்துவஞானமும் கலைகளும் சாஸ்திரங்களும், சொல்லணி நூல்களும் ஹிந்து தர்ம நீதிசாஸ்திரங்களும் ஆங்கிலமும் போதிக்கப்படும். அதோ! அந்த இடத்தில் இளைஞரான பிரம்மச்சாரிகளிருந்து ஆறு சாஸ்திரங்களையும் அனுசந்தானம் பண்ணுவார்கள். அவர்கட்கு மடத்தின் ஆதரவில் அன்ன வஸ்திரங்கள் அளிக்கப்படும். இந்த பிரம்மச்சாரிகள் இங்ஙு

னம் ஐந்தாண்டுகள் பயின்றபின், அவரவர் விருப்பப்படித் தமக்கேற்ற இடங்கட்குப்போய் இல்லற வாழ்வியற்றலாம். இல்லையேல், மடத்தி லுள்ள பெரியோரின் (சந்நியாசிகள்) அனுமதி பெற்றுத் துறவு பூண லாம். இப்பிரம்மச்சாரிகளில் எவரேனும் விதி விலக்குகட்கு உட் படாமலோ, கெட்ட நடத்தை யுள்ளவர்களாகவோ இருப்பார்க ளானல், அவர்களை உடனே விரட்டிவிடவேண்டும். இந்த இடத் தில் (வேறோர் இடத்தைச் சுட்டி) ஜாதி மத பேத மின்றிச் சிறுவர் களுக்குக் கல்வி போதிக்கப்படும். அவரவர் ஜாதிமதக் கட்டுப்பாட் டிற் கேற்ப மிக்க வைதீகமாக நடந்துகொள்ள விரும்புகிறவர்கள் உணவு முதலியவற்றிற்குச் சொந்த சௌகரியங்கள் செய்துகொள்ள வேண்டும். பாடம் கற்பிக்கும்போது எல்லோரும் ஒரே இடத்தில் பேதமின்றி அமர வேண்டும். அச்சிறுவர்களின் ஒழுக்கங்களை மேலதி காரிகள் அடிக்கடி கவனித்து வரக்கடவர். இவ்விதப் பயிற்சி யடை யாதவர்கள், மடத்தின் விஷயமாய் எவ்வித பாத்யமும் அடைவதற்கு அருகராவார்; காலக்கிரமத்தில் அவர்களில் தேர்ச்சி பெற்றவர்கள் மடத்தை நடத்தும் உரிமைகளை யடைவர்.

சீடர்:—சுவாமி! அப்படியானல் பழங்கால குருகுலத்தைத் தேவ ரீர் மறுபடியும் ஸ்தாபிக்க நினைக்கிறீர்களா?

சுவாமிகள்:—ஏன்? அதிலென்ன சந்தேகம்! பிரம்ம வித்தை யைப் புத்துயிரளித்தெழுப்ப இந்நவீன வித்யாமுறை மலிந்த இக் காலத்தில் சிறிதும் இடமில்லை. பழங்கால குருகுல பிரம்மச்சரிய வாழ்வை மறுபடியும் ஆரம்பிக்க வேண்டுவதென்னவோ அவசியம். ஆனல் அதன் அஸ்திவாரம் வெகு விசாலமாக முதலிற் கோலப்பட வேண்டும்; பல மாறுதல்களும் திருத்தங்களும் காலதேச வர்த்த மானங்களுக்குப் பொருத்தமாகச் செய்யப்பட வேண்டும். அவற்றைப் பற்றி பின்னர் கூறுகிறேன்

நமது மடத்திற்குத் தென்பால் சேர்ந்தாற்போலிருக்கும் பூமியை நாம் சீக்கிரத்தில் வாங்கிவிட வேண்டும். அவ்விடத்தில் ஒரு அன்ன சத்திரம் அல்லது தர்ம சத்திரம் மடத்தின் ஆதரவில் ஸ்ரீராம கிருஷ்ண ருடைய பெயரால் நிறுவப்பட வேண்டும். அங்கு மிகவும் ஏழை நாரா யணர்களுக்கு அனுதினமும் இருவேளையும் அன்னமளிக்கத் தகுந்த ஏற்பாடுகள் செய்ய உத்தேசம் செய்திருக்கிறேன். அதன் அபி விருத்தி மடத்தின் நிதியைப் பொறுத்திருக்கும். அதை முதலில்

இரண்டு மூன்று தொண்டர்களைக் கொண்டே ஆரம்பிக்க வேண்டும்.

சிஷ்யர்களாக விரும்புகிறவர்கள் அனுஷ்டிக்க வேண்டியவிதிகள்

உற்சாகமுள்ள பிரம்மச்சாரிகளை, இந்த அன்ன சத்திரத்தை நடத்தும் வண்ணம் பழக்க வேண்டும்; அவர்கள் தாமே வீட்டிற்கு வீடு பிசைக்ஷ யெடுத்தாகிலும் அதை நடத்தக்கூடிய திறமைவாய்ந்தவர்களா யிருக்கவேண்டும். மடத்திலிருந்து இவ்வன்ன சத்திரத்திற்கு எவ்வித உதவியும் அளிக்கப்படலாகாது. இப்படிப் பிரம்மச்சாரிகள் ஐந்தாண்டுகள் இவ்வன்ன சத்திரத்தொண்டியற்றிய பின்னரே, அவர்கள் மடத்தின் கலைவளர்ச்சி சாலைக்குச் சேர்த்துக்கொள்ளப் படுவார்கள். இவ்விதம் பத்துவருட உழைப்பிற்குப் பிறகு, அவர்கள் மடத்து அதிகாரிகளின் அனுமதியின்பேரில் தமக்கு இஷ்டமிருந்தால், மடாதிகாரிகளுக்கும் அவர்கள் தகுதியுடையவர்களே யென்ற அபிப்பிராய மேற்பட்டால். சந்நியாசிகளாக ஏற்கப்படுவார்கள். ஆனால் மடாதிகாரிகள் சில சிறந்த பிரம்மச்சாரிகள் விஷயத்தில் இந்தச் சட்டப்படி நடவாது அவர்களுக்குத் தமதிஷ்டப்படிக் காவியளிக்கலாம். இவ்வித நோக்கங்களெல்லாம் நன்மை பயக்குமெனத் தோன்றுகிறது........எப்படி?

சீடன்:—சுவாமி! மடத்தில் இம்மூன்று பிரிவுகளை விசேஷமாக ஏற்படுத்துவதன் தாத்பரியமென்ன?

சுவாமிகள்:—இது உனக்குத் தெரியவில்லையா? முதலில் அன்னதான மிருக்க வேண்டும். அடுத்தாற்போல் வித்யாதானம் வேண்டுவது அவசியம்; பிறகு ஞானதானம் முக்கியமானது. ஒருவனை உண்மையான மனிதனுக்குவதில் ஒன்று சேர்ந்து வருகின்ற இம்மூன்றும் மடத்தின் மூன்று கிளைகளின் வாயிலாகக் குறைவின்றி நடைபெற வேண்டும். அன்ன சத்திர கைங்கரியத்தில் நான் கூறிய கட்டுப்பாடுகளுக்கிணங்கக் கண்டிப்பாய் ஈடுபடவேண்டி யிருத்தலால் பிறருக்காகப் பாடுபடும் பழக்கமும், மக்களின் துக்க நிவாரணத்திற்கெனத் தமது வாழ்வை அர்ப்பணஞ் செய்யும் மனப்பான்மையும், அந்த பிரம்மச்சாரிகளின் மனத்தகத்தே கல்லிலெழுதிய எழுத்துப்போற் பதிந்துவிடும். இத்தன்மை, காலக்கிரமத்தில் அவர்கள் ஹிருதயத்தைச் சுத்தி செய்து சத்வகுணத்தைப் பெருக்கிவரும். அப்படிப்பட்டவர்கள் பரா அபரா வித்தைகளைக் கற்று அனுஷ்டிக்கக் கூடிய யோக்கியதையுடையவர்க ளாகின்றனர்; பிறகு பிரம்ம சொரூபத்தை நாடும் வழியில் அவர்கள் தாமே துறவறத்தில் தாபங் கொள்வார்கள்.

சீடர்:—சுவாமி! தேவரீரது இன்சொற்களால் அடியேனுக்கு மேன்மேலும் அன்ன சத்திரங்களைப் பற்றியும் சேவாஸ்ரமங்களைப் பற்றியும் கேட்க வேண்டுமென்னும் ஆவலுண்டாகிறது.

சுவாமிகள்:—இந்த சத்திரத்தில் நல்ல காற்று வரும்படி சன்னல்க ளமைக்கப் பெற்ற அறைகள் பல விருக்கவேண்டும். அவை ஒவ்வொன்றிலும் இரண்டல்லது மூன்று ஏழைகளோ அல்லது பிணியாளர்களோ வசிக்க வேண்டும். அவர்களுக்குச் சுத்தமான படுக்கையும் தூய ஆடையும் அளிக்கப்பட வேண்டும். அவர்களை ஒரு வைத்தியர் ஒரு வாரத்திற்கு இரண்டு மூன்று தடவைகளாவது, அல்லது சௌகரியப் பட்ட போதெல்லாம் வந்து பார்த்துக் கவனிக்குமாறு ஏற்பாடு செய்ய வேண்டும். சேவாஸ்ரம மென்பது அன்ன சத்திரத்தின் ஓர் பிரிவு ஸ்தாபனமாகும். அதில் பிணியாளர்களைக் காப்பாற்றும் வேலை நடைபெறல் வேண்டும். சீக்கிரத்தில், நிதி இடந்தருமானால் இதற்கென ஓர் பெரிய சமையலறையும் தனியாகக் கட்டப்படும். பிறகு, எந்நேரத்திலும் எத்தனைபோனாலும் அவர்கள திருப்திப் படுகிற வரையில் அன்ன மளிக்கப்படும். எவ்வித முகாந்தரங்களைக் கொண்டும் எவருக்கும் உணவில்லை யென்று நிராகரிக்கலாகாது. சமைத்த சோற்றிலிருந்து வடியுங்கஞ்சி ஓர் வாய்க்காலாக ஓடிக் கங்கை நீரை வெண்ணீராக்க வேண்டும். ஹா! இங்கு அவ்வளவு பெரிய ஏற்பாட்டோடு அன்ன சத்திரம் நடைபெறுங்கால் அதைப் பார்க்க என்னுள்ளம் எவ்வளவு களிகூருந் தெரியுமா?'' என்று சொல்லிக் கொண்டே சுவாமிகள் கங்கையின் அலைகளைப் பார்த்த வண்ணம் இமைகொட்டாது நின்றார்; அன்ன சத்திரத்திலிருந்து ஆறுய்ப்பெருகி வருகின்ற கஞ்சி, அப்புனித நதியின் புனலோடு கலந்து ரஜித நிறமுடையதாய் ஓடுவதுபோலச் சுவாமிகள் மனத்தால் பரிபூர்ணமாகக் காண்பாரானார். பிறகு அவர் மோன நிலை கலைந்து அந்த சீடரை வெகு அன்போடும் அருளோடும் நோக்கி,

''அப்பா! உங்கள் எல்லோருடைய உள்ளமாகின்ற குகைகளிலும் உறங்கும் சிம்மங்களைத் தட்டி எழுப்பப்படுங் காலமெதுவோ, அதைத் தேவியே யறிவள். தேவி உங்களில் எவருள்ளத்திலேனும் தனதருட் பிரசாதத்தின் ஒரு சுடரைக் கிளப்பி விட்டால், தேச முழுவதிலும் நூற்றுக் கணக்கான அன்ன சத்திரங்கள் இதுபோலத்

தோன்றுவோ ? ஞானம், பக்தி, சக்தி எனும் மூன்றும் சுவயம்புவாகவே ஒவ்வொரு மனிதனிடத்திலும் மறைந்திருக்கின்றன வென்பதை நீ யறியக் கடவாய். ஒருவனைச் சீரியோனாகவும் சிறியோனாகவும் செய்வது, அம்மூன்றும் தூண்டி விடப் படுவதன் பிரமாணத்தைப் பொறுத்ததேயாகும். பரிபூர்ணமான அம்மூன்றிற்கும் நமக்குமிடையே அறியாமை யென்னுமோர் திரை தொங்கிக்கொண் டிருக்கிறது. அத்திரை யகற்றப்படு மக்கணமே இயற்கையாவும் உன்னிடம் சரணாகதி யடையும். அப்பொழுது நீ எதை நினைக்கிறாயோ, விரும்புகிறாயோ அது உன் ஆக்ஞைப்படிச் சித்தமாய் நடக்கும்.

இறைவனருளால் இந்த மடம் பூமண்டலத்திலுள்ள சகல மதங்களின் கொள்கைகளையும் தழுவி, ஆதரிக்கும் ஐக்கிய பூமியாக்கப்படும். நமது குருநாதரே அச்சர்வ சமய சமரஸ நோக்கத்தின் மூர்த்தியாக விளங்குவார். அச்சமய சமரஸ நோக்கங்களை நாம் வழுவிலாது காப்போமானால், பாரமார்த்திக உலகத்தின் ஒரு குடை நிழலில் உயர் சமயச் செங்கோலோச்சுதற்குரிய அரியாசனம் இம்மடத்திலேயே விளங்குமென்பதில் ஐயமேயில்லை. பிராம்மணரிலிருந்து சண்டாளன் வரை ஒவ்வொருவரும், எந்த சாதி வழிபாடு நிலை நாகரீகம் உடையவரும் நம்மிடத்தில் வந்து ஐக்கியமாவதைத் தமது கருத்தாகக்கொள்ளுமாறு நாம் இம்மடத்தைப் பாங்குடன் நடத்த வேண்டும். அன்று நான் எனது குருநாதரை மடப் பிரதேசத்தில் ஆவாகனஞ் செய்யுங்கால், அவருடைய சமய சமரஸ தீபம் சூரியனைப்போன்றெழுந்து, உலகெங்கும் நிர்மலமான ஒளி பரப்பியதை நான் தரிசித்தேன். சகல ஜனங்களும் எளிதில் அவருடைய கொள்கைகளையும் மகிமைகளையும் கிரகித்து அங்கீகரிக்குமாறு நான் என்னா லியன்றவரை செய்து விடுகிறேன். நீங்களும் அவர் புகட்டிய கொள்கை வழி நடக்க முற்படுங்கள். மேன்மேலும் வேதாந்த நூல்களைப் படித்தவண்ணஞ் செல்வதாற் பயனென்ன? வேதாந்தக் கொள்கைகளை வாழ்விலும் அனுஷ்டானத்திலும் கொண்டுவர வேண்டும். அத்வைத மதத்தை நீங்கள் சோராமல் பரவச்செய்யவேண்டும். இந்த அத்வைத வாதம் இத்துணை காலமாகக் காடுகளிலும் மலைகளிலுள்ள குகைகளிலும் அடைத்து வைக்கப்பட்டிருந்தது. அதன் தனிமையை நீக்கி, உண்மையை இல்லறத்தின் பக்கத்தில் நிறுத்திச் சமூகங்களில் கொண்மூ (மேகம்) வெனப் பெய்ய வைத்து, மேன்மேலும் அதன்

உழைக்க அழைக்கின்றது உயரிய அத்வைதம்.

ஷண்முகப் பிரபாவம் பிரபலமாகும்படிச் செய்யவே குருதேவர் என்னை ஆயத்தப் படுத்தினர். நாம் அத்வைத முரசை ஒவ்வொரு வீட்டிலும், தெருவிலும், குன்றுகளிலும், சம வெளிகளிலுமாக அவனியி லெங்கும் ஒலித்திடச் செய்வோம். நீங்களெல்லோரும் எனக்கு உதவியாயிருங்கள். உழைக்க அழைக்கின்றது உயரிய அத்வைதம்.

சீடன்:—ஆனல்—சுவாமி! என் சித்தம் சமாதி நிஷ்டையில் அத்வைத சாக்ஷாத்காரத்தை யடைய ஆவல் கொள்ளுகின்றது. பிரவர்த்தகத்தையும், துள்ளிக் குதிக்கும் உள்ளத்தையும் நான் விரும்புவேன் அல்லேன்.

சுவாமிகள்:—அன்பனே! எப்பொழுதும் ஜடசமாதியில் உறைந்து போயிருப்பதாற் பயனென்ன? அத்வைத விவேகத்தால், அதன் ஆவேசத்தால் ஏன் நீ சிலசமயம் சிவபெருமானைப் போல நடனம் புரியலாகாது? சிலவேளை திவ்ய தேஜோமய சொரூபத்தைத் தரிசித்து ஏன் ஆனந்திக்கக்கூடாது? எவன் பெறுதற்கரிய ஆனந்தத்தை யடைகின்ருன் தெரியுமா? எல்லாவற்றையும் தானே தின்று அழிப்பவனு? அல்லது பிறர் இன்புறக்கண்டு தானு மின்புறும் தக்கோனு? எவனுக்கு ஆனந்தானுபவம் மிக்க உண்டு? சமாதி நிஷ்டையில் ஆத்ம சொரூபத்தை யடைந்து நீ முக்தியை அடையும் யோக்கியதையைப் பெறுவதாகவே வைத்துக் கொள்வோம். அதனல் ஏற்படும் லோகோபகார மென்ன? நாம் இந்த லோகத்திலுள்ள நமது உடன் பிறந்தாரை நம்மோடு முக்தி யின்பத்தை யடையச் செய்ய வன்றோ வேண்டும்! ஆகையால், நாம் மகா மாயையின் பிரதேசத்தில் தீவைத்துக் காட்டுத் தீயைப்போல் சூழ்ந் தெரியச் செய்து விடுவோம்; அதைப் பிரம்மாண்டமாகப் பிடித்துக் கொண்டு எரிந்து நீறுகுமாறு செய்வோம். பிறகு அந்த நீறை யணிந்து நிர்மலானந்தமாய் முக்தி யின்பத்தை முடிவில் அடைவோம். அப்படி அடையத்தகும் பிரம்மானந்த நிலை — ஆகாசத்தைப்போ லகன்று நிர்மலமாயிருக்கும். அதற்கு ஒப்பாக நான் எதைச் சொல்வேன்! அந்த அதீத நிலையில் நீ கண்மூடி மௌனியாகி, மெய்ம் மறந்து, உள்ளம் பூரித்து மாயா சுவாஸமற்று விளங்குவாய்! அவ்வுந்நத ஆத்ம ஞானத்தை அடையும் பட்சத்தில் உலகில் சகல ஜீவாத்மாக்க ளிடத்தும் அன்பும் அனுதாபமுமின்றி நீங்கள் இருக்கவே முடியாது. இதுவே அனுபவ வேதாந்தத்தின் தேர்ச்சியாகும்."

அனுபவ வேதாந்தத்தின் தேர்ச்சி.

இவ்விசேஷ சம்பாஷணை, முதல் முதல் மடம் ஸ்தாபிக்கப் பெற்ற காலத்தில் நடந்ததாகும். அப்பொழுது மடத்தின் பூமி ஒழுங்காக இல்லை. கப்பல் கட்டுந் தொழிலாளர்கள் வசித்து வந்த அவ்விடத்திலிருந்த பழைய இடிந்த கட்டடங்களைப் புதுக்கியும் திருத்தியும் கட்டவேண்டி யிருந்தது. சுவாமிகளுடைய ஆக்ஞைப் படி அக் கட்டட வேலை 1898-ம் ஆண்டு ஏப்ரல் மாதத்திலேயே தொடங்கப்பெற்று, வெகு துரிதமாக நடைபெற்று வந்ததாயினும் முற்றிலும் பூர்த்தியாக ஓராண்டு காலமாயிற்று.

ஸ்ரீ ஹரிபிரசன்ன சடோபாத்தியா யர்-அல்லது சுவாமிவிக்ஞநந்தா

மேல் மாடியில் கங்கை நதியை நோக்கி ஓர் தாழ்வாரமும், ஸ்ரீராமகிருஷ்ணர் பூஜாக்ருகமும், சந்நியாசிகள் வசிக்க ஓர் தனியிடமும், ஸ்ரீராம கிருஷ்ணரின் பக்தரான ஹரி பிரசன்ன சடோபாத்தியாயரின் அன்பு கூர்ந்த மேற் பார்வையில் அமைக்கப் பெற்றன. அவ்வன்பர் ஓர் 'இஞ்சினீய'ரா யிருந்தவர். இப்புதியமடம் ஸ்தாபிக்கப்பட்டது முதல் அவர் துறவு பூண்டு சுவாமி விக்ஞநந்தா என்ற ஆப்த நாமம் பூண்டு அலகபாத் ஸ்ரீராமகிருஷ்ண மடாதிபதியா யிலங்கினர். நிலம்பர் முகர்ஜியின் சிருங்கார வனத்திலிருந்து மடம் 1899-ம் ஆண்டு ஜனவரி மாதம் 2உ தான் பூராவும் இப்பொழுது பிரசித்தியாய் "பேலூர் மடம்" என்று விளங்கு மிடத்திற்கு மாற்றப்பட்டது. ஆனாலும் ஸ்ரீ ராம கிருஷ்ண "மடப் பிரதிஷ்டாபன" விழா அவ்வாண்டு டிசம்பர் மாதத்திலேயே பிரபலமாகக் கொண்டாடப் பெற்றது.

48-ம் அத்தியாயம்.

சில விசேஷ நிகழ்ச்சிகள்

ஐஸ்வர சான்னித்யம் ஏற்பட்டபின் மகான்கள் மௌன நிலையையே பெரிதும் விரும்புகிறார்கள்; தனிமையைப் புனிதமாக நாடுகிறார்கள். அமரிநாதம் க்ஷீரபவானி ஆகிய க்ஷேத்திரங்களுக்கு யாத்திரை செய்து திரும்பியபின் சுவாமிகளிடம் ஒரு வித மாறுதல் ஏற்பட்டிருந்தது. அவருக்குச் சரியான தேக சுகமும் அப்பொழுது இல்லை. சுவாசத்தில் சிறிது கஷ்டமும் காசத்தைப் போன்றதொரு நோயும் அவரைப் பீடித்தன. அக்டோபர்மீ 27உ வைத்திய நிபுணர் ஸ்ரீ டாக்டர் ஆர் எல். தத்தரும் வைத்தியத்தில்

பேர்போன கவிராஜர்களும் சுவாமிகளுடைய சுவாஸாஸயத்தைப் பார்த்து, அவரை அதிகம் பேசாமலிருக்கும்படிக்கும் எவ்விஷயத்தி லும் ஆழ்ந்த கவனஞ் செலுத்தா திருக்குமாறும் எச்சரித்தார்கள்; சுவாமிகள் காஷ்மீர யாத்திரை யில் பல்காலும் ஆழ்ந்த யோகாப்பியாசங்களைச் செய்தமையால் அவருடைய இடது கண்ணில் இரத்தக் கட்டி யொன்று இறங்கி யிருந்தது. இன்னும் அவர் மனம் அதிகம் லயப் பட்டிருந்தபடியால், அவருடல் மேலும் உபாதிக்கு உள்ளாகுமென் றஞ்சிய பக்தர்கள், அவரை அந்நிலையினின்றும் மாற்ற வெண்ணி அவருடன் அடிக்கடி பேச்சுக் கொடுப்பதும் வினோதக் கதைகள் சொல்லத் தூண்டுவதுமா யிருந்தார்கள். எங்கே அவர் தமது தோற் சட்டையை வீசி யெறிந்து விடுவாரோ வென்ற அச்சமும் அவ்வன் பர்களுள்ளத்தைக் கலங்க வைத்தது. அவர்கள் இடை விடாமல் சுவாமிகளுடன் பேசிப் பேசி அவரை ஜாக்கிராவஸ்தைக்குக் கொண்டு வர முயன்றாலும் அவர் அந்நிலைக்கு வருவது மிகவும் அரிதாகவே யிருந்தது. ஒரு சமயம் சுவாமி சுத்தானந்தர் ஒரே விஷயத்தைப் பத்துப் பன்னிரண்டு தடவை எடுத்துரைத்தும் சுவாமிகள் மௌனமா யிருந்தார். ஆனால் இந்நிலை வந்துற்றதன் காரண மென்னவென் பதை மட்டும் அன்பர்கள் அறிவர். சுவாமிகள் காஷ்மீர யாத்திரையி னின்றும் மீண்ட பின்னர், சுவாமி பிரம்மானந்தர், சாரத் சந்திரரை விடுத்துச் சுவாமிகளைப் பழைய ஸ்திதிக்குத் திருப்புமாறு ஏவ, ஏகிய அவர், சுவாமிகள் குணதிசையை நோக்கிப் பத்மாசனமிட்டு வீற் றிருக்கக் கண்டு, அணுகியதும் யதேச்சையாக சுவாமிகளின் இடது கண்ணில் அவ்வுதிரக்கட்டி படிந்திருக்கப் பார்த்துத் திடுக்கிட்டு "ஐயோ! குருநாதா! இது எப்படி வந்தது?" என்று வினவச் சுவாமிகள் "அதொன்றுமில்லை; நான் க்ஷீரபவானியில் சில கடினமான யோக சாதனங்களைச் செய்தேன். அதனால் இக்கட்டி உண்டா யிருக்கலாம்" என்று சாதாரணமாகக் கூறினார். அதுதான் சமய மென்று சாரத் சந்திரர், சுவாமிகளை அமர்நாத யாத்திரையைப் பற்றிக் கூறவேண்ட, அவரும் புகல வாரம்பித்து "நான் அமர்நாதத்திற்குப் போய்த் திரும்பியது முதல் எனது சித்தம் சிவபெருமான்பால் லயித்து விட்டது. எம்பெருமான் என்னைவிட் டேகார்' என்றியம்பிச் சற்றுநேரம் மௌனமாயிருந்து பின்பு, "க்ஷேத்திர யாத்திரை உறுதி பயக்கும் உத்தம இலக்கணமுடையது" என்றியம்பினார். அப்பாலும் சுவாமிகள் சற்றுநேரம் மோன நிலை வகித்துச் சாரத் சந்திரரை

தொடர்ந்த நோய்கள்.

நோக்கி "அப்பா! கிரமமான யோக சாதனங்களால் எனதுடல் ஒரு வித மாறுதலை யடைந்துளது. அந்தப் பிரதேசத்தின் மிக்கக் குளிர்ச்சி எனக்கு ஏதோ ஊசிகொண்டு குத்துவது போன்ற உடல் நோவை உண்டுபண்ணி விட்டது. நான் அமரிநாத குகைக்குள் கௌபீனதாரியாய் மேனி எங்கும் வெண்ணீறு பூசிக்கொண்டேகி னேன். அப்பொழுது சீதளமோ உஷ்ணமோ என்னைப் பாதிக்க வில்லை" எனவும், சந்திரர் சுவாமிகளைப் பார்த்து "வெண் புறுக்கள் அமரிநாத குகையில் வசிக்கின்றனவென்றும், அவை அப்பதியினின் றும் பறந்தேகுவதைத் தரிசிப்பார்க்கு இஷ்டசித்தி ஏற்படுகிறதென் றும் சொல்லுகிறார்களே? அது உண்மைதானா?" என, "சுவாமிகள் "ஆம்! ஆம்! அவற்றை நானும் பார்த்தேன்" என்றார்.

இப்படி யடிக்கடிச் சுவாமிகளுடன் பேசிவந்த அவர் ஒருநாள் அவரை "பிசாசங்களைத் தாம் பார்த்ததுண்டா?" என்று வினவ, அவர் தாம் தமது பந்துவர்க்கத்தில் ஒருவனுடைய சூக்ஷ்ம சரீ ரத்தை அடிக்கடிப் பார்த்து வருவதாயும் அது சில சமயங்களில் வெகு தொலையிலுள்ள செய்திகளை யுரைக்கு மென்றும் புகன்று மேலும் அவை கூறும் விஷயங்கள் உண்மைதானாவென்று விசாரித்த பிறகு அநேகமாக உண்மையா யிருந்ததென்றும் கூறினார்.

இந்நாட்களிலெல்லாம் சுவாமிகள் சிகிச்சையின்பொருட்டு அநேக மாகக் கல்கத்தாவிலேயே வசிக்க நேர்ந்தது. அப்பொழுதுகூட சுவாமி கள் தமது தேகோபாதியைப் பொருட்படுத்தாது தம்மைத் தரி சிக்க வரு மன்பர்களுக்கு உபதேசம் செய்து வந்தார். இது கண்ட குருபாய்கள் பயந்து, உடல் நோய் குணப்படுகின்றவரை எவருக் கும் பேட்டி கொடுக்காம லிருக்கும்படி சுவாமிகளை மன்றாடி வேண் டினராயினும், சுவாமிகள் சற்று மிணங்காது, "அவர்கள் தத்தம் வீடு களிலிருந்து இவ்வளவு தூரம் சிரமப்பட்டு வந்திருக்க, கேவலம் எனது தேக சுகத்தின் பொருட்டு நான் அவர்களிடம் சம்பாஷிக்காம லிருப்பதா?" என்று கூறி மறுத்து விட்டார். குருதேவரின் சகல குணாதிசயங்களும் சுவாமிகளிடத்தில் குறைவற அமைந்த பெரு மையே பெருமை!

மேல் நாட்டு சிஷ்ய கோடிகளைப் பழக்கும் வேலை இன்னும் நடந்து கொண்டிருந்தது. * பாலியில் ஸ்ரீமதி ஓலிபுல் அம்மை வசித்து

* 'பாலி' என்பது கல்கத்தாவின் ஓர் சிறு பகுதி.

வந்தார். சுவாமிகள் அவருடைய வீடுதிக்கும் அடிக்கடி போய் வருவார். அவ்வைரோப்பிய அன்பர் குழாத்தில் பரீக்ஷித்து மகாராஜாவின் விதியையும் ஜனமேஜெயன் யாகத்தையும், சத்தியவானின் உயிரை மீட்ட சாவித்திரியின் சரிதையையும், நளச் சரித்திரத்தையும், இராமாயணத்தையும், துருவப் பிரக்லாத பால பக்தர்களின் பக்தித் திறத்தையும், பாதனென்னும் பராக்கிரம மன்னனின் வரலாற்றையும், விக்கிரமாதித்யனின் விக்கிரமங்களையும் சுவாமிகள் தெளிவாக உரைப்பார்; கிருஷ்ண புத்த சரித்திரங்களை விளக்கி அவற்றின்கண்ணுள்ள பக்தி ஞான நீதிப் பகுதிகளை விளக்கிக் காட்டுவார்.

சகோதரி நிவேதிதாதேவி நடத்திவந்த கலாசாலை வெகு பிரபலமாகி மேன்மேலும் மாணவிகள்சேர விருத்தியடைந்து வந்தது. சுவாமிகள் இக்காலங்களில் இடையிடையே இக் கலாசாலைக்குச் சென்று தேவிக்கு வேண்டிய உதவிகளைச் செய்து வந்தார். அம் மகா உத்தமி பாரததேவி நாட்டின் ஹிந்து சமூகத்தின் முன்னேற்றத்தின் பொருட்டுத் துறவுபூண்டு, பால் பழத்தையே புசிப்பதும், வெறுந் தரையில் விரிப்பின்றி படுத்துத் துயில்வதும், ஹிந்துக்களின் ஆசாரப்படி ஸ்நான சௌசங்களைச் செய்வதுமாக தன்மையாகி விட்டாள். வித்யா சாலை வேலையில் ஈடுபட்டவர் இங்ஙனம் அற்பாகாரத்தை அனுதினமுங் கொள்வது தேகத்திற்குப் பலக்குறைவை யுண்டுபண்ணு மென்பதைச் சுவாமிகள் ஓர்ந்து அவ்வம்மையை ஓய்வு நாட்களில் மடத்திற் கழைத்து விருந்தளித்தல் வழக்கம். சுவாமிகளின் அனுக்கிரகமும் அருளும் தனக்குப் பரிபூர்ணமாய் ஏற்பட வேண்டுமென்னும் அவாவால் தேவி சில சமயங்களில் சுவாமிகளின் உச்சிஷ்டத்தையும் புசிப்பதுண்டு.

இங்ஙனமிருக்கும் நாளில், ஒருதினம் சுவாமிகள், சாரத்சந்திரர் சுவாமி யோகானந்தர் ஆகிய இருவரையும் அழைத்துக்கொண்டு சகோதரி நிவேதிதா தேவிக்குக் கல்கத்தா மிருகக்காட்சி சாலையைக் காண்பிக்கச் சென்றார் அக்காட்சி சாலையின் காப்பாளரான ராய்பகதூர் ராமப்ரம்ம சன்யால் சுவாமிகளின் விஜயத்தை முன்னர் எவ்விதமோ அறிந்து சுவாமிகளை கோஷ்டியாருடன் எதிர்கொண் டழைத்து ஒவ்வொரு மிருக மிருக்கும் இடத்திற்கும் இட்டுச் சென்றார். அவருடைய ஆக்ஞைப்படிச் சுவாமிகள் முதலியோர் பார்க்கும்படி, சிங்கம் புலி முதலிய மிருகங்கட்கு உணவளிக்கப்

மிருகக் காட்சி சாலைக்கு விஜயம் செய்தல்.

பட்டது. சிங்கத்தைப் பார்க்கப் பார்க்க இந்த நரேந்திர சிம்மத்திற்கு உற்சாகமாயிருந்தது. பின்னர் சர்ப்பங்களுள்ள விடத்திற்குச் சென்று வெகு கவனமாய்ப் பார்த்த பிறகு, சுவாமிகள் ஊர்வனப் பிராணிகள் உற்பத்தியைப் பற்றி ருசிகரமாகப் பல சாஸ்திர நிபுணர்களின் அபிப்பிராயங்களையும் கூறி ராமப் பிரம்மரோடு சம்பாஷித்தார்; அப்பால் குரங்குகள் வசிக்குமிடத்தை யணுகி, ஏறக் குறைய மனிதரூபத்தையும் சுபாவத்தையு முடைய அப்பிராணிகளை நோக்கி வேடிக்கையாக "நீங்கள் எப்படி இந்த சரீரத்தைப் படைத்தீர்கள்? நீங்களியற்றிய எவ்வித கர்மா உங்களை இப்பிறவினுட் புகுத்தியதோ?" என்று கூறினார்.

அதன்பின் சுவாமிகளும் அவருடன் வந்தவர்களும் ராமப்ரம்மரின் உபசாரத்திற்கிணங்கி அற்பாகாரஞ் செய்து கொண்டார்கள். அந்தக் காட்சி சாலையின் தலைவர் தாவரமிருக சாஸ்திரங்களில் வல்லவர்; * டார்வின் பரிணமக் கொள்கையில் மிக்க நம்பிக்கை யுள்ளவர். 'எவல்யூஷன்' (பரிணமித்தல் என்னும் தத்துவத்தை ஊர்ஜிதமான நம்பிக்கையுடன் கைக்கொண்டாலன்றி இப்பிராகிருத உலகத்தில் நடக்கும் சர்வ ஜீவாசிகளினுடைய வளர்ச்சி ரகஸ்யத்தையும், இவ்வுலகத்தில் ஏற்படும் மாறுதல்களையும் திருப்தியாகவும் தெளிவாகவும் விளக்க ஒண்ணாது" என்பது மேல் நாட்டுப் பிராகிருத சாஸ்திரீக ஆராய்ச்சி நிபுணர்களில் ஒரு சிலரின் அபிப்பிராயம். இக்கொள்கையை உதாகரித்தவர் டார்வின் என்பவர். ராமப்பிரசன்னருக்கு இக்கொள்கையில் விசேஷ நம்

டார்வின் என்னும் மேல்நாட்டுத் தத்துவ சாஸ்திரியின் 'எவல்யூஷன் கொள்கை.

---

* டார்வின் எராஸ்மஸ் டார்வின் என்பது இவருடைய பூரணமான பெயர். இவர் கி. பி. 1731 முதல் 1802 வரையில் வசித்தவர். இங்கிலாந்து தேசத்தின் ஹாம்ப்ஷைர் என்னும் பாகத்திலுள்ள எல்டன் என்னும் ஊரில் 1731-ம் வூ டிசம்பர் மாதம் 12உ ஜனித்தவர். "ஒரு சிறு வித்தானது எப்படி முளைத்துச் செடியாகி வளர்ந்து காலக்கிரமத்தில் மரமாகப் பல கிளைகள், இலை, பூ, பிஞ்சு, காய், பழம் முதலியவற்றுடன் மரமாகப் பரிணமிக்கின்றதோ அது போலவே பல பிறவிக ளெடுத்துப் பரிணமித்து முன்னைய உருவங்களும் குணங்களும் கிரமமாக மாற, படிப்படியாக உயர்ந்து மிருகமானது மனித நிலையையும் உருவத்தையும் குணத்தையும் அடைகின்றது. மனிதனுக்கு முந்திய ஸ்திதி குரங்கு நிலை" என்று டார்வினின் எவல்யூஷன் கொள்கையை ஒருவாறு தெளிவாகக் கூறலாம்.

பிக்கையுண்டு; ஆனல் சுவாமிகள் அவருடன் பேசுங்கால் இத்தத்துவமானது எல்லா விஷயங்களையும் விளக்கிக் காட்டும் சக்தியற்றதென்றும், விசேஷமாய் ஒரு ஜீவனின் ஆத்ம சம்பந்தமான ஆராய்ச்சிக்கு இது ஒரு சிறிதும் பயன்படாதென்றும் எடுத்துக் காட்டினர். "ஜீவராசிகளுக்குள் பரஸ்பர விரோதமும் போட்டியுமே எப்பொழுதும் இருந்து வருகிறது; அதுதான் உலகஸ்திதிக்குக் காரணம் என்று 'எவல்யூஷன்' தத்துவத்தால் ஏற்படும். ஆனல் தீர்க்கதரிசிகள், மகரிஷிகள், யோகிகள், இன்னும் சத்ய தரிசனம் செய்த பெரியோர்கள் நமக்கு உணர்த்தியுள்ள உண்மைகளில் இதை நாம் காணவே முடியாது. இந்தத் தத்துவம் சாதாரணமாய்க் கீழ்த்தசையிலிருக்கும்படியான பசுவர்க்கத்தைச் சேர்ந்த மனிதர்களுக்கே அமையப்பெறுமே யொழிய, உயர்ந்த மோக்ஷ சாதனத்தைக் கருதி புலன்களை வென்று சாதாரண விஷய சுகங்களைத் தாண்டி நாடும்படியான பாவித்தைக்குப் பயன்படாது. மனிதனுடைய உண்மையான சுபாவம் பரஸ்பர விரோதமோ போட்டியோ அன்று. சாந்தம் சுகம் ஆகிய இவை தான் ஸ்வபாவமான ஸ்திதி. ஆனல் அவித்தையினுடைய வாசனையினல் அந்த உண்மை நிலையை மனிதன் அறியக் கூடாதவனயிருக்கிருன்; சரியான வித்தையாலும், அப்பியாச உபாசனக் கிரமங்களாலும், இந்திரிய நிக்ரஹம் செய்து பின்னர் அந்த வாஸ்தவ நிலையை அடைகிருன். அப்படி எண்ணற்றவர்கள் நடந்திருக்கிருர்கள்; எவரும் அந்நிலையை அடையக்கூடும்" என்றுச் சுவாமிகள் அவருக்கு விளங்கச் சொன்னர்.

சுவாமிகளின் அபிப்பிராயம்.

அந்த மிருகக் காட்சி சாலையின் காப்பாளர் சுவாமிகள் வாயிலாகத் தாம் அன்று அறியலான சாஸ்திரீயப் பேருண்மைகளுக்காக நன்றி செலுத்தி "சுவாமிஜீ! இது ஓர் அபூர்வமான சங்கேதம். இக்காலத்தில், மேல்நாட்டு ஞானிகளின் கருத்தையும், புராதன சாஸ்திரங்களின் கொள்கைகளையும் நன்கு பயின்று அவற்றிற்குள்ள பேதாபேதங்களையும் உயர்வு தாழ்வுகளையும் எடுத்தோதும் உங்களைப் போன்ற மகான்கள் பலர் தோன்றினல் மட்டுமே பாரத தேசத்தின் பழஞ் சிறப்புகள் மக்களுக்கு விசிதமாகும்" எனப் புகழ்ந்தார். இதைப் பற்றிச் சாரத்சந்திரர் தமக்கு விளக்குமாறு அவ்வமயம் வேண்ட, அன்று மாலையில் பலராம் பாபுவின் கிருகத்தில் சுவாமிகள் உற்பத்தி பரிணம வாதத்தைத் தெளிவாக தமதன்பர்கட்கு உபதேசித்தார்.

"டார்வினின் கொள்கை மிருக தாவர ஜாதிகட்குப் பொருத்த மானதேயன்றி, யுக்தா யுக்த பரிக்ஞானமும் விவேகமும் பொலிந்து விளங்குகின்ற அரிதினும் அரிதாகிய மானுடப் பிறவிக்கு ஏற்காது. மானுஷீயம் பொருந்திய மகான்களிடத்தில் எவ்விதப் போராட்டமும் பிறரைக் கெடுத்துத் தாம் உயரவோ வலுக்கவோ முற்படும் செய்கைகளும் காணப்படுவதில்லை. அவர்களிடத்தில் சாதாரணமாக, இக்குணங்களிருக்கவேண்டிய ஸ்தானத்தில் தியாகத்தை நாம் காண்கிறோம். எவனொருவன் மேன்மேலும் தியாக புத்தியே படைத்து வருகிறானோ அவனே உன்னத நிலையை எய்துகின்றான். யுத்தனின் போராட்டமெல்லாம் அவன் அந்தரங்க சுபாவங்களிலேயே பொருந்தி யிருக்கின்றன. எவன் தன் மனதை அலையவிடாமல் காக்கின்றானோ அவன் அடையக் கூடாதது எதுவுமில்லை" என்று அவ்வமயம் சுவாமிகள் உபதேசித்தார். அப்பொழுது ஒருவர் "அப்படியானால் ஏன் தேக வளர்ச்சியின் அவசியத்தைத் தாங்கள் வற்புறுத்த வேண்டும்?" என்று வினவ, சுவாமிகள் நித்திரை செய்யும் சிம்மத்தைத் தட்டி விட்டதுபோல் அசைந்து எழுந்து பின்வரும் சொற்பெருக்கிடலானார்.

உற்பத்திப் பரிணாம வாத விளக்கம்.

"நீங்கள் மனிதர்களா? அல்லவே அல்ல! உண்பதிலும் உறங்குவதிலும் பிரஜோற்பத்தி செய்வதிலும் திருப்தியடைந்து பயத்தால் பந்திக்கப்பட்டுள்ள மிருகங்களைவிடக் கேவலமானவர்கள்! உங்களிடத்தில் சிறிதளவு அந்த யுக்தி என்பது இல்லாவிட்டால், நிச்சயமாக நீங்கள் நாற்கால் பிராணிகளாகவே யிருப்பீர்கள்! சுயமரியாதை யின்றி, நீங்கள் உங்களுக்குள்ளே பொறாமை மலிந்து, பிறநாட்டார் அருவருப்படைவதற்கு இலக்காயினீர்கள்! உங்கள் வீண் வீம்புப் பேச்சையும் கொள்கைகளையும் பிறவற்றையும் குப்பைத் தொட்டியிற் போட்டு விட்டு, அமைதியாக உங்கள் நித்ய வாழ்விலே ஒழுங்காக நடக்க முன் வாருங்கள். மிருகங்களை மேய்ப்பதுபோல் மிருக பலத்தால் நீங்கள் காக்கப்படுவதால், பிழைக்க முதலில் வழி தேடுமாறும், உங்களை நீங்களே காத்துக்கொள்ளச் சரீரபலத்தை அடையும் படியும், அதனால் புத்தியோடு சற்று உறுதியாகப் போராடலாமென்றும் நான் உபதேசித்தேன். தேகபல மில்லாதவன் ஆத்ம ஞானத்தை யடைவதற்குத் தகுதியற்றவன் என்றுதான் நான்

"நீங்கள் மனிதர்களா?"

உங்களுக்கு நிமிஷத்துக்கு நிமிஷம் சொல்லுகின்றேனே! மனம் எப்பொழுது கட்டுப்படுகின்றதோ அப்பொழுது அவனே தலைவன்! பிறகு அவன் தேகம் பலத்துடனோ அல்லது பலஹீனமாகவோ இருக்கலாம். அதன் தேவை பின்னர் அவனுக்கில்லை.''

நிற்க, இக்காலங்களில் சுவாமிகளுக்கு அநேகமாக நித்திரையே வருவதில்லை. அவருடைய தேகோபாதி மூளைக்கு வேலை கொடுத்துக் கொண்டே யிருந்தது. அவர் இராப்பொழுதிலும் முக்காற்பாகம் விழித்திருப்பார்; அனுதினமும் அதி காலையில் எழுந்து விடுவார்; அதனால் அவர் பலஹீனப்பட்டு ஓய்வுக்குப் பெரிதும் ஏங்கினார். இப்படி யிருக்குங்கால் ஒருநாள் சூர்யக் கிரஹணம் வந்தது. சுவாமிகள் கிரகண காலத்திற்குச் சற்று முன்புதான் உணவருந்தி விட்டுத் தமது சீடரொருவர் அடிவருடப் பலராம் பாபுவின் கிருகத்தில் சிறு துயில் கொண்டிருந்தார். கிரகண ஸ்பரிசத்தை யுணர்த்தித் திடீரென்று பேரிகை யொலியும், சங்கநாதமும் துங்கமாய் எழுந்தன. சுவாமிகள் எழுந்து பார்த்துவிட்டு 'சரி! கிரஹணம் பிடித்து விட்டது. நான் ஒரு குட்டித் தூக்கம் போடுகிறேன்' என்று சற்று அயர்ந்தார். பிறகு ஆகாசம் முற்றிலும் இருளடைந்தபோது சுவாமிகள் விழித்து ''இன்று கிரஹணமல்லவா?'' என்று கூறி மறுபடியும் நித்திரை செய்தார். பின்னர் அவர் குழந்தையைப்போலத் தூங்கி யெழுந்து தமது சிஷ்யரைப் பார்த்து ''கிரஹண காலத்தில் ஒரு மனிதன் எதை நினைத்தாலும் செய்தாலும், ஒன்றுக்கு நூறாய்ப் பலனடைகிறான் என்று சொல்லுகிறார்களே! நான் கொஞ்சம் தூங்கினால் இனிமேல் நூறுமடங்கு தூக்கம் வருமென்று நினைத்துத் துயின்றேன். அப்படியும் தூக்கம் வந்தபாடில்லையே. நான் பதினைந்து நிமிட நேரந்தான் நித்திரை செய்தேன். சரி! ஜகதீஸ்வரி எனக்கு நல்ல தூக்கம் வரும்படி அனுக்கிரகம் செய்யவில்லை'' என்றார். இதனால் அவர் தேகோபாதியால் தூக்கம் வாரமல் கஷ்டப்பட்டாரென்பது தெற்றென விளங்கும்.

வியாதியால் நித்திரையின்மை.

சுவாமிகள், தமது இல்லாச்சிரமிக சிஷ்யர்களுள் சாரத் சந்திரரிடத்தில் விசேஷப் பிரியமும் அபிமானமு முடையவர். அவர் சாத்வீக சம்பன்னரென்று சுவாமிகள் கூறுவது வழக்கம். ''குழந்தாய்! அடிக்கடி நீ இங்கு வந்துகொண்டிரு. இங்கு பொழுதைக் கழிப்பதால் எவ்வளவு சத்சங்கமும் மத விசாரமும் ஏற்படுகின்றது. பார்த்தாயா?

ஸ்ரீ சாரத் சந்திரர்.

சாத்விகிகளின் சகவாஸமே இங்கு உனக்கு லபிப்பதாகும். கங்கா தீரத்தின் காற்று இங்கு எவ்வளவு மனோகரமாக வீசுகின்றது பார்!'' என்று சுவாமிகள் சாரத் சந்திரருக்குக் கூறுவார்; ''நீ இந்தக் கேவல இந்திரிய சுகங்களையே அனுபவிக்கப் பிறந்தவனல்ல'' எனப் புகன்று சுவாமிகள் அவரைத் துறவு பூணுமாறு அழைப்பதுண்டு. எல்லோருக்கும் இல்லாத விசேஷ உரிமைகளும் சாரத் சந்திரருக்கு அளிக்கப் பட்டிருந்தன. இக்காலங்களில் அவருக்கு ஏகாந்தமாக நிர்விகல்ப சமாதி, பிரம்ம மாயா சங்கேதங்கள், கல்பங்களின் விஷயம், அவதாரப்ரபாவம் முதலியவற்றைப் பற்றிச் சுவாமிகள் உபதேசிப்பார். ஒருநாள் வெகுநேரம் வரையில் சுவாமிகள் அவரோடு பேசியிருந்த பிறகு நித்திரை செய்தார். சாரத் சந்திரரும் சுவாமிகளின் படுக்கையிலேயே அவருக்குப் பக்கத்தில் படுத்துத் துயின்றார். அங்ஙனமாக விடிந்ததும் சந்திரர் சுவாமிகளைப் பார்த்து ''சுவாமிஜீ! தாங்கள் சிவபெருமானை * துதிரா மலர்கொண்டு அருச்சனை யியற்ற, அடியார் மனமாகிய கோயிலிலே வதியும் அற்புத மூர்த்தி தேவரீரது சொரூபத்திலே மறைந்து மன்னிக் கலக்க நான் கனாக் கண்டேன்'' என்று கூறி ஆனந்தித்தார். இதைக் கேட்ட சுவாமிகள் சந்திரரை நோக்கி 'இவ்விஷயத்தை நீ வேறெவரிடமும் வெளியிட லாகாது'' என்று இயம்பி எச்சரித்தார். சாரத் சந்திரர் உடனே கங்கையில் நீராடி வந்து சுவாமிகளைப் பூசித்துத் தாம் கண்ட கனவை உண்மையாகவே அடைய அருள்புரியுமாறு மன்றாடினார். சுவாமிகள் கடைசி வரையில் மறுத்தாராயினும் அனுமதி யளிக்காதிருக்க முடியவில்லை.

உத்தரவு பெற்ற சீடர் உவகையோடு அருகாமையிலுள்ள கிராமத்திற்கேகி உளூர்ந்துருள் பொழுதில் துதிரா புஷ்பங்களை யதேஷ்டமாகச் சேகரித்து வந்து ரம்யமாகப் பூஜையியற்றினார். அப்பொழுது அம்மடத்தைச் சார்ந்த கிருகஸ்த, சந்நியாசி, சிஷ்ய, குருபாய்களனைவரும் கூடியிருந்தார்கள். சுவாமி பிரேமானந்தர் மட்டும் அப்பொழுது கடைவீதிக்குப் போயிருந்தார். திவ்யமாகப் பூஜை முடிவுற்றதும் சுவாமிகள் தமது சிஷ்யரைப் பார்த்து ''அப்பா! இப்பொழுது பிரேமானந்தர் கடைவீதிக்குப் போயிருக்கிறார். குருதேவரின் பீடத்தில் நீ என்னை வீற்றிருக்கச் செய்து ஸ்ரீராமகிருஷ்ணர் பூஜைக்குரிய பாத்திரங்களைக் கொண்டு திருவடி பூஜை செய்ததாக அவர் அறிவா

* துதிரா = தும்பை.

ராஞல் மிகவும் கோபிப்பாரே!'' என்று சொல்லி முடிக்கு முன் பிரேமானந்தர் அங்கு வந்து நின்ருர். வந்ததும் நிகழ்ந்தவற்றை அவர் அறிந்து "சந்திரன் செய்தது சரிதான்! நீங்கள் வேறு ஸ்ரீராமகிருஷ்ணர் வேரு?'' எனலும் அனைவரும் அத்வைத ஞானத்தி லாழ்ந்து ஆனந்தக் கடலிலே மூழ்கினர்.

சாரத் சந்திரர் சுவாமிகளைப் பூஜித்தல்.

அமரிநாத க்ஷேத்ர வாசத்தினின்றும் சுவாமிகள் திரும்பி வந்தபின் கல்கத்தாவில் ஸ்ரீராமகிருஷ்ணமட சம்பந்தமாக நிகழ்ந்த முக்கிய சம்பவங்கள் "உத்போதினி" என்ற மாத மிருமுறை வெளியாகும் வங்காளிப் பத்திரிகையை ஆரம்பித்ததும் ஒன்ருகும். சுவாமி திரிகுணதீதர் இரண்டொரு பிரம்மச்சாரிகளின் ஒத்துழைப்போடு அவ்வெளியீட்டைப் பத்திரிகாசிரியராகவும் பதிப்பாளராகவு மிருந்து நடத்தி வந்தார். ஓர் முத்திராக்ஷா சாலையும் இப்பத்திரிகைக்கென்று தனியே அமைக்கப் பெற்றது. 1899-ம் ஆண்டு ஜனவரி மீ 14 ம்வ இப்பத்திரிகை முதல் முதலாக வெளியாயிற்று. சுவாமிகள் அச் சஞ்சிகை நடைபெற வேண்டிய விதத்தை அவ்வப்பொழுது வலியுறுத்திஞர். மத நூல்களின் சுலபமான அனுஷ்டான பாகங்களை வியக்தமாக வெளியிடுவதும், நவீன ஆராய்ச்சி முறைப்படிப் பாரத மத, ஜனசமூக முன்னேற்றத்திற்கென உழைப்பதும் இப்பத்திரிகையின் நோக்கங்களாகும். வேத வேதாந்தங்களின் விழுமிய தாத்பரியங்களெல்லாம், எளிய தெளிவான நடையில் வரையப்பெற்று இதன்கண் வெளிவாலாயின. சண்டாளர் எனப்படுவோரை ஸ்ரீராமகிருஷ்ணரின் அனுஷ்டானப்படி பிராம்மண நிலைக்குக் கொண்டுவர வேண்டுமென்ற சமாஸ ஆவேசபூர்வமான கட்டுரைகள் பலவும் பத்திரிகையில் பிரசுரிக்கப் பட்டன. திரிகுணதீதர் மேற்கூறிய பெரிய நோக்கங்களுடன் இப் பத்திரிகையை உற்சாகத்தோடு நடத்தி வந்தார்.

உத்போதினி என்னும் வங்காள சஞ்சிகை.

அப்பால், டிசம்பர் மாதம் 16-ம் தேதி சுவாமிகள் தமது சிஷ்யர்களிடம் தாம் முதலில் வைத்தியநாதத்திற்கு யாத்திரைபோக உத்தேசித்திருப்பதாயும் பின்னர் கோடைக் காலத்தில் ஐரோப்பா, அமெரிக்கா கண்டங்கட்கு ஒருமுறை சென்றுவரக் கருதி யிருப்பதாயும் அறிவித்தார். சுவாமிகள் தேக நலத்தின் பொருட்டுக் கல்கத்தாவினின்றும் வெளியேறு முன், கல்கத்தா கலாசாலை மாணவர்கள் கூட்டமாய் வந்து அவரைச் சுற்றிக்கொண்டு அனுதினமும் ஆத்மோபதேசம்

அடைந்து வந்தார்கள். சுவாமிகளும் அவர்களுக் கேற்றவாறு உபதேசித்து, ஆராய்ச்சியற்று, இது பொய் - மூட நம்பிக்கை என்று அவர்கள் எளிதிற் கூறிவிடுந் தன்மையைப் பெரிதும் கண்டித்து, ஹிந்து மதானுட்டானங்களின் சாஸ்திரீய (Science) பாகத்தினுடைய மேன்மையைப் புலனாக்கி, மற்றும் அவர்களுக் கெழுந்த பல விதமான சங்கைகளையும் போக்கி, அவர்களுடைய மனமாகிய குரங்கை விஷய வாசனையில் செல்லாதிருக்கச் சீர்திருத்தினார்.

பின்னர், டிசம்பர் மாதம் 19-ம் தேதி பிரயாணமாகி, பிரம்மச்சாரி ஹரேந்திர நாதருடன் சுவாமிகள் வைத்திய நாதத்தை யடைந்து பாபு பிரிய நாத் முகர்ஜியின் கிருகத்தி லிறங்கினார். இத்தலத்தின்கண் அவர் நன்னூலாராய்ச்சியிலும், கடிதங்கள் வரைவதிலும், தேக யோக அப்பியாசங்களிலும், உலாவலிலும் காலங் கழித்து வந்தார். அவரை யறியாமலே அவருக்கு ஓய்வென்பது சிறிதும் ஏற்படுவதற் கேதுவில்லாமற் போயிற்று. ஆகையால், இங்கு மீண்டும் பயங்கரமாய் வியாதி அவரை உபாதிக்கத் தொடங்கிற்று. 'காசம்' என்னும் நோய் தேகத்திற்கு மிக்க வலியை யுண்டுபண்ணிற்று. உடல் இளைத்தும் வெளுத்தும் போய், சுவாஸக் கஷ்டமும் வந்துற்றது. அதனால் அன்பர்கள் அவர் சீக்கிரத்தில் தீர்க்க சமாதியிற் கலந்து விடுவரோ? என்றும் பயந்தார்கள். தமது உபாதியைப் பொறுக்க மாட்டாமல் சுவாமிகள் "நான் ஓர் துணை யணைந்த வண்ணம் மரணாந்த காலத்தை 'சோஹம்! சோஹம்! நானே அவன்!' என்று வேதங்களால் முறையிடப் படும் நிலையை ஆவலுடன் எதிர் பார்க்கிறேன்" என்று ஓரன்பரிடம் கூறியது முண்டு.

இங்ஙனம் சுவாமிகள் பிரியநாத் முகர்ஜி யவர்களின் இல்லத்தில் வாசம் செய்து வரும்போது, நிரஞ்சனானந்தரும் அவருமாக உலாவச் சென்றார்கள். சென்றவர்கள் திரும்புங்கால் வழியில் ஒரு ஏழை மனிதன் இடுப்பில் கந்தையுடன், வாடையில் மெலிந்து வயிற்றுப்போக்குடன் உபாதையால் புறண்டுகொண் டிருக்கக் கண்டு "ஐயோ பாவம்! இக்கஷ்ட நாராயணனுக்குப் பிக்ஷுவாகிய நாம் வந்த விடத்தில் எப்படி உதவி செய்வது?" என்று மனம் குழம்பி, பின்பு ஒருவாறு தேரித் தாமிருவருமாக அவரைத் தூக்கி வந்து தமது அறையிற் கிடத்தி, உடம்பைக் கழுவி, புது ஆடை ஒன்றை யணிந்து, பத்தியமான உணவளித்துச் சிகிச்சை செய்தார்கள். பிரியநாத் முகர்ஜி அவ்வமயம் தானே நேரில்

ஏழையிடத்திற் கொண்ட இரக்கம்

அப்பிணியாளனுக்குத் தொண்டு செய்ததுடன் சுவாமிகளின் குணாதி சயங்களையும் வியந்து மகிழ்ந்தார்.

விவேகானந்த சுவாமிகள் கல்கத்தாவினின்றும் யாத்திரை போயிருந்த காலங்களில் ஸ்ரீ சாரதாமணி தேவியார் டிசம்பர் மாதம் 20-ம் உ ஒரு முறை மடத்திற்குப் போனார்; அடிக்கடி பாலியிலிருந்த ஸ்ரீமதி ஓலிபுல் அம்மையையும் சென்று விசாரித்தார். கிறிஸ்து உயிர்த்தெழுந்த நாள் பண்டிகைக்காகச் சில சந்நியாசிகள் ஸ்ரீமதி புல், மிஸ். மக்லியோட் ஆகிய இருவரின் உபசாரத்திற் கிசைந்து பாலி ஆஸ்ரமத்திற்குச் சென்று திரும்பினார்கள். அம்மாதம் 30உ அவர்கள் மடத்தில் சந்நியாசிகளால் உபசரிக்கப் பெற்றபின் அமெரிக்காவுக் குப் புறப்பட்டார்கள். 1899-ம் ஹு ஜனவரிமீ 2உ ஸ்ரீராமகிருஷ்ண மடம் நிலம்பர் முகர்ஜியின் சிருங்கார வனத்திலிருந்து முற்றிலும் பேலூர் மடத்திற்கு மாற்றப்பட்டது. பிரம்மச்சாரிகளுக்கு நிவேதிதா தேவி அனுதினமும் உபதேச வகுப்பை நடத்தி வந்தார். மடத்தின் இவ்வித அலுவல்களும் சேவாபிவிருத்தியும் சந்நியாசிகளின் வேலை யைப் பற்றிய விஷயங்களும் அன்றன்று கடிதவாயிலாக சுவாமிகட்கு அறிவிக்கப் பெற்றன. கடிதமூலமாக எவ்வளவோ வெளியூ ரன்பர்கள் சுவாமிகளுக்கு எழுதித் தமக் கேற்பட்ட சந்தேகங்களை நிவர்த்தி செய்து கொண்டார்கள். கல்கத்தாவிலிருந்து வெளிப்படு முன் சுவாமிகளுக்கு வந்த கடிதங்கள் பலவற்றுள் பிரபல கோடீஸ்வரரும் மகா தயாமூர்த்தியுமான பம்பாய் சர். ஜாம் செட் ஜி. என். டாடா அவர்களின் நிருபத்தை மட்டும் இங்கு மொழி பெயர்த்து வரைகின்றோம். அது பின் வருமாறு:

பம்பாய் சர். ஜாம்செட் ஜி என். டாடா வின் கடிதம்.

ஸ்ரீமத் விவேகானந்த சுவாமிகளின் திவ்ய சந்நிதிக்கு,

இந்தியாவில் தவவடிவான பெரியீர்! தேவரீர் ஜப்பானிலிருந்து சிகா கோவிற்குச் செய்த யாத்திரையில் அடியேனும் தங்களுடன் பிர யாணம் செய்தது தேவரீருக்கு ஞாபக மிருக்குமென்று நம்பு கின்றேன். வழியெல்லாம், இந்தியாவின் ஆழ்ந்த ஆத்மஞான அபிவிருத்தியையும், புராதன மதானுஷ்டானங்களை அழிக்காமல் சன்மார்க்கத்தில் செலுத்தக்கூடிய வழிகளில் அவற்றைத் திருப்பதலுமாகிய கடமைகளின் பெருநோக்கங்களையும் தேவ ரீர் வெகுவாய் எடுத்துப் புகட்டி வந்ததை நான் நினைத்து நினைத்து அக மகிழ்கின்றேன்.

இக் கொள்கைகளை அடியேன் நிறுவியுள்ள இந்திய சாஸ்திரீய ஆராய்ச்சிக் கழகத்தில் வலியுறுத்தவும் பிரபலப் படுத்தவும் கருதியிருக்கிறேன்; அக் கழகத்தைப் பற்றித் தேவரீர் கேட்டோ, அல்லது பத்திரிகை வாயிலாகப் படித்தோ இருக்கின்றீர்கள் என்பது மட்டும் அடியேனுக்கு நிச்சயமாய்த் தெரியும்!

மானுஷீய சாஸ்திரத்தையும் இயற்கை சாஸ்திரத்தையும் அபிவிருத்திசெய்ய ஆயுள் நாட்களைக் கழித்து, ஆடம்பரமற்ற வாழ்வையியற்றக்கூடிய மகான்கள் வசிக்க மடங்களையும், ஆஸ்ரமங்களையும் ஸ்தாபிப்பதைக் காட்டிலும், ஒருவன் ஆத்மஞானார்த்தமாகச் செய்யக்கூடிய மகத்தான கைங்கரியம் வேறொன்றுமில்லை. இப்போர்ப்பட்ட கைங்கர்யத்தை மகான்கள் மேற்கொண்டு நடத்தினால், ஆத்மஞானமும் சாஸ்திர ஆராய்ச்சியும் வளர்ச்சி யடைவதுடன், நமது ஜென்ம பூமிக்கு அழியாப் புகழும் ஏற்படுமென்பதில் ஐயமில்லை. இத்தகைய கைங்கரியத்தை தேவரீரைத் தவிர வேறெவரும் மேற்கொண்டு நடத்த முடியாதென்பது அடியேனுடைய அபிப்பிராயம்! இக்காரியத்தில் நம்முடைய வாழ்நாளில் புராதன மதானுஷ்டானங்களைப் புனராகப் புகுத்தத் தேவரீர் மனமொப்பி இசைவீர்களோ? இவ்விஷயத்திற்குத் தேவரீர் கிருபை கூர்ந்து முன் வந்து மக்களுள்ளத்தேயுள்ள மகா சக்தியைத் தூண்டக்கூடிய பிரசுரங்களை வெளியிடத் திருவுள்ளம் பற்றுவீர்களானால் அதற்கான சகல செலவையும் அடியேன் ஏற்றுக் கொள்ளச் சித்தனாயிருக்கிறேன்.

தாஸன்,

1898ஹு நவம்பர்மீ 23உ
எஸ்பிளனேட் ஹவுஸ், பம்பாய். } ஜாம்செட். ஜி. என். டாடா.

சுவாமிகள் வைத்தியநாதத்தில் 1899-ம் வருடம் ஜனவரி மாதம் இறுதி வரையி லிருந்துவிட்டு, பிப்ரவரி மாதம் மூன்றாந்தேதி கல்கத்தாவிற்கு வந்தார். வைத்தியநாதத்திற்கு அவர் செல்லு முன்பும் சென்ற பின்பும் நிகழ்ந்த 'சில விசேஷ நிகழ்ச்சிகள்' இவ்வத்தியாயத்தில் கூறப்பட்டன.

49-ம் அத்தியாயம்.

சந்நியாசிகளின் தத்துவப் பயிற்சி

உம்பர் தொழும் மெய்ஞ்ஞான அம்பதியான வைத்திய நாதத்திலிருந்து சுவாமிகள் பேலூர் மடத்திற்கு வந்தது முதல் சந்நியாசிகளையும் பிரம்மச்சாரிகளையும் சமய சேவைக்கு ஏற்ற நெறியிற் பழக்கலுற்றார். சமையல் செய்வதில் அவர்களை நன்றாகப் பழக்கினர்; இட்ட கட்டளையைக் குறித்தபடி குறிப்பிட்ட நேரத்தில் முடிக்கவும் அவர்கள் பழக்கப்பட்டார்கள். பாவ்ஹாரி பாபாவைப் போல அற்ப விஷயத்திலும் உயர்வு கண்டு ஊக்கங்கொள்ளும் தன்மையை அவர்கள் அடைய வேண்டுமென்பது சுவாமிகளின் அபிலாஷை. இது சம்பந்தமாக, "எவனொருவன் சமையல் செய்வதில் திறமை குறைந்துள்ளானோ அவன் 'பக்கா' சந்நியாசியாக முடியாது. சமையல்வேலை மனசுத்தியுடனும் கவனத்தோடும் செய்யப்படாவிடில் அது சத்வ உணவாகாது" என்று சுவாமிகள் கூறுவார். இதையன்றிப் பிரசங்கம் செய்யவும், பிரசார வேலையை நடத்தவும் அவர்கள் பழக்கப் பெற்றார்கள். சுவாமிகள் ஒவ்வொருவரையும் ஒவ்வொருநாள் குடும்பிகளும், பிரம்மச்சாரிகளும், சந்நியாசிகளும் நிறைந்த சபையிற் பிரசங்கம் புரியுமாறு தூண்டுவதுண்டு. அப்பொழுது சிலர் பேசக் கூச்சப்படுவார்கள். சுவாமிகள் அவர்களைப் பார்த்து "குருதேவருடைய உபதேசத்தை நீ மறந்ததென்ன? அவர், 'உனக்கு முன்னிருப்பவர்களை நீ துச்சமாக நினைத்துக்கொள். அப்பொழுது உனக்குத் தைரியம் வரும்' என்று புகன்றதில்லையா?' என்று கூறி உற்சாகப்படுத்துவார். பிறகு அவர்கள் கூச்சமின்றி வேதம், வேதாந்தம், பத்தி, சிரத்தை, துறவு முதலான விஷயங்களைப் பற்றிப் பேசுவார்கள். இடையிடையே சுவாமிகள் சிரக்கம்பம் பண்ணல் அங்கீகார அறிகுறி காட்டல் முதலியவற்றால் அவர்களைத் தேற்றுவார். சுத்தானந்தரை "நீ காலக்கிரமத்தில் நல்ல பிரசங்கியாவாய்" என்று அவர் கூறுவதுண்டு.

சுவாமிகளின் திறமை, அவரைச் சார்ந்த அன்பர்களையெல்லாம் அவர் கல்விமான்களாயும், அஞ்சாமையுடைய வீரர்களாயும் ஆக்கிய பாங்கிலேயே பரக்க விளங்கும். அவரது அன்பர்கள் தலையிட்ட எக்காரியத்திலும் வெற்றியோ தோல்வியோ எது நேரிடினும் சுவாமிகள்

அவர்களை உற்சாகப் படுத்தியே வருவார். அவ்வடியார்களின் ஜயாபஜயத்தைக் கருதிச் சுவாமிகள் அவர்களுடைய யோக்யதையை நிர்ணயிப்பதில்லை; அவர்களுடைய தைரியத்தையே பெரிதும் பாராட்டுவார். சுவாமிகள் அவர்களைக் கங்கையில் அண்டாத ஆழத்திற்றள்ளி நீச்சுப் பழகவைப்பார்; 'இதுபோன்றே நீங்கள் கஷ்டமான சேவையிற் பிரவேசித்து அவற்றினின்றும் ஜெயத்துடன் கரையேற வழி தேடுதல் வேண்டும்' என்று அவர்கள் தத்தளித்துத் தடுமாறி கரையேறியதும் கூறுவார். தன்னைப்போல ஒவ்வொரு சிஷ்ய குரு பாயையும் தேற்றி விடச் சுவாமிகள் முழு வலியுடன் பாடுபட்டு வந்தார். இந்நாட்களில் ஒருவித விசேஷ உற்சாகமும் அருளும் மடத்தில் நிறைந்திருந்தது. மடத்தின் இயக்க விதிகள் அதற்காகவே அமரிக்காவினின்றும் அழைக்கப்பட்ட சாரதானந்தரால் தக்க ஏற்பாடுகளுடன் சித்தாந்தப் படுத்தப் பட்டன. சாரதானந்த சுவாமிகள் அவ்வமயம் அமெரிக்காவிலிருக்க வேண்டியது மிக்க அவசியமா யிருந்தபோதிலும், தலைமை மடத்தின் விஷயங்களைச் சரிவர நிர்ணயிக்கவும், தக்க பிரவர்த்தகர்களைப் பழக்கவும் அவரே திறமையுடையவரென்று சுவாமிகள் அவரை உடனே புறப்பட்டு வரும்படி எழுதினார். மேலும், அபேதானந்த சுவாமிகள் அமெரிக்காவில் வெற்றிக்கொடி நாட்டி, விளங்கி வந்தமையால் சாரதானந்த சுவாமிகளின் இன்மையால் ஆங்கு குறைவேதும் ஏற்பட ஏதுவில்லை. 1898-ம் ௵ பிப்ரவரி மாதத்தின் தொடக்கத்தில் சாரதானந்த சுவாமிகள் வந்து சேர்ந்தார். அது முதல் சுவாமிகளின் நோக்கங்கள் யாவும் சுறு சுறுப்புடன் நிறைவேறின. வினா விடை வகுப்புகள், வேதாத்யயனம், மேல் கீழ் நாட்டுத் தத்துவ நூற்பயிற்சி முதலியன சுவாமி சாரதானந்தர், துரியானந்தர், நிர்மலானந்தர் ஆகிய இவர்களால் அனுதினமும் நடைபெற்று வந்தன. மடத்தின் நிர்வாக விஷயங்களை யெல்லாம் சிஷ்ய இளைஞர்கள் கவனித்து வந்தார்கள். சுவாமிகள் சகல விஷயங்களையும் அவர்களிடம் ஒப்புவித்துத் தாம் மேற் பார்வை பார்த்து வந்தார். ஒவ்வொருவரும் ஒவ்வொரு வேலையைச் செய்வதென அவர்கள் தமக்குள்ளே வகுத்துக் கொண்டார்கள். இவ்வித ஏற்பாட்டால் மடம் வெகு விமரிசையாய் நடைபெற்று வந்தது. 1898-ம் ஆண்டின் ஆரம்பத்தில் சுவாமிகள் யாத்திரை சென்றதற்கு முன்னிருந்தே இவ்வித சீருடன் மடத்தின் நித்ய கார்யங்கள் நடந்து வந்தன.

அமெரிக்காவிலிருந்த சாரதானந்த சுவாமிகளின் வருகை.

சுவாமிகள் சமயம் வாய்த்தபோதெல்லாம் தமது சிஷ்யர்களைத் திரட்டி அவர்கள் செய்யவேண்டிய பிற்கால வேலையைப்பற்றி போதிப்பதுண்டு: பிரம்மச்சரியம் உங்களிடம் கொழுந்துவிட்டெரிய வேண்டும்; நமது சித்தாந்தமெல்லாம் ஆன்ம சுயேச்சையையும், சத்வ ஜனசேவையையும் உதாகரிப்பதே யாகும்'' என்பார். துறவென்பது தன்னலமென்னும் புன்மையை ஒழித்தலாகும். அவர் உபதேசித்ததாவது:

''உலகச் சரித்திரமென்பது ஆத்ம நம்பிக்கை (தன்னம்பிக்கை) யுள்ள சில மகான்களின் சரித்திரமே யாகும். (உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டே.) அந்த நம்பிக்கையே தன்னுள்ளே ஜொலிக்கும் தெய்வ வல்லமையைத் தட்டி எழுப்புகின்றது. அதனால் நீ எதையும் சாதிக்கலாம். அத்தெய்வீக சக்தியின் திறத்தை நீ யுணர முயற்சிக்காத வரையில் உனக்கு அபஜெய மேற்படுகிறது. எந்த மனிதனுக்கும் சமூகத்திற்கும் தன்னம்பிக்கை யூற்றுப் போகும் போதுதான் மரணம்—அழிவு—வீழ்ச்சி ஏற்படுகின்றது.''

உன்னையே நீ நம்பு

உன்னையே நீ முதலில் நம்பு; பிறகு தெய்வத்தைத் தேடு; ஒரு சில ஆத்ம பலமுள்ள மகான்கள் உலகத்தையே ஆட்டிவிடுவார்கள். உணர உள்ளமும், கிரகிக்க புத்தியும், வேலைசெய்ய புஜபலமுமே நமக்கு வேண்டியவை. புத்த பகவான் ஜீவ ஹிம்சையைப் போக்கினர். அத்தகைய சேவையில் நீங்கள் சிறந்தவர்களாக முயல வேண்டும்; எதையும் பகவதார்ப்பணமாகச் செய்யுங்கள்; தெய்வம் உங்களுக்கு வழி காட்டும். ஒருவனுடைய உள்ளத்தில் இவ்வுலகமே லயித்திருக்கின்றது. அவ்வுணர்ச்சியின் ஓர் அணுத்துணை ஏற்பட்டால் உலகமனைத்தும் உம் தேவலின் கண் நிற்கும். உங்கள் புத்திக்கும் மனதிற்கும் ஏற்படும் கூட்டுறவில் நீங்கள் உங்கள் உள்ளத்தின் வழி செல்லக் கடவீர்.''

இவ்வாறு சுவாமிகள் உபதேசித்து வந்த காலத்தில் ஒரு சமயம் அதிகார வாதத்தைப்பற்றிய அபிப்பிராயங்கள் எழுந்தன. இந்தச் சாதி உயர்வுக் கொடுமைகளால் பாரத பூமியில் விளைந்த தீங்குகளை சுவாமிகள் ஒவ்வொன்றாக எடுத்துக் காட்டினர். சர்வேஸ்வரனை யடையவே வழிகாட்டிகளாயுள்ள சமயஞான முறைகளை எவ்வித ஏற்றத் தாழ்வு மின்றி அனைவரும் அறிய அனுமதிக்கப்பட வேண்டும். பின்னர், அதன்கண் நின்ற அவ்வன்பர்கள் லோகாசார தேசாசாரங்களைப்

பொருட்படுத்தாமல், எதற்கு மஞ்சாது பிரசாரஞ் செய்தல் வேண்டு மென்பதைச் சுவாமிகள் "சமாதானம் வேண்டாம்; பூச்சு வார்த்தைகளும் வேண்டாம். பிணத்தைப் புஷ்பத்தைக்கொண்டு அலங்கரித்தலும் வேண்டாம்; சமாதானத்தை நாடும் முயற்சிகள் யாவும் அபகீர்த்தியிலிருந்து கோழைத்தனம் வரையில் கொண்டுபோய் விட்டு விடும்; தைரியமா யிருங்கள்; எனது புத்திரர்கள் மற்ற தேசத்தாரைவிடத் தைரியசாலிகளா யிருக்க வேண்டும்; எக்காரணத்தைக் கொண்டும் சச்சரவிற் குடன்படலாகாது. உயர்ந்த வேதாந்தத்தை உலக மெங்கும் பரப்புங்கள். உங்களுக்குள்ள மரியாதை குறைவு படுகிற தென்றும், மன வேறுபாடுகள் வந்துறுகின்றனவென்றும் நீங்கள் அஞ்சவேண்டாம்" என்றுபதேசித்தார். அப்போது அவர் பர்த்ருஹரியிலிருந்து மகரிஷிகள் உன்னைப் போற்றினுஞ்சரி; உலக முன்னைத் தூற்றினுஞ்சரி. நீ அமோகமாய் விளங்கினும் சரி; அல்லது கந்தை யணிந்து ஏழையினும் ஏழையாய் இருப்பினுஞ் சரி; வனத்தி லுள்ள சருகுகளை உணவாக உண்டு வறுமையால் வாடினுஞ் சரி நான் எதையும் பொருட்படுத்தாது எப்பொழுதும் உன்னையே பூஜிக்கிறேன்" என்னும் மகா வாக்கியத்தை ஓதினர். மற்றும் சுவாமிகள் 'சந்நியாசிகளே நன்றாக உழைக்கலாம்; ஆசையற்றவரும் பற்றற்றவர்களுமான அவர்களே உலகிற்கு உயர்ந்த உபகாரியாவார்கள்' என்பார்; 'புத்தரையும் கிறிஸ்து நாதரையும்விடப் பெரிய உபகாரி யார்? என நவில்வார்; ஊழியமெல்லாம் அவருக்குப் பவித்ரமாவன; உழைப்பெல்லாம் பூஜைபோல்வன. "நாம் நமது திருந்திய நகர வாழ்வை, தூய்மை, மெய்மை, துறவு முதலியவற்றுடன் நடத்தினல், உண்மையான துறவிகளாய் ஆத்ம தரிசன மடைவோம்" என்று சுவாமிகள் அனுதினமும் பன்முறை பகர்வார். ஏழைகளுக்கு உணவளித்தல், க்ஷாம நிவாரணம், பிணியாளர்களுக்குச் சிகிச்சை சாலைகள் ஸ்தாபித்தல், ஆபாசமான இடங்களில் சுகாதார உபதேசம் புரிதல், அனாத பால ரக்ஷணசாலை, வைத்தியசாலை, வித்யாலயங்கள் முதலியவற்றை ஸ்தாபித்தல் ஆகிய இவற்றை ஸ்ரீராமகிருஷ்ண மடத்தைச் சார்ந்த அலுவல்களெனச் சுவாமிகள் வகுத்தருளினர். அம் மடத்தின் ஆதரணையில் அவர்கள் ஆத்மார்த்த மார்க்கங்களில் பழகுவதோடு, சங்கேத அனுஷ்டான வாயிலாகத் தாவா சாஸ்திரப் பயிற்சி, பிராணிக்காப்பு நூலறிவு, சங்கீதப் பயிற்சி முதலியவற்றையும் அவர்

சாதிக்கொடுமை வேண்டாம்.

கள் அடைந்திருந்தார்கள். இவற்றோடு தினந்தோறும் அவர்களைத் தேகாப்பியாசஞ் செய்யுமாறு சுவாமிகள் தூண்டிவந்தார். அப்பொழுது "மதவீரர்களாகி, மக்களின் மனமென்னும் சுரங்கத்தைக் குடைந்து அதன் ஆழத்திலுள்ள சுவர்ணத்தை எடுப்பவர் வேண்டும். ஆதலின், அன்பர்களே! நீங்கள் தோள்வலி யுடையவராகப் பழகுங்கள்! துறவிகட்கு விரக்தியிருப்பது சரிதான்! ஊழியர்களுக்கு நல்ல வாட்டசாட்டமான தேகமும் இரும்பன தசையும், உருக்கான நரம்புகளும் உண்மையில் வேண்டும்" என்று அவர் கூறுவதுண்டு. இவற்றோடு மேலான சமயதத்துவ சாஸ்திர தர்க்க வியாகாணக் கல்வியும் அவர்களுக்கு அளிக்கப்பெற்றன. மாசற்ற பிரம்மச்சரியமே பிரம்ம ஞானத்தையும், பக்குவ மனோபாவத்தையும், தந்தருளுமென்று சுவாமிகள் பன்முறை அவர்கட்கு உணர்த்துவது வழக்கம். தினையளவும் பிரம்மச்சரிய நெறியினின்றும் வழுவாதவாறு அவர்கள் காக்கப்பட்டு வந்தார்கள்.

சந்நியாசிகள் அனுஷ்டிக்க வேண்டிய ஆசார விதிகள்.

அவர் வைத்தியநாதத்திற் கேகுமுன் டிசம்பர்மீ 16உ இரவு தமது பால்ய சீடர்களுக்கு உணவைப்பற்றி யுபதேசித்தார். உணவின் தரத்தைப் பொருத்தது புத்தியின் நுட்பம்" என்பதைச் சுவாமிகள் உரைக்கலுற்று, "ஆகாரக் கட்டுப்பா டில்லாதவர்கள் மனதையும் கட்டுப்படுத்த அசக்தராவார். அதிக முண்பது அனர்த்தத்தையே விளைவிக்கும். மனமும் சரீரமும் அதிக உணவால் கெட்டுப்போம். சாது சாத்வீக உணவையே அளவறிந்து கொள்ள வேண்டும்" என்றியம்பினர். பிரம்மச்சரியானுஷ்டான ஆரம்ப காலத்தில் அவர்கள் ஹிந்துக்கள் அல்லாதவர்களால் பாகஞ் செய்யப்பெற்ற உண்டியையே அளவறிந் துண்ண வேண்டுமென்றும், இந்நிலைக்குரிய அப்பியாசங்கள் முடிவுற்றதும் சந்நியாசநெறிக் கேற்ப ஒழுகுதல் இயலாதெனத் தோன்றுமாயின், காவியாடை பூண்டு பலரின் உதாசீன வார்த்தைகளுக் குள்ளாகி மடத்திற்கும் தமக்கும் அபகீர்த்தியை விளைத்தலினும், இல்லறத்தை ஏற்பது மேலென்றும் சுவாமிகள் நவில்வதுண்டு. அவர்கள் காலாகாலங்களில் கர்மாவைச் செய்து தியானத்திலே ஆர்வமுடையவர்களா யிருத்தல் வேண்டும். எந்நேரமும் மத விஷயங்களைப் பற்றியே சம்பாஷிக்க வேண்டும். மேல் நாட்டு தேவாலயங்களிலுள்ள பாதிரிமார்களைப்போல இவர்கள் சில நிமிஷ நேரங்கூட வர்த்தமானப் பத்திரிகைகளை வாசித்தலாகாது.

குடும்பிகளோடு சிறிதும் பழகலாகாது. இவ்வித நெறிகளுக் குட்பட்ட துறவிகள் எய்தலாகும் எழிலைப்பற்றி சுவாமிகள் மேலும் கூறியதாவது:

மடத்தின் இயக்கங்களில் கண்டவர்களெல்லாம் பேச எவ்விதத்திலும் அருகரல்லர். சந்நியாசிகள் செல்வந்தர்களிடத்தில் எவ்வித சம்பந்தமும் வைத்துக் கொள்ளலாகாது. அவர்களுடைய வேலையெல்லாம் ஏழைகளிடத்தில் அன்புடைமையே. எளியார் மாட்டு மேலான அன்புடன் திரிகரண சுத்தியாக உழைக்கக் கடமைப்பட்டவர்கள் நமது தொண்டர்கள். நமது நாட்டின்கண்ணுள்ள மடங்களின் ஸ்திதியெல்லாம் செல்வந்தர்களைத் துதித்துப் பேசி, அவர்கள் புறங்கடையில் நின்று பொருளுதவி பெற்று அவர்களிடம் தொங்கிக் கொண்டிருக்கும் பரிதாப நிலையில் நின்று பாழாயின. உண்மையான துறவி இதனை முற்றும் வெறுக்கக் கடவன். இத்தொழில் தாசிக்கேயன்றி, உலகினை வெறுத்த உத்தமருக்கழகன்று. காம காஞ்சனன் எவன் இவற்றை முற்றிலும் வெறுக்க வழிகாட்டிய மகானுபாவரின் சிஷ்யனென்று தன்னைச் சொல்லிக்கொள்ள முடியும்? ஸ்ரீராம கிருஷ்ணர் காளிதேவியின் சந்நிதானத்தை யடைந்து, காம காஞ்சன விருப்பற்றவர்களையே தன்னிடம் வருமாறு அனுக்கிரகிக்க இரந்து "உலகப் பற்றுள்ளவர்களுடன் பேசுங்கால் என் உதடு எரிகிறது" என்றியம்புவார். அவர், பொன்னாசை பெண்ணாசைகளால் பந்திக்கப் பெற்றவர்கள் தம்மைத் தொடவும் இடந்தரார். அந்தப் புண்ணிய மூர்த்தியின் மகிமாப் பிரபாவங்களை எவராற்றான் எடுத்துரைக்க முடியும்? அவருக்குப் பிற்பட்டவர்கள் சுயநல புத்தியுடையவராதலால், அவர்கள் அவரைப் போன்று அவ்வளவு பரிசுத்தர்களாயிருக்க முடியாது. ஈஸ்வரனே இல்லாச்சிரமியாய் அவதரித்தாலும் நான் அவரைப் பரிசுத்தரென்று நம்ப முடியாது. மதத்தின் தலைவர் பதவியை ஓர் இல்லறத்தான் பூண்பானாயின், கொள்கை கொள்கை என்று கொள்ளையடித்துத் தன் தொந்தியை நிரப்பிக் கொள்ளுகிறான். அதனால் அம்மதம் நிலையற்றுப் போகின்றது. கிருகஸ்தர்களால் ஸ்தாபிக்கப்பெற்ற மடங்களெல்லாம் இக்கதியையேயடைந்துள்ளன. துறவின்றி எம்மதமும் நிலைபெற்றிராது."

துறவிகளாலே மதப்பெருக்கு உண்டாகும்.

வைத்தியநாதத்திலிருந்து சுவாமிகள் திரும்பிய பின்னர், தமது பால்ய சிஷ்யர்களை உலக விஷயங்களிற் சிக்காவாறு காக்கச் சில சட்ட

திட்டங்களை ஏற்படுத்தினார்; குடும்பிகளான சிஷ்யர்கள் மடத்திற்கு வருங்கால், அப்பிரம்மச்சாரிகளோடு நெருங்கிப் பழகலாகா தென்று கட்டுப்பாடு செய்தார்; அவ்விளைஞர்கள் பிரம்மச்சாரிணிகளோடும் பிற சிஷ்யைகளோடும் சகவாஸஞ் செய்ய அனுமதிக்கப்படுவதில்லை. இதனால் சுவாமிகள் ஸ்திரீகளையும் இல்லாஸ்ரமிகளையும் வெறுத்தாரென்று அனுமானித்தல் தவறு. "இங்ஙனம், அவர்களைப் பிரம்மச்சரிய நெறியிலே பழக்கிக் காப்பாற்றினால், நாளாவட்டத்தில் அவர்கள் மனம் திடப்பட்டுக் களங்கமற்றதாகிவிடும். அதன் மேல், அவர்களை எவ்வித சகவாஸ தோஷமும் பாதிக்காது" என்பது தான் சுவாமிகளின் கருத்து. இல்லற வாழ்வின் மேன்மையை அவர் அறியாதவரல்ல. எவ்வளவோ குடும்பிகளான ஸ்திரீபுமான்கள், அவருக்கும் அம்மடத்துச் சீடர்களுக்கும் சிறந்த உபகாரிகளா யிருந்தார்கள். இதைப் பற்றிச் சுவாமிகள் "அதிதிபூஜை, ஈஸ்வர சேவை, சாதுசேவை, வித்யாப்பியாசம், வாழ்க்கை நலம் முதலியவற்றிற்கு உறைவிடமான இல்லற வாழ்வின் கொள்கைகளை யான் பாராட்டுவேன். விவாகம் - இல்லறம் என்பது சில ஜீவர்களுக்கே பொருந்தியதாகும். ஆனால் துறவை மேற்கொண்டவன் 'இல்லறம் பந்தத்தைப் பெருக்கும்; பாவத்தை வளர்க்கும்' என்று நிச்சயமாக உணரக் கடவன். சந்நியாச மொன்றே பயங்கர மற்றது. என்னன்பர்களே! இல்லாஸ்ரமிகளின் கொள்கைகளை நீங்கள் பின்பற்ற வேண்டும். ஆனால் நமக்கு உலக சேவையோ பெரிது. 'தியாகக் கற்பனை' யில், ஒரு கதை யுண்டு. ஆணும் பெண்ணுமான பறவைக ளிரண்டு மிகவும் அன்யோன்யமாக ஒரு காட்டில் வசித்து வந்தன. அக்கானகத்திற்கு அலைந்து களைத்துப்போய் ஆகார மேதும் கிடைக்காமல் இரண்டு யாத்திரிகர்கள் வந்து சேர்ந்தார்கள். அப்பறவைகள் அவர்களைக் கண்டு மனமிளகித் தாம் வசிக்கும் காட்டிற்கு வந்தவர்களை உபசரிக்க வேண்டி, அவர்கள் மூட்டியிருந்த எரியில் அவை தாமே பாய்ந்து அவர்கட்கு உணவாயின. அதன்படி நீங்கள் நடக்கச் சித்தப்பட வேண்டும்" என் றுபதேசிப்பார்.

சிஷ்யர்களுக்குச் சில கட்டுப் பாடுகள்.

சில சமயம் சுவாமிகள் ஆவேசராய் "அந்தோ! இந்த தேசத்தில் நான் என்ன வேலையைச் செய்வது—சொல்லுங்கள். ஒவ்வொருவனும் தலைவனாக ஆசைப் படுகின்றானே யன்றி, பணிவுடன் நடக்க எவனுமில்லை. மகத்தான உத்தேசங்களை முடிப்பதில்

தாழ்மைவேண்டும்

தலைவருடைய கட்டளைக்குச் சிஷ்யர்கள் கட்டாயமாகக் கீழ்ப்படிய வேண்டி வரும். எனது குருபாய்கள் இன்று முதல் என் ஆயுளின் இறுதி வரையில் என்னை மடத்தின் தோட்டி வேலைச் செய்து வரும்படி ஏவினால், நான் அவர்கள் ஆக்ஞையைச் சிரமேற்கொண்டு புரிவேன் என்பதைச் சத்தியமாக உணருங்கள். பொது நன்மைக்கெனத் தனக்கிடப்படும் கட்டளையை எவனொருவன் முதலில் எவ்வித முணுமுணுப்பு மின்றிப் பணிவுடன் நடக்கக் கற்றுக் கொள்ளுகிறானோ அவனே பெரிய தலைவனாக முடியும்" என்றருள்வார். மற்றொரு சமயம் சுவாமிகள் "என்னுயிர் போமளவும் நானுழைத்துப் பிறரைத் தயாரித்துச் சமயசேவை நடைபெறுமாறு செய்வேன். எனக்கு ஓய்வென்பதில்லை உழைத்தே இறப்பதில் எனக்கு உவகை அதிகம். உழைப்பையே நான் உயிரினும் பெரிதாகக் கருதுகிறேன். வாழ்வென்பது ஓர் யுத்தம்; ஆகையால் எப்பொழுதும் வேலை செய்து கொண்டே இருக்க வேண்டுமென்பது வீரர் பழமொழி" என்றுரைப்பார். பிறிதொரு சமயம் "அன்பனே! கேள்! ஸ்ரீராம கிருஷ்ணர் உலக சேவார்த்தமாக அவதரித்தவர்; ஆகையால் நானும் அப்படியே செய்வேன்; நீங்களும் அப்படியே செய்யக் கடவீர் இதுபோன்ற சிறு சேவைகளெல்லாம் பிராரம்ப கார்யங்களே யாகும். நாம் உலக சேவையினிமித்தம் நமதுடம்பைச் சாறுகப் பிழிந்தால் அந்த மகிமையால் மகா பராக்கிரமசாலிகளும், வரப்பிரசாதிகளும் தோன்றி, உலகத்தைச் சீர்திருத்திவிடுவார்கள். உலக சேவையும் ஈஸ்வர பக்தியும் சந்நியாசிகளின் தர்மமென்பதை நீங்கள் தீர்க்கமாய் நம்புங்கள்; அவற்றினின்றும் வழுவாதிருங்கள். துறவறமே அறங்களிலெல்லாம் சுருக்கமானது. சந்நியாசிக்கும் தெய்வத்திற்கு மிடையில் எவ்வித விக்ரஹமுமில்லை. (நிர்க்குணோபாசகன் துறவி). சந்நியாசி, வேதங்களின் சிரஸில் விளங்குகிறானென்பது வேதவாக்கு. ஏனெனில், ஆலயங்கள், ஜாதி, மதபேதங்கள், சாஸ்திரங்கள், கிரந்தங்கள் ஆகிய இவற்றினின்றும் அவனே விடுபட்டவன். அவனே அவனியில் பிரத்யக்ஷ தெய்வம். துறவி! இதனை நீ மறவாதே! உன் தர்மப்படி அஞ்சாது நட! துறவு, பரிபூரண ஆனந்தம், விடுதலை முதலிய கொடியை நீ வீசுக என்றும்" என்பார்.

வைத்தியநாத ஸ்தல யாத்திரையிலிருந்து மீண்டதும் சுவாமிகட்குப் புதிய தீர்க்க தரிசனங்களாயின. தமது சிஷ்யர்களையெல்

லாம் அவர் ஒன்றாகக் கூட்டி 'ஸ்ரீராம கிருஷ்ணரின் மகிமையை நீங்கள் சென்று பாரதவாசிகளுக்குச் சாற்றக்கடவீர்' என்றார். அதன்படி, அவர் சுவாமி விரஜானந்தர், பிரகாசானந்தர் ஆகிய இருவரையு மழைத்து, கீழவங்காளத்தேயுள்ள டெக்காவுக்கு உடனே புறப்படுமாறு ஏவினார். அதற்குச் சுவாமி விரஜானந்தர் வணக்கமாய் சுவாமிகளைப் பார்த்து ''ஐயனே! நான் என்னவிதமாய்ப் பிரசாரஞ் செய்வேன்! எனக்கொன்றும் தெரியாதே'' என்று கூற, சுந்தரமூர்த்தியடிகளைச் சிவபெருமான் திருமணப்பந்தரிற் தடுத்தாட் கொண்டபோது, அவர் 'அடியேன்! தம்மை என் சொல்லிப் பாடுகேன்' என்று பணிய, 'நீ என்னைப் பித்தர் என்றழைத்தமையான் பித்தர் என்றே தொடங்கிப் பாடுக' என்று பிறந்த சிவாக்ஞைபோல, சுவாமிகள் ''நீ உனக்கென்ன தெரியாதோ — அதைப் பிரசாரஞ் செய்! அதுவே பெரிய சேவையாகும்' எனலும், விரஜானந்தர் பணிவுடன் மறுத்து, மேன்மேலும் யோகசித்திகளை யடைந்து காணலாகும் - 'நாதனைக் கடந்து நின்ற சோதியை' எய்தத் தனக்கு அனுமதியளிக்குமாறு வேண்டுவாராயினர். உடனே சுவாமிகள், இடிபோல் ஒலித் தெழுந்து 'நீ உன்னுடைய முத்திக்கே வழி தேடுவாயாயின் நீ நரகத்தைத்தானடைவாய். பிறருக்கென நீ உழைத்தால் மட்டுமே உனக்கு முத்தி எளிதிற் கைகூடும். அந்தத் தன் முக்தித் தன்மையை வதை. அதுவே சாதனங்களுட் சிறந்தது'' என்று பேசி, பிறகு சுமுகமாக ''அன்ப! நீ திரிகரண சுத்தியாய் உழைக்கமுற்படு. அதுதான் நல்லது. பலனைப்பற்றி நீ கனவிலும் கருதாதே. பிறருக்கு உழைப்பதால் நீ நரகத்தை யெய்துவதா யிருந்தாலுமென்?'' என்றியம்பினார். அப்பால், சுவாமிகள் அவர்களைத் தமது பூஜாக் கிருகத்திற் கழைத்துச் சென்றார். கொஞ்சநேரம் மூவரும் நிஷ்டையிற் கூடியிருந்தபின், சுவாமிகள் 'நான் இப்பொழுது எனது சக்தியை உங்களிடத்தில் ஆவாகனம் செய்கிறேன். பகவான் உங்களுக்கு உதவியா யிருப்பார்,' என்று கூறி அவர்களைத் தேற்றி, தனிமையாகச் சில விஷயங்களை உணர்த்தி பிரயாணப்படுத்தி வைத்தார். இவ்விதம் குருவின் ஆக்ஞைப்படி அவ்விருவரும் அவ்வருடம் பிப்ரவரி$^{மீ}$ 4-ம் நாள் புறப்பட்டு டெக்காவுக்குச் சென்றார்கள். அதன் பின், சுவாமி சாரதானந்தரும், துரியானந்தரும் அம்மாதம் 7-ம் தேதி குஜராத்திற்கு அனுப்பப் பெற்றார்கள்.

டக்காவுக்கு பிரகாசானந்தரும் விரஜானந்தரும் சேல்லல். குஜராத்திற்கு சாரதானந்தரும் துரியானந்தரும் செல்லல்.

சுவாமிகளுக்கு, மடம் நீலாம்பார் மூகர்ஜியின் சிருங்காரவனத்திற்கு மாற்றப்பட்ட காலத்திலிருந்தே, வேத சாஸ்திர அத்தியயனம் மடத்தில் அனுதினமும் நடைபெற வேண்டுமென்ற அவா ஏற்பட்டிருந்தது. அக்காலந்தொட்டு, அவர் தமது குருபாய்களின் உதவியால் அனுதினமும் வேதம், உபநிஷதம், வேதாந்த சூத்திரம், கீதை, பாகவதம், ஆகியவற்றை ஏனைய சிஷ்யர்களுக்குப் பாடமோதிவரச் செய்து, கொஞ்சகாலம் தாமே பாணினியின் அஷ்டாத்தியாயியைப் புகட்டி வந்தார்; தாமும் வடமொழிக் கிரந்தங்களை வாசித்துக்கொண்டிருந்தார். இந்நாட்களிற்றான் சுவாமிகள் ஸ்ரீராமகிருஷ்ண ஸ்தோத்திரமென்ற இரண்டு சுலோகங்களை இயற்றினார். அன்று சுவாமிகள் சாரத் சந்திரருடன் இரண்டுமணி நேரம்வரை வடமொழியிலேயே சம்பாஷித்திருந்த வாலாற்றைச் சாரத் சந்திரர் கூறுங்கால் "கலைமகளே அவருடைய நாவில் விளங்குவது போன்றிருந்தது. அவர் வெகு அழகாகப் பிழையற்ற நடையில் பெருமிதந் தோன்றப் பேசினார். அதைப்போல எந்த பண்டிதரும் அவ்வளவு அழுத்தமாகப் பேச நான் கேட்டதில்லை" என்று கூறியுள்ளார். அவ்வமயம் உதித்த அருளால் சுவாமிகள் தாமியற்றிய சுலோகங்களை ஆங்கிருந்த வடமொழி வல்லுனரான குருபாய் ஒருவரிடமளித்து 'இதில் எழுத்து அசை, சீர், தளை, அடி, தொடை ஆவன சரிவரப் பொருந்தி யிருக்கின்றனவா? பாருங்கள்! அந்தந்தத் தருணத்தி லெழுகின்ற வாக்கை நான் அப்படியே எழுதி விடுவதால், சில சமயங்களில் இலக்கணப் பிழைகள் விழுந்து விடுகின்றன. அவசியமானால் 'இதைத் திருத்துங்கள்' என்றார் அதற்கு அவ்வன்பர் 'சுவாமி! தேவரீருக்குள்ள பாஷா ஞானத்தை அனைவரும் அறிவர். தாங்கள் ஆசுகவி பாடும் மாசில் புலவர். தாங்கள் வழுவென் றியம்புவன வெல்லாம் ரிஷிகளின் வாக்கில் காணக் கிடக்கும் கவியுரிமையைப் போன்றிலங்குவன" என்றார். அந்தச் சீடரிடத்தில் சுவாமிகள் இவ்விஷயமாக "நீ எழுதும் கட்டுரைகளில் அபிமானக் கிலேசாஸ்பதத்தையும் பொருட்படுத்தாதே. எதையும் அகற்ற முயலாதே. அவை பொலிந்த கிரந்தங்கள் எத்தனையோ நமது பாஷையிலுள்ளன. நமது தேசவாசிகள் உணர்ச்சி உருக்கம் ரஸப்பிரவாக மில்லாமல் எதையும் இயற்றவே முடியாது. உருக்க மில்லாதவை பெண்மையை வளர்ப்பன. ஆனால் நமக்கு வேண்டுவது பலம்! பலம்! உங்க

ஸ்ரீராமகிருஷ்ண தோத்திரம் வேதாத்யயன ஏற்பாடுகள்.

ளுடைய கவிகளில் புருஷத்துவத்தைப் புகுத்துங்கள். தற்காலம் அதுதான் வேண்டும். நான் வங்காளியில் இம்மாதிரியான ஓர் நூலைப் புதிய நடையில் எழுதப் போகின்றேன்'' என்றுரைத்தார்.

இக்காலங்களில் தொலையிலிருந்தும் அருகாமையிலிருந்தும் பிர பலஸ்தர்கள் சுவாமிகளைத் தரிசிக்கவும், பத்திச் சுவை கனி சொட்டச் சொட்டப் பொழியும் அவரது உபதேசங்களைச் சிரவணஞ் செய்யவும் அவருடைய ஒளிரும் திருமேனியைக் கண்டு நேத் ரானந்த மடையவும் வந்துகொண்டே யிருந்தார் கள். அவற்றுள், நாகமஹாஷ்யரின் வருகை சால வும் மேன்மை யுடைத்தாம். அவர் வெகு தூரத்தி லுள்ள டியப்ஹாக் (Deobhog) என்னும் தமது சிற்றூரினின்றும் புதிதாக அமைக்கப் பெற்றுள்ள மடத்தைப் பார்க்கவும், சுவாமிகளைத் தரிசிக்கவும் புறப்பட்டு வந்தார். இவர்களுடைய சந்திப்பு பரிசுத்த மான புனலுடன் ஓடி, பின் ஓரிடத்தில் ஒன்று கூடிப் பிரவாகிக்கும் கங்காநதியை ஒத்திருந்தது. ஒருவர், வெகு பழங்காலத்திய கார் ஹஸ்திய மதத்தை யனுஷ்டிப்பவர்; மற்றொருவர் துறவிற்கோர் தூய திலகமாய் லோக ரக்ஷணார்த்த கங்கணம் பூண்டவர்; முதலவர், போதை வஸ்துவை உட்கொண்டவர் போல ஈஸ்வர சொரூபத்தில் லயித்தவர்; பின்னவர் மனிதருடைய உள்ளத்தின்கண் உறைந்து கிடக்கும் தெய்வத்தன்மையான தேனை, மலரில் மதுவாயும் சுரும் பைப்போல, தர்மோபதேசமான ரீங்காரத்தோடு சஞ்சரித்துப் பருகும் வண்டை யொத்தவர். ஆனால் இவ்விருவரும் சந்நியாசித்துவம், மெய்ஞ்ஞான மிரண்டையும் நாடுபவர்களே. இவ்விரு ஞான வீரர்களும் சந்தித்த பிரபாவம் மனிதருள்ளத்தில் உணர்ச்சி விளக்கேற்றும் தன்மையதாகும்.

மடத்திற்கு நாகமஹாஷயரின் வருகை

இருவரும் ஒருவரை யொருவர் நமஸ்கரித்து உபசார வார்த்தை கள் பேசிய பின்னர் நாக மஹாஷ்யர் சுவாமிகளைப் பார்த்து "ஜெய சங்கரா! உயிருடன் விளங்கி என் முன் நிற்கும் சிவபெருமானை நான் தரிசிக்க என்ன பாக்கியம் செய்தேனோ?'' என்று சொல்லிக் கொண்டே, சுவாமிகள் கட்டாயப் படுத்தியும் அமராது நின்ற வண்ண மிருந்தார். சுவாமிகள், அவருடைய தேக சுகத்தைப் பற்றி வினவ, மகாஷ்யர் "இந்தத் தோற்பை இருந்தென்ன! வீழ்ந்தென்ன! உடம் பினைப் பெற்ற பயனைத் தேடாத யான் எதற்கு அருகன்'' என்று சொல்லிக் கொண்டே சாஷ்டாங்கமாக சுவாமிகளின் திருவடிகளில்

வீழ்ந்து நமஸ்கரித்தார். வணங்கினதும் சுவாமிகள் சரேலென்று அவரை எழுப்பி விட்டு 'நன்று யிருக்கிறது. இம்மாதிரி இனிச் செய்ய வேண்டாம்' என்று கூறினர். இச்சமயம் சிஷ்யர்கள் உபநிஷதங்களை ஒருமிக்க கோஷித்துப் பாடஞ் செய்து கொண்டிருந்தார்கள். சுவாமிகள் தமது சிஷ்யர்களை விளித்து "இன்று இதோடு நிறுத்தி நீங்களெல்லோரும் நாக மகாஷ்யரைத் தரிசிக்க வாருங்கள்" என் றழைத்தார். உடனே அனைவரும் வந்து சுவாமிகளையும் மகாஷ்யரையும் வணங்கிச் சுற்றிலும் அமர, சுவாமிகள் "கவனியுங்கள்! இம்மகாநுபாவர் ஓர் இல்லாஸ்ரமி. ஆனால் இவருக்கு ஸ்தூல தேகம் இருக்கிறதோ இல்லையோ; பிரபஞ்ச மிருக்கிறதோ இல்லையோ! அவற்றைப்பற்றிய எண்ணங்களே கிடையாது. இவர் எப்பொழுதும் பிரம்மானந்தபரரா யிருக்கிறார். மதுரஸ பக்திப் பிரபாவங்களை நீங்கள் இவரிடம் கண்கூடாகக் காணலாம்" என்று சொல்லி, நாக மகாஷ்யரைப் பார்த்து, தமது சிஷ்யர்களுக்கு ஸ்ரீராம கிருஷ்ணரின் மகிமைகளை எடுத்தோதும்படி வேண்டினர். அப்போது மகாஷ்யர் அமரருள் உய்க்கும் அடக்க முடையவராய் "அவதார புருஷரைப்பற்றி எனக்கென்ன தெரியும்! அவருடைய மகிமைகளை விளக்க யான் எள்ளளவும் அருகனல்லன்! நான் வழக்கம்போல், ஸ்ரீராம கிருஷ்ணரே புனராவதார மெடுத்தது போன்ற புண்ணிய லீலா விநோத மகா வீரரைத் தரிசித்துப் போக வந்தேன். அவருக்கு வெற்றி மிகுவதாக" எனலும், சுவாமிகள் அவருடைய குணாதிசயப் பிரபாவத்தில் அனலிடை யகப்பட்ட மெழுகென உருகி "தேவரீரே ஸ்ரீராம கிருஷ்ணரை வாஸ்தவத்தில் அறிந்தவர்; நாங்களெல்லாம் சும்மா வெறும் பறை சாற்றுபவர்கள்" என்றியம்புங்கால், நாகர் குறுக்கிட்டு "கிருஷ்ண! கிருஷ்ணா! இப்படி பொருளற்ற வார்த்தைகளைப் பேசவேண்டாம். தாமே ஸ்ரீராம கிருஷ்ணர்; நீங்களிருவரும் ஒரே நாணயத்தின் முன் பின் புறங்கள்" என்றார்.

நாகமஹாஷ்யருக்கும் சுவாமிகட்கும் நேர்ந்த ருசிகரமான சம்பாஷணை.

இவ்விதம் கொஞ்சநேரம் பேசியபின் சுவாமிகள் அவரை நோக்கி "தாங்கள் இம்மடத்திலேயே வசிக்கக் கூடுமாயின் நலமா யிருக்கும்; இந்த வாலிபர்களுக்குத் தாங்கள் ஓர் வழிகாட்டியா யிருந்து உதவுவீர்கள்" என்றார். பக்தசீலர் "நான் ஒரு சமயம் குரு தேவரிடத்தில் சந்நியாச மளிக்கும்படி கேட்டேன். அப்பொழுது அவர் 'நீ கிருஹஸ்தனாகவே இரு' என்று ஆக்ஞாபித்தார்.

குருதேவரின் ஆணை; 'நீ கிருஹஸ்தனாகவே இரு'

அதன்படி நான் இருக்க வேண்டியவன்; அவாது ஞான புத்திர சிகாமணிகளாகிய உங்களைத் தரிசித்துப் போகவே நானிங்கு வருகின்றேன்" என விடை பகர்ந்தார். அப்பால், சுவாமிகள் தாம் அவருடைய ஜன்ம க்ஷேத்திரத்திற்கு ஒருமுறை வா உத்தேசித்திருப்பதாய்க் கூற, அவர் உள்ளம் பூரித்து 'அந்தச் சுதினம் என்று வருமோ? அம் மகா பாக்கியத்தையும் நானடைவேனோ? அதன் பின் அந்தப் பிரதேசமே காசியாகி விடும் என்பதில் என்ன தடை? உங்கள் பாத ஸ்பரிசத்தால் அது மகா க்ஷேத்திரமாகி விடாதா? நீங்களெல்லோரும் எனது குருதேவரின் ஞான குமாரர்க ளல்லவா? மற்றவர்கள் — அவரைப் பின்பற்றியவர்கள்; அவருடைய உபதேசங்களில் ஆழ்ந்த அன்பர்கள். அவற்றின் உண்மையை அறிந்து ஒழுகும் பான்மையரல்லர்" என்றார். பின்பு பின் வரும் சம்பாஷணை நடைபெற்றது.

சுவாமிகள் :—இப்பொழுது எனது அபிலாஷை யெல்லாம் தேசத்தை விழிப்படையச் செய்யவேண்டு மென்பதுதான். இந்தப் பாரதப் பெண் சிங்கம் தனது சக்தியிலுள்ள நம்பிக்கையை யிழந்து—வெளித் தோற்றத்திற்குத் தூங்குவதுபோ லிருக்கிறது. இப்பாரத வீரத்தாயை நாம் அவளது போாற்றலுள்ள சனாதன தர்மத்திற்றாண்டுவோமாயின், நாமும் நமது குருதேவரும் வீணுக்குப் பிறந்தவர்களல்ல வென்பதை மெய்ப்பிக்கலாம். அந்த ஒரு ஆவலே எனக்குள்ளது. அதன் முன்பாக, முத்தியும் சித்திகளும் எனக்கு வெகு அற்பமாகவே தோன்றுகின்றன. நான் வெற்றியை யடையத் தேவரீர் ஆசீர்வதிக்க வேண்டும்.

நாகமஹாஷ்யர் :—பகவான் எப்பொழுதும் தம்முட னிருப்பார். உமது சக்தியை எதிர்க்க வல்லார் யார்? தமது வைராக்யமே தெய்வ சக்தியாகும். ஜெயராம கிருஷ்ண!

சுவாமிகள்:—அந்தோ! அதைச் செய்யவேண்டிய தேக பலம் ஏற்படுமாறில்லையே! நான் இந்தியாவுக்குத் திரும்பி வந்தது முதல்—பாருங்கள்—எனது தேக உபாதி என் கார்யங்க ளெல்லாவற்றையும் நிறைவேற்றாது தடைப்படுத்தி வருகின்றது. ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் நான் சுகமாயிருந்தேன்.

நாகமஹாஷ்யர்:—குருதேவர் சொல்லுவதுபோல ஒரு சரீரத்தில் வசிப்பதற்கு நோய், துன்பம் முதலிய வாடகைகளைக் கொடுத்தே

தீரவேண்டும். ஆனால் உமது ஹிருதயம் கனகமயமான மோகராக் களைப் போன்றதாதலின், அதை மிகவும் பாதுகாப்புடன் வைத்திருக்க வேண்டும். அந்தோ! அப்படி யார் கவனிக்கிறார்கள்! அதனால் உல கிற்கு ஏற்படக் கூடிய பயனை யாரறிவர்?

சுவாமிகள்:—இந்த மடத்தி லுள்ளவர்க ளெல்லாம் என்னிடத் தில் அன்பும் ஆதரவும் உடையவர்களா யிருக்கிறார்கள்.

நாகமஹாஷ்யர்:—தமது மகிமையை உணர்ந்தோ, அல்லது உணராமலோ தமக்குச் சேவை செய்பவர்களே பாக்கியவான்கள். அத னால் அவர்கள் லோகோபகாரார்த்தமான கார்யத்தையே செய்தவ ராவார்.

நாகமஹாஷ்யரின் விநயம், அன்பு, அடக்கம், பக்தி ஆகிய இவை நிறைந்த வாக்கியங்களைக் கேட்டால் உண்மையில் ஆனந்தக்கண்ணீர் பெருக்காம லிருக்க முடியாது. அவர் ஒருமுறை அன்புடன் பார்த் தால் அப் பார்வைக்கு இப்பிரபஞ்சமே அடிமைப்பட வேண்டும். ஆகா! என்ன பக்தி! ஒரு சமயம், 'ஸ்ரீராம கிருஷ்ணரைத் தாங்கள் அவதார புருஷ ரென்று நம்புகிறீர்களா?' என்று சில அன்பர்கள் அவரை வினவியதற்கு, அவர், 'நான் அம் மகாநுபாவரைப்பற்றி என்ன சொல்லட்டும். அவருடைய சிஷ்ய ரொவ்வொருவரையும் நான் அவதார புருஷரென்றே வழிபடுகிறேன்' என்றுரைத்தார்.

ஒரு சமயம், சுவாமிகள் வெகு நன்றாய்ச் சமையல் செய்வா ரென்று ஸ்ரீமதி சாரளா தேவியார், பி. ஏ., கேள்வியுற்று அதை நிவேதிதா தேவியிடம் சொல்ல, அவ்விஷயம் மெல்லச் சுவாமிகளின் செவிக்கெட்ட, அவர் அவ்விருவரையும் ஒருநாள் மடத்திற்கு அழைத்து விருந்திட்டார். பிறகு தேவியைக் கொண்டு ஒரு பக்குவஞ் செய்வித்துத் தாமும் உண்டார். இதற்குக் காரணம், சில படித்த வங்காளி வகுப்பினர் சுவாமிகளை, அவர் ஐரோப்பிய சிஷ்யர்களை முகஸ்துதியாகப் பேசுகிறாரென்று எண்ணி யிருந்ததை அகற்றுவதற் காகும்.

அந்த 1899-ம் ஆண்டின் கோடைகால ஆரம்பத்தில் தேக உபாதி மீண்டும் அவரைக் கொடுமையாக வருத்தத் தொடங்கினமை கண்டு அவருடைய பக்தர்களான நாரேயில் (Narail) மாகாண ஜமீன் தார்கள் தமது சொந்த ஸ்டீம் படகுகளைச் சுவாமிகளுக்குத் தேவை யானபோது கொடுத்து வந்தார்கள். சுவாமிகள் காலையிலும் மாலையி

னும் கங்கையில் அத்தோணியி லேறிப்போய் காற்றுவாங்கி வந்தார். எனினும், அவர் உபதேசிப்பதும், தர்க்கிப்பதும், பழக்குவதுமான தமது அலுவல்களை விடவில்லை. கல்கத்தாவிலிருந்து சுவாமிகளிடம் வேதாந்த பாடங் கேட்க அனுதினமும் பக்தர்கள் திரள் திரளாக வந்துகொண் டிருந்தார்கள். தேகோபாதியால் வாடினும், அவரு டைய முகம் பிரகாச முடையதாய், அருள் ததும்பிய பார்வையோடு கூடி விளங்கும். சுகமோ, பிணியோ எதுவாயினும் அவர் வேலைசெய் வதில் பின்வாங்காதவரா யிருந்தார். வைத்தியர்களின் எச்சரிக்கைப் படி அவர் பொது மன்றங்களில் உபந்நியசிக்கக் கூடாமலிருந்தது. ஆனாலும் சகோதரி நிவேதிதாதேவி பிப்ரவரிமீ 22உ "யௌவன இந்தியர் சங்கம்" என்பது பொருளாக உபந்நியாசஞ் செய்தபொழுது சுவாமிகள் அவ்விடத்திற்குச் சென்றிருந்தார்; ஞாயிற்றுக்கிழமை பிர சங்கங்களுக்கு அவர் விடாமல் ஏகுவதுண்டு. இதற்கிடையில் பல புமான்கள் அவரைத் தமது கிருகங்களுக் கழைத்துப் பிக்ஷையளிப் பார்கள். கடைசியாக, சுவாமிகள், அவர் எழுதிய 'ராஜயோகம்' என்ற நூலைக்கற்று, ஆவலோடு அதன் அந்தரார்த்தங்களை விஸ்தார மாய் அவரிடமே உபதேசமடைந்து கிருதார்த்தரான மகாராஜா சர் ஜதீந்திர மோகன் தக்கோர் அவர்களின் உபசாரத்திற் கிசைந்து ஜூன் மாதம் 17உ அவருடைய கிருகத்திற்கேகி விருந்துண்டார்.

நிற்க, சுவாமிகளால் ஏற்கனவே அனுப்பப்பெற்ற நான்கு சிஷ் யர்களைக் கவனிப்போம். அவர்கள், சென்ற விடங்களிலெல்லாம் அபூர்வ மதசேவை புரிந்து வந்தார்கள்; விஜயம் செய்த நகரங்களி லெல்லாம் ஸ்ரீராம கிருஷ்ணரின் திவ்ய நாமத்தைச் சங்கீர்த்தனஞ் செய்து, அவரது மகிமைகளைப் பரப்பினார்கள். சுவாமி விரஜானந்த ரும், பிரகாசானந்தரும் டக்கா வாசிகளின் இடையறு வேண்டு கோளுக் கிசைந்து, டக்காவில் ஓர் கிளை மடத்தை ஸ்தாபித்தார்கள். சுவாமி சாரதானந்தரும், துரியானந்தரும் கத்யவாரிலுள்ள நகரங் களில் விசேஷமாக உபசரிக்கப் பெற்றுத் தமது சேவையை இனிது நடத்தி வந்தார்கள். அவர்களுடைய வேதாந்த பிரசங்கங்களால் பெரும் பயன் ஏற்பட்டது. மூன்று மாதங்களானபின் சுவாமிகள் அவர்களை அழைத்து அவர்கள் சேவையைக் கொண்டாடினார்.

சுவாமிகள் டிசம்பர்மீ 16உ தேக சுகத்தின் பொருட்டு மேல் நாட்டிற்குப் பிரயாணமாகக் கருதி யிருப்பதாகத் தமது சீடர்களிடம் உரைத்தருளினர். அப்பொழுது கோடைகால ஆரம்பமானபடியால்,

அவருடைய சிஷ்யர்களும் வைத்திய நண்பர்களும் உடனே புறப்படும்படி அவரைத் தூண்டினார்கள். சுவாமிகளும் தமது அமரிக்க நாட்டு சிஷ்யை யொருத்திக்கு 'இரண்டு ஆண்டைய தேக உபாதி, எனது ஆயுளின் இருபது வருடங்களைக் கவர்ந்து சென்று விட்டது. ஆனால், ஆன்மா மாறுபாடடைவதில்லை யல்லவா? அந்த அதே ஆன்மா—பித்து—ஒரே நோக்கத்தால் முறுக்குண்டு என்றும் அழியாத உளனுடையதா யிருக்கின்றது" என்று ஏப்ரல்மீ 11௳ ஓர் கடித மெழுதினார். சமுத்திர யாத்திரை அவருக்கு மிகுந்த தேக சௌக்கியத்தை உண்டுபண்ணுமென்று நம்பப்பட்டது. முடிவாக ஜூன்மீ 20௳ கல்கத்தா * பிரின்ஸேப் கட்டத்திலிருந்து, சுவாமிகள் சுவாமி துரியானந்தரோடு புறப்படத் தீர்மானித்தார். சகோதரி நிவேதிதாதேவி தனது இங்கிலாந்து பெண் பாடசாலையைப் பார்த்து வரக் கருதினாராதலின் அவரும் அன்றே சுவாமிகளுடன் பிரயாணப்பட நிச்சயம் பண்ணினார். சுவாமிகள் புறப்படுவதற்கு ஒருமாதம் முன்பிருந்தே மடத்தில் அவரைத் தரிசிக்க அன்பர்கள் தினந்தோறும் கூடினார்கள். அவர் தமது பிரயாணத்தைப் பற்றிய எவ்வித சிந்தையு மற்றவராய் என்றும்போல் வந்தவர்களை அன்புடன் ஏற்று உபதேசித்து வந்தார். சுவாமிகள் புறப்படும் தினத் தன்று முதல் நாள், அவரைத் தனியாகவும், குருபாய் சிஷ்ய குழாத்தினரைத் தனியாகவும் அமர்த்திப் புகைப்பட மெடுக்கப்பட்டது.

சுவாமிகளின் மறுமுறை மேல்நாட்டுப் பிரயாண நிச்சயம்.

சுவாமிகளுடன் மேல்நாட்டிற் கேகிய சுவாமி துரியானந்தர் அம்மடத்தில் சந்நியாசிக ளனைவராலும், சிஷ்யர்களாலும் கௌரவிக்கப் பெற்றவர்; பிரம்மச்சரிய விரதத்தை அணுவளவும் வழுவாது அனுஷ்டித்தவர்; சிறு பிராயம் முதல் மகா ஞானியாய், மனத் துறவு பூண்டு விளங்கும் மகாநுபாவர்; சம்ஸ்கிருத பாஷையில் நல்ல பாண்டித்யமும், யோகசித்தியும் அவருக்குண்டு. மடம் அலம்பசாரிலிருந்த காலமுதல் அவர் சிஷ்யர்களைக் கல்வி யூட்டியும், யோகாப்பியாசத்தில் பழக்கியும், தர்க்கத் தேர்ச்சி யடைவித்தும் வந்தார். சுவாமிகள் அவரைத் தம்முடன் அமரிக்காவுக்கு அழைத்துப் போவதாய் நிச்சயித்ததும் அவர் சில சம்ஸ்கிருத புத்தகங்களை சந்தேக மித்ரார்த்த

சுவாமி துரியானந்தர்.

* Princep's Ghat.

மாய் எடுத்து வருவதாகச் சுவாமிகளிடம் கூறினர். அதற்குச் சுவாமிகள் "வித்தையும் புத்தகங்களும் மேல் நாட்டாரிடம் வேண்டிய அளவுக்கு மேலேயே இருக்கின்றன; நான் அவர்களுக்கு ஓர் வேதவித்தான எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகும் பிராம்மணனைக் காட்டவே உன்னை அழைத்துப் போகின்றேன்" என்றார். சுவாமிகள் உண்மையில் யோகம் தியானம் அக்னிஹோத்ரம், ஜபம், நிஷ்டை, வித்தை முதலியன மாசற்றுப் பொலியும் ஓர் பிராம்மணனை அமரிக்கர்களுக்குக் காண்பிக்கவே துரியானந்தரை அழைத்தேகியதாகும்.

சுவாமி துரியானந்தர் யோகானுபவத்தில் ருசிகண்ட பூனையாதலால் மேன்மேலும் உறிமேல் தாவுவாராகி பொது சேவையை வெறுத்து வந்தார். சுவாமிகள் அவரைப் பன்முறையும் அவ்வழி திருப்ப அரும்பாடு பட்டும் பயனில்லாமற் போயிற்று. கடைசியாக ஒருநாள் தார்ஜிலிங்கில் தர்க்க ஞானமெல்லாம் சோர்வடைந்து போக, அவர் தமது நிலையினின்றும் மாறாராகி நிற்க, சுவாமிகள் அவர் கழுத்தைத் தமது கரத்தாலணைத்து அவர் மார்புக்கு நேராகத் தமது சிரசைச் சாய்த்து, குழந்தைபோல விம்மி "அப்பா! ஹரிபாய்! என்னுடைய உடம்பின் ஒவ்வொரு சிறு பாகத்தையும் நான் எனது குருநாதரின் அபீஷ்டத்தை நிறைவேற்றி வைத்தற் பொருட்டுச் சதை சதையாகக் கழித்து வருவது உனக்குத் தெரியுமா? நான் இப்படியே எனது மரணபரியந்தம் செய்வேன் என்பது திண்ணம். நான் கஷ்டப்பட நீ பார்த்துக்கொண்டா இருப்பாய்? கொஞ்சம் எனக்கு உதவி புரியலாகாதா? அப்பா!" என்று முகவாய்க் கட்டையைப் பிடித்து வேண்ட, துரியானந்தரின் பிடிவாதமெல்லாம் பஞ்சாய்ப் பறந்து. அவர் கண்களினின்றும் நீர் தாரை தாரையாக வெளிப்படத் தனது பிடிவாதமெல்லாம் அறவே நீங்க, அவர் சுவாமிகளின் சொற்படி நடப்பதாய் அக்கணமே வாக்களித்து விட்டார்.

சிஷ்யர்களின் பிரிவு உபசாரம் சுவாமிகளின் விடை.

பத்தொன்பதாம் தேதி இரவில் ஸ்ரீராமகிருஷ்ண மடத்தில் ஓர் சாதாரணக் கூட்டம் நடைபெற்றது. அப்பொழுது சுவாமிகளுக்கும் துரியானந்தருக்கும் குருபாய்கள் மங்களா சாஸனம் செய்தார்கள். துரியானந்தர் அதற்குச் சுருக்கமாகப் பிரதி வாழ்த்து கூறியபின், சுவாமிகள 'சந்நியாசமும் அதனை அனுஷ்டிக்கும் முறைகளும்' என்று ஓர் சிறு பிரசங்கம் செய்தார்.

அதில், அவர் தமது சிஷ்யர்களை நோக்கி எப்பொழுதும் பொதுஜன க்ஷேமார்த்தமாகப் பிராணத்யாகம் செய்ய எப்பொழுதும் ஆயத்தமாயிருக்க வேண்டுமென்றும், மிக்க உயர்ந்ததும், இயலாததுமான கொள்கைகளை நிறைவேற்ற முதலிலேயே முயற்சிக்கலாகா தென்றும், அங்ஙனம் கொண்டமையாலேயே புத்த ஜைன சீர்திருத்தக்காரர்கள் தலையெடுக்காமற் போனார்களென்றும், எதிலும் மிதமாயிருக்க வேண்டு மென்றும் வெகு நாணயமாய்ப் பேசினார்; மற்றும் "சாஸ்திரங்களை நன்றாக வாசியுங்கள்; அவற்றிலெழும் சங்கைகளைப் போக்க முன் வாருங்கள்; சொல்வதை செய்கையிற் காட்டுங்கள்; செய்கைக்கு அசாத்தியமானதென்று தோன்றினால் அதைச் சொல்லாதீர்கள். இதுவே ஸ்ரீராமகிருஷ்ணரின் சித்த புருஷ சிருஷ்டித் தொழில். நீங்களே சித்தியால் ரிஷிகளாக விளங்க வேண்டும். நீங்கள் ஆற்றலே உருவெடுத்த அண்ணல்களாக வேண்டும். ஆனால் ஸ்திரீகளைப்போன்ற கனிந்த உள்ளம் உங்களுக்கு வேண்டும். என்றும் பணிந்து நடக்கப் பழகுங்கள். பணிந்தார்க்குப் பலகாலும் மேன்மை யுண்டு" என்று ஹித வசனங்கள் கூறித் தமது அன்பர்களை ஆசீர்வதித்தார். புறப்படும் தினத்தில் ஸ்ரீசாரதாமணி தேவி சுவாமிகட்கும் துரியானந்தருக்கும் மற்ற எல்லா குருபாய், சிஷ்யர்களுக்கும் பிக்ஷை யளித்தார். பிறகு அனைவரும் கூட்டமாக அன்னையின் ஆசியேற்று, 'பிரின்ஸெப்ஸ்' கட்டத்திற் கேகினார். அங்கு பல ஸ்திரீகளும் புருடர்களும் சகோதரி நிவேதிதா தேவியை வழியனுப்ப வந்திருந்தார்கள்.

சுவாமிகள் மேல் நாட்டிற்குப் புறப்படுதல்.

சுவாமிகள் இப்பொழுது தமது நோக்கங்களைப் பரிபூரணமாக வெளியிட்டு விட்டார். தக்கவாறு சில மெய்ஞான சீடர்களையும் துறவிகளையும் பழக்கி விட்டார். அவருடைய நோக்கங்களும் சேவாஸ்ரம கார்யங்களும் பத்திரிகைகள் வாயிலானும் பக்தர்கள் வாயிலாகவும் இந்தியாவின் மூலை முடுக்குகள் தோறும் சென்று வியாபித்திருந்தன. மேன்மேலும் ஹிந்துமத உத்தாரண சம்ரக்ஷணார்த்த வேலைகள் தளர்வின்றி நடைபெற ஏற்ற ஏற்பாடுகள் செய்து விட்டார். ஆகவே, அவர் பாரத தேசத்தில் இயற்ற வேண்டிய தொண்டு ஒரு மட்டாய்ப் பூர்த்தி யடைந்திருந்தது. இப்பொழுது ஐரோப்பியத் தொண்டர்களது அழைப்பிற் கிசைந்து மேற் நாட்டிற்கேகி அவர்களுக்குத் தேவையான கைங்கரியத்தைச் செய்ய

வும், தமது தேகோபாதியை ஒருவாறு நிவர்த்தித்துக் கொள்ளவும் சுவாமிகள் திருவுள மிசைந்தார். பாரத பூமியில் ஸ்ரீராம கிருஷ்ண மடத்தைச் சார்ந்த 'சந்நியாசிகளின் சத்வப் பயிற்சி' மகத்தான காரியங்களைச் சாதிக்கும் ஆற்றலுடன் பொலிந்து விளங்கிற்று.

50-ம் அத்தியாயம்.

பிரசார வேலை

அகிலமெங்கும் விளைந்த அரும்பயன்.

(1897ஞு-முதல் 1899ஞு ஜூன் மாதம் வரை)

ஊக்கமுடைய வாசகர்களுக்குச் சுவாமிகள் தமது இரண்டாம் மேல் தேச யாத்திரையில் ஆற்றிய பெருங் காரியங்களை யறியுமுன், அவரது கருணையால் தீக்ஷிக்கப்பெற்ற வேதாந்த, அத்வைத, சேவாஸ்ரம வேலைகளை அவருடைய உடனுழைப்பாளர்கள் பாரத பூமியிலும், அக்கரைத் தேயங்களிலும் எவ்விதம் நடத்திப் பெரும்பய னீட்டின ரென்பதை இவ்வத்தியாயத்தில் கூறுவோம். அம்மடத்தின் தற்கால நிலைக்கு ஆஸ்பதமான காரியங்கள் நான்கு பிரிவுகளாக நடை பெற்றன. ஸ்ரீராம கிருஷ்ண மடத்தின் சிஷ்யர்கள்—தனித் தனியே வேதாந்தசேவை செய்தல், கிளை மடங்களைத் தலை மடத்தின் நோக்கங்களுடன் ஸ்தாபித்தல், 'துர்பிக்ஷம்', 'பிளேக்' முதலிய நெருங் காலங்களில் அவ்விடங்களுக்குச் சென்று ரக்ஷணார்த்த வேலைகளியற்றல், அனாதைக் குழந்தைகளையும் விருத்தர்களையும் ரக்ஷிக்கும் சேவாஸ்ரமங்களை நிறுவுதல் ஆகிய நால்வித உழைப்பாலும் சுவாமிகளின் நோக்கத்தைப் பூர்த்தி செய்தனர். சுவாமிகளின் குருபாய்களும் சிஷ்யர்களும் எங்ஙனம் மேற்குறித்த நான்குவித சேவைகளைத் திரிகாண சுத்தியாய் நடத்திப் பெரும்புகழீட்டினரென்று இனிச் சற்று விஸ்தாரமாகக் கூறுவோம்.

ஸ்ரீராமகிருஷ்ணரின் திவ்யநாமத்தைப் பூண்ட சகல மடங்களுக்கும் பேலூர் மடமே தலைமை ஸ்தானமாக ஸ்தாபிக்கப்பட்டதும், அப்பேலூர் மடத்திற்கு அத்யாவஸ்யமான மான்யமும் மூலதனமும் சட்ட திட்டங்களும் சுவாமிகளால் நிர்ணயிக்கப்பெற்றதும் முன்னரே கூறப்பெற்றன, சுவாமி ஸ்ரீராம கிருஷ்ணானந்தர் சென்னையில் ஈடு எடுப்பற்ற மதசேவை புரிந்து வந்ததையும்; சகோதரி

நிவேதிதாதேவி கல்கத்தாவில் பெண்பாடசாலை யொன்றை ஆரம்பித்து நடத்தி வந்ததையும், கூர்ஜரத்திற்கும் கீழவங்காளத்திற்கும் பிரசாரார்த்தமாகச் சிஷ்யர்கள் அனுப்பப் பெற்றதையும், சுவாமி சாரதானந்தரும் அபேதானந்தரும் இங்கிலாந்திலும், அமரிக்காவிலும் 1896-ம் ஆண்டின் இறுதி வரையில் வேதாந்த முழக்கஞ் செய்து வந்ததையும் நாம் அறிவோம். சுவாமி அகண்டானந்தர் மூர்ஷிதாபாத்தில் 1897-ல் சிறக்க நடத்திய பஞ்ச நிவாரண வேலையையும் முன் போரிடத்திற் கண்டோம். கல்கத்தாவில் பிளேக் வியாதி 1898-ல் பரவியக்கால் அம்மடத்தா ரியற்றிய ஆக்க நிவர்த்தி கார்யங்களையும் கவனித்தோம். ஆகவே, இனி மேற்கூறிய விஷயங்களை விரித்துரைப்பதைவிட அவை அபிவிருத்தியடைந்த வரலாற்றை விளம்புதலே ஏற்புடைத்தாகும்.

ஸ்ரீராமகிருஷ்ண மடத்தில் நிகழ்ந்த உபந்நியாசங்கள்.

ஸ்ரீராம கிருஷ்ண மடத்தில், 1897-ம் ஆண்டு முழுவதும் வாரந்தோறும் தவறாமல் கூட்டங்கள் நடைபெற்று வந்தன. அவ்வமயங்களில் சிஷ்யர்களால் தயாரிக்கப்பெற்ற சுவை பொருந்திய வியாசங்கள் வாசிக்கப் பெற்றன. அவற்றுள், (1) ஸ்ரீராம கிருஷ்ணரின் பூவர் ஸ்வானுபவ விவரணம் (ஸ்ரீ. ஜி. ஸி. கோஷ், ஸ்ரீ. எம். என். குப்தா) (2) புத்தர் பிறப்பும் துறவும் (3) சுவாமி விவேகானந்தரின் அரிய மதசேவை. (4) ஞானமும் பக்தியும் (5) சுகதேவர் சரித்திரம். (6) ஹரிதாஸரின் சரித்திரம். (7) பூஜையின் தத்துவார்த்தம். (8) ஈஸ்வாராராதனம். (9) தெய்வ சாந்நித்யம். (10) சேவையின் ஆவசிகம். (11) ஈஸ்வர கடாக்ஷமும் கர்மயோகமும். (12) புத்த சரித்திரமும் புத்த சங்கமும். (13) ஆத்மவித்தை சம்பந்தமான ஆன்ம முயற்சி. (14) பகவத் கிருபை. (15) ஈஸ்வர பக்தி. (16) ஈஸ்வர நாமங்களின் அர்த்தமும் மகிமையும். (17) கர்மா. (18) தந்திரங்கள், ஆகிய இவ்வியாசங்கள் மிகவும் முக்கியமானவைகளாகும். மடத்தின் ஆதரவில் ஓர் பொதுக் கூட்டம் கல்கத்தா ஆல்பர்ட் ஹாலில் 1898ஆம் மார்ச்சு மாதத்தில் நிகழ்ந்தது. அதில் நிவேதிதா தேவி "காளிதேவி வழிபாடு" என்பது விஷயமாகப் பிரசங்கம் செய்தார். அதே கூட்டத்தில் சுவாமி சாரதானந்தர் அமரிக்காவிலிருந்து திரும்பிய பிறகு 'வேதாந்த மதம்' என்பது பொருளாய்த் தொடர்ச்சியாக உபந்நியாசங்கள் நிகழ்த்தினார். கல்கத்தாவில் பிளேக் பரவியிருந்தமையால் 1898-ம் ஆண்டு ஏப்ரல் முதல் ஜூலை வரை வாரக்

கூட்டங்கள் ஒத்திவைக்கப்பட்டன. அதன்மேல், சுவாமி சாரதானந்தால் வேதங்களைப்பற்றி மாந்தர் மனத்தின் கண்ணுள்ள மாசினைப் போக்கும் திட்பமுடைய பிரசங்கங்கள் சில நடை பெற்றன.

ஸ்ரீமத் விவேகானந்த சுவாமிகள் அமரிக்கா இங்கிலாந்து தேசங்களிற் செய்த சேவையின் பயனெல்லாம் சென்னை மாகாணத்திலேயே விளைவதாயிற்று. சுவாமி ஸ்ரீராம கிருஷ்ணானந்தர் சென்னை ராஜதானியின் பல பாகங்களிலும் வரவேற்றுபசரிக்கப் பெற்றார்.

சென்னையில் ஸ்ரீராம கிருஷ்ணானந்தர்

தமிழ்ப் பெருமக்கள் அவருடைய உபந்நியாசங்களை பய பக்தியுடன் ஏற்றின்புற்றனர். தளராத சேவார்வமுடைய அவர், தனது களங்கமற்ற உழைப்பின் பயனாக, சென்னைமா நகரின் பல பாகங்களிலும், சுற்றுப்புறங்களிலும் தினந்தோறும் அன்பர்களை ஓர் பொதுஸ்தலத்தில் கூட்டி வேதாந்த உபந்நியாசங்கள் நிகழ்த்தி வந்தார். இப்படி அவர் பதினோரிடங்களிற் பாடஞ் சொல்லத் தொடங்கி, உபநிஷதங்கள், கீதை, அறுவகை ஹிந்து தத்துவங்கள், பாகவதம் ராமாயண மகாபாரத காவ்யங்கள் முதலியவற்றைப் புகட்டி வந்தார். இத்தகைய வகுப்புகள் 'காசில் கர்ணன் ஹிந்து யுவர் சங்கம் சைதாப்பேட்டை, திருவல்லிக்கேணி, மைலாப்பூர், புரசைபாக்கம், சிந்தாதிரிப்பேட்டை சபைகள் முதலான இடங்களில் நடைபெற்றன. இதுவன்றி அவர் சென்னைக் கருகாமையிலுள்ள சிறு நகரங்களில் சுற்றி சுமார் முப்பது பிரசங்கங்கள்வரையில் செய்தார். எழும்பூர் சபை, ராயபுரம் பகவககீதா சங்கம், கோமளேஸ்வரன்பேட்டைக் கழகம் ஆகிய இவையும், அவரால் ஸ்தாபிக்கப்பெற்றவைகளாம். இவற்றைத் தவிர, சத்யார்த்த வித்யாசாலை யொன்றை அவர் நிறுவி, அதன்கண் ஒன்பது மாதகாலத்திற்குள் அறுபத்தெட்டு உபந்நியாசங்கள் செய்தார். வாணியம்பாடியில் 1900-ம் ஆண்டு ஜனவரிமீ 20வ அவ்வூர் வாசிகள் ஓர் விவேகானந்தர் ஆச்சிரமத்தை அமைக்க, ஆஸ்ரமத்தின் ஆரம்பதினத்தில் அப் புதுக் கட்டிடத்தை ஸ்ரீராம கிருஷ்ணானந்தர் திறந்துவைத்து அதன் கௌரவ போஷகராயிருந்து வந்தார். ஸ்ரீராமகிருஷ்ணர் திருநக்ஷத்திர தினத்தன்று சென்னையில் ஆயிரக்கணக்கான ஏழைகளுக்கு உணவளிக்கப்பட்ட கொண்டாட்டமும் இவரது ஊக்கத்தான் இனிது நடந்தேறிற்று. சுவாமி அகண்டானந்தர் செய்துவரும், பஞ்ச அநாதரக்ஷண பாலபரிபாலன வேலைகளுக்கு அவர் சென்னை மாணவர்களிடமும்,

அனுதாபமுடைய அன்பர்களிடமும் நன்கொடை வசூலித்து அனுப்பினர். அவருடைய அற்புத குணத்தாலும் சிறந்த கல்வியாலும் தூய ஒழுக்கத்தாலும் ஏழை தனவந்தர், உயர்ந்தவர் தாழ்ந்தவர், படித்தவர் பாமரர் என்ற பேதமில்லாமல் அன்பு செலுத்தும் தன்மையாலும் சென்னை மாகாணமெங்கும் அவருக்குப் பெரும்புகழ் ஓங்கிற்று.

சுவாமிகள், இலங்கைக்கு விஜயம் செய்த காலத்தில் அநேக ஹிந்துக்கள் அவரிடம் விண்ணப்பித்துக்கொண்டதற் கேற்ப 1897-ம் வருடாரம்பத்தில் சுவாமி சிவானந்தரை இலங்கைக் கனுப்பினர். ஈழ நாட்டிற்கேகிய சிவானந்தர் வேதாந்த சேவை செய்தது மட்டுமின்றி, சிங்களர்களுக்கும் தமிழர்களுக்கும் ராஜயோகம் கீதை ஆகிய இரண்டையும் பாடமுறையில் புகட்டி வருவாராயினர். அவருடைய பகவத்கீதா உபந்நியாசங்களுக்கு அநேக ஐரோப்பியர்களும் வந்துகொண்டிருந்தார்கள். அவ்வைரோப்பிய வித்யார்த்திகளுள் ஸ்ரீமதி பிக்கெட் என்னும் மாது ஹரிப்பிரியை என்ற தீக்ஷாநாமம் பூண்டு வேதாந்த விற்பன்னையாக விளங்கினள். ஐரோப்பியர்களிடையே அம்மாதுசிரோன்மணி பிரசாரஞ் செய்தற்குரிய நிலையெய்தியது கண்டு, சிவானந்தர் அவளை அத்தாக்ஷிப் பத்திரத்துடன் ஆஸ்திரேலியா நியூஸீலந்து தேயங்களில் வேதாந்த மூர்த்தியான விவேகானந்த சுவாமிகள் எழுந்தருளுவதற்குமுன் வழிகோலி வைக்குமாறு விடுத்தார். அம்மாது மேற்கூறிய இரண்டு நாடுகளிலும் யாத்திரைசெய்து, அடிலெய்ட், எஸ். விக்டோரியா, நெல்ஸன் என்னும் மாகாணங்களில் ஸ்ரீராமகிருஷ்ணரின் திவ்யநாமத்தைப் பரப்பி வேதாந்தபாட மோதிவந்தார்.

இலங்கையில் சுவாமி சிவானந்தர்

சுவாமிகளின் முதல் அமரிக்காநாட்டு சிஷ்யையான அபயானந்தா சிகாகோ போன்ற சிறந்த நகரங்களில் இரண்டாண்டுகள் வரை வேதாந்த சேவைசெய்து, மதசேவையை மாட்சியுடன் முடித்தபின் 1899 ம் வருடம் மார்ச்சு மாதத்தில் பாரத பூமிக்கு வந்து சேர்ந்தார். அப்புனிதை கவித்வமும் சூக்ஷ்மபுத்திக் கூர்மையும் நன்கமைய பம்பாய், சென்னை, கல்கத்தா, டெக்கா, மைமன்சிங், பாரிசால் நகரங்களில் வேதாந்த உபந்நியாசங்கள் செய்துகொண்டே யாத்திரை செய்தார். கனம். ஜஸ்டிஸ், ரானடே அவர்களின் தலைமையில் பம்பாயில் 'வேதாந்தத்தின் பெருமையும் அது மேல்நாட்டில் அடைந்

அமரிக்காநாட்டு சிஷ்யை அபயானந்தா

துள்ள மேன்மையும்' என்னும் விஷயமாய் அவரியற்றிய பிரசங்கம் பரம பவித்ரமானதாயிருந்தது. அவ்வன்னை கல்கத்தாவில் தங்கியிருந்த சொற்பகாலத்திற்குள் "பிராகிருத அப்ராகிருத ஞானவளர்ச்சி", "கர்ம காண்டம்", "முக்திக்கும் விடுதலைக்கும் உள்ளபேதம்" என்னும் மூன்று பிரசங்கங்களியற்றினார். டெக்காவில் புதிதாக ஸ்தாபிக்கப் பெற்ற ஸ்ரீராமகிருஷ்ண மடத்தில் அன்பர்கள் அவரை வரவேற்று உப சரித்தார்கள்; ஊர்வலங்கொண்டு 'நார்த்புரூக் ஹாலில் ஒரு ஸ்வாகத தோபசாரப் பத்திரிகையும் வாசித்துக்கொடுத்தார்கள். அங்கு அவ் வம்மை பல தர்க்க விசாரங்களில் கலந்துகொண்டதோடு மதம், ஈஸ்வர பக்தி, அத்வைதம் என்ற மூன்று சொற்பொழிவுகளு மியற்றினாள்.

சுவாமிகள் முதல் இங்கிலாந்து விஜயத்திலேயே ஐரோப்பிய, ஹிந்து பிரசாரகர்களுடைய சௌகரியார்த்தமாக, ஹிமயப் பிராந்தத் தில் கடல் மட்டத்திற்குச் சுமார் ஏழாயிரம் அடி உயரத்திலுள்ள ஓர் ஏகாந்த ஸ்தலத்தில் மடமொன்றை ஸ்தாபிக்கத் தாம் உத்தேசித் திருப்பதாகத் தமது அன்பர்களுக்கு எழுதியதுண்டு. அப்பால், அவர் இந்தியாவுக்கு வந்த பின்னர் இயற்றிய சுற்றுப் பிரயாணத்தில் இக்கருத்துடன் அதற்கேற்ற ஓரிடத்தைத் தேடி, தர்மசாலை. முர்ரி, ஸ்ரீநகர், தேக்ரி-தேன், அல்மோரா-நகர் முதலிய பிரதேசங்களில் சுற் றிப் பார்த்ததும் அவர் நோக்கத்திற் கொத்த இடம் அமையவில்லை. கடைசியாக அவர் 1898-ம் வருடம் ஜுலை மாதத்தில் அல்மோராவி லிருந்து காஷ்மீரத்திற்குச் சென்ற பொழுது இவ்விஷயத்தைக் கவனிக் கும்படி சேவியர் தம்பதிகளிடம் உரைத்துச் சென்றார். அவர்கள் சுவாமி சொரூபானந்தருடன் அல்மோராவுக்குப் பக் கத்திலுள்ள இடங்களை எல்லாம் சுற்றி ஆராய்ந்து, பார்த்து, மாயாவதி என்னும் மனோகர பூமியைத் தேர்ந்தார்கள்.

மாயாவதி அத்வைத ஆஸ்ரமம்

அப்பாகம் புஷ்ப ஜாதிகள் மலிந்த மலைச்செடிகளும், மரங்களும் நிறைந்த சோலைகளாலும், பனியுறைந்த பாறைகளா லும், புனல் நிறைந்த அருவிகளாலும் அலங்கரிக்கப்பெற்றிருப்பது. இப்பிரதேசம் சமுத்திர மட்டத்திற்கு 6800 அடி உயரத்தில் அல்மோ ராவுக்கு ஐம்பது மைல் தூரத்திலிருப்பது. இம்மனோரம்யமான பிரதே சமே 'பிரபுத்த பாரதா'வை நடத்தவும், 'சுத்த அத்வைத ஆஸ்ரம'த்தை நிறுவவும் ஏற்றதென்று சேவியர் தம்பதிகள் நிச்சயித்தார்கள். உடனே அவ்விடம் கிரயசாஸனம் வாங்கப்பெற்றது. 1899-ம் ஆண்டு மார்ச்சு மீ 19உ முதல், சேவியர் தம்பதிகள் அங்குச் சாஸ்வதமாக

வசிக்கத்தொடங்கினார்கள். அன்று, ஸ்ரீராமகிருஷ்ணரின் ஜன்மதினமாகவும் இருந்தது. அன்றே பிரபுத்த பாரதா முத்திராக்ஷரசாலையும் அங்கு மாற்றப்பட்டது. அன்றையதினம் சுவாமிகள் மடப்பிரவேச விழாவை நடப்பித்துத் தமது அன்பர்களையும் வாழ்த்தினார். இந்த ஆஸ்ரமத்தில் எவ்வித உபதேசமும், பயிற்சியும், சிரவணமும், உபந்நியாசங்களும் நடைபெறலாகாதென்றும், அத்வைத வேதாந்தத்தை வாய்மூடி, பிரம்மானந்தமாய் அனுபவித்தலைத் தவிர வேறெவ்வித இயக்கமும், சகுணோபாசனையும் நிகழலாகாதென்றும் சுவாமிகள் திட்டஞ்செய்து விட்டார். சந்நியாசிகள் மட்டும் இங்கு விரஜாஹோமம் செய்வார்கள். ஸ்ரீராமகிருஷ்ணர் தினங்கூட இவ்வாஸ்ரமத்தில் கொண்டாடப் படுவதில்லை.

'பிரபுத்த பாரதா' பத்திரிகை

நிற்க, சுவாமிகள் இரண்டாந்தடவை மேல்நாட்டு விஜயம் செய்வதற்கு ஒருவாரத்திற்குமுன், சேவியர் தம்பதிகளின் விண்ணப்பத்திற்கிணங்க, சுவாமி (மூத்த) சச்சிதானந்தர், விரஜானந்தர், விமலானந்தர், ஹரேந்திரநாத் பிரம்மச்சாரி ஆகிய நால்வரையும் அவர்களுக்கு உதவிபுரியுமாறு அனுப்பி வைத்தார். இந்நால்வரும் மாயாவதிக்கேகி, ஆஸ்ரமத்தைக் கட்டுவித்தல், ரஸ்தா அமைத்தல், நிலங்களைப் பண்படுத்தல், பத்திரிகையைக் காலாகாலங்களில் வெளிவர உதவுதல் முதலான வேலைகளில் ஈடுபட்டிருந்தார்கள்.

பிரபுத்த பாரதா, பிரம்மவாதினி, உத்போதினி, ஆகிய மூன்று பத்திரிகைகள்

மடங்கள் சாஸ்வதமாக ஸ்தாபிக்கப்பெற்ற விஷயம் இப்படியிருக்க, முன்னரே கூறப்பெற்ற சென்னை 'பிரம்மவாதினி'. அல்மோரா 'பிரபுத்தபாரதா', கல்கத்தா 'உத்போதினி' ஆகிய மூன்று சஞ்சிகைகளும் சுவாமிகளின் மேற்பார்வையில், அவருடைய சிஷ்யர்களின் ஒத்துழைப்பால் பிரசுரிக்கப்பெற்று உள்நாட்டிலும், அக்கரையிலும் மிக்க வேலை செய்து வந்தன. அவற்றின் வாயிலாகப் பகவான் ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ச தேவருடைய மகிமை உலகெங்கும் வியாபித்தது. பழங்காலப் பாரதபூமியின் எழிலும், மஹோத்தாரணர்களுடைய நோக்கங்களும் இச்சஞ்சிகையில் வரையப்பெற்றன. அகிலத்தின் பல பாகங்களிலும் சிஷ்யர்களால் நடைபெற்றுவரும் வேதாந்த சேவையின் அறிக்கைகளும் உபதேச உபந்நியாசங்களும் இச்சஞ்சிகையில் விளங்கப் பிரசுரமாயின. பிளேக் முதலான பெருவாரி நோய்கள் நேரு மிடங்களில்

ரக்ஷணார்த்த கார்யங்களை நடத்தப் பொருளுதவி புரியுமாறு அவ்வப் பொழுது பொது விண்ணப்பங்களும் பிரசுரிக்கப் பெற்றன. அந்தந்த தேச சுவபாஷைகளில் சுவாமிகளுடைய பிரசங்கங்கள் மொழிபெயர்க் கப்பெற்று வெளிவந்தன.

இனி, மேல் நாட்டைவிட்டுச் சுவாமிகள் பாரதபூமிக்கு வந்தபின் அம் மேல் தேசங்களில் நடைபெற்ற மதசேவையைப்பற்றிக் கூறு வோம். சுவாமிகள் லண்டனைவிட் டகன்றதுமுதல் சுவாமி அபேதா னந்தர் லண்டனில் திறமையுடன் மனோத்தாரண குரு விலக்கணங் கள் பொலிய, சமயசேவை செய்துவந்த விஜயம் வாசகர்களுக்குத் தெரியும். 'விம்பில்டன்' நகரிலும் அவர் இடையிடையே பிரசங்கங்கள் செய்து வந் தார். கிரிஸ்டிமஸ் புதுவருட விடுமுறை நாட்கள் கழிந்தபின், அவர் ஜனவரிமீ 12 தேதிமுதல் தொடர்ச்சியாகச் சொற் பொழிவுகள் நிகழ்த்தி வந்தார். அவாது வேதாந்த உபந்நியாசங்களில் ஈடுபடா தார் எவருமே இல்லை யெனலாம். காலையிலும் மாலையிலும் பிரசங்கங் கள் செய்வதும், பகற்காலங்களில் சந்தேகிகளைத் திருப்தி செய்வ தும், அதே பிரசங்கங்களை அடுத்தவாரத்தில் மற்றோரிடத்திற் செய்வ தும், முதலிடத்தில் புதிய விஷயங்களை ஆரம்பித்து உபந்நியசிப்பதும், இராக்காலங்களில் புராணகாவ்யங்களின் அந்தரார்த்தங்களைப் புகழ்பட விரித்துரைப்பதுமாக அவர் தமதுடம்பைச் சாறுகப் பிழிந்தார். அவ ருடைய திவ்யநாமம் அனைவருடைய நாவிலும் நாளடைவில் நிலை கொள்வதாயிற்று. இப்படியிருக்கையில் நியூயார்க்கிலிருந்த பக்தர்க ளும் சீடர்களும் தமக்கு விரைவில் ஓர் சுவாமியை (ஆசார்யரை) அனுப்பிவைக்கும்படிக்குச் சுவாமிகளுக்குப் பன்முறை விண்ணப்பங் கள் விடுத்தவண்ண மிருந்தார்கள். சுவாமிகளும் அபேதானந்தரை அமெரிக்காவுக்கு ஏகுமாறு எழுத அவர் 1897-ஆ ஜூலை மாதத்தின் பிற்பகுதியில் அமெரிக்காவிற்குப் பிரயாணமானார். ஆகவே, இங்கி லாந்திலிருந்த வித்யார்த்திகள் தமக்குள்ளே வல்லாரொருவரைத் தாத் காலீகமாகத் தேர்ந்து அவர் தலைமையிற் கூடித் தினந்தோறும் வழக் கப்படி வேதாந்த விசாரம் செய்தவண்ணம் ஸ்ரீமத் விவேகானந்த சுவாமிகள் வருகையை எதிர்பார்த்திருந்தார்கள்.

லண்டனில் அபேதானந்தர்

சுவாமி சாரதானந்தரோ, அமெரிக்காவின் கேதாரபுரி, பாஸ்டன் முதலிய நகரங்களில் இமைப்பொழுதும் அவகாசமின்றி உழைத்து வந்தமையால் அவர் நியூயார்க் அன்பர்களின் விக்ஞாபனத்திற் கிணங்

கக்கூடாமற் போயிற்று. அதனால் (சகோதரி வால்டி) சகோதரி ஹரி தாஸி நியூயார்க்கில் 1897-ஆம் மே மாதம் இறுதிவரையில் தனிமை யாக உழைத்து வந்தாள். பிறகு சுவாமி அபேதானந்தர் போய் அச் சபையை ஒப்புக்கொண்டார்.

அமெரிக்காவில் சுவாமி சாரதானந்தரும் அபேதானந்தரும் அப யானந்தரும் ஆற்றியருளிய வேதாந்த சேவையை முற்றும் விளங்க வைக்க வேண்டுமாயின் ஒரு தனி நூலெழுத வேண்டுமாதலின் ஈண்டு வெகு சுருக்கமாக எழுதப்புகுவோம். இவ்வேதாந்த சேவகர்கள் சில முக்கியமான நகரங்களிலிருந்த வண்ணம் தமது மதத்தொண்டை யியற்றி வந்தார்கள். அவர்கள், பாஸ்டன், நியூயார்க், சிகாகோ முத லிய இடங்களையே பெரும்பாலும் தமது வாஸஸ்தலமாகக் கொண் டார்கள். கிறிஸ்தவ வீர மதானுஷ்டானர்களால் நடத்தப்பெற்ற சில பத்திரிகைகளைத்தவிர, மற்றப் பத்திரிகைகளனைத்தும் இவர்களுடைய அரிய தர்ம ஊழியத்தை ஆதரித்ததும், போற்றியும், வாழ்த்தியும் பேரு தவி புரிந்து வந்தன. சுவாமி சாரதானந்தர் கிரீன் ஏகர் (Greenacre) ஆலோசனை சபையிலும் மன்சால்வட் (Monsalvat) சமய தத்துவ ஒற்றுமை யாராய்ச்சிக் கழகத்திலும் 1896-ம் ஆண்டு ஜூலை மாதத்தில் இயற்றியருளிய பிரசங்கங்களையும், அதன்பின் புரூக்லின், பாஸ்டன், நியூயார்க் பட்டணங்களில் நிகழ்த்திய உபந்நியாசங்களையும் பிரபல பத்திரிகை கள் யாவும் ஓர் எழுத்தும் விடாமல் அப்படியே பிரசுரித்து மனமாரப் புகழ்ந்தன. 1896-ம் வருடம் அக்டோபர் மாத இறுதியில் சுவாமி சாரதானந்தர் புரூக்லின் நீதி நூற் கழகத்தின் ஆதரணையில் "இந்து நீதி சாஸ்திரம்" என்னும் பிரசங்கமொன்று நிகழ்த்தினார். அதே விஷ யத்தைப்பற்றி அவர் பின்பு நியூயார்க் வேதாந்த சபையிலும் பேசினார். பிறகு அவர் கேம்பிரிட்ஜுக்கு வந்து புதுவருட ஆரம்பம் வரையில் வேதாந்த பாடமோதி யிருந்தார். அதன்மேல், அவர் நியூயார்க்குக் குச் சென்று புது நூற்றாண்டு மண்டபத்தில் வேதாந்த உபந்நியாசங் கள் செய்த வண்ணமிருந்து, அமரிக்க ருள்ளத்தின்கண் சுவாமிக ளெழுப்பிய சர்வ தர்ம சமரஸ அறிவையும் உணர்ச்சியையும் வளர்க்க லுற்றார். அப்பால், கேம்பிரிட்ஜ்வாசிகள் அவரை வருந்தி யழைத்தார் கள். அங்ஙனமே அவர் அப்பொழுது கேம்பிரிட்ஜில் நடைபெற்ற ஆராய்ச்சி சபைகளில் கலந்துகொண்டார். பின்னர், வசந்த ருதுவில் அவர் நியூயார்க்குக்குப் போய் வேதாந்த சபைகளின் வளர்ச்சியைக்

கிரீன் ஏகரில் அபேதானந்தர்

கவனித்தபின் கிரீனேகர் ஆலோசனை சபையின் அடுத்த வருடாந்தாக் கூட்டத்திற்கேகினர். அங்கு 'இலக்கியத்தின் எழில்' என்ற விஷயமாய், வேத சுலோகங்களை எடுத்துக்கூறி, புராதன, நவீன ஹிந்து தர்மத்தின் மேலான அம்சங்களை விஸ்தரித்தும், ஹிந்து வீரர்களின் வாலாற்றைக் கூறும் காவ்யங்களைக் குறிப்பிட்டும் உபந்நியசித்தார்.

அபேதானந்தரின் அபூர்வ பிரசங்கங்கள்

சாங்கிய வேதாந்த தத்துவாசிரியர்களின் நிர்ணயத்திற் கேற்ப "பிரபஞ்ச சிருஷ்டிக் கிரமத்தின் படிப்படியான வளர்ச்சியின்நோக்கம்" என்ற அவருடைய பிரசங்கம் அமெரிக்கர்களால் சாலவும் கொண்டாடப்பெற்றது. இலை யுதிர்காலத்தில் அவர் பாஸ்டனுக்குச் சென்று, இலவச சமயபோத சங்கத்தின் ஆதரவில் 'மதங்களின் கருணை யுடைமை' என்றோர் சொற்பொழிவு இயற்றிவிட்டு, அக்டோபர் மாதம் முழுவதும் வாரம் மும்முறை 'மான்ட் கிளேர்' (Montclair) எனும் நகரில் வேதாந்த உபந்நியாசங்க ளியற்றினர். இப்படியிருக்கையில், சுவாமி சாரதானந்தரை, விவேகானந்த சுவாமிகள், பேலூர் மடஸ்தாபனார்த்த விஷயமாய் உடனே இந்தியாவுக்குப் புறப்பட்டுவரும்படி அழைக்க, அவரைப் பிரிய நேர்ந்தமை பற்றி அமெரிக்க ஐரோப்பிய சிஷ்யர்கள் துயரக்கடலி லாழ்ந்தனர். அவர்களையெல்லாம் ஒருவாறு தேற்றிவிட்டுச் சுவாமி சாரதானந்தர் 1898-ம் ஆண்டு ஜனவரி மாதம் 12வ நியூயார்க்கில் கப்பலேறி இந்தியாவுக்குப் பிரயாணமானர்.

இது இவ்வாறாக, சுவாமி அபேதானந்தர், அவ்வாண்டு ஆகஸ்டு மாதம் 6வ நியூயார்க்கை யடைந்து வேதாந்த உபந்நியாசங்கள் செய்யத் தொடங்கினர். அவரால் அந்நாட்டில் வேதாந்த சேவை புத்துயிர் பெற்றெழலாயிற்று அம்மாதக் கடைசியில் அவர், பிலடெல்பியா, வாஷிங்டன், வர்ஜினியா, நியூபாஸ்டன் முதலிய நகரங்கட்குப் போனர். அப்பால் செப்டம்பர்மீ 29ம்-வ முதல் அவர் நியூயார்க்கிலேயே இருந்து அனுதினமும் காலை மாலைகளில் வேதபாட மோதுவதும், ஞாயிற்றுக்கிழமைகளில் பொது ஜனக் கூட்டங்களில் உபந்நியாசங்கள் புரிவதுமாக உழைத்து வந்தார். நாளுக்குநாள் அவருடைய பிரசங்கங்களைச் சிரவணம் செய்வோரின் தொகை விசேஷமாக அதிகரித்துக்கொண்டே வந்தது. ஆர்வமுள்ள வேதாந்த வித்யார்த்திகளின் எண்ணிக்கை அனுதினமும் இருந்துகொண்டே யிருக்

அபேதானந்தரின் அமரிக்காநாட்டுச் சுற்றுப்பிரயாணம்

40

தது சுவாமிகள் வரைந்தருளிய வேதாந்த நூல்களை வெகு தொலையி லிருந்த கலிபோர்னியா வாசிகள் அனுப்பிவைக்குமாறு அபேதானந்த ருக்குத் தேவைக் கடிதங்கள் விடுத்தவாறிருந்தார்கள். 'மான்ட்கிளே'ரி லும் அவர் ஒய்வேற்பட்டகாலங்களில் வேதாந்த உபந்நியாசங்க ளியற்றிவந்தார். ப்ரூக்லின் முதலான பட்டணங்களிலிருந்த பிரமுகர் கள் அவரைப் பன்முறை வரவேண்டியும், அவகாச மின்மையால் அவர் ஏக முடியாமற் போயிற்று.

அபேதானந்த சுவாமிகள் ஜனவரிமாதம் முழுவதும் இயற்றிய பிரசங்கங்கள் பன்னிரண்டாகும். இப்பிரசங்கங்களைக் கேட்க கல்வி மான்கள் பிரசங்க மண்டபங்களில் எள்விழ இடமின்றி நிறைந்திருந் தனர். உட்கார இடமின்றி அநேகர் ஓரங்களில் நின்றுகொண்டும் சுவர் களில் சாய்ந்துகொண்டு மிருப்பார்கள். இதோடு கூட நியூயார்க்கிலும் ப்ரூக்லின் நகரிலும் பகவத் கீதையைத்தொடர்ச்சியாக உபந்நியசித்து வந்தார்.

அபேதானந்தரின் அரியமத சேவை

அவர் வாயிலாகக் கீதையைச் சிரவணம் செய்தவர்கள், பேரார்வ முடையவர்களாய் வடமொழி கற்கத் தொடங்கினார்கள். உள்ளங் கனிந்த மாணவர்களைக்காணும் ஆசான் உவகை பூப்பது இயல்பு அல் லவா? ஆதலின் மனத்தூய்மையுடையார் பலரை அவர் ஒன்றுகூட்டி யோகாப்பியாசத்திலும், நிஷ்டையிலும் புகுத்தி, பிராணயாமஞ் செய்துவருமாறு தூண்டினார்.

சுருதியு மரிய உபநிட தத்தின்
தொகுதியும் பழுதற வுணர்ந்தோன்
கருதிடற் கரிய பிரம நன்னிலையைக்
கண்டுபே ரொளியிடைக் களித்தோன்
அரிதினிற் காணுமியல் பொடு புலியினைப்புறத்
திருந்து நண் பகலிற்
பரிதியி னொளியும் சென்றிடா நாட்டில்
மெய்யொளி பரப்பிடச் சென்றோன். (பாரதி)

ஆகிய அபேதானந்த சுவாமிகள் சம்ஸ்கிருத பாஷையில் நிகரற்ற பாண்டித்யமும், நவீன ஆங்கிலேய சாஸ்திர (Science) ஞானமும் உடையவராதலின் அவரிடம் அமரிக்காவாசிகள் பெருங்கௌரவம் பாராட்டி வந்தார்கள். ஹக்லி, தைன்டன், ஸ்பென்சர், கன்ட் முத லிய தத்துவ சாஸ்திரக் கீர்த்திமான்களுடைய கொள்கைகள் ஹிந்து மதத் தத்துவ நூல்களுக்கு ஒத்திருப்பதை அவர் திடப்பட அவர்க ளுக்குச் சீர்தூக்கிக் காட்டினார்.

ஒன்றே மெய்ப் பொருளாகு முயிர்களெலா
மதன் வடிவா மோருங்காலை
என்றேவ நுந்றேவ னென்றுலகர் பகைப்ப
தெலா மிழிவா மென்று
நன்றேயிங் கறிவுறுத்தும் பரம குரு
ஞானமெனும் பயிரை நச்சித்
தின்றேபா ழாக்கிடுமைம் புலன்க ளெனும்
விலங்கினத்தைச் செகுத்த வீரன். (பாரதி)

ஆன சுவாமி அபேதானந்தரின் அற்புத சக்தியால், மகத்தான தேவாலய பரிபாலகர்களும் கல்விச் செங்கோலோச்சுவாரும் அவரிடம் உள்ளன்பு பூண்பாராயினர். நியூயார்க் நகரின்கண்ணுள்ள பல சங்கங்களினின்றும் அவருக்கு விண்ணப்பக் கடிதங்கள் வந்து குவிந்தன. அவர் அச்சபைகளுக்கு இயன்றவரை சென்று உபதேசித்து வந்தார். இப்படி "புருக்லின் இருபதாம் நூற்றாண்டு சபை," "சத்துவ சாஸ்திர சங்கம்", நியூயார்க் "சந்திரோதய சபை" முதலியவற்றில் அவர் செய்தருளிய கீர்த்திபெற்ற பிரசங்கங்கள் யாவும் 1896-ம் ஆண்டு பிப்ரவரி மாதத்திற்குள் ஒருவிதமாகப் பூர்த்தியாயின. மோட் ஞாபகார்த்த மண்டபத்தில் மட்டும் அவர் மொத்தம் எண்பத்தாறு சொற் பொழிவுகள் செய்துளா ரெனில் அவாது உழைப்பின் திறனை வாசகர்கள் அறிந்து கொள்ளாமற் போகார். அவர் தமது தேகத்தைக் கசக்கிப் பிழிந்து அரும்பாடு, பெரும்பாடு பட்டு பலனைப் பற்றிய சிந்தை அணுத்துணையேனு மின்றி உழைத்து வந்ததை ஏகோபிதமாக அமெரிக்கா தேசப் பத்திரிகைகள் யாவும் போற்றி நின்றன. அவருடைய விஜயத்தால் கிறிஸ்தவ தேவாலயங்களி லெல்லாம் வேதாந்த மணியோசை இடை விடாமல் ஒலிப்பதாயிற்று. கிறிஸ்தவ மடாதிபதிகளும் கலைமகள் கடாக்ஷம் பெற்ற பெரும்புகழ் படைத்த கல்விமான்களும், தருக்க சாஸ்திரத் தலைமை பூண்டவர்களும் அவருடைய உபதேசங்களைக் கேட்டு அடிசூடி நின்றார்கள்.

வானந்தம் புகழ்மேவி விளங்கிய மாசிலாதி
குரவனச் சங்கரன்
ஞானந்தங்கு மிந்நாட்டினைப் பின்னரு நண்ணினனெனத்
தேசுறு மவ்விவே
கானந்தப் பெருஞ்சோதி மறைந்தபின் அவ்வினிழைத்த
பெருந்தொழி லாற்றியே

ஊனந்தங்கிய மானிடர் தீதெலா மொழிக்குமாறு
பிறந்த பெருந்தவன். (பாரதி)

என்று அபேதானந்த சுவாமிகளைப் பாரதியார் துதித்தது போல சுவாமி விவேகானந்தர் அமெரிக்காவில் எழுப்பிய வேதாந்த உணர்ச்சிக்கு சாஸ்வத ஸ்தானத்தை ஏற்படுத்திய அபேதானந்தரால் நிறுவப்பெற்ற வேதாந்த சபையை நியூயார்க் அரசாங்கத்தார் அங்கீகாரமுஞ் செய்தார்கள்.

இவ்வாறு பாடுபட்ட அவர் ஓய்வு வேண்டி வாஷிங்டனுக்குப் போனார். உலகப் பிரசித்தர்களுக்கு ஓய்வேது? அங்கும் அவர் பிரசங்கங்க ளியற்றி வரும்படி நேர்ந்தது. வாஷிங்டன் பிரஸிடெண்ட் மேக்கின்லி (Mc Kinley) துரை மகனார் சுவாமியை அன்புடன் உபசரித்தார். அலாஸ்கா கவர்னரான கனம் ஜான். ; ஜி. பிராடியும், பொங்கும் புகழ் தங்கிய சாஸ்திர நிபுணர் டாக்டர் எல்மார் கேட்ஸ் அவர்களும் சுவாமிஜியின் நண்பர்களானார்கள். அப்பால், அவர் பாஸ்டனுக்குச் சென்று இலவச சமயபோத சங்கத்தில் உபந்நியசித்தார். புரொபஸர் ஜேம்ஸ், ராய்ஸ் என்பவர்களின் பெருங் கருணையால் ஹார்வர்டு சர்வ கலாசாலையில் சில உபதேச வகுப்புகள் நடைபெற்றன. ஒருநாள் புரொபஸர் ஜேம்ஸ் தம்முடைய பிரசங்கம் முடிவுற்றதும் தமது மாணவர்களுக்கு அபேதானந்தரை அறிமுகஞ் செய்து வைத்தார்; அப்பொழுது சுவாமிஜீ 'சகல தத்துவ ஐக்கியம் என்பது பொருளாக உயர்ந்ததொரு சொற் பொழிவு நிகழ்த்தியருளினார். அவ்வமயம் சிறந்த சம்ஸ்கிருத பண்டிதரான புரொபஸர் லான் மேன் அவர்களும் வந்திருந்தார். ஹார்வர்ட் சர்வ கலாசாலை வித்வான்கள் பலர் அபேதானந்தரை உபசரித்து விருந்தளித்துக் களித்தனர். அதன் பின் சுவாமிஜீ மெட்போர்ட், நியூடன், ஹைலாண்ட்ஸ், சலீம் முதலிய நகரங்களுக்குச் சுற்றுப் பிரயாணம் செய்து உபந்நியசித்து நியூ யார்க்குத் திரும்பி அங்கிருந்து மான்ட்கிளேருக்கேகி, ஞாயிறு தோறும் "ஒழுக்கத்தின் உந்நத ஸ்தானம்" என்னும் தொடர்ச்சியான உபந்நியாசங்க ளியற்றினார். இவ்விதம் ஜூலை மாதம் வரை கழிந்தது. அடுத்த மாதத்தில் அவர் எலியட் (Eliot) மேய்ன் (Maine) முதலிய இடங்களில் வேதாந்த சேவை செய்த பிறகு நியூஹாம்ஷையரிலுள்ள வெண்மலை (White Mountains) யிலும், கியாட்ஸ்கில் மலையிலும் ஓய்வு நிமித்தம்

சென்று வசித்திருந்தார். அதன் பின்னர் அவர் நியூ போர்ட் (New Port) டிற்குச் சென்று, குரு. ஆர். ஹீபர் நியூடன் (D. D.) என்ற சமரஸ தர்ம தீக்ஷண்ய குருவைக் கண்டு பேசி, அவருடன் நெடுந் தீவில் (Long Island) கொஞ்சகாலம் வசித்தார். அவரது போற்றலை விளக்கப் போதிய சான்றாக நிற்கும் நியூயார்க் வேதாந்த கைங்கரியம் நவம்பர் மாதம் முதல் சில கிறிஸ்தவ முக்கிய பண்டிகைத் தினங்கள் தவிர மற்றைய நாட்களில் தவறாது தினந்தோறும் நடைபெற்று வரலாயிற்று. இஃதிங்ஙன மிருப்ப ஓராண்டு காலம் பாரத பூமியில் யாத்திரை செய்து அப்போது அமரிக்காவுக்குத் திரும்பிய ஸ்ரீமதி புல் 1899-ம் ௵ மார்ச்சு ௴ 31௳ நடைபெற்ற வேதாந்த சபை விழாவில் தனது இந்து தேச யாத்திரையைக் குறித்து சபையோருள்ளத்தைக் கவர்ந்து பேசினாள். ஹிந்து பதிவ்ரதா ஸ்திரீ ரத்னங்கள் தன்னை அன்புடன் அழைத்து உபசரித்ததைக் காணத் தான் புளகாங்கித மெய்தி, தன்னை யறியா வண்ணம் ஆனந்தக் கண்ணீர் பெய்ததாக விளங்க உரைத்து, 'அந்தப் பரிசுத்த ஹிருதய முடைய மக்களிடத்தில் ஒரு வருட காலம் பழக நேர்ந்தது எனது முன் ஜன்மத் தவப்பயனே! ஆகா! என்ன தூய்மை! உண்மை! மெய்மை! வாய்மை! என்ன ஒழுக்கம்! அடக்கம்! அமைதி! அவர்களுடைய முகத்தைப் பார்த்தாலே பசி தீரும், மனத்திலுள்ள மாசு நீங்கும்; அகத்தேயுள்ள அறியாமை அகலும்; மனத்தினிடமுள்ள பற்று அறும்'' என்று கேட்டோருள்ளத்தைக் கனிய வைத்தார் அப் புல் லென்னும் அருந்தவச் செல்வி.

அபேதானந்தருக்குச் சென்ற விடமெல்லாம் சிறப்பு.

ஈஸ்டர் ஞாயிறன்று சுவாமி அபேதானந்தர் நால்வரை பிரம்மசாரிகளாக ஏற்று உபதேசமளித்தார். கோடையில் வூர்செஸ்டர் (Worecester) பாஸ்டன், கேம்பிரிட்ஜ் நியூ இங்கிலாந்து முனைகள் முதலிய பிரதேசங்களில் சஞ்சரித்தார்.

அபேதானந்தருக்கு உபசாரப் பத்திரங்கள்.

தூய அபேதானந்த னெனும் பெயர்கொண்
டொளிர்தரு மிச்சுத்தஞானி
நேயமுட னிந்நகரிற் றிருப்பாதஞ் சாத்தியரு
ணெஞ்சிற் கொண்டு
மாயமெலா நீங்கியினி தெம்மவர்நன் னெறிசாரும்
வண்ணம் ஞானந்

தோயநனி பொழிந்திடுமோர் முகில்போன்றன் இவன்பதங்கள்
துதிக்கின் றோமே. (பாரதி)

என்று மேற்கூறிய நகரவாசிகள் அவரை வரவேற்று ஸ்வாகதப் பத்திரங்க ளளித்தனர். நூதன கற்பன நுண்ணறிவினர் மிஸ்டர். எடிஸன், பிரசித்த நடிகர் ஜோசப் ஜபர்சன், நவீன ஆசிரியர் வில்லியம் டியன் ஹூாவல்ஸ் முதலியவர்களைக் கண்டு அவர்களோடு உறவாடினார் அபேதானந்த அருந்தவர். கார்நெல் அயோவா, ஏல் சர்வ கலாசாலை வித்வான்களையும் சந்தித்தார். ஊர்ஸெஸ்டர் வாசிகள் அவருடைய இரண்டு பிரசங்கங்களை சிரவணஞ் செய்து திருப்தியடையாராய் பின்னும் பல உபந்நியாசங்கள் நிகழ்த்த வேண்டினர். ஆனால், அவர் வெவ்வேறிடங்கட்கு வருவதாய் வாக்களித்திருந்தமையால் அவ்வாறு செய்ய இயலவில்லை. அவ்விட மகன்று, சுவாமிஜி ஏப்ரல் மாதம் 25-ம்தேதி லைன் (Lynn) நகர நார்த் ஷோர் கிளப்பில் வேதாந்தத்தைப் பற்றியும், வால்டாமில் ஹிந்து மதத்தைப்பற்றியும் பேசிய பின், 27-ம் தேதி கேம்பிரிட்ஜ் குருதத்துவ ஆட்சிப் பாரமார்த்திகக் கழகத்தில் 'சமய தத்துவப் பரிசோதனை' என்றும், 30-ம் நாள் கேம்பிரிட்ஜ் ஆலோசனை சபையின் ஆதரவில் 'புராதன ஹிந்து தத்துவ சாஸ்திரங்கள்' என்றும் உபந்நியாசித்தார். இந்த கோடை யாத்திரையால் வேதாந்த இயக்கம் ஐக்கிய மாகாணத்தின் நகரங்கள் எல்லாவற்றிலும் விசேஷ விருத்தி யடைந்தது.

சுவாமி அபயானந்தா என்ற புனிதப் பெயர் தாங்கிய மாதரசி புரிந்த சேவை பாராட்டற் பாலதாகும். அவரிடம் மேல் நாட்டுத் தத்துவ நூற்புலமையும், சாதுரியமாகப் பேசும் சமத்காரமும் ஒன்று கூடிப் பொலிந்தமையால் அவருடைய வேதாந்த ஊழியத்தால் விசேஷமான பலன் விளைவதாயிற்று. 1895ஹு ஜூலை மாதத்தில் சகஸ்ரதீபத்தில் அவ்வம்மை விவேகானந்த சுவாமிகளிடம் சமய சந்நியாச தீக்ஷை ஏற்றவர். இரண்டாண்டுகள் ஓயாமல் ஒவ்வொரு நகராகச் சென்று வேதாந்த சேவை செய்து, கடைசியாக 1897 - ம் ஆண்டு மார்ச்சுமாதத்தில் அவ்வன்னை சிகாகோவிற்கு மீண்டார். நான்கு வாரங்கட்குள் அநேக ஆயிரம் கல்விமான்களும், பெண்ணரசிகளும் இப்புனிதையைச் சூழ்ந்து கொண்டு சாஸ்வதமாக அங்கேயே வசிக்குமாறு அன்பால் பலவந்தப் படுத்தத் தொடங்கினார்கள். அச்சொற்ப காலத்திற்குள் அவ்வம்மை

அமெரிக்கா நாட்டு சிஷ்யை அபயானந்தா.

யின் உபந்நியாசங்களைக் கேட்டாருள், நூற்றுக் கணக்கானவர்கள் தத்தம் நிலைக்கேற்ப, பிரம்மச்சரிய, வானப்பிரஸ்த, சந்நியாச ஆச்சிரமங்களைப் பூண்டு அதற்குப் பொருந்திய கர்மாக்களை யேற்று ஒழுகலாயினர். இதனின்றும் அவரது சேவையின் மேன்மை நன்கு ஊகித்தறியப்படும்.

இவ்விதம், விவேகானந்த சுவாமிக ளிட்ட விதை, அன்பென்னும் தண்ணீரால், உழைப்பென்னும் உரத்தால், செடியாகி மரமாகி கிளைகள் வளர்ந்து உயர்ந்து பூத்துக் காய்த்துப் பழுத்து விதையுதிர்ந்து, மேலும் பல விருக்ஷங்களை உற்பவிக்கச் செய்யும் வித்தூன்றி, வியாபிக்கப் பெற்று 'பிரசார வேலை' யின் பெரும் பயனும் கைகூடிற்று.

கைங்கரிய வேலை.

பரிதாபகரமான நிலையில் உண்ண உணவும் உடுக்க உடையும் இருக்க நிழலுமற்று, பஞ்சத்தால் நலிந்து படுபட்டினியாய் இரந்தும் இறந்தும், நோய்வாய்ப் பட்டும் அல்லற்படும் மக்களை ஆதரித்த ஸ்ரீராம கிருஷ்ண மடத்தைச் சார்ந்த துறவிகளின் கைங்கரியத்திறனை நாம் எங்ஙனம் விளக்காமற் செல்வது? அந்த சாதுக்கள், ஏழைகள் ஆகார மின்மையால் உடம்பு துரும்பாய் இளைத்துக் குஞ்சு குழந்தைகளோடு குடிக்கவும் தண்ணீர் கிடைக்காமல், 'தெய்வமே' என்று கதறியதைக் கண்டு, அப்படியே உள்ளங் கனிந்து தமது கண்ணீரால் ஆங்காங்கு ஓர் தடாகத்தை உண்டுபண்ணி விட்டார்கள். இவ்விதம், க்ஷாமத்தில் அகப்பட்டுக் கொண்டு தத்தளிக்கும் மக்களை நோய்களும் வாட்டத் தொடங்கின. "இவர்களுக்கு நமது தேகத்தை அர்ப்பணஞ் செய்யாமல், என்ன வேதாந்தம் படித்து, எந்த ஈஸ்வரனை யடையப் போகின்றோம் நாம்" என்று சேவையில் அவர்கள் செம்மையாய் இறங்கி விட்டார்கள். இங்ஙனம், அவர்கள் தீவிரமாக வேலை செய்யத் தொடங்கியது முதல் முதலாக வங்காளத்திற்றான். 1897 - ல் ஸ்தாபிக்கப்பட்ட ஸ்ரீராம கிருஷ்ண மடத்தின் முக்கிய நோக்கமும் இதுவே.

விவேகானந்த சுவாமிகள் அமெரிக்காவுக்குப் புறப்படும் தினத்தன்று மாலையில், துர்ப்பாக்கியர்க ளிடத்திலும் ஏழைகளிடத்திலும் பரமகாருண்ய முடையவராய் அபுகிரியில் தமதிரு குருபாய்க ளிடத்தில் எவ்விதம் பேசினாரென்பதை முன்போரிடத்திற் கூறினோம். அவ்

வசனங்கள் அகண்டானந்த சுவாமிகளின் மனதைப் பரவசப் படுத்தி விட்டன. கொஞ்சநாட்களுக்குப் பின், அவர் பிணியுற்றுச் சிகிச்சை நிமித்தம் க்ஷேத்திரத்திற்குச் சென்று அம்மன்னரின் உத்தமப் பராமரிப்பில் ஆறு மாதங்கள் வரை இருந்தார். அப்பொழுது அவர் க்ஷேத்ரி சமஸ்தானத்தின் குக்கிராமங்களில் சுற்றி வரும்பொழுது கண் கூடாகப் பாமர ஜனங்களின் பரிதாப நிலையினைக் காண்பாராகி மனமிரங்கி, குருதேவரின் திவ்ய நாமங்களை ஸ்மரித்து, குருவின் திருவருளைத் துணைகொண்டு உழைக்கவாரம்பித்தார். பொது மக்களின் இவ்வளவு துக்ககரமான ஸ்திதிக்குக்காரணம் 'கல்வி' யின்மை யென்று அவருக்குப் பட்டது. அக்காலத்தில் க்ஷேத்ரியில் ஓரே ஒரு கலாசாலை (ஹைஸ்கூல்) மட்டுமிருந்தது. அதில் எட்டு மாணவர்களும் 'தடி எடுத்தவன் தண்டல்காரன்' என்னும் பழமொழிக் கேற்பச் சில உபாத்தியாயர்களு மிருந்தார்கள். அது முதல் அவர் ஒவ்வொரு வீடாகச் சென்று தத்தம் குழந்தைகளைப் பள்ளிக்கூடங்களுக் கனுப்புமாறு பெற்றோர்களுடன் மன்றாடி வம்பிட்டு வந்தார். இராஜபுதனத்தின் மற்றைய சமஸ்தானங்களைப் போலவே க்ஷேத்ரியிலும் ஐந்நூறு 'சீலர்கள்' (Chelas) என்னும் அடிமையாக்கப்பட்ட குடியின ரிருந்தார்கள். அவர்கள் கேவலம் படியரிசி மடிப்பிச்சை முதலியவற்றிற்கு மன்னர்களின் ஏவல் வழி அடிமைவேலை செய்து கொண்டிருப்பவர்கள்.

க்ஷேத்ரி சமஸ்தானத்தில் அகண்டானந்த சுவாமிகளின் சேவை.

அவ்வமயம் ஓர் இருபது 'தாஸ்' பிள்ளைகள் ராஜக் கிருகத்தில் ஊழியம் செய்துகொண் டிருந்தார்கள். இவர்களை அரசர் அனுமதியுடன் சம்பள மில்லாது பள்ளிக்கூடத்தில் சேர்ப்பது பகீரதப் பிரயத்தனமாய் விட்டது. "இவ்விருபது பிள்ளைகளையும் வித்யாசாலைக் கனுப்பினால் 'எங்கு சோற்றுப்பை கிழிந்துவிடுமோ, அரசர் பகை ஆகாதே!'" என்று பெற்றோர்கள் பயந்தார்கள். அகண்டானந்தர் இதற்கெல்லாம் ஈடுகொடுத்து மன்னரின் படி யரிசி நிற்காமற் செய்து, 257 மாணவர்களைச் சேர்த்தார்; தகுதியற்ற உபாத்தியாயர்களையெல்லாம் அனுப்பிவிட்டு நல்லாசிரியர்களை நியமித்தார். இப்படி இவருடைய வித்யா கைங்கரியம் க்ஷேத்ரி நகரோடு நில்லாமல், சுற்றுப்புற கிராமங்களிலும் வியாபிக்கலாயிற்று. அகண்டானந்தர் ஒவ்வொரு கிராமத்திற்குஞ் சென்று அம்மக்கள் புத்திக்குப் படும்படி கல்வியின் அவசியத்தை உணர்த்தி, ஆங்காங்கு ஓர் ஆரம்ப இலவசப்

பாடசாலையை நிறுவினர். அப்பால் விவேகானந்த சுவாமிகளின் கருத்திற் கிணங்க, க்ஷேத்ரி மன்னர் ஆண்டுதோறும் வித்யாபிவிருத்திக்கென்று ஒரு தொகையைத் தமது நிலவரி வருமானத்தி லிருந்து அளித்து வந்தார். க்ஷேத்ரியிலிருந்த சம்ஸ்கிருத பாடசாலை அகண்டானந்தரின் முயற்சியால் வேத பாடசாலையாக மாற்றப்பட்டு, யஜுர் வேத பாராயணம் ஆரம்பிக்கப் பெற்றது. அகண்டானந்தர் முந்நூறு ரூபாய்வரை நன்கொடை வசூலித்து வேத புத்தகங்களைத் தருவித்து அவ்வித்தியார்த்திகளுக்கு வழங்கினர்.

பின்பு 1895 - ம் வருடத்தில் அவர் உதயபுரி சமஸ்தானத்திலுள்ள நத்வாரம் (Nathdwar) என்னு மூருக் கேகிய பொழுது, அங்கு ஓர் கல்விச் சாலையை ஸ்தாபித்தார். ஆழ்வார் சமஸ்தானத்திலும் அவரது பேருழைப்பின் பயனாக அநேக வித்யாசாலைகள் தோன்றின. அகண்டானந்தர் ஏழைகளிடத்தில் உண்மையான இரக்க முடையவர்; அவருக்கு அவ்வித அனுதாபமிருப்பதை யறிந்த ஏழைகள், கூசாமல் தத்தம் குறைகளை அவரிடம் முறையிட்டுக் கொள்வார்கள். அவர் க்ஷேத்ரியிலிருந்தபோது ஒரு சமயம் சம்வத்ஸர தர்பார் விழா கொண்டாடப் பெற்றது. அன்று மன்னர் பவனிவரும் மாட்சியைக் கண்டு களிக்க ஏழை ஜனங்கள் எவ்வளவோ ஆவலுடன் வர, அவர்களை நெட்டித் தள்ளியும் புண்படப் பேசியும், பாராச் சேவகர்கள் அவமானப்படுத்தி வருவதைக் கண்ட அகண்டானந்தர், தமது விசால ஹிருதயம் உருக, நேராக அவ்வேந்தரிடஞ் சென்று, "எவ்வளவோ உள்ளன்புடன் தமக்குப் பாதக்காணிக்கை செலுத்தி விட்டு, தாங்கள் கொலுவீற்றிருக்கும் வைபவத்தைக் கண்டு நேத்ரானந்தமடையவேண்டி பல காத தூரத்திலிருந்து வந்திருக்கும் ஏழைப் பிரஜைகளை, அதோ! தங்கள் சிப்பாய்கள் தமது வீரத்தை அவர்களிடம் பிரயோகித்து ஆடுமாடுகளைப்போல அடித்து விரட்டுகிறார்கள். காணிக்கை சமர்ப்பித்த அவர்கள் தம்மைத் தரிசிக்கும் பாக்யத்தையும் அடையலாகாதா?" என்று இளகப் பேசினர். அதுமுதல் சகல ஜனங்களும் தர்பார் தினத்தன்று தாமே நேரில் ராஜ சமூகத்திற்கு வந்து பாதக்காணிக்கை சமர்ப்பித்து விட்டுப் போகலாமென்ற விதியேற்பட்டது. சிப்பாய்களும் கண்டிக்கப்பட்டார்கள். இவ்விஷயத்தை, பின்னர் நடந்த ஓர் தர்பார் பண்டிகை தினத்தன்று, விவேகானந்த சுவாமிகள் அங்கு சென்றிருந்தபோது, க்ஷேத்ரி மகாராஜா சுவாமிகளிடம் கூறி, அகண்டானந்தரைப் புகழ்ந்தார்.

துரைத்தனத்தார் புகழவும் ஏழைகள் ஏத்தவும், வித்வான்கள் வாழ்த்தவும் சுவாமி அகண்டானந்தர் மூர்ஷிதாபாத்தில் பஞ்சநிவாரணார்த்தமாக மேற்கொண்ட பரிசிரமத்தைப்பற்றி முன்போரிடத்திற் குறிப்பிட்டுள்ளோம். அப்பிரதேசத்தில் சுற்றி உழைத்த காலங்களில் அவர் அனாதையான குழந்தைகள் படும் அல்லலைக் கண்டு மனம் சகியாதவராய் ஓர் அனாதாரக்ஷண சாலையை ஸ்தாபிக்க உத்தேசித்து முதலில் 1897-ம் ஆண்டு ஆகஸ்டுமீ இரண்டு பிள்ளைகளுடன் அதை மொகுலாவில் ஆரம்பித்தார். 1899-ம் ஆண்டின் தொடக்கத்தில் இந்த அனாதரக்ஷணசாலை சர்கசிக்கு (Sargachi) மாற்றப்பட்டது. மூர்ஷிதாபத் ஜில்லாத்தலைவர் இவ்வனாத சிசுரக்ஷணார்த்தமாகச் சுவாமிஜிக்கு வேண்டிய உதவி புரிந்தார். அதன் பின் மூன்று ஆதரவற்ற குழந்தைகள் வந்து சேர்ந்தார்கள். கூர்க்கச் சிறுவர்கள் நால்வரும், உள்ளூரில் இருவரும் வந்து ஆதரவு பெற்றார்கள். இவ்விதம் சிறுகச்சிறுக மாணவர்களின் தொகை அதிகரித்து வந்தது. அவர்களுக்கு அன்னையும் பிதாவும் ஆசானுமாகி இலங்கினர் அகண்டானந்தர்; அவ்வனாதைகளான சிறுவர்களை நன்னெறியில் பழக்கினர். கழகத்தில் காணுதற்குரிய புத்தகாலயம், சாஸ்திரீய ரஸாயன தர்மசாலை ஆகிய அனைத்தையும் அப்பள்ளிக்கூடத்திற்குச் சம்பாதித்துவைத்தார்; மெல்ல மெல்ல தொழிற்கல்வி போதிக்கவும் ஏற்பாடுசெய்தார். அச்சாரதாதேவியின் சந்நிதியில் சமத்வதர்மத்தை ஸ்தாபிக்க இரண்டு முகம்மதிய கதியற்ற சிறுவர்களையுஞ் சேர்த்து வழி காட்டினர். தனது தேகசுகத்தைப் பாராட்டாது, உழைப்பையே உற்று நோக்கி, மறந்து மாறுனசொற்களைக் கனவிலும், சிந்தையிலும் செய்கையிலும் வாக்கிலுங்கொள்ளாது, நோயாளியோடு நோயாளியாய், குழந்தையோடு குழந்தையாய் சேவைவழி நின்று காட்டிய அகண்டானந்தருடைய தொண்டின் பெருமையை எளியேனும் எழுதும் தகுதியுடையேனோ? விவேகானந்த சுவாமிகள் லோகோபகாரார்த்தமாக எளியாருக்கென்றே தமது வாழ்நாட்களை அர்ப்பணஞ் செய்யவேண்டுமென்ற சங்கற்பஞ் செய்திருந்தாரென்றால், அதனை முதலில் அனுஷ்டித்துப் பிறகு வழிகாட்டியா யிருந்தவர் அகண்டானந்தரே என்பது முக்காலும் திண்ணம்.

மூர்ஷிதாபாத்தில் அகண்டானந்தரின் வித்யாகைங்கரியம்.

மூர்ஷிதாபாத்தில் நடைபெற்றதுபோலவே மற்ஞெரு க்ஷாமநிவாரண சேவை 1897-ம் ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் தினஜ்பூரில்

(Dinajpur), சுவாமி திரிகுணாதீதரால் ஆரம்பமாயிற்று. கால்வயிற்றிற்குக் கஞ்சியுங் கிடைக்காமல் பட்டினியாய் அனுதினமும் நூற்றுக் கணக்கான ஜனங்கள் இறந்துகொண்டிருந்த அம்மாகாணத்தில், இரண்டுமாத காலத்திற்குள் திரிகுணாதீதர் எண்பத்தி நான்கு கிராமங்களுக்கு உதவி புரிந்தார். துரைத்தனத்தார் அவருடைய சேவையை வியந்து மெச்சி, மிக்கக் குறைந்த விலைக்கு அரிசியை வாங்கி வழங்க அகண்டானந்தருக் களித்த உத்தரவை இவர் பாலும் வழங்கினர்; மேலும், அவருடைய ஊழியத்தைப் போற்றித் தமது ராஜரீக 'கெஜட்டில்' பாராட்டி எழுதினர். இப்படி இரவும் பகலும் பாடுபட்டதன் பயனால் துர்பிக்ஷம் ஓர் வகையாக நீங்க, 1897-ம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் சுவாமி திரிகுணாதீதரின் சேவையைப் பாராட்டி உபசாரப் பத்திரமளிக்க, ஓர் பொது ஜனக்கூட்டம், மிஸ்டர். என். போன்ஹாம் கார்டர் என்னும் அஜ்ஜில்லா கலெக்டரவர்கள் தலைமையில் நடைபெற்றது. அவைத் தலைவர் குண ஆதித்யன் என்று சுவாமிஜியை வெகுவாய்த் துதித்தார். ஆதித்யன் போல திரிகுணாதீதர் எழுந்து இரண்டு மணி நேரம் சேவையின் செம்மையை விளக்கினர்; பஞ்சகாலத்தில் பாடுபடவேண்டிய வழியை தெற்றென உணர்த்தினர். அங்கு கூடியிருந்தா ரனைவரும் திரிகுணாதீதரின் சொற்பொழிவைக் கேட்டு ஆனந்தக் கண்ணீர் பெருக்கிப் பரவசரானார்கள்.

தினஜ்பூரில்
திரிகுணாதீதர்

மற்றும், வேறொரு க்ஷாம நிவாரண கைங்கர்யம் டியோகூர் (Deoghur) என்னும் ஊரில் சுவாமி விரஜானந்தரால் மேற்குறிப்பிட்ட காலத்திலேயே நன்கு நடைபெற்றது. ஒரு வாரத்திற்குள் விரஜானந்த சுவாமிகள், முதியவரும், பெண்டிரும் சிசுக்களும் சிறுவர்களுமாக இருநூற்றைம்பது பேர்களை ரக்ஷித்தார் என்று, அக்டோபர் 22-தேதிய அறிக்கையும், பன்னூற்றுவரைப் பட்டினி யென்னும் துஷ்ட தேவதையிட மிருந்து விடுவித்து ஆடை நல்கினர் என்று நவம்பர்மாத 29-தேதிய அறிக்கையும் வரையறுத் துரைக்கின்றன. மிஸ்டர். ஹெச். ஹெச். ஹெர்ட் என்னும் அச்சில்லா அதிகாரி, சுவாமிகளிடத்து மிக்க அன்பும் மரியாதையு முடையவராய் அவருக்குத் தேவையான உதவிக ளனைத்தையும் புரிந்தார்.

டியோகூரில்
விரஜானந்தர்

1898-ம் வருடம் மேமாதத்தில் கல்கத்தாவில் பிளேக் நோய் பரவி, பலரைப் பரிதாபகரமாகப் பறிகொண்டு நகரத்தை அல்லோல கல்லோ

லப்படுத்தி, சிதறவடித்து, சின்னாபின்னப்படுத்தி நரிகள் ஊளையிடும் நன் காட்டிற் கொப்பாக்கிற்று. அப்போது விவேகானந்த சுவாமிகளே நேரிற் செய்த க்ஷாம நிவர்த்தி கைங்கர்யம் முன்னரே கூறப்பெற்றது. வேகின்ற வீட்டில் பிடுங்கினவரை லாபமென்று சிதறிய வீடுகளில் பலர் கொள்ளையடிக்கவும் மாதரைக் கற்பழிக்கவுங்கூட முற்படலாயினர். இதனால், ஆயுதப் பிரயோகமும் கலகமும் விளையும் போலிருந்தது. சம்பத்துடையவர்களெல்லாம், நகரத்தில் பிளேக் தலை காட்டியதும், தம்மைச் சுற்றிலுமுள்ள ஏழைச் சகோதரமக்களைக் கைவிட்டு நகரத்தின் சுற்றுப்புறங்களிலுள்ள தத்தம் பங்களாக்களுக்குக் குடிபோய்விட்டார்கள். அப்போது, இதையெல்லாம் கண்ணுற்ற விவேகானந்த மூர்த்தி தாம் புதிதாக சாஸனம் வாங்கியுள்ள ஆஸ்ரமப் பிரதேசத்தை விற்று, தரித்திர நாராயணர்களைக் காப்பாற்ற எழுந்த எண்ணத்தை முன்பு வரைந்தோம்.

கல்கத்தாவில் 'பிளேக்' என்னும் நோய்

அடுத்த வருடத்தில் மறுபடியும் கல்கத்தாவில் 'பிளேக்' வந்துவிட்டது. ஆனால் அப்பொழுது சுவாமிகள் அதை முன்போல அவ்வளவு பெரிதாக மதிக்கவில்லை. ஏனெனில் கண்ணப்பர் இறைவனின் திருக்கண்ணில், முதலில் இரத்தம் பெருகும்போதுதானே மருந்து தெரியாமல் மருண்டார். அப்பால் அடுத்தகண்ணில் இரத்தம் வெளிப்பட்டபோது மருந்து கண்டு கொண்டாரன்றோ? 1899-ம்வரு மார்ச்சு மீ 31உ பிளேக் நிவர்த்தி சேவாஸ்ரமம் கூட்டப்பெற்று அலுவல்கள் வகுக்கப்பெற்று, அன்பர்கள் வேளியேகி ஆங்காங்கு, உழைக்க லுற்றார்கள். சுவாமிகள் தாமே ஏழைகளின் வீடு தோறுஞ் சென்று அவர்களைத் தேற்றுவதும், தொண்டர்களை உற்சாகப் படுத்துவதுமாக விருந்தார். சகோதரி நிவேதிதாதேவி இவ்வியக்கத்தின் தலைமை பூண்டு விளங்கினார். சுவாமி சதானந்தர் தொண்டர்ப் படையின் தலைவரானார். சுவாமி சிவானந்தா, நித்யானந்தா, ஆத்மானந்தா முதலானவர்கள் ஒத்துழைத்து வந்தார்கள்; தோட்டி வேலை முதல் அனைத்தையும் அவர்கள் தாமே செய்தார்கள். சகோதரி நிவேதிதாதேவி "பிளேக்கும் மாணவர்கள் கடனும்" என்பது பற்றி சுவாமிகள் அக்கிராசனத்தில் 'கிளாஸிக் தியேட்டரி'ல் ஏப்ரல்மீ 21-ம்தேதி செய்த பிரசங்கத்தின் பயனாக ஓர் சாஸ்வத மாணவத்தொண்டரியக்கத்தை

விவேகானந்த சுவாமிகள் பிளேக் நிவாரண வேலையில் இறங்குதல்

உண்டாக்கி விட்டாள். அப்பிரசங்கம் நடைபெற்ற சமயத்திலேயே பதினைந்து மாணவர்கள் தொண்டுபுரிய ஆயத்தமானார்கள். அவர்கள் அதுமுதல் வீடு வீடாய்ச் சென்று கஷ்டப்படும் மக்களைத் தேற்று வதும், உணவு, ஆடை, போர்வை, ஔடதம் முதலியன வழங்கு வதும், சுகாதார விதிகளைப் போதிப்பதுமாக உழைத்து, ஒவ்வொரு நாளும் மாலையில் மடத்திற்கு வந்து, சகோதரியிடம் தாம் செய்த வேலை யின்னதென்று கூறி, மேற்கொள்ள வேண்டிய கார்யங்களை முறைப்படுத்திக்கொண்டு விரைந்தேகுவர்.

சுவாமிகள் மேற்றேய யாத்திரையினின்றும் திரும்பியபின் சமய சம்பந்தமான விழாக்களை நிகழ்த்துவதில் மிக்க ஊக்கங்கொண் டார்; ஸ்ரீராம கிருஷ்ண தேவரின் ஜன்மதினக் கொண்டாட்டத்தை அநேகமாய் கிளை மடங்களுள்ள எல்லா நகரங்களிலும் மிக்கப் பிரபல மாக நடத்த ஏற்பாடு செய்தார். அவர் ஆக்ஞைப்படியே மேற்படி விழா நாளிதுவரை நிகழ்ந்து வருகின்றது. அன்று ஆயிரக்கணக் கான ஏழைகட்கு அன்னமளிக்கப்படுகின்றது. தானங்களுள் அன்ன தானமே பெரிதென்று அரும்மறைக ளோதுகின்றன வல்லவா? அத னாற்றானே பாரதநாட்டில் அறச்சாலைகள் எங்கும் அதிகம்!

பரம ஞான மூர்த்தியும் கருணைத் தடங்கலுமான சுவாமிகளின் திவ்யானுக்கிரகத்தால் இரண்டரை ஆண்டுகளில் நடைபெற்று வந்த கைங்கர்யப் பிரபாவத்தை, இயன்றவரை சுருக்கிக் கூறினோம். அதனா லேற்பட்ட க்ஷேமகார்யங்களைப் புகழவோ, அல்லது மதித்துரைக் கவோ நாம் முன்வரின் நம்மைப்போன்ற சர்வ முட்டாள் வேறு யார்? பகவதார்ப்பணமாக சர்வ ஜீவராசிகளிடத்தும் அந்தராத்மாவாய் விளங்கும் திவ்ய தேஜோ மூர்த்தியின் அருளால் இவை இடையூ றின்றி இன்னும் நடைபெற்று வருகின்றன. இச்சேவையின் வெற் றிக்கு சந்நியாசிகளின் தன்னலமற்ற உழைப்பே காரணமாகும். அதனை மெச்சி ஆங்காங்குள்ள பூமான்கள் புரிந்த பொருளுதவியும் பிறவும் பின்னும் காரணமாவன. அக்கொடிய பஞ்சங்களில் எளியோர் பட்ட பாட்டையும் 'ஐயோ' என்ற அவர்களது அழுகுரலையும் கேட்டதி லிருந்து சுவாமிகளின் சித்தமும் நோக்கங்களும் மாறுபட்டன. அவர் பூண்ட போன்பின் பெருமிதத்தை விளக்கக்கூடிய நிகழ்ச்சிகள் பல விருப்பினும் அவற்றுள் இரண்டினை மட்டும் இங்கு கூறுவோம்.

ஒரு சமயம், 'ஹிதவாதி' என்னும் பத்திரிகாசிரியரான பண்டித சகாராம் கோனேஷ் தூஷ்கர் இரண்டு நேயர்களுடன் சுவாமிகளைத் தரி

சிக்க வந்தார். க்ஷேமம் விசாரிக்கும்போது அம்மூவருள் ஒருவர் பாஞ்சாலநாட்டு வாசி யென்று தெரிந்துகொண்ட சுவாமிகள், பாஞ்சால தேசத்தின் அத்யாவஸ்யமான தேவைகளைக் குறித்தும், பஞ்ச நிவர்த்தியைப் பற்றியும், எளியோர் துயரங்களைப் போக்கக் கூடிய சுலபமான மார்க்கங்களைக் குறித்தும் அவருடன் சம்பாஷிக்க லுற்றார். இவ்வாறு அவர்கள் கலந்து பேசியபின், வந்த அவர்கள் புறப்படுந் தருவாயில் சகாராம், சுவாமிகளை நோக்கி "சுவாமிஜீ! மத சம்பந்தமாய் பரமோத்தமமான தேவரீருடைய உபதேசங்களைக் கேட்டுச் செவிமடுப்ப யாங்கள் வந்தோம். எங்கள் துரதிர்ஷ்ட வசமாய் விஷயங்கள் இன்று ஏதோ சாமான்ய ஜனங்களைப் பற்றியதாய் மாறி விட்டது. இவ்வளவு நேரம் வீணாய் வியர்த்தமாய்ப் போயிற்று" என்றியம்பினர். அவர் இது கூறியதும் சுவாமிகள் மனமாழ்ந்து மௌனமாய் சிறிது நேரமிருந்து, பின் சகாராம் அவர்களைப் பார்த்து.

சுவாமிகளின் வாக்கு: "நாயும் பட்டினி கிடக்க நான் சகியேன்"

"அன்பரே! எனது ஜன்ம பூமியில் ஒரு நாயுங்கூடப் பட்டினி கிடக்க நான் சகியேன். அதற்கும் உணவளித்து ரக்ஷிப்பதே எனது மதம். அதைத் தவிர மற்றவை யெல்லாம் மூடமதம்; வேஷதாரிகள் நடிக்கும் மதம்."

என்று சாற்றினர். இவ்வசனங்கள் சகாராம் அவர்களின் ஹிருதயத்திலுள்ள ஜீவகாருண்யத்தைக் கிண்டி விட்டது. அவர் இதுவே ஒரு பெரிய உபதேச மென்றெண்ணினர்.

பின்னொரு சமயம், மேல் வங்காள பண்டித ரொருவர் சுவாமிகளிடம் வேதாந்த விஷயமாய்த் தர்க்கிக்க வந்து சேர்ந்தார். அப்பொழுது, சுவாமிகள் பஞ்ச நிவர்த்தி விஷயமாய் ஆலோசித்துக் கொண்டிருந்தார். பண்டிதர் வந்து மெல்ல தமது தருக்க மூட்டையை அவிழ்க்கவும் சுவாமிகள் "பண்டிட்ஜீ! முதலில், படு பட்டினியாய் பஞ்சத்தி லடிபட்டுப் பரிதபிக்கும் கோடானு கோடி ஜனங்களின் கஷ்ட நிவர்த்திக்காக தேவரீர் அரிசிப்பிச்சை யெடுத்து, எனது தரித்திர நாராயணரின் குக்ஷிகளைச் சாந்தி செய்து விட்டு பிறகு வாருங்கள், வேதாந்தம் பேசலாம் விடியவிடிய. பட்டினியால் பரிதபித்துக் கொண்டிருக்கும் மக்களைக் காப்பாற்ற வாழ்நாள் முழுமையும் தியாகம் செய்

பண்டிட்ஜிக்குப் பாங்கான மொழி.

வதே - வேதாந்த மதத்தின் சாரம்'' எனலும், அப்பண்டிதர் ஏதும் பேசாமல் வந்த வழியே திரும்பி விட்டார். ஸ்ரீராம கிருஷ்ணாது சிஷ்ய கோடிகளின் சேவையால், "அகில மெங்கும் விளைந்த அரும் பயன்'' எத்திறத்த தென்பது ஒருவாறு இவ்வத்தியாயத்தில் விளக்கப்பட்டது.

51-ம் அத்தியாயம்.

மேல்நாட்டிற் கெழுந்தருளிய மேன்மை.

சுவாமிகள் கல்கத்தாவினின்றும் மேல் நாட்டிற்குப் புறப்படல்.

எல்லா வசதிகளும் பொருந்திய 'கோல்கொண்டா' என்னும் புகைக் கலத்தில் சுவாமிகள் 1899 - ம் ஆண்டு ஜூன்மீ 20 - ம் தேதி மேல் நாட்டிற்குப் பிரயாணமானர். அம்மாதம் இருபத்து நான்காம் தேதி யன்று கப்பல் சென்னையை யடைந்தது. சென்னை வாசிகள் அவர் கல்கத்தாவிலிருந்து புறப்பட்டதையும், சென்னைக்கு வரும் தேதியையும் கல்கத்தா அன்பர்கள் மூலமாக வந்த தந்தியிலிருந்து அறிந்து, நகரை அலங்கரிக்கவும், சுவாமிகளை விமரிசையாக வரவேற்கவும் பரபரப்புடன் ஏற்பாடு செய்தார்கள். அந்நாட்களில் கல்கத்தாவில் 'பிளேக்' பரவியிருந்தமையால், அக்கப்பலில் வந்துள்ள பிரயாணிகள் இறங்கி நகருக்குள் வர சுகாதார இலாகா அதிகாரிகள் அனுமதி யளிக்கவில்லை. இந்த எதிர் பாராத விக்னத்தால் சென்னை வாசிகள் ஆற்றெணுத் துயரடைந்து வருந்தினர். பல பிரமுகர்கள் கனம். பி. அனந்தாசார்லு அவர்களின் தலைமையில் 'காசில் கர்ணன்' மாளிகையில் ஓர் கார்ய கமிட்டி கூட்டம் கூட்டி சுவாமிகளை மட்டும் சிலமணி நேரமாவது தம்மிடையே வீற்றிருக்க அனுமதி யளிக்கும்படி அரசாங்கத்தாருக்கு விண்ணப்பித்துக் கொண்டார்கள் அதற்கு யுக்தமான விடை யொன்றும் கிடைக்காமையால், சுவாமிகள் இறங்க இயலவில்லை.

சுவாமிகளுடைய பழைய நண்பர்களும் சிஷ்யர்களுமான அழகசிங்கப் பெருமாள், பிலிகிரி ஐயங்கார், ஜி. ஜி. நரசிம்மாசார்யா, டாக்டர் நஞ்சுண்ட ராவ், சிங்காரவேலு முதலியார், ஸ்யாமளய்யர், சுவாமி இராம கிருஷ்ணனந்தர் முதலிய பக்த சிரோன்மணிகள் புஷ்ப பல வகைகளுடன் பூரண கும்பத்தோடு படகுகளில் புறப்பட்டுச் சுவாமி

களை உபசரிக்கச் சென்றூர்கள். அழகிய சிங்கப் பெருமாள் என்னும் தமிழ் நாட்டுப் பெருந்தகை 'பிரம்ம வாதினி' பத்திரிகையின் சில சீர்திருத்தங்களைப் பற்றிச் சுவாமிகளின் அபிப்பிராயத்தை யறிய விரும்பினராதலின், அவர் மட்டும் சுவாமிகளோடு கொழும்புவுக்கு ஒரு டிக்கட் வாங்கிக் கொண்டு கப்பலேறினர். அன்று மாலையில் கப்பல் புறப்படுந் தருவாயில் கடற்கரையில் நின்ற வண்ணம் சென்னை வாசிகள் எல்லோரும், "விவேகானந்த மூர்த்திக்கு ஜே" என்று கோஷித்தனர். கடலில் கொந்தளிப்பு அதிகமா யிருந்தமையால் கப்பல் கொழும்புவை யடைய நான்கு தினங்களாயின. சுவாமிகள் கொழும்புவில் வரவேற்கப்பெற்ற விமரிசையைப்பற்றி ஓர் ஈழ நாட்டுப் பிரபலர் "சென்னையில் கேவலம் அற்ப 'பிளேக் தாத்காலீக சட்ட'த்தைக் கொண்டு சுவாமிகள் இறங்க அனுமதி யளிக்கப் படாததுபோ லல்லாமல், இங்கு அவர் தாராளமாய் வரவேற்கப் பட்டார். எங்கு பார்த்தாலும் தோரணங்களும், குதூகல ஆரவாரமும், தீப ஸ்தம்பங்களும் திகழ நகரம் ஜெகஜ்ஜோதியாய் பிரகாசித்தது." என்று வரைந்தார். பலத்த கரகோஷத்துடனும் ஆரவாரத்துடனும் சுவாமிகள் கொழும்புவி லிறங்கியதும் அவரது பழைய அன்பர்களான ஸ்ரீமான் சர். குமாரசுவாமி அவர்களும், ஸ்ரீமான். அருணாசலம் அவர்களும் அவரது அடிகளிற் றமது முடிபட வணங்கி அஞ்சலி ஹஸ்தராய்த் துதித்து உபசரித்தார்கள்.

சென்னைவாசிகளின் உபசாரம்

அப்பால், கப்பல் ஜூன்மீ 28உ கொழும்புவை விட்டகன்றது. எதிர் காற்று அதிகமா யிருந்ததால் ஆறுதினங்களில் 'ஏடனை' அடைய வேண்டிய கப்பல் பத்து நாட்களுக்குப் பின் சென்றது. ஆக ஜூலைமீ 8உ புகைக்கலம் ஏடனை யடைந்து, செங்கடல் சூயஸ் கால்வாய் முதலியவற்றின் வழியே பதினைன்காம் தேதி சூயஸை எய்திப் பின்னர், நேபிள்ஸ் வழியாய் மார்செயில்ஸை அணுகிற்று. சுவாமிகள் ஜூலை மாதம் 31-ம் நாள் லண்டன்மா நகரில் மீண்டும் விளங்கினர்.

இந்த யாத்திரை முழுவதும் சுவாமிகள், தம்முடன் ஏகும் சிஷ்யை சகோதரி நிவேதிதா தேவிக்கும், தமது சிஷ்யருக்கும், ஹிந்துமத தத்துவார்த்த விஷயங்களையும் சமூக சாஸ்திரத்தையும், சமய தத்துவ சமரஸ மனப்பான்மையின் அவசியத்தையும் வெகுவாய் தெளிவுறப் புகட்டிய வண்ணம் கழித்தனர். சகோதரி வரைந்துள்ள "என்னையனை யான் கண்டவாறு" எனும்

சகோதரி நிவேதிதா தேவியின் யாத்திரானுபவங்கள்

நூலில், இந்த யாத்திரையின் சாரமான பல சம்பாஷணைகள் மிளிர் கின்றன. அத் தத்துவ போதங்களுள் முக்கியமான சிலவற்றை யேனும் இங்கு வரையாது ஏக, மனம் இடந்தரவில்லை. சகோதரி நிவேதிதா தேவி வரைந்துள்ளதாவது:

"இந்த ஆறுவார சமுத்திர யாத்திரையால் எனது ஜன்மம் சபல மாயிற்று; பிறவிப் பெரும்பயன் கைகூடிற்று. ஒரு நிமிஷங்கூட விடாமல் சுவாமிகளுடன் சம்பாஷிக்கச் சமயம் வாய்த்த போதெல் லாம் நான் அவருடைய உபதேச அமுதத்தைப் பருகினேன்; மற்ற நேரங்களில் ஏதாவது எழுதுவதும் பின்னல் வேலை செய்வதுமாக விருந்தேன். இப்படித் தொடர்ச்சியாக அவரது திவ்ய பாவித்யானு பவங்களைப் பெறும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது. அதற்கு எளி யேன் நான் எங்ஙனம் கைம்மாறு புரியவல்லேன்!"

"யாத்திரையின் ஆரம்பம் முதல் முடிவுவரை, சமய தத்துவ சாரமான அபூர்வ கதைகளை அவர் அருளிச் செய்தார். எந்த சமயத் தில் எதைப்பற்றி அருள்வாக்கு உதிக்குமோ வென்று நான் அவரு டைய வாயசையும் தருணத்தை ஆவலுடன் எதிர் பார்த்த வண்ணமிருப்பேன். சிவராத்ரி மகாத்மியம், பிருதிவிராஜ், விக்கிரமாதித்ய மன்னர்களின் நீதி பரி பாலன சிம்மாசனம், புத்த பகவான், யசோதரை சரித்திரம் முதலிய அரிய விஷயங்களை சுவாமிகள் ஆச்சரியகாமாக உணர்த்துவார். இவற்றுள் அவர் எதையும் இரண்டாம் முறை அரு ளினரென்பதே கிடையாது. இந்தியாவின் ஜாதி வித்யாசத்தைப் பற்றி யும் அதனல் ஏற்படும் மன வேறுபாட்டிற் கேற்ற காரணங்களையும் அவற்றை நிவர்த்திக்கும் மார்க்கங்களையும் அவர் தெற்றெனெ விளக் கினர்."

சுவாமிகளின் சமய நூல் தத்துவ விளக்கம்

"இடையிடையே, அவர் சமய உணர்ச்சியைப் பற்றிப் பேசினர். நாயகா நாயகி பாவத்திலும் தாசானுதாஸ சக்யத்திலுமே பல சமயங் களின் கொள்கைகள் வேரூன்றி யுள்ளன. இது இந்தியாவில் வைஷ் ணவ மதமென்றும், மேல் நாடுகளில் கிறிஸ்தவ மதமென்றும் பெயர் பெறும். எப்படிச் சிலர் காளியைப் பூஜிக்கத் துணிந்தார்கள்? நாமும் அப்படியே தேவியை பஜிப்போமே! நாம் பயங்கரத்தை,அது பயங்கரமா யிருப்பதால் அப்பயங்கரம் நீங்க வாழ்த்துவோமே! துக்க நிவாரணத் திற்காக நாம் துக்கத்தையே வழிபடுவோமே?' என்று ஓர் பேருண் மையை வெளியிட்டருளினர். ஒரு நதி சமுத்திரத்தில் கலக்கின்ற

முகத்துவாரத்திற்கு நேராகக் கப்பல் வந்ததும், சர்வேஸ்வரனுடைய மகத்தான கருணைக்கு ஈடாயுள்ள சமுத்திரத்தைத் தாண்டக் கூடாதென்று, பக்தியினால் எப்படி ஹிந்துக்கள் ஓர் நியமத்தை அனுஷ்டிக்கிறார்களென்பதையும், பல நூற்றாண்டுகளாக அனுஷ்டானத்திலிருந்துவரும் அதைத் தாம் கடந்த தன் நோக்கமென்ன தென்பதையும் எனக்குச் சாங்கோபாங்கமாகக் கூறினார். அப்பால், அதை விட்டகன்று செல்லும்போது சுவாமிகள் 'நமசிவாய ! நமசிவாய !' வென்று ஸ்மரித்தார். பின்னும் அவர் யாத்திரைக் காலம் முழுவதும் வெகு அமைதியாக வினாக்களுக்கு விடையளிப்பதும், சரித்திரம், இலக்கியம், காவ்யம் முதலியவற்றின் சாரமான பாகங்களை எடுத்தோதுவதுமாக என்னறிவை வளர்த்து வந்தார். சுவாமிகள் திரும்பத் திரும்ப பௌத்தர் காலத்தை இந்தியச் சரித்திரத்தின் சிறந்த பாகமென்று கூறி விளக்குவதுண்டு. 'பௌத்த மதத்தின் மூன்று சுழல்களில், ஐந்நூறு வருடங்கள் கொள்கை நிரூபணமும், ஐந்நூறுண்டுகள் விக்ரஹ பிரதிஷ்டாபனமும், ஐந்நூறு சம்வத்ஸரங்கள் தந்த்ர காலமுமாக விருந்தன. ஆனால், பௌத்த தர்மமென்று எந்த மதமும் அதன் சொந்த தேவாலயங்கள், குருமார்கள் முதலிய லக்ஷணங்களுடன் எந்த காலத்திலாவது இருந்ததென்று நினைக்கிறாயோ ? இல்லவே இல்லை. அது எப்பொழுதும் ஹிந்து மதத்தில் ஆழ்ந்து இரண்டறக் கலந்திருந்தது. ஒரே தடவை புத்தருடைய அவதார பிரவர்த்தகத்தின் ஆதிக்யம் மட்டும் சிறிது விமரிசையாயிருந்தது ; அதன் பயனாக இந்தியாவில் சாதுக்களின் தொகை பெருகிற்று !' என்று ஒருதரம் பேசினார்.''

சகோதரிக்கு சுவாமிகள் செய்த ஏகாந்த உபதேசங்கள்

''ஒரு சந்தர்ப்பத்தில் சுவாமிகள் சாதாரணமாக ஹர்ஷாவென்னும் முகலாயச் சக்கரவர்த்தியைப் பற்றிப் பேசிக்கொண்டே வந்து, கொஞ்ச நேரம் மௌனமாயிருந்து, பின்னர், சரேலென்று 'சரி........ புத்தபகவான் கூறியது சரிதான் ! அது கர்ம வினையின் காரணமும் பயனுமாய்த்தான் இருக்கவேண்டும். இந்த வியக்தித்துவம் மாயையாகவே இருக்கவேண்டும்' என்றியம்பினார். அந்த அருட் பிழம்பின் அமுத வசனங்களை நான் என்னென்று போற்றுவேன் !''

''ஒருநாள் அதிகாலையில் நானும் துரியானந்தரும் 'டெக்கி'லிருந்து சிற்றுண்டி கொள்ளுமுன் பேசிக்கொண்டிருந்த பொழுது, நான் அவருக்கு இங்கிலாந்து ராஜீய விஷயங்களில், மாறுதல்களைற்

படுவதற்கு இடந்தராத கக்ஷியினரின் கொள்கைகளையும், குடிமக்களின் உரிமையை அதிகரிக்கப் பாடுபடும் கட்சியினரின் நோக்கங்களையும் விளக்கிக் கொண்டிருந்தேன். அப்பொழுது பொட்டென்று சுவாமிகள் அங்குற்று, நாங்கள் பேசிக்கொண்டிருக்கும் விஷயத்தைக் கவனித்த வுடன் 'மாறுதல் வேண்டாத கக்ஷியினரின் கொள்கைகளெல்லாம் தாழ்மைத் தத்துவ முடையவைகள். உங்கள் கொள்கையெல்லாம் போராட்டத்திற்காகவே. ஆகையினால், நாங்கள் வாழ்வின் சுகத்தை அனுபவிக்கின்றோம். உங்களுக்கு அது கிடையாது. நீங்கள் எப் பொழுதும் மேன்மேலும் உங்கள் ஸ்திதியை உயர்த்திக்கொள்ள வேண்டுமென்ற அவாவால் விவகாரத்தை விஸ்தரித்துக்கொண்டே போகிறீர்கள். உங்கள் மாறுதல் இயக்கத்தில் கோடியிலொரு பங்கு கூட உங்கள் அற்ப ஆயுட் காலத்தில் கைகூடுவதில்லை. மேல் நாட் டார் கொள்கை, ஏதாவது (சரியோ-தவறோ) செய்து கொண்டே இருக்கவேண்டு மென்பது. எங்களுடைய கொள் கை என்றும் தாழ்மையுடன் கஷ்டப்படுவது; ஆனால் நாங்கள் பணிவால், கஷ்டத்தால் கட்டா யம் சுகத்தையே அடைகிறோம். எங்கள் கொள்கையில் 'மனிதன் எப் பொழுதும் தனது இஷ்டங்களெல்லாவற்றையும் நிச்சயமாகப் பூர்த்தி செய்து கொள்ள முடியாது என்ற நம்பிக்கையும் முடிபும் உண்டு. வாழ்வு எவ்வளவோ முகாந்தரங்களால் தடைப்படுகின்றது. இது ஆபாசமாயிருக்கிறது; இருந்தபோதிலும் இதனால் விவேகமும் பல மும் உண்டாகின்றன. இந்த நமது போராட்டக்காரர்கள் இதைக் கவ னித்த மாத்திரத்தில் வெளிப் பார்வைக்கு இது ஆபாசமாக இருக்கிற தென்று கருதி அலட்சியமா யிருக்கிறார்களே யன்றி அதன் ரஸத் தைப் பருகி இன்பம் அடைவது இல்லையல்லவா? சமூகத்தில் பல நூற்றாண்டுகளாகத் தொன்று தொட்டு வேரூன்றியுள்ள விஷயங்களை மாற்றப் போராடிப் பயனின்றி எத்தனையோ நூற்றாண்டுகள் அரும் பாடு படுகின்றார்கள். மாறுதலால் உறுதிக்கு அணை ஏற்படுவதில்லை. அதனால் நாளடைவில் மனோலயப்பட்டு உறுதியின் வன்மை குன்றி அடிமைத்தனம் விருத்தியாகின்றது. ஆனால் நாம் வர வர திடப்பட்டு வரவேண்டும். மனோலயத்தால் உறுதியின் பலம் மேன்மேலும் அதி கரிக்கின்றது. உணர்ச்சியுடனோ அல்லது மெய் மறந்தோ லோகத்தில் நாம் வல்லமையைத் தான் மெச்சுகிறோம்' என்றியம்பினார்.''

டெக்கில் ஒரு தக்க உபதேசம்

''இவ்வாறு யாங்கள் கடல் யாத்திரை செய்கையில் இராக் காலத்

தில் சிசிலித் தீவைக் கிட்டினோம். அப்போது எட்னா வென்னும் எரிமலை சிறிது வாய்விட்டுக் கக்கலுற்றது. மெஸினா (Messina) ஜலசந்தியில் கப்பல் பிரவேசித்ததும் பரிபூரண சந்திரோதய மாயிற்று. 'ஆஹா! ஹோ வென்னும் ஓலத்துடன் எங்கும் தண்ணீராய் மனிதனின் மனதில் எழுவதும் விழுவதுமான எண்ணங்களை யொத்து எழுவதும் விழுவதுமான அலைகளோடு கொந்தளிக்கும் அந்த சமுத்திரத்தையும், மனோகரமாக வீசும் மந்த மாருதத்தையும், அந்த அற்புத சந்திரோதயத்தையும் சுவாமிகள் கண்டு மெய் சிலிர்ப்பத் தியானம் செய்துகொண்டே சமாதியிற் கூடி யிருந்தார். அப்பொழுது நான் டெக்கில் இங்கு மங்கும் உலாவிக் கொண்டிருந்தேன்; ஒருபுறம் இத்தாலிய தேசத்தின் மேடுபள்ளமான கரையும், மற்றொரு புறத்தில் அந்த சிறு தீவின் கரை நிலவு வெளிச்சத்தால் ரஜிதமயமாக ஒளிவீசி விளங்குவதையும் கண் குளிரப் பார்த்துக்கொண்டே யிருந்தேன். பிறகு சுவாமிகள் நிஷ்டை கலைந்து, அவர் சிறு பிராயத்தில் ஈஸ்வர நிச்சயத்தின் பொருட்டு அலைந்த விஷயத்தையும், கிரந்தங்களை மனனம் பண்ணிய விதத்தையும், குருதேவரோடுகூடக் கடுமையான யோகசாதனங்களைப்பற்றிய வரலாற்றையும் சொல்லிக்கொண்டே வந்தார்.''

''சுவாமிகள் வழியெங்கும் தாம் நேராகவே கண்டுள்ள சாதுக்களைப் பற்றிப் பேசிக்கொண்டே யிருந்தார். அவர்களுள் மிகவும் சிரேஷ்டமானவரும் ஒப்பாரும் மிக்காரும் இல்லாதவரென்று ஸ்ரீராமகிருஷ்ணரை அவர் ஸ்தோத்திரம் செய்தார்; குருதேவர் சந்நிதானத்தில் நிகழ்ந்த சில அபூர்வ சம்பவங்களை எடுத்தோதிப் போற்றினர். நாக மஹாஷயரைப்பற்றி சுவாமிகள் மிக்க அன்போடும் பக்தியோடும் கூறி, 'ஸ்ரீராமகிருஷ்ணர் சிருஷ்டித்த புண்ய புருஷர்களில் அவர் தலைமையானவர்' என்றியம்பி மகிழ்ந்தார். சமீபகால மகான்களைப்பற்றிச் சுவாமிகள் கூறுங்கால், பாவ்ஹாரி பாபா, திரைலிங்க சுவாமி, ஸ்ரீரகுநாத் தாஸ் முதலியவர்களின் ஈஸ்வரானுக்கிரஹம் பெற்ற வாழ்வினை உணர்ச்சியுற விளக்கினர். இம்மகான்களுள் முன்னிருவர் சரிதைகள் பிரிதோரிடத்திற் கூறப்பெற்றன. ஆதலின், ஸ்ரீரகுநாத் தாஸரின் சரித்திரத்தை மட்டும் இங்கு சுருக்கமாய்க் கூறுகிறேன்.''

சுவாமிகள் கல்கத்தா ஆஸ்ரமத்தை யடைவதற்கு இரண்டு மாதங்களுக்கு முன்புதான் ஸ்ரீரகுநாத்தாஸ் முக்தியடைந்தார். அவர்

பூர்வத்தில் ஐரோப்பிய துரைத்தனத்தாரிடத்தில் போர் வீரராயும் (சிப்பாய்), மெய்க்காப்பாளராயும், அதிகாரிகளின் நம்பிக்கைக்கும் அபிமானத்திற்கும் பாத்திரராய் ஒழுங்காக வேலை பார்த்து வந்தார். ஒருநாள் அவர் தெருவில் "ராம பக்தி சாம்ராஜ்யம்" என்று பாகவதோத்தமர்கள் பஜனை செய்துக்கொண்டு போவதைக் கண்டார். ராம நாமத்தைக் கேட்டதும், தனது காவல் புரியும் கடமையைச் சரிவர இயற்றும் இயல்பினராகிய அவர், அந்த திவ்யநாம கோஷத்தால் பரவசமாகி துப்பாக்கியைத் தூர எறிந்துவிட்டு, உடுப்புக்களை யெல்லாம் உதறி வீசி அந்த கோஷ்டியுடன் சேர்ந்து காதாளம் போட்டுக்கொண்டு குதிக்கத் தொடங்கினர். இப்படி வெகு நேரமானதும் இவரது செயலைப்பற்றிய புகார் சேனாதிபதியின் செவிக் கெட்டவும், அப்படைத்தலைவர் ஸ்ரீரகுநாத் தாஸரை அழைப்பித்து, 'நீ அவ்வாறு நடந்து கொண்டது உண்மையா? வாஸ்தவமானால் தண்டனை என்னவென்று தெரியுமா?' என்று வினவ, தாஸர் சிறிதும் அஞ்சாது 'தெரியும், என்னைச் சுட்டுவிடுவீர்கள்? அவ்வளவுதானே' என்று விடை பகர்ந்தார். போர்த்தலைவர் "சரி! இந்தத் தடவை பிழைத்துப் போ! இதை நான் வெளியிடவில்லை. இனி, இப்படி நடந்து கொண்டால் சிக்ஷை யடைவது திண்ணம்" என்று கண்டித்து அனுப்பி விட்டார்.

மகான் ஸ்ரீரகுநாத் தாஸின் சரித்திரம்

மறுநாளும் ராமபஜனை கோஷ்டி ஹரிநாம சங்கீர்த்தனஞ் செய்தவாறு அவ்வழியே செல்ல, வீரராகிய ஸ்ரீ ரகுநாத்தாஸ், ராம பக்தியால், எவ்வளவு முயன்றும் தனது மனத்தினிடத்திலே தோல்வியுற்று 'வந்தது வரட்டு' மென்று அங்கிகளை யெல்லாம் கழற்றி எறிந்து விட்டுப் பஜனை கோஷ்டியில் கலந்து கொண்டு, நாத் தழும்பேற பொழுது புலரும் வரையில் சங்கீர்த்தனஞ் செய்து விட்டுத் திரும்பினர். அந்த சேனாதிபதிக்கு ரகுநாத் தாஸரிடம் விசேஷ நம்பிக்கையுண்டு. அவர், ரகுநாதர் தாமே குற்றஞ் செய்ததாக ஒப்புக் கொண்டாலும், செய்திருக்கமாட்டார் என்று கருதுவார். எனினும், ரகுநாத்தாஸ் சரிவர காவல் புரிகின்றாராவென்று பார்க்க, ரகுநாதர் பஜனை கோஷ்டியுடன் சென்றபின் அன்று யதேச்சையாக வந்தார்; வந்தவர் ரகுநாத்தாஸ் அவ்விடத்தில் இருக்கக் கண்டு சில வார்த்தைகள் அவருடன் பேசிவிட்டு நித்திரை செய்யச் சென்றார்.

பொழுது புலர்ந்ததும் ரகுநாத்தாஸ் தாமே போய் தாமியற்றிய

பிழையை விண்ணப்பித்து அச்சேனாதிபதியிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டு வரலாமென்று நேராகப் போனார். சென்றவர், தாம் காவலை மறந்து ஆவலாய் பஜனை கோஷ்டியாருடன் மேவிய துரைத்துத் தன்னை மன்னிக்குமாறு அச்சேனாதிபதியை வேண்ட, சேனாதிபர் "என்ன இது! நேற்றிரவுதான் நான் உன்னைப் பார்த்துச் சில வார்த்தைகள் கூடப் பேசிவிட்டு வந்தேனே!" என்றியம்பலும் ரகுநாதர் திடுக்கிட்டு "என்ன! என்னையா பார்த்தீர்கள்!—கண்டு பேசினீர்கள்? ஒருகாலும் இல்லையே" என்று கூறி ஸ்தம்பித்து, ஸ்ரீஜானகீ ரமணனே இவ்வாறு வேடம் பூண்டு காவல் புரிந்திருக்க வேண்டுமென்று துதித்து அன்று முதல் தேகத்தை ராமார்ப்பணஞ் செய்து, உத்தியோகத்தினின்றும் விலகி வைராக்ய சித்தராய், சாஸ்வதி நதி தீரத்தில் வசிக்கலானார். சாமான்ய ஜனங்கள் அவரை ஏதோ படிப்பறிவில்லாதவரென்று கருதினர்; அவருடைய பெருமையை நானறிவேன். அவர் அனுதினமும் ஆயிரக்கணக்கான ஜனங்களுக்கு அன்னமளிப்பார். பிறகு தெருவில் மாவு விற்றுக் கொண்டிருப்பார். அவர் 'ஸ்ரீ ஆயிரம் ரூபாய் என்று சொல் பார்ப்போம். ஒரு மாத காலமாக சாது சந்தர்ப்பணை செய்ய எனக்கொன்றும் கிடைக்கவில்லை. இது கட்டாயம் வரும்; நாளை எனக்கு ஆயிரம் ரூபாய் கிடைக்கும்' என்பார். அப்படியே அவருக்குக் கிடைக்கும். அது ஸ்ரீ சீதா நாயக ரவிகுல திலக ராமனின் கடாக்ஷத்தால் அப்படியே நடந்து வந்தது."

இங்ஙனம், சுவாமிகளை நிவேதிதாதேவி விரதத்தைச் சரிவர அனுஷ்டிக்காதவர்களின் கதி யென்னவென்று வினவ, அவர் உடனே கீதையில் கண்ணன் கூறும் திண்ணமான உண்மைகளை விரித்துரைத்தார். அப்பால் ஒரு சமயம் தர்மத்தைப்பற்றிக் கேட்டபோது, தர்மமானது சத்வ ராஜஸ தாமஸ குணச் சார்புடையதென்றும், இந்துக்களின் வாழ்வே தர்ம சம்பந்த மானதென்றும் வியாக்யானம் பண்ணினார். இந்த யாத்திரையில் சுவாமிகள் "எனக்கு வயதாக ஆக அற்ப விஷயங்களிலுள்ள பொற்பான தத்துவங்களெல்லாம் நன்ருகப் புலப்படுகின்றன. ஒரு பிரசித்தன் என்ன உணவு கொள்ளுகிறான், எப்படி உடை உடுக்கிறான், தமது வேலையாட்களிடத்தில் எப்படிப் பேசுகிறானென்பதை நெருங்கிக் கவனிக்க வேண்டுமென்ற ஆவல் உண்டாகிறது. 'சர் பிலிப் சிட்னி' யைப்போல ஒரு சான்றோனை நான் கண்டு பிடிக்க வேண்டும். வெகு சிலரே, தமது மாண

எனது ஆவல்.

வாதனையிலும், பிறருடைய குறைகளை யறிந்து நிவர்த்தி செய்கிறார்கள்" என்று புகன்றருளினர். இவ்வாறு பேசிக்கொண்டே வரும்பொழுது சுவாமிகள் தாம் எதிர் காலத்தில் செய்யக் கருதி இருக்கும் விஷயங்களைச் சகோதரியிடம் கூறினர். அம்மாது சிரோமணியும் அவ்வப்பொழுது சுவாமிகள் அருளிச்செய்த விஷயங்களை விடாமல் குறித்து வைத்துக்கொண்டார். சுவாமிகளின் நோக்கங்களினின்றும் எள்ளளவும் வழுவாமல் தனது தேகத்தைத் திரிகாண சுத்தியுடன் இந்தியாவின் க்ஷேமத்தைக் கருதி உழைத்த தேவியின் சீலமே சீலம்!

"புகைக்கலம் ஏடனைச் சமீபித்ததும் சுவாமிகள் அடுத்தடுத்துத் தமது சித்தாந்தங்களை உரைத்தருளினர். 'எனது ஜனங்களுக்குத் திரும்பவும் மூட நம்பிக்கையை உண்டுபண்ணுகிறவர்களுடைய கொள்கையிலிருந்து நான் மாறுபடுகிறேன். இந்தியாவின் க்ஷேமத்தைக் கருதி தமது சுவய கார்யார்த்தமாக, இந்தியத் தாய்க்குத் தொண்டு புரிவதாகச் சொல்லி முன் வருவது சுலபம். ஒருவருடைய புத்தகத்தையும், வித்தையையும், பகற்கனவையுமே புகட்டி இந்தியாவின் நன்மையைப் பெருக்க யாரும் நினைக்கலாம். இந்தியா தானாக முயன்று, காலத்திற்கேற்றவாறு, நன் நிலையைத் தானே எய்துமாறு செய்ய வேண்டுமென்பதுதான் எனது கோரிக்கை. இந்தியா, ஆத்மபலத்தால், புறம்பான பக்கபல உதவியின்றி, உயர்வதுதான் கிரமமும் யுக்தமும் சிறந்ததுமாகும். ஆனதுபற்றியே நான் உபநிஷதங்களை மட்டும் உபதேசிக்கின்றேன். நீங்கள் கவனித்தால் இவ்வுண்மை நன்கு புலப்படும். அந்த உபநிஷதங்களிலும் சக்தியாம்சமானவற்றையே நான் வற்புறுத்துவேன். வேத வேதாந்தங்களின் சாரமெல்லாம் அந்த 'சக்தி' யென்னும் ஓர் அரும்பதத்திலேயே அடங்கி யிருக்கின்றன. புத்தருடைய உபதேசங்களெல்லாம் 'எதிர்த்தலின்மை', அதாவது அஹிம்சா தர்மத்தை அடிப்படையாகக் கொண்டவை. ஆனால் அதைவிட மேற்கூறிய வழியே சிறந்ததென்று எனக்குத் தோன்றுகிறது. ஏனெனில், அந்த அஹிம்சா தர்மத்தின் பின்புறம் ஓர் துர்ப்பலம் பதுங்கி யிருக்கின்றது. அந்த துர்ப்பலமே எதிர்ப்பின் தன்மையை இன்னதென்றறிகிறது." என்றியம்பி, மேலும் "இதுவரையில் நமது ஹிந்து மதம் தனது ஞானத்தைத் துறவு—முக்தி என்ற இரண்டு சொற்களால் மட்டுமே புகட்டியது ஓர் பெருந்தவறாக இருக்கின்றது. துறவு முக்

சொல்வது சுலபம் செய்வது அருமை

தியை அடைவிக்கும்! ஆனால் இல்லாஸ்ரமிகளுக்கு யாதுளது? அவர்களைக் கைதூக்கிவிட வேண்டுமென்பதுதான் எனது அபிலாஷை. அவர்களும் ஜீவாத்மாக்கள் தானே! அவர்கள் அடைதற் குரியதும் அம்முக்தி நிலையே யல்லவா? ஆதலில், அதற்குத் தூர்ப்பலம்போய், ஆத்ம சக்தி தழைக்கவேண்டும். ஆத்ம சக்தி தழைக்கக் கல்வி நமது நாட்டில் அபிவிருத்தி யடைய வேண்டியது அவசியம்," என்றருளினார்.

"ஹிந்து மதத்தின் சரித்திர வளர்ச்சியை ஆராய்ந்து முறைப் படுத்துவதிலேயே சுவாமிகள் அதிகப் பிரியரா யிருந்தார். உலகத்தின் தோற்றத்திற்கு காரணபூதமாயிருந்த மகாசக்தி என்னவென்று அறிவதிலேயே அவருடைய மனம் ஆழ்ந்திருந்தது. ஒரு மதத்தின் ஸ்தாபிதத்திற்கு முன், அதன் ஸ்தாபகரின் நிலை எவ்வாறிருந்தது? மத உண்மைகளை நிலை நிறுத்தச் சாதகமா யிருந்தவை எவை? புத்தபகவான் ரூபம், அன்பு, உணர்ச்சி, அசைவு, ஞானம் ஆகிய தமது ஐவகைத் தத்துவங்களை முதலில் கபிலரிடத்தில் ஓதியுணர்ந்தார். ஆனால் புத்தபகவான் இவ்வைந்து தத்துவங்களுக்கும் அன்புடைமையால் உயிரளித்து அவற்றை நிலவச் செய்தார். கிருஷ்ண பரமாத்மா அவருடைய அவதார முறையில், மதப்பிரவர்த்தகராயும், ஹிந்து மதத்தின் உபாசனா மூர்த்தியாகவும் நின்ற பான்மை சுவாமிகளின் திருவுள்ளத்தைப் பரவச மாக்கிற்று. எளியாரோ டெளியாராகவும், மன்னரோடு மன்னராகவும், கோபியரோடு காந்தராகவும், மகா ஞானிகளோடு ஞானமூர்த்தியாகவும், ஆபத் பாந்தவராகவும், அநாதரக்ஷகராகவும், தீனதயாளுவாகவு மிருந்து பரமோத்தமமான தர்மங்களை முறைப் படுத்தி ஒப்பதும் மிக்கதுமில்லா கீதையை யருளிச்செய்த பகவானின் லீலா விபூதிகளையும், புத்தாது மகிமைகளையும் சீர்தூக்கிப் பார்க்குங்கால், புத்தரின் சில பலஹீனங்கள் சுவாமிகட்கு நன்கு புலனாயின.

புத்தாவதாரமும் கிருஷ்ணாவதாரமும்.

"எவ்வளவு அற்புதமானது அந்த கீதை! என்ன அழகு! என்ன உபதேசம்! அதைப் புகழவும் இப்புன்னாவிற்குத் தகுதி யுண்டோ" என்று சுவாமிகள் கண்ணீருகுப்பார். "பௌத்த நூல்களைக் கீதை மறைத்து விட்டது. புத்தர் அடிக்கடி 'நான் சன சகாயன்' என்று சாற்றினார். ஆனால், பௌத்தர்கள் அந்த உணர்ச்சியை நசுக்கி, அவருடைய கொள்கைகளை மாய்த்து விட்டார்கள். பழைய தர்மங்களை ஒழிக்க முற்பட்ட ஓர் பெருந்தவறே பௌத்த தர்மம் மறைந்ததற்குக்

காரணமாகும்" என்று தர்ம தாத்பரியங்களைச் சுவாமிகள் தானெடுத்து மொழிவார்.

மூர்த்தித்துவத்தில் அவருக்கு எப்பொழுதும் எவ்வித சங்கையும் கிடையாது. இடை யிடையே சுவாமிகள் தமது சிஷ்யையைப் பார்த்து "நீங்கள் இன்னும் இந்தியாவின் பெருமையை அறிந்து கொள்ளவில்லை. ஹிந்துக்களாகிய நாங்கள் எப்பொழுதும் மனிதனைப் பூஜிப்பவர்கள். மனிதர்களே எங்களுக்குத் தெய்வம்" என்றியம்புவார். இப்படி அருட்பிரகாச வள்ளலாய் சுவாமிகள் தர்மா தர்மங்களை எடுத்தோதுவதோடு, ஹிந்துமத தத்துவங்களின் சம்பாவிதங்களை உணர்த்துவதும் இயல்பு. சட்ட நிபுணரைப்போல ஆங்காங்கே ஹிந்துமத கிரந்த மேற்கோள்களைக் காட்டி அவர் விஷயங்களை விளக்கும் முறை வெகு அழகாயிருக்கும். மீமாம்சத்திலிருந்து சுவாமிகள் எதற்கும் மேற்கோள் காட்டுவார். கிரேக்க ஞானி * பிளேட்டோவின் தத்துவங்கள் மீமாம்சகருடைய தத்துவநூலி லடங்கியிருக்குந் தன்மையை அவர் விரித்துரைப்பது வெகு அழகாயிருக்கும்.

இவ்விதம் ஹிந்து மதத்தின் அறுவித தத்துவப் பிரிவுகளை சுவாமிகள் கூறுபடுத்திக் காட்டி, அவற்றிற்கு பௌத்தமதக் கொள்கைகள் மாறுபடும் வகையினையும் காரணத்தையும் விளக்குவார்; வைஷேசிக நியாய நூல்களின் உண்மைகளை ஆழ்ந்தறிந்து வேதாந்தத்தோடு ஒப்பிட்டுக் காட்டி, † கன்ட் (Kant) என்னும் ஞானியின் தத்துவங்களையும் உடனுக்குடன் விளக்கி, பின்னர் "ஒருவித தத்துவத்தையே உணர்த்தும் தீர்க்க தரிசிகளில் ஒருவருக் கொருவர் ஞானேந்திரிய

---

* பிளேட்டோ என்பவர் தத்துவ சாஸ்திரத்தில் ஓர் சிறந்த நிபுணர். இவர். கி. மு. 427 - முதல் 341-வரையில் இருந்தவர். இவர் சாக்கிரதீன் என்னும் கிரேக்க பூர்வஞானி உணர்த்தி யருளிய சாதாரண கற்பனைகளையே ஆதாரமாகக்கொண்டு, வெகு அற்புதமான நூல்களை இயற்றியுள்ளார். இவர் கவித்துவமும் தத்துவ சாஸ்திரப் புலமையும் உடையவர். தர்ம சாஸ்திரத்தைப் பற்றியும் தத்துவ சாஸ்திரத்தைப் பற்றியும் சமய சாஸ்திரத்தைப்பற்றியும் அரசியல் முறைகளைக் குறித்தும் விரிவான நூல்கள் வரைந்துளார். கிறிஸ்தவ மதம் பெரும்பான்மையும் அவரது மனோபாவத்தையும், கொள்கைகளையும், உட்கொண் டிருக்கின்றது. இவரது குரு சாக்ரதீன் என்பவர்; அவர் கி. மு. 469 - முதல் 399 - வரை யிருந்தவர்.

† கன்ட் இவர் மேல் நாட்டுப் பிரபல தத்துவ சாஸ்திரிகளுள் ஒருவர்; கி. பி. 1724 - முதல் 1804 - வரை வாழ்ந்தவர்.

கன்மேந்திரியங்களில் எது முற்பட்டதென்பதில் அபிப்பிராயப் பேதப் படுகிறார்கள் பார்த்தீர்களா; முட்டை முந்தியதா? கோழி முந்தியதா? தொன்னைக்கு நெய் ஆதாரமா? நெய்க்குத் தொன்னை ஆதாரமா? சொல்லுங்கள் பார்ப்போம். இந்த மீஜாங்குர நியாயமான தர்க்கத்திற்கு முடிவே கிடையாது. ஆகையால், இப்படித் தருக்கித்துத் தர்க்கித்து வாழ்நாளை வீணாக்காதீர்கள்! மாயையினின்றும் விடுபடுங்கள்," என்றுபதேசிப்பார்.

இப்படிக் கடல் யாத்திரை அவருடன் ஏகிய பாக்கியசாலிகளின் வாழ்விற்கோர் வாழ்த்தாய்க் கழிந்தது. இந்த யாத்திரையில் இடையிடையே "உத்போதினி" என்னும் பத்திரிகைக்கு சுவாமிகள் வங்க பாஷையில் வியாசங்கள் எழுதிக்கொண்டுமிருந்தார். சுவாமிகள் இந்த யாத்திரையில் வரைந்த கட்டுரைகள் எல்லாம் தொகுக்கப்பெற்று "பாவ்ராஜகர்," அல்லது "அலைந்து திரியும் சந்நியாசி" என்ற அபிதானத்துடன் நூலாக வெளிவந்துள்ளன.

சுவாமிகட்கு லண்டனில் வரவேற்பு.

இவ்வாறு ஜூலை மாதம் 31உ வரையில் சத்விஷய காலக்ஷேபத்தால் நாட்கள் கழிய சுவாமிகள் தமது அடியார்களுடன் லண்டன்மாநகர் சேர்ந்தனர். டில்பரி டாக் (Tilbury-Dock) கில் அவரை நேயர்களும் அன்பர்களும் கூடியிருந்து வரவேற்றார்கள் அவர்களுள், சுவாமிகள் இந்தியாவிலிருந்து லண்டனுக்குப் பிரயாணமானதைப் பத்திரிகை வாயிலாக அறிந்து, அவரை லண்டனில் சந்திக்க ஆவல் கொண்டு, டிடிராயிட்டிலிருந்து வந்திருந்த இரண்டு அமரிக்க மாதர்களும் இருந்தார்கள். சுவாமிகள் தேகோபாதியால் இளைத்திருப்பதாக அவர்கள் பத்திரிகைகளில் வாசித்து, கவலைப் பட்டு அக்கணமே பிரயாணமானவர்கள். அவ்விரு பெண்ணரசிகளுள் ஸ்ரீமதி. பங்க் (Funke) என்பார் சுவாமிகளின் உடற்றோற்றத்தைப் பற்றி வரையுங்கால் "சுவாமிகளின் தேகம் மிகவும் இளைத்திருக்கிறது. இந்த சமுத்திர யாத்திரையினால் அவர் தமது பலஹீனம் சற்று நீங்கியிருப்பதாகக் கூறுகிறார்" என்று எழுதினார்.

'லண்டன்' மாநகரில் வசிக்க அப்போது சுகத்திற்கேற்ற இடமின்மையால், அருகாமையிலுள்ள 'விம்பில்டன்' (Wimbledon) என்னுமிடத்தில் சுவாமிகள் வாசம் செய்தார். அவருடைய தேகஸ்திதியைப் பார்த்த அன்பர்களுக்கு, அவருக்கதிக சிரமங் கொடுக்கச்

[stamp]

சிறிதும் மனம் வரவில்லை. இந்த காலத்தில் சுவாமிகள், தம்மைத் தரிசிக்க வருமடியார்களுடன் அளவளாவி சம்பாஷித்து உபதேசித்ததைத் தவிர பெரிய கூட்டங்களில் பேசவே இல்லை. இங்ஙன மிருக்கும் நாளில் சுவாமிகளின் திருச் சமுகத்திற்கு அமரிக்காவிலிருந்து அவரை அக்கணமே பிரயாணமாகி அங்கு எழுந்தருளுமாறு அநேக கடிதங்கள் வந்து கொண்டிருந்தன. டிடிராயிட்டி லிருந்து வந்திருந்த பெண்மணிகள் இருவரும் சுவாமிகளை அமரிக்காவுக்குப் புறப்படுமாறு வற்புறுத்தவும் ஆகஸ்டு மாதம் 16வ. சுவாமிகள் துரியானந்தருடன் அமரிக்காவிற்குப் பிரயாணப்பட்டார். சுவாமிகள் 'மேல் நாட்டிற் கெழுந்தருளிய மேன்மை'யை விளக்க அவர் சமுத்திர யாத்திரையில் திருவாய் மலர்ந்தருளிய ஹிந்து தர்மோபதேச மொழிகளே சாலுமன்றோ?

லண்டன் வாஸம் அமரிக்காவிற்குப் பிரயாணம்.

52-ம் அத்தியாயம்

பாரீஸ் காங்கிரஸ் விஜயம்

ஏலேலோவென் றெய்தியது கப்பல்! கிளாஸ்கோவை விட்டுப் புறப்பட்ட புகைக்கலம் அட்லாண்டிக் மகா சமுத்திரத்தைக் கடந்து, அமரிக்காவிலுள்ள நியூயார்க்கை யடைந்தது. சுவாமிகள் நியூயார்க்கிலிருந்து நூற்றைம்பது மைல் தூரத்திலுள்ள கியாட்ஸ்கில் மலையில் ஹட்ஸன் என்னும் பகுதியிலிருந்த ரிட்கிளி மானர் (Ridgley Manor) எனப் பெயரிய லெக்கட் (Leggett) தம்பதிகளின் மாளிகைக்கு நேராகப் பிரயாணமானார். சகோதரி நிவேதிதாதேவியும் ஒரு மாதத்திற்குப் பின் அங்குவந்து சேர்ந்தார். லெக்கட் தம்பதிகள் சுவாமிகளை ராஜோபசாரஞ் செய்து உபசரித்தார்கள்; தக்க வைத்ய நிபுணரைக் கொண்டு சுவாமிகளுக்கு சிகிச்சை செய்வித்தார்கள். நவம்பர் மாதம் ஐந்தாம் தேதி வரையில் சுவாமிகள் வைத்தியத்தின் பொருட்டு அங்கேயே தங்கியிருந்து மருந்துண்டார். அதனால் அவருக்குச் சிறிது குணமும் ஏற்பட்டது.

சுவாமி அபேதானந்தர் அப்பொழுது பிரசங்க நிமித்தம் தொலை நகரங்களில் யாத்திரை செய்துகொண்டிருந்தார். உடனே புறப்பட்டு வந்து சுவாமிகளை லெக்கட் துரையவர்கள் கிருகத்தில் சந்திக்குமாறு

அபேதானந்தரும் துரியானந்தரும்

அவருக்குத் தந்தி யனுப்பப்பட்டது. அங்ஙனமே, அவர் வந்து நியூ யார்க் வேதாந்த சபையின் நிலையைச் சுவாமிகளிடம் தெரிவித்து, பத்துநாட்கள் வரை உடனிருந்தார். அக்டோபர் மாதம் பதினோந் தாம் தேதி சுவாமி அபேதானந்தர் நியூயார்க்கில் புதிதாகக் கட்டப் பட்டிருந்த வேதாந்த சபாமண்டபத்தைத் திறந்துவைத்து இருபத் திரண்டாம் தேதி முதல் முறையே வேதாந்த பாடஞ் சொல்லத் தொடங்கினார். சுவாமி துரியானந்தரும் துரித மாக வேதாந்த சேவையில் முயன்றார்; மேலும் நியூயார்க்குக்கு அருகாமையிலுள்ள மான்ட் கிளேர் என்னுமிடத்தில் சிறுவர்களுக்கு ஹிந்துமத தர்மங்களைப் புகட்டி, ஹிதோபதேசக் கதைகளை அம்மாணவர்களுக்கு உணர்த்தி வந்தார். இடையிடையே துரியானந்தரும் அபேதானந்த சுவாமிக ளுக்கு உதவியாகச் சென்றார். அதன்மேல், டிசம்பர் மாதத்தில் துரியானந்தர் கேம்பிரிட்ஜ் என்னும் கேதாரபுரிக்கும், மாஸீக்குஞ் சென்று உபந்நியாசங்கள் செய்தார். அம்மாதம் பத்தாந்தேதி, கேதார புரியில் துரியானந்தர் நிகழ்த்திய "ஸ்ரீ சங்கரர்" என்னும் பிரசங்கத்தை ஹார்வர்ட் சர்வ கலாசாலை வித்வான்கள் மிகவும் பாராட்டினார்கள்.

இந்த யாத்திரையில் சுவாமிகள் முதல் முதலாகப் பொது மன்றங் களிற் றோன்றியது நவம்பர் மாதம் 8-ம் தேதி செவ்வாய்க்கிழமை யன்றேயாகும். அன்று அபேதானந்தர், சுவாமிகளுக்குப் பல புதிய அங்கத்தினர்களை அறிமுகஞ் செய்துவைத்தார். அன்று மாலையில் சுவாமிகள் சாதாரணமாக ஒரு சிறு பிரசங்கம் செய்துவிட்டு இரவில் ஒரு வினாவிடை வகுப்பை நடத்தினார். நவம்பர்மீ 10உ நியூயார்க் வேதாந்த சபையார் சுவாமிகளுக்கு விமரிசையான வரவேற்பு நடத்தி னார்கள். அவ்வன்பர்கள் அளித்த சுவாகதப் பத்திரிகைக்குச் சுவாமி கள் தக்கவாறு பிரதி வந்தனஞ் செலுத்தித் தமக்கு அவர்கள்பா லுள்ள அன்பை வெளியிட்டுப் பேசினார். அதன் பிறகு, நியூயார்க்கில் ஒரு பக்ஷகாலங் தங்கியிருந்து நவம்பர்மீ 22உ கலிபோர்னியாவுக்குப் பிரயாணமானார். வழியில் சிகாகோ நகரவாசிகள் சுவாமிகளைக் கட்டா யப்படுத்தி வந்தனோபசாரங்கள் வழங்கி, தமதிடை யே வீற்றிருக்கச் செய்து பூஜித்தார்கள். சிகா கோவில் அவருக்கு நூற்றுக் கணக்கான சபை களிலிருந்து உபசாரப் பத்திரங்கள் அளிக்கப் பெற் றன. அவை, ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு சுவை தோன்ற சுவாமி

சுவாமிகள் கலிபோர்னியாவிற்குச் செல்லல்

கள் விடையளித்தார். அவரைப் பலர் தமது வாஸஸ்தலங்களுக்கு அழைத்து விருந்தளித்தார்கள். இவ்விதம் சிகாகோவெங்கும் சிறந்த ஹிந்து சமய தத்துவ மணமே பரிமளித்திருந்தது. அதன் பின், சுவாமிகள் டிசம்பர்மாத ஆரம்பத்தில் கலிபோர்னியாவுக்குப் போய் அடுத்த வருஷம் ஜூன் மாதம் ஏழாம் தேதி வரையில் தங்கியிருந்தார்.

சுவாமிகள் லஸ் ஆங்கிலீஸ் வாஸம்

சுவாமிகள் சிகாகோவை விட்டு 'சூர்யாஸ்தமன' மார்க்கமாய் (Sunset Route) லஸ் ஆங்கிலீஸ் என்னும் சிறு நகரணுகி, ஸ்ரீமதி 'பிளாட்கெட்'டின் அதிதியாயிருந்தார். மிஸ் மெக்லியோட்டும் (Miss Mac Leod) அவரது சகோதரரும் அவ்விடம் வந்து சுவாமிகளைச் சந்தித்து கூடவே தங்கினார்கள். அவர்களுக்குச் சுவாமிகள் காலை மாலை யிரு வேளையும் தர்மோபதேசஞ் செய்தவண்ணம், பிப்ரவரி மாதம் முதற் பகுதி முடியத் தங்கியிருந்தார். பின்பு கலிபோர்னியாவை அடைந்தார். முன்போலவே பக்தர்கள், அவர் எங்கு சென்றாலும் திரள் திரளாகக் கூடி, அவருடைய உபதேசங்களை சிரவணம் செய்வாராயினர். உபந்நியாச விஷயமாய் சுவாமிகட்கு விண்ணப்பக் கடிதங்கள் பல வந்துகொண்டே இருந்தன. சமுத்திர யாத்திரையால் சுவாமிகளின் தேக நிலையும் சற்று இடந்தந்தது. அவர் ஆர்வமுள்ள இவ்வளவு அன்பர்களின் விண்ணப்பத்தை மறுத்தாகிலும் இந்தக் கேவல சரீரத்தைக் காப்பாற்றவேண்டிய அவசியந்தானென்னவோ வென்று, உடலினைப் போற்றா உத்தமராய் தொடர்ச்சியாகப் பிரசங்கங்கள் செய்ய வாரம்பித்தார். 'பிளான்சார்ட்' ஹாலில் டிசம்பர்மீ 8வ 'வேதாந்தம்' என்றும், 'அமிடி சர்ச்சில்' தென் கலிபோர்னியா சாஸ்திர ஆராய்ச்சி சங்கத்தின் ஆதரவில் 'பிரபஞ்ச சிஷ்டிக்கிரமம்' என்றும் கர்ஜும்ருதமாகப் பிரசங்கித்தார்; லஸ் ஆங்கிலீஸ் பொது மண்டபத்தில் 'உழைப்பும் அதன் உண்மையான பலனும்' என்று 1900ஷு ஜனவரிமீ 4வயிலும், 'புத்திமான் பலவான்' என்று ஜனவரிமீ 8-ம் தேதியும், 'பகிரங்க ரஹஸ்யம்' என்று ஒன்பதாம் தேதியன்றும் மூன்று சொற்பொழிவுகள் நிகழ்த்தினார். லஸ் ஆங்கிலீஸுக்குச் சமீபத்திலுள்ள பசதேனம் என்னும் பட்டினத்தில், 'ஜகப்பிரியர் சபை,' 'பொது நோக்க மாதாகோவில்' ஆகிய இரண்டு ஸ்தலங்களிலும் சுவாமிகளின் "தேவதூத கிறிஸ்து நாதர்," "சர்வதர்ம சமரஸ மதத்தினை அனுஷ்டிக்கும் வழி" என்னும் இரண்டு விமரிசையான பிரசங்கங்களும் நிகழ்ந்தன. "புராதன இந்திய வீர காவ்யங்கள்"

என்று ஜெகப்பிரியர் சபையில் சுவாமிகள் சில மேதாவிகளுக்கு மட்டும் தனித்த சொற்பொழி வொன்று நிகழ்த்தினார். அவ்வருடம் ஜனவரி மாதம் 31-ம் நாள் 'ஸ்ரீமத் ராமாயணம்', பிப்ரவரி மாதம் முதல் நாள் 'மகாபாரதம்', ஜடபரதன் கதை, பிரக்லாத சரித்திரம், ஆகிய சில விசேஷ உபந்நியாசங்களும் நடைபெற்றன. பிப்ரவரி மாதம் 3-ம் நாள் "பிரபல மதஸ்தாபகர்கள்" என்று சுவாமிகள் புரிந்த மற்றொரு பிரசங்கத்தால், அமரிக்கர்களுக்கு பற்பல மதாசாரியர்களின் சரிதைகள் நன்கு விளக்கமாயின. நற்காலமாகச் சுவாமிகளுக்கு இப்பிரதேச நிலையால் தேக சுகமே நிலவியிருந்தது.

லஸ் ஆங்கிலீஸ் 'சத்யகிருஹம்' (Home of Truth) என்னும் சங்கத்தினர் தனியழைப்பிற் கிணங்கிச் சுவாமிகள் சில அரிய பிரசங்கங்கள் செய்தார். சுவாமிகள் வாயிலாக ஹிந்து மதத்தின் எழிலை உணர்ந்த அப்பிரதேச வாஸிகள் முக்கியமாக ராஜ யோகத்தில் விசேஷ பிரீதியுடையவர்களானார்கள். அதிலும் சத்யாக்கிருஹ சங்கத்தார் அவருடைய ஆப்த சிஷ்யர்களாகி அன்பு பூண்டனர். அழகிய திருமேனியுடன் ஆணிப்பொன்னே போல் விளங்கும் சுவாமிகளை அனைவரும் துதித்துக் கொண்டாடி உபசரித்தார்கள். லஸ் ஆங்கிலீஸ் 'ஒற்றுமை' என்னும் பத்திரிகை சுவாமிகளைப் பின் வருமாறு புகழ்ந்தது:

'லஸ் ஆங்கிலீஸ்' சத்தியாக்ருக சபையில் சுவாமிகளின் பிரசங்கம்.

"எங்கள் சத்யகிருகத்தில் ஸ்ரீமத் விவேகானந்த சுவாமிகள் அநேக பிரசங்கங்கள் செய்தார். ஓர் சர்வகலாசாலை அக்ராசனாதிபதிக்குரிய கல்வியும், ஓர் ஜகத் குருவிற்குத் தகுந்த கௌரவமும், சூர்ய காந்தி வீசும் முக விலாசமும் அருள் நிறைந்த நயனங்களும், அவரிடம் பொலிவுற் றிருக்கின்றன. ஒரு நிமிஷ யோசனைகூட யில்லாமல், ஆகா! அவர் மேடைமீது ஏறி நின்று, மள மளவென்று தயங்காமல் மயங்காமல் யோசியாமல் உயர்ந்த ஆங்கில நடையிலே வெகு நயமாகப் பேசுகிறார். இடது கையில் பைபிளையும் வலது கையில் வாளாயுதத்தையும் கொள்ளும் கிறிஸ்தவ சமயிகளையும், பஞ்சத்தால் உணவற்று லக்ஷோபலக்ஷம் ஜனங்கள் மடிய, பசு பரிபாலனத்திற்காக, பணத்தை மூட்டைகட்டி வைத்துக்கொண்டிருக்கும் மூட நம்பிக்கைகொண்ட சில ஹிந்துக்களையும் * அவர் உதாரணமா

'லஸ் ஆங்கிலீஸ்' பிரபல பத்திரிகையின் அபிப்பிராயம்.

* பூந்தோட்ட சம்பாஷணையைக் கூர்ந்து நோக்குக.

கக் காட்டி உண்மையான தர்மானுஷ்டான மென்ன வென்பதை உணர்த்தி யருளினர்.

சுவாமிகள் லஸ் ஆங்கிலீஸை நீத்து ஒக்லாந்தை யடைந்து * ரெவாண்ட் டாக்டர் பெஞ்சமின் பெ. மில்ஸ் அவர்களுடைய தேவாலயத்தில் இறங்கி யிருந்தார். அம்மேதாவியின் வேண்டுகோளுக் கிணங்கிச் சுவாமிகள் மிக்க அருமையான சொற்பொழிவுக ளியற்றி, கிறிஸ்தவ ஆலய அதிபதிகளான பாதிரிமார்கள் பலராலும் கொண்டாடப் பெற்று, "கலைகளைக் கல்வியில் நிகர்த்தவர்; அவரிடம் நமது சர்வ கலாசாலை வித்வான்க ளெல்லோரும் மாணவர்களாகக் கூட யோக்கியதை யற்றவர்கள்" என்ற புகழுரைகளை யெல்லாம் பகவதார்ப்பணஞ் செய்து இருக்கும் நாளில், பத்திரிகைகள் வாயிலானும், நேராகக் கண்டவர்கள் மூலமாயும், சுவாமிகளின் தர்மோபதேசங்களை அறியலான கலிபோர்னியா வாஸிக ளெல்லோரும் அவரிடம் அளவற்ற அன்பும் அபிமானமும் பக்தியும் கொண் டொழுகினர். பிறகு பல கனவான்களின் விண்ணபத்திற் கிசைந்து சுவாமிகள் சான் பிரான்ஸிஸ்கோ வென்னும், கலிபோர்னியாவின் தலை நகரில் பிப்ரவரி மாதம் பிற்பகுதி முதல் மே மாதம் வரையில் வேதாந்த சேவை செய்திருந்தார். பல அறிவாளிகளும் சௌகரியமாக வரக்கூடிய வசதியான மாளிகை யொன்று சுவாமிகளின் வாஸஸ்தலமாக அமர்த்தப்பட்டது. அங்குச் சுவாமிகள் ராஜயோகம், கீதை, வேதாந்தம் ஆகியவற்றைக் குரு சிஷ்ய உபதேசக் கிரமப்படி உபந்நியசித்து வந்தார்.

'சான் பிரான் ஸிஸ்கோ'வில் சுவாமிகள்.

ஞாயிற்றுக்கிழமைகள் தோறும் மார்ச்சு ஏப்ரல் மாதங்களில் சான்பிரான்ஸிஸ்கோ 'ராட்மென்ஸ் ஹால்' 'கோல்டன் கேட் ஹால்' 'யூனியன் ஸ்குயர் ஹால்' ஆகிய மூன்று மண்டபங்களிலும் சுவாமிகளால் பொதுப் பிரசங்கங்கள் நடைபெற்றன. ஒரு சமயம் வாஷிங்டன் மண்டபத்தில் 'பக்தி' என்பது விஷயமாய் சொற்பொழிவொன்று நிகழ்ந்தது. இடையில் ஒருநாள் விட்டு ஒருநாள் அலமேதாவிலும், ஒக்லாந்திலும் உபந்நியாசங்கள் நடைபெற்றன. பொதுவாக புத்தபகவானின் தர்மோபதேசம், அராபியர்களின் மதம், வேதாந்த மதானுஷ்டானத்தின் எதிர்கால நிலை, கிறிஸ்துவின் லோகோபதேசம், முகம்மது நபியின் செய்தி, கிருஷ்ண பரமாத்மா அறன் வலியுறுத்தினமை முதலிய விஷயங்கள் முறையே மார்ச்சு மாதம் 18 - ம் தேதி

---

* Reverend Dr. Benjamin Fay Mills.

யும், ஏப்ரல் மாதம், ஒன்று, எட்டு, பதினைந்து, இருபத்திரண்டு, இருபத்தொன்பது ஆகிய தினங்களிலும் சான்பிரான்ஸிஸ்கோவில் பிரசங்கிக்கப் பெற்றன. அப்பால், மார்ச்சு மாதத்தில் வாஷிங்டன் ஹாலில் புத்தியும், அதன் பலமும் தன்மையும், கல்வியும் புத்தியும், மனோலயத்துவம், இயற்கையும் மனிதனும், ஜீவாத்ம பரமாத்ம சம்பந்தம், முக்தி, பிராணாயாமம் ஆகிய பிரசங்கங்கள் முறையே பதின்மூன்று, பதினைந்து, பதினாறு, பதினெட்டு, இருபது, இருபத்துமூன்று, இருபத்தேழு, இருபத்தொன்பதாந் தேதிகளில் நடைபெற்றன. இவையன்றி, ஏப்ரல் மாதம் மூன்று, ஐந்து, ஒன்பது, பத்தாம் நாட்களில் அதே மண்டபத்தில் தியானம், சமயானுஷ்டான தத்துவ ரஹஸ்யம், யோகங்கள், பூசாரியும் பூஜ்யரும், பூஜாக்கிரம ரகஸியம் என்ற பிரசங்கங்களும் நடைபெற்றன. அலமேதாவில் சுவாமிகள் ஏப்ரல் மாதம், பதின்மூன்று பதினாறு பதினெட்டாந் தினங்களில் மாலையில் மூன்று உபந்நியாசங்கள் செய்தார். அப்பிரசங்க விஷயங்கள் ராஜயோகம், மனோலயப் பிராணாயாமம், மதானுஷ்டானம் என்பன. அவாது ஓக்லந்து கடைசிப் பிரசங்கம் இந்தியரின் தத்துவக் கோட்பாடுகள் என்பதுபற்றி நிகழ்ந்தது. மேற்கூறப்பெற்ற சொற் பெருக்குகளனைத்திலும் சுவாமிகள், அன்பர்கள் கேட்கும் வினாக்கட்கு இறுதியில் தக்க விடை யளித்து அவர்களுக் கெழுந்த சந்தேகங்களைப் போக்கி வந்தார். இவ்விதம் சுவாமிகள் ஏப்ரல் மாதம் முழுதும் செய்தருளிய பிரசங்கங்க ளனைத்தும் பலதிறப்பட்ட விஷயங்களைச் சார்ந்ததே யாயினும், ராஜயோகத்தைத் தழுவியனவாகவே இருந்தன. இவற்றுள் பல, ஒலி எழுத்தாண்டு எழுதப்படவில்லை. அப்பொழுது சுவாமிகள் "ஐயோ! என்னருமை குட்வின்! பரோபகாரார்த்தமாகச் சரீரத்தை அர்ப்பணஞ் செய்து உழைக்கும் கர்மயோகியே! உனது சாங்கேதிக லேகக நிபுணத்துவம் யாருக்கு வரும்? நீ இல்லாதது எனக்குக் கை முறிந்ததுபோ லல்லவோ இருக்கின்றது" என்று கூறி வருந்தினார்.

'கலிபோர்னியா' வேதாந்த சேவையின் விருத்தி.

சுவாமிகளுடைய கலிபோர்னிய வேதாந்தசேவை அளவு கடந்து விருத்தி யடையலாயிற்று லஸ் ஆங்கிலீசிலும் பசதேனத்திலும் சுவாமிகளிடம் தர்மோபதேச மடைந்த அப் பிரதேச வாசிகள் வெகு முயற்சியுடன் வேதாந்த சபைகளை நடத்தி வந்தார்கள். அவர்கள் அடைந்துள்ள மேம்பாட்டையும் கொண்டுள்ள ஊக்கத்தையும் சுவாமிகள் கவனித்து அதிசயித்திருக்கையில், அவ்வன்பர்கள்

சுவாமிகளைத் தமக்கு மேன்மேலும் வழிகாட்டி உதவி புரியும்படி மன்றாடி வேண்டிக் கொண்டார்கள். சுவாமிகள் கலிபோர்னியாவின் வட பாகத்தில் அப்பொழுது மும்முரமாக உழைத்திருந்தாராதலின், அவர்கள் வேண்டுகோளுக்கு இணங்கக் கூடாமையை, வருத்தத்துடன் அறிவித்து, வேறோர் சந்நியாசியை அனுப்புவதாக அவர்களுக்கு வாக்குறுதி தந்தார். வடக்கில், சான்பிரான்ஸிஸ்கோ, ஓக்லந்து, அலமீடா முதலிய முக்கிய பட்டணங்களில் வேதாந்த சபைகள் மிக்க விமரிசையாக வேலைசெய்து வந்தன. கலிபோர்னியாவில் சுவாமிகளிடம் அடியாராகி அன்பு பூண்டவர்களுள் லஸ் ஆங்கிலீஸ் ஸ்ரீமதி. ஹெயின்ஸ்பரோ, டாக்டர் எம். ஹெச். லோகன், ஸ்ரீமதிகளான ஸி. எப். பெடர்சன், ஏ. எஸ். உல்பார்க் முதலானோர் முக்கியஸ்தர்கள். சான்பிரான்ஸிஸ்கோவில் ஸ்தாபிக்கப்பட்ட வேதாந்த சபைக்கு இவர்கள் முறையே தலைவர், உபதலைவர், காரியதரிசி பதவிகளை வகித்திருந்தார்கள். சுவாமிகள் பொது சொத்து ஆதலின், அவர் எங்கும் சாஸ்வத வாசஞ்செய்ய வியலாதென்றறிந்த கலிபோர்னியா வாஸிகள், தமக்கு நிரந்தர குரு ஒருவரை, அவர் கலிபோர்னியாவை விட்டுப் புறப்படுமுன் நியமித்தேக வேண்டினர். அதற்கேற்ப, முதலில் துரியானந்தரை உடனே புறப்பட்டு அங்கு வந்து சேரும்படி வரைய, மூச்சுவிடவும் பொழுதின்றி அகண்டானந்தரோடு நியூயார்க்கில் உழைத்துவந்த அவர் வா வியலாமற் போயிற்று. ஆனது பற்றிச் சுவாமிகள் மே மாதம் முடிவு வரையில் கலிபோர்னியாவிலேயே இருந்தார். கலிபோர்னியாவிலிருந்து சுவாமிகள் நீங்குமுன், அவரது பாதத்தில் உடல் பொருளாவி மூன்றினையும் சமர்ப்பித்து நின்ற அன்பர் குழாத்தினர், வேதாந்த மாணவர்களின் குருகுலத்திற்காக, சுவாமிகட்கு நூற்றறுபது ஏகர் விஸ்தீர்ணமுள்ள ஓர் விசாலமான பூமியை தானஞ் செய்தார்கள். இப்பிரதேசத்தைச் சுவாமிகள் முன்பே பார்த்திராவிடினும், இதைப் பற்றிப் பலர் கூறக்கேட்டதுண்டு. ரயில்வே ஸ்டேஷனுக்கு ஐம்பதுமைல் தூரத்திலும், குடியிருப்புக்குப் பன்னிரண்டுமைல் அப்பாலும் இவ்வேகாந்த ஸ்தலம் அமைந்துள்ளது. இவ்விடத்திற்கு மூன்றுமைல் தூரத்தில் ஓர் தபாலாபீஸ் மட்டும் உளது. அது பயிர் செய்யப்படாத பூமி; நாற்புறங்களிலும் குன்றுகளாலும் காடுகளாலும் அலங்கரிக்கப் பெற்றுளது; கலிபோர்னியா மாகாணத்தைச் சேர்ந்த கான் அன்டொனி என்னும் தாலுகாவிலுள்ளது. ஹமில்டன் மலையின் கீழ்ச் சாரலில் 'சான்டா கிளாரா கவுன்டி'

கலிபோர்னியாவில் 'சாந்தி ஆச்சிரம' சாஸனம்

(Santa Clara County) என்னும் சமுத்திர மட்டத்திற்கு 250 அடி உயரத்திலுள்ள பீட பூமி. சுருங்கச் சொல்லின் இதை அமரிக்காதேச மாயாவதி என்றே சொல்லலாம். ஏகாந்த ஸ்தலமான இப்பிரதேசத்திற்குச் சுவாமிகள் "சாந்தி ஆஸ்ரமம்" என்று பெயரிட்டார். ஆகஸ்டு மாதம் 2 ந் தேதி சுவாமி துரியானந்தர் முதன் முதலாக பன்னிரு மாணவர்களுடன் சென்று, பாரத பூமியின் புராதன வித்யாலயங்களைப் பற்றியும், குருகுல வாசத்தைப் பற்றியும் அம்மாணவர்களுக்கு உரைத்து, அவர்களை யோகாப்பியாசத்திற் பழக்கினார். அது முதல் சான் பிரான்ஸிஸ்கோ மடத்தின் அதிபதியான சந்நியாசி, ஆண்டின் இரண்டு மாதங்களைச் சிஷ்யகோடிகளுடன் இச்சாந்தி ஆஸ்ரமத்திற் கழித்து வருகிறார்.

இவ்வாறுழைத்த சுவாமிகள் 1900 - ம் ஆண்டின் வசந்த ருதுவில் கியாம்ப் டெய்லர் எனும் அம்மாகாணத்திலுள்ள ஓர் சிற்றூருக்கு ஓய்வின் பொருட்டு ஏகினார். மனோகரமாக கலிபோர்னியாவின் தேச நிலை அவருடைய தேகத்தைச் சிறிதும் பாதிக்கவில்லை. ஆனால் சுவாமிகள் விடாமல் பிரசங்கங்கள் செய்ததால் சற்று இளைத்துப் போயிருந்தார். இரண்டு மூன்று வாரங்கள் சிரம பரிகாரஞ் செய்துகொண்டு திரும்பவே, அன்பர்கள் அவரது தேகம் மெலிந்திருப்பது கண்டு "ஐயனே! தாங்கள் இளைத்திருப்பதைப் பார்க்கப் பார்க்க எங்களுள்ளம் கவலையடைகின்றது. முதலை வைத்துக் கொண்டல்லவோ வட்டிக் காசைப்பட வேண்டும். தாங்கள் அவசியம் ஏதாவது மருந்துண்ண வேண்டும்" என்று கூறி, பிரசங்கிப்பதினின்றும் தடுத்து ஓய்வு அளித்து, ஓக் தெருவிலுள்ள சிஷ்யர் டாக்டர் லோகன் அவர்கள் கிருகத்திற்கனுப்பி, டாக்டர் வில்லியம் பார்ஸ்டர் என்பவரைக் கொண்டு வைத்தியஞ் செய்து வந்தார்கள். அப்பால் சுவாமிகள் 'பகவத்கீதை'யைப் பற்றி 6, பார்லோரிலும், கிரோ தெருவிலும், ஓக் தெரு 770 நெ பிரசங்க மண்டபத்திலும் நான்கு சொற்பொழிவுகள் நிகழ்த்தினார். அவை மேயீ 24, 26, 28, 29, தேதிகளில் நடை பெற்றன.

சுவாமிகளுக்கு நிலா விருந்து.

கியாம்ப் டெயிலரில் சுவாமிகள் வெகு தூரம் உலாவி வருவதும், யோகாப்பியாசம் செய்வதுமாக தேகாரோக்யமடைந்திருந்தார். பஸதேனம், லஸ் ஆங்கிலீஸ் முதலிய நகரங்களுக்குச் சமீபத்திலுள்ள சிறு குன்றுகளில் சிஷ்யர்கள் சுவாமிகளை நிலாச் சாப்பாட்டிற் கழைத்து உபசரித்தார்கள். அந்த நிலவில், சுவாமிகள் சாப்பிட்டுக் கொண்டே

விஶேஷமாக ஹாஸ்யமான கதைகளையும், தமது இந்திய யாத்ரானுபவங்களையும்கூறி அவ்வன்பர்களை மகிழ்வித்தார். நட்பமாய் யோகானுபவங்களைப் பற்றியும் கன்மேந்திரிய ஞானேந்திரியங்களின் தன்மைகளையும் விஸ்தரித்துப் பேசினர். இப்படிச் சுவாமிகள் மாதர் குழாத்தில் ஞான சம்பந்தக் குழந்தையாயும், ஆடவரிடையே மகா குருவாயும் விளங்குவாரானர்.

லஸ் ஆங்கிலீஸ் வாசிகளும் மிஸ்மீயட் என்னும் லஸ் ஆங்கிலீஸ் பிரபல சௌகாரின் புத்திரிகளுமான மூன்று பெண்மணிகள் சுவாமிகளிடம் பேரன்பு பூண்டொழுகி சகல சிஷ்ருஷைகளு மியற்றி வந்தார்கள். அம்மூவருள்ளும் ஸ்ரீமதி. ஹெயின்ஸ்பரோ வென்னும் அம்மணி உத்தமகுண முடையவளாய் சுவாமிகளைத் தனது உயிர்போலப் பாவித்து தொண்டாற்றினள்.

இவ்விதம் சுவாமிகள் நெருக்கடியான சேவையில் ஈடுபட் டிருந்தாரேனும், அவரது திருவுள்ளம் தாமரையிற்பட்ட நீர் போல் பற்றற்ற நிலையிலிருந்தது. முக்யமாக அலமீடாவில், உழைப்பால், அவரது கர்ம சரீரம் களைப்படைந்து துரும்பாய் இளைத்துப் போயிருக்குங்கால்,

"கரும்பாட்டிக் கட்டி சிறுகாலைக் கொண்டார்
துரும் பெழுந்து வேங்காற் றுயராண் குழவார்" (நாலடியார்)

ஆதலின், அவர் திவ்ய பரிபூரண சமாதியிற் கூடுந் தருணத்தையே பெரிதும் விரும்பி யிருந்தார். கைவல்ய நவநீதராய் சுவாமிகள் எழுதிய பின் வருங் கடிதமே அவருடைய உள நிலையை விளக்கப்போதிய சாட்சியா யமையும். 1900 - ம் ஆண்டு ஏப்ரல்மீ 18உ யிட்ட அக்கடிதத்தின் சாராம்சமாவது:—

சுவாமிகள் கைவல்ய நவநீதராய் எழுதிய கடிதம்,

"உழைப்பது எனக்கு இப்பொழுது சிரமமாகவே இருக்கின்றது என்னுடைய வேலை சாஸ்வதமாக அடங்கவும், எனது ஆன்மா தேவியோடு மன்னிக் கலக்கவும் நீங்கள் தோத்தரியுங்கள். அன்னை தன் வேலையைத் தானே நடத்துவாள். என் புத்தி, வாவரப் பிரகாசமடைந்து வருகிறது. தேக சாந்தியைக் காட்டிலும் ஆத்ம சாந்தியையே நான் அதிகம் விரும்புகிறேன். யுத்தங்கள் முடிந்து ஜய பேரி முழங்குகின்றது, நான் எனது பொருள்களை மூட்டை கட்டி விட்டேன்; அச்சுமையை ஏற்றுக்கொள்ளுமாறு இறைவனை வேண்

டிக் கொண்டிருக்கிறேன். சிவா! சிவா! எனது வாழ்வென்னும் படகை அக்கரை சேர்த்துவிடு! எப்படியிருந்தாலும் தக்ஷிணேஸ்வரத்தில் அவ்வில்வ மாத்தடியில் அவ்வற்புத குருநாத மூர்த்தி, ஸ்ரீராம கிருஷ்ணரின் செந்நாவினின் றெழுந்த சீர்பெற்ற மொழிகளை ஆச்சரியத்தோடும் விளையாட்டுப் புத்தியோடும் துள்ளித் திரிந்து கேட்டுக்கொண் டிருந்த சிறுவன்தானே நான்; நான் என்ன செய்ய வல்லவன்; அவர் தூக்கிவைத்த மூட்டையைச் சுமக்கும் சுமைதாங்கி யென்பதையன்றி எனக்கு வேறு என்ன யோக்யதை கௌரவம் உண்டு''

''திரும்பத் திரும்ப நான் அவரது திவ்யோபதேசங்களைக் கேட்டுக்கொண்டிருக்கிறேன். அவ்வருண் மொழிகள் எனது ஆன்மாவை முடுக்கி எழுப்புகின்றன; எனக்குப் பற்று முறிந்தும், அன்பு மறைந்தும், சேவை யென்னும் சுவை அற்றும் போயின. எனது குருநாதருடைய குரல் என்னைக் கூவி யழைக்கின்றது ''ஐயனே! இதோ! வந்தேன்! வந்தேன். இறந்தவர்கள் இறக்கிறவர்களைப் புதைக்கட்டும். நான் இதோ புறப்பட்டு விட்டேன்! குருநாதா! இதோ வந்து விட்டேன். இதோ நிர்வாண தரிசனம் என் கண்முன் தோன்றுகின்றது. நான் பிறவி எடுத்தற்காக மகிழ்கின்றேன்; நான் கஷ்டங்களை அனுபவிக்க நேர்ந்தது பற்றிச் சந்தோஷிக்கிறேன். தவறுகள் பல விழைத்தேன்—அதற்காகவும் உவந்தேன்— சச்சிதானந்த சொரூபத்தில் கலக்கப் போவதைக் குறித்தும் குதூகலிக்கின்றேன். நான் என்னை நம்பி யிருக்கும் எவரையும் கைவிட்டுப் போகின்றேனில்லை. எவ்விதப் பற்றோடும் நான் மரிக்கமாட்டேன். இந்த கர்மதேகம் என்னைவிட்டாலுஞ் சரியே; விடாதொழியினுஞ் சரியே; விழுந்தாலுஞ் சரி; வீழாதாயினுஞ் சரி; நான் பந்தமற்ற நிலையை எய்துவேன்; இந்தப் பழைய மனிதன் போனது போனதேதான். என்றும் மீளப்போவதில்லை—நிச்சயமாக இல்லை.''

குருநாதத் தோத்திரம்.

''வழிகாட்டியும், குருவும், தலைவரும், நல்லாசிரியரும் ஆகியவர் முன்பே மறைந்தார்—இளைஞனும், மாணவனும், தொண்டனும் ஆன அடியேன் செல்ல நிற்கிறான்.''

''எனது வேலைக்குப் பின்னால் ஆசையும், அன்புக்குப் பின்னால் அழகிய சரீரமும், தூய்மைக்குப் பின்னால் பயமும், வழிகாட்டுந் தன்

மைக்குப் பின்னல் அதிபத்ய வேட்கையும் பதுங்கிக் கொண்டிருந்தன. அவை, இப்பொழுது மறைந்தொழிந்தன; நான் திருந்தி வருகிறேன். தாயே! ஜெகதீஸ்வரி! நான் வருகிறேன். உனது ஹிருதயத்தில் வைத்து என்னை இயக்கமற்ற நிலையில் ஏகாந்தத்தில் நீ காப்பாற்றி யருள்வாயாக!''

சுவாமிகள் பிணியுற்றிருந்த தமது தேக நிலையைச் சற்றும் பாராட்டாமல் அளவுக்கு மீறியே கலிபோர்னியாவி லுழைத்துவிட்டார். முன்போலவே இந்த யாத்திரையிலும் அவர் வேதாந்த சேவை புரிந்தமையால் அவருடைய தேகோபாதி நீடித்ததாகப் பிடிக்கலுற்றது. இயந்திரங்களுக்குக் கூடவல்லவா ஓய்வு கொடுத்து எண்ணெய் போடுகிறார்கள். மானுட சரீரம் எவ்வளவுதான் சிரமப் பட்டு உழைக்கலாம்? அவரது கலிபோர்னியா வாசத்தின் பிற்பகுதி யில், அப்பொழுது லண்டனிலிருந்த லெக்கெட் தம்பதிகளிட மிருந்து, தேக சுகத்தின் பொருட்டு, சற்றும் தாமதமின்றி உடனே புறப்பட்டு வருமாறு கடிதமொன்று அவருக்குக் கிடைத்தது. அவர்கள் ஜூலை மாதத்தில் நேராக பாரிஸுக்கே வந்து விடும்படி எழுதி யிருந்தார்கள். மற்றும், பாரிஸ், சர்வ மத சரித்திர காங்கிரஸ் மகா சபையிலிருந்து அதன் 1900 - ம் வருடத்திய சம்மேளன, ''பிரதிநிதி அங்கீகாரக் கமிட்டியார்'' சுவாமிகளைக் காங்கிரசுக்கு எழுந்தருளும்படி வேண்டி, ஓர் கடிதம் வரைந்திருந்தார்கள். ஆக, இவ்விரு காரணம் பற்றிச் சுவாமிகள் தமது வேலையை அப்பொழுது நிறுத்த நேரிட்டது. அமரிக்காவை விட்டகலு முன்னர், சின்னாட்கள் நியூயார்க்கில் வசிக்க வேண்டுமென்று அவர் விரும்பினு ராதலின், மே மாத இறுதி யில், சான்பிரான்ஸிஸ்கோ, அலமேதா, ஓக்லந்து முதலிய வாசிக ளிடம் விடை பெற்றுக்கொண்டு, மனங் கலங்கிய அவர்களைத் தேற்றி விட்டு, துரியானந்த சுவாமிகளை கலிபோர்னியா வேதாந்த மடத்தின் தலைவரா யிருக்கும்படி உடனே அனுப்புவதாக அவர்களுக்குத் தேறுதல் கூறிப் புறப்பட்டார். இரயில் பிரயாணம் வெகு ரம்யமாகவே இருந்தது. வழியில், சிகாகோ, டிராயிட் முதலிய இடங்களில் இறங்கித் தமது பழைய அன்பர்களைப் பார்த்து விடைகொண்டு, நியூயார்க்குக் கேகி வேதாந்த சபையின் நிலயத்தில் தங்கினர். சாதாரணமாக அங்கு கூடும் வேதாந்த வித்யார்த்திகளுக்கு உபதேசிப்பதும், அபூர்வ மாக இரண்டோ ரிடங்களில் பிரசங்கம் செய்வதுமாக முன் யாத்தி

நியூயார்க்கில் கடைசி வாசம்.

யையில் சஹஸ்ர த்வீபத்தில் வசித்ததுபோ லிருந்தார். வேதாந்த சேவையின் விருத்தி அவருக்கு அளவற்ற திருப்தியை அளித்தது. மிஸ்டர் லக்கட் துரை யவர்கள் வேலைத் தொந்தரவால், தமது தலைவர் பதவியை ராஜிநாமா செய்துவிட, கொலம்பியா காலேஜ் வித்வான் டாக்டர் ஹேர்ச்சில். ஸி. பார்க்கர் என்பார் சுவாமிகளின் முன்னிலையில் ஏகோபிதமாக அப்பதவிக்குத் தேர்ந்தெடுக்கப் பெற்றார். ஹார்வர்ட் சர்வகலாசாலை சம்ஸ்கிருத வித்வான்கள் ரெவரண்டு டாக்டர் ஆர். ஹீபர் நியூடன், சார்லெஸ் ஆர். லான்மென் ஆகிய இருவரும் வேதாந்த சபையின் முன்னேற்றத் துறையில் ஊக்கமுடன் பாடு பட்டு வந்தார்கள்.

அதன்மேல், சுவாமிகள் தாம் புறப்படுமுன் துரியானந்தரைக் கலிபோர்னியாவுக்கு உடனே ஏகுமாறு கூற, சம்மதித்த அவரும் தான் எப்படி உழைக்க வேண்டுமென்பது பற்றி உபதேசிக்கும்படிச் சுவாமிகளை வேண்டினர். சுவாமிகள் 'போ—போய் கலிபோர்னியாவில் ஆஸ்ரமத்தை ஸ்தாபி. வேதாந்த துவஜத்தை நாட்டு அங்கே! இக்கணம் முதல் இந்தியாவென்னும் எண்ணத்தை முற்றிலும் மறந்துவிடு; தூயவாழ் வியற்றி வா! பிறகு 'ஜகதி' உன்னைக் காப்பாற்றுவாள். அது அவள் கடமை'' என்றருளினர்.

இவ்விஜயம் முதல் சுவாமிகளிடம் பேரன்பு பூண்டு, வேதாந்த சபையின் வளர்ச்சியிலேயே கண்ணுங் கருத்துமா யிருந்தவர்களுள் கொலம்பியா சர்வகலாசாலை அக்கிராசனாதிபதி வித்வான் **சேத்லோ (Seth Low)** மேற்படி காலேஜ், எ. வி. டப்ளியூ ஜாக்ஸன், நியூயார்க் கலாசாலைப் புலவர்கள், வித்வான் தாமஸ் ஆர். பிரைஸ், இ. என். கல்ஸ்மேன், நியூயார்க் சர்வகலாசாலை சொற்பொழிவாளர்களான ரிச்சர்ட். போதியல் என். எம். பட்லர், என். ஏ. மேல்லவ்த், இ. ஜீ. சிஹ்லர், கால்வின் தாமஸ், எ. கோன் ஆகிய இவர்களை முக்கியமாய்க் குறிப்பிடலாம். சிஷ்யர்களுள் மிஸ். வால்டு அடிக்கடி சுவாமிகளைச் சந்தித்து அவருடைய உபதேசப்படி எதிர்கால வேலைத் திட்டத்தை நிச்சயித்துக் கொண்டாள். கடைசிப் பத்து நாட்களையும் சுவாமிகள் நியூயார்க்கில் சாவகாசமாகக் கழித்து, அன்பர்களோடு அளவளாவியிருந்து, ஜூலை மீ 26வ கப்பலேறி பாரிஸுக்குப் பிரயாணமானார். அன்று, கடற்கரையில் அன்பர்கள் ஆயிரக்கணக்கில் கூடியிருந்து வழியனுப்பினார்கள்.

சுவாமிகள் 1900 - ம் வருடம் ஆகஸ்டுமாத ஆரம்பத்திலிருந்து டிசம்பர்மாத முற்பகுதி முழுதும் பாரிஸிலிருந்து, திடீரென்று பிரயாணமாகி இந்தியாவுக்குத் திரும்பினர். இந்த ஐரோப்பிய வாசத்தில் அவர் அநேகமாக பாரிஸிலும், 'பிரட்டனி' மாகாணத்திலுள்ள லான்னியனில் கொஞ்சகாலமும் இருந்தார்; வீயன்னு, கான்ஸ்டான்டிநோபிள், ஏதன்ஸ், எகிப்து, முதலிய ஸ்தலங்களிலெல்லாம் சிலநாட்கள் தங்கி யாத்திரை செய்தார்; அக்டோபர் மாதம் இருபத்து நான்காம் தேதிமாலை வரையில் பாரிஸி லிருந்தபின், ரயில்மார்க்கமாக ஸ்டாம்பௌல் (Stamboul) என்னும் நகருக்கேகினர்.

பாரிஸில் முதலில் 'பிளேஸ் டெஸ். எடட்ஸ் யுனிஸ்' என்னும் லக்கட் தம்பதிகளின் அழகிய மாளிகையிலும், பின்னர் பிரிட்டனுக்குச் சென்று மீண்டபின் ஸ்ரீமதி ஒலிபுல்லோடும், ஞானியும் பத்திரிகாசிரியரும், பிரசித்த வசன நூலாசிரியரும் சமய தத்துவ ஒப்புவமை ஆராய்ச்சித் துறையில் பாடுபட்டுப் பயனடைந்தவருமான மான்ஷியர் ஜீவிஸ் பிளாய்ஸ் என்னும் பெரியா ரில்லத்திலும் வசித்தார். இவடைய ஸ்நேகம் சுவாமிகள் பிரஞ்சு பாஷையிற் பயின்று, விரைவில் பேசுந்திறனடைய அனுகூலமாயிற்று. லக்கட் தம்பதிகளுடன் வசித்த நாட்களில், கீர்த்தி வாய்ந்த பிரஞ்சு நாட்டுக் கல்விமான்களனைவரும் சுவாமிகளுடைய கூட்டுறவைப் பெறும் பாக்கியத்தை அடைந்தனர். அவ்விடத்திலேயே கவிகளும், தத்துவ சாஸ்திரிகளும், சொற்பொழிவாளர்களும், சித்திரக்காரர்களும், சிற்பிகளும், சாஸ்திராராய்ச்சிக்காரர்களும், பாடகர்களும், நடிகர்களுமான பிரமுகர்கள் பலரைச் சுவாமிகள் சந்தித்துக் களித்தார். இவர்க ளனைவரும் சுவாமிகளுடைய அத்வைத வேதாந்த உபதேசங்களிலே லயித்து ஹிந்துமத தத்வோபதேசப் பெருமிதத்திலே ஆழ்ந்து அவரிடம் பக்தியும் விஸ்வாஸமு முடையாரானர்கள். சுவாமிகள் இதுவே தக்க சமயமும் சந்தர்ப்பமுமென ஓர்ந்து துரிதமாகப் பாரத நாட்டின் சமயப் பெருமையைப் பரப்பத் தொடங்கி விட்டார். அவரது அழகிய திருமேனியாலும் பால் வடியும் பசு முகத்தினாலும் இனிய வசனங்களாலும் வித்யாசாரமாக விளங்கிய பெருமையாலும் பிரஞ்சுதேசப் பிரமுகர்கள் அனைவரும் அவரிடம் ஈடுபட்டு விட்டார்கள்.

சுவாமிகள் பாரிஸ் சமய சரித்திர காங்கிரஸ் மகா சபையில் பிரஞ்சு பாஷையில், சம்ஸ்கிருத சுலோக மேற்கோளுடன் பேசக்

கருதி இரண்டு மாதங்கட்கு முன்னரிருந்தே பிரஞ்சு பாஷையைக் கற்கத் தொடங்கினர். மற்ற மதங்களின் பிரதிநிதிகளாய் அங்கு கூடியவர்கள் சுவாமிகளைக் கண்டு அஞ்சி அதிசயமுற்று பயபக்தியுடன் அன்பு பூண்டனர். ரோமன் கத்தோலியரின் பலத்த எதிர்ப்பால், முன்பு சிகாகோவில் நடைபெற்றது போன்றே நடத்தவேண்டுமென்ற இக்காங்கிரஸ் மகா சபையின் பிராரம்ப நோக்கம் போய், சர்வ தர்ம மகா சபையை நடத்த வியலாமல் சாதாரண மதச் சரித்திர விளக்கப் பிரசங்கங்களோடு இக்காங்கிரஸை ஒருவிதமாய் முடித்துவிட நேர்ந்தது.

பாரிஸ் மதச் சரித்திர காங்கிரசுக்குச் சுவாமிகளின் விஜயம்

வீர கிறிஸ்தவ சமயத் தற்காப்புக்காக, எந்த சமயத்தின் கொள்கை, அனுஷ்டானங்களைப் பொறுத்த எத்தகைய தர்க்கமும் இக்காங்கிரஸில் நடைபெறலாகாதென்று முடிவு செய்யப்பட்டிருந்தது பிராரம்ப காலத்திலிருந்து அந்நாள்வரை, அந்தந்த சமயங்களின் வளர்ச்சிக் கிரமங்களையும், கொள்கை மாறுதல்களையும், ஸ்தாபக பிரவர்த்தகர்களின் திவ்ய சரித்திரங்களையும் சகலருக்கும் எளிதில் புலப்படுமாறு எடுத்துரைக்கும் ஆற்றல் மிக்க மகான்கள் அனைவரும் அங்கு கூடியிருந்தார்கள். அம்மகா சபையின் கூட்டங்களுக்குச் சுவாமிகள் தவறாது சென்றாரெனினும் அதிகமாகப் பேச அவரது தேகநிலை இடந்தரவில்லை. சுவாமிகள் புரிந்த பிரசங்கங்கள் இரண்டேதான். சுவாமிகளது முதல் ஐரோப்பா விஜயத்திலிருந்து அவருடைய பிரசங்கங்களை நேரிற் கேட்டும், அவர் எழுதியுள்ள வேதாந்த நூல்களை வாசித்தும் அவரிடம் அளவற்ற கௌரவம் பாராட்டிவந்த பிரபல பலதேசக் கல்விமான்களனைவரும் அவரது ஹிந்துமதப் பிரசங்கத்தைக் கேட்க மிக்க ஆவலுடனிருந்தார்கள். அக்காங்கிரஸ் நிர்வாக சபையால் இயற்கை வணக்கமே ஹிந்துக்களின் வேதாந்த மென்னும், சில மேல்நாட்டு அறிஞர்களின் வாயை அடக்கி, அல்லவென்று தர்க்க பூர்வமாய் ஸ்தாபிக்க வேண்டுமென்று பலர் சுவாமிகளை வேண்டினர். அவர் பலத்த காகோஷத்தினிடையே எழுந்து, முதலில் ஜர்மன்தேச அறிஞர் மிஸ்டர் கஸ்டவ் ஆப்பர்ட் (Gustov Oppert) என்பார், பாடுபட்டு சாளக்கிராம சீலம், சிவலிங்கம் ஆகிய இரண்டின் மூலத்தையும்பற்றிக் கூறிய கூற்றை மூடபக்தி மலிந்த கட்டுக்கதை என்று மறுத்து, அதற்காதாரமான வேத சூத்திரங்களையும், அதர்வண வேத சம்ஹிதையையும் மேற்கோளாகக் காட்டி, அவற்றின் மூல புரு

ஷர் யுபஸ்தம்பர் என்றும், அவை பரப்பிரம்ம சொரூப நிரூபணார்த்த மாக எழுந்தன வென்றும் உணர்த்தினார்.

இரண்டாவது பிரசங்கத்தில், சுவாமிகள் 'வேதங்களே ஹிந்து மதத்திற்கு ஆதாரமானவை யென்றும், பௌத்த சமயமும் வேதத் தால் விளங்கிய மதமே யென்றும், புத்தருக்கு முற்பட்டது ஸ்ரீகிருஷ்ணாவதாரமென்றும் ஸ்தாபித்தார்; கிரேக்க நாகரீகம் இந்தியாவில் பரவியதற்கான ஹேதுக்களை கூர்ந்து உரைத்தார்; கீதை, மகா பாரதத் திற்குச் சற்று முந்தியதே யன்றி பிற்பட்டதன்று என்று அத்தாட்சி யுடன் விளக்கினார்; "போலி ஆராய்ச்சியின் மமதையால் மேல் நாட்டு அறிஞர்கள் இந்தியாவின் சகலவித மேன்மைக்கும் கிரேக்க தேசமே குருஸ்தானம் வகிக்கத் தக்கதென்று தருக்கிக் கூறுவார்கள். சில விஷயங்களில் ஒற்றுமை யிருப்பதால் மட்டும் நாம் எதையும் மெய்மறந்து பேசிவிட லாகாது. எந்த துரைமகனாவது ஹிந்துக்களின் எல்லாவித மேன்மைக்கும் கிரேக்கியமே ஆதாரமானதென்று நிரூபிக்க முடியுமா?" என்று சுவாமிகள் வீரமொழி பகர்ந்து, அங்கு வீற்றிருந்த வித்வான் மோக்ஷமூலரைத் திரும்பிப் பார்த்த வண்ணம், அவரது ஆரிய ஆராய்ச்சிகளில் தமது தேசாபிமானத்தால் எழுந்துள்ள சில தவறுதல்களைப் பற்றிப் பேசி முடித்தார். இவ்விரண்டு பிரசங்கங்களையும் கேட்டவர்கள் அனைவரும், அவருடைய முடிவுகளை முற்றிலும் ஆதரித்துத் தமக்கு அதுவரை ஏற்பட்டிருந்த சங்கைகள் நீங்கப் பெற்றார்கள்.

பாரிஸ் காங்கிரஸ் மகாசபையில் சுவாமிகளின் வீரமொழிகள்

சுவாமிகள் பிரஞ்சு தேசத்தில் அம் மதச் சரித்திர காங்கிரசுக்கு முன்பும் பின்பும் கண்கூடாகக் கண்ட முக்கிய விஷயங்களை "கிழக்கும் மேற்கும்" (East and the West) என்ற நூலின் கண் விரிவாக வரைந்துள்ளார். அதில் மத ராஜீய தேசிய நாகரீக விஷயங்களில் மேல் நாடுகளுக்கும் இந்து தேசத்திற்கும் தொன்று தொட்டுள்ள ஒற்றுமைகளும் வேற்றுமைகளும் காரணங்களுடன் நன்கு விளக்கப்பட்டுள்ளன. கிறிஸ்தவர்கள் கன்னிமரி அம்மையைப் பூசிப்பதும் ஹிந்துக்கள் தேவியை வழிபடுவதும் போன்ற பல தேவதா உபாசனா உண்மைகளும் அந்நூலுள் அனந்தம்.

பாரிஸ் நகரில் சுவாமிகளுடன் மிகவும் நெருங்கிப் பழகிய மேதாவிகள் எடின்பர்க் சர்வகலாசாலைப் புலவர், பட்ரிக் ஜெட்டெஸ், பிரஞ்சு

தேசக் கல்விமான்களான மான்ஷியர் ஜூல்ஸ் பிளாய்ஸ், பிரீஹியா சிந்தீ, மிஸ்டர். ஹிராம் மாக்ஸிம், மாடம் கால்வி, மாடம் சாரா பர்ன் ஹார்ட், பிரின்ஸெஸ் டெமிடாப், வங்கமா தேவியின் வரப்புத்ராரான ஸ்ரீ. ஜெகதீஸ் சந்திரபோஸ் முதலியோரார்வர். ஜெ. ஸி. போஸ் அவர்கள் எவரும் அதுவரை வெளியிடாத சாஸ்திர உண்மைகளைக் கண்டு பிடித்த மகானுபாவராதலால், பாரிஸில் நடைபெற்ற அக்காங்கிரஸின் சாஸ்திராராய்ச்சிப் பிரிவினர் அவரை வரவேற்று சிறப்பித்தார்கள். போஸ் அவர்கள் சுவாமிகளுடன் அன்யோன்யமா யிருந்து கலந்து கொண்டார். இப்படி யிருக்கும் நாளில், ஒரு சமயம் ஒரு சிஷ்யை, தமது ஆசிரியரான ஓர் மேல் நாட்டு சாஸ்திர நிபுணர் தாமரையின் வளர்ச்சியைக் கண்டு பிடித்துக் கொண்டிருக்கிறரென்று சில பிரமுகர்கள் நிறைந்த கூட்டத்தில் யாவரும் கேட்குமாறு கூற, சுவாமிகள் உடனே "அது ஒரு பிரமாதமா! எங்கள் டாக்டர் போஸ், அந்த தாமரை பேசுகிறதென்று பிரமாணத்துடன் காட்டுகிறரே" என்று வங்காளிக்கு வங்காளி விட்டுக் கொடுக்காமல் கூறி, அம்மாதின் வாயை அடக்கினர். அதற்கு நாம் 'சபாஷ்' கூறுவோம்.

எங்கள் டாக்டர் போஸ்.

இக்காங்கிரஸ் முடிவடைந்ததும் சுவாமிகள், ஸ்ரீமதி ஒலி புல் அம்மையின் கோரிக்கைக் கேற்ப பிரிட்டனியிலுள்ள லன்னியனில் வசிக்கச் சென்றார். அமெரிக்காவிலிருந்து அப்பொழுது நிவேதிதா தேவியும் அங்கு வந்து சேர்ந்தாள். இந்நாட்களில் சுவாமிகள் பௌத்த சமய விஷயமாய்ப் பல பேருண்மைகளைப் புகட்டியதைத் தவிர வேறு எவ்வித வேலையையும் செய்ய அவருடைய உடல் நிலை இடந்தரவில்லை. ஹிந்து மதத்திற்கும் புத்த தர்மத்திற்குமுள்ள தாரதம்யங்களை அவர் உரைத்தருளினர். "பௌத்த சமயம் உண்மையானதுதான். புனருத்தாரண மென்பது மட்டும் வெறும் மரீசிகை. ஹிந்து மதத்திற்கும் பௌத்த மதத்திற்குமுள்ள கொள்கைப் பேதங்களுள், பௌத்த மதம் 'எல்லாவற்றையும் மாயை என்று நீ யறியக்கடவாய்' என்று கூறும். ஹிந்து மதமோ 'இந்த மாயைக்குள் சத்திய வஸ்து உளதென்பதை நீ உணர்ந்து எழக்கடவாய்' என்றியம்பும். இவ்வுண்மைகளை அறிவதற்கான வழிகளைப் பற்றி ஹிந்து மதம் எவ்விதக் கடுமையான சட்டங்களையும் ஏற்படுத்தி நிர்ப்பந்தப்படுத்த வில்லை. ஆனல் பௌத்த தர்மமோ, கடுந் தவச்

பௌத்த ஹிந்து மதக்கொள்கைகளின் பேதா பேதங்கள்

சந்நியாசி நிலையையே வலியுறுத்துகின்றது. 'எப்படியும் ஈஸ்வரனை யடையலாம். எந்தப்பாதையை நீ தேர்ந்தாலும் அதன் வழியே சரியாக நடந்தால் எல்லையை அடைவது திண்ணம்' என்பது ஹிந்து மதத்தின் முடிவு" என்று சுவாமிகள் கூறியருளினார். சிலவேளை சுவாமிகள் புத்தரை மானஸீகமாக அத்வைத நிஷ்டராக்கி, சங்கராசாரியரோடு எதிர்க்கவைத்து இருவரின் போதனுசக்தியையும் கண்டு மகிழ்வார். புத்தபகவானைப்போன்ற காருண்ய மனமும், சங்கரரை நிகர்த்த விவேகமுமே மனிதப் பிறவியின் மிக மிக உயர்ந்த பதவிகளென்றும் சுவாமிகள் உரைத்து "இந்த அவனியெங்கும் நான் கற்றும் கேட்டும், கண்டதுமான மகான்களுள் இவ்விரண்டும் கூடி ஒருருவாய் உன்னத பூர்த்தியாய் விளங்கியவர் ஸ்ரீராம கிருஷ்ணர் ஒருவர்தான்!' எனப் பகர்ந்து ஆனந்தக் கண்ணீர் விட்டார் ஒரு சமயம்.

பிரிட்டனியிலிருந்து சுவாமிகள் புறப்படு முன்னரே, நிவேதிதா தேவி ஹிந்து ஸ்திரீ தர்மத்தை இங்கிலாந்து மாதர் சமூகத்திற் பரப்புதற் பொருட்டு, தனக்கு விடையும் ஆசியும் அளிக்குமாறு சுவாமிகளை வேண்ட, அவர் "தபஸ்வினீ! முகம்மதியர்களுள் ஒரு பிரிவினர் புதிதாகப் பிறந்த குழந்தையை எடுத்து உச்சிமோந்து 'கடவுள் உன்னைப் படைத்தாரெனில் நீ அழிக! அலி உன்னை சிருஷ்டித்தாரெனில் நீ வாழ்க!" என்று ஆசி கூறுவது வழக்கமென்று நான் கேள்விப்பட்டிருக்கிறேன். அவர்கள் குழந்தையைப் பார்த்து இங்ஙனம் கூறுகிறார்கள். ஆனால் நான் உனக்கு அதே வாழ்த்தை இன்றிரவு வேறு பொருளில் வழங்குகிறேன். நீ பிரபஞ்சத்திற் சென்று அஞ்ஞான இருளைப் போக்குவாயாக; அந்த வல்லமையை நீ என் வாயிலாக அடைந்திருந்தால் அழியக்கடவை; தேவியின் வரப்ரசாதம் உனக்குப் பரிபூரணமாக ஏற்பட்டிருந்தால் நீ சிரஞ்சீவியாய் வாழக் கடவை" என்று கூறியருளினார்.

நிவேதிதா தேவிக்கு விடையளித்தல்.

அதன்பின் சுவாமிகள் பிரிட்டனியிலிருந்து பாரிஸ் பட்டினத்திற்கு வந்து உயர்குலக் கல்விமான்களின் உபசரணைகளை ஏற்றிருந்தார். எவ்வளவோ நூற்றாண்டுகட்கு முன்னரே ஹிந்துமதமானது சுமத்ரா, ஜாவா, போர்னியோ, செலிபீஸ், ஆஸ்திரேலியா, திபேத், சைனு, ஜப்பான், சைபீரியா வரையில் வியாபித்திருந்த தென்பதைச் சுவாமிகள் அவர்களுக்கு போதிய சான்றுகளுடன் புகன்றருளினார். அவருடைய பாரிஸ் வாஸம் முழுவதும் நிகரற்ற சொற்பொழிவாளரும், சமய தத்துவ ஆராய்ச்சி சம்பன்ன

ரும், ஐரோப்பா முழுவதும் பெரும்புகழீட்டியவருமான மான்ஷியர் சார்லிஸ் லாய்சென் என்னும் பாதிரிப் பெருந்தகையாருடன் மத ஆராய்ச்சி விஷயத்திலேயே கழிந்தது. அப்பெரியார், சுவாமிகளிடமிருந்து வைராக்யம், துறவு யோகம் முதலியவற்றின் விரிவுரைகளைக் கேட்டு அஞ்சலி செய்து அன்பராயினர்.

சுவாமிகள் சில நாட்கள் பிராஞ்சு தேசத்தில் பெரும்பெயர் படைத்த அறிஞர்கள் பலரோடும் நட்புடையவரும், நல்ல கல்விமானுமான எம். ஜூல்ஸ். பிளாய்ஸ் அவர்களின் கிருகத்தில் வசித்தார். வேதாந்த மதத்தை வெகு காலமாகப் போற்றிவரும் விக்டர் ஹியூகோ, லாமர்டைன் என்னும் பிரஞ்சு கலைஞர்களும், கோதி, சில்லர் என்னும் ஜர்மானியப் புலவர்களும் சுவாமிகளுடைய சிநேகிதர்களானார்கள். இதுபற்றிக் கல்வித்துறையில் மகோந்நத நிலையை யடைந்துள்ள பிரான்ஸ் தேசத்தில் வேதாந்த சேவைசெய்ய சுவாமிகளுக்கு நல்ல சமயம் வாய்த்தது. வித்வான் ஜெட்டெஸ் அவர்களோடு சுவாமிகள் பன்முறை ஐரோப்பிய நாகரிக வளர்ச்சி, பழங்கால கிரேக்க நாகரிகம் முதலிய விஷயங்களைக் குறித்துச் சம்பாஷித்தார். மேல் நாடுகளெல்லாவற்றிலும் நாடக மேடையில் நிகரற்று நடன சிங்கமென்று கீர்த்தி வாய்ந்திருந்த ஸ்ரீமதி சாரா பர்ன் ஹார்ட் என்னும் சுவாமிகளின் பழைய சிநேகிதை இப்பொழுது அவரிடம் விசேஷ அன்புடையவளாயிருந்தாள். அப் பெண்மணி சுவாமிகளின் முன்னிலையில் இந்தியா என்றொரு நாடகம் நடத்தினாள். தான் சீக்கிரத்தில் இந்தியா முழுவதும் யாத்திரை செய்து, தனது ஜன்மத்தைச் சாபல்யமாக்கக் கருதி யிருப்பதாயும், அதற்கு ஏழாம் எட்வர்ட் சக்ரவர்த்தி யவர்கள் வேண்டிய சௌகரியங்களைச் செய்து தருவதாய் வாக்களித்திருப்பதாயும் அம்மாதரசி சுவாமிகளிடம் கூறினாள்.

தெய்வீக சாரா.

"நான் இந்தியாவுக்குப் பிரயாணமானால் எவ்வளவோ லக்ஷ ரூபாய்கள் செலவாகும்; தனிரயிலும் ஊர்திகளும் இல்லாமல் நான் புறப்படமாட்டேன். உடைக்கு ஒருலக்ஷ ரூபாய் ஆகும்" என்று லட்சத்தை அம்மாது லட்சியஞ் செய்யாமல் பைசாவாக மதித்துப் பேசினாள். மேல்நாடெங்கும் "தெய்வீக சாரா' என்று அவ்வணங்கு பிரசித்தி யடைந்தவள். ஆண்டுதோறும் எவ்வளவோ லட்ச ரூபாய் சம்பாதித்தும் கவலையின்றி ஒரு ராஜாங்கத்தின் செலவைக் காட்டிலும் அதிகமான பொருளை ஆடம்பர வாழ்க்கை நிமித்தமாகச் செலவுசெய்து வருவதைக்கண்ட சுவாமிகள், "எங்

குமே நாடகக்காரரும் சங்கீத வித்வான்களும் பொருள் சம்பாதிப்பதும் வீண் விஷயங்களில் அழிப்பதுமாகவே இருக்கிறார்கள். சங்கீத விற்பன்னர்களுக்கே இது ஓர் பொதுவான சாபம்போலிருக்கிறது" என்றெண்ணி அதிசயிக்கலானார்.

மற்றும், சுவாமிகள் பாரிஸ் நகரின்கண் வதிந்தபோது அவரது மகிமாப் பிரபாவத்தால் முந்திய யாத்திரையிலேயே ஈடுபட்டிருந்த ஐரோப்பிய கீர்த்திபெற்ற சங்கீத மணியாகிய மாடம் கால்வி என்னும் மாது இப்பொழுதும் சுவாமிகளை உபசரித்தாள். ஒப்புயர்வற்ற சங்கீதப் பயிற்சியுடன் தத்துவ நூல்களிலும் சமயக் கிரந்தங்களிலும் அச்சங்கீதச் செல்விக்கு நல்ல அறிவுண்டு. அவளைப் பற்றிச் சுவாமிகள் தமது கடிதத்தில் "அவள் எளிய குடும்பத்திற் பிறந்தவளாயினும், தன் முயற்சியாலும், இணையற்ற சங்கீத நிபுணத்துவத்தாலும், கடலையொத்த வாழ்வின் புரட்சியிலே புரண்டு, இன்று அரசர்களும் சக்ரவர்த்திகளும் மதிக்கும்படி குபேர சம்பத்தையடைந்துள்ளாள்" எனக் குறிப்பிட்டிருந்தார். மேலும் பாரிஸில் மிஸ். ஜோஸபைன் மேக்லியோட் என்னும் புனிதை, சுவாமிகளை அருகாமையிலுள்ள புற நகரங்களுக்கு அழைத்துப் போவதும், காணருங் காட்சிகளைக் காண்பிப்பதுமாக, அவரது சிஷ்யையாக விருந்து புரிந்த உதவிகள் எண்ணில.

கான விசாதரி
மாடம் கால்வி

இக்காலத்தில், அகிலத்தின் பல பாகங்களிலும் குருபாய்களின் பெரு முயற்சியால் நடைபெற்றுவரும் வேதாந்த சபைகளின் வளர்ச்சியைப்பற்றிய கடிதங்கள் சுவாமிகளுக்கு வந்துகொண்டிருந்தன. சிலர், தாம் அதுவரை செய்துள்ள வேலைகளைத் தெரிவித்து மேல் நடத்தவேண்டிய கைங்கரியமென்னவென்றறிய ஆவலுள்ளவர்களாய்க் கடிதம் வரைந்தார்கள்; அநேகர் சுவாமிகளின் உடல் நிலையைப்பற்றிக் கவலையுற்று கடிதவாயிலாக விசாரித்தார்கள்; சிலர், புத்தகங்கள் சில வேண்டுமென் றெழுதினார்கள். இது இப்படியாக, சுவாமிகளிடம் விடை பெற்றுக்கொண்டு இங்கிலாந்துக்கேகிய நிவேதிதாதேவி பகிரங்கப் பிரசங்கவாயிலாக இங்கிலாந்தின் அணி நகரங்களனைத்திலும் ஹிந்து ஸ்திரீ தர்மத்தை ஓதிவந்தார். துரியானந்தர் கலிபோர்னியா வாசிகளின் குருவாகி இடையறாது உழைத்து வந்தார். பேலூர் மடத்திலிருந்தும், மாயாவதி அத்வைதாஸ்ரமத்தி லிருந்தும், சென்னை ஸ்ரீராமகிருஷ்ணானந்தரிட மிருந்தும், பஞ்ச நிவாரணத் தொண்டு

புரிந்துவரும் சுவாமி அகண்டானந்தர் முதலியவர்களிட மிருந்தும் லிகிதங்கள் மிகுதியாக வந்துகொண்டிருந்தன.

மூன்றுமாதகாலம் சுவாமிகள் பாரிஸில் வசித்தபின், அக்டோபர் மாதம் 24 - ம் நாள் இரவு ஓரியண்டல் எக்ஸ்பிரஸ் ரயிலேறி ஸ்டாம் பவுல் எனும் பட்டணத்திற்குப் பிரயாணமானார். மான்ஷியர், மாடம் லாய்சன், எம். ஜூல்ஸ் பிளாய்ஸ், மாடம் கால்வி, மிஸ். ஜோஸலைன் மெக்லியோட் முதலியோரும் அவரைப் பின்றொடர்ந்து யாத்திரை செய்தார்கள். மாடம் கால்வி அந்த குளிர் காலத்தில் சங்கீதக்கச்சேரி செய்யப் போகாமல், ஓய்வு கருதி உல்லாச வாஸஞ் செய்ய ஏற்ற எகிப்து தேசத்திற்குப் போவதாகக் கூறி, சுவாமிகளைத் தமது அதிதி யாக வரும்படி அழைக்க, அவரும் இசைந்து ஏகி னார். மறுநாட் பொழுது புலர்ந்ததும் இரயில் பிரஞ்சுதேச எல்லையைக் கடந்து, சுவாமிகள் முந் திய யாத்திரையில் பிரயாணஞ்செய்த ஜர்மனிய நாட்டின் வழியே சென்றது. இருபத்தைந்தாம் தேதி மாலையில் அக்கோஷ்டியார் வீயன்னவை யடைந்து, அங்கு மூன்றுநாள் தங்கி, விசேஷ ஸ்தலங்க ளெல்லாவற்றையும் பார்வையிட்டுத் திரும்பினார்கள். அவற்றுள், பூர் வத்தில் நெப்போலியனின் திருக் குமாரர் கைதியைப்போல் அடைத்து வைக்கப்பட்டிருந்த 'ஸ்கோன்ப்ரான்' (Schonbrunn) மாளிகையின் அமைப்பைக் கண்டு சுவாமிகள் அதிசயித்தார். காட்சி சாலையில் டச்சு சித்திரக்காரர்களின் வேலை பாராட்டத்தக்கதா யிருந்தது. ஆஸ்திரியா வைப் பற்றிச் சுவாமிகள் கூறுங்கால் "துருக்கியானது 'ஐரோப்பாவின் நோயுற்ற புத்திரன்' என்னில் ஆஸ்திரியாவை 'ஐரோப்பாவின் பிணி யுற்ற பெண்' என்றே சொல்ல வேண்டும்" என்றார். இருபத்தெட் டாம் தேதி அக்கோஷ்டியார் ஓரியண்டல் எக்ஸ்பிரஸில் மறுபடியும் ஏறி கான்ஸ்டாண்டிநோபிளு'க்குப் புறப்பட்டு, ஹங்கேரி (Hungary), சேர்வியா (Servia), ருமானியா (Roumania), பல்கேரியா (Bulgaria) முதலிய பிரதேசங் களைக் கடந்து, அந்த க்ஷேத்திரத்தை அம்மாதம் முப்பதாம் தேதி அடைந்தார்கள். இடையே இவர் கள் தம்மோடு கொண்டுபோன பண்டங்கள் யாவும் சோதிக்கப் பெற்று இரண்டொரு புத்தகங் கள் மட்டும் பறிமுதல் செய்யப்பட்டன. சுவாமிக ளிடம் அப்பரிசோதனைக்கு இடமே இல்லை.

ஜர்மன் தேச யாத்திரை.

ஹங்கெரி, சேர் வியா, ருமானியா, பல்கேரியா வழியாய் கான்ஸ்டாண்டி நோபிளுக்குப் பிரயாணம்.

கான்ஸ்டாண்டிநோபிளை யடைந்ததும் சுவாமிகள் கொண்ட மகிழ்ச்சிக் களவில்லை. அன்று பிற்பகலில் இயற்கையால் வெகு மனோகரமாக அலங்கரிக்கப் பெற்றுள்ள பாகங்களைப் பார்த்தபின், மறுநாள் மிஸ். மக்லியோட் அம்மையுடன் பாஸ்போரஸை (Bosphorus) க்குப் படகேறிச் சென்றார். கால நிலை மிகவும் சீதளமாகவும் காற்றுகவு மிருந்தமையால் இடையே தங்கி, ஐரோப்பாவையும் ஆசியாவையும் பிரிக்கும் நீர் நிலையை யொட்டியுள்ள ஸ்கூடரீ (Scutari) க்குப் போய், பாலஸ்டைனுக்கு யாத்திரையாகப் புறப்பட்டு அங்கு அவ்வமயம் வந்திருந்த பிரி ஹியாசின்தி (Pere Hyacinthe) என்னும் ஞானியைக்காண வெண்ணினார். சுவாமிகள் துருக்கி பாஷையோ, அராபிய மொழியோ அறியாத அவர்கள் மெல்ல சமாளித்து, கைச்சாடை செய்து ஓர் பட கமர்த்திக்கொண்டு ஸ்கூடரிக்குப் போய்ச் சேர்ந்தார்கள். சுவாமிகள் நேராகச் சென்று பிரி ஹியாசின்தியைக் கண்டு சம்பாஷித்தார். வழியில், வினோதமாக நோய்களைப் போக்கும் தன்மையினரான ஷாபி பக்கிரிமார்களைப் பார்த்து அவர்கள் வைத்திய முறைகளைப்பற்றிய சில குறிப்புகளுடன் மீண்டார்; கடை வீதிக்கேகி துருக்கி மாணவர்களோடு ஆங்கிலத்தில் அழகுற உரையாடினார்.

'பாலஸ்டைன்' யாத்திரை.

அப்பால், பிரயாண சௌகரிய மின்மையால், வேகு சிரமப்பட்டு கான்ஸ்டாண்டிநோபிளுக்குத் திரும்பி, அநேக அற்புதக் காட்சிகளையும் பழங்கால மதாவேசக் கொடுஞ்சிறைக் கோட்டங்களையும் பார்த்தார். கிரேக்க பாட்சாவை சுவாமிகள் சந்தித்துப் பேசினார். பொதுப் பிரசங்கங்கள் புரிய அங்கு அனுமதி எவருக்கும் அளிக்கப் படுவதில்லையாதலின் தம்மை அன்போடு வந்து கண்ட சிலருக்கு மட்டும் சுவாமிகள் உபதேசம் செய்தார். சுவாமிகள் இந்தியாவிலிருந்து வந்துள்ளாரென்பதை யறிந்த ஓர் துருக்கி உணவுச்சாலையின் உரிமையாளர், அவரையும் அவருடன் வந்துள்ள ஏனையோரையும் உபசரித்து விருந்தளித்தார்.

இப்படிப் பலநாட்கள் கழிந்தபின் கோல்டன் ஹார்ன் (Golden Horn) மார்மோராத் தீவுகள் முதலிய பிரதேசங்களைப் பார்த்த வண்ணம் சுவாமிகள் தமது அன்பினரோடு ஏதன்ஸுக்குப் புகைக் கலத்திலேறிப் புறப்பட்டார். இடையே ஒரு தீவில் முன்பு சென்னை பச்சையப்பன் கலாசாலையில் புலவராயிருந்த வித்வான் லெப்பல் துரை

ஏதன்ஸுக்குப் புறப்பாடு.

யவர்களை சுவாமிகள் கண்டு உறவாடி மகிழ்ந்தார் ஏதன்ஸுக்குச் சென்றதும், சுவாமிகள் பாழாக விருந்த கட்டடங்க ளெல்லாவற்றையும் சென்று பார்த்தார். முக்கியமாக வெற்றிக் கடவுளின் ஆலயமான அக்ரோபோலீஸ் (Acropolis) காணத்தகுந்ததா யிருந்தது. அப்பட்டினவாசியான மாடமோசைல் மெல்கார்வி சுவாமிகளை உபசரித்து, பல முக்கியமான இடங்களுக்கும் அழைத்துச் சென்று, அந்தந்த ஸ்தலங்களின் வாலாற்றையும் விளக்கினள். மறுநாள் யாவரும் ஒலிம்பியன் ஜியூபிடர் கோயிலைச் சுற்றி வந்தார்கள். மூன்றும் நாளன்று இலூசிஸ் ஆலயத்தைப் பார்வையிட்டார்கள். பின்னர், கி. மு. 576 முதல் 486 வரை வாழ்ந்த அகிலதாஸ் (Agleadas) என்னும் சிற்ப சாஸ்திரியின் வேலைப்பாட்டின் சின்னங்கள் சின்னாபின்னமாக விருக்கக் கண்டும், அவருடைய முக்கிய சிற்பமூர்த்திகளான பிடிதாஸ், மைரன், போலிசிடஸ் என்னும் மூவரின் செதுக்கு வேலைப்பாடுகளிற் சிலவற்றையும் பார்த்தார்.

நான்கு நாட்கள் இவ்விதம் கழியப் பின்பு, ஜசார் (Czar) என்னும் ருஷ்யக் கப்பலேறி எகிப்துக்கு சுவாமிகளும் மற்றையோரும்

எகிப்துக்கு ஏகல்.

ஏகினர். எகிப்தில் கெய்ரோ காட்சி சாலையானது காணுந்தரம தாதலின், அதனைக்கண்ட மாத்திரத்தில் சுவாமிகள் மானசீகமாக தாம் கற்ற எகிப்து தேசத்தின் பூர்வகால மகோந்நத நிலையை ஒருவாறு கணித்துப் பார்த்து அதிசயித்து, பின்னர் "அந்தோ மாயையால் நிர்மாணஞ்செய்யப்பெற்றதாதலின் மாயமாய்ப் போயின இவை" என்று இரக்க மொழிகூறித் திரும்பினர். 'பிரமிட்' களின் பெருமிதத்தை எண்ணி எண்ணி அவர் மனம் எகிப்து நாட்டின் புராதன சிறப்பிற்கு வாழ்த்து கூறியது. நீல நதியின் கரையில் பூர்வகால ஆலயங்கள் மல்கிய பிரதேசங்களில் சுவாமிகள் சிலநாட்கள் வசித்தார்.

ஆகா! பாரத பூமியை விட்டு நாம் எத்தனை பககங்கள் வரைந்த வண்ணம் சென்று விட்டோம்! இனியேனும் கூறாது செல்லல் முறையாகாதல்லவா? இந்தியாவில், மாயாவதியில் மாண்புடன் வேதாந்த பிரம்மஞான ஊழியத்தையே திரிகரண சுத்தியுட னியற்றிவந்த சேவியர் துரையவர்கள் இதற்கிடையே விண்ணுல கேகினர். இச்செய்தி சுவாமிகளுக் கெட்டவும், அவர் அனலிடை யகப்பட்ட மெழுகென

உருகினர். ஒரு வித சோகம் அவரை வந்து மூடியது. இந்தியாவின் எண்ணம் அவர் மனத்தே கோடி சூர்யப் பிரகாசம் போல உதயமாயிற்று. குழந்தை எத்தனை காலந் தான் தாயைப் பிரிந்து தெருவில் விளையாடும்? பசித்தால் அன்னையிடந் தானே ஓடி வரவேண்டும்! "கண்ணே வா" என்று அவ்வன்னை அழைக்கும் அன்பு ததும்பிய வசனத்தால் பசியெல்லாம் பஞ்சாய் மாயமாய்ப் பறந்துபோக முகத்தில் நகையும் முறுவலும் ஒளியும் அரும்புமல்லவா? அதுபோன்றே இவ்வானந்தக் குழந்தையும் அன்னையாகிய பாரதத் தாயை நோக்கலுற்றது. ஒருநாள் சுவாமிகள் திடீரென்று தாம் இந்தியாவுக்குப் புறப்படப் போவதாய் தமதன்பர்களிடம் கூறினர். இதைக் கேட்ட அவர்கள் துக்கக்கிராந்த ராஞர்கள். அவர்களுள், சுவாமிகளைத் தந்தை முறைவைத்து அன்புட னழைத்துவந்த மாடம் கால்வியும், குருவெனப் போற்றிவந்த குணவதி மிஸ். மாக்லியோட்டும், அவதார புருடரென் றபிமானித்த மான்ஷியர் பிளாய்ஸும் அடைந்த துயரத்திற் களவேயில்லை. கண்ணீரும் கம்பலையுமாக அவ்வன்பின் மிக்கார், அரிய இரத்தினத்தை, வேதாந்த மணியை, வேதாகம சிந்தாமணியைப் பிரிவுக்காற்ருது சோகத்துடன் வழியனுப்பினர்கள். அப்பா! துக்ககரமான அப் பிரிவுறுபடல வர்ணனை இங்கு வேண்டாம்!

மாயாவதியில் சேவியர் துரை விண்ணுலக செய்திய செய்தி.

'பெனின்சுலர் ஓரியண்டல்' கப்பலிலேறி சுவாமிகள் இந்தியாவை அடைந்தார் ஆனந்தமாய்! கண்டார் பாரத மாநிலத்தை! கொண்டார் உவகை! குதித்து 'வந்தே மாதரம்' என்று வங்கத்திற் பாடினர்; ஆடினர் ஓர் ஆனந்தக் கூத்து. பேலூரிலே அப்படியே தாவிக் குதித்துத் தமது குருபாய்களைக் காண வேண்டுமென்று அவருக் குண்டான ஆர்வம் இவ்வள வ.. வள வல்ல; சேவியர் அன்னையைக் கண்டு ஆறுதல் கூறவேண்டுமென்னும் எண்ணம் ஒரு பக்கம் துடித்துக் கொண்டிருந்தது. பம்பாயில் இறங்கியதும் நேராகக் கல்கத்தாவுக்கு இரயிலில் பிரயாணமானர். வழியில் ஸ்ரீ மன்மதநாத பட்டாச்சார்யரை மட்டும் யதேச்சையாக ரயில்வே ஸ்டேஷனில் கண்டு சம்பாஷித்ததையன்றி, வேறெவரையும் சுவாமிகள் காணவில்லை. அவர் ஐரோப்பியரைப்போல உடை தரித்திருந்தா ராதலின் பட்டாச்சாரியர் அவரை அறிந்துகொள்ள முடியாமல், இருவரும் ஒருவரை யொருவர் சற்று

கண்டார் பாரத மாநிலத்தை.

நேரம் உற்று நோக்கிய பின்னரே அறிந்து அளவளாவினர். 1900 ம் ஆண்டு டிசம்பர்மீ 9 - ம் தேதி இரவு பத்து மணிக்கு சுவாமிகள் நேராகப் பேலூர் மடத்தை நோக்கிச் சென்றார். அப்போது குருபாய்கள் எல்லோரும் சாப்பிடப்போகும் சமயம். சுவாமிகள் பூட்டப்பட்டிருந்த மதிட்கதவண்டை வந்து நிற்கவும், வாயிற் காப்போன் உள்ளே ஓடிப்போய் "யாரோ ஒரு சாயபு" வந்திருக்கிறானென்று குருபாய்களிடம் கூறினான். கூறியவன் வேகமாய் சாவியுடன் சென்று கதவைத் திறக்குமுன், சுவாமிகள் இரவு வெகு நேரமாகி விட்டபடியால் 'எங்கே சாப்பாடில்லாமற் போய் விடுமோ' வென்ற எண்ணத்தாலும், தமது ஆருயிர்த் தோழர்களைக் காணவேண்டுமென்ற ஆர்வத்தாலும் சுவரேறிக் குதித்து உள்ளே ஓடிவந்தார்.

"யாரோ ஒரு சாயபு."

'இந்த சாயபுக்கு இந்நேரத்தில் இங்கு என்ன வேலை?' என்று அவர்கள் ஒருவருக்கொருவர் மருண்டு பார்த்து நிற்கையில், வந்த சாயபு, அவர்களுடன் கூடிக் குலாவுதலும், அந்த சாயபு யாரென்று அறிந்த அவர்கள் "சுவாமிஜி! வந்து விட்டார்! வந்து விட்டார்" என்று குதித்துப் பாட வாரம்பித்து விட்டார்கள். அன்றிரவு முழுவதும் ஒருவரும் தூங்கவில்லை. வந்தவர் வாயிற்காப்போன் கதவைத் திறந்துவிடுமுன், சுவரேறிக் குதித்து வந்ததையை அவர்கள் சொல்லிச் சொல்லி வயிறு கிழியச் சிரித்து—அப்பா—ஒருவாறு அடங்கினார்கள். சுவாமிகளும் சிரித்த வண்ணம் 'ஆமாம்! கங்கைக் கரையில் நான் வரும்போதே-உங்கள் சாப்பாட்டு மணியின் ஒலி கேட்டது. உணவில்லாமற் போய் விட்டால் என்ன செய்கிறதென்று நான் ஓடோடி வந்தேன்' எனப் புகன்றார். அன்பர்களே! அவனியில் அந்த குருபாய்கள் அத்தருணம் அடைந்த ஆனந்தத்தைவிட உயர்ந்தது வேறு ஏதாவது இருக்க முடியுமா? நீங்களே கூறுங்கள்! அவர்களுடைய தலைவர், குருபாய், நரேந்திரர், குரு எல்லாமான சுவாமிகளின் வருகையில் அவர்கள் அடைந்த குதூகலத்திடையே மகாவிஷ்ணுவே அப்பொழுது சங்கு சக்கர பீதாம்பரதாரியாய் காக்ஷியளித்தாலும் அதை அவர்கள் பொருட்படுத்தி யிரார் என்பது நிச்சயம்.

'பாரிஸ் காங்கிரஸ் விஜயம்' என்னும் இவ்வத்தியாயத்தை மேல் நாடுகளெங்கும் யாத்திரை செய்த சுவாமிகளின் அபிப்பிராயத்தைக் கூறி முடிப்போம். "அவர்கள் தமது இயற்கைக் குணமான வாணிபக் கைத்தொழிற் முறைகளில் சிறந்த ஒற்றுமையுடன் உழைத்து

வருவதைக் காண மிக்க அழகாகவே இருக்கின்றது. பணத்தாசை பிடித்து பகவானடி மறந்து செல்லும் வழியின் முடிவென்ன வென்பதை யறியாது அவர்கள் சென்றுகொண் டிருக்கும் தன்மையும் அதிசயிக்கத் தக்கதே! ஆனல் குள்ள நரிக்கூட்டங்களைக் கண்டால் என்ன அழகும் ஆச்சரியமும் ஏற்படும்?' என்பதே அவரது மேற்றேய யாத்ரானுபவ வாக்கியம்.

53-ம் அத்தியாயம்

மாயாவதியில் தூய வாழ்வு.

*ஐங்கரனின் இன்னருள் பெற்ற அற்புத மூர்த்தியான சுவாமிகள் மேல்நாட்டு யாத்திரையிலிருந்து திரும்பியதும் தமது குருபாய்களும் சிஷ்யர்களுமான சந்நியாசிகளையும், பிரம்மச்சாரிகளையும் முன்போலவே பழக்க வாரம்பித்தார். அவருடைய தேகம் அநேகமாக முற்றிலும் பழுதடைந்திருந்தது. எனினும், அவர் தமது வேலையினின்றும் சிறுதுணையும் பின்வாங்கவில்லை. அவர் உலக யாத்திரை யியற்றிய காலங்களில், இந்தியாவின் பல்வேறு மாகாணங்களிலும் உழைத்துவந்த பெரியார்கள், ஆங்காங்கே யிருந்து சுவாமிகளின் ஆணையை எதிர்பார்த்து இப்போது கடிதங்கள் எழுதிக் கொண்டிருந்தார்கள். ஸ்ரீராமகிருஷ்ண மடத்தின் சார்பில் நடைபெற்றுவரும் பத்திரிகைகளின் ஆசிரியர்கள் சுவாமிகளின் உத்தரவை ஆவலுடன் நோக்கி லிகிதங்கள் வரைந்து விடுத்தனர். இங்ஙனம் சுவாமிகள் எல்லா விஷயங்களிலும் முறைப்படிக் கவனஞ் செலுத்து வாரானர்.

நிற்க, சுவாமிகள் மாயாவதி அத்வைத ஆஸ்ரமத்திற்கேகி சேவியர் அம்மைக்கு ஆறுதல் புகலவேண்டி, டிசம்பர் மாதம் ஒன்பதாந் தேதி பேலூர் மடத்தை யடைந்தவுடன், சேவியர் துரையவர்கள் காலமான விஷயத்தை விஸ்தாரமாகக் குருபாய்கள் வாயிலாக விசாரித்து, அவ்விருத்தர் 1900 - ம் ஆண்டு அக்டோபர் மாதம் 28 - ம் தேதி விண்ணுலகேகிய விவரமறிந்து, உடனே சேவியர் அன்னைக்குத் தாம் சீக்கிரத்தில் மாயாவதிக்கு வரப்போவதாயும், வருந் தேதியைப்

---

* சிவபெருமான்.

பின்னர் அறிவிப்பதாயும் தந்தி கொடுத்தார். அதற்கு சேவியர் அம்மை ஒரு வாரத்திற்கு முன்பே செய்தி யனுப்பும்படிக்கும், தாம் கத்கோதத்திற்குச் சௌகரியமாக 'டோலி' யுடன் போகிகளேயும் சுமையாட்களேயும் தேடி அனுப்பி வைப்பதாகவும் பதில் தந்தி கொடுத்தார். சுவாமிகள் இதை யெல்லாம் ஆர்வத்தால் மறந்து திடீரென்று டிசம்பர் மாதம் 27 - ம் தேதி தாம் கல்கத்தாவை விட்டுப் புறப்பட்டு 29 - ம் தேதி கத்கோதத்தை யடைவதாய் தாமதமாகத் தந்தி சொல்ல இச்செய்தி 25 - ம் தேதி பிற்பகலிற்றான் அவ்வம்மைக்குக் கிடைத்தது. ஆதலின், இரண்டு தினங்களுக்குள் சுற்றுப்புற மலேக் கிராமங்களிலுள்ள கூலியாட்களேத் திரட்டி, மாயாவதியிலிருந்து அறுபத்தைந்துமைல் தூரத்திலிருந்த கத்கோதத்திற் கனுப்புவது அசாத்யமென்று அன்னேயும் அங்கிருந்த பிற சந்நியாசிகளும் பெருமூச்சு விட்டுக்கொண்டு செய்வதறியாமல் தயங்கினர். ஆனால், மாயாவதியிலிருந்து எவரும் போய்ச் சுவாமிகளேக் கத்கோதம் ரயில்வே ஸ்டேஷனில் சந்திக்கா விட்டால், அவர் நேராக அல்மோராவுக்குப் போய் லாலா பத்ரி ஷா வெனும் தமது பழைய நண்பர் வீட்டில் தங்கினாலும் தங்கலாமென்றும் அவர்கள் ஊகித்தார்கள்.

மாயாவதிக்குப் பிரயாண ஏற்பாடு.

ஆனல் சுவாமிகள் முன்னெச்சரிக்கையுடன் தாம் மாயாவதியிலிருந்து எவரையும் கத்கோதப் ஸ்டேஷனில் சந்திக்க வியலாமற் போனால் என்ன செய்வதென்றெண்ணி, கல்கத்தாவிலிருந்து புறப்படுமுன் தமது அல்மோரா அன்பருக்கும் ஓர் தந்தி கொடுத்திருந்தார். அதன்படி லாலா கோவிந்தலால் ஷா கத்கோதம் ஸ்டேஷனுக்கு வந்து சுவாமிகளே எதிர்கொண் டழைத்தார். ஆயினும், மாயாவதி பின்வாங்குவளோ? அதிகக் கூலிபேசி ஆட்களேத் திரட்டிக்கொண்டு அதிவேகமாக அந்த அறுபத்தைந்து மைல் மலேப் பாதை வழியில் நடந்தே சுவாமி விரஜானந்தர் கத்கோதம் ஸ்டேஷனுக்கு 28-ம் தேதி இரவு பன்னிரண்டு மணிக்கு வந்து விட்டார். இருபத்தொன்பதாம் தேதி காலேயில் சுவாமிகள், சிவானந்தர், சதானந்தர் ஆகிய இருவரோடும் அங்கு வந்து சேர்ந்தார். விரஜானந்தரைக் கண்டதும் அவருடைய கால்கள் வீக்கமுற்றிருத்தல் கண்டு, விசாரித்து, அவரைத் தழுவித் தட்டிக் கொடுத்து "நீதான் எனது மனிதன்" என்று போற்றினர். அல்மோராவி லிருந்து வந்திருந்த அன்பர், சுவாமிகளே அல்மோராவிற்கே

கத்கோதத்திற்குச் செல்லல்.

எழுந்தருளும்படிக் கட்டாயப்படுத்த, விரஜானந்தர் அவ்வளவு சிரமப் பட்டு வந்ததற்காகச் சுவாமிகள் தாம் நேராக மாயாவதிக்கே செல்வதாய் அவ்வன்பரிட மியம்பி, சிறிது கொதிப்பேற்பட்டபடியால் ஒரு நாள் கத்கோதத்திலேயே தங்கினர்.

சுவாமிகள் முக்கியமாய் இந்தப் பருவத்தில் கிரிவாசஞ் செய்ய முன் வந்திருக்கக் கூடாது. 1900—1901-ம் ஆண்டைய குளிர்காலம் எதிர் பாரா வண்ணம் அதிக சீதள நிலையினதா யிருந்தது. மேலும், சுவாமிகள் மாயாவதியை யெய்தியகாலம் பொறுக்க முடியாத குளிர் காலம். அடுத்த நாட் காலையில், விரஜானந்தர் அறுபத்தைந்து மைல் கால் நடையால் வாடி வதங்கி யிருந்தபடியால் சுவாமிகள் அவருக்காக ஓர் சவாரிக் குதிரையை அமர்த்தினர். விரஜானந்தர் இந்த யாத்திரைக் குப் பெரிய வழிகாட்டியா யிருந்ததோடு வழியில் இடை யிடையே தங்கிச் சுவாமிகளுக்கு உணவாக்குவதும், சிஷ்ருஷை புரிவதுமான காரியங்களையும் செய்து வந்தார். அவர் சமைத்த உண்டியை உண்ணச் சுவாமிகளுக்கு வெகுப் பிரியம். சுவாமிகள் இரண்டாம் முறை உலக யாத்திரை இயற்றுமுன் பேலூர் மடத்தில் பாகஞ்செய்து சுவாமிகளை அனுதினமும் உண்பித்து வந்தவர் இவரே. பிரயாணப்படுமுன் சுவாமிகளின் உடை, பண்டங்கள் முதலியவை சதானந்தர் வசம் ஒப்புவிக்கப்பட்டன. முதல்நாள் பிரயாணம் முழுவதும் சுவாமிகள் குதூகலமாகவே யிருந்தார். அன்று நடுப்பகலில் பீம்தாலில் தங்கி பகற்போஜனம் பண்ணிவிட்டு மீண்டும் பிரயாணத்தைத் தொடங்கி மாலையில் தாரி (Thari) என்னு மிடத்தில் தங்கினர்கள். இங்ஙனம் பதினேழுமைல் தூரம் அவர்கள் பிரயாணஞ் செய்தமையால் சிரமபரிகார நிமித்தம் அன்றிரவு * டக்-பங்களாவில் தங்கினர்கள்.

மாயாவதி யாத்திரை

மறுநாட் காலையில், மழைபெய்ய வாரம்பித்து விட்டது; உறைந்த பனிக்கட்டிகள், படலம் படலமாகக் கரைந்து ஓடிவரத் தொடங்கின. எனினும், அவர்கள் தாரியிலிருந்து புறப்பட்டுப் பதினைந்து மைல் தூரம் சென்றனர். மேகக் கூட்டங்கள் அடுக்கடுக்காக இறங்கின. விரஜானந்தர் எங்கே சுவாமிகட்குக் காய்ச்சல் வந்துவிடுமோ, என்னவாகுமோ என்று பயந்தார். இப்படி இரண்டுமைல் தூரம் சென்றபின்

* ஹிமயப் பிராந்தத்தில் யாத்திரார்த்திகள் தங்குவதற்காக சுதேச மன்னர்களால் கட்டப்பெற்ற சத்திரம்.

மழை பலமாகப் பெய்யத் தொடங்கிற்று. பனிப் படலங்கள் பாறை பாறையாக ஓடுந் தண்ணீரில் உருண்டு வந்தன. சுவாமிகள் வழி நடையின் சிரமம் தோன்றாமலிருக்கும்படி வேடிக்கையாகக் கதைகள் சொல்லிக்கொண்டே வந்தார். டோலிக்காரர்கள், பனிக்கட்டிகளில் வழுக்கித் தத்தளித்து ஆடும்பொழுது சுவாமிகள் "ஹோ! ததிங்கிண தோம்" என்று கேலியும் பரிகாசமுமாக அவர்களுடன் பேசவும் எல்லோரும் சிரிக்கவுமாக மேன்மேலும் பிரயாணம் செய்தார்கள். டோலியைத் தாங்கிவந்த போகிகளில் ஒருவனுடைய கதை இரண்டு வகையில் ருசிகரமா யிருந்தது. அவற்றுள் அவன் அநேக தடவை விவாகம் செய்துகொண்டு மணந்த மனைவிக ளெல்லோரையும் நமனுக்குப் பறிகொடுத்த கதை யொன்று; மற்றொன்று 'சந்தி' (Chandi) என்னும் நூல் முழுவதையும் தான் மனப் பாடஞ் செய்திருப்பதாகக் கூறியது. சுவாமிகள் "ஆனால் பாடு பார்ப்போம்!" என்றார் அவனை நோக்கி. உடனே அவன் ஒப்பாரி வைப்பதுபோல் தப்புந் தவறுமாக வாய்குழறப் பலமாகப் பாட வாரம்பித்து விட்டான். அவன் உற்சாகமாகப் பாடப் பாட எல்லோரும் விழுந்து விழுந்து சிரித்தார்கள். ஆனால் சுவாமிகள், அவனைப் பிழைத்த இடங்களி லெல்லாம் திருத்தி இடை யிடையே 'பேஷ்! சபாஷ்!' என்று உற்சாகப்படுத்தினார்; விளையாட்டாக "பண்டிட்ஜீ! பாருங்கள்" என்று அவனைப் பரிகசித்துக்கொண்டே யிருந்தார்; பின்பு வேடிக்கையாக அவனை நோக்கி 'இன்னுமொரு விவாகம் செய்துகொள்ள உனக்கு விருப்பமா?" எனவும் அவன் "நன்றாக—! ஒன்றல்ல! இன்னும் எத்தனை வேண்டுமானாலும்! ஆனால் நான் பணத்திற் கெங்கே போவேன்?" என்றான். சுவாமிகள் "நான் கொடுப்பதாக வைத்துக் கொள். அப்பொழுது பிரியந்தானே?" என, அவன் 'மிகச் சந்தோஷம்' என்றான். எல்லோரும் கொல்லென்று நகைத்தார்கள்.

போகிக்கு கல்யாணப் பைத்தியம்.

ஒடுக்கும் குளிர் காற்றொருபுறம் வீச, பனிக்கட்டிகள் படலம் படலமாக கரைந்து வர, மூடுபனி சூழ, அனைவரும் பிற்பகல் மூன்று மணிக்கு தாரி என்னும் இடத்திற்கு ஏழரை மைல் அப்பாலுள்ள பௌரஹபனி என்னும் ஸ்தானத்தை யடைந்தார்கள். இங்கு யாத்திரார்த்திகள் சற்று தங்கி சமைத்துச் சாப்பிடுவதற்கு ஓர் இடிந்த பாழான சத்திர மிருந்தது; அதனருகே ஓர் சிறு கடை இருக்கக் கண்டு, சுவாமிகளைச் சுமந்துவந்தவர்கள் சற்று 'டீ' சாப்பிட அனு

மதிக்குமாறு மன்றாடி வேண்ட, சுவாமிகள் இறங்கித் தமது செலவி லேயே அவர்களை 'டீ' பருகும்படி செய்தார். அப்போகிகள் 'டீ' சாப் பிட்டதும், டோலியைத் தூக்கிக்கொண்டு புறப்படாமல், சருகு களைக் கூட்டித் தீவைத்துக் குளிர்காயவும், பங்கியடிக்கவும் ஆரம் பித்து விட்டார்கள். விரஜானந்தர் இதுகண்டு இவர்கள் இப்படியே பொழுதைப் போக்கினால் பிரயாணம் எங்கு தடைப்பட்டு விடுமோ வென்றஞ்சினார். இங்ஙனம் பொழுதுபோக, அன்று இரவு அவர்கள் நிச்சயித்திருந்தபடி மௌனல்லா (Mounalla) வுக்குப் போக முடி யாமற் போயிற்று. சுவாமிகளுக்கோ கோபம் வந்து விட்டது. அவர் கள் நடத்தையைக் கண்டித்துப் பேசி "இந்தப் பாழும் மண்டபத்தில் படு பனியில், நடுக்கும் குளிரில் நான் அகப்பட்டுக் கொள்ள வேண்டு மென்று தானே அல்மோராவுக்கு நேராகப் போகத் தீர்மானித்த என் னைத் தடுத்து அவர் (விரஜானந்தர்) இங்கே அழைத்துக் கொண்டு வந் தார்?" என்று விரஜானந்தரைப் பற்றிக் கடிந்து கொண்டார். சுவாமி களின் கோப மொழிகளை விரஜானந்தர் பொறுமையுடன் ஏற்றுக் கொண்டு, சுவாமிகளுக்கு எங்கே குளிர் காய்ச்சல் வந்துவிடுமோ வென்று பயந்தார்; பின்னர், அது தமது குற்றமல்லவென மனந் தேறி, டோலிக்காரர்களைப் பார்த்து "உங்களை 'டீ' சாப்பிட விட் டாரே, அவர்மீ தல்லவோ குற்றமிருக்கிறது" என போகிகளைக் கோபித்துக் கொண்டார். போகிகள் இங்ஙனம் தாமதியாமல் நேரே சென்றிருந்தால் எப்படியாவது அன்றிரவு மௌனல்லா டக் பங்களா வென்னும் சத்திரத்தை அனைவரும் அடைந்திருக்கக்கூடும். சுவாமிகள் கண நேரத்தில் கோபம் மாறி, சத்வகுண சம்பன்னராய் தமது அரு ளொழுகும் முகம் மலரப்பெற்று, விரஜானந்தரை அழைத்து 'அன்ப! நான் ஏதோ சொன்னேனென்று நீ வெகுண்டனையோ? தகப்பன் தனையனைக் கோபித்துக் கொள்ளுகின்றான். அது குற்றமாமா? இனி, மேலே நடக்கவேண்டிய விஷயத்தைக் கவனி' என்று அவர் முது கைத் தடவிக் கொடுத்தார்.

இந்த சம்பவம் "தாம் இழைத்தது தவறாயின், அதைச் சுவாமி கள் உணர்ந்து மன்னிப்புக் கேட்டுக் கொள்ளுந் தன்மையினர்" என் னும் குணாதிசயத்தை விளக்க ஓர் நல்ல உதாரணமாகும். சுவாமி களின் இரக்க வசனங்களைக் கேட்ட விரஜானந்தர் "பத்தொன்பதாம் நூற்றாண்டு முடிவடைந்து இருபதாம் நூற்றாண்டு தொடங்கப்போகும் இரவில் தாங்கள் தங்கள் சிஷ்யர்களோடு இந்த நிலையில் இவ்

விடத்தில் தங்கிப் பனியில் கஷ்டப்பட வேண்டுமென்பது பிராப்தம் போலும்'' என்று அதற்கு மறுமொழி புகல சுவாமிகள் புன்னகையோடு அவரைத் தட்டிக் கொடுத்தார். இப்படி யிருக்கும்போது சுவாமிகளோடேயே வழி நடந்துவந்த சுவாமி சதானந்தரும் லாலா கோவிந்த லால்ஷாவும் அங்கில்லாதது கண்டு அவர்கள் திடுக்கிட்டுக் கவலையடைந்தார்கள். சதானந்தரும் லாலா கோவிந்த லால்ஷாவும், சுவாமிகள் விரஜானந்தரோடு பின்னால் வந்து சேருவாரென்றெண்ணிச் சற்று வேகமாக சென்று விட்டார்கள். மூடுபனியால் ஒருவரையொருவர் பார்க்கக் கூடவில்லை. சுவாமிகள் மிக்கக் கவலையடைந்து அதிகக் கூலி கொடுப்பதாகப் பேசி ஓர் மனிதனை மௌனல்லாவுக்கு விடுத்து அவ்விருவரும் அங்கிருந்தால், தாம் சுகமாக சத்திரத்தில் மற்றைய சிஷ்யர்களோடு தங்கியிருப்பதாக அறிவித்து விட்டுத் திரும்ப வந்து செய்தி தருமாறு அனுப்பினர். இது போதாமல், பனியையே பார்த்திராத விரஜானந்தரைச் சுமந்துவந்த குதிரை, அவரைக் கீழே தள்ளிவிட்டு, திரும்பிக் கத்கோதத்தை நோக்கி நாற்கால் பாய்ச்சலில் வாயுவேகமாய்க் கிளம்பி விட்டது. ஆதலால் விரஜானந்தர் நடக்க நேர்ந்தது. அன்றிரவு, அவ்விடம் ஒரு பன்னியர் வைத்திருந்த கடைக்குப்போய் குதிரை தின்னும் ரொட்டிகளையும், பல்லோடு மல்யுத்தம் பண்ணும் உருளைக்கிழங்கு மசாலாவும் வாங்கி 'பசிக்குப் பனம்பழம் தின்றால் பித்தம் படுகிறபாடு படட்டும்' என்று அனைவரும் உண்டனர். நடையால் களைத்த அவர்களுக்கு நித்திரைசெய்ய வசதியான இடமும் ஆங்கில்லை. அந்த டோலிக்காரர்களும் மற்ற கூலியாட்களும் பிடிக்கும் சுருட்டு நாற்றம் ஒரு புறமும் சிலர் குளிர்காயும் புகை மற்றொரு புறமுமாக, அவர்கள் இரவையும் பகலாக்கிக் கழித்துவிட்டு, மறுநாள்—அதாவது இருபதாம் நூற்றாண்டு ஆரம்பமாகும் அப்புண்ய தினத்தன்று அதி காலையில் புறப்பட்டார்கள். களைதீர்ந்த டோலிக்காரர்கள் வேகமாக நடந்தார்கள். விரஜானந்தர் அந்த காடுமுரடான பாதையில் டோலிக்காரர்களோடு ஓடோடி நடந்தார். சீக்கிரத்தில் அவர்கள் மௌனல்லாவை யடைந்து, சதானந்தரையும் லாலா கோவிந்தலால்ஷாவையுங் கண்டு களிகூர்ந்தார். அங்கு அனைவருக்கும் ஏற்ற வசதிகள் கிடைத்தன; சுகமாக எல்லோரும் அன்று முழுதும் தங்கினார்கள்.

பலவிதமான சங்கடங்கள்.

அடுத்த நாள் உதயத்தில், (1901-ம் ஆண்டு ஜனவரிமீ 2உ

புறப்பட்டு தேவிதூரம் (Devidhura), துனகட்டம் (Dhunaghat) ஆகிய இரண்டு இடத்தையும் நோக்கிச் சென்றூர்கள். அந்த இருபத்தோரு மைல் தூரவழியும் எவ்வித இடையூறின்றிக் கழிந்தது. சுவாமிகள் இடை யிடையே கொஞ்சதூரம் நடந்தும் சென்றூர். அந்த சொற்பதூர நடையைக்கூட அவர் தேகம் பொறுக்கவில்லை. சுவாமிகள் மேல்மூச்சு வாங்கிக் களைத்துப்போனூர்; சற்றுதூரம் சிரமத்தைப் பாராட்டாமல் விரஜானந்தருடைய தோளைப் பற்றிக்கொண்டே மெல்ல மெல்ல நடந்தார். அப்பொழுது சுவாமிகள் தமது தேகநிலையைக் குறித்து விரஜானந்தரை நோக்கி "நான் எவ்வளவு பலஹீனன்—வயோதிகனுகிவிட்டேன்பார்! இந்த அற்பதூர நடை எனக்கு இப்பொழுது இவ்வளவு சிரமமா யிருக்கின்றது. அந்த நாளில்— ஆகா! மலைப்பிரதேசங்களில் நான் தன்னந் தனியே தினமொன்றிற்கு இருபதுமைல் சராசரி அலட்சியமாய் நடந்தேன்" என்றூர். இதுகேட்ட விரஜானந்தர் வெந்துயருற்று, மருண்டு நிற்கையில் பின்னும் சுவாமிகள் "அப்பா! சீக்கிரத்தில் எனது வாழ்நாட்கள் அஸ்தமித்து விடும்" என்று கூறக்கேட்டு, ஆராத் துயரமுற்றூர் வாஸ்தவத்தில் அவருடைய தேகம் அவ்வளவு கேவல ஸ்திதியி லிருந்தது.

அடுத்தநாள் அவர்கள் மாயாவதிக்குப் போய்ச் சேர்ந்தார்கள். ஆஸ்ரமத்திற்கு எதிரிலுள்ள மலையின்மீது போகும்போது சுவாமிகள் ஆஸ்ரமக் கட்டிடங்களைப் பார்த்ததும், கோபுர தரிசனங்கண்ட நாளைப் போவாரைப்போல உவகை கூர்ந்து விரைந்து நடந்தார். ஆஸ்ரமத்திற்குச் சமீபத்திலிருந்த ஓர் சிற்றூடையண்டை வந்ததும், ஆஸ்ரமத்தில் பன்னிரண்டு மணி அடிக்கக் கேட்டு, மேன்மேல் பெருகி எழும் ஆர்வ மிகுதியால், மூட்டைகளைச் சுமந்துவரும் குதிரையொன்றின்மீது ஏறி, வேகமாக ஆஸ்ரமத்தை யடைந்தார். சுவாமிகளது வருகையைக் கொண்டாட ஆஸ்ரமம் விமரிசையாக அலங்கரிக்கப் பெற்றிருந்தது. நெய் விளக்குகள் அடுக்கடுக்காய் எரிந்தன. பூர்ண கும்பம் தயாராக வைக்கப் பெற்றிருந்தது. சுவாமிகள் வாயிலண்டை வந்ததும், ஆங்கிருந்த சிஷ்யர்க ளனைவரும், வேத மந்திரங்களால் அவரை மங்களாசாஸனம் செய்து "ஜெய ஜெய" வென்ற கோஷத்துடன் கண்டாமணி 'கண்டேன் கண்டேன்' என்று ஒலிக்க உள்ளே அழைத்துச் சென்றூர்கள்.

மாயாவதி சுத்தாத்வைத ஆஸ்ரமம்.

எப்பொழுதும் பனி விடாது பெய்துகொண் டிருந்தமையால்

சுவாமிகள் தமது அறையை விட்டு வெளிப்பட இயலவில்லை. முதலில் சுவாமிகள் மேல்மாடியிலுள்ள ஓர் அறையில் வசித்து வந்தார்; பனி யின் மிகுதியால் அவ்வறையில் வசிக்க முடியாமல் ஜனவரி மாதம் ஒன்பதாம் தேதிமுதல் தமது இடத்தை கீழேயிருந்த புத்தகாலயத் திற்கு மாற்றிக்கொண்டார்; பதினெட்டாம் தேதிவரையில் தான் அவர் மாயாவதியி லிருக்க முடிந்தது. மத்தியில் அம்மாதம் ஆரும் தேதி சம்பவத்திலிருந்து வந்த அன்பர்களுக்குச் சுவாமிகள் பேட்டி கொடுத்தார்; ஒன்பதாம் தேதி மிஸ்டர் பீடன் என்னும் தேயிலைத் தோட்ட முதலாளி யொருவர் வந்து சுவாமிகளைத் தரிசித்துக் கிரு தார்த்தகரானர். பதினோராம் தேதி தாசில்தாரும் மற்ற சிலரும் வந்து தரிசித்துச் சென்றார்கள். சுவாமிகளின் தேகநிலை அவர் மாயாவதியில் வசித்த காலம் முழுமையும் படிப்படியாகக் குறைந்து கொண்டே வந்தது; காசம்போன்ற வியாதி யொன்று சுவாமிகளைக் கவலைக்கிட மாக வருத்தியது. சுவாமிகளுடைய பிறந்த நாளானது தனக்குரிய ஜனவரிமாதம் முப்பதாம் தேதியை எதிர்பார்த்த வண்ணம், அவரது முப்பத்தெட்டாம் பிராயத்தைப் பூர்த்தி செய்யக் காத்துக் கொண் டிருந்தது. அதற்கடுத்த நாள் சேவியர் துரை யவர்களின் பிறந்த நாளாகவு மிருந்தது. அன்று சேவியர் துரை உயிரோ டிருந்திருந்தால் ஐம்பத்தாரும் வயதைப் பூர்த்திசெய்திருப்பார்.

மாயாவதியில் தூய வாழ்வு.

நிற்க, சுவாமிகளின் மாயாவதி வாஸத்தைச் சற்று கவனிப் போம். சுவாமிகள் தமது சிஷ்யர்களுக்கு ஒவ்வொரு சமயத்திலும் புதிது புதிதான சாஸ்திர உண்மைகளைப் புகட்டுவதும், சில சமயம் ஆவேசத்தோடு தமது மேல்நாட்டு சிஷ்யர்களின் வைராக்கிய சேவையைப் புகழ்வதுமாக இருந் தார். ஒரு சமயம் சுவாமிகள் "சமய ஊழியத் திற்கே தமது உயிரை அர்ப்பணம் கொடுத்த கர்மயோகியான சேவி யர் துரை மகனைத் துதியுங்கள்" என்று வாயார வாழ்த்தினர். ஒரு நாள் அவர் சொரூபானந்தரிடம் அந்த மாயாவதி ஆஸ்ரமத்தின் வாயி லாகத் தாம் நடத்தக் கருதியிருக்கும் காரியங்களை வரிசையாகச் சொல்லி, ஏனைய சிஷ்யர்கள் பக்க உதவியாயிருந்து மூன்றாண்டுகள் உழைப்பின் தாம் அவற்றை இயன்றவரை முயன்று முடிப்பதாகக் கூறினர். சுவாமிகளின் ஆக்ஞைப்படி நடக்கச் சித்தா யிருப்பதாக சீடர்களும் வாக்களித்தார்கள். ஆனல் விரஜானந்தர் மட்டும் தாம் கடுந் தவ மியற்றி மலைப் பிராந்தத்தில் சில ஆண்டுகள் தனியே வசிக்க

உத்தேசித்திருப்பதாகச் சொல்ல, அத்தகைய தவ மியற்றுவதை விடச் சேவையே சிறந்ததென்று சுவாமிகள் அவரையும் தேற்றி ஒப்பச் செய்தார்.

இந்நாட்களில் சுவாமிகள் சேவியர் அன்னையோடு தாயுடன் உறவாடிப் பேசும் தனயனைப்போல அன்பு பூண்டு சம்பாஷித்தார். பனி, மேகம், மழை ஆகிய இவற்றின் இயக்கத்தைத் தவிர, வேறெவ்வித நகரங்களிலுள்ள சந்தடியுமின்றி, ஏகாந்தமாக நிர்மலமான ஹிமாசலத்தில் விளங்கும் மாயாவதியை விட்டுப்போகச் சுவாமிகளுக்கு மனமேயில்லை. சமீபத்திலிருந்த ஓர் ஏரிக்கரைக்கு சேவியர் அம்மையுடன் சீடர்களோடு உலாவப்போன பொழுது, அம்மலைப் பிரதேசக் காட்சிப் பிரதமான தரிசனத்தில் இரண்டறக் கலந்து பரவசராகி "எனது ஆயுட்காலத்தின் பிற்பகுதியில் நான் எல்லா அலுவல்களையும் ஒழித்து இந்த ஏரிக் கரையில் ஓர் பர்ணசாலையை அமைத்துக்கொண்டு, இன்னிசைப் பண்களால் இறைவனை ஏத்தியிருக்கத் திருவருளை முன்னிட்டுக் கருதுகிறேன்" என்றியம்பினர்

மாயாவதியில் சுவாமிகள் இங்ஙனம் தூயவாழ் வியற்றிவரும் நாட்களில், அவரது அன்பரான லால் பத்ரி ஷா என்பார், அவரைத் தமது அதிதியாக அல்மோராவுக் கெழுந்தருளுமாறு ஓர் கடிதம் எழுதி யிருந்தார். சுவாமிகள் தாம் வரவியலாதிருத்தலை அவருக்கறிவித்து, இயலுமாயின் அவரை மாயாவதிக்கு எழுந்தருளும்படி பதில் வரைந்தார். அதன்படி லால்பத்ரிஷா தமது இளைய சகோதரருடன் ஜனவரி மாதம் 10வ அல்மோராவுக் குவந்து சேர்ந்தார்.

மாயாவதியில் விருந்து. அவருடைய மற்றொரு சகோதரரான லாலா கோவிந்த லால் ஷா ஏற்கனவே சுவாமிகளுடன் கத்கோதத்தி லிருந்து வந்திருந்தார். இவர்களனைவருக்கும் மாயாவதி அத்வைதாஸ்ரமத்தில் ஓர் விருந்து நடந்தது. மாயாவதி அத்வைதாஸ்ரமத்தில், சுத்த அத்வைத வேதாந்தக் கொள்கை நிலவவேண்டுமென்ற சுவாமிகளின் அபிப்பிராயத்திற்கு மாறாக ஸ்ரீராமகிருஷ்ணருடைய படத்தைச் சேவியர் துரையவர்கள் தமது பூஜாக்கிருகத்தில் எழுந்தருளச் செய்து பூசைசெய்து வந்திருப்பதை யதேச்சையாகப் பார்த்து நிர்க்குணோபாசனையை மேற்கொண்டு இந்த ஒரு மடமேனும் சுத்த அத்வைத ஆஸ்ரமமாக விளங்க வேண்டுமென்று உரைத்தருளினர். இவ்விஷயத்தைச் சுவாமிகள் பேலூருக்குச் சென்ற பிறகு தமது சீடர்களிடம் கூறுங்கால் "ஸ்ரீராம

கிருஷ்ணரின் ஸ்தூலதேக பூஜை செய்யப்படாத மடமாக மாயாவதி ஆஸ்ரமத்தை நான் வைத்திருக்கக் கருதியிருந்தேன், ஆனால் அங்கு நான் போன பிறகு, அந்தக் கிழவர் (ஸ்ரீராமகிருஷ்ணர்) தாமே தம்மை அவ்விடத்திலும் ஸ்தாபித்துக்கொண்டிருக்கிறார். பேஷ்!" என்றார்.

சுவாமிகள் மாயாவதியிலிருந்த காலம் முழுதும் ஒரு நிமிட நேரங்கூட வீண்பொழுது போக்கவில்லை. அகிலத்தின் பல பாகங்களிலுமுள்ள தம தன்பர்களுக்கு அவர் அடிக்கடி கடிதங்கள் எழுதிக் கொண்டிருந்தார்; மூன்று தேர்ந்த கட்டுரைகள் வரைந்து 'பிரபுத்த பாரதா' வென்னும் பத்திரிகையில் வெளியிட்டார்; அவை 'ஆரியரும் தமிழரும்' என்னும் இனிய சரித்திராராய்ச்சி வியாசமும், 'ஜனசார சீர்திருத்த சம்மேளனத்தின் அறிக்கை' என்னும் ஜஸ்டிஸ் மாதவ கோவிந்த ரானடே அவர்களின் 1900-ம் ஆண்டைய ஜனசார சீர்திருத்த மகாநாட்டின் அக்கிராசன உரைக்கு மறுப்பும், 'திவ்யஞான சங்கத்தின் போக்கு' என்ற கட்டுரையும் ஆகும். மேலும், ரிக்வேத நசத்ய சூக்தத்தை சுவாமிகள் ஓர் அன்பரின் வேண்டுகோட் கிணங்கி வடமொழியிலிருந்து ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார் குழந்தைபோன்று தமதன்பர்களுடன் சல்லாபிப்பதும் தாயிடத்தில் பிணங்கிக்கொள்ளும் தனயனைப் போல்வதும், தமது சிஷ்யர்களின் ஆத்ம வளர்ச்சிக்குரிய திவ்யோபதேசங்களைப் புரிந்து அவர்களுடைய தூய சந்நியாச நெறியில் கண்ணுங் கருத்துமாயிருந்து காப்பதுமான சம்பவங்கள் பல மாயாவதியில் நிகழ்ந்தன. ஒருநாள் பகற்போஜனம் தயாராக வெகு நேரமாயிற்று. பசி மிகுதியால் சுவாமிகள் தமது அன்பர்களைக் கோபித்துக் கொண்டார்; நேராகச் சமையலறைக்குப் போய்ச் சமையல் செய்து கொண்டிருந்த விரஜானந்தரைக் கோபக் குறியோடு பார்த்தார். அம்மகானுபாவர், புகையில் கண்சிவக்க, ஏதோ கிண்டிக்கிளறி சமைப்பதைப் பார்த்து, ஒன்றும் பேசாமல் நேராகத் தமதறைக்குத் திரும்பினார். அப்பால்,

அடிக்க ஒரு கை
அணைக்க ஒரு கை

வெகு நேரங் கழித்து விரஜானந்தர், பக்குவமாக உணவை ஆற்றிப் பிசைந்து, கறி வகைகளுடன் ஓர் தட்டில் எடுத்துவந்து சுவாமிகளின் முன் வைத்ததும் சுவாமிகள் தாயிடத்தில் கோபித்துக் கொள்ளும் குழந்தையைப்போல "எடுத்துக் கொண்டுபோ! எனக்கு ஆகாரம் வேண்டாம்; நான் இதைத் தொடமாட்டேன்" என்று பிணங்கிப் பேசி

ஞர்; விரஜானந்தர் நின்ற இடத்தினின்றும் அசையாமல் மௌன மாய் அச்சுற்று நின்றுகொண்டிருக்க, இரண்டு நிமிட நேரமான பின் சுவாமிகள் ஆவலோடு திரும்பி உண்ண வாரம்பித்தார். அன்போ டளிக்கப்பட்ட உணவு, சுவாமிகளால் ஆவலோடு கொள்ளப்பட்ட மையாலும், விரஜானந்தரின் பாக விசேடத்தாலும் ருசிகரமாயிருக்கக் கண்ட சுவாமிகள் ஆச்சரியப்பட்டு, கோபமெல்லாம் இருந்த இடந் தெரியாமல் நீங்க, விரஜானந்தரைத் தோத்தரித்துக்கொண்டே சாப் பிட்டார்; உண்டபின், விரஜானந்தரை அழைத்து "எனக்கு ஏன் அவ் வளவு கோபம் வந்தது தெரியுமா? என்றால் வரவரப் பசி பொறுக்க முடியவில்லை" என்று அவர் உள்ளம் குளிரப் பேசினர். 'அடிக்க ஒரு கை அணைக்க ஒரு கை' என்னும் அருங்குணத்தைச் சுவாமிகள் பால் விளக்க இஃதோர் அரிய சம்பவமாகும்.

இப்படிச் சுவாமிகள் மாயாவதியில் வாசஞ் செய்கையில் பனியும் மழையும் குளிரும் அதிகமா யிருந்தமையால் ஆஸ்ரமத்தை விட்டு உலாவப் போகக்கூட முற்றிலும் இயலாமலிருந்தது. எவ்வளவோ சீதளமான பிரதேசங்களிலெல்லாம் கவலையற்று வதிந்த சுவாமிகள் உடல் மெலிந்து காசநோயால் பீடிக்கப்பட்டிருந்ததால் இக்குளிருக் காற்றாது பிரயாண சித்தாரனர். மேலும், பேலூர் மடத்தில் அவர் சென்று பூர்த்தி செய்யவேண்டிய காரியங்களும் பல விருந்தன. அவ் வமயம் ஒன்றுக்கிரண்டு கூலி கொடுப்பதா யிருந்தாலும் சுமையாட்கள் கிடைப்பதரிதா யிருந்தது. இதனால் பிரயாணம் இரண்டொரு நாள் தடையுற்றது. சுவாமிகள் தயாராகி என்ன செய்யலாமென்று தமது சிஷ்யர்களோடு ஆலோசிக்கையில், விரஜானந்தர் "சுவாமி! கவலை வேண்டாம்! அப்படிக் கூலியாட்களே அகப்படாமற் போனால் நாங் களே மூட்டைகளைச் சுமந்து எப்படியாவது உங்களைக் கொண்டு போய் விட்டு விடுகிறோம்" என்றியம்ப, சுவாமிகள் நகைத்து கேலி யாக "ஓஹோ! என்னை எப்படியாவது கொண்டு போய்த் தள்ளி விடுகிறேன் என்கின்றனையே? தெரிகிறது சரிதான்" என்று கூற அனைவரும் சிரித்தார்கள். பிறகு அவர் சுத்தானந் தரை யழைத்து 'முன்போலவே என்னை மலையடி வாரத்திற்குச் செல்லும் பொறுப்பையும் விரஜா னந்தரே ஏற்றுக் கொள்ளட்டும்' என்றியம்பினர். கடைசியில், வேறுவழி யில்லாமல் சுவாமி சொரூபானந்தர் அதி காலையிலெழுந்து எட்டுமைல் தூரத்திலிருந்த பீடன் துரை யவர்க

மாயாவதியி விருந்து தனக் பூருக்கு செல்லல்.

ளுடைய தேயிலைத் தோட்டத்திற்குப் போய், அவரிடம் விஷயத்தைச் சொல்லி, அவருடைய தோட்டத்தில் வேலை செய்யும் சில கூலிகளை அழைத்துவர விரைந்தார். வந்த பாதை அப்பொழுது அவ்வளவு ஏற்றதாயில்லை. அதனால் வேறு மார்க்கமாய் தனக்பூர் வழியாகப் பில்லிபிட் என்னும் ஸ்தலத்தின் வழியாகச் செல்வதென்று தீர்மானிக்கப் பட்டது. இப்படியிருக்க, இரண்டு தினங்களுக்கு முன்னர் அனுப்பப்பட்ட ஒருவர் சுற்றுப்புற கிராமங்களுக்குப் போய் அலைந்து திரிந்து வேண்டிய சுமையாட்களை அழைத்துக் கொண்டு வந்தார். இந்த விஷயம் சொரூபானந்தருக்குத் தெரியாது. அவர் பீடன் துரையின் தேயிலைத் தோட்டத்திற்கேகி, விஷயத்தைக் கூற, துரையவர்கள் தேவையான கூலியாட்களை உடனே அனுப்பி உதவினார். அவர்களோடு சொரூபானந்தர் வரும் வழியில் சம்பவதி என்னுமிடத்தில் ஏற்கனவே புறப்பட்டு வந்திருந்த சுவாமிகளைச் சந்தித்தார். தேயிலைத் தோட்டத்தினின்றும் அழைத்து வரப்பட்ட கூலியாட்களை சுவாமிகள் வெகுமதியளித்து அனுப்பி விட்டார். மாயாவதியிலிருந்து பில்லிபிட்டுக்கு இடையிலுள்ள தூரத்தைச் சுவாமிகள் சுகமாகவே கடந்து சென்றார். எல்லோரும் முதல் நாளிரவு சம்பவதியிலுள்ள யாத்திரிகர் சத்திரத்தில் தங்கினார்கள். இந்தப் பிரயாணம் முழுவதும் சுவாமிகள் ஸ்ரீராமகிருஷ்ணரின் மகிமைகளைப் போற்றித் துதிப்பதும், தமது சீடர்களின் அருமையான குணங்களைப் புகழ்வதுமாகவே கழித்தார். ஈஸ்வர கோடிகளைப் பற்றிச் சுவாமிகள் பேசுங்கால் "நான் எனது சிஷ்யர்களைத் தவிர வேறெவரையும் பரிபூரணமாக நம்பவே மாட்டேன். இந்த எழுகடல்களும் எழுந்து என்னுடைய சர்வ சமய சமரஸக் கொள்கைகளை எதிர்த்தாலும், எனது சிஷ்யர்கள் என்னைக் கைவிடாமல் எனது குருநாதருடைய சமோபதேசத்தை நிறைவேற்றுவதில் எஞ்ஞான்றும் உறுதியா யிருப்பார்கள்" என்றுரைத்தார். ஸ்ரீராமகிருஷ்ணர் எழுவரை ஈஸ்வரகோடிகளென்று குறிப்பிடுவதுண்டு. பகவான் தர்ம ஸ்தாபனத்தின் பொருட்டு உலகில் திருவவதரிக்குங்கால் அவரோடு கூட உலகிற்கு வந்து, ஆஞ்ஞைகளை நிறைவேற்றி வைப்பவர்களே ஈஸ்வர கோடிகள் என்பது குருதேவரின் சித்தாந்தம். அரசனை மெய்க்காப்பாளர்கள் காப்பது போல, ஈஸ்வரனுடைய அந்தரங்க பக்தர்களே ஈஸ்வர கோடிகளாவார்கள்; அவ்வவதார மகிமைகளை உலகிற் பரப்புவதே அவர்களின் கடமையாகும். ஈஸ்வர கோடிகளுக்கு எப்பொழுதும் முக்தியென்பது கிடையாது. அவர்கள் இறைவனுடைய தொண்டர்களாகவே இருப்

யார்கள். இத்தகைய தொண்டர் குழாத்தில் தலைவரென்று சுவாமிக ளைக் குருதேவர் குறிப்பிடுவது வழக்கம்.

மறுநாள் பொழுது புலர்ந்ததும் அவ்விடத்திலிருந்து எல்லோரும் பதினைந்துமைல் அப்பாலுள்ள தூரியை நோக்கிப் புறப்பட்டார்கள். சம்பவதிக்குச் சுவாமிகளைப் பின்தொடர்ந்து சென்ற சொரூபானந்தர் மாயாவதிக்குத் திரும்பினார். அவர்கள் அன்று பகல் ஒரு மணிக்குத் தூரியை யடைந்து அங்கிருந்த விஹாரத்திற்குச் செல்ல அதன் கதவு பூட்டப்பட்டிருக்கச் சற்றுத் தயங்கி, சௌகிதார் என்னும் மணியக் காரரைத் தேடினார்கள்; சௌகிதார் அகப்படவில்லை. பின்னர் ஒருவர் மெல்லப் பூட்டை அசைக்க அது தானே திறந்து கொண்டது; உள்ளே சென்று சௌகரியமாகத் தங்கினார்கள். சுவாமிகளுடன் சிவானந்தா, சதானந்தர், விரஜானந்தர், லாலா கோவிந்தலால் ஷா ஆகிய நால்வரும் அப்பொழுது அங்கே இருந்தார்கள். சமையல் செய்வதில் சமர்த்தரான விரஜானந்தர் உடனே அடுப்புக் கூட்டி உலை வைத்தார். தவறி அளவுக்குமேல் உலை நீரில் அரிசியை இட்டுவிட்டா ராதலின், கொதிக்கும் சோறு ஏகமாகப் பொங்கிவழிய, அடுப்பு அணைய, அதனால் புகை கிளம்ப அவர் கண்களைக் கசக்கிக் கொண்டு செய்வதறியாமல் நின்றார். சுவாமிகள் பசி மேலிட்டு அடுப் பண்டை வந்து பார்த்து "சரி! நீ எதற்காக விழிக்கிறா யென்பது தெரிகிறது. நான் சொல்லுகிறபடி செய். அந்தச் சோற்றில் சிறிது நெய்யை ஊற்றி மூடியைக் கவிழ்த்து வை. சாதம் நல்ல பக்குவமும் மணமும் உடையதாகி விடும்; இதற்காகப் பாத்திரத்தில் மாற்றிக் கஷ்டப்படவேண்டாம்" என்றியம்ப அவரும் அப்படியே செய்தார். அதே மாதிரி அன்று சாதம் நல்ல ருசியும் பக்குவமு முள்ளதா யிருந் தது; எல்லோரும் திருப்திகரமாக உண்டார்கள்.

சமையல் செய்வதில் ஒரு பக்குவம்.

பிறகு, அங்கிருந்து பிரயாணப்பட்டுச் சகலரும் தனக்பூர் என் னும் பதினைந்து மைல் தூரத்திலுள்ள ஊரை யடைந்து சத்திரத்தில் இடமில்லாததால் ஓர் பலசரக்குக் கடையில் தங்கினார்கள். அவ்வணிகர் சுவாமிகளையும், அவரது சகாக்களையும் அன்போடுபசரித்து, அவர்கள் ஆகாரம் தயார் செய்துகொள்ள வேண்டிய உதவிசெய்து, திவ்யமான ஒரு பாயைக் கொண்டுவந்து விரித்து சுவாமிகளை நித்திரை செய்வித் தார். அன்றிராப் பொழுதை அங்கு கழித்து, அதிகாலையி லெழுந்து சவாரிக் குதிரைகளைப் பில்லிபிட்டிற்குக் கூலிபேசி அனைவரும் செல்ல

னுற்றார்கள். சுவாமி சதானந்தர் அவற்றுள் ஓர் முரட்டுக் குதிரைமேல் சவாரி செய்தார். ஏற்கனவே மூடுபனியைக் கண்டு பயந்து மருண்டு செல்லும் அக்குதிரையை அவர் குத்தியோட்ட வாரம்பித்ததால், அது நாற்கால் பாய்ச்சலில் அடங்காது கிளம்பி விட்டது. தனக்பூரிலிருந்து எல்லோரும் ஒரு மைல் தூரம் போவதற்குள் சதானந்தர் குதிரை இரண்டு மைல் தூரம் சென்று விட்டது. அவரைக் காணுமல் சுவாமிகள் கவலையடைந்து எதிரே வந்த ஒரு வழிப்போக்கனை வினவ, "அவன் சதானந்தரை அக்குதிரை கீழே தள்ளிவிட்டு வயல் வழியிலே ஓடிற்று. அவரும் அதன் பின் ஓடுகிருர். அதுவோட அவர் ஓட குதிரைப் பந்தயம் நடக்கிறது" என்று சொல்லக் கேட்டு, விலாப்புடைக்க நகைத்துக் கொண்டே, அவ்வழிப் போக்கன் குறித்த இடத்தை நோக்கிச் செல்ல, சதானந்தரும் விடாமற் சென்று அக் குதிரையைப் பிடித்து இழுத்துக்கொண்டு வருவதைப் பார்த்து எல்லோரும் நகைத்தார்கள். சதானந்தர் ஆடையெல்லாம் வெறுஞ் சேரு யிருந்தது! நல்ல வேளையாக அவருக்குக் காயமில்லை. சுவாமிகள் அவரைப் பார்த்து மூக்கின்மீது விரலைவைத்து "சதானந்த பாபா! பேஷ்! நீர் தாம் சரியான சிஷ்யர்" என்று சொல்லி நகைத்தார்.

சபாஷ் சதானந்தபாபா.

தனக் பூரிலிருந்து மூன்று மைல் தூரம் சென்றதும் மேஜர் ஹென்னேஸ்ஸே என்னும் அன்பர் பாதையினருகே யுள்ள அவரது பங்களாவி லிருந்து வந்து சுவாமிகளை உபசரித்தார். 2-மணி யானதும் அவர்கள் கதிமா வென்னும் ஸ்தலத்தை நெருங்கினர்; அன்று மாலையில் சுவாமிகள் சிவானந்தரை நோக்கி, "பில்லிபிட்டிற்குப் போனதும் நீர் பிரிந்துபோய் பேலூர் மடத்தின் அபிவிருத்திக்காக யாசகஞ் செய்து நன்கொடை சேர்த்துவர வேண்டும்" என்று பணித்தார். 'பேலூர் மடத்தைச் சேர்ந்த சிஷ்ய ரொவ்வொருவரும் இந்தியா முழுவதும் சுற்றுப் பிரயாணம் செய்து உபதேசித்து பொது நிதிக்கு தலைக்குக குறைந்தது இரண்டாயிரம் ரூபாயாகிலும் கொண்டுவர வேண்டும். நான் பேலூர் சென்றதும் இதற்கு வேண்டிய ஏற்பாடு செய்யப் போகின்றேன்" என்றும் கூறினுர். சிவானந்தரும் பணிந்து சுவாமிகளின் ஆக்ஞையை சிரமேற்கொற்றுர். நான்கு நாள் பிரயாணமும் ஒருவாறு பூர்த்தியடைய எல்லோரும் சுகமாக மாலை நான்கு மணிக்கு பில்லிபிட்டிற்கு வந்து சேர்ந்தார்கள். அன்று அவர்கள் வழியில் தங்கி சமையல் செய்திருந்தால், இரயில் தவறி விடுமென்று நோகப் பிர

யாணஞ் செய்தமையால், அன்று முழுதும் அவர்கள் பட்டினி யாகவே வர நேர்ந்தது. ஆதலின் சதானந்தரும் லாலா கோவிந்த லால்ஷாவும் வேகமாக சுவாமிகளுக்கு முன்பாக பில்லிபிட்டுக்கு வந்து சேர்ந்தார்கள். சதானந்தர் தின்பண்டங்கள் வாங்கிக்கொண்டு வரச் சிற்றுண்டி சாலைக்குப் போய்விட்டார். பின்னவர் நேராக அம்மாகாண டிப்டிகலெக்டர் பண்டித பவானிதத் ஜோஷியின் இல்லத்திற்கேகி சுவாமிகளின் வருகையை அவருக்கு அறிவித்து விட்டு சிற்றுண்டிச் சாலையில் சதானந்தரைச் சந்தித்தார். ஜோஷியும் பல பிரமுகர்கள் பின்றொடரச் சுவாமிகளை எதிர்கொண்டு தரிசிக்கக் கருதி ஸ்டேஷனுக்கு வந்தார். எல்லோரும் ஸ்டேஷனில் கூடியதும் ஒருவரை யொருவர் அளவளாவி க்ஷேமம் விசாரித்த பிறகு பண்டிதருக்கும் சுவாமிகளுக்கும் மாமிச பக்ஷணத்தைப் பற்றிச் சம்பாஷணை நடந்தது.

பில்லிபிட் ஸ்டேஷனை எய்துதல்

பண்டிதர் மாம்ச உணவைக் கண்டித்து விநயத்தோடு வாதாட, சுவாமிகள் அதை எதிர்த்து வேதங்களிலிருந்தும் சம்ஹிதைகளிலிருந்தும் மேற்கோள் காட்டி, "எந்த 'மாம்சம்' என்ற வார்த்தை கேட்ட மாத்திரத்தில் வைதீகர்கள் வெறுப்படைகிறார்களோ, அதே மாம்ச உணவை, வேதகாலத்து மகரிஷிகள் கூடத் தாம் கொண்டதன்றிப் பிறரையும் உண்ணத் தூண்டியிருக்கிறார்களே! வேத காலத்தில் பசுக்களை அதிதி பூஜைக்காகக் கொல்வதும், அவற்றை 'கொன்ற பாவம் தின்றால் போயிற்' றென்று, யந்திர சமஸ்காரஞ் செய்து தோஷ பரிகார மடைவதும், அங்ஙனம் பிறரும் கோவதை செய்யுங்கால் அவர்களுக்கு மந்திரோக்தமாக பிராயச்சித்தம் பாப நிவாரணஞ்செய்து வைப்பதும் வழக்கமாய் இருந்ததன்றோ? மதப் பைத்திய மல்லவா சிலர் மாம்ச ஆகாரஞ்செய்வது தகும் என்றும், சிலர் ஊனுண்பது ஆகாதென்றுங் கூறி, அதற்குத் தன்னல பரிபாஷையான, தேசாசாரம் லோகாசாரம் ஆகிய இரண்டு தப்பிக்கும் வழிகளைக் கற்பித்து ஹிந்து சமுதாயத்தை இந்தப் பாழும் நிலைக்குக் கொண்டுவந்து விட்டது! இச்செய்கையை நாம் எங்ஙனம் புகழ்வது?" நயமாகவும் வேகமாகவும் தர்க்கிக்கலுற்றார். ஜோஷி சுவாமிகளின் அமுதவாக்கை மரியாதையோடு மௌனமாகக் கேட்டுக்கொண் டிருந்தார். ஸ்டேஷன் மாஸ்டர் முதலானவர்கள் சுற்றிலும் கூடி நின்று சுவாமிகளின் பவ

மாம்ச உணவைப் பற்றிய தருக்கம்.

ளச் செவ்வாயினின் றுதிரும் முத்துக்களைத் தமது செவிகளாகிய காங்களால் வேகமாகப் பொறுக்கிக் கொண்டிருந்தார்கள். அப் பிராமண அன்பரின் வாதத்தைச் சுவாமிகள் பொதுவில் ஆக்ஷேபித்துப் பேசினாலும் ஆத்மார்த்திகள் மாம்ச ஆகாரத்தைக் கனவிலும் கருதலாகாதென்றும், அதனால் விளையும் தீமைகளிவை யெனவும் சாஸ்திரப் பிரமாணத்தோடு பலமுறை பற்பல விடங்களில் அவர் வற்புறுத்தியுள்ளா ரென்பதையும் அதைக் கடைப் பிடிப்பதே சரியென்றும் ஈண்டு நாம் குறிப்பிடுகிறோம்.

இப்படி அஸ்தமனவேளை வரையில் சம்பாஷணை நடந்துகொண்டிருந்தது. அப்பொழுதுகூட, எவ்வளவோ முன்பாக வந்த சதானந்தரும் கோவிந்தலாலரும் வந்து சேரவில்லை. பிறகு அவர்கள் வெகு நேரங் கழித்து இரயில் *வருவதற்கு அரைமணி நேரத்திற்கு முன்புதான் ஒரு பெரிய கூடையில் பூரி, கறி, குழம்பு, அன்னம், மிட்டாய் முதலிய இன் பண்டங்களுடன் வந்தார்கள். அப்பால் அவர்கள் தாமதத்திற்கு நேர் பார்வையில் பக்குவஞ் செய்யப்பட்ட பண்டங்களை அவர்கள் வாங்கி வந்ததையே காரணமென் றாகிக்கப்பட்டது. சுவாமிகள் ஆகாரத்தை மறந்து விவகாரத்தில் முழுமனதையும் செலுத்தியிருந்தார் பின்பு அவர் அப்பண்டிதரையும் சாப்பாட்டிற் கழைத்து, விரஜானந்தர் பந்திவைக்க திருப்திகரமாக எல்லோரும் உணவருந்தினார்கள். பிறகு, பவானி தத்தரவர்கள் சுவாமிகளைச் சந்தித்ததால் தாம் தன்யரானதாகவும், மதத்தின் உண்மைகளைக் கூர்ந்து ஆராயும் விஷயத்திலும், உண்மையை அஞ்சாது வெளியிடுந் தன்மையிலும் சுவாமிகள் கொண்டுள்ள லோகோபகாரமான கருணையையும் புகழ்ந்து விடைகொண்டு விரஜானந்தரையும் சிவானந்தரையும் அல்மோராவுக்குத் திரும்பிச் செல்லுமுன் இரண்டொருதினம் தமது அதிதியாயிருக்க வேண்டிக் கொண்டார்.

இரயில் வந்து நின்றதும் சுவாமிகளும் சதானந்தரும் இரண்டாம் வகுப்பு வண்டியில் ஏற, அங்கிருந்த ஓர் 'கர்னல்', ஐரோப்பிய கனவான்கள் ஏறும் இவ்வண்டியில் 'சுதேசி' ஏறக் கூடாதென்று அவர்களைத் தடுத்தார். சுவாமிகளைச் சுற்றிப் பலர் கூட்டமாகக் கை கூப்பி நிற்றலையும், சிலர் துதிப்பதையும் பார்த்த அவ்வைரோப்பியர் சிறிதஞ்சி சுவாமிகளைத் தாமே நேரிற் றடுக்காமல் முணு முணுத்துக் கொண்டு ஸ்டேஷன் மாஸ்டரை அழைத்து 'இவர்களை வேறு வண்டிக்குப் போகும்படி சொல்லுங்கள்' என்றார்; ஸ்டேஷன் மாஸ்ட

ரும் அதற்கிசைந்து சுவாமிகளை அடுத்த வண்டியில் எழுந்தருளு மாறு பணிவுடன் பிரார்த்தித்தார்; அவர் அங்ஙனம் கூறி வாய்மூடு முன் சுவாமிகள் கோபித்து 'நீர் எவ்வாறு என்னிடம் இப்படிச் சொன்னீர்! உமக்கு வெட்கமா யில்லையா?' எனலும் அவர் பயந்து அகன்றனர். அவ்வைரோப்பியர் எல்லாம் தமது இஷ்டப்படி நடந் திருக்குமென்று வண்டியண்டை வந்து சுமாமிகளும் அவரது அன் பரும் அங்கேயே இருக்கக் கண்டு அதிர்ந்த நகையுடன் 'ஸ்டேஷன் மாஸ்டரே! ஸ்டேஷன் மாஸ்டரே!' என்று கத்திக்கொண்டு அங்கு மிங்குமாக அவரைத் தேடியவண்ணம் ஓடினர். ஏனென்று கேட்பா ரில்லை யாதலின், அவர் ஆத்திரம் பொங்க, மூட்டை முடிச்சுகளை மோதிக்கொண்டு ஆத்திரத்துடன் செய்வதறியாமல் நிற்கையில் வண்டி ஊதிவிட்டது. உடனே அவர் வேறொரு வண்டியிற் பாய்ந் தார். அவர் ஆசாபங்க முற்றதைக் குறித்துச் சுவாமிகளும் சதா னந்தரும் தமக்குள்ளே சிரித்துக் கொண்டார்கள். இயல்பாக, எவ் வளவோ மேதாவிகளுடனும் தனிகர்களுடனும் பதவியாளர்க ளுட னும் சமமாக நெருங்கிப் பழகிய சுவாமிகளுக்கு இந்த ஐரோப்பிய அன்பரின் மன்னிக்க முடியாத நடத்தையைக்காண மனவருத்தமா யிருந்தது.

1901 - ம் ஆண்டு ஜனவரி மாதம் 24-ம் தேதி சுவாமிகள் சதா னந்தருடன் பேலூருக்கு வந்து சேர்ந்தார். சிஷ்யர்க ளெல்லோரும் சுவாமிகளின் வருகையால் குதூகலமடைந்து அவரது முகதரிசன மாத்திரத்தாலேயே சர்வ துக்க நிவாரண மேற்பட்டதுபோல் மகிழ்ந் தார்கள். சுவாமிகளும், தமது "மாயாவதியின் தூய வாழ்வை" அவர்க ளிடம் சவிஸ்தாரமாகக் கூறினர்.

54-ம் அத்தியாயம்.

பேலூர் ஆஸ்ரம வாசம்.

ஒளிமருவு உமையொரு பாகத்தா னருள்பெற்ற ஸ்ரீமத் விவேகானந்த சுவாமிகள் மாயாவதியை விட்டுப் புறப் பட்டு 1901௵ ஜனவரீ 24௳ பேலூர் மடத்தை யடைந்தாரென்று முன்னத்தியாயத்திற் கூறினோம். அவருடைய சிஷ்யர்கள் அவரை அத்யந்த பக்தியுடன் வரவேற்றனர். வேடிக்கையாக வேதாந்த விஷ

யங்களைப் பற்றிய சம்பாஷணைகள் நிகழ்த்துவதும், குதூஹலமாக யோகாப்பியாசம் செய்வதுமாகச் சுவாமிகள் தமது சிஷ்யர்களுடன் சிலநாட்கள் கல்கத்தாவில் தங்கியிருந்தார். சுவாமி விரஜானந்தர் மாயாவதியில் மனமொப்பிச் செய்துவரும் மகத்தான மதசேவையைச் சுவாமிகள் தமது சீடர்களுக் கெடுத்துரைத்து அத்தகைய சேவையே பயனுடையதும் விரும்பப் படுவது மாகுமென்று உணர்த்தி வந்தார். சுவாமிகள் மாயாவதிக்குப் போகு முன்னரே கல்கத்தா ஆஸ்ரமத்தார் புதிதாகப் பல சிஷ்யர்களைச் சேர்த்து, அவர்களை தேகாப்பியாசம், யோகாப்பியாசம், வேதாந்த உபந்நியாசம் முதலியவற்றில் பழக்கி வைத்திருந்ததைக் கண்டு அவர் அதிகத் திருப்தியடைந்தார்; மத சம்பந்தமான சில அரிய காரியங்களைச் செய்ய வேண்டுமென்று அவற்றிற்கான ஏற்பாடுகளைக் குறித்து ஆலோசித்துக் கொண்டும் இருந்தார். இச்சமயத்தில் கீழ வங்காளத்திலிருந்தும் டக்காவிலிருந்தும் பல அழைப்புக் கடிதங்கள் வந்தன. இதே சமயம் ஸ்ரீசாரதாமணி தேவியார்—கீழ வங்காளத்திலும் அசாம் மாகாணத்திலுமுள்ள க்ஷேத்திரங்களுக்கு யாத்திரை செய்ய விரும்புவதாகச் சுவாமிகளுக்குத் தெரியப் படுத்தினார். சுவாமிகளுடைய தேக நிலையும் அவ்வளவு திருப்திகரமாயில்லை. யாத்திரை செய்தால் சிறிது குணம் ஏற்படலாமென்றும் சில வைத்தியர்கள் யோசனை கூறினார்கள். இம்மூன்று காரணங்களைக் கொண்டும் அவர் கீழ வங்காளத்தில் யாத்திரை செய்ய நிச்சயித்தார். கல்கத்தாவில் சுவாமிகள் ஸ்ரீ பலராம் பாபு வீட்டில் தங்குவதும், சில சமயங்களில் உபந்நியாசங்கள் செய்வதும், சில நேரங்களில் பல நாடுகளிலிருந்தும் வருங் கடிதங்களுக்குப் பதிலெழுதுவதுமாக இருந்தார்.

கல்கத்தா ஆஸ்ரமம்.

அந்த வருஷம் மார்ச்சு மாதம் 18உ சுவாமிகள் கல்கத்தாவிலிருந்து புறப்பட்டு மறுநாள் தமது சிஷ்யர்களுடன் நாராயணஜங் என்ற ஊரை யடைந்தார். ஸ்ரீ பாபு ஈஸ்வர சந்திரகோஷ், ஸ்ரீ பாபு சுகன சந்திர கோஷ் முதலானவர்கள் சுவாமிகளை அன்புடன் வரவேற்றனர். அங்கு கூடியிருந்த ஜனங்களின் கூட்டத்திற்கு அளவேயில்லை. அந்நகரவாசிகள் சுவாமிகளை ரதத்தில் ஊர்வலமாக அழைத்துச் சென்றார்கள். ஸ்ரீ மோகினி மோகன் என்ற ஜமீன்தாரின் மாளிகை சுவாமிகளுக்கு விடுதியாக ஏற்பாடு செய்யப்பட்டது. அங்கிருந்து புத்தாஷ்டமி மகா புண்ய காலத்தில் சுவாமிகள் சாரதா

தேவியுடன் பிரம்மபுத்ரா நதியில் நீராடிப் பின் சீதா லக்ஷம் வழியாக தளேஸ்வர கட்டத்தை யடைந்தார்; பின்னர் லாங்கல் பர்க் என்ற ஸ்ரீ பரசுராம அவதார ஸ்தல மார்க்கமான டக்காவை யடைந்தார்.

டக்கா வாசம்.

டக்காவில் சுவாமிகள் தங்கியிருந்த பொழுது பல அறிவாளிகள் இடை விடாமல் அவரைத் தரிசிக்க வந்துகொண் டிருந்தனர். அந் நகரில் சுவாமிகள் ஞானம், பக்தி, விஸ்வாஸம், துறவு, விவேகம், பற்றறுத்தல், கர்மயோகம் முதலான விஷயங்களைப் பற்றிச் சில அரிய சொற் பொழிவுகள் நிகழ்த்தினார். அவர் அருள் விளங்கும் முகத்தைத் தரிசித்த மாத்திரத்தில் வல்வினைபோம், பலம்போ மென்று பலர் கும்பல் கும்பலாகக்கூடி சுவாமிகளைத் தரிசிக்க வந்துகொண்டே யிருந்தனர். மார்ச்சுமீ 30௳ சுவாமிகள் ஜெகன்னாத கலாசாலையில் நான் கண்டறிந்த உண்மை என்பது பொருளாக இரண்டுமணி நேரம் உபந்நியசித்தார். அடுத்த நாள் நாம் பிறந்த சமயம் என்பது விஷயமாக போகஸ் கலாசாலைக் கட்டிடத்தில் மூன்று மணிநேரம் பிரசங்கித்தார். அப்பொழுது சுவாமிகள் பழங்கால ஹிந்துக்களின் மேன்மையான நிலையை விளக்கி, முற்கால விஷயங்களை யெண்ணி யெண்ணி யாம் ஏங்கலாகாதென்றும், காலப்போக்கால் ஏற்படும் மாறுபாட்டைத் தழுவி நிகழ் காலத்திற்கேற்ற பொருத்தமான விஷயங்களில் ஈடுபட வேண்டுமென்றும், சமயத்தை உயிரைக் கொடுத்தாகிலும் காப்பாற்றுவதே உண்மையான தியாகமாகுமென்றுங் கூறினார்; மதங்களின் நோக்கத்தையும் எல்லையையும் எடுத்துரைத்து, வேதங்களின் இருபெரும் பிரிவுகளான கர்மகாண்டம், ஞான காண்டங்களை ஜாதி வித்யாசமின்றி, ஆண் பெண்பால ரனைவரும் கற்கவேண்டுமென்றும் வற்புறுத்தி, வேதங்கள் எவருக்கும் தனியுரிமை யுடையன வல்லவென்றும், அவ்வித சில குறிப்புகள் பின் தோன்றிய புராணங்களில் மட்டும் காணப்படினும் மறுப்புக்கு இடமான அப் புராணங்கள் பல காரணங்களால் பிரமாணமானவை யல்லவென்றுங் கூறினார். பிறகு அவர் ஹிந்துமத சித்தாந்தங்களையும் இறைவன், ஆன்மா, ஜகத் என்ற அபார விஷயாந்தரங்களையும் விளக்கி அவை ஒன்று கூடுகின்ற வேதாந்த தத்துவங்களின் உட்கோட்களை யெடுத்தோதி, மேல்நாட்டு வேதாந்தம் மனமோடு ஒடுங்குவதும், ஹிந்துக்களின் வேதாந்த விசாரம் அவ்வாறின்றி மனவாக்குகளுக் கெட்டாத மகோந்நத நிலையை யாராய்ந்து, ஜீவனே உண்மையான பொரு

ளென்று கண்டு தெளிதலையுங் குறித்துக் காட்டினர். இதனாலே தான் மேல் நாட்டார் சமூகங்களையும், உலக இன்பங்களையு மடைந்து திருப்திப்படுகின்றனர்; ஹிந்துக்கள் ஏகாந்தத்தையும் துறவையும் விரும்புகிறார்களென்றும் புகன்றார்; அவதார மகிமையின் அந்தரார்த்தம் மனிதனிடத்துள்ள அந்தர்யாமியான பரம்பொருளைத் தெளிதலே யாகும் என்று விளக்கிக் கூறினர்; மதக் கொடுமைகளையும், விக்கிரக ஆராதன நிந்தனையையும் விலக்க வேண்டுமென்று சுவாமிகள் வற்புறுத்தினர். அறிவைப் பெருக்கும் நூல்களைக் கற்பதில் வஞ்சனை செய்யாதீர்கள். தேசத்தைப் படிப்பறிவில்லாத பாமரர் நிறைந்த படுகுழியாக்காதீர்கள். அறிவற்ற பாமர ஜனங்களுக் கறிவூட்டி, அவர்களைக் கைதூக்கி விடுங்கள். தன்னலம் பேணாது திரும்பவும் எல்லா நூல்களையும் பயில அனைவரையும் அழையுங்கள். அதுதான் தர்மம்' என்பது அவருடைய அழகிய முடிவுரை

அவர் டக்காவில் தங்கியிருந்த பொழுது ஒருநாள் மூட பக்தியுள்ள வாலிப ரொருவர் அவரை வணங்கிச் சிறிது நேரம் உரையாடிய பின்னர், ஒரு படத்தைக் காட்டி "இவர் அவதார புருடரா?" என்று பன்முறையுங் கேட்க, சுவாமிகள் "அன்ப! அதை நீயே யறிய முயற்சி செய்! தேகாப்பியாசத்திலும் பழகு. எதையும் நீயே கண்டு தெளிதல் வேண்டும்! அதுதான் தனக்குத்தானே ஆன்ம உதவி யெனப்படும். அறிவாளிகளுக்கும் அவதார புருடர்களுக்கும் அதிக தாரதம்யமுண்டு. டக்காவின் இரண்டு மூன்று தீர்க்க தரிசிகளைப் பற்றி யான் கேட்டிருக்கிறேன்" என்று கூறியருளினர்.

சுவாமிகள் டக்காவில் ஒரு ஆஸ்ரமத்தை நிறுவி, ஸ்ரீராமகிருஷ்ண பக்தியுள்ள பல சிஷ்யர்களையும் ஏற்றார். பின்னர் டக்காவினின்றும் புறப்பட்டு, சந்திரநாதம் காமாக்யா என்ற ஸ்தலங்கள் வழியாக யாத்திரை செய்துகொண்டு கௌஹத்திக்கு வந்து சேர்ந்தார் நாலா பக்கங்களிலும், மலைகளாலும், கருமணலிட்டோடும் அருவிகளாலும், பசும்புற்றரையாலும் அலங்கரிக்கப்பட்டுள்ள கௌஹத்திப் பிரதேசத்தில் இறைவனுடைய இயற்கை யமைப்புத் திறனைக் கண்டு போற்றி அடிக்கடி சுவாமிகள் தியானத்தி லாழ்வார். அப்பதியில் சுதர்மத்தைப் பற்றிய விரிவுரை யொன்று நிகழ்த்தப்பட்டது. கௌஹத்தியி லிருக்கும் பொழுது வியாதி அதிகரித்துக்கொண்டு வந்தமையால் சுவாமிகள் கௌகத்திற்குச் சுமார் அறுபது மைல் தூரத்திலுள்ள ஷில்லாங்

கண்ணைக் கவரும் கௌஹத்தி.

ருக்குப் போக நேர்ந்தது. ஷில்லாங் அக்காலத்தில் அசாம் மாகாணத் திற்குத் தலைநகராக விருந்தது. சுவாமிகள் ஷில்லாங்கை யடைந்த வுடன் அதன் பிரதிநிதியான காட்டன் துரை யவர்கள் அவரை அன் புடன் வரவேற் றுபசரித்தார். காட்டன் துரை யவர்களின் ஆதரவில் ஷில்லாங்கில் ஒரு உபந்நியாசமும் நடைபெற்றது. சுவாமிகளுடைய சொற்பெருக்கால் பேரானந்த மடைந்த காட்டன் துரை யவர்கள் "மேல் நாடுகளில் வெற்றிக்கொடி நாட்டிய தாங்கள் மலைகளாற் சூழப் பெற்ற இவ்வூருக்கு வந்து எங்களுடைய செவிகளுக்கு விருந்தளித்த கருணைத் திறந்தான் என்னே!" யென்று போற்றிக் கௌஹாத்தியில் சுவாமிகள் தங்கியிருந்த காலமுழுதும் அவருக்குத் தன் மாகாணப் பிரதம வைத்தியரைக் கொண்டு நோராக மருந்து கொடுத்து வரும்படி செய்தார். க்ஷயத்தாலும், நீர் சம்பந்தமான நோயாலும் சுவாமிகள் பீடிக்கப்பட்டார்; இவற்றுடன் மார்வலியும் சுவாமிகளைத் துன் புறுத்தியது.

'மே' மாதத்தில் சுவாமிகள் கல்கத்தா ஆஸ்ரமத்தை யடைந் தார். அக்காலத்தி லெங்கும் பரவியிருந்த தீண்டாமையைக் கண்டு சுவாமிகள் வெறுப்படைந்தார். 'நான் பக்கிரி! எனக் கேது ஜாதி மத பேதம்? கைப் பிச்சை யெடுத்துண்ணும் துறவி மிலேச்சனிடத்தி லும் உண்ணலாமென்று சாத்திரங்கள் கூறவில்லையா? ஹிந்து மதத் தின் பலத்தைத் தீண்டாமையே ஒடுக்கி வருகின்றது. ஆதலின் இதனை யொழித்தலே நமது முக்கிய கடமை' யென்று சுவாமிகள் கூறி வந் தார். சுவாமிகள் தமது கீழவங்காள யாத்திரானுபவங்களைப்பற்றி விஸ் தாரமாகக் கூறி டக்காவில் வைணவ சமயம் பரவி யிருப்பதையும், பிரம்மபுத்ரா தீரத்தின் தீர்த்த விசேஷத்தையும் கூறி, நாகமகாஷ்யரைப் பற்றி விசாரித்தபோது' "நாகமகாஷ்யர் என்ற பெரியார் கீழ வங்கா ளத்திற் றோன்றியவர்; ஸ்ரீராமகிருஷ்ண தேவரைச் சிவ சொரூபமென வவனிக் குதித்தெழுந்த மாமுனியென்றவர் போற்றி வந்தவர்; அவர் 1899 - ம் ஆண்டில் தீர்க்க சமாதி யடைந்தார்; நான் டக்காவினின் றும் அம்மகாத்மாவின் கிருகத்தை யடைந்து, சமாதியைச் சுற்றி வணங்கி, அப்பெரியாருடைய மனைவி அன்புடன் அமுதூட்ட அருந் தினேன்" என்று கூறினர்.

விவேகானந்த சுவாமிகள் கீழவங்காள யாத்திரையை முடித்துக் கொண்டு பேலூர் ஆஸ்ரமத்தை யடைந்த பின்னர் நெடுந்தூரப் பிர யாணமேதும் வைத்துக் கொள்ளவே யில்லை. அவர் தேகஸ்திதி தினந்

தோறும் படிப்படியாகக் குறைந்து கொண்டே வந்தது. சிஷ்யர்கள் சற்றும் சலிப்பின்றி அவருக்குச் சிஷ்ருஷை செய்து வந்தார்கள்; அவர்கள் அன்பின் மேலீட்டால் "தாங்கள் திரும்ப நல்ல தேகாரோக்கியத்தை யடைகின்ற வரையில் அதிக வேலை வைத்துக்கொள்ள வேண்டாம்; அதிகம் பேசவேண்டாம்; உங்களுடைய தேகநிலை எங்களுள்ளத்தைக் கலங்க வைக்கின்றது; ஆதலின் ஓய்வு கொள்ளுங்கள்" என்று கெஞ்சிக் கேட்டுக் கொண்டார்கள். சுவாமிகளும் அதற்கிணங்கத் தமது அலுவல்களை மட்டுப்படுத்திக் கொண்டார். அவரைக் காண வேண்டுமென்ற அபிலாஷையாலும், சம்பாஷிக்க வேண்டுமென்ற ஆர்வத்தாலும் இந்தியாவின் பல பாகங்களினின்றும் பிரமுகர்கள் பலர் நூற்றுக் கணக்காக பேலூர் ஆச்சிரமத்திற்கு வந்து கொண்டிருந்தனர். அவர்களுக்கெல்லாம் சுவாமிகள் இயன்றவரை உபதேசஞ் செய்து வந்தார்.

தேக அசௌக்கியத்தால் அழைத்த பல விடங்களுக்கும் அவர் போக முடியவில்லை. கௌபீனதாரியாய் அவர் ஆச்சிரமத்தைச் சுற்றி வருவார்; சில சமயம் கங்கைக் கரையில் அவர் தன்னுடைய ஒரே காவியாடையுடன் காற்று வாங்கி வருவார்; சில நேரங்களில் இராமாயண, மகா பாரதங்களையும் உறுதி பயக்கும் உண்மை நூல்களையும் வாசிப்பார்; ஸ்ரீராம கிருஷ்ணரையோ காளிகாதேவியையோ தியானஞ் செய்வார். இவ்விதமாகச் சுவாமிகள் தமது உடலுக்கும் மூளைக்கும் அதிக வேலை கொடாமல் ஆஸ்ரம காரியங்களை அங்கிருந்தபடியே கவனித்து வந்தார். பிரம்மச்சரிய விரதானுஷ்டானமும் புருஷத்துவமுமுள்ள மனிதர்களைப் பாரத பூமியிற் பெருக்கிச் சமயத்தொண்டு புரிவிக்க வேண்டுமென்ற அவருடைய ஆசைக்களவே யில்லை. குரு குலங்களை ஸ்தாபித்து இயற்கையான வனாந்தரங்களில் அவற்றை நடைபெறச் செய்யவேண்டு மென்றும், ஒவ்வொரு முக்கிய தலத்திலும் ஸ்ரீராமகிருஷ்ண மடங்களை நிறுவி அதில் சாதுக்களைக் கொண்டு மேல் நாட்டு விஞ்ஞான நூல்களையும் ஹிந்து சாஸ்திரங்களையும் ஆராய்ச்சி முறையில் கற்பிக்கவேண்டுமென்றும் சுவாமிகள் விரும்பினார். தொழிற் கல்வி, மேல் நாட்டிற்கும் இந்தியாவுக்குமுள்ள தாரதம்மியங்களைப் பற்றி விரிவுரைகள், ஜப்பானிய வணிகத்திறம், வங்காள குலகுரு வழக்கத்தால் வருங்கேடு, ஜாதி வேற்றுமையால் நேரிடுந் தீங்குகள், அவற்றை யாவருக்கும் சம்மதமான வகையில் நிவர்த்திக்கும் மார்க்கங்கள், இந்தியாவின் பெருங் குறைகள், உண்மையான துறவிகளின்

தொகையைப் பெருக்கி அவர்களை உடனுக்குடனே கர்மம், யோகம், பக்தி, ஞான முதலிய துறைகளிற் பழக்குதல், அவதார மகிமை, ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸர் சீர் பரப்புதல், நிர்விகல்ப சமாதியும் பிரம்மத்தை யறியும் வழியும், தவிக்கின்றவரைக் கைதூக்கிவிடுந் தயாளத்வ முடைமை, தெய்வத்தின் சர்வ சாக்ஷியாக நிறைந்தருளி அணுவிலும் மேருவிலும் நிலவும் சகஜ வாழ்வின் பெருமையும் விண்ணளவாய் நின்று விளங்குங் கருணையும், மதப்பாசாங்கு, ஸ்திர சமூகத்திற்குக் கல்வியறிவின் அவசியம், ஒரு வகுப்பாரின் பல சிறு கிளைகளுக்குள் பெண் கொள்வினை செய்தல், ஸ்ரீராமன், ஜயவீர ஹனுமான், ஸ்ரீகிருஷ்ணன் முதலிய அவதார ரகசியங்களை மக்களுக்கு அறிவுறுத்தல், கலையின் பல்துறைப் பகுதிகளான சமயம், வேதாந்தம், ஜனசாரம் விஞ்ஞானமென்ற விஷயங்களைப் பற்றித் தம்மைக் காணவந்தவர்களுக்குச் சுவாமிகள் உபதேசஞ் செய்து வந்தார்.

சுவாமிகள் தானே பாகம் செய்து உண்பார். அவருடைய மூளையானது எப்பொழுதும் ஏதாவதொரு துறையில் வேலைசெய்து கொண்டே யிருக்கும்; நித்திரையிலும் வேலை செய்துகொண்டே போகும். அவரைக் கொடூரமான வியாதிகள் வருத்தியும், அவருடைய கம்பீர நடையும், ஒளிபொருந்திய திருமேனியும், அருட்பார்வையும், சகல வசீகர முகவதனமும் சிறிதும் குறைவுபட வில்லை. அவர் சந்நியாசியாக உபதேசிப்பார்; அடுத்த நிமிடத்தில் தேச பக்தராவார்; அடுத்த மணியில் வித்வானாக வியாகரண நூலை விளக்கிப் போவார்; அடுத்த கணத்தில் பக்திமேலீட்டால் காதாளம் போட்டுப் பாடுவார்;
அடுத்த கணத்தில் பக்திமேலீட்டால் காதாளம் போட்டுப் பாடுவார்;
ஸ்வரஸ்தானங்களை யொட்டி கானம் பண்ணுவார். இவற்றைக் கண்டு சிஷ்யகோடிகள் பெரு மகிழ்ச்சி யடைவர். அவர் வியாதியைச் சிறிதும் பொருட்படுத்தாது, எப்பொழுதும் தமது சீடர்களுடன் சல்லாபித்துக் கொண்டே யிருப்பார்; சில நேரங்களில் குழந்தையைப்போன்று விளையாடுவார்; சில சமயங்களில் தெய்வாம்சராகவும் சதாசார்யராகவும் விளங்குவார்; சில சமயங்களில் தமது சிஷ்யர்களைக் கோபித்துக் கடிந்து பேசுவார்; அடுத்த நிமிஷம் ஆனந்தமாக உரக்க நகைத்து ஆதரவான வசனங்களைப் புகல்வார்; அவருடன் பழகிய நண்பர்களுக்குப் புத்தகங்களிலிருந்த நம்பிக்கை போயிற்று. விக்கிரகங்களெல்லாம் சிலைகளாகவே தோன்றின. ஆனந்தருடைய ஒரு சொல்லிலே வேதாந்த ரகஸ்யங்கள் அடங்கியிருப்பதை வியந்து கண்ட அவர்கள்

"பேசுந் தெய்வ மன்றோ இது! நாமே பாக்யவந்தர்கள்!" என உள்ளம் பூரிப்பார். ஆனந்தர் உண்மையில் அனைவரையும் ஆனந்தப்படுத்தி வந்தார்.

சுவாமிகளுடைய சொந்த அறை பேலூர் ஆஸ்ரமத்தின் இரண்டாவது மாடியில் தென்கிழக்குப் பார்சத்திலிருந்தது. அது பல ஜன்னல்களோடு விசாலமாக விளங்கும் அதன் வாசற்படியின் வலது மூலையில் சுமார் ஆறடி உயரமுள்ள அழகிய கண்ணாடி யொன்றுண்டு. ஆடையை வைக்கும் அடுக்குச்சட்ட மொன்று காவியாடையுடன் அக்கண்ணாடியினருகி லமைந்திருக்கும். அவ்வறையின் மத்திய பாகத்தில் அழகான ஓர் ஸ்பிரிங்கட்டில் இருக்கும். இது ஓர் ஐரோப்பிய பக்தரால் சுவாமிகளுக்கு அளிக்கப்பட்டது. அதில் சுவாமிகள் தோகோபாதி அதிகரிக்கும் போதுமட்டும் துயில் கொள்வார். அநேகமாக அவர் தரையில் ஒரு பாயை விரித்துப் படுப்பதே வழக்கம். அவ்வறையின் மற்றொரு மூலையில் ஓர் அழகிய சார்மணையிலங்கும். அறையின் விசாலமான பிரிதோரிடத்தில் கடிதங்கள், கட்டுரைகள், வேதாந்த நூல்கள், ஆனந்த போதினிகள், எழுது கோல்கள், மையொத்து மணை, அழைப்பு மணி, அரிய சுவடிகள், ஸ்ரீராம கிருஷ்ண பரமஹம்ஸரின் திருவுருவப்படம், மணமுள்ள மலர்கள் முதலியவற்றோடு ஓரழகிய மேசை விளங்கும். மற்றோரிடத்தில் அழகிய யோகாசனமாகிய மான் தோல் போடப்பட்டிருக்கும் மற்றொரு சிறு மேசை சில கிண்ணங்களுடனும், உணவுக்கேற்ற பாத்திரங்களுடனும் காணப்படும். அதற்குச் சமீபத்தில் சுக நாற்காலி யொன்று சுத்தமாயிருக்கும். சுவற்றினோத்தில் அழகிய 'அல்மைரா' வொன்று அபரிமிதமாகச் சுவாமிகள் மேல் நாட்டி லணிந்த விலையுயர்ந்த காவிப் பட்டாடைகளுடன் கண்களைக் கவரும். அந்த அறையில் விசேடமாகக் கவனிக்கவேண்டிய மற்றொரு பொருளுண்டு. அதுதான் ஸ்ரீராம கிருஷ்ண பரமஹம்ஸதேவர்—கதாதரர்—காளிப் பிரசாதர்—கருணைத் தடங்கடலுடைய திருவுருவப் படம்! ஹா! சுவாமிகள் அடிக்கடி அன்போடு அப்படத்தைப் பார்த்து பரமானந்த மடைந்து கண்களில் நீர்வார "பரமாசாரியனே! அடியேன்—எளியேன்—நாயினுங் கடையேனாகிய எனக்கு நல்ல தவிசிட்டு, மதோத்தாரணஞ் செய்ய உவந் தருளிய—தேவரீரை என் கண்ணீரால் மஞ்சன மாட்டுகிறேன்! தேவரீரை அடியேன் மனமாகிய கோயிலில் வைத்து விரையார்ந்த அன்புமலர் தூவி, துதிபாடிப் பணி

சுவாமிகளின் அந்தரங்க அறை.

கின்றேன்" என்று தோத்திரிப்பார். அவருடைய அறையில் சகல செளகரியங்களும் அமைந்திருந்தன. அவர் எழுதுவதும், எண்ணு வதும், மனங் கொண்டெழுவதும், உபதேசிப்பதும், உணவு கொள் வதும், உபாசிப்பதும், ஆடுவதும் பாடுவதும், நித்ய கருமங்களைச் செய் வதும், நித்திரை போவதும் ஆகிய எல்லா மிங்கேயே நிகழும்.

ஏனைய ஆச்சிரமங்களைவிடப் பேலூர் ஆச்சிரமத்தில் சுவாமி களுக்கு மிகுந்த பற்றுண்டு. தமது அறையை அதிகம் விரும்பி, அவர் எங்கு சுற்றியும் அங்கு வந்துதான் தங்குவார். 1900ளு டிசம்பர்மீ 19உ யிட்ட ஓர் கடிதத்தில் சுவாமிகள் தமது அமரிக்கா நாட்டு பக் தைக்கு எழுதியதாவது:—

> "உண்மையாக! நான் பறவைப்போல அலைந்துகொண் டிருக்கிறேன்! ஆம்? உல்லாசமும் ஊக்கமும் உலவும் பாரிஸ நகரமும, அகோரமும் அமைதி யுள்ள 'கான்ஸ்டாண்டிநோபிளும்' பிரகாசமும், புஜபல கோபுரங்களு முடைய 'கெய்ரோ'வும் எனக்கு வெகு தூரத்தில் விளங்குகின்றன. நான் எனது அழகிய அறையிலிருக்கின்றேன்; துங்கமாகப் பாயும் கங் கைக் கரையில் நிருப மெழுதிக்கொண் டிருக்கிறேன்; சந்தடியற்றுச் சாந்தியுடன் கங்கையில் சூரியனின் ஒளிபட்டு மின்னும் பொன்னழகை யான் தரிசித்துக் கொண்டிருக்கின்றேன். இப்பொழுது இங்கு குளிர் காலம்; எல்லாம் எங்கும் பசுமை! பச்சைப் பட்டுக் கம்பளம் விரித் தது போன்று பசும் புற்றரை விளங்குகின்றது. குளிர்காற்று அமைதி யாக வீசுகின்றது **"

சுவாமிகள் என்றும் ஒரே விதமான அன்புடையவராய்த் தமது சீடர்களை யெல்லாம் நன்னெறியிற் பழக்கி வந்தார். அவர் பாமர சாதுக் களாகிய தமது பக்தர்களிடத்தி லெல்லாம் ஸ்ரீராம கிருஷ்ணருடைய உருவத்தையே தரிசிப்பார். அனுதினமும் சுவாமிகள் நான்காம் யாமத்திலே நித்திரையிலிருந்த நண்பர்களையெல்லா மெழுப்பி தோத் திரஞ் செய்யத் தூண்டுவார். தமது சிஷ்யர்கள் நன்னெறியினின்று சிறிது வழுவினும் அவருக்குக் கோபம் வந்துவிடும். அப்பொழுது அவர் நல்லாசிரியனை யொத்து அவர்களைக் கண்டிப்பார். தோத்திரம் முடிந்தவுடன் அனைவரும் சாலை வழியாக, அந்த அதிகாலையின் பகலை வரவேற்கும் ரம்யமான காற்றை சுவாசித்துக் கொண்டு, கங்கைக் கரையை யடைந்து நீராடித் திரும்புவார்கள். கீழ்வங்காள யாத்திரைக் குப் பிறகு சுவாமிகள் வெளி வேலைகளில் அதிக கவனஞ் செலுத்த வில்லை. யாவும் கடிதப் போக்கு வாயிலேயே நடைபெற்று வந்தன.

இனி சுவாமிகள் பிராணிக ளிடத்துக்கொண்ட அன்பைச் சிறிது கூறுவோம். பேலூர் ஆச்சிரமத்தில் நாய், ஆடு, பசு, மயில் முதலிய பிராணிகளைச் சுவாமிகள் தமது நேர் பார்வையில் வளர்த்து வந்தார். அவற்றிற்குச் சுவாமிகள் பாகா, ஹஸ்னி, கோபு, கமலா என்று முறையே செல்லப் பெயரிட் டழைப்பது வழக்கம். இந்தப் பிராணிகளுடன் சிகாகோவில் சர்வமத சபையை கிடுகிடென ஆட்டி வைத்த இம்மகான் சிறு குழந்தையைப் போன்று கொஞ்சி விளையாடு வதைக் கண்டு அவரைத் தரிசிக்கவந்த பக்தர்கள் அதிசயிப்பர். ஒரு சிறு ஆட்டுக்குட்டி யிடத்தில் அவருக் கதிக அன்புண்டு. அதனோடு அவர் விளையாடிய வண்ணமாகவே யிருப்பார். கழுத்திற் கட்டிய சிறு சதங்கைக ளொலிப்ப அது அவருடன் விளையாடும். அவ்வாட்டுக் குட்டி இறந்துபோன பொழுது அவர் சேயைப் பிரிந்த தாயைப்போல வருந்தினார்; "சாரத் சந்திரா நான் அன்புவைக்கின்ற பிராணிக ளெல்லாம் சீக்கிரத்தில் மரிக்கின்றனவே? இதற்கு நானென்ன செய்வேன்" என்று கூறி வருந்தினார். சுவாமிகள் 1901 ம் ௵ செப்டெம்பர்மீ 17௳ அமரிக்காவிலுள்ள சிஷ்யைக் கெழுதிய லிகிதத்தில் அவருடைய அன்புள்ள பிராணிகளைப்பற்றிய சில அழகிய வசனங்கள் காணப்படுகின்றன. சுவாமிகள் பிரசார வேலையாக வெளியூர்களுக்குச் சென்றிருந்த பொழுது 'பாகா' இறந்து போயிற்று. சிஷ்யர்கள் அதனைத் தூக்கி கங்கையி லெறியும்படி வேலையாட்களை ஏவினர். பன்முறை எறியப்பட்டும் அதன் எலும்புக்கூடு மடத்திற்கு நேராகவே ஒதுங்குவதைக் கண்டு அதிசயித்து, அதன் என்புகளை மடத்திற்குக் கொண்டுவரச்செய்து ஒரு மூலையிற் புதைத்து சிறு செங்கற் கட்டட மொன்றையுங் கட்டிவைத்தனர். எப்பிராணியானாலென்ன! அன்புதானே எதற்கும் காரணம்!

பிராணிகளிடத்து அன்பு.

இக்காலங்களில் சுவாமிகளை ஜலோதர நோய் தொடர்ந்து வருத்திற்று. அவருடைய கால்கள் அடிக்கடி வீங்கி வடிந்தன; இதனால் நடப்பதற்குக்கூட அவர் சிரமப்பட்டார்; அவர் இருமிக் கொண்டு இராக்காலங்களில் நித்திரை போகாமல் கஷ்டப்படுவார். ஸ்ரீ சாரத் சந்திரர் சுவாமிகளின் தேக நிலையைப் பற்றி வருந்திக் கேட்ட பொழுது சுவாமிகள் "ஏன் என்னுடைய தூல சரீரத்தின் நிலையைப் பற்றி நீ வரும்பொழுதெல்லாம் கேட்கின்றாய்? அதன் நிலை அறிவாளிகளா லறியப்பட்டது

நோயால் துன்பம்.

தானே ! 'பிணி பசி மூப்பு துன்பம்' ஆகிய இவை இவ்வுடலோடு பிறந்தவை யல்லவா ? நாளுக்கு நாள் வியாதி அதிகரித்துக் கொண்டுதானிருக்கிறது. அதற்காக நான் கவலைப்படவில்லை இந்த தோற் சட்டையை எறியுங் காலத்தை நான் மகிழ்ச்சியுடன் வரவேற்பேன். எனது சூக்ஷ்ம சரீரம் எனது பரமாசாரியன் எந்த நிலையை எனக்குபதேசித்துப் போனாரோ அந்நிலையினின்றும் நான் மாறவில்லை'' என்று மறுமொழி பகர்ந்தார். வைத்திய நிபுணர்களின் சிகிச்சையால் அவ்வாண்டு (1901) ஜுலை ஆகஸ்டு மாதங்களில் அவருடைய உடல் சிறிது குணப்பட்டிருந்தது.

ஆஸ்ரமத்தைச் சுற்றிலு மிருந்த மூட நம்பிக்கையுள்ள சில கிராம வாசிகள் கண் மறைவாகவும் நேரிலும் ஆஸ்ரமத்தாரின் ஒழுக்கங்களையும், பக்தியையும் குறைவுபடக் கூறிவந்தனர். இவற்றைச் சுவாமிகள் அறிந்தாராலும் தமது பக்தர்களைப் பார்த்து "அந்தணரை நல்லவரைப் பரமசிவனடியவரை யகந்தையாலோர் நிந்தனை சொன்னாலு மென்ன வைதாலுமென்ன வதில் கேடேதமுண்டோ ? சந்திரனைப் பார்த்து நின்று நாய் குரைத்தபோதிலென்ன, தாழ்ச்சிதானே'' என்றும் "தூஷணையே நம்பிக்கையை நிலைநாட்டுங் கருவி. எந்த மதஸ்தாபகரையும் சமூகம் தூற்றாதொழியவில்லை பயனைக் கருதாமலும், இடையூறுகளைப் பொருட் படுத்தாமலும் உங்கள் கடமையைச் செய்வதில் நீங்கள் கண்ணுங் கருத்துமா யிருங்கள்'' என்றும் கூறித் தேற்றுவார்.

நிந்தித்தாலென்ன?

சுவாமிகள் சமாஸத்தைப் பற்றிப் பேசுவதன் கருத்தை யறியாத பலர் அவரிடத்துத் தவறான எண்ணங்கொண் டிருந்தனர். அதற்காகச் சுவாமிகள் கவலைப்படவில்லை. சந்நியாசிகளுக்குரிய கருமங்களைச் செய்வதில் அவர் அதிகத் தீவிரராக விருந்தார் வைதீகச் சடங்குகளைச் சுவாமிகள் குறைவுபடாமல் நடத்தி வந்தார். அவ்வாண்டு அக்டோபர் மாதத்தில் நடைபெற வேண்டிய துர்க்கை பூஜையை நடத்தி அப்புண்ணிய தினத்தில் ரகுநந்தன ஸ்மிருதியை வாசிக்க வேண்டுமென் றெண்ணியிருந்தார். துறவிகள் எவ்வித முன்னேற்பாடுகளுடனும் கருமங்களைச் செய்யலாகாதென்ற கருத்தை யனுசரித்து, அத்துர்க்கை வழிபாட்டில் முதல் நாள் ஸ்ரீசாரதாமணி தேவியிடத்திலும் காளிமாதேவி யிடத்திலும் சென்று வணங்கி அனுமதி பெற்று வந்தார். பின்னர் சுவாமி பரமானந்தர், பிரம்மச்சாரி கிருஷ்ணலால் முதலானவர்கள் வேண்டிய பொருள்களைச் சேகரஞ்

துர்க்கை பூஜை.

செய்தனர். ஆஸ்ரமத்தின் ஒரு பக்கத்தில் அழகிய மலர் மண்டபமொன்று அமைக்கப்பட்டது; சஷ்டியன்று துர்க்கா தேவியின் துல்ய விக்கிரஹ மொன்று அந்த இடத்திற்குக் கொண்டுவரப்பட்டது. அன்று விசேஷமாக மழையும் பெய்தது. பூஜைக்கு வேண்டிய சாமக்கிரியைகளை யெல்லாம் சுவாமி பரமானந்தர் சேகரித்தார். பாபு நிலம்பர் முகர்ஜிக்குச் சொந்தமான அருகாமையிலுள்ள தோட்டம், ஸ்ரீசாரதாமணி தேவியும் விசேடமாக அவ்விழா நிமித்தம் வந்தவர்களும் தங்கும் விடுதியாக ஏற்பாடு செய்யப்பட்டது பிரம்மச்சாரி கிருஷ்ணலால் பூஜையை நடத்தினர். சுவாமி ஸ்ரீராம கிருஷ்ணானந்தரின் தந்தையும், சாஸ்திர விற்பன்னரும் பண்டிதருமான ஈஸ்வர சந்திர பட்டாசாரிய மகாஷயர் மாண்புடன் மந்திரோக்தமாக மகேஸ்வரி பூஜையை நடத்தி வைத்தார். சாஸ்திர விதிப்படி உயிர்ப் பலியைத் தவிர மற்ற பூஜைகளனைத்தும் விமரிசையாக நடைபெற்றன. தக்ஷிணேஸ்வரம், பேலூர், கல்கத்தா முதலான இடங்களிலிருந்து பல பண்டிதர்களும், சாஸ்திரக்ஞர்களும் இவ்விழாவிற்கு சுவாமிகளி னழைப்புக் கிணங்கி வந்திருந்தனர். ஆயிரக்கணக்கான மக்கள் அங்கு அன்று கூடியிருந்தார்கள். மூன்று நாள் பூஜை வெகு சிறப்பாக நடைபெற்றது. அந்நாட்களில் இடையிடையே மேளவாத்தியங்கள் முழங்கின; பஜனைகள் நடைபெற்றன. அடுத்த நாள் சப்தமியன்று சுவாமிகளுக்குச் சுரம் வந்திருந்தபடியால் அவர் சக்தி பூஜைக்கு மட்டும் வந்திருந்தார். துர்க்கை பூஜை யன்று வழக்கமாகப் பாடப்படும் சில கீதங்களும் பாடப் பெற்றன. மறுநாள் விஜயதசமி யன்று துர்க்கா தேவியைக் கங்காநதியிலெழுந்தருளப் பண்ணினர். பின்னர் சுவாமிகளுடைய ஞான தாயாரான சாரதாமணி தேவியார் தமது பரிவாரங்களுடன் கல்கத்தாவையடைந்தாள். தக்ஷிணேஸ்வரத்தில் சிம்மத்தின் சிரமே லோர்காலும், மகிஷாசுரன் மண்டையி லோர்காலும் அமையச் சுற்றிலும் கார்த்திகேயன், கணநாதன் முதலானோர் தேவர்களுடன் திகழ, திருமகளும் கலைமகளும் பக்கங்களிலிலங்க விளங்கும் காளிதேவியைப் பக்தர்கள் பேலூர் ஆச்சிரமத்திற் கண்டு களித்தனர். இந்த விஜயதசமி தினத்தன்று கல்கத்தாவில் குதூகலமாக ஓர் பண்டிகை நிகழ்வது வழக்கம்.

அந்த ஆண்டு சுவாமிகளின் விருப்பப்படி லக்ஷ்மி பூஜையும் அந்த ஆஸ்ரமத்தில் நிகழ்ந்தது. சாரதாமணி தேவியார் நரேந்திரர் பால்யத்தில் கொடிய நோய்களால் வாடுங்காலத்தில் தாம் காளிதேவிக்கு அங்

கப்பிரதக்ஷணம் செய்விப்பதாய் வேண்டிக் கொண்டதாகவும், அவ் வேண்டுகோள் நடைபெறாது போனதாற்றான் இப்பொழுது சுவாமி கள் பிணிவாய்ப் பட்டுள்ளாரென்றும், உடனே சென்று அவ் வேண்டு கோளைத் தக்ஷிணேஸ்வரத்தில் நிறைவேற்றி வரும்படியும் சுவாமிகளுக் குக் கடிதம் எழுதி யிருந்தாள். அதற் கிணங்கிச் சுவாமிகள் நவம்பர் மாதத்தில் ஒருநா ளதிகாலையி லெழுந்து ஆதிகங்கையில் காளி கட்டத் தில் நீராடி மும்முறை அங்கமனைத்தும் படப் புரண்டு அம்மையைத் தரிசித்து விட்டுத் திரும்பினார்! ஸ்ரீசங்கரரைப் போலச் சுவாமிகள் தமது ஆயுட் காலத்தின் கடைசியாண்டில் சகலவித தேவதா பூஜை களையுஞ் செய்து முடித்தார். சங்கரர் அத்வைத மத ஸ்தாபகர்! விவே கானந்த சுவாமிகள் அம்மத உத்தாரணரன்றோ?

இவ்வத்தியாயத்திற் 'பேலூர் ஆஸ்ரம வாஸம்' என்ற தலைப் புடன் சுவாமிகளின் சில அரிய அனுபவக் குறிகளைச் சுருக்கமாக வரைந்தோம். இனி, சுவாமிகளின் நிர்யாண காலத்தைப் பற்றிய சில குறிப்புகளையும் உபதேசங்களையும் கூறுவோம்.

55-ம் அத்தியாயம்.

சுவாமிகளின் நிர்யாண காலம்.

ஓயாது நோய் படிப்படியாக அதிகரித்தவண்ணம் சுவாமி களைத் துன்புறுத்தி வந்தது; கைகால்கள் அடிக்கடி வீங் குவதும் வடிவதும், சுரம் அதிகரிப்பதும் தணிவதுமாக விருந்தது. கல்கத்தாவிலிருந்து சாண்டர்ஸ் என்ற வைத்தியர் சுவாமிகளுக்கு மருந்து கொடுத்துக்கொண் டிருந்தார். அவர் சுவாமிகள் மூளைக்கும், உடலுக்கும் அதிக வேலை தாலாகாதென்று அடிக்கடி எச்சரித்துக் கொண்டிருந்தார். இதேகாலத்தில் சுவாமி நிர்ப்பயானந்தர் பயங்கரமாக நூற்றேழு டிகிரி சுரத்துடன் கஷ்டப்பட்டார். அதனைக் கண்டு சீடர்க ளெல்லோரும் பயந்தனர். ஔடதங்களெல்லாம் பயனற்றுப் போயின. அப்பொழுது விவேகானந்த சுவாமிகள் மெல்ல ஸ்ரீராம கிருஷ்ண பரமஹம்ஸரின் என்புகள் பாதுகாத்து வைக்கப்பட்டிருந்த பாத்திரத்திலுள்ள தண்ணீரில் தனது கைக்குட்டையை நனைத்து வந்து நிர்ப்பயானந்தரின் வாயில் குருதேவரின் திவ்ய நாமத்தைத் தியா னித்த வண்ணம் இரண்டு சொட்டுகள் சொட்டினார். இரண்டொரு

நாட்களில் அனைவரும் அதிசயிக்க நிர்ப்பயானந்தர் குணப்பட்டார். நம்பிக்கை யன்றோ எதற்கும் காரணமா யிருக்கின்றது. அப்பொழுது சுவாமிகள் உவகையால் குதித்தெழுந்து "ஸ்ரீராமகிருஷ்ணரை நம்புங்கள்! அவருடைய சக்தி சர்வலோகங்களையும் படைக்கும்" என்றார். சுவாமிகள் தமது சிஷ்யர்களை வஞ்சனையின்றித் தன்னாலியன்ற வரையில் தேர்ச்சி செய்விக்க வேண்டுமென்ற ஆவலுள்ளவராதலின் தமக்குப் பரமஹம்ஸர் கற்பித்த ஏதொன்றையும் அவர் ஒளித்ததில்லை. ஒருகால் சுவாமி சுத்தானந்தருக்கு யோகசாத்திரங்களிற் கூறியுள்ளவாறு இடை, பிங்கல, சுஷும்னு நாடிகளில் காற்றை இறக்கிக் காட்டி அம்முறையைக் கற்பித்தார். தானறிந்த உண்மைகளைச் சீடர்களுக்கு ஒளித்து வைப்பவன் சுவர்க்கோழியாகப் பிறப்பானென்னும் நீதிசாஸ்திர விதியைச் சுவாமிகள் தமது சிஷ்யர்களுக்கு அடிக்கடி கூறுவதுண்டு.

இக்காலத்தில் க்வாலியர் அரசர் பெருமான் சுவாமிகளைத் தரிசிக்க ஆவல்கொண்டு பேலூருக்கு வந்தார். அரசர் வந்த சமயத்தில் சுவாமிகள் ஏதோ கார்யார்த்தமாகக் கல்கத்தாவிற்குச் சென்றிருந்ததால் தரிசிக்க முடியாமல் வருந்தித் திரும்பினர். அகில இந்திய காங்கிரஸ் மகாசபை அவ்வாண்டு கல்கத்தாவில் கூடிற்று. அப்பொழுது தேசத்தின் பலபாகங்களிலு மிருந்து வந்திருந்த தலைவர்கள் பேலூர் ஆச்சிரமத்திற்கு வந்து சுவாமிகளைத் தரிசித்தார்கள்.

அவ்வாண்டி னிறுதியில் இரண்டு ஜப்பானிய மேதாவிகள், சுவாமிகளைத் தரிசிக்க வந்து ஆஸ்ரமத்திலேயே சில நாட்கள் தங்கி யிருந்தனர். ஓடா (Rev. Oda) என்ற பௌத்த சந்நியாசியும் ஒகாகுரா (Okakura) என்ற மற்றொருவரும் ஹோரா என்ற சிறுவனுடன் இந்தியாவில் பிரபல ராஜீய வாதிகளைக் கண்டு பிறகு பேலூரை யடைந்தனர். அவர்கள் ஜப்பான் தேசத்தில் ஒரு தர்ம மகா சபை கூட்ட நிச்சயித்திருப்பதாகப் புகன்று சுவாமிகளை அம் மகா சபைக் கழைத்தனர். "சமதிருஷ்டி கொள்ளவேண்டிய சந்நியாசியாகிய தாங்கள் அமெரிக்காநாட்டி னிடத்தில் கொண்ட அத்துணை யன்பை எங்கள் நாட்டினிடமும் காட்டவேண்டுமன்றோ?" என்று அவ்வன்பர்கள் பலவாறு பகர்ந்து மன்றாடி வேண்டினர். பின்பு அந்த ஜப்பானியர் சுவாமிகளைத் தங்களுடன் புத்தகயைக்கு வரும்படி வேண்டிக் கொண்டார்கள். சுவாமிகளும் புத்தகயைக்குப் போகவேண்டுமென்று முன்பே உத்தேசித்திருந்தா ராதலின் அவர்களுடன் பிரயாணப்பட்டு,

கோபால் லால் வில்லா'விற் போய்த் தங்கினார்; அங்குத் ததாகதர் நிர்வாண நிலையடைந்த விடத்தையும், கௌதம புத்தர் அவருடைய கொள்கையை முதல் முதலாகத் திருவாய் மலர்ந்தருளிய திவ்ய பூமியையும் அவர்களுக்குக் காண்பித்தார். புத்த கயையி லிருந்த மகந்துக்கள் சுவாமிகளின் வரவை யறிந்து பூரண கும்பங்களுடன் அவரைக் கண்டு வேண்டிய சௌகரியங்களை யெல்லாம் செய்து கொடுத்தனர். மறுமுறையும் சுவாமிகள் போதி விருக்ஷத்தின் கீழ் யோக நிலையில் வீற்றிருந்தார்.

புத்தகயையில் வாசம்.

அப்பால் புத்தகயையை விட்டகன்று நண்பர்களுடனும் ஜப்பானிய யாத்திரிகர் ஒகாகுராவுடனும் சுவாமிகள் காசியை யடைந்து, அங்குச் சிலநாட்கள் தங்கி யிருந்தார். கலைகளில் வல்ல காசி மகந்துக்களும் மகா பண்டிதர்களும் உலக பூஜ்யரைக் கண்டு உளமகிழ்ந்து, உபசாரணை பல செய்து தினந்தோறும் பற்பல அரிய பெரிய விஷயங்களைச் சுவாமிகள் வாயிலாகக் கேட்டு வந்தனர். பிங்க நாட்டு மன்னரும் அறிவுக் கடலாய ஐயனைத் தரிசித்து, காசியில் ஸ்ரீராம கிருஷ்ண மடத்தை நிறுவத் தான் தேவையான பொருளுதவி புரிவதாக வாக்களித்தார். அரசருடைய வேண்டுகோளுக் கிணங்கி சுவாமிகளும் சிவானந்தரைக் கல்கத்தாவினின்றும் அனுப்பி அங்கு ஒரு ஆச்சிரமத்தைத் தாபித்தார். காசியிலும் புத்தகயையிலு மிருந்த பொழுது சீதோஷ்ண மாறுபாட்டால் சுவாமிகளுடைய சரீரம் சிறிது குணப்பட்டது. சில நாட்கள் காசியிலிருந்து பின்பு சுவாமிகள் பேலூர் ஆச்சிரமத்தை யடைந்தார்.

காசியில் வாசம்.

எப்பொழுதும் சுவாமிகளுக்குப் புத்த சமய ஆராய்ச்சியில் அதிக அவாவுண்டு. ஒருகால் அவர் தமது அடியாரின் பல சந்தேகங்களைப் போக்க வெண்ணிப் பின் வருங் கடிதத்தை வரைந்துளார்:—

என்னன்புள்ள சொரூபானந்தா!

மற்றொரு நண்பருடைய கடிதத்திற்கு அவரை நன்றாகப் பிரம்ம சூத்திரங்களை ஆராய்ச்சி செய்யும்படி யான் கூறியதாகச் சொல்ல வேண்டும். பிரம்ம சூத்திரங்கள் பௌத்த சமயபரமாக இருக்கின்றன வென்று அவர் கூறுவதன் பொருளென்ன? அவர் பாஷ்யத்தை ஆதாரமாகக் கொண்டனர் போலும்; சங்கர பாஷ்யந்தான் கடைசியாக வரையப் பெற்றதென்பது அவரது அபிப்பிராயமெனத் தோன்றுகிறது. பௌத்த மதக் கிரந்தங்களில் வேதாந்த மேற்கோள்கள் எடுத்தாளப்பட் டிருந்த

போதிலும் மகாயனர் பௌத்த முறைப்படி அத்வைத மதத்தைத் தழுவவேயில்லை. அமரசிங்க னென்னும் புத்த சமயவாதி ஏன் பௌத்தருடைய பெயர்களில் அத்வய வாதி என்ற பெயரும் ஒன்றெனல் வேண்டும்? பிரம்மம் என்ற சொல் உபநிடதங்களிற் காணப்படவில்லையென்று அந் நண்பர் கூறுகின்றார். இது விந்தையே! மகாயனம்தான் புத்த சமயக் கோட்பாடுகளில் முந்தியதென்பது எனது முடிவான அபிப்பிராயம். மாயா சங்கேதம், ரிக் சம்ஹிதை யவ்வளவு பழமையானது. மாயை பிரகிருதியின் விளைவா லுண்டானதென்று சுவேதஸ்வத்ர உபநிஷத் கூறுகின்றது. சிறிதளவாவது உபநிஷதம் பௌத்தத்திற்கு முந்தியதென்பதே எனது நிரூபணம்.

பௌத்த சமய ஆராய்ச்சி (கடிதம்)

பௌத்த சமய ஆராய்ச்சிமூலம் யான் 1. பல்வேறு ரூபங்களுடைய மூர்த்திகளைக்கொண்ட சிவாராதனம் பௌத்த சமயத்தைவிட முந்தியதென்பதையும், பௌத்தர்கள் ஹிந்து தேவாலயங்களைக் கைப்பற்ற முயன்றும் அவர்கள் முயற்சி பயன்படாமையால் சிவஸ்தலங்களுக்குப் பக்கத்தில் தங்களாலயங்களை யமைத்துக் கொண்டன ரென்பதையும், நாம் இப்பொழுது கண்கூடாகப் புத்தகயையிலும் சாரநாதத்திலும் காண்பவற்றினின்றும் நிரூபிப்பேன். 2. அக்னி புராணத்திற் கூறப்படும் கயாசுரனின் கதை பௌத்த சமயத்தைப்பற்றிய குறிப்புடைய தல்லவே யல்லவென்றும் ராஜேந்திரலால் அவ்விதம் கூறினும் அதைப் பிரமாணமாகக் கொள்ளலாகாதென்றும் வெளிப்படுத்தக் கூடும். 3. புத்த பகவான் கயசீரிஷ கிரியில் வசிக்கச் சென்றன ரென்பதால் அம்மலைக்கு அதற்கு முன்னமிருந்தே அப்பெயர் வழங்கப்பட்டு வருகின்றதென்பதையும், 4. பௌத்த சமயஸ்தாபனத்திற்கு முன்னிருந்தே கயை ஹிந்துக்களின் க்ஷேத்திரமாக விருந்ததென்றும், பாதுகா தரிசனத்தைப் பௌத்தர்கள் ஹிந்துக்களிடமிருந்து கற்றுக்கொண்டன ரென்பதையும் நான் மெய்ப்பிப்பேன். 5. இன்னும் பல தக்க ஆதாரங்களைக் கொண்டு கயை பெரிய மான்மியமுள்ள சிவஸ்தலமென்பதை சாதிக்க இயலும். நான் புத்தகயையில் பௌத்த நூல்களிலிருந்து மேற்கூறிய விஷயங்களுக்குத் தக்க ஆதாரங்களைத் தேடி வைத்திருக்கின்றேன். நண்பரிடத்தில் நன்கு ஆராய்ந்து பார்த்தால் உண்மை விளங்குமென்றும், மூட நம்பிக்கையை ஒழிக்கும்படிக்கு யான் கேட்டுக்கொண்டதாகவும் கூற வேண்டும்.

பௌத்த சமயத்திற்கும் ஹிந்துமதத்திற்கும் காலபேத ஆராய்ச்சியில் பலர் திக்பிரமை பிடித்துத் தயங்குகின்றனர். அவர்களுக்குச் சில அடிப்படையான ஆதாரங்களை மட்டினும் யான் எடுத்துக் காட்டுவேன். ஆனல்

அவற்றைப் பரவச் செய்வது உங்களைப் போன்றவர் கடமையாகும். இந் நிகழ்ச்சியால் நான் புத்த கயையிலிருந்து எனது ஆராய்ச்சியைப் பெருக்கிக்கொண்டு போனால் நலமாயிருக்குமென்று நினைக்கின்றேன்.

விவேகானந்தன்.

காசியில் ஸ்தாபிக்கப்பட்ட மடத்தினாதரவில் பல சிஷ்யர்கள் ஒன்றுகூடி அனுதைியாக வரும் யாத்ரார்த்திகளுக்கு ஆடையும், அமுது மளித்துவர ஏற்பாடு செய்தார்கள். அவர்களுடைய ஊக்கத்தைக் கண்டு சுவாமிகள் மிகவும் மகிழ்ந்திருந்தார். காசியின் குளிர் காற்றினால் சுவாமிகளுடைய தேக நிலை குணமடைந்திருந்தது கண்டு சீடர்கள் 'துறந்த உயிர் வந்திடை தொடர்ந்தது' போல உவகை பூத்துத் தங்கள் மத சேவையைச் செய்து வந்தனர். இம் மகா க்ஷேத்திரத்திலேயே ஸ்ரீராம கிருஷ்ணர் ஓர் ஜோதி ஆகாயமார்க்கமாகக் கிளம்பி சிம்லாவில் நுழைந்ததைக் கண்டு "நமது சீடன் உலகில்வதரித்தான்" என்று அக்காலத்தி லுவகை கொண்டார்! ஆகா! என்ன மகிமை! சுவாமிகளின் சரிதையை எழுது மிடமெல்லாம் தெய்வீகம்! புகலும் போதெல்லாம் புளகாங்கிதம்! எல்லாம் எம்பெருமான் மகிமையன்றோ!

சுவாமிகள், தமது உடல் நலம் நாளுக்கு நாள் குன்றி வருவதையும், திடபுத்தியுடன் தேச - சமய முன்னேற்றத்தின் பொருட்டு, திரிகாண சுத்தியாகத் தொண்டுபுரியும் மகா சுத்த வீரர்களாக இளைஞர் பலர் முன்வாரா திருத்தலையும், தாம் மேற்கொண்ட மதத் தொண்டு என்றும் அழியாமல் நடைபெறத் தக்க சீடர்கள் வெளிப்படா திருத்தலையும் எண்ணியெண்ணி யேங்குவாராயினர். அப்பொழுது பல மடங்களிலுமிருந்த சீடர்கள் அதற்குத் தக்காரா யிருந்த போதிலும், அவர்கள் இன்னும் நல்ல பரிபக்குவ நிலையை யடையவில்லையே யென்ற ஏக்கம் அவரைப் பீடித்தது. ஒரு நாள் சுவாமிகள் தமது பக்தர்களையெல்லா மழைத்து "நீங்கள் உங்களுடைய மதசேவையைச் சிம்மத்தைப்போலத் தொடங்கி நடத்த வேண்டும். அதனால் விளையும் நற்பயனையோ, காரிய சித்திக் கேற்படலாகும் இடையூறுகளையோ, பிறர் வாய் மதம் பிடித்துப் பேசும் தூஷணையையோ நீங்கள் பொருட்படுத்தலாகாது. மகா வீரனாகிய ஹனுமானை நீங்கள் எப்பொழுதும் தியானியுங்கள். அவன் உங்களை அளித்துக் காப்பான். கடலை யொரு கணத்திற்றாண்டி ஸ்ரீராமன் விஷயத்தில் எந்த நிமிஷத்திலும் தன் பிராணனைத் தியாகம் செய்யக்

கூடிய அவனுடைய அன்பு நிலையும் ஆற்றலும் உங்களிடத்தில் விளங்க வேண்டும். 'நாமார்க்குங் குடியல்லோம்! நமனை யஞ்சோம்!' என்று நீங்கள் எழவேண்டும். மதசேவைக் கெல்லாம் ரகஸ்யமான ஆதாரமா யிருப்பது சுத்த பிரமச்சரிய மொன்றுதான். இந்த விஷயத்தில் அனுமானைத் தவிர சிறந்த உதாரணம் வேறில்லை. அவனையொத்த உள்ளன்பும், உறுதியும், திடபுத்தியும் உங்களுக்கு வேண்டும். இதற்கு ஜீவாதாரமா யுள்ளது சர்வ மாதுர் பாவமும் யோக சாதனமுமாம். பிருந்தாவனத்தில் கண்ணனுடன் லீலைகள் செய்த கோபிகளின் விஷயத்தில் எள்ளளவும் மாசில்லை. அதனை மனிதர்கள் அறியாது காமதகுணத்தால் பலவாறு பொருள் செய்து வாதனைக்கும் வம்புக்கு மாளாகின்றனர். 'காமினி காஞ்சன'மே மத சேவையை அடிமைப் படுத்தி விடும். அதனைப் பொருத்த வரையில் நீங்கள் மிக்க ஜாக்கிரதையா யிருக்க வேண்டும். உங்கள் மனம் தளர்வடைகின்ற போதெல்லாம் ஜயவீர ஹனுமானை நினைத்துக் கொள்ளுங்கள். அவனைப்போன்ற ஒழுக்க முடையாரா யிருங்கள். ஒழுக்கமில்லா மதசேவையை உலகம் இகழும். அது பயனற்றது. நீங்கள் சொல்லுவது போல் நீங்களே நடந்து காட்ட வேண்டும். நான் வீரன்! எதுவும் எனக்கு நிகரில்லை. ஸ்ரீராம கிருஷ்ணரின் பாத நிழலி லமர்ந்த பாக்கிய சாலியான்! மண்ணையும் பொன்னையும் மதியா மகானுபாவருடைய மைந்தன் யான்! ஸ்ரீராம கிருஷ்ணருடைய துணையாளரின் துணையாளன் யான். நான் ஜிதேந்திரியன்; சத்திய சந்தன்! சகலத்தையும் ஜெயித்தவன்! என்னிடம் அடிமைக் குணமில்லை; அகந்தையுமில்லை. ஆண்மையும் அறிவும் என்னிடம் பொலிவுற்று விளங்குகின்றன' என்று வீராவேசத்துடன் சேவாப் பிரவேசம் பண்ணுங்கள்' என்று உபதேசித்தார். இவ்விரிவுரை நிகழ்ந்த சற்று நேரத்திற்குப் பிறகு, சுவாமிகள் ஆச்சிரமத்திற்குப் பக்கத்திலுள்ள ஓர் விருக்ஷத்தி னடியிலமர்ந்து அயர்ந்து சமாதி போயினர்.

ஆ! மண்வெட்டி வயிறு வளர்க்கும் பாமர மக்களிடத்தும் சுவாமிகளின் அளவில்லாத அன்புடைமையை நாமென்னென் றெடுத்துரைப்போம். அவர்களிடம் 'பரிசுத்த நாராயணன்' விளங்குகின்றானென்பார் சுவாமிகள். அவர்களை ஒருமுறை சுவாமிகளழைத்து விருந்து செய்து 'இன்று ஆயிரம் நாராயணனுக்கு விருந்திட்டேன்' என்று கூறி மகிழ்ந்தார். அவ்வகுப்பாருள் கேஷ்டா என்பவனிடம் சுவாமிகளுக்கு அத்யந்த அன்புண்டு. கற்றாரைவிட கல்லாதார்க்குச்

சுவாமிகள் மிக்க உற்சாகத்துடனும் ஊக்கத்துடனும் உபதேசங்கள் செய்வார். ஒருநாள் கழனிகளில் பயிர்த்தொழில் செய்யும் களங்கமற்ற ஜனங்களோடு அவர் சம்பாஷித்துக் கொண்டிருந்த பொழுது, யாரோ ஒரு கோடீஸ்வரர் சுவாமிகளைக் காண வந்திருப்பதாக அவசரமாக அவருக் குரைக்கப்பட்டது. அப்பொழுது சுவாமிகள் "கோடீஸ்வரனுக்கு மெனக்கு மென்ன சம்பந்தம்! ஏழைகளே எனது சகபாடிகள்; அவர் என்னைக்காண விரும்பினல் சற்று காத்திருக்கட்டும்" என்று கூறி யனுப்பினர். அந்த ஏழையான சாது ஜனங்கள், சுவாமிகளை 'பாபு' வென்றழைத்துப் பண்பாடிப் போற்றுவர். அவர்களைக் குறித்துச் சுவாமிகள் ஒரு சமயம் தமது சிஷ்யர்களிடத்தில்,

பாமரரிடத்துப் பரம அன்பு.

கல்வி யறிவில்லா ஏழை மக்களாகிய அவர்கள் எவ்வளவு கபடமற்றவர்களாகவும், சாத்வீகிகளாயும் இருக்கின்ருர்கள்! அவர்களுக்குத் துக்கமென்பதேயில்லை யல்லவா? அவர்களிடத்திற்ருன் சர்வேச்சுவரன் விளங்குகின்ருன். தனக்கென ஒன்றுமில்லாது தாழுயிர்க்குத் தானம் செய்தலே சந்நியாசத்துவம். நான் இந்த ஜனங்களைச் சந்திக்கும் பொழுது சில சமயங்களில் மடங்களைக் கட்டுவதாலும், பிரசாரஞ் செய்வதாலும் பயனென்ன? நமக்கெதற்கு தங்குமிடங்கள். நாமேன் இவற்றையெல்லாம் விற்று ஏழைகளுக்கு உதவலாகாது? சோற்றுக்கு அவர்கள் தானம் போடும்போது நாமேன் ஜிலேபியுடன் உண்ண வேண்டும்? அவர்களை அஞ்சலென்று அபயப்பிரதானம் செய்ய யாருளர்? அனைதைக் குதவாத பொருளும், மனிதப் பிறவியும் குட்டிச்சுவரைவிடத் தாழ்ந்தவையன்ரே! அவர்களைக் குறித்து "ஜெகதீஸ்வரி! ஏழைகளை நீ காப்பாற்ற வேண்டும்" என்று நாமேன் உபவாசங் கிடக்கக் கூடாது? நமக்கு ஆலயம் வேண்டாம்! அதனைச் சார்ந்து நடைபெறும் ஆடம்பரமான விழாக்கள் வேண்டாம்! தீபாராதனை, நைவேதனம் வேண்டாம்! ஆடையாபரணங்கள் வேண்டாம்! முக்திக்கு விததாகும் யோக சாதனங்களை நாம் ஒழிப்போம்! கிராமங் கிராமமாக நமது கால்கள் தேயநோவ நடந்து சென்று நாம் தொண்டு புரிவோம்! இதுவே முக்தி சாதனமென்று நான் கருதுகிறேன். அந்தோ! நம் நாட்டில் ஏழையை ஒருவரும் லக்ஷியஞ் செய்வதில்லை. பணத்தோடு பணத்தைக் கூட்டி, பாலன்னமே யுண்டு பழுதுள்ள வாழ்வியற்றுவாரைக் கண்டு கூற்று நாய் அதோ நின்று குரைக்கின்றது. ஏழைகளின் துயரத்தைப் போக்க எவராவது எண்ணுகிருர்களா? ஏழைகளை ஆலிங்கனஞ் செய்த பரமஹம்சரைக் கண்டு பரிகசிக்க மட்டும் பல ரிருந்தனர். உலகெங்கும் கபடமன்ரே தலைவிரித்தாடுகின்றது. தீண்டாமையன்ரே எங்கும் திருட்

டுத்தனஞ் செய்கின்றது. சென்னை இராஜதானியில் பறையரென்ன பாமர வகுப்பினர் மிகக் கொடுமையாக நடத்தப் படுவதைக் கண்டு என்னுள்ளம் பதைத்தது. அவர்களில் எத்தனையோ பேர் உயர்ந்த வகுப்பாரின் கொடுமைகளைப் பொறுக்க மாட்டாமல் கிறிஸ்தவர்களாகி விட்டனர். இதனுல் நமது சமயம் பலக்குறை வடைந்து வருகின்றது. 'தீண்டாமை—தீண்டாதவன்' என்ற சொற்களைக் கேட்கும்போதே என்னுயிர் போய்விடும்போலிருக்கிறது. தீண்டாதவன் என்ற வார்த்தையைப் பிறர் சொல்ல நீங்கள் கேட்கும்போதெல்லாம் ஸ்ரீராம கிருஷ்ணருடைய நாமத்தை ஸ்மரியுங்கள். அவருடைய திருவடிகளை விடாது பற்றுங்கள். தீண்டாமை யென்னும் மாயையை விலக்க உங்கள் முழு பலத்துடன் முன் வாருங்கள்.

என்று கல்லும் கரைந்துருகும்படிப் பேசினுர். இவற்றை யெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த ஒரு சிஷ்யை "ஐயனே! தாங்கள் கூறியவற்றுள் சில போக்குதற் கரியனவன்றோ. அவை எப்படி அனுஷ்டிக்க முடியும்?" என்று வினவ, சுவாமிகள்,

உன்னைப்போன்ற சந்தேக மனமுடையாருக் கிங்கு வேலையில்லை. அரிய காரியத்தைச் செய்வதினுலேயே அளவிலா மகிமையுண்டு. முடியாதென்ற விஷயம் ஸ்ரீராம கிருஷ்ணருடைய சக்தியாகிய பாட புத்தகத்திலில்லை. அவ்வித மனுேபாவமுள்ளவர்கள் இன்றே ஸ்ரீராம கிருஷ்ணரை மறந்து விடலாம். முடியுமா வென்பது முட்டாளின் கேள்வி! கூடுமா என்பது குருடனின் வினு. உடனே கீதையைத் திருப்பி அதன் திவ்ய வசனங்களைக் கவனிப்பீர்களாக! உன் கடமையைச் செய்! பயனைக் கருதுத லொழி! பன்முறையுஞ் சொன்னேன். நான் சகலத்திலும் சர்வலோக சரண்யனுன நாராயணனைத் தரிசிக்கின்றேன் அதனுல் மனிதரில் உயர்வு தாழ்வில்லை. தாழ்ந்தவர்களை அறிவூட்டி உயர்த்துவதே பெரியார் கடமை.

என்று உரக்கப்பேசி பின்னர் மெதுவாகக் களைத்துப்போய் "நான் இன்று கூறியதை பசுமரத்தாணிபோற் பற்றுங்கள். இன்னும் அதிக காலம் ஜீவித்திருப்பேனென்ற நம்பிக்கை எனக்கில்லை என் ஆன்மாவானது உடலை விரைவில் வீசி எறிவேன் என்று கூறுகின்றது. ஸ்ரீராம கிருஷ்ணருடைய ஆவேசம் உங்களை ஆட்கொள்ளட்டும்" என்ற ஹிதவசனங்களுடன் கண்ணீர் பெருக்கினுர்.

காசியிலிருந்து சுவாமிகள் திரும்பிய பின்னர் அவருடைய தேகநிலை மிகவும் கவலைக்கிட மானதாயிற்று. அவர் கால்கைகள் மறுமுறையும் சுவர்ந்தன. சில நாட்கள் அவர் படுக்கையிலிருந்தே பேசிக்கொண்

டிருந்தார். அறையை விட்டு அதிகமாக அவர் வெளி வருவதில்லை. ஸ்ரீராமகிருஷ்ணருடைய அவதார புண்ய தினத்தன்று சுவாமிகளைத் தரிசிக்க வேண்டுமென்று ஆவலுடன் அங்கு வந்திருந்த ஆயிரக்கணக்கான பக்தர்கள் சுவாமிகளின் தேக அசௌக்கியத்தைக் குறித்து ஏக்கமடைந்தனர். அன்று அவருடைய தேகம் மிக்க பயங்கரமான நிலையையடைந்திருந்தது. ஒருவரும் அன்று அவருடைய அறைக்குச் செல்ல அனுமதிக்கப்படவில்லை. ஒரே ஒரு சிஷ்யை மட்டும் 'ஸ்ரீராமகிருஷ்ணர்' கீதம் ஒன்றை வங்க மொழியில் இயற்றி அதைச் சுவாமிகளின் பார்வைக்குக் கொண்டுவர அனுமதிக்கப்பட்டாள். பக்தர்களெல்லோரும் சுவாமிகளின் தேக அசௌக்கியத்தைக் கண்டு கண் கலங்கினர். அவர்களைச் சுவாமிகள் "பிறந்த இந்த உடம்பு இறப்பது உறுதிதானே. என்னுடைய மனோரதத்தை நீங்கள் நிறைவேற்றுவீர்களாயின் நான் உண்மையில் யாக்கையின் பயனைச் சிறிதளவேனு மடைந்ததாக வெண்ணி மகிழ்வேன்! என்னுடைய கொள்கைகளுக் கெல்லாம் துறவே மூலமந்திரம்! அத்துறவின்றி பிரம்மனும் முக்தியடைய வியலாது. ஆசையை அறுத்தலே துறவு. ஆதலின் அவ்வழியை நீங்கள் பற்ற வேண்டும்" என்று கூறித் தேற்றினர்.

தேசிகனின் திருநாள்.

பரம ஹம்ஸரின் பிறந்தநாள் விழா ஆனந்தரின் விருப்பப்படி ஆறுநாட்கள் நடைபெற்றன. 'சாஸ்திரப் பிரமாணம், வேத வேதாந்த விசாரம், வருண தத்துவ விளக்கம், ஸ்ரீராம கிருஷ்ண பரமஹம்ஸரின் சித்தி, கீதார்த்த விசேஷம், நாம சங்கீர்த்தனம் ஆகிய விஷயங்கள் முறையே அவ் வாறு நாட்களிலும் உபந்நியாசிக்கப்பட்டன. விழாக் காலங்களில் இரவும் பகலும் ஆயிரக்கணக்கான ஏழைகளுக்கு அன்னமளிக்கப்பட்டது. திவ்யநாம சங்கீர்த்தன கோஷ்டிகள் சுவாமிகளின் அறைக்கு நேராக வந்து நின்று பஜனை செய்தன. சுவாமிகள் சிரமத்துடன் சற்று உட்கார்ந்து அவற்றைப் பார்த்து விட்டு மறுபடியுஞ் சயனித்துக் கொண்டார்; படுக்கையிலிருந்தவாறே அவதார ரகஸ்யம், முக்திநிலை முதலியவற்றைப் பற்றி சில வார்த்தைகள் பேசினர். இக்காலங்களிலெல்லாம் அவருக்கு உடல்வலி யதிகரித்திருந்தது.

பின்னொரு நாள் சுவாமிகள் தமது சீடர்களிற் சிலர் பக்கத்திலுட்கார்ந்திருக்க அவர்களை அன்புடன் பார்த்து, "பரமஹம்ஸருடன் பழகியவர்களே பாக்கியவான்கள். அவரோடு கூடப் பலவாண்டுகளிருந்த சில அந்தரங்க சிஷ்யர்களும், சாங்கோபாங்கிகளும் கூட

அவரை முற்றிலும் அறிந்து கொண்டிருக்க மாட்டார்கள். அவருடைய உபதேசங்களைக் கைப்பற்றி ஒழுகுகிறவர்கள் இன்னும் அவருடைய சூக்ஷ்ம சரீரத்தைத் தரிசித்துக் கண்டானந்தித்துக் கொண்டு தானிருக்கிறார்கள்'' என்று பேசிக்கொண் டிருக்கும் பொழுது, சுவாமி நிரஞ்சனானந்தர் வந்து சகோதரி நிவேதிதாதேவி தமது சிஷ்யைகளுடன் அவரைக்காண வந்திருப்பதாகக் கூறினார். அமரிக்கா ஐரோப்பா நாடுகளில் சுற்றுப் பிரயாணஞ் செய்து விட்டு அப்பொழுது தான் திரும்பிய அம்மாது சிரோன்மணி, சுவாமிகளின் அறையை யடைந்து அவருடைய தேக அசௌக்கியத்தைக் கண்டு இரண்டொரு உபசார வார்த்தைகளை இனிமைபடப் பேசிவிட்டு, சுவாமிகளுக்கு அதிக சிரமங் கொடாமல் வெளியே சென்று விட்டாள் !

“அந்தோ ! நமது குருநாதனுக்கு நோய் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றதே'' என்ற கவலையால் சிஷ்யர்கள் அல்லலுற்று கல்கத்தாவில் அப்பொழுது பிரபல ஆயுர்வேத வைத்தியரான கவிராஜ மகானந்த சேன் குப்தாவைக் கொண்டு மருந்து கொடுக்கச் செய்தனர். அந்த வைத்தியர் ஆற்றொணு பத்தியம் விதித்து தண்ணீரையுந் தள்ளி விடும்படி வேண்டினர். தமக்குத் தேகாபிமான மில்லையாலும் தன தன்பர்களின் கோரிக்கைக்குக் கட்டுப்பட்டு சுவாமிகள் அம்மருந்தை அருந்தி வந்தார்; பத்தியத்தையும் விடாமல் அனுஷ்டித்தார். அதுகாலை அவருடைய சீடர்களி லொருவர் ஆச்சரியத்துடன் டம்ளர் டம்பளராகப் பகல் முழுவதும் தண்ணீரருந்தும் வழக்க முள்ள தாங்கள், எவ்விதம் தண்ணீரை விலக்கினீர்கள் ?'' என்று வினவ, சுவாமிகள் “ஆம் ! எதிலும் உறுதி வேண்டும் ! அது தான் விரதமெனப்படும். இருபத்தோரு நாட்கள் நான் நீரருந்தாதிருக்க வில்லையா ! பரமஹம்ஸரின் பரமானந்தமான சாவா மருந்தையருந்திய எனக்கு இம்மருந்து என்ன பயனைத்தரும் ? என்னுடைய தேகஸ்திதியை யான் நன்கறிவேன் ! என் அன்பர்களுடைய அன்பினுற் பிணிக்கப்பட்ட மருந்தே யிது ! அன்பின் வலைக்ககப்படாத பொருளு மிப்பிரபஞ்சத்தி லுண்டோ ! அஃதன்றே பரமஹம்ஸரிடத்தில் என்னைக் கட்டுப்படுத்திற்று. அதுவே ஆலயங்களையும், அரசாங்கங்களையும் கட்டு மன்றோ ? இம்மருந்தை நான் அருந்துவதனால் எனது அன்பர்களுடைய உள்ளம் மகிழுமானல் நானேன் மாதக் கணக்கில் பத்திய மனுசரிக்கக் கூடாது'' என்றார்.

அப்பொழுது 'சகல கலா நிகண்டு' என்ற நூலின் (Encyclopaedia Britanica) இருபத்தைந்து பகுதிகளும் மடத்தின் புத்தகக் கரு

ஆலத்திலிருந்தன. அவற்றில் ஒரு புத்தகத்தைச் சுவாமிகள் திருப்பித் திருப்பி வாசித்துக் கொண்டிருப்பதைக் கண்டு சாரத் சந்திர சக்கிர வர்த்தி "அம்மம்மா! இந்த இருபத்தைந்து புத்தகங்களையும் படித்து முடிக்க ஒரு மனித ஆயுட்காலமுங்கூடப் போதாதுபோ லிருக்கிறதே" என்று சொல்லிப் பெருமூச்சு விட்டார். சுவாமிகள் புன்னகையுடன் "நான் பத்து புத்தகங்களை ஒரு மாதத்திற் படித்து முடித்தேன். இப் பொழுது பதினோராம் பகுதியை முடிக்கப் போகின்றேன்" என்றார். சிஷ்யர் 'அப்படியா! ஆனால் பார்ப்போம்' என்று அப் பத்து புத்தகங் களையும் எடுத்து வந்து மூலைக்கு மூலை ஒவ்வொன்றைப் பற்றிக் கேட் டார். சுவாமிகள் சந்திரர் கேட்ட கேள்விகளுக்கெல்லாம் அந்நூலி லுள்ளவாறே விடை மனப்பாடமாகக் கூற, சீடர் பிரமித்துப் போய் 'நீங்கள் எப்படி வாசித்தீர்கள்?' என்று வினவ சுவாமிகள் 'அதுதான் தீவிர பிரமச்சரியத்தின் பயன்! ஜிதேந்திரனுடைய சித்தி' என்றார். பிரம்மச்சரியத்தின் மகிமையே மகிமை!

வங்காள இலக்கியங்களைப் பற்றிப் பிரிதொருநாள் ஆராய்ச்சி நடை பெற்றது. விவேகானந்தர் பாரத சந்திரருடைய பெருமையை அத்துணை உயர்வுடன் கருதாமல் மைக்கேல் மதுசூதன ரியற்றிய காவியந்தான் வங்காள பாஷைக்கே பெருமை தருவதென்று பேசி னார். அந்த அடங்கலில் 'இந்திரஜித் வதத்தையும், இராவணன் மனைவி—மண்டோதரியின் புலம்பலையும், அச்சமயத்தில் இராவணன் எதையும் மதியாது எதிர்த்து மகாவீரனை 'வருவது வரட்டும்! என் னுடைய கடமையை நானே செய்வேன்; போரில் புறங்காட்டி யோடேன்' என்று வீரப்பிரதாபத்துடன் விளம்புவதையுமே சுவாமி கள் சிலாகித்துக் கூறினார்.

இக்காலங்களிலெல்லாம் சுவாமிகளுடைய தேகஸ்திதி அடிக்கடி மாறிக்கொண் டிருந்தது. 1902-ம் ஆண்டு மார்ச்சுமாதம் முதல் அவர் நோயைப் பாராட்டாமல் பலதுறைகளிலும் உழைத்து வந்தார். ஆச்சிரமத்தில் காலையிலும் மாலையிலும் தவறாமல் வேதபாடம் நடை பெற்று வந்தது. பகல் போஜனமானபின் சப்பு பிரபந்தங்களும்— புராணங்களும் வாசிக்கப்பட்டன. சுவாமிகள் தமது சீடர்களின் அறிவை வளர்ப்பதுடன் தேகதிடத்தையும் பெருக்கி வந்தார். தினந் தோறும் அதி காலையில் பேலூர் ஆச்சிரமத்திலிருந்த சீடர்களெல்லாம் தேகாப்பியாசம் செய்து வந்தார்கள். சுவாமிகளும், 'சுவரை வைத் துக்கொண் டல்லவோ சித்திரம் வரைதல் வேண்டும். நோயற்ற

வாழ்வே குறைவற்ற செல்வமாதலால் உங்களுடைய தேகத்தை நீங்கள் தேற்றிக்கொள்ள வேண்டும்' என்று அறிவூட்டுவார்.

சகோதரி நிவேதிதாதேவியைப் பற்றி அவர் அடிக்கடித் தமது சீடர்களிடத்தில் புகழ்ந்து கூறுவதுண்டு. ஒரு சமயம் ஸ்ரீமத் பகவத் கீதையை சங்கர பாஷ்யத்துடனும் குறிப்புரையுடனும் வெளியிடுவதில் மகா மகோபாத்யாய பண்டித பிரமாதநாத தர்க்கபூஷணரும், சாரத் சந்திரரும், சுவாமிகளைப் பன்முறையும் வற்புறுத்தி, பதிப்பிப்பதைப் பொறுத்து அபிப்பிராயங் கேட்டு வந்தார்கள். இச் செய்கையை சுவாமிகள் அருவருத்துத் தமது சீடர்களிடத்துக் கூறிய தாவது:— "இவர்கள் படும் பாட்டைப் பாருங்கள்! சகோதரி நிவேதிதா தேவி என்னை இவர்களைப்போல் வற்புறுத்தி யொன்றுங் கேட்பதில்லை. அவள் தன்னுடைய வேலைகளை உணர்ந்து தானே யாவரும் மெச்சத் தக்கவாறு செய்து கொள்ளுகின்றாள்! எவ்வளவு நாட்களுக்குத்தான் பிறரை நாம் எதிர் பார்க்க முடியும்?"

ஆச்சிரமத்திலுள்ள பொருள்கள் யாவும் அனுதினமும் சுத்தி செய்யப்படும். அசுத்தத்தை சுவாமிகள் அடியோடு களைய வேண்டு மென்பார். 'சுத்தமே சோறு போடும்' என்று அவர் யாவற்றையும் தானே சுத்தஞ் செய்வார். இவ்விதமாக ஒவ்வொரு மார்க்கத்திலும் நன்கு பயிற்சி செய்யப்பட்ட சிஷ்யர்கள் பிற்காலத்தில் சிறந்து விளங்கினர். சுவாமிகளுடைய அருளாகிய அதிர்ச்சியை இன்றுள்ள சீடர்களும் யேற்று நிற்கின்றனர்.

பகற் பொழுதில் சீடர்களெல்லாம் விமரிசையாக அமர்ந்து புராணங் கேட்பர். அவர்களி லொருவர் புராணத்தை யெடுத்து வாசிப்பார். சுவாமிகள் அவ்வப்பொழுது எழும் சந்தேகங்களை வியாக்யானஞ் செய்துகொண்டே போவார். ஆடம்பரமான பூஜையில் வர வர அவருக்கு முன்போல அவ்வளவு விருப்பமில்லா திருந்தது. பூஜை, ஆகாரம் முதலியவற்றிற்கான நேரம் போக மற்ற நேரங்களில் சுவாமிகள் உபநிடதம், பிரம்ம சூத்திரம், கீதை, பாகவதம் முதலிய ஹிந்து மதத்தின் ஜீவாதாரமான கிரந்தங்களை உபதேசித்து மனனஞ் செய்யும்படி அவர்களைக் கட்டாயப் படுத்துவார்; தினந்தோறும் காலை முதல் மாலை வரையில் மடத்தில் நடைபெற வேண்டிய விஷயங்களை ஒரு சிறு சட்ட புத்தகமாக வரைந்து அதன்படி யொழுகத் தூண்டி வந்தார். அதனின்றும் வழுவியவர்கள் கொடுமையாகக் கண்டிக்கப்பட்டு வந்த

னர். எல்லாம் நன்மைக்குத் தானே ! என்று சீடர்கள் 'அடித்தாலும் அணைத்தாலும், தூஷித்தாலும் பூஷித்தாலும்' அவரையே அடைக் கலமென்று அவருக்குத் தொண்டாயிருந்து வந்தனர்.

இவ்வா றிருந்துவரும் நாட்களில் சீடர்களெல்லோரும் பேலூர் ஆச்சிரமத்திலேதோ களை குறைந்து வருவதையும், தங்களை யறி யாமல் ஒருவித சோகத்தால் உள்ளங் கலங்குவதையும், சோலையி லுள்ள மலர் தரும் மரங்கள் பட்டுப்போவதையும், கிளைமுறிந்து களை யற்று விடுவதையும் கண்டு, மனங் கலங்கி இறைவனைத் தியானித்த வண்ண மிருந்தனர். சுவாமிகளின் தேக நிலையைப்பற்றி அவர் களுக்கு அவ நம்பிக்கை ஏதும் ஏற்படவில்லை யாதலால், அவருடைய பிரிவைக் குறித்து அவர்கள் சிந்திக்கவுமில்லை. சுவாமிகளின் உடல் நலம் முன்னிலும் பதின் மடங்கு குணமடைந்திருந்தது. சில தீய சகுனங்களும் தீக்கனவுகளும் 'யானைவரும் பின்னே மணியோசைவரு முன்னே' யென்று சீடர்களுக் கேற்பட்டன. 1902ஸு மே, ஜூன் மாதங்களில் தங்களை யறியாது ஒரு கொடிய துயரம் கோல் கோடி மாருயம் செய்வதைக் கண்டு சீடர்கள் திடுக்கிட்டனர்; அஞ்சி பயந் தனர். சுவாமிகளுக்கு அடிக்கடி ரோய் வந்து கொண்டிருந்தாலும் அதை மரண ஹேதுவானதென்று சீடர்கள் கருதவில்லை. தவிர, வியாதி சுவாமிகளை வாட்டிய பொழுதுங்கூட, அவர் அதனை மதி யாது, வைத்தியர் வார்த்தைகளையுங் கேளாது, உரக்கப்பேசி தர்க் கித்துக் கொண்டும், உபந்யசித்துக் கொண்டும், அவாது ஆசாரியர் பக வான் ஸ்ரீராம கிருஷ்ணரைப் போன்றே வேதாந்த விஷயங்களை உப தேசித்துக் கொண்டு மிருந்தார். அழியுந் தன்மைத்தான இவ்வுடலைக் காப்பாற்ற வேண்டுமென்ற அவாவை அவர் ஸ்ரீராம கிருஷ்ணரை தரி சித்த நாள் முதல் விட்ட பூஜ்யரன்றோ !

"சுவாமிகளின் நிர்யாணகால"மும் அவருடைய குருதேவரின் அந்திய தசையைப் போன்றே கழிந்தது.

56-ம் அத்தியாயம்

பரிபூர்ண தீர்க்க சமாதி.

*ஔசித்யமாக பின் வரும் சம்பவத்தை முன்னொரு உணர்ச்சி குறிப்பா லறிவிக்கின்றது. அவற்றை சகுனத்தாலும், கனவாலும், காட்சியாலும் வகுத்து ஆன்றோர் பலா பலன் கூறுவர். உலக வழக்கிலுள்ள 'யானைவரும் பின்னே மணி யோசைவரும் முன்னே', 'கேடுவரும் பின்னே மதிகெட்டுவரு முன்னே' என்ற பழமொழிகளும் அவற்றைப் பொருத்திருக்கின்றன. 1902 - ம் ஆண்டு மேமாத ஆரம்பமுதல் பேலூர் ஆஸ்ரமத்தி லிருந்த சிஷ்யர்கள் மனம் தன்னறிவிழந்து கலங்க வாரம்பித்தது. அதன் கார ணத்தை மட்டு மவர்களறிய வியலவில்லை. சுவாமிகளின் உடல் நலம் ஒரு சிறிதும் தன்னிலை யிழந்திருக்கவில்லை. அவர் முன்னிலும் பதின் மடங்கு மத விஷயங்களில் ஊக்கஞ் செலுத்திவந்தார். அப்பொழுது அவர் பேலூர் ஆச்சிரமத்தின் ஆதாவில் மடத்தில் ஓர் சம்ஸ்கிருத கலாசாலையை ஏற்படுத்த வேண்டிய யத்தனங்களைச் செய்து கொண் டிருந்தார். சுவாமிகள், பலதடவை தமது சீடர்களிடத்தில் தான் பின் னும் இரண்டு மாதங்களுக்குமேல் பிழைத்திருக்க மாட்டேனென்று கூறினாராயினும் சுவாமிகள் எப்பொழுதும் விநோதமாகப் பேசுவது போல அப்பொழுதும் கூறினரென்று அவர்கள் எண்ணினர். மேலும் விருப்பமில்லாத விஷயத்தில் அவர்களுடைய சிந்தை நாடவில்லை.

பேலூர் மடத்திலிருந்து 1902 - ம் ஆண்டு மேமீ சுவாமிகள் தாம் தமது சந்நியாச நண்பர்களை அவசியம் உடனே காண விரும்புவ தாக சுகஸ்தலிகிதம் வரைந்தனுப்பினார். கடல்தாண்டி மதசேவை செய்துகொண்டு ஸ்ரீராமகிருஷ்ண மதத்தை ஸ்தாபித்துவரும் துறவி களுக்கும் இவ்வித நிருபம் வரைந்தனுப்பப் பட்டது. அவர்களி லநே கர் கடிதங் கண்டவுடன் ஏதோ ஒரு சக்தியாலுந்தப்பட்டு பேலூர் வந்து சேர்ந்தனர். பழைய நண்பர்கள் பலர் விசேஷமாக அழைக்கப் படாமலே சுவாமிகளை விசேஷமாக வந்து பார்த்துப் போயினர். சுவாமிகளும் 'உங்களுக்கு கொள்கை சம்பந்தமான ஐயப்பாடுக ளேதேனு மிருந்தால் சிக்கிரம் கேளுங்கள். ஆஸ்ரம விஷயமாய் ஏற்படும் வரவு செல

அந்தியத்தின் அறிகுறிகள்.

---

* மெய்யாக.

வுக் கணக்குகளை இனி என்னிடம் கொண்டுவர வேண்டாம். அனைத்தையும் நீங்களே கவனித்து வரவேண்டும் நமது பரமாசாரியரின்—விருப்பத்தை—மனோபீஷ்டத்தை நிறைவேற்ற வேண்டுமாயின் உங்களிடத்தில் ஒற்றுமை வேண்டும். நான் இன்னு மெவ்வளவு காலந்தான் கூடவே யிருந்துணர்த்த வியலும்' என்று இடையிடையே கூறிவந்தாராயினும் அவை யெல்லாம் அவரது நீடித்த பிரிவின் அறிகுறிகளே யென்று சீடர்கள் பின்னரே யெண்ணி யெண்ணி ஏங்கினர். ஒருநாள் சுவாமிகள் அவருடைய அன்பிற்குரிய சீடரான சுத்தானந்தரை யழைத்து "நான் இறந்தபின் என்னை அதோ அந்த வில்வ மரத்தடியில் தகனஞ் செய்ய வேண்டும்" என்று கூறினார். இதிலிருந்து கூட சிஷ்யர்கள் எவ்வித அனுமானமும் கொள்ளவில்லை.

சுவாமிகள் தீர்க்க சமாதிக்கு ஒருவாரத்திற்கு முன் அவர் சுத்தானந்தரை யழைத்து 'வங்காளி பஞ்சாங்கத்தை' எடுத்து வரும்படி யேவினார்; அவ்வாறே கொண்டுவரப்பட்டதும், அன்று முதல் திதி வார நக்ஷத்திர, யோக, கரணங்களை வாசிக்கும்படிச் சொன்னார். நாலைந்து நாள் பலாபலன் வாசிக்கப்பட்டதும் அதை வாங்கித் தனது படுக்கையின் பக்கத்தில் வைத்துக் கொண்டார். அன்று முதல் அனுதினமும் அவர் அப்பஞ்சாங்கத்தைத் திருப்பித் திருப்பிப் பார்த்துக் கொண்டே யிருந்தார். இதனாலும் அந்த சீடர்களுக் கெவ்வித சந்தேகமு மேற்படவில்லை. "என் னாசிரியனை யான் கண்டவாறு" (My Master as I Saw Him) என்ற அரிய நூலில், சகோதரி நிவேதிதாதேவி சுவாமிகளின் மகா சமாதியைப்பற்றிய குறிப்புகளில், அவருடைய பெரும் பிரிவின் அறிகுறிகளைத் தான் கண்டவாறு வரைந்துள்ள 'விஷயங்கள், விசேட குரு சிஷ்யத்வ இலக்கணங்களுடன் இலங்குகின்றன. '<u>இந்த உடம்பு எனக்குத் திருணத்திற்குச் சமானம். இதை யானின்னுமொரு வாரத்தில் நீக்க விரும்பினும் கூடும்</u>' என்ற சுவாமிகளின் வாக்கினின்றுகூட சீடர்கள் எவ்வித முன்னெச்சரிக்கையும் அடையவில்லை என்றால் அவர்களுடைய நிஷ்களங்க சித்தத்தின் தன்மை என்னென்போம்!

நன்னாள் தேர்தல்.

அவர் மகா சமாதியடைந்த அப்புண்ய தினத்தன்றுகூட அவர் பிரிவை யுணர்த்தும் சில அர்த்த புஷ்டியான நிகழ்ச்சிகளேற்பட்டன. அன்று காலை எட்டுமணி முதல் விட்டுப்போகு மவர் மட்டற்ற சமாதி நிலையில் மகிழ்ந்திருந்தார். பதினொரு மணிக்கு நிஷ்டை

கலைந்து வந்தவுடன் அவரது பொன்னொளி பொலியுந் திருமேனி ஞான ஸ்வரூபமாகவே பிரகாசித்தது. சுவாமிகள் அதற்கு முன் காணப்படாத ஒரு திவ்ய தேஜசுடன் விளங்கினார். அன்று அவர் எவருடனும் அதிகம் சம்பாஷிக்கவில்லை. தியானத்திலிருந்து கலைந்தவுடன் அவர் ஆச்சிரமத்திலுள்ள நந்தவனத்தி லுலாவினார். அப்பொழுது அவர் "விவேகானந்தன் எண்ணத்தை—நிலையை இன்னும் ஒருவரு மறியவில்லை. ஆனாலென்ன? இன்னும் எத்தனையோ விவேகானந்தர்கள் இம்மடத்தினின்றும் ஸ்ரீராமகிருஷ்ணரின் திருநாமத்துடன் வெளிப்படுவார்கள். நானும் வெளிப்படுவேன்" என்று மெல்ல சொல்லிக்கொண்டே நடந்துகொண்டிருந்தார். யதேச்சையாக அவ்வழி வந்த சுவாமி பிரேமானந்தர் இதைக் கேட்டு 'இதென்ன விந்தை! சுவாமிகளிதுவரையிலும் இவ்வாறு பேசியதில்லையே; இதன் பொருள் என்னவோ' என்று நினைத்துக்கொண்டே சென்றார். அன்று சமைக்கப்பட்ட உணவு அமுதத்தைப்போ லிருந்ததென்று அவர் புகன்ற சொற்களும், என்றும் ஏகாந்தமான ஸ்தலத்திலுண்பவர், அன்று தமது சீடர் பந்தியில் விநோதமாக உண்டதும் விசேஷ சம்பவங்களாயிருந்தன.

அப்புண்ய தினம்.

அன்று சுக்ரவாரம். அடுத்தநா ளமாவாசை. வெள்ளிக்கிழமையன்று ஸ்ரீ காளி தேவிக்கு விசேஷ பூசை, நிவேதனங்கள் நிகழ வேண்டுமென்று சுவாமிகள் கூறினார். அவ்வாறே சுவாமி ராமகிருஷ்ணானந்தரின் தந்தையாரான பட்டாசாரியரும் யதேச்சையாக அங்கு வந்து சேர்ந்தார். அன்று காளிதேவிக்கு விசேஷபூஜை நடந்தது. சுவாமி சுத்தானந்தரும், போதானந்தரும் பூஜைக்கு வேண்டிய புஷ்ப வகைகளைக் கொண்டு வந்து உடனிருந் துதவினர். சுவாமிகள் தமது தியான நிலை கலைந்து வந்தவுடன் புத்தகமடத்தி லிருந்து சுக்ல யஜுர் வேதத்தை எடுத்துவரச் சொல்லி சஹஸ்ரார ஜீவாத்ம பரமாத்ம ஐக்கிய விசேடமுள்ள அதன் 18-ம் அத்தியாயம் (மத்யந்தினி) வாஜசநேயி சம்ஹிதை 14 - ம் சுலோகமான;

ஸ்ரீ காளி பூஜை.

ஸுஷும்ண: ஸூர்யரஸ்மிஸ் சந்த்ரமா கந்தர்வஸ் தஸ்ய நக்ஷத்ரா
ராண்யப்ஸரஸோ பேகுரயோ நாம
ஸ ந இதம் ப்ரஹ்மக்ஷத்ரம் பாது தஸ்மை ஸ்வாஹா
வாட் தாப்யஸ் ஸ்வாஹா

(பொருள்). "சுஷும்னு என்னும் கந்தர்வ வடிவான சந்திரன் யக்ஞ ஹோமங்களைச் செய்கின்ற மகான்களுக்குச் சகல ஐஸ்வரியங்களையு மளிக்கின்றான்! அவனுடைய கிரணங்கள் சூர்ய ஜோதியைப் போன்ற சக்தியுடன் விளங்குகின்றன. அவன் பிராம்மணர்களையும் மகா சுத்தவீர க்ஷத்திரியர்களையும் காப்பானாக! நாம் அவனுக்கு மனப்பூர்வமாக ஆஹுதி யளிப்போமாக! அந்த சந்திரனுடைய அப்சரஸ்திரீகள் தாவரக் கூட்டங்களாக விளங்குகின்றனர். அவர்களோ சகல பொருள்களையும் விளங்க வைக்கின்றனர்."

என்ற மகா வாக்கியத்தை வாசிக்கக் கேட்டு சுவாமிகள் ஆனந்தக் கண்ணீர் சொரிந்தார்.

நடுப் பகலில் போஜனமானபின் சுவாமிகள் தமது சீடர்களுக்கு இலக்கண பாடம் நடத்தினார்; வரதராஜர் என்ற மகான் இயற்றி யருளிய 'லேகு கௌமதி (எளிய இலக்கண நூல்) என்ற நூலின் சில முக்கிய பாகங்களைக் கற்பித்தார். மாலையில் அவர் சுவாமி பிரேமானந்தரை யழைத்துக்கொண்டு பேலூர் கடைவீதி வரையில் போய் உலாவி வந்தார். அப்பொழுது சுவாமிகள் பிரேமானந்தருக்குச் சில ருசிகரமான விஷயங்களை உபதேசித்துக்கொண்டே நடந்தார். அச்சமயம் பிரேமானந்தர் சுவாமிகளைப் பார்த்து 'ஹே குருநாதா! வேதங்களை வாசிப்பதால் என்ன பயன்?" என்று கேட்க, சுவாமிகள் 'அதனால் மூட நம்பிக்கை யொழியும்" என்றருளினர். உல்லாசமாக உலவிப் பின் இருவரும் மடத்தை யடைந்தார்கள். சுவாமிகள் சில சீடர்களை மட்டு மழைத்து ஏதோ சிற்சில வார்த்தைகள் மட்டும் பேசினார். அந்தோ! அப்பொழுது கூட அவருடைய மகா சமாதியைப்பற்றி யொருவரும் கனவிலும் நினைக்கவில்லை. அறிந்திருப்பரேல் அந்த அமுத வாயினின்றும் இன்னுஞ் சில அரிய மொழிகளைக் கேட்டிருப்பர்!

மடத்தில் மாலைமணி யடித்தவுடன் சுவாமிகள் தமது அறையை அடைந்தார். கங்கை முகமாய் யோகாசனத்துடன் அமர்ந்து தியானத்தி லாழ்ந்தார். மாலை மங்கி மயக்கத்துடன் வந்தது. சுவாமிகளின் பிரிவுக் காற்றுதனபோல் அசேதனமான விருக்ஷங்களி னிடையில் ஆந்தைகள் அருவருப்பாகச் சப்தித்தன. இனிச் சுவாமிகள் தமது அழகிய கைகளால் அர்க்கியம் விடுவதென்றெனக் கங்கையினலைகள் கலங்குவனபோல் கரைகளில் வந்து மோதின! ஒரு மகானுடைய பிரிவால் உலகம் எவ்வித மிருளடையும் என்பதை உணர்த்துவான் போல் சூரியன்

அந்த சமயம்.

மேற்கு திக்கில் அஸ்தமித்தான். காமரை வருத்தும் கொடி சந்திரன், தாமரைபோன் றலர்ந்த மனமுடைய அன்பர்களின் உள்ளம் நாமரைப் பிரிவதால் அடையும் துன்பத்தினளவை அறிவிப்பான்போல கருநிறத் துடன் வானத்திற் ருேன்றினன். 'எங்களடியில் எம்பெருமாள் இனி எழுந்தருளுவதென்ருே' எனத் துக்கிப்பனபோல் மரங்கள் அசை வற்று நின்றன. சுவாமிகள் தாமழைக்கும் வரையில் எவரும் தனது அறைக்குள் பிரவேசிக்கக் கூடாது என்று கட்டளையிட்டு விட்டு அறையினுள் அணிவிளங்க யோக நிலையி லமர்ந்திருந்தார். இரவு சுமார் எட்டு மணிக்கு அவர் ஒரு சிஷ்யரை யழைத்துத் தமது சிரசில் விசிறச் சொன்னர். அப்பொழுது அவர் தமது படுக்கையில் சாய்ந்த வண்ணம் கண்ணை மூடி மூடித் திறப்பதும் ஏதோ சுலோகங்களை ஸ்மரிப்பதுமாக விருந்தார். ஒருமணி நேர மானபின் அவர் எழுந்துட் கார்ந்து இருமுறை பெருமூச்சு விட்டார். இதையும் பார்த்துக் கொண்டே அந்த சிஷ்யர் நடித்த பிரிவின் அறிகுறி யென்றறியாது விசிறியவாறே யிருந்தார். அப்பொழுது சுவாமிகளின் கைககள் நடுங் கின அவர் ஒருமுறை விழிகள் புரளப் பார்த்தார். பின் விழிகள் ஓரே நிலையில் நின்றன, புருவங்க ளெழுந்தன. விசிறிக்கொண்டிருந்த சிஷ் யர் பயந்து ஏனையோரைப்போ யழைத்து வந்தார். சுவாமி பரமானந்த ரும், நித்யானந்தரும் விரைந்தோடி வந்து விளக்கெடுத்துப் பார்த்து விட்டு அவருடைய காதுகளில் 'ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸ' ரின் திவ்ய நாமத்தை உச்சரித்தார்கள். சுவாமிகள் சதாகாலமும் ஸ்மரித் துக் கொண்டிருந்த நாமத்தை இப்பொழுது சீடர்கள் கூறினர். அப் பொழுது மணி சுமார் ஒன்ப தடித்து பத்து நிமிட மிருக்கும். சுவாமி அத்வைதானந்தர் போதானந்தரை யழைத்து நாடி பார்க்கச் சொன் ஞர். கையைப் பிடித்துப் பார்த்துவிட்டு அவர் 'ஐயோ' குருநாதா! எங்குற்றனை! நாங்கள் இனி என்ன செய்வோம்! எவருடைய முகத் தைக் கண்டு வாழ்வோம். யாரிடத்தில் உபதேசம் பெறுவோம். எங் களை இனி ஆதரிப்பார் யார்? ஆஸ்ரமத்திற் காதாரமான எங்கள் ஒழுக்கங்களில் கண்ணுங் கருத்துமா யிருந்து எங்களை அவ்வப் போது திருத்திய நீ எங்கேகினை'' என்று அலறினர். பின்பு, அத் வைதானந்தர் நிர்ப்பயானந்தரை யழைத்து வைத்தியர் மோஹேந் திரநாத மோசும்தாரை விரைவில் கல்கத்தாவுக்குச் சென்றழைத்து வருமா றனுப்பினர். மற்ருெருவர் விரைந்தோடி கல்கத்தாவிலிருந்த பிரம்மானந்தரையும், சாரதானந்தரையு மழைத்துக்கொண்டு பத்தரை மணிக்கு வந்து சேர்ந்தார்.

வந்த அவ்வைத்திய நிபுணர் வைத்திய முறைப்படி சோதித்துப் பார்த்துவிட்டு 'மகா சமாதியாகி ஒருமணி நேர மிருக்கலாம்! நாடியோட்டமில்லை' என்றார். நாடி யோட்டமில்லை யென்ற சொற்கள் சீடர்களுக்கு நமனைவிடக் கொடியனவா யிருந்தன. அவர்களுடைய வதனம் வாடின. அறிவிழந்து அங்கு மிங்கு மோடினர்; குருநாதா! குருநாதா! வெனக்கூறித் தேடினர். என்ன கதறித்தான் ஆவதென்ன? சுவாமி விவேகானந்தர் பரந்தாமனை நாடிப் பரப்பிரம்ம சொரூபத்தில் ஐக்கியமாகி விட்டார். தியான நிலையிலிருந்து சுவாமிகள் தாரண நிலையிற் பிரவேசித்துத் தீர்க்க சமாதியில் நிறைந்து புகுந்து விட்டார். தோலாலாகிய சட்டையை அவர் சுழற்றி யெறிந்து விட்டுப் பரப்பிரம்ம நிலையை யடைந்து விட்டார். —— அனுபவ விவேக நூல் என்றும் திறக்கப்படாதபடி அன்று மூடப்பட்டு விட்டது. — புத்தரைப்போன்று அப்புண்யாத்மா புவனத்தை வெறுத்து நியமித்துடன் நிர்வாண நிலையை யடைந்தார். அந்தப் பிரகாசமான யோகப் பிரகிருதி, உண்மையின் உறைவிடம் ஸ்ரீராம கிருஷ்ணரின் உள்ளன்பிற்குகந்த நரேந்திர நாதன் சத்தியத்தின் சாட்சாத்கார சொரூபி, ஹிந்து சித்தாந்தரூபி, வேதாந்த விளக்கு, இலக்கண சங்கப்பலகை, ஸ்ரீராம கிருஷ்ணரின்——குருநாதனின் குறித்த கட்டளையை நிறைவேற்றி, அந்த அவதார புருடரால் அன்பர் பணி செய்ய ஆளாக்கி விடப்பட்டு இன்ப நிலையைக் கண்டு சர்வ பரிபூரண அகண்ட சச்சிதானந்த சொரூபத்துடன் இரண்டறக் கலந்தார். விவேகானந்தரான நரேந்திரன் நாராயண ரூபியாகி விளங்கினார். அப்பொழுது அவரது வயது முப்பத்தோன்பதே.

மகா சமாதி.

ஓம்! சாந்தி! சாந்தி!

விவேகானந்த சுவாமிகள் மகா சமாதியடைந்த செய்தி கல்கத்தா நகரமெல்லாம் வாயுவேகமாகப் பரவிற்று. சுவாமிகளின் மகா சமாதியைக் கேட்ட அன்பர்கள் இடியொலிகேட்ட நாகம்போற் பதறிப் பதை பதைத்தனர். 'ஹா! இது உண்மையா யிருக்க முடியுமா? கனவிலுமிது ஒவ்வாத—எதிர் பாராத செய்தியன்றோ?' வென்ற ஆச்சரியத்தா லெழுந்த துக்கம் சாதுக்களைப் பிடித்தலைத்தது. பேலூர் மடத்திலிருந்து சீடர்கள் திக்பிரமை பிடித்துப் போயினர்; ஆராத்துயரத்திலமுழ்ந்தி வருந்தினர்; தாரை தாரையாகக் கண்ணீர் விட்டனர். தந்திகள் அமரிக்கா, ஐரோப்பா நாடுகளுக்குப் பறந்தன. அவரிடத்து

அந்தரங்க பக்திகொண்டிருந்த அன்பர்களிடத்தில் இச்செய்தி காட்டுத் தீயைப்போன்று பாவி அவர்கள் உள்ளத்தை வேக வைத்தது. சுவாமிகளுடைய பிரேதத்தைப் பார்த்து 'ஐயனே உமது புனித வாயினின்று யாம் இனி எப்பொழுது மதுரமான சொற்களைக் கேட்போம்; உமது அருள் நிறைந்த கானத்தைக் கேட்டு மகிழ்வோம்; இனி எமக்கென்ன ஆதரவு; அறியாப் பாலர்களான எங்களை அம்பலத்தில் விட்டுச் சென்றது தர்மமா? இனி வாய் பேசீரா?' என்று புலம்பி யழுதா ரொரு சீடர்.

அடியாரின் துயரம்

'ஸ்ரீராம கிருஷ்ண பரமஹம்ஸருக்குப் பிறகு, கொண்ட கருமத்தில் உறுதியுடைய தங்களை, யாங்கள் எதிர் பாராமல் இழக்க நேர்ந்ததற்கென்ன செய்வோம்! இத்துணை சீக்கிரத்தில் தாங்களேன் அடியேங்களைக் கைவிட வேண்டும்? பஞ்சாங்கத்தினின்றும் தாங்கள் நித்ய பலாபலன்களைப் படிக்கச் சொன்னபொழுது இத் தினபலனை யெடுத்துக் கூறியவுடன் 'சரி' என்று கூறினீர்களே! இந்த அங்கத்தை விடவா அந்த பஞ்சாங்கத்தைப் படிக்கச் சொன்னீர்கள். அந்த ரகஸ்யத்தை பாவி - அடியேன் அறிந்தே னில்லையே' என்று பிரலாபித்தார் மற்றொருவர். அழுது புரண்டாலும் ஆவதென்ன?

மறுநாட் காலையில் ஸ்ரீசாரதாமணி தேவியார் வந்து சேர்ந்தார். அந்தோ! அவ்வம்மை யடைந்த துயரத்தை நாமெவ்வித மெடுத்தெழுத வியலும்! சீடர்க ளெல்லோரும் பின்றோன்றியவர்கள்! இது ஆதிமுதல் பழகிய அரிய அன்பினிருப்பிடம்! குடல் குலுங்கியது. அன்று சனிக்கிழமை. ஆயிரக் கணக்கான பக்தர்கள் அங்கு வந்து கூடினர். மடத்திலிருந்த சீடர்கள் மயக்கத்தாலும் அன்பாலும் ஆசையாலும் "ஒருவேளை சுவாமிகள் ஆழ்ந்த நிஷ்டையிலிருக்கலாம்! அவர் தீர்க்க சமாதி யடைந்திருக்க மாட்டார்! இவ்விதமே அவர் ஸ்ரீராம கிருஷ்ணரோடிருந்த காலத்தில் ஒருநாள் முழுதும் சமாதி நிலையில் வீற்றிருந்தா ராதலால் சற்று பொறுத்துப் பார்ப்போம்" என்று சுவாமிகள் தூங்கி யெழுவதுபோல் எழுந்து விடலாமென மனப்பால் குடித்துக்கொண் டிருந்தனர்; ஸ்ரீராம கிருஷ்ணரைக் குறித்துத் துதிபாடினர். எதுவும் பயன்படவில்லை. அன்று பிற்பகல் மூன்று மணிக்கு மரணம் நிச்சயிக்கப்பட்டது. பின்னர் சிஷ்யர்க ளெல்லோரும் ஒன்று கூடி தகனத்திற்கான விஷயங்களில் கவனஞ் செலுத்தினர். சிலர் தகனத்திற்கு வேண்டிய சந்தனக் கட்டைகளைக் கொண்டுவந்து நிரப்பனர். சிலர் கல்கத்தாவிற்குச் சென்று

யதேஷ்டமாக புஷ்பங்களையும், மலர் மாலைகளையும், ஊதுவர்த்தி முதலிய வாசனைத் திரவியங்களையும் வாங்கி வந்தார்கள். சவம் சுவாமிகளுடைய அறையிலிருந்து வெளியே இடைகழிக்குக் கொண்டுவரப் பட்டு நீராட்டப்பட்டது. விலையுயர்ந்த பட்டாடைகளைக் கொண்டு சுவாமிகளுடைய உடல் அலங்கரிக்கப் பெற்றது. சீடர்கள் அவருடைய திருமேனியில் மாலைகளைச் சாத்தி தீபதூபங்களிட்டு வணங்கினர். சிலர் தங்கள் சிரசின்மீது அவரது பாத கமலம் படுமாறு பணிந்து தண்டனிட்டார்கள். சுமா ரொருமணி நேரம் அங்கு குருசிஷ்ய பாவம் குதூகலித்து நின்றது. அப்பால் கருஞ் சிவப்பு வண்ண மையால் சுவாமிகளுடைய திருவடிகளின் ரேகை அடையாளம் மஸ்லின் துணியில் ஒத்தி எடுக்கப்பட்டது. அதுவே ஸ்ரீமத் விவேகானந்த சுவாமிகள் அளித்த ஆஸ்திபோல் இன்று வரையில் அவரது பரமானந்த சிஷ்யர்களால் கொண்டாடப்பட்டு பூஜையறையில் விளங்குகின்றது

அப்பால் சுவாமிகளின் பொய்யுடல் ஆடம்பரத்துடன் சுவாமிகளால் முன்னர் குறிப்பிடப்பட்ட வில்வ மரத்தடிக்கு எடுத்துச் செல்லப்பட்டது. சந்தனக் கட்டைகளை சரிவர அடுக்கி அகிற் கட்டைகளை அதன்மேலமைத்து தகனஞ் செய்தனர். 'சத்குரு மகாராஜிகி ஜே! சுவாமி மகாராஜிகி ஜே' என்ற சாதுக்களின் கோஷம் வானுலகை எட்டி உம்பருக்கு அம்புவியிலானந்தர் பிரிவை அறிவிப்பதுபோ லெழுந்தது. வில்வ மரக் கிளையொன்று வியக்கும் வண்ணம் முறிந்து ஜதையின் மீது விழுந்து வில்வ தளங்களைக் கொண்டு அருச்சிப்பது போல் தளங்களை உதிர்த்தது. அந்தோ! 'ஒன்றை நினையாது முன் வந்து நிற்பினும் நிற்கும்! யாவும் எனையாளும் ஈசன் செயல்!' என்ற வாக்கியங்களை நினைந்து நினைந்து அன்பர்கள் ஆராத்துயரத்திலாழ்ந்தனர்! "அந்தோ! எனது குருநாதனுடலைத் தீ சூழ்ந்து விட்டதே" என்று புலம்பினார் சுத்தானந்த சந்நியாசி! 'அவருடைய பொய்யுடலே தீக்கிரையாகின்றது' என்று மனந்தேறினார் சுவாமி பிரம்மானந்தர்!

தகனக் கிரியை

'அன்பர்பணி செய்யவெனை ஆளாக்கி விட்டுவிட்டா
லின்பநிலை தானேவந் தெய்தும் பராபரமே'

என்ற தாயுமானவர் வாக்குப்படி நமது பரமாசாரியன் சுத்த சைதன்ய சொரூபியாகிய விளங்குகின்றார்' என்றார் பிரேமானந்தர்! மறுநாட் காலையில் சுவாமிகளின் ஹஸ்திகளைப் பொறுக்கி, அவையே தமதாஸ்தி

யென்ற அபிமானம் பொங்க, அன்பர்கள் அவற்றைப் பாகீரதியின் பரிசுத்த ஜலத்திற் கழுவி அந்த வில்வமரத்தடியிலேயே அதன் ஒரு பகுதியைச் செப்புக் குடத்திலிட்டு வைத்து, தூபி யொன்றைத் துலங்க எழுப்பி, அதன்மீது சுவாமிகளின் திருவுருவச் சிலையொன்றை சிற்பித்தமைத்து,

'1902ஞு ஜூலை மீ 4உ சுக்கிரவாரம்'
உலக பூஜ்யரான ஸ்ரீமத் விவேகானந்த சுவாமிகள்
நிர்வாண நிலை யடைந்தார். ஓம் தத்ஸத்

என்ற வாக்கியங்களைக் கல்லில் வெட்டி அமைத்தனர். ஹஸ்தியின் மற்றொரு பகுதி ஸ்ரீராமகிருஷ்ண பரம ஹம்ஸதேவரின் சமாதிக்குச் சமீபத்தில் செப்புக்குடத்துடன் புதைக்கப் பெற்றுத் தூபியுடன் துலங்குகின்றது.

சுவாமிகளிருந்த அறை இன்னும் பரிசுத்தமாகப் பாதுகாத்து வரப்படுகின்றது. அதனைக் கண்ணுறுங்கால் அப்பொழுது தான் சுவாமிகள் மேஜையை விட்டெழுந்து ஆஸ்வாச நிமித்தம் சற்று வெளியே சென்றிருப்பது போலவிருக்கும். அவருடைய பட்டாடைகள் இன்று மங்கு அசைந்து கொண்டிருக்கின்றன. அவருடைய படுக்கையிலும், நாற்காலியிலும் இன்னும் அவருடைய திருவுருவம் திகழ்கின்றது. சுவாமிகள் தீர்க்க சமாதியடைந்த அதே அறை இன்றளவும் ஆலயமாகக் கொண்டாடப்பட்டு, சில பிரதம சீடர்களின் யோகாப்பியாச பீடமாக விளங்குகின்றது. சுவாமிகளின் தீர்க்க சமாதிக்குப் பிறகு பேலூர் மடத்திற்கு வந்த சிலர் அவ் வறையைக் கண்டதிசயித்தனர்; சிலர் உவகை கொண்டனர்; சிலர் மயிர்சிலிர்ப்பக் கை கூப்பி நின்றனர்; சில அக்கரைக்குச் சென்றிருந்த அடியார்கள் கண்டு அலறி அழுதனர்; சுவாமிகளை இந்த அழகான அறையிற் கண்ட எங்கள் கண்கள் இப்பொழுது புண்களாயினவே யென்றியம்பிப் புலம்பினர் சில பக்தர்கள். மகா பாதகன், கொடியன், பாதாரவிருப்பன், உயிருள்ள வரையில் உலகத்தாரல் தூற்றப்படினும் அவனிறந்த காலத்தில் அவனுடைய கொடிய செயல்களை யெல்லாம் மறந்து 'ஐயோ! பாவம்! போனான்' என்று மனமிரங்கிக் கூறப்படுவதியல்பாயிருக்க, விவேகம்! வித்வத்வம்! சத்யம்! சாத்வீகம்! சதாசாரம்! சமரஸம்! புருஷத்வம்! கருணை! அன்பு! கலாசமுத்திரம்! முதலியன ஒன்று கூடி மானுடவுருக்கொண்டனவென்று பல்லாயிர கோடி ஜனங்களால் பூஜிக்கப்

சுவாமிகளின் தியான அறை

பெற்ற ஸ்ரீமத் விவேகானந்த சுவாமிகளை இழக்க எவர்தான் இசைவார்! "சுவாமிகளை யாவற்றிலும் ஸ்ரீ ஆஞ்சநேயனுக்கு ஒப்பிடலாம்! ஆனால் அவருக்குச் சிரஞ்சீவி பட்டம் மட்டினும் மேற்பட வில்லையே யென்ற குறைதான் உண்டு" என்றது ஒரு வங்காளப் பத்திரிகை!

"தாயின் தாள்களை முத்தமிடுகிறவன் மோட்சலோகத்தை யடைகிறான்" என்றார் முகம்மது நபி. 'தாயிற் சிறந்ததொரு கோயிலுமில்லை' என்றாள் ஔவை! 'தாயின் தண்ணளியாலே தனயன் பரிசுத்தனாகின்றான்' என்றார் ஒப்பில்லா நெப்போலியனும்! தாய்தான் சக்தியின் வடிவானவள்! அவளே ஸ்ரீமத் சங்கரரையும், திருநாவுக்கரசு சுவாமிகளையும் உலகிற் களித்துப் பெருமை கொண்டவள். நமது பாரதபூமியே அன்னை மயமானது! அன்னையின் அருமை பெருமைகளுக்கு உரிய மாதர் குழாத்தில் ஸ்ரீ சாரதாமணி தேவியும் ஒருவரென்பதை உலகம் ஏகோபிதமாக ஒப்புக் கொள்ளும்! அவ் வுத்தமி ஸ்ரீமத் விவேகானந்த சுவாமிகளின் அபார பரமோத்கிருஷ்டமான மதசேவையைக் குறித்துச் சதா சர்வேஸ்வரனைத் தியானித்துக் கொண்டிருந்தாள். பரஸ்பரம் ஒருவருடைய அன்பு மற்றொன்றை விட அதிகரித்ததாகவே யிருந்தது. சுவாமிகளும் அடிக்கடி தமது ஞானத் தாய்க்குக் கடித மெழுதிக் கொண்டும், அவருடைய ஆக்ஞையை அவ்வப்போதறிந்து அதன்படி நடந்து கொண்டும், சபாமண்டபங்களில் தமது மாதுர் வாக்கியங்களைப் பற்றிப் புகழுரை செய்து கொண்டும், உபந்யாசங்களில் தாயனைக் குறித்து உபதேசித்துக் கொண்டு மிருந்தார்.

மாதுர் பக்தி

இரண்டாம்முறை மேல் நாடுகளுக்குச் சென்று சுவாமிகள் விசேஷ வியாதியுடன் திரும்பியபொழுது, பம்பாய்த் துறைமுகத்தி லிறங்கியவுடன் தமது அன்னை பிணியுற்றிருப்பதாகச் செய்தி கிடைக்க, உள்ளம் பதறி விரைந்து சென்று வணங்கி, அன்னை உடலைப் பற்றிய உபாதி தணிந்த பின்னரே மன வமைதி யடைந்தார். வளர்த்த வாஞ்சை பெரிதன்றோ! அறிவூட்டிய அன்பல்லவா? அவள் உளங் குளிர்ந்தாலன்றோ அவனுக்கு ஆனந்த உதய மேற்படும்! தமது ஞான புத்ரன் மகா சமாதியைக் கேள்வியுற்ற ஸ்ரீசாரதாமணி தேவி பேருரை யடைந்து, சந்தனக் கட்டையால் அடுக்கப்பட்ட ஜதையில் அவருடைய உடல் வீற்றிருக்கும் பொழுது "புத்திரசிங்கமே! உன்னுடைய தோற்றத்தால் பூமியிலுள்ள அஞ்ஞானம் பெரிதும் தணிந்தது. இப்பொழுதும் நீ இறக்க வில்லை. உனது பொய்யுடலே அக்கினியி லடங்குகின்றது. உனது மெய்

யுடல் என்றும் அழியாதது! பரிசுத்தமானது! அது சுத்த சைதன்ய ஸ்வரூபத்தோடு கலந்துவிட்டது" என்று கூறி ஆனந்தக் கண்ணீர் சொரிந்தாள். அம்மகா உத்தமி ஸ்ரீமத் விவேகானந்த சுவாமிகளுக்குப் பின் ஒன்பதாண்டுகள் உயிர் தரித்திருந்து ஸ்ரீ ராமகிருஷ்ண தர்மத்தை ஸ்ரீமத் விவேகானந்தர் பரவச் செய்தபடி ஸ்தாபிப்பதில் சீடர்களை உற்சாகப்படுத்திவந்தாள். அத்தெய்வத்தாய் பூரிமாநகரில் ஜெகத்திற்கே நாதனாக விளங்கும் ஜெகந்நாதன் சந்நிதானத்தில் 1911-ம் ௵ ஜுலை ௴ 25௳ பரகதி யடைந்தாள்.

ஸ்ரீமத் விவேகானந்த சுவாமிகளின், முடிவான, ஆணித்தரமான சரமோபதேசத்தின் உயர்வை நாமென்னென்போம்?

சுவாமிகளின் சரமோபதேசம்

> ஹே! பாரத தேவியே, தமயந்தி, சாவித்திரி, சீதை முதலிய கற்புக் கருங்கலமாக விளங்கிய மகா உத்தமிகளை நீ மறவாதிரு! உனது சர்வசக்தியுள்ள பரதேவதை, யோகிகளுக்கெல்லாம் மகா யோகியாக விளங்கும் உமாபதி யென்ற உணர்வுடன் நீ வாழக்கடவாய்! உனது திருக்கல்யாணமும், செல்வமும், வாழ்வும் உனது தேகேந்திரிய போகத்திற்காகவே ஏற்பட்டன வென்பதையும், உனது சர்வ சுவாதந்திரியமுள்ள அனுபவத்திற்கே யுரியன வென்பதையும் நீ இன்றே மறந்து விடு. நீ ஜனித்தது முதல் ஜெகதீஸ்வரியின் திருவருட் கருணையால், அவருடைய பாதாரவிந்த சேவைக்கே அர்ப்பணஞ் செய்யப்பட்டிருப்பதை அறிவாயாக! உனது சுற்றமும், மற்றைய பொருள்களும், மாயையின் தோற்ற மென்பதை நீ உன் அறிவினாற்றலால் அறியக் கடவாய்! தீண்டாதானும், பாமரனும், மூடனும், ஏழையும், தோட்டியும் உனது சகோதர ரென்பதையும் உனது உத்தம இரத்தத்திற் றோன்றியவ ரென்பதையும் நீ மறவாதே! ஹே! எதற்கு மஞ்சா வீரனே! நீ தைரியத்துடன் நான் இந்தியன் என்று வீரம் பேசிப் பெருமை பாராட்டு! 'படியாத பாமரனும் படித்தறிந்த பண்டிதனும், இடுக்கண் பலபடு மேழையும், ஏனையோர் யாவரும் எனது சகோதரர்களே! அன்பர்களே' என்றெழு! கந்தை யாடையை நீ யந்த முடன் பூண்டு, கனத்த துவனியுடன் 'இந்தியர்களே எனது உயிர்! சகோதரர்கள்! இந்தியாவின் தேவிகளே எனது தீனதயாபரி! இந்திய ஜனசமூகமே நான் குழந்தையாக ஆடிய அழகிய தொட்டில்! எனது பால்யத்தின் பக்தி மணங் கமழும் பரமாசாரியரின் ஆஸ்ரமம்! எனது வயோதிகத்தின் தபோவனம்' என்று சாற்று. சகோதரனே! 'பாரத நிலத்தின் பண்பெற்ற ஆலயங்களே எனக்குச் சுவர்க்கம்! இந்தியாவின் சமயத்தொண்டே எனது மோக்ஷ சாதனம்!—முத்தி நெறி! எனது தாய்நாட்டின் மேன்மையைக் கண்டானந்தித்தலே எனக்கு முத்தியின்பம்' என்று துதிபாடி 'ஹே! பார

தாமா! ஹே ஜெகதீஸ்வரி எனக்குக் கடல் மடுப்பினும் மனங் கலங்கா நிலையை நீ யருள்வாய்! ஹே! சக்தி! எனது அசக்தியைப் போக்கி, அருள் சுரந்து, என்னை நீ வீரனுக்கு! ஹே சாக்ஷாத்கார சொரூபி! அவனியி லஞ்ஞானந் தணியவேண்டும்; அன்பு பெருகவேண்டும்; ஆனந்தம் பொங்கி வழியவேண்டும். இதுவே எனது பிரார்த்தனை' யென்று நீ தோத் தரிக்கவேண்டும்,

என்பதே அவருடைய சமயப் பேறெனப் போற்றத்தகும் சாமோப தேசம்.

கல்கத்தா மாநகரில் சிம்லா என்ற பகுதியில் பரமோத்கிருஷ்ட மான பகவத் பக்தர்களான காயஸ்தர் வம்சத்திலே, அதிமேதாவி விஸ்வநாத தத்தருக்குத் திருக்குமாரராக, உத்தமிகளால் பூசிக்கத் தகும் புவனேஸ்வரியின் செல்வப்புத்திரராக அவதரித்து, நரேந்திர ரென்ற பிள்ளைத் திருநாமத்துடன் பால்யத்திலே கலைகளின் பல துறைகளிலும் கற்று வல்ல பண்டிதராகி, சமயாசார சத்கிரந்தங்களில் சகல சந்தேக நிவர்த்திகளையும் அடைந்து, ஜீவான்ம பரிபக்குவ நிலையை யெய்தி, மலங்களென்ற வீட்டை யிடித்து, பஞ்சேந்திரியங்க ளென்கின்ற கோட்டைகளைத்தகர்த்து, பரம்சாதுவாய், சத்புருஷரான சச்சிதானந்த மயமாயுள்ள சைதன்ய சொரூபத்தை அறிய வேண்டு மென்ற ஆவேசத்தால் குருவைத் தேடியலைந்து, அப் பரிபக்குவகாலம் வராததால் சண்டமாருதம்போல் சத்விஷயத்தைக் குறித்து விசாரம் செய்யும் மகா மேதாவிகளை யெல்லாம் தரிசித்தும்,

சம்பூர்ணம் பக்தி சிரத்தை விநய விஸ்வாசத்துடன் அவர்க ளடிபணிந்து கேட்டும், சங்கை நீங்கப்பெறாமல் வெறுத்துக்களைத்து, கட்டுத்தறியை விட்டுத் தளையை பலாத்காரமாக நீக்கிக்கொண்டு, எதிரிகளை எதிர்த்துக்கொன்று ஓடியாடிப் பின்பு அடங்கி ஆஸ்வாசத்திற்காக நிற்கும் 'கயிலை நடந்தென்ன, உயர்நிலை தோன்றுள், பிறை செறிந்தன்ன இருகோட்டொருதியில் பால் நிறச் செங்கண் மால்விடை' யெனச் சர்வ சமய சன்மார்க்க சந்தேகங்கள் நீங்கப்பெறாமல், மாயையென்ற கொடிய எதிரியை வெல்ல பந்த மாகிய கட்டுத்தறியை விட்டுக்கிளம்பி, காமக் குரோதாதிகளை ஜயித்து வீண் வாய் வேதாந்தம் பேசாது உண்மையை உள்ளவாறு உபதே சிக்கக்கூடிய பரமாசாரியன் இனி எங்குக் கிடைக்கப்போகிறானென்று நிராசை கொள்ளப்போகுந் தறுவாயில் உள்ளம், வாக்கு, காயம் ஆகிய மூன்றாலும் பரிசுத்தராய் உண்மை, வாய்மை, மெய்ம்மையுடன் விளங்கி, தமது சுவானுபூதியிலே அத்வைத நிஷ்ட சிஷ்டராய் ஆசை

களையும், பாசங்களையு மதிபாதாளத்திலழுத்தி, ஆடம்பரத்தை வெறுத்து, தன்னையடைந்து சாதுக்களின் சங்கைகளைப்போக்கி மெய்யுபதேசஞ் செய்யும் மகாபுருஷனைப், சதா ஈஸ்வர நாம சங்கீர்த்தனத்தி லீடுபட்டு, தக்ஷிணேஸ்வரமென்ற மகா க்ஷேத்திரத்தில் குழந்தையைப் போல் வசித்துக்கொண்டிருந்த ஸ்ரீராம கிருஷ்ண பரமஹம்ஸ மூர்த்தியைக்கண்டு, அந்தப் பரமாத்மாவால் ஆட்கொள்ளப்பெற்று, அடியற்றமரமென்ன அவரது திருவடியில் வீழ்ந்து "ஐயனே உமதடிமையான்" எனப் புகன்று நிஷ்களங்க பக்தியுடன் விளங்கி, பரமாசாரியரிடத்தில் மந்திரோபதேசம் பெற்று ஸ்ரீ விவேகானந்தர் என்ற தீக்ஷா நாமம் பூண்டு, "மாயையை நீ போக்க வேண்டும்" என்ற அம்மகான் மனோரதத்தை நிறைவேற்றும் பொருட்டு, பூசஞ்சாரம் செய்து, புவனத்தையே தமது சக்தியால் ஆட்டி வைத்து, அமரிக்கா நாட்டில் கூடிய "சர்வ தர்ம மகா சபை"யில் சர்வ மத சமரஸ தத்துவத்தை மேல்நாட்டா ருள்ளத்தில் பதியவைத்துப் பாதகண்ட முழுதும் பிரதக்ஷிணம் வந்து, தமது குருதேவரின் ஆக்ஞையை நிறைவேற்றி, இந்திரிய நிக்ரஹஞ்செய்து, ஜிதேந்திரியராய், சத்ய சந்தராய், தமது யோக ஒளிவீசுந் திருமேனியாலும், உபமானப்பிரமாண சாத்திராதார பரமோத்கிருஷ்டமான உபதேசங்களாலும், ஒழுக்கங் குன்றாத உயர்ந்த தன்மையாலும் சகல வசீகர சக்தியுடன் விளங்கி "என் கடன் பணி செய்து கிடப்பதே" என்று தாஸனைப் மங்கி வருகின்ற மதப்பற்றுக்கே எழுச்சிதந்து, உறங்குகின்ற இந்திய ருள்ளத்தைத் தட்டியெழுப்பி, வெகு பால்யமான தமது முப்பத் தொன்பதாவது வயதில் பேலூர் மடத்தில் தமது யோக அறையில் சுத்தப்பிரம்மானுபூதியில் 'ஏகமேவாத்துவிதீயம் பிரம்மா' என்ற மகா வாக்கியப்படி மன்னிக் கலந்த ஸ்ரீமத் விவேகானந்த சுவாமிகளின் திவ்ய சரித்திரம் முற்றும்! அந்த ஜெகத்பூஜ்யரின், ஜெயசீலரின், ஜீவன் முக்தரின் மகா வாக்கியத்தையும், மகத்தான மதசேவையையும் நாம் மனமாரப் போற்றி வாயார வாழ்த்தி வழிபடுவோமாக! ஓம் தத் ஸத்.

விழிமின் எழுமின்! விழுமிய கருமம்
கைகூடும்வரை உழைமின் உணர்மின்!

ஓம் ஸ்ரீராமகிருஷ்ணாய பரப்பிரம்மணே நம:

ஸ்ரீ ம த்

விவேகானந்த சுவாமிகள்

அருளிச்செய்த

"Song of the Sanyasin"

என் னு ம்

ஆங்கிலக் கவியின் மொழி பெயர்ப்பு.

சந்நியாசி கீதம்

மனவலி படைத்த மாசிலாத் துறவீ!
சுவைமலி இன்பச் சுரந்தனை எழுப்புதி!
மதிதலக் கறைவுறு வெகுதொலைக் கப்பால்
புலப்பகை வெறுக்கை புகழிவை அமைதியைக்
கலைப்பதற் கென்றும் தலைப்படாத் தலத்தை
அறிவுமெய் என்னும் அருவிக ளுடனே
பரமா னந்தத் திருமா நதிபாய்
வெற்புறு குகையைப் பொற்புறு வனத்தைப்
பிறப்பிட மாக்கொடு சிறப்புமிக் கார்ந்தே
எழும்கீ தத்தை முழக்குதி நன்கு!
ஓதுக நீஓம் தத்ஸத் ஓம்என. (1)

திடனுறு நெஞ்சத் தடல்மிகு துறவீ!
இறுக்கிடு தளைகளை நொறுக்குதி அவைதாம்
ஒள்ளிய அரும்பொற் றளையா யினும்சரி
எள்ளிய கரும்பொற் றளையா யினும்சரி
சுகமுறு விருப்பும் அகம்வெறு வெறுப்பும்
நன்மையும் நன்மை இன்மையு மாகித்

தொந்தம் தாம்இப் பந்தத் தொகுதி
பசையொடு தழீஇயினும் கசையடி தரினும்
அடிமை அடிமை ஆகுவ னேயலால்,
சற்றும் சுவேச்சை உற்றவன் அலன் அறி.
பொற்றளை ஆயினும் பற்றிப் பிணிப்புழிக்
குன்று வலிஉடைத் தன்றே? ஆதலின்,
ஆங்கவை களைந்து நீங்குதல் நெறியே
ஓதுக நீஓம் தத்ஸத் ஓம்என. (2

எதற்கும் அஞ்சா இயல்புடைத் துறவீ!
இடுக்கண் மேன்மேல் அடுக்கும் பொருட்டுச்
சிமிட்டிச் சிமிட்டிச் சிற்றொளி காட்டி
இட்டுச் செல்லும் துட்டத் தீப்பேய்
அந்த காரம் அடியொடு தொலைத்தி!
வாணாள் ஆசையைப் பேணு தொழிக.
ஆ! ஆ!! அதுவே ஜீவாத்மாவைப்
'புநரபி ஜநநம் புநரபி மரணம்'
என்னும் இவற்றிற் கீர்த்துச் செல்மனம்
தான் அடங் கொருவன் தான்அடக் குவன் எலாம்.
ஈதறிந் தென்னும் இடங்கொடா திருத்தி!
ஓதுக நீஓம் தத்ஸத் ஓம் என. (3)

அஞ்சுதல் அறியா நெஞ்சநற் றுறவீ!
'எவன் எதை விதைப்பான் அவன் அதை அறுப்பான்'
காரணம் உளவேல் காரிய மும் உள.
நன்மை விதைத்தவன் நன்மை அறுப்பன்.
தீமை விதைத்தவன் தீமை அறுப்பன். இவ்
விதியி னின்றும் விலக்கா வார்இலர்
உருப்பெற் றோர்க்கெலாம் உறுதளை உண் டெனப்
புகல்வர். இதனிற் பொய்இலை. ஆயினும்,
நாம ரூபம் ஆம்இவற் றப்பால்
என்றும் தடையற நின்றுள தான்மா.

அதுவே நீஎன் றறியக் கடவை.
ஓதுக நீஓம் தத்ஸத் ஓம் என. (4)

ஒன்றினும் திரியா உளம் உடைத் துறவீ !
பெற்றோர் மக்கள் உற்றோர் பெண்டிர்
இத்தகை யாவும் மித்தையே என்னக்
காணு தார்மெய் காணு தாரே.
ஆண்பெண் இல்லா ஆன்மா வானது
எவர்க்கே தந்தை ? எவர்க்கே மைந்தன் ?
எவர்க்கே பகை அது ? எவர்க்கே உறவது ?
யாவற் றுள்ளும் யாவு மாய் அவ்
ஒன்றே உளதஃ தன்றிமற் றிலையால
அதுதான் நீஎன் றறியக் கடவை
ஓதுக நீஓம் தத்ஸத் ஓம் என. (5)

சலியா மனத்து வலியார் துறவீ !
ஒன்றே உளதவ் ஒன்றும் என்றும்
தன்வயத் துவமாய்த் தான் இருப்பதுவே.
யாவையும் உணர்ந்த தாவிலாத் தனிமை.
நாம ரூபம் ஆம்இவை இல்லது.
களங்கம் இன்றி விளங்கும் பொருள்அது.
இவ்வெளி மயக்கெலாம் அவ்வொரு பொருட்கண்
உளதே ஆகும் பளகறு லோகக்
காட்சி யாகவும் சாட்சி யாகவும்
ஆன்மா ஆகவும் அப்பொருள் தோன்றும்.
அதுதான் நீஎன் றறியக் கடவை
ஓதுக நீஓம் தத்ஸத் ஓம்என. (6)

ஸாகஸம் மிகுந்த பூதசந் யாஸி !
இவ்வுல கேனும் அவ்வுல கேனும்
ஈயாச் சுவேச்சை எங்கே தேடுவை ?
ஏடு கோயிலிற் றேடுதல் வீணே.
நின்கர மேதான் நின்னை மேன்மேல்
ஈர்த்துச் செல்லும் இரும் பாசத்தைப்

பற்றிய தால்அப் பற்றினை உதறுக.
புந்தி மயங்கிச் சிந்தை மாழ்கலை.
ஓதுக நீஓம் தத்ஸத் ஓம்என. (7)

சாற்றற் கருமன ஆற்றல்சால் துறவீ!
'பொங்கும் மங்களம் எங்கும் தங்குக.
இன்று வேண்டாம் என்றல் உயிர்க்கே.
உயர்ந்தோர் மாட்டும் இழிந்தோர் மாட்டும்
யாவற் றுள்ளும் மேவியோன் யானே.
இம்மையும் அம்மையும் வெம்மைகூர் நரகும்
மண்ணும் விண்ணும் எண்ணும் நலமும்
'ஈதும் வேண்டிலன்' என ஓதிஅவ் வணமே
உறுதளை அனைத்தும் அறவொழித் திடுக
ஓதுக நீஓம் தத்ஸத் ஓம்என. (8)

உறுதிகொள் உள்ளத் தொருபெருந் துறவீ!
இந்தச் சடலம்இங் கெவ்வா றாக
ஆம்போம் என்று ஆய்ந்திடல் ஒழிக.
அதற்குள வேலையை அதுமுடித் திடுக.
கர்மவெள் ளத்தின் கதிஅது செல்க
ஏய நன்மாலை வேயினும் அதன்மேல்
மனவிருப் பெய்தி மகிழவும் வேண்டாம்.
யாக்கையை ஒருவன் தாக்கி உதைப்பினும்
கோப தாபம் கொள்ளவும் வேண்டாம்.
புகழ்கின் றோனும் புகழ்உறு வோனும்
இகழ்கின் றோனும் இகழ்உறு வோனும்
ஏகனே அன்றிஅ நேகரோ? அவரால்,
இகழ்ச்சி புகழ்ச்சிகள் எண்ணில் ஒன்றே எனத்
தேறி உணர்ந்தே ஆறுதல் அடைக.
ஓதுக நீஓம் தத்ஸத் ஓம் என. (9)

தைரியம் மிகுத்த செயிரறு துறவீ!
காமம் புகழ்பொருள் தாமுள இடத்து
வாய்மை எந்நாளும் வர மாட்டாது

மாதரை மனைவியாய் மதிப்பவன் எவனும்
பூரணத் துவம்உறக் காரண மேஇலை.
தினை அளவேனும் தனதெனக் கொள்வோன்.
சினமெனும் தளையிற் சிக்குவேன், இவர்கள்
மாயை என்னும் வாயிற் கடவார்.
ஆதலின் இவற்றை அறவொழித் திடுக.
ஓதுக நீஓம் தத்ஸத் ஓம் என. (10)

திறம்பெறு நெஞ்சத் தறம்பெறு துறவீ!
உறைவிடம் எதுவும் உனக்கென வேண்டா.
நின்னைக் கொள்ளும் வீடெது? நேய!
விசும்பே கூரை. பசும்புல் படுக்கை.
தற்செய லாகத் தான்கிடைப் பதுவே
உண்டி ஆகும். அவ்உண்டி நன்றாக
அட்டிருப் பினும், அது கெட்டிருப் பினும் எணேல்.
அன்னபா னியமெதும் தன்இயல் புணர்த்த
மன்னிய தூயனை மாசுறுத் தாவே.
ஓடிப் புரளும் ஒருநதி போல
என்றும் சுயேச்சை ஒன்றி இருத்தி.
ஓதுக நீஓம் தத்ஸத் ஓம்என. (11)

உரனுடை உள்ளத் தொருபெருந் துறவீ!
ஆனமெய்ப் பொருளை அறிபவர் சிலரே.
வினையோர் நின்னை இழிப்பர் வெறுப்பர்
மேலோய்! அதைஓர் காலும் கருதேல்.
இஷ்டப் படிஎங் கெங்குமேநீ
எய்தும் இன்பமும் நைதரு துன்பமும்
எண்ணு தேகி அன்னோர் போர்த்த
மாயை என்னும் மாயிருள் நீக்குதி.
ஓதுக நீஓம் தத்ஸத் ஓம்என. (12)

புலப்பகை வெல்மனப் பலப்பெருந் துறவீ!
கர்ம பந்தம் கழியும் மட்டும்
ஒவ்வொரு நாளும் இவ்விதம் முயன்று

சேதநன் தன்னைத் தீதுறு தளையின்
நின்றும் விடுக்குதி என்றும் பிறப்பிலை.
'நானும்' 'நீ'யும் நரரும் சுரருமில்.
'யான்' என்பதுவே யாவும், யாவும்
யானே அதுவே தான் ஆனந்தம்
அதுதான் நீ என் றறியக் கடவை.
ஓதுக நீஓம் தத்ஸத் ஓம்என.

விவேகா நந்த வித்தகன் அடிஇணை
தவநெறி எய்தத் தான்பணி குவமே.

ஓர் சிறந்த தமிழ் நூல் வெளியீடு

நாலடியார் மூலமும்

விரிவான உரையும்.

்பூர் வித்வான்-வீ. ஆறுமுகத் சேர்வை அவர்களைக்கொண்டு இந்நூல் தெளிவாகவும், விரிவாகவும் பழைய உரைகளையும் தழுவிப் புதிதாக எழுதப்பட்ட சிறந்த உரையுடன் இப்போது வெளிவந்திருக்கிறது.

இந் நாலடியார் என்னும் நூலானது, ஏறக்குறைய இரண்டாயிரம் வரு
களுக்குமுன் கடைச்சங்க காலத்தில், பாண்டியனிடம் வந்திருந்த ஜைன
னிவர் பலரால் தனித்தனி வெண்பாக்களாக இயற்றப்பட்டு பின்னர் அந்
ண்டியனால் தொகுக்கப்பட்டுப் பெயரிடப்பட்ட சிறந்த நீதி நூலாகும்.
கத்தில் பல தேசத்தாராலும், பல சமயத்தாராலும் கொண்டாடப்படுக்
க்குறளோடு ஒப்புமை யுடையது, உலகத்தார் பலருக்கும் பொதுவாகக்
ல நீதிகளை எடுத்துரைக்கக் கூடியது. உலகத்தில் மனிதர்க்குப் பயன்
தக்க நூல்களில் இது சிறந்ததாகும். பதினெண் கீழ்க்கணக்கு நூல்
ள் இது முதன்மை பெற்றதாகும். மனிதர் அடையவேண்டிய அறம்,
ருள், இன்பம், வீடு என்னும் புருடார்த்தங்கள் நான்கினையும் அடைதற்கு
நூல் நல்ல வழிகாட்டி யாகும். மாணவர்களும், மற்றவர்களும் அவசியம்
க்கத் தக்க நூலாகும்.

இதற்குப் பிற்காலத்தில், 'பதுமனார்' என்னும் சிறந்த புலவரொருவர்,
இயல், அதிகாரம் என்னும் பாகுபாடுகளைச் செய்து சிறந்த உரை
ன்றும் இயற்றி யிருக்கின்றார். வேறு சில சிறந்த புலவர்களும் சில
கள் எழுதியிருக்கின்றார்கள்.

இது, அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்னும் மூன்று
களையும், பதினொரு இயல்களையும், நாற்பது அதிகாரங்களையும், நானூறு
ட்களையு முடையது.

இந் நூலுக்கு, முன் பதுமனார் முதலியவர்களால் இயற்றப்பட்ட சில
கள் இருப்பினும், அவை சிறந்த கல்வி யறிவுடையாரே படித்துணரத்
பழந்தமிழ் நடையில் அமைந்திருப்பதாலும், ஆரம்பக் கல்வி யுடையாரும்
ளியக் கல்வி யுடையாரும் தக்க ஆசிரியரிடம் பாடங்கேட்டுத் தெரிந்து
ரக் கூடியனவா யிருப்பதாலும் எவரும் தாமே படித்துணரத் தக்க
தில் இக்காலத்துக்கேற்ப எளிய தமிழில் தெளிவான உரை யொன்று
ு வெளியிட வேண்டுமென்று பலர் எம்மிடம் கேட்டுக்கொண்டதற்
ந்து, அவர்கள் விரும்பிய விதமாகவே இவ்வுரை எழுதி வெளியிடப்
றிருக்கிறது. இதில் பதவுரையும், கருத்துரையும், விசேடவுரையும்
ருக்கும் சந்தேக முண்டாகாதபடி பொருள்களை நன்கு விளக்கிக்காட்டி
ரிவாக எழுதப்பட்டிருக்கின்றன. பழைய உரைப் பகுதிகள் மிகத்
ரிவாக விரித்தெழுதப்பட் டிருக்கின்றன. நூல் அமைப்பிற்கு விரோத
வும், முன்னுக்குப்பின் முரணாகவும் பொருள்பட்டுச் சந்தேகங்களை விளை
க்கொண்டிருந்த உரைப்பகுதிகளில் ஐயம் நீங்குமாறு பொருத்தமாக
நுள்கள் விளக்கப்பட் டிருக்கின்றன. புதிய உரைகளும் ஆங்காங்கே
தெழுதப்பட் டிருக்கின்றன. இதன் விலை ரூபா 2—8—0

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

ஸ்ரீமத் கம்பராமாயண - வசன சங்கிரகம்

சப்த காண்டங்கள் அடங்கியது

(மூன்றாம் பதிப்பு) இதன் விலை ரூபா 2.

ஸ்ரீராமர் பட்டாபிஷேகம் ஆப்டோன் படம் சேர்க்கப்பட்டது
மிக்க திருத்தங்களோடு கிளேஸ் கடிதத்தில் அச்சிடப்பட்டுள்ளது

இதன் முதல் இரண்டு பதிப்புக்களும் மிகக விரைவில் செலவாகி விட்டபடியால் இம்மூன்றாம் பதிப்பு இப்போது வெளிவந்துளது. இப் பதிப்பிலும் சொற்பக் காபிகளே அச்சிடப்பட்டிருக்கின்றன. ஆதலின் இப்பதிப்பு புஸ்தகம் வேண்டியவர்கள் முன்னரே எழுதிப் பெற்றுக் கொள்க.

ஸ்ரீ இராமபிரான் சரிதையை விரித்துக்கூறும் இந்த இராமாயணமானது மிக்க புண்ணிய கதை யென்பது உலகறிந்த விஷயம். இதனைப் பாராயணஞ் செய்வதாலுண்டாகும் பயன்கள் அளவிடற்கரியனவாம். இதனைப் பக்தி சிரத்தையுடன் படிப்பவர்க்கு உலகத்தில் விரும்பக்கூடிய பொருள்களெல்லாம் கைகூடும்; உயர்ந்த அறிவுண்டாகும்; கீர்த்தி அதிகரிக்கும்; மோக்ஷத்தை அடையும் மார்க்கம் ஏற்படும்; இலக்குமி கடாக்ஷமுண்டாகும்.

இன்னும் இந்த இராமாயணத்தைப் பக்தியுடன் படித்து முடிக்குமிடங்களில் கலியாணம் முதலிய மங்களகாரியங்கள் நிறைவேறும்; புத்திர பாக்கியமுண்டாகும்; பசு, பால், தானியம் முதலியன விருத்தியாகும்; பில்லி, சூனியம், தீராத நோய், பூதபைசாச உபத்திரவங்கள் முதலியவை நீங்கும்; பயம் நீங்கும்; விஷஜெந்துக்கள் அணுகமாட்டா, பஞ்சம் நீங்கும்; நல்ல மழை பெய்யும்; துக்கமான சம்பவங்கள் நீங்கி மிக்க ஆனந்தமுண்டாகும். இவையெல்லாம் உண்டாவது நிச்சயம். இராமாயணம் படித்த பற்பல இடங்களில் இப்பயன்கள் உண்டாகியிருக்கின்றன. இவற்றை ஒவ்வொருவரும் அனுபவத்திலும் உணர்ந்து கொள்ளலாம்.

இத்தகைய மகாமகிமைவாய்ந்த இராமாயணம் பெரும்பான்மையும் கம்பர் இராமாயணச் செய்யுட்களின் போக்கைத் தழுவியே தெள்ளிய நடையில் எழுதப் பெற்றிருக்கின்றது. இராமாயணஞ்செய்ய விரும்புவோரும், சாதாரணமாக இராமர் கதையைப் படித்துணர விரும்புவோரும், வித்தியார்த்திகளாகிய மாணவர்கள், மாணவிகள், மற்றைய ஆண்மக்கள் பெண்மக்கள் முதலிய எல்லோரும் இதனை எளிதில் படித்துணரலாம்.

தத்வசங்க்ரஹ ராமாயணம்

இரண்டாம் பதிப்பு. விலை ரூபா 4.

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி 167, மதராஸ்.